
கார்ல் மார்க்ஸ்

# மூலதனம்

## மூன்றாம் பாகம்

புத்தகம் இரண்டு



# பதிப்புரை

மார்க்ஸ் முதல் மாசேதுங் வரை என்ற இந்நூல், இலண்டனில் உள்ள சீனக் கொள்கை ஆய்வுக் குழுவால் வெளியிடப்பட்ட ஆங்கில மூலநூலின் திருத்தப்பட்ட மூன்றாம் பதிப்பின் மொழியாக்கமாகும். இந்நூல், மூல நூலின் பதிப்பாளர்களின் அனுமதிகேட்டு தமிழில் கொண்டு வரப்படுகிறது. சீனக் கொள்கை ஆய்வுக் குழுவுக்கும் பேராசிரியர் ஜார்ஜ் தாம்ஸன் அவர்களுக்கும் நம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்திய மொழிகள் பெரும்பாலானவற்றில் பல ஆண்டுகளுக்கு முன்பே மொழியாக்கம் செய்யப்பட்டுவிட்ட இந்நூல் தமிழில் வருவது இதுவே முதல் தடவை.

இந்நூலின் மூன்று அத்தியாயங்கள் கவிஞர் இன்குலாப் அவர்களால் மொழியாக்கம் செய்யப்பட்டன. மற்ற ஐந்து அத்தியாயங்களையும் மொழிபெயர்த்துத் தந்தவர் தோழர் எஸ்.வி. ராஜதுரை ஆவார். இம் மொழி பெயர்ப்பைச் சிறப்பாக வும், எளிமையாகவும் கொண்டு வருவதில் தோழர் எஸ்.வி. ராஜதுரை காட்டிய ஆர்வத்தையும், அதற்காக அவர் வழங்கிய கடுமையான உழைப்பையும், மீண்டும் மீண்டும் கையெழுத்துப் பிரதிகளைச் சரிபார்த்துச் செப்பனிட்ட அவர் தம் பொறுப்புணர் வையும் நாம் ஒரு போதும் மறக்க முடியாது.

இம்மொழி பெயர்ப்பில் தோழர் எஸ்.வி. ராஜதுரைக்கு உறுதுணையாக இருந்து, மொழியாக்கத்தின் ஒவ்வொரு பகுதிக் கும் தனது ஆக்க பூர்வமான ஆலோசனைகளையும் திருத்தங்க ளையும் அவ்வப்போது வழங்கி இம் முயற்சிக்குப் பெரும் பங்களிப்பைச் செலுத்தியவர் நண்பர் பா. சிங்கராயர்.

நூலைக் குறித்தநேரத்திலும் சிறப்பாகவும் அச்சிட்டுத் தந்த வர்கள் பி.ஆர்.வி. அச்சகத் தொழிலாளிகளும் உரிமையாளருமா வர்.

இவர்கள் அனைவர்க்கும் நம் நன்றிகள்.

SEELAN BOOKS
SIGNATURE

இந்நூலின் தொடர்வரிசையில் ஜார்ஜ் தாம்ஸன் எழுதிய பிற இரண்டு நூல்கள் 'முதலாளியம் அதன் பிறகும்: சரக்கு உற்பத்தியின் எழுச்சியும் வீழ்ச்சியும்', 'மனித சாரம்: விஞ்ஞானம், கலை ஆகியவற்றின் ஊற்றுக் கண்கள் என்பனவாகும். இவ்விரு நூல்களும் ஆங்கிலத்தில் உள்ளன. இவற்றையும் தமிழில் கொண்டு வர முயற்சிகள் மேற் கொள்ளப்படுகின்றன. இம் மூன்று நூல்களும் சேர்ந்து புரட்சிகர மார்க்சியத் தத்துவம் பற்றிய ஒரு முழுமையான புரிதலை வாசகர்க்கு வழங்க முடியும்.

மார்க்சின் 163-ஆவது பிறந்த நாளன்று (5.5.1981) இந்நூல் தமிழகப் பாட்டாளி வர்க்க வாசகர்களுக்குச் சென்றடையும் வாய்ப்பு உருவாகியது குறித்து நாம் பெருமை கொள்கிறோம்.

சென்னை - 17 பொதுமை வெளியீடு
மே 1, 1981

# இரண்டாம் பதிப்புக்கான உரை

உலகெங்கிலும் மூலதனத்தின் சுரண்டலுக்கெதிராய் போராடிக் கொண்டிருக்கும் மக்களை திசை விலக்குவதற்கான முயற்சிகள் திரும்பவும் சூடு பிடித்துள்ளன. அரசியல் அரங்கில் அன்னதானம், உதவித்தொகை, மனித உரிமை, 'தன்னார்வ' அரவணைப்புகள் என்று ஒரு முனையில் வர்க்கப் போராட்டத்தை வளைக்க முயற்சிப்பது போலவே, மறுமுனையில் சீர்திருத்தவாதம், இருத்தலியம், பின்நவீனத்துவம், விளிம்பு நிலைக் கோட்பாடு எனும் பாசக்கயிற்றோடு சுரண்டலின் பங்காளிகள் களம் புகுந்துள்ளனர். முதலாளித்துவத்தின் காலாட் படைகளோடு, இத்தகைய கையாட் படைகளையும் எதிர்த்தபுரட்சிகரப் போராட்டத்தின் அனுபவமாய் மீண்டும், மீண்டும் மார்க்சிய - லெனினியமே வர்க்கப் போராட்டத்தின் அறுவடைக்குரிய ஆயுதமாய் மக்களின் கரம் கோர்த்து நிற்கிறது.

மார்க்சியத்தை மறுப்பதற்கு காரணம் தேடும் தமிழக தளபதிகள், ஐரோப்பாவிலும், சோசலிச நாடுகளிலும் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கம் சிந்தாந்தத் துறையில் 'போஸ்ட்மார்டம்' செய்த இசங்களை தமிழகத்தில் ஆவி எழுப்புதல் முயற்சிகளை நிகழ்த்திக் கொண்டிருக்கும் இத்தருணத்தில் மார்க்சு முதல் மாசேதுங் வரை எனும் இந்நூல் மறுபதிப்பாவது மார்க்சிய - லெனினிய எதிரிகளை இனங்காட்டவும் மார்க்சிய - லெனினிய - மாசேதுங் சிந்தனைக்கு வழிகாட்டவும் உதவி செய்கிறது.

''வர்க்கப் போராட்டத்தை ஏற்பது மட்டுமல்ல; பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் வரை ஏற்று விரித்துச் செல்வதே மார்க்சியம்'' என்ற லெனினிய வாதத்தை முன்வைத்து ரசிய, சீன, புரட்சிகர போராட்டங்களின் வெளிச்சத்தில் நடைமுறைக்கும் தத்துவத்திற்குமான இயங்கியல் உறவை விளக்கும் ஜார்ஜ் தாம்சனின் இந்நூல் வர்க்கப் போராட்டத்தில் பிணைக்கப்பட்டிருக்கும் அனைவருக்குமான தெளிவையும் தீர்வையும் வழங்குகிறது.

இந்நூலை மறுபதிப்பாக வெளியிட அனுமதி வழங்கிய எஸ்.வி. ராஜதுரை, இன்குலாப் மற்றும் பொதுமை வெளியீட்டகத்தார்க்கு எமது நன்றிகள்.

*புரட்சிகரப் போராட்டம், சித்தாந்தத்தின் கடமைகளை வலியுறுத்தும் இந்நூலை தமதாக்கிக் கொள்ளும் வாசகர்களுக்கு எமது வாழ்த்துக்கள்.*

**மே - 1997** **பதிப்பகத்தார்**

## முன்னுரை

1917 ஆம் ஆண்டு ரசியப் புரட்சியைப் பற்றியும், 1949 ஆம் ஆண்டு சீனப் புரட்சியைப் பற்றியும் ஆராயும் மார்க்சிய ஆய்வு இது. உலக சோசலிசப் புரட்சியின் அடுத்தடுத்து வந்த இரண்டு கட்டங்கள் என்ற வகையில், அவற்றின் ஒற்றுமையையும் தொடர்ச்சியையும் மெய்ப்பிப்பதே இந்த ஆய்வின் குறிக்கோள். மார்க்சிய இலக்கியங்களில் இருந்தும், குறிப்பாக லெனின், மா சேதுங் ஆகியோரது படைப்புகளில் இருந்தும் விரிவான மேற்கோள்களை எடுத்தாள்வதன் மூலம், இவ்விரண்டு புரட்சிகளுக்கும் பொதுவான தத்துவ அடிப்படை விளக்கப்படுகிறது. இதனால், இப்புரட்சிகளுக்குத் தலைமையேற்றவர்களின் சிந்தனைகளின் வழியாக அவற்றை வாசகரால் புரிந்து கொள்ள முடியும்; அதேவேளையில் இம்மேற்கோள்கள், வாசகருக்கு, இயங்கியல் - வரலாற்றுப் பொருள் முதலியலின் அடிப்படைக் கொள்கைகளையும் அறிமுகம் செய்து வைக்கின்றன. ஏனெனில், புரட்சிகரப் போராட்டங்களின் வெளிச்சத்திலேதான் தத்துவத்தைப் புரிந்து கொள்ள முடியும். புரட்சிகரப் போராட்டங்களில் இருந்துதான் அது வளர்ந்தது; அவற்றில்தான் தத்துவம் தனது மிக முழுமையான, மிகத் தெளிவான வெளியீட்டைக் காண்கிறது.

இந்நூல் டக்ளஸ் கார்மனின் நினைவுக்குக் காணிக்கையாக்கப்படுகிறது. அவர்தான் எனக்கு மார்க்சியத்தைப் பயிற்றுவித்தவர். பிரிட்டிஷ் பொதுவுடைமைக் கட்சியின் தேசியக் கல்வி அமைப்பாளராக இருந்த அவர், கட்சிப் பள்ளிகளை வலைப் பின்னல்களாய் உருவாக்கினார். இப்பள்ளிகளில் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் தொழிற்சாலைத் தொழிலாளர்கள் பயில வந்தனர். அவர்களுக்கு அவரும்; கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட விவாதங்களின் வழியாகக் கற்பித்தல்' என்ற அவரது

*முறையில் பயிற்றுவிக்கப்பட்ட பிறரும் கல்வியூட்டினர். கட்சியின் தலைமை முன்வைத்த 'சோசலிசத்துக்கான பிரிட்டிஷ் பாதை' என்ற புரட்டல் வழியை அவர் தொடக்கத்திலிருந்தே எதிர்த்து வந்தார். இக்கருத்து வேறுபாடு காரணமாக, 1950-இல் அவர் இப்பள்ளிப் பணியைக் கைவிட நேர்ந்தது. இப்போராட்டத்தில் அவர், தோற்கடிக்கப்பட்டு விட்டார்; ஆனால் அவருடைய கட்சிப் பள்ளிகளில் பயிற்சிபெற்ற என்னைப் போன்ற பலர், புரட்சிகர இயங்கியலில் அவர் கற்பித்த பாடங்களை ஒரு போதும் மறந்து விடவில்லை. இன்று புரட்சிகரப் பாதை எங்கு நிலவுகிறது என்பதைப் புரிந்து கொள்வதற்கு அவருடைய போதனை எங்களைப் போன்றவர்களுக்கு உதவி செய்துள்ளது.*

*பர்மிங்ஹாம், 1971* **ஜார்ஜ் தாம்ஸன்**

# கார்ல் மார்க்ஸ்

# மூலதனம்

அரசியல் பொருளாதார விமர்சனப்
பகுப்பாய்வு

மூன்றாம் பாகம்

புத்தகம் இரண்டு

SEELAN BOOKS NORWAY
SIGNATURE

## முழுமையான முதலாளித்துவ உற்பத்திச் செயல்முறை

பிரெடெரிக் எங்கெல்ஸ் பதிப்பித்த ஆங்கில நூலின்
தமிழாக்கம்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்
சென்னை-98

கார்ல் மார்க்ஸ்

மூலதனம் — மூன்றாம் பாகம் — புத்தகம் இரண்டு

மொழிபெயர்ப்பாளர் : தியாகு

பதிப்பாசிரியர் : ரா. கிருஷ்ணய்யா

© தமிழ் மொழிபெயர்ப்பு
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை-600 098

முதல் பதிப்பு : ஏப்ரல், 1998

ISBN No. : 81-234-0588-X

CODE No. : [illegible]

விலை : ரூ. 900.00

அனைத்து மூன்று பாகங்களும் சேர்த்து ஐந்து புத்தகங்கள்.

அச்சிட்டோர் : பாவை பிரிண்டர்ஸ்
142, ஜானிஜான்கான் ரோடு
சென்னை-14.

# பொருளடக்கம்

## முழுமையான முதலாளித்துவ உற்பத்திச் செயல்முறை

## புத்தகம் இரண்டு

### பகுதி V

### வட்டியாகவும் முனைவு இலாபமாகவும் இலாபம் பிரிக்கப்படுதல் வட்டி-மூலதனம் - (தொடர்ச்சி)


| | | பக்கம். |
|---|---|---|
| அத்தியாயம்-XXIX | வங்கி மூலதனத்தின் அடக்கக்கூறுகள் ............. | 645 |
| அத்தியாயம் XXX | பண-மூலதனமும் உண்மை-மூலதனமும் ....... | 664 |
| அத்தியாயம் XXXI | பண-மூலதனமும் உண்மை மூலதனமும் II (தொடர்ச்சி) ............................................. | 692 |
| அத்தியாயம் XXXII | பண-மூலதனமும் உண்மை-மூலதனமும்-இறுதி | 708 |
| அத்தியாயம் XXXIII | கடன்-செலாவணி அமைப்பில் சுற்றோட்ட ஊடகம் | 731 |
| அத்தியாயம் XXXIV | செலாவணிக் கோட்பாடும் 1844ம் வருட ஆங்கிலேய வங்கிச்சட்டமும் ......................... | 770 |
| | | 797 |
| அத்தியாயம் XXXV | உயர் நிலை உலோகமும் மாற்றுவீதமும் .......... | 838 |
| அத்தியாயம் XXXVI | முதலாளித்துவத்துக்கு முற்பட்ட உறவுகள் ........ | |


### பகுதி VI

### உபரி-இலாபம் நில-வாடகையாக மாற்றமடைதல்


| | | |
|---|---|---|
| | | 868 |
| அத்தியாயம் XXXVII | முன்னுரை .................................................... | 907 |
| அத்தியாயம் XXXVIII | வேறுபாட்டு வாடகை: பொதுக்குறிப்புகள் ....... | |
| அத்தியாயம் XXXIX | முதல் வகை வேறுபாட்டு வாடகை(வேறுபாட்டு வாடகை I) ............................................ | 920 |
| அத்தியாயம் XL | இரண்டாம் வகை வேறுபாட்டு வாடகை (வேறுபாட்டு வாடகை II) ........................... | 956 |
| அத்தியாயம் XLI | வேறுபாட்டு வாடகை II-முதல் நேர்வு: மாறா உற்பத்தி-விலை ........................................ | 973 |
| அத்தியாயம் XLII | வேறுபாட்டு வாடகை II-இரண்டாம் நேர்வு: குறையும் உற்பத்தி-விலை ........................... | 985 |
| அத்தியாயம் XLIII | வேறுபாட்டு வாடகை II மூன்றாம் நேர்வு: உயரும் உற்பத்தி-விலை ......................... | 1008 |

| | | |
|---|---|---|
| அத்தியாயம் XLIV | படுமோசமாகச் சாகுபடி செய்யப்படும் நிலத்திலும் கூட வேறுபாட்டு வாடகை ........... | 1046 |
| அத்தியாயம் XLV | அறுதிநில-வாடகை ........................................ | 1059 |
| அத்தியாயம் XLVI | கட்டடமனை வாடகை. சுரங்கத் தொழிலில் வாடகை. நிலத்தின் விலை ........................... | 1096 |
| அத்தியாயம் XLVII | முதலாளித்துவ நில-வாடகை பிறந்த கதை ....... | 1110 |


பகுதி VII

## வருவாய்களும் அவற்றின் ஆதாரங்களும்

| | | |
|---|---|---|
| அத்தியாயம் XLVIII | மும்மைச் சூத்திரம் ........................................ | 1160 |
| அத்தியாயம் XLIX | பொருளுற்பத்தி நிகழ்முறையின் பகுப்பாய்வு தொடர்பாக ............................. | 1188 |
| அத்தியாயம் L | போட்டியினால் ஏற்படும் பொய்த் தோற்றங்கள் | 1217 |
| அத்தியாயம் LI | விநியோக உறவுகளும் உற்பத்தி உறவுகளும் .... | 1252 |
| அத்தியாயம் LII | வர்க்கங்கள் ........................................ | 1263 |
| பி.எங்கெல்ஸ் மூலதனம் மூன்றாம் பாகத்துக்கான பிற்சேர்ப்பு | | 1265 |
| I | மதிப்பு விதியும் இலாப வீதமும் ...................... | 1269 |
| II | பங்குச் சந்தை ........................................ | 1294 |
| அட்டவணைகள் | ........................................ | 1299 |

## மூன்றாம் பாகம்

# முழுமையான முதலாளித்துவ உற்பத்திச் செயல்முறை

## புத்தகம் இரண்டு

[illegible]

# [illegible]

[illegible]

## பகுதி V

# வட்டியாகவும் முனைவு-இலாபமாகவும் இலாபம் பிரிக்கப்படுதல்.

## வட்டி-மூலதனம்

(தொடர்ச்சி)

### அத்தியாயம் XXIX

### வங்கி- மூலதனத்தின் அடக்கக் கூறுகள்

வங்கி-மூலதனத்தின் அடக்கக் கூறுகளை இப்போது இன்னுங்கூட விவரமாய்ப் பரிசீலித்தல் அவசியமாகிறது.

சுற்றோட்ட ஊடகமாய் இருக்கிற பணத்துக்கும் கொடுப்புச் சாதனமாய் இருக்கிற பணத்துக்கும்—தங்க வெளிக் கசிவைக் குறிப்பதாய் உள்ளவரை சர்வப் பொதுப் பணமாகவும் இருக்கிற பணத்துக்கும்—இடையிலான வேறுபாட்டை ஃபுல்லர்ட்டன் போன்றவர்கள் செலாவணிக்கும் மூலதனத்துக்கும் இடையிலான வேறுபாடாக மாற்றி விடுவதை சற்று முன் பார்த்தோம்.

பணம் மூலதனமல்ல என்று அறிவுபூர்வப் பொருளாதார இயல் போதித்தது போலவே, பணமே தலைசிறந்த மூலதனம் என்று வங்கியாளர்களின் பொருளாதார இயல் அழுத்தந் திருத்தமாய்ப் போதிப்பதற்கு இந்தத் துறையில் மூலதனம் வகிக்கும் விசேசப் பாத்திரமே காரணம்.

அடுத்து வரும் பகுப்பாய்வுகளில் நிரூபித்துக் காட்டத்தான் போகிறோம், என்னவென்றால்: பண-மூலதனமானது இங்கே வட்டி-மூலதனம் எனும் அர்த்தத்தில் பணஞ்சார்ந்த மூலதனத்துடன் குழப்பிக் கொள்ளப்படுகிறது; ஆனால் பழைய அர்த்தத்தில் பண-மூலதனம் என்பது எப்போதும் மூலதனத்தின் ஒரு நிலையற்ற வடிவமேயாகும்—ஏனைய மூலதன வடிவங்களுக்கு, அதாவது சரக்கு-மூலதனத்துக்கும் திறனுடை-மூலதனத்துக்கும் மாறாக இடம்பெறும் பண -மூலதனம் ஆகும்.

வங்கி-மூலதனமானது (1) ரொக்கப் பணம், தங்கம் அல்லது நோட்டுகளாகவும் (2) கடன் பத்திரங்களாகவும் அமைந்திருப்பதாகும்.

கடன் பத்திரங்களை இரு பகுதிகளாகப் பிரிக்கலாம்: வர்த்தகப் பத்திரம் அல்லது மாற்று உண்டியல்கள் குறிப்பிட்ட காலத்துக்கு ஓடுகிறவை, அவ்வப்போது தீர்வுக்குரியன ஆகிறவை, இவற்றைக்கழிவு செய்து ரொக்கமாக்குவது வங்கியாளரின் இன்றியமையாத அலுவலாகிறது; அரசுப் பத்திரங்கள் போன்ற பொதுக் கடன்-ஆவணங்கள், கருவூல நோட்டுகள், சகலவகை மூலதனப் பங்குகள்,சுருங்கச் சொல்லின் வட்டி வருமானப் பத்திரங்கள்—இது மாற்று உண்டியல்களிலிருந்து குறிப்பிடத்தக்கவாறு வேறுபடுவதாகும். அடமானங்களையும் இங்கு சேர்த்துக் கொள்ளலாம். தெளிவாய்த் தெரிகிற இந்த அடக்கக் கூறுகளால் ஆனதாகிய மூலதனத்தை வங்கியாளரின் முதலீட்டு மூலதனமாகவும் வைப்புகளாகவும் மேலும் பிரிக்கலாம்; வைப்புகள் அவரது வங்கி-மூலதனம், அல்லது கடன் வாங்கிய மூலதனம் ஆகின்றன. நோட்டு வெளியிடும் வங்கிகளைப் பொறுத்த வரை, வங்கி நோட்டுகளையும் இந்தக் கணக்கில் சேர்த்துக் கொள்ள வேண்டும். இப்போதைக்கு வைப்புகளையும் நோட்டுகளையும் கருதாமல் ஒதுக்கி விடுவோம். வங்கியாளரது மூலதனத்தின் பல்வேறு கூறுகளும் அவருக்கே சொந்தமான மூலதனத்தைக் குறித்தாலும் சரி, அல்லது வைப்புகளை, அதாவது பிறருடைய மூலதனத்தைக் குறித்தாலும் சரி, எப்படி யானாலும் அவரது மூலதனத்தின் உள்ளபடியான அடக்கக் கூறுகள் (பணம், மாற்று உண்டியல்கள், வைப்புச் செலாவணி) பாதிக்கப் படுவதில்லை என்பது தெளிவாய்த் தெரிகிறது. வங்கியாளர் அவருக்கே சொந்தமான மூலதனத்தை மட்டும் வைத்துத் தொழில் புரிந்தாலும் சரி, வைப்புகளாக வந்த மூலதனத்தை மட்டும் வைத்துத் தொழில் புரிந்தாலும் சரி, அதே பிரிவினை நீடித்து வரும்.

குறிப்பிட்ட அளவிலும் காலந்தவறாமல் முறையாகவும் வருகிற ஒவ்வொரு பண வருவாயும்— அது ஏதேனுமொரு மூலதனத்திலிருந்து கிடைப்பதாய் இருந்தாலும் இல்லா விட்டாலும் — ஏதேனுமொரு மூலதனத்தின் மீதான வட்டியாகக் காணப்படுவதற்கு வட்டி-மூலதனத்தின் வடிவமே காரணம். பண வருமானம் முதலில் வட்டியாக மாற்றப்படுகிறது, வட்டி எதிலிருந்து பிறக்கிறதோ அந்த மூலதனத்தை வட்டியிலிருந்து நிர்ணயிக்க முடியும். இதே போல் வட்டி-மூலதனத்தின் விவகாரத்தில், ஒவ்வொரு மதிப்புத் தொகையும்—அது வருவாயாகச் செலவிடப்படாமல் இருக்கும் வரை மூலதனமாகக் காட்சியளிக்கிறது.

இது எளிதில் விளங்கக் கூடியதே. வருடாந்தர சராசரி வட்டி வீதம் 5% என்போம். £500 என்னும் பணத் தொகை வட்டி- மூலதனமாக மாற்றப்பட்டால் அதிலிருந்து ஆண்டொன்றுக்கு £25 கிடைக்கும். நிலையான ஆண்டு வருமானமாய் அமையும் ஒவ்வொரு £25ஐயும் £500 மூலதனத்திற்கான வட்டியாகக் கருதலாம். ஆனால் இந்தக் கருத்தோட்டம் முற்றிலும் மாயையானது, அவ்வாறே நீடித்தும் வருவது. £25க்கான மூலாதாரம் வெறும் உடைமையுரிமை அல்லது உரிமைத் தகுதி ஆனாலும் சரி, நிலச் சொத்து போன்ற மெய்யான உற்பத்தி-அடிக்கூறு ஆனாலும் சரி, அது நேரடியாகக் கைமாற்றம் செய்யத் தக்கதாய் இருக்கிற, அல்லது கைமாற்றத்துக்குரிய வடிவத்தை மேற்கொள்கிற சந்தர்ப்பத்தில் மட்டுமே இது வெறும் மாயை அல்ல. தேசக் கடனையும் கூலியையும் எடுத்துக்காட்டுகளாய்க் கொள்வோம்.

அரசானது தான் கடன் வாங்கிய மூலதனத்திற்காக ஆண்டுதோறும் குறிப்பிட்ட வட்டித் தொகை செலுத்தியாக வேண்டும்; கடன் கொடுத்தவர்களுக்கு இந்த வட்டி செலுத்தப்படுகிறது. கடன் கொடுத்தவர் கடன்பட்டவரிடமிருந்து தமது முதலீட்டை திரும்பப் பெற முடியாது; தமது உரிமைத் தகுதி அல்லது உடைமையுரிமையை விற்க மட்டுமே அவரால் முடியும். மூலதனமானது அரசால் நுகரப்பட்டு, அதாவது செலவிடப்பட்டு விட்டது. அது இல்லாது போய் விட்டது. அரசுக்குக் கடன் கொடுத்தவர் வசம் இருப்பவையெல்லாம் இவைதான்: (1) அரசின் உறுதிப் பத்திரம்; இது £100க்கான பத்திரம் எனக் கொள்ளலாம், (2) கடன்கொடுத்தவருக்கு இந்த உறுதிப் பத்திரமானது அரசின் ஆண்டு வருவாய் மீது, அதாவது வருடாந்தர வரி வரவுகள் மீது குறிப்பிட்ட தொகைக்கு, உதாரணமாய் £5, அதாவது 5%க்கு உரிமைத் தகுதி வழங்குகிறது; (3) கடன் கொடுத்தவர் £100க்கான இந்த உறுதிப் பத்திரத்தை விருப்பம்போல் யாருக்கு வேண்டுமானாலும் விற்கலாம். வட்டி வீதம் 5%ஆகவும் அரசினால் தரப்படும் பிணையம் முறையானதாகவும் இருந்தால் வழக்கமான நிலையில் A என்னும் உடைமையாளர் B என்பவரிடம் இந்த உறுதிப் பத்திரத்தை £100க்கு விற்க முடியும்; எப்படியென்றால் B ஆனவர் 5% வருட வட்டிக்கு £100 கடனாய்க் கொடுத்தாலும் சரி, £100 கொடுப்பதன் மூலம் அரசிடமிருந்து வருடாந்தரக் கப்பம் தமக்கென பெற்றுக் கொண்டாலும் சரி, இரண்டும் அவருக்கு ஒன்றுதான். ஆனால் இந்த நேர்வுகளிலெல்லாம்,எதிலிருந்து அரசுக் கொடுப்புகள் (வட்டி) முளைத்ததாகக் கருதப்படுகிறதோ அந்த மூலதனம் மாயையான, பெயரளவுக்கான மூலதனமே ஆகும். அரசுக்குக் கடனாய்த் தரப்படும்

தொகை இல்லாதொழிகிறது என்பது மட்டுமல்ல, அத்தொகையை மூலதனமாகச் செலவிடும் நோக்கமே இருந்ததில்லை; மூலதனமாக முதலீடாவதன் மூலமாகத்தான் அது தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்ளும் மதிப்பாக மாற்றப்பட்டிருக்க முடியும். ஆரம்பத்தில் கடன்கொடுத்த Aஐப் பொறுத்தவரை வருடாந்தர வரிகளில் அவருக்கு வந்து சேரும் பங்கு அவரது மூலதனத்திற்கான வட்டியைக் குறிப்பதாகும்; ஊதாரியின் செல்வத்தில் கடுவட்டிக்காரருக்குப் போய்ச் சேரும் பங்கு அந்தக் கடுவட்டிக்காரருக்கு எப்படி காட்சியளிக்குமோ அப்படியேதான். ஆனால் இரு நேர்வுகளிலுமே கடன்கொடுத்த தொகை மூலதனமாக முதலீடு செய்யப்படவில்லை. அரசின் உறுதிப் பத்திரத்தை விற்கும் சாத்தியப்பாடு Aக்கு அவரது அசல் தொகையைக் மீளப் பெறுவதற்கான உள்ளியல் வழிவகையைக் குறிப்பதாகும். Bஐப் பொறுத்தவரை அவரது மூலதனம் அவரது தனிப்பட்ட கண்ணோட்டத்தில் வட்டி - மூலதனமாக முதலீடு செய்யப்படுகிறது. இந்தக் கொடுக்கல் வாங்கலில் B ஆனவர் அரசின் வருவாய் மீது A பெற்றுள்ள உரிமைத் தகுதியை விலைக்கு வாங்குவதன் மூலம் A இன் இடத்திற்கு வந்துவிடுகிறார் என்பதற்கு மேல் ஒன்றுமில்லை. இந்தக் கொடுக்கல் வாங்கல் திரும்பத்திரும்ப எவ்வளவு தரம் நிகழ்த்தப்பட்டாலும் சரி, அரசுக்கடனின் மூலதனமானது முற்றிலும் பெயரளவுக்கானதாகவே இருந்து வருகிறது. உறுதிப் பத்திரங்களை விற்க முடியாத நிலை ஏற்படும் போது, இந்த மூலதனத்தின் மாயை உடனே விலகிவிடுகிறது. எப்படியானாலும் இந்த பெயரளவுக்கான மூலதனம் தனக்கேயுரிய இயற்கை விதிகளைக் கொண்டது; என்னவென்று பார்ப்போம்.

இப்போது நாம் உழைப்புச் சக்தியை தேசக் கடனின் மூலதனத்திற்கு எதிராய் நிறுத்தி பரிசீலிப்போம்; தேசக் கடனில் ஓர் எதிர்மறைக்கணியம் மூலதனமாகக் காட்சியளிக்கிறது; பொதுவாகச் சொன்னால் வட்டி - மூலதனமானது எப்படி சகலவிதமான அறிவுக்கொவ்வாத வடிவங்களுக்கும் ஊற்றுக்கண்ணாகிறதோ, எடுத்துக்காட்டாக கடன்கள் எப்படி வங்கியாளருக்கு சரக்குகளாகக் காட்சியளிக்க முடிகிறதோ, அதேபோலத்தான் இதுவும். கூலி இங்கே வட்டியாகக் கருதப்படுகிறது; ஆகவே உழைப்புச் சக்தி இந்த வட்டியைப் பெற்றுத்தரும் மூலதனமாகக் கருதப்படுகிறது. எடுத்துக்காட்டாக, ஓராண்டுக்கான கூலி £50 ஆகவும் வட்டி வீதம் 5%ஆகவும் இருக்குமானால், வருடாந்தர உழைப்புச் சக்தி £1,000 மூலதனத்துக்குச் சமமாகும். முதலாளித்துவ கருத்தமைப்பு முறையின் அறிவீனம் இங்கு

உச்ச நிலை அடைகிறது. எப்படியென்றால், உழைப்புச் சக்தி சுரண்டப்படுவதன் அடிப்படையில் மூலதனப் பெருக்கத்துக்கு விளக்கம் அளிப்பதற்கு பதில் சங்கதி நேர்மாறாக்கப்பட்டு உழைப்புச் சக்தியின் உற்பத்தித் திறனுக்கு விளக்கமளிக்கும் பொருட்டு, வட்டி - மூலதனத்தின் இந்த மாயப்பண்பிற்கு உழைப்புச் சக்தியே காரணமாக்கப்படுகிறது. 17ஆம் நூற்றாண்டின் இரண்டாவது பாதியில் இதுவே பிடித்தமான கண்ணோட்டமாய் இருந்து வந்தது (எடுத்துக்காட்டு: பெட்டி); ஆனால் இன்னும் கூட கொச்சைப் பொருளாதார அறிஞர்கள் சிலரும்,இன்னும் குறிப்பாகச் சொன்னால் ஜெர்மானியப் புள்ளி விவர வல்லுநர்கள் சிலரும் இந்தக் கண்ணோட்டத்தை அப்படியே முழுமையாக நம்பிப்பயன்படுத்திக் கொள்கிறார்கள்[1]. முன்யோசனையற்ற இந்தக் கண்ணோட்டத்தை ஒத்து வராத இரு விவரங்கள் பாழ்படுத்தி விடுவது வருத்தத்துக்குரியதே. முதலாவதாக, தொழிலாளி இந்த வட்டியை அடைய வேண்டுமானால் உழைத்தாக வேண்டும். இரண்டாவதாக, அவர் தமது உழைப்புச் சக்தியின் மூலதன மதிப்பைக் கைமாற்றிக் கொடுத்து ரொக்கமாக்கிக் கொள்ள முடியாது. சொல்லப்போனால், அவரது உழைப்புச் சக்தியின் வருடாந்தர மதிப்பு அவரது வருடாந்தர சராசரி கூலிக்குச் சமம்; அவர் தமது உழைப்புச் சக்தியை வாங்குகிறவருக்கு தமது உழைப்பின் மூலமாய் திருப்பித்தர வேண்டியதெல்லாம் இந்த மதிப்பும், அதோடு கூட உபரி-மதிப்புமே; உபரி-மதிப்பு என்பது அவரது உழைப்பால் சேர்க்கப்படும் மிகையே ஆகும். அடிமைச் சமூதாயத்தில் உழைப்பாளி மூலதன-மதிப்பை, அதாவது கொள்முதல்-விலையை பெற்றுள்ள அவர் கூலிக்கு விடப்படும்போது, கூலிக்கு அமர்த்துபவர் முதலாவதாக இந்தக் கொள்முதல்-விலைக்கு வட்டி செலுத்தியாக வேண்டும்; அத்துடன் கூடுதலாக மூலதனத்திலான வருடாந்தரத் தேய்மானத்தை மாற்றீடு செய்தாக வேண்டும்.

பெயரளவு மூலதனத்தின் உருவாக்கம் மூலதனமாக்கம் என்று அழைக்கப்படுகிறது. காலவட்ட முறையிலான ஒவ்வொரு வருமானமும் சராசரி வட்டி வீதத்தின் அடிப்படையில்—இந்த வட்டி வீதத்தில் கடனாய்த் தரப்படும் மூலதனம் பெற்றுத் தரக்கூடிய

("1. தொழிலாளி மூலதன-மதிப்பைப் பெற்றிருக்கிறார்; அவரது ஆண்டுக் கூலியின் பண - மதிப்பை வட்டியிலிருந்து கிடைக்கும் வருமானமாக்க் கருதுவதன் மூலம் இம்மூலதன - மதிப்பு கணக்கிடப்படுகிறது.....சராசரி நாட்கூலியை 4% என்ற மூலதனமாக்கும்போது, ஆண் விவசாயத் தொழிலாளி ஒருவரின் சராசரி மதிப்பு பின்வருமாறு இருக்கக் காண்கிறோம்: ஜெர்மன் ஆஸ்திரியா, 1,500 டாலர்; பிரஷ்யா, 1500; இங்கிலாந்து 3,750; பிரான்ஸ், 2,000; உருஷ்யா, 750 டாலர்." (∴வோன் ரெடென், வெர்லிச்சென்டி குல்ச்சர்ஸ்டேடிஸ்டிக், பெர்லின், 1848, பக்கம் 434.)

வருமானமாக- –கணக்கிடப்படுவதன் வாயிலாக மூலதனமாக்கப் படுகிறது. எடுத்துக்காட்டாக ஆண்டு வருமானம் £100 ஆகவும், வட்டி வீதம் 5%ஆகவும் இருக்குமானால், £100 ஆனது £2,000 மீதான வருட வட்டியைக் குறிக்கும்; £2,000 ஆனது ஆண்டுதோறும் £100க்கான சட்டவகை உடைமையுரிமையின் மூலதன-மதிப்பாகக் கருதப் படுகிறது. இந்த உடைமையுரிமை விலைக்கு வாங்குகிறவரைப் பொறுத்த வரை £100 ஆண்டு வருமானமானது 5%க்கு முதலீடு செய்யப்படும் அவரது மூலதனத்தின் மீதான வட்டியையே குறிப்பதாகிறது. உள்ளபடியே மூலதனம் பெருக்கமடைகிற நிகழ்முறையோடு இருக்கக்கூடிய தொடர்பெல்லாம் இவ்விதம் அடியோடு காணாமற்போய் விடுகிறது; மூலதனம் எவர் உதவியுமின்றி தானே தற்பெருக்கமடையும் குணங்களைப் பெற்ற ஒன்றாகக் கருதப்படுகிற கண்ணோட்டம் இதனால் வலுவடைகிறது.

உறுதிப் பத்திரம்—கடன்-பத்திரம் அரசுக் கடன்கள் தொடர்பாகக் குறிப்பது போல் முற்றமுழுக்கப் பெயரளவு மூலதனத்தையே குறிக்காதபோதும் கூட, இத்தகைய பத்திரங்களின் மூலதன-மதிப்பு முற்றிலும் மாயையானதன்று. கடன்-செலாவணி அமைப்பு கூட்டிணைந்த மூலதனத்தை எவ்விதம் படைக்கிறதென்று முன்பே பார்த்தோம். பத்திரங்கள் இந்த மூலதனத்தைக் குறித்திடும் உடைமையுரிமையாகப் பயன்படுகின்றன. இரயில் போக்குவரத்து நிறுமங்கள், சுரங்கங்கள், நீர் வழிப்போக்குவரத்து நிறுமங்கள் போன்றவற்றின் மூலதனப் பங்குகள் உள்ளபடியான மூலதனத்தை குறிப்பவை, அதாவது இத்தகைய முனைவுகளில் முதலீடாகி செயல்பட்டுவரும் மூலதனத்தை அல்லது இத்தகைய முனைவுகளில் மூலதனமாகப் பயன்படுத்தப்படுவதற்காக வேண்டி மூலதனப்-பங்காளர்களால் முன்னீடு செய்யப்படும் பணத்தொகையை குறிப்பவை. இவையெல்லாம் முழு மோசடியாகவே இருந்து விடக்கூடிய சாத்தியப்பாடு இதனால் விலகிவிடாது. ஆனால் இந்த மூலதனம் இரு முறைநிலவுவதில்லை—உடைமை உரிமைகளின் (மூலதனப் பங்குகளின்) மூலதன மதிப்பாக ஒரு முறையும், அந்த முனைவுகளில் முதலீடு செய்யப்பட்டுள்ள அல்லது முதலீடு செய்யப்பட வேண்டிய உள்ளபடியான மூலதனமாக ஒரு முறையும் நிலவுவதில்லை. இரண்டாவதாகக் கூறிய வடிவத்தில் மட்டுமே அது நிலவுகிறது; மூலதனப் பங்கு என்பது மூலதனத்தால் ஈடேற்றம் செய்யப்படவுள்ள உபரி-மதிப்பில் உரியதொரு பகுதிக்கான உடைமையுரிமையே தவிர வேறல்ல.

A இந்த உரிமையை Bயிடம் விற்கலாம். B அதனை Cயிடம் விற்கலாம். இந்தக் கொடுக்கல் வாங்கல்களால் பிரச்சினையின் தன்மை எவ்வகையிலும் மாறிவிடாது. முடிவில் Aஅல்லது B ஆனவர் தமது உரிமையை மூலதன வடிவில் பெற்றுள்ளார்; C ஆனவர் தமது மூலதனத்தைப் பங்கு-மூலதனத்திலிருந்து எதிர் நோக்கப்படும் உபரி-மதிப்புக்கான வெறும் உடைமையுரிமையாக உருமாற்றியுள்ளார்.

இந்த உடைமையுரிமைகளின் மதிப்பு, அரசுப் பத்திரங்களின் மதிப்பு மட்டுமல்லாமல் மூலதனப் பங்குகளின் மதிப்பும் கூட, *சுயேச்சையாக இயங்குவதானது இவை எதற்கான உரிமைகளோ அந்த மூலதனம் அல்லது உரிமைத் தகுதியோடு கூடவே உண்மை மூலதனமாய் அமைந்திடுவதாகத் தெரியும் பொய்த் தோற்றத்துக்கு வலுவூட்டுகிறது. ஏனென்றால் இவை சரக்குகளாகின்றன; இந்தச் சரக்குகளின் விலை அதற்கே உரித்தான ஏற்ற இறக்க அலைவுகளில் சென்று அதற்கே உரிய முறையில் நிலைபெறுகிறது. அவற்றின் சந்தை - மதிப்பானது அவற்றின் பெயர் மதிப்பைப் போல் அல்லாமல் வேறு விதமாய் நிர்ணயிக்கப்படுகிறது; (மூலதனப் பெருக்கத்தில் மாற்றம் ஏற்பட்டாலும் கூட) உள்ளபடியான மூலதனத்தின் மதிப்பில் எவ்வித மாற்றமும் இல்லாமலே நிர்ணயிக்கப்படுகிறது. ஒருபுறம், அவற்றின் சந்தை-மதிப்பானது அவை எந்த வரவுகளுக்குச் சட்ட உரிமை வழங்குகின்றனவோ அந்த வரவுகளின் அளவுடனும் உறுதிப் பாட்டுடனும் சேர்ந்து ஏற்ற இறக்கத்திற்கு உள்ளாகிறது. ஒரு மூலதனப் பங்கின் பெயர் மதிப்பு, அதாவது இந்தப்பங்கினால் ஆரம்பத்தில் குறிக்கப்பெறும் முதலீட்டுத் தொகை £100 ஆக இருக்க, தொழில்-முனைவானது 5%க்குப் பதில் 10% செலுத்தினால் வட்டி வீதம் 5%ஆக இருந்து வரும் வரை அதன் சந்தை-மதிப்பு (மற்றவை யாவும் மாறாதிருக்க) £200 ஆக உயருகிறது; ஏனென்றால் 5% கணக்கில் மூலதனமாக்கப்படுகையில் இம் மூலதனப் பங்கு இப்போது £200 பெயரளவு மூலதனத்தைக் குறிக்கிறது. யார் அதை £200 கொடுத்து வாங்கினாலும் அவருக்கு இந்த மூலதன முதலீட்டின் மீது 5% வருவாய் கிடைக்கிறது. தொழில்-முனைவிலிருந்து வரும் ஆதாயம் குறையும் போது யாவும் மறுதலையாக நடைபெறுகின்றது. இந்த பத்திரத்தாளின் சந்தை-மதிப்பு உள்ளபடியே கிடைக்கும் வருமானத்தால் மட்டுமல்லாமல் எதிர்நோக்கப்படும் வருமானத்தாலும் (இந்த வருமானம் முன்கூட்டியே கணக்கிடப்படுகிறது) நிர்ணயிக்கப் படுவதால் ஓரளவுக்கு ஊக வழிப்பட்டது. ஆனால் உள்ளபடியான மூலதனத்தின் பெருக்கத்தை மாறாத ஒன்றெனக் கொள்வோமானால், மூலதனம் என்பதே இல்லாதவிடத்து (அரசுக் கடன்களின் சங்கதி

இதுதான்) ஆண்டு வருமானத்தை சட்டத்தால் நிர்ணயிக்கப் பட்டதாகவும், இதர வகையிலும் போதிய உத்திரவாதம் பெற்றதாக கொள்வோமானால், இந்தக் கடன் பத்திரங்களின் விலை வட்டி விகிதத்துக்கு எதிர் விகிதத்தில் ஏறவும் இறங்கவும் செய்கிறது. வட்டி வீதம் 5%இலிருந்து 10%ஆக உயருமானால், £5 வருமானத்துக்கு உத்திரவாதம் அளிக்கும் கடன் பத்திரங்கள் இப்போது £50 மூலதனத்தை மட்டுமே குறிக்கும். மாறாக, வட்டிவீதம் 2½% ஆகக் குறைந்தால், அதே கடன் பத்திரங்கள் £200 மூலதனத்தைக் குறிக்கும். அவற்றின் மதிப்பு எப்போதும் மூலதனமாக்கப்பட்ட வருமானம் மட்டுமே, அதாவது நடப்பிலுள்ள வட்டி வீதத்தில் பெயரளவு மூலதனத்தின் அடிப்படையில் கணக்கிடப்படும் வருமானமே ஆகும். ஆகவே, பணச்சந்தை இறுக்கமாய் இருக்கும்போது இக் கடன் பத்திரங்களின் விலை இரு காரணங்களினால் வீழ்ச்சியுறும்; முதற்காரணம் வட்டிவீதம் உயருவதாகும்; இரண்டாவது காரணம் இப்பத்திரங்கள் ரொக்கமாக மாற்றும் பொருட்டு பெரும் பெரும் அளவுகளில் சந்தைக்கு கொண்டு வருவதாகும். இந்தப் பத்திரத்தாள் அதன் உடைமையாளருக்கு உத்திரவாதம் செய்கிற வருமானம் மாறாதிருந்தாலும் சரி (அரசுப் பத்திரங்கள் இப்படித்தான்), பத்திரத்தாரினால் குறிக்கப்பெறும் உள்ளபடியான மூலதனத்தின் பெருக்கம் மறுவுற்பத்தி நிகழ்முறையில் நேரிடக்கூடிய குலைவுகளால் பாதிப்புற்றாலும் சரி (தொழில்துறை முனைவுகளில் இப்படித்தான்), இந்த விலைக்குறைவு நடைபெறவே செய்கிறது. மறுவுற்பத்தி நிகழ்முறையிலான குலைவுகளால் உள்ளபடியான மூலதனத்தின் பெருக்கம் பாதிப்புறுமானால், மேலே குறிப்பிட்ட மதிப்பிறக்கத்தோடு இன்னொரு மதிப்பிறக்கமும் சேர்ந்து கொள்கிறது, அவ்வளவுதான். புயல் ஓய்ந்து அமைதி ஏற்பட்ட உடனேயே, தொழில் - வர்த்தகத் தோல்வியையோ மோசடியையோ இது குறித்திடாத அளவில் இந்தப் பத்திரத் தாள் பழைய நிலைக்கே மீண்டும் உயர்ந்துவிடுகிறது. நெருக்கடிக் காலத்தில் ஏற்படும் அதன் மதிப்பிறக்கம் செல்வவளங்களை மையப்படுத்துவதற்கு வலியதொரு சாதனமாகிறது[2].

---

2. எங்கெல்ஸ் குறிப்பு:- பிப்ரவரி புரட்சி நடந்து முடிந்த வுடனே சரக்குகளும் கடன் பத்திரங்களும் படுமோசமாய் மதிப்பிறங்கிப் போய் விற்கவே முடியாதவை ஆகிவிட்டபோது லிவர்புலில் சுவிட்சர்லாந்திய வணிகர் ஒருவர் —திருவாளர். ஆர்.சுவில் ஷென்பார்ட்டு,— இந்தச் செய்தியை என் தந்தையிடம் கூறியதும் இவரே - தமது உடைமைகளையெல்லாம் ரொக்கமாக்கிக் கொண்டு கையில் ரொக்கத்துடன் பாரிசுக்கு பயணமாகி, ரோத்ஷில்டு என்பவரைத் தேடிப் பிடித்து. அவருடன் கூட்டுத்தொழில் முனைவில் பங்கேற்க விருப்பம் தெரிவித்தார். ரோத்ஷில்டு இமைகொட்டாமல் இவரைப் பார்த்துவிட்டு, விரைந்து வந்து தோளைப் பற்றிக்கொண்டு, கேட்டார்: “Avez-Vous de l'argent Sur vous?”- "Ou! M.le baron." - “Alors vous êtcs mon homme!” ('உங்களிடம் பணம் இருக்கிறதா?'—'இருக்கிறது ஐயா'—'அப்படியானால் நீங்கள்தான் என்னுடைய ஆள்!')—இருவரும் ஒன்றாய்ச் சேர்ந்து வளமாய் தொழில் புரிந்தார்கள்.

இந்தக் கடன் பத்திரத்தின் மதிப்பிறக்கம் அல்லது மதிப்பேற்றம் அதனால் குறிக்கப்படும் உள்ளபடியான மூலதனத்தினது மதிப்பின் அசைவியக்கத்தைச் சார்ந்திராத அளவுக்கு தேசத்தின் செல்வமானது மதிப்பிறக்கம் அல்லது மதிப்பேற்றத்துக்கு முன்பு இருந்தது போலவே பின்பும் இருக்கிறது. 'பொதுமக்களுக்கான மூலதனப் பங்குகளும் கால்வாய்ப் போக்குவரத்து மற்றும் இரயில் போக்குவரத்து பங்குகளும் 1847 அக்டோபர் 23க்குள்ளாகவே மொத்தத்தில் £114, 752, 225ஆக மதிப்பிறங்கி விட்டது, (மோரிஸ், இங்கிலாந்து வங்கி ஆளுநர், வாணிக இன்னல் பற்றிய அறிக்கை, 1847-48 என்பதின் சாட்சியம் (எண் 3800). இந்த மதிப்பிறக்கமானது உள்ளபடியே பொருளுற்பத்தியும் கால்வாய்களிலும்-இருப்புப்பாதைகளிலுமான போக்குவரத்தும் நின்று போவதையோ அல்லது ஏற்கனவே தொடக்கப்பட்ட தொழில் முனைவுகள் நிறுத்தி வைக்கப்படுவதையோ உருப்படாதவை என்று உறுதியான முயற்சிகளில் மூலதனம் விரையம் செய்யப்படுவதையோ குறிக்கவில்லையென்றால், பெயரளவிலான பண-மூலதனம் என்னும் இந்த நீர்க்குமிழியை உடைப்பதால் நாடு ஒரு சல்லிக்காசுகூட இழந்துவிடாது.

உள்ளபடியே இந்தக் கடன் பத்திரங்கள் எல்லாம் வருங்கால உற்பத்திக்கான உரிமைத்தகுதிகள் அல்லது சட்ட உரிமைகளின் திரட்சிக்கு மேல் வேறெதையும் குறிப்பதில்லை. இந்த உரிமைத் தகுதிகளின் பண-மதிப்பு அல்லது மூலதன-மதிப்பு என்பது கிஞ்சிற்றும் மூலதனத்தைக் குறிப்பதில்லை (அரசுக் கடன்களை உதாரணமாய்க் குறிப்பிடலாம்); அல்லது இப்பத்திரங்களால் குறிக்கப்பெறும் உண்மை மூலதனத்தின் மதிப்பைச் சாராமல் ஒழுங்கு செய்யப்படுகிறது.

முதலாளித்துவ பொருளுற்பத்தியை அடிப்படையாகக் கொண்ட எல்லா நாடுகளிலும் இவ்வடிவத்தில் வட்டி-மூலதனம் அல்லது பணமாகிய மூலதனம் எனப்படுவது பெருமளவில் இருந்து வருகிறது. பண-மூலதனத்திரட்டல் என்பதன் மூலம் பிரதானமாகப் புரிந்து கொள்ளப்படுவது உற்பத்தி மீதான இந்த உரிமைத் தகுதிகளின் திரட்டல், இந்த உரிமைத் தகுதிகளது சந்தை-விலையின், மாயையான மூலதன-மதிப்பின் திரட்டல் என்பதற்கு மேல் வேறு எதுவுமில்லை.

வங்கியாளருக்குச் சொந்தமான மூலதனத்தின் ஒரு பகுதி வட்டி-வருமானப் பத்திரம் எனப்படுவதில் இப்போது முதலீடாகிறது. இதுவே கூட உள்ளபடியே வங்கித் தொழில் தொடர்பான அலுவலில் எப்பணியும் புரிந்திடாத சேமவைப்பு மூலதனத்தில் ஒரு பகுதிதான்.

இந்தப் பத்திரங்களில் மிக முக்கிய பகுதியாய் அமைவது மாற்று உண்டியல்கள் ஆகும். அதாவது தொழில்துறை முதலாளிகள் அல்லது வணிகர்கள் பணம் செலுத்துவதாக அறிவிக்கும் உறுதிமொழிகள் ஆகும். பணக் கடன் தருகிறவருக்கு இந்த மாற்று உண்டியல்கள் வட்டி வருமானம் பெற்றுத்தரக் கூடியவை; அதாவது அவர் இவற்றை வாங்கும்போது, இன்னும் இவை ஓட வேண்டி இருக்கும் காலத்துக்கான வட்டியைக் குறைத்துக் கொள்கிறார். இதைத்தான் கழிவு செய்தல் என்கிறார்கள். மாற்று உண்டியலால் குறிக்கப்படும் தொகையிலிருந்து எவ்வளவு கழித்துக் கொள்ளப்படுகிறது என்பது நடப்பிலுள்ள வட்டிவீதத்தைப் பொறுத்தது.

முடிவில், வங்கியாளரின் மூலதனத்தில் கடைசிப் பகுதியாய் அமைவது தங்கமாகவும் நோட்டுகளாகவும் அவரிடம் இருக்கும் பணச் சேமவைப்பாகும். வங்கியில் வைப்பு வைக்கப்படும் தொகைகள் - உடன்பாட்டின் மூலம் குறிப்பிட்ட காலத்துக்கு முடக்கப்பட வில்லையென்றால் - வைப்பாளர்கள், எப்போது வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளத் தக்கவையாகும். அவை ஓயாமல் ஏற்ற இறக்கத்திற்கு உள்ளாகின்றன. வைப்பாளர்களில் ஒருவர் தமது கணக்கில் பணம் எடுக்கும்போதே இன்னொருவர் பணம் போடுகிறார்; இதனால் வைப்புகளின் மொத்த தொகையினது பொதுவான சராசரி அளவு இயல்பான அலுவல் நடைபெறும் காலங்களில் அவ்வளவதிகமாய் ஏற்ற இறக்கத்திற்கு உள்ளாவதில்லை.

முதலாளித்துவப் பொருளுற்பத்தி வளர்ச்சியடைந்த நாடுகளில் வங்கிகளின் சேமநிதிக்கானவை சராசரியாகச் சேர்ப்புவடிவில் இருந்துவரும் பண-அளவையே எப்போதும் தெரிவிக்கின்றன; இந்தச் சேர்ப்பில் ஒரு பகுதியோ பத்திரங்களால் தங்கத்தின் மீதான வெறும் பணவிடைகளால் ஆனது; இந்தப் பத்திரங்களுக்கு தம்மளவில் மதிப்பே கிடையாது. ஆக, வங்கியாளரின் மூலதனத்தில் பெரும்பகுதி முழுக்க முழுக்க பெயரளவு மூலதனமே ஆகும்; இது உரிமைத் தகுதிகளாலும் (மாற்று உண்டியல்கள்) அரசு கடன்- பத்திரங்களாலும் (செலவிடப்பட்ட மூலதனத்தைக் குறிப்பவை), மூலதனப் பங்குகளாகவும் (வருங்கால வருவாய் மீதான பணவிடைகள்) ஆனதாகும். இந்தப் பத்திரங்கள் உத்திரவாதம் பெற்ற வருவாய் மீதான பண விடைகளாகவோ (எடுத்துக்காட்டாக அரசு கடன் -பத்திரங்கள்), உண்மை மூலதனத்திற்கான உடைமையுரிமைகளாகவோ (எடுத்துக்காட்டாக மூலதனப் பங்கு) அமைந்துள்ளவரை

வங்கியாளரின் சேமப் பெட்டிகளில் இருந்துவரும் இப்பத்திரங்களால் குறிக்கப்பெறும் மூலதனத்தின் பண-மதிப்பே கற்பனைதான் என்பதை மறக்கலாகாது; இந்த மதிப்பானது பத்திரத்தால் ஓரளவுக்காவது குறிக்கப்பெறும் உண்மை மூலதனத்தின் மதிப்பைப்போல் அல்லாமல் வேறுவழியில் ஒழுங்கு செய்யப்படுகிறது என்பதையும் மறக்கலாகாது. இந்த மதிப்பு இம்மியளவும் மூலதனத்தைக் குறிக்காமல் வருவாய் மீதான வெறும் உரிமைத் தகுதிகளையே குறிப்பதாயிருந்தால், ஒரே வருவாய் மீதான உரிமைத்தகுதியை வெளியிடும் பெயரளவு பண-மூலதனம் ஓயாமல் மாறுகிறது. இது ஒருபுறம் இருக்க, வங்கியாளரின் இந்தப் பெயரளவு மூலதனத்தில் பெரும் பகுதி அவருக்குச் சொந்தமான மூலதனத்தைக் குறிப்பதல்ல, வட்டி கிடைக்கும்படியாகவோ வட்டி இல்லாமலோ அவரிடம் வைப்புகள் வைத்துள்ள பொதுமக்களுக்குச் சொந்தமான மூலதனத்தையே குறிப்பதாகும் என்பதும் நோக்கற்பாலது.

பணமாகவோ, தங்கம் அல்லது நோட்டுகளாகவோ இவற்றின் மீதான பணவிடைகளாகவோதான் எப்போதும் வைப்பு வைக்கப்படுகின்றது. உள்ளபடியான சுற்றோட்டத்தின் தேவைகளைப் பொறுத்து சுருங்கி விரியும் சேமநிதியைத் தவிர்த்து இந்த வைப்புகள் உடைமையில் எப்போதுமே தொழில்துறை முதலாளிகள் மற்றும் வணிகர்களின் கையில்தான் இருக்கின்றன; இவ்விதம் அவர்களின் மாற்று உண்டியல்கள் கழிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு முன்னீடுகள் கிடைக்கின்றன; மறுபுறம் இவை கடன் - பத்திர வர்த்தகர்களின் (பங்குச் சந்தைத் தரகர்கள்) கையிலோ, தமது கடன்-பத்திரங்களை விற்றுவிட்ட தனியார்களின் கையிலோ, (கருவூல நோட்டுகளையும் புதுக் கடன்களையும் பொறுத்தவரை) அரசின் கையிலோ இருக்கின்றன. இந்த வைப்புகளேகூட இரட்டைப் பாத்திரம் வகிப்பவையாகும். ஒருபுறம், சற்றுமுன் நாம் குறிப்பிட்டதுபோல, இவை வட்டி-மூலதனமாகக் கடன் தரப்படுகின்றன. ஆகவே வங்கிகளின் சேமப் பெட்டிகளில் இருப்பதற்குப் பதில் வைப்பாளர்களிடமிருந்து பெறப்பட்ட கடன்களாக வங்கிகளின் பதிவேடுகளில் மட்டும் இடம் பெறுகின்றன. மறுபுறம், வைப்பாளர்கள் ஒருவரிடமிருந்து ஒருவர் கோருகிற தொகைகள் அவர்களுடைய வைப்புகள் மீதான காசோலைகளால் நேர்செய்யப்பட்டு ஒன்றுக்கொன்று கணக்கிலிருந்து நீக்கம் செய்யக்கூடியவையாக இருக்கிற அளவில், வைப்புகள் இத்தகைய கணக்கு பதிவுகளாக மட்டும் செயல்படுகின்றன. இது தொடர்பாக,

இந்த வைப்புகள் ஒரே வங்கியாளரிடம் ஒப்புவிககப்பட்டு இதனால் அவர் பல்வேறு கணக்குகளையும் ஒன்றுக்கொன்று நேர் செய்வது சாத்தியமானாலும் சரி, இது வெவ்வேறு வங்கிகளில் செய்யப்பட்டு, அவ்வங்கிகள், காசோலைகளைத் தமக்குள் மாற்றிக் கொண்டு நிலுவைகளை மட்டும் ஒன்றுக்கொன்று செலுத்திக் கொண்டாலும் சரி, இரண்டும் ஒன்றுதான்.

வட்டி மூலதனமும் கடன்-செலாவணி அமைப்பும் வளர்ச்சி யடைவதை ஒட்டி, மூலதனமனைத்தும் இரு மடங்காவதாகவும், சில நேரம் மும்மடங்காவதாகவும் தோன்றுகிறது. ஒரே மூலதனம் அல்லது ஒருகால் கடன் மீதான ஒரே உரிமைத் தகுதி வெவ்வேறு ஆட்களின் கையில் வெவ்வேறு வடிவங்களில் தோற்றமளிப்பதற்கான பல்வேறு முறைகளைக் கொண்டு இது நடைபெறுகிறது[3]. இந்த பண மூலதனத்தின் பெரும்பகுதி சேரும். இவ்விதம் முன்னுரிமை பங்குகளில் 'திடமான' மூலதன முதலீடு என்பது உள்ளபடியே நடைபெறும் ஊக வாணிபத்திலிருந்து - பின்னுரிமைப் பங்குகளிலான ஊக வாணிபத்திலிருந்து - பிரிக்கப்பட்டு விடுகிறது. ஒருசில பெரும் தொழில் முனைவுகள் இந்தப் புதிய வழக்கத்தை கைக்கொள்ள விரும்பவில்லையாதலால், புது நிறுமங்களை அமைக்கும் உபாயம் கையாளப்பட்டிருக்கிறது; இந்தப் புது நிறுமங்கள் பழைய நிறுமங்களின் மூலதனப் பங்குகளில் ஒரு மிலியனோ சில மிலியனோ பவுன்

3. எங்கெல்ஸ் குறிப்பு:- மூலதனம் இப்படி இருமடங்காவதும் மும்மடங்காவதும் சமீப ஆண்டுகளில் மேலும் கணிசமாய் வளர்ந்துள்ளது; நிதிசார் பொறுப்புக் கழகங்கள் மூலமாக ஏற்பட்டுள்ள வளர்ச்சியை எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம்; இந்த பொறுப்புக் கழகங்கள் ஏற்கெனவே இலண்டன் பங்குச் சந்தையின் அறிக்கையில் தமக்கென்று தனியிடம் பிடித்திருக்கக் கானலாம் - குறிப்பிட்டவகை வட்டி வருமான பத்திரங்களை, எடுத்துக்காட்டாக அயல் நாட்டு அரசுக் கடன் பத்திரங்கள், ஆங்கிலேய நகராட்சிப் பத்திரங்கள், அமெரிக்கப் பொது பத்திரங்கள், இரயில் போக்குவரத்துத் தொழிற் பங்குகள் போன்றவற்றை விலைக்கு வாங்குவதற்காக ஒரு நிறுமம் அமைக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக £2 மிலியன் மூலதனமானது பங்கு வழங்கீடுகளின் மூலம் திரட்டப்படுகிறது. இய்க்குநர் குழுவானது சம்மந்தப்பட்ட மதிப்புகளை வாங்கிவிடுகிறது அல்லது சற்றே முனைந்து அவற்றில் ஊகவாணிபம் செல்கிறது; செலவுகளைக் கழித்துக் கொண்டபின் ஆதாய பங்கீடுகளாக வருடாந்தர வட்டியைப் பங்குதாரர்களிடையே பகிர்ந்தளிக்கிறது. மேலும், சில பங்கு நிறுமங்கள் பொதுப் பங்கை இரு இனங்களாக, முன்னுரிமைப் பங்காகவும் பின்னுரிமைப் பங்காகவும் பிரிக்கும் வழக்கத்தை ஏற்றுள்ளன. முன்னுரிமைப் பங்குகளுக்கு நிலையான வட்டிவீதம் - உதாரணமாக 5% கிடைக்கிறது; மொத்த இலாபம் இதற்கு இடமளித்தால்தான் இது சாத்தியமென்பது மெய்தான். அதற்குப் பிறகும் ஏதாவது எஞ்சியிருந்தால் பின்னுரிமை பங்குக்குப் போய் முழுக்க முழுக்க பெயரளவு மூலதனமே, சேமநிதி தவிர வைப்புகளெல்லாம் வங்கியாளர் மீதான உரிமைத்தகுதிகளே தவிர வேறல்ல இவை வைப்புகளாக நிலவுவதே இல்லை. தீர்வகக் கொடுக்கல் வாங்கல்களில் இவை எந்த அளவுக்கு பயன்படுகின்றனவோ அந்த அளவுக்கு வங்கியாளருக்கான மூலதனமாக - வங்கியாளர்கள் அவற்றை வட்டிக்கு விட்ட பிறகு - செயல்படுகின்றன. வங்கியாளர்கள் தமக்கிடையே கணக்குகளை நேர் செய்வதன் மூலம் இல்லாத வைப்புகள் மீதான தமது பணவிடைகளுக்காக ஒருவருக்கொருவர் பணம் செலுத்திக் கொள்கிறார்கள்.

ஸ்டெர்லிங்குகளை முதலீடு செய்கின்றன, பிறகு இவ்விதம் வாங்கப்பட்ட பங்குகளது பெயர் மதிப்பின் அளவுக்கு புதிய பங்குகளை வெளியிடுகின்றன. ஆனால் புதியவற்றில் ஒருபாதி முன்னுரிமைப் பங்குகளாகவும் மறுபாதி பின்னுரிமைப் பங்குகளாகவும் வெளியிடப்படுகிறது: இத்தகைய சந்தர்ப்பங்களில் ஆரம்பப் பங்குகள் இரட்டிப்பாகின்றன; ஏனென்றால் இவை பங்குகளைப் புதிதாய் வெளியிடுவதற்கான அடிப்படையாகப் பயன்படுகின்றன.

கடனாகப் பணம் கொடுப்பதில் மூலதனம் வகிக்கும் பாத்திரம் தொடர்பாக ஆதாம் ஸ்மித் சொல்கிறார்: 'பண வடிவிலான வட்டியிலும் கூட, மூலதன உடைமையாளர்கள் தாமே ஈடுபடுத்தக் கருதாத மூலதனங்களை ஒரு கையிலிருந்து இன்னொரு கைக்கு மாற்றிக் கொடுக்கும் ஒப்படைப்பு ஆவணத்தையே பணம் குறிப்பதாகச் சொல்லலாம், அந்த மூலதனங்கள் அவற்றை மாற்றிக் கொடுக்கும் கருவியாகப் பயன்படும் பணத்தொகையுடன் ஒப்பிடுகையில் அநேகமாய் எவ்விகிதத்தில் வேண்டுமானாலும் கூடுதலாய் இருக்கலாம்; கடன் கொடுப்பதற்கோ கொள்முதல் செய்வதற்கோ ஒருமுறை பயன்படும் அதே காசுகள் அடுத்தடுத்து பல்வேறு கடன்களுக்கும் பல்வேறு கொள்முதல்களுக்கும் தொடர்ந்து பயன்படலாம். எடுத்துக்காட்டாக, A என்பவர் W என்பருக்கு £1,000 கடனாய்க் கொடுக்கிறார்; W ஆனவர் இப்பணத்தைக் கொண்டு உடனடியாகவே B என்பவரிடமிருந்து £1,000 மதிப்புள்ள பண்டங்களை வாங்குகிறார். B ஆனவர் தாமே இப்பணத்தை பயன்படுத்திக் கொள்ள வாய்ப்பில்லாததால் அதே காசுகளை X என்பவருக்கு கடனாய்க் கொடுக்கிறார்;

X ஆனவர் இந்தப் பணத்தைக் கொண்டு உடனடியாகவே C என்பவரிடமிருந்து £1,000 மதிப்புள்ள பண்டங்களை வாங்குகிறார். C ஆனவர் மேற்சொன்ன அதே முறையிலும் அதே காரணத்தாலும் இந்தக் காசுகளை Y என்பவருக்குக் கடனாய் தருகிறார்; Y ஆனவர் இப் பணத்தைக் கொண்டு D என்பவரிடமிருந்து பண்டங்கள் வாங்குகிறார். இவ்வழியில் அதே காசுகள் - நாணயமாகவோ, காகிதப் பணமாகவோ - ஒரு சில நாட்களுக்குள் மூவேறு கடன்களுக்கும் மூவேறு கொள்முதல்களுக்கும் கருவியாகப் பயன்படலாம். இந்தக் கடன்கள், கொள்முதல்கள் ஒவ்வொன்றும் மதிப்பளவில் அந்தக் காசுகளின் மொத்தத் தொகைக்குச் சமம். பணம் படைத்த A, B, C மூவரும் கடன்வாங்கும் W,X,Y மூவரிடமும் எதை ஒப்படைக்கிறார்கள்? மேற்

சொன்னவாறு பண்டங்கள் வாங்கும் சக்தியையே ஒப்படைக்கிறார்கள். கடன்களின் மதிப்பும் சரி, பயனும்சரி இந்தச் சத்தியில்தான் அடங்கியுள்ளன. பணம் படைத்த மூவாராலும் கடனாய்த் தரப்படும் மூலதனம் அதைக் கொண்டு கொள்முதல் செய்யக்கூடிய பண்டங்களின் மதிப்புக்குச் சமமாய் இருப்பதோடு, கொள்முதல்கள் செய்வதற்குப் பயன்படும் பணத்தின் மதிப்பைப் போல் மும்மடங்கு கூடுதலாகவும் இருக்கிறது. ஆனால், அந்தக் கடன்கள் முழு நிறைவான விதத்தில் சிறந்த உத்திரவாதம் பெற்றவையாக இருக்கலாம்; கடன்பட்ட வெவ்வேறு ஆட்களும் கொள்முதல் செய்கிற பண்டங்கள் சரிவர ஈடுபடுத்தப் படுவதால், உரிய காலத்தில் நாணயமாகவோ காகிதப் பணமாகவோ சமமதிப்பை மீட்டுக் கொடுப்பதோடு இலாபமும் தருவதே காரணம். அதே காசுகள் இவ்விதம் அவற்றின் மதிப்பைப் போல் மும்மடங்கு - அல்லது முப்பது மடங்கும்கூட மதிப்புடைய வெவ்வேறு தொகைகளைக் கடனாய்க் கொடுப்பதற்குக் கருவியாகப் பயன்பட முடிகிறது அல்லவா, அதேபோல் அடுத்தடுத்து கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான கருவியாகவும் பயன்படலாம். ([**நாடுகளின் செல்வம்—அதன் இயல்பும் காரணங்களும் பற்றிய ஆய்வு, அபர்தீன், லண்டன், 1848 பக்கம் 236—ஆங்கிலப் பதிப்பாசிரியர்] புத்தகம்II, அத்தியாயம் IV**)

ஒரே காசினை அதன் சுற்றோட்ட வேகத்தைப் பொறுத்து பல்வேறு காரியங்களுக்கும் பயன்படுத்தலாம், இதேபோல் பல்வேறு கடன்களுக்கும் பயன்படுத்தலாம். எப்படியென்றால் கொள்முதல்கள் செய்யப்படும்போது அது ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு தாவிச்செல்கிறது; கடன் என்பது கொள்முதலின் இடைச் செயல் இல்லாமல் ஒருவரிடமிருந்து இன்னொருவருக்குக் கைமாறுவதே ஆகும். பண்டம் விற்கிற ஒவ்வொருவருக்கும், பணம் என்பது அவரது சரக்குகளின் மாறிய உருவத்தையே குறிக்கிறது. இப்போதெல்லாம் ஒவ்வொரு மதிப்பும் மூலதன-மதிப்பாகத் தெரிவிக்கப்படுகிற நிலையில், பணமானது பல்வேறு கடன்களிலும் அடுத்தடுத்து பலவேறு மூலதனங்களைக் குறித்திடுகிறது. இப்படிக் கூறுவதும், பணமானது அடுத்தடுத்து பல்வேறு சரக்கு-மதிப்புகளை ஈடேற்றம் செய்யலாம் என்று முன்பு கூறியதும் ஒன்றே. அதேபோது, உண்மை மூலதனங்களை ஆளுக்கு ஆள் கைமாறச் செய்வதற்காகப் பணம் சுற்றோட்ட ஊடகமாகவும் பயன்படுகிறது. கடன்களைப் பொறுத்த வரை, அது சுற்றோட்ட ஊடகமாக ஆளுக்கு ஆள் தாவிச் செல்வதில்லை,

அது கடன் கொடுப்பவரின் கையில் தங்கியிருக்கும் வரை, சுற்றோட்ட ஊடகமாக அல்ல, அவரது மூலதன-மதிப்பின் நிலவல் வடிவமாகவே அவர் கையில் இருந்து வருகிறது. வேறு ஒருவருக்குக் கடனாய்த் தரும்போது இவ்வடிவத்திலேயே அவர் அதனை கைமாறச் செய்கிறார். A ஆனவர் B க்கும், B ஆனவர் C க்கும் கொள்முதல்களின் இடைச் செயல் இல்லாமலேயே பணத்தைக் கொடுத்து இருப்பார்களேயானால், அதே பணம் மூன்று மூலதனங்களை குறிக்காது, ஒன்றே ஒன்றை - ஒரு மூலதன-மதிப்பைக் குறிப்பதாய் இருக்கும். அது உள்ளபடியே எத்தனை மூலதனங்களைக் குறிப்பதாகும் என்பது எத்தனை தடவை பல்வேறு சரக்கு-மூலதனங்களுக்கும் மதிப்பு வடிவமாகச் செயல்படுகிறது என்பதைப் பொறுத்தது.

பொதுவாகக் கடன்கள் குறித்து ஆதாம்ஸ்மித் சொல்வது வைப்புகளுக்கும் பொருந்தும். வைப்புகள் என்பவை வங்கியாருக்குப் பொதுமக்கள் தரும் கடன்களுக்கான மறுபெயரே தவிர வேறல்ல. அதே காசுகள் எத்தனை வைப்புகளுக்கு வேண்டுமானாலும் கருவிகளாகப் பயன்படலாம்.

'கேள்விக்கு இடமற்ற உண்மை என்னவென்றால்: இன்று A இடத்தில் நீங்கள் வைப்பிலிடும் £1,000 நாளை மறுபடியும் வெளியிடப்பட்டு, B இடத்தில் வைப்பாகலாம். அதற்கடுத்த நாள் B இடமிருந்து திரும்பவும் வெளியிடப்பட்டு C இடத்தில் வைப்பாகலாம்;.....இப்படியே முடிவில்லாமல் நடைபெறலாம்; அதே £1,000 பணமானது இவ்விதம் அடுத்தடுத்த கைமாற்றங்கள் மூலம் பல்கிப் பெருகி வரையறை என்பதே இல்லாத வைப்புகளின் தொகையாகலாம். ஆக, ஐக்கிய முடியரசில் இருக்கும் வைப்புகள் அனைத்திலும் பத்திலொன்பது பங்கானவை அந்தந்த வைப்புக்கும் பொறுப்பாளிகளான வங்கியாளர்களின் கணக்கேடுகளில் பதியப் பட்டிருப்பதோடு சரி என்பது சாத்தியமே....எடுத்துக்காட்டாக, ஸ்காட்லாந்தில், செலாவணி £3 மிலியனைத் தாண்டியதே இல்லை; வங்கிகளிலிருக்கும் வைப்புகள் £27 மிலியன் என்பது மதிப்பீடு. வங்கிகளில் திடீர் மொய்ப்பு (Run) £1,000 ஆனது - பயணத்துக்குப் பயணம் திருப்பி அனுப்பப்பட்டுக் கொண்டு இருப்பதால்-வரம்பற்ற ஒரு தொகையை மிக எளிதில் சரிக்கட்டி விடும். கைவினைஞருக்குத் தரவேண்டிய கடனை சரிக்கட்டுவதற்காக இன்று நீங்கள் பயன்படுத்தும் அதே £1,000 ஆனது, வணிகருக்கு அவர் தரவேண்டிய கடனை சரிக்கட்டுவதற்கு நாளையும், வணிகர் வங்கிக்குத் தர வேண்டிய

கடனை அடைப்பதற்கு நாளை மறுநாளும் - இவ்வாறே தொடர்ந்து முடிவே இல்லாமல் - பயன் படலாம் அல்லவா, அதேபோல் இந்த £1,000மானது கைக்கு கையும் வங்கிக்கு வங்கியும் தாவிச் சென்று எவ்வளவு வேண்டுமானாலும் வைப்புகளின் தொகையை சரிக்கட்டப் பயன்படலாம்.' (செலாவணித் தத்துவம் குறித்து மறுபரிசீலனை, பக்கம் 62 - 63).

இந்தக் கடன்-செலாவணி அமைப்பில் எலலாமே இருமடங்கும் மும்மடங்குமாகிக் கற்பனையில் உதிக்கிற வெறும் மாயாவியமாக மாறிப் போகிறது அல்லவா, முடிவில் ஏதாவது திட உருவாகப் பிடிபடும் என்று எதிர்பார்க்கக்கூடிய 'சேமநிதியும்' இவ்வாறே மாறிப் போகிறது.

இங்கிலாந்து வங்கியின் ஆளுநர் திருவாளர், மோரீஸ் சொல்வதை மீண்டும் கேட்போம்: 'வங்கியாளர்களாய் இருக்கும் தனியாருக்குச் சொந்தமான சேமநிதிகள் இங்கிலாந்து வங்கியின் கையில் வைப்புகளாக இருந்து வருகின்றன.....தங்க ஏற்றுமதி என்பது முதலில் இங்கிலாந்து வங்கிக்குச் சொந்தமான சேமநிதியின் மீதுதான் பிரத்தியேகமாய்ச் செயல்புரிகிறது; ஆனால் இங்கிலாந்து வங்கியில் வங்கியாளர் வைத்துள்ள சேமநிதிகளில் ஒருபகுதி விலக்கிக் கொள்ளப்படுவதால் இது அவர்களின் சேம நிதிகள் மீதும் செயல்புரிவதாய் இருக்கும். நாடெங்கிலும் உள்ள வங்கியாளர்கள் அனைவரின் சேமநிதிகள் மீதும் செயல்புரிவதாய் இருக்கும் (வாணிக இன்னல், 1847 - 48, எண் 3639, 3642.) ஆக முடிவில், இச் சேமநிதிகள் உள்ளபடியே இங்கிலாந்து வங்கியின் சேமநிதிகளோடு கலந்துவிடுகின்றன.[4] ஆனால் இந்தச் சேமநிதியும் இரட்டை நிலவல் உடையதாகும். வங்கி அலுவற் பிரிவின் சேம நிதியானது புழக்கத்தில் இருக்கும் நோட்டுகளுக்கு மேலதிகமாய் எவ்வளவு நோட்டுகளை வெளியிடுவதற்கு இங்கிலாந்து வங்கி அதிகாரம் பெற்றுள்ளதோ அந்த உபரிக்குச் சமம். நோட்டு வெளியீட்டின் சட்டபூர்வ அதிகபட்சம் £14 மிலியனும் (இதற்கு பொற்பாளம் ஏதும் சேம இருப்பாக இருக்க வேண்டியதில்லை; வங்கிக்கு அரசு தர வேண்டியுள்ள தோராயமான தொகைதான் இது); அத்துடன் வங்கியின் உயர்நிலை உலோக இருப்பு £14 மிலியன் ஆகும்

(4) [எங்கெல்ஸ் குறிப்பு: அதன் பிறகு இது எந்த அளவுக்கு தீவிரமடைந்துள்ளது என்பதை 1892 நவம்பரில் இலண்டனிலேயே மிகப் பெரியவையான பதினைந்து வங்கிகளின் வங்கிச் சேம இருப்புகளைக் காட்டும் பின்வரும் அதிகாரபூர்வ அட்டவணையிலிருந்து அறியலாம். இது 1892 டிசம்பர் 15ஆம் தேதிய டெய்லி நியூஸ் ஏட்டிலிருந்து எடுத்துத் தரப்படுகிறது.

என்றால், வங்கியானது இக் கணக்கின்படி £28 மிலியனுக்கு நோட்டு வெளியிடலாம். இவற்றில் £20 மிலியன் புழக்கத்தில் இருந்தால், வங்கி அலுவற் பிரிவின் சேமநிதி £8 மிலியன் ஆகும். இந்நிலையில் இந்த £8 மிலியன் மதிப்புள்ள நோட்டுகள் சட்டப்படி வங்கியின் வசமிருக்கும் வங்கியாளர் மூலதனமாகும்; அதேபோது அதன் வைப்புகளுக்கான சேமநிதியும் ஆகும். இப்போது தங்க வெளிக்கசிவு ஏற்பட்டு, வங்கியிலிருக்கும் உயர்நிலை உலோக இருப்பு £6 மிலியன் குறையுமானால்-இதற்கு ஈடான தொகைக்கு நோட்டுகளை

---

| வங்கியின் பெயர் | பொறுப்புகள் | ரொக்க சேம இருப்புகள் | சதவிதங்கள் |
|---|---|---|---|
| சிட்டி | £9,317,629 | £746,551 | 8.01 |
| கேபிட்டல் அண்டு கவுண்ட்டீஸ் | 11,392,744 | 1,307,483 | 11.47 |
| இம்பீரியல் | 3,987,400 | 447,157 | 11.22 |
| லாய்ட்ஸ் | 23,800,937 | 2,966,806 | 12.46 |
| லண்டன் அண்டு வெஸ்ட் மின்ஸ்டர் | 24,671,559 | 3,818,885 | 15.50 |
| லண்டன் அண்டு சஹூத் வெஸ்டர்ன் | 5,570,268 | 812,353 | 14.58 |
| லண்டன் ஜாயின்ட் ஸ்டாக் | 12,127,993 | 1,288,977 | 10.62 |
| லண்டன் அண்டு மிட்லண்டு | 8,814,499 | 1,127,280 | 12.79 |
| லண்டன் அண்டு கவுண்ட்டி | 37,111,035 | 3,600,374 | 9.70 |
| நேஷனல் | 11,163,829 | 1,426,225 | 12.77 |
| நேஷனல் புராவின்ஷியல் | 41,907,384 | 4,614,780 | 11.01 |
| பார்ஸ் அண்டு தி அலயன்ஸ் | 12,794,489 | 1,532,707 | 11.98 |
| ப்ரெஸ்காட் யு கோ | 4,041,058 | 538,517 | 13.07 |
| யூனியன் ஆஃப் லண்டன் | 15,502,618 | 2,300,084 | 14.84 |
| வில்லியம்ஸ், டீக்கன் யூ மான் செஸ்டர் யூ கோ | 10,452,381 | 1,317,628 | 12.60 |
| மொத்தம் | £232,655,823 | £27,845,807 | 11.97 |

கிட்டதட்ட 28 மில்லியன் ஆகிய இந்த மொத்தச் சேம இருப்பில், குறைந்தது 25 மிலியன் இங்கிலாந்து வங்கியில் வைப்பு வைக்கப்பட்டுள்ளது; அதிகபட்சமாய் 3 மிலியன்தான் இந்த 15 வங்கிகளின் சேம பெட்டிகளிலும் ரொக்கமாய் இருக்கிறது. ஆனால் இதே 1892 நவம்பர் மாதத்தில் இங்கிலாந்து வங்கியின் வங்கி அலுவற் பிரிவின் ரொக்கச் சேம இருப்பு 16 மிலியனுக்குக் குறைவாகவே இருந்தது.]

அழிக்கவேண்டி இருக்கும் வங்கி அலுவற் பிரிவின் சேம இருப்பு £8 மிலியனிலிருந்து £2 மிலியனாகக் குறையும். ஒருபுறம், இங்கிலாந்து வங்கி அதன் வட்டி வீதத்தைக் கணிசமாய் உயர்த்தும் மறுபுறம், அதனிடம் வைப்பு வைத்துள்ள வங்கிகளும் ஏனைய வைப்பாளர்களும் வங்கியில் தாம் பெற்றுள்ள கடன்களுக்கு காப்பளிக்கும் சேமநிதி பெரிதும் குறையக் காணலாம். 1857இல் இலண்டன் நகரத்தின் நான்கு மிகப்பெரிய மூலதன வங்கிகள் இங்கிலாந்து வங்கியானது 1844ஆம் வருடத்திய வங்கிச் சட்டத்தை நிறுத்தி வைப்பதற்கு 'அரசுக் கடிதம்' விடுக்கப்படுமாறு செய்யத்தவறினால் தம் வைப்புகளை எடுக்கப் போவதாகவும், இவ்விதம் வங்கி அலுவற்பிரிவை போண்டியாக்கப் போவதாகவும் அச்சுறுத்தின்[5]. இவ்வழியில் வங்கி அலுவற் பிரிவானது நொடித்துப் போகலாம்; 1847இல் இப்படித்தான் நிகழ்ந்தது; அதேபோது புழக்கத்தில் இருக்கும் நோட்டுகளின் மாறும்திறனை உத்திரவாதம் செய்வதற்காக நோட்டு வெளியீட்டுப் பிரிவில் எவ்வளவு மிலியன் வேண்டுமானாலும் (உதாரணமாக 1847இல் £8 மிலியன்) வைத்திருக்கப்படுகிறது. ஆனால் இதுவும்கூட கானல்நீர்தான்.

'வங்கியாளர்களிடம் உள்ள வைப்புகளில் பெரியதொரு பகுதிக்கு உடனடிக் கிராக்கி ஏதும் இல்லாத நிலையில், இந்தப் பகுதியானது உண்டியல்தரகர்களின் கைக்குள் போய்விடுகிறது; இதற்குப் பிரதியாக இத்தரகர்கள் வங்கியாளருக்கு வர்த்தக உண்டியல்களைத் தருகிறார்கள்; இந்த உண்டியல்கள் இலண்டனிலும் நாட்டின் வெவ்வேறு பகுதிகளிலும் இருக்கும் ஆட்களுக்காக வங்கியாளர் முன்னீடு செய்த தொகைக்கு பிணையம் என்ற முறையில் இத்தரகர்களால் ஏற்கெனவே கழிவு செய்யப்பட்டவையாகும். இந்த ஆயத்த நிலைப்பணம் செலுத்தப்படுவதற்கு உண்டியல் தரகரே வங்கியாளருக்குப் பொறுப்பாளியாவார்; இந்தக் கொடுக்கல் வாங்கல்கள் மிகப் பெரிய அளவில் நடைபெற்றன; சான்றாக; (இங்கிலாந்து) வங்கியின் இப்போதைய ஆளுநர் திருவாளர் நீல் சாட்சியமளிப்பதை கேளுங்கள்: 'ஒரு தரகரிடம் 5 மிலியன் இருந்தது எங்களுக்குத் தெரியும்; இன்னொருவரிடம் 8 முதல் 10 மிலியன் இருப்பதாக நாங்கள் நம்ப

(5) எங்கல்ஸ் குறிப்பு:- 1844ஆம் வருடத்திய வங்கிச் சட்டம் நிறுத்திவைக்கப்பட்டதால் இங்கிலாந்து வங்கி தன்வசமுள்ள தங்கச் சேம இருப்பின் பின்பலம் கருதாமல் எவ்வளவு வேண்டுமானாலும் வங்கி நோட்டுகளை வெளியிடுவது சாத்தியமாகிறது; இவ்வாறு, மனம் போன போக்கில் எவ்வளவு வேண்டுமானாலும் பெயரளவான காகிதப் பண-மூலதனத்தை உண்டுபண்ணுவதும் வங்கிகளுக்கும் செலாவணித்தரகர்களுக்கும் அவர்கள் மூலமாய் வர்த்தகத்துறைக்கும் கடன் கொடுப்பதற்கு அதை இப்பண-மூலதனத்தைப் பயன்படுத்துவதும் சாத்தியமாகிறது.

*வைக்கப்பட்டோம்; ஒருவரிடம் 4 மிலியன் இன்னொருவரிடம் 3 ½ மிலியன், மற்றொருவரிடம் 8 மிலியனுக்கு அதிகமாகவும் இருந்தன.' (வங்கிச்சட்டங்கள் பற்றிய குழுவின் அறிக்கை, 1857 - 58 பக்கம் 5 பிரிவு 8.)*

*'இலண்டன் உண்டியல் தரகர்கள் ரொக்கச் சேம இருப்பு ஏதும் இல்லாமலே மிகப் பெரும் கொடுக்கல் வாங்கல்களை நடத்தி வந்தனர்; தீர்வுக்குரியவையாகிற தங்களுடைய உண்டியல்களின் மறு ஓட்டத்தை நம்பியோ, கடைக் கோடி நிலையில், கழிவுக்குரிய உண்டியல்களை பிணையமாக்கி இங்கிலாந்து வங்கியிலிருந்து முன்னீடுகள் பெறும் சக்தியை நம்பியோ இந்தக் கொடுக்கல் வாங்கல்களை நடத்தினர்.' மேலது, பக்கம் VIII. பிரிவு 17. 'இலண்டனில் உள்ள இரு உண்டியல் தரகு நிலையங்கள் 1847இல் பணக் கொடுப்பை நிறுத்தி வைத்தன; இரண்டுமே பிற்பாடு மீண்டும் அலுவல் தொடங்கின. 1857இல் இரண்டுமே திரும்பவும் நிறுத்தி வைத்தன. 1847இல் ஒரு நிலையத்தின் கடன் பொறுப்புகள் மொத்த எண்ணிக்கையில் £2,683,000; மூலதனம் £180,000; 1857 இல் இதே நிலையத்தின் கடன் பொறுப்புகள் £5,300,000 ஆக இருந்தன; அநேகமாய் மூலதனம் 1847இல் இருந்ததில் கால் பங்குக்கு மேற்படவில்லை. மற்றொரு நிலையத்தின் கடன் பொறுப்புகள் ஒவ்வொரு பணி நிறுத்தக் காலத்திலும் £3,000,000கும் £4,000.000க்கும் இடையிலிருந்தன; மூலதனம் £45,000க்கு மிகைப் படவில்லை.' (மேலது, பக்கம் XXI, பிரிவு 52.)*

## அத்தியாயம் XXX

### பண-மூலதனமும் உண்மை-மூலதனமும்,

*கடன்-செலாவணி அமைப்பு தொடர்பாக இப்போது நம்முன் எழுகிற கடினமான கேள்விகள் எல்லாம் இவைதான்:*

*முதலாவதாக: உள்ளபடியான பண-மூலதனத்தின் திரட்டல். இது உண்மையான மூலதனத்திரட்டலின், அதாவது விரி திற மறுவுற்பத்தியின் தெரிவிப்பாக இருப்பது எந்த அளவுக்கு? இல்லாதது எந்த அளவுக்கு? மூலதன மிகைப்பாடு என்பதெல்லாம் வட்டி-மூலதனம், அதாவது பண-மூலதனம் தொடர்பாக மட்டுமே ஆளப்படும் சொற்றொடர் இது-தொழில்துறை மிகையுற்பத்திக்கான தனிவித தெரிவிப்பு மட்டும் தானா அல்லது இந்த மிகையுற்பத்தியே அன்னியில் ஏற்படும் தனிவேறு நிகழ்வாகுமா? பண-மூலதனத்தின் மிகை-வழங்கலைக் குறித்திடும் இந்த மிகைப்பாடானது பணத் தொகைகள் (பொறப்பாளம், பொற்காசு, வங்கி - நோட்டுகள்). தேங்கி நிற்பதோடு ஒருங்கமைகிறதா; இதனால் உள்ளபடியான பணம் இப்படி மிகையாய் இருப்பது இந்தக் கடன் - மூலதன மிகைப்பாட்டின் தெரிவிப்பும் புறத் தோற்றமும் ஆகுமா?*

*இரண்டாவதாக: பணத்தட்டுப்பாடு, அதாவது கடன்-மூலதனப் பற்றாக்குறை உண்மை மூலதனத்தின் (சரக்கு-மூலதனம், திறனுடை-மூலதனம் இவற்றின்) பற்றாக்குறையை எந்த அளவுக்குத் தெரிவிக்கிறது? இது மறுபுறத்தில் உள்ளபடியான பணப் பற்றாக்குறை சுற்றோட்ட ஊடகப்பற்றாக் குறை ஆகியவற்றோடு எந்த அளவுக்கு ஒருங்கமைகிறது?*

*நாம் இதுவரை பண-மூலதனத்தின், பொதுவாக, பணச் செல்வத்தின் பிரத்தியேகத் திரட்டல் வடிவத்தை பரிசீலித்த அளவில் அது உழைப்பின் மீது சொத்துடைமைக்கான உரிமைத்தகுதிகளாக உருவெடுக்கிறது. தேசக் கடன் வடிவிலான மூலதனத்திரட்டலானது அரசுக்கு கடன் கொடுத்தவர்களின் வர்க்கம் - வரிவருவாயில்*

குறிப்பிட்ட ஒரு பகுதிக்கான முன்னுரிமைத் தகுதி படைத்தவர்கள் இவர்கள் - பெருகுவதைக் குறிப்பதாகுமே தவிர வேறல்ல, என்பதை முன்பே தெளிவாக்கினோம்[6].கடன்கள் குவிந்து போவதே கூட இப்படி மூலதனத்திரட்டலாய் தோற்றமளிப்பது கடன்-செலாவணி அமைப்பில் நடைபெறும் உருத்திரிபு உச்ச நிலைக்குப் போவதையே காட்டுகிறது. ஆரம்பத்தில் கடனாய்ப் பெறப்பட்டது என்றாலும் நெடுநாள் முன்பே செலவழிக்கப்பட்டுவிட்ட இந்த உறுதிப்பத்திரங்கள், நுகரப்பட்டு விட்ட மூலதனத்தின் இந்தக் காகித நகல்கள் விற்கத்தக்க சரக்குகளாகவும், இவ்விதம் திரும்பவும் மூலதனமாக மாற்றத்தக்கவை யாகவும் இருக்கிற அளவில் அவற்றின் உடைமையாளர்களுக்கு மூலதனமாகப் பயன்படுகிறது.

கூட்டுப்பங்கு நிறுமங்கள், இருப்புப் பாதைகள், சுரங்கங்கள் போன்றவற்றுக்கான உடைமையுரிமைகள் உண்மை மூலதனத்திற்கான உரிமைகள் ஆகும் என்று பார்த்தோம். ஆனால் அவை இந்த மூலதனத்தை கையில் ஒப்படைக்கிறவை அல்ல. இம்மூலதனத்தைத் திரும்ப பெற முடியாது. இம் மூலதனத்தால் உற்பத்தி செய்யப்படவிருக்கும் உபரி-மதிப்பில் ஒரு பங்குக்கான சட்ட வழிப்பட்ட உரிமைத் தகுதியை மட்டுமே அவை தருகின்றன. ஆனால் இந்த உடைமையுரிமைகளும் உண்மை மூலதனத்தின் காகித நகல்கள் ஆகிவிடுகின்றன; கப்பல் சரக்குச் சான்று அதனால் குறிக்கப்படும் சரக்கை அன்னியில் அதேபோது தனக்கென்று தனியாக ஒரு மதிப்பையும் அடைந்தால் எப்படியோ அதேபோலத்தான் இதுவும். இந்த உடைமையுரிமைகள் இல்லாத மூலதனங்களின் பேரளவு பிரதிநிதிகள் ஆகிவிடுகின்றன. உண்மை மூலதனம் இவற்றை அன்னியில் இருந்து வருகிறது; இந்த நகல்கள் ஆளுக்கு ஆள் கைமாறுகையில் அந்த மூலதனம் கைமாறுவதில்லை. இவை

(6) அரசுப் பத்திரங்கள் என்பவை வருடாந்தர வருவாயில் கடன் அடைப்பதற்காக ஒதுக்கப்படும் பகுதியைக் குறிக்கும் கற்பனை மூலதனமே தவிர வேறல்ல. அதற்கு நிகரான அளவில் மூலதனம் செலவழிக்கப்பட்டுள்ளது; இதைக்கொண்டே எவ்வகைக் கடன் என்று பெயரிடப்படுகிறது; ஆனால் எவ்வடிவிலும் மூலதனம் இப்போது இல்லாது போய்விட்டதால் அரசுப்பத்திரம் இதைக் குறிப்பதாகாது. இதற்கிடையில் தொழில் துறையில் செயற்பாட்டால் புதிய செல்வம் விளைந்தாக வேண்டும். ஆண்டுதோறும் இந்தச் செல்வத்தின் ஒரு பகுதியானது செலவழிக்கப்பட்ட செல்வத்தை கடனாய்க் கொடுத்தவருக்கென முன்கூட்டி ஒதுக்கப்படுகிறது. இந்தப் பகுதியானது செல்வ உற்பத்தி செய்கிறவர்களிடமிருந்து வரிகளாகப் பெறப்பட்டு, அரசுக்கு கடன் கொடுத்தவர்களுக்குத் தரப்படுகிறது; அதேபோது கடன் கொடுத்தவர்களுக்கு கிடைக்க வேண்டிய வருடாந்தர வட்டியை பெற்றுத்தருவதற்கு ஏற்ற அளவில் கற்பனை மூலதனம் அனுமானம் செய்து கொள்ளப்படுகிறது; நாட்டில் மூலதனத்துக்கும் வட்டிக்கும் நிலவுகிற வழக்கமான விகிதம் இதற்கான அடிப்படையாகப் பயன்படுகிறது. (சிஸ்மொந்தி. Nouveaux principes) (இரண்டாம் பதிப்பு, பாரிஸ், 1827).IIp. 230

குறிப்பிட்ட வருமானத்துக்கு உத்திரவாதம் அளிப்பதால் மட்டுமல்ல, இவற்றை விற்பதன் மூலம் இவற்றில் முதலீடாகிய மூலதன மதிப்புகளைத் திருப்பிச் செலுத்த முடியும் என்பதாலும் இவை வட்டி-மூலதனத்தின் வடிவங்கள் ஆகின்றன. இந்தக் கடன் பத்திரங்கள் திரளுவதானது இருப்புப் பாதைகளும் சுரங்கங்களும் நீராவிக் கப்பல்களும் இன்ன பிறவும் திரள்வதை குறிப்பதாய் உள்ள அளவில் உள்ளபடியான மறுவுற்பத்தி நிகழ்முறை விரிவடைவதைக் குறிப்பதாகும் - எடுத்துக்காட்டாகச் சொன்னால் அசையுஞ் சொத்தின் மீதான வரிப்பட்டியல் விரிவடைவது எப்படி இச் சொத்து விரிவடைவதை குறிப்பதாகுமோ அதேபோலத்தான் இதுவும். ஆனால் தாமே சரக்குகளாகப் பரிவர்த்தனை செய்யப்படக் கூடியவையும், எனவே மூலதன மதிப்புகளாகச் சுற்றியோடக் கூடியவையுமான நகல்கள் என்ற முறையில், இவை மாயையானவை; மதிப்பு இவை எதற்கான உரிமைப்பத்திரங்களோ அந்த உண்மை மூலதனத்தின் மதிப்பில் ஏற்படும் ஏற்றஇறக்க அலைவுகளைச் சாராமல் இவற்றின் மதிப்பு ஏறவோ இறங்கவோ கூடியதாகும். இந்த மதிப்பு அதாவது பங்குச்சந்தையில் இவற்றுக்கான மதிப்பீடு வட்டி வீதம் குறையும்போது தவிர்க்க முடியாதவாறு உயரும் போக்குடையதாகும். பண - மூலதனத்துக்கே உரிய பிரத்தியேக அசைவியக்கங்களை சார்ந்திராமல் இந்த வட்டிவீத குறைவானது இலாபவீதக் குறைவுப் போக்கின் விளைவாக மட்டும் அமைகிற அளவில் இப்படி நிகழ்கிறது; ஆகவே, இக் காரணத்தாலேயே முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் வளர்ச்சிப் போக்கில் இந்தக் கற்பனைச் செல்வம் விரிவடைகிறது. குறிப்பிட்ட ஆரம்பப் பெயர் மதிப்பு கொண்ட அதன் ஈவுப்பகுதிகளில் ஒவ்வொன்றுக்குமான மதிப்புத் தெரிவிப்புக்கேற்ப இது நடைபெறுகிறது.[7]

இந்த உடைமையுரிமைகளின் விலையிலான ஏற்ற இறக்கங்களால் விளையும் இலாபமும் இழப்பும், மேலும் இரயில்வே போக்குவரத்து தொழில் மன்னர்களைப் போன்றவர்களின் கையில் இந்த உரிமைகள்

---

(7) கடன் கொடுப்பதற்கான பண - மூலதனமாக திரண்டிருப்பதில் ஒரு பகுதி உண்மையில் தொழில்துறை மூலதனத்தின் தெரிவிப்பேயாகும். எடுத்துக்காட்டாக 1857இல் அமெரிக்க இரயில் போக்குவரத்து நிறுவனங்களிலும் ஏனைய தொழில் முனைவுகளிலும் இங்கிலாந்து £80 மிலியனை முதலீடு செய்வதென்றால் அநேகமாய் முழுக்க முழுக்கவே ஆங்கிலேயச் சரக்குகளில் ஏற்றுமதி மூலமாய் இம்முதலீடு செய்யப்பட்டது; இந்தச் சரக்குகளுக்கு பிரதியாக அமெரிக்கர்கள் எதுவும் கொடுக்கவேண்டி இருக்கவில்லை. ஆங்கிலேய ஏற்றுமதியாளர்கள் இந்தச் சரக்குகளுக்காக அமெரிக்கா மீது மாற்று உண்டியல்கள் எடுத்தனர்; ஆங்கிலேயப் பங்காளர்கள் இந்த உண்டியல்களை விலைக்கு வாங்கி, தமது பங்குகளுக்கான கொடுப்பென்ற வகையில் அமெரிக்காவுக்கு அனுப்பிவைத்தனர்.

மையப்படுவதும் இயல்பாகவே மேன்மேலும் சூதாட்டங்களாகி விடுகின்றன; உழைப்புக்குப் பதில் இப்போது சூதாட்டமே மூலதன உடைமையின் ஆரம்ப ஆதாரமாகத் தோன்றுவதோடு அப்பட்டமான வலுவந்தத்தின் இடத்துக்கும் வந்து விடுகிறது. இவ்வகை கற்பனை பணச்செல்வமானது தனிப்பட்டவர்களின் பணச் செல்வத்தில் மட்டுமல்ல, வங்கி-மூலதனத்தின் பணச் செல்வத்திலும் கூட மிகக் கணிசமான பகுதியாவதை முன்பே குறிப்பிட்டோம்.

இந்தப் பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காணும்பொருட்டு இங்கு சுட்டிக்காட்ட வேண்டியது என்னவென்றால், பண-மூலதனத்திரட்டல் என்பது ஒருபுறம் தனிப்பட்ட பண - முதலாளிகளுக்கும், மறுபுறம் அரசு, வட்டார ஆட்சியாளர்கள், கடன் வாங்கி மறுவுற்பத்தியில் ஈடுபடுகிறவர்கள் ஆகியோருக்கும் இடையாளர்களாகச் செயல்படும் வங்கியாளர்களின் (தொழில் முறை லேவா தேவிக்காரர்களின்) கையில் செல்வம் திரளுவதைக் குறிப்பதாகவும் இருக்கலாம். ஏனென்றால் கடன் -செலாவணி அமைப்பின் பரந்துபட்ட விரிவாக்கம் முழுவதும், பொதுவாகக் கடன்-செலாவணி முழுவதிலும் அவர்களால் அவர்களுக்கே சொந்தமான மூலதனமாகப் பயன்படுத்திக் கொள்ளப்படுகிறது. இந்த ஆசாமிகள் எப்போதுமே தமது மூலதனத்தையும் வருமானத்தையும் பண வடிவிலோ பணத்துக்கான நேரடி உரிமைத் தகுதி வடிவிலோ வைத்துக் கொள்கிறார்கள். இந்த வர்க்கத்தினர் செல்வம் திரட்டுவதானது உள்ளபடியான திரட்டலில் இருந்து அறவே மாறுபட்ட வழியில் நடைபெறலாம்; ஆனால் எப்படியும் இதிலிருந்து நிரூபணமாவது, இவர்கள் உண்மைத் திரட்டலில் கணிசப் பங்கை, தமக்குரியதாக்கிக் கொள்கிறார்கள் என்பதே.

நம்முன்னுள்ள பிரச்சினையின் வரம்புகளைக் குறுக்கிக் கொள்வோம். அரசுக் கடன் பத்திரங்களும் மூலதனப் பங்குகளும் ஏனைய எல்லாவகைக் கடன் பத்திரங்களும் கடன்-மூலதனத்திற்கு-வட்டி வருமானம் தருவதை நோக்கமாய்க் கொண்ட மூலதனத்திற்கு-முதலீட்டுத் துறைகள் ஆகும். இவ்வகை மூலதனத்தைக் கடனாய்க் கொடுப்பதற்கான வடிவங்கள் ஆகும். ஆனால் தாமாகவே இவை அவற்றில் முதலீடாகியுள்ள கடன் - மூலதனமாகமாட்டா. மறுபுறம், கடன்-செலாவணியானது மறுவுற்பத்தி நிகழ்முறையில் நேரடிப்பங்கு வகிக்கிற அளவில், தொழில்துறை முதலாளியோ வணிகரோ, உண்டியல் கழிவு செய்து பெறவோ கடன் வழங்கப்பெறவோ

விரும்பும்போது அவருக்குத் தேவைப்படுவது மூலதனப் பங்குகளோ அரசுக் கடன்பத்திரங்களோ அல்ல. அவருக்குத் தேவைப்படுவது பணம். ஆகவே பணத்தை வேறு எந்த வழியிலும் அடைய முடியாவிட்டால் அவர் அந்த கடன் பத்திரங்களை அடகு வைக்கவோ விற்கவோ செய்கிறார். இந்தக் கடன் - மூலதனத்திரட்டலைத்தான் இங்கு நாம் பரிசீலித்தாக வேண்டும்; இன்னும் குறிப்பாகச் சொன்னால் கடனுக்குரிய பண-மூலதனத்திரட்டலைத்தான் பரிசீலித்தாக வேண்டும். வீடுகள், இயந்திரங்கள் போன்ற நிலை-மூலதனக் கடன்கள் இங்கு நம் கருத்துக்குரியவை அல்ல. தொழிலதிபர்களும் வணிகர்களும் மறுவுற்பத்தி நிகழ்முறையின் சுற்றெல்லைக்குள் ஒருவருக்கொருவர் அழித்துக் கொள்ளும் முன்னீடுகளும் நம் கருத்துக்குரியவை அல்ல - என்றாலும் இதுபற்றியும் கூட இன்னும் விவரமாக நாம் பரிசீலிக்க வேண்டி இருக்கும். வங்கியாளர்கள் இடையாளர்கள் என்ற முறையில் தொழிலதிபர்களுக்கும் வணிகர்களுக்கும் தருகிற பணக் கடன்கள் மட்டுமே இங்கு நம் கருத்துக்குரியவை.

---

ஆக, முதலில் வர்த்தகக் கடன் செலாவணியை, அதாவது மறுவுற்பத்தி நிகழ்முறையில் ஈடுபட்டுள்ள முதலாளிகள் ஒருவருக்கொருவர் அழித்துக் கொள்ளும் கடன்-செலாவணியைப் பகுத்தாராய்வோம். இதுவே கடன்-செலாவணி அமைப்பின் அடிப்படை. இதன் பிரதிநிதியாக வருவதே மாற்று உண்டியல்; இவ்வுண்டியல் கொடுப்புத் தேதி நிர்ணயிக்கப்பட்ட உறுதிப்பத்திரம் ஆகும், ஒத்திவைத்த கொடுப்புக்கான ஆவணமாகும். ஒவ்வொருவரும் ஒரு கையால் கடன் கொடுக்கிறார், மறுகையால் கடன் வாங்குகிறார். இப்போதைக்கு நாம் வங்கியாளரின் கடன்-செலாவணியை கண்டு கொள்ளவே வேண்டாம்; இது அறவே மாறுபட்ட ஒரு துறைக்குரியது. இந்த மாற்று உண்டியல்கள் வணிகர்களுக்கிடையே மீண்டும் கொடுப்புச் சாதனங்களாக சுற்றியோடுகின்றன. இடையில் கழிவு செய்யப்படாமலேயே ஒருவருக்கொருவர் புறக்குறிப்பின் மூலமாய் இப்படிச் சுற்றியோடுகின்றன என்ற அளவில் இது A இடமிருந்து B க்கு உரிமைத் தகுதியைக் கைமாற்றம் செய்வதுதானே தவிர, நிலைமையில் இம்மியளவும் மாற்றமில்லை. இது ஒருவரை நீக்கிவிட்டு அவரது இடத்தில் வேறு ஒருவரை அமர்த்துவதேயாகும். இங்கேயும் கூட பணத்தின் குறுக்கீடு இல்லாமலே கடனைத் தீர்த்து விடமுடியும், எடுத்துக்காட்டாக, A என்னும் நூற்பாளர் B என்னும் பருத்தித் தரகருக்கு

ஓர் உண்டியல் செலுத்த வேண்டியிருக்கிறது; இந்தத் தரகர் C என்னும் இறக்குமதியாளருக்கு ஓர் உண்டியல் செலுத்த வேண்டியிருக்கிறது.

Cஉம் நூல் ஏற்றுமதி செய்கிறவராய் இருந்தால் (அநேக சந்தர்ப்பங்களில் இப்படித்தான் நேரிடுகிறது) அவர் ஒரு மாற்று உண்டியலைக் கொடுத்து A இடமிருந்து நூல் வாங்கலாம்; நூற்பாளராகிய Aதரகராகிய Bக்கு அத் தரகரின் உண்டியலையே விலையாகத் தரலாம் - இந்த உண்டியல் C இடமிருந்து விலையாக வரப்பெற்றது. அதிக பட்சமாகச் சொன்னால், நிலுவையைப் பணமாகச் செலுத்த வேண்டி இருக்கும் அதாவது கொடுக்கல் வாங்கல் முழுவதும் பருத்தியும் நூலும் பரிவர்த்தனை ஆவதில்தான் அடங்கியுள்ளது. ஏற்றுமதியாளர் நூற்பாளருக்கு பிரதிநிதியாகவும், பருத்தித்தரகர் பருத்தித் தோட்ட அதிபருக்கு பிரதிநிதியாகவும் வருகிறார்கள் என்பதற்கு மேல் ஒன்றுமில்லை.

முழுக்கமுழுக்க வர்த்தகக் கடன் - செலாவணியேயாகிய இதன் சுற்று குறித்து இரு விவரங்களைக் குறிப்பிட்டாக வேண்டும்.

*முதலாவதாக:* இந்தப் பரஸ்பர உரிமைத்தகுதிகளின் தீர்வு மூலதனத்தின் மீள்வைப் பொறுத்தது; அதாவது C—Mஐப் பொறுத்தது; இந்த C—Mஒத்தி போடப்படுகிறது, அவ்வளவுதான். நூற்பாளர் பருத்தித் துணி உற்பத்தியாளரிடமிருந்து ஒரு மாற்று உண்டியல் வரப்பெற்றிருக்கும்போது, உற்பத்தியாளர் சந்தையில் விட்ட சரக்குகள் இதற்கிடையில் விற்றுப்போயிருந்தால் அவரால் பணம் செலுத்த முடியும். தானியத்தில் ஊக வாணிபம் செய்பவர் அவருடைய முகவர் மீது ஒரு மாற்று உண்டியல் எடுத்திருக்கும்போது, தானியமானது இதற்கிடையில் எதிர்பார்த்த விலைக்கு விற்றுப் போயிருந்தால் முகவரால் பணம் செலுத்த முடியும். ஆகவே இந்தக் கொடுப்புகள் மறுவுற்பத்தியின், அதாவது பொருளுற்பத்தி நுகர்வு நிகழ்முறைகளின் நெகிழ்திறத்தைப் பொறுத்தது. ஆனால் கடன்-செலாவணிகள் பரஸ்பரமாய் இருப்பதால், ஒருவரால் பணம் செலுத்த முடியுமா என்பது அதேபோது வேறுஒருவரால் பணம் செலுத்தமுடியுமா என்பதைப் பொறுத்ததாகும்; எப்படியென்றால் ஒருவர் மாற்று உண்டியல் எடுக்கிறார் என்றால், தம் சொந்தத் தொழிலில் மூலதனம் திரும்பி வந்துவிடும் என்றோ, இடைப்பட்ட காலத்தில் தமக்கு பணம் செலுத்த வேண்டியவராய் இருக்கும் மூன்றாமவரின் தொழிலில் மூலதனம் திரும்பி விடும் என்றோ அவர் கணக்கிட்டு இருக்கலாம். மூலதனம் திரும்பி வரக்கூடிய வாய்ப்பு ஒருபுறம் இருக்க உண்டியல் எடுப்பவரின் வசம் சேமஇருப்பாய் இருந்துவரும் மூலதனத்தைக்

கொண்டுதான் பணஞ்செலுத்துவது சாத்தியப்படும் - மூலதனமீள்வு தாமதப்பட்டுவிடுமானால் அவர் த்மது கடப்பாடுகளை நிறைவு செய்வதற்கு இதுவே வழி.

*இரண்டாவதாக:* இந்தக் கடன்-செலாவணி அமைப்பு ரொக்கக் கொடுப்புகளுக்கான தேவையை ஒழித்துவிடுவதில்லை. தொடக்கத்தில் பெரும்பகுதியான செலவுகள் எப்போதுமே ரொக்க வடிவில் செலுத்தப்பட வேண்டும்; கூலி வரி முதலானவற்றை உதாரணமாகக் குறிப்பிடலாம். ஆனால் B என்னும் முதலாளி C என்பவரிடமிருந்து ரொக்கக் கொடுப்புக்கு பதில் ஒரு மாற்று உண்டியலை ஏற்றுக் கொள்வதாகவும், அவருக்கு இந்த உண்டியல் தீர்வுக்குரியதாவதற்கு முன்பே Bக்குத் தீர்வுக்குரியதாகும் ஓர் உண்டியலுக்கு அவர் பணம் செலுத்த வேண்டியிருப்பதாகவும் கொள்வோமானால், இதற்கு அவரிடம் ரொக்கப் பணம் இருந்தாக வேண்டும். முழுமையான மறுவுற்பத்திச் சுற்று என்பது பருத்தித் தோட்ட அதிபரிடமிருந்து பருத்தி நூற்பாளருக்கும் திரும்பவும் பருத்தி நூற்பாளரிடமிருந்து பருத்தித் தோட்ட அதிபருக்குமாக மேலே நாம் அனுமானித்துக் கொண்டது போல் சுழன்று செல்லும் சுற்று என்பது விதி விலக்காக மட்டுமே அமைய முடியும்; ஓயாமல் பல கட்டங்களிலும் சுற்று முறிந்தாக வேண்டும். மாறா மூலதன உற்பத்தியாளர்கள் எப்படி மாறா - மூலதனத்தில் ஒரு பகுதியை தம்மிடையே பரிவர்த்தனை செய்து கொள்கிறார்கள் என்று மறுவுற்பத்தி நிகழ்முறையை பரிசீலிக்கையில் பார்த்தோம். (இரண்டாம் பாகம், பகுதி III. பக்கம் ). ஆதலால் மாற்று உண்டியல்கள் ஓரளவுக்கு ஒன்றையொன்று நேர் செய்து கொள்ள முடிகிறது. இதேபோல் பொருளுற்பத்தி ஏறும் முகமாய் இருக்க, பருத்தித் தரகர் பருத்தி நூற்பாளரின் பெயரிலும் நூற்பாளர் பருத்தித் துணி உற்பத்தியாளரின் பெயரிலும், உற்பத்தியாளர் ஏற்றுமதியாளரின் பெயரிலும், ஏற்றுமதியாளர் இறக்குமதியாளரின் பெயரிலும் (இருவரும் பருத்தி இறக்குமதியாளராகவே இருக்கக் கூடும்) உண்டியல் எடுக்கும்போதும் இவ்வாறே நிகழ்கிறது. ஆனால் கொடுக்கல் வாங்கல்களின் சுற்றும், இதன் விளைவாக உரிமைத் தகுதிகளின் தொடர் நேர் மாறாய்த் திரும்புவதும் ஒருங்கே நடைபெறுகிறவை அல்ல. எடுத்துக்காட்டாக நெசவாளர் மீது நூற்பாளருக்குள்ள, உரிமைத் தகுதி இயந்திரத் தயாரிப்பாளர் மீது நிலக்கரி வர்த்தகருக்குள்ள உரிமைத் தகுதியால் தீர்க்கப்படுவதில்லை; நூற்பாளர் தமது தொழிலை நடத்திச் செல்லும்போது ஒருபோதும் இயந்திரத் தயாரிப்பாளர் மீது எதிர் - உரிமைத் தகுதிகள் கொண்டாடுவதில்லை; ஏனென்றால் அவரது

உற்பத்திப் பண்டமாகிய நூல் ஒருபோதும் இயந்திர தயாரிப்பாளரின் மறுவுற்பத்தி நிகழ்முறையில் ஒரு கூராகச் சேருவதில்லை. ஆக. இப்படிப்பட்ட உரிமைத்தகுதிகளை பணத்தைக் கொண்டுதான் தீர்த்து வைத்தாக வேண்டும்.

இந்த வர்த்தகக் கடன்-செலாவணியை அதனளவில் எடுத்துக் கொள்ளும்போது அதற்கு வரம்புகளாய் இருப்பவை பின்வருமாறு; (1) தொழிலதிபர்கள், வணிகர்கள் ஆகியோரின் செல்வம், அதாவது மூலதன மீள்வுகள் தாமதப்படுமானால் பயன்படுத்திக் கொள்வதற்கென அவர்கள் வசம் சேம இருப்பாய் உள்ள மூலதனம்; (2) இந்த மூலதன மீள்வுகள். இம் மீள்வுகள் தாமதப்படலாம், அல்லது சரக்கு விலைகள் இடைக் காலத்தில் வீழ்ச்சியுறலாம், அல்லது சந்தையில் ஏற்படும் வதிநிலை (அளவுக்கதிகமான நிலை) காரணமாய் சரக்குகளை அப்போதைக்கு விற்க முடியாமற் போகலாம். மாற்று உண்டியல்கள் எவ்வளவுக்கு எவ்வளவு நீண்ட காலம் ஓட்டத்தில் இருக்கின்றனவோ மூலதனச் சேம இருப்பு அவ்வளவுக்கு அவ்வளவு அதிகமாய்த் தேவைப்படுகிறது; விலை குறைவதாலோ சந்தையில் வதிநிலை ஏற்படுவதாலோ மூலதன மீள்வுகள் குறைந்து போகவோ தாமதப்படவோ கூடிய சாத்தியப்பாடு அவ்வளவுக்கு அவ்வளவு அதிகரிக்கிறது. மேலும், எவ்வளவுக்கு எவ்வளவு ஆரம்பக் கொடுக்கல் வாங்கலானது சரக்குவிலைகளில் ஏற்படக்கூடிய உயர்வு அல்லது குறைவு தொடர்பான ஊகத்தின் அடிப்படையில் நடைபெற்றதோ, மூலதன மீள்வுகள் அவ்வளவுக்கு அவ்வளவு நிச்சய மற்றவையாகின்றன. ஆனால் உழைப்பின் உற்பத்தித் திறனும், எனவே பெருவீத பொருளுற்பத்தியும் வளர்ந்து செல்லச் செல்ல (1) சந்தைகள் விரிவடைந்து, உற்பத்தி நடைபெறும் இடத்திலிருந்து மேன்மேலும் தொலைவில் அமைகின்றன என்பதும், (2) எனவே கடன்-செலாவணியை நீட்டித்தாக வேண்டும் என்பதும், (3) இவ்விதம் கொடுக்கல் வாங்கல்களில் ஊகவாணிபக் கூறு மேன்மேலும் ஆதிக்கம் வகித்தலாவது திண்ணம் என்பதும் தெளிவாய்த் தெரிகிறது. தொலை தூரச் சந்தைகளுக்கான பெருவீதப் பொருளுற்பத்தியானது உற்பத்தியாவது அனைத்தையும் வர்த்தகத்தின் கையில் ஒப்படைக்கிறது; ஆனால் நாட்டின் மூலதனம் இருமடங்காவதும், இவ்விதம் வர்த்தகத்துறையானது நாட்டின் உற்பத்தி அனைத்தையும் தன் சொந்த மூலதனத்தைக் கொண்டு வாங்கிப் பிறகு விற்பதும் முடியாத காரியம். ஆக, இங்கு கடன்-செலாவணி இன்றியமையாதது; இந்தக் கடன்-செலாவணி உற்பத்தியின் மதிப்புப் பரிமாணம் வளருவதை

யொட்டி இந்தக் கடன்-செலாவணியின் பரிமாணமும் வளருகிறது; சந்தைகளின் தொலைவு அதிகரிப்பதை ஒட்டி இந்தக் கடன் செலாவணி நீடித்திருக்கும் காலமும் அதிகரிக்கிறது. இங்கு பரஸ்பரமான ஒரு விளைவு ஏற்படுகிறது. பொருளுற்பத்தி நிகழ்முறையின் வளர்ச்சி கடன்-செலாவணியை விரிவடையச் செய்கிறது; அதேபோது கடன்-செலாவணியானது தொழில்துறை, வர்த்தகத்துறை செயற்பாடுகளை விரிவடையச் செய்கிறது.

இந்த கடன்-செலாவணியை வங்கியாளரின் கடன்-செலாவணியிலிருந்து வேறாக நாம் பரிசீலிக்கும்போது தொழில்துறை மூலதனத்தின் பரிமாணத்திற்கேற்ப அது வளருவதை தெளிவாய் பார்க்க முடிகிறது. இங்குக் கடன்-மூலதனமும் தொழில்துறை மூலதனமும் முழுதொத்தவை ஆகும்; கடனாய்த்தரப்படும் மூலதனம் இறுதியான சொந்த நுகர்வுக்கென்றோ அல்லது திறனுடை-மூலதனத்தின் மாறாக் கூறுகளை மாற்றீடு செய்வதற்கென்றோ அமைந்த சரக்கு-மூலதனம் ஆகும். இங்குக்கடன்-மூலதனமாக காட்சியளிப்பது மறுவுற்பத்தி நிகழ்முறையின் குறிப்பிட்ட ஒரு கட்டத்தில் இருந்துவரும் மூலதனம்தான்; ஆனால் இம் மூலதனம் விற்றல்-வாங்கலின் மூலம் கைக்குக் கை மாற்றப்படுவதாகும்; இதை வாங்குகிறவர் இதற்கான சமதையை உடனே செலுத்தாமல், நிர்ணயிக்கப்பட்ட காலம் முடிந்த பிறகே செலுத்துகிறார். எடுத்துக்காட்டாகப் பருத்தியானது ஒரு மாற்று உண்டியலுக்கு பிரதியாக நூற்பாளரின் கைக்கு மாற்றப்படுகிறது, நூலானது ஒரு மாற்று உண்டியலுக்கு பிரதியாக பருத்தித் துணி உற்பத்தியாளரின் கைக்கு மாற்றப்படுகிறது, பருத்தித் துணியானது ஒரு மாற்று உண்டியலுக்கு பிரதியாக வணிகரின் கைக்கு மாற்றப்படுகிறது, அதுவே ஒரு மாற்று உண்டியலுக்கு பிரதியாக ஏற்றுமதியாளரின் கைக்குச் சென்று, பிறகு ஒரு மாற்று உண்டியலுக்கு பிரதியாக இந்தியாவில் இருக்கும் ஒரு வணிகரின் கைக்கு போய்விடுகிறது; இவர் துணியை விற்று பதிலுக்கு அவுரி போன்றவற்றை வாங்குகிறார். பருத்தி இப்படிக் கைக்கு கை மாறிச் செல்லும்போதே, துணியாக மாற்றமடைந்துவிடுகிறது; முடிவில் இந்தத் துணி இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டு அவுரிக்குப் பரிவர்த்தனை செய்யப்படுகிறது; அவுரியானது ஐரோப்பாவுக்கு கப்பலேற்றப்பட்டு, அங்கு மீண்டும் மறுவுற்பத்தி நிகழ்முறையில் சேர்ந்து கொள்கிறது. மறுவுற்பத்தி நிகழ்முறையின் பல்வேறு கட்டங்களும் இங்கு கடன்-செலாவணியின் இடைச் செயலால் நிறைவேறுகின்றன. நூற்பாளர் பருத்திக்குப் பணம் தரவில்லை, பருத்தித் துணி உற்பத்தியாளர் நூலுக்கு பணம் தரவில்லை,

வணிகர் பருத்தித் துணிக்கு பணம் தரவில்லை -இவ்வாறு மேலும் சொல்லலாம். நிகழ்முறையின் ஆரம்பக் கட்டங்களில், பருத்தியாகியச் சரக்கு அதன் பல்வேறு உற்பத்திப் படிநிலைகளின் ஊடாகச் செல்கிறது; இப்படி மாறிச் செல்வதற்கு கடன்-செலாவணி இடைச்செயல் வழிசெய்கிறது. ஆனால் பருத்தியானது உற்பத்தி நிகழ்முறையில் சரக்காக இறுதி வடிவம் பெற்ற பிறகு, இந்தச் சரக்கு-மூலதனமே பல்வேறு வணிகர்களிடம் கைமாறிச் செல்ல வேண்டியுள்ளது; இவ்வணிகர்கள் அதனைத் தொலை தூரச் சந்தைகளுக்கு அனுப்பி வைக்கிறார்கள்; கடைசியாக வரும் வணிகர் முடிவில் இச் சரக்குகளை நுகர்வாளர்களிடம் விற்றுவிட்டு, பதிலுக்கு வேறு சரக்குகள் வாங்குகிறார்; இந்த வேறு சரக்குகள் நுகரப்பட்டுவிடுகின்றன, அல்லது மறுவுற்பத்தி நிகழ்முறையில் சேர்ந்து பங்காற்றுகின்றன. ஆக, இங்கு இரு கட்டங்களை வேறுபடுத்திப் பார்ப்பது அவசியமாகிறது; முதற்கட்டத்தில் கடன்-செலாவணியானது குறிப்பிட்ட ஒரு பண்டத்தின் உற்பத்தியில் உள்ளபடியே அடுத்தடுத்து வரும் படிநிலைகளை ஊக்கப்படுத்துகிறது; இரண்டாவது கட்டத்தில் கடன் -செலாவணியானது ஒரு வணிகரின் கையிலிருந்து இன்னொரு வணிகரின் கைக்கு அப்பண்டம் கைமாறிச் செல்வதையே (போக்குவரத்து உட்பட), C—M என்னும் செயலையே ஊக்கப் படுத்துகிறது. ஆனால் இங்கேயும்கூட சரக்கானது எப்படியும் சுற்றோட்ட நிகழ்முறையில்தான், அதாவது மறுவுற்பத்தி நிகழ்முறையின் ஒரு கட்டத்தில்தான் இருக்கிறது.

ஆகவே, இங்கு கடனாய்த் தரப்படுவது வேலையற்ற மூலதனம் அல்லவே அல்ல என்று தெரியவருகிறது; இந்த மூலதனம் அதன் உடைமையாளரின் கையில் வடிவமாற்றம் அடைந்தாக வேண்டும்; அதன் இப்போதைய வடிவம் அவருக்கு வெறும் சரக்கு-மூலதனம் தான், அதாவது திரும்பவும் உருமாற்றம் செய்யப்பட வேண்டிய, எப்படியும் முதலில் பணமாக மாற்றப்பட வேண்டிய மூலதனம்தான். எனவே சரக்குகளின் உருமாற்றத்தைத்தான் இங்கு கடன்-செலாவணி ஊக்கப்படுத்துகிறது; இந்த உருமாற்றம் C—M என்பதோடு நின்று விடாமல், M—C என்பதையும் உள்ளபடியான பொருளுற்பத்தி நிகழ்முறையையும் கூட குறிப்பதாகும். மறுவுற்பத்திச் சுற்றுக்குள் கடன் -செலாவணி (வங்கியாளரின் கடன் -செலாவணியைத் தவிர) ஏராளமாய் இருப்பது கடனாய்த் தரப்படக் கூடியதும் இலாபகர முதலீட்டை நாடியிருப்பதுமான வேலையற்ற மூலதனம் ஏராளமாய் இருப்பதைக் குறிப்பதாகாது. மாறாக மறுவுற்பத்தி நிகழ்முறையில் மூலதனம் மிக

அதிகமாய் வேலை வாங்கப்படுவதையே அது குறித்திடும். ஆக இங்கே கடன்-செலாவணியானது (1) தொழில்துறை முதலாளிகளைப் பொறுத்தவரை தொழில்துறை மூலதனம் ஒரு கட்டத்திலிருந்து இன்னொரு கட்டத்துக்கு மாறிச் செல்வதை ஒன்றுக்கொன்று தொடர்புடையவையும் ஒன்றில் ஒன்றாய் பின்னிக் கொண்டிருப் பவையுமான உற்பத்திக் கிளைகளின் இணைப்பை ஊக்கப்படுத்துகிறது; (2) வணிகர்களைப் பொறுத்தவரை சரக்குகள் திட்டவட்டமாய் பணத்துக்கு விற்கப்படும் வரை அல்லது வேறு சரக்குகளுக்குப் பரிவர்த்தனையாகும்வரை அவற்றின் போக்கு வரத்தையும் அவை கைக்கு கைமாறிச் செல்வதையும் ஊக்கப்படுத்துகிறது.

இங்கே கடன்-செலாவணியின் அதிக பட்சம் என்பது தொழில்துறை மூலதனத்தை முழுமையாக ஈடுபடுத்துவதைத்தான் அதாவது நுகர்வு வரம்புகளைக் கருதாமல் அதன் மறுவுற்பத்தித் திறனை அதிகபட்சமாய் வருத்துவதைத்தான் குறிப்பதாகும். மறுவுற்பத்தி நிகழ்முறையையே நீட்டி இழுப்பதன் மூலம் இந்த நுகர்வு வரம்புகள் விரிவாக்கப் படுகின்றன. ஒருபுறம், தொழிலாளர்களாலும் முதலாளிகளாலும் வருவாய் நுகரப்படுவது இதனால் அதிகரிக்கிறது. மறுபுறம் இதுவே திறனுடை நுகர்வு நீட்டி இழுக்கப்படுவதைத்தான் குறிப்பதாகும்.

மறுவுற்பத்தி நிகழ்முறை தொடர்ச்சியானதாகவும், எனவே மீள்வரவு உறுதியானதாகவும் இருந்துவரும் வரை, இந்தக் கடன்-செலாவணி நீடித்திருப்பதோடு விரிவுடையவும் செய்கிறது; அதன் விரிவாக்கம் மறுவுற்பத்தி நிகழ்முறையின் விரிவாக்கத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஏதாவது தேக்கம் நேரிட்டவுடனே மீள்வுகள் தாமதப் படுவதாலோ சந்தைகளில் வதிநிலை ஏற்படுவதாலோ விலைகள் வீழ்ச்சியுறுவதாலோ தேக்கம் ஏற்படுவதனாலோ அபரிமிதமான தொழில்துறை மூலதனம் தயாராய் கிடைக்க கூடியதாகிறது; ஆனால் அதன் வடிவம் அது தன்பணிகளை ஆற்ற முடியாமற் செய்து விடுகிறது. சரக்கு மூலதனம் பெருமளவில் இருந்த போதிலும் விற்க முடியவில்லை. நிலை மூலதனம் பெருமளவில் இருந்தபோதிலும் மறு உற்பத்தி நிகழ்முறையில் ஏற்பட்டுள்ள தேக்க நிலையால் பெரும்பாலும் வேலையற்றதாய் இருக்கிறது. கடன்-செலாவணி எடுப்பதற்கான காரணங்கள் இவையே: (1) இந்த மூலதனம் வேலையற்றதாய் இருக்கிறது, அதாவது தன் உருமாற்றத்தை பூர்த்தி செய்ய முடியாததால் தன் மறுஉற்பத்திக்

கட்டங்களில் ஒன்றில் தடைபட்டு நிற்கிறது; (2) மறுவுற்பத்தி நிகழ்முறையின் தொடர்ச்சியான நம்பிக்கை ஆட்டம் கண்டுள்ளது; (3) இந்த வர்த்தக கடன்-செலாவணிக்கான வேண்டல் குறைகிறது. நூற்பாளர் தமது உற்பத்தியைக் குறுக்கிக் கொள்கிறார்; அவரிடம் ஏராளமான நூல் விற்கப்படாமல் இருப்பில் இருக்கிறது; கடனாய்ப் பருத்தி ஏதும் வாங்கத் தேவையில்லை; வணிகரிடம் ஏற்கெனவே போதுமானதற்கும் கூடுதலாய் இருப்பதால் அவர் கடனாய்ச் சரக்கு ஏதும் வாங்கத் தேவையில்லை.

ஆகவே, மறுவுற்பத்தி நிகழ்முறையின் இந்த விரிவாக்கத்தில், ஏன், அதன் இயல்பான ஓட்டத்திலும் கூட குலைவு ஏற்படுமானால் கடன்-செலாவணிக்கும் தட்டுப்பாடு ஏற்படுகிறது; கடனாய்ச் சரக்குகள் வாங்குவது மேலும் கடினமாகிறது. ரொக்கமாய் விலை தரக்கோருவதும் கடனாய்ச் சரக்கு விற்பது குறித்து எச்சரிக்கையுடன் இருப்பதும் ஆகிய இரண்டும் தொழில்துறைச் சகடத்தில் ஒரு தகர்வை அடுத்து வரும் கட்டத்திற்கே உரித்தானவையாகும். நெருக்கடியின் போதே கூட ஒவ்வொருவரும் உற்பத்திப் பண்டங்களை விற்றாக வேண்டும். ஆனால் விற்க முடியவில்லை என்றாலும் கொடுப்புகளை நிறைவேற்றும் பொருட்டு அவற்றை விற்றேயாக வேண்டும் என்பதால், கடன் -செலாவணிப் பற்றாக்குறை மிகக் கடுமையாய் இருக்கும் போதே (ஆகவே கழிவு வீதம் வங்கியாளரின் கடன்-செலாவணிக்கு மிக அதிகமாய் இருக்கும் போது), வேலையற்று இருப்பதும் முதலீட்டை நாடி இருப்பதுமான மூலதனதிரள் அல்ல, மறுவுற்பத்தி நிகழ்முறையில் தடைபட்டு நிற்கும் மூலதன அளவுதான் மிகப் பெரிதாய் உள்ளது. ஏற்கெனவே முதலீடாகியிருக்கும் மூலதனம் உண்மையில் பெரிய அளவுக்கு வேலையற்று இருக்கிறது; ஏனென்றால் மறுவுற்பத்தி நிகழ்முறை தேங்கி நிற்கிறது. தொழிற்சாலைகள் மூடப்படுகின்றன. கச்சாப் பொருட்கள் குவிகின்றன. பூர்த்தியான உற்பத்திப் பொருட்கள் சரக்குகளாகச் சந்தையில் பெருக்கெடுக்கின்றன. ஆகவே இப்படிப்பட்ட நிலைமைக்குத் திறனுடைய மூலதனப் பற்றாக்குறைதான் காரணம் என்று சொல்லுவது பெருந்தவறு. சரியாகச் சொன்னால் இத்தகைய காலங்களில்தான் திறனுடைய மூலதனம் உபரியாகிப் போகிறது; அதாவது மறுவுற்ப்;த்தியின் இயல்பான. ஆனால் தற்காலிகமாய்க் குறைந்துள்ள அளவு வீதத்துடன் ஒப்பிடுகையில் ஓரளவுக்கும், முடங்கிப்போன நுகர்வுடன் ஒப்பிடுகையில் ஓரளவுக்கும் திறனுடைய -மூலதனம் இப்படி உபரியாகிப் போகிறது.

சமுதாயம் முழுவதும் தொழில்துறை முதலாளிகளையும் கூலித் தொழிலாளர்களையும் மட்டுமே கொண்டிருப்பதாக வைத்துக் கொள்வோம். மேலும், விலை ஏற்ற இறக்கங்களை கவனியாது ஒதுக்கி விடுவோம்-இந்த ஏற்ற இறக்கங்களினால்தான் மொத்த மூலதனத்தில் பெரும்பெரும் பகுதிகளை அவற்றின் சராசரி விகிதங்களில் மாற்றீடு செய்ய முடியாமற் போகிறது; மறுவுற்பத்தி நிகழ்முறையை அதன் முழு உருவில் முக்கியமாய் கடன் செலாவணியால் வளர்ச்சி பெற்ற உருவில் எடுத்துக் கொள்ளும்போது இந்த ஏற்ற இறக்கங்களினால் பொதுவான தேக்க நிலை திரும்பத் திரும்ப ஏற்பட்டே தீரும். கடன்-செலாவணி அமைப்பினால் ஊட்டி வளர்க்கப்படும் மோசடித்தொழில்களையும் ஊகவாணிபப் பேரங்களையும் கூட கவனியாது ஒதுக்கி விடுவோம். இந்நிலையில் ஒரு நெருக்கடி மூளுமானால், பொருளாதாரத்தின் பல்வேறு கிளைகளிலும் நடைபெறும் உற்பத்தியின் சரிவிகித மின்மையும், முதலாளிகளின் நுகர்வுக்கும் அவர்களின் மூலதனத்திரட்டலுக்கும் இடையிலான சரிவிகிதமின்மையும்தான் அந்நெருக்கடிக்கு காரணமாய் இருக்க முடியும். ஆனால் உள்ளபடியான நிலவரம் என்னவென்றால் பொருளுற்பத்தியின் முதலீடாகும் மூலதனம் மாற்றீடு செய்யப்படுவது உற்பத்தியில் ஈடுபடாத வர்க்கங்களின் நுகர்வுத் திறனையே பெருமளவுக்குச் சார்ந்துள்ளது; அதேபோது தொழிலாளர்களின் நுகர்வுத் திறன் கூலியை ஆளும் விதிகளால் ஓரளவுக்கும் முதலாளி வர்க்கத்துக்கு இலாபகரமான முறையில் அவர்களை வேலைக்கமர்த்துவது சாத்தியமாய் உள்ளவரைதான் அவர்கள் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்ற உண்மையில்தான் நுகர்வுத்திறன் கட்டுப்படுத்தப்படுகிறது. இறுதியாகப் பார்க்குமிடத்து எப்போதுமே உண்மை நெருக்கடிகள் யாவற்றுக்கும் காரணமாய் இருந்து வருவது பெருந்திரளானது மக்களின் வறுமையும் வரம்புக்குட்பட்ட நுகர்வுமே; இதற்கு நேர்மாறாக முதலாளித்துவப் பொருளுற்பத்தியானது உற்பத்திச் சக்திகளை வளர்ப்பதற்கு-சமுதாயத்தின் அறுதி நுகர்வுத்திறன் ஒன்றைத் தவிர அவற்றுக்கு வரம்பிட வேறெதுவும் இல்லை என்பது போல் - ஆர்வத்துடிப்புடன் செயல்படுகிறது.

திறனுடைய மூலதனத்துக்கு உண்மையிலேயே பற்றாக்குறை ஏற்பதாகச் சொல்ல வேண்டுமானால் - எப்படியும் முதலாளித்துவ முறையில் வளர்ச்சி பெற்ற நாடுகளைப் பொறுத்தவரை பொதுவான அளவில் அறுவடை பொய்த்துப் போகும் காலங்களில் மட்டுமே அப்படிச் சொல்லமுடியும்; முக்கிய உணவுப் பொருட்களிலோ தொழில்

துறைக்கான முக்கிய கச்சாப் பொருட்களிலோ இந்தப் பற்றாக்குறை நேரிடலாம்.

ஆனால் இந்த வர்த்தகக் கடன்-செலாவணியோடு கூடவே முறையான பணக்கடன்-செலாவணியும் இருக்கிறது- தொழிலதிபர் களுக்கும் வணிகர்களுக்கும் இடையிலான முன்னீடுகள் அவர்கள் வங்கியாளர்களிடமிருந்தும் வட்டிக்காரர்களிடமிருந்தும் பெறும் முன்னீடுகளுடன் இரண்டறக் கலந்துவிடுகின்றன. மாற்று உண்டியல்களைக் கழிவு செய்யும்போது பெயரளவில் மட்டுமே முன்னீடு செய்யப்படுகிறது. தொழிலதிபர் தமது உற்பத்திப் பண்டத்தை ஒரு மாற்று உண்டியலுக்கு விற்கிறார், இந்த உண்டியலை உண்டியல் - தரகர் ஒருவரிடம் கழிவு செய்து கொள்கிறார். ஆனால் தரகரானவர் உண்மையில் அவரின் வங்கியாளரது கடன்-செலாவணியைத்தான் முன்னீடு செய்கிறார்; வங்கியாளரே அவரிடம் பணம் போட்டு வைத்திருக்கும் வைப்பாளர்களின் பண-மூலதனத்தை முன்னீடு செய்கிறார். இந்த வைப்பாளர்கள் யார் என்று பார்த்தால் தொழில்துறை முதலாளிகளாகவும் வணிகர்களாகவும் இருக்கக் காணலாம். தொழிலாளர்களும் (சேமிப்பு வங்கிகள் மூலமாய்) அதேபோல் நிலவுடைமையாளர்களும் உற்பத்தியில் ஈடுபடாத ஏனைய வர்க்கத்தினரும் கூட வைப்பாளர்களாய் இருப்பது மெய்தான், தனிப்பட்ட ஒவ்வொரு தொழிலதிபர் அல்லது வணிகரையும் பொறுத்த வரை, வலுவான மூலதனச் சேம இருப்பு வைத்திருக்க வேண்டிய அவசியமும் உள்ளபடியான மூலதன மீள்வுகளையே நம்பி இருக்க வேண்டிய நிலையும் இதனால் ஒழிந்து போகின்றன. ஆனால், மறுபுறம் மாற்று உண்டியல்களை புனையும் நோக்கத்திற்காகவே சரக்குகளில் கொடுக்கல் வாங்கல் செய்வதும் யாவற்றையும் பெரிதும் சிக்கலாக்கி விடுகின்றன; இதனால்தான் மீள்வுகள் உண்மையில் வந்து சேர்ந்து நீண்டகாலம் ஆனபிறகும் விறுவிறுப்புடன் தொழில் நடைபெறுவது போலவும் உடனுக்குடன் மீள்வுகள் வந்து சேருவது போலவும் மிக எளிதாய் ஒரு தோற்றம் நீடித்திருக்க முடிகிறது; இந்த தோற்றம் வட்டிக்காரர்களையும் ஏமாற்றிவிடுகிறது, உற்பத்தியாளர்களையும் ஏமாற்றிவிடுகிறது. எப்போதுமே தகர்வு ஏற்படப்போகும் நிலையில் தொழில் பிரமாதமான ஆரோக்கியத்துடன் திகழ்வது போல் தெரிகிறது. எடுத்துக்காட்டாக, *1857, 1858*ஆம் வருட வங்கிச் சட்டங்கள் பற்றிய அறிக்கையில் இதற்கு மிகச்சிறந்த நிருபணம் காணக் கிடைக்கிறது; இந்த அறிக்கையில் வங்கி இயக்குநர்களும் வணிகர்களும், சுருங்கச் சொல்லின் சாட்சியமளிக்க அழைக்கப்பட்ட வல்லுநர்கள் அத்தனை

பேரும் - ஓவர்ஸ்டோன் பிரபு முதலானவர்கள் - வளமாகவும் நலமாகவும் தொழில் நடைபெறுவது குறித்து ஒருவரையொருவர் பாராட்டிக் கொண்டார்கள். சரியாக ஒரு மாதம்தான், 1857 ஆகஸ்டில் நெருக்கடி மூண்டது. இந்த நெருக்கடிகளின் வரலாற்று ஆசிரியராகிய டுக், விலைகளின் வரலாறு என்ற தமது நூலில் மீண்டும் இந்த மாயைக்கு இரையாவது வேடிக்கைதான். எப்போதும் நடப்பது இதுதான்; பூத்துக்குலுங்குகிறது தொழில், சக்கைபோடு போடுகிறது விற்பனை - திடீரென்று வருகிறது வீழ்ச்சி.

பண-மூலதனத் திரட்டல் பற்றிய பரிசீலனைக்கு இப்போது திரும்பிச் செல்வோம்.

கடனுக்குரிய பண-மூலதனம் அதிகரிக்கிற ஒவ்வொரு நிகழ்வுமே உண்மையான மூலதனத் திரட்டலை, அதாவது மறுவுற்பத்தி நிகழ்முறையின் விரிவாக்கத்தைச் சுட்டுவதாகாது. தொழில்துறைச் சகடத்தில் நெருக்கடியை தொடர்ந்து உடனே அடுத்து வரும் கட்டத்தில் இது தெட்டத் தெளிவாகிறது; அப்போது கடன்-மூலதனம் பெரும்பெரும் அளவுகளில் வேலையற்றுக் கிடக்கிறது. இது போன்ற நேரங்களில், உற்பத்தி நிகழ்முறை சுருக்கப்பட்டு (ஆங்கிலேயத் தொழில் துறை வட்டங்களில் பொருளுற்பத்தியானது 1847ஆம் வருட நெருக்கடிக்குப் பிறகு மூன்றிலொரு பங்கு குறைந்து போயிற்று), சரக்குகளின் விலைகள் மிகவும் குறைந்து, தொழில் முனைப்பார்வம் முடமாகிக் கிடக்கும்போது, வட்டிவீதம் குறைவாயுள்ளது; குறைந்த வட்டி வீதமானது இங்கே குறிப்பதெல்லாம் கடனுக்குரிய மூலதனம் அதிகமாவதையே தவிர வேறல்ல; தொழில் துறை மூலதனம் சுருங்கிப் போய் முடமாகி விடுவதால்தான் இந்த அதிகரிப்பு ஏற்படுகிறது. சரக்குகளின் விலைகள் குறைந்து, கொடுக்கல் வாங்கல்களின் எண்ணிக்கை சரிந்து, கூலிக்காக முதலீடாகிற மூலதனம் சுருங்கி இருக்கும்போது, தேவைப்படும் சுற்றோட்ட ஊடகத்தின் அளவு குறைந்து போவது கண்கூடு, மறுபுறம் தங்கத்தை ஏற்றுமதி செய்வதனாலோ, திவால் நிலைகள் ஏற்படுவதாலோ அயல் நாட்டுக்கடன்கள் தீர்க்கப்பட்ட பிறகு உலகப்பணமாக செயல்படுவதற்கென்று கூடுதல் பணம் ஏதும் தேவையில்லை என்பதும், முடிவில், மாற்று உண்டியல்களை கழிவு செய்வது தொடர்பான அலுவலின் பரிமாணம் அந்த மாற்று உண்டியல்களின் எண்ணிக்கைக்கும் அளவுக்கும் ஏற்பக் குறைகிறது. ஆகவே சுற்றோட்ட ஊடகமாகவோ கொடுப்புச் சாதனமாகவோ செயல்பட வேண்டிய

கடனுக்குரிய பண-மூலதனத்திற்கான வேண்டல் (புதிய மூலதன முதலீட்டை இப்போதும் நாம் கருத்தில் கொள்ளவில்லை) குறைகிறது; இதனால் இம்மூலதனம் ஒப்பளவில் அபரிமிதமாகிறது. ஆனால் இந்நிலைமைகளில் கடனுக்குரிய பண-மூலதனத்தின் வழங்கலும் அதிகரிக்கிறது-இதைப் பிறகு பார்ப்போம்.

எடுத்துக்காட்டாக, 1847ஆம் வருட நெருக்கடிக்குப் பிறகு, 'கொடுக்கல் வாங்கல்கள் வரம்புக்குட்பட்டிருக்க, பணம் மிகையான அளவில் அபரிமிதம் ஆயிற்று.' (வாணிக இன்னல், 1847 - 48, சாட்சியம் எண் 1664). வட்டி வீதம் மிகக் குறைவாய் இருந்ததற்கு காரணம் என்னவென்றால், 'வர்த்தகம் அநேகமாய் முழு அளவுக்கே அளிக்கப்பட்டுவிட்டது, பணத்தை ஈடுபடுத்தும் சாதனங்கள் அநேகமாய் கொஞ்சம்கூட இல்லாது போயின' (மேலது, பக்கம் 45, லிவர்பூல் இராயல் வங்கியின் இயக்குநர் ஹாட்சன் அளித்த சாட்சியம்). இந்த உண்மை நிகழ்வுகளுக்கு விளக்கம் அளிப்பதற்காக இக்கனவான்கள் எவ்வளவு அபத்தமாய் கதைவிடுகிறார்கள் என்பதை பின்வரும் கூற்றிலிருந்து அறியலாம்: 'நெருக்குதலானது' (1847) 'நாட்டின் பண-மூலதனம் உண்மையிலேயே குறைந்து போனதால் ஏற்பட்டதாகும்; உலகின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் செய்யப்படும் இறக்குமதிகளுக்கு தங்கமாக விலை தரவேண்டிய அவசியம் ஓரளவுக்கும், நிலைத்திரா மூலதனம் நிலை-மூலதனத்திற்கு உறிஞ்சிக் கொள்ளப்படுவது ஓரளவுக்கும் இந்தப்பண-மூலதனக் குறைவுக்கு காரணங்கள் ஆகும்.' (மேலது, பக்கம் 39).

நிலைத்திரா மூலதனம் நிலை-மூலதனமாக மாற்றப்படுவது எப்படி நாட்டிலுள்ள பண-மூலதனத்தை குறையச் செய்திடும் என்பது விளங்கவில்லை. எடுத்துக்காட்டாக, அச் சமயம் மூலதனத்திற்கு முக்கிய முதலீட்டுத்துறையாக விளங்கிய இரயில் போக்குவரத்துத் தொழிலைப் பொறுத்தவரை, பாலங்களையும் தண்டவாளங்களையும் அமைப்பதற்கு தங்கமோ காகிதமோ பயன்படுத்தப்படுவதில்லை; இரயில் போக்குவரத்து தொழிலுக்குரிய மூலதனப் பங்குகளுக்கானப் பணம் கொடுப்புகளுக்காக மட்டும் வைப்பு வைக்கப்பட்டுள்ள அளவில் வங்கிகளில் வைப்பிலிருக்கும் வேறெந்தப் பணத்தையும் போலவேதான் செயல்படுகிறது, கடனுக்குரியப் பண-மூலதனத்தை தற்காலிகமாய் அதிகரிக்கவும் கூடச் செய்கிறது என்று முன்பே தெளிவாக்கினோம்; இந்தப் பணம் உள்ளபடியே கட்டுமானப் பணிக்காகச் செலவிடப்படுகிற அளவில், வாங்குஞ் சாதனமாகவும்

கொடுப்புச் சாதனமாகவும் நாட்டில் சுற்றியோடுகிறது. நிலை-மூலதனத்தை ஏற்றுமதி செய்ய முடியாது, அதாவது அதனை ஏற்றுமதி செய்வது சாத்தியமல்ல என்ற அளவில் மட்டுமே, ஆகவே ஏற்றுமதி செய்யப்பட்ட பண்டங்களுக்கான மீள்வரவுகள் என்ற முறையில்-ரொக்கமாகவோ பொற்பாளமாகவோ வரும் மீள்வரவுகள் உட்பட-மூலதனம் ஏதும் கிடைப்பதில்லை என்ற அளவில் மட்டுமே, பண-மூலதனம் பாதிக்கப்படலாம். ஆனால் அச்சமயம் ஆங்கிலேய ஏற்றுமதிப் பண்டங்களும் அயல் நாட்டுச் சந்தைகளில் விலைபோகாமல் குவிந்துகிடந்தன. மான்செஸ்டர் முதலான இடங்களில் வணிகர்களும் ஆலையதிபர்களும் தமது இயல்பான இயக்க மூலதனத்தின் ஒரு பகுதியை இரயில் போக்குவரத்துத் தொழிலுக்கான மூலதனப் பங்குகளில் முடக்கிப் போட்டிருந்ததால் தமது தொழிலை நடத்துவதற்குக் கடன் வாங்கிய மூலதனத்தையே நம்பியிருந்தனர். இவர்களது நிலைத்திரா மூலதனம் நிலை-மூலதனம் ஆகிவிட்டது என்பதும், இதன் விளைவுகளை அவர்கள் அனுபவிக்க நேரிட்டது என்பதும் மெய்தான். ஆனால் அவர்கள் முறைப்படித் தமது தொழிலுக்குரியதென்றாலும் அதிலிருந்து விலக்கிக் கொள்ளப்பட்ட மூலதனத்தை இரயில் போக்குவரத்துத் தொழிலில் முதலீடு செய்யாமல், உதாரணமாகச் சுரங்கங்களில் முதலீடு செய்திருந்தால் எவ்விதமாற்றமும் ஏற்பட்டிருக்காது-சுரங்கத் தொழிலின் உற்பத்திப் பொருட்களான இரும்பு, நிலக்கரி, தாமிரம் போன்றவை தாமே நிலை-மூலதனம் ஆகும். கிடைக்கக் கூடிய பண-மூலதனமானது மகசூல் பொய்த்துவிடுவதாலும் தானிய இறக்குமதியாலும் தங்க ஏற்றுமதியாலும் உள்ளபடியே குறைந்து போனதற்கும் இரயில் போக்குவரத்து தொழிலில் நடைபெற்ற மோசடிக்கும் தொடர்பே இல்லைதான்.

அநேகமாய் எல்லா வணிக நிறுவனங்களுமே தமது வர்த்தக மூலதனத்தில் ஒரு பகுதியை இரயில் போக்குவரத்துத் தொழிலுக்காக எடுத்துவிட்டதன் மூலம் .....தமது தொழிலை ஓரளவுக்குக் காயப்போட முற்பட்டுவிட்டன.' - 'வர்த்தக நிறுவனங்கள் இரயில் போக்குவரத்துத் தொழிலுக்கு இவ்வளவு பெருமளவில் கடன் வழங்குவதால் (மேலது, பக்கம் 42) தமது வர்த்தகப் பணிகளைத் தொடர்ந்து செய்வதற்கு பத்திரக் கழிவு மூலமாய் வங்கிகளையே....அளவுக்கதிகமாய் சார்ந்திருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது' (அதே ஹாட்சன், மேலது, பக்கம் 67). 'மான்செஸ்டரில் இரயில் போக்குவரத்துத் தொழிலில் நடைபெற்ற ஊக வாணிபத்தால் பேரிழப்புகள் நேரிட்டுள்ளன' (ஆர்கார்டுனர், இதற்கு

முன்பு முதல் பாகம், அத்தியாயம் XV, பிரிவு 3, ஆ என்பதிலும் வேறு பல இடங்களிலும் எடுத்துக்காட்டப்படுகிறவர்; சாட்சியம் எண் 4884, மேலது).

1847ஆம் வருட நெருக்கடிக்கான முக்கிய காரணங்களில் ஒன்று சந்தையில் சரக்குகள் பிரம்மாண்ட அளவில் பெருக்கெடுத்ததும், கிழக்கிந்திய வர்த்தகத்தில் எல்லையற்ற மிகப்பெரும் மோசடி நடைபெற்றதும் ஆகும். ஆனால் இந்தப் பிரிவில் மிக வசதியான நிறுவனங்களையும் கூட போண்டியாகச் செய்த வேறு காரணிகளும் இருந்தன: 'அவற்றிடம் பெரும் வசதி வாய்ப்புகள் இருந்தனவே தவிர, தயார் நிலையில் இல்லை. அவற்றினுடைய மூலதனம் முழுவதும் மொரிஷஸ் தோட்டங்களிலோ அவுரித் தொழிற்சாலைகளிலோ சர்க்கரை ஆலைகளிலோ அடைப்பட்டிருந்தது. £500.000-600,000 என்ற அளவில் கடன்-பொறுப்புகளை ஏற்றுக்கொண்டுவிட்டதால், தமது உண்டியல் களுக்குப் பணம் செலுத்த அவர்களிடம் தயார் நிலையில் சொத்துக்கள் இல்லை; உண்டியல்களுக்குப் பணம் செலுத்திட அவர்கள் தமது கடன்-செலாவணியையே முழுக்க நம்பி இருப்பது முடிவில் தெரிந்துவிட்டது.' (சார்லஸ் டர்னர், லிவர்பூலிஸ் பெரும் கிழக்கிந்திய வணிகர், எண் 730, முன்வந்தது.)

கார்டுனர் சொல்வதையும் பார்ப்போம் (எண் 4872, மேலது): 'சீன ஒப்பந்தம் ஏற்பட்டவுடனே சீனாவுடனான நமது வர்த்தகம் பெருமளவுக்கு விரிவடையும் வாய்ப்பு மிகவும் பிரகாசம் அடைந்தது; பிரத்தியேகமாய் அந்த வர்த்தகத்திற்கென்றே பெரும்பெரும் ஆலைகள் பலவும் கட்டப்பெற்றன; முக்கியமாய் சீனச் சந்தைக்கு கொண்டு செல்லப்படும் துணி ரகத்தை உற்பத்தி செய்வதற்கு இந்த ஆலைகள் தேவைப்பட்டன; நமது முந்தைய ஆலைத் தொழில்களோடு அவையெல்லாம் கூடுதலாய்ச் சேர்ந்து கொண்டன.'—'4874. அந்த வர்த்தகம் என்னவாயிற்று?-பெருத்த நாசத்தை ஏற்படுத்திவிட்டது; சொல்லில் அடங்காத நாசம் என்றே கூறலாம்; 1844 இலும் 1845இலும் சீனாவுக்கு கப்பலேறிய சரக்கு முழுவதிலும் மூன்றில் இரு பங்குக்கும் அதிகமான தொகை மீண்டு வரவேயில்லை எனக்கருதுகிறேன்; திருப்பிச் செலுத்துவதற்குரிய முக்கிய பண்டமாக தேயிலை இருந்ததாலும், ஏற்படுத்தப்பட்டிருந்த எதிர்பார்ப்பினாலும், ஆலையதிபர்களாகிய நாங்கள் தேயிலை மீதான தீர்வை பெரிதும் குறைக்கப்படும் என்று முழுமையாக நம்பிக் கணக்கிட்டோம்.'—அடுத்து வருவது, அப்பட்டமாகச் சொன்னால், ஆங்கிலேய ஆலையதிபரின் தாரக மந்திரம்:

'எந்த அயல்நாட்டுச் சந்தையுடனும் நாம் புரியும் வர்த்தகம் சரக்கை வாங்குவதற்கு அவற்றுக்குள்ள சக்தியால் வரம்பிடப்படுவதில்லை; நமது செய்பொருட்களுக்கு பிரதியாக வரப்பெறுவதை நுகர்வதற்கு இந்த நாட்டில் நமக்குள்ள சக்தியினாலேயே அது வரம்பிடப்படுகிறது.' (எந்த நாடுகளுடன் இங்கிலாந்து வர்த்தகம் செய்கிறதோ அவற்றில் ஒப்பளவில் வறிய நாடுகளாய் இருப்பவை எவ்வளவு வேண்டுமானாலும் ஆங்கிலேய உற்பத்திப் பண்டங்களுக்கு விலை கொடுக்கவும் அவற்றை நுகரவும் முடிகிறது; ஆனால் பணக்கார இங்கிலாந்து பதிலுக்கு அனுப்பப்படும் உற்பத்திப் பொருட்களை தன்வயமாக்கிக் கொள்ள முடியாமல் இருப்பது வருத்தத்துக்குரியது.)-'4876. முதலில் சில பண்டங்களை அனுப்பி வைத்தேன்; பண்டங்கள் சுமார் 15 சதவீத இழப்பில் விற்றுப்போயின; தேயிலை வாங்கும்போது எனது முகவர்கள் தரக்கூடிய விலையானது இந்தக் குறைபாட்டை செய்யும் அளவுக்கு அதிக இலாபம் தரக்கூடியதாய் இருக்கும் என்று முழுமையாக நம்பித்தான் இந்த விற்பனை நடைபெற்றது;....ஆனால் இலாபம் அடைவதற்குப் பதில் சில சந்தர்ப்பங்களில் 25 முதல் 50 சதவீதம் வரை இழப்புக்கு ஆளானதும் உண்டு.'—'4877. பொதுவாகச் சொன்னால் ஆலையதிபர்கள் தத்தமது சொந்தக் கணக்கில் ஏற்றுமதி செய்தார்களா? - பிரதானமாக அப்படித்தான் சங்கதி; திரும்பிவந்து சேராது என்பதைப் வணிகர்கள் வெகுவிரைவில் கண்டு கொண்டதாக நினைக்கிறேன்; தாங்களே நேரடியாக அக்கறைஎடுத்துக் கொள்வதற்குப் பதில் அவர்கள் ஆலையதிபர்களைத் தூண்டி சரக்கனுப்பச் செய்தார்கள்.'—மாறாக 1857இல் இழப்புகளும் நொடிப்புகளும் முக்கியமாய் வணிகர்களைச் சார்ந்தன; ஏனென்றால் அயல் நாட்டுச் சந்தைகளில் 'தன் சொந்தக் கணக்கில்' சரக்குகள் பெருக்கெடுக்குமாறு செய்யும் பொறுப்பை ஆலையதிபர்கள் வணிகர்களிடமே விட்டுவிட்டனர்.

---

வங்கித் தொழிலின் விரிவாக்கத்தால் (கீழே தரப்படும் இப்ஸ்விச்சின் உதாரணத்தை எடுத்துக் கொள்ளுங்கள், அங்கே 1857க்கு நேர் முற்பட்ட ஒரு சில ஆண்டுகளுக்குள் முதலாளித்துவ சாகுபடியாளர்களின் வங்கி வைப்புகள் நான்கு மடங்காயின) முன்பு தனிப்பட்ட ஒருவருக்குச் சொந்தமான பணச் சேர்ப்பாகவோ நாணயச் சேம வைப்பாகவோ இருந்தது இப்போது குறிப்பிட்ட காலத்துக்குக் கடனுக்குரிய மூலதனமாக மாற்றப்படுவதால் வரும் பண-மூலதனப்

பெருக்கம் திறனுடை-மூலதனப் பெருக்கத்தைக் குறிப்பதாகாது- இலண்டன் கூட்டுப் பங்கு வங்கிகள் வைப்புகளுக்கு வட்டி தரத் தொடங்கியபோது அவற்றிடம் இருந்த வைப்புகளில் ஏற்பட்ட வளர்ச்சி எப்படி திறனுடை-மூலதன வளர்ச்சியை குறிப்பதாகாதோ, அதே போல இதுவும், உற்பத்தியின் அளவு வீதம் மாறாதிருக்கும்வரை, இந்தப் பெருக்கமானது திறனுடை-மூலதனத்துடன் ஒப்பிடுகையில் கடனுக்குரியப் பண-மூலதனம் மிகுந்து போவதற்கே வழி செய்கிறது. இதனால்தான் வட்டிவீதம் குறைவாயுள்ளது.

மறுவுற்பத்தி நிகழ்முறையானது மிகை வருத்தக்கட்டத்துக்கு முற்பட்டதாகிய செழுமைக் கட்டத்தை அடைந்துவிட்ட பிறகு, வர்த்தகக் கடன்-செலாவணி மிக அதிகமாய் விரிவடைகிறது; உண்மையில் இதுதான் மீள்வுகளின் தடையற்ற ஓட்டத்திற்கும் உற்பத்தி விரிவாக்கத்துக்குமான 'ஆரோக்கிய' அடிப்படையாகிறது. இந்நிலையில் வட்டி வீதமானது அதன் குறைந்தபட்ச அளவுக்கு மேல் உயர்ந்திருந்தாலும் கூட குறைவாகவே உள்ளது. மெய்யாகவே இந்த ஒரு சந்தர்ப்பத்தில் மட்டும்தான் வட்டிவீதம் குறைவாயிருப்பதும் எனவே கடனுக்குரிய மூலதனம் ஒப்பளவில் மிகையாய் இருப்பதும் உண்மையான தொழில்துறை மூலதனப் பெருக்கத்தோடு ஒருங்கமைவதாகச் சொல்லலாம். மீள்வுகள் சரளமாகவும் காலந் தவறாமலும் வந்து சேர்வதானது விரிவடைந்த வர்த்தகக் கடன்-செலாவணியோடு சேர்ந்து, கடன் - மூலதனத்திற்கான வேண்டல் அதிகரித்தாலும் அதன் வழங்கலை உறுதிசெய்து வட்டிவீதத்தை உயரவிடாமல் தடுக்கிறது. மேலும் இந்தக் கட்டத்தில் மோசடி பேர்வழிகள் குறிப்பிடத்தக்க அளவில் தலையெடுத்து, மூலதனச் சேம வைப்பே இல்லாமல், மூலதனம் என்பதே கூட இல்லாமல் முழுக்க முழுக்க பணக் கடன்-செலாவணியை ஆதாரமாய்க் கொண்டு இயங்கலாகின்றனர். இப்போது இதனுடன் கூடவே அனைத்து வடிவங்களிலுமான நிலை-மூலதனம் விரிவாய்ப் பெருகி, பரந்துபட்ட அளவில் புதிய தொழில் முனைவுகள் ஆரம்பமாகின்றன. வட்டி இப்போது சராசரி நிலைக்கு உயருகிறது. அது புதிய நெருக்கடி மூண்ட உடன் அதிகபட்ச அளவை வந்தடைகிறது. கடன் -செலாவணி திடீரென வறண்டு போகிறது. கொடுப்புகள் நிறுத்தி வைக்கப்படுகின்றன. மறுவுற்பத்தி நிகழ்முறை முடங்கிவிடுகிறது; மேலே குறிப்பிட்ட விதிவிலக்குகளை ஒதுக்கி விட்டுப்பார்த்தால், வேலையற்ற தொழில்துறை மூலதனம் உபரியாய் மிகுந்திருக்கும் போதே கடன்-மூலதனம் அநேகமாய் அறுதியாகவே அற்றுப் போயிருக்கக் காண்கிறோம்.

ஆகவே, மொத்தத்தில், வட்டி வீதத்தில் வெளிப்படும்படியான கடன்-மூலதன அசைவியக்கம் தொழில் துறை மூலதன அசைவியக்கத்துக்கு எதிர்த் திசையில் நிகழ்கிறது. வட்டி வீதம் குறைவாக, ஆனால் குறைந்தபட்சத்துக்கு மேற்பட்டதாக இருப்பது நெருக்கடிக்குப் பிறகு வரும் 'மேம்பாட்டுடனும்' வளரும் நம்பிக்கையுடனும் ஒருங்கமைகிற கட்டத்திலும், குறிப்பாக வட்டி வீதம் சராசரி நிலையை, சரியாக குறைந்த பட்சத்துக்கும் அதிக பட்சத்துக்கும் இடைப்பட்ட நிலையை வந்தடைகிற கட்டத்திலும்தான் இந்த இருகால கட்டங்களிலும் மட்டும்தான் - தொழில்துறை மூலதனம் விரிவாய்ப் பெருக்கமடையும் அதேபோது கடன்-மூலதனமும் மிகையாய்க் கிடைக்கிறது. ஆனால் தொழில்துறை சகடத்தின் தொடக்கத்தில் வட்டி வீதம் குறைவாய் இருப்பது தொழில்துறை மூலதனம் சுருங்கிப் போவதுடன் ஒருங்கமைகிறது; சகடத்தின் முடிவிலோ வட்டி வீதம் உயர்ந்திருப்பது தொழில் துறை மூலதனம் பெரிதும் மிகையாகிப் போவதுடன் ஒருங்கமைகிறது. 'மேம்பாட்டுக்' கட்டத்தில் வட்டிவீதம் குறைவாயிருப்பதானது வர்த்தகக் கடன்-செலாவணி இன்னமும் சொந்தக்காலில் நிற்பதால் அதற்கு வங்கிக் கடன்-செலாவணி சிறு அளவுக்கு மட்டுமே தேவைப்படுவதைக் காட்டுகிறது.

தொழில் துறைச் சகடத்தின் தன்மை என்னவென்றால் முதலில் ஒருமுறை தூண்டிவிட்ட பின் அதே சுற்று காலவட்ட முறையில் திரும்பத் திரும்பச் சுழன்று வந்தாக வேண்டும்[8]. விறுவிறுப்பில்லாத காலத்தில் பொருளுற்பத்தியானது முன்சென்ற கட்டத்தில்

---

(8) (எங்கெல்ஸ் குறிப்பு:- முன்பே வேறோர் இடத்தில் நான் கூறியிருப்பது போல (தமிழ்ப் பதிப்பு: முதல்பாகம், புத்தகம் ஒன்று :- பதிப்பாசிரியர்). கடைசியாக நேரிட்ட முக்கியப் பொது நெருக்கடிக்குப் பிறகு இதில் ஒரு மாற்றம் ஏற்பட்டுள்ளது. முனைப்பான வடிவமைந்த காலவட்ட நிகழ்முறையும் முன்பிருந்த அதன் பத்தாண்டுச் சகடமும் விலகிப்போய், தொழில் வர்த்தகத்தில் ஒப்பளவில் குறுகிய காலத்துக்குரிய சொற்ப மேம்பாடும் ஒப்பளவில் நீண்ட காலத்துக்குரிய உறுதியற்ற மந்தமும் மாறிமாறி வரும் நிலை ஏற்படுகிறது; இது இன்னுங்கூட நீடித்து நிற்பதும் வரைமுறையின்றி இழுத்துக் கொண்டே போவதுமான நிலையாகும்; தொழில் வளநாடுகள் பலவற்றிலும் இவ்வாறு நடைபெறுகிறது. ஆனால் இது சகடம் நீடித்திருக்கும் காலத்தை நீட்டுவதாக மட்டுமே இருந்துவிடக்கூடும். உலக வர்த்தகத்தின் தொடக்க ஆண்டுகளாம் 1815 - 47இல் இந்தச் சகடங்கள் சுமார் ஐந்தாண்டுகாலம் நீடித்ததாக நிரூபிக்கலாம்; 1847 முதல் 1867 வரை சகடம் பத்தாண்டுக்கு ஒருமுறை சுழன்றதை தெளிவாக அறிய முடிகிறது. நாம் ஈடிணை ஏது மற்ற உக்கிரம் வாய்ந்த புதிய உலகத் தகர்வின் ஆயத்தக்கட்டத்தில் இப்போது நாம் இருக்கக் கூடுமா? அநேக அறிகுறிகளும் இந்தப் போக்கினையே காட்டுவதாகத் தோன்றுகிறது. கடைசியாக 1867 இல் ஏற்பட்ட பொது நெருக்கடிக்குப் பின்னர் ஆழ்ந்த பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. போக்குவரத்துக்கும் தகவல் தொடர்புக்குமான சாதனங்களின் பகாசுர விரிவாக்கம் - சமுத்திரக் கப்பல்கள், இருப்புப் பாதைகள், மின்சாரத் தந்தி, சூயஸ் கால்வாய் - உண்மையான உலகச் சந்தையை மெய்நடப்பாக்கிவிட்டது. தொழில் துறையில் முன்பு இங்கிலாந்துக்கு இருந்த

எட்டிப்பிடித்த நிலையை - இந் நிலைக்கான தொழில் நுட்ப அடிப்படை இப்போது அமைக்கப்பட்டு இருக்கிறதோ அந்நிலையை - அடைய முடியாமல் குறைந்துவிடுகிறது. செழுமைக் காலத்தில் - இடைநிலைக் காலத்தில் - இந்த அடிப்படை மீது அது தொடர்ந்து வளர்ந்து செல்கிறது. மிகையுற்பத்தியும் மோசடியுமான காலத்தில், உற்பத்திச் சக்திகள் அதிகபட்ச அளவுக்கு வேலை வாங்கப்படுகின்றன; உற்பத்தி நிகழ்முறையின் முதலாளித்துவ வரம்புகளைக் கடந்தும் கூட இது நடைபெறுகிறது.

நெருக்கடி காலத்தில் கொடுப்புச் சாதனப் பற்றாக்குறை ஏற்படுவது தெளிவாய்த் தெரிகிறது. மாற்று உண்டியல்களின் மாறுதிறன் (Convertibility) சரக்குகளின் உருமாற்றத்தை மாற்றீடு செய்கிறது. இதுபோன்ற நேரங்களில் பங்கு நிறுமங்களில் எவ்வளவு பெரும்பகுதி முற்றிலும் கடன்-செலாவணியைக் கொண்டு மட்டுமே செயல் படுகிறதோ, அவ்வளவு துல்லியமாய் இந்த மாற்றீடு நடைபெறுகிறது. 1844 - 45ஆம் வருடத்தியதைப் போல் அறியாத்தனமான, தவறான வங்கிச்சட்டம் அந்த பண நெருக்கடியை முற்றச் செய்துவிடலாம். ஆனால் எத்தகைய வங்கிச் சட்டத்தாலும் நெருக்கடியை ஒழித்துக்கட்ட முடியாது.

மறுவுற்பத்தி நிகழ்முறையின் தொடர்ச்சி அனைத்தும் கடன்-செலாவணியைச் சார்ந்திருக்கும் உற்பத்தியமைப்பில், கடன்-செலாவணி திடீரென நின்றுபோய் ரொக்கக் கொடுப்புகள் மட்டுமே செல்லத்தக்கவை ஆகும்போது நெருக்கடி வந்தே தீரும் - கொடுப்புச் சாதனங்களுக்கு மிகப்பெரும் மொய்ப்பு ஏற்பட்டே தீரும் என்பது

---

ஏகபோகத்துக்கு சவால் விடும் வகையில் தொழில் வளநாடுகள் பலவும் அதற்குப் போட்டியாக முளைத்துவிட்டன. உபரியான ஐரோப்பிய மூலதனத்தை முதலீடு செய்வதற்கு உலகின் எல்லாப் பகுதிகளிலும் அளவிட்டுச் சொல்ல முடியாதவாறு மிகப்பெரிய, மிகப் பலவாறான களங்கள் திறந்துவிடப்பட்டதால் அம் மூலதனம் இன்னும் மிகப் பரந்த அளவில் வினியோகமாகிறது. வட்டார அளவிலான மிகை - ஊகவாணிபத்தை இன்னும் மிக எளிதாய் சமாளிக்க முடிகிறது. நெருக்கடிகளின் பழைய நாற்றங்கால்களும் அவற்றின் வளர்ச்சிக்குரிய வாய்ப்புகளும் இதனாலெல்லாம் பெரும்பாலும் ஒழிக்கப்பட்டுவிட்டன, அல்லது பெரிதும் குறைக்கப்பட்டுவிட்டன. அதேபோது, உள்நாட்டுச் சந்தையில் போட்டியானது தொழிலிணையங்களையும் பொறுப்புக் கழகங்களையும் சமாளிக்க முடியாமல் தளிவுறுகிறது. அயல்நாட்டுச் சந்தையிலோ காப்புத் தீர்வைகள் போட்டியைக் கட்டுப்படுத்தி விடுகின்றன. இங்கிலாந்தைத் தவிர முக்கியத்தொழில் வள நாடுகள் எல்லாம் இந்தக் காப்புத் தீர்வைகளால் தமக்கு வேலி அமைத்துக் கொண்டுள்ளன. ஆனால் இத்தீர்வைகள் இறுதியில் நடைபெறப் போகும் பொதுவான தொழில்துறைப் போருக்கான முன்தயாரிப்புகளே தவிர வேறல்ல; அந்தப் போர்தான் உலகச் சந்தையில் முதன்மை பெற்றிருப்பது யாரென்று தீர்மானிக்கும். ஆக, பழைய நெருக்கடிகள் மறுபடியும் முளுவதை எதிர்த்து இயங்கும் ஒவ்வொரு காரணியும் இன்னுங்கூட சக்திமிக்கதான வருங்கால நெருக்கடியில் வித்தினைத் தள்ளகத்தே கொண்டிருக்கிறது.)

வெள்ளிடைமலை. ஆகவேதான் எடுத்த எடுப்பில் பார்க்கும் போது முழு நெருக்கடியும் கடன்-செலாவணி மற்றும் பண நெருக்கடி என்பது போல் தெரிகிறது. உண்மையில் மாற்று உண்டியல்கள் பணமாக மாறத்தக்கவையாக இருப்பதுதான் பிரச்சினை. ஆனால் இந்த உண்டியல்களில் பெரும்பாலானவை உண்மையான விற்றல்-வாங்கலைக் குறிப்பவை; பார்க்கப் போனால், இந்த விற்றல்வாங்கலை சமுதாயத்தின் தேவைகளுக்கு அப்பாற்பட்டு நீட்டுவதுதான் முழு நெருக்கடிக்கும் அடிப்படையாகும். அதே போது இந்த மாற்று உண்டியல்களில் மிகப் பெரும் அளவிலானவை அப்பட்டமான மோசடியைக் குறிப்பவை. இவை இப்போது அம்பலப்பட்டு தகர்வுறுகின்றன; மேலும் மற்றவர்களுடைய மூலதனத்தை வைத்து ஊகவாணிபம் செய்வதில் வெற்றி பெற முடியாமற் போகிறது; முடிவில் சரக்கு-மூலதனம் மதிப்பிறக்கம் அடைகிறது, அல்லது சிறிதும் விற்கமுடியாததாகிறது; மீண்டும் ஒருபோதும் மீள்வுகளை ஈடேற்றம் செய்ய முடியாத நிலை ஏற்படுகிறது. மதிப்பிறக்கம் மறுவுற்பத்தி நிகழ்முறையை வலிய விரிவாக்குவதற்கான செயற்கை அமைப்பு அனைத்துக்கும் பரிகாரம் காண்பதனால், இங்கிலாந்து வங்கியைப் போன்ற ஒரு வங்கி அதன் காகித பத்திரங்களைப் பயன்படுத்தி மோசடிக்காரர்களுக்கெல்லாம் குறையும் மூலதனத்தைக் கொடுக்குமாறு செய்வதன் மூலமும், மதிப்பிறக்கம் அடைந்த சரக்குகளையெல்லாம் அவற்றின் பழைய பெயர்மதிப்புகளுக்கே வாங்கிக் கொள்ளுமாறு செய்வதன் மூலமும் பரிகாரம் காண முடியாதுதான், மேலும், இந்தக் காகித உலகில் பொற்பாளமும் உலோகக் காசும் நோட்டுகளும் மாற்று உண்டியல்களும் கடன் பத்திரங்களும்தான் காணப்படுகின்றனவே தவிர உண்மை விலையும் அதன் உண்மைக் கூறுகளும் எங்குமே காணப்படுவதில்லை ஆதலால், இங்கு எல்லாமே தலை கீழாய்த் தெரிகிறது. குறிப்பாகச் சொன்னால் நாட்டின் பண அலுவல் முழுவதும் குவிக்கப்பட்டுள்ள இலண்டன் போன்ற மையங்களில் இந்த உருத்திரிபு வெளிப்படையாகவே தெரிகிறது; நிகழ்முறை முழுவதும் கருத்துக்கெட்டாததாகிறது. பொருளுற்பத்தி மையங்களில் உருத்திரிபு சற்றே குறைவாயுள்ளது.

இங்குச் சொல்லி வைக்க வேண்டிய ஒன்று என்னவென்றால், நெருக்கடிகளின்போது காணப்படும் தொழில்துறை மூலதன மிகைப்பாட்டைப் பொறுத்தவரை, சரக்கு-மூலதனம் அதனளவிலேயே பண-மூலதனமாகவும் இருப்பதாகும், அதாவது சரக்குகளின் விலையில் குறிக்கப் பெறும் குறிப்பிட்ட மதிப்பளவாகும். பயன்-

மதிப்பற்ற முறையில் அது குறிப்பிட்ட அளவு பயன்படும் பொருட்களாகும், நெருக்கடிகளின் போது இவை உபரியாகின்றன. ஆனால் அது பண-மூலதனமாகவே, உள்ளுறைப் பண-மூலதன மாகவே ஓயாத பெருக்கத்துக்கும் சுருக்கத்துக்கும் உள்ளாகிறது. நெருக்கடியை நெருங்கி இருக்கையிலும் நெருக்கடியின்போதும் உள்ளுறைப் பண-மூலதனம் என்ற முறையிலான சரக்கு-மூலதனம் சுருங்கிப் போகிறது. அது விலைக்கு வாங்கப்பட்ட போதும் அதைப் பிணையமாகக் கொண்டு கழிவுகளும் கடன்களும் பெறப்பட்ட போதும் குறித்ததைக் காட்டிலும் அதன் உடைமையாளருக்கும் அவருக்குக் கடன் கொடுத்தவர்களுக்கு (மாற்று உண்டியல்களுக்கும் கடன்களுக்குமான பிணையம் என்ற முறையிலும் கூட) குறைந்த பண-மூலதனத்தையே குறித்திடுகிறது. நாட்டின் பண-மூலதனம் நெருக்குதல் நிறைந்த காலங்களில் குறைந்து போவதாகக் கூறுவதற்கு இதுதான் பொருள் என்றால், இப்படிச் சொல்வதும் சரக்குகளின் விலைகள் சரிந்திருப்பதாகச் சொல்வதும் ஒன்றுதான், இப்படிப்பட்ட விலைச்சரிவு அதற்குமுன் நிகழ்ந்த விலை வீக்கத்தை நேர் செய்கிறது அவ்வளவுதான்.

உற்பத்தியில் ஈடுபடாதவர்க்கங்களில் வருமானங்களும் நிர்ணயித்த வருமானம் பெற்று வாழ்வோரின் வருமானங்களும் மிகை யுற்பத்தியுடனும் மிகை-ஊகவாணிபத்துடனும் சேர்ந்து வரும் விலை வீக்கக் காலத்தில் பெரும்பாலும் அப்படியே நிலையாக இருந்து வருகின்றன. ஆகவே இவர்களின் நுகர்வுத் திறன் ஒப்பளவில் குறைந்து போகிறது; மொத்த மறுவுற்பத்தியில் இயல்பாய் இவர்களின் நுகர்வில் சேரக் கூடிய பகுதியை இவர்கள் மாற்றீடுகள் செய்வதற்கான திறனும் குறைந்து போகிறது. இவர்களின் வேண்டல் பெயரளவில் மாறாமல் இருக்கும்போதே உண்மையில் குறைந்து போகிறது.

இறக்குமதி ஏற்றுமதி தொடர்பாகக் குறிப்பிட வேண்டியது இதுதான்; ஒன்றன்பின் ஒன்றாக எல்லா நாடுகளும் நெருக்கடியில் மாட்டிக் கொள்கின்றன; விதிவிலக்கான சிலவற்றைத் தவிர எல்லா நாடுகளுமே அதிகப்படியான அளவில் ஏற்றுமதியும் இறக்குமதியும் செய்திருப்பது தெரிய வருகிறது; அதாவது கொடுப்பு நிலுவை (Balance of payment) அவையாவற்றுக்குமே பாதகமாயுள்ளது. ஆகவே பிரச்சனைக்கு உள்ளபடியான மூலவேராய் இருப்பது கொடுப்பு நிலுவை அல்லவே அல்ல. எடுத்துக்காட்டாக இங்கிலாந்திலிருந்து தங்கம் வெளியே செல்கிறது. அது அளவுக்குமேல் இறக்குமதி செய்திருக்கிறது -ஆனால் அதேபோது ஏனைய நாடுகளில் எல்லாம் ஆங்கிலேயப்

பண்டங்கள் மிகையளவில் குவிந்துள்ளன. இந்த நாடுகளும் கூட அளவுக்கு மேல் இறக்குமதி செய்துள்ளன, அல்லது அப்படிச் செய்ய வைக்கப்பட்டுள்ளன. (கடனுக்கு ஏற்றுமதி செய்யும் நாட்டுக்கும் கடனுக்கு அவ்வளவு அதிகமாய் ஏற்றுமதி செய்யாத நாட்டுக்கும் வேறுபாடு உண்டு. ஆனால் பின்கூறிய நாடுகள் கடனுக்கு இறக்குமதி செய்கின்றன; சரக்குகள் அந்நாடுகளுக்கு ஒப்படைப்பு முறையில் அனுப்பப்படும் போது மட்டும் நிலைமை இதுவல்ல.) நெருக்கடி முதலில் இங்கிலாந்தில் வெடிக்கலாம். இந்த நாடுதான் மிக அதிகமாய் கடன் கொடுத்து மிகக் குறைவாய்க் கடன் வாங்குகிறது. பொதுவான வர்த்தக நிலுவை சாதகமாக இருந்தாலும் கூட உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய கொடுப்பு நிலுவை, அதாவது கொடுபடவேண்டிய கொடுப்புகளின் நிலுவை பாதகமாக இருப்பதே காரணம். இங்கிலாந்து வழங்கியுள்ள கடனும் அயல் நாடுகளுக்கு அனுப்பப்படும் கடன்-மூலதனத்தின் அளவுமே இதற்குக் காரணம் என்று விளக்கம் அளிக்கப்படுகிறது. அதாவது உள்ளபடியான வர்த்தக மீள் வரவுகளை அன்னியில் பெருமளவிலான மீள் வரவுகள் இங்கிலாந்துக்குச் சரக்குகளாக வந்து சேர்கின்றன. (ஆனால் நெருக்கடியானது சிலசமயம் முதலில் அமெரிக்காவில் வெடிப்பதுண்டு-அமெரிக்காதான் இங்கிலாந்திலிருந்து வர்த்தகக் கடன்-செலாவணியிலும் மூலதனக் கடன்-செலாவணியிலும் பெரும் பகுதியை பெற்றுக் கொள்கிறது.) இங்கிலாந்தில் ஏற்படும் தகர்வு-இதைத் தொடக்கி வைப்பதாகவும் இதனுடன் சேர்ந்து வருவதாகவும் இருப்பது தங்க வெளிக்கசிவு-அந்நாட்டின் கொடுப்பு நிலுவையை தீர்த்து வைக்கிறது; அதன் இறக்குமதியாளர்களை நொடிக்கச் செய்வதன் மூலமும் (அடுத்து இது குறித்து மேலும் பார்ப்போம்), அதன் சரக்கு-மூலதனத்தில் ஒரு பகுதியை அயல் நாடுகளில் குறைந்த விலைக்கு தள்ளி விடுவதன் மூலமும், அயல் நாட்டுக் கடன் - பத்திரங்களை விற்று ஆங்கிலேய கடன் -பத்திரங்களை வாங்குவதன் மூலமும் இது நடைபெறுகிறது. இப்போது வேறொரு நாட்டின் முறை வருகிறது. கொடுப்பு நிலுவை தற்காலிகமாய் அதற்குச் சாதகமாய் இருந்தது; ஆனால் கொடுப்பு நிலுவைக்கும் வர்த்தக நிலுவைக்குமான இயல்பான கால இடைவெளி இப்போது நெருக்கடியினால் ஒழிக்கப்பட்டு விட்டது. அல்லது எப்படியும் குறைக்கப்பட்டு விட்டது; எல்லாக் கொடுப்புகளையும் இப்போது உடனே தீர்த்தாக வேண்டும் என்ற நிலை ஏற்படுகிறது. அதாவது பழைய நிலைமையே இங்கு மீண்டு வந்து விடுகிறது. இங்கிலாந்துக்கு இப்போது தங்கம் மறுபடியும் திரும்பி வருகிறது;

வேறு நாட்டிலிருந்து தங்கம் வெளியேறிச் செல்கிறது. ஒரு நாட்டில் அளவுக்கதிகமான இறக்குமதியாகத் தெரிவது வேறுநாட்டில் அளவுக்கதிகமான ஏற்றுமதியாகத் தெரிகிறது; ஒரு நாட்டில் அளவுக்கதிகமான ஏற்றுமதியாக, தெரிவது; வேறு நாட்டில் அளவுக் அதிகமான இறக்குமதியாகத் தெரிகிறது. ஆனால் மிகை-இறக்குமதியும் மிகை ஏற்றுமதியும் ஒவ்வொரு நாட்டிலும் நடைபெற்றுள்ளது (இங்கு நாம் குறிப்பிடுவது பொது நெருக்கடியைத்தானே தவிர மகசூல் பொய்த்துப் போதல் போன்றவற்றையல்ல); இது கடன்-செலாவணியாலும் அதனுடன் சேர்ந்து வரும் பொதுவான விலை வீக்கத்தாலும் ஊக்குவிக்கப்படும் மிகையுற்பத்தியாகும்.

*1857*இல் அமெரிக்க ஐக்கிய அரசில் நெருக்கடி மூண்டது. இதையடுத்து தங்கம் இங்கிலாந்திலிருந்து அமெரிக்காவுக்குச் சென்றது. ஆனால் அமெரிக்க நீர்க்குமிழி வெடித்தவுடனே இங்கிலாந்தில் நெருக்கடி மூண்டு தங்கம் அமெரிக்காவிலிருந்து வெளியேறி இங்கிலாந்துக்குச் சென்றது. இங்கிலாந்துக்கும் கண்டத்துக்கும் இடையிலும் இதே போல் நடைபெற்றது. பொது நெருக்கடிக் காலத்தில் கொடுப்பு நிலுவை ஒவ்வொரு நாட்டுக்கும், எப்படியும் வர்த்தக வழியில் வளர்ச்சி பெற்ற ஒவ்வொரு நாட்டுக்கும் பாதகமாய் இருக்கிறது; ஆனால் எப்போதுமே அலைமுறைக் குண்டுவீச்சு போன்று ஒன்றன்பின் ஒன்றாக தொடர்வரிசையில்தான் ஒவ்வொரு நாட்டுக்கும் பாதகமாய் இருக்கிறது. அதாவது ஒவ்வொரு நாடும் கொடுப்புகளைத் தீர்க்க வேண்டிய முறை வந்தவுடனே கொடுப்பு நிலுவை அந்நாட்டுக்கு பாதகமாகிறது; எடுத்துக்காட்டாக இங்கிலாந்து நெருக்கடி மூண்டதும், இந்தக் காலவரைகளின் தொடர் மிகக் குறுகிய காலவட்டமாகச் சுருக்கப்படுகிறது. இந்த நாடுகளெல்லாம் ஓரே சமயத்தில் மிகை-ஏற்றுமதியும் (எனவே மிகையுற்பத்தி) மிகை-இறக்குமதியும் (எனவே மிகை-வர்த்தகமும்) செய்துள்ளன என்பதும், அவை யாவற்றிலும் விலை வீக்கம் ஏற்பட்டது என்பதும் கடன்-செலாவணி மிகையாகப் பயன்படுத்தப்பட்டது என்பதும் அப்போது தெளிவாகிறது. இந்த நாடுகளில் எல்லாம் அதே தகர்வு ஏற்படுகிறது. அப்போது தங்க வெளிக்கசிவு எனும் நிகழ்வு ஒன்றன்பின் ஒன்றாக இந்த நாடுகளையெல்லாம் தொற்றுகிறது. இது சர்வப் பொது நிகழ்வாய் இருப்பதாலேயே தெளிவாய்த் தெரிய வருவது என்னவென்றால்; (1) தங்க வெளிக் கசிவு என்பது நெருக்கடியின் புலப்பாடுதானே தவிர மூலகாரணம் அல்ல; (2) அது பல்வேறு நாடுகளையும் தொற்றுகிற வரிசைக்கிரமமானது. அவற்றுக்குத் தீர்ப்பு நாள் வருவது எப்போது

*என்பதைத்தான் அதாவது அங்கே நெருக்கடி தொடங்கி அதன் உறக்கநிலைக் கூறுகள் விழித்துக் கொள்வது எப்போது என்பதைத்தான் சுட்டுகிறது.*

*ஆங்கிலேய பொருளாதார எழுத்தாளர்களுக்கேயுரிய தனித்தன்மை என்னவென்றால் - 1830 இலிருந்து குறிப்பிட்டுச் சொல்லும்படியான பொருளாதார இலக்கியமென்பது முக்கியமாய் செலாவணி, கடன்-செலாவணி, நெருக்கடிகள் ஆகியவற்றைப் பற்றிய இலக்கியங்களாக வகைப்படுகிறது - செலாவணி மாற்று வீதங்களில் ஏற்படும் திருப்பத்தையும் மீறி நெருக்கடிக் காலங்களில் உயர்நிலை உலோகங்கள் ஏற்றுமதியாவதை அவர்கள் இங்கிலாந்தின் கண்ணோட்டத்திலிருந்து மட்டுமே பார்க்கிறார்கள், முழுக்க முழுக்க ஒரு நாட்டுக்குரிய புலப்பாடாகவே பார்க்கிறார்கள் என்பதே. நெருக்கடிக் காலங்களில் தங்களது வங்கி வட்டி வீதத்தை உயர்த்தும் போது ஏனைய ஐரோப்பிய வங்கிகளெல்லாம் அதே போல் வட்டி வீதத்தை உயர்த்துகின்றன என்பதையும், தங்க வெளிக் கசிவு தொடர்பான வேதனைக் கூக்குரல் இன்று தங்கள் நாட்டில் எழுந்தால் நாளை அமெரிக்காவிலும் நாளை மறுநாள் ஜெர்மனியிலும் பிரான்சிலும் அது எதிரொலிக்கிறது என்பதையும் பார்க்க மறுத்து அவர்கள் கண்ணை இறுக மூடிக் கொள்கிறார்கள்.*

*1847இல், (பெரும்பாலும் தானியத்திற்காக) 'இந்த நாட்டிற்கு இருந்து வந்த கடப்பாடுகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. அவற்றை பெருமளவுக்கு நிறைவுசெய்யத் தவறியது வருத்தத்திற்குரியதே' (பணக்கார இங்கிலாந்து நாடு கண்டத்துக்கும் அமெரிக்காவுக்குமான தன் கடப்பாடுகளை நிறைவேற்றுவதில் நொடிப்பு நிலைக்குரிய அறிவிப்புகள் செய்து தன் சுமையைத் தணித்துக் கொண்டது); 'ஆனால் இந்தக் கடப்பாடுகளை எந்த அளவுக்கு நிறைவு செய்யத் தவறவில்லையோ, அந்த அளவுக்கு அவை பொற்பாள ஏற்றுமதியின் மூலம் நிறைவுசெய்யப்பட்டன.' (வங்கிச் சட்டங்களைப் பற்றிய குழுவின் அறிக்கை, 1857.) வேறு விதமாகச் சொன்னால் இங்கிலாந்தில் ஒரு நெருக்கடி வங்கிச் சட்டத்தால் முற்றிப் போவதாய் உள்ளவரை, இந்தச் சட்டம் தானிய ஏற்றுமதி செய்யும் நாடுகளை பஞ்சக் காலத்தில் வஞ்சித்து ஏமாற்றுவதற்கான கருவியாகவும் பயன்படுகிறது; முதலில் இந்த நாடுகளின் தானியத்தைப் பொருத்தும், பிறகு அந்த தானியத்திற்கான பணத்தைப் பொருத்தும் இந்த ஏமாற்று நடைபெறுகிறது. ஆகவே, தாமே அதிகமாகவோ குறைவாகவோ*

தட்டுப்பாடுகளால் இன்னலுற்று வரும் நாடுகளைப் பொருத்தவரை இது போன்ற காலங்களில் தானிய ஏற்றுமதிக்கு தடைவிதிப்பானது தானிய இறக்குமதிகளுக்கான 'கடப்பாடுகளை நொடிப்பு நிலைகளால் சந்திக்கும்' இங்கிலாந்து வங்கியின் இந்தத் திட்டத்தை முறியடிப்பதற்கு மிகவும் அறிவார்ந்த வழிமுறையாகும். பார்க்கப் போனால் தானிய உற்பத்தியாளர்களும் ஊக வணிகர்களும் இங்கிலாந்தின் நன்மைக்காக தமது மூலதனத்தை இழப்பதைக் காட்டிலும் சொந்த நாட்டின் நன்மைக்காக தமது இலாபத்தில் ஒரு பகுதியை இழப்பது எவ்வளவோ மேலானது.

இதிலிருந்து தெரிவதென்ன? சரக்கு-மூலதனமானது நெருக்கடிகளின் போதும் பொதுவாகத் தொழில் மந்தமாயிருக்கும் காலங்களின் போதும் உள்ளுறைப் பண-மூலதனத்தைக் குறிக்கும் திறனை பெருமளவுக்கு இழந்து விடுகிறது. பெயரளவு மூலதனமாகிய வட்டிவருமான பத்திரம் பங்குச் சந்தையில் பண-மூலதனமாக புழக்கத்தில் இருக்கும் வரை அதற்கும் கூட இதே கதிதான் நேரிடுகிறது. வட்டி உயரும் போது அதன் விலைகுறைகிறது. மேலும், பொதுவான கடன்-செலாவணிப் பற்றாக்குறையின் விளைவாகவும் கூட அதன் விலை குறைகிறது; இதனால் அதன் உடைமையாளர்கள் பணம் பெறுவதற்காக வேண்டி அதனை சந்தையில் கொண்டு போய் கொட்டிக் குவிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. முடிவில், மூலதனப் பங்குகளைப் பொறுத்த வரை, அதனைப் பணவிடைகளாகக் கொண்ட வருவாய்கள் குறைவதன் விளைவாகவும், அதன் மிகப் பலச் சந்தர்ப்பங்களில் குறித்திடும் தொழில் முனைவுகள் போலியானவையாய் இருப்பதன் விளைவாகவும் அதன் விலை குறைகிறது. இந்தப் பெயரளவு பண-மூலதனம் நெருக்கடிக் காலங்களில் பெருமளவுக்கு குறைந்து போகிறது, அதன் உடைமையாளர்கள் சந்தையில் அதன் பேரில் பணக் கடன் பெற முடிவதும்குறைந்து போகிறது. ஆனால் பங்குச் சந்தைப் பட்டியலில் இந்தக் கடன் பத்திரங்களின் பண - மதிப்பு குறைந்து போவதற்கும் அவை குறித்திடும் உண்மை மூலதனத்திற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. மாறாக இந்த பண-மதிப்புக் குறைவுக்கும் கடன் பத்திர உடைமையாளர்களின் கடன் தீர்வுத் திறனுக்கும் (Solvency) நிறையவே தொடர்புண்டு.

## அத்தியாயம் XXXI

### பண - மூலதனமும் உண்மை மூலதனமும். II
### (தொடர்ச்சி)

கடன் தரப்படும் பண-மூலதனத்தின் வடிவிலான மூலதனத்தின் திரட்டல் உள்ளபடியான மூலதனத் திரட்டலோடு, அதாவது மறுவுற்பத்தி நிகழ்முறையின் விரிவாக்கத்தோடு எந்த அளவுக்கு ஒருங்கமைகிறது? இந்தக் கேள்விக்கு இன்னும் நாம் விடை கண்டு முடித்துவிடவில்லை.

பணமானது கடன் தரப்படும் பண-மூலதனமாக மாற்றமடைவது திறனுடைய மூலதனமாக மாற்றமடைவதைக் காட்டிலும் மிகவும் சாமானியமானது. ஆனால் இங்கு வேறுபடுத்திக் காணப்பட வேண்டியவை இரண்டு:

1) பணமானது கடன்-மூலதனமாக மட்டும் மாற்றமடைவது;

2) மூலதனம் அல்லது வருவாயானது பணமாக மாற்றமடைந்து, அந்தப் பணம் கடன்-மூலதனமாக மாற்றமடைவது.

இரண்டாவதாகக் குறிப்பிட்ட மாற்றம் மட்டுமே உள்ளபடியான தொழில்துறை மூலதனத்திரட்டலோடு தொடர்புடைய நேர்வகை கடன் - மூலதனத்திரட்டலைக் குறிப்பதாய் இருக்க முடியும்.

#### 1. பணமானது கடன்-மூலதனமாக மாற்றமடைதல்

கடன்-மூலதனமானது பெருமளவில் குவிந்து போகலாம் அல்லது உபரியாகலாம் என்று ஏற்கெனவே பார்த்தோம். இது திறனுடைய மூலதனத் திரட்டலுக்கு எதிர்விகிதமுடையதாய் இருக்கிற அளவுக்கு மட்டுமே அத்திரட்டோடு தொடர்புடையதாகும். தொழில்துறை சகடத்தின் இரு கட்டங்களில் இவ்விதம் நேரிடுகிறது; முதலாவதில், திறனுடைய மூலதனம், சரக்கு - மூலதனம் ஆகிய இரு வடிவங்களிலும் தொழில்துறை மூலதனம் சுருங்கிப் போகிறது. அதாவது நெருக்கடிக்குப் பிறகு சகடம் ஆரம்பிக்கும்போது இந்நிலவரம் காணப்படுகிறது, இரண்டாவதில், மேம்பாடு தொடங்கிவிட்டால் வர்த்தகக் கடன்-செலாவணி இன்னமும் வங்கிக் கடன் செலாவணியை பெரும்

அளவுக்கு பயன்படுத்திக் கொள்ளாமல் இருக்கிறது. முதலாவதில் முன்னதாக பொருளுற்பத்தியிலும் வர்த்தகத்திலும் ஈடுபட்டிருந்த பண-மூலதனம் வேலையற்ற கடன்-மூலதனமாகக் காட்சியளிக்கிறது. இரண்டாவதில், அது மேன்மேலும் அதிக அளவுக்கு பயன்படுத்தப் பட்டாலும் மிகக் குறைந்த வட்டி வீதத்தில் பயன்படுத்தப்படுவதாய்த் தோன்றுகிறது; ஏனென்றால் இப்போது தொழில்துறை முதலாளியும் வர்த்தக முதலாளியும் பணமுதலாளிக்கு நிபந்தனை போட முடிகிறது. கடன்-மூலதனத்தின் உபரியானது முதல் நேர்வில் தொழில்துறை மூலதனம் தேக்கமுற்று இருப்பதையும், இரண்டாம் நேர்வில் வர்த்தகக் கடன்-செலாவணி வங்கிக் கடன்-செலாவணியிலிருந்து ஒப்பளவில் சுயேச்சை பெற்று இருப்பதையும் தெரிவிப்பதாகும் - ஒப்பளவிலான இந்த சுயேச்சை நிலை மீள்வுகள் சரளமாய் நடைபெறுவதையும் குறுங்காலக் கடன்-செலாவணியையும், சொந்த மூலதனத்தைக் கொண்டு மேற்கொள்ளும் செயற்பாடுகளே முதலிடம் பெறுவதையும் அடிப்படையாகக் கொண்டது. ஏனையோரின் கடன்-செலாவணி மூலதனத்தைச் சார்ந்துள்ள ஊகவணிகர்கள் இன்னும் களம் புகுந்திடவில்லை; சொந்த மூலதனத்தை வைத்து இயங்குவோர் தோராயமாய் பிரத்தியேகமான கடன்-செலாவணிச் செயற்பாடு களிலிருந்து இன்னும் வெகுவாய் விலகியே இருந்து வருகின்றனர். முதற் கட்டத்தில் கடன் மூலதனத்தின் உபரியானது உண்மை மூலதனத் திரட்டலை தெரிவிப்பதற்கு நேர் எதிரானதாய் இருக்கிறது. இரண்டாம் கட்டத்தில் இந்த உபரியானது மறுவுற்பத்தி நிகழ்முறையில் புதிய விரிவாக்கத்துடன் ஒருங்கமைகிறது - அவ்விரிவாக்கத்துக்கு காரணம் அல்ல என்றாலும் அதனுடன் சேர்ந்து வருகிறது. கடன்-மூலதனத்தின் உபரி ஏற்கனவே குறைந்து வருகிறது; அதாவது வேண்டலுடன் ஒப்பிடுகையில் மட்டுமே இன்னமும் உபரியாக இருக்கிறது. இரு கட்டங்களிலுமே உண்மையான மூலதனத் திரட்டல் நிகழ்முறையின் விரிவாக்கம் ஊக்கம் பெறுகிறது. எப்படியென்றால் குறைந்த வட்டி வீதமானது - இது முதற்கட்டத்தில் குறைந்த விலைகளுடனும் இரண்டாம் கட்டத்தில் பையப் பைய உயர்ந்து செல்லும் விலைகளுடனும் ஒருங்கமைகிறது - முனைவு-இலாபமாக மாற்றப்படும் இலாபப் பகுதியை அதிகமாக்குகிறது. செழுமைக் காலத்தின் உச்சத்தில் வட்டி சராசரி நிலைக்கு உயரும்போது இதுவே இன்னும் பெரிய அளவுக்கு நடைபெறுகிறது; வட்டி அப்போது உயர்ந்திருந்தாலும் இலாபத்துடன் ஒப்பிடுகையில் உயர்ந்திருப்பதில்லை.

மறுபுறம், கடன்-மூலதனத் திரட்டல் எப்படி உண்மை மூலதனத் திரட்டலே இல்லாமல் நடைபெற முடியும் என்று பார்த்தோம். அதாவது வங்கித் தொழில் அமைப்பின் பெருக்கமும் குவிப்பும், சுற்றோட்டச் சேம இருப்பில் அல்லது தனியார் கொடுப்புச் சாதன சேம நிதியில் மிச்சம் செய்தல், இவ்விதம் மிச்சமாகும் தொகையை குறுகிய காலத்துக்கு கடன்-மூலதனமாக மாற்றுதல் போன்ற வெறும் செய்நுட்ப வழிகளைக் கொண்டே இத்திரட்டல் நடைபெற முடியும். ஆகவேதான் இந்தக் கடன்-மூலதனம் நிலைத்திரா மூலதனம் என்றும் அழைக்கப்படுகிறது. இது குறுகிய காலங்களுக்கே கடன்-மூலதனமாக வடிவெடுக்கிறது என்றாலும் (மேலும் இதனை குறுகிய காலங்களுக்கு மட்டுமே உண்டியற் கழிவுக்கு பயன்படுத்த வேண்டும் என்றாலும்), வருவதும் போவதுமாய் ஓயாமல் பாய்ந்தோடிக் கொண்டிருக்கிறது. ஒருவர் எடுத்தால் வேறொருவர் கொடுக்கிறார். கடனுக்குரிய பண-மூலதனத் திரள் உண்மை மூலதனத் திரட்டலைச் சாராமலே இவ்வாறு வளர்ந்து செல்கிறது (நாம் இங்கு குறிப்பிடுவது மாற்று உண்டியல்கள், வைப்புகள் இவற்றின் பேரிலான குறுங்கால கடன்களைத்தானே தவிர ஆண்டுக்கணக்கில் நீண்டு செல்லும்படியான கடன்களை அல்லவே அல்ல).

வங்கிக் குழு, 1857, கேள்வி 501. நீங்கள் 'நிலைத்திரா மூலதனம்' என்று எதைச் சொல்கிறீர்கள்?'-(இங்கிலாந்து வங்கியின் ஆளுநர் திருவாளர் வெகூலின் அளித்த பதில்:) 'குறுங்கால பணக்கடன்களுக்குரிய மூலதனமே அது (502) இங்கிலாந்து வங்கியின் நோட்டுகள்.... வட்டிக்கடை வங்கிகளின் பணப் புழக்கம், நாட்டிலுள்ள நாணய அளவு.' —(கேள்வி) 'நிலைத்திரா மூலதனம் என்று நீங்கள் சொல்வது' (இங்கிலாந்து வங்கி நோட்டுகளின்), 'முனைப்பு வாய்ந்த புழக்கத்தையே என்றால், முனைப்பு வாய்ந்த பணப் புழக்கத்தில் மிகப் பெரும் வேறுபாடு ஏதும் இருப்பதாக குழுவின் முன்னுள்ள தகவலறிக்கையிலிருந்து தெரியவில்லையே?' (ஆனால் இந்த முனைப்பு வாய்ந்த பணப்புழக்கம் வட்டிக்காரரால் முன்னீடு செய்யப்படுகிறதா, அல்லது மறுவுற்பத்தி செய்திடும் முதலாளி யாலேயே முன்னீடு செய்யப்படுகிறதா என்பதில் மிகப் பெரும் வேறுபாடு உள்ளது. வெகூலின் அளித்த பதில்:) 'நிலைத்திரா மூலதனம் என்பதில் வங்கியாளர்களின் சேம இருப்புகளையும் சேர்த்துக் கொள்கிறேன்; இவற்றில் கணிசமாய் ஏற்ற இறக்கம் நிகழ்கிறது.' அதாவது, வைப்புகளின் ஒரு பகுதியை வங்கியாளர்கள் வட்டிக்கு விடாமல் வைத்துக் கொள்கிறார்கள் அல்லவா, அந்தப் பகுதியில்

கணிசமாய் ஏற்ற இறக்கம் நிகழ்கிறது. வைப்புகளின் இந்தப் பகுதியானது அவ்வங்கியாளர்களின் சேம இருப்பாக குறிக்கப் பெறுகிறது, பெரும்பாலும் இங்கிலாந்து வங்கியின் சேம இருப்பாகவும் குறிக்கப் பெறுகிறது; ஏனென்றால் அவ்வங்கியில்தான் வைப்பாக அவை வைக்கப்பட்டுள்ளன. அதே கனவான் முடிவில் சொல்கிறார்: நிலைத்திரா மூலதனம் என்பது பொற்பாளமாக, அதாவது கட்டியாகவும் நாணயமாகவும் இருக்கலாம் (503). - பணச் சந்தையின் இந்தக் கடன்கார புலம்பலில் அரசியல் பொருளாதாரக் கருத்தினங்களெல்லாம் வேறு பொருளும் வேறு வடிவமும் கொள்வது மெய்யாகவே விந்தைதான். நிலைத்திரா மூலதனம் என்பது சுழல்-மூலதனத்தைக் குறிக்கும் சொற்றொடராகும்; இது அறவே வேறான ஒன்று என்பதைக் கூறத் தேவையில்லை. பணம் என்பது மூலதனமாம், பொற்பாளம் என்பது மூலதனமாம் வங்கி நோட்டுகள் என்பது பணப்புழக்கமாம். மூலதனம் என்பது ஒரு சரக்காம், கடன்கள் என்பவை சரக்குகளாம், நிலைமூலதனம் என்பது விற்பதற்குரிய கடன் பத்திரத்தில் முதலீடு ஆகியுள்ள பணமாம்!

'லண்டனைச் சேர்ந்த கூட்டுப் பங்கு வங்கிகளின் வைப்புகள்....1847இல் £8,850,774 என்ற அளவிலிருந்து 1875இல் £43,100,724ஆக அதிகரித்துள்ளன.....உங்கள் குழுவிற் தரப்பட்டுள்ள சான்றிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், இந்தப் பெரும் தொகையில் ஒரு கணிசப் பகுதி இதுவரை இதற்கென்று கிடைக்காத வட்டாரங்களிலிருந்து பெறப்பட்டுள்ளது. வங்கியாளர்களிடம் கணக்குத் தொடங்கி பணம் போட்டு வைக்கிற நடைமுறையானது இதற்கு முன்பு தங்கள் மூலதனத்தை (!) அவ்வாறு பயன்படுத்தாத பற்பல வர்க்கங்களிடம் பரவியுள்ளது. தனியார் வட்டிக்கடை வங்கியாளர்கள்' (இவர்கள் வேறு, கூட்டுப் பங்கு வங்கிகள் வேறு) 'சங்கத் தலைவரும் தங்களது குழுவிற்கு சான்றளிப்பதற்காக அவர்களின் பிரதிநிதியாக வந்திருப்பவருமான திருவாளர் ராடுவெல், இந்நடைமுறையானது இப்ஸ்விச் வட்டாரத்தில் சாகுபடியாளர்களிடையிலும் கடைக்காரர்களிடையிலும் சமீப காலத்தில் நான்கு மடங்காய் அதிகரித்திருப்பதாகச் சொல்கிறார்; அநேகமாய் ஒவ்வொரு சாகுபடியாளரும் - ஆண்டுக்கு £50 மட்டும் வாடகை செலுத்துபவர் கூட - இப்போது வங்கியாளர்களிடம் வைப்பு வைத்திருக்கிறாராம். இந்த வைப்புகளின் மொத்தத் தொகையும் தொழில்வகையில் பயன்படுத்தப்படுவதற்குத்தான் போய்விடுகிறது. முக்கியமாய் வர்த்தகச் செயற்பாட்டின் கேந்திரமாகிய லண்டனுக்கு ஈர்க்கப்பட்டு அங்கே முதலில் உண்டியல்களை கழிவு செய்வதற்கோ, லண்டன்

வங்கியாளர்களின் வாடிக்கையாளர்களுக்கு இதரவகை முன்னீடுகள் தருவதற்கோ பயன்படுத்தப்படுகிறது. ஆனால் இதில் பெரும்பகுதிக்கு வங்கியாளர்களிடம் உடனடி வேண்டல் இல்லாது போவதால், அப்பகுதியானது உண்டியல் - தரகர்களின் கைக்குச் செல்கிறது; இதற்கு பிரதியாக தரகர்கள் வங்கியாளருக்குத் தருவது லண்டனிலும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருக்கும் ஆட்களுக்காக ஏற்கெனவே அவர்களால் கழிவு செய்து காசாக்கப் பெற்ற வர்த்தக உண்டியல்களாகும்; வங்கியாளர் முன்னீடு செய்யும் தொகைக்குப் பிணையமாக இவை தரப்படுகின்றன.' *(வங்கிக்குழு, 1858, பக்கம் V.)*

உண்டியல் தரகர் முன்பே ஒரு முறை கழிவு செய்து விட்ட மாற்று உண்டியல்களின் பேரில் அவருக்கு முன்னீடுகள் தருவதன் மூலம் உண்மையில் வங்கியாளர் அவற்றை மறுகழிவு செய்கிறார்; ஆனால் மெய்நடப்பில் இவ்வுண்டியல்களில் மிகப் பலவும் ஏற்கெனவே உண்டியல்-தரகரால் மறுகழிவு செய்யப்பட்டவை; தரகர் அவருடைய உண்டியல்களை மறுகழிவு செய்வதற்கு வங்கியாளர்-பயன்படுத்தும் அதே பணத்தைக் கொண்டு புதிய உண்டியல்களை மறுகழிவு செய்கிறார். இது எங்குபோய் முடிகிறது என்பதை பின்வருவதிலிருந்து அறியலாம்; 'கடன்வசதி உண்டியல்களைப் பயன்படுத்தி விரிவான அளவில் பெயரளவு கடன்-செலாவணிகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன; கூட்டுப்பங்கு வட்டிக்கடை வங்கிகள் இத்தகைய உண்டியல்களைக் கழிவு செய்வதும், லண்டன் சந்தையில் உண்டியல்-தரகர்களிடம் வங்கியின் கடன்மதிப்பை மட்டுமே சார்ந்து, மற்றபடி உண்டியல்களின் தரம் குறித்து கவலைப்படாமல் அவற்றை மறுகழிவு செய்வதுமான நடைமுறையானது திறந்த கடன்-செலாவணிக்களுக்கு ஏராளமாய் வசதிகள் அமைத்துக் கொடுத்துள்ளது.' *(முன்வந்தது, பக்கம் XXI.)*

மாற்று உண்டியலை இப்படி மறுகழிவு செய்வது தொடர்பாகவும் கடனுக்குரிய பண-மூலதனத்தை இவ்விதம் முழுக்க முழுக்க செய்நுட்ப வழியில் அதிகமாக்குவது கடன்-செலாவணி மோசடிகளுக்கு துணை செய்வது தொடர்பாகவும் எக்கானமிஸ்ட் ஏட்டிலிருந்து எடுத்துத் தரப்படும் பின்வரும் பகுதி சுவாரஸ்யமானது; 'கடந்த சில ஆண்டுகளாக மூலதனமானது' (அதாவது கடனுக்குரிய பண மூலதனம்' 'நாட்டில் சில வட்டங்களில் அதனைப் பயன்படுத்திக் கொள்ள முடிந்ததை விடவும் துரிதமாய்த் திரண்டுள்ளது; ஏனைய வட்டங்களிலோ மூலதனத்தை ஈடுபடுத்தும் வழிவகைகள்

மூலதனத்தை விடவும் துரிதமாய் அதிகரித்துள்ளது. முடியரசெங்கிலும் முழுக்க முழுக்க விவசாய வட்டங்களாய் இருப்பவற்றில் வங்கியாளர்கள் தம்மிடமிருக்கும் வைப்புகளைத் தம் வட்டங்களிலேயே இலாபகரமாகவும் பாதுகாப்பாகவும் ஈடுபடுத்துவதற்கு போதிய வழிவகைகள் கிடைக்கவில்லை; பெரும் பெரும் வணிக நகரங்களிலும், ஆலைத்தொழில், சுரங்கத்தொழில் வட்டங்களிலும் வங்கியாளர்களுக்குச் சொந்தமான வழிவகைகள் வழங்கக் கூடியதை விடவும் மூலதனத்திற்கான வேண்டல் கூடுதலாய் இருந்துள்ளது. பல்வேறு வட்டங்களினதும் இந்த ஒப்பு நிலையின் விளைவாக, சமீப ஆண்டுகளில், மூலதன வினியோகத்தில் புதியதொரு தொழில் வகையினர் தலையெடுத்து துரிதமாய்ப் பெருகியுள்ளனர்; இவர்கள் வழக்கமாய் உண்டியல்-தரகர் என்று அழைக்கப்பட்ட போதிலும், மெய்நடப்பில் மிகப் பெரும் அளவிலமைந்த வங்கியாளர்களே ஆவர். இவர்களின் அலுவல் இதுதான்: மூலதனத்தை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள முடியாத வட்டங்களில் வங்கியாளர்களிடம் உபரியாய் இருக்கும் மூலதனத்தையும், அவ்வாறே புது நிறுமங்களிடமும் விரிவான வணிக நிறுவனங்களிடமும் தற்காலிகமாய் வேலையற்றிருக்கும் பணத்தையும் ஒப்புக்கொண்ட காலங்களுக்கும் ஒப்புக்கொண்ட வட்டி வீதங்களுக்குமாக பெற்றுக்கொள்கின்றனர்; மூலதனத்திற்கான வேண்டல் மேலதிகமாய் இருக்கும் வட்டங்களில் அவற்றை இன்னுமுயர்ந்த வட்டிவீதங்களுக்கு வங்கியாளர்களிடம் முன்னீடு செய்கின்றனர்; பொதுவாகச் சொன்னால், அவர்களின் வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட உண்டியல்களை மறுகழிவு செய்து கொடுக்கும் வழியை இதற்குக் கையாளுகின்றனர்... இவ்வகையில் லோம்பார்டு தெரு மாபெரும் கேந்திரமாகி விட்டது. மிச்சப்பட்ட மூலதனத்தை அது இலாபகரமாய்ப் பயன்படுவதற்கு வழியில்லாத நாட்டின் ஒருபகுதியிலிருந்து அது வேண்டி அழைக்கப்படுகிறது வேறொரு பகுதிக்கு பெயர்த்தனுப்புகிற பெயர்ச்சி மட்டுமல்லாமல், இதே போன்ற நிலைமைகளில் இருக்கும் தனியாட்கள் இடையிலான மூலதனப் பெயர்ச்சியும் கூட அங்கே நடந்தேறுகிறது. முதலில் இந்தக் கொடுக்கல் வாங்கல்கள் அநேகமாய் முழுக்க முழுக்கவே வங்கிப் பிணையங்களின் பேரில் மட்டும் கடன்வாங்குவதும் கொடுப்பதும் என்ற அளவோடு நின்றன. ஆனால் நாட்டின் மூலதனம் துரிதமாய்த் திரளத் திரள, வங்கிகள் நிறுவப்பட்டதன் மூலம் அதன் சிக்கனப்பயன்பாடு பெருகப் பெருக இந்த உண்டியற்கழிவகங்களின் வசமிருந்த நிதிகள் பெருத்துவிட்டன; இதனால் அவை முதலில் வாணிபச் சரக்குகளுக்கான துறைமுக

ஆணைகளின் பேரிலும் (துறைமுகங்களில் இருக்கும் சரக்குகளின் பேரிலான சரக்குச் சேமிப்பு இவை), பிறகு கப்பல் ரசீதுகளின் அத்தாட்சிகள் பேரிலும் முன்னீடுகள் வழங்க ஆவலுற்றன. இந்தக் கப்பல் ரசீதுகள் இந்த நாட்டிற்கு இன்னும் வந்து கூடச்சேராத உற்பத்திப் பண்டத்தைக் குறிப்பவை; ஆனால் பொதுவாக அல்லவென்றாலும் சில நேரம் வணிகர் அவரின் தரகர் பேரில் எழுதிக் கொடுத்த உண்டியல்களை பிணையமாய்க் கொண்டிருப்பவை. இந்நடைமுறையானது ஆங்கிலேய வர்த்தகத்தின் முழுத் தன்மையினையும் துரிதமாய் மாற்றி அமைத்தது. லோம்பார்டு தெருவில் இவ்விதம் வாய்த்திட்ட வசதிகள் மின்சிங் சந்திலிருக்கும் தரகர்களுக்கு விரிவான அதிகாரங்கள் கிடைக்கச் செய்தன; தம் பங்குக்கு இவர்கள்....இவற்றின் முழு அனுகூலத்தையும் இறக்குமதி வணிகருக்கு கிடைக்கச் செய்தார்கள். அவ்வணிகர் இவற்றை பெரிய அளவுக்கு தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார்; ஒரு வணிகர் அவருடைய கப்பல் ரசீதுகளின் பேரில் அல்லது துறைமுக ஆணைகளின் பேரிலும் கூட முன்னீடுகள் பெறுவாரானால், அதுவே அவரது கடன்மதிப்பை அழித்து விடும் என்பதுதான் 25 ஆண்டுகளுக்கு முன்பிருந்த நிலை; ஆனால் இதே நடைமுறை சமீப ஆண்டுகளில் சர்வசாதாரணம் ஆகிவிட்டது; 25 ஆண்டுகளுக்கு முன்பு அதிலும் அரிதான விதிவிலக்காய் இருந்தது இன்று பொதுவிதி ஆகிவிட்டதாகக் கூறலாம். இதுமட்டுமல்ல, இந்த ஏற்பாடு இதற்கு மேலும் வெகுதூரம் கொண்டு செல்லப்பட்டு விட்டது; தொலைதூரக் குடியேற்ற நாடுகளில் வரவிருக்கும் மகசூலை ஈடாய்க் கொண்டு எழுதித் தரப்படும் உண்டியல்களின் பேரில் லோம்பார்டு தெருவில் பெருந்தொகைகள் திரட்டப்பட்டுள்ளன என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். இறக்குமதி வணிகர்களுக்கு இவ்விதம் வழங்கப் பெற்ற இந்த வசதிகளின் விளைவாக அவர்கள் தம் கொடுக்கல் வாங்கல்களை அயல்நாடுகளில் விரிவாக்கிக் கொள்வது சாத்தியமாயிற்று; இதுகாறும் அவர்களது அலுவலை நடத்துவதற்குப் பயன்பட்டு வந்த அவர்களுடைய நிலைத்திரா மூலதனத்தை நிலையான பிணையங்களிலேயே மிகவும் ஆட்சேபணைக்குரியவற்றில் - அயல்நாட்டுத் தோட்டப் பண்ணைகளில் - முதலீடு செய்வதும் சாத்தியமாயிற்று; இந்தப் பிணையங்கள் மீது அவர்களுக்கு அவ்வளவாய் கட்டுப்பாடு இல்லை; அல்லது எவ்விதக் கட்டுப்பாடும் இல்லவே இல்லை எனலாம். ஆக, கடன்-செலாவணியின் நேரடி மாற்றத்தை நாம் காணமுடிகிறது. நமது கிராமப்புற வட்டங்களில் சேகரிக்கப்பட்டு, வைப்புகளின் உருவில் சிறுசிறு தொகைகளாக

வட்டிக்கடை வங்கிகளிலும் லோம்பார்டு தெரு மையங்களிலும் சேர்த்து வைக்கப்பட்டு முதலீடாவதற்குக் காத்திருக்கும் நாட்டின் மூலதனம் இந்த மாற்றத்தினூடாக முதலாவதாய் நமது சுரங்கத்தொழில் ஆலைத்தொழில் வட்டங்களில் உற்பத்திச் செயற்பாடுகளை விரிவாக்குவதற்குக் கிடைக்குமாறு செய்யப்பட்டுள்ளது; அந்த வட்டாரங்களில் இருக்கும் வங்கிகளுக்கு உண்டியல்களை மறுகழிவு செய்து காசாக்கித் தருவதன் மூலம் இது செய்யப்பட்டுள்ளது. இம்மூலதனமானது, அடுத்தப்படியாக, அயல் நாட்டு விலைபொருளை இறக்குமதி செய்வதற்காக கூடுதல் வசதிகள் செய்து கொடுப்பதற்கு கிடைக்குமாறு செய்யப்பட்டுள்ளது; துறைமுக அத்தாட்சிகள் பேரிலும் கப்பல் ரசீதுகளின் பேரிலும் முன்னீடுகள் தருவதன் மூலம் இது செய்யப்பட்டுள்ளது; அயல்நாட்டு, குடியேற்ற நாட்டு வர்த்தகத்தில் ஈடுபட்டிருக்கும் நிறுவனங்களின் 'முறைப்படியான' வணிக-மூலதனம் விடுவிக்கப்படுவதற்கும் மிகவும் ஆட்சேபணைக்குரிய விதத்தில் அயல்நாட்டுத் தோட்டப் பண்ணைகளில் முன்னீடுகள் செய்யுமாறு தூண்டப்படுவதற்கும் இது வழிகோலியது.' (*எக்கானமிஸ்ட், 1847 நவம்பர் 20, பக்கம் 1334.*) கடன் செலாவணிகள் இப்படித்தான் 'நேர்த்தியான முறையில்' விழுங்கப்படுகின்றன. கிராமப்புறத்தைச் சேர்ந்த வைப்பாளர் தம் வங்கியாளரிடமே வைப்பு வைத்திருப்பதாக நினைத்துக் கொள்கிறார்; அவ்வங்கியாளர் மற்றவர்களுக்கு கடன் தரும்போது தமக்குத் தெரிந்த தனிப்பட்ட ஆட்களுக்கே அவ்வாறு கடன் தரப்படுவதாகவும் நினைத்துக் கொள்கிறார். தமது வைப்பை அவ்வங்கியாளர் யாரோ ஒரு லண்டன் உண்டியல் தரகரின் பொறுப்பில் -தாமோ வங்கியாளரோ இம்மியளவும் கட்டுப்படுத்த முடியாத செயற்பாடுகளுக்குரியவரான அத்தரகரின் பொறுப்பில்-விடுகிறார் என்ற ஐயுறவு துளிகூட அவருக்கில்லை.

இரயில் போக்குவரத்து போன்ற பெரும் பெரும் பொதுத் தொழில் முனைவுகள் எப்படி தற்சமயத்துக்கு கடன்-மூலதனத்தை அதிகமாக்கிக் கொள்ளக் கூடும் என்று முன்பே பார்த்தோம். வைப்பில் இடப்படும் தொகைகள் மெய்யாகவே பயன்படுத்திக் கொள்ளப்படும் நேரம்வரும் வரை குறிப்பிட்ட காலத்துக்கு வங்கியாளர்களின் வசத்தில் இருந்து வருவதுதான் இதற்குக் காரணம்.

மேலும், கடன்-மூலதனத்திரள் என்பது வேறு, பணப்புழக்க அளவு என்பது வேறு. நாட்டில் இருந்து வருவதும் சுற்றியோடிப் புழக்கத்திலிருப்பதுமான வங்கிநோட்டுகள், நாணயம் அனைத்தினதும் கூட்டுத் தொகையைத்தான் இங்கு பணப்புழக்க அளவு என்கிறோம்;

உயர்நிலை உலோகப் பாளங்களும் இத்தொகையில் அடங்கும். இந்தப் பணப் புழக்க அளவில் ஒருபகுதி வங்கிகளின் சேம இருப்பு ஆகிறது; இதன் பரிமாணம் ஓயாமல் மாறிக் கொண்டிருக்கிறது.

'1857 நவம்பர் 12ஆம் நாள்' (1844ஆம் வருட வங்கிச் சட்டம் நிறுத்தி வைக்கப்பட்ட நாள்) 'இங்கிலாந்து வங்கியின் சேம இருப்பு அனைத்தும் £ 580,751 மட்டுமே (இதில் லண்டனும் அதன் எல்லாக் கிளைகளும் அடங்கும்); அதே போது அவற்றின் வைப்புகள் £ 22,500,000; இதில் சுமார் ஆறரை மிலியன் லண்டன் வங்கியாளர்களுக்குச் சொந்தம்.' (வங்கிச் சட்டங்கள், 1858, பக்கம் LVII.)

வட்டி வீதத்திலான மாற்றங்கள் (நீண்ட கால அடிப்படையில் ஏற்படும் மாற்றங்களையும் வெவ்வேறு நாடுகளில் நிலவும் வட்டி வீதங்களிடையிலான வேறுபாடுகளையும் ஒதுக்கி விடுகிறோம்; முன் கூறிய மாற்றங்கள் பொது இலாப வீதத்திலான மாற்றங்களைப் பொறுத்தவை, பின்கூறிய வேறுபாடுகள் இலாப வீதத்திலும் கடன் செலாவணியின் வளர்ச்சியிலுமான வேறுபாடுகளைப் பொறுத்தவை) கடன்-மூலதன வழங்கலைப் பொறுத்தவை (நம்பி நிலைபோன்ற மற்றெல்லாக் காரணிகளும் மாறாதிருப்பதாய்க் கொள்கிறோம்), அதாவது பணவடிவில் நாணயமாகவோ நோட்டுகளாகவோ கடன் தரப்படும் மூலதனத்தின் வழங்கலைப்பொறுத்தது; இதற்கு மாறாகத் தொழில்துறை மூலதனமானது அப்படியே சரக்கு வடிவில் மறுவுற்பத்திச் செயல்களிடையிலேயே வர்த்தகக் கடன்-செலாவணி மூலமாய் அப்படியே சரக்கு வடிவில் கடன் தரப்படுகிறது.

ஆனால் கடனுக்குரிய இந்தப் பண-மூலதனத்தின் பரிமாணம் புழக்கத்திலிருக்கும் பணத்தின் அளவிலிருந்து வேறானதும் அதைச் சாராததும் ஆகும்.

எடுத்துக்காட்டாக £20 நாளொன்றுக்கு ஐந்து முறை கடன் தரப்படுமானால், மொத்தம் £100 பண-மூலதனம் கடன்தரப்படும்; மேலும் இந்த £20ஆனது வாங்கும் சாதனமாகவோ கொடுப்புச் சாதனமாகவோ குறைந்தது நான்கு முறை செயல்பட்டிருப்பதையும் இது குறிக்கும். ஏனென்றால் வாங்கலும் கொடுப்பும் இடையீடு செய்யவில்லை என்றால், அதாவது இத்தொகை மூலதனத்தின் மாறிய வடிவத்தை (உழைப்புச் சக்தி உள்ளிட்ட சரக்குகளை) குறைந்தது நான்கு முறை குறிக்காது போயிருந்தால் ஒவ்வொன்றும் £20 மதிப்புள்ள ஐந்து உரிமைத்தகுதிகளாக மட்டும் அமையுமே தவிர £100 மூலதனமாய் அமைந்திடாது.

கடன்-செலாவணி வளர்ச்சியடைந்துள்ள நாடுகளில், கடன் கொடுப்பதற்கு கிடைக்கக் கூடிய பண-மூலதனம் அனைத்தும் வங்கிகளிடமும் வட்டிக்காரர்களிடமும் வைப்புகளின் வடிவில் இருந்து வருவதாகக் கொள்ளலாம். எப்படியும், தொழிலை அதன் முழு உருவில் நோக்கும் போது நிலைமை இவ்வாறிருக்கக் காணலாம். மேலும், தொழில் தழைத்தோங்கும் காலங்களில், மெய்யான ஊகவாணிபம் தலையெடுப்பதற்கு முன்னதாக கடன்-செலாவணி எளிதில் கிடைக்கக் கூடியதாகவும் நம்பிக்கை வளரக் கூடியதாகவும் இருக்கும்போது - சுற்றோட்டப் பணிகளில் பெரும்பாலானவை வெறும் கடன்-செலாவணிக் கைமாற்றத்தின் மூலமே, நாணயப் பணத்தையோ காகிதப் பணத்தையோ துணைக்கு அழைக்காமலே நிறைவேற்றப்படுகின்றன.

சுற்றோட்ட ஊடகம் ஒப்பளவில் குறைவாய்க் கிடைக்கும்போது பெருந்தொகைகள் வைப்பிலிருக்கும்படியான சாத்தியப்பாடு என்பதே முழுக்க முழுக்க பின்வருவனவற்றையே பொறுத்ததாகும்:

*(1)* ஒரே காசைக் கொண்டு நடந்தேறும் வாங்கல்கள், கொடுப்புகளின் எண்ணிக்கை;

*(2)* அது வங்கிகளுக்கு வைப்பாகத் திரும்பி வரும் மீள்வரத்துகளின் எண்ணிக்கை - மீண்டும் வைப்பாக மாற்றமடைவதால்தான் அது திரும்பத் திரும்ப வாங்குஞ் சாதனமாகவும் கொடுப்புச் சாதனமாகவும் செயல்பட முடிகிறது. எடுத்துக்காட்டாக, சில்லரை வணிகர் ஒருவர் அவருடைய வங்கியாளரிடம் வாரந்தோறும் £100 பணம் போட்டு வைக்கிறார்; வங்கியாளர் ஆலையதிபரின் வைப்பில் ஒரு பகுதியை எடுத்துக் கொடுப்பதற்கு இந்தப் பணத்தைப் பயன்படுத்திக் கொள்கிறார்; ஆலையதிபர் அவருடையத் தொழிலாளர்களுக்கு அதைக் கொடுக்கிறார்; தொழிலாளர்கள் அதைக் கொண்டு போய் சில்லறை வணிகரிடம் கொடுக்கிறார்; வணிகர் மீண்டும் அதனை வங்கியில் வைப்பு வைக்கிறார். ஆக, இந்தச் சில்லறை வணிகரால் வைப்பு வைக்கப்பெற்ற £100 ஆனது முதலாவதாக ஆலையதிபருக்கு அவரது வைப்பை எடுத்துக் கொடுக்கவும், இரண்டாவதாகத் தொழிலாளர்களுக்கு பணம் செலுத்தவும், மூன்றாவதாக வணிகருக்கே பணம் செலுத்தவும், நான்காவதாக அதே சில்லறை வணிகரின் பண-மூலதனத்தில் இன்னொரு பகுதியை வைப்பு வைக்கவும் பயன் பட்டிருக்கிறது. ஆக, இருபது வார முடிவில், அவர் இந்தப் பணத்திலிருந்து அதுவரை எதுவும் எடுக்காமல் இருந்தால், அதே £100ஐக் கொண்டு வங்கியில் £2000 வைப்பு வைத்திருப்பார்.

*இந்தப் பண-மூலதனம் எந்த அளவுக்கு வேலையற்றுக் கிடக்கிறது என்பது வங்கிகளின் சேமநிதியில் ஏற்படும் ஏற்றவற்றத்தில் தான் வெளிப்படுகிறது. இதனால்தான் 1857இல் இங்கிலாந்து வங்கியின் ஆளுநராயிருந்த திருவாளர் வெகூலின் இங்கிலாந்து வங்கியிலிருக்கும் தங்கம்தான் 'ஒரே' சேம மூலதனம் ஆகும் என்ற முடிவுக்கு வருகிறார்; '1258. நடைமுறையில் கழிவு வீதமானது நாட்டிலுள்ள வேலையற்ற மூலதனத் தொகையால் ஆளப்படுவதாக நினைக்கிறேன். வேலையற்ற மூலதனத்தொகையானது இங்கிலாந்து வங்கியின் சேம இருப்பால் குறிக்கப் பெறுகிறது. இவ்விருப்பு நடைமுறையில் பொற்பாள இருப்பே ஆகும். ஆகவே பொற்பாளத்தை இருப்பிலிருந்து எடுக்கும்போது நாட்டிலுள்ள வேலையற்ற மூலதனத் தொகை குறைந்து போகிறது. எனவே எஞ்சியிருப்பதன் மதிப்பு உயர்ந்து போகிறது.' - (நியூமார்ச்) '1364. இங்கிலாந்து வங்கியிலிருக்கும் பொற்பாளச் சேம இருப்பானது உண்மையில் மையஇருப்பு அல்லது கருவூலச் சேர்ப்பு ஆகும்; இதன் அடிப்படையில்தான் நாட்டின் வர்த்தகம் முழுவதும் நடைபெறு கிறது..... எப்போதுமே அயற்செலாவணிகளின் செயற்பாடு அந்தச்சேர்ப்பு அல்லது சேமத் தேக்கத்தில்தான் விளைவேற்படுத்துகிறது.' (வங்கிச் சட்டங்கள் பற்றிய அறிக்கை, 1857 [பக்கம் 108, 119].)*

---

*உண்மை மூலதனம், அதாவது திறனுடைய மூலதனமும் சரக்கு-மூலதனமும் திரட்டப்பட்டிருப்பதற்கு ஓர் அளவுகோலாய் அமைவது ஏற்றுமதி இறக்குமதிப் புள்ளிவிவரம் ஆகும். ஆங்கிலேயத் தொழில் துறை பத்தாண்டுச் சகடங்களில் சுழன்று சென்ற (1815-70) காலத்தைப் பொறுத்தவரை, நெருக்கடிக்கு முந்தைய இறுதிச் செழுமைக் காலத்துக்கான அதிகபட்சம் அடுத்துவந்த செழுமை காலத்துக்கான அதிகபட்சம் அடுத்துவந்த செழுமை காலத்துக்கான குறைந்தபட்சமாக மீண்டு வருவதையும், பிறகு ஒரு புதிய இன்னும் மிக உயர்ந்த அதிகபட்சமாக வளர்ந்ததையும் இந்தப் புள்ளி விவரத்திலிருந்து தெளிவாகக் காணலாம்.*

*செழுமை நிறைந்த 1824ஆம் ஆண்டில் மகா பிரிட்டனிலிருந்தும் அயர்லாந்திலிருந்தும் ஏற்றுமதியான பண்டங்களின் உண்மை மதிப்பு அல்லது அறிவிக்கப்பட்ட மதிப்பு £40,396,300. பிறகு 1825ஆம் வருட நெருக்கடியை ஒட்டி ஏற்றுமதி அளவு இத்தொகையை விடக் குறைந்து போய் ஆண்டுக்கு 35 முதல் 39 மிலியனாக அலைவுற்றது. 1834இல் செழுமை மீண்டு விட்டதை ஒட்டி ஏற்றுமதியானது பழைய*

அதிகபட்சத்துக்கு மேல் உயர்ந்து சென்று £41,649,191ஐ எட்டியது. 1836இல் £53, 368, 571 எனும் புதிய அதிகபட்ச அளவைத் தொட்டது. 1837இல் திரும்பவும் சரிவுற்று £42 மிலியன் ஆயிற்று, அதாவது புதிய குறைந்தபட்சமானது முந்தைய சகடத்தின் அதிகபட்சத்துக்கும் கூடுதலாகவே இருந்தது, இதையடுத்து £50 மிலியனுக்கும் £53 மிலியனுக்கும் இடையே அலைவுற்றது. செழுமை மீண்டு விட்டதால் 1844இல் ஏற்றுமதி அளவு £58,500,000ஆக உயர்ந்தது; 1836ஆம் ஆண்டின் அதிகபட்ச அளவு இவ்விதம் வெகுவாய் விஞ்சப்பட்டுவிட்டது. 1845இல் அது £60,111,082ஐ எட்டியது; 1846இல் சரிவுற்று £57 மிலியனுக்கு சற்றே கூடுதல் ஆயிற்று. 1847இல் கிட்டத்தட்ட £59 மிலியன், 1848இல் கிட்டத்தட்ட £53 மிலியன், 1849இல் £63,500,000ஆக உயர்ந்தது. 1853இல் சுமார் £99 மிலியன் ஆயிற்று. 1854இல் £97 மிலியன், 1855இல் £94,500,000, 1856இல் கிட்டத்தட்ட £116 மிலியன், 1857இல் அதிகபட்ச அளவாக £122 மிலியனை எட்டியது. 1858ல் £116 மிலியனாகக் குறைந்தாலும், 1859இலேயே £130 மிலியனாகவும் 1860இல் சுமார் £136 மிலியனாகவும் உயர்ந்தது; 1861இல் £125 மிலியன் மட்டுமே (இங்கேயும் புதிய குறைந்தபட்சமானது முந்தைய சகடத்தின் அதிகபட்சத்துக்கும் கூடுதலாய் இருக்கக் காணலாம்); அது 1863இல் £146, 500,000ஆக உயர்ந்தது.

இறக்குமதிகள் தொடர்பாகவும் இதையே நிரூபித்துக்காட்டலாம் என்பதை கூறத் தேவையில்லை. இறக்குமதிகள் சந்தையின் விரிவாக்கத்தை புலப்படுத்துகிறவை ஆகும். இங்கு பொருளுற் பத்தியின் அளவுவீதம் மட்டுமே நம் கருத்துக்குரியது. (இங்கிலாந்து உள்ளபடியே தொழில்துறையில் ஏகபோகம் செலுத்திய காலத்திற்கு மட்டுமே இது பொருந்தும் என்பது மெய்தான். ஆனால் உலகச் சந்தை விரிவடைந்து கொண்டிருக்கும் வரை நவீனப் பெருவீதத் தொழில் துறையுடன் அமையப்பெற்றுள்ள நாடுகளின் ஒட்டுமொத்தத்துக்கும் இதுவே பொதுவாகப் பொருந்தும்.-பி. எங்கெல்ஸ்.)

## 2. மூலதனம் அல்லது வருவாயானது பணமாக மாற்றப்பட்டு கடன்-மூலதனமாதல்

வர்த்தகக் கடன்-செலாவணியின் ஓட்டத்தில் ஏற்படும் நிறுத்தத்தின் தெரிவிப்பாகவோ, ஒரு சிக்கனத்தின் தெரிவிப்பாகவோ, (உள்ளபடி யான சுற்றோட்ட ஊடகத்திலான சிக்கனம் ஆனாலும் சரி, மறுவுற்பத்தியில் ஈடுபட்டிருப்பவர்களின் சேம மூலதனத்திலான

சிக்கனம் ஆனாலும் சரி) இல்லாத வரை பண-மூலதனத்திரட்டலை இங்கு பரிசிலிப்போம்.

இவ்விரு நேர்வுகளை அன்னியில், அசாதாரண தங்க வரத்தினாலும் பண-மூலதனத்திரட்டல் நடைபெறலாம்.

ஆஸ்திரேலியாவிலும் கலிபோர்னியாவிலும் புதியத் தங்கச் சுரங்கங்கள் தோண்டப்பட்டதன் பயனாய் 1852இலும் 1853இலும் இப்படித்தான் நிகழ்ந்தது. இந்தத் தங்கம் இங்கிலாந்து வங்கியில் வைப்பு வைக்கப் பெற்றது. வைப்பாளர்கள் அதற்குப் பிரதியாகப் பெற்றுக் கொண்ட நோட்டுகளை அப்படியே வங்கியாளர்களிடம் வைப்பு வைக்கவில்லை. இதனால் சுற்றோட்ட ஊடகம் அசாதாரண அளவுக்கு அதிகரித்து விட்டது. (வெகூலின் வாக்குமூலம், வங்கிக் குழு, 1857, எண்:1329.) இங்கிலாந்து வங்கி அதன் கழிவு வீதத்தை 2%ஆகக் குறைத்து இந்த வைப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள முயன்றது. வங்கியில் திரட்டி வைக்கப்பட்ட தங்கத்தின் அளவு 1853ஆம் ஆண்டில் ஆறுமாதக் காலத்தில்£ 22-23 மிலியனாக உயர்ந்தது.

வட்டிக்குக் கடன் கொடுக்கும் முதலாளிகள் யாவரும் எப்போதுமே நேரடியாக பண வடிவில் மூலதனம் திரட்டுவது கண்கூடு; அதே போது வழக்கமாய் தொழில்துறை முதலாளிகளின் உண்மை மூலதனத் திரட்டலானது மறுவுற்பத்தித்திறனுள்ள மூலதனத்தின் கூறுகள் அதிகரிப்பதன் மூலமே நடந்தேறுவதாகக் கண்டோம். ஆகவே கடன்-செலாவணி அமைப்பு வளர்ச்சியடைந்து வட்டிக்கு விடும் தொழில் பென்னம்பெரிய வங்கிகளின் கையில் பெருமளவில் குவிக்கப் படும்போது இந்த வளர்ச்சியும் குவிப்புமே கடனுக்குரிய மூலதனத்தின் திரட்டலை உண்மை மூலதனத்திரட்டலிலிருந்து வேறாக உருப்பெறச் செய்து முடுக்கி விரைவுப்படுத்தும். கடன்-மூலதனத்தின் இந்தத் துரித வளர்ச்சி உண்மை மூலதனத்திரட்டலின் விளைவாகும்; ஏனென்றால் மறுவுற்பத்தி நிகழ்முறையின் வளர்ச்சியால் வருவதே இது; இந்தப் பண முதலாளிகளுக்கு திரட்டலின் ஆதாரமாய் அமைந்திடும் இலாபமானது மறுவுற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் முதலாளிகள் கறந்திடும் உபரி-மதிப்பிலிருந்து வருவதுதான் (அதேபோது பிறருடைய சேமிப்புகளி லிருந்து கிடைக்கும் வட்டியில் ஒரு பகுதியை தனதாக்கிக் கொள்வதும் ஆகும்). கடன்-மூலதனமானது தொழில்துறை முதலாளிகளின் செலவிலும் அதேபோல் வர்த்த முதலாளிகளின் செலவிலும் திரளுகிறது. தொழில்துறைச் சகடத்தின் மோசமான கட்டங்களில் வட்டி வீதம் மிக அதிகமாய் உயர்ந்து சில தொழிற்கிளைகளில், முக்கியமாய்

பாதக சூழலில் இயங்கும் கிளைகளில் அப்போதைக்கு முழு இலாபத்தையுமே விழுங்கி விடக் கூடுமென்று பார்த்தோம். அதே போது அரசுப் பத்திரங்களும் ஏனைய கடன் பத்திரங்களும் விலை குறைந்து போகின்றன. இந்த நேரத்தில்தான் பண முதலாளிகள் மதிப்பிறங்கிய இந்தப் பத்திரங்களை பெருமளவில் வாங்கிக் குவிக்கிறார்கள்; சீக்கிரமே அடுத்து வரும் கட்டங்களில் இவற்றின் விலை மீண்டும் உயர்ந்து இயல்புக்கு மேலேயும் போய் விடக் கூடுமென்றுதான் அவர்களுக்குத் தெரியுமே! வாங்கியதை விற்று அவர்கள் பொதுமக்களுடைய பண-மூலதனத்தில் ஒரு பகுதியை தமதாக்கிக் கொள்கிறார்கள். உரிய விலைக்கும் கீழே வாங்கப்பட்டதால் -கூடுதலாய் வட்டி தரக்கூடிய பத்திரங்களை மட்டும் அவர்கள் விற்காமல் வைத்துக் கொள்கிறார்கள். ஆனால் பண முதலாளிகள் தாங்கள் சம்பாதித்த இலாபத்தை திரும்பவும் மூலதனமாக மாற்றும்போது, முழுவதையும் முதலில் கடனுக்குரிய பண-மூலதனமாகவே மாற்றுகிறார்கள். ஆக, இந்தப் பண-மூலதனத்தின் திரட்டலானது-உண்மை மூலதனத்திரட்டலிலிருந்து கிளைப்பதே என்றாலும், அதிலிருந்து வேறானதாகிய இத்திரட்டலானது வங்கியாளர்கள் போன்ற பண-முதலாளிகளை மட்டும் கருத்தில் கொள்ளும் போதே கூட, இந்தக் குறிப்பிட்ட வகை முதலாளிகளின் திரட்டலாக நடைபெறக் காண்கிறோம். மறுவுற்பத்தி நிகழ்முறை உள்ளபடியே விரிவடைந்து செல்ல செல்ல, அதனுடன் சேர்ந்து கடன் - செலாவணி அமைப்பு விரிவடைந்து செல்லும் போதெல்லாம் இந்தப் பண - மூலதனத்திரட்டலும் வளர்ந்து சென்றே தீரும்.

வட்டி வீதம் குறைவாய் இருந்தால் பண-மூலதனத்தின் இந்த மதிப்பிறக்கம் முக்கியமாய் வைப்பாளர்களின் தலையில் விடியுமே தவிர வங்கிகளின் தலையில் அல்ல. கூட்டுப் பங்கு வங்கிகள் வளருவதற்கு முன்பெல்லாம், இங்கிலாந்தில் வங்கி வைப்புகள் அனைத்திலும் முக்கால் பங்கு வட்டியேதும் பெற்றுத் தராமல் சும்மா கிடந்தது. இப்போது அவை வட்டி பெற்றுத் தந்தாலும், நடப்பு வட்டி வீதத்தை விட எப்படியும் 1% குறைவாகவே பெற்றுத் தருகின்றன.

ஏனைய வகை முதலாளிகளின் பணத் திரட்டலைப் பொறுத்த வரை, வட்டி வருமானப் பத்திரங்களில் முதலீடாகி அவ்வடிவில் திரளும் பகுதியை இங்கு நாம் கண்டு கொள்ளாமல் ஒதுக்கி விடுகிறோம். கடனுக்குரிய பண-மூலதனமாக சந்தைக்கு வரும் பகுதியை மட்டுமே கண்டு கொள்வோம்.

இங்கு நாம் முதலாவதாக கவனிக்க வேண்டியது என்னவென்றால், இலாபத்தில் வருவாயாகச் செலவிடப்படாத பகுதி சம்பந்தப்பட்ட தொழில்துறை முதலாளிகளுக்கு அவர்களின் சொந்தத் தொழிலில் உடனடியாகப் பயன்பட முடியாததாய் இருக்கும் போது, அந்த இலாபப் பகுதி மூலதனத் திரட்டலுக்காக ஒதுக்கப்படுகிறது. இந்த இலாபமானது முதலில் சரக்கு - மூலதன வடிவில் அமைந்து, அம் மூலதனத்தின் மதிப்பில் ஒரு பகுதியாகி அதனுடன் கூடவே பணமாக ஈடேற்றம் பெறுகிறது. திரும்பவும் அது சரக்கு-மூலதனத்தின் உற்பத்தி அடிக்கூறுகளாக மாற்றப்படவில்லை என்றால் (இப்போதைக்கு வணிகரை கருதாமல் ஒதுக்கி விடுகிறோம், பிற்பாடு அவரைத் தனியே எடுத்துக் கொள்வோம்). குறிப்பிட்ட காலத்துக்கு அது பணவடிவிலேயே நீடித்தாக வேண்டும். இலாப அளவானது மூலதன அளவோடு சேர்ந்து அதிகரித்துக் செல்கிறது; இலாப வீதம் சரிந்து செல்லும் போதும் கூட இதே நிலைதான். வருவாயாகச் செலவிடப்பட வேண்டிய இலாபப் பகுதி சிறிது சிறிதாக நுகரப்படுகிறது; ஆனால் இடைப்பட்ட காலத்தில் வங்கியாளரிடம் வைப்பாக அமைந்து கடன் - மூலதனம் ஆகிறது. ஆக, வருவாயாகச் செலவிடப்படும் இலாபப் பகுதியில் வளர்ச்சி என்பதே கூட கடன் -மூலதனம் சிறிது சிறிதாகவும் ஓயாமல் திரும்பத் திரும்பவும் திரட்டப்படுகிற நிகழ்வாக வெளிப்படுகிறது. மூலதனத் திரட்டலுக்கென்று ஒதுக்கப்படும் மறுபகுதிக்கும் இதுவே பொருந்தும். கடன்-செலாவணி முறையும் அதன் ஒழுங்கமைப்பும் வளர்ச்சியடைந்த நிலையில், வருவாயில், அதாவது தொழில்துறை, வர்த்தகத்துறை முதலாளிகளின் நுகர்வில் ஏற்படும் அதிகரிப்பே கூட இவ்விதம் கடன்-மூலதனத் திரட்டலாக வெளிப்படுகிறது. வருவாய்கள் சிறிது சிறிதாகவே நுகரப் படுகிறவையாய் இருக்கும் வரை, அவை யாவற்றுக்கும்- அதாவது நில வாடகை, உயர்வகை சம்பளம், உற்பத்தியில் ஈடுபடாத வர்க்கங்களின் வருமானம் முதலானவற்றுக்கெல்லாம்-இதுவே பொருந்தும். இந்த வருவாய்களெல்லாம் குறிப்பிட்ட காலத்துக்கு பண -வருவாயாக வடிவெடுக்கின்றன, ஆகவே வைப்புகளாகவும், இவ்வாறு கடன்-மூலதனமாகவும் மாற்றத்தக்கவை ஆகின்றன. வருவாய் அனைத்தும் - நுகர்வுக்குரியதானாலும் சரி, மூலதனத் திரட்டலுக்குரியதானலும் சரி- ஏதேனுமொரு பண வடிவில் இருந்து வரும் வரை, பணமாக மாற்றப்படும் சரக்கு-மூலதனத்தின் மதிப்பில் ஒரு பகுதியாய் இருப்பதாகும். எனவே திறனுடைய மூலதனம் அல்லவென்றாலும் உண்மை மூலதனத்திரட்டலின் தெரிவிப்பும் விளைவும் ஆகும்.

நூற்பாளர் நூலைக் கொடுத்து பஞ்சைப் பெற்று விட்டார் என்றால், வருவாயாக அமைந்து பணத்துக்குப் பரிவர்த்தனையாகும் பகுதியைத் தவிர, அவரது தொழில்துறை மூலதனத்தின் மெய்யான நிலவல் வடிவம் நெசவாளரின் அல்லது ஒருவேளை தனிப்பட்ட நுகர்வாளரின் கைக்குச் சென்றுவிட்ட நூலே ஆகும். மேலும், இந்தநூல் மறுஉற்பத்திக்குப் பயன்பட்டாலும் சரி, நுகர்வுக்குப் பயன்பட்டாலும், சரி, அதிலடங்கிய மூலதன மதிப்பு, உபரி-மதிப்பு இரண்டுக்குமான நிலவல் வடிவமாகும். எவ்வளவு உபரி-மதிப்பு பணமாக மாற்றப் படுகிறது என்பது எவ்வளவு உபரி-மதிப்பு நூலில் அடங்கியுள்ளது என்பதைப் பொறுத்தது. ஆனால் உபரி-மதிப்பானது பணமாக மாற்றப்பட்டாகி விட்டதென்றால், இந்தப் பணம் அந்த உபரி -மதிப்புக்கான மதிப்பு வடிவமே தவிர வேறல்ல. இவ்வகையில் அது கடன்-மூலதன கூறுகளில் ஒன்றாகிறது, இதற்கென்று தேவைப் படுவதெல்லாம், அது (ஏற்கெனவே அதன் உடைமையாளரால் வட்டிக்கு விடப்படாதிருந்தால்) வைப்பாக மாற்றப்பட வேண்டும் என்பதுதான். மறுபுறம், அது திரும்பவும் திறனுடைய மூலதனமாக மாற்றப்பட வேண்டுமானால், குறிப்பிட்ட குறைந்தபட்ச வரம்பை வந்தடைந்த பிறகுதான் அவ்வாறு மாற்றப்பட முடியும்.

## அத்தியாயம் XXXII

## பண-மூலதனமும் உண்மை-மூலதனமும் (இறுதி)

இவ்வழியில் திரும்பவும் மூலதனமாக மாற்றப்பட வேண்டிய பணத்தொகை பெருந்தொகையாய் இருப்பது மறுவுற்பத்தி நிகழ்முறை பெருவீதத்தில் நடைபெறுவதன் விளைவாகும். ஆனால் இத்தொகையை அதுவாகவோ, கடனுக்குரிய பண-மூலதனமாகவோ நோக்குவோமானால், அது தன்னளவில் மறுவுற்பத்தித் திறனுள்ள மூலதனத் திரளன்று.

இதுவரையிலான நமது விளக்கத்தில் மிக முக்கியக் கூறு என்னவென்றால்: வருவாயில் நுகர்வுக்குரிய பகுதியின் பெருக்கமானது (இங்கே தொழிலாளியை கண்டு கொள்ள வேண்டாம், ஏனென்றால் அவரது வருவாய் மாறும்-மூலதனத்துக்குச் சமம்) முதலில் பண-மூலதனத் திரட்டலாகவே தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது. ஆகவே தொழில்துறை மூலதனத்தின் உண்மைத் திரட்டலிலிருந்து அடிப்படையிலேயே வேறானதாகிய ஒரு காரணி பண-மூலதனத்திரட்டலில் சேர்ந்து கொள்கிறது. எப்படி என்றால் வருடாந்தர உற்பத்தியில் நுகர்வுக்குரிய பகுதியானது எவ்விதத்தும் மூலதனம் ஆகாது. அதில் ஒரு பகுதியானது மூலதனத்தை, அதாவது நுகர்வுச் சாதன உற்பத்தியாளர்களின் மாறா-மூலதனத்தை மாற்றீடு செய்கிறது. ஆனால் அது உள்ளபடியே மூலதனமாக மாற்றப்படுவதாய் இருக்கும் வரை, இந்த மாறா-மூலதன உற்பத்தியாளர்களின் வருவாய்க்குரிய இயற்கை வடிவிலேயே இருந்து வருகிறது. வருவாயைக் குறிப்பதும், நுகர்வு நடைபெறுவதற்கு மட்டும் பயன்படுவதுமாகிய இதே பணம் அவ்வப்போது கடனுக்குரிய பண-மூலதனமாக குறிப்பிட்ட காலத்துக்கு மாற்றப்படுகிறது. இந்தப் பணம் கூலியைக் குறிப்பதாய் இருக்கும் வரை, அதே போது மாறும்-மூலதனத்தின் பண-வடிவமாகவும் இருக்கிறது. அது நுகர்வுச் சாதன உற்பத்தியாளர்களின் மாறா-மூலதனத்தை மாற்றீடு செய்வதாய் இருக்கும் வரை, அவர்களின் மாறா-மூலதனம் அப்போதைக்கு மேற்கொள்ளும் பணவடிவமாய் அமைந்து அப்படியே பண்ட வடிவில் மாற்றீடு செய்யப்பட வேண்டிய அவர்களின் மாறா-மூலதனக் கூறுகளை வாங்குவதற்குப்

பயன்படுகிறது. இவ்விரு வடிவங்களில் எந்த ஒன்றிலும் அது தன்னளவில் மூலதனத் திரட்டலை குறிப்பதன்று. மறுவுற்பத்தி நிகழ்முறையின் அளவுவீதம் வளர வளர இந்தப் பண அளவும் வளர்ந்து செல்கிறது என்றாலும் இது மூலதனத் திரட்டலாகாது. ஆனால் அப்போதைக்கு அது கடனுக்குரிய பணமாக, அதாவது பண-மூலதனமாகச் செயல்படுகிறது. ஆக, இவ்வகையில் எப்போதுமே பண -மூலதனத் திரட்டலானது உள்ளபடியே நிகழ்ந்து கொண்டிருப்பதை விடவும் கூடுதலான மூலதனத் திரட்டலை பிரதிபலிக்கத்தான் செய்யும். எப்படியென்றால், சொந்த நுகர்வின் பெருக்கம் பணத்தைக் கொண்டு நடைபெறுவதால் பண-மூலதனத் திரட்டலாக காட்சியளிக்கிறது; உண்மை-மூலதனத் திரட்டலுக்கான பண வடிவத்தை, அதாவது புதிய முதலீடுகளுக்கு தேவைப்படும் பணத்தை அது கிடைக்கச் செய்வதே காரணம்.

ஆக, கடனுக்குரிய பண-மூலதனத் திரட்டல் சற்றே வெளிப்படுத்தும் உண்மை இதுதான்: தொழில்துறை மூலதனம் அதன் சுற்றில் சுழன்று வரும்போது மேற்கொள்ளும் வடிவம் மறுவுற்பத்தித் திறனுள்ள முதலாளிகளால் கடன்வாங்கப்படும் பணத்தின் வடிவமே தவிர, அவர்களால் முன்னீடு செய்யப்படும் பணத்தின் வடிவமல்ல. மறுவுற்பத்தி நிகழ்முறையில் அவசியமாகிற பண முன்னீடு கடன் வாங்கிய பணத்தின் முன்னீடாகவோ காட்சியளிக்கிறது. உண்மையில், வர்த்தகக் கடன்-செலாவணியை அடிப்படையாகக் கொள்ளும் போது, மறுவுற்பத்தி நிகழ்முறைக்குத் தேவைப்படும் பணத்தையே ஒருவர் இன்னொருவருக்கு கடனாய்த் தருகிறார். ஆனால் இது இப்போது எப்படி வடிவம் கொள்கிறது என்றால்: மறுவுற்பத்தித் திறனுள்ள முதலாளிகளின் ஒரு குழுவிடமிருந்து கடனாய்ப் பணம் பெறும் வங்கியாளர் அப்பணத்தை இன்னொரு குழுவிற்கு கடன் கொடுக்கிறார்; இதனால் வங்கியாளர் வள்ளலாகக் காட்சி தருகிறார். அதே போது இம்மூலதனத்தின் மீதான கட்டுப்பாடு இடையாளர் என்ற முறையில் வங்கியாளரிடமே முழுக்கப் போய்ச் சேருகிறது.

பண-மூலதனத் திரட்டலின் தனி வடிவங்கள் சிலவற்றை இனிமேல்தான் குறிப்பிட வேண்டியுள்ளது. எடுத்துக்காட்டாக கச்சாப் பொருட்கள் போன்ற உற்பத்தி-அடிக்கூறுகளின் விலை குறைந்து போய் அதனால் மூலதனம் விடுவிக்கப்படலாம். தொழில்துறை முதலாளி உடனடியாக அவரது மறுவுற்பத்தி நிகழ்முறையை விரிவாக்க முடியாவிட்டால் அவரது பண-மூலதனத்தில் ஒரு பகுதி தேவையற்றதாகி சுற்றிலிருந்து வெளியே தள்ளப்பட்டு கடனுக்குரிய

பண-மூலதனமாக மாற்றப்படுகிறது. இரண்டாவதாக, குறிப்பாய் வணிகரை எடுத்துக் கொண்டால் அவரது வர்த்தகத்தில் தடங்கலேதும் நேரிடும் போதெல்லாம் பண வடிவிலான மூலதனம் விடுவிக்கப் படுகிறது. வணிகர் தொடர்ந்து சில கொடுக்கல் வாங்கல்களை முடித்து விட்டார், இந்தத் தடங்கல் காரணமாய் அவரால் உடனே புதிய கொடுக்கல் வாங்கல்களைத் தொடங்க முடியாது என்றால், ஈடேற்றமாகிற பணம் அவரைப் பொறுத்த வரை ஒரு சேர்ப்பைத்தான், உபரி-மூலதனத்தைத் தான் குறிப்பதாகும். ஆனால் அதே போது இது கடனுக்குரிய பண-மூலதனத்தின் நேரடித்திரட்டலையும் குறிப்பதாகும். முதல் நேர்வில் பண-மூலதனத்திரட்டலானது மறுவுற்பத்தி நிகழ்முறை இன்னும் சாதகமான நிலைமைகளில் திரும்ப நடைபெறுவதை, ஏற்கெனவே முடக்கப்பட்டிருந்த மூலதனத்தில் ஒரு பகுதி மெய்யாகவே விடுவிக்கப்படுவதை தெரிவிக்கிறது. அதாவது அதே பணத் தொகையை வைத்து மறுவுற்பத்தி நிகழ்முறையை விரிவாக்கும் வாய்ப்பைத் தெரிவிக்கிறது. ஆனால் இரண்டாம் நேர்வில், இத்திரட்டலானது கொடுக்கல்வாங்கல்களின் ஓட்டத்தில் தடங்கல் ஏற்படுவதைத்தான் தெரிவிக்கிறது. எப்படியான போதிலும் இரு நேர்வுகளிலுமே பணம் கடனுக்குரிய பண-மூலதனமாக மாற்றப்பட்டு அம்மூலதனத்தின் திரட்டலைக் குறிக்கிறது; மேலும் பணச் சந்தையின் மீதும் வட்டி வீதத்தின் மீதும் ஒரே விளைவைத்தான் ஏற்படுத்துகிறது. முதல் நேர்வில் உண்மை மூலதனத் திரட்டல் நிகழ்முறை ஊக்கம் பெறுகிறது, இரண்டாம் நேர்வில் அந்நிகழ்முறை தடைபடுகிறது என்றாலும் நிலைமை இதுவே. முடிவில், வேண்டிய அளவுக்குத் தம்மை வளப்படுத்திக் கொண்டு மறுவுற்பத்தியிலிருந்து விலகிச் சென்று விட்ட பலரும் பண-மூலதனம் திரட்டுகின்றனர். தொழில்துறைச் சகடத்தின் சுழற்சி போக்கில் இலாபம் ஈட்டுவது அதிகரிக்க அதிகரிக்க இவர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கிறது. இங்கே கடனுக்குரிய பண-மூலதனத்திரட்டலானது ஒருபுறம் (ஒப்பீட்டு அளவைப் பொறுத்து) உண்மை மூலதனத் திரட்டலை தெரிவிப்பதாகும்; மறுபுறம், தொழில்துறை முதலாளிகள் எந்த அளவுக்கு வெறும் பண- முதலாளிகளாக மாறி போகிறார்கள் என்பதை மட்டும் தெரிவிப்பதாகும்.

இலாபத்தின் மறுபகுதியைப் பொறுத்த வரை, அதாவது வருவாயாக நுகரப்படுவதற்கில்லாத பகுதியைப் பொறுத்த வரை, அந்த இலாபத்தைப் பெற்றுக் கொடுத்த உற்பத்தித் துறையில் தொழிலை விரிவாக்குவதற்கு உடனே பயன்படுத்தப்பட முடியாது என்றால்தான்

அது பண-மூலதனமாக மாற்றப்படுகிறது. இரு காரணங்களால் இப்படி நிகழலாம். இந்த உற்பத்தித் துறையில் மூலதனம் நிறைந்து தெவிட்டு நிலை அடைவது ஒரு காரணம். இந்தக் குறிப்பிட்ட துறையில் தேவைப்படும் புதிய மூலதனத்தின் முதலீட்டுப் பருமனளவுகளைப் பொறுத்து மூலதனத்திரட்டல் குறிப்பிட்ட பரிமாணத்தை அடைந்த பிறகுதான் அது மூலதனமாகப் பயன்பட முடியும் என்பது இன்னொரு காரணம். இந்த இலாபப் பகுதி முதலில் கடனுக்குரிய பண-மூலதனமாக மாற்றப்பட்டு, ஏனைய துறைகளில் உற்பத்தியை விரிவாக்குவதற்கு பயன்படுகிறது. மற்றெல்லா நிலைமைகளும் மாறாதிருப்பதாகக் கொண்டால், எவ்வளவு இலாபம் திரும்பவும் மூலதனமாக மாற்றப்பட வேண்டும் என்பது எவ்வளவு இலாபம் கிடைத்தது என்பதையும், இவ்விதம் மறுவுற்பத்தி நிகழ்முறையில் விரிவாக்கத்தையுமே பொறுத்ததாய் இருக்கும். ஆனால் போதிய முதலீட்டுத் துறைகள் இல்லாமற் போவதால், அதாவது உற்பத்திக் கிளைகளில் மூலதனம் முழுமையாக நிறைந்து கடன்-மூலதனம் மிகையாக வழங்கப்படுவதால், இந்தப் புதிய மூலதனத் திரட்டல் பயன்படுத்திக் கொள்ளப்படுவதில் இடர்பாடுகள் எழுமானால், கடனுக்குரிய பண-மூலதனத்தின் இந்த மிகைப்பாடு முதலாளித்துவப் பொருளுற்பத்திக்குள்ள தடைவரம்புகளையே எடுத்துக் காட்டுகிறது. இதையடுத்து நடைபெறும் கடன்-செலாவணி மோசடியானது இந்த உபரி-மூலதனத்தை பயன்படுத்துவதற்கு உண்மையில் எவ்விதத் தடையும் இல்லை என்பதை நிரூபிக்கிறது. ஆனால் இம் மூலதனத்திற்குரிய தற்பெருக்க விதிகளின் உருவில், அதாவது மூலதனம் மூலதனமாக ஈடேற்றம் பெறுவதற்குள்ள வரம்புகளின் உருவில் ஒரு தடை இருக்கத்தான் செய்கிறது. பண-மூலதன மிகைப்பாடு என்றாலே, மிகையுற்பத்தியை குறித்தாக வேண்டுமென்ற அவசியமில்லை. மூலதன முதலீட்டுக்கான துறைகள் பற்றாக்குறையாய் இருப்பதை குறித்தாக வேண்டும் என்பதும் கூட இல்லை.

கடன் மூலதனத் திரட்டல் என்பதன் பொருள் பணம் வீழ்படிவாகிக் கடனுக்குரிய பணம் ஆவதே. இந்நிகழ்முறை உள்ளபடியே மூலதனமாக மாற்றப்படும் நிகழ்முறையிலிருந்து அறவே வேறானதாகும்; இங்கு பணமானது மூலதனமாக மாற்றப்படக் கூடிய வடிவத்தில் திரட்டப்படுகிறது அவ்வளவுதான். ஆனால் முன்பே நாம் தெளிவாக்கியது போல, இந்தத் திரட்டல் உண்மை மூலதனத் திரட்டலிலிருந்து அறவே வேறான கூறுகளை வெளிப்படுத்தக் கூடும். இந்த விரிவடைந்த பண-மூலதனத் திரட்டலானது ஓயாமல்

விரிவடைந்து கொண்டிருக்கும் உண்மை-மூலதனத் திரட்டலின் விளைவாக ஓரளவுக்கும், அதனுடன் சேர்ந்து வரினும் அதிலிருந்து அறவே வேறான விலைமைகளின் விளைவாக ஓரளவுக்கும், முடிவில் அந்த உண்மை-மூலதனத்திரட்டலுக்குள்ள தடையூறுகளின் விளைவாகவும் கூட ஓரளவுக்கும் அமையலாம். உண்மை-மூலதனத் திரட்டலுடன் சேர்ந்து வரினும் அதைச் சாராமல் சுயேச்சையாய் இருக்கும் இவ்வகைக் காரணிகளால் கடன்-மூலதனத் திரட்டல் வளர்ந்து பெருகுவது ஒன்றே தொழில்துறைச் சகடத்தின் குறிப்பிட்ட கட்டங்களில் பண-மூலதனத்தின் தொடர்ச்சியான மிகைப்பாட்டுக்கு இட்டுச் செல்வது உறுதி; இந்த மிகைப்பாடு கடன்-செலாவணியின் பெருக்கத்தோடு சேர்ந்து வளருவதும் உறுதி. அதே போது பொருளுற்பத்தி நிகழ்முறையை அதன் முதலாளித்துவ தடைவரம்புகளான மிகை-வர்த்தகத்தையும் மிகை உற்பத்தியையும் மிகைக்கடன் செலாவணியையும் தாண்டிக் கொண்டு செல்ல வேண்டிய தேவையும் வளர்ந்தே திரும். இது நடைபெறுவதற்கான வடிவங்கள் எப்போதும் ஓர் எதிர்வினையை தோற்றுவித்தாக வேண்டும்.

நில-வாடகை, கூலி முதலானவற்றிலிருந்து பண-மூலதனம் திரட்டப்படுவது குறித்து இங்கு விவரிக்கத் தேவையில்லை. ஆனால் ஒன்றைமட்டும் வலியுறுத்திச் சொல்லியாக வேண்டும்: அதாவது உண்மையிலேயே சேமிப்பதும் (பணம் சேர்ப்பவர்கள்) இன்ப நுகர்ச்சியைத் தவிர்ப்பதும் மூலதனத் திரட்டலுக்கான கூறுகளை வழங்குவதாய் உள்ளவரை, இந்தக் காரியம் முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் முன்னேற்றத்தையொட்டி வளரும் உழைப்புப் பிரிவினையால் யாரிடம் விடப்படுகிறது என்று பார்த்தால், குறைந்த பட்ச அளவுக்கே இந்தக் கூறுகளை பெறுகிறவர்களும் அடிக்கடித் தமது சேமிப்புகளை இழந்தே விடுகிறவர்களும்தான் அவர்கள்-வங்கிகள் நொடித்துப் போகும்போது சேமிப்புகளை இழந்து தவிக்கும் தொழிலாளர்களை உதாரணமாய்க் குறிப்பிடலாம். ஒருபுறம், தொழில்துறை முதலாளி தாமே தமது மூலதனத்தை 'சேமித்துக் கொள்வது' கிடையாது; ஆனால் தமது மூலதனத்தின் அளவுக்கேற்ப மற்றவர்களின் சேமிப்புகளை பயன்படுத்திக் கொள்கிறார். மறுபுறம் பண-முதலாளியோ மற்றவர்களின் சேமிப்புகளை தமது மூலதனம் ஆக்கிக் கொள்கிறார். மறுவுற்பத்தியில் ஈடுபட்டுள்ள முதலாளிகள் ஒருவருக்கொருவர் அளித்துக் கொள்வதும் அவர்களுக்கு பொதுமக்கள் அளிப்பதுமான கடன்-செலாவணியை தனிப்பட்ட முறையில் செல்வம் சேர்ப்பதற்கான ஆதாரம் ஆக்கிக் கொள்கிறார். முதலாளித்துவ

அமைப்பின் கடைசி மாயை, அதாவது ஒருவரின் சொந்த உழைப்பிலிருந்தும் சேமிப்பிலிருந்தும் விளைவதே மூலதனம் ஆகும் என்ற மாயை இவ்விதம் உடைத்து நொறுக்கப்படுகிறது. இலாபம் என்பது மற்றவர்களின் உழைப்பைத் தனதாக்குவதில் அடங்கி யிருக்கிறது; அதுமட்டுமன்று, மற்றவர்களின் இந்த உழைப்பை இயங்க வைத்து சுரண்டுவதற்குப் பயன்படும் மூலதனமும் மற்றவர்களின் உடைமையால் ஆனதே. இந்த உடைமையை பண-முதலாளிதான் தொழில்துறை முதலாளியின்வசம் ஒப்படைத்து அவர்களைச் சுரண்டுகிறார்.

கடன்-செலாவணி மூலதனம் குறித்து இன்னும் சிலவற்றை சொல்லியாக வேண்டும்.

ஒரே பணக் கூறு எத்தனை முறை கடன்-மூலதனமாகப் பயன்பட முடியும் என்பது ஏற்கெனவே தெளிவாக்கியது போல, முழுக்க முழுக்க எதைப் பொறுத்ததென்றால்:

*1)* எத்தனை முறை அது விற்பனையில் அல்லது கொடுப்பில் சரக்கு-மதிப்புகளை ஈடேற்றம் செய்கிறது, அதாவது மூலதனத்தை கைமாறச் செய்கிறது என்பதையும், மேலும் எத்தனை முறை அது வருவாயை ஈடேற்றம் பெறச் செய்கிறது என்பதையும் பொறுத்தது. மூலதனத்தின் மதிப்பானாலும் சரி, வருவாயின் மதிப்பானாலும் சரி, ஈடேற்றம் பெற்ற மதிப்பாக எத்தனை முறை அது வேறொருவரின் கைக்குச் செல்கிறது என்பதைப் பொறுத்தது. ஆக, உண்மைக் கொடுக்கல்-வாங்கல்களின் அளவு வீதத்தையும் பரிமாணத்தையுமே பொறுத்தது;

*2)* கொடுப்புகளின் சிக்கனத்தையும், கடன்-செலாவணி முறையின் வளர்ச்சியையும் அதன் ஒழுங்கமைப்பையும் பொறுத்தது;

*3)* முடிவில், கடன்-செலாவணிகளின் கோவையையும் செயல் வேகத்தையும் பொறுத்தது; அதாவது ஒருமுனையில் வைப்பாகிற பணம் உடனடியாகவே வேறொரு முனையில் கடனாகப் புறப்பட்டுச் செல்வதைப் பொறுத்தது.

கடன்-மூலதனத்தின் நிலவல் வடிவம் உண்மைப் பணத்தின் வடிவமாகிய தங்கம் அல்லது வெள்ளியாக மட்டும்-மதிப்பளவையாகப் பயன்படும் பிண்டப் பொருள் கொண்ட சரக்காக மட்டும்-இருப்பதாக வைத்துக் கொண்டாலும் கூட, அப்போதும் இந்தப் பண-மூலதனத்தின் கணிசப் பகுதி பெயரளவுக்கானதாகவே,

அதாவது மதிப்புக்கான ஓர் உரிமையாகவே-காகிதப் பணத்தைப் போலவேதான்-இருந்தாக வேண்டும். பணமானது மூலதனச் சுற்றில் பயன்படுகிற அளவில் நிச்சயமாய் ஒரு கட்டத்தில் பண-மூலதனம் ஆகவே செய்கிறது. ஆனால் கடனுக்குரிய பண-மூலதனமாக மாறி விடுவதில்லை; மாறாக, திறனுடைய மூலதனக் கூறுகளுக்கு பரிவர்த்தனை செய்யப்படுகிறது, அல்லது வருவாய் ஈடேற்றமாகும் போது சுற்றோட்ட ஊடகமாக தரப்பட்டு விடுகிறது. ஆகவே உடைமையாளருக்கான கடன்-மூலதனமாக மாற முடியாது. ஆனால் பணமானது கடன்-மூலதனமாக மாற்றப்பட்டு அதே பணம் திரும்பத் திரும்ப கடன்-மூலதனத்தை குறிப்பதாய் இருக்கிற அளவில், ஒரு முனையில் மட்டுமே உலோகப் பண வடிவில் நிலவுவது தெளிவாய்த் தெரிகிறது; ஏனைய எல்லா முனைகளிலும் அது மூலதனத்திற்கான உரிமைத் தகுதிகளின் வடிவில்தான் நிலவுகிறது. நமது அனுமானங்களின்படி பார்க்குமிடத்து, இந்த உரிமைத் தகுதிகளின் திரட்டல் உண்மை மூலதனத்திரட்டலிலிருந்தும், அதாவது சரக்கு - மூலதனம் போன்றவற்றின் மதிப்பு பணமாக மாற்றப்படுவதிலிருந்து விளைவதாகும்; என்றாலும் இந்த உரிமைத் தகுதிகள் அல்லது உரிமைகளின் திரட்டலாவது அதற்கு ஆதாரமாகிற உண்மை மூலதனத் திரட்டலிலிருந்தும், இந்தப் பணம் கடனாய்த் தரப்படுவதால் ஊக்கம் பெறுகிற புதிய உற்பத்தி நிகழ்முறையாகிய வருங்கால மூலதனத் திரட்டலிலிருந்தும் வேறுபடுகிறது.

எடுத்த எடுப்பில் கடன்-மூலதனம் எப்போதும் பண வடிவமே பெற்றுள்ளது; [9]. பிற்பாடு அது பணத்துக்கான உரிமைத் தகுதியாக

---

(9) வ.ச.1857. வங்கியாளர் டுவெல்ஸ் அளித்த சாட்சியம்: 4516. வங்கியாளர் என்ற முறையில் நீங்கள் தொழில் புரிவது மூலதனத்திலா அல்லது பணத்திலா?—பணத்தில் தொழில் புரிகிறோம்.' - 4517. வைப்புகள் தங்களது வங்கியில் எப்படிச் செலுத்தப்படுகின்றன? - பணமாகச் செலுத்தப்படுகின்றன.'—'4518. எப்படித் திருப்பித் தரப்படுகின்றன?—பணமாகவே.'—'4519. அப்படியானால் அவற்றை பணம் என்று சொல்லாமல் வேறு ஏதாவது பெயரிட்டு அழைக்க முடியுமா?—முடியாது.'

ஓவர்ஸ்டோர்ன் (பார்க்கவும் அத்தியாயம் XXVI) 'மூலதனம்' என்பதையும் 'பணம்' என்பதையும் ஓயாமல் குழப்பிக் கொள்கிறார். 'பணத்தின் மதிப்பு' என்பது பண அளவால் நிர்ணயிக்கப்படுகிற அளவில் அவருக்கு வட்டியையும் குறிப்பதாகும். 'மூலதனத்தின் மதிப்பு' என்பது திறனுடைய-மூலதனத்திற்கான வேண்டலாலும் அம்மூலதனத்திலிருந்து கிடைக்கும் இலாபத்தாலும் நிர்ணயிக்கப்படுகிற அளவில் அதுவே வட்டியென்று கொள்ளப்படுகிறது. அவர் சொல்கிறார்: '4140. 'மூலதனம்' என்ற சொல்லைப் பயன்படுத்துவது மிகவும் ஆபத்தானது.'—'4148. இந்த நாட்டிலிருந்து பொன் - வெள்ளிப் பாளம் ஏற்றுமதி செய்யப்படுவதால் நாட்டிலுள்ள பண அளவு குறைந்து போகிறது; நாட்டிலுள்ள பண அளவு குறைந்து போவதால், பொதுவாக பணச் சந்தை மீது நெருக்குதல் ஏற்படவே செய்யும்' (ஆனால் மூலதனச் சந்தையில் ஏற்படாதாம்).—'4112. பணம் நாட்டை விட்டு வெளியே போவதால், நாட்டிலுள்ள பணத்தின் அளவு குறைந்து போகிறது. நாட்டில் எஞ்சியிருக்கும் பணத்தின் அளவு குறைவதால் அந்த பணத்தின் மதிப்பு கூடிப்போகிறது'. (அவரது தத்துவப்படி ஆரம்பத்தில் இதன்

*வடிவம் கொள்கிறது; ஏனென்றால் அதன் ஆரம்பவடிவமாய் இருந்த பணம் கடன் வாங்கியவரின் கையில் இப்போது உண்மைப் பணவடிவம் பெற்றுள்ளது. கடன்கொடுத்தவரைப் பொறுத்த வரை, அது பணத்துக்கான உரிமைத்தகுதியாக, உடைமையுரிமையாக உருமாறியுள்ளது. ஆக, ஒரே உண்மைப் பணத்திரள் பல்வேறு பண-மூலதனத்திரள்களை குறிப்பதாய் இருக்க முடியும். வெற்றுப் பணம்-அதனால் குறிக்கப்படுவது ஈடேற்றம் பெற்ற மூலதனம் ஆனாலும் சரி, ஈடேற்றம் பெற்ற வருவாய் ஆனாலும் சரி - எப்படிக் கடன்-மூலதனம் ஆகிறது? கடனாய்த் தரப்படும் செயலைக் கொண்டே, (வளர்ச்சி பெற்ற கடன்-செலாவணி அமைப்பில் பொது வடிவமாய் இருப்பதை கருத்தில் கொண்டால்) வைப்பாக மாற்றப்படும் செயலைக் கொண்டே அது கடன் -மூலதனம் ஆகிறது. வைப்பானது வைப்பாளருக்கு பண-மூலதனம் ஆகும். ஆனால் வங்கியாளரின் கையில் அது உள்ளியல் பண-மூலதனமாக மட்டுமே இருக்கக் கூடும். அப்போது அது உடைமையாளரின் காப்பறைக்கு பதில் வங்கியாளரின் பெட்டியில் வேலையற்றுக் கிடக்கிறது.[10].*

---

பொருள் என்னவென்றால் சரக்கு-மதிப்புகளுடன் ஒப்பிடுமிடத்து பணப்புழக்கம் சுருங்கிப் போவதன் மூலம் பணத்தின் மதிப்பு அதிகரிக்கிறது என்பதே; அதாவது பணத்தின் மதிப்பு அதிகரிப்பதும் சரக்குகளின் மதிப்பு குறைவதும் ஒன்றுதான். ஆளால் இடைப்பட்ட காலத்தில் அவரே கூட பணப், புழக்கத்தின் அளவு விலைகளை நிர்ணயிப்பது கிடையாது என்று உறுதியாக ஏற்றுக் கொண்டுவிட்டதால், இப்போது சுற்றோட்ட ஊடகமாய் இருக்கும் பணம் குறைந்து போவதுதான் வட்டி-மூலதனம் என்ற முறையிலான அதன் மதிப்பையும் இவ்விதம் வட்டி வீதத்தையும் உயர்த்துவதாய் கொள்ளப்படுகிறது) 'எஞ்சியிருப்பதன் இந்தக் கூடுதல் மதிப்புதான் பண வெளியேற்றத்தை தடுத்து நிறுத்துகிறது. மீண்டும் சமநிலை ஏற்படச் செய்வதற்கு அவசியமான பண அளவை கொண்டுவந்து சேர்க்கும் வரை அதன் மதிப்புக் குறையாமல் பார்த்துக் கொள்ளப்படுகிறது. '-ஒவர்ஸ்டோனின் முரண்பாடுகள் குறித்து பிற்பாடு மேலும் பார்ப்போம்.

(10) இவ்விடத்தில்தான் குழப்பம் ஆரம்பமாகிறது: இவை இரண்டுமே - அதாவது வங்கியாளரிடமிருந்து பணம் பெறுவதற்கான உரிமைத் தகுதியாகிய வைப்பும் வங்கியாளரின் கையிலிருக்கும் வைப்புப் பணமும் - 'பணம்' என்று கொள்ளப்படுகிறது. 1857ஆம் வருட வங்கிக் குழுவின் முன்னால் வங்கியாளர் டுவெல்ஸ் பின்வரும் எடுத்துக்காட்டைத் தருகிறார்: £10,000 கொண்டு தொழில் தொடங்குகிறேன் என்றால்,£5,000க்கு சரக்குகள் வாங்கி பண்டக சாலையில் வைக்கிறேன். எஞ்சியுள்ள £5,000த்தை தேவைக்கேற்ப எடுத்துப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று ஒரு வங்கியாளரிடம் போட்டு வைக்கிறேன். £5,000 வைப்புகள் அல்லது பணத்தின் உருவில் இருந்தாலும் கூட எனக்கு £10,000மூலதனமாய் இருப்பதாகவே கருதிக்கொள்கிறேன்' (4528). —இதிலிருந்து பின்வரும் வேடிக்கையான வாதப் பிரதிவாதம் எழுகிறது. —'4531. நீங்கள் உங்களுடைய £5,000 மதிப்புள்ள நோட்டுகளை வேறு யாருக்கோ கொடுத்து விட்டீர்கள்? —ஆம். '—' 4532. அப்படியானால் அவரிடம் £5,000 வைப்புள்ளது? - ஆம்.' —'4533. உங்களிடம் £5,000 வைப்பு எஞ்சியுள்ளது?— அப்படித்தான். '—' 4534. அவரிடம் £5,000 பணம் இருக்கிறது, உங்களிடம் £5,000 பணம் இருக்கிறது? -—ஆம். '—'4535. ஆளால் முடிவில் அது பணமே தவிர வேறல்ல? — அல்ல. 'இந்தக் குழப்பத்துக்கு ஓரளவு காரணமாய் இருப்பது £5,000 வைப்பில் போட்டு வைத்துள்ள A ஆனவர் அத்தொகையை ஏதோ கையில் வைத்திருப்பதைப் போல் அதிலிருந்து எடுத்து பயன்படுத்திக் கொள்ள முடிகிறது என்பதே -

பொருட்செல்வம் வளர வளர பண-முதலாளி வர்க்கமும் வளருகிறது. ஒருபுறம் ஓய்வு பெற்ற முதலாளிகளின், வருட வருமானக்காரர்களின் எண்ணிக்கையும் செல்வவளமும் கூடுகின்றன; மறுபுறம், கடன்-செலாவணி அமைப்பு மேலும் வளர்ச்சி பெறுகிறது, இதனால் வங்கியாளர்கள், வட்டிக்காரர்கள், நிதியாளர்கள் போன்றோரின் எண்ணிக்கை கூடுகிறது. தயாராய் இருக்கும் பண-மூலதனம் பெருகப் பெருக, வட்டி-வருமானப் பத்திரங்கள், அரசுக் கடன்-பத்திரங்கள், மூலதனப் பங்குகள் போன்றவற்றின் அளவும் அதிகரிக்கிறது-இதை முன்பே தெளிவாக்கி விட்டோம். தயாராய் இருக்கும் பண-மூலதனத்திற்கான வேண்டலும் அதே போது அதிகரிக்கிறது. ஏனென்றால் இவ்வகை பத்திரங்களில் ஊக - வாணிபம் செய்யும் தரகர்கள் பணச் சந்தையில் முக்கியப் பங்கு வகிக்கிறார்கள். இவ்வகைப் பத்திரங்களை வாங்குவதும் விற்பதுமான காரியங்க ளெல்லாம் உள்ளபடியான மூலதன முதலீடுகளின் தெரிவிப்பாக மட்டுமே இருக்குமானால், அவை கடன்-மூலதனத்திற்கான வேண்டலில் விளைவேதும் ஏற்படுத்த முடியாது என்று சொல்வது சரியாயிருக்கும். ஏனென்றால் A தமது பத்திரத்தை விற்கும்போது அடைகிற அதே அளவு பணத்தையே B பத்திரத்துக்காகச் செலவிடுகிறார். பத்திரத்தால் ஆரம்பத்தில் குறிக்கப் பெற்ற மூலதனம் இல்லாமற் போய்விட்டாலும் (எப்படியும் பண-மூலதனமாக இல்லாமற் போய்விட்டாலும்), பத்திரம் இருந்து வருமானால் அப்போதும் கூட அந்த அளவுக்கு இவ்வகைப் பண-மூலதனத்திற்கான புதிய வேண்டல் எழுகிறது. ஆனால் அந்நிலையில் இந்தப் பண-

அந்த அளவில் அது அவருக்கு உள்ளூறைப் பணமாகப் பயன்படுகிறது. ஆனால், அவர் எந்த அளவுக்கு தமது வைப்பிலிருந்து பணம் எடுக்கிறாரோ அந்த அளவுக்கு அந்த வைப்பை அழித்து விடுகிறார். அவர் வங்கியிலிருந்து உண்மைப் பணத்தை எடுக்கிறார், அவரது சொந்தப் பணம் ஏற்கெனவே வேறு யாருக்கோ கடனாய்த் தரப்பட்டு விட்டது என்றால், அவருக்குத் தரப்படுவது அவரது சொந்தப் பணமல்ல, வேறு யாரோ ஒரு வைப்பாளரின் பணமே ஆகும். அவர் தம் வங்கியாளரின் பெயரிலான ஒரு காசோலையைக் கொண்டு Bக்கு கடன் அடைக்கிறார். B இந்த காசோலையைத் தம் வங்கியாளரிடம் வைப்பு வைக்கிறார். Aஇன் வங்கியாளரிடமும் Bஇன் வங்கியாளர் பேரிலான ஒரு காசோலை இருக்கிறது என்றால், இரு வங்கியாளர்களும் காசோலைகளை மாற்றிக் கொள்வதோடு சரி; இந்நிலையில் Aஇன் வைப்புப் பணம் இருமுறை பணப் பணியாற்றியுள்ளது; முதலாவதாக, Aவைப்பு வைத்த பணத்தை வரப் பெற்றவரின் கையிலும் இரண்டாவது Aஇன் கையிலுமே அது பணப் பணியாற்றியுள்ளது. இரண்டாவது பணியில் பணம் குறுக்கிடாமலேயே உரிமைத் தகுதிகள் (A தம் வங்கியாளர் மீது கொண்டுள்ள உரிமைத் தகுதியும் அவ்வங்கியாளர் Bஇன் வங்கியாளர் மீது கொண்டுள்ள உரிமைத்தகுதியும்) நேர் செய்யப்படுகின்றன. வைப்பானது இங்கே இருமுறைப் பணமாகச் செயல்படுகிறது. அதாவது முதலில் உண்மைப் பணமாகவும் பிறகு பணத்தின் மீதான உரிமைத் தகுதியாகவும் செயல்படுகிறது. பணத்திற்கான வெறும் உரிமைத் தகுதிகள் பணத்தின் இடத்துக்கு வருவது உரிமைத்தகுதிகள் நேர் செய்யப்படுவதன் மூலமே சாத்தியமாகும்.

மூலதனம் முன்பு Bஇன் வசம் இருந்து இப்போது Aஇன் வசம் இருப்பதாகும்.

வங்கிச் சட்டம் 1857. எண் 4886. 'உண்டியற் கழிவு வீதமானது சந்தையிலிருக்கும் மூலதன அளவால் நிர்ணயிக்கப்படுவதாகவும், இதரவகைக் கடன் - பத்திரங்களுக்கு மாறாக வணிக உண்டியல்களைக் கழிவு செய்வதற்கு பொருந்தக் கூடியது என்றும் சொல்வது கழிவு வீதத்தைத் தீர்மானிக்கும் காரணங்கள் பற்றிய சரியான விளக்கமெனக் கருதுகிறீர்களா?'-(சாப்மன்:) 'நான் அப்படிக் கருதவில்லை. வட்டி தொடர்பான பிரச்சினை நடப்புத் தன்மை கொண்ட பணமாக்கத் தக்க கடன் - பத்திரங்கள் யாவற்றாலும் பாதிக்கப்படுவதாக நினைக்கிறேன்; உண்டியல்களைக் கழிவு செய்வது என்ற அளவில் மட்டும் அதற்கு வரம்பிடுவது தவறாகும். ஏனென்றால் அரசாங்க கன்சால்* பிணைமுறிகளின் (வைப்பு) மீது அல்லது கருவூல உண்டியல்களின் மீதே கூட பணத்துக்கு மிகப் பெரும் வேண்டல் வர்த்தக வட்டிவீதத்தை விட மிகவும் உயர்ந்த வீதத்தில் ஏற்படும் போது-சமீப காலத்தில் இப்படி ஏற்பட்டுள்ளது-நமது வர்த்தக உலகம் அதனால் பாதிக்கப்படுவதில்லை என்று சொல்வது அபத்தமாய் இருக்கும்; இதனால் மிகப்பெரும் பாதிப்பு ஏற்படுவதே உண்மை.' -'4890. நல்ல நிலையில் ஓட்டத்திலிருக்கும் கடன்-பத்திரங்கள், அப்படி இருப்பவை என்று வங்கியாளர்களால் ஏற்றுக் கொள்ளப்படும் பத்திரங்கள் சந்தையிலிருக்க, ஆட்கள் அவற்றின் மீது பணக்கடன் வாங்க விரும்பும்போது, நிச்சயமாய் அது வர்த்தக உண்டியல்கள் மீது விளைவு ஏற்படுத்துகிறது; எடுத்துக்காட்டாக, ஒருவர் கன்சால் பிணைமுறிகள் மீதோ அவைபோன்ற வேறொன்றின் மீதோ தமது பணத்தை 6% வட்டிக்கு கடனாய்த் தர முடியுமானால், அப்போதே அவர் அப்பணத்தை வர்த்தக உண்டியல்கள் மீது 5% வட்டிக்குக் கொடுப்பார் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. அது எங்களுக்கு ஒரே விதமான விளைவையே ஏற்படுத்துகிறது; என்னால் எனது பணத்தை 6% வட்டிக்கு தர முடியுமானால் நான் 5½% எனும் வீதத்தில் உண்டியல்களைக் கழிவு செய்து காசாக்கித் தருவேன் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.'—'4892. நாம் குறிப்பிடுவது £2000, £5000 அல்லது £10,000 வாங்கும் முதலீட்டார்களை அல்ல. இவர்கள் பணச்சந்தையில் அப்படியொன்றும் விளைவு ஏற்படுத்துவதில்லை. கன்சால் பிணைமுறிகளின் (வைப்பு) மீது என்னை கேட்பீர்களானால், நூறாயிரக் கணக்கான பவுன்களை

* குறைந்த வட்டி வீதம் அளிக்கும் பிரிட்டானிய அரசு வைப்புகள்.

கையாளுகிறவர்களைச் சொல்கிறேன், தரகர்கள் எனப்படுவோரைச் சொல்கிறேன்; இவர்கள் கடன் தொகைகளில் கணிசப் பகுதிகளை எடுக்கிறார்கள். அல்லது சந்தையில் கொள்முதல் செய்கிறார்கள்; அவர்களின் கையிலிருந்து சரக்கைப் பொதுமக்கள் எடுத்துக் கொள்ளுவதன் மூலம் இலாபம் கிடைக்கும் வரை அவர்கள் அதைக் கையில் வைத்திருந்தாக வேண்டும்; ஆக, இந்த ஆட்களுக்கு பணம் வேண்டும்.'

கடன்-செலாவணி அமைப்பின் வளர்ச்சியை ஒட்டி லண்டன் போன்ற நகரங்களில் செறிவான பெரும் பணச் சந்தைகள் தோற்றுவிக்கப்படுகின்றன. இவை அதேபோது கடன்-பத்திரங்களுக்கும் முக்கிய வர்த்தக பீடங்கள் ஆகின்றன. வங்கியாளர்கள் பொதுமக்களுக்குச் சொந்தமான பண-மூலதனத்தை பெரும் அளவில் இந்த இழிவர்த்தகக் கும்பலின் வசத்தில் ஒப்படைக்கிறார்கள்; இந்த வர்த்தகச் சூதாடிக் கூட்டம் இவ்விதம் பல்கிப் பெருகிச் செல்கிறது. 'பொதுவாகச் சொன்னால், வேறு இடங்களைக் காட்டிலும் பங்குச் சந்தையில் பணம் மலிவாய் கிடைக்கிறது'—பிரபுகள் சபை இரகசியக் குழுவின் முன்னால் இப்படிச் சொன்னவர் 1848இல் இங்கிலாந்து வங்கியின் ஆளுநர் பொறுப்பில் இருந்த ஜேம்ஸ் மாரிஸ் (வர்த்தக இன்னல் 1848, அச்சு 1857, எண் 219).

மற்ற நிலைமைகள் மாறாதிருக்க, பல்லாண்டு காலத்திற்குரிய சராசரி வட்டியானது சராசரி இலாப வீதத்தால் நிர்ணயிக்கப்படுகிறது என்றும், இலாபத்திலிருந்து வட்டியைக் கழித்து வருவதேயாகிய முனைவு-இலாபத்தால் அது நிர்ணயிக்கப்படுவதில்லை என்றும் வட்டி-மூலதனத்தைப் பரிசீலித்த போதே தெளிவாக்கினோம்.*

இன்னொன்றையும் குறிப்பிட்டோம், அதுபற்றி வேறோர் இடத்தில் மேலும் பரிசீலனை செய்வோம்; அதாவது வர்த்தக வட்டியில் வர்த்தக உலகிற்குள் கழிவுகளுக்கும் கடன்களுக்கும் வட்டிக்காரர்கள் விதிக்கும் வட்டியில்-ஏற்படும் மாற்றங்களும் கூட தொழில்துறை சகடத்தின் போக்கில் ஒரு கட்டம் அடையப்பட்டிருப்பதை காட்டுகின்றன, இந்தக் கட்டத்தில் வட்டிவீதம் அதன் குறைந்தபட்ச அளவுக்கு மேல் உயர்ந்து சராசரி நடும நிலைமையை அடைகிறது (பிற்பாடு இந்த நடும நிலைமையும் தாண்டிச் செல்கிறது); இந்த அசைவியக்கம் இலாபங்களில் ஏற்படும் விளைவின் உயர்வாகும்.

---

* இந்தப் பதிப்பு: பக்கம் பதிப்பாசிரியர்.

இங்கே கருத்தில் கொள்ள வேண்டியவை இரண்டு.

*முதலாவதாக:* வட்டி வீதமானது நீண்ட காலத்துக்கு உயர்ந்தே இருந்து வருமானால் (இங்கிலாந்து போன்ற குறிப்பிட்ட ஒரு நாட்டில் நிலவுகிற வட்டி வீதத்தையே குறிப்பிடுகிறோம்; அங்கே சராசரி வட்டி வீதமானது ஒப்பளவில் நீண்ட குறிப்பிட்ட காலத்துக்கு நிர்ணயமானது; நெடுங்கால கடன்களுக்கு செலுத்தப்படும் வட்டியிலும் கூட— இதைத் தனியார் வட்டி எனலாம்—இது வெளிப்படுகிறது) இலாப வீதம் இந்தக் காலத்திற்கு உயர்ந்திருக்கிறது என்பதற்குப் பூர்வாங்க நிருபணம் இது. ஆனால் முனைவு-இலாப வீதமும் உயர்ந்திருப்பதற்கான நிருபணமாக இது இருந்தாக வேண்டும் என்பதில்லை. இலாபவீதம், முனைவு-இலாபவீதம் என்கிற இந்த வேறுபாடெல்லாம் பிரதானமாய் சொந்த மூலதனத்தை வைத்தே தொழில் செய்யும் முதலாளிகளைப் பொறுத்தவரை அநேகமாய் மறைந்து போகிறது. அவர்கள் தமக்குத்தாமே வட்டி செலுத்திக் கொள்வதால் உயர்ந்த இலாப வீதம் அடைகிறார்கள். இலாப வீதம் உயர்ந்திருக்கும் போது ஒப்பளவில் நீண்ட காலத்திற்கு வட்டி வீதம் உயர்ந்திருக்கும் சாத்தியப்பாடு எழுகிறது. (பணச் சந்தையில் நெருக்குதல் கடுமையாக இருக்கிற பிரத்தியேக கட்டத்தை இது குறிப்பதாகாது). உயர்ந்த இலாப வீதத்தில் இருந்து உயர்ந்த வட்டி வீதத்தைக் கழித்த பின் குறைந்த முனைவு இலாப வீதமே எஞ்சுவது கூட சாத்தியம்தான். இலாப வீதம் தொடர்ந்து உயர்ந்திருக்கும் போதே முனைவு - இலாப வீதம் சுருங்கிப் போகலாம். தொடங்கிவிட்ட தொழில் முனைவுகளை தொடர்ந்து நடத்தியாக வேண்டும் என்பதால் இது சாத்தியமாகிறது. இந்தக் கட்டத்தில் பெரும்பாலும் கடன்-செலாவணி மூலதனத்தைக் கொண்டே (பிறருக்குச் சொந்தமான மூலதனத்தைக் கொண்டே) காரியங்கள் நடைபெறுகின்றன; உயர்ந்த இலாப வீதமானது ஓரளவுக்கு ஊக வழிப்பட்டதாயும், எதிர் காலத்திற்குரியதாயும் இருக்கலாம். இலாப வீதம் உயர்ந்து இருந்தாலும் முனைவு-இலாபம் குறைந்து செல்லும் போதே உயர் வீதத்தில் வட்டி செலுத்தப்படுவது சாத்தியமே. இந்த உயர்ந்த வட்டியை இலாபத்திலிருந்து எடுத்துக் கொடுப்பதற்குப்பதில் கடன் வாங்கிய மூலதனத்திலிருந்தே எடுத்துக் கொடுக்க முடிகிறது (ஊக-வாணிபக் காலங்களில் ஓரளவுக்கு இவ்விதம் நிகழக் காணலாம்); இந்நிலைமை சிறிது காலம் நீடிக்கவும் கூடும்.

*இரண்டாவதாக:* இலாப வீதம் உயர்ந்து இருப்பதால் பண-மூலதனத்திற்கான வேண்டலும், எனவே வட்டி வீதமும் உயருவதாகச் சொல்வதும் தொழில் துறை மூலதனத்திற்கான வேண்டல் உயர்கிறது,

இதனால்தான் வட்டிவீதம் உயர்ந்திருக்கிறது என்று சொல்வதும் ஒன்றல்ல.

நெருக்கடிக் காலங்களில் கடன்-மூலதனத்திற்கான வேண்டலும், எனவே வட்டி வீதமும் அதிக பட்ச அளவை அடைகின்றன; இலாபவீதமும் அத்துடன் தொழில் துறை மூலதனத்துக்கான வேண்டலும் பெரும்பாலும் மறைந்து விடுகின்றன. இத்தகைய காலங்களில் கடன் வாங்குகிற ஒவ்வொருவரும் கொடுப்பின் பொருட்டே அதாவது ஏற்கெனவே ஒப்புக் கொண்ட கடப்பாடுகளைத் தீர்க்கும் பொருட்டே கடன் வாங்குகிறார். மறுபுறம், நெருக்கடி முடிந்து தொழில் விறுவிறுப்பாய் நடைபெறும் காலங்களில், சரக்கு வாங்குவதற்காகவும், பண-மூலதனத்தை திறனுடைய மூலதனமாகவோ வர்த்தக-மூலதனமாகவோ மாற்றுவதற்காகவும் கடன்-மூலதனம் வேண்டப்படுகிறது. அது அப்போது தொழில் துறை முதலாளியாலோ வணிகராலோ வேண்டப்படுகிறது. தொழில்துறை முதலாளி அதனை உற்பத்திச் சாதனங்களிலும் உழைப்புச் சக்தியிலும் முதலீடு செய்கிறார்.

உழைப்புச் சக்திக்கான வேண்டல் இலாப வீதத்தால் நிர்ணயிக்கப்படுகிற அளவில், அவ் வேண்டலின் உயர்வு அதனளவிலேயே வட்டிவீத உயர்வுக்கு ஒரு காரணமாய் இருக்க முடியவே முடியாது. கூலி உயர்வானது தொழில்துறைச் சகடத்தின் குறிப்பிட்ட சில கட்டங்களில் இலாப உயர்வின் விளைவுகளில் ஒன்றாய் இருக்கலாம் என்றாலும் இலாப உயர்வுக்குக் காரணமாய் இருக்க முடியவே முடியாது.

உழைப்பானது குறிப்பிட்டுச் சொல்லும்படியான சாதக நிலைமைகளில் சுரண்டப்படுவதால் உழைப்புச் சக்திக்கான வேண்டல் அதிகரிக்கலாம்; ஆனால் உழைப்புச் சக்திக்கும், எனவே மாறும்-மூலதனத்திற்குமான வேண்டல் உயருவதாலேயே இலாபம் அதிகரித்து விடுவதில்லை, அது ஒப்பளவில் குறைந்தே போகிறது. ஆனால் மாறும் -மூலதனத்திற்கான வேண்டலும் அதேபோது அதிகரிக்கலாம், இவ்விதம் பண-மூலதனத்திற்கான வேண்டலும் கூட அதிகரிக்கலாம்- இது வட்டி வீதத்தை உயரச் செய்கிறது. உழைப்புச் சக்தியின் சந்தை விலை அப்போது சராசரிக்கு மேல் உயருகிறது, சராசரிக்கு அதிகமான தொழிலாளர்கள் வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர். அதேபோது வட்டிவீதம் உயருகிறது; ஏனென்றால் இந்நிலைமைகளில் பண-மூலதனத்திற்கான வேண்டல் உயருகிறது. உழைப்புச் சக்திக்கான

வேண்டல் உயருவதால் - வேறெந்த சரக்கையும் போலவே இந்தச் சரக்கின் விலையும் உயருகிறது; ஆனால் இலாபம் உயருவதில்லை. குறிப்பிட்ட இந்தச் சரக்கு ஒப்பளவில் மலிவாய் இருப்பதையே இலாபம் முக்கியமாய்ச் சார்ந்துள்ளது. அதேபோது நாம் அனுமானம் செய்து கொண்டிருக்கும் நிலைமைகளில் இந்த வேண்டல் பண - மூலதனத்திற்கான வேண்டலை உயரச்செய்து வட்டி வீதத்தையும் உயரச் செய்கிறது. பண முதலாளி வட்டிக்கு பணம் கொடுப்பதற்குப் பதில் தம்மையே தொழில்துறை முதலாளியாக மாற்றிக் கொள்வாரானால், உழைப்புச் சக்திக்கு கூடுதலாய் விலை தர வேண்டிய நிலைமையானது அவரது, இலாபத்தை அதிகமாகாது, மாறாக உரிய அளவில் அதனைக் குறைக்கும். தொழில் நிலவரத்தின் துணை கொண்டு எப்படியோ அவரது இலாபம் உயரலாம்; ஆனால் அவர் உழைப்புக்குக் கூடுதலாய் விலை கொடுப்பது அதற்குக் காரணமாய் இருக்கவே இருக்காது. ஆனால் இப்படி அவர் உழைப்புக்கு கூடுதலாய் விலை கொடுப்பது பண-மூலதனத்திற்கான வேண்டலை உயரச் செய்கிற அளவில் வட்டி வீதத்தை உயரச் செய்வதற்குப் போதுமானதாகும். தொழில் நிலவரம் சாதகமாய் இல்லாத போதே ஏதோ காரணத்தால் கூலி உயருமானால், இந்தக் கூலி உயர்வு இலாப வீதத்தைக் குறையச் செய்யும், ஆனால் பண - மூலதனத்திற்கான வேண்டலை அதிகரிக்கச் செய்கிற அளவில் வட்டி வீதத்தை உயரச் செய்யும்.

உழைப்பை ஒதுக்கிவிட்டுப் பார்த்தால், 'மூலதனத்திற்கான வேண்டல்' என்று ஓவர்ஸ்டோன் குறிப்பிடுவது சரக்குகளுக்கான வேண்டலாகவே அமையக் காணலாம். சரக்குகளுக்கான வேண்டல் சராசரிக்கு மேல் அதிகமாவதாலோ, சரக்குகளின் வழங்கல் சராசரியை விடக் குறைந்து போவதாலோ இவ் வேண்டல் அவற்றின் விலையை உயரச் செய்கிறது. தொழிலதிபரோ வணிகரோ எடுத்துக்காட்டாக முன்பு £100 விலை கொடுத்து பெற்ற அதே சரக்களவை இப்போது £150 விலை கொடுத்து பெற வேண்டி இருக்குமானால் அவர் £100க்குப் பதில் £150 கடன் வாங்க வேண்டி இருக்கும்; வட்டி வீதம் 5% ஆக இருக்குமானால், £5க்குப் பதில் £7 ½ வட்டி செலுத்த வேண்டி இருக்கும். கடன் வாங்கப்படும் மூலதனத்தொகை அதிகரித்து விடுவதால் அவர் செலுத்த வேண்டிய வட்டித் தொகையும் அதிகரிக்கிறது.

கடன்-மூலதனத்தின் நலன்களையும் தொழில்துறை-மூலதனத்தின் நலன்களையும் முழுதொத்தவையாகக் காட்டுவதற்குத் தான் திருவாளர் ஓவர்ஸ்டோன் படாத பாடுபடுகிறார். அவரது வங்கிச் சட்டமோ இந்த

நலன்களிடையிலான வேற்றுமையை பண-மூலதனத்திற்குச் சாதகமாக பயன்படுத்திக் கொள்வதையே நோக்கமாய்க் கொண்டு வகுக்கப் பட்டதாகும்.

சரக்குகளின் வழங்கல் சராசரியை விடக் குறைந்து போயிருக்கும் நிலையில் சரக்குகளுக்கான வேண்டல் முன்னைக் காட்டிலும் கூடுதலான பண-மூலதனம் எதையும் உறிஞ்சாமல் போவது சாத்தியமே. அவற்றின் ஒட்டு மொத்த மதிப்புக்கு விலையாக அதே தொகை ஒரு வேளை இன்னும் சிறிய தொகையே கூட செலுத்த வேண்டியதாகிறது. ஆனால் இந்தத் தொகைக்குப் பிரதியாகக் கிடைக்கும் பயன்-மதிப்புகளின் அளவு குறைந்து போகிறது. இந்நிலையில் கடனுக்குரிய பண-மூலதனத்தின் வேண்டல் மாறாதிருக்கிறது, அதாவது வட்டிவீதம் உயராது. ஆனால் சரக்குகளின் வழங்கலோடு ஒப்பிடுகையில் அவற்றுக்கான வேண்டல் அதிகரித்திருக்கும், ஆதலால் சரக்குகளின் விலையும் உயர்ந்திருக்கும். கடன்-மூலதனத்திற்கான மொத்த வேண்டல் அதிகரிக்கும் போதுதான் வட்டிவீதம் பாதிக்கப்படலாம். மேற்கண்ட அனுமானங்களில் இப்படியொரு நிலைமை காணப்படவில்லை.

ஒரு பண்டத்தின் வழங்கல் சராசரியை விடக்குறைந்து போவது உண்டு; தானியம், பருத்தி போன்றவற்றில் மகசூல் பொய்த்து விடும் போதெல்லாம் இப்படித்தான் நேரிடுகிறது. விலைகள் மேலும் உயரும் என்ற ஊகத்தின் பேரில் கடன்-மூலதனத்திற்கான வேண்டல் அதிகரிக்கிறது-வழங்கலில் ஒரு பகுதியை தற்காலிகமாய் சந்தையி லிருந்து விலக்கிக் கொள்வதே, விலைகள் உயருமாறு செய்வதற்கு எளிதிலும் எளிதான வழி. சரக்குகளை விற்காமல் வாங்கப்படும் சரக்குகளுக்கு விலை கொடுப்பதற்காக வர்த்தக 'மாற்று உண்டியல் நடவடிக்கைகளின் மூலமாய்ப் பணம் பெறப்படுகிறது. இந்நிலையில் கடன்-மூலதனத்திற்கான வேண்டல் அதிகரிக்கிறது; சந்தைக்குச் செல்லும் சரக்குகளின் வழங்கலை இப்படிச் செயற்கையாக வழிமறிக்கும் முயற்சி காரணமாய் வட்டி வீதம் உயரலாம். அப்போது உயர்ந்த வட்டி வீதமானது சரக்கு-மூலதன வழங்கல் செயற்கையாகக் குறைக்கப்படுவதைப் புலப்படுத்துகிறது.

மறுபுறம், ஒரு பண்டத்தின் வழங்கல் அதிகரித்து அப்பண்டம் சராசரி விலைக்குக் கீழே விற்கப்படுவதால் அதற்கான வேண்டல் அதிகரிக்கலாம்.

இப்படி நிகழுமானால், கடன்-மூலதனத்திற்கான வேண்டல் மாறாதிருக்கலாம் அல்லது குறைந்தாலும் குறையலாம்; ஏனென்றால் குறிப்பிட்ட பணத் தொகைக்கு முன்னிலும் அதிக சரக்குகளை வாங்கலாம், ஊக-வாணிப நோக்கிலான இருப்பு வைத்தலும் கூட நிகழக் கூடும்; பொருளுற்பத்திக்கு மிகவும் சாதகமான தருணத்தை பயன்படுத்திக் கொள்ளும் நோக்கத்திலோ, பிற்பாடு விலை உயரும் என்ற எதிர்ப்பார்ப்பிலோ இது செய்யப்படலாம். இந்நிலையில், கடன் -மூலதனத்திற்கான வேண்டல் அதிகரிக்கக் கூடும்; அதாவது உயர்ந்த வட்டி வீதமானது திறனுடைய-மூலதனக் கூறுகள் உபரியாக இருப்பு வைக்கப்படுவதில் மூலதனம் முதலீடாவதை புலப்படுத்தும். கடன்-மூலதனத்திற்கான வேண்டலில் சரக்கு-மூலதனத்தின் வழங்கலும் வேண்டலும் எப்படித் தாக்கம் செலுத்துகின்றன என்பது மட்டுமே இங்கு நம் பரிசீலனைக்குரியது. தொழில் துறைச் சகடத்தின் பல்வேறு கட்டங்களிலும் மறு உற்பத்தி நிகழ்முறையின் நிலவரத்தில் ஏற்படும் மாற்றம் எப்படி கடன்-மூலதன வழங்கலில் தாக்கம் செலுத்துகிறது என்று முன்பே விவரமாய்ப் பார்த்து முடித்தோம். சந்தை வட்டி வீதமானது (கடன்) மூலதன வழங்கல்-வேண்டலாய் நிர்ணயிக்கப் படுகிறது என்னும் அர்ப்பக் கருத்துரையை ஓவர்ஸ்டோன் தமது அனுமானத்தோடு அதாவது கடன்-மூலதனம் என்பதும் பொதுவாக மூலதனம் என்பதும் ஒன்றுதான் என்ற கருத்தோடு சாமர்த்தியமாய் இணைத்துச் சேர்த்து விடுகிறார். இவ்விதம் அவர் வட்டிக்காரர் மட்டுமே முதலாளி ஆவார் என்றும் அவரது மூலதனம் மட்டுமே மூலதனம் ஆகும் என்றும் காட்ட முயல்கிறார்.

பணமுடை நிறைந்த காலத்தில் கடன்-மூலதனத்திற்கான வேண்டல் என்பது கொடுப்புச் சாதனத்திற்கான வேண்டலே தவிர வேற ஏதுமல்ல; அது வாங்குஞ் சாதனம் என்ற முறையிலான பணத்திற்குரிய வேண்டல் அல்லவே அல்ல. அதேபோது, உண்மை-மூலதனம், அதாவது திறனுடை-மூலதனமும் சரக்கு - மூலதனமும் மிகையாய் இருந்தாலும் சரி, குறையாய் இருந்தாலும் சரி வட்டி வீதம் மிக அதிகமாய் உயரலாம். கொடுப்புச் சாதனத்திற்கான வேண்டல் என்பது வணிகர்களும் உற்பத்தியாளர்களும் நல்ல பிணையம் தரத் தயார் என்றால், பணமாக மாற்றப்படும் தகுதிக்கான வேண்டலே ஆகும்; அப்படி பிணையம் ஏதும் இல்லாத போதெல்லாம் அது பண-மூலதனத்திற்கான வேண்டல் ஆகும். அதாவது கொடுப்புச் சாதன முன்னீடு அவர்களுக்குப் பணத்தின் வடிவத்தைக் கொடுப்பதோடு கொடுப்புகளுக்கு அவர்களிடம் இல்லாத சமதையையும்-வடிவம்

எதுவானாலும் கொடுக்கிறது. இங்கேதான் நெருக்கடிகளின் தத்துவம் தொடர்பான இப்போதைய சர்ச்சையில் இரு தரப்பினரும் சொல்வது ஒருங்கே சரியானதாகவும் தவறானதாகவும் இருக்கிறது. கொடுப்புச் சாதனப்பற்றாக்குறை மட்டுமே நிலவுவதாய் சொல்கிறவர்கள் ஒன்று, அசல் பிணையங்களின் உடைமையாளர்களை மட்டும் மனதிற் கொண்டவர்களாய் இருக்கவேண்டும், அல்லது போண்டியாகிப் போன ஒவ்வொரு மோசடி பேர்வழியையும் கடன் தீர்க்கும் திறனும் மதிப்பும் வாய்ந்த முதலாளியாகக் காகிதத் துண்டுகளைக் கொண்டு மாற்றும் கடமையும் அதிகாரமும் வங்கிகளுக்கு உண்டு என்று நம்புகிற பேதைகளாய் இருக்க வேண்டும். மூலதனப் பற்றாக்குறை மட்டுமே நிலவுவதாய்ச் சொல்கிறவர்கள், ஒன்று, வெறும்சொல் வாதம் புரிவோராய் இருக்க வேண்டும், ஏனென்றால் இவ்வகைக் காலங்களில்தான் மிகை இறக்குமதிகளின் விளைவாகவும் மிகையுற்பத்தியின் விளைவாகவும் மாற்றமுடியா மூலதனம் பெரும் அளவில் திரள்கிறது; அல்லது அவர்கள் கடன்-செலாவணிச் சூதாடிகளை மட்டுமே குறிப்பிடுவதாய் இருக்க வேண்டும்-இந்தச் சூதாடிகள் தமது நடவடிக்கைகளுக்கு பிறரது மூலதனத்தைப் பெற்றுப் பயன்படுத்திக் கொள்ள முடியாத நிலை இப்போது ஏற்படுகிறது, இழந்த மூலதனத்தை ஈடுசெய்வதற்கு மட்டும் அல்லாமல் தொடர்ந்து மோசடி வேலை செய்வதற்கும் வங்கி தங்களுக்கு உதவ வேண்டும் என்று இவர்கள் கேட்கிறார்கள்.

சுயேச்சையான மதிப்பு வடிவம் என்ற முறையில் பணம் சரக்குகளை எதிர் நோக்குவது முதலாளித்துவ பொருளுற்பத்திக்கு அடிப்படையாகும். அதாவது பரிவர்த்தனை-மதிப்பு பணமாக சுயேச்சை வடிவம் பெற்றாக வேண்டும்; குறிப்பிட்ட ஒரு சரக்கு ஏனைய எல்லா சரக்குகளுக்கும் அளவையாகப் பயன்படும் மதிப்பைக் கொண்ட பிண்டப் பொருளாக அதாவது சர்வப் பொதுச்சரக்காக, ஏனைய எல்லாச் சரக்குகளுக்கும் மாறான அதிஉன்னதச் சரக்காக மாறும் போதுதான் இது சாத்தியமாகும். இது இரு வழிகளில் வெளிப்பட்டாக வேண்டும்; முக்கியமாகச் சொன்னால் வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ நாடுகளில் இவ்விதம் வெளிப்படக் காணலாம்-இந்த நாடுகள் பணத்தை கடன்-செலாவணி நடவடிக்கைகளாலோ கடன்-செலாவணிப்பணத்தாலோ பெருமளவுக்கு மாற்றீடு செய்து கொள்கின்றன. பணமுடைக் காலங்களில், கடன்-செலாவணி சுருங்கியோ அடியோடு வறண்டோ போகும் போது பணம் மட்டுமே கொடுப்புச் சாதனம் என்ற நிலை திடுமென ஏற்படுகிறது, மதிப்பின் மெய்யான நிலவல் வடிவம் என்ற

முறையில் அது ஏனைய எல்லாச் சரக்குகளையும் அறுதியாக எதிர் நோக்குகிறது. இதனால் சரக்குகள் எல்லாம் மதிப்பிறக்கம் அடைகின்றன அவற்றைப் பணமாக அதாவது அவற்றுக்குரிய முற்றிலும் கற்பனை சார்ந்த வடிவமாக மாற்றுவது கடினமாகிறது ஏன், முடியாத காரியமாகிறது. இரண்டாவதாக கடன்-செலாவணிப் பணமானது அதன் பெயர் மதிப்பின் அளவுக்கு உண்மை பணத்தை அறுதியாகக் குறிக்கிற அளவில் மட்டுமே பணமாகும். தங்கக் கசிவு ஏற்படுவதையொட்டி, கடன்-செலாவணிப் பணத்தை பணமாக மாற்றுவது, அதாவது அதற்கும் உண்மைத் தங்கத்துக்குமான முழு தொத்தத் தன்மை பிரச்சினைக்குரியதாகிறது. இதனால்தான் வலுவற்ற வழிமுறைகள் கையாளப்படுகின்றன, இப்படிப் பணமாக மாறுவதற்கு அவசியமான நிலைமைகளை உத்தரவாதப்படுத்துவதற்காக வட்டி வீதத்தை உயர்த்துவது போன்ற காரியங்கள் நடைபெறுகின்றன. பொய்யான பணத் தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டதும் ஓவர்ஸ்டோன் வகையறா போன்ற தனவணிகர்களின் நலன் கருதி நாட்டின் மீது சுமத்தப்படுவதுமாகிய தவறான சட்டமுறையால் நிலைமை மேலும் கடுமையாகலாம், ஆனால் இதற்கெல்லாம் அடிப்படையாக அமைவது பொருளுற்பத்தி முறைதான். கடன்-செலாவணிப் பணத்தின் மதிப்பிறக்கமானது (அது தன் பணத்தன்மையை அறவே இழந்துவிடுவது பற்றி சொல்ல வேண்டாம், எப்படியும் இந்தப் பணத் தன்மை என்பது முற்றிலும் கற்பனையானதே) நிலவுகிற உறவுகளையெல்லாம் அழித்து விடும். இந்தப்பண-மதிப்பு கற்பனை சார்ந்தும் சுயேச்சையாகவும் நிலவுவதை உறுதி செய்வற்காக சரக்குகளின் மதிப்பு இவ்விதம் பலியிடப்படுகிறது. பணத்துக்கே உத்தரவாதம் உள்ளவரைதான் பண-மதிப்புக்கு உத்தரவாதம் இருக்கும். இதனால்தான் பல மிலியன் பெறுமானமுள்ள சரக்குகளை சில மிலியன் பணத்துக்காகப் பலியிட வேண்டியுள்ளது. இது முதலாளித்துவப் பொருளுற்பத்தியில் தவிர்க்க முடியாத, அதற்குரிய வனப்புகளில் ஒன்று. அதற்கு முற்பட்ட பொருளுற்பத்தி முறைகளில் இப்படி நிகழ்வதில்லை. ஏனென்றால் இந்தப் பொருளுற்பத்தி முறைகள் குறுகலான அடிப்படையின் மீது இயக்குவதால் கடன்- செலாவணியோ கடன்-செலாவணிப் பணமோ வளர முடிவதில்லை. உழைப்பின் சமூகத் தன்மை சரக்குகளின் பண நிலவலாகவும், எனவே உள்ளபடியான பொருளுற்பத்திக்குப் புறத்தே இருக்கும் ஒன்றாகவும் காட்சியளித்துக் கொண்டிருக்கும் வரை, பணநெருக்கடிகள்—உண்மை நெருக்கடி களைச் சாராமலோ, அந் நெருக்கடிகளைத் தீவிரப்படுத்தும் விதத்திலோ

தவிர்க்க முடியாதவை—மறுபுறம், ஒரு வங்கியின் கடன்-மதிப்பு ஆட்டம் காணாமல் இருக்கும்வரை, அவ் வங்கியானது இது போன்ற சந்தர்ப்பங்களில் கடன்-செலாவணிப் பணத்தைக் கூடுதலாக்கி பீதியைத் தணிக்கும் என்பதும், கடன்-செலாவணிப் பணத்தைச் சுருக்கி பீதியைக் கடுமையாக்கும் என்பதும் தெளிவு . நவீன தொழில் துறையின் வரலாறு அனைத்தும் புலப்படுத்தும் உண்மை என்னவென்றால்: உள்நாட்டுப் பொருளுற்பத்தி ஒழுங்கமைக்கப் பட்டிருக்குமானால், பன்னாட்டு வர்த்தகத்தின் சமநிலை தற்காலிகமாய் குலையும் போதெல்லாம் அவ் வர்த்தகத்தை நேர் செய்வதற்கு மட்டுமே உலோகம் உண்மையில் தேவைப்படும். இப்போதே கூட உள்நாட்டுச் சந்தைக்கு உலோகப் பணம் ஏதும் தேவையில்லை என்பது தேச வங்கிகள் எனப்படுகிறவை ரொக்கக் கொடுப்புகளை நிறுத்தி வைப்பதிலிருந்து தெரிய வருகிறது. மிகக் கடுமையான சந்தர்ப்பங்களில் எல்லாம் இந்த நிறுத்தி வைப்பு ஒரே உபாயமாகக் கையாளப்படுகிறது.

இரு தனியாட்களை எடுத்துக் கொள்வோம்; இவர்கள் ஒருவருடன் ஒருவர் புரியும் கொடுக்கல் வாங்கல்களில் இருவருக்குமே பாதகமான கொடுப்பு நிலுவை இருப்பதாகச் சொல்வது நகைப்புக்குரியது. அவர்கள் தமக்குள் ஒருவருக்கொருவர் கடன்கொடுத்தவராகவும் கடன் பட்டவராகவும் இருப்பாரானால், அவர்களின் உரிமைத் தகுதிகள் நேராகாத போது, நிலுவைத் தொகையைப் பொறுத்த வரை ஒருவர் கடன் கொடுத்தவராகவும் மற்றவர் கடன் பட்டவராகவும் இருந்தாக வேண்டும் என்பது தெளிவாய்த் தெரிகிறது. நாடுகளைப் பொறுத்தவரை சங்கதி இதுவல்ல. இந்த உண்மையைப் பொருளாதார அறிஞர்கள் எல்லாம் ஒப்புக் கொள்கிறார்கள் - வர்த்தக நிலுவை இறுதியில் நேராக வேண்டும் என்றாலும் கொடுப்பு நிலுவை ஒரு நாட்டுக்கு-சாதகமாகவோ பாதகமாகவோ இருக்கலாம் என்று சொல்கிறார்கள். கொடுப்பு நிலுவைக்கும் வர்த்தக நிலுவைக்குமான வேறுபாடு என்னவென்றால் கொடுப்பு நிலுவையானது குறிப்பிட்ட தேதியில் தீர்க்கப்பட வேண்டிய வர்த்தக நிலுவையாகும். நெருக்கடிகள் என்ன செய்கின்றன? கொடுப்பு நிலுவைக்கும் வர்த்தக நிலுவைக்கும் இடையிலான வேறுபாட்டை குறுகியதொரு கால எல்லைக்குள் குறுக்கி விடுகின்றன; நெருக்கடிக்கு ஆளாகி இருப்பதும், எனவே கொடுப்பு தேதி வந்து விட்டதால் பாதிக்கப்பட்டிருப்பதுமான நாட்டில் உருவாகி வளரும் பிரத்தியேக நிலைமைகள் இதற்கு முன்பே தீர்வுக் காலம் இப்படிக் குறுகுவதற்கு வழிசெய்கின்றன. முதலாவதாக, உயர்நிலை உலோகங்கள் அயல்நாடுகளுக்குக் கப்பலேற்றப்

படுகின்றன; ஒப்படைக்கப் பெற்ற சரக்குகள் குறைந்த விலைக்குத் தள்ளி விடப்படுகின்றன; மலிவாக விற்றுத் தீர்க்கும் பொருட்டோ உள்நாட்டில் பண முன்னீடுகள் பெறும் பொருட்டோ சரக்குகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன; வட்டி வீதம் உயர்த்தப்படுகிறது, கடன்-செலாவணி விலக்கிக் கொள்ளப்படுகிறது, கடன் பத்திரங்களின் மதிப்பு குறைகிறது, அயல் நாட்டு கடன் பத்திரங்கள் குறைந்த விலைக்குத் தள்ளி விடப்படுகின்றன. இந்த விலை குறைந்த கடன் பத்திரங்களில் முதலீடு செய்வதற்காக அயல்நாட்டு மூலதனம் ஈர்க்கப்படுகின்றன; முடிவில் நொடிப்பு நிலை ஏற்பட்டு பற்பல உரிமைக் கோரிக்கைகளையும் தீர்த்து வைக்கிறது. நெருக்கடி வெடித்துள்ள நாட்டிற்கு இப்போதும் உலோகம் அனுப்பப்படுவதுண்டு; ஏனென்றால் அந்நாட்டின் பேரில் எழுதப்படும் உண்டியல்கள் உறுதியற்றவை, உலோகப் பணமாய் கொடுப்பதே மிகவும் நம்பகமானது. மேலும், ஆசியாவைப் பொறுத்தவரை பொதுவாகச் சொன்னால் எல்லா முதலாளித்துவ நாடுகளும்-நேரடியாகவோ சுற்றடியாகவோ - ஒருங்கே கடன் பட்டிருப்பவை ஆகும். இந்தப் பல்வேறு காரணிகளும் சம்பந்தப்பட்ட ஏனைய நாடுகள் மீது முழுமையாகத் தாக்கம் கொண்டபின் நாடுகளும் தங்கம் அல்லது வெள்ளி ஏற்றுமதி செய்யத் தொடங்குகின்றன. அதாவது அவற்றின் கொடுப்புகள் கெடுமுடிந்தவையாகி, அதே நிகழ்வுகள் மறுபடியும் அரங்கேறுகின்றன.

வர்த்தகக் கடன்-செலாவணியில், மாற்று உண்டியல்கள் வழக்கத்துக்கு மேல் நீண்ட காலம் ஓடக் கூடியவையாய் உள்ளவரை தான் வட்டியானது கடன் விலைக்கும் ரொக்க விலைக்கும் இடையிலான வேறுபாடு என்ற முறையில் சரக்குகளின் விலையில் சேருகிறது. இல்லையேல் சேருவதில்லை. ஒவ்வொருவரும் ஒரு கையால் கடன் பெற்று மறுகையால் கடன் கொடுப்பதே இதற்குக் காரணம். (எனது அனுபவத்திற்கு இது ஒத்து வரவில்லை.- பி.எங்கெல்ஸ்.) ஆனால் உண்டியற் கழிவு இதில் சேருமானால், அது இந்த வர்த்தகக் கடன்-செலாவணியால் ஆளப்படாது, பணச் சந்தையாலேயே ஆளப்படும்.

வட்டிவீதத்தை நிர்ணயிக்கும் பண-மூலதன வழங்கல் வேண்டலும் உண்மை மூலதன வழங்கல்-வேண்டலும் ஓவர்ஸ்டோன் சொல்வது போல் ஒன்றுதான் என்றால், பல்வேறு சரக்குகளையோ ஒரே சரக்கின் பல்வேறு கட்டங்களையோ (கச்சாப்பொருள், பூர்த்தியாகாத உற்பத்திப்பொருள், பூர்த்தியான பண்டம்) பரிசீலிக்கப்படுவதைப்

பொறுத்து வட்டியானது ஒரே நேரத்தில் குறைந்தும் உயர்ந்தும் இருக்கும். 1844இல் இங்கிலாந்து வங்கியின் வட்டி வீதம் 4%க்கும் (ஜனவரி முதல் செப்டம்பர் வரை) 2 ½—3%க்கும் (நவம்பர் முதல் ஆண்டு முடிவுவரை) இடையே அலைவுற்றது. 1845இல் ஜனவரி முதல் அக்டோபர் வரை 2 ½, 2 ¾, 3% ஆகவும், எஞ்சிய மாதங்களில் 3 முதல் 5%ஆகவும் இருந்தது. நடுத்தரமான ஆர்லியன்ஸ் பருத்தியின் சராசரி விலை 1844இல் 6 ¼, பென்னியாகவும், 1845இல் $4\,^{7}/_{8}$ பென்னியாகவும் இருந்தது; 1844 மார்ச் 3இல் லிவர்பூலில் பருத்தி வழங்கல் 627,042 பேலாகவும், 1845 மார்ச் 3இல் 773, 800 பேலாகவும் இருந்தது பருத்தியின் குறைந்த விலையைக் கொண்டு கணிப்பதனால் வட்டி வீதம் 1845இல் குறைவாய் இருந்திருக்க வேண்டும்; ஆண்டின் பெரும் பகுதிக் காலம் அது உண்மையில் குறைவாகத்தான் இருந்தது. ஆனால் நூலைக் கொண்டு கணிப்பதனால் வட்டி வீதம் உயர்வாய் இருந்திருக்க வேண்டும்; எப்படியென்றால் விலைகள் ஒப்பளவிலும் இருந்திருக்க இலாபங்கள் அறுதியாகவும் உயர்வாய் இருந்தன. 1845இல் இராத்தல் 4 பென்னி விலையுள்ள பருத்தியிலிருந்து 4 பென்னி நூற்புச் செலவில் நூல் நூற்க முடிந்தது (தரமான இரண்டாம் நிலை மியூல் இழை எண் 40); அதாவது நூற்பாளருக்கு மொத்தச் செலவு 8 பென்னி. இதை அவர் 1845 செப்டம்பரிலும் அக்டோபரிலும் இராத்தல் 10½ அல்லது 11½ பென்னி மூலம் விற்க முடிந்தது (பார்க்கவும்: வைலீ அளித்த சாட்சியம், கீழே.)

விவகாரம் முழுவதையும் பின்வருமாறு வகுத்திடலாம்:

கடன்-மூலதன வழங்கல்-வேண்டலும் பொதுவான மூலதனத்தின் வழங்கல்-வேண்டலும் (பின்னது அபத்தம்; தொழிலதிபர் அல்லது வணிகரைப் பொறுத்தவரை சரக்கு அவரது மூலதனத்தின் வடிவங்களில் ஒன்றாகும், ஆனால் ஒருபோதும் அவர் மூலதனத்தையே வேண்டுமென்று கேட்கவில்லை குறிப்பிட்ட சரக்கைத் தான் கேட்கிறார்; அது அவரது மூலதனத்தின் சுற்றில் எப்பங்கு வகிக்க வேண்டி இருந்தாலும், ஒரு சரக்காகத்தான், உதாரணமாய்த் தானியமாகவோ பருத்தியாகவோதான் அதை வாங்குகிறார், அவ்வாறே அதற்கு விலையும் கொடுக்கிறார்) முழுதும் ஒத்தவையாக வேண்டுமானால், வட்டிக்குப் பணம் கொடுப்பவர்கள் யாரும் இருக்கக் கூடாது; கடன் கொடுக்கும் முதலாளிகளிடம் இயந்திர சாதனங்களும் கச்சாப் பொருட்களும் இன்ன பிறவும் இருக்க வேண்டும்; இப்போது வீடு வாடகைக்கு விடுவதை போல் இவற்றை அவர்கள் தொழில்துறை

முதலாளிகளிடம் ஓரளவுக்கு இவ்வகைப் பொருட்களை சொந்தமாகவும் வைத்திருப்பவர்களான இவர்களிடம்-இரவலாய்த் தரவோ வாடகைக்கு விடவோ வேண்டும். இந்நிலைமைகளில் கடன் - மூலதன வழங்கலானது தொழில் துறை முதலாளிக்கு உற்பத்தி-அடிக் கூறுகளின் வழங்கலோடும், வணிகருக்குச் சரக்குகளின் வழங்கலோடும் முழுதொத்ததாய் இருக்கும். ஆனால் அப்போது கடன் கொடுத்தவருக்கும் கடன் வாங்கியவருக்கும் இடையிலான இலாபப் பிரிவினையானது முதலாவதாக, இந்த கடன் வாங்கிய மூலதனத்துக்கும் ஈடுபடுத்துகிறவருக்கே சொந்தமான மூலதனத்திற்கும் இடையிலான விகித உறவையே முழுக்கச் சார்ந்திருக்கும் என்பது தெளிவு.

திருவாளர் வெக்விலின் என்ன சொல்கிறார் பார்ப்போம் (வ.ச.1857). வட்டிவீதம் 'ஈடுபடுத்தப்படாத மூலதனத்தின் அளவால்' நிர்ணயிக்கப் படுகிறதாம் (252); இது 'ஈடுபடுத்தப்படுவதற்காகக் காத்திருக்கும் மூலதனம் ஏராளமாய் இருப்பதற்கான அறிகுறியே' என்கிறார் (271); இந்த ஈடுபடுத்தப்படாத மூலதனம் பிற்பாடு 'சுழலும் மூலதனம்' ஆகிவிடுகிறது (485); 'இங்கிலாந்து வங்கி நோட்டுகளையும் நாட்டிலுள்ள இதர பணப்புழக்க வகைகளையும் எடுத்துக்காட்டாக வட்டிக்கடை வங்கிகளின் பணப் புழக்கத்தையும் நாட்டிலுள்ள நாணய அளவையும்' அவர் இப்படிச் சொல்கிறார். '....வங்கியாளர்கள் சேம இருப்புகளையும் சுழலும் மூலதனம் என்பதில் சேர்த்துக் கொள்கிறேன்' (502, 503); பிறகு பொற்பாளத்தையும் சேர்த்துக் கொள்கிறார் (503). இதே திருவாளர் வெக்விலின் 'நாம்', (இங்கிலாந்து வங்கி) 'ஈடுபடுத்தப் படாத மூலதனத்தின் பெரும்பகுதியை வைத்திருக்கும் காலங்களில் வட்டி வீதத்தின் மீது இங்கிலாந்து வங்கி பெரும் தாக்கம் செலுத்துவதாகச் சொல்கிறார். (1198); ஆனால் மேலே பார்த்த திருவாளர் ஓவர்ஸ்டோனின் சாட்சியப்படி இங்கிலாந்து வங்கி 'மூலதனத்திற்குரிய இடமல்ல' திருவாளர் வெக்விலின் மேலும் சொல்கிறார்: 'நாட்டில் ஈடுபடுத்தப்படாமல் இருக்கும் மூலதன அளவால் கழிவு வீதம் நிர்ணயிக்கப்படுவதாக நினைக்கிறேன். ஈடுபடுத்தப்படாத மூலதனத்தின் அளவு இங்கிலாந்து வங்கியின் சேம இருப்பால் குறிக்கப் பெறுகிறது; இது பெரும்பாலும் பொற்பாள இருப்பே ஆகும். ஆகவே பொற்பாள இருப்பிலிருந்து ஒரு பகுதி எடுக்கப்படும் போது, நாட்டில் ஈடுபடுத்தப்படாமல் இருக்கும் மூலதனத்தின் அளவு குறைகிறது, மீதமிருப்பதன் மதிப்பு இதனால் உயருகிறது' (1258). ஜா.ஸ்டுவர்ட் மில் சொல்கிறார் (2102): 'இங்கிலாந்து வங்கியானது அதன் வங்கித் தொழிற்

பிரிவின் கடன் தீர்வு ஆற்றலுக்கு எதைச் சார்ந்திருக்க வேண்டியுள்ளது என்றால், அந்தப் பிரிவில் சேம இருப்பு குறையாமல் நிரப்பிச் செல்வதற்கு அதனால் என்ன செய்ய முடியும் என்பதையே சார்ந்துள்ளது; ஆகவே வெளியேற்றக் கசிவு ஏதும் நிகழ்ந்து கொண்டிருப்பதாகத் தெரிந்த உடனே அது தன் சேம இருப்பின் பாதுகாப்பை நாட வேண்டியதாகிறது, கழிவுகளைச் சுருக்கவோ கடன் பத்திரங்களை விற்கவோ முற்பட வேண்டியதாகிறது.'—வங்கித் தொழிற் பிரிவை மட்டும் பொறுத்தவரை சேம இருப்பானது வைப்புகளுக்கான சேம இருப்பு மட்டுமே ஆகும். ஓவர்ஸ்டோன் வகையறாவின் கருத்துப்படி வங்கித் தொழிற்பிரிவு வங்கியாளராக மட்டும் செயல்பட வேண்டுமாம், 'தானாக நடக்கும்' நோட்டு வெளியீடு பற்றி கவலைப்படக் கூடாதாம். ஆனால் உண்மையான பணமுடை ஏற்படும் காலங்களில் இங்கிலாந்து வங்கியானது வங்கித் தொழிற் பிரிவின் சேம இருப்பை அன்னியில் (இந்த இருப்பில் இருப்பது நோட்டுகள் மட்டுமே). பொன், வெள்ளிப் பாள சேம இருப்பிலும் தீவிரமாய் கவனம் செலுத்துகிறது; நொடித்துப்போகக் கூடாதென்றால் அப்படித்தான் கவனம் செலுத்தியாக வேண்டும். பொன்ந;-வெள்ளிப்பாளச் சேம இருப்பு எந்த அளவுக்குக் குறைகிறதோ வங்கிநோட்டுகளின் சேம இருப்பும் அதே அளவுக்கு குறைகிறது. திருவாளர் ஓவர்ஸ்டோனைக் காட்டிலும் இதை நன்கறிந்தவர்கள் வேறு யாரும் இருக்க முடியாது; 1844ஆம் வருடத்திய வங்கிச் சட்டத்தில் இவ்வளவு சாதுர்யமாய் இந்த ஏற்பாட்டுக்கு வழிசெய்தவரே அவர்தான்.

## அத்தியாயம் XXXIII

## கடன்-செலாவணி அமைப்பில் சுற்றோட்ட ஊடகம்

'செலாவணியினது ஓட்ட வேகத்தைச் சீராக்கும் மாபெரும் ஒழுங்கியக்கி கடன்-செலாவணியாகும். பொதுவாகச் சொன்னால் பணச் சந்தையின் மீதான கடும் நெருக்குதலும் முழு நிறைவான சுற்றோட்டமும் ஒருங்கமைவதற்கு இதுவே காரணம்.' (செலாவணித் தத்துவம் தொடர்பான மறுபரிசீலனை, பக்கம் 65). இதை இரட்டை அர்த்தத்தில் புரிந்து கொள்ள வேண்டும். ஒருபுறம், சுற்றோட்ட ஊடகத்தைச் சிக்கனப்படுத்தும் வழிமுறைகளுக்கெல்லாம் கடன்-செலாவணியே ஆதாரம். ஆனால் மறுபுறம் ஓர் 500-பவுன் நோட்டை எடுத்துக்காட்டாய் கொள்வோம் குறிப்பிட்ட நாளில் A அதனை B இடம் ஒரு மாற்று உண்டியலுக்கு விலையாகக் கொடுக்கிறார்; அதேநாளில் B அதனைத் தம் வங்கியாளரிடம் வைப்பு வைக்கிறார்; அதே நாளில் வங்கியாளர் அதைக் கொண்டு Cக்கு ஒரு மாற்று உண்டியலைக் கழிவு செய்து காசாக்கித் தருகிறார்; C அதைத் தம் வங்கியில் செலுத்துகிறார், வங்கி அதனை உண்டியல் தரகரிடம் முன்னீடாகக் கொடுக்கிறது.... வாங்கல்களுக்கும் கொடுப்புகளுக்கும் பயன்படுவதற்காக நோட்டு இங்கே சுற்றோடும் வேகமானது அது திரும்பத் திரும்ப யாரேனும் ஒருவரிடம் வைப்பாக மீண்டு வந்து மறுபடியும் வேறொருவரிடம் கடனாகக் கைமாறிச் செல்லும் வேகத்தால் வருவதே ஆகும். சுற்றோட்ட ஊடகத்தில் முழுச் சிக்கனம் என்பது தீர்வகத்தில் தீர்வுக்குரிய மாற்று உண்டியல்களைப் பரிவர்த்தனை மட்டும் செய்து கொள்வதில் உயர் வளர்ச்சி பெற்ற வடிவில் காட்சியளிக்கிறது; இங்கே நிலுவைகளைத் தீர்த்து முடிப்பதே கொடுப்புச் சாதனம் என்ற முறையில் பணத்தின் முக்கியப் பணியாகிறது. ஆனால் இந்த மாற்று உண்டியல்கள் இருப்பது என்பதே தொழிலதிபர்களும் வணிகர்களும் தமக்குள் ஒருவருக்கொருவர் அளித்துக் கொள்ளும் கடன்-செலாவணியைப் பொறுத்தது. இந்தக் கடன்-செலாவணி குறைந்தால் உண்டியல்களின் எண்ணிக்கையும் குறைகிறது; முக்கியமாய் நெடுங்கால உண்டியல்கள் குறைந்து போகின்றன; ஆதலால் கணக்குகளை நேர் செய்யும் இந்த வழிமுறையின் பயன்திறனும் குறைந்து போகிறது. இந்தச் சிக்கனமானது கொடுக்கல்-வாங்கல்களிலிருந்து பணத்தை நீக்கி

விடுவதில் அடங்கியுள்ளது. இது முழுக்க முழுக்க பணத்தின் கொடுப்புச் சாதன பணியைச் சார்ந்திருப்பதாகும்; இந்தப் பணியோ கடன்-செலாவணியைச் சார்ந்திருப்பதாகும். (இந்தக் கொடுப்புகளை ஒன்று குவியச் செய்யும் செய்நுட்பம் ஓரளவு வளர்ச்சி பெற்று இருப்பதை ஒதுக்கிவிட்டுப் பார்த்தால்) இச் சிக்கனம் இரு வகைப்பட்டதாகவே இருக்க முடியும்; மாற்று உண்டியல்கள் அல்லது காசோலைகளால் குறிக்கப்பெறும் பரஸ்பர உரிமைக் கோரிக்கைகள் ஒரே வங்கியாளரால் நேர் செய்யப்படுகின்றன, அவர் உரிமைக் கோரிக்கையை ஒருவரின் கணக்கிலிருந்து வேறொருவரின் கணக்குக்கு மாற்றி எழுதுவதோடு சரி; அல்லது பல்வேறு வங்கியாளர்களும் இந்த உரிமைக் கோரிக்கைகளை அவர்களுக்குள் நேர் செய்து தீர்த்துக் கொள்கிறார்கள்[11]. ஓவரெண்டு, குர்னீ &கம்பெனியின் கூட்டு நிறுமம் போன்ற ஓர் உண்டியல் தரகரின் கையில் 8 முதல் 10 மில்லியன் மாற்று உண்டியல்களைக் குவியச் செய்வது இப்படி நேர்செய்யும் தீர்வின் வீச்சை வட்டார அளவில் விரிவாக்குவதற்கான முக்கிய வழிகளில் ஒன்றாய் இருந்தது. இவ்வகைச் சிக்கனத்தினால் சுற்றோட்ட ஊடகத்தின் பயன்திறன் அதிகரிக்கிறது; ஏனென்றால் கணக்குகளை அப்படியே நேர்செய்வதற்கு சுற்றோட்ட ஊடகம் முன்னிலும் குறைந்த அளவிலேயே தேவைப்படுகிறது. மறுபுறம் சுற்றோட்ட ஊடகமாகப் புழக்கத்தில் இருக்கும் பணத்தின் ஓட்ட வேகம் (இந்த பணத்தையும் சிக்கனப்படுத்தலாம்) முழுக்க முழுக்க விற்றல்-வாங்கல்களின் ஓட்டத்தையும் - கொடுப்புகள் அடுத்தடுத்து பண வடிவில் நிகழ்ந்து வரும்வரை - அக்கொடுப்புகளின் சங்கிலித் தொடர்பையும் பொறுத்ததாகும். ஆனால் இவ்வழியில் கடன்-செலாவணியானது சுற்றோட்டத்தை வேகம் பெறச் செய்வதோடு முடுக்கியும் விடுகிறது. எடுத்துக்காட்டாக தனியொரு காசு ஐந்து பெயர்ச்சிகளை மட்டுமே நிகழ்த்த முடியும்; அது கடன்-செலாவணியின் குறுக்கீடு இல்லாமல்

(11) .ஒரு வங்கி நோட்டு சராசரியாக எத்தனை நாள் புழக்கத்தில் இருந்தது என்ற விவரம்:

| ஆண்டு | £5 நோட்டு | £10 நோட்டு | £20-100 | £200-500 | £1,000 |
|---|---|---|---|---|---|
| 1792 | ? | 236 | 209 | 31 | 22 |
| 1818 | 148 | 137 | 121 | 18 | 13 |
| 1846 | 79 | 71 | 34 | 12 | 8 |
| 1856 | 70 | 58 | 27 | 9 | 7 |

( தொகுத்தவர் மார்ஷல், இங்கிலாந்து வங்கியின் காசாளர், வங்கிச் சட்டங்கள் பற்றிய அறிக்கை, 1857, இணைப்பு II, பக்கம் 300-01.)

வெறும் சுற்றோட்ட ஊடகமாக ஒவ்வொரு தனியாளின் கையிலும் நீண்ட நேரம் தங்கிவிடுகிறது-அதன் ஆரம்ப உடைமையாளராகிய A என்பவர் Bஇடமிருந்து சரக்கு வாங்குகிறார். Bஆனவர் Cஇடமிருந்தும், Cஆனவர் Dஇடமிருந்தும், D ஆனவர் Eஇடமிருந்தும், Eஆனவர் Fஇடமிருந்தும் வாங்குகின்றனர்; அதாவது அது ஒரு கையிலிருந்து வேறொரு கைக்கு மாறிச் செல்வதற்கு உள்ளபடியே விற்றல்-வாங்கல்கள்தான் காரணமாகின்றன. ஆனால் A இடமிருந்து விலையாகப் பெற்ற பணத்தை Bதம் வங்கியாளரிடம் வைப்பில் இடுகிறார், வங்கியாளர் அதை பயன்படுத்தி Cக்கு மாற்று உண்டியல்களைக் கழிவு செய்து காசாக்கித் தருகிறார். C ஆனவர் Dஇடமிருந்து சரக்கு வாங்குகிறார். Dஆனவர் அப்பணத்தை தம் வங்கியாளரிடம் வைப்பில் இடுகிறார். இந்த வங்கியாளர் அதைப்பயன்படுத்தி Eக்குக் கடனாய்த் தருகிறார். Eஆனவர் F இடமிருந்து சரக்கு வாங்குகிறார் என்னும் போது, அது வெறும் சுற்றோட்ட ஊடகமாக (வாங்குஞ் சாதகமாக) இயங்கும் ஓட்ட வேகமே கூட கடன்-செலாவணி நடவடிக்கைகள் பலவற்றாலும் விளைவதாகும்: Bதம் வங்கியாளரிடம் வைப்பிலிடுவது, வங்கியாளர் Cக்கு கழிவு செய்து கொடுப்பது, D தம் வங்கியாளரிடம் வைப்பிலிடுவது, வங்கியாளர் E க்குக் கழிவு செய்து கொடுப்பது ஆகிய நான்கு கடன்-செலாவணி நடவடிக்கைகளால் விளைவதாகும். இந்தக் கடன்-செலாவணி நடவடிக்கைகள் இல்லையேல், ஒரே காசு குறிப்பிட்ட காலத்திற்குள் அடுத்தடுத்து ஐந்து வாங்கல்களை நடத்தி முடித்திருக்காது. உள்ளபடியான விற்றல்-வாங்கல்களின் குறுக்கீடு இல்லாமல் வைப்பிலிடுதல் மூலமாகவும் கழிவு செய்தல் மூலமாகவும் காசு கைமாறியதானது இங்கே உண்மைக் கொடுக்கல் வாங்கல்களின் தொடரில் அதன் கைம்மாற்றத்தை முடுக்கி விரைவுபடுத்தியுள்ளது.

ஒரே வங்கி-நோட்டு பல்வேறு வங்கிகளில் வைப்புகளாய் அமைய முடியும் என்று முன்பே பார்த்தோம். இதேபோல் ஒரே வங்கியில் பல்வேறு வைப்புகளாகவும் அது அமைய முடியும். A வைப்பிலிட்ட நோட்டைக் கொண்டு B யின் மாற்று உண்டியலை வங்கியாளர் கழிவு செய்து காசாக்கிக் கொடுக்கிறார், B அதை Cஇடம் செலுத்துகிறார், அதே நோட்டை C அதை வெளியிட்ட வங்கியிலேயே வைப்பிலிடுகிறார்.

சுற்றோட்ட வேகமும் கொடுப்புச் சிக்கனமும் குறிப்பிட்டவையாக இருக்க உள்ளபடியே சுற்றியோடும் பணத்தின் அளவு எப்படி சரக்குகளின் விலையாலும் கொடுக்கல் வாங்கல்களின்

எண்ணிக்கையாலும் நிர்ணயிக்கப்படுகிறது என்று சாமானிய பணச்சுற்றோட்டத்தைப் பரிசீலித்துக் கொண்டிருந்தபோதே தெளிவாக்கி விட்டோம் - (முதல்பாகம், அத்தியாயம் III, பிரிவு 2). இதே விதிதான் நோட்டுகளின் சுற்றோட்டத்தையும் ஆளுகிறது.

பின்வரும் அட்டவணை பொதுமக்களின் கையிலிருக்கும் இங்கிலாந்து வங்கி நோட்டுகளின் வருட சராசரியைக் காட்டுவதாகும்; £5, £10 நோட்டுகளாகவும், £20 முதல் £100 வரையிலான நோட்டுகளாகவும், £200 முதல் £1000 வரையிலான நோட்டுகளாகவும் பிரித்துத் தரப்படுகிறது; மொத்த பணப் புழக்கத்தில் இந்த பிரிவுகள் ஒவ்வொன்றுக்குமான சதவீதங்கள் தரப்படுகின்றன. தொகைகள் ஆயிரக்கணக்கில் குறிக்கப்படுகின்றன, அதாவது கடைசி மூன்று இலக்கங்கள் தரப்படவில்லை*

(வ.ச.1858, பக்கம் XXVI)ஆக, புழக்கத்தில் இருக்கும் வங்கி - நோட்டுகளின் மொத்தத் தொகை 1844க்கும் 1857க்கும் இடையில் திட்டவட்டமாய் குறைந்து போயிற்று; ஆனால் வர்த்தகமானது,

| ஆண்டு | £5 - 10 நோட்டுகள் | % | £20 - 100 நோட்டுகள் | % | £200-1,000 நோட்டுகள் | % | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1844 | 9,263 | 45.7 | 5,735 | 28.3 | 5,253 | 26.0 | 20,241 |
| 1845 | 9,698 | 46.9 | 6,082 | 29.3 | 4,942 | 23.8 | 20,722 |
| 1846 | 9,918 | 48.9 | 5,778 | 28.5 | 4,590 | 22.6 | 20,286 |
| 1847 | 9,591 | 50.1 | 5,498 | 28.7 | 4,066 | 21.2 | 19,155 |
| 1848 | 8,732 | 48.3 | 5,046 | 27.9 | 4,307 | 23.8 | 18,085 |
| 1849 | 8,692 | 47.2 | 5,234 | 28.5 | 4,477 | 24.3 | 18,403 |
| 1850 | 9,164 | 47.2 | 5,587 | 28.8 | 4,646 | 24.0 | 19,398 |
| 1851 | 9,362 | 48.1 | 5,554 | 28.5 | 4,557 | 23.4 | 19,473 |
| 1852 | 9,839 | 45.0 | 6,161 | 28.2 | 5,856 | 26.8 | 21,856 |
| 1853 | 10,699 | 47.3 | 6,393 | 28.2 | 5,541 | 24.5 | 22,653 |
| 1854 | 10,665 | 51.0 | 5,910 | 28.5 | 4,234 | 20.5 | 20,709 |
| 1855 | 10,628 | 53.6 | 5,706 | 28.9 | 3,459 | 17.5 | 19,793 |
| 1856 | 10,680 | 54.4 | 5,645 | 28.7 | 3,323 | 16.9 | 19,648 |
| 1857 | 10,659 | 54.7 | 5,567 | 28.6 | 3,241 | 16.7 | 19,467 |

(*) இந்த அட்டவணை மார்க்ஸ் எடுத்துக்காட்டிய ஆதாரத்தின் பட நகலில் இருந்து தரப்படுகிறது. இதன் அறுதி எண் விவரங்கள் எல்லாமே சரியானவை என்பதற்கில்லை:- ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

ஏற்றுமதி-இறக்குமதி விவரங்களிலிருந்து தெரியவந்தபடி இருமடங்குக்கு மேல் அதிகமாயிற்று. £5, £10 ஆகிய சிறுதிற வங்கி-நோட்டுகள் 1844இல் £9,263,000 ஆக இருந்தவை 1857இல் £10,659,000ஆகக் குறைந்திருப்பதை அட்டவணையிலிருந்து அறிய முடிகிறது. அதே காலத்தில் இதற்கிணையாகவே தங்கச் சுற்றோட்டம் குறிப்பிடத்தக்கவாறு பெரிதும் அதிகரித்தது. மறுபுறம், உயர் மதிப்பு நோட்டுகள் (£200 முதல் £1,000) 1852இல் £5,856,000 ஆக இருந்தவை 1857இல் £3,241,000 ஆகக் குறைந்துவிட்டன; அதாவது £2½ மிலியனுக்கு மேல் குறைந்துவிட்டன. இதற்குத் தரப்படும் விளக்கம் என்னவென்றால்: '1854 ஜூன் 8ஆம் நாள் இலண்டன் தனியார் வங்கியாளர்கள் கூட்டுப் பங்கு வங்கிகளைத் தீர்வக ஏற்பாடுகளில் சேர்த்துக் கொண்டார்கள்; சிறிது காலம் கழித்து இறுதித் தீர்வு இங்கிலாந்து வங்கியில் சரிக்கட்டப்பட்டது. அந் நிறுவனத்தில் பல்வேறு வங்கிகளும் வைத்துள்ள கணக்குகளில் ஒன்றிலிருந்து இன்னொன்றுக்கு மாற்றம் செய்வதன் மூலம் இப்போது அன்றாடத் தீர்வுகள் நடைபெறுகின்றன. இந்த ஏற்பாடு கைக் கொள்ளப்பட்டதால் வங்கியாளர்கள் தம் கணக்குகளை சரிக்கட்டுவதற்காக முன்பெல்லாம் பயன்படுத்தி வந்த உயர்வகை நோட்டுகள் இப்போது அவசியப்படவில்லை, (வ.ச.1858, பக்கம் V).

மொத்த வர்த்தகத்தில் பணத்தின் பயன்பாடு எவ்வளவு மிகச் சிறிய குறைந்த பட்சமாய் குறைக்கப்பட்டுவிட்டது என்பதை முதல் பாகத்தில் தரப்பட்ட அட்டவணையிலிருந்து (அத்தியாயம் III குறிப்பு 103) அறியலாம். இந்த அட்டவணையை வங்கிக் குழுவிடம் மாரிஸன், தீலான் &கம்பெனி சமர்ப்பித்தது - சில்லறை வணிகர் தமக்குத் தேவையான சகலவகைச் சரக்குகளையும் ஒரே இடத்தில் வாங்கக்கூடிய விதத்தில் லண்டனில் இருக்கும் மிகப்பெரிய வியாபார நிறுவனங்களில் இதுவும் ஒன்று.

வி.நியூமார்ச் அளித்த சாட்சியத்தின்படி (வங்கிக்குழு 1857 எண் 1741), சுற்றோட்ட ஊடகத்திலான சிக்கனத்திற்கு வேறு பல காரணிகளும் உதவிபுரிந்தன; அவையாவன: பென்னி அஞ்சல், இருப்புப் பாதைகள், தந்தி, சுருங்கச் சொல்லின் மேம்பட்ட தொடர்புச் சாதனங்கள், இதனால் இங்கிலாந்து கிட்டத்தட்ட அதே வங்கி நோட்டுப் புழக்கத்தைக் கொண்டு இப்போது முன்போல் ஐந்தாறு மடங்கு அலுவல் நடத்த முடிந்தது. ஆனால் இதற்கு அடிப்படைக் காரணம் £10க்கு மேற்பட்ட உயர்மதிப்பு நோட்டுகளைப் புழக்கத்திலிருந்து

விலக்கிக் கொண்டதுதான் என்றும் சொல்லப்படுகிறது. ஸ்காட்லாந்திலும் அயர்லாந்திலும்-அங்கே £1 நோட்டுகளும் புழக்கத்திலுள்ளன - நோட்டுப் புழக்கம் சுமார் 31% உயர்ந்திருப்பதற்கு இதுவே இயல்பான காரணமாய் நியூமார்ச்சுக்குத் தெரிகிறது (1747). ஐக்கிய முடியரசில் £1 நோட்டுகள் உட்பட வங்கி-நோட்டுகளின் மொத்தப் புழக்கம் £39 மிலியன் எனப்படுகிறது (1749). தங்கப் புழக்கம் £70 மிலியன் (1750). ஸ்காட்லாந்தில் நோட்டுகளின் புழக்கம் 1834இல் £3,120,000; 1844இல் £ 3,020,000; 1854இல் £4,050,000 (1752).

இந்த விவரங்களிலிருந்தே தெளிவாகிற உண்மை என்னவென்றால்; வங்கி-நோட்டுகள் எப்போது வேண்டுமானாலும் உலோகப் பணத்துக்கு மாற்றக் கூடியவையாய் இருக்கும்வரை, நோட்டு வெளியிடும் வங்கிகள் புழக்கத்திலிருக்கும் நோட்டுகளின் எண்ணிக்கையை அதிகமாக்க முடியவே முடியாது. [மாற்றமுடியாத காகிதப் பணம் இங்கே கருத்தில் கொள்ளப்படவே இல்லை. மாற்றமுடியாத வங்கி-நோட்டுகள் உள்ளபடியே அரசுக் கடன்-செலாவணியை ஆதாரமாய்க் கொண்டிருக்கும் இடங்களில் மட்டுமே பொதுவான சுற்றோட்ட ஊடகம் ஆக முடியும். இன்று ருஷ்யாவில் நடப்பது இதுவே. ஆகவே இந்த நோட்டுகள் அரசினால் வெளியிடப்படும் மாற்ற முடியாத காகிதப் பணத்திற்குரிய விதிகளுக்கு உட்பட்டவையாகும். இந்த விதிகள் முதல் பாகத்திலேயே விவரிக்கப்பெற்றன. (அத்தியாயம் III. பிரிவு 2,இ) 'நாணயமும் மதிப்பின் அடையாளங்களும் - பி.எங்கெல்ஸ்]

புழக்கத்தில் இருக்கும் நோட்டுகளின் அளவானது புரள்வுத் தேவைகளால் நிர்ணயிக்கப்படுகிறது; தேவைக்கதிகமான ஒவ்வொரு நோட்டும் அதை வெளியிட்ட இடத்திற்கே உடனடியாக திரும்பி வந்துவிடுகிறது. இங்கிலாந்தில் இங்கிலாந்து வங்கி நோட்டுகள் மட்டுமே எல்லாவிடத்தும் சட்டச் செலாவணியாக புழக்கத்தில் இருப்பதால் நாம் இங்கே வட்டிக் கடை வங்கிகளின் நோட்டுப் புழக்கம் அற்பமானது, வெறும் வட்டார அளவிலானது.

1858ஆம் வருட வங்கிக் குழுவின் முன்னால் இங்கிலாந்து வங்கியின் ஆளுநர் திருவாளர் நீல் அளித்த சாட்சியம்: 'எண் 947. (கேள்வி:) என்ன வழிமுறைகளைக் கையாண்டாலும் பொதுமக்களிடம் இருக்கும் நோட்டுகளின் அளவு மாறாதிருப்பதாக சொல்கிறீர்கள்; அது சுமாராய் £20,000,000 இருக்குமா?-சாதாரண காலத்தில் பொதுமக்களின் பயன்பாட்டுக்குச் சுமாராய் £20,000,000 தேவைப்படுவதாகத்

தோன்றுகிறது. ஆண்டு முழுவதிலும் காலவட்டமாய்ச் சுழன்று வரும் விசேஷமான தருணங்களில் இன்னும் £1,000,000. அல்லது £1,500,000 என்னும் அளவுக்கு உயர்ந்து போகிறது. பொது மக்களுக்கு கூடுதலாய் வேண்டியிருந்தால் எப்போதும் அவர்கள் இங்கிலாந்து வங்கியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம் என்று குறிப்பிட்டேன்.'—'948. பீதிக் காலத்தில் பொதுமக்கள் நோட்டுகளின் அளவை குறைக்கவிட மாட்டார்கள் என்றீர்கள்; இதற்கு விளக்கம் அளியுங்கள்:—பீதி ஏற்படும் தருணங்களில் நோட்டுகளைப் பெற்று அனுபவிக்கும் முழு அதிகாரமும் பொதுமக்களுக்கு இருப்பதாக நம்புகிறேன்; மேலும் வங்கிக்கு கடன் பொறுப்பு உள்ளவரை, அவர்கள் அந்தப் பொறுப்பைப் பயன்படுத்தி வங்கியிலிருந்து நோட்டுகள் பெறலாமே.'—'949 அப்படியானால் சர்வசதா காலமும் சுமாராய் £20,000,000 சட்டச் செலாவணித் தேவைப்படுவதாகத் தோன்றுகிறதே?—பொதுமக்களிடம் £ 20,000,000 நோட்டுகள்; இது மாறுகிறது. £18,500,000, £19,000,000, £20,000,000 இப்படி இருக்கிறது; சராசரியாக எடுத்துக் கொண்டால், £19,000,000 முதல் £20,000,000 வரை என்று சொல்லலாம்.'

வர்த்தக இன்னல் தொடர்பான பிரபுக்கள் சபை குழுவின் முன்னால் (வ.இ.1848/57) தாமஸ் டுக் அளித்த சாட்சியம், எண் 3094: 'வங்கியானது பொதுமக்களின் கையிலிருக்கும் அதன் நோட்டுப் புழக்கத்தின் அளவை தன் விருப்பப்படி விரிவாக்குவதற்கு அதிகாரம் இல்லை; ஆனால் பொதுமக்களின் கையிலிருக்கும் நோட்டுகளின் அளவை குறைப்பதற்கு அதிகாரம் உண்டு; ஆனால் பெரிதும் வலிந்து காரியமாற்றாமல் இப்படிச் செய்ய முடியாது.'

நாட்டிங்காமில் 30 ஆண்டு காலம் வங்கியாளராய் இருந்த ஜே.சி.ரைட் பொது மக்களுக்குத் தேவைப்படுவதற்கும் அவர்கள் வேண்டும் என்று கேட்பதற்கும் அதிகமாய் நோட்டுகளைப் புழக்கத்தில் வைத்திருப்பது ஒரு வட்டிக்கடை வங்கிக்கு சாத்தியமாகாது என்பதை விரிவாய் விளக்கிச் சொன்ன பிறகு இங்கிலாந்து வங்கியின் நோட்டுகளைப் பற்றிச் சொல்கிறார் (வ.இ.1848/57). எண் 2844: 'இங்கிலாந்து வங்கிக்கு' (நோட்டு வெளியிடுவது தொடர்பாக) 'தடையேதும் இருப்பதாக நானறியேன்; ஆனால் நோட்டுப் புழக்கம் மிகையாய் இருந்தால் வைப்புகளில் போய்ச் சேர்ந்து வேறு பெயர் பெற்றுவிடும்."

ஸ்காட்லாந்திலும் இதே நிலைமைதான். அங்கு அநேகமாய் காகிதப் பணம் மட்டுமே புழக்கத்தில் இருப்பதாகச் சொல்லிவிடலாம்.

*ஏனென்றால் அயர்லாந்தில் போலவே ஸ்காட்லாந்திலும் £1 நோட்டுகளும் கூட பயன்படுத்தப்படுகின்றன. 'ஸ்காட்லாந்தியர்களுக்கு தங்கம் பிடிக்காது.' ஸ்காட்லாந்திய வங்கியொன்றின் இயக்குநரான கென்னடி வங்கிகள் அவற்றின் நோட்டுப் புழக்கத்தைக் குறைக்கவே முடியாது என்று பறைசாற்றுகிறார். 'உள்நாட்டு கொடுக்கல்-வாங்கல்களை நிகழ்த்துவதற்கு நோட்டுகளோ தங்கமோ தேவைப்படுவதால் இந்தக் கொடுக்கல்- வாங்கல்கள் இருக்கும்வரை வங்கியாளர்கள் தம் வைப்பாளர்களின் வேண்டல்கள் மூலமாகவோ வேறு ஏதேனும் வடிவிலோ இந்த கொடுக்கல்-வாங்கல்களுக்கு தேவையான அளவு செலாவணியை வழங்கித்தான் ஆக வேண்டும் என்று நினைக்கிறேன்...ஸ்காட்லாந்திய வங்கிகள் தம் கொடுக்கல் - வாங்கல்களுக்கு வரம்பிடலாம், ஆனால் தம் செலாவணியைக் கட்டுப்படுத்த முடியாது.' (மேலது, எண் 3446, 3448.) இதேபோல் ஸ்காட்லாந்து யூனியன் வங்கி இயக்குநர் ஆண்டர்சன் சொல்கிறார் (மேலது, எண் 3578): 'உங்களுக்கிடையிலேயே (ஸ்காட்லாந்திய வங்கிகளிடையே) பரிவர்த்தனைகள் செய்து கொள்ளும் அமைப்பு எந்த ஒரு வங்கியும் மிகையாக நோட்டு வெளியிடுவதைத் தடுத்து விடுகிறதா? ஆம்; பரிவர்த்தனைகளுக்கான அமைப்பை விட்வும் சக்தி வாய்ந்த தடை ஒன்று இருக்கிறது' (உண்மையில் அதற்கும் இதற்கும் எவ்வித் தொடர்புமில்லை, ஆனால் ஒவ்வொரு வங்கியின் நோட்டுகளும் ஸ்காட்லாந்து முழுவதிலும் புழக்கத்தில் இருக்கமுடிவதை அது உறுதி செய்கிறது) 'வங்கியில் கணக்கு வைத்துக் கொள்ளும் வழக்கம் ஸ்காட்லாந்தில் பரவலாய் இருப்பதைச் சொல்கிறேன்; கொஞ்சமாவது பணம் வைத்திருக்கிற ஒவ்வொருவரும் வங்கியில் கணக்கு வைத்துள்ளார், உடனே தேவைப்படாத பணத்தை ஒவ்வொரு நாளும் வங்கியில் சேர்ப்பிக்கிறார். இதனால்தான் ஒவ்வொரு நாளும் அலுவல் முடிவடையும் நேரத்தில் அவரவர் சட்டைப் பையில் இருப்பது தவிர வங்கிகளுக்கு வெளியே பணம் இருத்தல் அரிது.'*

*அயர்லாந்திலும் இதே நிலைமைதான்: அயர்லாந்து வங்கியின் ஆளுநர் மக்டொனெல், அயர்லாந்து மாகாண வங்கியின் இயக்குநர் முர்ரே ஆகியோர் மேற்கூறிய அதே குழுவின் முன்னால் அளித்த சாட்சியத்திலிருந்து இது தெரிய வருகிறது.*

நோட்டுப் புழக்கமானது இங்கிலாந்து வங்கியின் விருப்பத்தைப் பொறுத்தது அல்ல என்பது போலே இந்த நோட்டுகளின் மாறும்

தகுதிக்கு உத்திரவாதம் அளிக்கும் விதத்தில் வங்கியின் காப்பறைகளில் இருந்து வரும் தங்கச் சேம இருப்பின் நிலையையும் பொறுத்ததல்ல. '*1846 செப்டம்பர் 18இல் இங்கிலாந்து வங்கியின் நோட்டுப் புழக்கம் £20,900,000ஆக இருந்தது; வங்கியில் இருந்த பொன்-வெள்ளிப் பாளம் £16,273,000. 1847 ஏப்ரல் 5இல் நோட்டுப் புழக்கம் £20,815,000 ஆகவும் பொன்-வெள்ளிப் பாளம் £10,246,000 ஆகவும் இருந்தது.... நாட்டின் செலாவணி சற்றும் சுருங்காமலே ஆறு மிலியன் தங்கம் ஏற்றுமதி செய்யப்பட்டது தெளிவாகிறது.*' (ஜே.ஜி.கின்னியர், **நெருக்கடியும் செலாவணியும்,** லண்டன், 1847, பக்கம் 5). மெய்தான், இது இங்கிலாந்தில் இப்போது நிலவும் நிலைமைகளில் மட்டுமே பொருந்தும். இங்கும் கூட சட்ட முறையானது நோட்டு வெளியீட்டுக்கும் உலோகச் சேம இருப்புக்கும் இடையில் வேறொரு விகிதத்தை விதிக்காமல் இருக்கும்வரை மட்டுமே பொருந்தும்.

ஆகவே, தொழில்-வர்த்தக தேவைகள்தான் புழக்கத்தில் உள்ள பண அளவில் - நோட்டுகள், தங்கம்-தாக்கம் செலுத்துகின்றன. இங்கு முதலாவதாகக் கவனிக்க வேண்டியது காலகட்ட அலைவுகள் ஆகும்; பொதுவான தொழில் வர்த்தக நிலவரம் எப்படி இருந்த போதிலும் இந்த அலைவுகள் ஒவ்வோர் ஆண்டும் திரும்பத் திரும்ப நிகழ்கின்றன; இதனால் கடந்த 20 ஆண்டுகளாய் '*புழக்கமானது ஒரு மாதத்தில் உயர்ந்தும், வேறொரு மாதத்தில் தாழ்ந்தும், குறிப்பிட்ட இன்னொரு மாதத்தில் நடுத்தரமாகவும் இருக்கக் காணலாம்.*' (நியூமார்ச் வ.ச.1857, எண் *1650*).

இவ்வாறு, ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்டு மாதத்தில் ஒருசில மிலியன் தொகை - பெரும்பாலும் தங்கமாக-அறுவடைச் செலவுகளைச் சமாளிப்பதற்காக இங்கிலாந்து வங்கியிலிருந்து உள்நாட்டுப் புழக்கத்திற்குச் செல்கிறது. இதில் தீர்க்கப்பட வேண்டிய முக்கியக் கொடுப்புகளாய் அமைவது கூலியே ஆதலால், வங்கி-நோட்டுகள் இங்கிலாந்தில் இந்த நோக்கத்திற்கு அவ்வளவாகப் பயன்படவில்லை. வெளியில் செல்லும் பணம் ஆண்டு இறுதிக்குள் வங்கிக்கே திரும்பி வந்துவிடுகிறது. ஸ்காட்லாந்தில் பொற்காசுகளுக்குப் பிரதியாக அநேகமாய் நோட்டுகள்தான் தரப்படுகின்றன; ஆக இங்கே மேற்சொன்னது போன்ற நிலைமையில் நோட்டுப் புழக்கமே விரிவடைகிறது; அதாவது ஆண்டில் இருமுறை - மேயிலும் நவம்பரிலும் - 3 மிலியனிலிருந்து 4 மிலியனாக அதிகரிக்கிறது; இரு வாரத்துக்குப் பின் மீள்வரத்துத் தொடங்கி ஒரு மாதத்தில்

அனேகமாய் முற்றுப் பெற்றுவிடுகிறது. (ஆண்டர்சன், வ.இ.1848/57, எண் 3595 - 3600).

இங்கிலாந்து வங்கியின் நோட்டுப் புழக்கமானது 'ஆதாயப் பங்களவுகள்,' அதாவது தேசக்கடன் மீதான வட்டி காலாண்டு தோறும் தரப்படுவதாலும், மூன்று மாதத்துக்கொருமுறை தற்காலிக அலைவுக்குள்ளாகிறது; வங்கி-நோட்டுகள் முதலில் புழக்கத்திலிருந்து விலக்கி எடுக்கப்பட்ட பிறகு பொது மக்களிடையே விநியோக மாகின்றன; ஆனால் இவை வெகுவிரைவில் திரும்பி வந்துவிடுகின்றன. நோட்டுப் புழக்கத்திலான இந்த அலைவு மொத்தம் £2 ½ மிலியன் இருக்குமென்று வெக்குலின் சொல்கிறார் (வ.இ. 1857, எண் 38). பேர் போன ஓவரெண்டு, குர்னீ&கம்பெனி நிறுவனத்தைச் சேர்ந்த திருவாளர் சாப்மன் பணச் சந்தையில் இவ்விதம் ஏற்படும் குலைவின் அளவு இன்னும் மிக அதிகமாய் இருக்கும் என்று மதிப்பீடு சொல்கிறார். 'ஆதாயப் பங்களவுகளை எதிர்பார்த்து £ 6,000,000 அல்லது £7,000,000 வருவாயைப் புழக்கத்திலிருந்து எடுத்துவிடும்போது, இடைப்பட்ட காலத்தில் அதை கிடைக்கச் செய்வதற்கு யாரேனும் வழி செய்தாக வேண்டும்.' (வ.ச.1857, எண் 5196).

தொழில்துறைச் சகடத்தின் பல்வேறு கட்டங்களுக்கும் ஏற்றவாறு சுற்றோட்ட ஊடகத்தின் அளவில் ஏற்படும் அலைவுகள் இன்னும் கூட முக்கியத்துவம் வாய்ந்தவையும் நீடித்து இருக்கக் கூடியவையுமாகும். இந்த பிரச்சினை குறித்து அந்த நிறுவனத்தின் வேறொரு பங்காளர் என்ன சொல்கிறார் பார்ப்போம், மதிப்பு வாய்ந்த குவேக்கர் சாமுவேல் குர்னீ சொல்கிறார் (வ.இ.1848/57, எண் 2645): 'பொதுமக்களின் கையிலிருக்கும் வங்கி-நோட்டுகளின் அளவு (1847) அக்டோபர் இறுதியில் £20,800,000 ஆக இருந்தது. அப்போது பணச்சந்தையில் வங்கி-நோட்டுகள் கிடைப்பது மிகக் கடினமாய் இருந்தது. 1844ஆம் வருடச் சட்டம் விதித்த கட்டுத்தளை காரணமாய் வங்கி-நோட்டுகளை அடைய முடியாது என்னும் அச்ச உணர்வினால் இந்நிலை ஏற்பட்டது. இப்போது (1848 மார்ச்) பொதுமக்களின் கையிலிருக்கும் வங்கிநோட்டுகளின் அளவு...£17,700,000; ஆனால் வர்த்தகப் பீதி ஏதும் இப்போது இல்லையாதலால் இது தேவைப்படுவதை விடவும் மிக அதிகமாகும். தங்களால் பயன்படுத்திக் கொள்ள முடிந்ததை விட அதிக அளவில் வங்கி - நோட்டுகள் வைத்திராத வங்கி-நிறுவனமோ வட்டிக் கடையோ லண்டனில் கிடையாது.'—2650. இங்கிலாந்து வங்கியின் கைப்பொறுப்பில் இல்லாத வங்கி-நோட்டுகளின் அளவானது

முனைப்பான பணப் புழக்க நிலவரத்தை கணிப்பதற்கு போதுமானது அல்லவே அல்ல; கூடவே வர்த்தக உலகின் நிலவரத்தையும் கடன்-செலாவணி நிலவரத்தையும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளாமல் அதைக் கணிக்க இயலாது.'—2651. இப்போது பொதுமக்களின் கையிலிருக்கும் பணப் புழக்கத்தின் அளவு உபரியாய் இருப்பது போல் நமக்கு ஏற்படும் எண்ணத்திற்கு இப்போதைய நமது தேக்க நிலைதான் முக்கியக் காரணம். விலைகள் உயர்ந்தும் கொடுக்கல் வாங்கல்கள் விறுவிறுப்பாயும் இருக்குமானால் £17,700,000 என்பது தடை வரம்புக்குட்பட்டிருப்பது போன்ற எண்ணத்தையே நமக்குத் தரும்.'

தரப்பட்ட கடன்கள் காலம் தவறாமல் திரும்பி வந்துசேரும் விதத்திலும், இவ்விதம் கடன்-மதிப்பு ஆட்டம் காணாமல் இருக்கும் விதத்திலும் தொழில்-வர்த்தக நிலவரம் அமைந்திருக்கும் வரை, புழக்கத்தின் பெருக்கமும் சுருக்கமும் தெழிலதிபர்கள் வணிகர்கள் ஆகியோரின் தேவைகளைப் பொறுத்தே அமையும். தங்கமானது - எப்படியும் இங்கிலாந்தில் - மொத்த வர்த்தகத்தில் இடம் பெறுவதில்லை என்பதாலும், தங்கத்தின் புழக்கமானது, பருவஞ்சார்ந்த அலைவுகளை ஒதுக்கிவிட்டுப் பார்த்தால், சற்றே நீண்ட காலத்துக்கு அவ்வளவாக மாறாத ஒன்றாய் கருதப்படலாம் என்பதாலும், இங்கிலாந்து வங்கியின் நோட்டுப் புழக்கமே இந்த மாற்றங்களைத் துல்லியமாய் அளவிடுவதற்கு போதுமானதாகும். நெருக்கடியை அடுத்துவரும் தேக்கநிலைக் காலத்தில்தான் புழக்கம் மிகக் குறைவு; வேண்டல் புத்துயிர் பெறும் போது சுற்றோட்ட ஊடகம் கூடுதலாய் தேவைப்படுகிறது; செழுமை வளர வளர இந்தத் தேவையும் வளருகிறது; விறுவிறுப்பும் ஊகவாணிகமும் மிகையாகிப் போகும் காலத்தில் சுற்றோட்ட ஊடகம் உச்ச அளவை அடைகிறது - திடீரென்று நெருக்கடி மூளுகிறது, நேற்றுவரை நிறைவாய் புழங்கிக் கொண்டிருந்த வங்கி-நோட்டுகள் இரவோடு இரவாய் சந்தையிலிருந்து ஓடி மறைகின்றன; கூடவே உண்டியல் கழிவு செய்வோரும், பிணையத்துக்குப் பணக் கடன் தருவோரும்; சரக்கு வாங்குவோரும் மறைந்துவிடுகிறார்கள். இங்கிலாந்து வங்கியின் உதவி நாடப்படுகிறது - ஆனால் அதன் அதிகாரங்களும் கூட விரைவில் வற்றிப் போகின்றன. உலகமே வங்கி-நோட்டுகளுக்காகக் கூக்குரல் எழுப்பிக் கொண்டிருக்க, சரக்குகளின் உடைமையாளர்கள் அவற்றை விற்க முடியாமல் தவிக்க, ஆனாலும் பணஞ் செலுத்தியாக வேண்டும் என்ற நிலையில் அவர்கள் வங்கி-நோட்டுகளுக்காக எத் தியாகம்

செய்வதற்கும் தயாராய் இருக்க, அதே சமயத்தில் இங்கிலாந்து வங்கியானது 1844ஆம் வருட வங்கிச் சட்டத்தின்படி அதன் நோட்டுப் புழக்கத்தைச் சுருக்கிக் கொள்ளத்தான் வேண்டும். மேற்குறிப்பிட்ட வங்கியாளர் ரைட் சொல்கிறார் (முன்வந்தது, எண் 2930). 'பீதிக் காலத்தில் நாட்டுக்குச் சாதாரணக் காலத்தைப் போல் இருமடங்கு பணப்புழக்கம் தேவைப்படுகிறது; ஏனென்றால் வங்கியாளர்களும் மற்றவர்களும் புழக்கத்தில் இருப்பதைப் பதுக்கி விடுகிறார்கள்.'

நெருக்கடி மூண்ட பிறகு கொடுப்புச் சாதனமே பிரச்சனையாகிறது. ஆனால் இந்தக் கொடுப்புச் சாதன வரவுக்கு ஒவ்வொருவரும் வேறொருவரை சார்ந்திருப்பதாலும், அந்த வேறொருவரால் உரிய தேதியில் கொடுத்து விட முடியுமா என்று யாருக்குமே தெரியாததாலும், சந்தையில் கிடைக்கக் கூடிய கொடுப்புச் சாதனத்தை, அதாவது வங்கி-நோட்டுகளைக் கைப்பற்றுவதற்காக மெய்யாகவே முண்டியடித்துக் கொண்டு ஓடும் நிலை ஏற்படுகிறது. ஒவ்வொருவரும் தம்மால் கைப்பற்ற முடிந்தவரை வங்கி நோட்டுகளைப் பதுக்கி வைக்கிறார்; ஆகவே இந்த நோட்டுகள் மிக அதிகமாய் தேவைப்படும் அதே நாளில் புழக்கத்திலிருந்து மறைந்து விடுகின்றன. 1847 அக்டோபரில் இவ்வகையான பீதி நிலவியபோது பெட்டியிலடைத்து பூட்டி வைத்த வங்கி-நோட்டுகளின் அளவு £4 முதல் £5 மிலியனை தொட்டுவிட்ட தென்பது சாமுவேல் குர்னீயின் மதிப்பீடு (வ.இ.1848/57, எண் 1116). - பி.எங்கெல்ஸ்).

இது தொடர்பாக, குர்னீயின் பங்காளராகிய மேற்படி சாப்மன் 1857ஆம் வருட வங்கிக் குழுவின் முன்னால் விசாரிக்கப்பட்ட போது அளித்த சாட்சியம் பெரிதும் கருத்துக்குரியது. இதுவரை நாம் பரிசீலித்திடாத சில கூறுகளையும் உள்ளடக்கியதாய் இருந்த போதிலும், சாட்சியத்தின் முக்கியப் பகுதியை மூலத்தில் உள்ளபடி அப்படியே இங்கு தருகிறேன்.

திருவாளர் சாப்மன் பின்வருமாறு எடுத்துரைக்கிறார்:

'4963. இதையும் நான் தயங்காமல் சொல்வேன், வெளியில் பணப் புழக்கம் மிகக் குறைவாய் இருக்கும்போது பெரும்தட்டுப்பாடும் நெருக்குதலும் உண்டாகும்படி பணச் சந்தை எந்தவொரு தனிப்பட்ட முதலாளியின் அதிகாரத்துக்கும் உட்பட்டதாய் (லண்டனில் இருப்பது போல்) இருக்கக் கூடாது என்று நினைக்கிறேன். இது சாத்தியமான ஒன்றுதான்.....சுற்றோட்ட ஊடகத்திலிருந்து £1,000,000, அல்லது

£2,000,000 நோட்டுகளை எடுப்பதன் மூலம் ஒரு நோக்கத்தை அடைய வேண்டும் என்றால் அப்படி எடுக்கக் கூடிய ஒன்றுக்கு மேற்பட்ட முதலாளிகள் இருக்கிறார்கள்.' - 4965*. பெரியதோர் ஊக வணிகர் £1,000,000 அல்லது £2,000,000 மதிப்புள்ள கன்சால்பிணை முறிகளை விற்று சந்தையிலிருந்து பணம் எடுக்க முடியும். சமீபத்தில் கூட இதுபோல் நடைபெற்றது. 'இது மிகக் கடுமையான நெருக்குதலைத் தோற்றுவிக்கிறது.'

4967, மேலும் இந்த நோட்டுகள் உற்பத்தித் திறனற்றவை. 'அவருடைய பெரும் குறிக்கோளை அடையப்பயன்படும் போது இதனால் ஒன்றுமில்லை; நிதிகளை வளைத்துப் போடுவது, தட்டுப்பாடு ஏற்படச் செய்வது - இதுதான் அவரது பெரும் குறிக்கோள். இது முழுக்க முழுக்க அவரது சக்திக்குட்பட்ட ஒன்றே.'- எடுத்துக்காட்டாக; ஒருநாள் காலை பங்குச் சந்தையில் பணத்துக்கு பெரும் வேண்டல் இருந்தது; காரணம் யாருக்கும் தெரியவில்லை; யாரோ ஒருவர் சாப்மனிடம் வந்து 7%வட்டிக்கு £50,000 கடன் கேட்டார். தமது வட்டிவீதம் இதை விட மிகக் குறைவு என்பதால் சாப்மன் வியப்புற்றார்; கேட்டபடி கடன் தர ஒப்புக் கொண்டார். பிறகு சீக்கிரமே அந்த ஆள் திரும்பி வந்து 7% வட்டிக்கு மேலும் £50,000 பெற்றுக் கொண்டார். பிறகு 8% வட்டிக்கு £100,000 பெற்றுக் கொண்டார், 8½% வட்டிக்கு இன்னும் கூட பணம் கேட்டார். என்னவோ ஏதோ என்று சாப்மனே சஞ்சலமுற்றார். பிறகுதான் தெரிந்தது, பெரும் பணத்தொகை ஒன்று திடீரென்று சந்தையிலிருந்து எடுக்கப்பட்டு விட்டது என்று. ஆனால் 8% வட்டிக்கு பெருந்தொகை கடனாய்க் கொடுத்தேன் அதற்கு மேல் போக அச்சமாயிருந்தது; என்ன நடக்கப் போகிறது என்று தெரியவில்லை' என்கிறார் சாப்மன்.

'நோட்டுகளாக £19 முதல் £20 மிலியன் வரை அநேகமாய் எப்போதுமே பொதுமக்களின் கையிலிருப்பதாகக் கொள்ளபட்டாலும், இந்த நோட்டுகளில் உள்ளபடியே சுற்றியோடுகிற பகுதியும் வங்கிகளில் சேம இருப்பாக ஒய்ந்திருக்கிற பகுதியும் ஓயாமல் கணிசமாய் மாறிக் கொண்டே இருப்பதை மறந்துவிடலாகாது. வங்கிகளில் ஒய்ந்திருக்கும் சேம இருப்பு அதிகமாய் இருந்தால், அதாவது உள்ளபடியே புழக்கத்தில் இருப்பது குறைவாய், இருந்தால், பணச்சந்தையின் கண்ணோட்டத்தில் சுற்றோட்டம் நிறைந்து இருப்பதாகவும் பணம் நிறைவாய்

(*) 1894ஆம் வருடத்திய ஜெர்மன் பதிப்பில் 4995 என்று இருக்கிறது. - ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

இருப்பதாகவும் பொருள்படும்; சேம இருப்பு குறைவாய் இருந்தால், அதாவது உள்ளபடியே புழக்கத்தில் இருப்பது நிறைவாய் இருந்தால், பணச்சந்தையின் மொழியில் சுற்றோட்டம் குறைவாய் இருப்பதாகவும், பணம் தட்டுப்பாடாய் இருப்பதாகவும் சொல்லப்படும்-வேலையில்லாமல் ஓய்ந்திருக்கும் கடன்-மூலதனத்தை குறிக்கும் பகுதி சிறிதாய் உள்ளது என்று பொருள். தொழில்துறைச் சகடத்தின் கட்டங்களுக்குத் தொடர்பின்றி பணப்புழக்கம் மெய்யாகவே பெருக்கமோ அல்லது சுருக்கமோ அடைவது என்பது பொதுமக்களுக்குத் தேவைப்படும் பண அளவு மாறாதிருக்க-செய்நுட்பக் காரணங்களால் மட்டுமே நேரிடுவதாகும். எடுத்துக்காட்டாக வரிகளோ தேசக் கடன் மீதான வட்டியோ செலுத்த வேண்டிய தேதிகளில் இவ்விதம் நேரிடுகிறது. வரிசெலுத்தப் படும்போது, நோட்டுகளும் தங்கமும் வழக்கத்துக்கதிகமாய் இங்கிலாந்து வங்கியில் வந்து சேருகின்றன. இதனால் பணப் புழக்கம், அதற்கான தேவை என்னவாய் இருப்பினும், சுருக்கமடைகிறது. தேசக் கடன் மீதான ஆதாயம் பங்களவுகள் பொதுமக்களுக்குச் செலுத்தப்படும் போது நேர்மாறாய் நிகழ்கிறது. முதலாம் நேர்வில், சுற்றோட்ட ஊடகம் வேண்டுமென்பதற்காக வங்கியிலிருந்து கடன்கள் பெறப்படுகின்றன. இரண்டாம் நேர்வில் தனியார் வங்கிகளின் சேம இருப்புகள் அப்போதைக்கு வளருவதால் அவைகோரும் வட்டி வீதம் குறைந்துபோகிறது. இதற்கும் சுற்றோட்ட ஊடகத்தின் அறுதியான மொத்த அளவுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. ஆனால் இந்தச் சுற்றோட்ட ஊடகத்தைப் புழக்கத்தில் விடும் வங்கி நிறுவனத்தைப் பொறுத்தவரை இது கருத்துக்குரியதே; அந் நிறுவனத்திற்கு இந்நிகழ் முறை கடன்-மூலதனத்தின் உடைமை மாற்றமாக அமைந்து விடுகிறது; எனவேதான் இதிலிருந்து அது இலாபம் அடைகிறது.

முதல் நேர்வில், சுற்றோட்ட ஊடகம் தற்காலிகமாய் இடம் பெயர்கிறது, அவ்வளவுதான். காலாண்டு வரிகள் செலுத்த வேண்டிய தேதியும் தேசக் கடன் மீதான காலாண்டு ஆதாயப்பங்களவுகள் கொடுபட வேண்டியத் தேதியும் நெருங்கி வரும் போது குறைந்த வட்டிக்குக் குறுங்காலக் கடன்கள் வழங்குவதன் மூலம் இங்கிலாந்து வங்கி இந்த இடப் பெயர்ச்சியைச் சரிக்கட்டுகிறது. இவ் வழியில் கூடுதலாய் வெளியிடப்படும் நோட்டுகள் முதலாவதாக வரி செலுத்துவதால் உண்டாகும் இடைவெளியை நிரப்புகின்றன; விரைவில் அவை வங்கிக்கு திருப்பிச் செலுத்தப்படும்போது ஆதாயப்

பங்களவுகள் கொடுக்கப்பட்டதன் மூலம் பொதுமக்களிடம் போய்ச் சேர்ந்த உபரி நோட்டுகள் திரும்பி வந்து சேருகின்றன.

இரண்டாம் நேர்வில், பணப்புழக்கம் குறைவாகவோ நிறைவாகவோ இருப்பது என்பதெல்லாம் ஒரே அளவு சுற்றோட்ட ஊடகம் முனைப்பு வாய்ந்த சுற்றோட்டமாகவும் வைப்புகளாகவும் (அதாவது கடன் தருவதற்கான கருவியாகவும்) வகைபிரியும் பரப்பீட்டிலான வேறுபாடுதானே தவிர வேறல்ல.

மறுபுறம், எடுத்துக்காட்டாக இங்கிலாந்து வங்கிக்கு தங்கம் வந்து சேருவதன் அடிப்படையில் அது வெளியிடும் நோட்டுகளின் எண்ணிக்கை கூடுதலாக்கப்படுமானால், அவ்வங்கிக்கு வெளியே உண்டியல்களைக் கழிவு செய்து காசாக்குவதற்கு இந்த நோட்டுகள் பயன்படுகின்றன; கடன்கள் திருப்பிச் செலுத்தப்படும் போது அவை வங்கியிடமே திரும்பிவந்து சேருகின்றன. அதாவது புழக்கத்தில் இருக்கும் நோட்டுகளின் அறுதி அளவு அப்போதைக்கு மட்டுமே அதிகரிக்கிறது.

தொழில் பெருக்கத்தால் (விலைகள் ஒப்பளவில் குறைவாய் இருந்தாலும் இது சாத்தியமே) பணப் புழக்கம் நிறைவாய் இருந்தால், உயர்ந்து செல்லும் இலாபத்தில் இருந்தும் கூடுதலான புதிய முதலீடுகளில் இருந்தும் விளைவதாகிய கடன்-மூலதனத்துக்கான வேண்டல் காரணமாய் வட்டிவீதம் ஒப்பளவில் உயர்வாய் இருக்கலாம். தொழிற் சுருக்கத்தினாலோ ஒரு வேளை கடன்-செலாவணி ஏராளமாய் கிடைப்பதாலோ பணப் புழக்கம் குறைவாய் இருந்தால், விலைகள் உயர்வாய் இருந்தாலும் வட்டி வீதம் குறைவாய் இருக்கலாம்.*

பணமுடை நிலவும் காலங்களில் மட்டுமே பணப் புழக்கத்தின் அறுதி அளவு வட்டி வீதத்தை நிர்ணயிக்கும் காரணிகளில் ஒன்றாகிறது. நிறைவான சுற்றோட்டத்திற்கான வேண்டல் என்பது கடன்-செலாவணி இல்லாமற் போவதால் சேர்ப்பு ஊடகத்திற்கான வேண்டலையே பிரதிபலிக்கக் கூடும் (பணச் சுற்றோட்டத்தின் வேகமும் குறிப்பிட்ட அதே பணக் கூறுகள் ஓயாமல் கடன்-மூலதனமாக மாற்றப்படுவதன் வேகமும் குறைந்து போவதை கருதாமல் ஒதுக்கிவிடுகிறோம்) -1847இல் இப்படித்தான் நிகழ்ந்தது; வங்கிச் சட்டம் நிறுத்தி வைக்கப்பட்டதானது பணப்புழக்கம் விரிவடைவதற்கு

(*) இந்தப்பதிப்பு : பக்கம். - பதிப்பாசிரியர்.

*வழிசெய்யாவிட்டாலும் பதுக்கி வைக்கப்பட்ட நோட்டுகளை வெளியே வரச் செய்து முனைப்பாய்ச் சுற்றியோடச் செய்வதற்கு போதுமானதாய் இருந்தது அல்ல; இத்தகைய நிலைமைகளில் உள்ளபடியே கூடுதலான சுற்றோட்ட ஊடகம் தேவைப்படலாம் - 1857இல் இப்படித்தான் நிகழ்ந்தது, வங்கிச் சட்டம் நிறுத்தி வைக்கப்பட்ட பிறகு சிறிது காலம் பணப் புழக்கம் உண்மையிலேயே அதிகரித்தது.*

*மற்றபடி, பணப் புழக்கத்தின் அறுதி அளவு வட்டி வீதத்தின் மீது எவ்விதத் தாக்கமும் செலுத்துவதில்லை. ஏனென்றால் முதலாவதாக - செலாவணியின் சிக்கனமும் ஓட்ட வேகமும் மாறாதிருக்க வட்டி வீதமானது சரக்கு விலைகளாலும் கொடுக்கல் வாங்கல்களின் அளவாலும் நிர்ணயிக்கப்படுகிறது (பொதுவாகச் சொன்னால் இவற்றில் ஒன்று மற்றதன் விளைவை செயலிழக்கச் செய்துவிடுகிறது); இறுதியாகப் பார்த்தால் கடன்-செலாவணி நிலவரத்தால் நிர்ணயிக்கப் படுகிறது. ஆனால் கடன்-செலாவணி நிலவரம் எவ்விதத்தும் வட்டிவீதத்தால் நிர்ணயிக்கப்படுவதில்லை. இரண்டாவதாக, சரக்கு விலைகளுக்கும் வட்டிக்கும் நேரடி இடையுறவு ஏதும் இருந்தாக வேண்டும் என்பதில்லை.*

*வங்கி வரையறைச் சட்டம் அமலில் இருந்தபோது (1797 - 1819) செலாவணி உபரியாய் இருந்தது, எப்போது வட்டி வீதமானது ரொக்கக் கொடுப்புகளின் மீட்சிக்குப் பின் இருந்ததைவிட மிகவும் உயர்ந்திருந்தது. பிற்பாடு, நோட்டு வெளியீடு வரையறை செய்யப்பட்டதாலும், உண்டியல் விலைக் குறிப்புகள் உயர்ந்துசென்று கொண்டிருந்ததாலும் அது துரிதமாய்க் குறைந்து போயிற்று. 1822, 1823, 1832 ஆண்டுகளில் மொத்தப் பணப்புழக்கம் குறைவாய் இருந்தது, வட்டி வீதமும் குறைவாய் இருந்தது. 1824, 1825, 1836 ஆண்டுகளில் பணப் புழக்கம் நிறைவாய் இருந்தது, வட்டிவீதமும் உயர்ந்தது. 1830 கோடை காலத்தில் பணப் புழக்கம் நிறைவாய் இருந்தது, வட்டி வீதம் குறைவாய் இருந்தது. அநேக இடங்களில் தங்கம் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு, ஐரோப்பா முழுக்க பணப் புழக்கம் பெருகியது, வட்டி வீதமும் உயர்ந்தது. ஆக, வட்டி வீதம் புழக்கத்தில் இருக்கும் பணத்தின் அளவினைப் பொறுத்ததல்ல.*

*சுற்றோட்ட ஊடகத்தை வெளியிடுவதற்கும் மூலதனத்தைக் கடனாய்க் கொடுப்பதற்கும் இடையிலான வேறுபாடு உள்ளபடியான மறுவுற்பத்தி நிகழ்முறையில் மிகச் சிறப்பாய் வெளிப்படுகிறது.*

உற்பத்தியின் பல்வேறு அடக்கக் கூறுகளும் எப்படி ஒன்றுக்கொன்று பரிவர்த்தனை ஆகின்றன என்பதை முன்பே பார்த்தோம் (இரண்டாம் பாகம், பகுதி III). எடுத்துக்காட்டாக மாறும்-மூலதனமானது பொருள்வகையில் தொழிலாளர்களின் வாழ்வுச் சாதனங்களால் ஆனது, அதாவது அவர்களே உற்பத்தி செய்தவற்றில் ஒரு பகுதியால் ஆனது. ஆனால் அது அவர்களுக்குக் கொஞ்சம் கொஞ்சமாய் பண வடிவில் தரப்படுகிறது. இந்தத் தொகையை முதலாளி முன்னீடு செய்தாக வேண்டும். முந்தைய வாரத்தில் தாம் கொடுத்த பழைய பணத்தைக் கொண்டே அதற்கடுத்த வாரத்திலும் புதிய மாறும்-மூலதனத்தை அவரால் கொடுக்க முடிகிறதா என்பது பெரிதும் கடன்-செலாவணி முறையின் ஒழுங்கமைப்பையே பொறுத்தது. மொத்தச் சமுதாய மூலதனத்தின் பல்வேறு அடக்கக் கூறுகளுக்கு இடையே, எடுத்துக்காட்டாக நுகர்வுச் சாதனங்களுக்கும் அந்நுகர்வுச் சாதனங்களை ஆக்கித்தரும் உற்பத்திச் சாதனங்களுக்கும் இடையே நடைபெறும் பரிவர்த்தனைக்கும் இதுவே பொருந்தும். அவற்றின் சுற்றோட்டத்துக்கான பணம் பரிவர்த்தனை செய்து கொள்ளும் தரப்பினரில் ஒருவரால் அல்லது இருவராலும் முன்னீடு செய்யப்பட்டாக வேண்டும் என்று பார்த்தோம். இவ்விதம் முன்னீடு செய்யப்படும் பணம் சுற்றோட்டத்தில் இருந்து வருகிறது. ஆனால் பரிவர்த்தனை முற்று பெற்ற பிறகு அது தன்னை முன்னீடு செய்தவரிடமே திரும்பி வருகிறது; ஏனென்றால் அதை அவர் தாம் உள்ளபடியே ஈடுபடுத்தியுள்ள தொழில்துறை மூலதனத்துக்கு மேலதிகமாய் முன்னீடு செய்தார் (இரண்டாம் பாகம், அத்தியாயம் XX,) கடன்-செலாவணி அமைப்பு வளர்ச்சி பெற்றிருக்கும் போது, பணம் வங்கியாளர்களின் கையில் குவிந்திருப்பதால், பெயரளவுக்காவது அவர்களே அதை முன்னீடு செய்கிறார்கள். இந்த முன்னீடு புழக்கத்தில் இருக்கும் பணத்தை மட்டும் குறிப்பதாகும். இது பணப் புழக்கத்தின் முன்னீடே தவிர, அதனால் புழக்கத்தில் விடப்படும் மூலதனங்களின் முன்னீடல்ல.

*சாப்மன்:* '5062. சில நேரங்களில் பொதுமக்களின் கையில் நோட்டுகள் ஏராளமாய் இருந்தாலும், அவற்றைப் பயன்படுத்திக் கொள்ள முடிவதில்லை.' பீதிக் காலத்திலும் கூட பணம் இருக்கிறது; ஆனால் ஒவ்வொருவருமே அந்தப் பணத்தைக் கடனுக்குரிய மூலதனமாக, கடனுக்குரிய பணமாக மாற்றி விடக் கூடாது என்பதில் குறியாய் இருக்கிறார்; ஒவ்வொருவருமே உண்மையான கொடுப்புத் தேவைகளை சமாளிப்பதற்காக பணத்தைக் கெட்டியாக பிடித்துக் கொள்கிறார்.

'5099. கிராமப்புற வட்டங்களில் இருக்கும் வட்டிக்கடை வங்கியாளர்கள் தம்மிடம் ஈடுபடுத்தப்படாமல் இருக்கும் நிலுவைகளை உங்களுக்கும் ஏனைய வங்கியாளர்களுக்கும் அனுப்பி வைக்கிறார்களா? - ஆம்.'-'5100. மறுபுறம் லங்காஷயர் மற்றும் யார்க்ஷயர் வட்டங்கள் அவற்றின் கொடுக்கல் வாங்கல்களது பயன்பாட்டுக்காக உங்களிடம் இருந்து கழிவு கேட்கின்றனவா? - ஆம்.' -5101. ஆக இவ்வழியில் நாட்டின் ஒரு பகுதியைச் சேர்ந்த உபரிப் பணம் வேறொரு பகுதியின் தேவைகளை சமாளிப்பதற்கு கிடைக்கச் செய்யப்படுகிறது? - சரியாக அப்படித்தான்.'

வங்கிகள் தமது உபரிப் பண-மூலதனத்தை குறுங்கால அடிப்படையில் கன்சால் பிணை முறிகளிலும் கருவூல உண்டியல்களிலும் முதலீடு செய்கிற வழக்கம் சமீப காலத்தில் கணிசமாய் அதிகரித்துள்ளது என்கிறார் சாப்மன்; அதன் பிறகு இந்தக் கேட்புப்பணத்தை, அதாவது கேட்ட உடன் செலுத்த வேண்டிய பணத்தை கடனாய்க் கொடுப்பது வழக்கமாகிவிட்டது. இவ் வகைப் பத்திரங்களை வாங்குவது தமது தொழிலுக்குச் சற்றும் பொருத்தமற்றது என்றே அவர் கருதுகிறார். அதனால்தான் தமது பணத்தை நம்பகமான மாற்று உண்டியல்களில் முதலீடு செய்கிறார்; ஒவ்வொரு நாளும் இவற்றில் சில உண்டியல்கள் தீர்ப்புக்குரியவையாகின்றன; அன்றைக்கு எவ்வளவு பணம் தயாராய் இருக்கும் என்று எப்போதுமே அவரால் தெரிந்து கொள்ள முடிகிறது. (5101 - 5105).

ஏற்றுமதிகளின் வளர்ச்சியே கூட அநேகமாய் ஒவ்வொரு நாட்டுக்கும், முக்கியமாய்க் கடன் வழங்கும் நாட்டுக்கு உள்நாட்டுப் பணச் சந்தையின் மீதான வேண்டலின் அதிகரிப்பாக வெளிப்படுகிறது; ஆனால் இது பணமுடைக் காலத்தில்தான் உணரப்படுகிறது. ஏற்றுமதிகள் அதிகரிக்கும்போது, பிரித்தானிய ஆலையதிபர்கள் பிரித்தானியச் சரக்குத் தொகுதிகளை ஈடாய்க் கொண்டு ஏற்றுமதி வணிகர்களின் பேரில் நெடுங்கால மாற்று உண்டியல்கள் வரைவது வழக்கம் (5126).- '5127. அந்த உண்டியல்களை அவ்வப்போது திருத்தி வரைய வேண்டும் என்ற ஒப்புதல் அநேக சந்தர்ப்பங்களில் உண்டல்லவா?- (சாப்மன்:) அதை அவர்கள் எங்களிடம் சொல்லமாட்டார்கள். அவ்வகை உண்டியல் எதற்கும் நாங்கள் இடமளிக்கக்கூடாது.....இப்படி நடைபெறுவதாகவே கருதுகிறேன். ஆனால் இதற்கெல்லாம் நான் சாட்சி சொல்ல முடியாது.' (அப்பாவி சாப்மன்). '5129. சென்ற ஆண்டு நடைபெற்றது போல் நாட்டின் ஏற்றுமதிகள் 20 மிலியன் அதிகரிக்குமானால், இயல்பாகவே இந்த

பெரும் அதிகரிப்பு அந்த ஏற்றுமதிகளைக் குறிக்கும் மாற்று உண்டியல்களுக்குரிய மூலதனத்திற்கு பெரும் வேண்டல் ஏற்படுவதற்கு வழி செய்துவிடாதா? - சந்தேகமே இல்லாமல்.'—'5130. வழக்கமாகவே இந்த நாடு அனைத்து ஏற்றுமதிகளுக்காகவும் அயல்நாடுகளுக்கு கடன் கொடுக்கிறது என்கிற அளவில் இதற்கிணையாக அப்போதைக்கு மூலதனத்தில் ஏற்படும் அதிகரிப்பை அது உறிஞ்சிக் கொள்வதாகுமா?- இந்த நாடு ஏராளமாய்க் கடன் கொடுக்கிறது, ஆனால் தனக்குத் தேவையான கச்சாப் பொருளுக்குக் கடன் பெறுகிறது. எப்போதுமே அமெரிக்காவில் 60 நாள் கெடுவிலும், மற்ற பகுதிகளில் 90 நாள் கெடுவிலும் நமது பேரில் உண்டியல் வரையப்படுகிறது. மறுபக்கத்தில் நாம் கடன் கொடுக்கிறோம்; ஜெர்மனிக்குச் சரக்கு அனுப்பினால் இரண்டு மூன்று மாதக் கெடு விதிக்கிறோம்.'

இறக்குமதியாகும் இந்த கச்சாப் பொருட்கள் மற்றும் காலனி நாட்டுச் சரக்குகளுக்கு ஈடாக இங்கிலாந்தின் பேரில் மாற்று உண்டியல்கள் வரையப்படுவதில்லையா என்றும், இந்த உண்டியல்கள் கப்பல் இரசீதுகளோடு ஒருங்கே வந்து சேருவதில்லையா என்றும் சாப்மனிடம் வில்சன் வினவுகிறார் (5131). சாப்மன் இப்படி நடைபெறுவதாகவே தாம் நம்புவதாகச் சொல்கிறார்; ஆனால் இத்தகைய 'வர்த்தக' நடவடிக்கைகள் பற்றி தமக்கு ஒன்றும் தெரியாது என்கிறார். இந்த துறையில் நிபுணர்களாய் இருப்போர்களிடம் கேட்டுப் பார்க்கும்படி ஆலோசனையும் தருகிறார். அமெரிக்காவுக்கான ஏற்றுமதி வர்த்தகத்தில் 'சரக்குகள் வழியில் குறியிடப்படுகின்றன' என்று சாப்மன் குறிப்பிடுகிறார். (5133). ஆங்கிலேய ஏற்றுமதி வணிகர் தமது சரக்குகளை ஈடாய்க் கொண்டு லண்டனிலுள்ள மிகப்பெரிய அமெரிக்க வங்கி நிறுவனங்களில் ஒன்றின் பேரில் நான்கு மாதக் கெடு கொண்ட மாற்று உண்டியல்கள் வரைகிறார், அந்த வங்கி நிறுவனம் அமெரிக்காவிலிருந்து பிணையம் பெற்றுக் கொள்கிறது, என்று சொல்வதற்குத்தான் சாப்மென் இப்படி உளறி வைக்கிறார்.

'5136. சரக்குகள் விற்கப்படும்வரை தமது மூலதனத்திற்காகக் காத்திருக்கும் வணிகரே தொலைக் கோடியான வர்த்தக நடவடிக்கைகளை நடத்திக் கொள்வது வழக்கம் அல்லவா? - சொந்தமாய் பெரும் செல்வம் படைத்த சில நிறுவனங்கள் இருக்கலாம்; தம் சொந்த மூலதனத்தை முதலீடு செய்துவிட்டு சரக்குகள் மீது முன்னீடு ஏதும் பெறாமல் இருக்க இவற்றால் முடியும்; ஆனால்

பெரும்பகுதியானவை பிரசித்தமாய் நிலைபெற்றுவிட்ட சில நிறுவனங்களின் ஏற்புகளைக் கொண்டு முன்னீடுகளாக மாற்றப்படுகின்றன.'- '5137. அந்த நிறுவனங்கள்.....லண்டனில் லிவர்பூலில் அல்லது வேறிடத்தில் இருப்பவை.'-5138. ஆலையதிபர் அவரது பணத்தை முதலீடு செய்வதற்கும், இலண்டனிலோ லிவர்பூலிலோ இருக்கும் ஒரு வணிகரிடம் இருந்து முன்னீடாக அதைப் பெறுவதற்கும் வேறுபாடே இல்லையா? - இல்லைதான். பெரும்பாலான சந்தர்பங்களில் ஆலையதிபர்க்கும் இதற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. (ஆனால் 1847இல் அநேகமாய் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலுமே தொடர்பு இருந்தது.) 'எடுத்துக்காட்டாக, மான்செஸ்டரில் ஆலையுற்பத்திப் பண்டங்களை வாணிகம் செய்கிற ஒருவர் தமக்குத் தேவையான பண்டங்களை வாங்கி இலண்டனில் மதிக்கத்தக்க ஒரு நிறுவனத்தின் மூலம் கப்பலேற்றுவார்; சிப்பம் கட்டும் வேலையெல்லாம் ஒப்புக் கொண்டபடி நடைபெற்றுள்ளதா என்று பார்த்து லண்டன் நிறுவனம் மனம் நிறைவு அடைந்த பிறகு, இந்தியாவுக்கோ சீனாவுக்கோ வேறொரு நாட்டிற்கோ செல்கிற அந்தச் சரக்குகளை ஈடாய்க் கொண்டு இந்த லண்டன் நிறுவனத்தின் பேரில் அவர் ஆறு மாதத்திற்கு உண்டியல் வரைகிறார்; பிறகு வங்கியுலகு தலையிட்டு அந்த உண்டியலை அவருக்கு கழிவு செய்து காசாக்கிக் கொடுக்கிறது, அந்த சரக்குகளுக்கு விலை கொடுக்க வேண்டிய நேரத்தில், இந்த உண்டியற் கழிவினால் அவரிடம் பணம் தயாராய் இருக்கிறது.' - '5139. அவரிடம் பணம் இருந்தாலும், அந்தப் பணத்தை வங்கியாளர் அல்லவா முதலீடு செய்கிறார்? - வங்கியாளரிடம் உண்டியல் இருக்கிறது; வங்கியாளர் உண்டியலை விலைக்கு வாங்கி இருக்கிறார்; அவர் தமது வங்கி-மூலதனத்தை அவ்வடிவில், அதாவது வர்த்தக உண்டியல்களைக் கழிவு செய்து காசாக்குவதில் பயன் படுத்துகிறார்.' (ஆக, சாப்மனும் கூட உண்டியல்களைக் கழிவு செய்வதை பண முன்னீடாகக் கருதாமல், விலைக்கு சரக்கு வாங்குவதாகவே கருதுகிறார்.-பி.எங்கெல்ஸ்).—'5140. இருப்பினும் அது லண்டனில் பணச் சந்தை மீதான வேண்டலில் ஒரு பகுதியாகிறதா?—சந்தேகமில்லாமல் ஆகிறது; பணச் சந்தைக்கும் இங்கிலாந்து வங்கிக்கும் கணிசமாய் வேலை கொடுப்பது இதுவே. இந்த உண்டியல்களைப் பெற்றுக் கொள்வதில் எங்களைப் போலவே இங்கிலாந்து வங்கிக்கும் மகிழ்ச்சிதான், ஏனென்றால் இவை பழுதில்லாத சொத்து என்று அவர்களுக்குத் தெரியும்.' - '5141. அப்படியானால், ஏற்றுமதி வர்த்தகம் பெருகப் பெருக, பணச் சந்தை

மீதான வேண்டலும் பெருகுகிறதா? - நாட்டின் செழுமை பெருகப் பெருக, நாங்கள்' (சாப்மன்கள்) 'அதில் பங்கு கொள்கிறோம்.'—'5142. ஆக, மூலதனத்தை ஈடுபடுத்துவதற்கான இந்தப் பல்வேறு துறைகளும் திடீரென்று பெருகும்போது, இயல்பாகவே அதன் விளைவாக வட்டி வீதம் உயர்ந்துவிடுகிறது அல்லவா?—அது பற்றி சந்தேகமில்லை.'

*5143*இல் சாப்மன் 'நாம் ஏராளமாய் ஏற்றுமதி செய்யும்போது பொன்-வெள்ளிப் பாளத்துக்கு இத்தகைய சந்தர்ப்பம் நேரிட்டிருப்பதை புரிந்து கொள்ளவே' முடியவில்லை என்கிறார்.

*5144*இல் பெருமதிப்பிற்குரிய வில்சன் கேட்கிறார்; 'நமது இறக்குமதிகளின் மீது கடன் டிப்றுவதை விட நமது ஏற்றுமதிகளின் மீது அதிகமாய்க் கடன் கொடுக்கிறோம் என்பதாக இருக்கலாம் அல்லவா?-எனக்கே அது பற்றி சந்தேகம் உள்ளது. ஒருவர் இந்தியாவுக்கு அனுப்பப்படும் தமது மான்செஸ்டர் சரக்குகளை ஈடாய்க் கொண்டு உண்டியல் ஏற்கிறார் என்றால், நீங்கள் பத்து மாதத்துக்கு குறைவாக ஏற்க முடியாது. இந்தியா நமக்கு பணம் கொடுப்பதற்கு சற்று முன்னதாகவே நாம் அமெரிக்காவுக்கு அதன் பருத்திக்குரிய விலையை கொடுக்க வேண்டி இருந்துள்ளது' (முற்றிலும் உண்மை). 'என்றாலும் இது பண்பட்ட முறையில் நடைபெறுவதாகச் சொல்லலாம்.' - 5145 சென்ற ஆண்டு நடைபெற்றதைப் போல் நமது செய்பொருள் ஏற்றுமதிகள் £20 மிலியன் அதிகரித்திருக்குமானால், கூடுதலான அந்தச் சரக்களவுக்கு ஈடாக கச்சாப் பொருள் இறக்குமதிகளும் பெருமளவுக்கு அதிகரித்திருக்க வேண்டுமல்லவா?'. (இவ்விதம் மிகை ஏற்றுமதிகள் மிகை இறக்குமதிகளாகவும், மிகையுற்பத்தி மிகைவர்த்தகமாகவும் முன்கூட்டியே இவை காணப்படுகின்றன.)—'சந்தேகமே யில்லாமல்.'— '5146. நாம் மிகக் கணிசமாய் நிலுவை செலுத்தியாக வேண்டும். அதாவது நிலுவையானது அச்சமயம் நமக்கு பாதகமாய்ச் செல்லும் என்பதில் ஐயமில்லை; ஆனால் நாளாவட்டத்தில், அமெரிக்காவுடன்...பரிவர்த்தனைகள் நமக்குச் சாதகமானவை; கடந்த சில காலமாய் அமெரிக்காவிலிருந்து பொன் வெள்ளிப் பாளங்கள் நமக்கு பெரிய அளவில் வந்து கொண்டிருக்கின்றன.

*5148*. கடுவட்டி மன்னர் சாப்மனிடம் வில்சன் கேட்கிறார், அவர் தமக்குக் கிடைக்கும் உயர்ந்த வட்டி வீதத்தை மாபெரும் செழுமைக்கும் உயர்ந்த இலாப வீதத்துக்கும் அடையாளமாய்க் கருதவில்லையா என்று சாப்மன் இந்த முகத் துதிக்காரரின் வெகுளித்தனத்தைப் பார்த்து வியப்படைவது தெளிவாய்த் தெரிகிறது; வில்சன் கூறியதை அவர்

ஆமோதிக்கவே செய்கிறார் என்றாலும், நாணயமாய்ப் பின்வருவதையும் சேர்த்துக் கொள்கிறார்: 'வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள முடியாத சிலர் இருக்கின்றனர்; இவர்களுக்குச் சில கடப்பாடுகள் உள்ளன; இலாபம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் இவர்கள் அவற்றை நிறைவேற்றியாக வேண்டும். ஆனால் (உயர்ந்த வட்டி வீதம்) 'தொடர்ந்து நீடிப்பது செழுமையைச் சுட்டும்' - இருவருமே ஒன்றை மறந்து விடுகிறார்கள்; அதாவது உயர்ந்த வட்டிவீதம் என்பது கடன்-செலாவணியின் சாகசச் சூதாடிகள் நாட்டைக் கெடுத்துக்குட்டிச் சுவராக்கிக் கொண்டிருப்பதன் அறிகுறியாகவும் இருக்கலாம்; 1857இல் நடந்தது இதுதான். இந்தச் சூதாடிகள் மற்றவர்களின் சட்டைப் பையில் இருந்து எடுத்துக் கொடுப்பதால்தான் அதிக வட்டி செலுத்த முடிகிறது (ஆனால் அவர்கள் இப்படிச் செலுத்துவதன் மூலம் எல்லாருக்குமான வட்டி வீதத்தை நிர்ணயிக்கத் துணை போகிறார்கள்): வரப் போகும் இலாபத்தை வைத்து இப்போதே அவர்கள் டாம்பீகமாய் உல்லாச வாழ்க்கை வாழ்கிறார்கள். அதேபோது இதுவே ஆலையதிபர்களுக்கும் மற்றவர்களுக்கும் கொள்ளை இலாபம் அடிப்பதற்கான வாய்ப்பாய் அமைந்துவிடும் என்பதை இடைக்குறிப்பாய்ச் சொல்லி வைப்போம். கடன் அமைப்பினால் மீள்வரவுகளே மாயமும் வஞ்சகமும் ஆகிப் போகின்றன. பின்வருவதற்கும் இதுவே விளக்கமாகிறது. - ஆனால் இங்கிலாந்து வங்கியைப் பொறுத்தவரை இதற்கு விளக்கமே தேவையில்லை; ஏனென்றால் வட்டி வீதம் உயர்ந்திருக்கும் போது அவ்வங்கி மற்றவர்களைக் காட்டிலும் குறைந்த வீதத்தில் உண்டியற் கழிவு செய்கிறது.

சாப்மன் சொல்கிறார்: '5156. நீண்ட காலமாகவே நமது வட்டி வீதம் அதிகமாய் இருந்துள்ள நிலையில், இப்போது நமது கழிவுகள் அதிகபட்ச நிலையை அடைந்திருப்பதாகச் சொல்வேன்.' (தகர்வுக்கு ஒரிரு மாதம் முன்னதாக 1857-ஜூலை 21ஆம் நாள் சாப்மன் இப்படிச் சொன்னார்.)—'5157. 1852' (வட்டி வீதம் குறைவாய் இருந்தபோது) 'கழிவுகள் அவ்வளவு அதிகமாய் இருக்கவில்லை.' ஏனென்றால் அச்சமயம் தொழில்-வர்த்தகமானது இன்னும் கூட ஆரோக்கியமாய் இருந்தது.

'5159. சந்தையில் பணம் வெள்ளமாய்ப் பெருக்கெடுக்குமானால்.... வங்கிக் கழிவு வீதம் குறைவாய் இருக்குமானால், உண்டியல்கள் குறைந்து போகும்....1852இல் அறவே வேறுவிதமாய் இருந்தது. இச் சமயத்துடன் ஒப்பிடுமிடத்து நாட்டின் ஏற்றுமதிகளும் இறக்குமதிகளும்

அப்போது பூஜ்யம் என்றே சொல்லிவிடலாம்'—'5161. கழிவு வீதம் இப்படி உயர்வாய் இருப்பதால் 1854இல் இருந்தது போலவே இப்போதும் நமது கழிவுகள் அதிகமாய் உள்ளன.' (அப்போது வட்டி வீதம் 5 – 5½% ஆக இருந்தது.)

சாப்மனின் சாட்சியத்தில் மிகப் பெரிய வேடிக்கை என்னவென்றால் மெய்யாகவே இந்த ஆசாமிகள் பொதுமக்களின் பணத்தை தம் சொந்தப் பணமாகக் கருதிக் கொள்கிறார்கள், தம்மால் கழிவு செய்யப்படும் மாற்று உண்டியல்களை நிரந்தர மாறும் தகுதி கொண்டவையாக வைத்துக் கொள்ள தமக்கு உரிமை இருப்பதாக நம்புகிறார்கள். கேள்விகளும் அவற்றுக்கான பதில்களும் பெரும் வெகுளித் தனத்தையே வெளிப்படுத்துகின்றன. பெரும்பெரும் தொழில் நிறுவனங்களால் ஏற்கப்படும் அந்த உண்டியல்களை எந்நேரமும் மாறும் தகுதி உடையவையாக்குவதும், எந்நிலையிலும் இங்கிலாந்து வங்கி தொடர்ந்து உண்டியல் தரகர்களுக்கு அவற்றை மறு கழிவு செய்து காசாக்கித் தருவதை உறுதி செய்வதும் சட்டத்தின் கடமையாகி விடுகிறது. என்றாலும் 1857இல் மூன்று உண்டியல் தரகர்கள் போண்டியாகிப் போனார்கள்; இவர்கள் சுமார் 8 மிலியன் என்னுமளவுக்கு கடன் பட்டிருந்தார்கள்; அவர்களின் சொந்த மூலதனம் இந்தக் கடன்களோடு ஒப்பிடுமிடத்து வெறும் கடுகளவாகவே இருந்தது.- '5177. இங்கிலாந்து வங்கி-நோட்டு இப்போது கட்டாயமாய் தங்கத்துக்குப் பரிவர்த்தனை செய்யத்தக்கதாய் இருப்பது போலவே, இவையும்' (அதாவது பேரிங்ஸ் அல்லது லாயிட்ஸ் ஏற்றுக் கொள்ளும் உண்டியல்களும்) 'கட்டாயம் கழிவு செய்யத்தக்கவையாய் இருக்க வேண்டும் என்று நினைப்பதாகச் சொல்கிறீர்களா?-இவை கழிவு செய்யத்தக்கவையாய் இல்லாவிட்டால் அது மிகவும் வருத்தத்துக்குரியதாய் இருக்கும் என்று நினைக்கிறேன். ஸ்மித்பேயின் &கம்பெனி, அல்லது ஜோன்ஸ், லாயிடு & கம்பெனியின் ஏற்புகளைக் கையில் வைத்திருப்பவர் தம்மால் அவற்றைக் கழிவு செய்து காசாக்க முடியாததால் பணம் கொடுப்பதை நிறுத்த நேரிடுவது பெரிதும் அசாதாரண நிலையையே குறிக்கும்.'

'5178. பேரிங் நிறுவனத்தின் கடப்பாடானது உண்டியலின் கெடு முடியும்போது குறிப்பிட்ட தொகை செலுத்துவதற்கான கடப்பாடுதானே?—முற்றிலும் உண்மைதான்; ஆனால் அந்தக் கடப்பாட்டுக்கு ஒப்பந்தம் செய்து கொள்கிற பேரிங் நிறுவனமும் சரி, ஒரு கடப்பாட்டுக்கு ஒப்பந்தம் செய்து கொள்கிற ஏனைய ஒவ்வொரு வணிகரும் சரி, தாம் அதை பொற்காசுகளாய் செலுத்தப் போவதாக

*கனவிலும் நினைப்பதில்லை; தீர்வகத்தில் அதைச் செலுத்த போவதாகவே அவர்கள் எதிர் பார்க்கிறார்கள்.'—'5180. உண்டியலின் கெடு முடிவதற்கு முன்பே யாரையாவது அதனைக் கழிவு செய்யச் சொல்வதன் மூலம் பணம் கேட்கிற உரிமை பொதுமக்களுக்கு இருக்கும்படியான ஏற்பாடு ஏதும் செய்யப்பட வேண்டும் என நினைக்கிறீர்களா? - அல்ல, ஏற்பாளரிடமிருந்து அல்ல; ஆனால் வர்த்தக உண்டியல்களை கழிவு செய்து காசாக்கிக் கொள்ளும் வாய்ப்பு எங்களுக்கு இருக்கக் கூடாது என்பதைத்தான் இப்படிச் சொல்கிறீர்கள் என்றால், முழு அமைப்பையுமே நாங்கள் மாற்றியாக வேண்டும்.' - '5182. அப்படியானால் இங்கிலாந்து வங்கியின் நோட்டு தங்கமாய் மாற்றத்தக்கதாக இருக்க வேண்டும் என்பது போலவே அது' (வர்த்தக உண்டியல்) 'பணமாய் மாற்றத்தக்கதாக இருக்க வேண்டும் என நினைக்கிறீர்களா? - குறிப்பிட்ட சில நிலைமைகளில் திட்டவட்டமாய் அப்படித்தான் இருக்க வேண்டும்.'—5184. சந்தேகத்திற்கு இடமற்ற தன்மையில் இருக்கும் ஒரு மாற்று உண்டியல் ஒரு வங்கி-நோட்டைப் போல் எந்நேரமும் உடனுக்குடன் பணத்துக்குப் பரிவர்த்தனை செய்யத்தக்கதாய் இருக்கும்படி செலாவணி விதிமுறைகள் வகுத்தமைக்கப்பட வேண்டும் என்று நினைக்கிறீர்களா?- அப்படித்தான் நினைக்கிறேன்.'—'5185. இங்கிலாந்து வங்கியோ தனியாளோ அதைப் பரிவர்த்தனை செய்து கொள்வதை சட்டப்படி கட்டாயமாக்க வேண்டும் என்று நீங்கள் சொல்லவில்லை அல்லவா?-நான் சொல்வது என்னவென்றால், செலாவணிக்காக உண்டியல் வரையும்போது, நாட்டின் மாற்று உண்டியல்களை பணமாக மாற்ற முடியாமற்போகும் சாத்தியப்பாடு உருவாகாமல் தடுப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும்; அந்த உண்டியல்களை ஐயத்துக்கு இடமின்றி உறுதியானவையாகவும் முறையானவையாகவும் கொண்டு இவ்விதம் வழிவகை செய்யவேண்டும் என்கிறேன்.'-வங்கி - நோட்டுகளின் மாறும் தகுதியுடன் ஒப்பிடுமிடத்து வர்த்தக உண்டியலின் மாறும் தகுதி இப்படியுள்ளது.*

*'5190. உண்மையில் நாட்டின் வட்டிகாரர்கள்தான் பொதுமக்களின் பிரதிநிதிகள்.' பிற்காலத்தில் ஆணையாளர் மன்றத்தில் டேவிட்சன் வழக்கிற்காக திருவாளர் சாப்மன் பொது மக்களின் பிரதிநிதியாகவே நின்றார். பார்க்கவும்: மாபெரும் நகர மோசடிகள்.**

(*) சா.லயிங்; கோல் டேவிட்சன், கார்டன் ஆகியோரின் மாபெரும் நகர மோசடிகளது புதிய தொடர், லண்டன்:- ஆங்கில பதிப்பாசிரியர்.)

'5196. காலாண்டுக்கு ஒருமுறை' (ஆதாயப் பங்கீடுகள் தரப்படும் போது) '....இங்கிலாந்து வங்கியிடம் போகத்தான் வேண்டும் வேறு வழியேயில்லை. ஆதாயப்பங்கீடுகளை எதிர்பார்த்து புழக்கத்திலிருந்து £6,000,000 அல்லது £7,000,000 வருவாயை எடுத்துவிடும்போது இடைக்காலத்தில் அதை வழங்குவதற்கு யாராவது உதவியாக வேண்டும்.'- (இங்கு பிரச்சினை பணத்தின் வழங்கல்தானே தவிர, மூலதனம் அல்லது கடன்-மூலதனத்தின் வழங்கல் அல்ல என்றாகிறது.'

'5169. நமது வர்த்தக வட்டாரத்தில் பரிச்சயமான ஒவ்வொருவருக்கும் இது தெரிந்திருக்க வேண்டும்: நாம் கருவூல உண்டியல்களை விற்கமுடியாத நிலையில் இருக்கும்போது, இந்தியா மீதான பத்திரங்கள் கிஞ்சிற்றும் பயனற்றவையாகும் போது முதல் வர்த்தக உண்டியல்களைக் கழிவு செய்து காசாக்க முடியாத போது, தொழில் வர்த்தகத்தில் கேட்டவுடனே, அந்த ஆட்சி எல்லைக்குரிய சுற்றோட்ட ஊடகத்தைச் செலுத்த வேண்டிய நிலையில் இருப்பவர்களுக்கு பெரும் கவலை ஏற்பட்டே தீரும்; எல்லா வங்கியாளர்களும் இப்படித்தான் இருக்கிறார்கள். அப்படியானால் இதன் விளைவு ஒவ்வொருவரும் தமது சேம இருப்பை இருமடங்காக்கிக் கொள்ளச் செய்வதே. இதனால் நாடெங்கிலும் என்ன விளைவு ஏற்பட்டுள்ளது என்பதை ஏறெடுத்துப் பாருங்கள். வட்டிக்கடை வங்கியாளர் ஒவ்வொருவரும்-இப்படி சுமார் 500 பேர் உள்ளனர்-தம் லண்டன் முகவருக்கு வங்கி-நோட்டுகளாக £5,000 அனுப்பி வைக்க வேண்டி உள்ளது. இப்படியொரு வரம்புக்குட்பட்ட தொகையை சராசரியாகக் கொள்வதே அபத்தம் என்றாலும், அப்படிக் கொண்டுதான், புழக்கத்தில் இருந்து £2,500,000 எடுக்கப்படுவதாகக் கணிக்கிறீர்கள். அந்தத் தொகையை வழங்குவது எப்படி?'

மறுபுறம், பணம் வைத்திருக்கிற தனியார் முதலாளிகளும் மற்றவர்களும் என்ன வட்டி கொடுத்தாலும் கடன் தருவதில்லை; சாப்மனைப் போலவே அவர்களும் சொல்கிறார்கள், '5195. தேவைப்படும் போது பணம் கைக்கு வருவது பற்றி சந்தேகம் இருப்பதைக் காட்டிலும் வட்டியே வேண்டாம் என்று இருந்து விடுவோம்.'

'5173. எங்கள் ஏற்பாடு இதுதான்: எங்களுக்கு £300,000,000 கடன்-பொறுப்புகள் உள்ளன. ஒரே சந்தர்ப்பத்தில் ஆட்சிக்குரிய நாணயத்தில் இத் தொகையைச் செலுத்திவிடும்படி கோரப்படலாம்; ஆட்சிக்குரிய நாணயம் முழுவதற்கும் பதிலிகளைப் பயன்படுத்துவதானால்

£23,000,000 வரலாம். இந்நிலவரம் எந்நேரத்திலும் எங்களைக் பெருங் குழப்பத்தில் ஆழ்த்தக் கூடியதல்லவா? 'இதனால்தான் நெருக்கடிகளின் போது கடன்-செலாவணிப் பொருளாதாரமாக மாறுகிறது.

நெருக்கடிகளின்போது உள்நாட்டில் ஏற்படும் பீதி ஒரு புறம் இருக்க, சர்வப் பொதுப்பணமாகிய பொன்-வெள்ளிப் பாளத்தைப் பொறுத்தவரை மட்டுமே பணத்தின் அளவு குறித்து பேச முடியும் என்ற நிலை ஏற்படுகிறது. இதைத்தான் சாப்மன் தவிர்த்திடுகிறார்; வங்கி நோட்டுகளாக 23 மிலியன் என்றுதான் குறிப்பிடுகிறார்.

அதே சாப்மன்: '5218. பணச் சந்தை' (1847 ஏப்ரலிலும் பின்னர் அக்டோபரிலும்) 'குலைவுற்றதற்கு முக்கியக் காரணம் அந்த ஆண்டின் அசாதாரண இறக்குமதிகளினால் நமது பரிவர்த்தனைகளை ஒழுங்கு செய்வதற்குத் தேவைப்பட்ட பண அளவுதான் என்பதில் சந்தேகமில்லை.'

முதலாவதாக, உலகச் சந்தைக்குரிய பணத்தின் இந்தச் சேம இருப்பு அப்போது குறைந்தபட்ச அளவாகக் கரைந்து போய் இருந்தது. இரண்டாவதாக, அது கடன்-செலாவணிப் பணத்தின், வங்கி-நோட்டுகளின் மாறும் தகுதிக்கான பிணையமாகவும் பயன்பட்டது. இவ்விதம் இரு வேறு பணிகளை ஒன்றிணைத்தது. ஆனால் இரண்டுமே பணத்தின் இயல்பிலிருந்துஎழுகிறவை. ஏனென்றால் உண்மைப் பணம் எப்போதுமே உலகச் சந்தைப் பணமாகும்; கடன்-செலாவணிப் பணம் எப்போதுமே இந்த உலகச் சந்தைப் பணத்தைச் சார்ந்து இருக்கிறது.

1847இல், 1844ஆம் வருட வங்கிச் சட்டத்தை நிறுத்தி வைக்காமல், 'தீர்வகங்களை நேர் செய்திருக்க முடியாது.' (5221).

பார்க்கப் போனால் வரப்போகும் நெருக்கடியைச் சாப்மன் சூசகமாய் உணர்ந்திருந்தார்: '5236. பணச் சந்தையில் குறிப்பிட்ட சில நிலைமைகள் ஏற்படும்போது (அவை ஏற்படுவதற்கு இப்போதிருந்து நீண்ட காலம் ஆகப் போவதில்லை), பணம் கிடைப்பதே கடினமாகிவிடுகிறது, அப்போது இங்கிலாந்து வங்கியைத்தான் நாடிச் சென்றாக வேண்டும்.'

'5239. இங்கிலாந்து வங்கியிலிருந்து 1847 அக்டோபர் 19, 20, 22, வெள்ளி, சனி, திங்கள் கிழமைகளில் நாங்கள் எடுத்த தொகைகளைப் பொறுத்தவரை, அடுத்த புதன்கிழமை உண்டியல்களைத் திரும்ப பெற்றது குறித்து நாங்கள் நன்றி சொல்லத்தான் வேண்டும்; பீதி மறைந்து

உடனே பணம் நேரடியாக எங்களிடம் திரும்பி வந்து சேர்ந்தது.'- அக்டோபர் 23 செவ்வாய்க்கிழமை வங்கிச் சட்டம் நிறுத்தி வைக்கப்பட்டது, நெருக்கடி இவ்விதம் கட்டுப்படுத்தப்பட்டது.

லண்டன் மீது ஒரே நேரத்தில் ஓட்டத்தில் இருக்கும் மாற்று உண்டியல்கள் £100 அல்லது £120 மிலியன் இருக்கும் என்று சாப்மன் நம்புகிறார் (5274). வட்டார மையங்கள் மீதான உள்ளூர் உண்டியல்கள் இதில் சேர மாட்டா.

'5287. 1856 அக்டோபரில் பொதுமக்களின் கையிலிருந்த நோட்டுகளின் மொத்த அளவு £21,155,000. ஆனால் பணம் கிடைப்பதில் அசாதாரண இடர்பாடு இருந்தது; பொதுமக்களிடம் இவ்வளவு இருந்தும், நாங்கள் அதைத் தொடமுடியவில்லை.'- கிழக்கிந்திய வங்கிக்கு சிறிது காலம் (1856 மார்ச்) நேரிட்ட சிக்கலால் விளைந்த கவலையே இதற்குக் காரணம்.

5290 - 92. பீதி மறைந்த உடனே, 'வட்டியிலிருந்து இலாபம் பெறும் வங்கியாளர் எல்லாம் அப்போதே பணத்தை ஈடுபடுத்தத் தொடங்கிவிடுகிறார்கள்.'

5302. வங்கிச் சேம இருப்பு குறையும்போது ஏற்படும் சஞ்சலத்திற்கு சாப்மன் விளக்கம் அளிக்கையில் வைப்புகள் தொடர்பான அச்சத்தைக் காரணமாகக் குறிப்பிடவில்லை. திடீரென்று பெரும் பணத்தொகைகள் செலுத்த வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்ககூடியவர்கள் எல்லாம் பணச் சந்தையில் முடை ஏற்படும் போது கடைசிப் புகலிடமாய் வங்கியை நாட வேண்டி இருக்கலாம் என்பதை நன்கறிவார்கள் என்றுதான் விளக்கமளிக்கிறார். 'வங்கிகளில் சேம இருப்பு மிகக் குறைவாயிருந்தால், எங்களை மகிழ்வுடன் வரவேற்பதில்லை; ஆனால் இதற்கு மாறாக, வங்கிகளில் சேம இருப்பு அதிகமாய் இருந்தால் எங்களுக்கு நல்ல வரவேற்பு இருக்கும்.'

நிற்க, எப்படிச் சேம இருப்பானது உண்மைப் பருமன் என்ற முறையில் குறைந்து செல்கிறது என்பது நோக்கற்பாலது. வங்கியாளர்கள் நடப்பு அலுவலின் தேவைகளுக்காக ஒரு குறைந்தபட்ச அளவைத் தம்கையிலோ இங்கிலாந்து வங்கியிலோ வைத்துள்ளார்கள். உண்டியல் தரகர்கள் எவ்விதச் சேம இருப்பும் இல்லாமல் 'நாட்டின் உதிரியான வங்கிப் பணத்தை வைத்துள்ளார்கள். இங்கிலாந்து வங்கி வைப்புகளுக்கான தன் கடன் பொறுப்புகளைச் சரிக்கட்டுவதற்கென்று வைத்திருப்பதெல்லாம் வங்கியாளர்களுக்கும் மற்றவர்களுக்கும்

சொந்தமான சேம இருப்புகளையும், அத்துடன் பொதுமக்களின் வைப்புகள் போன்றவற்றையும்தான். அது இந்தச் சேம இருப்பை மிகக் குறைந்த நிலைக்கு, உதாரணமாய் £2 மிலியன் என்று நிலைக்கு குறையவிடுகிறது. காகித வடிவிலான இந்த £2மிலியன் ஒருபுறம் இருக்க, இந்த முழு மோசடிக்கும் முடைக் காலத்தில் இருக்கக் கூடிய பொன் - வெள்ளிப் பாள சேம இருப்பைத் தவிர வேறு சேம இருப்பே இல்லை (வெளியேறிச் செல்லும் பொன் - வெள்ளிப் பாளத்தை மாற்றீடு செய்யவரும் நோட்டுகளை அழித்துவிட வேண்டுமாதலால் இது போன்ற காலங்களில் சேம இருப்பு குறைந்து போகிறது). ஆகவே தங்க வெளிக்கசிவினால் இந்தச் சேம இருப்பு குறையும் போதொல்லாம் நெருக்கடி அதிகரிக்கிறது.

'5306. தீர்வகத்தில் கொடுக்கல் வாங்கல்ளை நேர் செய்வதற்கு செலாவணி இல்லாது போனால், அதற்கடுத்த மாற்று வழி எனக்குத் தெரிந்தவரை ஒன்றே ஒன்றுதான்: ஒன்றாய்க் கூடி, முதல்தர உண்டியல்கள், கருவூல உண்டியல்கள், ஸ்மித், பேய்ன் போன்ற நிறுவனங்களின் பேரிலான உண்டியல்கள் என்ற வடிவில் கொடுப்புகளை முடித்துக் கொள்ள வேண்டியதுதான்.'- '5307. ஆக, அரசினர் உங்களுக்கொரு சுற்றோட்ட ஊடகம் வழங்கத் தவறினால் நீங்களே உங்களுக்காக அப்படியொன்றை உருவாக்கிக் கொள்வீர்களா?- நாங்கள் என்ன செய்வது? பொதுமக்கள் வந்து சுற்றோட்ட ஊடகத்தை எங்கள் கையிலிருந்து எடுத்து விடுகிறார்கள். அப்படியொன்றே இல்லாமற் போகிறது.'- '5308. அப்போதுதான் வாரத்தில் ஒவ்வொரு நாளும் மான்செஸ்டரில் அவர்கள் செய்வதை லண்டனில் நீங்கள் செய்வீர்களா?-ஆம்.'

மூலதனத்தை ஓவர்ஸ்டோன் புரிந்துள்ளதைக் குறித்து கேய்லீ (ஆட்வுடு மரபைச் சேர்ந்த பர்மிங்காம் ஆசாமி) கேட்ட கேள்விக்கு சாப்மன் சாமர்த்தியமாய்ப் பதில் அளிக்கிறார்: '5315. இந்தக் குழுவின் முன்னால் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், 1847இல் ஏற்பட்டது போன்ற ஒரு நெருக்குதல் ஏற்படும் போது ஆட்கள் தேடுவது மூலதனத்தைத் தானே தவிர பணத்தையல்லவாம். இதுபற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?' அது எனக்குப் புரியவில்லை; நாங்கள் தனவணிகம் மட்டுமே செய்கிறோம்; நீங்கள் சொல்வதன் பொருள் எனக்கு.'- '5316. நீங்கள் இப்படி' (வர்த்தக மூலதனம் என்று) 'சொல்வது ஒருவர் தமது தொழிலில் சொந்தமாய்ப் போட்டிருக்கும் பண அளவினைத்தான் என்றால், நீங்கள் அதை மூலதனம் என்பீர்களானால்,

அவர் பொது மக்களால் (சாப்மன்களது இடைச்செயல் மூலமாய்) 'நமக்கு அளிக்கப்படும் கடனைக் கொண்டு தமது அலுவலில் பயன்படுத்தி வரும் பணத்தில் அது பெரும்பாலும் மிகச் சிறு விகிதப் பங்காகவே அமைந்திடுகிறது.'

'5339. சொத்துடைமை இல்லாததால்தான் நாம் நமது நாணயக் கொடுப்புகளை கைவிட வேண்டியுள்ளதா?-இல்லவே இல்லை....நம்மிடம் சொத்துடைமை இல்லை என்பதல்ல, பெரிதும் செயற்கையான அமைப்பில் இயங்கி வருகிறோம் என்பதுதான் காரணம். நமது சொலாவணியின் மீது மிகப்பெரும் அளவில் மேலிருந்து நுழைக்கப்படும் வேண்டல் எழுமானால், அந்தச் செலாவணி நமக்கு கிடைக்க முடியாத நிலைமைகள் ஏற்படலாம். நாட்டின் வர்த்தகத் தொழில்துறை முழுவதும் முடங்கிக் கிடக்க வேண்டுமா? மூலதனத்தை ஈடுபடுத்தும் வழிகளையெல்லாம் மூடி அடைத்துவிடுவோமோ?- '5338. நாணயக் கொடுப்புகளை வைத்துக் கொள்வதா, நாட்டின் தொழில்துறையை வைத்துக் கொள்வதா என்ற கேள்வி எழுமானால், அதைக் கைவிட வேண்டும் என்று சொல்வதில் எவ்விதத் தயக்கமும் எனக்கில்லை.'

'நெருக்குதலை அதிகமாக்கி, அதன் விளைவுகளை சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் நோக்குடன்' வங்கி-நோட்டுகளைப் பதுக்கி வைப்பது தொடர்பாக (5358), இவ்விதம் நடைபெறுவது மிகவும் எளிது என்கிறார். மூன்று பெரிய வங்கிகள் இருந்தால் போதுமாம். '5383. முதலாளிகள் இந்த நெருக்கடிகளைப் பயன்படுத்தி, அவற்றுக்குப் பலியாகும் மக்களின் நாசத்திலிருந்து மிகப் பெரும் அளவில் இலாபம் சம்பாதிக்கிறார்கள் என்பது இந்தப் பெரு நகரத்தின் மாபெரும் கொடுக்கல் வாங்கல்களோடு பரிச்சயமுள்ளவர் என்ற முறையில் உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டுமே?- அது பற்றிச் சந்தேகமே இருக்க முடியாது.'- இந்த விவகாரத்தில் திருவாளர் சாப்மன் சொல்வதை தாராளமாய் நம்பலாம். ஆனால் 'பலியாகும் மக்களின் நாசத்திலிருந்து மிகப்பெரும் அளவில் இலாபம் 'சம்பாதிக்கிற ஒரு முயற்சியில் அவரே முடிவில்-வர்த்தக நோக்கில் சொல்வதானால் - கழுத்தை முறித்துக் கொண்டார். அவரது கூட்டாளி குர்னீ சொல்கிறார்: தொழிலில் ஏற்படும் ஒவ்வொரு மாற்றமும் நன்கு விபரம் தெரிந்தவருக்குச் சாதகமானதே, ஆனால் சாப்மன் சொல்கிறார்: 'சமுதாயத்தின் ஒரு பிரிவுக்கு மறு பிரிவைப் பற்றி எதுவும் தெரியாது. எடுத்துக்காட்டாக ஒருவர் ஆலையதிபராய் இருக்கிறார்; அவர்

கண்டத்துக்கு ஏற்றுமதி செய்கிறார், அல்லது தமக்கு வேண்டிய கச்சாப் பொருளை இறக்குமதி செய்கிறார்; அவருக்கு பொன் - வெள்ளி வணிகம் செய்கிறவரைப் பற்றி எதுவும் தெரியாது.' (5046).- ஆக என்ன நடந்தது என்றால் குர்னீயும் சாப்மனுமே அன்றொரு நாள் 'நன்கு விவரம் தெரிந்தவர்களாய்' இல்லாதுபோய், கேடுகெட்ட முறையில் நொடித்துப் போண்டியானார்கள்.

நோட்டு வெளியீடு எல்லா சந்தர்ப்பங்களிலும் மூலதன முன்னீட்டைக் குறிப்பதாகாது என்று முன்பே பார்த்தோம். 1848ஆம் வருடத்திய பிரபுகள் சபையின் வ.இ. குழுவின் முன்னால் டூக் அளித்த பின்வரும் சாட்சியம், மூலதன முன்னீடு புதிய நோட்டுகள் வெளியிடுவதன் மூலம் வங்கியால் செய்யப்படுவதாய் இருந்தாலும் கூட புழக்கத்தில் இருக்கும் நோட்டுகளின் எண்ணிக்கையிலான அதிகரிப்பை நிபந்தனையற்ற முறையில் குறிப்பதாகாது என்பதைத்தான் காட்டுகிறது:

'3099. எடுத்துக்காட்டாக இங்கிலாந்து வங்கி அதன் முன்னீடுகளைப் பெரிதும் அதிகமாக்கலாம், அப்படி அதிகமாக்கினாலும் கூடுதலாய் நோட்டுகள் வெளியிடுவதற்கு வழிகோலாதிருக்கலாம் என்று நினைக்கிறீர்களா? இதை நிரூபிக்க ஏராளமான உண்மை விவரங்களைக் குறிப்பிடலாம்; மிகவும் எடுப்பான உதாரணங்களால் ஒன்று 1835இல் இங்கிலாந்து வங்கியானது பொதுமக்களுக்கான முன்னீடுகளை நீட்டுகையில் மேற்கிந்திய வைப்புகளையும் கிழக்கிந்தியக் கம்பெனியிலிருந்து பெற்ற கடனையும் பயன்படுத்திக் கொண்டதாகும். அச்சமயம் பொதுமக்களின் கையிலிருந்து நோட்டுகளின் அளவு உண்மையில் குறைந்தே போனது. 1846இல் இரயில்வே வைப்புகள் இங்கிலாந்து வங்கியில் செலுத்தப்பட்ட போதும் இந்த முரண் பாட்டைப் போல ஒன்றே காணக்கிடந்தது; பிணையங்கள்' (கழிவாகவும் வைப்புகளாகவும்) 'சுமார் 30,000,000 மில்லியன்களாக அதிகரிக்கும்படி செய்யப்பட்டது; அதேபோது பொதுமக்களின் கையிலிருக்கும் நோட்டுகளின் அளவில் புலப்படுத்தாத விளைவேதும் உண்டாகவில்லை.'

வங்கி-நோட்டுகளை அன்னியில் மொத்த வர்த்தகத்துக்கு இன்னொரு சுற்றோட்ட ஊடகம் உள்ளது; இவ்வூடகம் அதற்கு இன்னும் கூட மிக அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும்-மாற்று உண்டியல்களைச் சொல்கிறோம். எந்நிலையிலும் மாற்று உண்டியல்களை கொடுப்பாக ஏற்றுக் கொள்வது காலந்தவறாமல் தொழில் நடைபெறுவதற்கு

எவ்வளவு அவசியமானது என்பதை திருவாளர் சாப்மன் நமக்குத் தெளிவாக்கிவிட்டார். "Gilt nicht mehr der Tausves Jontof, was Soll gelten, Zeter, Zeter!"* இந்த இரு சுற்றோட்ட ஊடகங்களுக்கும் இடையிலான உறவு எத்தகையது?

இது குறித்து ஜில்பார்ட் எழுதுகிறார்: '....நோட்டுப் புழக்கத்தின் அளவு குறையும் போதெல்லாம் உண்டியல் புழக்கத்தின் அளவு அதிகரிக்கிறது. இந்த உண்டியல்கள் இருவகைப்பட்டவை-வர்த்தக உண்டியல்கள், வங்கியாளர் உண்டியல்கள்....பணத்துக்குத் தட்டுப்பாடு ஏற்படும்போது, வட்டிக்காரர்கள் எங்கள் பேரில் உண்டியல் எழுதித் தாருங்கள் நாங்கள் ஏற்றுக் கொள்வோம்' என்று சொல்லிவிடுகிறார்கள். ஒரு வட்டிக்கடை வங்கியாளர் தம் வாடிக்கையாளருக்கு ரொக்கம் கொடுப்பதற்குப் பதில் ஓர் உண்டியலைக் கழிவு செய்து கொடுக்கும்போது, தம் லண்டன் முகவரின் பேரில் இருபத்தியொரு நாள் கெடுவில் பணவிடை எழுதிக் கொடுப்பார். இந்த உண்டியல்கள் ஒரு செலாவணிக்குரிய நோக்கத்திற்குப் பயன்படுகின்றன.'

(ஜே.வி.ஜில்பார்ட்,.....நெருக்குதலின் காரணங்கள் பற்றிய ஆய்வு, பக்கம் 31.)

இதனை நியூமார்ச் சற்றே மாறிய வடிவில் உறுதி செய்கிறார், வ.ச.1857, எண் 1426:

'உண்டியல் புழக்கத்தின் அளவில் ஏற்படும் மாற்றங்களுக்கும் வங்கி-நோட்டுப் புழக்கத்தில் ஏற்படும் மாற்றங்களுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை.....எப்போதும் ஏற்படும் ஒரே முக்கிய விளைவு என்னவென்றால்....பணச் சந்தையில் நெருக்குதல் ஏற்பட்டு, அதன் வெளிப்பாடாக உண்டியற் கழிவு விதம் உயரும்போதெல்லாம், உண்டியல் புழக்கத்தின் பரிமாணம் பெரிதும் அதிகரிக்கிறது. அது குறையும் போதெல்லாம் இதுவும் குறைகிறது.

என்றாலும், இப்படிப்பட்ட காலங்களில் வரையப்படும் மாற்று உண்டியல்கள் ஜில்பார்ட் குறிப்பிடும் குறுங்கால வங்கி-உண்டியல்கள் மட்டுந்தானா என்றால், அல்லவே அல்ல. மாறாக, அவை பெரும்பாலும் கடன்வசதி உண்டியல்கள் ஆகும்; இந்த உண்டியல்கள்

(*) 'தவ்ஸ்வேஸ் - யோன்தோப் எழுதிய வேதவிளக்கம் பயனற்றதென்றால் வேறு எதுதான் பயனுள்ளது? கடவுள் நம்மைக் காப்பாற்றட்டும்! 'ஹைன், சொற்போர்.- ஆங்கிலப்பதிப்பாசிரியர்.)

உண்மையான கொடுக்கல்வாங்கல் எதையும் குறிப்பவையல்ல, அதாவது மாற்று உண்டியல்கள் வரைய வேண்டும் என்பதற்காகவே செய்து கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்களை மட்டும் குறிப்பவையாகும். இரண்டுக்குமே போதிய எடுத்துக்காட்டுகள் தந்துள்ளோம். வங்கி-நோட்டுகளுடன் ஒப்பிடுமிடத்து இத்தகைய உண்டியல்கள் எந்த அளவுக்கு உத்தரவாதமானவை என்பது குறித்து எக்கனாமிஸ்ட் (வில்சன்) கூறுவதாவது: 'கேட்டதும் பணம் செலுத்த வேண்டிய நோட்டுகளை மிகையான அளவில் ஒருபோதும் வெளியில் வைத்துக் கொள்ள முடியாது. ஏனென்றால் மிகையாய் இருப்பது எப்போதுமே கொடுப்பின் பொருட்டு வங்கிக்கு திரும்பி வந்துவிடும். அதேபோது இருமாதக் கெடுவில் அமைந்த உண்டியல்களைப் பெரிதும் மிகை அளவில் வெளியிடலாம். அவை முதிர்ச்சி அடையும்வரை இவ்வெளியீட்டை கட்டுப்படுத்த வழியே இல்லை, முதிர்ச்சியடையும் போது அவை வேறு உண்டியல்களால் மாற்றீடு செய்யப் பட்டிருக்கலாம். காலம் கழித்து பின்னொரு தேதியில் பணஞ்செலுத்து வதற்குரிய உண்டியல்களின் புழக்கத்தை பத்திரமானதென்று ஏற்றுக் கொள்ளும் மக்கள் சமுதாயம் கேட்டதும், பணம் செலுத்துவதற்குரிய நோட்டின் புழக்கம் பத்திரமானதல்ல என்று எதிர்ப்பு தெரிவிப்பதை நம்மால் விளங்கிக் கொள்ள முடியவே முடியவில்லை.' *'எக்கனாமிஸ்ட், 1847* மே 22 பக்கம் 575).

ஆக வங்கி-நோட்டுகளின் அளவைப் போலவே புழக்கத்தில் இருக்கும் மாற்று உண்டியல்களின் அளவும் முழுக்க முழுக்க வர்த்தகத்தின் தேவைகளால்தான் நிர்ணயிக்கப்படுகிறது; ஐக்கிய முடியரசின் ஐம்பதாம் ஆண்டுகளில் சாதாரணக் காலங்களின் போது வங்கி-நோட்டுகளாகப் புழக்கத்தில் இருந்த £39 மிலியனை அன்னியில் மாற்று உண்யல்களாக சுமார் £300 மிலியன் புழக்கத்தில் இருந்தது. இதில் லண்டன் பேரில் மட்டுமே £100 - 120 மிலியன் இருந்தது. புழக்கத்தில் இருக்கும் மாற்று உண்டியல்களின் பரிமாணம் நோட்டுப் புழக்கத்தின் பரிமாணத்தில் எவ்விதத் தாக்கமும் செலுத்துவதில்லை. பண முடைக் காலத்தில் மட்டுமே நோட்டுப் புழக்கத்தின் பரிமாணம் உண்டியற் புழக்கத்தின் பரிமாணத்தில் தாக்கம் செலுத்துகிறது; அப்போது உண்டியல்களின் அளவு அதிகரிக்கிறது, தரம் கெடுகிறது. கடைசியாக நெருக்கடி ஏற்படும்போது உண்டியற் புழக்கம் அறவே குலைவுறுகிறது; பணஞ் செலுத்துவதாக அளிக்கப்படும் உறுதியால் யாருக்கும் எப்பயனும் இல்லாது போகின்றது. ஒவ்வொருவரும் ரொக்கம் கொடுப்பை மட்டுமே ஏற்க விரும்பும் நிலை ஏற்படுகிறது.

வங்கி - நோட்டுதான் இந்நிலையிலும் கூட சுற்றியோடும் திறனை இழக்காதிருக்கிறது; எப்படியும் இங்கிலாந்தில் இன்றுவரை இதுதான் நிலைமை. ஏனென்றால் தேசத்தின் மொத்தச் செல்வமும் இங்கிலாந்து வங்கிக்கு முட்டுக் கொடுப்பதாய் உள்ளது.

1857இல் பணச் சந்தையில் தாமே ஒரு பெரும் புள்ளியாக இருந்தவர்தான் என்றாலும் திருவாளர் சாப்மனே கூட லண்டனில் பெரும் பண முதலாளிகள் பலர் இருப்பதாகவும், குறிப்பிட்ட எத்தருணத்திலும் பணச் சந்தை முழுவதையும் சீர்குலையச் செய்யவும் இவ்விதம் சிறு தன வணிகர்களை ஒட்டச் சுரண்டவும் இவர்கள் போதிய பலம் படைத்தவர்களாய் இருப்பதாகவும் கடுமையாகக் குறைபட்டுக் கொள்ளக் கண்டோம். இவ்வகைப்பணத் திமிங்கலங்கள் பலர் இருப்பதாகவும் ஓரிரு மிலியன் மதிப்புள்ள அரசு பிணை முறிகளை விற்று இவ்விதம் அதற்குச் சமமான அளவில் வங்கி நோட்டுகளை (மற்றும் அதேபோது கிடைக்கும்படியான கடன் மூலதனத்தையும்) சந்தையிலிருந்து விலக்கி எடுப்பதன் மூலம் பணமுடையை கணிசமாய் தீவிரப்படுத்த இவர்களால் முடிவதாகவும் அவர் சொன்னார். மூன்று பெரும் வங்கிகள் ஒன்றாய்க் கூடி இப்படியொரு தந்திரம் செய்தாலே போதும், பணமுடை பணப் பீதியாகிப் போகும்.

லண்டனிலேயே மிகப் பெரிய மூலதனச் சக்தி இங்கிலாந்து வங்கிதான் என்றாலும், ஓரளவு அரசுச் சார்புடைய நிறுனமாய் இருப்பதால் அது இவ்வளவு முரட்டுத்தனமாய் தன் ஆதிக்கத்தை நிலைநாட்ட முடிவதில்லை. என்றாலும் - குறிப்பாக 1844ஆம் வருட வங்கிச் சட்டத்திற்குப் பிறகு - அதுவும் கூட எவ்விதம் தன்னைப் பேணிக் கொள்வது என்று அறிந்தே உள்ளது.

இங்கிலாந்து வங்கியின் மூலதனம் 14,553,000 ஆகும்; இதை அன்னியில் 'நிலுவை' என்ற வகையில், அதாவது விநியோகம் செய்யப்படாத இலாபங்கள் என்ற வகையில் சுமார் £3 மிலியனையும் அது விருப்பம் போல் பயன்படுத்திக் கொள்ளலாம்; வரிகள் முதலான வகையில் அரசு வசூல் செய்வதும், பயன்படுத்திக் கொள்ள வேண்டிய தேவை வரும்வரை வங்கியில் வைப்பிலிட வேண்டியதுமான பணத்தை எல்லாம், கூட அவ்வாறே விருப்பம் போல் பயன்படுத்திக் கொள்ளலாம். இதோடு ஏனைய வைப்புகளின் தொகையையும் - சாதாரண காலத்தில் சுமார் £30 மிலியன் - சேம இருப்பை ஆதாரமாய்க் கொள்ளாமல் வெளியிடப்படும் வங்கி-நோட்டுகளையும் சேர்த்துக் கொள்வோமானால், நியூமார்ச் பின்வருமாறு கூறுவது மட்டான

*மதிப்பீடாகவே தெரிகிறது (வ.ச. 1857, எண் 1889): 'ஒயாமல்' (லண்டன்) 'பணச் சந்தையில் ஈடுபடுத்தப்படும் நிதிகளின் தொகை சுமார் £120,000,000 இருக்கலாம் என்று மனநிறைவு கொண்டேன்; அந்த £120,000,000இல் மிகக் கணிசமான ஒரு பகுதி சுமார் 15 அல்லது 20 சதவீதம் இங்கிலாந்து வங்கியால் ஆளப்படுகிறது.'*

இங்கிலாந்து வங்கியானது அதன் காப்பறைகளில் இருக்கும் பொன்-வெள்ளிப் பாளச் சேம இருப்பை ஆதாரமாகக் கொள்ளாமல், நோட்டுகள் வெளியிடுகிற அளவில், மதிப்பின் அடையாளங்களைத் தோற்றுவிக்கிறது, இவ்வடையாளங்கள் சுற்றோட்ட ஊடகமாய் இருப்பதோடு, பின்பலமில்லாத இந்த நோட்டுகளின் பெயர்மதிப்பின் அளவுக்கு அவ்வங்கிக்குரிய கூடுதல் மூலதனமும் ஆகின்றன- பெயரளவு மூலதனமாகவே இருந்தாலும் கூட. இந்தக்கூடுதல் மூலதனம் இலாபம் கூடுதல் கிடைக்கச் செய்கிறது.- வ.ச. *1857இல் நியூமார்ச்சை வில்சன் கேட்கிறார்: '1563. ஒரு வங்கியாளரின் பணப் புழக்கம் சராசரியாக வெளியில் இருந்துவரும்வரை, அந்த வங்கியாளரின் செயல்பூர்வ மூலதனத்தோடு கூடுதலாய் சேருவதாகும், அல்லவா?-நிச்சயமாக.'—'1564. அப்படியானால் அந்தப் புழக்கத்திலிருந்து அவர் எவ்வளவு இலாபம் பெற்றாலும், அது கடன் - செலாவணியில் இருந்து பெறப்படும் இலாபமே தவிர, அவர் உள்ளபடியே வைத்துள்ள மூலதனத்திலிருந்து பெறப்படுவதல்ல?- நிச்சயமாக.'*

நோட்டு வெளியிடும் தனியார் வங்கிகளுக்கும் இதுபொருந்தும் என்பது மெய்தான். எண் 1866 முதல் 1868 வரையிலான பதில்களில், நியூமார்ச் இவ்வங்கிகளால் வெளியிடப்படும் வங்கி - நோட்டுகள் அனைத்திலும் மூன்றிலிரு பங்கை (எஞ்சிய மூன்றில் ஒரு பங்குக்கு இந்த வங்கிகளிடம் பொன் - வெள்ளிச் சேம இருப்பு இருந்தாக வேண்டும் ) 'இவ்வளவு மூலதனம் படைக்கப்படுவதாக' கருதுகிறார், ஏனென்றால் இந்த அளவுக்கு நாணயம் மிச்சமாகிறது. இதனால் வங்கியாளருக்குக் கிடைக்கும் இலாபம் ஏனைய முதலாளிகளுக்கு கிடைப்பதை விட அதிகமாய் இல்லாமற் போகலாம். ஆனால் நாடு இவ்விதம் நாணயத்தை மிச்சப்படுத்துவதிலிருந்து அவர் இலாபம் பெறுகிறார் என்பதே உண்மை. ஆனால் நாட்டில் சிக்கனம் தனியாருக்கு இலாபமாகிவிடுவது குறித்து முதலாளித்துவப் பொருளாதார அறிஞர் கொஞ்சம் கூட அதிர்ச்சி அடையவில்லை ஏனென்றால் பொதுவாக இலாபம் என்பது நாட்டின் உழைப்பு தனதாக்கப்படுதலே ஆகும். எடுத்துக்காட்டாக, 1797க்கும் 1817க்கும் இடையில் இங்கிலாந்து வங்கியானது-இவ்வங்கியின்

நோட்டுகள் கடன் மதிப்பு பெற்றிருப்பதே அரசினால்தான் - அரசாங்கக் கடன்கள் மீதான வட்டியின் வடிவில், வங்கியின் நோட்டுகளைக் காகிதம் என்ற நிலையிலிருந்து பணமாக மாற்றி, அவற்றை அரசுக்கே கடனாய்த் தருவதற்கு அரசு அதற்களித்த அதிகாரத்திற்கு விலையாக அரசிடமிருந்து, அதாவது பொதுமக்களிடமிருந்து பணம் பெறுவதைக் காட்டிலும் அபத்தம் ஏதும் உண்டோ?

நிற்க, வங்கிகள் வேறு சில வழிகளிலும் மூலதனம் உண்டாக்குகின்றன. அதே நியூமார்ச்சின் கூற்றுப்படி, வட்டிக்கடை வங்கிகள் - முன்பே குறிப்பிட்டது போல - அவற்றின் உபரி நிதிகளை (அதாவது இங்கிலாந்து வங்கி-நோட்டுகளை அனுப்புவதும், கழிவு செய்யப்பட்ட மாற்று உண்டியல்களைப் பதிலுக்குப் பெற்றுக் கொள்வதும் வழக்கம். இந்த மாற்று உண்டியல்களைப் பயன்படுத்தித்தான் வட்டிக் கடை வங்கிகள் அவற்றின் வாடிக்கை யாளருக்குப் பணிபுரிகின்றன. ஏனென்றால் உள்ளூர் வாடிக்கை யாளர்களிடமிருந்து பெறப்பட்ட மாற்று உண்டியல்களைப் பொதுவாக அவை மறுபடியும் வெளியிடுவதில்லை; தமது தொழில் தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் தமது வட்டாரத்திலேயே தெரிந்து விடக்கூடாது என்பதே நோக்கம். லண்டனில் இருந்து வரப்பெறும் இந்த உண்டியல்கள் லண்டனில் நேரடியாக பணம் செலுத்த வேண்டி இருக்கும் வாடிக்கையாளர்கள் இலண்டன் பேரில் அவ்வங்கியின் பண விடையை ஏற்கவிரும்பாதபோது அவர்களுக்கென்றே வெளியிடப் படுவதற்குப் பயன்படுகின்றன; அது மட்டுமல்ல, கொடுப்புகளை வட்டார அளவில் நேர் செய்வதற்கும் பயன்படுகின்றன; ஏனென்றால் வங்கியாளரின் புறக் குறிப்பு அவற்றுக்கு வட்டார அளவில் கடன்-மதிப்புப் பெற்றுத் தருகிறது. எடுத்துக்காட்டாக, லங்காஷயரில் உள்ளூர் வங்கிகளின் நோட்டுகள் அனைத்தும் மற்றும் இங்கிலாந்து வங்கி-நோட்டுகளில் பெரியதொரு பகுதியும் இத்தகைய உண்டியல்களால் புழக்கத்திலிருந்து விரட்டப்பட்டுவிட்டன. (மேலது, எண் 1568 - 1574).

ஆக, வங்கிகள் எப்படியெல்லாம் கடன்-செலாவணியும் மூலதனமும். உண்டாக்குகின்றன என்று தெரிந்து கொள்கிறோம்:

(1) தாமே வங்கி-நோட்டுகள் வெளியிடுதல்; (2) 21 நாள்வரை ஓட்டத்தில் இருக்கும்படி இலண்டன் பேரில் பண விடைகள் எழுதுதல் - ஆனால் எழுதப்பட்ட உடனேயே இவற்றுக்கு ரொக்கமாக பணம் தரப்பட்டுவிடுகிறது; (3) மாற்று உண்டியல்களை மறுவெளியீடு

*செய்தல் - அனைத்துக்கும் மேலாக வங்கியின் புறக் குறிப்பினால்தான் - எப்படியும் குறிப்பிட்ட அந்த வட்டத்தைப் பொறுத்தவரை - இவற்றுக்குக் கடன்-மதிப்பு வந்து சேருகிறது.*

*சந்தை வட்டி வீதத்தை நிர்ணயிப்பதில் இங்கிலாந்து வங்கியின் சக்தி வெளிப்படுகிறது. தொழில்-வர்த்தகம் இயல்பாய் நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலங்களில் இங்கிலாந்து வங்கி அதன் பொன்-வெள்ளிச் சேம இருப்பிலிருந்து தங்கம் ஓரளவு வெளியேறிச் செல்வதை உண்டியற் கழிவு வீத உயர்வைக் கொண்டு தடுக்க முடியாமற் போகலாம்[12]. கொடுப்புச் சாதனத்திற்கான வேண்டலை தனியார் வங்கிகளும் கூட்டுப் பங்கு வங்கிகளும் உண்டியல் தரகர்களும்-இவர்கள் கடந்த 30 ஆண்டு காலத்தில் கணிசமாய் மூலதனச் சக்தி ஈட்டியிருப்பவர்கள்-நிறைவு செய்துவிடுவதே இதற்குக் காரணம். இந் நிலையில் இங்கிலாந்து வங்கி வேறு வழிகளை நாடியாக வேண்டும். ஆனால் நெருக்கடிக் காலங்களைப் பொறுத்தவரை வர்த்தக இன்னல் பற்றிய குழுவிடம் (1848-57) வங்கியாளர் கிளைன் (கிளைன், மில்ஸ், கர்ரீ & கம்பெனியைச் சேர்ந்தவர்) அளித்த சாட்சியமே சரி:- 1709. நாடு பெரிதும் நெருக்குதலுக்கு ஆளாகி இருக்கும் நிலைமைகளில் இங்கிலாந்து வங்கியின் கட்டளைப்படி அமைவதே வட்டி வீதம்.'- '1710. நெருக்குதல் அசாதாரணமாய் இருக்கும் காலங்களில்.... தனியாரான வங்கியாளர்கள் அல்லது தரகர்களின் கழிவு வீதங்கள் ஒப்பளவில் வரம்பிற்குட்படும் போதெல்லாம், அவை இங்கிலாந்து வங்கியின் பொறுப்பாகின்றன; அப்போது இங்கிலாந்து வங்கி சந்தை வீதத்திற்குக் கட்டளை இடும் சக்தி பெறுகிறது.'*

*ஆனால் இங்கிலாந்து வங்கியானது அரசின் அரவணைப்பில் இருக்கும் பொது நிறுவனமாயிருப்பதாலும் அதற்குரிய சிறப்புரிமை களை அனுபவித்து வருவதாலும் ஒரு தனியார் நிறுவனத்தைப் போல் ஈவிரக்கமின்றி தன் சக்தியைப் பயன்படுத்தி ஆதாயம் பெறமுடியாது.*

---

(12) எங்கெல்ஸ் குறிப்பு:- 1894 ஜனவரி 17 ஆம் நாள் இலண்டன் யூனியன் வங்கி பங்குதாரர்களின் பேரவைக் கூட்டத்தில் பேசும் போது அதன் தலைவர் திருவாளர் ரிட்சி பின்வருமாறு நினைவு கூறுகிறார்: இங்கிலாந்து வங்கி 1893 ஜூலையில் 2 ½%ஆக இருந்த உண்டியற் கழிவு வீதத்தை ஆகஸ்டில் 3 மற்றும் 4% ஆக உயர்த்தியது. ஆனாலும் நான்கு வாரத்துக்குள் முழுதாய் £4½ மிலியன் மதிப்புள்ள தங்கத்தை இழக்க நேரிட்டதால் வங்கியின் கழிவு வீதத்தை 5% ஆக உயர்த்தியது, தங்கம் அதனிடம் திரும்பி வந்தது, கழிவு வீதம் செப்டெம்பரில் 4% ஆகவும் பிறகு அக்டோபரில் 3% ஆகவும் குறைக்கப்பட்டது. ஆனால் இங்கிலாந்து வங்கியின் இந்தக் கழிவு வீதம் சந்தையில் ஒப்புக் கொள்ளப்படவில்லை. 'வங்கி வீதம் 5% ஆக இருந்தபோது கழிவு வீதம் 3 ½% ஆக இருந்தது, பணத்திற்கான வீதம் 2 ½% ஆக இருந்தது; வங்கி வீதம் 4% ஆகக் குறைந்த போது கழிவு வீதம் 2 $^{3}/_{8}$%ஆக இருந்தது, பண வீதம் 1¾%ஆக இருந்தது. வங்கி வீதம் 3% ஆக இருந்த போது கழிவு வீதம் 1½%ஆகக் குறைந்தது, பண வீதம் அதற்கும் கீழே குறைந்து போயிற்று.' (டெய்லி நியூஸ், 1894 ஜனவரி 18).

இதனால்தான் வங்கிக் குழுவிடம் (வ.ச.1857) ஹபார்டு சொல்கிறார்: '2844. (கேள்வி:) கழிவு வீதம் உச்ச அளவில் இருக்கும்போது மிக மலிவாய்ப் பணம் பெறுவதற்குச் செல்ல வேண்டிய இடம் இங்கிலாந்து வங்கிதான் என்பதும் கழிவு வீதம் மிகக் குறைந்த அளவாய் இருக்கும் போது மிக மலிவாய் பணம் தருகிறவர்கள் உண்டியல் தரகர்களே என்பதும் நடப்பல்லவா?- (ஹபார்டு:) நடப்பு எப்போதும் அப்படித் தான் இருக்கும். ஏனென்றால் இங்கிலாந்து வங்கி ஒருநாளும் அதன் போட்டியாளர்களைப் போல் அவ்வாறு தாழ்ந்து வராது; கழிவு வீதம் உச்ச அளவில் இருக்கும் போது ஒருநாளும் அந்த அளவுக்கு உயர்ந்து செல்லாது.'

ஆனாலும் பணமுடைக் காலத்தில் இங்கிலாந்து வங்கி-வழக்கமாய்ச் சொல்வதைப் போல-மறையை இறுக்கும் போது அதாவது ஏற்கெனவே சராசரிக்கு மேல் போய்விட்ட வட்டி வீதத்தை மேலும் உயர்த்தும்போது , அது தொழில் வர்த்தக வாழ்வில் கருத்துக்குரிய நிகழ்ச்சியாகிறது. 'இங்கிலாந்து வங்கி மறையை இறுக்க முற்பட்ட உடனே, அயல் நாட்டு ஏற்றுமதிக்கான கொள்முதல்கள் எல்லாம் உடனே நின்று விடுகின்றன....விலைகள் சரிந்து சரிந்து அடி வரம்பை அடையும்வரை ஏற்றுமதியாளர்கள் காத்து இருக்கிறார்கள்; அந்நிலை வந்த பிறகுதான்-அதுவரை அல்ல - வேண்டியவற்றைக் கொள் முதல் செய்கிறார்கள். ஆனால் அந்நிலை வந்துவிடும் போது, பரிவர்த்தனைகள் சரிசெய்யப்பட்டிருக்கின்றன-மிகத் தாழ்ந்த குறைவு நிலை வந்து சேருவதற்குள் தங்க ஏற்றுமதி நின்று போகிறது. ஏற்றுமதிக்காகப் பண்டங்கள் கொள்முதல் செய்யப்படுவது அயல் நாட்டுக்கு அனுப்பப்பட்ட தங்கத்தில் ஒரு பகுதியை திருப்பிக் கொண்டு வரும் விளைவை ஏற்படுத்தலாம். ஆனால் அது வருவதற்குள் தங்க வெளிக் கசிவு நடந்தேறிவிடுகிறது.' (ஜே.வி.ஜில்பார்ட், **பணச் சந்தை மீதான நெருக்குதலின் காரணங்கள் பற்றிய ஆய்வு,** லண்டன், 1840, பக்கம் 35).- 'அயல் நாட்டுப் பரிவர்த்தனைகளைக் கொண்டு செலாவணியை ஒழுங்கு செய்வதன் பிறிதொரு விளைவு என்னவென்றால், நெருக்குதலான பருவங்களில் மிகப் பெரும் வட்டி வீதத்துக்கு அது வழிகோலிவிடுகிறது.' (முன் வந்தது, பக்கம் 40).- 'பரிவர்த்தனைகளைச் சரி செய்வதற்கான செலவு நாட்டின் உற்பத்தி தொழில்துறையைச் சாரும்; ஆனால் இப்படி நிகழ்ந்து வரும் போது இங்கிலாந்து வங்கி குறைந்த அளவு கருவூலத்தைப் பயன்படுத்தி அதன் அலுவலை நடத்திச் செல்வதால் அதற்குக் கிடைக்கும் இலாபம் உள்ளபடியே அதிகரிக்கிறது.' (முன் வந்தது, பக்கம் 52).

*ஆனால், நண்பர் சாமுவேல் குர்னீ சொல்கிறார்; 'வட்டி வீதத்திலான பெரும் அலைவுகள் வங்கியாளர்களுக்கும் தன வணிகர்களுக்கும் அனுகூலமானவை - வர்த்தகத்தில் எல்லா அலைவுகளுமே விவரம் தெரிந்தவருக்கு அனுகூலமானவைதான்.' குர்னீ வகையறா தொழில் - வர்த்தகத்தின் அவல நிலையை ஈவிரக்கமில்லாமல் பயன்படுத்திக் கொள்ளைச் சுரண்டல் நடத்துவது போல் இங்கிலாந்து வங்கி அவ்வளவு சுதந்திரமாய் அப்படிச் செய்ய முடியாது என்றாலும், அதுவும் கணிச அளவில் இலாபம் பெறவே செய்கிறது - பொதுவான தொழில் வர்த்தக நிலவரத்தை அறிந்து கொள்ளும் அரிய வாய்ப்பினால் வங்கியின் இயக்குநர்கள் சொந்த முறையில் வாரிச் சுருட்டும் இலாபத்தைப் பற்றி சொல்லத் தேவையில்லை. மறுபடியும் ரொக்கக் கொடுப்புகளை தொடங்குவது பற்றி 1817ஆம் வருட பிரபுக்கள் சபைக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட விவரங்களின்படி, 1797 முதல் 1817 வரையிலான காலத்தில் இங்கிலாந்து வங்கிக்குக் கிடைத்த மொத்த இலாபம் வருமாறு:*

| | |
|---|---|
| சிறப்பு ஆதாயங்கள், கூடுதலான ஆதாயப் பங்குகள் | 7,451,136 |
| உரிமையாளர்களிடையே பிரிக்கப்பட்ட புதிய மூலதனப் பங்கு | 7,276,500 |
| கூடுதலான மூலதன மதிப்பு | 14,553,000 |
| மொத்தம் | 29,280,636 |

*இது £11,642,100 மூலதனத்திற்கு 19 ஆண்டு காலத்தில் கிடைத்தது. (டே. ஹார்டுகேஸில், **வங்கிகளும் வங்கியாளர்களும்**, 2ஆம் பதிப்பு, லண்டன், 1843, பக்கம் 120). அயர்லாந்து வங்கியும் 1797இல் ரொக்கக் கொடுப்புகளை நிறுத்தி வைத்தது; இவ்வங்கியின் மொத்த இலாபத்தையும் இதே வழிமுறைப்படி கணக்கிட்டால் பெறப்படுவதாவது:*

| | |
|---|---|
| 1821க்குரிய வரவுகளின்படி ஆதாயப்பங்குகள் | 4,736,085 |
| அறிவிக்கப்பட்ட சிறப்புத் தொகை | 1,225,000 |
| கூடுதலான சொத்து | 1,214,800 |
| கூடுதலான மூலதன மதிப்பு | 4,185,000 |
| மொத்தம் | 11,360,885 |

*இது £3 மிலியன் மூலதனத்திற்குக் கிடைத்தது. (மேலது, பக்கம் 363 - 64.**

(*) 1894ஆம் வருட ஜெர்மன் பதிப்பில் 163 என்றுள்ளது.- ஆங்கிலப் பதிப்பாசிரியர்)

மையப்பாடு என்னும் பேச்சு தேசிய வங்கிகள் எனப்படுகிற வற்றையும், அவற்றைச் சூழ்ந்துள்ள பணக் கடன் முதலைகளையும் கடுவட்டிக்காரர்களையும் குவிமையமாய்க் கொண்ட கடன் - செலாவணி அமைப்பு மிகப் பெரும் மையப்பாடாக அமைந்து, இந்த புல்லுருவிகள் வர்த்தகத்துக்கு கற்பனைக்கெட்டாத அதிகாரம் கிடைக்கச் செய்கிறது. தொழில் துறை முதலாளிகளை அவ்வப்போது நாசமாக்குவதுடன், உள்ளபடியான பொருளுற் பத்தியிலும் மிகவும் ஆபத்தான முறையில் குறுக்கிடவும் செய்கிறது. *1844, 1845*ஆம் வருடச் சட்டங்கள் இந்தக் கொள்ளையர்களின் வளரும் சக்திக்குச் சான்றாகும். நிதியாளர்களும் பங்குத்தரக்களும் இந்தக் கொள்ளையர்களின் தொகை பெருகச் செய்கின்றனர்.

இந்த மரியாதைக்குரிய கொள்ளையர்கள் முழுக்க முழுக்க பொருளுற்பத்தியின் நலனை முன்னிட்டும் சுரண்டப்படுகிறவர் களுக்காகவுமே நாட்டின் பொருளுற்பத்தியையும் பன்னாட்டு பொருளுற்பத்தியையும் பயன்படுத்திக் கொள்வது பற்றி யாருக்காவது இன்னமும் சந்தேகம் இருந்தால், வங்கியாளர்களின் உயர்ந்த அறவொழுக்கச் சிறப்பு குறித்து சொல்லப்பட்ட பின்வரும் நற்போதனையிலிருந்து நிச்சயமாய் கற்றுக் கொள்ளலாம்; *'வங்கித் தொழிலகங்கள்....அறவொழுக்க நிறுவனங்களும் சமயநிறுவனங் களும் ஆகும்....இமை கொட்டாமல் கவனித்து குறை கண்ட போது கடிந்து கொள்ளும் வங்கியாளரின் கண்ணிற்படுவோம் என்று அஞ்சியே எத்தனை தடவை இளம் வர்த்தகர் உல்லாசப் பேர்வழிகளாம் ஊதாரி நண்பர்களோடு சேராமல் இருந்துள்ளார்?.....தம்மை தம் வங்கியாளர் உயர்வாய் மதிக்க வேண்டுமென்று அவருக்கு எத்துணைக் கவலை?.....அவருடைய நண்பர்களின் இகழ்ச்சியும் ஏளனமும் அவரிடம் ஏற்படுத்திய தாக்கத்தைவிட அவருடைய வங்கியாளரின் முகச்சுளிப்பு ஏற்படுத்திய தாக்கம் அதிகமன்றோ? வஞ்சகக் குற்றம் புரிந்ததாகவோ இழையளவேனும் பிழைபடக் கூறியதாகவோ கருதப்பட்டால் ஐயுறவுக்கும் அவநம்பிக்கைக்கும் வழி ஏற்படுமே, தமக்குரிய கடன் வசதி அதனால் குன்றிப்போகுமே அல்லது நின்றே போகுமே என்று அவர் அஞ்சி நடுங்கினார் அல்லவா?.....அந்த நட்பார்ந்த அறிவுரை சமய குருவின் அறிவுரையை விடவும் அவருக்கு மதிப்பு மிக்கதாய் இருந்தது அல்லவா'? (ஜி.எம்.பெல், ஸ்காட்லாந்திய வங்கி இயக்குநர்)* **கூட்டுப் பங்கு வங்கித் தொழிலின் தத்துவம்,** *லண்டன், 1840. பக்கம் 46,47).*

## அத்தியாயம் XXXIV

## செலாவணிக் கோட்பாடும் 1844ஆம் வருட ஆங்கிலேய வங்கிச் சட்டமும்

[சரக்கு-விலைகளைப் பொறுத்தவரை பணத்தின் மதிப்பு தொடர்பான ரிக்கார்டோ தத்துவம் முன்னொரு நூலில்.[13] பகுத்தாராயப்பட்டது. ஆகவே இன்றியமையாதவற்றை மட்டும் இங்கே குறிப்பிடுவோம். ரிக்கார்டோவின் கருத்துப்படி, உலோகப் பணத்தின் மதிப்பு அதில் உருக்கொண்ட உழைப்பு-நேரத்தால் நிர்ணயிக்கப்படுகிறது என்றாலும், பணத்தின் அளவானது பரிவர்த்தனை செய்யப்பட வேண்டிய சரக்குகளின் அளவுக்கும் விலைக்கும் சரியான விகிதத்தில் இருக்கும் வரைதான் இவ்வாறு நிர்ணயிக்கப்படும். பண அளவானது இந்த விகிதத்துக்கு மேல் போய்விட்டால் அதன் மதிப்பு குறைகிறது, சரக்கு-விலைகள் உயருகின்றன; அது அந்த சரியான விகிதத்துக்குக் கீழே போய்விட்டால் அதன் மதிப்பு உயருகிறது, சரக்கு-விலைகள் குறைகின்றன-ஏனைய எல்லா நிலைமைகளும் மாறாதிருப்பதாகக் கொண்டுதான் இப்படிச் சொல்கிறோம். பண அளவானது அந்த விகிதத்துக்கு மேலே உயர்ந்து போனால், மிகையான இந்தத் தங்கம் இடம் பெற்றுள்ள நாடு மதிப்புக் குறைந்த தங்கத்தை ஏற்றுமதி செய்து சரக்குகளை இறக்குமதி செய்யும். பண அளவு அந்த விகிதத்துக்குக் கீழே குறைந்து போனால் தங்கமானது மதிப்புக்கு மேல் அதற்கு விலை குறிக்கப் பெறும் நாடுகளுக்குச் சென்றிடும்; அதேபோது குறைவாக மதிக்கப்பெறும் சரக்குகள் அந்நாடுகளில் இருந்து வேறு சந்தைகளுக்குச் சென்று இயல்பான விலைபெறும். இந்நிலைமைகளில் நாணயமாகவோ பொற்பாள மாகவோ தங்கமே கூட அதன் மதிப்பைக் காட்டிலும் கூடுதலான அல்லது குறைவான உலோக மதிப்பின் அடையாளம் ஆகலாம் என்பதால், புழக்கத்தில் இருக்கும் மாறும் திறன் படைத்த வங்கி - நோட்டுகளுக்கும் அதே கதிதான் ஏற்படும் என்பது கூறாமலே விளங்கும். வங்கி நோட்டுகள் மாறும் திறன் படைத்தவையாக இருந்த

(13) கார்ல் மார்க்ஸ், அரசியல் பொருளாதார விமர்சனத்திற்கு ஒரு பங்களிப்பு, பெர்லின், 1859 பக்கம் 150, அடிக்குறிப்பு.)

போதிலும், அதனால் அவற்றின் உண்மை மதிப்பு பெயர் மதிப்புக்கேற்ப அமைந்த போதிலும், உலோகத்தாலும் மாறும்-திறனுள்ள நோட்டுகளாலும் ஆன மொத்தச் செலாவணியானது அதன் மொத்த அளவைப் பொறுத்து மேற்கூறிய காரணங்களால் மதிப்பேற்றத்துக்கோ மதிப்பிறக்கத்துக்கோ உட்படலாம், புழக்கத்தில் இருக்கும் சரக்குகளின் பரிவர்த்தனை-மதிப்பாலும் தங்கத்தின் உலோக மதிப்பாலும் நிர்ணயிக்கப்படும் நிலையை விட உயரவோ குறையவோ செய்யலாம்.....இந்த மதிப்பிறக்கமானது தங்கம், காகிதப் பணம் ஆகியவற்றை மொத்தமாக எடுத்துக் கொள்ளும்போது, அதாவது ஒரு நாட்டின் மொத்தச் செலாவணியையும் எடுத்துக் கொள்ளும்போது அதற்கு நேரிடும் மதிப்பிறக்கமே தவிர, தங்கத்தோடு ஒப்பிடுகையில் காகிதத்துக்கு ஏற்படும் மதிப்பிறக்கம் அல்ல-ரிக்கார்டோவின் முக்கிய கண்டுபிடிப்புகளில் இதுவும் ஒன்று. இதைத்தான் ஓவர்ஸ்டோன் பிரபுவும் அவரின் சகபாடிகளும் 1844, 1845ஆம் வருட சர்இராபர்ட் பீலின் வங்கிச் சட்டத்திற்கு ஓர் அடிப்படை கோட்பாடாக்கித் தமக்குச் சேவகம் செய்ய வைத்தார்கள்.' (முன்வந்தது, பக்கம் 155).

ரிக்கார்டோவின் இந்தத் தத்துவம் பிழையானதென்று மெய்ப்பிக்கும் மேற்கண்ட நூலில் தரப்பட்டுள்ள விளக்கத்தை இங்கு மீண்டும் தரத் தேவையில்லை. பீலின் வங்கிச் சட்டங்களை இயற்றச் செய்த வங்கித் தத்துவ மரபினர் ரிக்கார்டோவின் கோட்பாடுகளை எவ்விதம் விளக்கினார்கள் என்பது மட்டுமே நம் கருத்துக்குரியது.

19ஆம் நூற்றாண்டின் வர்த்தக நெருக்கடிகள், முக்கியமாய் 1825, 1836ஆம் ஆண்டுகளின் பெரும் நெருக்கடிகள் ரிக்கார்டோவின் பணத் தத்துவம் மேலும் வளருவதற்கு வழி செய்யாவிட்டாலும், அதற்குப் புதிய நடைமுறை பிரயோகங்கள் கிட்டச் செய்தன.

இவை முன்போல் தனித்தொதுங்கிய பொருளாதார நிகழ்வுகளாய் இருக்கவில்லை-ஹியூமின் கருத்துப்படி 16, 17ஆம் நூற்றாண்டுகளில் உயர்நிலை உலோகங்களின் மதிப்பிறக்கம், ரிக்கார்டோவின் கருத்துப்படி 18ஆம் நூற்றாண்டிலும் 19ஆம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதியிலும் காகிதப் பணத்தின் மதிப்பிறக்கம் இருந்தது போல் இருக்கவில்லை. மாறாக, இவை முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிகழ்முறையின் அடிக்கூறுகள் எல்லாம் முட்டிமோதி வெளிப்படுகிற உலகச் சந்தையில் பெரும் புயல்களாய் வீசின; இந்தப் புயல்களின் மூல காரணத்தையும் இவற்றை சமாளிக்கும் வழியையும் பணச் சுற்றோட்டத்துறைக்குள் - இப் பொருளுற்பத்தி நிகழ்முறையின்

மிகவும் மேற்போக்கான, சூக்குமமான துறையாகிய இதனில்-தேடிப் பார்த்தார்கள். இந்தப் பொருளாதாரக் காலநிலை வல்லுநர்களின் மரபிற்கு உள்ளபடியே ஆதாரமாய் இருக்கும் தத்துவ அனுமானம் என்னவென்றால், முழுக்க முழுக்க உலோகச் செலாவணியை ஆளும் விதிகளை ரிக்கார்டோ கண்டுபிடித்தார் என்ற பிடிவாதம்தான். இவர்கள் செய்ய வேண்டியதெல்லாம் கடன்-செலாவணிச் சுற்றோட்டத்தையும் வங்கி - நோட்டுச் சுற்றோட்டத்தையும் இந்த விதிகளுக்கு கீழ்ப்படச் செய்வது மட்டும்தானாம்.

'வர்த்தக நெருக்கடிகளில் மிகப் பொதுவாகவும் வெளிப் படையாகவும் காணப்படும் புலப்பாடு சரக்குகளின் விலைவாசி பொதுவாக நெடுங்காலம் உயர்ந்திருந்த பிறகு திடுமெனக் குறைவதே ஆகும். சரக்கு - விலைகளின் பொதுவான வீழ்ச்சி எல்லா சரக்குகள் தொடர்பாகவும் பணத்தின் ஒப்பீட்டு மதிப்பில் ஏற்படும் உயர்வாகத் தெரிவிக்கப் பெறலாம், அவற்றின் பொதுவான உயர்வு அந்த ஒப்பீட்டு மதிப்பில் ஏற்படும் சரிவாகத் தெரிவிக்கப் பெறலாம். இவ்விரு தெரிவிப்புகளும் நிகழ்வை விவரிப்பவையாக இருக்கின்றனவே தவிர காரணம் சொல்லி விளக்கமளிப்பவையாக இருக்கவில்லை.... சொல்லாட்சியிலான மாறுபாட்டினால் பிரச்சினை சற்றும் மாறிவிட வில்லை-எப்படி இந்தச் சொற்களை ஜெர்மன் மொழியிலிருந்து ஆங்கில மொழிக்கு பெயர்ப்பதால் பிரச்சினை மாறிவிடாதோ, அதே போல. எனவேதான் பணத் தத்துவம் கனகச்சிதமாய் அமைந்துவிட்டது. ஏனென்றால் சொன்னதையே திருப்பிச் சொல்லும் ஒரு சொற்புரட்டை காரணகாரிய உறவாக அது தோற்றமளிக்கச் செய்துவிட்டது. பொதுவாக சரக்கு-விலைகள் அவ்வப்போது குறைவது ஏன்? பணத்தின் ஒப்பீட்டு மதிப்பு அவ்வப்போது உயர்வதால்தான். சரக்கு-விலைகள் அவ்வப்போது பொதுவாக உயருவது ஏன்? பணத்தின் ஒப்பீட்டு மதிப்பு அவ்வப்போது குறைவதால்தான். விலைகள் அவ்வப்போது உயருவதும் குறைவதும் அவை அவ்வப்போது உயருவதாலும் குறைவதாலும்தான் என்றே சொல்லியிருக்கலாம்.....இந்தச் சொற்புரட்டை காரணகாரிய உறவென்று ஏற்றுக் கொண்டுவிட்டால், மற்றதெல்லாம் எளிதில் வந்துவிடும். சரக்கு-விலைகள் உயருவது பணத்தின் மதிப்பு குறைவதால்தான்; பணத்தின் மதிப்பு குறைவது - ரிக்கார்டோவிடமிருந்து நாம் தெரிந்து கொண்டிருப்பது போல - செலாவணியின் மிகைவழங்கலால்தான், அதாவது அதன் உள்ளார்ந்த மதிப்பாலும் சரக்குகளின் உள்ளார்ந்த மதிப்பாலும் நிர்ணயிக்கப்படும் நிலைக்கு மேல் செலாவணியின் பரிமாணம் அதிகரிப்பதால்தான்.

இதே போல், சரக்கு-விலைகள் பொதுவாகக் குறைவதற்கு செலாவணியின் குறை-வழங்கலினால் பணத்தின் மதிப்பில் அதன் உள்ளார்ந்த மதிப்புக்கு மேல் ஏற்படும் உயர்வே காரணமாய்க் காட்டப்படுகிறது. ஆக பணம் அவ்வப்போது அளவுமீறி அதிகமாகவோ அளவுமீறி குறைவாகவோ புழக்கத்தில் இருப்பதே விலைகள் அவ்வப்போது உயருவதற்கும் குறைவதற்கும் காரணமாகும். பணப்புழக்கம் சுருங்கும் போதே விலை உயர்வும், பணப் புழக்கம் விரிவாகும் போதே விலை குறைவும் ஏற்படுமானால் சந்தையிலுள்ள சரக்குகளின் பரிமாணம் சுருங்குவதாலோ விரிவடைவதாலோ புழக்கத்திலுள்ள பணத்தின் அளவு அறுதியாக இல்லாவிட்டாலும் ஒப்பளவில் அதிகரித்தோ குறைந்தோ விடுவதாக அப்போதும் சொல்லலாம் - இதை புள்ளி விவர ஆதாரத்துடன் நிரூபிக்க முடியாது என்பது மெய்தான். முழுக்க முழுக்க உலோகச் செலாவணி மட்டுமே பயன்படுத்தப்பட்டாலும் கூட விலைவாசியிலான இந்த மாற்றங்கள் ஏற்பட்டே தீருமென்றும், ஆனால் மாறி மாறி நிகழ்வதால் அவை ஒன்றையொன்று நேர் செய்து விடுமென்றும் ரிக்கார்டோ கூறக் கேட்டோம். எடுத்துக்காட்டாக செலாவணியின் குறை - வழங்கல் விலைகளைக் குறையச் செய்து அயல்நாடுகளுக்கு சரக்குகள் ஏற்றுமதியாவதற்கு தூண்டுதலாய் அமைகிறது, ஆனால் இந்த ஏற்றுமதியினால் அயல் நாடுகளிலிருந்து தங்கம் இறக்குமதியாகிறது; இதனால் மீண்டும் விலை உயருகிறது. செலாவணியின் மிகை - வழங்கல் நேர்மாறாக காரியங்கள் நடைபெறச் செய்கிறது. சரக்குகள் இறக்குமதியாகின்றன, தங்கம் ஏற்றுமதியாகிறது. ஆனால் ரிக்கார்டோவின் உலோகச் செலாவணியின் இயல்புக்கு அப்படியே ஒத்துவரும் இந்தப் பொதுவான விலை-அலைவுகள் ஒருபுறமிருக்க, இந்த அலைவுகளின் மிகக் கடுமையான உக்கிர வடிவமாகிய நெருக்கடிகள் வளர்ச்சி பெற்ற கடன்-செலாவணி அமைப்பின் காலத்திற்குரியன என்பதால், வங்கி-நோட்டுகளின் வெளியீடு உலோகச் செலாவணியின் விதிகளால் மட்டும் ஒழுங்கியக்கப் படுவதில்லை, என்பது தெளிவாய்த் தெரிகிறது. உலோகச் செலாவணிக்குரிய பரிகாரம் உயர்நிலை உலோகங்களின் இறக்குமதியும் ஏற்றுமதியும் ஆகும். இந்த உலோகங்கள் உடனடியாகவே நாணயமாய் புழக்கத்துக்கு வருகின்றன. எனவே இவற்றின் வருகையோ வெளியேற்ற சரக்குவிலைகள் குறைவதற்கோ உயர்வதற்கோ காரணமாகின்றன. இந்நிலையில் வங்கிகள் சரக்கு-விலைகள் மீது இதே விளைவை செயற்கை முறையில் ஏற்படுத்து வதற்காக உலோகச் செலாவணி விதிகளை செயற்கையாக

பின்பற்ற வேண்டும். அயல்நாட்டிலிருந்து தங்கம் வந்து கொண்டிருந்தால், செலாவணியின் அளவு போதவில்லை என்பதற்கும், பணத்தின் மதிப்பு அளவு மீறி அதிகமாகவும் சரக்கு-விலைகள் அளவுமீறி குறைவாகவும் இருக்கின்றன என்பதற்கும், ஆகவே புதிதாய் இறக்குமதியான தங்கத்திற்கேற்ற அளவில் வங்கி-நோட்டுகள் புழக்கத்தில் விடப்பட வேண்டும் என்பதற்கும் அது நிருபணமாகும். மறுபுறம், நாட்டிலிருந்து ஏற்றுமதியாகும் தங்கத்திற்கு ஏற்ற அளவில் புழக்கத்திலிருந்து நோட்டுகள் விலக்கிக் கொள்ளப்பட வேண்டும். அதாவது வங்கி நோட்டுகளின் வெளியீடு உயர்நிலை உலோகங்கள் இறக்குமதி-ஏற்றுமதிக்கேற்ப, அதாவது செலாவணி மாற்று வீதத்திற்கேற்ப ஒழுங்கு செய்யப்பட வேண்டும். தங்கம் என்றால் நாணயம் மட்டுமே என்றும் ஆகவே இறக்குமதியான தங்கம் முழுவதும் பணப்புழக்கத்தை அதிகமாக்குவதற்கு பயன்படுவதன் மூலம் விலைகளை உயரச் செய்கிறது என்றும், அதேபோது ஏற்றுமதியான தங்கம் முழுவதும் செலாவணியைக் குறையச் செய்து விலைகள் குறைவதற்கு வழி செய்கிறது என்றும் ரிக்கார்டோ தவறாக அனுமானம் செய்து கொள்கிறார்-இந்தத் தத்துவ அனுமானம் இப்போது நடைமுறைபரிசோதனையாக மாற்றப்பட்டு, ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் கிடைக்கக்கூடிய தங்கத்தின் அளவுக்கு சம அளவில் நாணயம் புழக்கத்தில் விடப்படுகிறது. ஓவர்ஸ்டோன் பிரபு (ஜோன்ஸ் லாய்டுக்கு வங்கியாளர்). கர்னல் டாரென்ஸ், நார்மன், கிளே, அர்பத்நாட் மற்றும் பல எழுத்தாளர்கள் - இங்கிலாந்தில் 'செலாவணிக் கோட்பாட்டின்' வழக்குரைஞர்களாக பெயர் பெற்றவர்கள் - இந்தக் கோட்பாட்டை உபதேசம் செய்திருப்பதோடு, 1844இலும் 1845இலும் சர் இராபர்ட் பீலின் வங்கிச் சட்டங்களைப் பயன்படுத்தி ஆங்கிலேய, ஸ்காட்லாந்திய வங்கிச்சட்ட முறைக்கு அக்கோட்பாட்டையே அடிப்படை ஆக்குவதிலும் வெற்றி பெற்றுள்ளனர். தத்துவம், நடைமுறை இரண்டிலுமே இக்கோட்பாடு படுதோல்வி அடைந்தது. நாடளாவிய முறையில் மிக விரிவாய் நடைபெற்ற பரிசோதனைகளுக்குப் பிறகு ஏற்பட்ட இந்தத் தோல்வியை கடன்-செலாவணித் தத்துவம் தொடர்பான பிரிவில்தான் பரிசீலிக்க முடியும்.' (முன்வந்தது, பக்கம் 165 - 68).

இம்மரபின் மீது விமர்சனம் தொடுத்தவர்கள் தாமஸ் டூக், ஜேம்ஸ் வில்சன் (1844-47இல் எக்கானமிஸ்ட் ஏட்டில்), ஜான் ஃபுல்லர்ட்டன் ஆகியோர் ஆவர். இந்த விமர்சகர்கள் தங்கத்தின் இயல்பை போதிய அளவில் ஊடுருவி நோக்கவில்லை என்றும்

*பணத்துக்கும் மூலதனத்துக்குமான உறவுமுறை குறித்து அவர்களுக்குத் தெளிவில்லை என்றும் அநேக சந்தர்ப்பங்களில் இந்த நூற்பாகத்தின் அத்தியாயம் XXVIII இல் பார்த்தோம். பீலின் வங்கிச் சட்டங்கள் தொடர்பான 1857ஆம் வருட கீழ்சபைக் குழுவின் நடவடிக்கைகளி லிருந்து சில எடுத்துக்காட்டுகளை மட்டும் இங்கு தருகிறோம். (வ.ச.1857). -பி.எங்கெல்ஸ்.]*

இங்கிலாந்து வங்கியின் முன்னாள் ஆளுநர் ஜா.ஜே. ஹபர்டு அளித்த சாட்சியம்: '2400. பொற்பாள ஏற்றுமதியின் விளைவுக்கும்.... சரக்குகளின் விலைக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. அது வட்டி வருமானக் கடன் பத்திரங்களின் விலை மீது மிக முக்கிய விளைவை ஏற்படுத்துகிறது. ஏனென்றால் வட்டி வீதம் மாறுகையில், அந்த வட்டியின் உருவாகிய சரக்குகளின் மதிப்பு வன்மையாக பாதிப்புறுவது தவிர்க்க முடியாதது.'—1834 முதல் 1843 வரையிலான ஆண்டுகளுக்கும் 1845 முதல் 1853*. வரையிலான ஆண்டுகளுக்குமாக இரு அட்டவணைகளை அவர் சமர்ப்பிக்கிறார். முக்கிய பதினைந்து வர்த்தகப் பண்டங்களின் விலை மாற்றங்கள் தங்கத்தின் ஏற்றுமதி - இறக்குமதியையும் வட்டி வீதத்தையும் சாராமலே ஏற்பட்டதை இந்த அட்டவணைகளிலிருந்து அறியலாம். மறுபுறம் தங்கத்தின் ஏற்றுமதி-இறக்குமதிக்கும் தங்கம்தான் 'முதலீடாகாத நமது மூலதனத்தின் பிரதிநிதி'- வட்டிவீதத்துக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதையும் அறியலாம்.—'(2402).—1847இல் ஏராளமான அமெரிக்கக் கடன்-பத்திரங்கள் திரும்பவும் அமெரிக்காவுக்கே மாற்றப்பட்டன. ருஷ்யக் கடன்-பத்திரங்கள் ருஷ்யாவுக்கே மாற்றப் பட்டன, ஏனைய கண்டத்துக் கடன்-பத்திரங்கள் நமக்குத் தானியம் வழங்கும் இடங்களுக்கு மாற்றப்பட்டன.'

ஹபார்டின் பின்வரும் அட்டவணைகளுக்கு ஆதாரமாய்க் கொள்ளப்படும் பதினைந்து முக்கியப் பண்டங்களாவன: பருத்தி, பருத்தி நூல், பருத்தித் துணிகள், கம்பளி, கம்பளித்துணி, வெண்சணல், லினன், அவுரி, தேனிரும்பு, வெள்ளீயம், தாமிரம், மிருகக் கொழுப்பு, சர்க்கரை, காபி, பட்டு.

(*) 1894ஆம் வருட ஜெர்மன் பதிப்பில் 1856 என்றுள்ளது.- ஆங்கிலப் பதிப்பாசிரியர்)

## I.1834-1843

| தேதி | வங்கியின் பொற்பாளச் சேம இருப்பு | சந்தைக் கழிவு வீதம் | பதினைந்து முக்கியப் பண்டங்கள் | | |
|---|---|---|---|---|---|
| | | | விலை உயர்வு | விலைக் குறைவு | மாற்ற மில்லை |
| *1834 மார்ச்சு 1* | *£9,104,000* | *2¾%* | — | — | — |
| *1835 மார்ச்சு 1* | *£6,274,000* | *3¾%* | *7* | *7* | *1* |
| *1836 மார்ச்சு 1* | *£7,918,000* | *3¼%* | *11* | *3* | *1* |
| *1837 மார்ச்சு 1* | *£4,077,000* | *5%* | *5* | *9* | *1* |
| *1838 மார்ச்சு 1* | *£10,471,000* | *2¾%* | *4* | *11* | — |
| *1839 செப். 1* | *£2,684,000* | *6%* | *8* | *5* | *2* |
| *1840 ஜூன் 1* | *£4,571,000* | *4¾%* | *5* | *9* | *1* |
| *1840 டிச. 1* | *£3,642,000* | *5¾%* | *7* | *6* | *2* |
| *1841 டிச. 1* | *£4,873,000* | *5%* | *3* | *12* | — |
| *1842 டிச. 1* | *£10,603,000* | *2½%* | *2* | *13* | — |
| *1843 ஜூன் 1* | *£11,666,000* | *2¼* | *1* | *14* | — |

## II. 1844-1853

| தேதி | வங்கியின் பொற்பாளச் சேம இருப்பு | சந்தைக் கழிவு வீதம் | பதினைந்து முக்கியப் பண்டங்கள் | | |
|---|---|---|---|---|---|
| | | | விலை உயர்வு | விலைக் குறைவு | மாற்ற மில்லை |
| *1844 மார்ச்சு 1* | *£16,162,200* | *2¼%* | — | — | — |
| *1845 டிச. 1* | *£13,237,000* | *4½%* | *11* | *4* | — |
| *1846 செப். 1* | *£16,366,000* | *3%* | *7* | *8* | — |
| *1847 செப். 1* | *£9,140,000* | *6%* | *6* | *6* | *3* |
| *1850 மார்ச்சு 1* | *£17,126,000* | *2½%* | *5* | *9* | *1* |
| *1851 ஜூன் 1* | *£13,705,000* | *3%* | *2* | *11* | *2* |
| *1852 செப். 1* | *£21,853,000* | *1¾%* | *9* | *5* | *1* |
| *1853 செப். 1* | *£15,093,000* | *5%* | *14* | — | *1* |

இது தொடர்பாக ஹபார்டு சொல்கிறார்: ' *1834 முதல் 1843 வரையிலான பத்தாண்டுகளைப் போலவே 1844-53இலும் வங்கியின் பொற்பாள இருப்பில் மாற்றங்கள் ஏற்பட்ட போதெல்லாம், கழிவுக்கு முன்னீடு செய்யப்படும் பணத்தின் கடனுக்குரிய மதிப்பில் குறைவோ அதிகரிப்போ ஏற்பட்டது; இந்நாட்டில் சரக்கு விலைகளில் ஏற்படும் மாற்றங்கள் பணப்புழக்க அளவைச் சிறிதும் சார்ந்திருப்பதில்லை என்று வெளிப்படுகிறது; இங்கிலாந்து வங்கியின் பொற்பாள இருப்பில் ஏற்படும் அலைவுகள் இதைப் புலப்படுத்துகின்றன.' (வங்கிச்சட்டங்கள் அறிக்கை, 1857, II, பக்கம் 290 - 91).*

சரக்குகளின் வழங்கல்-வேண்டல் அவற்றின் சந்தை-விலைகளை நிர்ணயிப்பதால், கடனுக்குரிய பண-மூலதனத்திற்கான வேண்டலை (பார்க்கப் போனால், அந்த வேண்டலுக்கும் வழங்கலுக்குமான இடைவெளியை)-உண்டியற் கழிவு வீதத்தில் வெளிப்படும்படியான இவ்வேண்டலை - ஓவர்ஸ்டோன் உண்மை-மூலதனத்திற்கான' வேண்டலாக இணங்காண்பது எவ்வளவு தவறானது என்பது இங்கு தெளிவாகிறது. சரக்கு-விலைகள் செலாவணியில் மொத்த அளவில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களால் ஆளப்படுகின்றன என்ற வாதம் இப்போது மூடிமறைக்கப்பட்டு, கழிவு வீதத்திலான ஏற்ற இறக்கங்கள் பண-மூலதனத்துக்கு மாறான உண்மைப் பொருள்வகை மூலதனத்திற்கான வேண்டலில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களைத் தெரிவிப்பதாக சொல்லப்படுகிறது. இதே குழுவின் முன்னால் நார்மன், ஓவர்ஸ்டோன் இருவரும் உள்ளபடியே இப்படி வாதிட்டதையும், குறிப்பாக ஓவர்ஸ்டோன் நொண்டி சமாதானங்கள் சொல்ல வேண்டி இருந்ததையும், முடிவில் மடக்கப்பட்டு வசமாய் சிக்கிக் கொண்டதை யும் முன்பே பார்த்தோம் (அத்தியாயம் XXVI). குறிப்பிட்ட ஒரு நாட்டில் இருந்து வரும் தங்க அளவில் ஏற்படும் மாற்றங்கள் சுற்றோட்ட ஊடகத்தின் அளவை அதிகமாக்கியோ குறைத்தோ அந்நாட்டிற்குள் தங்க அளவை அதிகரிக்கவோ குறையவோ செய்தே தீரும் என்பது பழைய மோசடிதான். தங்கம் ஏற்றுமதி செய்யப்படுமானால், இந்த செலாவணித் தத்துவத்தின்படி இந்தத் தங்கத்தை இறக்குமதி செய்யும் நாட்டில் சரக்கு-விலைகள் உயர்ந்தே தீரும், இதனால் தங்க ஏற்றுமதி செய்யும் நாட்டிலிருந்து தங்க இறக்குமதி செய்யும் நாட்டின் சந்தைக்கு அனுப்பப்படும் ஏற்றுமதிகளின் மதிப்பும் உயர்ந்தே தீரும். மறுபுறம், தங்க இறக்குமதி செய்யும் நாட்டின் ஏற்றுமதிகளது மதிப்பு தங்க ஏற்றுமதி செய்யும் நாட்டின் சந்தையில் குறைந்து போகும், அதே போது உள்நாட்டுச் சந்தையில், அதாவது தங்கத்தைப் பெற்றுக் கொள்ளும்

நாட்டில் உயர்ந்து விடும். ஆனால் உண்மையில், தங்க அளவில் ஏற்படும் குறைவு வட்டி வீதத்தைத்தான் உயரச் செய்கிறது. தங்க அளவில் ஏற்படும் அதிகரிப்பு வட்டி வீதத்தை குறையச் செய்கிறது. வட்டி வீதத்திலான இந்த ஏற்ற இறக்கங்கள் அடக்க-விலையை நிர்ணயிப் பதிலோ வழங்கல்-வேண்டலை தீர்மானிப்பதிலோ கணக்கில் கொள்ளப்படா விட்டால், சரக்கு விலைகள் இந்த ஏற்ற இறக்கங்களால் எவ்விதத்தும் பாதிக்கப்படுவதில்லை.

இதே அறிக்கையில் என்.அலெக்சாந்தர் இந்தியாவுடன் வர்த்தகம் செய்யும் பெரிய நிறுவனம் ஒன்றின் தலைவர் - ஐம்பதாம் ஆண்டுகளின் நடுப்பகுதியில் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் வெள்ளி பெருமளவில் வெளியேறிச் சென்றது குறித்து பின் வரும் கருத்துகளை வெளியிடு கிறார். இந்த வெள்ளிக் கசிவுக்கு காரணமாய் இருந்தவற்றில் ஒன்று சீன உள்நாட்டுப் போர் ஆகும்-இது சீனாவில் ஆங்கிலேய துணிமணிகள் விற்கப்படுவதை மட்டுப்படுத்தியது; மற்றொன்று ஐரோப்பாவில் பட்டுப்புழுக்களுக்கு ஏற்பட்ட நோய் ஆகும் - இதனால் இத்தாலியிலும் பிரான்சிலும் பட்டுப்புழு வளர்ப்பு செங்குத்தாய் வீழ்ச்சியுற்றது:

"4337. வெள்ளிக் கசிவு சீனாவுக்கா இந்தியாவுக்கா?- வெள்ளியை இந்தியாவுக்கு அனுப்புகிறோம், அதைக் கணிசமாய்க் கொடுத்து அபின் வாங்குகிறோம். எல்லாம் சீனாவுக்குச் சென்று பட்டு வாங்குவதற்கு நிதி சேர்த்துக் கொடுக்கிறது; இந்தியாவில் இருக்கும் சந்தை நிலவரத்தால் (அங்கு வெள்ளி திரண்ட போதிலும்) துணிமணி களையோ ஆங்கிலேய செய்பொருட்களையோ அனுப்புவதைக் காட்டிலும் வெள்ளியைச் செலவிடுவது அதிகம் இலாபகரமான முதலீடு ஆகிறது.'- '4338. வெள்ளி வேண்டும் என்பதற்காக பிரான்சிலிருந்து பெருமளவில் வெள்ளிக் கசிவு ஏற்பட்டதல்லவா?- ஆம், மிகப் பெரிய அளவில்.'-'4344. பட்டினை பிரான்சிலிருந்தும் இத்தாலியிலிருந்தும் கொண்டு வருவதற்கு பதில், அந்நாடுகளுக்கு பெருமளவுகளில் வங்கத்திலிருந்து மட்டுமல்லாமல் சீனாவிலிருந்தும் அனுப்பிக் கொண்டிருக்கிறோம்.'

இதையே வேறு விதமாகச் சொன்னால், ஆசியாவுக்கு சரக்குகள் அனுப்பப்படுவதற்கு பதில், அந்தக் கண்டத்துக்குரிய பண உலோகமான வெள்ளி அனுப்பப்பட்டது. இந்தச் சரக்குகளை உற்பத்தி செய்யும் நாட்டில் (இங்கிலாந்தில்) அவற்றின் விலைகள் உயர்ந்து விட்டதல்ல காரணம்; இந்தச் சரக்குகளை இறக்குமதி செய்யும் நாட்டில் மிகையான இறக்குமதிகளின் விளைவாக அவற்றின் விலைகள்

குறைந்து விட்டதுதான் காரணம். வெள்ளியானது பிரான்சிலிருந்து இங்கிலாந்துக்கு வரவேண்டியிருந்தது, அதற்கான விலையில் ஒரு பகுதியை தங்கமாகத் தரவேண்டியிருந்தது என்றாலும் கூட நிலைமை இதுவே. செலாவணித் தத்துவத்தின் படி இத்தகைய இறக்குமதிகளின் விளைவாக விலைகள் இங்கிலாந்தில் குறைந்திருக்க வேண்டும், இந்தியாவிலும் சீனாவிலும் உயர்ந்திருக்க வேண்டும்.

மற்றுமோர் எடுத்துக்காட்டு. பிரபுகள் சபைக்குழுவின் முன்னால் (வ.இ.1848/57) முக்கிய லிவர்பூல் வணிகர்களில் ஒருவரான வைலீ பின்வருமாறு சாட்சியமளிக்கிறார்: '1994, (பருத்தி நூற்பைக் காட்டிலும்) வருமானம் பெற்றுத்தரக் கூடியது, இவ்வளவு பெரும் இலாபங்களை தன்னகத்தே கொண்டது 1845 இறுதியில் வேறு எத்தொழிலும் இல்லை. பருத்தி இருப்பு கணிசமாயும் தரமாயும் இருந்தது, பயனுள்ள பருத்தியை இராத்தலுக்கு 4 பென்னி விலையில் வாங்க முடிந்தது. அதற்கு மேல் போகாத தொகையைச் செலவிட்டு, உதாரணமாய் மொத்தத்தில் நூற்பாளருக்கு இராத்தலுக்கு 8 பென்னி செலவில் மியூல் இழை எண் 40 ரகத்தில் தரமான நூல் நூற்கப்பட்டது. பெரும்பாலும் இந்த நூல் இராத்தலுக்கு 10 ½. 11 ½ பென்னி விலையில் 1845 செப்டம்பரிலும் அக்டோபரிலும் விற்கவும் ஒப்பந்தம் செய்யவும் பெற்றது; சில சந்தர்ப்பங்களில் பருத்தியின் முதல் விலைக்கு நிகராக நூற்பாளர்கள் இலாபம் அடைந்தார்கள்.' '1996. இத்தொழில் 1846, தொடக்கம் வரை தொடர்ந்து ஆதாயமாய் நடைபெற்றது,'-2000. 1844 மார்ச் 3ஆம் நாள், பருத்தி இருப்பானது (627, 042 பேல்) இன்று இருப்பதைப் போல் (1848 மார்ச் 3 ஆம் நாள் 301, 170 பேல்) இருமடங்குக்கும் கூடுதலாய் இருந்தது.' ஆனால் விலை அப்போது இராத்தலுக்கு 1 ¼ பென்னி கூடுதலாய் இருந்தது.(5 பென்னிக்கு பதில் 6 ¼ பென்னி). -அதே போது மியூல் இழை எண் 40 ரக தரம் வாய்ந்த நூல் அதை நூற்பதற்குப் பயன்பட்ட பருத்தியின் கொள்முதல் விலைக்கே விற்கப்பட்டது. (மேலது, எண் 2021, 2022). மூலதனம் 'தட்டுப்பாடாய்' இருப்பதால் பணம் 'கிராக்கியாய்' இருக்க வேண்டுமென்று சொல்கிற ஓவர்ஸ்டோனின் மதிநுட்பத்தில் மறைந்துள்ள தன்னலத்தை இது வெளிப்படுத்துகிறது. 1844 மார்ச் 3ஆம் நாள் வங்கியின் வட்டி வீதம் 3% ஆக இருந்தது. 1847 அக்டோபரிலும் நவம்பரிலும் 8, 9% ஆக உயர்ந்தது. 1848 மார்ச் 3ஆம் நாள் இன்னும் 4% ஆகவே இருந்தது. பருத்தியின் விலையானது வழங்கல் நிலவரத்திற்குப் பொருத்தமான விலைக்கும் மிகக்கீழாய் குறைக்கப்பட்டது; விற்பனைகளை அறவே நிறுத்துவதன் மூலமும், அடுத்து உயர்ந்த வட்டி வீதம் செலுத்த வேண்டியிருப்பதால் ஏற்படும்

பீதியைக் கொண்டும் இந்த விலைக் குறைப்பு செய்யப்பட்டது. இதன் விளைவாக ஒரு புறம் 1848இல் இறக்குமதிகள் பெருமளவில் குறைந்தன; மறுபுறம் அமெரிக்காவில் உற்பத்தி குறைந்தது. இதனால்தான் 1849 இல் பருத்தி விலைகள் மீண்டும் உயர்ந்தன. ஓவர்ஸ்டோன் கருத்துப்படி நாட்டில் பணம் அளவு மீறி அதிகமாய் இருந்ததால் சரக்குகளின் விலையும் அளவுமீறி அதிகமாய் இருந்தது.

'2002. பருத்தியாலைகளின் நிலைமையில் சமீபகாலத்தில் ஏற்பட்டுள்ள சரிவுக்குக் கச்சாப்பொருள் பற்றாக்குறையை காரணமாக கருதுவதற்கில்லை. ஏனென்றால் கச்சாப்பொருள் இருப்பு வெகுவாய் குறைந்துள்ள போதிலும் அதன் விலை குறைந்து போயிருப்பதாகவே தோன்றுகிறது.' சரக்குகளின் விலை அல்லது மதிப்பை பணத்தின் மதிப்போடு, அதாவது வட்டி வீதத்தோடு ஓவர்ஸ்டோன் என்னமாய்க் குழப்புகிறார்; கேள்வி எண் 2026க்கு பதிலளிக்கையில் வைவீ செலாவணித் தத்துவம் தொடர்பாக தமது பொது தீர்ப்பை வழங்குகிறார். இதை அடிப்படையாக கொண்டுதான் கார்டுவெல், சர் சார்லஸ் வுட் ஆகியோர் 1847 மேயில்.' 1844 வருட வங்கிச் சட்டத்தை முழுமையாகவும் நிறைவாகவும் செயலாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர்.'—'இந்தக் கோட்பாடுகள் பணத்துக்கு செயற்கையான உயர் மதிப்பையும், சரக்குகள் மற்றும் விலைபொருள் அனைத்துக்கும் செயற்கையான, நாசகரமான குறைமதிப்பையும் அளிக்கும்படியான நன்மை கொண்டவை என்று எனக்குப்பட்டது.' -பொதுவான தொழில் - வர்த்தக நிலவரத்தின் மீது இந்த வங்கிச் சட்டத்தின் விளைவுகள் குறித்து அவர் மேலும் சொல்கிறார்: 'அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு செல்ல வேண்டிய சரக்குகளின் கொள்முதலுக்காக ஆலைத்தொழில் நகரங்களிலிருந்து வணிகர்கள் மீதும் வங்கியாளர்கள் மீதும் வரையப்படும் நான்கு மாத உண்டியல்களை-பண விடைகளுக்குரிய இயல்பான காலக்கெடு இதுவே-பெருந் தியாகங்களின்றி கழிவு செய்து காசாக்கித் தர முடியாது என்பதால், ஆணை நிறைவேற்றும் பெருமளவுக்கு மட்டுப்பட்டிருந்தது. அக்டோபர் 25 தேதிய அரசு மடல்தான் (வங்கிச் சட்டத்தை நிறுத்தி வைத்தல்) இந்நிலையை மாற்றியது, அந்த நான்குமாத உண்டியல்கள் கழிவு செய்து காசாக்கக் கூடியவை ஆயின.' (2097).-ஆக, இந்த வங்கிச் சட்டம் நிறுத்தி வைக்கப்பட்டது மாகாணப் பகுதிகளிலும் நிம்மதிப் பெருமூச்சுடன் வரவேற்கப் பெற்றதைப் பார்க்கிறோம். -'2102. சென்ற அக்டோபரில் (1847) இங்கு சரக்கு வாங்கிய அமெரிக்கர்களில் நம்மால் முடிந்தவரை சரக்காணைகளை உடனே குறுக்கிக் கொள்ளாத

ஒருவரைக் கூட காண்பதரிது. பணம் கிராக்கியாய் இருக்க வேண்டியது குறித்து நாம் தெரிவித்த ஆலோசனைகள் அமெரிக்காவைச் சென்றடைந்த போது, புதிய சரக்காணைகள் எல்லாம் நின்றே போயின.'-2134, தானியமும் சர்க்கரையும் தனிரகம். அறுவடையின் பலாபலன்கள் தானியச் சந்தையில் தாக்கம் கொண்டன, மிகப் பெரும் இருப்புகளும் இறக்குமதிகளும் சர்க்கரையில் தாக்கம் கொண்டன.'-' 2163. அமெரிக்காவுக்கு நாம் கடன்பட்டிருப்பதைப் பொறுத்தவரை.... சரக்குத் தொகுதிகள் கட்டாயமாய் விற்கப்பட்டு பெரும்பகுதிக்கடன் தீர்க்கப்பட்டது. இங்கு நேரிட்ட தோல்விகளால் பெரும்பகுதி ரத்தானதாக கருதுகிறேன்.'—'2196. எனக்கு சரியான நினைவிருக்கு மானால், 1847 அக்டோபரில் நமது பங்குச் சந்தையில் 70 சதவீதம் செலுத்தப்பட்டது.

[1837 ஆம் வருட நெருக்கடியின் பின் விளைவு நெடுங்காலம் நீடித்திருந்தது, இதைத் தொடர்ந்து 1842 இல் வாடிக்கையான மேலுமொரு நெருக்கடி மூண்டது; தொழிலதிபர்களுக்கும் வணிகர்களுக்கும் தன்னலம் கண்ணை மறைத்தது; மிகையுற்பத்தி என்பதாக ஒன்று இருப்பதை பார்க்கவே அவர்கள் அடியோடு மறுத்துவிட்டார்கள் - ஏனென்றால் கொச்சைப் பொருளாதார நோக்கில் இப்படியொன்று இருப்பதே அபத்தமானது, சாத்தியமற்றது. இதனால் எல்லாம் முடிவில் விறைந்த சிந்தனைக் குழப்பம்தான். செலாவணி மரபினர் தமது சூத்திரத்தை நாடளாவிய முறையில் நடைமுறைப் படுத்துமாறு செய்தது. 1844-45 வங்கிச் சட்டம் இயற்றப்பட்டது.

1844 வருட வங்கிச் சட்டமானது இங்கிலாந்து வங்கியை நோட்டு வெளியீட்டுப் பிரிவாகவும் வங்கிப் பணிப்பிரிவாகவும் பிரிக்கிறது. வெளியீட்டுப் பிரிவு £14 மிலியன் மதிப்புள்ள கடன் பத்திரங்களையும்- பெரும்பாலும் அரசுக் கடப்பாடுகள் - கூடவே உலோக இருப்பு அனைத்தையும் பெறுகிறது; உலோக இருப்பில் வெள்ளி கால்பங்குக்கு மேல் இருக்கக் கூடாது. வெளியீட்டுப் பிரிவு இந்த மொத்தத் தொகைக்கு ஈடாக நோட்டு வெளியிடுகிறது. இந்த நோட்டுகள் பொது மக்களின் கையில் இல்லாவிட்டால், வங்கிப் பணிப்பிரிவில் இருக்கின்றன; அன்றாட உபயோகத்திற்கு தேவைப்படும் சிறிதளவு நாணயத்துடன் (சுமார் ஒரு மிலியன்) சேர்ந்து இந்த நோட்டுகள் தயார் நிலையிலிருக்கும் சேம இருப்பு ஆகின்றன. வெளியீட்டுப் பிரிவு பொதுமக்களுக்கு நோட்டுகளுக்குத் தங்கமும் தங்கத்துக்கு நோட்டுகளும் கொடுக்கிறது; பொது மக்களுடன் எஞ்சிய கொடுக்கல்

வாங்கல்களை வங்கிப் பணிப் பிரிவு பார்த்துக் கொள்கிறது. இங்கிலாந்திலும் வேல்சிலும் 1844இல் நோட்டு வெளியிடும் உரிமை பெற்ற தனியார் வங்கிகள் இந்த உரிமையை இழக்காவிட்டாலும், அவற்றின் நோட்டு வெளியீடு நிர்ணயம் செய்யப்படுகிறது. இந்த வங்கிகளில் ஒன்று அதன் நோட்டுகளை வெளியிடுவது நின்று போனால், இங்கிலாந்து வங்கி இவ்விதம் கிடைக்கும் பங்களவில் மூன்றில் இருபங்குக்கு அதன் பின்பணமில்லா நோட்டு வெளியீட்டை அதிகமாக்கிக் கொள்ளலாம்; இப்படித்தான் அதன் வெளியீடு 1892க்குள் £14 மிலியனிலிருந்து £16 ½மிலியனாக (துல்லியமாகச் சொன்னால் £16,450,000 ஆக) அதிகரித்தது.

இவ்வாறு வங்கிக் கருவூலத்திலிருந்து தங்கமாக வெளியேறிச் செல்லும் ஒவ்வொரு ஐந்து பவுனுக்கும் ஒரு ஐந்து-பவுன் நோட்டு வெளியீட்டுப் பிரிவுக்கு திரும்பி வந்து அழிக்கப்படுகிறது; கருவூலத்துக்கு வந்து சேரும் ஐந்து பொற்காசுகளுக்கு ஒரு புதிய ஐந்து - பவுன் நோட்டு வீதம் புழக்கத்தில் விடப்படுகிறது. இப்படித்தான் ஓவர்ஸ்டோனின் இலட்சியமான காகிதப் பணப்புழக்கம்-இதுவும் உலோகப் பணப்புழக்கத்தின் விதிகளால்தான் ஆளப்படுகிறது - நடைமுறைப்படுத்தப்படுகிறது; செலாவணித் தத்துவத்துக்கு வக்காலத்து வாங்குவோரின் கருத்துப்படி, நெருக்கடிகள் இவ்வழியில் எக்காலத்திலும் சாத்தியமற்றவை ஆகிவிடுகின்றனவாம்.

ஆனால் உண்மையில் நடந்தது என்னவென்றால், வங்கி சுயேச்சையான இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு விட்டதால், அதன் மேலாண்மை கிடைக்கக் கூடிய வழிவகைகள் அனைத்தையும் நெருக்கடியான தருணங்களில் விருப்பம் போல் பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்பை இழந்துவிட்டது. வெளியீட்டுப் பிரிவிடம் மிலியன் கணக்கில் மதிப்புள்ள தங்கமும், கூடவே 14 மிலியன் மதிப்புள்ள கடன் பத்திரங்களும் பழுதின்றி அப்படியே இருக்கும்போதே வங்கிப் பணிப் பிரிவு நொடித்துப் போகும் நிலையில் இருக்கும்படியான சூழல்கள் இதனால் உருவாகலாம். ஒவ்வொரு நெருக்கடியின் போதும் ஒரு கட்டத்தில் தங்கம் அயல்நாடுகளுக்கு மிகப் பெருமளவில் ஏற்றுமதி செய்யப்படுவதால் இத்தகைய சூழல் மிக எளிதில் உருவாகலாம்; தங்கத்தின் இந்த வெளியோட்டத்தை முக்கியமாய் இங்கிலாந்து வங்கியின் உலோகச் சேம இருப்பைக் கொண்டுதான் சரிக்கட்டியாக வேண்டும். ஆனால் தங்கமாக இப்படி வெளியேறிச் செல்லும் ஒவ்வொர் ஐந்து பவுனுக்கும் உள்நாட்டுச் சுற்றோட்டம் ஒரு £5 நோட்டு வீதம் இழந்துவிடுகிறது. அதாவது,

சுற்றோட்ட ஊடகம் அவசர அவசியமாய் மிகப் பெருமளவில் தேவைப்படும் நேரம் பார்த்து அதன் அளவு குறைந்து போகிறது. இவ்வாறு 1844ஆம் வருட வங்கிச் சட்டமானது மூளவிருக்கும் நெருக்கடியை சமாளிப்பதற்காக வங்கிநோட்டுகளை சேம இருப்பாய் சேர்த்து வைக்குமாறு நேரடியாக வர்த்தக உலகு முழுவதையும் தூண்டிவிடுகிறது; அதாவது நெருக்கடியை முடுக்கி விரைவுபடுத்தவும் கடுமையாக்கவும் சொல்கிறது. பணக்கடன் வசதிக்கான அதாவது கொடுப்புச் சாதனங்களுக்கான வேண்டலை நெருக்கடியான தருணத்தில் இப்படிச் செயற்கையாக மும்முரமாக்குவதன் மூலமும், அதேபோது அக்கொடுப்புச் சாதனங்களின் வழங்கலை கட்டுப் படுத்துவதன் மூலமும் வங்கிச் சட்டமானது நெருக்கடிக் காலவட்டி வீதத்தை இதற்கு முன் கேட்டறியாத உயரத்துக்கு உந்தித் தள்ளிவிடுகிறது. ஆகவே இந்தச் சட்டம் நெருக்கடிகளை ஒழித்துக் கட்டுவதற்கு பதில் முற்றச் செய்கிறது. இதனால் ஒரு கட்டத்தில், தொழில்துறை உலகு முழுவதும் இடிந்து நொறுங்கியாக வேண்டும், இல்லையேல் வங்கிச் சட்டம் ஒழிந்து போக வேண்டும் என்ற நிலை ஏற்படுகிறது. 1847 அக்டோபர் 25, 1857 நவம்பர் 12 ஆகிய இரு தேதிகளிலும் நெருக்கடி இப்படியோர் உச்சநிலை அடைந்தது; அரசு உடனே 1844ஆம் வருட சட்டத்தை நிறுத்தி வைத்து, நோட்டுகள் வெளியிடுவதில் வங்கிக்கிருந்த கட்டுப்பாட்டை அகற்றியது; இரு சந்தர்ப்பங்களிலுமே நெருக்கடியை சமாளிக்க இது போதுமானதாய் இருந்தது. 1847இல், முதல்தர கடன் பத்திரங்களுக்கு ஈடாக வங்கிநோட்டுகள் மீண்டும் வெளியிடப்படும் என்ற உறுதிப்பாடு £ 4முதல் £5 மிலியன் வரை பாதிக்கப்பட்டிருந்த நோட்டுகளை வெளியே கொண்டு வந்து மீண்டும் புழக்கத்தில் விடுவதற்கு போதுமானதாய் இருந்தது. 1857இல் சட்டவரையறைக்கு மிகையான நோட்டு வெளியீடு கிட்டத்தட்ட ஒரு மிலியனை எட்டியது. ஆனால் இது மிகக் குறுகிய காலமே நீடித்தது.

இன்னுமொன்றையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். அதாவது 1844ஆம் வருடச் சட்டத்தில் 19ஆம் நூற்றாண்டின் முதல் இருபது ஆண்டுகளை-ரொக்கக் கொடுப்புகள் நிறுத்தி வைக்கப்பட்டு வங்கி நோட்டுகளின் மதிப்பு குறைக்கப்பட்ட காலத்தை-நினைவுபடுத்தும் சுவடுகளைக் காணமுடிகிறது. வங்கி-நோட்டுகள் அவற்றின் கடன் மதிப்பை இழந்துவிடுமோ என்ற அச்சம் இன்னமும் வெளிப்படையாகவே தெரிகிறது. ஆனால் இந்த அச்சத்துக்கு ஆதாரமே இல்லை. ஏனென்றால், 1825 இலேயே கூட, புழக்கத்திலிருந்து

ஒதுக்கப்பட்டிருந்த பழைய £1நோட்டுகளின் இருப்பு ஒன்றை கண்டு பிடித்து மீண்டும் வெளியிட்டதானது நெருக்கடியைத் தணித்தது; மிகப்பரவலாகவும் மிக ஆழமாகவும் நம்பிக்கை குலைந்திருக்கும் காலத்திலும் கூட இந்த வங்கிநோட்டுகளின் நன்மதிப்பு ஆட்டங் காணாமல் இருப்பது இதனால் ருசு ஆயிற்று. இது புரிந்து கொள்ளக் கூடியதுதான்; ஏனென்றால் இறுதியாகப் பார்க்குமிடத்து, நாடே அதன் நன்மதிப்பை இந்த மதிப்படையாளங்களுக்கு ஆதாரமாக்கியுள்ளது. — பி.எங்கெல்ஸ்]

வங்கிச் சட்டத்தின் விளைவு குறித்து ஒரு சில கருத்துரைகளை இப்போது கண்ணுறுவோம். ஜான் ஸ்டூவர்ட்மில் 1844ஆம் வருட வங்கிச் சட்டம் மிகையான ஊக - வாணிபத்தை கட்டுப்படுத்தியதாக நம்புகிறார். நல்லவேளையாக இந்தப் பேரறிஞர் 1857 ஜுன் 12ஆம் நாள் சாட்சியமளித்தார். நான்கு மாதம் கழித்து நெருக்கடி மூண்டது. 'வங்கி இயக்குநர்களும், பொதுவாக வர்த்தகப் பெருமக்களும் வர்த்தக நெருக்கடியின் தன்மையையும், தாங்கள் மிகையான ஊக வாணிபத்தை ஆதரிப்பதால் தங்களுக்கும் பொது மக்களுக்கும் ஏற்படும் கொடுந்திங்கையும் முன்னைக்காட்டிலும் மிக நன்றாக புரிந்து கொள்வது குறித்து மில் அவர்களை வாயாரப் புகழ்ந்தார். (வ.கு.1857, எண் 2031).

அறிவுக் கொழுந்தாம் திருவாளர் மில் என்ன நினைக்கிறார் தெரியுமா? £1 நோட்டுகள் 'கூலி கொடுக்கும் ஆலையதிபர்களுக்கும் ஏனையவர்களுக்குமான முன்னீடுகளாக வெளியிடப்படுமானால்.... அந்த நோட்டுகள் அவற்றை நுகர்வுக்காகச் செலவிடும் மற்றவர்களின் கைக்குப் போய்விடலாம்; போய்விட்டால், நோட்டுகள் தம்மளவில் சரக்குகளுக்கான வேண்டலாக அமைந்து சிறிதுகாலம் விலையுயர்வை தூண்டி விடக் கூடியவையாக இருக்கக் கூடும்' (2066). அப்படியானால், ஆலையதிபர்கள் தங்கமாக கொடுப்பதற்கு பதில் காகிதமாகக் கொடுப்பதால் உயர்ந்த கூலி கொடுப்பார்கள் என்று திருவாளர் மில் எண்ணிக் கொள்கிறாரா? அல்லது ஓர் ஆலையதிபர் £100 நோட்டுகளாக கடன் பெற்று அந்த தங்கத்துக்கு மாற்றிக் கொண்டால், இந்தக் கூலி உடனடியாக £1 நோட்டுகளாக தரப்பட்டால் குறிப்பதைக் காட்டிலும் குறைந்த வேண்டலைக் குறிப்பதாய் இருக்குமென்று நம்புகிறாரா? சுரங்கத் தொழில் வட்டங்கள் சிலவற்றை எடுத்துக்காட்டாக கொண்டால் கூலி உள்ளபடியே உள்ளூர் வங்கிகளின் நோட்டுகளாக தரப்படுவதும், இதனால் அநேக தொழிலாளர்கள் சேர்ந்து ஒரு £5 நோட்டைப் பெறுவதும் அவருக்குத் தெரியாதா? இதனால்

அவர்களின் வேண்டல் அதிகமாகிவிடுகிறதா? அல்லது உயர்மதிப்பு நோட்டுகளுக்கு பதில் குறை மதிப்பு நோட்டுகளாகத் தரும்போது வங்கியாளர்கள் ஆலையதிபர்களுக்கு இன்னுங்கூட எளிதாகவும் அதிக அளவிலும் பணம் தந்துவிடுவார்களா?

[அரசியல் பொருளாதாரம் குறித்து மில் எழுதிய முழு நூலுமே முரண்பாட்டுக்கஞ்சாத தேர்வு வாதத்தை வெளிப்படுத்தவில்லையென்றால், £1 நோட்டுகள் தொடர்பாக அவருக்குள்ள இந்த அலாதியான அச்சத்தை விளங்கிக் கொள்ள முடியாமற் போகும். ஒருபுறம், அவர் அநேக கூறுகளில் ஓவர்ஸ்டோனுக்கு எதிராய் டூக்கோடு உடன்படுகிறார். மறுபுறம், சரக்கு-விலைகள் கிடைக்கக் கூடிய பணத்தின் அளவால் நிர்ணயிக்கப்படுவதாக நம்புகிறார். ஆக, ஏனைய நிலைமைகளெல்லாம் மாறாதிருக்க, இங்கிலாந்து ஒவ்வொரு £1 நோட்டிற்கும் ஒரு பொற்காசு வீதம் அவ்வங்கியின் கருவூலத்திற்கு வந்து சேரும் என்பதை அவர் ஏற்றுக் கொள்ளவே இல்லை. சுற்றோட்ட ஊடகத்தின் அளவு அதிகரிக்கலாம், இதனால் அதன் மதிப்பு குறையலாம், அதாவது சரக்கு விலைகள் உயரலாம் என்று அவர் அஞ்சுகிறார். மேற்கூறிய அவரது அச்சத்துக்குப் பின்னால் மறைந்திருப்பது இதுதான், வேறு ஒன்றுமில்லை.—பி.எங்கெல்ஸ்.]

இங்கிலாந்து வங்கி இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருப்பது குறித்தும், நோட்டுகள் காசாக்கப்படுவதை உறுதி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட அதீதமான முன்னெச்சரிக்கைகள் குறித்தும் வ.இ.1848/57 பற்றிய குழுவின் முன்னால் டூக் பின்வரும் கருத்துகளைத் தெரிவிக்கிறார்:

1837 உடனும் 1839 உடனும் ஒப்பிடுகையில் 1847 வட்டி வீதத்தில் ஏற்பட்ட கூடுதலான ஏற்ற இறக்கங்களுக்கு வங்கி இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டதுதான் காரணம். (3010). 1825இலும் சரி, 1837மற்றும் 1839இலும் சரி வங்கி நோட்டுகளில் பாதுகாப்பு பாதிப்புறவில்லை (3015).- 1825இல் தங்கத்திற்கான வேண்டலின் ஒரே நோக்கம் வட்டிக் கடை வங்கிகளின் £1 நோட்டுகள் அடியோடு நன்மதிப்பை இழந்து விட்டதால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்புவதுதான்; இங்கிலாந்து வங்கியும் £1 நோட்டுகளை வெளியிடும் நேரம் வரும் வரை மேற்கூறிய வெற்றிடத்தை தங்கத்தால் மட்டுமே நிரப்ப முடிந்தது (3022).- 1825 நவம்பரிலும் டிசம்பரிலும் ஏற்றுமதி நோக்கங்களுக்கான தங்கத்திற்கு கிஞ்சிற்றும் வேண்டலே இல்லாது போயிற்று (3023).

*'உள்நாட்டிலும் அயல்நாட்டிலும் நன்மதிப்பு குலைவுறும் நிலையில், ஆதாயப் பங்கிடுகளையும் வைப்புகளையும் செலுத்தத் தவறுவது வங்கி-நோட்டுகளின் கொடுப்பை நிறுத்தி வைப்பதை விடவும் பாரதூரமான பின்விளைவை ஏற்படுத்தக் கூடியதாய் இருக்கும் (3028).'*

*'3035. நோட்டிற்குள்ள மாற்றுரிமையை முடிவில் ஆபத்திற் குள்ளாக்கும் விளைவை ஏற்படுத்தக்கூடிய எதுவும் வர்த்தக நெருக்குதலின் போது கடும் இடர்பாட்டை தோற்றுவிக்கக் கூடியதாய் இருக்குமென்று சொல்ல மாட்டீர்களா?-அப்படிச் சொல்லவே மாட்டேன்.'*

*'1847ஆம் ஆண்டில் ... சுற்றோட்டப் பிரிவிலிருந்து இன்னுமதிக நோட்டு வெளியீடு என்பது 1825இல் போலவே வங்கியின் கருவூலத்தை வளப்படுத்துவதற்கு பங்களித்திருக்கக் கூடும்.' (3058).*

*வ.ச.1857 குழுவின் முன்னால் நியூமார்ச் சாட்சியமளிக்கிறார்: '1357. (இங்கிலாந்து வங்கி) வெவ்வேறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டதன்.... முதற்பெரும் தீய விளைவும் ... பொன்... வெள்ளிப்பாள சேம இருப்பை இரண்டாகப் பிரித்ததன் அவசியப் பின்விளைவும் என்னவென்றால், இங்கிலாந்து வங்கியின் வங்கிப் பணி அலுவல், அதாவது இங்கிலாந்து வங்கியின் செயற்பாட்டில் அதனை நாட்டின் வர்த்தகத்தோடு நெருக்கமாய் தொடர்புகொள்ளச் செய்யும் பகுதியானது அதன் முந்தைய சேம இருப்புத் தொகைகளில் பாதியளவை மட்டும் வைத்து நடைபெற்றுள்ளது என்பதே. ஆகவே சேமஇருப்பின் அந்தப் பிரிவினையிலிருந்து எழுந்துள்ள நிலவரம் இதுதான்: வங்கிப் பணிப் பிரிவின் சேம இருப்பு சற்றேனும் குறைந்து போய்விடும் போதெல்லாம் வங்கி அதன் கழிவு வீதம் குறித்து நடவடிக்கை எடுப்பது அவசியமாகிறது. ஆக, குறைந்து போன அந்தச் சேம இருப்பு அடிக்கடியும் அடுத்தடுத்தும் கழிவு வீதத்தில் மாற்றங்களையும் திடீர் திருப்பங்களையும் தோற்றுவித்துள்ளது. '-'1358. 1844 இலிருந்து' (1857 ஜுன் வரை) ஏற்பட்டுள்ள மாற்றங்கள் எண்ணிக்கையில் சுமார் 60 இருக்கும். ஆனால் 1844க்கு முன்னர் இதே கால அளவில் செய்யப்பட்ட மாற்றங்கள் பன்னிரண்டு கூட இருக்காது.'*

*1811இலிருந்து இங்கிலாந்து வங்கியின் இயக்குநர்களில் ஒருவராய் இருந்தவரும் சிறிது காலம் அதன் ஆளுநராய் இருந்தவருமான பார்மர் வ.இ.1848/57 பற்றிய பிரபுகள் சபைக் குழுவின் முன்னால் அளித்த சாட்சியம் சிறப்பாய்க் கருத்துக்குரியது:*

*'828. 1825 டிசம்பரில் சுமார் £1,100,000 மதிப்புள்ள பொற்பாளம் வங்கியில் இருந்து வந்தது. அந்தக் காலத்தில் இந்தச் சட்டம் (1844ஆம் வருடச் சட்டம்) இருந்திருக்குமானால் முழுத் தோல்வி அடைந்திருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை. டிசம்பர் வெளியீடு ஒரு வாரத்தில் £5 அல்லது £6 மிலியன் மதிப்புள்ள நோட்டுகளென்று நினைக்கிறேன்; அக்காலத்தில் நிலவிய பீதியை இது தணியச் செய்தது.*

*'825. (1825 ஜுலை 1க்குப் பிறகு) இங்கிலாந்து வங்கி அப்போது மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் - வாங்கல்களை நிறைவேற்றி முடிக்க முயன்றிருந்தால் இந்தச் சட்டம் தோல்வி அடைந்திருக்கக் கூடிய முதல் சந்தர்ப்பம் 1837 பிப்ரவரி 28 ஆகும்; அச்சமயம் வங்கியின் வசம் £3,900,000 முதல் £4,000,000 வரை மதிப்புள்ள பொற்பாளம் இருந்து வந்தது; அதாவது வங்கியின் சேம இருப்பில் £650,000 மட்டும் எஞ்சியிருந்திருக்கும். இன்னொரு சந்தர்ப்பம் 1839ஆம் ஆண்டில் ஜுலை 9 இலிருந்து டிசம்பர் 5 வரை. '-'826, அப்போது எவ்வளவு சேம இருப்பு இருந்தது?-செப்டம்பர் 5ஆம் நாள் மொத்தம் £200,000 பற்றாக்குறையாய் இருந்தது. நவம்பர் 5ஆம் நாள் அது சுமார் 1 மிலியன் 1½ மிலியனாக உயர்ந்தது.' '830. 1844ஆம் வருடச் சட்டமானது இங்கிலாந்து வங்கி அமெரிக்க வர்த்தகத்திற்கு 1837 ல் உதவியளிப்பதைத் தடுத்திருக்கு' -'831. நொடிந்துப்போன முக்கிய அமெரிக்க நிறுவனங்கள் மூன்று....அமெரிக்காவுடன் தொடர்புடைய நிறுவனங்களில் அநேகமாய் ஒவ்வொன்றுமே நன்மதிப்பு கெட்ட நிலையில் இருந்தன, அந்த நேரத்தில் இங்கிலாந்து வங்கி முன்வந்திராவிட்டால், ஓரிரு நிறுவனங்களுக்கு மேல் தாக்குப் பிடித்திருக்க முடியாது என்று நம்புகிறேன்,'—'836. 1837ஆம் வருடத்திய நெருக்குதல் 1847ஆம் வருடத்திய நெருக்குதலோடு ஒப்பிடுவதற்கில்லை. 1837இல் நெருக்குதல் முக்கிய அமெரிக்க வர்த்தகத்துக்குத்தான் இருந்தது.'-838. (1837ஜுன் தொடக்கத்தில் இங்கிலாந்து வங்கியின் மேலாண்மை நெருக்குதலை சமாளிக்கும் பிரச்சினை குறித்து விவாதித்தது). 'வட்டி வீதத்தை உயர்த்துவதுதான் சரியான கொள்கை என்றும், இதனால் சரக்குகளின் விலை குறையுமென்றும் ... சில கனவான்கள் கருத்து தெரிவித்தனர். சுருங்கச் சொன்னால், பணத்தை அரிதாக்கி, சரக்குகளை மலிவாக்க வேண்டும், இதனால் அயல்நாட்டுக் கொடுப்பு நிறைவேறும் என்றனர்.'—'906. இங்கிலாந்து வங்கியின் அதிகாரங்களுக்கு புராதன காலத்திய இயற்கை வரம்பாகிய உள்ளபடியான அதன் நாணய அளவுக்கு பதில் 1844 ஆம் வருடச் சட்டத்தின்படி அவ்வதிகாரங்களுக்கு செயற்கையாக எல்லைத் தடை ஏற்படுத்துவது செயற்கையான*

இடர்பாட்டைத் தோற்றுவிக்கக் கூடியதாகும். ஆகவே வணிகப் பண்டங்களின் விலைகள் தொடர்பான இந்நடவடிக்கை இச் சட்டத்தின் வழிவகைகள் மட்டும் இல்லையென்றால் அவசியமற்றதாயிருக்கும். - '968. 1844ஆம் வருடச் சட்டத்தை செயற்படுத்துவதன் மூலம் பொற்பாளத்தை சாதாரண நிலைமைகளில் 9 ½ மிலியனுக்கு கீழே அப்படியொன்றும் குறைத்து விடமுடியாது. அப்போது இதனால் விலைகள் மீதும் கடன்-செலாவணி மீதும் நெருக்குதல் உண்டாகும். அயல்நாடுகளுடனான பரிவர்த்தனையில் எற்படும் முன்னேற்றம் பொற்பாள இறக்குமதியை கூடுதலாக்குவதாகவும், அந்த அளவுக்கு நோட்டு வெளியீட்டுப் பிரிவிலிருக்கும் தொகையை அதிகமாக்குவ தாகவும் அமையும்.'—'996. நமக்கு (இங்கிலாந்து வங்கிக்கு) இப்போதுள்ள எல்லைத்தடையின் படி, அயல் நாட்டுப் பரிவர்த்தனைகள் மீதான நடவடிக்கைக்கு வெள்ளி தேவைப்படும் நேரத்தில் வேண்டிய அளவுக்கு வெள்ளியை ஆளமுடியாமற் போகிறது.'—'999. வெள்ளியின் அளவினை ஐந்திலொரு பங்காய்க் குறைக்கும்படி வங்கியைக் கட்டுப்படுத்தும் விதிமுறையின் குறிக்கோள் என்ன? - இந்தக் கேள்விக்கு என்னால் பதில் சொல்ல முடியாது.'

பணத்தை அரிதாக்குவதுதான் நோக்கம். செலாவணித் தத்துவம் ஒருபுறம் இருக்க, வங்கியின் இரு பிரிவுகளையும் தனித்தனியே வேறுபடுத்தியதற்கும், ஸ்காட்லாந்திய, அயர்லாந்திய வங்கிகள் குறிப்பிட்ட அளவுக்கு மேல் வெளியிடும் நோட்டுகளுக்கு ஆதாரமாய் இருக்கும்படி சேம இருப்பில் தங்கம் வைத்திருக்க வேண்டும் என்ற நிபந்தனை விதித்ததற்கும் இதே நோக்கம்தான். இதனால் நாட்டின் உலோகச் சேம இருப்பு பரவலானதாகி, பாதகமான செலாவணி மாற்று வீதங்களை (Exchange rates) சரி செய்திட அதற்குள்ள ஆற்றல் குறைந்து போயிற்று. பின்வரும் கட்டளைகள் எல்லாம் வட்டி வீதத்தை உயர்த்துவதற்கு வழிகோலுகிறவைதான்; இங்கிலாந்து வங்கி தங்கச் சேம இருப்பின் ஆதாரமில்லாமல் 14 மிலியனுக்கு மேல் நோட்டு வெளியிடக் கூடாது, வங்கிப் பணிப் பிரிவை சாதாரண வங்கியைப் போல் பரிபாலனம் செய்ய வேண்டும்; பணம் மிகையாய் இருக்கும்போது வட்டி வீதத்தை கீழேயும், பணம் தட்டுப்பாடாய் இருக்கும்போது அவ்வீதத்தை மேலேயும், பணம் தள்ளிவிடவே இது பயன்படுகிறது; கண்டத்துடனும் ஆசியாவுடனும் செலாவணி மாற்று வீதங்களை சரிசெய்வதற்கு முக்கிய சாதனமாகிய வெள்ளிச் சேம இருப்பை வரம்புக்குட்படுத்த வேண்டும்; ஸ்காட்லாந்திய, அயர்லாந்திய வங்கிகளின் விதி முறைப்படி ஏற்றுமதிக்கு தங்கம்

தேவைப்படுவதே இல்லை; ஆனால் அவற்றின் நோட்டுகளுக்குள்ள மெய்யாகவே மாயையான மாற்றுரிமையை உறுதி செய்யும் பாவனையில் இப்போது அவை தங்கம் வைத்திருந்தாக வேண்டும். உண்மை என்ன வென்றால், 1844ஆம் வருடச் சட்டம்தான் முதன் முதலாய் 1857இல் ஸ்காட்லாந்திய வங்கிகளில் தங்கத்துக்கு திடீர் மொய்ப்பு ஏற்படச் செய்தது. புதிய வங்கிச் சட்டமானது அயல் நாட்டுக்கான தங்க வெளியோட்டத்தையும் உள்நாட்டு நோக்கங் களுக்கான தங்க வெளியோட்டத்தையும் எவ்விதத்தும் வேறுபடுத்திப் பார்க்கவில்லை; ஆனால் இவற்றின் விளைவுகள் அறவே வெவ்வேறானவை என்பது கூறாமல் விளங்கும். ஆகவேதான் சந்தை வட்டி வீதத்தில் ஓயாமல் பெரும் ஏற்ற இறக்க அலைவுகள் நேரிடுகின்றன. செலாவணி மாற்று வீதம் இங்கிலாந்துக்கு சாதகமாய் இருக்கும் போதுதான், அதாவது வெள்ளி தேவைக்கதிகமாய் இருக்கும்போதுதான் இங்கிலாந்து வங்கி நோட்டுகளுக்கு பிரதியாக வெள்ளி வாங்கலாம் என்றே இரு வேறு சந்தர்ப்பங்களில் (992, 994) வெள்ளி பற்றி பால்மர் சொல்வதாகும். எப்படியென்றால்: '1003. வெள்ளிப் பாளத்தை கணிசமான அளவில் வைத்துக் கொள்வதன் ஒரே நோக்கம், பரிவர்த்தனைகள் நாட்டுக்குப் பாதகமாய் இருந்து வரும் வரை, அயல்நாட்டுக் கொடுப்பினை எளிதாக்குவதுதான். '-'1004. வெள்ளியானது....உலகின் ஏனைய பகுதிகளிலெல்லாம் பணமாய் இருப்பதால், இந்நோக்கத்திற்கு' (அயல்நாட்டு கொடுப்புகளுக்கு) 'மிகவும் நேரடியாகப் பயன்படும் சரக்காகும். சமீப காலத்தில் அமெரிக்க ஐக்கிய நாடு தங்கத்தை மட்டும் ஏற்றுள்ளது.'

இவரது கருத்துப்படி, பாதகமான செலாவணி மாற்று வீதங்கள் தங்கத்தை அயல்நாடுகளுக்கு வெளியேறச் செய்யாமல் இருக்கும்வரை பணமுடைக் காலத்தில் வட்டி வீதத்தை அதன் பழைய அளவான 5%க்கு மேல் உயர்த்த இங்கிலாந்து வங்கியானது வேண்டியிருக்கவில்லை. 1844ஆம் வருடச் சட்டம் மட்டும் இல்லையென்றால், இங்கிலாந்து வங்கி அதனிடம் சமர்பிக்கப்படும் முதல்தர உண்டியல்கள் யாவற்றையும் இடர்பாடின்றி கழிவு செய்து காசாக்குவது சாத்தியமாகும். (1018 - 20.) ஆனால் 1844ஆம் வருடச் சட்டத்தின்படியும், 1847 அக்டோபரில் வங்கி இருந்த நிலையிலும், 'வங்கியானது கடன் செலாவணி நிறுவனங்களுக்கு எவ்வளவு வட்டி வீதம் விதித்தாலும், அவை தம் கொடுப்புகளை தொடரும் பொருட்டு வட்டி தர சித்தமாய் இருந்திருக்கும்' (1022). சட்டத்தின் நோக்கமே இந்த உயர்ந்த வட்டி வீதம்தான்.

'1029....(உயர் நிலை உலோகத்திற்கான) அயல் நாட்டு வேண்டல் மீது வட்டி வீதம் செயல்படுவதையும், உள் நாட்டில் நன் மதிப்பு கெட்டுப் போயிருக்கும் காலத்தில் இங்கிலாந்து வங்கியின் மீதான வேண்டலைக் கட்டுப்படுத்தும் நோக்கத்திற்காக வட்டி வீதம் உயர்த்தப்படுவதையும் தெளிவாய் வேறுபடுத்திக் காட்ட விரும்புகிறேன்.'—'1023. 1844ஆம் வருடச் சட்டத்துக்கு முன்னதாக....செலாவணி மாற்று வீதங்கள் நாட்டுக்குச் சாதகமாய் இருந்த போது, அப்பட்டமான பீதியும் அச்சமும் நாடெங்கும் நிலவிய போது, நோட்டு வெளியீட்டிற்கு வரம்பேதும் விதிக்கப்படவில்லை; இதனால் மட்டுமே அந்தத் துன்பநிலையை தணிக்க முடிந்தது.'

இங்கிலாந்து வங்கியின் நிர்வாகத்தில் 39 ஆண்டுகாலம் பதவி வகித்த ஒருவர் இப்படிச் சொல்கிறார்: 1801இலிருந்து ஸ்பூனர், அட்வுட் &கம்பெனியின் பங்காளராய் இருந்து வரும் டுவெல்ஸ் என்னும் தனியார் வங்கியாளர் கூறுவதைக் இப்போது கேட்போம். 1857ஆம் வருடத்திய வங்கிக் குழுவின் முன்னால் சாட்சியமளித்தவர்களில் இவர் ஒருவர்தான் உள்ளபடியே நாட்டிலுள்ள நிலவரத்தை ஊடுருவி நோக்குவதோடு, நெருக்கடி நெருங்கி வருவதையும் பார்க்கிறார். ஆனால் ஏனையவை தொடர்பாக அவர் பர்மிங்காமைச் சேர்ந்த ஒருவகையான சின்ன-ஷில்லிங் ஆசாமிதான், இந்த மரபின் நிறுவனர்களாகிய அவருடைய பங்காளர்களாம் அட்வுட் சகோதரர்களைப் போன்றவர்தான். (பார்க்கவும்: அரசியல் பொருளாதார விமர்சனத்திற்கு ஒரு பங்களிப்பு, பக்கம் 59). அவர் சாட்சியமளிக்கிறார்: '4488. 1844ஆம் வருடச் சட்டம் எப்படிச் செயல்பட்டுள்ளது என்று நினைக்கிறீர்கள்?- ஒரு வங்கியாளராக நான் உங்களுக்கு பதிலளிப்பதனால், அது அபாரமாய்ச் செயல் பட்டிருப்பதாகச் சொல்வேன். ஏனென்றால் வங்கியாளர்களுக்கும் அனைத்து வகை (பண-) முதலாளிகளுக்கும் அது வளமான மகசூல் தந்துள்ளது. ஆனால் நேர்மையும் ஊக்கமும் வாய்ந்த வர்த்தகருக்கு அது படுமோசமாய்ச் செயல்பட்டிருக்கிறது; உண்டியற் கழிவு வீதம் சீராக இருந்தால்தான் இந்த வர்த்தகர் நம்பிக்கையுடன் ஏற்பாடுகள் செய்வது சாத்தியப்படும்.... வட்டிக்கு பணம் கொடுப்பது இந்தச் சட்டத்தால் இலாபங்கொழிக்கும் தொழிலாகிவிட்டது. '—'4489. இதனால் (வங்கிச் சட்டத்தால்) லண்டன் கூட்டுப் பங்கு வங்கிகள் 20 முதல் 22%ஐ அவற்றின் உரிமையாளர்களிடமே திருப்பித்தர முடிகிறது அல்லவா?- அன்றைக்கு இவ்வங்கிகளில் ஒன்று 18% கொடுத்தது, இன்னொன்று 20% கொடுத்ததாக நினைக்கிறேன்; இவை 1844ஆம் வருடச் சட்டத்தை

*வன்மையாக ஆதரிக்கத்தான் வேண்டும்.—'4490. சிறு வர்த்தகர்கள், மதிப்புக்குரிய வணிகர்கள் இவர்களிடம் அதிகமாய் மூலதனம் இல்லை;...இவர்களைத்தான் இது பெரிதும் வதைக்கிறது...இதை தெரிந்து கொள்ள எனக்கிருக்கும் ஒரே வழி என்னவென்றால் மலைக்கச் செய்யும்படி பெருமளவிலான இவர்களின் ஏற்புகள் கொடுபடாமல் இருக்கக் காண்கிறேன். இவை எப்போதுமே சிறு அளவிலானவை. £20 முதல் £100 வரை இருக்கலாம், இவற்றில் பெருந்தொகையானவை கொடுபடுவதில்லை, கொடுபடாமலே நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் திரும்பிப் போகின்றன. இது எப்போதுமே சிறு கடைக்காரர்கள்....இடையில் நிலவும் அவதியைக் காட்டுவதாகும்.'-4494. தொழில் இப்போது இலாபகரமாய் நடைபெறவில்லை என்று அவர் அறிவிக்கிறார். அவர் குறிப்பிடுகிற பின்வரும் விவரங்கள் முக்கியமானவை. ஏனென்றால் வேறு எவருக்கும் நெருக்கடி பற்றிய சூசனை கூட இல்லாத போது உள்ளுறையாக நெருக்கடி இருந்து வருவதை அவர் கண்டு கொண்டார் என்பதற்கு இந்த விவரங்கள் சான்றாகும்.*

*'4494. மின்சிங்லேனில் பண்டங்களின் விலையில் மாற்றமில்லை, ஆனால் எதுவும் விலைபோவதில்லை, என்ன விலை சொன்னாலும் நம்மால் விற்க முடியாது; பெயர்-விலையை வைத்துக் கொள்கிறோம்.'-4495. அவர் பின்வரும் எடுத்துக்காட்டைக் குறிப்பிடுகிறார். பிரெஞ்சுக்காரர் ஒருவர் குறிப்பிட்ட விலைக்கு விற்கச் சொல்லி £3000க்கான சரக்குகளை மின்சின் லேனில் இருக்கும் ஒரு தரகருக்கு அனுப்பி வைக்கிறார். குறிப்பிட்ட விலையைப் பெற்றுத்தர தரகரால் முடியாது, இந்த விலைக்கு கீழே விற்க பிரெஞ்சுக்காரரால் முடியாது. சரக்குகள் விலைபோகாமலிருக்க, பிரெஞ்சுக்காரருக்கோ பணம் தேவைப்படுகிறது. ஆகவே அவருக்கு தரகர் £1000 முன்னீடு செய்கிறார்; பிரெஞ்சுக்காரர் தம் சரக்குகளைப் பிணையமாய்க் கொண்டு தரகர் பேரில் £1000க்கு மூன்று மாத மாற்று உண்டியல் எழுதிக் கொடுக்கிறார். மூன்று மாத முடிவில் உண்டியல் தீர்வுக்குரியதாகிறது, ஆனால் சரக்குகள் இன்னும் விற்கப்படவில்லை. இந்நிலையில் தரகர் உண்டியலுக்கு பணம் கொடுத்தாக வேண்டும்; அவரிடம் £3000க்குரிய பிணையம் இருந்தாலும், அதை ரொக்கமாக்க முடியாமல் அவர் தவிக்கிறார். இப்படியாக ஒருவர் தன்கூடவே இன்னொருவரையும் மூழ்கடித்து விடுகிறார்.-'4496. பெரும் ஏற்றுமதிகளைப் பொறுத்தவரை ... உள்நாட்டில் வர்த்தக நிலவரம் மந்தமாக இருக்குமானால், பெருமளவில் ஏற்றுமதி செய்வது தவிர வேறு வழியில்லை. '—'4497.*

*உள்நாட்டு நுகர்வு குறைந்து போய்விட்டதாக நினைக்கிறீர்களா?- அப்படித்தான் மிக அதிகமாய்.....பெருமளவில் குறைந்து போய் விட்டது ... கடைக்காரர்களால் தான் இதைச் சரியாக சொல்ல முடியும். '—'4498. இருந்தாலும் இறக்குமதிகளும் மிகப் பெருமளவில் நடைபெறுகின்றனவே, இது பெருமளவிலான நுகர்வுக்கு சான்றல்லவா? - சரக்கை விற்க முடிந்தால் அப்படித்தான்; ஆனால் பண்டகசாலைகள் பலவற்றிலும் இந்தப் பண்டங்கள் நிறைந்துள்ளன; சற்று முன் குறிப்பிட்ட எடுத்துக்காட்டிலேயே கூட £3000 மதிப்புள்ள சரக்கு இறக்குமதி செய்யப்பட்டு விலை போகாமலிருக்கிறது.'*

*'4514. பணம் அரிதாய் இருக்கும் போது மூலதனம் மலிவாய் இருக்குமென்று சொல்வீர்களா?-சொல்வேன்.'- ஆக உயர்ந்த வட்டி வீதமும் அரிதான மூலதனமும் ஒன்றுதான் என்ற ஓவர்ஸ்டோனின் கருத்தை எவ்வகையிலும் ஏற்பவரல்ல இந்தப் பேர்வழி.*

*தொழில் இப்போது எப்படி நடைபெறுகிறது பாருங்கள்: '4016. மற்றவர்கள் மிகப் பெருமளவுக்கு போகிறார்கள், ஏற்றுமதி - இறக்குமதியில் அபார வர்த்தகம் புரிகிறார்கள், அவர்களுடைய மூலதனத்திற்கு நியாயமாய் என்ன செய்யலாமோ, அதையெல்லாம் தாண்டி வெகுதூரம் செல்கிறார்கள்; இதுபற்றியெல்லாம் சந்தேகத்திற்கு இடமில்லை. இவர்களின் முயற்சி பலிக்கலாம்; பாக்கியவசமாய் ஏதாவது சாகசம் புரிந்து இவர்கள் பெருஞ்செல்வம் திரட்டி, தம்மை சரிசெய்து கொள்ளலாம். இந்த அமைப்பில்தான் இப்போது ஏராளமாய் வர்த்தகம் நடைபெறுகிறது. ஒருமுறை கப்பலேற்றப்படும் சரக்குகளில் 20, 30, 40 சதவீத இழப்புக்குத் தயாராய் இருப்பார்கள்; அடுத்த வியாபாரத்தில் அது திரும்பி வரலாம். அடுத்தடுத்தும் அவர்கள் தோல்வியே கண்டால் நொடித்துப் போகிறார்கள். சமீபகாலத்தில் இப்படி அநேகம் பார்த்தோம்; வணிக நிறுவனங்கள் தம்பிடிச் சொத்தும் மிச்சமில்லாமல் நொடிந்துப் போகக் கண்டோம்.'*

*'4791. (குறைந்த வட்டி வீதம் கடந்த பத்தாண்டு காலத்தில்) வங்கியாளர்களுக்கு பாதகமாய் இருப்பது மெய்தான். ஆனால் இலாபம் (அவருடைய இலாபமே) முன்னைக் காட்டிலும் இப்போது எவ்வளவு அதிகமாய் உயர்ந்திருக்கிறது, என்பதை நான் உங்களிடம் கணக்கேடுகளைக் காட்டாமல் விளங்க வைப்பது மிகவும் கடினம். மிகையான நோட்டு வெளியீடுகளால் வட்டி குறைவாய் இருக்கும்போது, வைப்புகள் பெருகுகின்றன; வட்டி உயர்வாய்*

இருக்கும் போது, அதைக் கொண்டு ஆதாயமடைகிறோம்.' -'4794. குறைந்த வட்டிக்குப் பணம் கிடைக்கும்போது, அதற்கான வேண்டல் அதிகரிக்கிறது; அதிகமாய் கடன் கொடுக்கிறோம்; அது (வங்கியாளர்களாகிய எங்களுக்கு) அப்படித்தான் இயங்குகிறது. வட்டி உயரும் போது, எங்களுக்கு நியாயமாய் கிடைக்க வேண்டிய விகிதத்துக்கு மேல் கிடைக்கிறது; அடைய வேண்டியதற்கு மேல் அடைகிறோம்.'

இங்கிலாந்து வங்கி நோட்டுகளின் நன்மதிப்பு கேள்விக்கு இடமற்றது என்றே எல்லா வல்லுநர்களும் கருதக் கண்டோம். ஆனால் வங்கிச் சட்டமானது இந்த நோட்டுகளின் மாற்றுரிமைக்காக தங்கமாக என்பது முதல் பத்து மிலியனை அறவே முடக்கி வைக்கிறது. இதனால் இந்தச் சேம இருப்பின் மீறவொண்ணாப் புனிதம் பழங்காலத்தில் பணம் சேர்ந்தவர்களிடையே இருந்ததை விடவும் வெகுதூரம் கொண்டு செல்லப்படுகிறது. திருவாளர் பிரௌன் (லிவர்பூல்) சாட்சியமளிக்கிறார், வ.இ.1847/57: '2311. இந்தப் பணத்தை (நோட்டு வெளியீட்டுப் பிரிவின் உலோகச் சேம இருப்பை) நாடாளுமன்றச் சட்டத்தை மீறாமல் கொஞ்சங்கூட ஈடுபடுத்த அதிகாரமில்லை என்பதால், இதனை அச்சமயம் அது எவ்வகையில் பயன்பட்டு வந்தாலும் தாராளமாய் கடலில் வீசி இருக்கலாம்.'

முன்பே மேற்கோள் காட்டிய கட்டட ஒப்பந்தக்காரர் ஈ.காப்ஸ் - லண்டனில் நவீன கட்டண அமைப்பை விளக்கிக் காட்டவும் இவரது சாட்சியம் நமக்குப் பயன்பட்டது (இரண்டாம் பாகம், அத்தியாயம் XII, பக்கம் )-1844ஆம் வருட வங்கிச் சட்டம் பற்றிய தமது கருத்தை பின்வருமாறு தொகுத்துரைக்கிறார் (வ.ச.1857): '5508. ஆக மொத்தத்தில்....(வங்கிச் சட்டத்தின்) இப்போதைய அமைப்பு தொழில்துறை இலாபங்களை அவ்வப்போது கடுவட்டிக்காரனின் பையில் கொண்டு வந்து சேர்ப்பதற்கான ஒருவிதமான கெட்டிக்காரத் திட்டமென்று நினைக்கிறீர்கள்?-அப்படித்தான் நினைக்கிறேன். அது கட்டடத் தொழிலில் அப்படிச் செயல்பட்டிருப்பதை நானறிவேன்.'

முன்னர் குறிப்பிட்டது போல், 1845ஆம் வருடத்திய வங்கிச் சட்டமானது ஸ்காட்லாந்திய வங்கிகளையும் ஆங்கிலேய வங்கிகளின் அமைப்பை ஒத்த ஒன்றினுள் நெட்டித்தள்ளியது. அவை அந்தந்த வங்கிக்கும் நிர்ணயிக்கப்பட்ட வரம்புக்கு மேல் நோட்டு வெளியிடுவதற்கு சேம இருப்பில் தங்கம் வைத்துக் கொள்ள வேண்டியதாயிற்று. வ.இ.1848/57 குழுவிடம் அளிக்கப்பட்ட பின்வரும் சாட்சியத்திலிருந்து இந்த ஏற்பாட்டின் விளைவை அறியலாம்.

கென்னடி, ஸ்காட்லாந்திய வங்கி ஒன்றின் இயக்குநர்: '3375. 1845ஆம் வருடச் சட்டம் இயற்றப்படுவதற்கு முன்பு ஸ்காட்லாந்தில் தங்கச் சுற்றோட்டம் என்று சொல்லும்படியாக ஏதாவது இருந்ததுண்டா?— இல்லவே இல்லை. '—'3376. அதன் பிறகு கூடுதல் தங்கச் சுற்றோட்டம் ஏதாவது உண்டா?- இல்லவே இல்லை; மக்களுக்கு தங்கம் பிடிக்கவில்லை.'—'3450. 1845இலிருந்து ஸ்காட்லாந்திய வங்கிகள் கட்டாயம் வைத்திருக்க வேண்டியதாய் உள்ள சுமார் £9,00,000 மதிப்புள்ள தங்கம் அவரது கருத்துப்படி, தீமை செய்யக் கூடியதாகவே இருக்க முடியும். அது ஸ்காட்லாந்தினுடைய மூலதனத்தில் இவ்வளவு அதிகமான பகுதியை இலாபக்கேடான முறையில் உறிஞ்சி விடுகிறது.'

மேலும், ஆண்டர்சன், ஸ்காட்லாந்து யூனியன் வங்கி இயக்குநர்: '3588. ஸ்காட்லாந்திலுள்ள வங்கிகள் தங்கத்திற்காக இங்கிலாந்து வங்கியை நெருக்கியது அயல்நாட்டுச் செலாவணிகளுக்காக மட்டும்தானா?-ஆம், எடின்பரோவில் தங்கம் வைத்திருப்பதன் மூலம் இந்த நெருக்குதலை தணிப்பதற்கில்லை. '-' 3590. இங்கிலாந்து வங்கியில்' (அல்லது இங்கிலாந்திலுள்ள தனியார் வங்கிகளில்) 'பிணையங்களின் அளவில் மாற்றம் இல்லாததால், இங்கிலாந்து வங்கியிலிருந்து தங்க வெளியோட்டம் நிகழச் செய்வதற்கு நமக்குள்ள சக்தியிலும் மாற்றமில்லை.'

முடிவில், எக்கானமிஸ்ட் ஏட்டிலிருந்து ஒரு கட்டுரையை எடுத்துக்காட்டுவோம் (வில்சன்): 'ஸ்காட்லாந்திய வங்கிகள் முதலீடாகாத ரொக்கத் தொகைகளை தம் லண்டன் முகவர்களிடம் கொடுத்து வைத்துள்ளன; இம்முகவர்கள் இங்கிலாந்து வங்கியில் வைத்துள்ளனர். இதனால் ஸ்காட்லாந்திய வங்கிகள் இங்கிலாந்து வங்கியின் உலோகச் சேம இருப்பை இத்தொகைகளின் வரம்புகளுக்குள் ஆளுவதற்கு வழியேற்படுகிறது. அயல்நாட்டுக் கொடுப்புகளைத் தீர்க்கவேண்டி வரும்போது இங்கு அது இருக்க வேண்டிய இடத்தில்தான் இருக்கிறது. 1845ஆம் வருடச் சட்டம் இந்த அமைப்பைக் கெடுப்பதாய் இருந்தது: இச்சட்டத்தினால் ஸ்காட்லாந்திற்கு ஏற்பட்ட விளைவு என்னவென்றால், 'சமீப காலத்தில் இங்கிலாந்து வங்கியின் நாணய வெளியோட்டம் பெரிய அளவில் நடைபெற்றுள்ளது; ஸ்காட்லாந்தில் தற்செயலான ஒரு வேண்டலை நிறைவு செய்வதற்காக இவ்விதம் நடந்துள்ளது: இந்த வேண்டல் ஏற்படாமலே போனாலும் போகலாம் ... அக்காலம் முடிந்த பிறகு ஸ்காட்லாந்தில் முடக்கி

*வைக்கப்பட்டுள்ள பெருந்தொகை ஒரே சீராய் இருந்து வருகிறது; இன்னொரு கணிசத் தொகை ஓயாமல் லண்டனுக்கும் ஸ்காட் லாந்துக்கும் இடையே போய் வந்து கொண்டிருக்கிறது; ஸ்காட்லாந்திய வங்கி அதன் நோட்டுகளுக்காக வேண்டல் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கக் கூடிய காலம் வருமானால், ஒரு பெட்டி நிறைய தங்கம் லண்டனிலிருந்து கொண்டு வரப்படுகிறது; இந்தக் காலம் முடிந்து விடும்போது, அதே பெட்டி, பொதுவாகத் திறக்கப்படாத நிலையி லேயே லண்டனுக்கு திருப்பியனுப்பப்படுகிறது.' (எக்கானமிஸ்ட், 1847 அக்டோபர் 23 பக்கம் 1214 - 1215).*

*[வங்கிச் சட்டத்தின் தந்தை-ஓவர்ஸ்டோன் பிரபு என்கிற வங்கியாளர் - சாமுவேல் ஜோன்ஸ் லாய்டு இதற்கெல்லாம் என்ன சொல்கிறார்?*

*1848இலேயே வர்த்தக இன்னல் பற்றிய பிரபுகள் சபைக் குழுவின் முன்னால் அவர் திருப்பிச் சொன்னார்: 'போதிய மூலதனம் இல்லாததால் ஏற்படும் நெருக்குதலையும் உயர் வட்டி வீதத்தையும் வங்கி நோட்டுகளை கூடுதலாக வெளியிடுவதன் மூலம் தணித்துவிட முடியாது.' (1514)-1847 அக்டோபர் 25 தேதிய அரசு மடல் நோட்டு வெளியீட்டை அதிகமாக்குவதற்கு அளித்த வெறும் அதிகார உரிமையே நெருக்கடியை முனைமழுங்கச் செய்வதற்கு போதுமானதாய் இருந்த போதிலும் அவர் இப்படிச் சொன்னார்.'*

*'வட்டி வீதம் உயர்ந்து போனதும் ஆலைத்தொழில் நலன்கள் மந்தப்பட்டதும் உற்பத்தி நோக்கங்களுக்கும் வர்த்தக நோக்கங்களுக்கும் பயன்படக் கூடிய பொருள்வகை மூலதனம் குறைந்து போனதன் அவசிய விளைவுதான்' (1604) என்பதே அவர் கருத்தாய் இருந்து வருகிறது. ஆனால் உற்பத்தித் தொழில்துறையின் மந்த நிலைமை மாதக்கணக்கில் எப்படி வெளிப்பட்டு வருகிறது என்று பார்த்தால், பொருள்வகைச் சரக்கு மூலதனம் பண்டக சாலைகளில் நிரம்பி வழிகிறது. அது விலைபோக வழியே இல்லை. சரியாகச் சொன்னால் இந்தக் காரணத்தால்தான், விலைபோகாத சரக்கு மூலதனத்தை மேன்மேலும் உற்பத்தி செய்யக் கூடாதென்று பொருள்வகை திறனுடை-மூலதனம் முழுமையாகவோ பகுதி யாகவோ ஒய்ந்து கிடக்கிறது.*

*1857ஆம் வருட வங்கிக் குழுவிடம் அவர் சொல்கிறார்: '1844ஆம் வருடச் சட்டத்தின் கோட்பாடுகளை உடனுக்குடன் கறாராக*

கடைப்பிடித்தால் யாவும் முறையாகவும் சரளமாகவும் நடந்தேறியுள்ளன, பண-அமைப்பு பத்திரமாகவும் ஆட்டங் காணாமலும் இருக்கிறது, நாட்டின் செழுமை மறுக்க முடியாததாய் இருக்கிறது, 1844ஆம் வருடச் சட்டம் விவேகமானது என்பதில் பொதுமக்கள் வைத்திருக்கும் நம்பிக்கை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து வலுப்பெற்று வருகிறது, இச்சட்டத்திற்கு ஆதாரமான கோட்பாடுகள் பழுதற்றவை என்பதற்கோ, அதனால் உறுதி செய்யப்பட்டுள்ள நலம் பயக்கும் விளைவுகளுக்கோ இதற்கு மேலும் நடைமுறைச் சான்று தேவையென்று இக்குழுவிரும்புமானால், உண்மையில் அதற்குரிய பதில் இதுதான்: உங்களைச் சுற்றி என்ன நடக்கிறது பாருங்கள். இந்த நாட்டில் இன்றுள்ள வர்த்தக நிலவரத்தைப் பாருங்கள்,.....மக்களின் மனநிறைவைப் பாருங்கள், சமுதாயத்தின் ஒவ்வொரு வர்க்கத்திடமும் பரவியுள்ள செல்வத்தையும் செழுமையையும் பாருங்கள். பார்த்து முடித்த பின், இந்த நன்மைகள் விளைவதற்கு ஆதாரமாய் இருந்து வருகிற ஒரு சட்டம் தொடர்ந்து நீடிப்பதில் குறுக்கிடுவதா என்பதை இக்குழு தீர்மானிப்பதில் தவறில்லை.' (வ.கு.1857, எண் 4289.)

ஜூலை 14ஆம் நாள் வங்கிக் குழுவின் முன்னால் ஓவர்ஸ்டோன் பாடிய இந்தப் புகழ்ப்பாடலுக்கு அதே ஆண்டு நவம்பர் 12ஆம் நாள் எதிர்ப்பாடல் ஒலித்தது-அரசினர் இங்கிலாந்து வங்கியின் மேலாண்மைக்கு எழுதிய மடலின் வாயிலாக அந்த அற்புதங்கள் புரியும் 1844ஆம் வருடச் சட்டத்தை நிறுத்தி வைத்தனர், இன்னமும் காப்பாற்றக் கூடியதாய் இருந்ததை காப்பாற்றிக் கொள்வதற்காக.—பி.எங்கெல்ஸ்.]

## அத்தியாயம் XXXV

## உயர்நிலை உலோகமும் மாற்று விதமும்

### I. தங்கச் சேம இருப்பின் அசைவியக்கம்

*பணமுடைக் காலங்களில் நோட்டுகள் சேர்த்து வைக்கப்படுவதை பொறுத்தவரை, ஆதிகாலச் சமுதாய நிலைமைகளில் தொல்லை மிகுந்த காலங்களில் உயர்நிலை உலோகத்தைப் பதுக்கி வைக்கும் வழக்கம் இருந்ததல்லவா அதன் மறுநிகழ்வுதான் இது என்பதை குறிப்பிட்டாக வேண்டும். 1844ஆம் வருடச் சட்டம் நாட்டிலிருக்கும் உயர்நிலை உலோகமனைத்தையும் சுற்றோட்ட ஊடகமாக மாற்ற முனைவதால், இச்சட்டத்தின் விளைவுகள் கருத்துக்குரியனவாகும். தங்க வெளியோட்டத்தைச் சுற்றோட்ட ஊடகம் சுருங்கிப் போவதோடும் தங்க மீள்வரவை சுற்றோட்ட ஊடகத்தின் பெருக்கத்தோடும் சமப்படுத்த முனைகிறது இந்தச் சட்டம். நடப்பு இதற்கு நேர்மாறாய் இருப்பது இந்தப் பரிசோதனையின் முடிவில் தெரிய வந்தது. ஒரே ஒரு விதிவிலக்குதான், அடுத்து அதைக் குறிப்பிடுவோம், மற்றபடி 1844க்குப் பிறகு இங்கிலாந்து வங்கியால் புழக்கத்தில் விடப்படும் நோட்டுகளின் அளவு அது வெளியிடுவதற்கு அதிகாரம் பெற்றுள்ள அதிகபட்ச வரம்பை 1844லிருந்து இன்றுவரை தொட்டதே இல்லை. மறுபுறம், குறிப்பிட்ட சில நிலைமைகளில் இந்த அதிகபட்சமே போதுமானதல்ல என்பதற்கு 1857ஆம் வருட நெருக்கடி சான்றாயிற்று. 1857 நவம்பர் 13இலிருந்து 30 வரை, இந்த அதிகபட்ச வரம்புக்குமேல் அன்றாட சராசரியாக £488,830 புழக்கத்தில் இருந்தது. (வ.ச.1858, பக்கம் XI). சட்டபடியான அதிகபட்ச வரம்பு அச்சமயம் £14,475,000+ வங்கியின் காப்பறைகளில் இருக்கும் உலோகச் சேம இருப்பின், அளவு என்பதாக இருந்தது.*

*உயர்நிலை உலோகத்தின் வருகையையும் வெளியேற்றத்தையும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியது இதுதான்:*

*முதலாவதாக, தங்கமோ வெள்ளியோ உற்பத்தி செய்யாத ஒரு வட்டாரத்திற்குள் உயர்நிலை உலோகம் ஏறி இறங்கி அலைவுறும் நிகழ்வை, தங்கமும் வெள்ளியும் அவற்றின் உற்பத்தி வேறுபல*

*நாடுகளுக்கு சொல்வதும், இந்தக் கூடுதல் உலோகம் அந் நாடுகளிடையே வினியோகமாவதுமான நிகழ்விலிருந்து வேறு படுத்திப் பார்க்க வேண்டும்.*

*ருஷ்யா, கலிபோர்னியா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் தங்கச் சுரங்கங்கள் வெட்டப்பட்டு முக்கியத்துவம் பெறுவதற்கு முன்னால், 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து கிடைத்து வந்த வழங்கலானது தேய்ந்து போன காசுகளின் மாற்றீட்டுக்கும், சொகுசுப் பண்டங்களாகிய வழக்கமான பயன்பாட்டிற்கும், ஆசியாவுக்கான வெள்ளி ஏற்றுமதிக்கும்தான் போதுமானதாய் இருந்தது.*

*ஆனால் ஆசியாவுக்கான வெள்ளி ஏற்றுமதிகள் அதன் பிறகு அசாதாரணமாய் அதிகரித்துள்ளன - அமெரிக்கா, ஐரோப்பா இவற்றின் ஆசிய வர்த்தகமே காரணம். ஐரோப்பாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட வெள்ளி கூடுதலாய் கிடைத்த தங்கத்தால், பெருமளவில் மாற்றீடு செய்யப்பட்டது. மேலும், புதிதாய் இறக்குமதி செய்யப்பட்ட தங்கத்தில் ஒரு பகுதியை உள்நாட்டுப் பணப் புழக்கம் உறிஞ்சிக் கொண்டது. 1857 வரைக்குமான காலத்தில் சுமார் £30 மிலியன் மதிப்புள்ள தங்கம்-இங்கிலாந்தின் உள்நாட்டுப் புழக்கத்தில் சேர்க்கப்பட்டதாக மதிப்பிடப்படுகிறது.[14] இதோடு, ஐரோப்பாவும் சேர்ந்த அனைத்து மைய வங்கிகளிலும் உலோகச் சேம இருப்புகளின் சராசரி அளவு 1844க்குப் பிறகு அதிகரித்தது. உள்நாட்டுப் பணப் புழக்கத்தின் பெருக்கமானது பீதியை அடுத்து வந்த தேக்க நிலைக்காலத்தில் வங்கிச் சேம இருப்புகள் இன்னும் மிகத் துரிதமாக வளருவதற்கு வழிவகுத்தது; - உள்நாட்டுப் புழக்கத்திலிருந்து வெளியே*

(14) இதனால் பணச்சந்தையில் ஏற்பட்ட விளைவை நியூமார்ச் அளித்த பின்வரும் சாட்சியத்திலிருந்து அறியலாம்: ‘1509, 1853 முடிவில் பொதுமக்களின் உள்ளத்தில் பேரச்சம் குடிகொண்டிருந்தது, அந்த ஆண்டு செப்டம்பரில் இங்கிலாந்து வங்கி அதன் உண்டியற் கழிவை மும்முறை உயர்த்தியது.....அக்டோபர் முற்பகுதியில் அச்சமும் கலக்கமும் பொதுமக்களை ஆட்டிப் படைத்தன. நவம்பர் முடிவதற்குள் இந்த அச்சமும் கலக்கமும் மிகப் பெருமளவுக்குத் தணிக்கப் பெற்றன. ஆஸ்திரேலியாவிலிருந்து சுமார், £5,000,000 மதிப்புள்ள கருவூலம் வந்து சேர்ந்ததால் அவை அறவே விலகிவிட்டன எனலாம்....1854 இலையுதிர் காலத்தில் நடந்ததும் இதுவே; அக்டோபர், நவம்பர் மாதங்களில் சுமார் £6,000,000 மதிப்புள்ள கருவூலம் வந்து சேர்ந்ததே காரணம். 1855 இலையுதிர் காலத்தில் நடந்ததும் இதுவே; அது பரபரப்பும் பயவுணர்வும் நிறைந்த காலம் என்பதை நாமறிவோம்; செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மாதங்களில் சுமார் £8,000,000 மதிப்புள்ள கருவூலம் வந்து சேர்ந்ததால் இந்த அச்சம் விலகிற்று. சென்ற ஆண்டு அதாவது 1856 முடிவிலும் கூட இப்படித்தான் நிகழக் கண்டோம். உண்மையில் நான் வேண்டிக் கொள்ள விரும்புகிறேன், இக்குழுவில் அங்கம் வகிக்கும் யார் வேண்டுமானாலும் தாம் பார்த்தறிந்ததைச் சொல்லட்டும்- நிதித்துறையில் நெருக்குதல் ஏதும் கடன் தீர்வுக்கு இயற்கையான முழுமையான வழியென்று வழக்கமாய் நாம் எதிர் நோக்குவது தங்கம் ஏற்றி வரும் கப்பல் வந்து சேருவதையே அல்லவா?’ (வ.ச.1857)

தள்ளப்பட்டு ஓட்டமிழந்த பொற்காசுகளின் அளவு அதிகரித்ததே காரணம். கடைசியாக, புதிய தங்கப் படிவுகள் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு சொகுசுப் பண்டங்களுக்கான உயர்நிலை உலோக நுகர்வு அதிகரித்தது - செல்வச் செழுமை கூடிப்போனதே காரணம்.

இரண்டாவதாக, தங்கமோ வெள்ளியோ உற்பத்தி செய்யாத நாடுகளுக்கிடையே உயர்நிலை உலோகம் போவதும் வருவதுமாய் இருக்கிறது; ஓயாமல் இறக்குமதி செய்யும் நாடே ஓயாமல் ஏற்றுமதியும் செய்கிறது. இறுதியாகப் பார்க்குமிடத்து உயர்நிலை உலோகம் வெளியேறியுள்ளதா கூடுதலாய்ச் சேர்ந்துள்ளதா என்பதைத் தீர்மானிப்பது எந்தத் திசையில் இந்த அசைவியக்கம் மேலதிகமாய் நிகழ்கிறது என்பதுதான். ஏனென்றால் வெறும் ஊசலாட்டங்களும், அநேக சந்தர்ப்பங்களில் சரிநிகரான அலைவுகளும் பெரும்பாலும் ஒன்றையொன்று செயலிழக்கச் செய்கின்றன. என்றாலும் இதே காரணத்தினால்தான், இரு அசைவியக்கங்களும் ஓயாமல் நிகழ்வதும் அவற்றின் பாதைகள் மொத்தத்தில் ஒன்றுக்கொன்று இணையாய் இருப்பதும் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை. உயர்நிலை உலோகம் இறக்குமதியோ ஏற்றுமதியோ அதிகரிப்பது, சரக்குகளின்ஏற்றுமதிக்கும் இறக்குமதிக்கும் இடையிலான விகித உறவினால் விளையும் வெளிப்பாடுமாக மட்டுமே எப்போதும் விளக்கம் பெறுகிறது. ஆனால் இது சரக்கு வர்த்தகத்துக்கு சற்றும் தொடர்பில்லாமலே உயர்நிலை உலோக ஏற்றுமதிக்கும் இறக்குமதிக்கும் இடையிலான விகித உறவையும் காட்டக்கூடியதாகும்.

மூன்றாவதாக, ஏற்றுமதிகளைக் காட்டிலும் இறக்குமதிகள் மிகையாய் இருப்பதும் இறக்குமதிகளைக் காட்டிலும் ஏற்றுமதிகள் மிகையாய் இருப்பதும் மொத்தத்தில் மைய வங்கிகளின் உலோகச் சேம இருப்பில் ஏற்படும் அதிகரிப்பு அல்லது குறைவால் அளவிடப் படுகிறது. இந்த அளவுகோல் எத்துணை துல்லியமானது என்பது முக்கியமாய் வங்கித் தொழிலமைப்பின் மையப்பாட்டினது படித்தரத்தையே சார்ந்திருப்பது இயல்புதான். தேசிய வங்கி எனப்படுவதில் திரட்டி வைக்கப்பட்டுள்ள உயர்நிலை உலோகம் எந்த அளவுக்கு நாட்டின் உலோகச் சேம இருப்பை குறிக்கிறது என்பது இதைப் பொறுத்ததே. ஆனால் வங்கித் தொழிலமைப்பு உண்மையிலேயே மையப்பட்டிருப்பதாக வைத்துக் கொண்டாலும், இந்த அளவுகோல் துல்லியமானதன்று; ஏனென்றால் குறிப்பிட்ட சில நிலைமைகளில் உள்நாட்டுச் சுற்றோட்டமும் சொகுசுப் பண்ட உற்பத்திக்கான தங்க, வெள்ளிப் பயன்பாட்டில் ஏற்படும் அதிகரிப்பும்

கூடுதலாய் இறக்குமதியாகும் உயர்நிலை உலோகத்தை உறிஞ்சிவிடக் கூடும்; மேலும் கூடுதல் இறக்குமதி இல்லாமலே உள்நாட்டு சுற்றோட்டத்துக்காக வங்கியிலிருந்து பொற்காசு எடுக்கப்படக் கூடும்; ஏற்றுமதி அதிகரிக்காமல் இருக்கும் போதே, இவ்விதம் உலோகச் சேம இருப்பு குறையக்கூடும்.

நான்காவதாக, குறைந்து செல்லும் அசைவியக்கம் நீண்ட காலத்துக்கு தொடரும் போது உலோக ஏற்றுமதி வெளியோட்டமாய் வடிவெடுக்கிறது; அதாவது இருப்பில் ஏற்படும் குறைவு ஒரு பொதுப் போக்கைக் குறிப்பதாகிறது; வங்கியில் உலோகச் சேம இருப்பு சராசரி நிலைக்கும் கீழே கணிசமாய் இறக்கிச் சென்று, ஏறத்தாழ அதன் சராசரிக் குறைந்தபட்ச வரம்பை வந்தடைகிறது. இந்தக் குறைந்தபட்ச வரம்பானது நோட்டுகளை ரொக்கமாக்குவதற்கான ஆதாரம் முதலானவை தொடர்பான சட்ட நெறியால் குறிப்பிட்ட அந்தந்த நேர்விலும் வெவ்வேறு விதமாய் தீர்மானிக்கப்படுவதால் பெரும்பாலும் மனம் போனபடி நிர்ணயிக்கப்படுவதேயாகும். இங்கிலாந்தில் இத்தகைய தங்க வெளியோட்டம் அளவு வழியில் வந்தடையக்கூடிய வரம்புகள் தொடர்பாக, நியூமார்ச் 1857ஆம் வருட வங்கிச் சட்டங்கள் பற்றிய குழுவிடம் கூறியதாவது, சாட்சியம் எண் 1494: 'அனுபவத்திலிருந்து அறிய முடிவது என்னவென்றால் அயல் வர்த்தகத்திலான - அலைவு காரணமாய் ஏற்படும் கருவூல வெளியேற்ற மானது £3,000,000 அல்லது £4,000,000-என்ற அளவைத் தாண்டிச் செல்வதற்கு அவ்வளவாய் வாய்ப்பு அதிகமில்லை.'- 1847இல் இங்கிலாந்து வங்கியின் ஆகக் குறைந்த தங்கச் சேம இருப்பு நிலவரம் அக்டோபர் 23இல் காணப்பட்டது; இது 1846 டிசம்பர் 26 நிலவரத்துடன் ஒப்பிடுமிடத்து £5,198,156 குறைவையும், 1846 (ஆகஸ்ட் 29) உச்சநிலையுடன் ஒப்பிடுமிடத்து £6,453,748 குறைவையும் காட்டியது.

ஐந்தாவதாக, தேசிய வங்கி எனப்படுவதன் உலோகச் சேம இருப்பிற்குரிய பணி - இந்தப் பணி மட்டும் தன்னளவில் இந்த உலோகச் சேம இருப்பின் அளவை நிர்ணயிப்பதில்லை, ஏனென்றால் உள்நாட்டு வர்த்தகத்தையும் அயல் நாட்டு வர்த்தகத்தையும் முடங்கச் செய்வதன் மூலம்தான் அது வளர முடியும்-மூன்று கூறுகளைக் கொண்டதாகும்: (1) சர்வதேச கொடுப்புகளுக்கான சேம நிதி, அதாவது உலகப் பணச் சேமநிதி; (2) மாறிமாறி விரித்தும் சுருங்கியும் செல்லும் உள்நாட்டு உலோகப் பணப் புழக்கத்துக்கானச் சேம நிதி; (3) வைப்புகளின் கொடுப்புக்கும் நோட்டுகளின் மாற்றுரிமைக்குமான சேம நிதி (இது

வங்கித் தொழிலுக்குரிய பணியாகும், இதற்கும் பணம் பணமாகவே ஆற்றும் பணிகளுக்கும் எவ்விதத்தொடர்பும் இல்லை). ஆகவே இந்தச் சேம நிதியானது இம் மூன்று பணிகளில் ஒன்றே ஒன்று தொடர்பான நிலைமைகளாலும் கூட பாதிக்கப்படலாம். எடுத்துக்காட்டாக சர்வதேச நிதிஎன்ற முறையில் அது கொடுப்புகளின் நிலுவையால் பாதிக்கப்படலாம்-இந் நிலுவையை நிர்ணயிக்கும் காரணிகள் என்னவானாலும் சரி, வர்த்தக நிலுவையோடு இக்கொடுப்பு நிலுவைக்குள்ள உறவு என்னவானாலும் சரி, உள்நாட்டு உலோகப் பணப் புழக்கத்துக்கான சேம நிதி என்ற முறையில் அது இப் பணப் புழக்கத்தின் பெருக்கம் அல்லது சுருக்கத்தால் பாதிக்கப்படலாம். உத்திரவாத நிதி என்னும் மூன்றாவது பணி உலோகச் சேம இருப்பின் சுயேச்சையான அசைவியக்கத்தை நிர்ணயிப்பதில்லை என்றாலும் ஓர் இரட்டை விளைவை உண்டாக்குகிறது. உள்நாட்டுப்பண புழக்கத்தில் உலோகப் பணத்தை (மதிப்பளவையாக வெள்ளி பயன்படும் நாடுகளில் வெள்ளி நாணயங்களையும் கூட) மாற்றீடு செய்வதற்காக நோட்டுகள் வெளியிடப்பட்டால் சேம நிதியின் இரண்டாம் பணி மறைந்து விடுகிறது. இந்த நோக்கத்திற்குப் பயன்பட்டு வந்த உயர்நிலை உலோகத்தில் ஒரு பகுதி இப்போது நிரந்தர அடிப்படையில் அயல்நாடு செல்லும். அப்போது உலோக நாணயங்கள் உள்நாட்டுப் பணப் புழக்கத்திலிருந்து விலக்கி எடுக்கப்படுவதில்லை, புழக்கத்தில் இருக்கும் உலோக நாணயத்தின் ஒரு பகுதியை முடக்கிப் போடுவதன் மூலம் உலோகச் சேம இருப்பை அப்போதைக்கு வலுப்படுத்துவதும் இல்லை. மேலும், வைப்புகளின் கொடுப்புக்காகவும் நோட்டுகளின் மாற்றுரிமைக்காகவும் எந்நிலையிலும் குறைந்தபட்ச உலோகச் சேம இருப்பு இருந்துவரும்படி செய்தாக வேண்டுமென்றால் தங்க வெளியோட்டம் அல்லது மீள்வரவின் விளைவுகளை இது தனக்கேயுரிய முறையில் பாதிக்கிறது; சேம இருப்பின் ஒரு பகுதியை வங்கியானது எந்நிலையிலும் வைத்துக் கொண்டிருக்க வேண்டுமல்லவா, அந்தப் பகுதியையோ, குறிப்பிட்ட சில நேரங்களில் அது பயனற்றதென்று தொலைத்துக்கட்ட முனையும் பகுதியையோ பாதிக்கிறது. முழுக்க முழுக்க உலோகப் பணம் மட்டுமே புழக்கத்தில் இருக்க வங்கித் தொழில் அமைப்பு குவிந்து மையப்பட்டிருக்குமானால், வங்கியும்கூட அதன் உலோகச் சேம இருப்பைத் தனது வைப்புகளின் கொடுப்புக்கான உத்திரவாதமாகக் கருத வேண்டி இருக்கும். உலோக வெளியோட்டமானது 1857இல் ஹாம்பர்க்கில் காணப்பட்டது போன்ற பீதிக்கு வழிகோலக் கூடும்.

ஆறாவதாக, வேண்டுமானால் 1837ஆம் ஆண்டை வரி விலக்காகக்கொண்டு எப்போதுமே செலாவணி மாற்று விதங்களில் மாற்றம் ஏற்பட்ட பிறகுதான், அதாவது உயர்நிலை உலோக ஏற்றுமதியை இறக்குமதி மீண்டும் விஞ்சிய உடனேதான் உண்மையான நெருக்கடி வெடித்தது.

1825இல், தங்கவெளியோட்டம் ஓய்ந்த பிறகு உண்மையான தகர்வு நேரிட்டது. 1839இல் தங்க வெளியோட்டம் நிகழ்ந்த போதிலும் தகர்வுக்கு வழி கோலவில்லை. 1847இல் தங்க வெளியோட்டம் ஏப்ரலில் நின்றது. தகர்வு அக்டோபரில் நேரிட்டது. 1857இல் அயல்நாடுகளுக்கான தங்க வெளியோட்டம் நவம்பர் தொடக்கத்தில் நின்று போனது, அம்மாதம் பிற்பகுதியில்தான் தகர்வு நேரிட்டது.

இந்தப்போக்கு 1847ஆம் வருடத்திய நெருக்கடியில் தெள்ளத் தெளிவாய் வெளிப்படக்காணலாம். தங்க வெளியோட்டம் ஒப்பளவில் இலேசான ஆரம்ப நெருக்கடியை தோற்றுவித்த பிறகு ஏப்ரலிலேயே நின்று போனது, உண்மையான வர்த்தக நெருக்கடி அக்டோபரில்தான் வெடித்தது.

பின்வரும் சாட்சியம் 1848ஆம் வருட வாணிப இன்னல் தொடர்பான பிரபுகள் சபை இரகசியக் குழுவின் முன்னால் அளிக்கப்பட்டதாகும். இந்தச் சாட்சியம் 1857இல்தான் அச்சேறியது (வ.இ.1848 - 57 எடுத்துக் காட்டப்படுகிறது).

டுக் அளித்த சாட்சியம்: 1847 ஏப்ரலில் பணமுடை ஏற்பட்டது; இதுகண்டிப்பாகச் சொன்னால் பீதிக்கு நிகரானது. ஆனால் இந்த பணமுடை ஒப்பளவில் குறுகிய காலமே நீடித்தது, குறிப்பிட்டுச் சொல்லும்படியான வர்த்தகத் தோல்விகள் ஏதும் இதனுடனாக நேரிடவில்லை. ஏப்ரலில் எச்சமயத்திலும் இருந்ததைக்காட்டிலும் அக்டோபரில் பணமுடை மிகக் கடுமையாய் இருந்தது. அநேகமாய் இதற்கு முன் கேட்டிராத எண்ணிக்கையில் வர்த்தகத் தோல்விகள் நேரிட்டன (2996). -ஏப்ரலில் செலாவணி மாற்று விதங்கள், முக்கியமாய் அமெரிக்காவுடனான மாற்று விதங்கள் நம்மை நெருக்கியதால், வழக்கத்துக்கு மாறான பெரும் இறக்குமதிகளுக்கு விலையாக கணிச அளவில் தங்கம் ஏற்றுமதி செய்வது தவிர வேறு வழி இல்லாது போயிற்று. இங்கிலாந்து வங்கியானது அரும்பாடுபட்டே வெளியோட்டத்தைத் தடுத்து நிறுத்தி மாற்று விதங்களை உயரச் செய்தது (2997). - அக்டோபரில் மாற்று விதங்கள் இங்கிலாந்துக்குச் சாதகமாய் இருந்தன (2998).- மாற்று விதங்களிலான மாற்றம் ஏப்ரல் மூன்றாம்

வாரத்தில் தொடங்கிவிட்டது (3000).- இவ் வீதங்கள் ஜுலையிலும் ஆகஸ்டிலும் அலைவுற்றன. ஆகஸ்ட் தொடக்கத்திலிருந்து எப்போதும் இங்கிலாந்துக்குச் சாதகமாய் இருந்தன (3001).- ஆகஸ்டில் நிகழ்ந்த தங்க வெளியோட்டத்துக்குக் காரணம் உள்நாட்டுப் பணப் புழக்கத்துக்கான வேண்டலே (3003).

இங்கிலாந்து வங்கியின் ஆளுநர் ஜே. மோரிஸ்: செலாவணி மாற்று வீதம் 1847 ஆகஸ்டிலிருந்து இங்கிலாந்துக்குச் சாதகமாய் இருந்ததன் விளைவாக தங்க இறக்குமதி நடைபெற்றதென்றாலும், இங்கிலாந்து வங்கியின் பொற்பாளச் சேம இருப்பு குறைந்துபோனது. '(உள்நாட்டு வேண்டலின் விளைவாக £2,200,000 வங்கியை விட்டு வெளியேறி நாடெங்கிலும் சென்றது' (137).- ஒருபுறம் இருப்புப் பாதை கட்டுமானத்தில் தொழிலாளர்கள் வேலைக்கமர்த்தப்படுவது அதிகரித்திருப்பதும் மறுபுறம் 'இன்னற் காலங்களில் வங்கியாளர்கள் தங்கம் வைத்துக் கொள்ள ஆசைப்படுவதும்' (147)-இந்நிலைமையை தோற்றுவித்துள்ளன.

இங்கிலாந்து வங்கியின் முன்னாள் ஆளுநரும் 1811 இலிருந்து அதன் இயக்குநர்களில் ஒருவருமான பாமர்: '684. 1847 ஏப்ரல் நடுவிலிருந்து 1844ஆம் வருடச் சட்டத்தின் கட்டுப்பாட்டு ஷரத்து விலக்கிக் கொள்ளப்பட்ட நாள் வரையிலான காலம் முழுக்க அயல்நாட்டுச் செலாவணிகள் இந்நாட்டுக்குச் சாதகமாய் இருந்தன.'

ஆக, 1847 ஏப்ரலில் பிரத்தியேகமான பணப் பீதிக்கு வழி வகுத்த பொற்பாள வெளியோட்டம் எப்போதும் போலவே இங்கேயும் நெருக்கடிக்கான முன்னறிவிப்பாகவே அமைந்தது. நெருக்கடி வெடிப்பதற்கு முன்பே ஒரு திருப்பம் நேரிட்டு விட்டது. 1839இல் தொழில் - வர்த்தக மந்தம் மிகக் கடுமையாக இருந்தபோது தானியம் முதலானவற்றுக்காக பெரும் பொற்பாள வெளியோட்டம் நிகழ்ந்தது. ஆனால் நெருக்கடியோ பணப் பீதியோ எதுவும் ஏற்படவில்லை.

ஏழாவதாக, பொது நெருக்கடி தணிந்து அடங்கிய உடனே சம நிலை மீளக் காண்கிறோம், தங்கமும் வெள்ளியும்-உயர்நிலை உலோகம் அதனை உற்பத்தி செய்யும் நாடுகளில் இருந்து புதிதாக வந்து நுழைவதை ஒதுக்கிவிட்டுப் பார்த்தால்-பல்வேறு நாடுகளின் சேர்ப்புகளாகவும் முன்பிருந்த விகித அளவுகளில் மீண்டும் பங்கீடாகக் காண்கிறோம்.

ஏனைய நிலைமைகள் மாறாதிருக்க, ஒவ்வொரு நாட்டிலும் சேர்ப்பின் ஒப்பளவானது உலகச்சந்தையில் அந்நாடு வகிக்கும்

*பங்கினால் நிர்ணயிக்கப்படுகிறது. அது இயல்புக்கு மேல் கூடுதலான பங்கை வைத்துள்ள நாட்டிலிருந்து வெளியேறி இயல்புக்கும் குறைவான பங்கை வைத்துள்ள நாட்டுக்குச் செல்கிறது. உயர்நிலை உலோகம் வெளியேறிச் செல்வதும் வெளியிலிருந்து வருவதுமான இந்த அசைவியக்கங்கள் பல்வேறு நாடுகளில் சேம இருப்புகளிடையிலுமான ஆரம்பப் பங்கீட்டை மீட்டமைப்பதற்கு மேல் எதுவும் செய்வதில்லை. ஆனால் பல்வேறு பட்ட நிலைமைகளின் விளைவாகத்தான் இந்த மறு பங்கீடு நடந்தேறுகிறது. செலாவணி மாற்று வீதங்களைப் பரிசீலிக்கையில் இந்நிலைமைகளை எடுத்துக் காட்டுவோம். இயல்பான பங்கீடு மீட்டமைக்கப்பட்ட உடனே - அக்கணத்திலிருந்தே - முதலில் வளர்ச்சி தொடங்குகிறது, பிறகு மீண்டும் வெளியோட்டம் நிகழ்கிறது. (இந்தக் கடைசி வாக்கியம் உலகப் பணச் சந்தையின் மையம் என்ற முறையில் இங்கிலாந்துக்கு மட்டுமே பொருந்தும் என்பதில் ஐயமில்லை.- பி.எங்கெல்ஸ்).*

*எட்டாவதாக, உலோக வெளியோட்டமானது பொதுவாக அயல் வர்த்தக நிலவரத்திலான மாற்றத்தின் அறிகுறியாகும். இந்த மாற்றமோ நிலைமைகள் திரும்பவும் நெருக்கடியை நெருங்கிக்கொண்டிருப்பதற்கான முன்னெச்சரிக்கையாகும்.[15]*

*ஒன்பாவதாக, கொடுப்பு நிலுவையானது ஆசியாவுக்குச் சாதகமாகவும், ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்கும் பாதகமாகவும் இருக்கலாம்.[16]*

---

*முக்கியமாய் இரு கால கட்டங்களில் உயர் நிலை உலோக இறக்குமதி நடைபெறுகிறது. நெருக்கடியை அடுத்து வருவதும்*

[(15) நியூமார்ச் கருத்துப்படி, அயலநாடுகளுக்கான தங்க வெளியோட்டம் மூன்று காரணங்களால் ஏற்படலாம்: (1) முற்றிலும் வர்த்தக நிலைமைகள் காரணமாய், அதாவது இறக்குமதிகள் ஏற்றுமதிகளை மிஞ்சிவிடுவதால் ஏற்படலாம்; 1836க்கும் 1844க்கும் இடைப்பட்ட காலத்திலும், மீண்டும் 1847இலும் நடந்தது இதுதான் - குறிப்பாக தானியம் மிகப் பெருமளவில் இறக்குமதியாயிற்று; (2) அயல் நாடுகளில் ஆங்கிலேய மூலதனத்தை முதலீடு செய்வதற்கு வழிவகை காணும் பொருட்டு ஏறபடலாம். இந்தியாவில் இருப்புப் பாதைகள் அமைப்பதற்காக 1857இல் ஏற்பட்ட வெளியோட்டத்தை உதாரணமாய்க் குறிப்பிடலாம்: (3) அயல்நாடுகளில் திட்டவட்டம்ா்யீ செலவிடுவதற்காக ஏற்படலாம்; 1853இலும் 1854இலும் கீழை உலகில் போர் புரிவதற்காக ஏற்பட்ட வெளியோட்டம் இத்தகையதே.

(16) 1918. நியூமார்ச்: 'இந்தியாவையும் *சீனாவையும்* ஒன்று சேர்க்கும் போது, இந்தியாவுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் இடையிலான கொடுக்கல் வாங்கல்களையும், இன்னும்கூட முக்கியத்துவம் வாய்ந்தவையாகிய *சீனாவுக்கும்* அமெரிக்க ஐக்கிய நாட்டுக்கும் இடையிலான கொடுக்கல் வாங்கல்களைக் கணக்கில் சேர்க்கும்போது வர்த்தகம் முக்கோணத்தன்மை பெறுகிறது, சரிக்கட்டல் நம் வழியே நடைபெறுகிறது....அப்போது வர்த்தக நிலுவை இந்த நாட்டுக்கு மட்டுமல்லாமல் பிரான்சுக்கும் அமெரிக்க ஐக்கிய நாட்டுக்கும் கூட பாதகமாக இருப்பது மெய்தான்.' (வ.ச.1857).]

உற்பத்திச் சுருக்கத்தால்குறிக்கப் பெறுவதுமான முதல் கட்டத்தில், அதாவது வட்டி வீதம் குறைவாய் இருக்கும் கட்டத்தில் இது நடைபெறுகிறது; வட்டி வீதம் உயர்ந்த போதிலும் இன்னும் அதன் சராசரி நிலைமை வந்தடையாமல் இருக்கும் இரண்டாவது கட்டத்திலும் இது நடைபெறுகிறது. இந்த இரண்டாவது கட்டத்தில் தான் மீள் வரவுகள் துரிதமாய் வந்து சேர்கின்றன, வர்த்தகக் கடன்-செலாவணி செறிவாய் உள்ளது, இதனால் கடன்-மூலதனத்திற்காக வேண்டல் உற்பத்தி பெருக்கத்துக்கேற்ற விகிதத்தில் வளராமல் போகிறது. இரு கட்டங்களிலுமே கடன்-மூலதனம் ஒப்பளவில் செறிவாய் உள்ளது, தங்கம் வெள்ளியின் வடிவில், அதாவது முதலில் கடன்-மூலதனமாக மட்டும் செயல்படக்கூடிய வடிவில் இருந்துவரும் மூலதனத்தின் தேவைக்கதிகமான நுழைவு வட்டி வீதத்திலும், எனவே பொதுவாக தொழில்-வர்த்தகச் சூழல் அனைத்திலும் முக்கிய விளைவை உண்டாக்குகிறது.

மறுபுறம், மீள்வரவுகள் முன்போல் சரளமாய் வந்து சேராமல், சந்தைகளில் சரக்கிருப்பு மிகையாக கடன் - செலாவணியைக் கொண்டே தோற்ற அளவிலான செழுமை நிலை நிறுத்தப்படும் கட்டம் வந்ததுமே உயர்நிலை உலோகத்தின் வெளியோட்டம், அதாவது விடாத் தொடராக பெரும் ஏற்றுமதி நடைபெறுகிறது; வேறு விதமாகச் சொன்னால் கடன் - மூலதனத்திற்கு மிக வலுவான வேண்டல் ஏற்கெனவே இருந்து வரும்போது, அதாவது வட்டி வீதம் எப்படியும் அதன் சராசரி நிலையை வந்தடைந்திருக்கும் போது இந்த வெளியோட்டம் நடைபெறுகிறது. உயர்நிலை உலோக வெளியோட்டத்தில் துல்லியமாய்ப் பிரதிபலிக்கிற இந்நிலைமைகளில், மூலதனம் நேரடியாகவே கடனுக்குரிய பண - மூலதனமாக இருந்துவரும் வடிவில் தொடர்ந்து விலக்கிக் கொள்ளப்படுவதன் விளைவு குறிப்பிடத்தக்க அளவில் தீவிர மடைகிறது. இது வட்டி வீதத்தின் மீது நேரடித் தாக்கம் செலுத்தவே செய்யும். ஆனால் வட்டி வீத உயர்வு கடன்-செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களை குறுக்குவதற்குப் பதில் பெருக்கமுறச் செய்து, அவற்றுக்குரிய வழிவகைகள் அனைத்தின் மீதும் சுமையழுத்தம் மிகைப்படுவதற்கே வழி செய்கிறது. ஆக இந்தக் கால கட்டம் தகர்வுக்கு முற்பட்டதாகும்.

*நியூ மார்ச்சிடம் ஒரு கேள்வி கேட்கப்படுகிறது (வ.ச.1857): '1520. ஆனால் புழக்கத்தில் இருக்கும் உண்டியல்களின் அளவு கழிவு வீதத்திற்கேற்ப அதிகரிக்கிறதே?- அதிகரிப்பதாகவே தெரிகிறது.' - '1522 அரவமற்ற சாதாரண காலங்களில் பேரேடுதான் உண்மையான*

பரிவர்த்தனைக் கருவியாகும்; ஆனால் ஏதேனும் இடர்ப்பாடு தலைதூக்கும்போது, எடுத்துக்காட்டாக நான் தெரிவித்திருப்பது போன்ற நிலைமைகளில் வங்கிக் கழிவு வீதத்தில் உயர்வு எற்படும் போது....கொடுக்கல் வாங்கல்களானவை இயல்பாகவே மாற்று உண்டியல் வரைதலாக உருப்பெறுகின்றன; இந்த மாற்று உண்டியல்கள் நடந்துமுடிந்த கொடுக்கல் வாங்கல்களுக்கான சட்ட நிருபணம் என்ற வகையில் அதிகம் வசதியானவையாய் இருப்பதோடு வேறு இடங்களில் கொள்முதல் செய்வதற்கும் கூட அதிகம் வசதியானவை, மூலதனம் திரட்டுவதற்கான கடன்-செலாவணிக் கருவி என்ற முறையில் ஈடு இணையற்ற விதத்தில் மிகவும் வசதியானவை. '— மேலும், சற்றே அச்சுறுத்தும்படியான நிலைமைகள் காரணமாய் வங்கி அதன் கழிவு வீதத்தை உயர்த்த நேரிட்ட உடனே - அதேபோது வங்கியானது தன்னால் கழிவு செய்யப்பட வேண்டிய உண்டியல்களின் ஓட்டக் காலத்தைக் குறைத்துவிடக் கூடும்-கழிவு வீதம் மேன்மேலும் உயர உயரச் செல்லக் கூடும்என்ற அச்சம் பற்றிப்படர்கிறது. ஒவ்வொருவரும், அனைவருக்கும் மேலாய் கடன்-செலாவணி புரட்டர் வருங்காலத்தைக் கழிவு செய்யும், குறிப்பிட்ட சமயத்தில் முடிந்தவரை அதிகமான கடன் - செலாவணிச் சாதனங்களை தன் வசம் வைத்துக் கொள்ளவும் முயல்கிறார். மேற்கூறிய காரணங்களின் பொருள் என்னவென்றால், தாக்கம் செலுத்துவது இறக்குமதி அல்லது ஏற்றுமதி செய்யப்படும் உயர்நிலை உலோகத்தின் அளவு மட்டுமல்ல; முதலாவதாக, பண வடிவில் இருக்கும் மூலதனம் என்ற வகையில்உயர் நிலை உலோகத்துக்குள்ள பிரத்தியேகத் தன்மையின் மூலமும், இரண்டாவதாக, தராசு தட்டில் இருக்கும் எடையோடு சேருகையில் திட்டவட்டமாய் ஒரு பக்கம் அதனை சாயச் செய்வதற்குப் போதுமானதாய் இருக்கும் இறகைப்போல் செயல்படுவதன் மூலமும் அது தாக்கம் செலுத்துகிறது.—ஏதேனும்ஒரு பக்கத்தில் கூடுதலாய் எதைச் சேர்த்தாலும் தராசை அப்பக்கம் சாய்ப்பதற்கு அதுவே போதும் என்னும்படியான நிலைமைகளில் அது தலையிடுவதால் இவ்விதம் செயல்படுகிறது. இக்காரணங்களை நீக்கிவிட்டுப் பார்த்தால் தங்க வெளியோட்டம் (£5,000,000 முதல் £8,000,000 என்ற அளவில்-நாளது வரை அனுபவத்திற்கண்ட எல்லை இதுவே-ஏற்படும் வெளி யோட்டம்) குறிப்பிடத்தக்க விளைவு ஏதும் உண்டாக்குவதை விளங்கிக் கொள்ளவே முடியாது. மூலதனத்தில் ஏற்படும் இந்தச் சிறு அதிகரிப்பு அல்லது குறைவு - இங்கிலாந்தில் சராசரியாகப் புழக்கத்தில் இருக்கும் £70 மிலியன் மதிப்புள்ள தங்கத்தோடு ஒப்பிட்டாலும் கூட அற்ப சொற்பமானதாகவே தெரிகிற இந்த அதிகரிப்பு அல்லது குறைவு

- ஆங்கிலேயப் பொருளுற்பத்தியின் மொத்தப் பரிமாணத்தோடு ஒப்பிடுகையில் கவனியாது ஒதுக்கித் தள்ளிவிடக் கூடிய சின்னஞ்சிறு பருமனே ஆகும்.[17] ஆனால் கடன் செலாவணியும் வங்கித் தொழிலும் அடைகிற வளர்ச்சிதான், ஒருபுறம் பண - மூலதனம் அனைத்தையும் பொருளுற்பத்திக்கு பயன்படச் செய்ய முனைகிறது (அதாவது பண வருமானம் அனைத்தையும் மூலதனமாக மாற்ற முனைகிறது); மறுபுறம் சகடத்தின் குறிப்பிட்ட ஒரு கட்டத்தில் உலோகச் சேம இருப்பை குறைந்தபட்ச அளவாக சுருக்கி விடுகிறது; இதனால் அது தனக்குரித்தான பணிகளை ஆற்ற முடியாமற் போகிறது - உயிரமைப்பு முழுவதையும் இப்படித் தொட்டாற் சிணுங்கியாக்குவது வளர்ச்சி பெற்ற கடன்-செலாவணியும் வங்கித் தொழிலும் தான். அவ்வளவாய் வளர்ச்சி பெறாத பொருளுற்பத்திக் கட்டங்களில் சேம இருப்பு அதன் சராசரி நிலைக்கு மேல் கீழாய் பெருக்கமோ சுருக்கமோ அடைவது ஒப்பளவில் முக்கியத்துவம் அற்றதாகும். இதேபோல் மறுபுறம் மிகக் கணிசமான தங்க வெளியோட்டமும் கூட தொழில் துறைச் சகடத்தின் நெருக்கடி காலத்தில் நிகழவிட்டால் ஒப்பளவில் விளைவற்றதே ஆகும்.

மேற்கண்ட நமது விளக்கமானது மகசூல் பொய்த்துப் போவது போன்ற நிலைமைகளின் விளைவாக தங்க வெளியோட்டம் நிகழக் கூடிய நேர்வுகளை கருத்தில் கொள்ளவில்லை. இப்படிப்பட்ட நேர்வுகளில், பொருளுற்பத்திச் சமநிலை பெருமளவிலும் திடீரென்றும் குலைவுறுவதையே இந்த வெளியோட்டம் குறித்திடுகிறது, வெளியோட்டத்தின் விளைவுக்கு இதற்கு மேல் விளக்கம் தேவையில்லை. பொருளுற்பத்தி முழு மூச்சாய் நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலத்தில் இந்தச் சமநிலை குலைவு ஏற்படுமானால் விளைவும் அந்த அளவுக்குப் பெரிதாயுள்ளது.

வங்கி-நோட்டு மாற்றுரிமைக்கான உத்திரவாதமாகவும், கடன்-செலாவணி அமைப்பு அனைத்துக்கும் அச்சாணியாகவும் உலோகச் சேம இருப்பு பணிபுரிவதையும் நாம் கருத்தில் கொள்ளவில்லை. மைய வங்கியானது கடன்-செலாவணி அமைப்பின் அச்சாணியாகும்-

(17) எடுத்துக்காட்டாக, வெகுலின் அளித்த கேள்விக்குரிய பதிலைப் பார்க்கவும் (வ.ச.1857); இந்தப் பதிலில் அவர் £5 மிலியன் மதிப்புள்ள தங்கத்தின் வெளியோட்டம் அந்த அளவு மூலதனம் குறைந்து போவதைக் குறிப்பதாகச் சொல்கிறார்; இதைப்போல் பன்மடங்கு விலை உயரும்போது அல்லது உண்மைத்தொழில் துறை மூலதனம் மதிப்பிறக்கமோ, பெருக்கமோ சுருக்கமோ அடையும்போது நடை பெறாத சில நிகழ்வுகளுக்கு இவ்வாறு விளக்கம் அளிக்க முயல்கிறார். மறுபுறம், இந்நிகழ்வுகளை உண்மை மூலதனத் திரளிலான பெருக்கம் அல்லது சுருக்கத்தின் நேர் அறிகுறிகளாக (மூலதனப் பொருட் கூறுகளின் கோணத்திலிருந்து) விலக்க முயல்வதும் அதேபோல் கேலிக்குரியதே ஆகும்.)

உலோகச் சேம இருப்பானது வங்கியின் அச்சாணியாகும்.[18] கடன் - செலாவணி பொருளாதாரத்திலிருந்து பணப் பொருளாதாரத்துக்கு மாறிச்செல்வது தவிர்க்க முடியாதது என்பதை முதல் பாகத்திலேயே (அத்தியாயம் III-ல்) கொடுப்புச் சாதனங்கள் குறித்து பேசும் போது தெளிவாக்கினோம். ஒரு நெருக்கடி கட்டத்தில் உலோக அடிப்படையை பேணிக் காப்பதற்கு உண்மைச் செல்வத்தை மிக அதிகமாய் பலியிடுவது அவசியம்தான் என்று டூக், லாய்டு-ஓவர்ஸ்டோன் இருவருமே ஒப்புக் கொள்கின்றனர். சர்ச்சை எல்லாமே கூட்டல் குறியா கழித்தல் குறியா என்பதைப் பற்றியும், தவிர்க்க முடியாத ஒன்றை எப்படி அறிவு பூர்வமாய் சமாளிக்கலாம் என்பதைப் பற்றியும்தான்.[19] மொத்த உற்பத்தியோடு ஒப்பிடுகையில் அற்ப சொற்பமாகிய குறிப்பிட்ட அளவு உலோகம் அமைப்புக்கே அச்சாணியாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. நெருக்கடிகளின் போது இந்த அச்சாணித் தன்மை பயங்கரமாய் வெளிப்படுவது ஒருபுறமிருக்க அற்புதமான தத்துவ இரட்டை நிலைக்கும் இதுவே காரணம். அறிவார்ந்த பொருளாதார இயல் மூலதனத்தைத் தொழில் முறையில் பரிசீலிப்பதாகக் கூறிக் கொள்ளும் வரை தங்கத்தையும் வெள்ளியையும் அருவருப்பானவையாகக் கருதி வெறுத்து ஒதுக்குகிறது. மூலதனத்தின் மிகச் சாதாரணமான, பயனற்ற வடிவமாக அதைப்பார்க்கிறது. ஆனால் அது வங்கித் தொழிலை பரிசீலிக்க முற்பட்ட உடனே, எல்லாம் நேர்மாறாகிப் போகின்றது, தங்கமும் வெள்ளியும் தலைசிறந்த மூலதனம் ஆகின்றன. இந்த மூலதனத்தைப் பாதுகாப்பதற்காக மூலதனம், உழைப்பு இவற்றின் ஏனைய வடிவங்கள் ஒவ்வொன்றையும் பலியிட்டாக வேண்டும். ஆனால் தங்கத்தையும் வெள்ளியையும் எவ்வகையில் ஏனைய செல்வ வடிவங்களிலிருந்து வேறுபடுத்திப் பார்ப்பது? அவற்றின் மதிப்புப் பருமனை கொண்டல்ல; ஏனென்றால் இந்தப் பருமன் அவற்றில் அடங்கிய உழைப்பளவால் நிர்ணயிக்கப்

(18)நியூமார்ச் (வ.ச.1857): '1364. இங்கிலாந்து வங்கியில் இருக்கும் பொற்பாளச் சேம இருப்புதான் உண்மையில் மையச் சேம இருப்பு அல்லது கருவூலச் சேர்ப்பு ஆகும்; நாட்டின் வர்த்தகமே இந்தச்சேம இருப்பை அச்சாகக் கொண்டுதான் சுழல்கிறது; நாட்டிலுள்ள ஏனைய வங்கிகள் எல்லாம் இங்கிலாந்து வங்கியையே மையச் சேர்ப்பு அல்லது களஞ்சியமாக நம்பியிருக்கின்றன; இந்தக் களஞ்சியத்தில் இருந்துதான் அவை தமது நாணயச் சேம இருப்பை எடுத்தாக வேண்டும்; இந்தக் களஞ்சியத்தைத்தான் அயல் நாட்டுச் செலாவணிகளின் செயற்பாடு எப்போதுமே தாக்குகிறது.'

(19) 'ஆக நடைமுறையில், திருவாளர் டூக், திருவாளர் லாய்டு இருவருமே தங்கத்திற்கான கூடுதல் வேண்டலை எப்படிச் சமாளிப்பார்கள் என்று பார்த்தால்....வட்டி வீதத்தைக் குறைத்தும் மூலதன முன்னீடுகளைக் கட்டுப்படுத்தியும் கடன் - செலாவணியை முன் கூட்டியே.. சுருக்கி விடுவார்கள்....ஆனால் திரு லாய்டின் கோட்பாடுகள் ஒருவிதமான (சட்டபூர்வ) கட்டுப்பாடுகளுக்கும் ஒழுங்கு முறைகளுக்கும் வழி செய்கின்றன; இந்த ஒழுங்கு முறைகள்....மிகக் கடுமையான சங்கடத்தை தோற்றுவிக்கின்றன.' (எக்கனாமிஸ்ட், 1847 டிசம்பர் 11, பக்கம் 1418.

*படுவதாகும்; அவை செல்வத்தினது சமூகத்தன்மையின் சுயேச்சை அவதாரங்களும் வெளிப்பாடுகளுமாய் இருக்கிற அளவில்தான் வேறுபடுத்திப் பார்க்கப்படுகின்றன. (சமூதாயத்தின் செல்வம் அதன் தனி உடைமையாளர்களாகிய தனியாட்களின் செல்வமாகத்தான் இருந்து வருகிறது. இந்தத் தனியாட்கள் தம் தேவைகளை நிறைவு செய்வதற்காக பண்பு வழியில் வேறுபட்ட பயன்-மதிப்புகளை தமக்குள் பரிவர்த்தனை செய்து கொள்வதால்தான் அது தன் சமுதாயத் தன்மையைப் பாதுகாத்துக் கொள்கிறது. முதலாளித்துவ பொருளுற்பத்தியில் இந்தப் பரிவர்த்தனைகள் பணத்தைக் கொண்டுதான் நடைபெற முடியும். இவ்வாறு பணத்தைக் கொண்டுதான் தனியாளின் செல்வம் சமூதாயச் செல்வமாக ஈடேற்றம் பெறுகிறது: அந்தச் செல்வத்தின் சமுதாயத் தன்மை பணமாக, இந்தப் பொருளாக உருக்கொள்கிறது.-பி.எங்கல்ஸ்.) ஆகவே செல்வத்தின் இந்தச் சமூக நிலவலானது நமக்கு அப்பாற்பட்ட ஒன்றாக, சமுதாயச் செல்வத்தின் மெய்க் கூறுகளுக்கு புறத்தேயும் பக்கத்திலும் அமைந்துள்ள பொருள் பண்டம் அல்லது சரக்காகக் காட்சியளிக்கிறது. பொருளுற்பத்தி ஓடிக்கொண்டிருக்கும்வரை இது மறந்து போகிறது. செல்வத்தின் இன்னொரு வடிவமாகிய கடன்-செலாவணி பணத்தை நெட்டித் தள்ளி அதன் இடத்தைக் கைப்பற்றுகிறது. பொருளுற்பத்தியின் சமூகத் தன்மையில் நம்பிக்கை இருப்பதால்தான், உற்பத்திப் பண்டங்களின் பண வடிவமானது ஓடி மறைவதும் கருத்தியலானதுமாகிய ஒன்றாக, வெறும் கற்பனை சார்ந்த ஒன்றாக வடிவெடுக்க முடிகிறது. ஆனால் கடன் - செலாவணி ஆட்டங்கண்டவுடனே - இது நவீன தொழில்துறைச் சகடத்தில் அவசியமானதொரு கட்டம் - உண்மைச் செல்வமனைத்தும் திடீரென்று உள்ளபடியே பணமாக, அதாவது தங்கமாகவும் வெள்ளியாகவும் மாற்றப்பட்டாக வேண்டும்; இது வெறித்தனமான வேண்டல்தான் என்றாலும் தவிர்க்க முடியாதவாறு இவ்வமைப்பிலிருந்தே விளைவதாகும். இந்தப் பெரும் வேண்டல்களை நிறைவு செய்யக் கூடியதெனக் கருதப்படும் தங்கமும் வெள்ளியும் மொத்தத்தில் வங்கியின் காப்பறைகளில் இருக்கும் ஒரு சில மிலியன் மட்டுமே ஆகும்.*[20]

---

(20) 'பொன் - வெள்ளிப் பாளத்திற்கான வேண்டலை மாற்றியமைப்பதற்கு வட்டி வீதத்தை உயர்த்துவது தவிர வேறு வழியில்லை என்றா ஒப்புக் கொள்கிறீர்கள்?'-சாப்மன் (ஓவரெண்டு, குர்னீ & கம்பெனி என்னும் மிகப் பெரும் உண்டித்தரகு நிறுவனத்தின் இணை உறுப்பினர்): 'அப்படித்தான் என்று சொல்வேன்....நமது பொன் - வெள்ளிப் பாளம் குறிப்பிட்ட நிலைக்குச் சரிவுறும் போது, உடனே எச்சரிக்கை மணி ஒலித்து, நாம் சரிந்து வருகிறோம் என்றும், அயல்நாட்டுக்கு பணம் அனுப்புகிற ஒவ்வொருவரும் தம் சொந்தப் பொறுப்பில் தான் அப்படிச் செய்தாக வேண்டும்என்றும் கூறிவிடுவதே மேல்.' (வ.ச.1857, சாட்சியம் எண் 5057).

ஆக தங்க வெளியோட்டத்தின் விளைவுகளுக்கிடையே உற்பத்தி, சமுதாயப் பொருளுற்பத்தி என்ற முறையில் உள்ளபடியே சமுதாயக் கட்டுப்பாட்டுக்கு உட்படவில்லை என்று உண்மையானது செல்வத்தின் சமூக வடிவம் செல்வத்திற்குப் புறத்தமைந்த ஒன்றாக நிலவுவதில் எடுப்பாகவும் அழுத்தந்திருத்தமாகவும் வெளிப்படுகிறது. முந்தையப் பொருளுற்பத்தி அமைப்புகள் சரக்கு-வர்த்தகத்தையும் தனியார் பரிவர்த்தனையையும் அடிப்படையாகக் கொண்டிருக்கும்வரை அவற்றுக்கும் முதலாளித்துவப் பொருளுற்பத்தி அமைப்புக்கும் இத்தன்மை பொதுவானதாகும் என்பதே உண்மை. ஆனால் முதலாளித்துவப் பொருளுற்பத்தி அமைப்பில்தான் இந்த அபத்தமான முரண்பாடும் ஒவ்வாமையும் கண்ணை உறுத்தும்படியான விகார வடிவில் வெளிப்படுகின்றன. ஏனென்றால் முதலாவதாக, நேரடிப்பயன்-மதிப்புக்காக உற்பத்தியாளர்களின் நுகர்வுக்காக உற்பத்தி செய்தல் என்பது முதலாளித்துவ அமைப்பில் அடியோடு ஒழித்துக் கட்டப்படுகிறது; இதனால் செல்வமென்பது பொருளுற்பத்தி, சுற்றோட்டம் ஆகியவற்றின் பின்னலாக வெளிப்படும் சமூக நிகழ் முறையாக மட்டுமே நிலவுகிறது. இரண்டாவதாக, கடன்-செலாவணி அமைப்பு வளர்ந்து செல்லச் செல்ல, முதலாளித்துவப் பொருளுற்பத்தி யானது பொருள்வகையிலும் கருத்துவகையிலும் செல்வத்துக்கும் அதன் அசைவியக்கத்துக்கும் தடைமதிலாய் இருக்கிற இந்த உலோகத் தடைமதிலை வெல்வதற்கு ஓயாமல் முயல்கிறது; ஆனால் இத்தடைமதிலில் மோதி மீண்டும் மீண்டும் மண்டையை உடைத்துக் கொள்கிறது.

நெருக்கடியின் போது எழும் கோரிக்கை இதுதான்: மாற்று உண்டியல்கள், கடன் பத்திரங்கள், சரக்குகள் இவையெல்லாம் ஒரே சமயத்தில் உடனே வங்கிப் பணமாக மாற்றத்தக்கவையாய் இருக்க வேண்டும், இந்த வங்கிப் பணமோ தங்கமாய் மாற்றத்தக்கதாய் இருக்க வேண்டும் என்று கோரப்படுகிறது.

## II. மாற்று விதம்

மாற்று வீதம்தான் பண உலோகங்களின் சர்வதேச அசைவியக்கத்துக்கான பாரமானி என்பது தெரிந்ததே. ஜெர்மன் இங்கிலாந்துக்கு செலுத்த வேண்டியவற்றை விட இங்கிலாந்து ஜெர்மனிக்கு செலுத்த வேண்டியவை அதிகமாக இருந்தால், ஸ்டெர்லிங் கணக்கில் வெளியிடப்படும் மார்க்கு விலை லண்டனில்

உயர்கிறது, மார்க்கு கணக்கில் ஸ்டெர்லிங் விலை ஹாம்பர்க்கிலும் பெர்லினிலும் குறைகிறது. ஜெர்மனிக்கான இங்கிலாந்தின் கொடுப்புக் கடப்பாடுகளின் இந்த உபரி மீண்டும் நேர்செய்யப்படாவிட்டால் (எடுத்துக்காட்டாக இங்கிலாந்திலிருந்து ஜெர்மனி உபரியாக சரக்கு வாங்குவதன் மூலம் இது நேர்செய்யப்படலாம்). ஜெர்மனியின் பேரிலான மார்க்கில் அமைந்த மாற்று உண்டியல்களுக்கான ஸ்டெர்லிங் விலை எந்த அளவுக்கு உயர்ந்தாக வேண்டும் என்றால், கடப்பாடுகளை நிறைவு செய்வதற்காகஇங்கிலாந்திலிருந்து ஜெர்மனிக்கு மாற்று உண்டியல்கள் அனுப்புவதற்கு பதில் உலோகம் (பொற்காசு அல்லது பொற்பாளம்) அனுப்புவதே ஆதாயமாய் இருக்கும். இயல்பான போக்கில் இப்படித்தான் காரியங்கள் நடைபெறும்.

இந்த உயர்நிலை உலோக ஏற்றுமதி பெருவீதத்தில் நடைபெறலாகி நீண்ட காலம் நீடிக்குமானால், இங்கிலாந்தின் வங்கிச் சேம இருப்புகள் பாதிப்புறுகின்றன; ஆங்கிலேயப் பணச் சந்தை முதலாவதாக-இங்கிலாந்து வங்கி - பாதுகாப்பு வழிமுறைகளை கைக் கொண்டாக வேண்டும். இவ்வழிமுறைகளின் அடிப்படைச் சாரம் வட்டிவீதத்தை உயர்த்துவதுதான் என்று முன்பே பார்த்தோம். தங்க வெளியோட்டம் கணிசமாய் நடைபெறும்போது பொதுவாகப் பணச் சந்தை இறுக்கமானதாகிறது, அதாவது பண வடிவிலமைந்த கடன்-மூலதனத்திற்கான வேண்டல் குறிப்பிடத்தக்க அளவில் வழங்கலை விஞ்சுகிறது; இதனால் இயல்பாகவே வட்டி வீதம் உயர்ந்துவிடுகிறது; இங்கிலாந்து வங்கியால் நிர்ணயிக்கப்பட்ட உண்டியற்கழிவு வீதம் இந்நிலைமைக்கு ஒத்தமைந்து சந்தையில் தன்னை நிலை நாட்டிக் கொள்கிறது. ஆனால் சில சந்தர்ப்பங்களில் பொற்பாள வெளியோட்டத்துக்கு தொழில் வர்த்தக கொடுக்கல் வாங்கல்களின் சாதாரண சேர்க்கைகள் அல்லாத வேறு காரணங்கள் உள்ளன. (எடுத்துக்காட்டாக அயல் அரசுகளுக்கு கடன் கொடுத்தல், அயல்நாடுகளில் முதலீடு செய்தல் போன்றவை); லண்டன் பணச்சந்தை நிலவரமே கூட வட்டி வீதம் மெய்யாகவே உயர்த்தப்படுவதை நியாயப் படுத்துவதாய் இல்லை; முதலில் இங்கிலாந்து வங்கி 'திறந்த சந்தையில்' பெருமளவில் கடன் வாங்குவதன் மூலம் 'பணத்தை அரிதாக்க' (இப்படித்தான் சொல்கிறார்கள்) வேண்டும்; இவ்விதம் அதிகாரப் பூர்வமாகவே வட்டி வீதங்கள் உயர்த்தப்படுவதை நியாயப்படுத்துகிற அல்லது அவசியமாக்குகிற நிலைமையை செயற்கையாகத் தோற்றுவிக்க வேண்டும். இந்தத் தந்திரமும் கூட ஆண்டுக்கு ஆண்டு மேன்மேலும் கடினமாகி வருகிறது - பி.எங்கெல்ஸ்).

இப்படி வட்டி வீதத்தை உயர்த்துவது எப்படி மாற்று வீதங்களை பாதிக்கிறது என்பதை 1857இல் வங்கிச் சட்டம் தொடர்பான காமன்ஸ் சபைக் குழுவின் முன்னால் அளிக்கப்பட்ட பின்வரும் சாட்சியத்திலிருந்து அறியலாம் (வ.ச.அல்லது வ.கு.1857).

ஜான் ஸ்டுவர்ட் மில்: '2176. வர்த்தக நிலவரம் கடினமாகும் போதெல்லாம் ... கடன்-பத்திரங்களின் விலை கணிசமாய் குறைகிறது ...அயல்நாட்டவர் இந்நாட்டில் இரயில்வே பங்குகள் வாங்குவதற்காக பணம் அனுப்புகிறார்கள், அல்லது அயல்நாட்டு இரயில்வே பங்குகள் வைத்திருக்கும் ஆங்கிலேயர்கள் தம் அயல்நாட்டு இரயில்வே பங்குகளை வெளிநாட்டில் விற்கிறார்கள்:....அந்த அளவுக்கு பொற்பாளக் கைமாற்றம் தடுக்கப்படுகிறது.'—'2182. வங்கியாளர்களும் கடன்-பத்திர வணிகர்களுமான பெருந் தொகையிலமைந்த செல்வந்தர்கள் - வெவ்வேறு நாடுகளிடையே வட்டி வீதத்தை சமனமாக்குவதும் வர்த்தக நெருக்குதலை சமனமாக்குவதும் வழக்கமாய் இவர்களைக் கொண்டுதான் நடைபெறுகிறது....விலை உயரக் கூடிய கடன்-பத்திரங்களை வாங்குவதற்காக எப்போதும் தயாராய் காத்திருக்கிறார்கள் ... அவர்கள் கடன்-பத்திரங்களை வாங்குவதற்கு ஏற்ற இடம் பொற்பாளத்தை வெளியே அனுப்புகிற நாடாகத்தான் இருக்கும்.'—'2184. இந்த முதலீடுகள் 1847இல் மிகக் கணிசமான அளவுக்கு நடைபெற்றன. வெளியோட்டத்தை கணிசமாய் தணித்திடப் போதுமான அளவுக்கு நடைபெற்றன.'

இங்கிலாந்து வங்கியின் முன்னாள் ஆளுநரும் 1838இலிருந்து அதன் இயக்குநர்களில் ஒருவராய் இருந்து வருபவருமான ஜெ.ஜி.ஹபார்டு சொல்கிறார்: '2545. ஏராளமான ஐரோப்பிய கடன்-பத்திரங்கள் உள்ளன ... இவை ஐரோப்பாவெங்கிலும் பல்வேறு பணச் சந்தைகளிலும் ஓடிக் கொண்டிருப்பவை; இந்தப் பத்திரங்களின் மதிப்பு ... ஒரு சந்தையில் 1 அல்லது 2 சதவீதம் குறைந்தவுடனே இன்னும் அவற்றின் மதிப்பு பழுதாகாமல் இருக்கும் சந்தைகளுக்கு அனுப்பும் பொருட்டு வாங்கப்படுகின்றன.'—'2565. அயல்நாடுகள் இந்நாட்டு வணிகர்களுக்கு கணிசமாய் கடன்பட்டுள்ளன அல்லவா?-மிகப் பெரிய அளவுக்கு கடன்பட்டுள்ளன.'—'2566. ஆக, அந்தக் கடன்கள் அடைபடுவதே இந்நாட்டில் மிகப்பெரும் மூலதனத் திரட்டலுக்கு வரிசெய்யப் போதுமானதாய் இருக்கலாம் அல்லவா?-1847இல், இந்நாட்டுக்கு ஏற்கெனவே அமெரிக்கா தர வேண்டியிருந்த எத்தனையோ மிலியன்களையும், ருஷ்யா தரவேண்டியிருந்த

எத்தனையோ மிலியன்களையும் நாம் தள்ளுபடி செய்ததன் மூலம் இறுதியில் நமது நிலையை மீட்டுச் சரிப்படுத்த முடிந்தது.' (அதே போது, இங்கிலாந்து தானியம் வாங்கிய வகையில் இதே நாடுகளுக்கு' எத்தனை எத்தனையோ மிலியன்' கடன்பட்டிருந்தது; கடன்பட்ட ஆங்கிலேயரின் திவால் நிலையின் வாயிலாக இந்த மிலியன்களில் பெரும்பகுதியை அது 'கோடு கிழித்து' ரத்து செய்யத் தவறவில்லை. பார்க்கவும்: வங்கிச் சட்டங்கள் பற்றிய அறிக்கை, 1857, அத்தியாயம் XXX, பக்கம் 31—பி.எங்கெல்ஸ்).—'2572. 1847இல் இந்நாட்டிற்கும் செயிண்ட் பீட்டர்ஸ்பர்க்கிற்கும் இடையிலான பரிவர்த்தனை மிக உயர்ந்த அளவில் நடைபெற்றது. £14,000,000 என்னும் வரம்பைக் கருதாமல் (அதாவது தங்கச் சேம இருப்புக்கு மேலதிகமாய் - பி.எங்கெல்ஸ்) இங்கிலாந்து வங்கி நோட்டு வெளியிடுவதற்கு அதிகாரம் அளிக்கும் அரசு மடல் வெளிவந்த போது, உண்டியற்கழிவு வீதம் 8%ஆக இருக்க வேண்டுமென்று விதிக்கப் பெற்றது. அச்சமயம், அப்போதைய கழிவு வீதத்தில், தங்கத்தை செயிண்ட் பீட்டர்ஸ்பர்க்கிலிருந்து லண்டனுக்கு கப்பலேற்றுவதும், அது வந்து சேர்ந்தவுடன் 8% வட்டிக்கு அதனைக்கடன் கொடுப்பதும் இலாபகரமான காரியமாய் இருந்தது; தங்கக் கொள்முதலை ஈடாய்க் கொண்டு வரையப்பட்ட மூன்றுமாத உண்டியல்கள் முதிர்ந்து தீர்வுக்குரியவை ஆகும் வரை இவ்விதம் கடன்தரப்பட்டது.'-'2573. பொற்பாளக்கொடுக்கல் - வாங்கல்கள் யாவற்றிலும் கருத்தில் கொள்ள வேண்டிய பலவும் உண்டு; மாற்று வீதம் உள்ளது; உண்டியலின் (பொற்பாளத்தை ஈடாய்க் கொண்டு வரையப்பட்டதன் -பி.எங்கெல்ஸ்) முதிர்வுக் காலத்தில் முதலீட்டுக்கு கிடைக்கக் கூடிய வட்டிவீதமும் உள்ளது.'

## ஆசியாவுடனான மாற்று வீதம்

அடுத்து சொல்லப்படவிருக்கும் விவரங்கள் முக்கியமானவை. ஏனென்றால், முதலாவதாக ஆசியாவுடனான மாற்றுவீதம் பாதகமாய் இருக்கும் போது எப்படி இங்கிலாந்து ஏனைய நாடுகளை பலியிட்டு தன் இழப்புகளை சரிசெய்துகொள்கிறது என்பது இவற்றிலிருந்து தெளிவாகிறது. ஆசியாவிலிருந்து அந்த நாடுகள் இறக்குமதி செய்கிறவற்றுக்கு ஆங்கிலேய இடையாளர்கள் மூலம் விலை செலுத்தப்படுகிறது. இரண்டாவதாக உயர்நிலை உலோக ஏற்றுமதி மாற்றுவீதங்கள் மீது ஏற்படுத்தும் விளைவையும் பொதுவான மூலதன எற்றுமதி இந்த வீதங்கள் மீது ஏற்படுத்தும் விளைவையும் ஒன்றெனக்

காட்டுவதற்கு இங்கு திருவாளர் வில்சன் மீண்டும் ஒருமுறை முட்டாள் தனமாய் முயற்சி செய்கிறார் என்பதாலும் இவ்விவரங்கள் முக்கியமானவை; இவ்விரு நிலைகளிலுமே ஏற்றுமதி என்பது வாங்குஞ்சாதனம் அல்லது கொடுப்புச் சாதனத்தின் ஏற்றுமதியல்ல, முதலீட்டுக்கான மூலதன ஏற்றுமதியே ஆகும். முதலாவதாக, இந்தியாவில் இருப்புப்பாதைப் போக்குவரத்தில் முதலீடு செய்வதற்காக இத்தனை மிலியன் £ஸ்டெர்லிங் அந்நாட்டுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது என்றால், அது உயர்நிலை உலோகமாக அனுப்பப்படுகிறதா, இல்லை இரும்புத் தண்டவாளங்களாக அனுப்பப்படுகிறதா என்பது வடிவ வேறுபாட்டையே குறிக்கும்; எப்படி அனுப்பப்பட்டாலும் ஒரு நாட்டிலிருந்து மறு நாட்டுக்கு மாற்றித்தரப்படும் மூலதனத் தொகையில் மாறுபாடு இல்லை. மேலும் இந்த மாற்றலானது சாதாரண வர்த்தகக் கணக்கில் சேருவதும் இல்லை; ஏற்றுமதி செய்கிற நாடானது அடுத்து வரும் காலத்தில் இந்த ரயில்வேக்களின் சம்பாத்தியத்திலிருந்து ஆண்டுதோறும் கிடைக்கக் கூடிய வருவாயைத் தவிர இந்த மாற்றலுக்கு வேறு எந்த மீள்வரவையும் எதிர்பார்ப்பதும் இல்லை. இந்த ஏற்றுமதி உயர்நிலை உலோக வடிவில் நடைபெறுமானால், உயர்நிலை உலோகமே நேரடியாக கடன் தரத் தக்க பண-மூலதனமாகவும், பண அமைப்பு அனைத்துக்குமான அடித்தளமாகவும் இருப்பதால் இது பணச் சந்தையின் மீதும், எனவே இந்த உயர்நிலை உலோகத்தை எற்றுமதி செய்யும் நாட்டினுடைய வட்டிவீதத்தின் மீதும் நேரடித் தாக்கம் செலுத்தும்; எல்லா நிலைமைகளிலும் இவ்விதம் தாக்கம் செலுத்தியாக வேண்டும் என்ற கட்டாயம் இல்லாவிட்டாலும், மேலே எடுத்துரைக்கப்பட்ட நிலைமைகளில் தாக்கம் செலுத்தவே செய்யும். இந்த ஏற்றுமதி இதேபோல் மாற்றுவீதத்தின் மீதும் நேரடித் தாக்கம் செலுத்தும். குறிப்பாகச் சொன்னால், லண்டன் பணச் சந்தையில் வழங்கப்படும் மாற்று உண்டியல்கள் - எடுத்துக்காட்டாக இந்தியா பேரிலான உண்டியல்கள் - இவ்விதம் கூடுதலாய் பணம் அனுப்புவதற்கு போதுமானவையாய் இல்லாத அளவில் மட்டுமே உயர்நிலை உலோகம் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்தியா பேரிலான மாற்று உண்டியல்களுக்கான வேண்டல் இவ்விதம் வழங்கலை விஞ்சுகிறது; எனவே மாற்று வீதம் அப்போதைக்கு இங்கிலாந்துக்கு எதிராய்த் திரும்புகிறது; இங்கிலாந்து இந்தியாவுக்கு கடன் பட்டிருப்பதால் அல்ல, இந்தியாவுக்கு அசாதாரணப் பெருந்தொகைகளை அனுப்ப வேண்டி இருப்பதால்தான் இந்நிலை. நாளாவட்டத்தில், இந்தியாவுக்கு

உயர்நிலை உலோகம் இப்படி ஏற்றுமதியாவதன் விளைவாக ஆங்கிலேயச் சரக்குகளுக்கான இந்திய வேண்டல் அதிகரித்தாக வேண்டும். ஏனென்றால் இது ஐரோப்பியச் சரக்குகளுக்கான இந்தியாவின் நுகர்திறனைச் சுற்றடியாக அதிகமாக்குகிறது. ஆனால் மூலதனம் தண்டவாளங்களாக - ஏற்றுமதி செய்யப்படுமானால், மாற்று வீதத்தின் மீது அது எவ்வித தாக்கமும் செலுத்தமுடியாது; ஏனென்றால் அதற்கு விலையாக இந்தியா பணமேதும் செலுத்தப் போவதில்லை. இதே காரணத்தால், அது பணச் சந்தையிலும் கூட எவ்வித தாக்கமும் செலுத்த வேண்டியதில்லை. இது போன்ற கூடுதல் முதலீடுகள் பணக்கடன் வசதிக்கு கூடுதல் வேண்டல் ஏற்படச்செய்து, இவ்விதம் வட்டி வீதத்தில் தாக்கம் செலுத்தும் என்று சொல்லி அது பணச் சந்தையில் தாக்கம் செலுத்துவதாக காட்ட முயல்கிறார் வில்சன். உண்மையில் இப்படி நடைபெறவும் கூடும்; ஆனால் எல்லா நிலைமைகளிலுமே இப்படி நடைபெற்றே தீரும் என்று சாதிப்பது அறவே தவறானது. தண்டவாளங்கள் எங்கே அனுப்பப்பட்டாலும் சரி, ஆங்கிலேய மண்ணிலானாலும் இந்திய மண்ணிலானாலும் எங்கே பதிக்கப்பட்டாலும் சரி, தனிப்பட்ட ஒரு பொருளுற்பத்தியின் குறிப்பிட்ட பெருக்கத்தை குறித்திடுமே தவிர வேறு எதையும் அல்ல. வட்டி வீதத்தை உயர்த்தாமல் உற்பத்திப் பெருக்கம், மிகப் பரந்த வரம்புகளுக்குள்ளேயும் கூட, ஏற்பட முடியாது என்று வாதிடுவது அபத்தம். பணக்கடன் வசதி, அதாவது கடன்-செலாவணி நடவடிக்கைகளுடன் தொடர்புள்ள கொடுக்கல் - வாங்கல்களின் அளவு அதிகரிக்கலாம்; வட்டி வீதம் மாறாமல் இருக்கும் போதே இந்தக் கடன் - செலாவணி நடவடிக்கைகள் அதிகரிக்கலாம். நாற்பதாம் ஆண்டுகளில் இரயில்வே மோகம் பரவியிருந்த போது.உள்ளபடியே இங்கிலாந்தில் நடந்தது இதுதான். வட்டிவீதம் உயரவில்லை. உண்மை-மூலதனத்தைப் பொறுத்தவரை, இங்கு சரக்குகளைப் பொறுத்தவரை, இந்தச் சரக்குகள் அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்குரியவை ஆனாலும் சரி, உள்நாட்டு நுகர்வுக்குரியவை ஆனாலும் சரி, பணச் சந்தையின் மீதான விளைவு ஒன்றுதான். அயல்நாடுகளில் இங்கிலாந்து செய்யும் முதலீடுகள் அதன் வர்த்தக ஏற்றுமதிகளுக்கு, அதாவது விலை செலுத்தப்பெற வேண்டியவையும், எனவே மீள் வரவுக்கு வழி செய்கிறவையும் ஆன ஏற்றுமதிகளுக்கு வரம்பிடும்போது மட்டுமே வேறுபாடு தலைதூக்க முடியும்; அல்லது இந்த மூலதன முதலீடுகள் ஏற்கெனவே கடன் - செலாவணியின் மிகைப் பெருக்கத்தையும் மோசடி நடவடிக்கைகளின் தொடக்கத்தையும் காட்டுகிற பொதுவான

அறிகுறிகளாய் இருக்கிற அளவுக்கு மட்டுமே வேறுபாடு தலைதூக்கலாம்.

பின்வருவதில், வில்சன் கேள்வி கேட்க நியூமார்ச் பதிலளிக்கிறார். '1786. முன்னொரு நாள் நீங்கள் கீழை நாடுகளுக்கான வெள்ளிக்கிருக்கும் - வேண்டல் குறித்து பேசுகையில், பெருமளவு பொற்பாளம் ஓயாமல் கீழைநாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட போதிலும் இந்தியாவுடனான பரிவர்த்தனைகள் இந்நாட்டுக்குச் சாதகமாய் உள்ளன என்று நம்புவதாகச் சொன்னீர்கள். பரிவர்த்தனைகள் இந்நாட்டுக்குச் சாதகமாய் இருப்பதாக தாங்கள் நினைப்பதற்கு முகாந்திரம் ஏதும் உண்டா?—உண்டு, நான் வைத்துள்ளேன்.....1851இல் ஐக்கிய முடியரசிலிருந்து இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப் பட்டவற்றின் உண்மை மதிப்பு £7,420,000 எனக் காண்கிறேன். இத்துடன் இந்தியா ஹவுஸ் பணவிடைகளின் தொகையையும், அதாவது கிழக்கிந்திய கம்பெனியார் தம் சொந்தச் செலவுக்காக இந்தியாவி லிருந்து பெற்ற நிதிகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். அந்த ஆண்டில் இத்தகைய பணவிடைகளின் மதிப்பு £3,200,000 ஆக இருந்தது. ஆக, ஐக்கிய முடியரசியிலிருந்து இந்தியாவுக்கு மொத்த ஏற்றுமதி £10,620,000 ஆயிற்று. 1855இல் ...ஐக்கிய முடியரசிலிருந்து பண்ட ஏற்றுமதியின் உண்மை மதிப்பு £10,350,000 ஆக உயர்ந்துவிட்டது; இந்தியா ஹவுஸ் பணவிடைகள் £3,700,000 ஆக இருந்தன. எனவே இந்நாட்டிலிருந்து மொத்த ஏற்றுமதி £14,050,000 ஆயிற்று. 1851ஐப் பொறுத்தவரை இந்தியாவிலிருந்து இந்நாட்டுக்கு இறக்குமதியான, சரக்குகளின் உண்மை மதிப்பு என்னவென்று சொல்லவழியில்லை எனக் கருதுகிறேன். ஆனால் 1854இலும் 1855இலும் உண்மை மதிப்பு சொல்லப்பட்டிருக்கிறது. 1855இல் இந்தியாவிலிருந்து இந்நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்ட சரக்குகளின் மொத்த உண்மை மதிப்பு £12,670,000; நான் குறிப்பிட்ட £14,050,000உடன் இத்தொகையை ஒப்பிட்டால், இரு நாடுகளுக்குமிடையிலான நேரடி வர்த்தகத்தில் ஐக்கிய முடியரசுக்கு சாதகமாக £1,380,000 நிலுவை இருந்தது.' (வ.ச.1857).

இந்த இடத்தில் வில்சன் மாற்று வீதங்கள் நேரல்லாத வர்த்தகத்தாலும் பாதிக்கப்படுவதாகச் சொல்கிறார். எடுத்துக்காட்டாக இந்தியாவிலிருந்து ஆஸ்திரேலியாவுக்கும் வடஅமெரிக்காவுக்குமான ஏற்றுமதிகள் லண்டன் மீதான பணவிடைகளைக் கொண்டு நடைபெறுகின்றன; ஆகவே சரக்குகள், இந்தியாவிலிருந்து

இங்கிலாந்துக்கு நேராகப் போயிருந்தால் எப்படியோ அதே போல் இவை மாற்றுவீதத்தைப் பாதிக்கின்றன. மேலும், இந்தியாவையும் சீனத்தையும் ஒன்றாகச் சேர்த்துப் பார்த்தால் நிலுவை இங்கிலாந்துக்கு பாதகமாய் இருக்கும். ஏனென்றால் சீனம் அபினிக்காக இந்தியாவுக்கு ஓயாமல் பெருந்தொகைகள் செலுத்த வேண்டியுள்ளது, இங்கிலாந்து சீனாவுக்கு செலுத்த வேண்டியவையும் உள்ளன, இந்தத் தொகைகள் இப்படிச் சுற்றுவழியில் இந்தியாவுக்குப் போகின்றன (1787, 1788).

*1791.* மூலதனம் 'இரும்புத் தண்டவாளங்களாகவும் இழுபொறி களாகவும் சென்றாலும் சரி, நாணயமாகச் சென்றாலும் சரி', மாற்று வீதங்கள் மீதான விளைவு ஒன்றாகவே இருக்காதா என்று வில்சன் கேட்கிறார். நியூமார்ச் இதற்குச் சரியாகப் பதிலளிக்கிறார்: இருப்புப் பாதை கட்டுமானத்திற்காக சமீப ஆண்டுகளில் இந்தியாவிற்கு அனுப்பி வைக்கப்பட்ட £12 மிலியன் இந்தியா குறிப்பிட்ட காலத்துக்கொரு முறை இங்கிலாந்துக்கு செலுத்த வேண்டிய ஆண்டுத் தொகையை வாங்குவதற்குப் பயன்பட்டது. 'ஆனால் பொற்பாளச் சந்தை மீதான உடனடிச் செயற்பாட்டைப் பொறுத்தவரை, உள்ளபடியான பண வினியோகங்களுக்காக பொற்பாளத்தை வெளியில் அனுப்ப வேண்டியிருக்கிறவரைதான் £12 மிலியன் மதிப்புள்ள முதலீடுகள் செயற்படும்.'

*1797.* (வெகூலின் கேட்கிறார்:) 'இந்த இரும்புக்குப் (தண்டவாளங்களுக்கு) பதிலாய்த் திரும்பி வருவது எதுவும் இல்லை யென்றால், எப்படி அது மாற்றுவீதங்களைப் பாதிப்பதாகச் சொல்ல முடியும்?—செலவீட்டில் சரக்குகளாக வெளியில் அனுப்பப்படும் பகுதி மாற்று வீதக் கணக்கீட்டை பாதிப்பதாக நான் நினைக்கவில்லை ... இரு நாடுகளிடையிலான மாற்று வீதக் கணக்கீடு முழுக்க முழுக்க கடப்பாடுகளின் அளவினால் மட்டுமே, அதாவது ஒரு நாட்டுக்கு எதிராக மறுநாட்டில் முன்னிற்கும் உண்டியல்களின் அளவுடன் ஒப்பிடுகையில் அந்த முதல் நாட்டில் முன்னிற்கும் உண்டியல்களின் அளவினால் மட்டுமே பாதிக்கப்படுகிறது எனலாம். இதுதான் மாற்று விதத்தின் அடிப்படை நெறி. நிற்க, அந்த 12 மிலியனின் அனுப்பீட்டைப் பொறுத்த வரை, பணம் முதலாவதாக இந்த நாட்டில்தான் வழங்கப் படுகிறது ...இப்போது, கொடுக்கல்- வாங்கலின் தன்மை காரணமாய் அந்த £12,000,000 முழுவதையும் கல்கத்தாவிலும் பம்பாயிலும் சென்னையிலும் கருவூலத்தில் போட்டு வைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால் ... திடீர் வேண்டல் எழுந்து வெள்ளி விலை மீதும் மாற்று

*வீதத்தின் மீதும் மிக மூர்க்கமாய்ச் செயற்படும்; இந்தியக் கம்பெனி தங்களுடைய பணவிடைகள் £3,000,000 இலிருந்து £12,000,000 ஆக உயர்த்தப்படவிருப்பதாய் நாளைக்கே அறிவிப்புக் கொடுத்தால் எப்படியோ அப்படிப்பட்ட நிலைமை ஏற்படும். ஆனால் அந்த £12,000,000இல் பாதியளவு ... இந்நாட்டில் சரக்குகள் வாங்குவதில் இருப்புத் தண்டவாளங்கள், மரம் ஏனைய பொருட்கள் வாங்குவதில் ... செலவிடப்படுகிறது ... இந்நாட்டு மூலதனம் இந்நாட்டில் செலவிடப்படுகிறது,-குறிப்பிட்ட வகைச் சரக்கை இந்தியாவிற்கு அனுப்புவதற்காக செலவிடப்படுகிறது, இதற்கொரு முடிவு உண்டு.'— '1798. (வெகூலின்:). ஆனால் இரயில் போக்குவரத்துக்கு அவசியமான இரும்பினாலும் மரத்தினாலுமாகிய அந்தப் பண்டங்களின் உற்பத்தி பெருமளவில் அயல்நாட்டுப் பண்டங்களின் நுகர்வைத் தோற்றுவிக்கிறதே, இது மாற்று வீத்தைப் பாதிக்கக் கூடுமா? - நிச்சயமாக.'*

*இரும்பு பெருமளவுக்கு உழைப்பைக் குறிப்பதாகவும், இந்த உழைப்புக்குத் தரப்படும் கூலி பெருமளவுக்கு இறக்குமதிப் பண்டங்களைக் குறிப்பதாகவும் வில்சன் கருதுகிறார் (1799). அடுத்து அவர் கேட்கிறார்:*

*'1801. ஆனால் பொத்தம் பொதுவாகச் சொல்லின், இறக்குமதிப் பண்டங்களின் நுகர்வினால் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களை வெளிநாட்டுக்கு அனுப்புவீர்களானால், விளைபொருள் வடிவிலோ வேறு வடிவிலோ அவற்றுக்கீடாக எதுவும் வரப்பெறாமலே இவ்விதம் அனுப்புவீர்களானால், இதன் விளைவாக மாற்றுவீதங்கள் இந்நாட்டுக்கு பாதகமாய் மாறுமே?- மாபெரும் இரயில்வே செலவீட்டுக் காலத்தில் இந்தக் கோட்பாடுதான் இந்நாட்டில் அரங்கேறியது (1845). மூன்று, நான்கு அல்லது ஐந்தாண்டு காலத்துக்கு நீங்கள் இரயில் போக்குவரத்துக்காக £30,000,000 செலவிட்டீர்கள்; கிட்டத்தட்ட இந்த முழுத் தொகையுமே கூலி கொடுப்பதற்கு போய்விட்டது. மூன்றாண்டு காலத்தில் ஆலைத்தொழில் வட்டங்கள் அனைத்திலும் வேலைக்கமர்த்தியதை விட இருப்புப் பாதைகளும் இழுபொறிகளும் தொடர்வண்டிகளும் நிலையங்களும் கட்டுவதில் கூடுதலான தொகையினரை வேலைக்கமர்த்தி ஆதரித்தீர்கள். இம்மக்கள் ... தேயிலையும் சர்க்கரையும் சாராயமும் ஏனைய அயல்நாட்டுச் சரக்குகளும் வாங்குவதில் அந்தக் கூலியைச் செலவழித்தார்கள்; அவை இறக்குமதி செய்யப்பட்ட சரக்குகள்.*

ஆனால் உண்மை என்னவென்றால், இந்தப் பெரும் செலவீடு நடைபெற்றுக் கொண்டிருக்கையில் இந்நாட்டுக்கும் ஏனைய நாடுகளுக்கும் இடையிலான அயல்நாட்டு மாற்று வீதங்கள் பெரிதாய்க் குலைந்து போகவில்லை. பொற்பாளம் வெளியேறிச் செல்லவில்லை, மாறாக வெளியிலிருந்து உள்ளே வரத்தான் செய்தது.'

*1802.* வில்சன் விடுவதாய் இல்லை, இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வர்த்தக நிலுவையும் செலாவணி மாற்று வீதங்களும் சமப்பட்டிருக்க அதிகப்படியாக இரும்புத் தண்டவாளங்களும் இழுபொறிகளும் அனுப்பி வைக்கப்படுவது 'இந்தியாவுடனான மாற்று வீதங்களைப் பாதிக்கவே செய்யும்' என்று அவர் வலியுறுத்துகிறார். தண்டவாளங்கள் மூலதன முதலீடு என்ற வகையில் அனுப்பப்பட்டு, இந்தியா எவ்வடிவிலும் அவற்றுக்கு விலை கொடுக்க தேவையில்லை என்ற நிலை உள்ள வரை நியூமார்ச்சால் அப்படி கருத முடியவில்லை. அவர் சொல்கிறார்: 'எந்தவொரு நாடும் அதனோடு வர்த்தக உறவு கொண்டுள்ள ஏனைய எல்லா நாடுகளோடும் நிரந்தரமாகவே பாதகமான மாற்று வீதம் கொண்டதாய் இருக்க முடியாது என்னும் கோட்பாட்டை ஏற்றுக் கொள்கிறேன். ஒரு நாட்டுடன் பாதகமான மாற்று வீதம் என்பது இன்னொரு நாட்டுடன் சாதகமான மாற்று வீதத்தை தோற்றுவிப்பது தவிர்க்க முடியாதது.'- பதிலுக்கு வில்சன் அற்பத்தனமாய் விவகாரம் பண்ணுகிறார்:

'*1803.* ஆனால் எவ்வடிவில் அனுப்பப்பட்டாலும் மூலதன மாற்றல் என்பதில் மாறுபாடு இருக்காது அல்லவா?-கடப்பாட்டைப் பொறுத்த வரை இருக்காது'. -'*1804.* ஆகவே பொற்பாளத்தை அனுப்பினாலும் சரி, பொருட்களை அனுப்பினாலும் சரி, இந்தியாவில் இருப்புப் பாதை அமைப்பது இங்கு மூலதனச் சந்தை மீது ஏற்படுத்தும் விளைவில், முழு மூலதனமும் பொற்பாளமாகவே அனுப்பப்பட்டாற்போல் மூலதன மதிப்பை அதிகமாக்குவது என்னும் விளைவில் மாறுபாடு இருக்காதே?'

இரும்பு விலைகள் உயரவில்லை என்றால், எப்படியும் இது தண்டவாளங்களில் அடங்கிய 'மூலதனத்தின்' 'மதிப்பு' அதிகரிக்க வில்லை என்பதற்குத்தான் நிரூபணமாகும். ஆனால் இங்கு பிரச்சினைக் குரியது பணமூலதனத்தின் மதிப்பே, வட்டி அதாவது வட்டி வீதமே ஆகும். வில்சன் பண-மூலதனத்தையும் பொதுவான மூலதனத்தையும் ஒன்றெனக் காட்ட முயல்கிறார். முதலாவதாக, இந்திய இரயில் போக்குவரத்துக்காக இங்கிலாந்தில் £12 மிலியன் ஒதுக்கீடு

செய்யப்பட்டது என்பது சாதாரண உண்மை. இதற்கும் மாற்று வீதத்துக்கும் நேரடித் தொடர்பு ஏதுவுமில்லை. இதே போல் பணச் சந்தையைப் பொறுத்த வரை £12 மிலியன் ஒதுக்கப்பட்டதால் எவ்வித மாற்றமும் இல்லை. பண சந்தை சாதக நிலைமையில் இருந்தால், இது எவ்விளைவையும் உண்டாக்கத் தேவையில்லை; 1844இலும் 1845இலும் ஆங்கிலேய இரயில் போக்குவரத்து ஒதுக்கீடுகள் பணச் சந்தையைப் பாதிக்காமல் விட்டதை சான்றாய்க் குறிப்பிடலாம். பணச் சந்தை முன்பே சற்று இறுக்கமாய் இருந்தால், வட்டி வீதம் அதனால் பாதிக்கப்படலாம். ஆனால் இந்தப் பாதிப்பு வட்டி வீதத்தை உயரச் செய்வதாகவே இருக்கும். வில்சனின் தத்துவப்படி இது மாற்றுவீதங்கள் மீது இங்கிலாந்துக்குச் சாதகமான விளைவைக் கட்டாயம் ஏற்படுத்தும்; அதாவது உயர்நிலை உலோகத்தை ஏற்றுமதி செய்யும் போக்கிற்கு அணைபோடும், இந்தியாவுக்கு அல்லவென்றால் வேறு எங்காவது அதனை ஏற்றுமதி செய்யும் போக்கிற்கும் அணைபோடும். திருவாளர் வில்சன் ஒன்றிலிருந்து இன்னொன்றுக்குத் தாவுகிறார். கேள்வி எண் 1892 இல் மாற்றுவீதம்தான் பாதிக்கப் படுவதாய்க் கொள்ளப்படுகிறது; கேள்வி எண் 1804 இல் 'மூலதனத்தின் மதிப்பு' பாதிக்கப்படுகிறது - இவை இருவேறு சங்கதிகளாகும். வட்டி வீதம் மாற்று வீதங்களைப் பாதிக்கலாம். மாற்று வீதங்கள் வட்டி வீதத்தைப் பாதிக்கலாம்; ஆனால் மாற்று வீதங்கள் அலைவுறும் போதே வட்டி வீதம் நிலையாய் இருக்கலாம். வட்டிவீதம் அலைவுறும்போதே மாற்று வீதங்கள் நிலையாய் இருக்கலாம். மூலதனம் அயல்நாட்டுக்கு அனுப்பப்படும்போது அது எவ்வடிவில் அனுப்பப்படுகிறது என்பதே இப்படி வேறுபட்ட விளைவுக்கு வழி செய்ய முடியும் என்பதை, மூலதனத்தின் வடிவத்திலான வேறுபாட்டுக்குக் குறிப்பாக அதன் பண வடிவத்துக்கு இவ்வளவு முக்கியத்துவம் உண்டு என்பதை வில்சனால் ஏற்க முடியவில்லை. இது அறிவார்ந்த பொருளாதார இயலின் முழுப் போக்கிற்கும் முரணாய் இருக்கிறது. நியூமார்ச் ஒருதரப்பான முறையில் வில்சனுக்கு பதிலளிக்கிறார். காரணமே இல்லாமல் வில்சன் திடீரென்று மாற்று வீதத்திலிருந்து வட்டி வீதத்துக்கு தாவி இருப்பதை அவர் சூசகமாய்க் கூட சுட்டிக் காட்டவில்லை. கேள்வி எண் 1804க்கு நியூமார்ச் அளிக்கும் பதில் உறுதியற்றதாகவும் தடுமாற்றமாகவும் உள்ளது: 'சந்தேகமே இல்லை, £12,000,000 திரட்ட வேண்டி ஏற்பட்டால், அந்த £12 மிலியனை பொற்பாளமாக அனுப்பவேண்டுமா? பொருட்களாக அனுப்ப வேண்டுமா? என்பது பொது வட்டி வீதத்தைப் பொறுத்த வரை முக்கியத்துவமற்றதாகும். ஆனால் '(நுண்ணிய மாறுதல்தான், நேர்

எதிரானதை சொல்ல அவர் நினைக்கும் போது இந்த 'ஆனால்' வருகிறது) 'அது அப்படியொன்றும் முக்கியத்துவமற்றது அல்ல'; (முக்கியத்துவமற்றது, ஆனாலும் முக்கியத்துவமற்றது அல்ல); 'ஏனென்றால் முதல் நேர்வில் £6 மிலியன் உடனே திரும்பி வந்து சேரும்; இரண்டாம் நேர்வில் அவ்வளவு துரிதமாய் திரும்பி வராது. ஆகவே £6 மிலியன் இந்த நாட்டிலேயே செலவிடப்படுகிறதா, அல்லது முழுக்க வெளியில் அனுப்பப்படுகிறதா என்பதில் கொஞ்சம் வேறுபாடு' (என்னே தெளிவு!) 'இருக்கும்.' 6 மிலியன் உடனே திரும்பி விடும் என்கிறாரே, என்ன அர்த்தம்? £6 மிலியன் இங்கிலாந்தில் செலவிடப்பட்டுள்ள அளவில் இந்தியாவுக்கு அனுப்பப்படும் தண்டவாளங்களிலும் இழுபொறிகளிலும் இன்ன பிறவற்றிலும் இடம் பெற்றுள்ளது. இந்தியாவிலிருந்து இவை திரும்பி வருவதில்லை. கடன்தீர் நிதியைக்கொண்டு அவற்றின் மதிப்பு மெள்ள மெள்ளத் திரும்பி வருகிறது. ஆனால் உயர்நிலை உலோகவடிவிலான ஆறு மிலியன் அப்படியே பண்ட வடிவில் மிகத் துரிதமாய் திரும்பி வரக்கூடும். ஆறு மிலியன் கூலிக்காகக் செலவிடப்பட்டுள்ள அளவில் நுகரப்பட்டுவிட்டது. ஆனால் கூலி கொடுப்பதற்கு பயன்படுகிற பணம் எப்போதும் போல் நாட்டில் சுற்றியோடிக் கொண்டிருக்கிறது, அல்லது சேம இருப்பாகிவிடுகிறது. தண்டவாள உற்பத்தியாளர்களின் இலாபம் தொடர்பாகவும் ஆறு மிலியனில் அவர்கள் மாறா-மூலதனத்தை மாற்றீடு செய்யும் பகுதி தொடர்பாகவும் கூட இவ்வாறே சொல்லலாம். பணம் நாட்டிலேயே இருந்துள்ளது என்றும், அது கடனுக்குரிய பண - மூலதனமாகப் பயன்படுவதாய் உள்ள வரை பணச் சந்தையைப் பொறுத்தவரையிலான வேறுபாடு எல்லாம் (சுற்றோட்டம் கூடுதலான நாணயத்தை உள்வாங்கியிருக்கக் கூடும் என்பதை ஒதுக்கிவிட்டுப் பார்க்கிறோம்) B இன் கணக்கிலிருந்து பெறப்படுவதற்குப் பதில் அது A இன் கணக்கிலிருந்து பெறப்படுகிறது என்பது மட்டுமே ஆகும் என்றும் நேரடியாகச் சொல்வதைத் தவிர்ப்பதற்காகத்தான் நியூமார்ச் 'திரும்பி வருதல்' என்றெல்லாம் தெளிவின்றிப் பேசுகிறார். உயர்நிலை உலோகமாக அல்லாமல் சரக்குகளாக மூலதனம் பிற நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டு அங்கு முதலீடு செய்யப்படும் போது, இப்படி ஏற்றுமதி செய்யப்படும் சரக்குகளை உற்பத்தி செய்வதற்காக வேறு அயல் நாட்டுச்சரக்குகளை இப்படி கூடுதலாய் இறக்குமதி செய்ய வேண்டியிருக்கும் அளவில் இந்த முதலீடு மாற்று வீதத்தை (ஏற்றுமதி செய்யப்படும் மூலதனம் எந்நாட்டில் முதலீடாகிறதோ அந்நாட்டுடனான மாற்று வீதத்தை அல்ல) பாதிக்கக் கூடும். ஆனால் இந்த

உற்பத்தியால் கூடுதல் இறக்குமதியை நீக்கி நேர் செய்ய முடியவில்லை. கடன்பேரில் செய்யப்படும் ஒவ்வோர் ஏற்றுமதி குறித்தும் இவ்வாறே சொல்லலாம்-ஏற்றுமதியின் நோக்கம் மூலதன முதலீடாய் இருந்தாலும் சரி, சாதாரண வர்த்தகமாய் இருந்தாலும் சரி. மேலும் இந்தக் கூடுதல் இறக்குமதிக்கான எதிர்வினையாக ஆங்கிலேயச் சரக்குகளுக்கு (எடுத்துக்காட்டாக) காலனி நாடுகளிலிருந்தோ அமெரிக்க ஐக்கிய நாட்டிலிருந்தோ கூடுதல் வேண்டல் எழலாம்.

நியூ மார்ச் ஏற்கெனவே (1786) சொன்னார், கிழக்கிந்திய கம்பெனியின் பணவிடைகள் காரணமாய் இந்தியாவுக்கான ஆங்கிலேய ஏற்றுமதிகள் இறக்குமதிகளைக் காட்டிலும் அதிகமாய் இருப்பதாக. இது குறித்து சர் சார்ல்ஸ் வுட் அவரை குறுக்கு விசாரணை செய்கிறார். இந்தியாவுக்கான ஆங்கிலேயே ஏற்றுமதிகள் இந்தியாவிலிருந்தான இறக்குமதிகளைக் காட்டிலும் இப்படி மிகையாய் இருப்பதற்கு உண்மையில் என்ன காரணம் தெரியுமா? இந்தியாவிலிருந்தான இறக்குமதிகள் சிலவற்றுக்கு இங்கிலாந்து விலையே கொடுப்பதில்லை. கிழக்கிந்தியக் கம்பெனியின் (இப்போது இந்திய அரசின்) பணவிடைகள் இந்தியாவிலிருந்து கறக்கப்படும் கப்பமே ஆகி விடுகின்றன. எடுத்துக்காட்டாக 1855இல் இந்தியாவிலிருந்தான ஆங்கிலேய இறக்குமதிகளின் மதிப்பு £12,670,000; இந்தியாவுக்கான ஆங்கிலேய ஏற்றுமதிகளின் மதிப்பு £10,350,000; இந்தியாவுக்கான சாதக நிலுவை £2,250,000.*

'விவகாரமே இவ்வளவுதான் என்றால், £2,250,000 ஏதோ ஒரு வடிவில் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டாக வேண்டும். இந்தியா ஹவுசிலிருந்து விளம்பரங்கள் வருகின்றன. இந்தியாவிலிருந்து பல்வேறு மாநிலங்களின் பேரிலும் £3,250,000 என்னுமளவுக்குப் பணவிடைகள் வழங்கத் தயார் என்று அது விளம்பரம் செய்கிறது. (கிழக்கிந்தியக் கம்பெனியின் லண்டன் செலவுகளுக்காகவும் பங்குதாரர்களுக்குத் தர வேண்டிய ஆதாயப் பங்கிடுகளுக்காகவும் இத்தொகை வசூலிக்கப்பட்டது). இது வர்த்தகத்திலிருந்து வந்த £2,250,000ஐத் தீர்த்து விடுவதோடு £1,000,000 உபரியும் கிடைக்கச் செய்கிறது.' (1917) -(வ.ச.1857).

'1922. (வுட்.) அப்படியானால் அந்த இந்தியா ஹவுஸ் பணவிடைகளால் ஏற்படும் விளைவு இந்தியாவுக்கான ஏற்றுமதிகளை

(* அதாவது தோராயமாக 2 ¼ மிலியன்.; துல்லியமாகச் சொல்வதனால் £2,320,000. -ஆங்கிலப் பதிப்பாசிரியர்.)

அதிகமாக்குவது அல்ல, மாறாக அந்த அளவுக்கு குறைப்பதே ஆகும், அப்படித்தானே?' (இந்தியாவிலிருந்தான இறக்குமதிகளை அதே அளவுக்கு அந்நாட்டுக்கு செய்யப்படும் ஏற்றுமதிகளைக் கொண்டு சரிக்கட்டும் அவசியத்தைக் குறைப்பதாகும் என்றிருக்க வேண்டும்). பிரித்தானியர்கள் இந்த £3,700,000க்கு ஈடாக இந்தியாவில் 'நல்லாட்சியை' இறக்குமதி செய்வதாக திருவாளர் நியூமார்ச் இதற்கு விளக்கமளிக்கிறார் (1925). பிரித்தானியர் இந்தியாவுக்கு எத்தகைய 'நல்லாட்சியை' ஏற்றுமதி செய்கிறார்கள் என்பதை இந்தியாவுக்கான அமைச்சராய் இருந்தவர் என்ற முறையில் வுட் நன்கறிவார். வஞ்சப் புகழ்ச்சியாய் அவர் பதிலளிப்பது சரிதான்: '1926, ஆக, கிழக்கிந்தியப் பணவிடைகள் காரணமாய் நடைபெறுவதாக நீங்கள் குறிப்பிடும் ஏற்றுமதி நல்லாட்சியின் ஏற்றுமதியே தவிர உற்பத்திப் பண்ட ஏற்றுமதி அல்ல.'- இங்கிலாந்து 'இவ்வழியில்' 'நல்லாட்சிக்காகவும்' அயல்நாடுகளில் முதலீடு செய்வதற்காகவும் ஏராளமாய் ஏற்றுமதி செய்வதால் - இவ்விதம் அது மாமூல் வர்த்தகத்தை சற்றும் சாராத இறக்குமதிகளைப் பெறுகிறது, இந்தக் கப்பத்தில் ஒரு பகுதி ஏற்றுமதி செய்யப்படும் 'நல்லாட்சிக்கானது', மறுபகுதி காலனி நாடுகளிலோ இதர இடங்களிலோ முதலீடு செய்யப்படும் மூலதனத்திலிருந்து பெறப்படும் வருவாய்களின் வடிவிலானது; அதாவது இங்கிலாந்து சமதை ஏதும் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லாமலே அடைகிற கப்பம் இது - இங்கிலாந்து பதிலுக்கு ஒன்றும் ஏற்றுமதி செய்யாமல் அப்படியே இந்தக் கப்பத்தை நுகர்ந்திடும்போது, மாற்று வீதங்கள் பாதிக்கப்படுவதில்லை என்பது தெளிவு. ஆகவே, அது இந்தக் கப்பத்தை இங்கிலாந்தில் அல்லாமல் அயல் நாடுகளில் உற்பத்தித் திறனுள்ள முறையிலோ திறனற்ற முறையிலோ மறு முதலீடு செய்யும் போது மாற்று வீதங்கள் பாதிக்கப்படுவதில்லை என்பதும் தெளிவாகிறது. எடுத்துக்காட்டாக, அது இக் கப்பத்திற்கு ஈடாக கிரிமியாவுக்கு படைக்கலன்கள் அனுப்பும் போது நடப்பது இதுவே. மேலும், அயல் நாடுகளிலிருந்தான இறக்குமதிகள் இங்கிலாந்தின் வருவாயில் சேருமளவுக்கு - இந்த இறக்குமதிகளுக்கு கப்ப வடிவில்தான் விலைகொடுத்தாக வேண்டும், கப்பத்திற்கு சமதையேதும் திரும்பி வர வேண்டிய அவசியமில்லை, அல்லது இந்த விலைதரப்படாத கப்பத்தைப் பரிவர்த்தனை செய்வதன் மூலமோ சாதாரண வர்த்தகப் போக்கிலோ இந்த இறக்குமதிகளுக்கு விலை தரப்பட வேண்டும் - இங்கிலாந்து அவற்றை நுகரலாம் - அல்லது மூலதனமாக மறுமுதலீடு செய்யலாம். இரண்டில் எது நடந்தாலும்

மாற்று வீதங்கள் பாதிக்கப்படுவதில்லை, அறிஞர் வில்சன் இதைக் காணத் தவறுகிறார். வருவாயில் ஒரு பகுதியாக அமைவது உள்நாட்டு பண்டமானாலும் சரி, வெளிநாட்டு பண்டமானாலும் சரி- வெளி நாட்டுப் பண்டமாக இருக்குமானால், உள்நாட்டுப் பண்டத்தை வெளிநாட்டுப் பண்டத்துக்கு பரிவர்த்தனை செய்ய வேண்டியிருக்கும், அவ்வளவுதான். இந்த வருவாயின் நுகர்வு திறனுடை நுகர்வானாலும் திறனிலா நுகர்வானாலும் உற்பத்தியின் அளவு வீதத்தை மாற்றக் கூடும் என்றாலும் மாற்று வீதங்களில் எவ்வித மாற்றமும் உண்டு பண்ணுவதில்லை. மேற்சொன்னதை மனத்திற் கொண்டு கீழ்வருவதை வாசிக்க வேண்டும்:

*1934.* கிரீமியாவுக்கு போர்த்தளவாடங்கள் அனுப்பி வைக்கப்படுவது எப்படி துருக்கியுடனான மாற்றுவீதங்களைப் பாதிக்குமென்று நியூமார்ச்சிடம் வுட் கேட்கிறார்.-நியூமார்ச் பதிலளிக்கிறார்: 'போர்தொடர்பானவற்றை அனுப்பி வைப்பது மட்டும் கட்டாயம் மாற்று வீதத்தைப் பாதிக்கும் என்று நான் கருதவில்லை; அல்லது கருவூலம் அனுப்பி வைக்கப்படுவது மாற்றுவீதத்தை நிச்சயம் பாதிக்கும்.' ஆக இங்கு அவர் பண வடிவிலான மூலதனத்தையும் இதர வகை மூலதனத்தையும் வேறுபடுத்திப் பார்க்கிறார். அப்படியும் வில்சன் கேட்கிறார்:

'*1935.* எந்தவொரு பண்டத்தையும் பெருமளவுக்கு ஏற்றுமதி செய்யும் போது, அதற்கிணையான இறக்குமதி ஏதும் இல்லாவிட்டால்' (இங்கிலாந்துக்கு வந்து சேரும் மிகக் கணிசமான இறக்குமதிகளுக்கு, 'நல்லாட்சியின்' வடிவிலான ஏற்றுமதிகளையும் முதலீட்டுக்காக ஏற்கெனவே ஏற்றுமதி செய்யப்பட்ட மூலதனத்தையும் விட்டால் வேறு இணையான ஏற்றுமதிகள் நடைபெறுவதே இல்லையென்பதை திருவாளர் வில்சன் மறந்து விடுகிறார். எப்படிப் பார்த்தாலும் இந்த இறக்குமதிகள் இயல்பான வர்த்தகச் சூழல் இயக்கத்தில் ஓர் அங்கமாவதில்லை. ஆனால் இந்த இறக்குமதிகள் மீண்டும் பரிவர்த்தனை செய்து கொள்ளப்படலாம், எடுத்துக்காட்டாக அமெரிக்க உற்பத்திப் பண்டங்களுக்கு பரிவர்த்தனை செய்து கொள்ளப்படலாம். இணையான இறக்குமதிகள் இல்லாமல் இந்த அமெரிக்கச் சரக்குகள் ஏற்றுமதி செய்யப்படுமானால், அப்போதும் சமதையாக எதுவும் அயல்நாட்டுக்கு வெளியேறிச் செல்லாமலே இந்த இறக்குமதிகளின் மதிப்பை நுகர்ந்திடலாம்; இணையான ஏற்றுமதிகள் இல்லாமல் இந்த இறக்குமதிகள் வந்து சேர்ந்தன, ஆகவே இவை வர்த்தக நிலுவையில்

சேராமலே நுகரப்படலாம்). 'நீங்கள் செய்யும் இறக்குமதிகளால் ஏற்பட்டுள்ள அயல்நாட்டுக் கடனை நீங்கள் தீர்த்து விடுவதில்லை.' (ஆனால் முன்பே இந்த இறக்குமதிகளுக்கு விலை கொடுத்திருப்பீர் களானால், எடுத்துக்காட்டாக அயல்நாட்டில் தரப்படும் கடன்-செலாவணியைக் கொண்டு இதைத் செய்திருப்பீர்களானால், இதனால் நீங்கள் எவ்விதத்தும் கடன் படுவதில்லை; சர்வதேச நிலுவைக்கும் இந்தப் பிரச்சினைக்கும் தொடர்பே இல்லை, நுகரப்படும் உற்பத்திப் பண்டங்கள் உள் நாட்டுப் பண்டங்களானாலும் சரி, அயல்நாட்டுப் பண்டங்களானாலும் சரி, உற்பத்தித் திறனுள்ள விதத்தில் நுகரப்படுகின்றனவா அல்லவா, என்பதுதான் பிரச்சினை); 'ஆகவே உங்கள் ஏற்றுமதிக்கு இணையான இறக்குமதிகள் இல்லாது போவதால் இந்தக் கொடுக்கல் - வாங்கலானது அயல்நாட்டுக் கடனை தீர்க்காமல் இருப்பதன் மூலம் மாற்று வீதங்களை பாதிக்கவே செய்யும், அப்படித்தானே?-பொதுவாக நாடுகளைப் பொறுத்தவரை அப்படித்தான்.'

வில்சனின் இந்த விரிவுரைக்கு என்ன பொருள்? இணையான இறக்குமதி இல்லாத ஒவ்வோர் ஏற்றுமதியும், அதேபோது இணையான ஏற்றுமதி இல்லாத இறக்குமதி ஆகும் என்பதுதான். ஏனென்றால் அயல்நாட்டுச் சரக்குகள், அதாவது இறக்குமதியாகிற சரக்குகள் ஏற்றுமதியாகிற பண்டத்தின் உற்பத்தியில் இடம் பெறுகின்றனவாம். இத்தகைய ஒவ்வோர் ஏற்றுமதியும் விலைதரப்படாத ஒரு இறக்குமதியை அடிப்படையாக்க் கொண்டுள்ளது, அல்லது அதனை தோற்றுவிக்கிறது என்பதே அனுமானம், பின்வரும் இரு நிலைமைகளையும் கருதாமல் ஒதுக்கிவிட்டாலும் கூட இது தவறு; (1) குறிப்பிட்ட சில இறக்குமதிகளை இங்கிலாந்து இலவசமாய் பெறுகிறது, அது அவற்றுக்கு எவ்விதச் சமதையும் கொடுப்பதில்லை; இந்தியாவிலிருந்து அது பெறும் இறக்குமதிகளில் ஒரு பகுதியை இதற்கும் சான்றாய்க் குறிப்பிடலாம். அது இவற்றை அமெரிக்க இறக்குமதிகளுக்கு பரிவர்த்தனை செய்து கொண்டு இணையான இறக்குமதிகள் இல்லாமலே அவற்றை ஏற்றுமதி செய்யலாம்; எது எப்படியானாலும், அது தனக்கு செலவில்லாமல் கிடைத்த ஒன்றைத்தான் ஏற்றுமதி செய்திருக்கிறது. (2) இங்கிலாந்து கூடுதல் மூலதனமாய் அமைந்திடும் இறக்குமதிகளுக்கு எடுத்துக்காட்டாக அமெரிக்க இறக்குமதிகளுக்கு விலை கொடுத்திருக்கலாம்; அது இவற்றை உற்பத்தித் திறனற்ற முறையில், எடுத்துக்காட்டாய் போர்த்தளவாடங்களாக நுகர்ந்திடுமானால், இதனால் அமெரிக்காவுக்கு

சற்றும் கடன்படத் தேவையில்லை, இது அமெரிக்காவுடனான மாற்று வீதத்தைப் பாதிப்பதுமில்லை. எண் 1934, 1935 ஆகியவற்றில் நியூமார்ச் தமக்குத்தாமே முரண்படுகிறார். வுட் இதனை எண் 1938இல் அவரது கவனத்துக்கு கொண்டு வருகிறார்:

'மீள்வரவு இல்லாமல் ஏற்றுமதி செய்யப்படும் பண்டங்களை (போர்த்தளவாடங்களை) உற்பத்தி செய்வதில் ஈடுபடுத்தப்படும் சரக்குகளில் எந்தவொரு பகுதியும் அப்பண்டங்கள் அனுப்பி வைக்கப்பெறும் நாட்டிலிருந்து வரவில்லையென்றால் எப்படி அந்த நாட்டுடனான மாற்று வீதம் பாதிக்கப்படும்? துருக்கியுடனான வர்த்தகம் சாதாரணச் சமநிலையில் இருப்பதாகக் கொண்டால், போர் தொடர்பானவற்றை கிரிமியாவும் ஏற்றுமதி செய்வதன் மூலம் எப்படி இந்த நாட்டுக்கும் துருக்கிக்கும் இடையிலான மாற்று வீதம் பாதிக்கப்படும்?'- இங்கு நியூமார்ச் நிதானமிழக்கிறார்; இந்த சாதாரண கேள்விக்கு எண் 1934இல் தாமே சரியாக பதிலளித்திருப்பதை மறந்துவிடுகிறார். அவர் சொல்கிறார்; 'நான் நினைக்கிறேன், நடைமுறைப் பிரச்சினையை நாம் தீர்த்து முடித்து விட்டதாகவும் கோட்பாட்டு விவாதத்தில் விட்டதாகவும் தோன்றுகிறது'.

---

ஒரு நாட்டிலிருந்து வேறொரு நாட்டுக்கு மூலதனம் மாற்றி அனுப்பப்படுவது உயர்நிலை உலோகத்தின் வடிவத்தில் நடைபெற்றாலும் சரி, சரக்குகளின் வடிவத்தில் நடைபெற்றாலும் சரி, இத்தகைய மூலதன மாற்றல் ஒவ்வொன்றுமே மாற்று வீதத்தைப் பாதிக்கிறது என்கிற தமது வாதத்தை வில்சன் மற்றுமொரு முறையிலும் முன்வைக்கிறார். வட்டி வீதத்தால், - குறிப்பாக எந்த இரு நாடுகளின் பரஸ்பர மாற்று வீதங்கள் குறித்து பேசப்படுகிறதோ அந்த இரு நாடுகளிலும் நிலவுகிற வட்டிவீதங்களிடையிலான உறவு முறையால் மாற்று வீதம் பாதிக்கப்படுவது வில்சனுக்கு தெரிந்ததுதான். பொதுவாக மூலதன மிகைப்பாடும் இவ்விதம் முதலாவதாக உயர்நிலை உலோகம் உள்ளிட்ட அனைத்து வகைச் சரக்குகளிலான மிகைப்பாடும் வட்டி வீதத்தை நிர்ணயிப்பதில் பங்கு செலுத்துவதாக, அவரால் இப்போது நிரூபிக்க முடியுமானால், அவர் தமது இலக்கை இன்னும் ஓரடி நெருங்கியிருப்பார். அப்போது இந்த மூலதனத்தில் கணிசப்பகுதி வேறொரு நாட்டுக்கு மாற்றி அனுப்பப்படுவது இரு நாடுகளிலும் அதுவும் எதிரெதிர் திசைகளில் வட்டி வீதத்தை மாறச் செய்தே தீரும். இவ்விதம் இரண்டாம் நிலையில் இரு நாடுகளுக்கும் இடையிலான மாற்று வீதமும் மாறிப் போகிறது - **பி.எங்கெல்ஸ்.**

பிறகு 1847 மே 22 தேதிய எக்கானமிஸ்ட்டில் - பக்கம் 574 - வில்சன் சொல்கிறார் (அப்போது அந்த ஏட்டின் ஆசிரியர் அவரே):

'...என்றாலும் சந்தேகமே இல்லாமல், பொற்பாளம் உட்பட அனைத்து வகைச் சரக்குகளும் பெருமளவு இருப்பில் இருந்துவருவது பொதுவாகச் சரக்குகளின் விலை குறைவதற்கு மட்டுமல்லாமல், மூலதனப் பயன்பாட்டிற்கான வட்டி வீதம் குறைவதற்கும் இட்டுச் செல்வதும் தவிர்க்க முடியாதது' (1). 'அடுத்து வரும் ஈராண்டுகளுக்கு நாட்டிற்குப் பயன்படப் போதுமான சரக்கிருப்பு கையிலிருந்தால், குறிப்பிட்ட காலத்திற்கு அச்சரக்குகளை ஆளுவதற்கு தர வேண்டிய வட்டி வீதம் அந்தச் சரக்கிருப்பு நமக்கு இருமாதங்களுக்கு மட்டுமே போதுமானதாய் இருந்தால் தரவேண்டியதைக் காட்டிலும் மிகக் குறைவாகவே இருக்கும்' (2). 'பணக் கடன்கள் அனைத்துமே - அவை எவ்வடிவில் தரப்பட்டாலும் சரி - சரக்குகள் மீதான ஆளுகையை ஒருவரிடமிருந்துவேறொருவருக்கு மாற்றுவதுதானே தவிர வேறல்ல. ஆகவே சரக்குகள் மிகையாய் இருக்கும் போதெல்லாம் பணத்திற்கான வட்டி குறைவாகத்தான் இருக்கும்; சரக்குகள் தட்டுப்பாடாய் இருக்கும் போது பணத்திற்கான வட்டி உயர்வாகத்தான் இருக்கும்'(3). 'சரக்குகள் மிகைப்பட மிகைப்பட, வாங்குவோர் தொகையுடன் ஒப்பிடுகையில் விற்போர் தொகை அதிகரிக்கிறது; சரக்களவு உடனடி நுகர்வுக்கு தேவைப்படுவதைக் காட்டிலும் கூடுதலாய் இருப்பதற்கேற்ப, இன்னும் பெரிய பகுதியை வருங்காலப் பயன்பாட்டிற்காக ஒதுக்கி வைத்தாக வேண்டும். இந்நிலையில் சரக்குவைத்துள்ள ஒருவர் வருங்காலக் கொடுப்புக்கு, அதாவது கடனுக்கு தம் சரக்கை விற்க முன்வரு வதற்காகக் கோருவது, தமது சரக்கிருப்பு முழுவதும் ஒரு சில வாரங் களுக்குள் தேவைப்படும் என்று அவர் நிச்சயமாய் அறிந்திருந்தால் கோருவதைக் காட்டிலும் குறைவாகிப் போகும்' (4).

வாசகம் (1)ஐப் பொறுத்தவரை, உற்பத்தியில் சுருக்கம் ஏற்படும் போதே-உயர்நிலை உலோகத்தில் பெரும் வரத்து நிகழ முடியும் என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும்-எப்போதும் நெருக்கடியை அடுத்து வரும் காலத்தில் இப்படித்தான் நிகழ்கிறது. இதற்கு அடுத்த கட்டத்தில் உயர்நிலை உலோகமானது அதனைப் பிரதானமாக உற்பத்தி செய்யும் நாடுகளிலிருந்து வரலாம்; பொதுவாகச் சொன்னால், ஏனைய சரக்குகளின் இறக்குமதிகள் இக்காலத்தில் ஏற்றுமதிகளால் நேர் செய்யப்படுகின்றன. இவ்விரு கட்டங்களிலும் வட்டி வீதம் குறைவாய் இருப்பதோடு, மெல்ல மெல்லவே உயர்கிறது; இதற்கு என்ன காரணம்

என்று முன்பே பரிசீலித்தோம். 'அனைத்து வகைச் சரக்குகளும் பெருமளவு இருப்பில் இருப்பதை' காரணம் காட்டாமலே எந்நிலையிலும் இந்தக் குறைந்த-வட்டி வீதத்துக்கு விளக்கமளிக்க முடியும். பெரும் சரக்கிருப்புகள் எப்படித் தாக்கம் செலுத்துகின்றனவாம்? எடுத்துக்காட்டாக பருத்தியின் விலை குறைந்திருப்பது நூற்பாளர்களுக்கும் மற்றவர்களுக்கும் அதிக இலாபம் கிடைப்பதை சாத்தியமாக்குகிறது. சரி, வட்டி வீதம் குறைவாய் இருப்பது ஏன்? கடன் வாங்கிய மூலதனத்தைக் கொண்டு ஈட்டக் கூடிய இலாபம் அதிகமாய் இருப்பதல்ல காரணம் என்பது உறுதி. இப்போது நிலவி வரும் நிலைமைகளில் கடன் - மூலதனத்திற்கான வேண்டல் இந்த இலாபத்துடன் ஒப்பிடுகையில் வளருவதில்லை என்பதுதான், இது மட்டும்தான் காரணமாகும்; அதாவது கடன்-மூலதனத்தின் அசைவியக்கம் வேறு, தொழில்துறை மூலதனத்தின் அசைவியக்கம் வேறு என்பதுதான் காரணம். இதற்கு நேர்மாறானதையே, கடன்-மூலதனத்தின் அசைவியக்கம் தொழில்துறை மூலதனத்தின் அசைவியக்கத்துடன் முழுதொத்தது என்பதையே எக்கானமிஸ்ட் நிரூபிக்க விரும்புகிறது.

வாசகம் (2) ஐப் பொறுத்தவரை, முன்கூட்டியே ஈராண்டு களுக்கான இருப்புகள் என்னும் அபத்த அனுமானத்தை ஏதாவது அர்த்தமிருக்கும்படி குறைத்துச் சரிசெய்வோமானால், சந்தையில் சரக்குகள் மிகையாய் இருப்பதாகப் பொருள்படும். இதனால் விலை குறையும். ஒரு பேல் பருத்திக்குத் தர வேண்டியது குறைந்து போகும். ஆனால் ஒரு பேல் பருத்தி வாங்குவதற்கு தேவையான பணம் முன்னிலும் எளிதில் கடனாய்க் கிடைக்கும் என்று அர்த்தமில்லை. அது பணச் சந்தையின் நிலவரத்தைப் பொறுத்தது. பணம் முன்னிலும் எளிதில் கடனாய்க் கிடைக்குமானால் வர்த்தகக் கடன்-செலாவணி வங்கிக் கடன்-செலாவணியை வழக்கமான அளவுக்குப் பயன்படுத்திக் கொள்ளத் தேவையில்லாத நிலையில் இருப்பதுதான் காரணம். சந்தையில் வதியும் சரக்குகள் வாழ்வுச் சாதனங்களோ உற்பத்திச் சாதனங்களோ ஆகும். இரண்டின் விலையும் குறைந்திருப்பதால் தொழில்துறை முதலாளியின் இலாபம் அதிகரிக்கிறது. தொழில்துறை மூலதனம் மிகையாய் இருப்பதும் பணக்கடன் வசதிக்கான வேண்டலும் முழுதொத்தவையாக இருப்பதற்கு பதில் ஒன்றுக்கொன்று நேரெதி ரானவையாக இருப்பது கிடையாதென்றால் இந்தக் குறைந்த விலை எப்படி வட்டி வீதத்தைக் குறைக்கக் கூடும்? வணிகரும் தொழில்துறை முதலாளியும் ஒருவருக்கொருவர் இன்னும் எளிதில் கடன்

கொடுப்பதற்கு நிலைமைகள் தோதாய் உள்ளன. வர்த்தகக் கடன் இப்படி எளிதாகிப் போவதால் தொழில்துறை முதலாளி, வணிகர் இருவருக்குமே வங்கியில் கடன்வாங்கும் தேவை குறைந்து போகிறது; இதனால் வட்டி வீதம் குறையலாம். இந்த குறைந்த வட்டி வீதமும் உயர்நிலை உலோக வரத்தும் ஒருங்கே நிகழக் கூடும் என்றாலும் இரண்டுக்கும் தொடர்பேதும் இல்லை. இறக்குமதிப் பண்டங்கள் குறைந்த விலையில் கிடைப்பதற்கு வழி செய்யும் அதே காரணங்கள் உயர்நிலை -உலோகம் மிகையாக இறக்குமதியாவதற்கும் வழி செய்யக் கூடும். இறக்குமதிச்சந்தை மெய்யாகவே வதிநிலையில் இருக்கு மானால், இறக்குமதிப் பண்டங்களுக்கான வேண்டல் குறைந்திருப்ப தாக அர்த்தம். விலை குறைந்திருக்கும் போது இப்படி வேண்டலும் குறைந்து போவதை விளங்கிக் கொள்ள வேண்டுமானால், உள்நாட்டுத் தொழில்துறை உற்பத்தியிலான சுருக்கத்தை மட்டுமே அதற்கு காரணமாக குறிப்பிட முடியும். ஆனால் குறைந்த விலையில் இறக்குமதிகள் மிகையாக நடைபெற்று வரும் வரை இதையும் விளங்கிக் கொள்ள முடியாது. விலைக் குறைவு = வட்டி வீதக் குறைவு என்று நிரூபிப்பதற்காகவே அபத்தங்கள் இப்படி அடுக்கடுக்காய் குவிகின்றன. இரண்டும் அக்கம் பக்கமாய் ஒருங்கே நிகழலாம். ஆனால் அப்போது இந்நிகழ்வு தொழில்துறை மூலதனத்தின் அசைவியக்கமும் கடனுக்குரிய பண-மூலதனத்தின் அசைவியக்கமும் எதிரெதிர் திசைகளில் நடைபெறுவதன் பிரதிபலிப்பாகவே இருக்கும், அவை முழுதொத்தவையாக விளங்குவதன் பிரதிபலிப்பாக இருக்காது.

வாசகம் (3)ஐப் பொறுத்தவரை, இவ்வளவு விளக்கமாய் பார்த்த பிறகும் கூட சரக்குகள் மிகையாய் இருக்கும்போது ஏன் பணத்திற்கான வட்டி குறைவாய் இருக்க வேண்டும் என்பதைப் புரிந்து கொள்வது கடினம். சரக்குகள் மலிவாய் இருந்ததால், குறிப்பிட்ட அளவு வாங்குவதற்கு முன்பு £2,000 தேவைப்பட்டதற்கு பதில் இப்போது £1000 மட்டுமே தேவைப்படும் எனலாம். ஆனால் நான் £2,000ஐ முதலீடு செய்து இருமடங்கு சரக்குகள் வாங்குவதற்கு அதைப் பயன் படுத்துகிறேன், இவ்விதம் நான் அதே 'மூலதனத்தை முன்னீடு செய்து என் தொழிலை விரிவாக்குகிறேன். முன் போலவே இப்போதும் £2,000 மதிப்புள்ள சரக்குகள் வாங்குகிறேன். ஆக, சரக்கு - விலைகள் குறையும் போது சரக்குச் சந்தையின் மீதான எனது வேண்டல் உயர்ந்தாலும் கூட பணச்சந்தையின் மீதான எனது வேண்டல் மாறாதிருக்கிறது. ஆனால் சரக்குகளுக்கான இந்த வேண்டல் குறையுமானால், அதாவது சரக்கு- விலைகள் குறையும்போதே உற்பத்தி பெருகாமற் போனால் - இது

எக்கானமிஸ்ட் வகுத்துரைத்த விதிகள் யாவற்றுக்கும் முரணாய் இருக்கும் - இலாபம் அதிகரித்தாலும் கடனுக்குரிய பண-மூலதனத்திற் கான வேண்டல் குறையும். ஆனால் இவ்விதம் அதிகரித்துச் செல்லும் இலாபம் கடன்-மூலதனத்திற்கு வேண்டல் எழச் செய்யும். நிற்க, சரக்கு-விலை குறைவாய் இருக்கும் நிலை மூன்று காரணங்களால் வரலாம், முதலாவதாக, போதாமலிருப்பதால் வரலாம். அப்போது வட்டி வீதம் குறைவாய் இருப்பது பொருளுற்பத்தி - முடங்கிப் போவதால்தானே தவிர, சரக்குகள் மலிவாய்க் கிடைப்பதால் அல்ல. சரக்குகள் மலிவாய்க் கிடைப்பது இந்த முடக்க நிலையின் வெளிப்பாடே தவிர வேறல்ல. இரண்டாவதாக வேண்டலுடன் ஒப்பிடுகையில் வழங்கல் மிகையாய் இருப்பதால் இந்நிலை வரலாம். இது சந்தையில் சரக்குகள் வழிந்து விடுவதன் விளைவாக இருக்கலாம்; இந்த மிகை வழங்கல் நெருக்கடிக்கு இட்டுச் செல்கிறது; நெருக்கடியின் போதே இதுவும் வட்டி வீத உயர்வும் ஒருங்கே நிகழலாம். மூன்றாவதாக சரக்குகளின் மதிப்பு குறைந்து விட்டதால் அதாவது அதே வேண்டலை இன்னும் குறைந்த விலையில் நிற்வு செய்ய முடிவதால் இந்நிலை வரலாம். அப்போது வட்டி வீதம் ஏன் குறைய வேண்டும்? இலாபம் அதிகரிப்பதாலா? அதே திறனுடை-மூலதனம் அல்லது சரக்கு-மூலதனத்தை பெறுவதற்கு இன்னுங் குறைந்த பண-மூலதனமே தேவைப்படுகிறது, இதற்கு காரணமானால், இலாபமும் வட்டியும் ஒன்றுக்கொன்று எதிர் விகிதத்தில் இருப்பதைத்தான் இது நிரூபிக்கிறது. எப்படிப்பார்த்தாலும் எக்கானமிஸ்ட்டின் பொதுக் கருத்துரை தவறானது. சரக்குகளின் பண-விலை குறைவாய் இருப்பதும் வட்டி வீதம் குறைவாய் இருப்பதும் சேர்ந்து நிகழ வேண்டிய கட்டாயமில்லை. அப்படி இருக்குமானால், உற்பத்திப் பண்டங்களின் பண - விலைகள் மிகக் குறைவாய் இருக்கும் மிக வறிய நாடுகளில்தான் வட்டி வீதமும் மிகக் குறைவாய் இருக்கும், வேளாண் விளைபொருட்களின் பண - விலைகள் மிக உயர்வாய் இருக்கும் மிகப் பணக்கார நாடுகளில் வட்டி வீதமும் மிக உயர்வாய் இருக்கும். பொதுவாகச் சொன்னால், பணத்தின் மதிப்பு குறையும் போது, இது வட்டி வீதத்தில் எவ்விதத் தாக்கமும் செலுத்துவதில்லை என்பதை எக்கானமிஸ்ட் ஒப்புக் கொள்கிறது. £100 முன் போலவே இப்போதும் £105 தருகிறது; £100இன் மதிப்பு குறைந்தால், வட்டித் தொகையாகிய £5இன் மதிப்பும் குறைகிறது. அசல் தொகையின் மதிப்பேற்றமோ மதிப்பிறக்கமோ இந்த விகித உறவை பாதிப்பதில்லை. மதிப்பின் கோணத்திலிருந்து பார்க்குமிடத்து குறிப்பிட்ட சரக்களவு குறிப்பிட்ட

பணத் தொகைக்குச் சமம். மதிப்பு அதிகரித்தால் அது கூடுதலான பணத்தொகைக்குச் சமம்; மதிப்பு குறைந்தால் குறைந்த பணத் தொகைக்குச் சமம். மதிப்பு £2,000 என்றால், 5% £100; £1,000 என்றால், 5% = 50. ஆனால் இது - வட்டி வீதத்தை எவ்விதத்திலும் பாதிப்பதில்லை. இவை யாவற்றிலும் அறிவுக்குகந்ததாய் இருக்கும் ஒரே ஒரு சங்கதி குறிப்பிட்ட சரக்களவை விற்பதற்கு £1,000 மட்டும் தேவைப்படும் போது அவசியமாவதை விட £2,000 தேவைப்படும் போது கூடுதலான பணக் கடன் வசதி அவசியமாகிறது என்பதுதான். ஆனால் இலாபமும் வட்டியும் இங்கு ஒன்றுக்கொன்று எதிர் விகிதத்தில் இருப்பதுதான் இதிலிருந்து தெரிய வருகிறது. எப்படியென்றால் மாறா -மூலதனம், மாறும்-மூலதனம் ஆகியவற்றின் கூறுகள் மலிவாகும் போது இலாபம் அதிகரிக்க வட்டி குறைகிறது. ஆயின் இதற்கு நேர்மாறாகவும் நிகழலாம். பலசமயம் அப்படி நிகழ்வதும் உண்டு. எடுத்துக்காட்டாக நூலுக்கும் துணிக்கும் வேண்டலே இல்லாமற் போவதால் பருத்தி மலிவாய் இருக்கலாம்; பருத்தித் தொழிலில் கூடுதலான இலாபம் கிடைப்பது பருத்திக்கு கூடுதலான வேண்டல் எழச் செய்வதால் பருத்தியின் விலை (ஒப்பளவில் அதிகமாய் இருக்கலாம் மறுபுறம் பருத்தியின் விலை) குறைவாய் இருப்பதாலேயே தொழிலதிபர்களின் இலாபம் கூடுதலாய் இருக்கலாம். ஹபார்டின் அட்டவணையிலிருந்து நிரூபணமாவது இதுதான்: வட்டி வீதத்தின் அசைவியக்கமும் சரக்கு - விலைகளின் அசைவியக்கமும் அறவே சுயேச்சையான போக்குகளை வெளிப்படுத்துகின்றன; அதே போது வட்டி வீதத்தின் அசைவியக்கமும் உலோகச்சேம இருப்பு, மாற்று வீதம் ஆகியவற்றின் அசைவியக்கமும் ஒட்டி உறவாடி நெருங்கிச் செல்கின்றன.

---

எக்கானமிஸ்ட் சொல்கிறது: 'ஆக சரக்குகள் மிகையாய் இருக்கும் போதெல்லாம், பணத்திற்கான வட்டி குறைவாய் இருந்தாக வேண்டும்.' நெருக்கடிகளின் போது நேர்மாறானதே நடப்பாகும். சரக்குகள் மிகையாய் உள்ளன, அவற்றைப் பணமாக மாற்ற முடியவில்லை. ஆகவே வட்டி வீதம் உயர்வாய் இருக்கிறது; சகடத்தின் வேறொரு கட்டத்தில், சரக்குகளுக்கான வேண்டல் அதிகமாய் உள்ளது, ஆகவே மீள்வரவுகள் துரிதமாய் நடைபெறுகின்றன; ஆனால் அதே போது சரக்கு-விலைகள் உயர்கின்றன. இந்தத் துரித மீள் வரவுகளினால் வட்டிவீதம் குறைவாய் உள்ளது. 'அவை (சரக்குகள்) தட்டுப்பாடாய்

இருக்கும் போது பணத்திற்கான வட்டி உயர்வாய் இருந்தாக வேண்டும்.' இங்கும் நெருக்கடியை அடுத்து வரும் தளர்வுக் காலத்தில் இதற்கும் நேர்மாறானதே நடப்பாகும். சரக்குகள் தட்டுப்பாடாய் இருப்பது அறுதிக் கணக்கில்தானே தவிர, வேண்டலுக்கான ஒப்பீட்டில் அல்ல; வட்டி வீதம் குறைவாய் உள்ளது.

வாசகம் (4)ஐப் பொறுத்தவரை சரக்குகளின் உடைமையாளர் ஒருவர் சந்தை வதிநிலையில் இருக்கும் போதே எப்படியாவது அவற்றை விற்க முடியுமானால், தமது சரக்கிருப்பு துரிதமாய் தீர்ந்து போகக் கூடிய வாய்ப்பிருக்கும்போது விற்பதைக் காட்டிலும் குறைந்த விலைக்கே அவற்றைத் தள்ளிவிடுவார் என்பது தெள்ளத் தெளிவாகவே தெரிகிறது. ஆனால் இதற்காக வட்டி வீதம் ஏன் குறைய வேண்டும் என்பதுதான் அவ்வளவு தெளிவாய் தெரியவில்லை.

இறக்குமதியான சரக்குகளால் சந்தையில் வதிநிலை ஏற்படுமானால், இச்சரக்குகளின் உடைமையாளர்கள் தத்தமது சரக்குகளை சந்தையில் குறைந்த விலைக்குத் தள்ளிவிடுவதைத் தவிர்ப்பதற்காக கடன்-மூலதனத்தை நாடிச் செல்வதுகாரணமாய் அம் மூலதனத்திற்கான வேண்டல் உயர்ந்து, அதனால் வட்டி வீதம் உயரலாம். வர்த்தகக் கடன்-செலாவணி எளிதிற்கிடைப்பது காரணமாய் வங்கிக் கடன் -செலாவணிக்கான வேண்டல் ஒப்பளவில் குறைவாகவே இருப்பதால் வட்டி வீதம் குறையலாம்.

1847இல் வட்டிவீதம் உயர்த்தப்பட்டதாலும் பணச்சந்தையை நெருக்கும்படியான ஏனைய நிலைமைகளாலும் மாற்று வீதங்கள் மீது ஏற்பட்ட துரித விளைவை எக்கானமிஸ்ட் குறிப்பிடுகிறது. ஆனால் மாற்று வீதங்களில் மாற்றமேற்பட்ட போதிலும் தங்க வெளியோட்டம் ஏப்ரல் இறுதிவரை நீடித்தது. என்பதை மறந்துவிடலாகாது; இதிலொரு திருப்புமுனை மே தொடக்கத்தில்தான் ஏற்பட்டது.

1847 ஜனவரி முதல் நாள் இங்கிலாந்து வங்கியின் உலோகச் சேம இருப்பு £15,066,691 ஆக இருந்தது; வட்டி வீதம் 3½%; மூன்று மாத கால மாற்று வீதங்கள் பாரிசிற்கு 25.75; ஹாம்பார்கிற்கு 13.10; ஆம்ஸ்டர் டாமிற்கு 12.3¼. மார்ச் ஐந்தாம் நாள் நிலவரப்படி உலோகச் சேம இருப்பு £11,595,535 ஆகக் குறைந்து விட்டது; உண்டியற் கழிவு 4%ஆக உயர்ந்து விட்டது; மாற்று வீதமும் குறைந்துவிட்டது: பாரிசிற்கு 25.67 ½ ஹாம்பர்க்கிற்கு 13.9 ¼, ஆம்ஸ்டர்டாமிற்கு 12.2 ½. தங்க வெளி யோட்டம் தொடர்ந்தது. பின் வரும் அட்டவணையைப் பாருங்கள்.

| 1847 | இங்கிலாந்து வங்கியின் பொற்பாளச் சேம இருப்பு £ | பணச் சந்தை | (உயர்ந்தபட்ச மூன்றுமாத) மாற்று வீதங்கள் | | |
|---|---|---|---|---|---|
| | | | பாரிஸ் | ஹாம்பர்க் | ஆம் ஸ்டர் டாம் |
| *மார்ச் 20* | *11,231,630* | *வங்கிக் கழிவு 4%* | *25.67 ½* | *13.9 ¾* | *12.2 ½* |
| *ஏப்ரல் 3* | *10,246,410* | *வங்கிக் கழிவு 5%* | *25.80* | *13.10* | *12.3 ½* |
| *ஏப்ரல் 10* | *9,867,053* | *பணத்தட்டுப்பாடு* | *25.90* | *13.10 ½* | *12.4 ½* |
| *ஏப்ரல் 17* | *9,329,841* | *வங்கிக் கழிவு 5.5%* | *26.02 ½* | *13.10 ¾* | 12.5 ½ |
| *ஏப்ரல் 24* | *9,213,890* | *நெருக்குதல்* | *26.05* | *13.12* | *12.6* |
| *மே 1* | *9,337,716* | *அதிகரித்துச் செல்லும் நெருக்குதல்* | *26.15* | *13.12 ¾* | *12.6 ½* |
| *மே 8* | *9,588,759* | *உயர்ந்தபட்ச நெருக்குதல்* | *26.27 ½* | *13.15 ½* | *12.7 ¾* |

*1847இல் இங்கிலாந்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட உயர்நிலை உலோகத்தின் மொத்த மதிப்பு £8,602,597*

| | |
|---|---|
| *இதில் அமெரிக்க ஐக்கிய நாட்டுக்கு ..................* | *£3,226,411* |
| *பிரான்சுக்கு ..............................* | *£2,479,892* |
| *ஹான்ஸ் நகரங்களுக்கு ..................* | *£ 958,781* |
| *ஹாலந்துக்கு ..............................* | *£ 247,743* |

*மார்ச் இறுதியில் மாற்று வீதங்களில் மாற்றம் ஏற்பட்ட போதிலும், தங்க வெளியோட்டம் முழுதாய் மேலுமொரு மாதகாலம் நீடித்தது. அநேகமாய் அது அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கே சென்றிருக்கும்.*

*(1847 ஆகஸ்டு 2 ஆம் தேதிய எக்கானமிஸ்ட் சொல்கிறது, பக்கம் 954:) 'ஆக, வட்டி வீதத்திலான உயர்வு அதையொட்டி வந்த நெருக்குதல் ஆகியவை பாதகமான மாற்று வீதத்தை சரி செய்தும், பொற்பாள பேரலையை மறுபடியும் இந்த நாட்டின் பக்கம் திருப்பி விட்டும் உண்டாக்கிய விளைவு எவ்வளவு துரிதமானதாகவும் எடுப்பானதாகவும் இருந்ததென்று பார்க்கிறோம். கிஞ்சிற்றும் வர்த்தக நிலுவையைச் சாராமலே இவ்விளைவு உண்டாயிற்று வட்டி வீதம் உயர்ந்ததால் கடன்-பத்திரங்களின் விலை குறைந்தது. அயல்நாட்டுப் பத்திரங்களின் விலை மட்டுமல்லாமல் ஆங்கிலேயப் பத்திரங்களின் விலையும் குறைந்தது, அயல்நாட்டுக் கணக்கில் பெருமளவில் கொள்முதல்கள் செய்வதற்கு இந்த வட்டி வீத உயர்வு தூண்டுதலாயிற்று. அதேபோது*

மறுபக்கத்தில், உயர்ந்த வட்டி வீதத்தாலும் பணம் பெறுவது கடினமாய் இருந்தாலும், அந்த உண்டியல்களின் தொகை அதிகரித்தபோதே அவற்றுக்கான வேண்டல் குறைந்து போயிற்று.....இதே காரணத்தால் இறக்குமதிகளுக்கான சரக்காணைகள் ரத்தாயின, அயல்நாடுகளில் முதலீடாகியிருந்த ஆங்கிலேய நிதியங்கள் ஈடேற்றம் செய்யப்பட்டு தாயகத்தில் ஈடுபடுத்தப்படுவதற்காகத் திருப்பி கொண்டுவரப்பட்டன. எடுத்துக்காட்டாக, மே 10 ஆம் தேதிய ரியோ டி ஜானீரோ பிரைஸ் கரண்ட் ஏட்டில் பின்வரும் செய்தி காணப்படுகிறது: இங்கிலாந்து மீதான மாற்றுவீதம் இன்னுங்கூட சரிவடைந்திருக்கிறது. (பிரேசில் நாட்டு) அரசுப்பங்குகளை ஏராளமாய் விற்று வரும் வரவுகளை ஆங்கிலேயக் கணக்கில் சேர்ப்பிப்பதற்கு சந்தை மீது ஏற்பட்டுள்ள நெருக்குதலே இதற்கு முக்கிய காரணமாகும். இங்கு வட்டி வீதம் மிகக் குறைவாய் இருந்த போது இந்நாட்டுக்குச் சொந்தமான மூலதனம் அயல்நாடுகளில் பொதுக் கடன் பத்திரங்களிலும் ஏனைய இவ்வகைப் பத்திரங்களிலும் முதலீடு செய்யப்பட்டதல்லவா, வட்டி உயர்ந்தபோது அம் மூலதனம் இவ்வழியில் திருப்பிக் கொண்டு வரப்பட்டது.'

## இங்கிலாந்தின் வர்த்தக நிலுவை

இந்தியாவை மட்டும் எடுத்துக் கொண்டால் 'நல்லாட்சிக்கு' கப்பமாகவும் பிரித்தானிய மூலதனத்திற்கான வட்டியாகவும் ஆதாயப் பங்கீடுகளாகவும் இன்ன பிற வகையிலும் அந்நாடு £5 மிலியன் செலுத்த வேண்டியிருக்கிறது-அலுவலர்கள் தமது சம்பளத்திலிருந்து மிச்சம் பிடித்து சேமிப்பது என்ற முறையிலும், ஆங்கிலேய வணிகர்கள் தமது இலாபத்தில் ஒரு பகுதி என்ற முறையிலும் தாய்நாடாம் இங்கிலாந்தில் முதலீடு செய்வதற்காக ஆண்டுதோறும் அனுப்பி வைக்கும் தொகைகளை நாம் இந்தக் கணக்கில் சேர்க்கவில்லை. ஒவ்வொரு பிரித்தானிய காலனியும் இதே காரணங்களை முன்னிட்டு ஓயாமல் இதே போல் பெருந்தொகைகள் அனுப்ப வேண்டியிருக்கிறது. ஆஸ்திரேலியாவிலும் மேற்கிந்தியத் தீவுகளிலும் கனடாவிலும் பெரும்பாலான வங்கிகள் பிரித்தானிய மூலதனம் கொண்டு நிறுவப்பட்டவை, இவற்றின் ஆதாயப் பங்கீடுகள் இங்கிலாந்தில் தரப்படுகின்றன. இங்கிலாந்தும் அயல்நாட்டு அரசுகள் - ஐரோப்பிய, வட அமெரிக்க, தென் அமெரிக்க அரசுகள் - வெளியிட்ட கடன் பத்திரங்களைக் கையில் வைத்துள்ளது, இவை மீது அதற்கு வட்டி கிடைக்கிறது. இது போக அயல்நாட்டு ரயில் போக்குவரத்து நிறுமங்கள், நீர்வழிகள், சுரங்கங்கள் முதலானவற்றிலும் அது பங்கு

பெற்றுள்ளது, உரிய ஆதாயப் பங்கிடும் பெறுகிறது. இந்த எல்லா வகை அனுப்பீடுகளும் கிட்டத்தட்ட பிரத்தியேகமாகவே ஆங்கிலேய ஏற்றுமதி அளவுக்கு மிகையாய் இருக்கும் உற்பத்திப் பொருட்களின் உருவில் நடைபெறுகின்றன, மறுபுறம், இங்கிலாந்திலிருந்து அயல்நாட்டிலுள்ள ஆங்கிலேயக் கடன்-பத்திர உடைமையாளர்களுக்கும் அயல்நாட்டில் தங்கியுள்ள ஆங்கிலேயர்களின் நுகர்வுக்காகவும் அனுப்பப்படுவது ஒப்புநோக்கில் அற்பத் தொகையே ஆகும்.

இது வர்த்தக நிலுவையையும் மாற்று வீதங்களையும் பாதிக்கிற அளவில் 'குறிப்பிட்ட எக்கட்டத்திலும் காலம் தொடர்பான பிரச்சினையே' ஆகும். 'நடைமுறை குறித்து பேசுவதனால் ... இங்கிலாந்து அதன் ஏற்றுமதிகள் மீது நெடுங்காலக் கடன்கள் தருகிறது; இறக்குமதிகளுக்கோ ரொக்கப் பணம் செலுத்தப்படுகிறது. குறிப்பிட்ட கட்டங்களில் நடைமுறையிலான இந்த வேறுபாடு மாற்று வீதங்கள் மீது கணிச விளைவை ஏற்படுத்துகிறது. நமது ஏற்றுமதிகள் மிகக் கணிசமாய் அதிகரித்து வரும் போது, உதாரணமாய் 1850இல் பிரித்தானிய மூலதன முதலீடு ஓயாமல் பெருகிச் சென்ற வண்ணம் இருந்தாக வேண்டும்; ...இவ்வழியில் 1849இல் ஏற்றுமதி செய்யப்பட்ட பண்டங்களுக்கு 1850இல் பணம் அனுப்பி வைக்கப்படலாம். ஆனால் 1850ஆம் வருட ஏற்றுமதிகள் 1849ஆம் வருட ஏற்றுமதிகளை 6 மிலியனுக்கு அதிகமாய் விஞ்சி இருக்குமானால், அந்த ஆண்டில் திரும்பி வருவதைக் காட்டிலும் இந்த அளவுக்கு கூடுதலரான பணம் அயல் நாட்டுக்கு அனுப்பி வைக்கப்படுவதுதான் நடைமுறை விளைவாய் இருந்தாக வேண்டும். இது மாற்று வீதங்களின் மீதும் வட்டி வீதத்தின் மீதும் விளைவுகளை உண்டாக்குகிறது. மாறாக, ஒரு வர்த்தக நெருக்கடிக்குப் பிறகு நமது வாணிபம் மந்தமுற்று நமது ஏற்றுமதிகள் பெரிதும் குறைந்திருக்கும் போது, கடந்து போன ஆண்டுகளில் நடைபெற்ற இன்னுமதிகமாய் செய்யப்பட்ட ஏற்றுமதிகளுக்காக வர வேண்டிய அனுப்பீடுகள் நமது இறக்குமதிகளின் மதிப்பை பெரிதும் விஞ்சுகின்றன. இதனால் மாற்றுவீதங்கள் நமக்குச் சாதகமாகி உள்நாட்டில் மூலதனம் துரிதமாய்த் திரண்டு, வட்டி வீதம் குறையலாகிறது.' (எக்கானமிஸ்ட்...1851 ஜனவரி 11 பக்கம் 30).

அயல்நாட்டு மாற்று வீதங்கள் பின்வரும் காரணங்களால் மாறலாம்.

(1) உடனடிக் கொடுப்பு நிலுவையின் பயனாய் அவை மாறலாம் இந்தக் கொடுப்பு நிலுவைக்கு காரணம் எதுவானாலும் சரி முழுக்க

முழுக்க வர்த்தகம் தொடர்பான காரணமானாலும் சரி, அயல்நாடுகளுக்கு ரொக்கப்பணம் கொடுபடுவதற்கு வழிசெய்கிற அளவில் நாடுகடந்த மூலதன முதலீடு, அரசின் போர்ச் செலவுகள் போன்றவை தொடர்பான காரணமானாலும் சரி.

(2) குறிப்பிட்ட ஒரு நாட்டில் பணம் - உலோகப் பணம் ஆனாலும் காகிதப் பணம் ஆனாலும் - மதிப்பிறக்கத்துக்கு ஆளாவதன் விளைவாகவும் அயல்நாட்டு மாற்று வீதங்கள் மாறலாம். இந்த மாற்றம் முழுக்க முழுக்க பெயரளவிலானதே. £1 ஆனது முன்னர் குறித்ததில் பாதியளவு பணத்தை மட்டும் இப்போது குறிக்குமானால், இயல்பாகவே அது 25 பிராங்குகளாக கணக்கிடப்படுவதற்குப் பதில் 12.5 பிராங்குகளாக கணக்கிடப்படும்.

(3) 'பணமாக வெள்ளியைப் பயன்படுத்தும் நாட்டுக்கும் தங்கத்தைப் பயன்படுத்தும் நாட்டுக்கும் இடையிலான மாற்று வீதம் இந்த இரு உலோகங்களின் மதிப்பில் ஏற்படும் ஒப்பளவிலான ஏற்ற இறக்கங்களைப் பொறுத்ததாகும். ஏனென்றால் இந்த ஏற்ற இறக்கங்கள் இவ்விரு உலோகங்களுக்கும் இடையிலான மாற்றுமதிப்பின் மாற்றத்தைத் தவிர்க்க முடியாதது. 1850இல் நிலவிய மாற்று வீதங்கள் இதற்குச் சான்றாகும்; இங்கிலாந்தின் ஏற்றுமதி பிரமாதமாய் உயர்ந்த போதிலும் மாற்று வீதங்கள் அந்நாட்டுக்கு பாதகமாய் இருந்தன. என்றாலும் தங்க வெளியோட்டம் ஏதும் நடைபெறவில்லை. தங்கத்துக்கு மாறாக வெள்ளியின் மதிப்பில் அப்போதைக்கு ஏற்பட்ட உயர்வுதான் காரணம்.. (பார்க்கவும்: எக்கானமிஸ்ட், 1850 நவம்பர் 30, பக்கம் 1319 - 1320).

மாற்று வீதத்தின்படி £1இன் மாற்று மதிப்பு இதுதான்: பாரிசில் 25 பிராங்கு 20 சென்ட், ஹாம்பர்க்கில் 13 பாங்கோ மார்க் 10.5 ஷில்லிங், ஆம்ஸ்டர்டாமில் 11புளோரின் 97 செண்ட், பாரிஸ் மாற்று வீதம் 25.20 பிராங்குக்கு மேல் உயர்ந்து செல்லச் செல்ல, பிரான்சிடம் கடன்பட்ட ஆங்கிலேயருக்கு அல்லது பிரெஞ்சு சரக்குகளை வாங்குகிறவருக்கு மேன்மேலும் சாதகமாகிறது. இரு நேர்வுகளிலுமே தேவைப்படும் £ ஸ்டெர்லிங் குறைந்து செல்கிறது. உயர்நிலை உலோகம் எளிதிற் கிடைக்காத தொலைதூர நாடுகளில் மாற்று உண்டியல்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டு, இங்கிலாந்துக்கான அனுப்பீடுகளுக்கு அவை போதவில்லை, என்றநிலை ஏற்படும்போது, வழக்கமாக இங்கிலாந்துக்குக் கப்பலேறும் உற்பத்திப் பண்டங்களின் விலைகள் உயர்ந்து போவதே இதன் இயல்பான விளைவு; ஏனென்றால் மாற்று

உண்டியல்களுக்கு பதில் இந்தப் பண்டங்களை இங்கிலாந்துக்கு அனுப்பும் நோக்கில், இவற்றுக்கான வேண்டல் இப்போது அதிகரிக்கிறது; இந்தியாவில் அடிக்கடி இந்நிலை ஏற்படக் காணலாம்.

இங்கிலாந்தில் பணம் மிகப் பெருமளவில் உபரியாகவும் வட்டி வீதம் குறைவாகவும் கடன்-பத்திரங்களின் விலை உயர்வாகவும் இருக்குமானால், மாற்று வீதம் அந்நாட்டிற்கு பாதகமாவதோடு தங்க வெளியோட்டமும் கூட நிகழலாம்.

1848ஆம் ஆண்டில் இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்குப் பெருமளவில் வெள்ளி வரப்பெற்றது; 1847ஆம் வருட நெருக்கடியின் விளைவாகவும், இந்தியாவுடனான வர்த்தகத்தில் பொதுவாக கடன் - செலாவணி இல்லாமற் போனதன் விளைவாகவும் நல்ல உண்டியல்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதும் சாதாரண உண்டியல்களை ஏற்பதில் தயக்கம் காணப்பட்டதுமே இதற்கு காரணம். இந்த வெள்ளி அனைத்தும் வந்ததும் வராததுமாய் கண்டத்துக்கு நடையைக் கட்டின; அங்கே புரட்சியானது எங்கு பார்த்தாலும் பதுக்கலுக்கு வழி செய்திருந்தது. இதே வெள்ளியில் பெரும்பகுதி 1850இல் இந்தியாவிற்கு திரும்பியது; ஏனென்றால் மாற்று வீதம் காரணமாய் இப்போது இதில் இலாபம் இருந்தது.

---

பணப் பொருளாதாரம் சாராம்சத்தில் கத்தோலிக்க ஏற்பாடும்-கடன் -செலாவணிப் பொருளாதாரம் சாராம்சத்தில் புரட்டெஸ்டன்ட் ஏற்பாடும் ஆகும். 'ஸ்காட்லாந்தியருக்கு தங்கம் பிடிக்காது.' சரக்குகள் காகிதப் பணமாய் நிலவுவது முழுக்க முழுக்க சமூக நிலவலே ஆகும். நம்பிக்கைதான் விமோசனம் தரும் பணமதிப்பை சரக்குகளின் அந்தராத்மாவாக ஏற்றுக் கொள்ளும் நம்பிக்கை, பொருளுற்பத்தி முறையிலும் முன் கூட்டியே விதிக்கப்பட்ட அதன் ஒழுங்கமைதியிலும் வைக்கிற நம்பிக்கை தனிப்பட்ட உற்பத்திச் செயலிகளை தற்பெருக்க மடையும் மூலதனத்தின் வெறும் ஆளுருவங்களாக கருதிக் கொள்ளும் நம்பிக்கை. ஆனால் எப்படி புராட்டெஸ்டண்ட் நெறியானது கத்தோலிக்க நெறியில் அடித்தளங்களிலிருந்து விடுபடவில்லையோ, அதே போல் கடன்-செலாவணிப் பொருளாதாரமும் பணப் பொருளாதார அடிப்படையிலிருந்து விடுபடவில்லை.

## அத்தியாயம் XXXVI

## முதலாளித்துவத்துக்கு முற்பட்ட உறவுகள்

வட்டி-மூலதனமும் - அதாவது புராதன வடிவில் கடுவட்டி மூலதனம் எனப்படுவதும் - இரட்டைப் பிறப்பாக அதனுடன் சேர்ந்து வந்த வணிக-மூலதனமும் பண்டைக்கால மூலதன வடிவங்களாகும். இவை முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறைக்கு நெடுங்காலம் முற்பட்டவை, சமுதாயத்தின் மிகப் பலவாறான பொருளாதார அமைப்புகளிலும் காணக்கிடைக்கின்றன.

கடுவட்டி-மூலதனம் என்ற ஒன்று இருப்பதற்கு வேண்டியதெல்லாம் உற்பத்திப் பொருட்களில் ஒரு பகுதியாவது சரக்குகளாக மாற்றப்பட வேண்டும் என்பதும், சரக்கு வர்த்தகத்துடன் கூடவே பணம் அதற்குரிய பல்வேறு பணிகளிலும் வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்பதுதான்.

கடுவட்டி-மூலதனத்தின் வளர்ச்சி வணிக-மூலதனத்தின் வளர்ச்சியோடு குறிப்பாக தனவணிக-மூலதனத்தின் வளர்ச்சியோடு பின்னிப் பிணைந்ததாகும். புராதன ரோமில் குடியரசின் கடைசி ஆண்டுகள் முதலாய், பட்டறைத் தொழில் புராதனகால உலகின் சராசரி வளர்ச்சி நிலைக்கு வெகுவாய் தாழ்ந்திருந்த போதிலும், வணிக-மூலதனமும் தனவணிக-மூலதனமும் கடுவட்டி-மூலதனமும் புராதன வடிவிற்குட்பட்டு மிக உயர்ந்த நிலைக்கு வளர்ச்சி பெற்றன.

பணத்துடன் கூடவே தவிர்க்க முடியாதவாறு பணச் சேர்ப்பின் உருவாக்கமும் தலையெடுப்பதாகப் பார்த்தோம். (முதல் பாகம்) ஆனால் பணஞ் சேர்த்தலைத் தொழிலாய்க் கொண்டவர் வட்டிக்குக் கடன்கொடுப்பவராய் மாறும் வரை முக்கியத்துவம் பெறுவதில்லை.

வணிகர் கடனாய்ப் பணம் வாங்குவது அதைக் கொண்டு இலாபம் ஈட்டுவதற்காகவே, அதை மூலதனமாக பயன்படுத்துவதற்காகவே, அதாவது அதைச் செலவிடுவதற்காகவே, இதனால் முன்னாளைய சமூக வடிவங்களில் வட்டிக்காரர் வணிகரோடு கொண்டுள்ள உறவும், நவீனகால முதலாளியோடு கொண்டுள்ள உறவும் ஒன்றுதான். இந்தப் பிரத்தியேக உறவினை கத்தோலிக்க பல்கலைக்கழகங்களும்

உய்த்துணர்ந்தன. 'அல்கலா, சலமன்கா, இங்கோல்ஸ்டாட், பிரிஸ்காவிலுள்ள பிரீபர்க், மெயென்ஸ், கலோன், ட்ரையர் ஆகிய பல்கலைக்கழகங்கள், ஒன்றன் பின் ஒன்றாய், வர்த்தகக் கடன்களுக்கு வட்டி வாங்குவதன் சட்டபூர்வத் தன்மையை அங்கீகரித்தன. இந்த அங்கீகாரங்களில் முதல் ஐந்தும் லயான்ஸ் நகரத்தின் தூதாகப் பழஞ்சுவடியகத்தின் பத்திரப்படுத்தி வைக்கப்பட்டதோடு, லயான்சைச் சேர்ந்த புரூய்செட்-போந்தஸால் Traite de l'usure et des intérêts, என்பதற்கான பிற்சேர்க்கையில் பிரசுரிக்கவும்பட்டன.' - (ம.ஒழியே, Le crédit public, etc., பாரிஸ், 1842 பக்கம் 206.) அடிமைப் பொருளாதாரம் (தந்தைவழிச் சமுதாய வகைப்பட்டதல்ல, கிரேக்க-ரோமானிய சகாப்தத்தின் பிற்காலக் கட்டங்களுக்குரியது) செல்வம் திரட்டும் வழிமுறையாக இருந்து வருவதும், எனவே பணமானது அடிமைகளையும் நிலத்தையும் இன்ன பிறவற்றையும் விலைக்கு வாங்கிப் பிறர் உழைப்பை தனதாக்கும் சாதனமாக பயன்பட்டு வருவதுமான எல்லாச் சமூக வடிவங்களிலும், பணத்தை இவ்வழியில் முதலீடு செய்ய முடிவதால்தான் அது மூலதனம் என்ற முறையில் விரிந்து பெருக முடிகிறது, அதாவது வட்டி பெற்றுத்தர முடிகிறது.

ஆனால் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறைக்கு முற்பட்ட காலங்களில் கடுவட்டி மூலதனம் தனிச்சிறப்பான இரு வடிவங்களை மேற்கொள்கிறது. வேண்டுமென்றேதான் தனிச் சிறப்பான வடிவங்கள் என்கிறேன். இதே வடிவங்கள் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் அடிப்படையிலும் கூட நிலவக் காணலாம் என்றாலும், வெறும் கீழ்பட்ட வடிவங்களாகத்தான் நிலவுகின்றன. அவை முன்போல் வட்டி-மூலதனத்தின் தன்மையை நிர்ணயிக்கும் வடிவங்களாக இருப்பதில்லை. இவைதான் அந்த இருவடிவங்கள்: முதலாவதாக, மேல்தட்டு வர்க்கங்களைச் சேர்ந்த ஊதாரிகளுக்கு, முக்கியமாய் நிலக்கிழார்களுக்குப் பணம் கொடுக்கும் கடுவட்டிக் கடன்; இரண்டாவது, தம் உழைப்புக்கு வேண்டியவற்றை தாமே வைத்துள்ள சிறு உற்பத்தியாளர்களுக்கு பணம் கொடுக்கும் கடுவட்டிக் கடன்-இவ்வகையில் கைவினைஞரும் உட்படுவார் என்றாலும், விவசாயிதான் முக்கிய இடம் பெறுகிறார்.-ஏனென்றால் முதலாளித்துவத்திற்கு முற்பட்ட நிலைமைகள் சுயேச்சையான தனிபட்ட சிறுஉற்பத்தியாளர்களுக்கு இடமளிக்கிறவையாய் இருக்கும் வரை, விவசாயி வர்க்கம் அவர்களில் ஆகப் பெரும்பான்மையாய் அமைவது திண்ணம்.

பணக்கார நிலவுடைமையாளர்கள் கடுவட்டியால் நாசமாவதும் சிறு உற்பத்தியாளர்கள் வறுமைப்படுவதும் ஆகிய இந்த இரண்டுமே பெரும் பணமூலதனத் தொகைகள் உருவாவதற்கும் ஒன்று குவிவதற்கும் வழி செய்கின்றன. ஆனால் இந்தப் போக்கு நவீன கால ஐரோப்பாவில் செய்தது போல் பழைய பொருளுற்பத்தி முறையை எந்த அளவுக்கு ஒழித்துக் கட்டுகிறது என்பதும், அதனிடத்தில் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையை ஏற்றியமர்த்துகிறதா என்பதும் முழுக்க முழுக்க வரலாற்று வளர்ச்சிக் கட்டத்தையும், அவை வகை செய்திடும் நிலைமைகளையும் பொறுத்ததாகும்.

வட்டி-மூலதனத்தின் தனிச்சிறப்பான வடிவம் என்ற முறையில் கடுவட்டி மூலதனமானது சிறுவீதப் பொருளுற்பத்தியில் -தமக்காக தாமே உழைக்கிற விவசாயிகள், சிறு கைவினை ஆண்டைகள் ஆகியோரின் - முதன்மை நிலையைக் குறிப்பதாகும். உழைப்புச் சாதனங்களும் உழைப்பின் உற்பத்திப் பொருளும் மூலதனமாக உருவெடுத்து தொழிலாளியை எதிர்நோக்கும் போது - வளர்ச்சி பெற்ற முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையில் நடப்பது இதுவே-அவர் உற்பத்தியாளர் என்ற முறையில் சல்லிக்காசும் கடன்வாங்கத் தேவையில்லை. அப்படியே கடன்வாங்கினாலும் சொந்தத் தேவைக்காகவே வாங்குகிறார். அடகுக் கடையில் அவர் வாங்கும் கடன் இத்தகையதே. ஆனால் உழைப்பாளியோ தம் உழைப்புச் சாதனங்களுக்கும் உற்பத்திப் பொருளுக்கும் உடைமையாளராய் இருக்கும் போது, உண்மையிலேயே-அப்படி இருந்தாலும் சரி, பேருக்கு இருந்தாலும் சரி, உற்பத்தியாளர் என்ற முறையில்தான் வட்டிக்காரரின் மூலதனத்தை எதிர்நோக்குகிறார்; அம்மூலதனம் கடுவட்டி மூலதனமாக அவரை எதிர்நோக்குகிறது. நியூமன் இதைத்தான் ஏனோதானோ வென்று வெளிப்படுத்துகிறார் - வங்கியாளர் பணக்காரர்களுக்கு கடன்கொடுப்பவராகவும் கடுவட்டிக்காரர் ஏழைகளுக்கு கடன் கொடுப்பவராகவும் இருப்பதால் வங்கியாளர் மதிக்கப்படுவதாகவும் கடுவட்டிக்காரர் வெறுத்து ஒதுக்கப் படுவதாகவும் சொல்லி வைக்கிறார். (*வி.வி.நியூமன், அரசியல் பொருளாதாரம் பற்றிய விரிவுரைகள், லண்டன், 1851, பக்கம் 44.*) இரு சமுதாயம் பொருளுற்பத்தி முறைகளுக்கிடையிலான வேறுபாடு-அவற்றிற்குரிய சமூக அமைப்புக்கிடையிலான வேறுபாடு இந்த விவகாரத்தின் நடுமையமாய் இருப்பதையும், பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் இடையிலான வேறுபாட்டைச் சொல்லி இதற்கு விளக்கமளிக்க முடியாது என்பதையும் அவர் காணத் தவறுகிறார். பார்க்கப் போனால்,

சிறு உற்பத்தியாளரை ஒட்ட உறிஞ்சுகிற கடுவட்டிக் (கடன் பணக்கார நில உடைமையாளரை ஒட்ட உறிஞ்சுகிற கடுவட்டிக்) கடனோடு கைகோத்து வருவதே ஆகும். ரோமானிய உயர்குடியினரின் கடுவட்டிக் கடன் சிறு விவசாயிகளான ரோமானிய-கீழ்குடியினரை அடியோடு நாசப்படுத்தி முடிந்தவுடனே இச்சுரண்டல் வடிவம் முற்றுப் பெற்று, சிறு விவசாயிகளின் நிலவுடைமைப் பொருளாதாரத்தின் இடத்துக்கு முழுமையான அடிமைப் பொருளாதாரம் வந்து விட்டது.

உற்பத்தியாளர்களின் இன்றியமையாத வாழ்வுச் சாதனங்களுக்கு மேல் இச்சாதன அளவுதான் பிற்பாடு கூலியாக வடிவெடுப்பது உபரியாவதனைத்தையும் கடுவட்டிக்காரர் வட்டியின் பெயரால் விழுங்கி விடலாம். (இந்த வட்டிதான் பிற்பாடு இலாபமாகவும் நில - வாடகையாகவும் வடிவெடுப்பது); ஆகவே அரசுக்குப் போய்ச் சேரும் பங்கு தவிர, உபரி-மதிப்பு முழுவதையும் வசப்படுத்திக் கொள்ளும் இந்த வட்டியின் நிலவரத்தை உபரி-மதிப்பில் ஒரு பகுதியாக மட்டுமே வட்டி - எப்படியும் இயல்பான வட்டி - அமைந்திடுகிற நவீன கால வட்டி வீதத்தின் நிலவரத்தோடு ஒப்பு நோக்குவது அபத்தம். இப்படி ஒப்பு நோக்குவது, கூலித் தொழிலாளி தம்மை வேலைக்கமர்த்துகிற முதலாளிக்கு இலாபமும் வட்டியும் நில-வாடகையும், சுருங்கச் சொல்லின் முழு உபரி-மதிப்பும் உற்பத்தி செய்து கொடுப்பதை மறந்து விடுவதே ஆகும். மூலதனம் வளர்ச்சி அடைவதும், அதனுடன் கூடவே வட்டி வீதம் வீழ்ச்சி அடைவதும் தொழிலாளிக்கு எவ்வளவு சாதகமானவை என்று காட்டுவதற்காக கேரி இப்படி அபத்தமாக ஒப்பு நோக்குகிறார். கடுவட்டிக்காரரைப் பொறுத்தவரை, தமக்கு இரையாகிறவரின் உபரி-உழைப்பைக் கறப்பதோடு நில்லாமல், பையப்பைய அவரது உழைப்புச் சாதனங்களையே-நிலம், வீடு போன்றவற்றை - கைப்பற்றிக் கொள்கிறார், இவ்விதம் அவரை உடைமைப் பறிப்பு செய்யும் காரியத்தில் ஓயாமல் ஈடுபட்டு வருகிறார்; ஆனால், தொழிலாளியிடமிருந்து அவரது உழைப்புச் சாதனங்களை பறித்துக் கொள்ளும் இந்த முழுமையான உடைமைப் பறிப்பு முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையைப் பொறுத்தவரை, அது சாதிக்கிற, முனைகிற விளைவு அல்ல, இந்த உடைமைப் பறிப்பை முன்தேவையாகக் கொண்டுதான் அது தொடக்கம் பெறவே செய்கிறது என்பதை மறந்து விடக் கூடாது. முறையான அடிமையைப் போலவே கூலியடிமையும் அவர் வகிக்கும் நிலை காரணமாய் - எப்படியும் உற்பத்தியாளர் என்ற பொறுப்பில் - கடன்-அடிமை ஆக முடியாது; அப்படியே ஆனாலும் நுகர்வாளர் என்ற பொறுப்பில்தான் ஆக முடியும்.

கடுவட்டி-மூலதனம் பொருளுற்பத்தி முறையை மாற்றாமல் நேரடி உற்பத்தியாளர்களின் உபரி-உழைப்பனைத்தையும் அப்படியே தனதாக்கிக் கொள்ளும்போது, உழைப்புச் சாதனங்கள் உற்பத்தியாளர்களுக்கே சொந்தமாயிருப்பது அல்லது அவர்களின் கைவசமிருப்பது - மேலும் இதற்கிணையான சிறுவீதம் பொருளுற்பத்தியும்-இம்மூலதனத்திற்கு இன்றியமையாத முன்தேவையாய் இருக்கும் போது, அதாவது மூலதனம் நேரடியாக உழைப்பைத் தனக்கு கீழ்படுத்தாமலும், இவ்விதம் தொழில்துறை மூலதனத்தைப் போல் உழைப்பை எதிர்நோக்காமலும் இருக்கும் போது-இந்தக் கடுவட்டி-மூலதனம் பொருளுற்பத்தி முறையை வளங்குன்றி வளரச் செய்து உற்பத்திச் சக்திகளை வளர்த்துச் செல்வதற்கு பதில் முடக்கிப் போடுகிறது; அதே போது இந்த அவல நிலைமைகளை மாறாமல் நீடிக்கச் செய்து, உழைப்பின் சமுதாய உற்பத்தித் திறனை வளர விடாமல் அடிக்கிறது; முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையிலோ தொழிலாளியை பலியிட்டேனும் இத்திறன் வளர்க்கப்படுகிறது.

ஆக, கடுவட்டியானது ஒருபுறம் புராதனமான பிரபுத்துவச் செல்வத்தையும் புராதனமான பிரபுத்துவச் சொத்துடைமையையும் கெடுத்து நாசமாக்குகிறது. மறுபுறம் சிறு விவசாயியும் நகரச் சிற்றுடைமையாளரும் செய்யும் பொருளுற்பத்தியையும் சுருங்கச் சொல்லின், உற்பத்தியாளரே இன்னமும் அவரது உற்பத்திச் சாதனங்களின் உடைமையாளராய் விளங்கும் எல்லா வடிவங்களையும் கெடுத்துச் சிதைக்கிறது. வளர்ச்சி பெற்ற முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையில் தொழிலாளி உற்பத்திச் சாதனங்களின் உடைமையாளர் அல்ல, அவர் சாகுபடி செய்யும் பண்ணையோ அவர் செய்பொருளாக்கிடும் கச்சாப் பொருட்களோ அவருக்குச் சொந்தமல்ல. ஆனால் இந்த அமைப்பில் உற்பத்தியாளர் உற்பத்திச் சாதனங்களிலிருந்து அந்நியப்படுவது உள்ளபடியே பொருளுற்பத்தி முறையில் ஒரு புரட்சியைக் குறிக்கிறது தனித்தனியாக இருந்து வந்த தொழிலாளர்கள் வெவ்வேறானவர்கள் என்றாலும் ஒன்றுக்கொன்று தொடர்புள்ள காரியங்களை செய்து முடிப்பதற்காக பெரும் பெரும் பட்டறைகளில் ஒன்று கூட்டப்படுகிறார்கள்; கருவியின் இடத்துக்கு இயந்திரம் வந்து சேர்கிறது. சிற்றுடைமை அமைப்பில் உள்ளது போல் உற்பத்திக் கருவிகள் சிதறலாய் இருப்பதற்கு இப்போது உற்பத்தி முறையே இடமளிப்பதில்லை; தொழிலாளி தனிப்பட்டிருப்பதற்கு இப்போது வாய்ப்பில்லை. முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையில் கடுவட்டியால் உற்பத்திச் சாதனங்களை உற்பத்தியாளரிடமிருந்து

விலக்கி வேறுபடுத்த முடியாது; ஏனென்றால் இவ்விதம் விலக்கி வேறுபடுத்துதல் முன்பே முடிந்து விட்டது.

உற்பத்திச் சாதனங்கள் சிதறலாய் இருக்குமிடத்தில் கடுவட்டியானது பணச் செல்வத்தை மையப்படுத்துகிறது. அது பொருளுற்பத்தி முறையை மாற்றுவதில்லை என்றாலும் ஒட்டுண்ணி போல் அதில் ஒட்டிக் கொண்டு அதனை வளங்குன்றச் செய்கிறது. அதை ஒட்ட உறிஞ்சி வீரியமிழக்கச் செய்து, மறுவுற்பத்தியை வேறு வழியில்லாமல் இன்னுங் கூட அவலமான நிலைமைகளில் நடைபெறச் செய்கிறது. கடுவட்டிக்காரர்களை மக்கள் வெறுப்பது இதனால்தான்: உற்பத்தியாளரே உற்பத்திச் சாதனங்களின் உடைமையாளராக இருப்பது அதேபோது அரசியல் தகுநிலைக்கு, குடிமகனின் சுயேச்சை நிலைக்கு அடிப்படையாகவும் விளங்கும் புராதன உலகில் இந்த வெறுப்பு மிகத் தீவிரமாயிருந்தது.

அடிமை முறை நீடித்துள்ள வரை அல்லது பிரபுத்துவக் கோமானும் -அவர்தம் பரிவாரங்களும் உபரி-உற்பத்தியை நுகர்ந்து வரும் வரை அடிமையுடைமையாளரோ பிரபுத்துவக் கோமானோ கடுவட்டிக்கு இரையானாலும் கூட பொருளுற்பத்தி முறை மாறாமல் இருந்து வருகிறது; உழைப்பாளர்களுக்குத்தான் அது மேன்மேலும் கடுமையாகி விடுகிறது. கடன்பட்ட அடிமையுடைமையாளர் அல்லது பிரபுத்துவக் கோமானிடமிருந்து கறக்கப்படுவது அதிகரிக்க அதிகரிக்க, உழைப்பாளர்களிடமிருந்து அவர் கறப்பதும் அதிகரித்துச் செல்கிறது. முடிவில் அவரை ஒரேயடியாய் ஒதுக்கித் தள்ளிவிட்டு கடுவட்டியாளரே அடிமையுடைமையாளர் அல்லது நிலக்கிழார் ஆகிவிடுவதுமுண்டு. புராதன ரோமில் வீரத்திருத்தகைகள் இப்படித்தான் செய்தார்கள். பழைய சுரண்டலாளரின் இடத்துக்கு - இந்தப் பழைய சுரண்டல் பெரிதும் அரசியலதிகாரத்திற்கான கருவியாகவே இருந்ததால் ஓரளவுக்குத் தந்தைவழிச் சமுதாயத் தன்மை உடையதாய் இருந்து - இப்போது வருகிறவர் இம்மியும் விட்டுக் கொடுக்காத பணந்தின்னிப் பகட்டுப் பேர்வழி. ஆயினும் பொருளுற்பத்தி முறை இதனால் மாறி விடுவதில்லை.

அரசியல் வாழ்க்கையின் கட்டுமானத்திற்கு உறுதியான அடித்தளமாய் அமையும் சொத்துடைமை வடிவங்களை இவ்வடிவங்கள் (ஓயாமல் அப்படியே மறுவுற்பத்தி செய்யப்படுவது அந்த வாழ்க்கைக்கு அவசியமாகும்) அழிப்பதாயும் சிதைப்பதாயும் உள்ளவரைதான் கடுவட்டியானது முதலாளித்துவத்திற்கு முற்பட்ட

எல்லா பொருளுற்பத்தி முறைகள் மீதும் புரட்சிகர விளைவை ஏற்படுத்துகிறது. ஆசிய வழிப்பட்ட சொத்துடைமை வடிவங்களில் கடுவட்டியானது பொருளாதாரச் சீர்கேட்டுக்கும் அரசியல் ஊழலுக்கும் மேல் வேறொன்றுக்கும் வழி செய்திடாமலே நெடுங்காலம் நீடித்திருக்க முடியும். முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறைக்கு இன்றியமையாத ஏனைய நிலைமைகள் நிலவும்படியான இடத்திலும் நேரத்திலும் மட்டுமே கடுவட்டியானது இந்தப் புதிய பொருளுற்பத்தி முறையை உருவாக்கும் சாதனங்களில் ஒன்றாகிறது - ஒரு புறம் பிரபுத்துவக் கோமான்களையும் சிறுவீத உற்பத்தியாளர்களையும் நாசம் செய்கிறது, மறுபுறம் உழைப்புச் சாதனங்களை மூலதனமாக மையப்படுத்துகிறது.

மத்திய காலத்தில் எந்த நாட்டிலும் பொது வட்டி வீதம் கிடையாது. தொடக்கத்திலிருந்தே திருச்சபை வட்டிக்குக் கடன் கொடுப்பதை அறவே தடைசெய்தது. சட்டங்களும் நீதிமன்றங்களும் கடன்களுக்கு அவ்வளவாய் பாதுகாப்பு தரவில்லை. தனிப்பட்ட சந்தர்ப்பங்களில் வட்டி வீதம் அந்த அளவுக்கு மிக அதிகமாய் இருந்தது. பணப் புழக்கம் குறைவாய் இருந்தாலும் பெரும்பாலான கொடுப்புகளை ரொக்கமாகவே செலுத்த வேண்டியிருந்ததாலும் பணம் கடன்வாங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. மேலும் அப்போது மாற்று உண்டியல்கள் என்னும் ஏற்பாடும் வளர்ச்சி பெறாமல் இருந்தது. வட்டி வீதங்களிலும் சரி, கடுவட்டி தொடர்பான கருத்தமைவுகளிலும் சரி பெருத்த மாறுபாடுகள் இருந்தன. சார்லமைன் காலத்தில் 100% கேட்பது கடுவட்டி எனக் கருதப்பட்டது. கான்ஸ்டன்ஸ் ஏரிக்கரையில் அமைந்த லிண்டாவில் 1348இல் உள்ளூர் குடிகள் சிலர் $216\,^2/_3$% வட்டி வசூலித்தனர். ஜூரிச்சில் சட்டபூர்வ வட்டிவீதம் $43\,^1/_3$% என்று நகர மன்றம் ஆணையிட்டது. இத்தாலியில் சில சமயம் 40% தர வேண்டியிருந்தது; ஆனால் 12ஆம் நூற்றாண்டிலிருந்து 14ஆம் நூற்றாண்டு வரை வழக்கமான வட்டி வீதம் 20%ஐ தாண்டவில்லை. சட்டபூர்வ வட்டி வீதம் 12½% என்பது வெரோனா இட்ட கட்டளை. பேரரசர் இரண்டாம் பிரடெரிக் வட்டி வீதம் 10% என்று நிர்ணயித்தார். ஆனால் இது யூதர்களுக்கு மட்டும்தான். கிறிஸ்தவர்கள் சார்பில் அவர் ஆணையிடத் தயாரில்லை. ஜெர்மானிய ரைன் மாகாணங்களில் 13ஆம் நூற்றாண்டிலேயே 10% வட்டி வீதம் சர்வசாதாரணமாய் இருந்தது (Hüllmann, Geschichte des städtewesens, II, பக்கம் 55-57.)

கடுவட்டி-மூலதனமானது மூலதனத்தின் பொருளுற்பத்தி முறை இல்லாமலே மூலதனத்திற்குரிய சுரண்டல் முறையை கையாளுகிறது.

முதலாளித்துவப் பொருளாதாரத்திற்குள்ளேயும் பிற்பட்ட தொழில் கிளைகளில் அல்லது நவீனப் பொருளுற்பத்தி முறைக்கு மாறிச் செல்ல எதிர்ப்பு காட்டிக் கொண்டிருக்கும் தொழில்கிளைகளில் இதே நிலைமை காணப்படுகிறது. எடுத்துக்காட்டாக நாம் ஆங்கிலேய வட்டி வீதத்தை இந்திய வட்டி வீதத்தோடு ஒப்பு நோக்க விரும்பினால், இங்கிலாந்து வங்கியின் வட்டி வீதத்தை எடுத்துக் கொள்ளாமல், வீட்டுத் தொழிலில் ஈடுபட்டுள்ள சிறுவீத உற்பத்தியாளர்களுக்கு சிறு இயந்திர சாதனங்களைக் கடனாய்க் கொடுப்போர் விதிக்கிற வட்டி வீதத்தைத் தான் எடுத்துக் கொள்ள வேண்டும்.

முழுக்க முழுக்க நுகர்வுக்கென்றே ஒதுக்கப்பட்டு விடும் செல்வத்தைப் போல் அல்லாமல் கடுவட்டியானது வரலாற்று வழியில் முக்கியத்துவம் வாய்ந்தது; ஏனென்றால் அது தன்னளவிலேயே மூலதனத்தை உண்டாக்கும் நிகழ்முறை ஆகும். கடுவட்டி-மூலதனமும் வணிகரின் செல்வமும் நிலவுடைமையைச் சாராமல் பணச் செல்வம் உருவாவதற்கு வழி செய்கின்றன. எவ்வளவுக்கு எவ்வளவு குறைவான உற்பத்திப் பண்டங்கள் சரக்குகளாகின்றனவோ பரிவர்த்தனை-மதிப்பானது மும்முரத்திலும் அளவிலும் பொருளுற்பத்தி மீதான ஆளுகையை எவ்வளவுக்கு எவ்வளவு குறைவாகப் கைப்பற்றியுள்ளதோ, பணம் அவ்வளவுக்கு அவ்வளவு உண்மைச் செல்வமாகவே காட்சியளிக்கிறது. பயன் மதிப்புகளின் உருவில் குறுகிக் காணப்படுவதற்கு மாறாக பரந்துபட்ட பொதுச் செல்வமாக காட்சியளிக்கிறது. இதுவே பணஞ் சேர்த்தலின் அடிப்படை ஆகும். பணம் உலகப் பணமாகவும் சேர்ப்பாகவும் பயன்படுவது ஒரு புறமிருக்க, முக்கியமாய் கொடுப்புச்சாதனம் என்ற முறையில்தான் அது சரக்கின் அறுதி வடிவமாக விளங்குகிறது. குறிப்பாக பணத்தின் கொடுப்புச் சாதனப் பணிதான் வட்டியையும் வட்டியைக் கொண்டு பண-மூலதனத்தையும் வளர்த்திடுகிறது. ஊதாரித்தனத்துக்கும் ஊழலுக்குமான செல்வத்திற்கு வேண்டியதெல்லாம் பணமே ஆகும். ஒவ்வொன்றையும் வாங்குவதற்கான சாதனமாகப் (கடன் அடைப்பதற்கான சாதனமாகவும்) பயன்படும் பணமே ஆகும். சிறுவீத உற்பத்தியாளருக்கு அனைத்துக்கும் முதலாவதாய் கொடுப்புகளை நிறைவேற்றுவதற்காகவே பணம் தேவைப்படுகிறது. (நிலக்கிழார்களுக்கும் அரசுக்கும் செலுத்த வேண்டிய பண்ட வடிவச் சேவைகளும் வரிகளும் பண-வாடகைகளாகவும் பண - வரிகளாகவும் மாறிப் போவது இங்கு பெரும் பங்கு வகிக்கிறது.) இவ்விரு நிலைகளிலும் பணம் பணமாகவே தேவைப்படுகிறது. மறுபுறம்,

கடுவட்டியில்தான் பணச் சேர்ப்பின் உருவாக்கம் முதன்முதலாய் மெய்நடப்பாகி, சேர்ப்பாளரின் கனவு நனவாகிறது. பணச் சேர்ப்பின் உடைமையாளரிடமிருந்து கோரப்படுவது பணமேதான், மூலதனம் அல்ல, ஆனால் அவர் வட்டியைக் கொண்டு இந்தப் பணச் சேர்ப்பை மூலதனமாக மாற்றி விடுகிறார், அதாவது பகுதியாகவோ முழுமையாகவோ உபரி-உழைப்பை தனதாக்குவதற்கும், இவ்விதம் ஒரு உற்பத்திச் சாதனங்கள் மீது-அவை பெயரளவில் பிறர் சொத்தாகவே இருந்து வந்தாலும் கூட-ஆளுகை பெறுவதற்குமான சாதனமாக மாற்றி விடுகிறார். எபிக்கியூரசின் தெய்வங்கள் உலகங்களுக்கிடையிலான விண்பரப்பில் உறைந்தனவாமே, அதே போலத்தான் கடுவட்டியும் பொருளுற்பத்தியின் இரண்டு இடுக்குகளில் வாழ்கிறது. சரக்கு வடிவம் எந்த அளவுக்கு குறைவாகவே உற்பத்தி பண்டங்களின் பொது வடிவம் ஆகியுள்ளதோ பணம் கிடைப்பதும், அந்த அளவுக்கு கடினமாய் உள்ளது. ஆகவே பணத் தேவை உள்ளவர்கள் கடன் அடைக்கும் சக்தியற்றவர்களாய் இருப்பது அல்லது கடன் வாங்கும் ஆசைக்கு அணைபோட்டுக் கொள்ளும் சக்தி படைத்தவர்களாய் இருப்பது - இது தவிர வேறு எதுவும் கடுவட்டிக்காரருக்கு தடை மதில் ஆவதில்லை. சிறுவிவசாயியின் பொருளுற்பத்தியிலும் நகரச் சிற்றுடைமையாளரின் பொருளுற்பத்தியிலும் உழைப்பாளி (பொதுவாகச் சொன்னால், இந்தப் பொருளுற்பத்தி முறைகளிலும் உற்பத்திச்சாதன உடைமையாளராகவே இருந்து வரும் உழைப்பாளி) தம் உற்பத்திச் சாதனங்களை தற்செயலாகவோ அசாதாரண குழப்படிகளாலோ பறிகொடுத்து விடும் போது அல்லது எப்படியும் அவை இயல்பான மறுவுற்பத்திப் போக்கில் மாற்றீடு செய்யப்படாமலிருக்கும் போது பணம் பிரதானமாய் வாங்குஞ்சாதனமாகவே பயன்படுகிறது. வாழ்வுச் சாதனங்களும் கச்சாப் பொருட்களும் உற்பத்திக்கு இன்றியமையாதனவற்றில் ஓர் அவசியப் பகுதி ஆகின்றன. இவற்றின் விலை அதிகரிக்கும் போது உற்பத்திப் பண்டத்தின் விற்று வரவிலிருந்து இவற்றை மாற்றீடு செய்ய முடியாமற் போகலாம்; இதே போல் சாதாரணமாய் விளைச்சல் பொய்த்து விடுவதால் விவசாயி தமது விதைத்தானியத்தை பண்ட வடிவில் மாற்றீடு செய்ய முடியாமற் போகலாம். எந்தப் போர்களில் ரோமானிய மேற்குடியினர் கீழ்க்குடியினரைப் படையாட்கள் ஆக்கி நாசமாக்கினார்களோ, எந்தப் போர்களால் அந்தக் கீழ்க் குடியினர் அவர்களின் உழைப்புச் சாதனங்களை மறுவுற்பத்தி செய்து கொள்ள முடியாமற் போய் வக்கற்றவர்களானார்களோ (வக்கற்றுப் போனதால்தான் மறுவுற்பத்தியின் முன்தேவைகள் பகுதியாகவோ

முழுமையாகவோ பறிபோனதால் தான் பெரும்பாலோர் நாசமாயினர்) - அதே போர்கள் மேற்குடியினரின் காப்பறைகளையும் கருவூலப் பெட்டகங்களையும் கொள்ளையிட்ட தாமிரத்தால் (அக்காலத்தில் தாமிரம்தான் பணம்) நிறைத்தன. கீழ்க் குடியினருக்கு அவசியமான சரக்குகளை, அதாவது தானியத்தையும் குதிரைகளையும் கால்நடைகளையும் அவர்களிடம் நேரடியாகத் தருவதற்கு பதில் மேற்குடியினர் தங்களுக்கு எவ்விதத்தும் பயன்படாத இந்தத் தாமிரத்தை கடனாய்க் கொடுத்தார்கள், இந் நிலைமையை தங்களுக்குச் சாதகமாக்கி, கொள்ளையாய் கடுவட்டி கறந்தார்கள், இவ்விதம் கீழ்க்குடியினரை தங்களின் கடனடிமைகளாய் மாற்றிக் கொண்டார்கள். இதே போல் சார்லமைன் ஆட்சிக்காலத்தில் பிரெஞ்சு விவசாயிகளும் போர்களால் நாசமானார்கள்; கடனாளி என்ற நிலையிலிருந்து கொத்தடிமை என்ற நிலைக்கு மாறுவது தவிர அவர்களுக்கு வேறு வழியில்லாமற் போயிற்று. ரோமானியப் பேரரசில் அநேக சந்தர்ப்பங்களில் என்ன நடந்ததென்பது தெரிந்த சங்கதிதான்: பட்டினியாலும் பஞ்சத்தாலும் குழந்தைகள் விலை பேசி விற்கப்பட்டார்கள், சுதந்திர மாந்தர்கள் தம்மைத் தாமே செல்வந்தர்களிடம் விற்றுக் கொண்டு அடிமைகள் ஆனார்கள். இவையெல்லாம் பொதுவான திருப்பு முனைகள். தனித் தனியே எடுத்துப் பார்த்தால், சிறுவீத உற்பத்தியாளர் உற்பத்திச் சாதனங்களை இழந்து விடுகிறாரா இல்லையா என்பது ஓராயிரம் சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பொறுத்தது. இத்தகைய சூழ்நிலைகள் அல்லது இழப்புகள் ஒவ்வொன்றும் உற்பத்தியாளர் மேலும் வறுமைப் படுவதையும், கடுவட்டிக்கார ஒட்டுண்ணி நுழைந்து ஒட்டிக் கொள்வதற்கு இன்னுமோர் இடுக்கு விழுவதையும் குறிப்பதாகும். சிறு விவசாயிக்குச் சொந்தமான ஒரு பசுமாடு செத்துப் போவதாலேயே, அவர் மறுபடியும் பழைய அளவு வீதத்தில் மறுவுற்பத்தி செய்ய முடியாமற் போய் விடலாம். அவர் கடுவட்டிக்காரரின் பிடியில் சிக்கிக் கொள்கிறார், சிக்கிக் கொண்ட பின் ஒருபோதும் அவரால் அதிலிருந்து மீள முடிவதில்லை.

ஆயினும் உள்ளபடியே முக்கியமாகவும் பிரத்தியேகமாகவும் கடுவட்டிக்கென்று அமைந்த செயற்களம் பணத்தின் கொடுப்புச்சாதனப் பணியே ஆகும். குறிப்பிட்ட தேதியில் நிறைவேற்ற வேண்டிய ஒவ்வொரு பணக் கொடுப்பும் - நில-வாடகை, கப்பம், வரி முதலானவை - அதற்காக பணம் பெற்றாக வேண்டிய தேவையைத் தோற்றுவிக்கிறது. எனவேதான் புராதன ரோமின் காலந்தொட்டு

இதுநாள்வரை கடுவட்டியானது பொதுவாக வரித் தண்டலர்களை (fermiers généranx, receveurs généraux) சார்ந்துள்ளது. வர்த்தகம் தலையெடுத்து சரக்கு உற்பத்தி பரவலாகும் போது கொள்முதலும் கொடுப்பும் காலத்தால் வேறுபட்டு விலகிப் போகின்றன. பணத்தை நிர்ணய தேதியில் கொடுத்தாக வேண்டும். இது எப்படி இன்னும் கூட பண - முதலாளியும் கடுவட்டிக்காரரும் இருவராய் இல்லாமல் ஒருவராய் கலந்துவிடும்படியான நிலைமைகளுக்கு வழி செய்யக் கூடும் என்பதை இக்காலத்திய நெருக்கடிகள் புலப்படுத்துகின்றன. ஆனால் இதே கடுவட்டியானது கொடுப்புச் சாதனமாக பயன்படும் பணத்திற்கான தேவையை மேன்மேலும் விரிவாக்கிச் செல்லும் முக்கிய சாதனங்களில் ஒன்றாகிறது. எப்படியென்றால் அது உற்பத்தியாளரை கடன் எனும் புதைச் சேற்றில் மேன்மேலும் இழுத்து விட்டு அவருடைய வழக்கமான கொடுப்புச் சாதனங்களை அழித்தொழிக்கிறது, வட்டிச் சுமை ஏறி, அவர் இயல்பாய் மறுவுற்பத்தி செய்வது முடியாத காரியமாகி விடுகிறது. இந்நிலையில் கொடுப்புச் சாதனமாகப் பயன்படும் பணத்திலிருந்து கடுவட்டி முளைத்தெழுந்து, தன்க்குரிய தனிச் செயற்களமாகிய இந்தப் பணப் பணியை விரிவாக்கிக் கொள்கிறது.

கடன்-செலாவணி அமைப்பு கடுவட்டிக்கு எதிர்வினையாக வளர்கிறது. ஆனால் இதை தவறாகப் புரிந்து கொள்வதோ புராதன கால எழுத்தாளர்களையும் திருச்சபைத் தந்தைகளையும் லூதரையும் ஆரம்பகால சோசலிஸ்டுகளையும் போல் அர்த்தப்படுத்திக் கொள்வதோ கூடாது. இதன் பொருள், வட்டிமூலதனம் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் நிலைமைகளுக்கும் தேவைப்பாடுகளுக்கும் கீழ்ப்படுத்தப்படுகிறது என்பது மட்டும்தான், இதற்கு மேலாகவோ கீழாகவோ எதுவும் அல்ல.

மொத்தத்தில், வட்டி-மூலதனமானது நவீன கடன்-செலாவணி அமைப்பில் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் நிலைமைகளுக்கு தகவமைந்து கொள்கிறது. கடுவட்டி கடுவட்டியாகவே தொடர்ந்து இருந்து வருவது மட்டுமல்லாமல், முதலாளித்துவப் பொருளுற்பத்தி வளர்ச்சிவிட்ட நாடுகளில் முன்பெல்லாம் சட்டம் இட்டு வந்த கட்டுத் தளைகளிலிருந்து விடுவிக்கப்படவும் செய்கிறது - வட்டி-மூலதனமானது ஆட்கள் தொடர்பாகவும் வர்க்கங்கள் தொடர்பாகவும் கடுவட்டி - மூலதனத்தின் வடிவத்தையே தக்க வைத்துக் கொள்கிறது; மேலும் முதலாளித்துவப்

பொருளுற்பத்தி முறைக்கு ஏற்ற அர்த்தத்தில் கடன்-வாங்குதல் நடைபெறாத, நடைபெறவும் முடியாத நிலைமைகளிலும், சொந்தத் தேவைக்காக அடகுக்கடை போன்றவற்றில் கடன் வாங்கப்படும் நிலைமைகளிலும் ஊதாரி செலவுக்காக கடன்வாங்கப்படும் நிலைமைகளிலும் உற்பத்தியாளர் முதலாளித்துவ உற்பத்தியாளராக இல்லாமல், சிறுவிவசாயி அல்லது கைவினைஞரைப் போன்றவராய் இருக்கிற, அதாவது அவர் நேரடி உற்பத்தியாளர் என்ற முறையில் இன்னமும் தம் உற்பத்திச் சாதனங்களின் உடைமையாளராகவே இருந்து வருகிற நிலைமைகளிலும், முடிவில் முதலாளித்துவ உற்பத்தியாளரே, கூட தமக்காக தாமே வேலை செய்து கொள்ளும் உற்பத்தியாளர்களை ஒத்திருக்கும்படி சிறுவீதத்தில் செயல்படும் நிலைமைகளிலும் வட்டி மூலதனம் கடுவட்டி - மூலதனத்தின் வடிவத்தையே தக்க வைத்துக் கொள்கிறது.

வட்டி மூலதனமானது முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் இன்றியமையாக் கூறுகளில் ஒன்றாக இருந்து வரும் வரை, அதை கடுவட்டி-மூலதனத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டுவது இம் மூலதனத்துக்கேயுரிய இயல்போ தன்மையோ அல்லவே அல்ல. அது மாறிய நிலைமைகளில் அது செயல்படுவதும், எனவே வட்டிக்காரரின் எதிரில் வந்து கடன்-வாங்குகிறவரின் தன்மை அறவே மாறிப்போய் இருப்பதும்தான் அதனை வேறுபடுத்திக் காட்டுவது ஆகும். சொத்து சுகம் இல்லாத ஒருவர் தொழிலதிபர் என்ற முறையிலோ வணிகர் என்ற முறையிலோ கடன்பெறுகிற போதும் கூட, அவர் கடனாய்ப் பெற்ற மூலதனத்தை பயன்படுத்தி முதலாளியாகச் செயல்பட்டு ஊதியமிலா உழைப்பை தனதாக்குவார் என்ற எதிர்பார்ப்புடன்தான் அவருக்கு கடன்தரப்படுகிறது. உள்ளுறை முதலாளி என்ற முறையில் அவருக்கு கடன்தரப்படுகிறது. சொத்து சுகம் இல்லாவிட்டாலும் ஊக்கமும் உறுதியும் ஆற்றலும் தொழில் திறமையும் வாய்ந்த ஒருவர் இவ்வழியில் முதலாளி ஆகலாம் என்பது-ஒவ்வொரு தனியாளின் வர்த்தக மதிப்பும் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையில் சற்றே துல்லியமாய் கணிக்கப்படுவது - முதலாளித்துவ அமைப்பிற்கு சப்பைகட்டுவோரால் பிரமாதமாய் போற்றப்படுகிறது. இந் நிலைமையானது சொத்து சுகத்திற்கான போர்க்களத்திற்கு வேண்டாத எண்ணிக்கையில் புதுப்புதுப்படையாட்களை ஓயாமல் கொண்டு வந்து ஏற்கனவே இருந்து வரும் பல்வேறு தனிப்பட்ட முதலாளிகளோடும் போட்டாப் போட்டியில் இறக்கி விடுகிறது என்றாலும், மூலதனத்தின் ஆளுகைக்கு உரமூட்டி, அதன் அடித்தளத்தை விரிவாக்கி

சமுதாயத்தின் கீழ்த்தட்டிலிருந்து புதுப்புது சக்திகளை அது அமர்த்திக் கொள்வதற்கு துணைபுரியவும் செய்கிறது. இதே போல், மத்திய காலத்தில் கந்தோலிக்கத் திருச்சபையானது நாட்டிலேயே மிகச்சிறந்த அறிவாற்றல் படைத்தவர்களைக் கொண்டு - அவர்களின் தகு நிலையோ, பிறப்போ, செல்வநிலையோ கருதாமல் தன் குருபீடத்தை அமைத்துக் கொண்டது. இதுவே பாதிரிமார்களின் ஆட்சியை வலுப்படுத்தவும் பொதுமக்களை அடக்கிஒடுக்கவும் முக்கிய கருவிகளில் ஒன்றாயிற்று. ஆளுகிற வர்க்கம் ஆளப்படுகிற வர்க்கத்தின் மிகச் சிறந்த மாந்தர்களை எவ்வளவுக்கு எவ்வளவு தன்வயப்படுத்திக் கொள்ள முடிகிறதோ, அதன் ஆட்சி அவ்வளவுக்கு அவ்வளவு நிலையானதும் ஆபத்தானதும் ஆகிறது.

நவீன கடன்-செலாவணி அமைப்பை நிறுவியவர்கள் பொதுவான வட்டி-மூலதனத்தை பழித்துரைப்பதற்கு பதில், எடுத்த எடுப்பில் அதற்கு ஒளிவுமறைவில்லாத ஒப்புதல் வழங்கி விடுகிறார்கள்.

நாம் இங்கு குறிப்பிடுவது கடுவட்டிக்கு எதிர்வினையாக எழுந்தவையும் அதிலிருந்து ஏழை எளியவர்களைப் பாதுகாக்கும் முயற்சிகளுமான Monts-de-piété போன்றவற்றை அல்ல (1350இல் பிரான்ஷ்-கோண்ட்டில் சார்லின்ஸ் எனும் இடத்தில்; பிற்பாடு 1400இலும் 1479இலும் இத்தாலியில் பெருகியா, சவோனா எனும் இடங்களில் இவை ஏற்பட்டன. ஆசைக் கனவுகள் நனவாகிக் கொண்டிருக்கும் போதே, நேரெதிரானவையாக மாறிப் போகிற வரலாற்று வேடிக்கையை வெளிப்படுத்துவதால்தான் இந்நிகழ்ச்சிகள் குறிப்பிடத் தக்கவை ஆகின்றன. நடுத்தரமான ஒரு மதிப்பீட்டின் படி ஆங்கிலேயத் தொழிலாளி வர்க்கம் அடகுக் கடைகளுக்கு - monts-de-piété என்பவற்றின் இந்த நவீன வாரிசுகளுக்கு-வட்டி செலுத்து கின்றனர்.[21]. நாம் குறிப்பிடுவது டாக்டர் ஹுயூ சாம்பர்லைன், ஜான் பிரிஸ்கோ போன்றவர்களின் கடன் செலாவணிப் புனைவுகளையும்

(21) 'ஒரு மாத காலத்திற்குள் அடிக்கடி நிகழும் ஏற்ற இறக்கங்களினாலும், சிறு தொகை கிடைக்கும் என்பதற்காக ஒரு பண்டத்தை அடகுவைத்து இன்னொரு பண்டத்தை மீட்கிற நடைமுறையாலும்தான் பணத்திற்கான கட்டணம் இவ்வளவு மிகையாகி விடுகிறது. உரிமம் பெற்ற அடகுக் கடைக்காரர்கள் பெருநகரில் சுமார் 240 பேரும் நாட்டில் சுமார் 1450 பேரும் உள்ளனர். இத்தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ள மூலதனம் ஓராண்டு காலத்தில் மும்முறை புரள்கிறது. ஒவ்வொரு முறையும் சராசரியாக சுமார் 33½% கிடைக்கச் செய்கிறது; இந்தக் கணக்கீட்டின் படி, இங்கிலாந்தில் சமுதாயத்தின் கீழ்தட்டுகளில் இருப்பவர்கள் தற்காலிக கடனைப் பயன்படுத்திக் கொள்வதற்காக ஆண்டுக்கு சுமார் ஒரு மிலியன் செலுத்துகிறார்கள் - அடகு வைத்து மூழ்கிப் போகும் சரக்குகள் என்ற வகையில் அவர்களுக்கு ஏற்படும் இழப்பை இதில் சேர்க்கவில்லை. (ஜா.டி. டக்கெட், உழைக்கும் மக்களின் கடந்த கால, நிகழ்கால நிலவரத்தின் வரலாறு, லண்டன், 1846, I, பக்கம் 114.)

*அல்ல. 17ம் நூற்றாண்டின் கடைசிப் பத்தாண்டில் இவர்கள் நிலச் சொத்தின் அடிப்படையிலான காகிதப் பணத்தை பயன்படுத்தும் நிலவள வங்கியைக் கொண்டு ஆங்கிலேய உயர்குலத்தாரை கடுவட்டியிலிருந்து விடுவிக்க முயன்றார்கள்.[22].*

*கடல் வாணிபமும் அதன் அடிப்படையிலான மொத்த வர்த்தகமும் பழைய முறையிலான கடுவட்டியின் ஆதிக்கத்திலிருந்தும் தனவணிக ஏக போகத்திலிருந்தும் விடுபட வேண்டிய தேவையிலிருந்து எழுந்தவையே வெனிசிலும் ஜெனோவாவிலும் 12ஆம் நூற்றாண்டிலும் 14ஆம் நூற்றாண்டிலும் நிறுவப்பட்ட கடன்-செலாவணிச் சங்கங்கள். அந்த நகரக் குடியரசுகளில் நிறுவப்பட்ட முறையான வங்கிகள் அதே போது பொதுக் கடன் நிறுவனங்களாகவும் செயல்பட்டன, அவற்றிலிருந்து அரசானது வருங்கால வரிவருவாய்களை ஈடாய்க் காட்டி கடன் வாங்கியது. ஆனாலும் ஒன்றை மறந்து விடக் கூடாது; அதாவது, அந்தச் சங்கங்களை ஏற்படுத்திய வணிகர்களே இந்த அரசுகளில் மிக முக்கியப் பிரமுகர்களாகவும் இருந்தார்கள், இவர்கள் கடுவட்டிச் சுமையிலிருந்து அரசை மட்டுமல்லாமல் தங்களையும் கூட விடுவித்துக் கொள்வதில் கருத்தாய் இருந்தார்கள்.[23]. அதே போது அரசை இன்னுங்கூட இறுக்க மாகவும் கெட்டியாகவும் தங்கள் பிடியில் வைத்துக் கொள்வதிலும் குறியாய் இருந்தார்கள். இதனால்தான் இங்கிலாந்து வங்கி நிறுவப்பட இருந்தபோது, டோரிகளும் எதிர்ப்பு தெரிவித்தார்கள்: 'வங்கிகள்*

---

(22) 'நிலம் படைத்தோரின் பொது நன்மையே, நில மதிப்பின் பெரும் அதிகரிப்பே, பிரபுக் குலத்தாரும், கனவான்களும் இன்ன பிறரும் வரிகளிலிருந்து விலக்கு பெறச் செய்வதே, அவர்களின் வருடாந்தர வரவு செலவுகளையும் பெருகச் செய்வதே' தங்களின் பிரதான நோக்கம் என்பதை இவர்கள் தாம் எழுதும் நூல்களின் பெயரிலேயே சொல்லி விடுகிறார்கள்; கடுவட்டிக்காரர்கள் மட்டுமே இதனால் இழப்புக்கு ஆளாவர்கள். நாட்டின் கொடும் பகைவர்களான இவர்கள் பிரபுக்குலத்தாருக்கும் குடியானவர்களுக்கும் பெருங்கேடு பிரான்சிலிருந்து ஒரு சேனை படையெடுத்து வந்து செய்திருக்கக் கூடியதை விடவும் அதிகமாய் கேடு செய்தவர்கள்.

(23) எடுத்துக்காட்டாக பணக்கார பொற்கொல்லர்கள் இவர்களே வங்கியாளர்களின் முன்னோடிகள் பணக்கடன் வசதிக்காக இங்கிலாந்து மன்னர் இரண்டாம் சார்லஸிடமிருந்து இருபது முப்பது சதவீதம் வட்டி வசூலித்தார்கள். இந்தத் தொழில் இவ்வளவு இலாபகரமானதாய் இருந்தால் பொற்கொல்லர்கள் மேன்மேலும் மன்னருக்கு கடன்கொடுப்பவர்களாகி அரசின் வருவாய் அனைத்தையும் முன்னதாகவே எதிர்பார்த்து, நாடாளுமன்றத்தின் ஒவ்வொரு ஒதுக்கீட்டையும் உடனுக்குடன் அடமானம் ஆக்கிக் கொள்ளலாயினர்; அடகு உண்டியல்கள், சரக்காணைகள், எதிர்முறிகள் ஆகியவற்றை விலைக்கு வாங்குவதிலும் அடமானமாய்க் கொள்வதிலும் ஒருவரை ஒருவர் விஞ்சுவதற்கும் முயன்றனர்; இதன் விளைவாக வருவாய்களனைத்தும் அவர்களின் கைவழிச் சென்றன. (ஜான் பிரான்சிஸ், இங்கிலாந்து வங்கியின் வரலாறு, லண்டன், 1848, I,பக்கம் 31). 'வங்கி ஒன்று ஏற்படுத்தப்படவேண்டுமென்று இதற்கு முன்பே பலமுறை ஆலோசனை வழங்கப்பட்டது. முடிவில் அதுவே அவசிய தேவை ஆயிற்று.' (முன்வந்தது, பக்கம் 38). 'அரசானது கடுவட்டிக்காரர்களால் ஒட்ட உறிஞ்சப்பட்டு விட்ட நிலையில், நாடாளுமன்ற ஒதுக்கீடுகளை பிணையமாய்க் கொண்டு நியாயமான வட்டிக்குப் பணம் பெறும் பொருட்டு, அரசுக்கே வங்கி அவசியத் தேவை ஆயிற்று.' (முன்வந்தது, பக்கம் 59, 60.)

குடியரசு நிறுவனங்களாகும். வெனிஸ், ஜெனோவா, ஆம்ஸ்டர்டாம். ஹம்பர்க் ஆகிய இடங்களில் வளங்கொழிக்கும் வங்கிகள் இருந்து வந்தன. ஆனால் பிரான்ஸ் வங்கி என்றோ ஸ்பெயின் வங்கியென்றோ யாராவது கேள்விப்பட்டதுண்டா?'

1609இல் ஆம்ஸ்டர்டாம் வங்கி நிறுவப்பட்டதானது (1619இல் ஹாம்பர்க் வங்கி நிறுவப்பட்டதைப் போலவே) நவீன கடன்-செலாவணி அமைப்பின் வளர்ச்சியில் ஒரு சகாப்தகர நிகழ்ச்சியல்ல. அது முழுக்க முழுக்க வைப்புகளுக்கான வங்கியாகவே இருந்தது. வங்கியினால் வெளியிடப் பெற்ற காசோலைகள் என்பவை நாணயமாக்கப்பட்டோ படாமலோ அதனிடம் வைப்பிலிருந்த உயர்நிலை உலோகத்திற்கான பற்றுச் சீட்டுகளாகத்தான் இருந்தன. ஏற்பாளர்களின் புறக்குறிப்போடுதான் அவை புழக்கத்திற்கு வந்தன. ஆனால் ஹாலந்தில் வர்த்தகக் கடன்-செலாவணியும் தனவணிகமும் வர்த்தகத்துடனும் பட்டறைத் தொழிலுடனும் சேர்ந்து வளர்ச்சி பெற்றன; இந்த வளர்ச்சியின் போக்கே வட்டி-மூலதனத்தை தொழில்துறை மூலதனத்துக்கும் வர்த்தக மூலதனத்துக்கும் கீழ்ப்படுத்துவதாய் இருந்தது. வட்டி வீதம் குறைவாய் இருந்ததிலிருந்து ஏற்கெனவே இதை அறிய முடிந்தது. ஆனால் இன்றைக்கு இங்கிலாந்து கருதப்படுவது போல் 17ஆம் நூற்றாண்டில் ஹாலந்து பொருளாதார வளர்ச்சியின் முன்மாதிரி நாடாக கருதப்படவில்லை. வறுமையை அடிப்படையாகக் கொண்ட பழைய முறையிலமைந்த கடுவட்டியின் ஏகபோகம் அந்நாட்டில் தானாகவே சரிந்து தகர்புற்றது.

18ஆம் நூற்றாண்டு முழுவதிலும், ஹாலந்தை எடுத்துக்காட்டி, வட்டி வீதத்தை கட்டாயமாய்க் குறைக்கச் சொல்லும் கூக்குரல் கேட்கிறது (சட்டங்களும் அவ்வாறே இயற்றப்படுகின்றன); வர்த்தக மூலதனத்தையும் தொழில்துறை மூலதனத்தையும் வட்டி-மூலதனத்திற்கு கீழ்படுத்துவதற்கு பதில், பின்னதை முன்னவற்றிற்கு கீழ்ப்படுத்த வேண்டுமென்பதே இதன் நோக்கம். இந்த இயக்கத்திற்கு முக்கியச் சொல் விளம்பியாய் இருந்தவர் சாதாரண ஆங்கிலேய தனியார் வங்கித் தொழிலின் தந்தை சர் ஜோசையா சைல்டு ஆவார். அவர் கடுவட்டிக்காரர்களின் ஏகபோகத்தை எதிர்த்து முழக்கமிடுவது பெரும் ஆடைத்தயாரிப்பாளரான மோசஸ் & சன் நிறுவனத்தார் 'தனிப்பட்ட தையற்காரர்களின்' ஏகபோகத்தை எதிர்த்து முழக்கமிடுவதைப் போல் உள்ளது. இதே ஜோசையா சைல்டு ஆங்கிலேய பங்கு-வணிகத்தின் தந்தையும் ஆவார். கிழக்கிந்தியக் கம்பெனியின் ஏகச் சக்கராதிபதியாகிய இவர் தடையிலா வாணிபத்தின் பெயரால் அந்நிறுவனத்தின்

*ஏகபோகத்துக்கு வக்காலத்து வாங்குகிறார். இவர் (பணத்தின் வட்டி பற்றிய தவறான புரிதல் எனும் நூலை எழுதிய)*. தாமஸ் மான்லிக்கு எதிராகச் சொல்கிறார்: 'பயந்து நடுங்கும் கடுவட்டிக்காரக் கும்பலுக்கு பரிந்து பேசுகிறவர் என்ற முறையில், அவர் தமது தாக்குதலுக்கு முக்கிய இலக்காய் கொள்வது மிக நலிந்த இடமென்று நான் அறிவித்திருப்பதைத்தான் ... வட்டி வீதம் குறைவாய் இருப்பது செல்வ வளத்திற்கு காரணம் என்பதை மண்டையடியாக மறுக்கிறவர் அது செல்வ வளத்தின் விளைவுதான் என்று சத்தியம் செய்கிறார்.'* (Traités Sur le Commerce, etc., *1669, ஆம்ஸ்டர்டாம் மற்றும் பெர்லின் பதிப்பு, 1754.) 'வர்த்தகத்தினால்தான் நாட்டின் செல்வ வளம் பெருகும் என்றால், வட்டியைக் குறைப்பதால் வர்த்தகம் கூடிப்போகும் என்றால் வட்டியைக் குறைப்பது அல்லது கடுவட்டியைத் தணிப்பது என்பது சந்தேகமே இல்லாமல் நாட்டின் செல்வத்திற்கு பயன் வாய்ந்த முக்கியக் காரணங்களில் ஒன்றாகிவிடும். ஒரே சங்கதி குறிப்பிட்ட நிலைமைகளில் காரணமாகவும், அதேபோது வேறு சில நிலைமைகளில் காரியமாகவும் இருக்கலாம் என்று சொல்வது எவ்விதத்தும் அபத்தமாகாது.' (முன் வந்தது, பக்கம் 155) 'கோழிக்கு முட்டை காரணம், முட்டைக்கு கோழி காரணம். வட்டியைக் குறைப்பது செல்வ வளம் பெருகுவதற்கு காரணமாய் இருக்கலாம், செல்வவளம் பெருகுவது வட்டி இன்னும் குறைவதற்கு காரணமாய் இருக்கலாம்.' (முன்வந்தது, பக்கம் 156) 'நான் சோராதுழைப்பதற்கு வாதிடுகிறவன், என் எதிராளியோ சோம்பிக் கிடப்பதற்கும் தூங்கி வழிவதற்கும் வாதிடுகிறார். '(முன் வந்தது, பக்கம் 179)*

கடுவட்டிக்கெதிரான இந்த உக்கிரப் போராட்டம், வட்டி-மூல தனத்தை தொழில்துறை-மூலதனத்திற்குக் கீழ்ப்படுத்துவதற்கான இந்தக் கோரிக்கை முதலாளித்துவப் பொருளுற்பத்திக்கான, இந்த முன்தேவைகள் நவீன வங்கிப் பொருளாதாரத்தின் உருவில் தோற்றுவிக்கும் அங்ககப் படைப்புகளின் வருகைக்குக் கட்டியம் கூறுவதாகுமே தவிர வேறல்ல; இந்த வங்கிப் பொருளாதாரமானது ஒருபுறம் வேலையில்லாமல் ஒய்ந்திருக்கும் சேமப்பண இருப்புகள் அனைத்தையும் குவித்துப் பணச் சந்தையில் வீசுவதன் மூலம் கடுவட்டி மூலதனத்தின் ஏகபோகத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கிறது; மறுபுறம் கடன் -செலாவணி பணத்தைத் தோற்றுவித்து உயர்நிலை உலோகத்தின் ஏகபோகத்துக்கே வரம்பிடுகிறது.

---

(*) தாமஸ் மான்லி அல்ல இந்நூலை எழுதியது. அது 1668 லண்டனில் ஆசிரியர் பெயரில்லாமல் வெளியிடப்பட்டது.- ஆங்கிலப் பதிப்பாசிரியர்.)

கடுவட்டிக்கு எதிர்ப்பு தெரிவிப்பது, வர்த்தகத்தையும் தொழில் துறையையும் அரசையும் கடுவட்டியின் பிடியிலிருந்து விடுவிக்கக் கோருவது இங்கு சைல்டின் குரலில் வெளிப்படும் இதே எதிர்ப்பு. இதே கோரிக்கை 17ஆம் நூற்றாண்டின் கடைசி மூன்றாம் பகுதியிலும், 18ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் இங்கிலாந்தில் வங்கித் தொழில் பற்றிய எழுத்துக்கள் யாவற்றிலும் வெளிப்படக் காணலாம். கடன் செலாவணியும் உயர்நிலை உலோகங்களின் ஏகபோகம் ஒழிக்கப் படுவதும், அவற்றின் இடத்துக்கு காகிதப்பணம் வந்துவிடுவதும் இன்னபிறவும் விளைவிக்கப் போகும் அதிசயங்கள் குறித்து மலைமலையாய் மாயைகள் வளர்ந்திருக்கவும் காணலாம். இங்கிலாந்து வங்கியையும் ஸ்காட்லாந்து வங்கியையும் நிறுவிய ஸ்காட்லாந்தியர் வில்லியம் பேட்டர்சன் எப்படிப் பார்த்தாலும் முதலாம் ஜான்லா ஆவார்.

இங்கிலாந்து வங்கியை எதிர்த்து 'பொற்கொல்லர்கள், அடகுக் கடைக்காரர்கள் அத்தனை பேரும் கோபமுற்று கூச்சலிட்டனர்'. (மெக்காலே, இங்கிலாந்தின் வரலாறு, IV, பக்கம் 499). முதல் பத்தாண்டு காலத்தில் இங்கிலாந்து வங்கி பெரும் இடர்ப்பாடுகளில் சிக்கித் தவிக்க நேரிட்டது; அயல்நாட்டுப் பூசல்கள் பெரிய அளவில் எழுந்தன; வங்கியின் நோட்டுகள் அவற்றின் பெயர் மதிப்பை விட மிகக் கீழான தொகைக்கே ஏற்றுக் கொள்ளப்பட்டன; ... பொற்கொல்லர்கள் (தம் கையிலிருந்த உயர்நிலை உலோக வர்த்தகத்தை, ஆதிகால வங்கித் தொழிலுக்கு அடிப்படையாகப் பயன்படுத்திக் கொண்ட இவர்கள்) இங்கிலாந்து வங்கிமீது பொறாமைப்பட்டார்கள். ஏனென்றால் அவர்களின் வியாபாரம் சுருங்கிவிட்டது. கழிவுகள் குறைந்து விட்டன. அரசுடன் அவர்கள் நடத்தி வந்த கொடுக்கல்-வாங்கல்கள் கைமாறி எதிராளிகளிடம் போய்விட்டன.' (ஜா.பிரான்சிஸ்; முன்வந்தது; பக்கம் 73)

இங்கிலாந்து வங்கி நிறுவப்படுவதற்கு முன்பே, 1683இல் தேசக் கடன்-செலாவணி வங்கி நிறுவுவதற்கான திட்டம் முன்மொழியப் பட்டது. இதன் நோக்கங்களில் ஒன்று, 'வர்த்தகர்கள் தம்மிடம் கணிச அளவில் சரக்குகள் இருக்கும் போது, அவற்றை விற்று இழப்புக்கு ஆளாவதற்கு பதில் நல்ல சந்தை கிடைக்கும் வரை இந்த வங்கியின் துணை கொண்டு அவற்றை வைப்பிலிடலாம். ஓய்ந்து கிடக்கும் சரக்கிருப்பை ஈடாய்க் கொண்டு கடன் பெற்று வேலையாட்களை அமர்த்தி வாணிபத்தைப் பெருக்கிக் கொள்ளலாம் என்பதாகும்.'

ஜா.பிரான்சிஸ், முன்வந்தது, அத்தியாயம் I). அநேக முயற்சிகளுக்குப் பின் இந்தக் கடன்-செலாவணி வங்கியானது பிஷப் கேட் தெருவில் தெவோன்ஷயர் இல்லத்தில் நிறுவப்பட்டது. வைப்பிலிடப்படும் சரக்குகளை பிணையமாய்க் கொண்டு அவற்றின் மதிப்பில் முக்கால் பங்கு எனுமளவுக்கு அது தொழிலதிபர்களுக்கும் வணிகர்களுக்கும் மாற்று உண்டியல்களின் வடிவில் கடன் கொடுத்தது. இந்த மாற்று உண்டியல்களை புழக்கத்தில் சுற்றியோடக் கூடியவை ஆக்க வேண்டுமென்று, ஒவ்வொரு தொழிற்கிளையிலும் பலர் ஒன்று சேர்ந்து சங்கம் அமைத்துக் கொண்டனர். இவ்வாறான உண்டியல்களை வைத்திருக்கிற ஒவ்வொருவரும் ரொக்கம் கொடுத்துப் பெறுவதைப் போலவே இந்தச் சங்கத்திலிருந்து எளிதில் சரக்குகள் பெற முடியும். இந்த வங்கியின் தொழில் பிரமாதமாய் நடைபெறவில்லை. அதன் பொறியமைவு மிகவும் சிக்கலானதாய் இருந்தது, சரக்குகள் மதிப்பிறக்கத்துக்கு உள்ளாகும் ஆபத்து மிக அதிகமாய் இருந்தது.

இங்கிலாந்தில் நவீன கடன்-செலாவணி அமைப்பின் உருவாக்கத்துக்கு தத்துவக் கூட்டாளிகளாய்க் கைகோத்து வரும் இந்த எழுத்துகளின் மெய்யான உள்ளடக்கத்தை கூர்ந்து நோக்குவோமானால், அவற்றில் நாம் காணக் கூடியதெல்லாம் வட்டிமூலதனத்தையும், பொதுவாக கடனுக்குரிய உற்பத்திச் சாதனங்களையும் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறைக்கு உட்படுத்த வேண்டும், இது அப்பொருளுற்பத்தி முறைக்கான முன்நிபந்தனைகளில் ஒன்று என்ற கோரிக்கையே தவிர வேறல்ல. மறுபுறம், இவ்வெழுத்துகளில் ஆளப்பட்டுள்ள சொற்றொடர்களை மட்டும் எடுத்துக் கொண்டு பார்த்தால், இவையும் சான்-சிமோனியர்கள் வங்கித் தொழில் குறித்தும் கடன்-செலாவணி குறித்தும் கொண்டிருக்கிற மாயைகளும் - சொல் பிசகாமல் அப்படியே ஒத்திருப்பது அடிக்கடி நம்மை வியப்பிலாழ்த்தும்.

எப்படி பிசியோக்கிராட்டுகளின் எழுத்துகளில் Cultivateur என்ற சொல் உள்ளபடியே நிலத்தில் இறங்கி பாடுபடுகிறவரை குறிப்பதற்கும் பதில் பெருஞ்சாகுபடியாளரையே குறிக்கிறதோ, அதேபோல் சான் - சிமோனன் எழுத்துக்களிலும் இதுநாள்வரை அவர்தம் சீடர்களின் நோக்கிலும் travailleur என்ற சொல் தொழிலாளியைக் குறிப்பதற்குப் பதில் தொழில்துறை முதலாளியையோ வர்த்தகத்துறை முதலாளியையோதான் குறிக்கிறது.' Travailleur (தொழிலாளி) என்பவருக்கு உதவியாளர்கள், துணையாட்கள், உழைப்பாளர்கள்

தேவை; அறிவுக் கூர்மையும் ஆற்றலும் அர்பணிப்பும் வாய்ந்தவர்களை அவர் தேடிப் பிடிக்கிறார்; அவர்களை வேலை வாங்குகிறார், அவர்களின் உழைப்பு திறனுடை-உழைப்பாகும்.' (Enfantin); Religion Saint-Simonienne, Économie Politique et Politique, paris 1831, பக்கம் 104).

உண்மையில் சான்-சிமோன் தமது கடைசி நூலாகிய Le Nouveau Christianisme என்பதில்தான் நேரடியாகத் தொழிலாளி வர்த்தகத்தை ஆதரித்துப் பேசுகிறார், தாம் செய்யும் முயற்சிகளின் குறிக்கோள் தொழிலாளியின் விடுதலையே என்று பறைசாற்றுகிறார் என்பதை மறக்கலாகாது. அதற்கு முன் அவர் எழுதியவையெல்லாம் பிரபுத்துவ அமைப்புக்கு மாறாக நவீன முதலாளித்துவ சமுதாயத்தையும் நெப்போலியன் சகாப்தத்தின் படைத் தலைவர்களுக்கும் சட்ட உற்பத்தியாளர்களுக்கும் மாறாக தொழிலதிபர்களையும் வங்கியாளர்களையும் ஏற்றிப் போற்றுகிற வெறும் புகழ்மாலைகளே தவிர வேறல்ல. அதே காலத்தில் ஓவன் எழுதியவற்றோடு ஒப்பு நோக்குங்கால் வெளிப்படும் வேறுபாடுதான் என்னே![24].

சான்-சிமோனின் வழிவந்தவர்களுக்கும் கூட தொழில்துறை முதலாளிதான் travilleur par excellence,* ஆக இருந்து வருகிறார் என்பதை மேலே எடுத்துக்காட்டிய மேற்கோளிலிருந்து அறிய முடிகிறது. இவர்களின் எழுத்துக்களை விமர்சன நோக்கில் படித்துப் பார்த்தால், எமிலி பெரைரே என்னும் முன்னாள் சான்-சிமோனியர் நிறுவிய crédit mobilier அமைப்பில் கடன்-செலாவணி

(24) எங்கெல்ஸ் குறிப்பு:- மார்க்ஸ் தமது கையெழுத்துப் பிரதியை மறுபடியும் திருத்தியிருந்தால் இந்தப் பகுதியை கணிசமாய் மாற்றியமைத்திருப்பார் என்பதில் சந்தேகமில்லை. பிரான்ஸ் நாட்டில் இரண்டாவது பேரரசில் முன்னாள் சான் -சிமோனியர்கள் வகித்த பங்குதான் இந்நூற்பகுதியை எழுத அவரைத் தூண்டியது. மார்க்ஸ் மேற்கண்டவாறு எழுதிய அதே காலத்தில் அங்கே இந்த மரபினரின் உலகைக் குலுக்கும் கடன் - செலாவணிக் கனவுகள் முன்னெப்போதும் கேட்டிராத அளவுக்கு மிகப் பெரும் மோசடி ஒன்றின் வடிவில் நனவாகிக் கொண்டிருந்தன என்பது வரலாற்று விசித்திரமே. மார்க்ஸ் பிற்காலத்தில் சான் - சிமோனின் மேதைமையை பல்துறை ஞானத்தை வியந்து போற்றவே செய்தார். சான் - சிமோன் அவரின் தொடக்க கால நூல்களில் முதலாளி வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையிலான எதிர்நிலையை கண்டு கொள்ளவே. (இந்த எதிர்நிலை பிரான்சில் அப்போதுதான் தலையெடுத்துக் கொண்டிருந்தது). அவர் Travailleurs என்பதில் முனைப்புடன் பொருளுற்பத்தியில் புடுபட்டிருந்த முதலாளி வர்க்கப் பகுதியையும் சேர்த்துக் கொள்கிறார் என்னும் போது, இது மூலதனத்தையும் உழைப்பையும் இணக்கப்படுத்த ஃபூரியேவின் கண்ணோட்டமாகவும் இருக்கிறது; அக்காலத்தில் பிரான்சில் நிலவிய பொருளாதார அரசியல் நிலைமைகளே இதற்கு காரண விளக்கமாகின்றன. இந்த அமிசத்தில் ஓவன் இன்னுமதிகத் தொலை நோக்குடையவராய் இருந்தார் என்றால், அவரது சூழல் மாறுபட்டிருந்ததால்தான் அது சாத்தியமாயிற்று. தொழில்புரட்சிக் காலத்தில், வர்க்கப் பகைமைகள் முற்றிக் கூர்மையுற்று கொண்டிருந்த காலத்தில் வாழ்ந்தவர் அவர்.)

(*) மிகச் சிறந்த தொழிலாளி

தொடர்பாகவும், வங்கிதொடர்பாகவும் இவர்கள் கண்ட கனவுகள் எல்லாம் நனவாயின என்பதில் வியப்படையத் தேவை இருக்காது.)

இந்த வடிவம் கடன்-செலாவணி அமைப்போ பெருவீதத் தொழில்துறையோ நவீன காலத்துக்குரிய வளர்ச்சி நிலையை வந்தடையாமலிருந்த பிரான்சு போன்ற ஒரு நாட்டில்தான் ஆதிக்கம் முதன்மை பெற முடிந்தது என்பதை இங்கு இடைக்குறிப்பாய்ச் சொல்லி வைக்கலாம். இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் இது சாத்தியப் படவே இல்லை. Crédit Mobilier அமைப்பின் கருநிலை வடிவம் கீழே நாம் எடுத்துக்காட்டவிருக்கும் நூலின் பகுதிகளிலேயே காணக் கிடைக்கிறது. அந்நூல் இதுதான்: Doctrine de saint-simon, Exposition. Premiere année), 1828-29, 3ஆம் பதிப்பு, பாரிஸ், 1831. எப்படி முதலாளிகளையும் தனிப்பட்ட கடுவட்டிக்காரர்களையும் விட வங்கியாளர்களால் குறைந்த வட்டிக்குக் கடன் தர முடிகிறது என்பதை எளிதிற் புரிந்து கொள்ளலாம். இவ்வாறு இந்த வங்கியாளர்கள் 'நிலக்கிழார்களையும் முதலாளிகளையும் விட மலிவாக, அதாவது குறைந்த வட்டிக்கு கருவிகளைத் தொழிலதிபர்களுக்கு கொடுத்துதவ முடிகிறது. ஏனென்றால் நிலக்கிழார்களையும் முதலாளிகளையும் பொறுத்தவரை, யாருக்கு கடன் தருவதென்று தீர்மானிப்பதில் தவறு புரிந்திட அதிக வாய்ப்புண்டு' (பக்கம் 202). ஆனால் இந்நூலாசிரியரே அடிக்குறிப்பில் இதையும் சொல்கிறார்: 'வேலையற்ற பணக்காரர் களுக்கும் Travailleursக்கும் இடையாளர்களாய் வங்கியாளர்கள் செயல் புரிவதிலிருந்து வரக்கூடிய நன்மை ஒழுங்கற்ற நமது சமுதாயத்தில் தன்னலப்பற்றுக்கு கிடைக்கும் வாய்ப்புகளால் கெட்டுவிடுவதுண்டு. ஏன்,ஒழிந்தே போவதும் உண்டு; இது ஏமாற்றமாகவும் மோசடியாகவும் பகட்டு ஆரவாரமாகவும் பல்வேறு விதமாய் வெளிப்படலாம். Travailleurs, வேலையற்ற பணக்காரர்கள் ஆகிய இருதரப்பினரையும் சுரண்டுவதற்காக அநேக சந்தர்ப்பங்களில் வங்கியாளர்கள் அவர்களுக் கிடையில் நுழைந்துவிடுகிறார்கள், இதனால் சமுதாயத்திற்குத்தான் தீமை' இங்கு Travailleurs தொழில் துறை முதலாளியைக் குறிப்பதாகும். மேலும் நவீன வங்கித் தொழிலமைப்பின் ஆளுகையிலிருக்கும் செல்வாதாரங்களை வேலையற்றவர்களின் செல்வாதாரங்களாக மட்டும் கருதுவது தவறு. முதலாவதாக, அது தொழிலதிபர்களும் வணிகர்களும் சேமப் பண இருப்பு என்ற முறையிலோ முதலீடு செய்ய வேண்டிய மூலதனம் என்ற முறையிலோ அப்போதைக்கு வேலையற்ற பணத்தின் வடிவில் வைத்திருக்கும் மூலதனப் பகுதி ஆகும். அது வேலையற்ற மூலதனம்தானே தவிர வேலையற்றவர்களின்

மூலதனமல்ல. இரண்டாவதாக, அது ஒவ்வொருவரின் வருவாயிலும் சேமிப்பிலும் நிரந்தரமாகவோ அப்போதைக்கோ மூலதனத் திரட்டலுக்காக ஒதுக்கி வைக்கப்பட வேண்டிய பகுதி ஆகும்.- இரண்டுமே வங்கித் தொழில் அமைப்பின் இயல்புக்கு இன்றியமையாதவை.

ஆனால் இரு விவரங்களை ஒருபோதும் மறக்கலாகாது; முதலாவதாக, உயர்நிலை உலோக வடிவிலமைந்த பணம்தான் அடித்தளமாய் இருந்து வருகிறது; இந்த அடிதளத்திலிருந்து கடன் -செலாவணி அமைப்பு விடுபட்டு விலகிச் செல்வது ஒரு போதும் சாத்தியமில்லை; அதன் இயல்பே அப்படிப்பட்டது. இரண்டாவதாக, தனியாட்கள் (மூலதனமாகவும் நிலச்சொத்தாகவும்) சமுதாயப் பொருளுற்பத்திச் சாதனங்களில் ஏகபோகம் வகிப்பது கடன்-செலாவணி அமைப்புக்கு இன்றியமையாதது; இவ்வமைப்பே, ஒருபுறம் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையில் இயல்பான வடிவமாகவும், மறுபுறம் இப்பொருளுற்பத்தி முறை இறுதி உச்சநிலைக்கு வளர்ச்சி பெறுவதற்கான உந்து-சக்தியாகவும் இருக்கிறது.

1697இலேயே இங்கிலாந்தின் நலன்கள் குறித்து சில சிந்தனைகள் என்ற நூலில் கூறப்பட்டது போல, ஒழுங்கமைப்பையும் மையப் பாட்டையும் பொறுத்தவரை வங்கியமைப்புதான் முதலாளித்துவ பொருளுற்பத்தி முறையினால் தோற்று விக்கப்பட்டவற்றில் மிகவும் செயற்கையானது, மிகவும் நுட்பமானது. இதனால்தான் இங்கிலாந்து வங்கி போன்ற ஒரு நிறுவனம் வர்த்தகத்தின் மீதும் தொழில்துறையின் மீதும் பேரதிகாரம் கொண்டதாய் இருக்க முடிகிறது; அவற்றின் உள்ளபடியான அசைவியக்கம் அவ்வங்கியின் செயலெல்லைக்கு அப்பாற்பட்டதாக இருந்த போதிலும், அவற்றில் அது முனைப்பிலா பங்கே வகித்த போதிலும் அது அவற்றின் மீது இவ்விதம் போதிகாரம் கொண்டதாய் இருக்கிறது. வங்கி அமைப்பானது சர்வப்பொதுவான கணக்குப் பதிவிற்கும் சமுதாய அளவிலான உற்பத்திச் சாதன வினியோகத்திற்கும் ஏற்ற வடிவத்தைப் பெற்றுள்ளது. ஆனால் வடிவத்தை மட்டும்தான் பெற்றுள்ளது. தனிப்பட்ட முதலாளியின் அல்லது குறிப்பிட்ட ஏதேனுமொரு மூலதனத்தின் சராசரி இலாபம் அந்தந்த மூலதனமும் நேரடியாகத் தனதாக்கிக் கொள்ளும் உபரி-உழைப்பால்-நிர்ணயிக்கப்படுவதில்லை, மொத்த மூலதனம் தனதாக்கிக் கொள்கிற மொத்த உபரி-உழைப்பால்தான் நிர்ணயிக்கப் படுகிறது; இந்த மொத்த உபரி-உழைப்பிலிருந்து தனிப்பட்ட ஒவ்வொரு

மூலதனமும் மொத்த மூலதனத்தின் ஈவுப்பகுதி என்ற முறையில் விகிதப்படி தனக்குரிய ஆதாயப்பங்கீட்டைப் பெறுகிறது. மூலதனத்தின் இந்த சமூகத்தன்மையானது கடன்-செலாவணி மற்றும் வங்கித் தொழில் அமைப்பின் நிறை வளர்ச்சியினூடாகத்தான் அரும்பி, மலர்ந்து, முழுமையாக வெளிப்படுகிறது. ஆனால் இவ்வமைப்பு இதற்கு மேலும் செல்கிறது. ஏற்கெனவே முனைப்புடன் செயல்பட்டுக் கொண்டிராத மூலதனத்தை எல்லாம் - தயாராய் இருக்கிற மூலதனத்தை மட்டுமல்ல, உள்ளுறை மூலதனத்தையும் கூட - தொழில்துறை முதலாளிகளின் வசத்திலும் வர்த்தக முதலாளிகளின் வசத்திலும் ஒப்படைக்கிறது; இதனால்தான் இந்த மூலதனத்தை கடனாய்க் கொடுப்பவர்களோ பயன்படுத்திக் கொள்பவர்களோ அதன் உண்மையான உடைமையாளர்கள் அல்லது உற்பத்தியாளர்களாய் இருப்பதில்லை. அது இவ்விதம் மூலதனத்தின் தனியுடைமைத் தன்மையை ஒழித்துக் கட்டுகிறது, உள்ளார்ந்த முறையில் மட்டுமே - மூலதன ஒழிப்பையே தன்னுள் கொண்டிருக்கிறது. வங்கித் தொழில் அமைப்பானது மூலதன வினியோகப் பணியை தனிப்பட்ட முதலாளிகளின் கையிலிருந்தும் கடுவட்டிக்காரர்களின் கையிலிருந்தும் அகற்றி, ஒரு தனித் தொழிலாக, சமூகப் பணியாக மாற்றிவிடுகிறது. ஆயின் இதனாலேயே, வங்கித் தொழிலும் கடன்-செலாவணியும் முதலாளித்துவப் பொருளுற்பத்தியை வரம்பு மீறச் சக்திமிக்க சாதனமும் நெருக்கடிகளுக்கும் மோசடிகளுக்கும் திறமிக்கதொரு வாகனமும் ஆகின்றன.

மேலும் வங்கித் தொழில் அமைப்பால் பணத்துக்குப் பதில் பல்வேறு சுற்றோட்டக் கடன்-செலாவணி வடிவங்களை நுழைக்க முடிவதிலிருந்து நிரூபணமாவது என்னவென்றால்: பணம் என்பது உண்மையில் உழைப்புக்கும் அதன் உற்பத்திப் பொருட்களுக்கும் உரிய சமூகத் தன்மையின் தனித் தெரிவிப்பே தவிர வேறல்ல. ஆனால் இந்தச் சமூகத் தன்மையானது தனியார் பொருளுற்பத்தியின் அடிப்படைக்கு எதிர்நிலையில் இருப்பதால், கடைசியாகப் பார்க்குமிடத்து பண்டம் அல்லது பொருளாகவோ, ஏனைய சரக்குகளின் பக்கத்தில் ஒரு தனிவகைச் சரக்காகவோ காட்சி அளித்தாக வேண்டும்.

முடிவில் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையிலிருந்து கூட்டுத்துவ உழைப்பின் பொருளுற்பத்தி முறைக்கு மாறிச் செல்லும் காலத்தில் கடன்-செலாவணி அமைப்பு சக்திமிக்கதொரு நெம்பு கோலாகப் பயன்படும் என்பதில் சந்தேகமில்லை; ஆனால்

பொருளுற்பத்தி முறையிலான ஏனைய பெரும் அங்கக் புரட்சிகளுடன் தொடர்புடைய ஒரு கூறாக மட்டுமே அது பயன்படும். மறுபுறம், சோசலிச அர்த்தத்தில் கடன்-செலாவணி மற்றும் வங்கித் தொழில் அமைப்பில் அதிசயச் சக்தி தொடர்பாய் எழும் மாயைகள் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை குறித்தும் அதன் வடிவங்களில் ஒன்று என்ற முறையில் கடன்-செலாவணி அமைப்பு குறித்ததுமான முழு அறியாமையிலிருந்தே எழுகிறவை. உற்பத்திச் சாதனங்கள் மூலதனமாக மாற்றப்படுவது நின்று போனவுடனே (அதாவது நிலத்திலான தனியுடைமையும் ஒழிக்கப்பட்டவுடனே) கடன்-செலாவணி என்பதே பொருளற்றதாகிவிடுகிறது. சான்-சிமோனியர்களும் கூட இதைப் புரிந்து கொண்டார்கள் என்பதைக் குறிப்பிடலாம். மறுபுறம், முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை நீடித்திருக்கும் வரை, அதன் வடிவங்களில் ஒன்று என்ற முறையில் வட்டிமூலதனமும் நீடித்து இருக்கிறது, உண்மையில் அதன் கடன்-செலாவணி அமைப்புக்கு அடிப்படையும் ஆகிறது. சரக்கு உற்பத்தி நீடித்திருக்கும் போதே பணத்தை ஒழிக்க வேண்டும் என்று பரபரப்பூட்டிய அதே எழுத்தாளரால்தான் -(புரூதோன்)[25] குட்டி முதலாளித்துவக் கூட்டத்தாரின் நப்பாசையை கைகூடச் செய்வதாய் சொல்லிக் கொண்டு, வட்டியில்லாக் கடன் (credit gratuit) என்னும் பேரபத்தம் பற்றி மனக்கோட்டை கட்டிப் பார்க்கவும் முடிந்தது.

**Religion Saint - Simonienne, Economie Politique et politique,** என்ற நூலில் பக்கம் 45இல் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது: 'சிலர் தொழிற்கருவிகளைப் பெற்றிருந்தும் அவற்றைப் பயன்படுத்துவதற்கு திறமையோ சித்தமோ இல்லாதிருக்க, மற்றவர்கள் முயற்சி யுடையோராய் இருந்தாலும் உழைப்புக் கருவிகள் ஏதுமற்றவர்களாய் இருக்கும்படியான ஒரு சமுதாயத்தில் இந்தக் கருவிகளை அவற்றின் உடைமையாளர்களாம் முன்னவர்களது கையிலிருந்து அவற்றைப் பயன்படுத்தத் தெரிந்தவர்களாம் மற்றவர்களது கைக்கு இயன்றவரை எளிதான முறையில் மாற்றுவதுதான் கடன்-செலாவணியின் நோக்கம். இங்கு கவனத்திற்குரியது என்னவென்றால், இவ்விலக்கணத்தின்படி கடன்-செலாவணி என்பது எவ்விதம் சொத்துடைமை அமைந் துள்ளதோ அவ்விதத்தின் விளைவு ஆகும். 'ஆக, சொத்துடைமையின் இந்த அமைப்பு முறை மறையும்போது அதனுடன் கூடவே கடன்-செலாவணியும் மறைந்து விடுகிறது. மேலும் பக்கம் 98இல்

(25) கார்ல் மார்க்ஸ், Misére de la Philosophie, Burxelles et Paris, 1847—கார்ல் மார்க்ஸ், Zur Kritik der politischen Oekonomie, பக்கம். 64)

கூறப்பட்டுள்ளபடி, இன்றைய வங்கிகள்' தம் ஆட்சி யெல்லைக்கு அப்பாற்பட்ட கொடுக்கல் வாங்கல்களுக்கு தாமே தூண்டு விசை அளிப்பதற்கு பதில் அவற்றால் தொடங்கப்படும் அசைவியக்கத்தை பின்பற்றிச் செல்வதையே வேலையாய்க் கொண்டுள்ளன. வேறு விதமாகச் சொன்னால், வங்கிகள் Travailleurs க்கு முதலாளிகளாகப் பங்காற்றுகின்றன, அவர்களுக்கு, கடன் கொடுக்கின்றன.' வங்கிகள் தாமே மேலாண்மையை எடுத்துக் கொள்ள வேண்டும், 'தமது மேலாண்மையில் இருக்கும் தொழில் நிறுவனங்கள், தம்மிடம் ஊக்கம் பெறும் பணிகள் ஆகியவற்றின் எண்ணிக்கை வாயிலாகவும் பயனுடைமை வாயிலாகவும்' (பக்கம் 101) சீரும் சிறப்பும் பெற வேண்டும் என்ற கருத்திலேயே Crédit Mobilier ஒரு வித்தாய் மறைந்துகிடக்கிறது. இதே வழியில், வங்கிகள் (சான்- சிமோனியர்கள் "Systéme général des banques." என்று அழைக்கிறவை) 'பொருளுற்பத்தியை ஆள வேண்டும்' என்று ஷார்ல் பெக்கியோர் கோருகிறார்; பெக்கியோரும் அடிப்படையில் சான்- சிமோனியர்தான், ஆனால் அவர்களை விட மிகவும் முற்போக்கானவர். 'கடன்- செலாவணி நிறுவனம் ... நாட்டினது பொருளுற்பத்தி அசைவியக்கம் அனைத்தையும் ஆள வேண்டுமென்று' அவருக்கு ஆசை. 'தேசக் கடன்-செலாவணி நிறுவனம் ஒன்றை ஏற்படுத்திப் பாருங்கள். தகுதியும் திறமையும் பெற்றவர்கள் என்றாலும், சொத்துடைமையேதும் அற்றவர்களுக்கு அது செல்வாதாரங்களை முன்னீடு செய்யும் என்றும், ஆனால் பொருளுற்பத்தியிலும் நுகர்விலும், கூட்டொருமை கொள்ளும்படி இந்தக் கடனாளிகளை கட்டாயமாய் கட்டிப் போடாது என்றும், அதற்கு மாறாக அவரவரே எதைப் பரிவர்த்தனை செய்வது எதை உற்பத்தி செய்வது என்பதை நிர்ணயித்துக் கொள்ளும்படி விட்டு விடும் என்றும் வைத்துக் கொள்ளுங்கள். இவ்வழியில் நீங்கள் சாதிக்கப் போவது தனியார் வங்கிகள் ஏற்கெனவே சாதித்து முடித்திருப்பதுதான், அதாவது அராஜகமும், உற்பத்திக்கும் நுகர்வுக்கும் இடையிலான விகிதக் கேடும், சிலர் திடீரென்று நாசமாவதும் வேறு சிலர் திடீரென்று செல்வந்தராவதும்தான். எனவே உங்களின் தேசக் கடன்-செலாவணி நிறுவனம் ஒருவருக்கு நில நன்மைகள் கிடைக்கச் செய்யும் என்றால், அதற்கீடாக வேறொருவர் துயரப்பட வேண்டியிருக்கும், இதற்கு மேல் அது செய்யப் போவது ஒன்றுமில்லை ... உங்களிடம் உதவி பெறும் கூலித்தொழிலாளர்களுக்கு அவர்கள் ஒருவருடன் ஒருவர் போட்டி யிடுவதற்கான சாதனங்களைத்தான் நீங்கள் அளித்திருப்பீர்கள்; அவர்களின் முதலாளித்துவ ஆண்டைகளும் இப்போது இதைத்தான்

*செய்து கொண்டிருக்கிறார்கள்.' (ஷா.பெக்கியோர்,* Théorie Nouvelle d'Économie Sociale et politique, *பாரிஸ், 1842, பக்கம் 434).*

வணிக-மூலதனமும் வட்டி-மூலதனமும்தான் மிகப் பழைய மூலதன வடிவங்கள் என்று பார்த்தோம். ஆனால் பொதுமக்களின் பார்வையில் வட்டி-மூலதனம் முதன்மையான மூலதனமாக தோற்றமளிப்பதில் வியப்பில்லை. வணிக-மூலதனத்தில் ஓர் இடைச்செயல் நடைபெறுகிறது - அது மோசடியாக கருதப்பட்டாலும் சரி, உழைப்பாகவோ வேறு எதுவாகவோ கருதப்பட்டாலும் சரி. ஆனால் வட்டி-மூலதனத்திலோ மூலதனம், தன்னைத்தானே மறுவுற்பத்தி செய்து கொள்ளும் தன்மை, மதிப்பு தற்பெருக்கமடைதல், உபரி-மதிப்பின் உற்பத்தி எல்லாம் முழுக்க முழுக்க ஒரு மாயமந்திரமாகவே தோற்றமளிக்கிறது. இதனால்தான் அரசியல் பொருளாதார அறிஞர்களிலும் கூட ஒரு பிரிவினர், முக்கியமாய் தொழில்துறை மூலதனம் இன்னமும் நிறைவளர்ச்சி பெறாமலிருக்கும் பிரான்ஸ் போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்கள் இன்னுங்கூட வட்டி-மூலதனத்தையே மூலதனத்தின் அடிப்படை வடிவமாகக் கருதிக் கொண்டிருக்கிறார்கள். எடுத்துக்காட்டாக நில வாடகையை வட்டி-மூலதனத்தின் வேறொரு வடிவமாகவே கருதுகிறார்கள், ஏனென்றால் இங்கேயும் கடன்வடிவம்தான் விஞ்சி நிற்கிறது. இந்தக் கருத்து முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் உள்ளொழுங்கை அறவே தவறாகப் புரிந்து கொள்வதாகும்; மூலதனத்தைப் போலவே நிலமும் முதலாளிகளுக்கு மட்டுமே கடனாய்த் தரப்படுகிறது என்ற உண்மையை கிஞ்சிற்றும் காண மறுப்பதாகும். பணத்துக்கு பதில் உற்பத்திச் சாதனங்களைப் பண்ட வடிவிலும் கடனாய்த் தரமுடியும் என்பது மெய்தான்; இயந்திரங்கள், அலுவல் வளாகங்கள் முதலானவற்றை உதாரணமாகக் குறிப்பிடலாம். ஆனால் இவையும் திட்டமானதொரு பணத்தொகையை குறிப்பவையே; வட்டி அன்னியில் தேய்மானத் திற்காக செலுத்தப்படும் பகுதியும் உள்ளதென்றால், இந்த மூலதனக் கூறுகளின் பயன்-மதிப்புதான் பிரத்தியேக இயற்கை வடிவம்தான் காரணம். இங்கேயும் கூட வேறுபடுத்திக் காட்டுவது அவை நேரடி உற்பத்தியாளர்களுக்குக் கடனாய்த் தரப்படுகின்றனவா தொழில்துறை முதலாளிகளுக்கு கடனாய்த் தரப்படுகின்றனவா என்பதுதான். நேரடி உற்பத்தியாளர்களுக்குத் தரப்படுமானால் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை - எப்படியும் இது நிகழ்ந்திடும் துறையில் - நிலவ வில்லை என்று பொருள். தொழில்துறை முதலாளிகளுக்கு தரப்படுமானால் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறைதான்

அடிப்படை என்று பொருள். வீடுகள் முதலானவை சொந்தப் பயன்பாட்டிற்கென வாடகைக்கு விடப்படுவதை இந்த விவாதத்திற்குள் இழுப்பது இன்னுங்கூட பொருத்தமற்றதாகவும் அர்த்தமற்றதாகவும் இருக்கும். இவ்வகையிலும் தொழிலாளி வர்க்கம் பெருமளவுக்கு வஞ்சிக்கப்படுவதை கூறத் தேவையில்லை; ஆனால் தொழிலாளிக்கு தேவையான வாழ்வுச் சாதனங்களை விற்கிற சில்லறை வணிகரும் அவரைச் சுரண்டவே செய்கிறார். பொருளுற்பத்தி நிகழ்முறைக்குள்ளேயே நடைபெறும் முதனிலைச் சுரண்டலோடு சேர்ந்து வரும் இரண்டாம் நிலைச் சுரண்டலாகும் இது. விற்றலுக்கும் கடன் தருதலுக்கும் இடையிலான வேறுபாடு இங்கு முக்கியத்துவமே இல்லாதது, வெறும் வடிவ அளவிலானது; பிரச்சினையின் உண்மைத் தன்மையை சற்றும் அறியாதவர்களுக்கு மட்டுமே இது அடிப்படை வேறுபாடாகத் தெரியும் என்பதை முன்பே சுட்டிக் காட்டினோம்.

வர்த்தகத்தைப் போலவே கடுவட்டியும் குறிப்பிட்ட பொருளுற்பத்தி முறையைப் பயன்படுத்திச் சுரண்டுகிறதே தவிர அதனைப் படைப்பதில்லை. இரண்டுமே பொருளுற்பத்தி முறையோடு அதற்கு வெளியிலிருந்து உறவு கொள்கிறவை. கடுவட்டியானது இந்தப் பொருளுற்பத்தி முறையை திரும்பத் திரும்ப சுரண்டிக் கொண்டே இருப்பதற்காக நேரடியாகவே அதனைப் பாதுகாக்க முயல்கிறது; அது மாற்றத்துக்கு எதிரானது, பார்க்கப் போனால் பொருளுற்பத்தி முறையை இன்னுங்கூட அவலமாக்கக் கூடியது; எவ்வளவுக்கு எவ்வளவு உற்பத்தி அடிக்கூறுகள் பொருளுற்பத்தி நிகழ்முறைக்குள் சரக்குகளாக நுழைந்து அதிலிருந்து சரக்குகளாக வெளிப்படுகின்றனவோ அவ்வளவுக்கு அவ்வளவு அவை பணத்தைக் கொண்டு வரப்பெறுவது, தனிச் செயலாக காட்சியளிக்கிறது. சமுதாய உற்பத்தியில் சுற்றோட்டம் எவ்வளவுக்கு எவ்வளவு அற்ப பங்கு வகிக்கிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு கடுவட்டி தழைக்கிறது.

பணச் செல்வம் ஒருதனிவகைச் செல்வமாக வளருகிறது எனச் சொல்வது, கடுவட்டி மூலதனத்தைப் பொறுத்தவரை, தன் உரிமைக் கோரிக்கைகள் யாவற்றையும் பணக் கோரிக்கைகளின் வடிவில் அது பெற்றிருப்பதைக் குறிக்கும். குறிப்பிட்ட நாட்டில் எவ்வளவுக்கு எவ்வளவு பொருளுற்பத்தியில் பெரும்பகுதி பண்டவடிவச் சேவைகள் முதலானவற்றோடு, அதாவது பயன்-மதிப்புகளோடு நின்று கொள்கிறதோ அந்த அளவுக்கு கடுவட்டி-மூலதனம் வளர்கிறது.

கடுவட்டியானது இரட்டைப் பங்கு வகிப்பதால் தொழில்துறை மூலதனத்திற்கான முன்தேவைகளை வளர்த்து உருவாக்குவதில் சக்திமிக்க நெம்புகோலாகப் பயன்படுகிறது. இரட்டைப் பங்கு என்பது என்னவென்றால், முதலாவதாக அது எப்போதுமே வணிகரின் செல்வத்தோடு கூடவே சுயேச்சையான பணச் செல்வத்தை கட்டி வளர்க்கிறது; இரண்டாவதாக, உழைப்புக்குத் தேவையானவற்றை தனதாக்கிக் கொள்கிறது, அதாவது பழைய உழைப்புச் சாதனங்களின் உடைமையாளர்களை நாசமாக்குகிறது.

**மத்திய காலத்தில் வட்டி**

'மத்திய காலத்தில் அனைத்து மக்களும் வேளாண்மையில் ஈடுபட்டார்கள். பிரபுத்துவ அமைப்பின் ஆட்சியில் வர்த்தகம் அதிகமாய் நடைபெற முடியாது, எனவே இலாபமும் அதிகம் இருக்காது. இதனால் கடுவட்டிக்கெதிரான சட்டங்கள் மத்தியகாலத்தில் நியாயமானவை. மேலும் விவசாயத்தை நம்பி வாழும் நாட்டில் ஒருவர் வறுமை அல்லது துயரக் குழியில் தள்ளப்படும் சந்தர்ப்பம் தவிர கடனாய் பணம் வாங்க விரும்புவது அரிதே ... எட்டாம் ஹென்றி ஆட்சி காலத்தில் 10 சதவீதத்திற்கு மேல் வட்டி வாங்கக் கூடாதென்று வரம்பிடப்பட்டது. முதலாம் ஜேம்ஸ் அதை 8 சதவீதமாகக் குறைத்தார்.....இரண்டாம் சார்லஸ் அதை 6 சதவீதமாக்கினார்; ஆன் அரசியின் ஆட்சியில் அது 5 சதவீதமாகக் குறைக்கப்பட்டது ... அந்தக் காலத்தில் கடன் கொடுப்பவர்கள் ... உண்மையில் ஏகபோகம் செலுத்தினார்கள்; சட்டப்படி இல்லையென்றாலும் மெய்நடப்பில் ஏகபோகம் செலுத்தினார்கள்: எனவே மற்ற ஏகபோகிகளைப்போல் அவர்களையும் கட்டுப்படுத்துவது அவசியமாயிற்று. நம் காலத்தில் இலாப வீதம்தான் வட்டி வீதத்தை நிர்ணயிக்கிறது. அந்தக்காலத்தில் வட்டி வீதம்தான் இலாப வீதத்தை நிர்ணயித்தது. வட்டிக்காரர் வணிகருக்கு விதித்த வட்டி வீதம் அதிகமாய் இருந்ததென்றால், வணிகர் தம் சரக்குகள் மீது விதித்த இலாப வீதமும் அதிகமாகவே இருந்திருக்க வேண்டும். ஆகவே சரக்குவாங்குவோரின் பையிலிருந்து பெரும்பணத்தொகை எடுக்கப்பட்டு வட்டிக்காரர்களின் பையில் போடப்படும். (ஜில்பார்ட், வங்கித் தொழிலின் வரலாறும் கோட்பாடுகளும், பக்கம் 163, 164, 165).

ஒவ்வொரு லீப்சிக் சந்தையிலும் ஆண்டுக்கு 10 கூல்டின் வீதம், அதாவது நூற்றுக்கு 30 வீதம் இப்போது வாங்கப்படுவதாய் கேள்விப்பட்டேன்;*

(*) ஆண்டுக்கு மூன்று முறை - புத்தாண்டு, ஈஸ்டர், புனித மைக்கேல் தினம் ஆகிய நாட்களில் - நடைபெறும் லீப்சிக் சந்தையில் மூன்று தவணைகளாக வட்டி செலுத்தக் கூடிய விதத்தில்தரப்படும் கூல்டன் கடனையே ஆசிரியர் மனத்தில் கொண்டுள்ளார்.-ஆங்கிலப் பதிப்பாசிரியர்.)

சிலர் நியூவன்பர்க் சந்தையையும் சேர்த்துக் கொள்கிறார்கள்; இதனால் நூற்றுக்கு 40 ஆகிறது. இது உண்மைதானா என்று எனக்குத் தெரியாது. மானக்கேடு! இதனால் என்ன நரகம் விளையப் போகிறதோ? ... இப்போது லீப்சிக்கில் எவரொருவர் 100 புளோரின் வைத்திருந்தாலும் ஆண்டுக்கு 40 வாங்குகிறார்; இது ஒவ்வோராண்டும் ஒரு விவசாயி அல்லது நகரத்தாரை விழுங்குவதற்கு ஒப்பானது. ஒருவர் 1000 புளோரின் வைத்திருந்தால் ஆண்டுக்கு 400 வாங்குகிறார்; இது ஒவ்வோராண்டும் ஒரு வீரத்திருத்தகை அல்லது பணக்கார பிரபுக் குலத்தவரை விழுங்குவதற்கு ஒப்பானது. ஒருவர் 10,000 புளோரின் பெற்றிருந்தால் ஆண்டுக்கு 4000 வாங்குகிறார். இது ஒரு பணக்காரக் கோமானை விழுங்குவதற்கு ஒப்பானது. ஒருவர் 100,000 புளோரின் பெற்றிருந்தால் - பெருவணிகர்கள் இந்த அளவுக்கு பெற்றிருக்க வேண்டும் - ஆண்டுக்கு 40,000 வாங்குகிறார்; இது ஒவ்வொராண்டும் ஒரு செல்வந்த இளவரசரை விழுங்குவதற்கு ஒப்பானது. ஒருவர் 1,000,000 புளோரின் பெற்றிருந்தால் ஆண்டுக்கு 4,00,000 வாங்குகிறார். இது ஒவ்வோராண்டும் வலிமை வாய்ந்த ஒரு மன்னனை விழுங்குவதற்கு ஒப்பானது. இதில் அவரைப் பொறுத்தவரை இதில் ஆளுக்கும் ஆபத்தில்லை, பண்டங்களுக்கும் ஆபத்தில்லை; அவர் உழைப்பதில்லை, கணப்பருகே உட்கார்ந்து பண்டம் சுட்டுத் தின்கிறார். அற்பத்தனமான கொள்ளைக்காரனும் இப்படியே வீட்டில் அமர்ந்து உலகையே பத்தாண்டுகளில் விழுங்கி விடக்கூடும்.' (**Bücher vom Kaufhandel und Wucher** vom Jahre என்ற நூலிலிருந்து எடுத்துத் தரப்படுகிறது - 1524ஆம் வருடத்தியது, லூதரின் நூல்கள், விட்டன்பெர்க், 1589,, பகுதி 6, பக்கம் 312).

பதினைந்து ஆண்டுகளுக்கு முன் எழுதத் தொடங்கினேன். அப்போதே அது பயங்கரமாய் பரவியிருந்தது; நிலைமை சற்றாவது திருந்தும் என்று நம்புவதற்கே வழியில்லாது இருந்தது. அதற்குப் பிறகு அதன் தலைக்கனம் அதிகரித்து விட்டது; தீயொழுக்கம் பாவம், அல்லது மானக்கேடு என்று இனங்குறிக்கப்படுவதோடு அது திருப்தி யடையாமல், ஏதோ மக்களுக்கு அபார நன்மையும் கிறித்துவ சேவையும் புரிவது போல் பரிசுத்த நற்பண்பென்றும் கௌரவமென்றும் புகழ்பெறத் துடிக்கிறது. மானக்கேடு மாண்பெனவும் தீயொழுக்கம் நற்பண்பெனவும் மாறிவிட்டதே. நமக்கு விமோசனம் ஏது?' (மார்ட்டின் லூதர், **An die Pfarherrn wider den Wucher zu predigen**, விட்டன்பெர்க், 1540).

'யூதர்களும் லோம்பார்டுகளும் கடுவட்டிக்காரர்களும் காசுத் தண்டலர்களும்தான் நமக்கு முதல் வங்கியாளர்கள், நம் ஆதிகால

தனவணிகர்கள் கிட்டத்தட்ட கேடுகெட்ட ஆசாமிகள் ... இவர்களோடு லண்டன் பொற்கொல்லர்களும் சேர்ந்து-கொண்டார்கள். கூட்டமாக எடுத்துக் கொண்டால் ... நம் ஆதிகால வங்கியாளர்கள் ... படுமோச மானவர்கள், இறுக்கிப் பிடிக்கும் கடுவட்டிக்காரர்கள், கல் நெஞ்சுக்கார காசுத் தண்டலர்கள்.' (டே.ஹார்டுகேசில், வங்கிகளும் வங்கியாளர் களும், 2ஆம் பதிப்பு, லண்டன், 1843 பக்கம் 19-20).

'வெனிஸ் நகரம் (ஒரு வங்கியை நிறுவுவதில்) காட்டிய உதாரணம் இவ்விதம் துரிதமாய் கடைபிடிக்கப்பட்டது'; கடலோர நகரங்கள் எல்லாம், பொதுவாகச் சொன்னால் சுயேச்சைக்கும் வாணிபத்துக்கும் பெயர்பெற்ற நகரங்கள் எல்லாம் முதன்முதலாய் வங்கிகள் ஏற்படுத்திக் கொண்டன. இந்நகரங்களுக்குச் சொந்தமான கப்பல்கள் திரும்பி வந்து சேருவது அடிக்கடி மிகவும் தாமதமாயிற்று; இதனால் தவிர்க்க முடியாமலே கடன்-செலாவணி தருவது வழக்கமாயிற்று. அமெரிக்கா கண்டுபிடிக்கப்பட்டதாலும், அடுத்து அக்கண்டத்துடன் வாணிப உறவு ஏற்பட்டதாலும் இவ்வழக்கம் மேலும் வலுப் பெற்றது. (இதுவே முக்கிய விவரம்). 'கப்பல்கள் வாடகைக்கு அமர்த்தப்பட்டதால் பெரும் கடன்கள் அவசியமாயின. புராதன கால ஏதென்சிலும் கிரேக்கத்திலும் இருந்து வந்த நடைமுறைதான் இது. 1308இல் புருஜசைச் சேர்ந்த ஹன்ஸா நகரம் ஒரு காப்பீட்டு நிறுமத்தைப் பெற்றிருந்தது.' (மா.ஒழியே, முன்வந்தது, பக்கம் 202, 203).

நிலக்கிழார்களுக்கும் பொதுவாக உல்லாச விரும்பிகளான செல்வந்தர்களுக்கும் கடன்கொடுக்கிற வழக்கம் நவீன கடன்-செலாவணி அமைப்பின் வளர்ச்சிக்கு முன் 17ஆம் நூற்றாண்டின் கடைசி மூன்றாம் பகுதியில் இங்கிலாந்திலும் கூட எந்த அளவுக்கு நிலவியது என்பதை சர் நட்லி நார்த் எழுதியிருப்பவற்றிலிருந்து அறியலாம். அவர் முதன்மையான ஆங்கிலேயே வணிகர்களில் ஒருவராக இருந்ததோடு, அக்காலத்தின் மிக முக்கிய தத்துவப் பொருளாதார அறிஞர்களில் ஒருவராகவும் இருந்தவர். 'இந்த நாட்டில் வட்டிக்கு விடப்படும்-பணத்தொகைகளில் பத்திலொரு பங்கு கூட வர்த்தகர்கள் வர்த்தகம் புரிவதற்கு பயன்படுவதில்லை; அவை பெரும்பாலும் சொகுசுப் பண்டங்கள்-வாங்குவதற்குக் கடனாய்த் தரப்படுகின்றன, பெரும் நிலக்கிழார்களாய் இருந்தபோதிலும் நிலத்திலிருந்து வருவதைக் காட்டிலும் விரைவாகச் செலவழிப்பவர்களின் செலவுக்காக கடனாய் தரப்படுகின்றன; இவர்கள் தம் பண்ணைகளை விற்க விரும்பாததால் அடைமானம் வைக்கவே முற்படுகிறார்கள்.' (வர்த்தகம் பற்றிய உரைகள், லண்டன், 1691, பக்கம் 6-7).

*18ஆம் நூற்றாண்டில் போலந்து; 'வார்சாவில் மாற்று உண்டியல்களிலான வணிகத் தொழில் பெரிய அளவில் நடைபெற்றது. ஆனால் இது வங்கியாளர்களின் கடுவட்டிக் கடனையே முதற்பெரும் அடிப்படையாகவும் நோக்கமாகவும் கொண்டிருந்தது. ஊதாரிக் கனவான்களுக்கு எட்டு சதவீதம் அல்லது அதற்கதிகமான வட்டிக்கு கடன்கொடுப்பதற்காக பணம் திரட்டும் பொருட்டு இந்த வங்கியாளர்கள் அயல்நாடுகளில் திறந்த மாற்றுக் கடன் - செலாவணி, அதாவது சரக்கு வர்த்தக அடிப்படையே இல்லாத கடன் - செலாவணி நாடிப் பெற்றார்கள் - ஆனால் இந்தக் கொடுக்கல் - வாங்கல்களிலிருந்து வரவேண்டியது வந்து கொண்டிருக்கும் வரை அயல்நாட்டில் உண்டியல் பெறுகிறவர் இந்தக் கடன் - செலாவணியை தொடர்ந்து ஏற்றுக் கொள்வார். என்றாலும் வங்கியாளர்கள் இதற்கு கடும்விலை கொடுக்க வேண்டியதாயிற்று, டேப்பரைப் போன்றவர்களும் மதிப்புக்குரிய ஏனைய வார்சா வங்கியாளர்களும் போண்டியாக நேரிட்டது.' (ஜோ.கி.புஸ்,* **Theoretisch-praktische Darstellung der Handlung, etc.**, *3ஆம் பதிப்பு, ஹாம்பர்க், 1808, பாகம்* **II**, *பக்கம் 232, 233).*

### *வட்டி தடை செய்யப்பட்டதால் திருச்சபை அடைந்த ஆதாயங்கள்*

*'வட்டி வாங்குவது திருச்சபையால் தடைசெய்யப்பட்டிருந்தது. ஆனால் உற்றுழி உதவி நாடி சொத்து விற்றிடுவது தடுக்கப்படவில்லை. கடன் பட்டவர் கடனைத் திருப்பிச் செலுத்தும் வரை குறிப்பிட்ட காலத்துக்குரிய பிணையமாக வட்டிக்காரரிடம் சொத்துமாற்றிக் கொடுப்பது கூட தடுக்கப்படவில்லை; இப்படி மாற்றிக் கொடுக்கப் படும் சொத்தின் அனுபோக உரிமையை வட்டிக்காரர் பணத்தை விட்டுக் கொடுத்திருப்பதற்கான கைமாறாக அனுபவித்துக் கொள்ளலாம் ... திருச்சபையே, அதைச் சார்ந்த கூட்டமைவுகளும்* pia Corpora*வும் இந்த நடைமுறையிலிருந்து, குறிப்பாகச் சிலுவைப் போர்களின் போது அடைந்த ஆதாயம் ஏராளம். இதனால் நாட்டின் செல்வத்தில் மிகக் கணிசமானதொரு பகுதி, செத்தகை' எனப்படுவதன் உடைமையாகி விட்டது. யூதர்கள் இவ்வகை லேவாதேவியில் ஈடுபடுவது தடைசெய்யப்பட்டிருந்ததும், இது போன்ற நிலையான அனுபோக உரிமைகளை வைத்திருப்பது மறைக்க முடியாதென்பதும் இப்போக்கிற்குத் துணை செய்தன ... வட்டி தடைசெய்யப்பட்டிரா விட்டால், திருச்சபைகளும் கன்னிமடங்களும் இவ்வளவு வசதி படைத்திருக்க முடியவே முடியாது.' (முன் வந்தது, பக்கம் 55).*

# பகுதி VI

# உபரி-இலாபம் நில-வாடகையாக மாற்றமடைதல்

## அத்தியாயம் XXXVII

## முன்னுரை

நிலச் சொத்தின் பல்வேறு வரலாற்று வடிவங்களையும் பகுத்தாராய்வது இந்நூலின் ஆய்வெல்லைக்கு அப்பாற்பட்டது. மூலதனம் உற்பத்தி செய்கிற உபரி-மதிப்பில் ஒரு பகுதி நிலவுடைமையாளரின் பங்கைச் சேருவதாய் உள்ளவரைதான், நிலச் சொத்து நம் கருத்துக்குரியதாகும். ஆகவே பட்டறைத் தொழிலைப் போலவே பயிர்த் தொழிலும் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையில் ஆளுகையில் இருப்பதாக, அதாவது விவசாயம் பொருளுற்பத்தியில் முதலாளிகள் ஈடுபட்டிருப்பதாகக் கொள்கிறோம்; இந்த முதலாளிகளுக்கும் ஏனைய முதலாளிகளுக்குமுள்ள முக்கிய வேறுபாடு இவர்களின் மூலதனமும் அம்மூலதனத்தால் இயங்கச் செய்யப்படும் கூலியுழைப்பும் எவ்விதம் ஈடுபடுத்தப்படுகின்றன என்பதே ஆகும். நம்மைப் பொறுத்தவரை, எப்படி ஆலையதிபர் நூல் அல்லது இயந்திரங்கள் உற்பத்தி செய்கிறாரோ அதே போலத்தான் சாகுபடியாளர் கோதுமையும் பிறவும் உற்பத்தி செய்கிறார். முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் பிடிக்குள் பயிர்த்தொழில் வந்துவிட்டது என்ற அனுமானம் அப்பொருளுற்பத்தி முறை எல்லா உற்பத்தித் துறைகளையும் முதலாளித்துவ சமுதாயத்தையும் ஆளுவதைக் குறிக்கும். அதாவது மூலதனங்களிடையே தடையிலாப் போட்டி, அவற்றை ஓர் உற்பத்தித் துறையிலிருந்து இன்னொரு துறைக்கு மாற்றும் வாய்ப்பு, ஒரே சீரான சராசரி இலாபம் போன்ற அச் சமுதாய முன் தேவைகள் முழுமையாக வளர்ந்து முதிர்ச்சி பெற்றிருப்பதைக் குறிக்கும். இங்கு நாம் பரிசீலிக்கப் போகும் நிலச் சொத்து வடிவம் பிரத்தியேகமானதொரு வரலாற்று வடிவமாகும்; மூலதனம், முதலாளித்துவப் பொருளுற்பத்தி இவற்றின் தாக்கத்ததால் பிரபுத்துவ நிலவுடைமையிலிருந்தோ பிழைப்புக்குரிய வழியாக நடத்தப்படும் சிறுவிவசாயியின் வேளாண்மையிலிருந்தோ மாறி வந்துள்ள வடிவமாகும். சிறுவிவசாயியின் வேளாண்மையில் நிலத்தையும்

மண்ணையும் வைத்திருப்பது நேரடி உற்பத்தியாளருக்கு உற்பத்தியின் முன்தேவைகளில் ஒன்றாகிறது. இதில் அவர் நிலத்தை உடைமையாகப் பெற்றிருப்பது அவரது பொருளுற்பத்தி முறையின் செழிப்புக்கு மிகவும் சாதகமெனத் தோன்றுகிறது. பொதுவாகச் சொன்னால், முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை உழைப்பாளர்களிடமிருந்து உழைப்புச் சாதனங்களை உடைமைப் பறிப்பு செய்வதை முன்தேவையாக கொண்டிருப்பது போலவே, கிராமப்புற உழைப்பாளர் களிடமிருந்து நிலவுடைமைப் பறிக்கப்படுவதையும் இலாபத்திற்காகப் பயிர்த்தொழில் செய்யும் முதலாளிக்கு அவர்கள் கீழ்படுத்தப் படுவதையும் முன்தேவையாக கொண்டிருக்கிறது. எனவே நிலச் சொத்துக்கும் பயிர்த்தொழிலுக்கும் வேறு பல வடிவங்களும் நிலவியுள்ளன, இன்றும் நிலவி வருகின்றன என்கிற ஆட்சேபனை நமது பகுப்பாய்வின் நோக்கத்துக்கு சற்றும் பொருந்தாது. பயிர்தொழிலிலான முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையையும் அதற்குரிய நிலச்சொத்து வடிவத்தையும் வரலாற்றுவழிப்பட்ட கருத்தினங்களாக அல்லாமல், சாசுவதமானவையாகக் கருதும் பொருளாதார அறிஞர்களுக்கு மட்டுமே அது பொருந்தும்.

நிலச் சொத்தின் நவீன வடிவத்தை நாம் பரிசீலிக்க வேண்டிய காரணம் என்னவென்றால் வேளாண்மையில் மூலதனம் ஈடுபடுத்தப் படுவதிலிருந்து எழும் பிரத்தியேகமான உற்பத்தி உறவுகள், பரிவர்த்தனை-உறவுகளை எல்லாம் நாம் பரிசீலித்தாக வேண்டும். இல்லையேல் மூலதனம் தொடர்பான நமது பகுப்பாய்வு முழுமை பெறாது. ஆகவே முறையான பயிர்த் தொழிலில், அதாவது குறிப்பிட்ட மக்கள் சமுதாயத்துக்கு உணவளிக்கும் முக்கிய முதலீடாகிற விவசாயப் பயிரை உற்பத்தி செய்வதில் மூலதனம் என்ற அளவோடு மட்டும் நிறுத்திக் கொள்வோம். இதற்கு நாம் கோதுமையை எடுத்துக் கொள்ளலாம்; ஏனென்றால் அதுதான் முதலாளித்துவ வழியில் வளர்ச்சி பெற்ற நவீன தேசங்களில் முக்கிய வாழ்வுச் சாதனமாய் இருக்கிறது. (வேண்டுமானால் பயிர்த்தொழிலுக்குப் பதில் சுரங்கத் தொழிலை எடுத்துக் கொள்ளலாம்; விதிகள் இரண்டுக்கும் ஒன்றுதான்).

வெண்சணல், சாயப்பொருட்கள் போன்ற விவசாயப் பண்டங்களின் உற்பத்தியிலும் சுயேச்சையான கால்நடை வளர்ப்பு போன்றவற்றிலும் முதலீடாகும் மூலதனத்திற்கான நில-வாடகை பிரதான உணவுப் பயிரின் உற்பத்தியில் முதலீடாகிற மூலதனத்திலிருந்து பெறப்படும் நில-வாடகையால் நிர்ணயிக்கப்படுவதை நிரூபித்தது

ஆதாம் ஸ்மித்தின் பெரும் பங்களிப்புகளில் ஒன்றாகும்.* அதன் பிறகு இது தொடர்பாக மேற்கொண்டு முன்னேற்றம் ஏதும் ஏற்படவில்லை என்பதே உண்மை. வரம்பிடும் விதத்திலோ, புதிதாய்ச் சேர்க்கும் விதத்திலோ நாம் கருத்தில் கொள்ள வேண்டியது என்று ஏதாவது இருக்குமானால், அது நிலச்சொத்து தொடர்பான தனிப் பரிசிலனைக்கு உரியதே தவிர இவ்விடத்துக்கு உரியதல்ல. ஆகவே கோதுமை உற்பத்திக்கென ஒதுக்கப்படும் நிலத்தை குறிக்காத அளவில் நிலச்சொத்து பற்றி பேசமாட்டோம், அவ்வப்போது உதாரண விளக்கம் என்ற அளவில் மட்டுமே அது பற்றி பேசுவோம்.

முழுமையின் நிமித்தம் குறிப்பிட வேண்டியது என்னவென்றால், நீரும் பிறவும் நிலத்துக்குத் துணையானவை என்ற முறையில் ஒருவருக்குச் சொந்தமாய் இருக்குமானால் அவற்றையும் சேர்த்தே நிலம் என்ற சொல்லை ஆள்கிறோம்.

நிலச் சொத்து என்பது குறிப்பிட்ட ஒரு சிலர் மட்டும் புவிக்கோளின் குறிப்பிட்ட பகுதிகளை ஏகபோகமாய் கொள்வதன் அடிப்படையிலானதாகும்.[26] மற்றவர்களையெல்லாம் விலக்கி வைத்து விட்டு இப்பகுதிகளை பிரத்தியேகமாய் தம் சொந்த சித்தத்தின் ஆளுகைக்கு உட்பட்ட பரப்புகளாகக் கொண்டு அவர்கள் ஏகபோகம் அனுபவிக்கிறார்கள். ஆகவே முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் அடிப்படையில் இந்த ஏகபோகத்தின் பொருளாதார மதிப்பைக்

---

(*) ஸ்மித், நாடுகளின் செல்வம், அதன் இயல்பும் காரணங்களும் பற்றிய ஆய்வு, அபர்தீன், லண்டன், 1848, பக்கம் 105 -16 .-ஆங்கிலப் பதிப்பாசிரியர்.)

(26) நிலத்திலான தனிவுடைமைக்கு ஹெகல் தரும் விளக்கம் வேடிக்கையிலும் வேடிக்கையானது. இவ்விளக்கத்தின் படி தனியாள் என்றமுறையில் மனிதன் தன் சித்தத்தை புறஇயற்கையின் ஆன்மாவாய் இருக்கும் மெய்யுலகிற்கு அருள வேண்டுமாம். ஆகவே இந்த இயற்கையை அவன் தன் தனிவுடைமையாக வசப்படுத்திக் கொள்ள வேண்டுமாம். இதுதான் 'தனியாளின், தனியாள் என்ற முறையில் மனிதனின் தனி இயல்பு ஆகும் என்றால் மனிதன் உண்மையான தனியாளாக ஈடேறுவதற்கு நிலவுடைமையாளராய் இருந்தாக வேண்டும் என்றாகிறது. நிலத்திலான தடையிலாத் தனியுடைமை - அண்மைக் காலத்திய விளைவாகிய இது - ஹெகலைப் பொறுத்த வரை, குறிப்பிட்ட ஒரு சமூக உறவு அல்லவாம்! தனியாள் என்ற முறையில் மனிதன் 'இயற்கையோடு' கொள்கிற உறவுதானாம், யாவற்றையும் தனதாக்கிக் கொள்ள மனிதனுக்குள்ள அறுதி உரிமைதானாம். (ஹெகல், உரிமைகளின் தத்துவம், பெர்லின், 1840, பக்கம் 79.) தனியாள் தன் 'சித்தத்தால்' மட்டும் நிலவுடைமையாளராக நீடித்திருக்க முடியாது என்பதும், புவிக்கோளின் அதே நிலத்துண்டில் உண்மையான தனியாள் ஆவதற்கு அவரைப் போலவே ஆசைப்படுகிற இன்னொரு தனியாளினது சித்தத்தின் எதிர்ப்பை அவர் சமாளித்தாக வேண்டும் என்பதும் எடுத்த எடுப்பில் தெளிவாய்த் தெரிகிறது. நற்சித்தத்திற்கு அப்பால் வேறு பலவும் இதற்குத் தேவைப்படும். மேலும், 'தனியாள்' தன் சித்தம் ஈடேற்றம் பெறுவதற்கு எங்கே கோடுகிழிக்கிறார் என்பதைத் தீர்மானிக்க முடியவே முடியாது - அதற்கு ஒரு முழு நாடு தேவைப்படுமா, 'ஒன்றின் மீது என் சித்தம் வகிக்கும் முதன்மையினை வெளிப்படச் செய்வதற்கு' சில பல நாடுகளையே தனதாக்கிக் கொள்ள

கண்டறிந்தாக வேண்டும், அதாவது இந்த ஏகபோகத்தை ஈடேற்றம் செய்தாக வேண்டும். புவிக்கோளின் குறிப்பிட்ட சில பகுதிகளை பயன்படுத்திக் கொள்ளவோ தவறாகப் பயன்படுத்திக் கொள்ளவோ இந்த ஆட்களுக்கு இருக்கும் சட்ட அதிகாரம் எதற்கும் தீர்வாகாது. இந்த அதிகாரம் பயன்படுத்தப்படுவது முழுக்க முழுக்க பொருளாதார நிலைமைகளைப் பொறுத்தது, இந்நிலைமைகளோ அவர்களின் சித்தத்தைப் பொறுத்ததல்ல, சட்டக் கண்ணோட்டம் என்பதன் பொருள் எந்தவொரு - சரக்குடைமை யாளரும் தம் சரக்குகள் தொடர்பாகச் செய்யக் கூடியதையெல்லாம் நிலவுடைமையாளரும் நிலம் தொடர்பாகச் செய்ய முடியும் என்பதற்கு மேல் ஒன்றுமில்லை. இந்தக் கருத்து, நிலத்திலான தடையிலா தனிவுடைமை தொடர்பான இந்தச் சட்டக் கருத்து புராதன உலகில் கூட்டுத்துவ சமுதாய அமைப்பு கலைவுறும் போதுதான் தலையெடுக்கிறது, நவீன உலகில் முதலாளித்துவப் பொருளுற்பத்தி வளர்ச்சி அடையும் போதுதான் தலையெடுக்கிறது. இக்கருத்தை - ஐரோப்பியர்கள் ஆசியாவில் ஏதோ இங்குமங்குமாகவே இறக்குமதி செய்துள்ளார்கள். இந்தப் பொருளுற்பத்தி முறை ஒருபக்கத்தில் நேரடி உற்பத்தியாளர்கள் நிலத்துக்கான வெறும் துணைச் சேர்ப்புகளாய் (பண்ணையாட்க ளாகவும் பண்ணையடிமைகளாகவும் அடிமை களாகவும் இன்ன பிறவாலும்) இருக்கும் நிலையிலிருந்து விலகி வருவதையும், மறுபக்கத்தில் மக்கள் திரளிமிடருந்து நிலவுடைமை பறிக்கப் படுவதையும் முன்தேவையாகக் கொண்டிருப்பதை ஆதித்திரட்டல் பற்றிய பிரிவில் (முதல்பாகம், பகுதி VIII) பார்த்தோம். இந்த அளவுக்கு

---

வேண்டியிருக்குமா என்பதைத் தீர்மானிக்க முடியாது. இங்கு ஹெகல் இதற்கு மேல் நகர முடியாமல் வசமாய் சிக்கிக் கொள்கிறார். 'இந்தத் தனதாக்கம் மிகவும் குறிப்பான தன்மை கொண்டது. நானாகத் தொடக் கூடியதற்கு மேல் நான் வசப்படுத்திக் கொள்வதில்லை. ஆனால் புறப்பொருட்களோ என்னால் பற்ற முடிவதைக் காட்டிலும் விரிந்து செல்வது தெளிவாய்த் தெரிகிறது. ஆகவே என் பிடியில் எது இருந்தாலும் வேறொன்றுடன் இணைந்தேயுள்ளது. எந்தவொன்றையும் நான் என் கையால்தான் வசப்படுத்திக் கொள்ள இயலும்; ஆனால் கைவீச்சின் தொலைவை நீட்டிக் கொள்ளலாம்' (பக்கம் 90) ஆனால் இந்த வேறொன்று இன்னுமொன்றுடன் இணைந்திருக்கிறது; ஆகவே ஆன்மா என்ற முறையில் என் சித்தம் எந்த எல்லைக்குள் மண்ணில் பாயக் கூடுமோ அந்த எல்லை மறைந்து போகிறது. 'என் வசம் ஏதாவது இருக்கும் போது உடனே என்னுள்ளம் நேரடியாக என்னிடமிருக்கும் இந்தச் சொத்து மட்டுமல்லாமல் அதனோடு தொடர்புடையதாய் இருப்பதும் என்னுடையது தான் என்ற எண்ணத்திற்குத் தாவுகிறது. இங்கு நேர்வகை உரிமையே தீர்மானகரமானது; இக்கருத்துருவத்திலிருந்து இதற்கு மேல் எதையும் வருவிக்க முடியாது'(பக்கம் 91). இங்கே 'கருத்துருவம்' அசாதாரண அப்பாவித்தனத்துடன் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. எடுத்த எடுப்பிலேயே நிலச் சொத்து பற்றிய குறிப்பான சட்டக் கண்ணோட்டத்தை - முதலாளித்துவச் சமுதாயத்திற்கு சொந்தமான கண்ணோட்டத்தை - அறுதியானதாக கருதுவதென்றும் முட்டாள்தனம் புரிகிற இந்தக் கண்ணோட்டம், இந்த நிலச் சொத்தின் உண்மைத் தன்மை குறித்து புரிந்து கொள்வது 'ஒன்றுமில்லை' 'நேர்வகை உரிமையானது' சமூக வளர்ச்சியின், அதாவது பொருளாதார வளர்ச்சியின் தேவைப்பாடுகள் மாறும் போது மாறலாம், மாறியாக வேண்டும்.

நிலச்சொத்திலான ஏகபோகம் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறைக்கான வரலாற்று முன்னிபந்தனையாக இருப்பதோடு அதன் நிரந்தர அடித்தளமாகவும் இருந்து வருகிறது. இதற்கு முற்பட்ட பொருளுற்பத்தி முறைகளெல்லாம் கூட ஏதேனுமொரு வடிவில் பெருந்திரளான மக்கள் சுரண்டப்படுவதையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. ஆனால் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை தொடக்க காலத்தில் சந்திக்கிற நிலச் சொத்து வடிவம் அதற்குப் பொருத்தமாய் இருப்பதில்லை பயிர்த்தொழிலை மூலதனத்துக்கு கீழ்ப்படுத்துவதன் மூலம் அது தனக்கேற்ற வடிவத்தை தானே தோற்றுவித்துக் கொள்கிறது. இவ்விதம் பிரபுத்துவ நிலச் சொத்து, கணச் சொத்து அல்லது மார்க் கிராமச் சமுதாயங்களில் காணப்படும் சிறுவிவசாயியின் நிலச் சொத்தை - இவற்றின் சட்ட வடிவங்கள் எவ்வளவுதான் பல்வேறுபட்டவையாய் இருந்தாலும் - இந்தப் பொருளுற்பத்தி முறைக்கு இசைவான பொருளாதார வடிவமாக, மாற்றியமைக்கிறது. முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் முக்கிய விளைவுகளின் ஒன்று என்னவென்றால்; அது பயிர்த் தொழிலைப் பெரிதும் வளர்ச்சி குன்றிய சமுதாயப் பகுதியினால் வழி வழியாய் கையாளப்படும் வெறும் இயந்திரத்தனமான அனுபவவாத செயல்முறை என்ற நிலையிலிருந்து - தனியுடைமை நிலைமைகளுக்கு உட்பட்டு எந்த அளவுக்குச் சாத்தியமோ அந்த அளவுக்கு - வேளாண் பொருளியலின் உணர்வு பூர்வமான விஞ்ஞானப் பிரயோகமாய் மாற்றியமைக்கிறது.[27] ஒருபுறம் நிலச்சொத்தை ஆண்டை - அடிமை உறவுகளிலிருந்து அறவே விலக்கி எடுக்கிறது. மறுபுறம் உற்பத்திக்

(27) உண்மையிலேயே அறிவுக்குகந்த பயிர்த்தொழில் என்பது தனிச் சொத்திலிருந்து எழும் கடக்கவியலாத்தடைகளை எங்குமே சந்திக்க வேண்டியிருப்பதாக ஜான்ஸ்டன் போன்ற பழமைப் பிடிப்புமிக்க வேளாண் - வேதியியல் அறிஞர்கள் ஒப்புக் கொள்கிறார்கள். உலகில் தனிச் சொத்தின் ஏகபோகத்துக்கு வக்காலத்து வாங்குவதை தொழிலாய்க் கொண்ட எழுத்தாளர்களும் கூட - திருவாளர் ஷார்ல் கோண்டை இதற்கு எடுத்துக்காட்டாக கொள்ளலாம் - தனிச் சொத்துக்கு வக்காலத்து வாங்குவதைத் தனிநோக்கமாய்க் கொண்ட இரு-பாக நூலை இவர் படைத்துள்ளார். அவர் சொல்கிறார், 'ஒரு நாடு இயற்கை தனக்கருளியிருப்பதற்கு குறைவில்லாமல் சீரும் சிறப்பும் பெற வேண்டுமானால் அதற்கு ஊட்டமளிக்கும் நிலத்தின் ஒவ்வொரு பகுதியும் பொது நலனுக்கு மிகவும் இசைவாய் அமைகிற நோக்கத்திற்கென்று ஒதுக்கப்பட்டாக வேண்டும். நாட்டின் செல்வம் நன்கு வளர வேண்டுமானால் தனியொரு சித்தம், அனைத்துக்கும் மேலாக ஒரு அறிவார்ந்த சித்தம் சாத்தியமானால் நாட்டின் ஆட்சிப்பரப்பில் ஒவ்வொரு துண்டு நிலத்துக்கும் அதற்குரிய பணியை ஒதுக்க வேண்டும். ஒவ்வொரு நிலத்துண்டும் ஏனைவை அனைத்தின் செழுமைக்கும் பங்களிக்கும்படி செய்ய வேண்டும். ஆனால் இப்படியொரு சித்தம் இருப்பதற்கு ... நிலமானது தனிநிலவுடைமைக் காணிகளாகப் பிரிக்கப்பட்டிருப்பது ஒத்துவராது ... ஒவ்வொரு நிலவுடைமையாளரும் அநேகமாய் எப்படி வேண்டுமானாலும் தன் சொத்தை பயன்படுத்திக் கொள்வதற்குள்ள அதிகாரம் உறுதி செய்யப்பட்டிருப்பதும் ஒத்து வராது.' (**Traite de la proprlété,**') முதல்பாகம், பாரிஸ், 1834, பக்கம்

கருவி என்ற முறையில் நிலத்தை நிலச்சொத்திலிருந்தும் நிலவுடைமையாளரிடமிருந்தும் அறவே பிரித்து விடுகிறது - நிலவுடைமையாளரைப் பொறுத்தவரை நிலமானது தொழில்துறை முதலாளியிடமிருந்து, அதாவது முதலாளித்துவச் சாகுபடியாளரிட மிருந்து அவர் தமது ஏகபோகத்தின் அடிப்படையில் கறந்துகொள்கிற ஒருவகைப் பணவரியைக் குறிப்பதாகுமே தவிர வேறல்ல என்றாகிறது. முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை நிலவுடைமைக்கும் நிலத்துக்குமான தொடர்பை அறவே துண்டித்து விடுகிறது; ஒரு நிலவுடைமையாளர் ஆயுள் முழுக்க கான்ஸ்டாண்டி நோபிலில் காலந்தள்ளிக் கொண்டே ஸ்காட்லாந்தில் நிலமுடையவராக இருந்து வரலாம் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். இவ்வாறு நிலச் சொத்து அதன் முற்காலத்திய அரசியல், சமூக ஒப்பனைகள் கூட்டுக் கலவைகள் யாவும் கலைந்து துப்புரவாய் பொருளாதார வடிவம் பெறுகிறது; சுருங்கச் சொல்லின், நிலச்சொத்தை எதிர்த்து கனல்தெறிக்கப் போராடுகிற தொழில் துறை முதலாளிகளாலும் அவர்களின் தத்துவ விளம்பிகளாலும் பயனோ அர்த்தமோ இல்லாத அனாவசியங்கள் என்று சாடப்படுகிற அந்தப் பாரம்பரிய அணிக்கோலங்களையெல்லாம் களைந்து விடுகிறது. வேளாண்மையை அறிவுக்கு உகந்ததாக்குவதால் முதன்முதலாய் அது சமுதாய அளவில் இயங்கும் வல்லமை பெறுகிறது; இதுவும் நிலச் சொத்தையே அபத்தமாக்கியதும் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் மகத்தான சாதனைகளாகும். அது தான் நிகழ்த்திய ஏனைய எல்லா வரலாற்று முன்னேற்றங்களையும் போலவே முதலில் நேரடி உற்பத்தியாளர்களை வறுமைப் படுகுழியில் தள்ளி விட்டே இந்தச் சாதனைகளையும் நிகழ்த்தியது.

பிரச்சினைக்குள் நுழைவதற்கு முன்குறிப்பாய் சிலவற்றை சொல்ல வேண்டியுள்ளது; தவறாக புரிந்து கொள்ளும் நிலை ஏற்படுவதை தவிர்ப்பதற்கு இது அவசியமாகிறது.

---

228. - ஆங்கிலப் பதிப்பாசிரியர்.)- ஜான்ஸ்டனும் கோண்டும் பிறரும் சொத்துடைமைக்கும் அறிவார்ந்த வேளாண்-பொருளியலுக்கும் இடையிலான முரண்பாடு பற்றி பேசுகையில், குறிப்பிட்ட நாட்டின் நிலம் முழுவதையும் சாகுபடி செய்யும் அவசியத்தையே மனத்திற் கொண்டுள்ளனர். ஆனால் குறிப்பிட்ட விவசாய விளைபொருளின் சாகுபடி சந்தை - விலைகளில் ஏற்ற இறக்க அலைவுகளை சார்ந்திருப்பதும் இந்த அலைவுகளுக்கேற்ப அந்தச் சாகுபடியில் ஓயாமல் ஏற்படும் மாற்றங்களும் - உடனடியாகப் பண ஆதாயம் பெறுவதை குறியாய்க் கொண்ட முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் முழு ஆன்மாவும் - சங்கிலித் தொடராய் அடுத்தடுத்து வரும் தலைமுறைகளைச் சேர்ந்த மனிதர்களுக்கு வேண்டிய நிரந்தர வாழ்க்கைத் தேவைகள் அனைத்தையும் வழங்க வேண்டியதாகிய வேளாண்மைக்கு முரணாய் உள்ளது. இதற்க மிகவும் எடுப்பான உதாரணமாய் காடுகளை குறிப்பிடலாம். காடுகள் தனிச் சொத்தாய் இராமல் அரசுக் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவையாய் இருக்கிற அரிதான சந்தர்ப்பங்களில் மட்டுமே ஓரளவுக்கு சமுதாய முழுமையின் பொதுநலன் கருதி வேளாண்மை செய்யப்படுகின்றன.

முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறைக்கான முன்தேவைகள் இவைதான்; உள்ளபடியே நிலத்தில் இறங்கி உழுது பயிர் செய்கிறவர்கள் கூலித் தொழிலாளர்களாய் இருக்கிறார்கள். இந்தக் கூலித் தொழிலாளர்களாய் வேலைக்கு அமர்த்துகிறவர்கள் சாகுபடியாளராகிய முதலாளியாய் இருக்கிறார். இந்த முதலாளித்துவச் சாகுபடியாளர் மூலதன சுரண்டலுக்கான பல களங்களில் ஒரு களம் என்ற முறையில்தான் குறிப்பிட்ட ஓர் உற்பத்திக் கிளையில் தமது மூலதனத்திற்கான முதலீடு என்ற முறையில்தான் பயிர்த்தொழில் செய்கிறார். இந்த முதலாளித்துவச் சாகுபடியாளர் தமது சுரண்டலுக்குப் பயன்படும் நிலத்துக்குரியவரான நிலவுடைமையாளருக்கு ஒப்பந்தத்தில் கண்டுள்ளபடி குறிப்பிட்ட நிர்ணயத் தேதிகளில் பணம் செலுத்துகிறார்; பண-மூலதனக் கடன் வாங்கியவர் எப்படி நிர்ணய வட்டி செலுத்துகிறாரோ அதே போலத்தான் இதுவும். குறிப்பிட்ட இந்த உற்பத்திக் களத்தில் சாகுபடியாளர் தமது மூலதனத்தை முதலீடு செய்யும் உரிமைக்காக இப்படி பணம் செலுத்துகிறார். இந்தப் பணத்தொகைதான் நில வாடகை என்பது-இத்தொகை விவசாய நிலத்திற்காகவோ கட்டடமனைக்காகவோ, சுரங்கத்திற்காகவோ, மீன் பண்ணைக்காகவோ பணத்திற்காகவோ இது போன்ற வேறு ஏதேனும் ஒன்றிற்காகவோ, தரப்படலாம், எதற்காகத் தரப்பட்டாலும் அதுவே நிலவாடகை என்பது. நிலவுடைமையாளர் முதலாளித்துவச் சாகுபடியாளரிடம் தமது நிலத்தை எவ்வளவு காலத்திற்கு வாடகைக்கு விட ஒப்பந்தம் செய்துள்ளாரோ, அவ்வளவு காலத்திற்கும் நில-வாடகை தரப்படுகிறது. ஆக, நில-வாடகையின் உருவில்தான் நிலச் சொத்து பொருளாதார வழியில் ஈடேற்றம் பெறுகிறது. அதாவது மதிப்பைப்படைக்கிறது. மேலும் நவீனகாலச் சமுதாயத்தின் கட்டமைப்பை உருவாக்கும் அங்கங்களும் தமக்குள் ஒன்றையொன்று எதிர்த்து நிற்பவையும் ஆகிய மூன்று வர்க்கங்களுமே இங்கு இடம் பெறக் காணலாம்-கூலித் தொழிலாளர்கள், தொழில்துறை முதலாளிகள், நிலவுடைமையாளர்கள்.

மூலதனமானது நிலத்தில் நிலைபெற்று இருக்கலாம்; இரசாயன வகைப்பட்ட மேம்பாடுகள், உரமிடுதல், இன்னபிறவற்றைப் போன்று தற்காலிகமாகவும் நிலைபெற்றிருக்கலாம், வடிகால்கள், நீர்பாசன கட்டுமானங்கள், நிலத்தை சரிமட்டமாய் நிரவுதல், பண்ணைக் கட்டடங்கள், இன்ன பிறவற்றை போன்று நிரந்தரமாகவும் நிலைபெற்றிருக்கலாம். நிலத்தில் இவ்விதம் இடப்படும் மூலதனத்தை

குறிக்க வேறோர் இடத்தில் **la terrecapital** என்ற சொற்றொடரைப் பயன்படுத்தியுள்ளேன்[28]

இது நிலை-மூலதன வகையைச் சேர்ந்தது. நிலத்தில் இடப்படும் மூலதனத்திற்கான வட்டியும் உற்பத்திச் சாதனம் என்ற முறையில் நிலத்தில் இதனால் ஏற்படும் மேம்பாடுகளும் முதலாளித்துவச் சாகுபடியாளர் நிலவுடைமையாளருக்குத் தரும் வாடகையில் ஒரு பகுதியாய் அமையலாம்.[29]. ஆனால் அது நிலத்தின் பயன்பாட்டுக் காகவே-அந்நிலம் இயற்கை நிலையில் இருந்தாலும் சரி, பண்படுத்திய நிலையில் இருந்தாலும் சரி - தரப்படும் முறையான நில-வாடகை ஆகாது, நிலச் சொத்தை முறைப்படி முழுமையாக பகுத்தாயும் போது, நிலவுடைமையாளரது வருவாயின் இந்தப் பகுதி குறித்து விரிவாக எடுத்துரைக்கப்படும்-இந்தப் பகுப்பாய்வு இப்போதைய நம் ஆய்வெல்லைக்கு அப்பாற்பட்டது. இது பற்றி இங்கே ஒரு சில வார்த்தை சொன்னால் போதும், சாதாரண விவசாய பொருளுற்பத்தி நிகழ்முறைகள் தொடர்பான தற்காலிக முதலீடுகளில் விதிவிலக்கின்றி யாவுமே முதலாளித்துவச் சாகுபடியாளரால் செய்யப்படுகின்றன. இந்த முதலீடுகளும், ஓரளவுக்கேனும் அறிவார்ந்த முறையில் செய்யப்படும் சாமானிய சாகுபடியும் கூட மண்வளத்தை மேம்படுத்தி [30].விளைச்சலை அதிகமாக்கி, நிலத்தை வெறும் மூலப்பொருள் நிலையிலிருந்து நில - மூலதனமாக மாற்றியமைக்கின்றன; அறிவார்ந்த முறையில் சாகுபடி செய்யப்படும் போது மண்வளம் மூர்க்கமாய் கொள்ளையிடப் படுவதில்லை. (வட அமெரிக்காவின் முன்னாளைய அடிமை அரசுகளில் மண்வளத்தை மூர்க்கமாய் கொள்ளையிடுதலே வழக்கமாய் இருந்தது. ஆனால் நிலவுடைமைக் கனவான்கள்

(28) தத்துவத்தின் வறுமை, பக்கம் 165, அங்கு நான் **terrematiere** என்பதையும் **terre - capital** என்பதையும் வேறுபடுத்திக் காட்டியுள்ளேன், 'ஏற்கெனவே உற்பத்திச் சாதனமாக மாற்றப்பட்டு விட்ட நிலத்தில் மேற்கொண்டு மூலதன முதலீடுகளை பிரயோகிப்பது என்பதே பொருளாகிய நிலத்தை, அதாவது நிலத்தின் பரப்பை அதிகமாக்காமலே மூலதனமாகிய நிலத்தை அதிகமாக்குகிறது.... மூலதனமாகிய நிலம் சாசுவதமானதல்ல, வேறெந்த மூலதனத்தையும் போலவே ... மூலதனமாகிய நிலம் நிலை - மூலதனமாகும்; ஆனால் நிலை - மூலதனமும் கூட சுழல் - மூலதனத்தைப் போலவே பயன்படுத்தப்பட்டு தீர்ந்து போகிறது.'

(29) 'அமையலாம்' என்று நான் சொல்வது ஏனென்றால் குறிப்பிட்ட சில நிலைமைகளில் இந்த வட்டியானது நில - வாடகை விதியால் நிர்ணயிக்கப்படுகிறது. எனவே மறைந்து போகக் கூடியதாய் உள்ளது. எடுத்துக்காட்டாக மிகுந்த இயற்கை வளம் பொருந்திய கன்னிநிலங்களுக்கிடையே போட்டி எழும் போது இந்நிலை ஏற்படுகிறது.

(30) பார்க்கவும்: ஜேம்ஸ் ஆண்டர்சன் (பிரிட்டனில் இப்போது காணப்படும் தானியத் தட்டுப்பாட்டுக்கு வழிகோலிய நிலைமைகள் குறித்து அமைதியான ஓர் ஆராய்ச்சி, லண்டன், 1801, பக்கம் 35 - 36, 38. - ஆங்கிலபதிப்பாசிரியர்) மற்றும் கேரி, நேற்று, இன்று, நாளை, பிலடெல்பியா, 1848, பக்கம் 129 - 31. - ஆங்கிலபதிப்பாசிரியர்.

மண்வளம் இவ்விதம் கொள்ளையிடப்படாமல் ஒப்பந்தம் வாயிலாய் உறுதி செய்து கொள்கிறார்கள்.) பண்படுத்தப்பட்ட ஒரு வயல் அதே இயற்கைத் தரமுடையது என்றாலும் பண்படுத்தப்படாமலிருக்கும் வயலைக் காட்டிலும் மதிப்பு வாய்ந்ததாகும். மண்ணில் இடப்பட்டு நீண்ட காலப் போக்கில் பயன்படுகிற சற்றே நிரந்தரமான நிலை-மூலதன முதலீடுகளும் பெரும்பாலும் முதலாளித்துவச் சாகுபடியாளராலேயே செய்யப்படுகின்றன. சில உற்பத்திக் கிளைகளில் முழுக்க முழுக்க அவராலேயே செய்யப்படுகின்றன. ஆனால் ஒப்பந்தத்தில் வரையறை செய்யப்பட்டுள்ள குத்தகைக் காலம் முடிந்தவுடனே-முதலாளித்துவப் பொருளுற்பத்தி வளர வளர நிலவுடைமையாளர்கள் குத்தகைக் காலத்தை முடிந்த வரை குறுக்க முயல்வதற்கான காரணங்களில் இதுவும் ஒன்று-நிலத்தில் செய்யப்பட்ட மேம்பாடுகள் நிலமென்னும் பொருளின் பிரிக்கவொண்ணா கூறுகளாய் நிலவுடைமையாளரின் சொத்தாகி விடுகின்றன. நிலவுடைமையாளர் புதிய ஒப்பந்தம் செய்து கொள்ளும் போது நிலத்தில் இடப்பட்ட மூலதனத்திற்கான வட்டியை நில-வாடகையுடனே சேர்த்துக் கொள்கிறார். அவர் இப்போது குத்தகைக்கு விடுவது இந்த மேம்பாடுகளைச் செய்து கொடுத்த சாகுபடியாளரிடம் ஆனாலும் சரி, வேறொரு சாகுபடியாளரிடம் ஆனாலும் சரி. இவ்வாறே வட்டியை நில - வாடகையுடன் சேர்த்துக் கொள்கிறார். அவருக்கு கிடைக்கும் வாடகை இதனால் பெருக்கமடைகிறது; அவர் தமது நிலத்தை விற்க விரும்புவாரானால் (அதன் விலை எப்படி நிர்ணயிக்கப்படுகிறது என்று இதோ அடுத்து நாம் பார்க்கப்போகிறோம்). அதன் மதிப்பு இப்போது உயர்ந்திருக்கிறது. அவர் விற்பது வெறும் நிலத்தை அல்ல. மேம்பட்ட நிலத்தை, தமக்குச் செலவே இல்லாமல் நிலத்தில் இடப்பட்ட மூலதனத்தை விற்கிறார். நில-வாடகைகென்றமைந்த அசைவியக்கம் ஒருபுறமிருக்க, நிலவுடைமையாளர்கள் மென்மேலும் செல்வந்தர்கள் ஆவதும், அவர்களுக்கு கிடைக்கும் வாடகைகள் ஓயாமல் ஊதிப் பருப்பதும் பொருளாதார வளர்ச்சி முன்னேறிச் செல்கையில் அவர்களின் நிலச் சொத்துகளது பண-மதிப்பு ஓயாமல் உயர்ந்து செல்வதுமான நிகழ்வுப் போக்கின் இரகசியங்களில் இதுவும் ஒன்று. இவ்வாறு அவர்கள் தம் உதவியின்றி அடையப் பெற்ற சமூக வளர்ச்சியின் நற்பயனைத் தட்டிச் செல்கிறார்கள் - **fruges consumere nati.*** ஆனால் இதுவே பயிர்த் தொழிலின் அறிவார்ந்த வளர்ச்சிக்கு

(*) (பழந்தின்னப் பிறந்தவர்கள்,) ஹொரேஸ், கவிசேஷங்கள், புத்தகம் I, கவிசேஷம்: 2,27.-ஆங்கிலப் பதிப்பாசிரியர்

*மிகப் பெரியதொரு தடையுமாகும். ஏனென்றால் குத்தகைக் காலத்திலேயே முழுப் பயனும் தரும் என்று எதிர்ப்பார்க்கப்படாத மேம்பாடுகள், முதலீடுகளையெல்லாம் குத்தகைச் சாகுபடியாளர் தவிர்த்திடுகிறார். இது இப்படியொரு தடையாகும் என்ற கண்டனம் திரும்பத் திரும்ப ஒலிக்கக் கேட்கிறோம். நவீன வாடகைத் தத்துவத்தை உண்மையிலேயே கண்டுபிடித்தவரான ஜேம்ஸ் ஆண்டர்சனிடமிருந்து*. 18ஆம் நூற்றாண்டில் இந்தக் கண்டனக் குரல் எழுகிறது - தாமே நடைமுறையில் முதலாளித்துவச் சாகுபடியாள ராகவும் தம் காலத்திய முன்னணி வேளாண்பொருளியல் அறிஞர்களில் ஒருவராகவும் இருந்தவர் இவர். இங்கிலாந்தில் நிலச் சொத்தின் இந்நாள் அமைப்பு முறையை எதிர்ப்பவர்களிடமிருந்து நம் காலத்திலும் கூட அதே கண்டனம் எழுகிறது.*

*ஆல்பிரெடு வால்டன் கிரேட் பிரிட்டன் மற்றும் அயர்லாந்தின் நிலக் குத்தகைகளது வரலாறு, லண்டன், 1865 என்ற நூலில் இது குறித்துச் சொல்கிறார் (பக்கம் 96, 97): 'பயிர்த்தொழில் மேப்பாடுகள் என்பவை குத்தகைச் சாகுபடியாளர் அல்லது தொழிலாளியின் நிலைமையை மேப்படுத்துகிறவையாய் இருப்பதற்கு பதில் பண்ணையின் மதிப்பையும் நிலச்சொந்தக்காரருக்கான வாடகை வருமானத்தையும் அதிகரிக்கச் செய்கிறவையாகவே இருக்கும் வரை, நாடெங்கிலும் உள்ள ஏராளமான விவசாய சங்கங்களின் முயற்சிகள் யாவும் பயிர்த்தொழில் மேம்பாட்டின் உண்மையான முன்னேற்றம் என்ற வகையில் மிக விரிவான பலன்களையோ மெய்யாகவே மெச்சத் தக்க விளைவுகளையோ தோற்றுவிக்க முடியாமற் போவது திண்ணம் நல்ல வடிகால் வசதியும் குறைவில்லாத எருவும் சிறந்த மேலாண்மையும் நிலத்தை முழுமையாக திருத்திப் பண்படுத்து வதற்குக் கூடுதலாய் உழைப்பை அமர்த்துவதும் சேர்ந்து நிலமேம் பாட்டிலும் சரி பொருளுற்பத்தியிலும் சரி, அற்புத விளைவுகளை தோற்றுவிக்கும் என்பது பொதுவாக சாகுபடியாளர்கள் நன்கறிந்ததே, நிலவுடைமையாளர், அவரது முகவர் அல்லது விவசாய சங்கத் தலைவரும் கூட நன்கறிந்ததே. ஆனால் இதையெல்லாம் செய்வதற்கு கணிசமான முதலீடு தேவை. எவ்வளவு தாங்கள் நிலத்தை மேம்படுத்தினாலும், அல்லது அதன் மதிப்பை உயர்த்தினாலும் நாளாவட்டத்தில் நிலக்கிழார்களே கூடுதல் வாடகையாகவும் தங்கள்*

(*) ஜேம்ஸ் ஆண்டர்சனின் வாடகைத் தத்துவம் குறித்துப் பார்க்கவும்: க.மார்க்ஸ், உபரிமதிப்புத் தத்துவங்கள் கா.மார்க்ஸ்/சி.எங்கல்ஸ்; ஏர்க்கி, தொகுதி 26, பகுதி 2, பக்கம் 103 - 05, 110 - 14, 134 - 39). ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

பண்ணைகளின் கூடுதல் மதிப்பாகவும் முக்கியப் பலனை அடைவார்கள் என்பதும் சாகுபடியாளர்கள் அறிந்ததே... அந்தச் சொற்பொழிவாளர்கள் (விவசாய விழாக் கொண்டாட்டங்களில் உரையாற்றும் நிலவுடைமையாளர்களும் அவர்களின் முகவர்களும்) ஏதோ அலாதியான கவனக் குறைவினால் தங்களுக்கு எதைச் சொல்ல விட்டு விடுகிறார்களோ அதை - தாங்கள் ஏதேனும் மேம்பாடுகள் செய்தால் அவற்றில் பெரும்பங்கு நாளாவட்டத்தில் நிலவுடைமை யாளர்களுக்கே ஆதாயமாவது நிச்சயம் என்பதை - கவனித்தறியும் சாமர்த்தியம் சாகுபடியாளர்களுக்கு உள்ளது ... முந்தைய குத்தகையாளர் பண்ணையை எவ்வளவுதான் மேம் படுத்தியிருந்தாலும் முந்தைய மேம்பாடுகளினால் நிலத்தின் மதிப்பில் ஏற்பட்ட அதிகரிப்புக்கேற்ப அடுத்த குத்தகையாளருக்கு நிலவுடைமையாளர் வாடகையை உயர்த்தி விடுவார்.'

இந் நிகழ்முறையானது நிலம் கட்டடங்கட்டுவதற்கு பயன் படுத்தப்படும் போது வெளிப்படையாகத் தெரிவது போல் முறையான வேளாண்மையில் தெரிவதில்லை. இங்கிலாந்தில் கட்டடங் கட்டுவதற்காகப் பயன்படுத்தப்படுகிற ஆனால் ஒரேடியாய் வில்லங்கமில்லாச் சொத்தாக விற்கப்படாத நிலத்தில் ஆகப் பெரும் பகுதி நிலவுடைமையாளர்களால் 99ஆண்டு காலத்துக்கோ, அல்லது சாத்தியமானால் இன்னும் குறைந்த காலத்துக்கோ குத்தகையாக விடப்படுகிறது. இந்தக் காலம் முடிவுற்ற பின், நிலத்தோடு கூடவே கட்டடங்களும் நிலவுடைமையாளரின் கைக்குப் போய்விடுகின்றன. 'அவர்கள் (குத்தகையாளர்கள்) குத்தகை முடிவடையும் வரை அக்கிரம நில-வாடகை கொட்டிக் கொடுத்த பிறகு, குத்தகை முடிவடைந்தவுடனே வீட்டை குடியிருக்கத்தக்க நல்ல நிலையில் மதிப்புக்குரிய நிலவுடைமையாளரிடம் சேர்ப்பித்தாக வேண்டும். குத்தகை முடிந்தவுடனே முகவர் அல்லது மேற்பார்வையாளர் வந்து, உங்கள் வீட்டைப் பரிசோதித்து, நல்ல நிலையில் வைத்திருக்கிறீர்களா என்று பார்த்து, பிறகு அதனை தமது பொறுப்பில் எடுத்துக் கொண்டு, தம்முடைய கோமானின் உடைமைகளோடு சேர்த்துவிடுவார்.... உண்மை என்னவென்றால் இவ்வேற்பாடு இன்னும் கணிசமான காலத்திற்கு முழு அளவில் செயல்பட அனுமதிக்கப்படுமானால், முடியரசில் இருக்கும் கட்டடச் சொத்து முழுவதும் நிலத்தைப் போலவே பெருநிலவுடைமையாளர்களின் கைக்குள் போய்விடும். லண்டனில் டெம்பிள் பாருக்கு வடக்கேயும் தெற்கேயும் வெஸ்ட் எண்டு முழுவதும் சுமார் அரை டஜன் பெருநிலவுடைமையாளர்

களுக்கு சொந்தம் என்றே சொல்லி விடலாம்; இங்கு நிலங்கள் எல்லாம் மிக அதிக வாடகைக்கு விடப்படுகின்றன; குத்தகைகள் முடிவுறாத இடங்களிலும் விரைந்து முடிவை நெருங்கிக் கொண்டிருக்கின்றன. முடியரசிலிருக்கும் ஒவ்வொரு நகரம் குறித்தும் ஏறக்குறைய இவ்வாறே சொல்லலாம். பிரத்தியேகமாகவும் ஏகபோகமாகவும் உடைமையை கைப்பற்றிக் கொள்ளும் இந்த ஏற்பாடு இத்தோடும் கூட நின்றுவிடவில்லை. நமது கடல்முக நகரங்களில் உள்ள துறைமுக இடவசதியில் கிட்டத்தட்ட முழுவதுமே பெரும் பெரும் நில முதலைகளால் இதே வழியில் அபகரிக்கப்பட்டுள்ளது.' (முன் வந்தது, பக்கம் 92 - 93). இந்நிலைமைகளில் தெளிவாகத் தெரிவது என்ன வென்றால், இங்கிலாந்துக்கும் வேல்சுக்குமான 1861ஆம் வருடத்திய மக்கள் தொகை கணக்கின்படி மொத்த மக்கள் தொகை 20,066,224, இதில் விட்டுடைமையாளர் தொகை 36,032 என்னும் போது, பெரும் உடைமையாளர்களை சிறு உடைமையாளர்களிடமிருந்து பிரித்துப் பார்த்தால் வீடுகளின் தொகையோடும் மக்கள் தொகையோடும் உடைமையாளர்களுக்குள்ள விகிதம் அறவே வேறுபட்டுத் தெரியும்.

கட்டடச் சொத்துடைமைக்கான இந்த எடுத்துக்காட்டு முக்கியமானது. முதலாவதாக, முறையான நில-வாடகைக்கும் நிலத்தில் இடப்பட்ட நிலை-மூலதனத்திற்கான வட்டிக்கும் இடையிலான வேறுபாட்டை இது தெளிவாய் காட்டுகிறது; இந்த வட்டியானது நில-வாடகைக்கான கூடுதலாய் அமையலாம். வேளாண்மையில் சாகுபடியாளர் நிலத்தில் இடும் மூலதனத்திற்கான வட்டியைப் போலவே கட்டடங்களுக்கான வட்டியும் குத்தகைக் காலத்திற்கும் நீடித்துள்ளது வரை, தொழில்துறை முதலாளிக்கோ கட்டட ஊக-வணிகருக்கோ சாகுபடியாளருக்கோ போய்ச் சேருகிறது; இதற்கும் நிலத்தின் பயன்பாட்டிற்காக ஆண்டுதோறும் நிர்ணயத் தேதிகளில் செலுத்தியாக வேண்டிய நில-வாடகைக்கும் எவ்விதத் தொடர்புமில்லை. இரண்டாவதாக, நிலத்தில் மற்றவர்களால் இடப்படும் மூலதனம் முடிவில் நிலத்துடன் கூடவே நிலவுடைமை யாளரின் கைக்குப் போய்ச் சேருகிறது என்பதையும் அதற்கான வட்டி அவருக்கு கிடைக்கும் வாடகையை ஊதிப் பருக்கச் செய்கிறது என்பதையும் இவ்வெடுத்துக்காட்டு தெளிவாக்குகிறது.

சில எழுத்தாளர்கள் முதலாளித்துவப் பொருளாதார அறிஞர்களின் தாக்குதல்களுக்கு எதிராக நிலச் சொத்துடைமைக்கு ஆதரவாக வாதிடுகிறார்கள், அல்லது முதலாளித்துவப் பொருளுற்பத்தி

அமைப்பை முரண்பாடுகளின் அமைப்பு என்ற நிலையிலிருந்து 'இசைவுகளின்' அமைப்பாக மாற்ற முயல்கிறார்கள். சான்றாக கேரியைக் குறிப்பிடலாம். இவர்கள் நிலச் சொத்தின் பிரத்தியேகமான பொருளாதாரத் தெரிவிப்பாகிய நில-வாடகையை வட்டியுடன் முழுதொத்ததாக காட்ட முயன்றுள்ளார்கள். இப்படிக் காட்டுவதால் நிலவுடைமையாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் இடையிலான எதிர்ப்பு ஒழித்துவிடும். முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் ஆரம்பக் கட்டங்களில் இதற்கு நேர்மாறான வழிமுறை கையாளப்பட்டது. அக்காலத்திலும் நிலச்சொத்தே தனிச் சொத்தின் மரியாதைக்குரிய மூலவடிவமாய் மதிக்கப்பட்டு வந்தது; மூலதனத்திற்கு வட்டி வாங்குவதோ கடுவட்டி என்று கண்டனத்துக்குள்ளாயிற்று. டட்லி நார்த், லாக் முதலானவர்கள் மூலதனத்தின் மீதான வட்டியை நில-வாடகையை ஒத்த வடிவமாகக் காட்டினார்கள்; துர்கோ நிலவாடகை என்ற ஒன்று இருப்பதைக் காட்டி வட்டியை நியாயப்படுத்தினார். - நில - வாடகை என்றாலே நிலத்தில் இடப்படும் மூலதனத்திற்கான வட்டிக் கென்று அவ்வாடகையோடு ஏதாவது கூட்டிச்சேர்க்கப்பட்டாக வேண்டும் என்பதில்லை, அது தூய உருவில் இருக்க முடியும், இருக்கவும் செய்கிறது என்ற உண்மை ஒருபுறமிருக்க, அண்மைக் காலத்திய எழுத்தாளர்களுக்கு மறந்து போவது என்னவென்றால், இவ்வழியில் நிலவுடைமையாளர் தமக்குச் செலவே இல்லாமல் பிறருடைய மூலதனத்திற்கு வட்டி பெறுவதோடு, அம் மூலதனத்தையே இழப்பீடேதும் தராமல் தமக்குச் சொந்தமாக்கிக் கொள்கிறார். குறிப்பிட்ட பொருளுற்பத்தி முறைக்குரிய ஏனைய எல்லா சொத்து வடிவங்களையும் போலவே நிலச் சொத்தையும் நியாயப்படுத்துவது இதுதான்: ஒவ்வொரு பொருளுற்பத்தி முறைக்கும் ஒரு வரலாற்றுத் தேவை, வந்து போகிற வரலாறுத் தேவை உள்ளது. பொருளுற்பத்தி முறையிலிருந்து எழும் உற்பத்தி உறவுகளுக்கும் பரிவர்த்தனை உறவுகளுக்கும் கூட இதே போன்ற வரலாற்றுத் தேவை உள்ளது. ஆனால் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் கோணத்திலிருந்து பார்த்தாலும் கூட நிலச்-சொத்து குறிப்பிட்ட வளர்ச்சிக் கட்டத்தில் தேவையற்றதாகவும் தீங்கு பயப்பதாகவும் தெரிவது நிலச் சொத்துவடிவங்களுக்கும் ஏனைய சொத்து வடிவங்களுக்குமான வேறுபாடு ஆகும். இதைப் பிறகு பார்ப்போம்.

பிறிதொரு வடிவிலும் நில-வாடகையை வட்டியோடு குழப்பிக் கொள்ளவும், இதனால் அதன் பிரத்தியேகத் தன்மையைக் காணத் தவறவும் வாய்ப்புண்டு. நிலவாடகையானது நிலவுடைமையாளர்

இந்தப் புவிக் கோளில் ஒரு துண்டு நிலத்தை குத்தகைக்கு விட்டு ஆண்டுதோறும் சம்பாதிக்கிற குறிப்பிட்ட பணத்தொகையாக வடிவெடுக்கிறது. எந்தவொரு பணத் தொகையையும் மூலதன மாக்கலாம், அதாவது ஒரு கற்பனை மூலதனத்திற்கான வட்டியாகக் கருதலாம் என்று முன்பே பார்த்தோம். எடுத்துக்காட்டாக, சராசரி வட்டிவீதம் 5% என்றால், £200 வருடாந்தர நில-வாடகையை £4000 மூலதனத்திற்கான வட்டியாகக் கருதலாம். இவ்விதம் மூலதனமாக்கப் படுகிற நில-வாடகைதான் நிலத்தின் வாங்கும் விலை அல்லது மதிப்பு ஆகிறது; உழைப்பின் விலை என்பதைப் போலவே நிலத்தின் விலை அல்லது மதிப்பு என்பதும் முதல் பார்வைக்கு அறிவுக் கொவ்வாத கருத்தினம் ஆகும். ஏனென்றால், பூமி உழைப்பினால் உருவானதல்ல, எனவே அதற்கு மதிப்பேதும் இல்லை. மறுபுறம் இந்த அறிவுக்கொவ்வாத வடிவத்தின் பின்னால் உண்மையானதோர் உற்பத்தி உறவு மறைந்துள்ளது. ஒரு முதலாளி £200 வருடாந்தர வாடகை தரும் நிலத்தை £4000 விலை கொடுத்து வாங்குவாரானால் நமது £4000 மூலதனத்திற்கு 5% சராசரி வருட வட்டி பெறுகிறார்; அவர் இந்த மூலதனத்தை வட்டி வருமானப் பத்திரங்களில் முதலீடு செய்திருந்தால் அல்லது நேரடியாகவே 5% வட்டிக்கு கடன் கொடுத்திருந்தால் எப்படியோ அதே போலத்தான் இதுவும்.

£4000 மூலதனம் 5% பெருக்கடைகிறது, அவ்வளவுதான், இந்த அனு மானத்தின்படி இருபது ஆண்டுகாலத்தில் அவர் நமது நிலச் சொத்தின் வாங்கும் விலையை அதிலிருந்து கிடைக்கும் வருவாய்களைக் கொண்டு மீட்டெடுத்துக் கொள்வார். எனவேதான் இங்கிலாந்தில் நிலத்தின் வாங்கும்விலை இத்தனை ஆண்டுகளுக்கீடான வாங்கல் என்று கணக்கிடப்படுகிறது; இது நில-வாடகை மூலதனம் ஆக்கப்படுவதற்கான இன்னொரு தெரிவிப்பே தவிர வேறல்ல. இது நடப்பு வட்டி வீதத்தின் படி கணக்கிடப்படும் வாங்கும்விலை-நிலம் பெற்றுத் தரும் நில-வாடகையின் வாங்கும்விலையே தவிர நிலத்தின் வாங்கும் - விலை அல்ல என்பதே உண்மை. ஆனால் வாடகை இப்படி மூலதனம் ஆக்கப்பட வேண்டுமானால் வாடகை என்ற ஒன்று இருந்தாக வேண்டும்; அதே போது இதற்கு நேர்மாறான வழியில் வாடகை மூலதனமாக்கப்படுவதிலிருந்தே வாடகையை அடையப் பெறுவதும் அதற்கு விளக்கம் அளிப்பதும் சாத்தியமில்லை. பார்க்கப் போனால், விற்கப்பட்டாலும் சரி, விற்கப்படாவிட்டாலும் சரி, வாடகை என்ற ஒன்று இருப்பதுதான் ஆய்வுக்குத் தொடக்க முனையாகும்.

ஆக, நிலவாடகையை மாறாப் பருமனாக வைத்துக் கொள்வோமானால்; வட்டி வீதத்துக்கு எதிர்விகிதத்தில் நிலத்தின் விலை உயரும் அல்லது குறையும் என்று பெறப்படுகிறது. சாதாரண வட்டி வீதம் 5% இலிருந்து 4%ஆக குறையுமானால், £200 வருடாந்தர நில-வாடகை என்பது, £4000க்குப் பதில் £5000 மூலதனம் ஆண்டு தோறும் ஈடேற்றம் பெறுவதைக் குறிக்கும். அதே நிலத் துண்டின் விலை இதனால் £4000இலிருந்து £5000ஆக, அதாவது 20 ஆண்டு என்பதிலிருந்து 25 ஆண்டுக்கிடான வாங்கலாக உயர்ந்துவிடும். மாற்றம் இதற்கு எதிர்திசையில் நடைபெறுமானால் மறுதலையான விளைவு ஏற்படும். நிலத்தின் விலையிலான இந்த அசைவியக்கம் வட்டி வீதத்தால் மட்டுமே ஆளப்படுகிறது, இதற்கும் நில-வாடகையிலான அசைவியக்கத்துக்கும் தொடர்பேதும் இல்லை. ஆனால் சமுதாயம் வளர்ந்து செல்லச் செல்ல, இலாப வீதம் சரிந்து செல்லும் போக்குடையது, எனவே வட்டி வீதமும் கூட இலாப வீதத்தால் ஆளப்படுகிற அளவில் சரிந்து செல்லும் போக்குடையது என்று முன்பே பார்த்தோம்; மேலும் இலாப வீதத்தை ஒதுக்கிவிட்டுப் பார்த்தாலும் கூட, கடனுக்குரிய பண - மூலதனம் வளர்ந்து செல்வதால் வட்டி வீதம் சரிந்து செல்லும் போக்குடையதாய் இருப்பதாகவும் பார்த்தோம். ஆகவே, நில-வாடகையிலான அசைவியக்கம் என்னவானாலும், வாடகையை ஒரு பகுதியாகக் கொண்ட நில விளைபொருட்களின் விலைகள் என்னவானாலும், நிலத்தின் விலை உயர்ந்து செல்லும் போக்குடையது என்றாகிறது.

நில-வாடகைக்கும் நிலத்தை வாங்குகிறவரைப் பொறுத்த வரை அது பூணுகிற வடிவமாகிற வட்டிக்குமான குழப்பம், நில- வாடகையின் தன்மையை கொஞ்சம் கூட அறிந்து கொள்ளாமையால் ஏற்படுகிற இந்தக் குழப்பம் அபத்தத்திலும் அபத்தமான முடிவுகளுக்கு வழிகோலுவதைத் தவிர்க்க முடியாது. நிலச் சொத்து என்பது-புராதன நாடுகள் யாவற்றிலும் அதியுன்னத சொத்து வடிவமாக கருதப்படுவதாலும், மேலும் நிலம் வாங்குதல் என்பது மிகப் பத்திரமான மூலதன முதலீடாக கருதப்படுவதாலும், நில-வாடகை வாங்கப் பயன்படும் வட்டி வீதமானது பொதுவாக வேறு நீண்ட கால மூலதன முதலீடுகளின் வட்டி வீதத்தைக் காட்டிலும் குறைவாய் உள்ளது. எடுத்துக்காட்டாக நிலத்தை வாங்குகிறவர் தமது வாங்கும் விலை மீது 4%மட்டும் பெறுகிறார்; ஆனால் ஏனைய முதலீடுகளில் அதே மூலதனத்திற்கு 5% பெறுவார். அதாவது அவர் நில- வாடகைக்காகச் செலுத்தும் மூலதனம்

வேறு வகை முதலீடுகளிலிருந்து அதே வருடாந்தர வருமானத் தொகைக்காக செலுத்தக் கூடியதைக் காட்டிலும் கூடுதலாகும். இதிலிருந்து திருவாளர் தியெர் La propriété பற்றிய தமது நூலில் (பொதுவாகச் சொன்னால், மிகவும் மட்டமானதாகிய இந்நூல் 1849இல் புருதோனை எதிர்த்து*. பிரெஞ்சு தேசியப் பேரவையில் அவர் ஆற்றிய உரையின் அச்சாக்கமே) நில-வாடகை குறைவாய் இருப்பதாக தீர்மானிக்கிறார்; ஆனால் அதன் வாங்கும்-விலை உயர்வாய் இருப்பதற்குத்தான் இது சான்றாகும்.

மூலதனமாக்கப்பட்ட நில-வாடகை நிலத்தின் விலை அல்லது மதிப்பாகத் தோற்றமளிக்கிறது, இதனால் வேறெந்தச் சரக்கையும் போலவே நிலம் வாங்கவும் விற்கவும்படுகிறது என்ற உண்மையானது சில சப்பைக்கட்டுவாதிகள் நிலச்சொத்தை நியாயப்படுத்துவதற்கு பயன்படுகிறது. ஏனென்றால் வேறு எந்தச்சரக்கையும் வாங்குகிறவரைப் போலவே நிலத்தை வாங்குகிறவரும் அதற்கான சமதையைக் கொடுத்துவிடுகிறார்; நிலச்சொத்தில் பெரும் பகுதி-இவ் விதமாகத்தான் கைமாறியுள்ளது. அடிமை முறையையும் கூட இந்தக் காரணம் சொல்லி நியாயப்படுத்தி விடலாம். எப்படியென்றால் அடிமையுடைமையாளரால் விலைக்கு வாங்கப்பட்டுள்ள அடிமையினது உழைப்பின் விளைபொருள் அவரை வாங்குவதில் முதலீடு செய்யப்பட்ட மூலதனத்தின் மீதான வட்டியைக் குறிப்பதே ஆகும். நில-வாடகை விற்கப்படுவதையும் வாங்கப்படுவதையும் காட்டி அப்படியொன்று இருப்பதை நியாயப்படுத்துவது, பொதுவாகச் சொன்னால் நில - வாடகையின் இருத்தலைக் காட்டி நிலவாடகையின் இருத்தலை நியாயப்படுத்துவதே ஆகும்.

நில-வாடகையை-அதாவது முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் அடிப்படையிலான நிலச்சொத்தின் சுயேச்சையான பிரத்தியேகப் பொருளாதார வடிவத்தை - விஞ்ஞான வழியில் பகுத்தாராய்வதற்கு உருத்திரிபும் குழப்பமும் உண்டாக்கும் கூறுகளை நீக்கி தூய வடிவில் அதனைப் பரிசீலிப்பது எப்படி மிகவும் முக்கியமானதோ, அதே போல் நிலச்சொத்தின் நடைமுறை-விளைவுகளை புரிந்து கொள்வதற்கு நில-வாடகையின் கருத்துருவத் திற்கும் தன்மைக்கும் முரணாய் இருந்த போதிலும் நில-வாடகையின் நிலவல் முறைகளாகத் தோற்றமளிக்கும் பெருந்திரளான உண்மை

* Proudhon's Speech was published in "Compte rendu des séances de l' Assemblée Nationale,' Tome II, Paris, 1849, PP:666-71-English Editor.)

விவரங்களை தத்துவ நோக்கில் ஊடுருவிப் பார்ப்பதற்கே கூட - இத்தகைய தத்துவக் குளறுபடிக்கு அடிகோலும் ஆதாரங்களை அறிந்து கொள்வது மிகவும் முக்கியம்.

நடைமுறையில், நிலத்தை சாகுபடி செய்யும் உரிமைக்காக குத்தகையாளர் நில்வுடைமையாளருக்கு குத்தகைப் பணமாகச் செலுத்தப்படுவதெல்லாம் நில-வாடகையாகத் தோற்றமளிப்பதில் வியப்பில்லை. இந்தக்கப்பத்தின் அடக்கக் கூறுகள் எவையானாலும் சரி, இதன் மூலாதாரங்கள் எவையானாலும் சரி, இதற்கும் முறையான நில-வாடகைக்கும் பொதுத்தன்மையாய் இருப்பது என்னவென்றால்: இந்தப் புவிக்கோளில் ஒரு பகுதிக்குரிய நிலவுடைமையாளர் எனப்படுகிறவரின் ஏகபோகமானது அவர் கப்பம் கறப்பதை, அந்நிலத்துக்கு விலை வைப்பதே சாத்தியமாக்குகிறது, அது நிலத்தின் விலையை நிர்ணயிக்கிறது. நிலத்தின் விலை என்பது அது குத்தகைக்கு விடப்படுவதிலிருந்து கிடைக்கும் மூலதனமாக்கப்பட்ட வருவாயே தவிர வேறல்ல என்று முன்பே தெளிவாக்கினோம்.

நிலத்தில் இடப்படும் மூலதனத்திற்கான வட்டி நில-வாடகையில் இப்படியோர் அந்நியக் கூறாக அமையலாம் என்று ஏற்கெனவே பார்த்தோம். மேன்மேலும் பொருளாதார வளர்ச்சி ஏற்படுகையில் இந்தக் கூறானது நாட்டின் மொத்த வாடகை வருமானத்திற்கான மேன்மேலும் அதிகரித்துச் செல்லும் கூடுதலாய் அமையக் கூடும். ஆனால் இந்த வட்டி ஒருபுறமிருக்க, குத்தகைப் பணமானது பகுதியாகவோ குறிப்பிட்ட சில நேர்வுகளில் (அதாவது முறையான நில - வாடகை கிஞ்சிற்றும் இல்லாமற் போய், இதனால் நிலம் உள்ளபடியே மதிப்பற்றதாகும் போது) முழுமையாகவோ சராசரி இலாபம் அல்லது இயல்பான-கூலியிலிருந்து, அல்லது இரண்டிலிருந்தும் செய்யப்படுகிற ஒரு பிடித்தத்தை தன்னுள் கொண்டதாய் இருப்பது சாத்தியமே. இந்தப் பகுதி இலாபத்தின் பகுதியானாலும் சரி, கூலியின் பகுதியானாலும் சரி, இங்கு நில - வாடகையாகத் தோற்றமளிக்கிறது; ஏனென்றால் இயல்பாக நடைபெறுவது போல் தொழில்துறை முதலாளிக்கோ கூலித் தொழிலாளிக்கோ போய்ச்சேருவதற்கு பதில், இது குத்தகைப் பணத்தின் வடிவில் நிலவுடைமையாளருக்குச் செலுத்தப்படுகிறது. பொருளாதார வழியில் சொன்னால், இந்தப்பகுதிகளில் எந்தவொன்றும் நில- வாடகை ஆகாது, ஆனால் நடைமுறையில் இது நிலவுடைமையாளருக்கான வருவாய் ஆகிறது, உண்மை நில-வாடகையைப் போலவே அவரது ஏகபோகத்தின் பொருளாதார ஈடேற்றம் ஆகிறது; நிலத்தின் விலையை நிர்ணயிப்பதில் அதே தாக்கம் செலுத்துகிறது.

முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை என்ற ஒன்றே இல்லாவிட்டாலும், குத்தகையாளர் தொழில்துறை முதலாளியாகவும் அவரது வேளாண்மை, முதலாளித்துவ வேளாண்மையாகவும் இல்லாவிட்டாலும் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறைக்குரிய நிலச்சொத்தைக் குறிப்பதாகிய நில-வாடகையானது வடிவ அளவில் நிலவுகிற நிலைமைகளைப் பற்றி இங்கு நாம் பேசிக் கொண்டிருக்க வில்லை. எடுத்துக்காட்டாகச் சொன்னால் அயர்லாந்தில் அத்தகைய நிலைமைகள் நிலவின. அங்கே குத்தகையாளர் பொதுவாக சிறுவிவசாயி ஆவார். குத்தகை உரிமைக்காக நிலவுடைமையாளருக்கு அவர் செலுத்துவது அநேக சந்தர்ப்பங்களில் அவரது இலாபத்தில், அதாவது அவரது உபரி-உழைப்பில் (உழைப்புச் சாதனங்களின் உடைமையாளர் என்ற முறையில் அவரே இவ்வுபரி-உழைப்புக்கு உரிமை படைத்தவர்) ஒரு பகுதியை மட்டுமல்லாமல், வேறு நிலைமைகளில் இதே அளவு உழைப்புக்கு கிடைக்கக் கூடிய அவரது இயல்பான கூலியில் ஒரு பகுதியையும் கூட உள்ளிழுத்துக் கொள்கிறது. மேலும் நிலவுடைமையாளர் நிலத்தை மேம்படுத்துவதற்கு ஒன்றுமே செய்வதில்லை என்றாலும், குத்தகையாளர் பெரும்பாலும் தமது உழைப்பைக் கொண்டே நிலத்தில் இடுகிற சிறு மூலதனத்தையும் அவரிடமிருந்து பறித்துக் கொள்கிறார். இதே போன்ற நிலைமைகளில் கடுவட்டிக்காரரும் இப்படித்தான் செய்வார். ஒரே ஒரு வேறுபாடுதான், கடுவட்டிக்காரராவது இந் நடவடிக்கையில் தம் சொந்த மூலதனத்தை பணயம் வைப்பார். ஓயாத இந்தக் கொள்ளைதான் அயர்லாந்திய குத்தகை உரிமைகள் மசோதா தொடர்பான சர்ச்சைக்கு காரணம். இந்த மசோதாவின் முக்கிய நோக்கம் நிலவுடைமையாளர் குத்தகையாளரை நிலவெளியேற்றம் செய்யும் போது, நிலத்தில் அவர் செய்த மேம்பாடுகளுக்காக, அல்லது நிலத்தில் இடப்பட்ட அவரது மூலதனத்திற்காக அவருக்கு இழப்பீடு தரச் செய்வதே ஆகும். இந்தக் கோரிக்கைக்கு பாமர்ஸ்டன் குத்தலாய் பதிலுரைத்தார்: 'காமன்ஸ் சபை நிலவுடைமையாளர்களின் சபை ஆகும்.'

நிலவுடைமையாளர் முதலாளித்துவ பொருளுற்பத்தி நடைபெறும் நாடுகளிலும் கூட-மண்ணின் மகசூலுக்கு தொடர்பே இல்லாமல் உயர்ந்த வாடகை வசூலிக்கக் கூடிய விதிவிலக்கான நிலைமைகள் பற்றியும் நாம் இங்கு பேசிக் கொண்டிருக்கவில்லை. ஆங்கிலேய ஆலைத் தொழில் வட்டங்களில் சிறு தோட்டம் போடுவதற்காகவோ ஓய்வு நேர பொழுதுபோக்கு வேளாண்மைக்காகவோ சிறு துண்டுநிலங்கள் ஆலைத் தொழிலாளர்களிடம் குத்தகைக்கு

விடப்படுவதை இவ்விதிவிலக்கான நிலைமைகளுக்கு உதாரணமாய் குறிப்பிடலாம். (தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள்)

முதலாளித்துவ பொருளுற்பத்தி வளர்ச்சி பெற்றுள்ள நாடுகளில் நில-வாடகை என்பது பற்றியே பேசிக் கொண்டிருக்கிறோம். எடுத்துக்காட்டாக, ஆங்கிலேயச் சாகுபடியாளர்களில், அநேக சிறு முதலாளிகள் உள்ளனர். கல்வி, பயிற்சி, பாரம்பரியம், போட்டி போன்ற நிலைமைகளின் நெருக்குதலால் இவர்கள் தமது மூலதனத்தை வேளாண்மையில் குத்தகைச் சாகுபடியாளர்களாக முதலீடு செய்யும் நிலை ஏற்படுகிறது. இவர்கள் சராசரிக்கும் குறைவாகவே இலாபம் பெற்ற போதிலும் அது போதும் என்று நிறைவு கொள்ள வேண்டியதுதான், அதிலும் ஒரு பகுதியை வாடகையாக நில உடைமையாளர்களிடம் கொடுத்து விடவேண்டியதுதான். இவர்கள் தமது மூலதனத்தை நிலத்தில், வேளாண்மையில் முதலீடு செய்யுமாறு அனுமதிக்கப்படுவதற்கான ஒரே நிபந்தனை இதுதான். நிலவுடைமை யாளர்கள் சட்டம் இயற்றுவதில் எங்குமே பெரும் செல்வாக்கு செலுத்துகிறார்கள், இங்கிலாந்தில் அடக்கியாளும் படியான மிகப் பெரும் செல்வாக்கு செலுத்துகிறார்கள் என்பதால், குத்தகையாளர் வர்க்கத்தையே வஞ்சிப்பதற்கு இந்நிலைமையை அவர்களால் பயன்படுத்திக் கொள்ள முடிகிறது. எடுத்துக்காட்டாக, 1815ஆம் வருடத்தியதானியச் சட்டங்கள் - ஜக்கோபின் எதிர்ப்பு போரின் போது இயல்பு மீறி வளர்ந்து விட்ட வாடகைத் தொகைகள் உழைக்காத நிலவுடைமையாளர்களுக்கு தொடர்ந்து கிடைக்கும்படி செய்வதற்கென்று சொல்லியே நாட்டின் மேல் சுமத்தப்பட்ட ரொட்டி வரி-ஏற்படுத்திய விளைவு என்னவென்றால்: விதிவிலக்காய் மாபெரும் மகசூல் கண்ட ஒரு சில நேர்வுகளைத் தவிர வேளாண்விளை பொருட்களின் விலைகள் தானிய இறக்குமதிகள் கட்டுப்படுத்தப் படாமல் இருந்திருக்குமானால் எந்நிலைக்கு சரிந்திருக்குமோ அந் நிலைக்கு மேல் இருக்கும்படி செய்தன. ஆனால் இயல்பான விலைகள் அந்நிய தானிய இறக்குமதிகளுக்கான சட்ட வரம்பாக அமையும்படி விலைகளை சட்டமியற்றும் நிலவுடைமையாளர்கள் ஆணையிட்ட நிலையில் விலைகள் இருக்கும்படி பார்த்துக்கொள்ளும் விளைவு அவற்றால் ஏற்படுவதில்லை. ஆனால் இந்த இயல்பான விலைகள் தோற்றுவித்த சூழலில்தான் குத்தகை நிலங்களுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டது. மாயை கலைந்த உடனே புதிய இயல்பான விலைகளைக் குறிப்பிடும் புதிய சட்டம் இயற்றப்பட்டது. பழைய விலைகளைப் போலவே இந்தப் புதிய விலைகளும் நிலவுடைமை

யாளர்களின் பேராசைக் கனவுகளுக்கான வீரியமற்ற வெளிப் பாடாகவே இருந்தன. இவ்விதம் 1815இலிருந்து முப்பதாம் ஆண்டுகள்வரை வஞ்சிக்கப்பட்டனர். இதனால்தான் இக்காலம் முழுக்க வேளாண் இன்னல் ஓயாத பிரச்சினை ஆயிற்று. இதனால்தான் இக்காலத்தில் குத்தகையாளர்களின் ஒரு முழுத் தலைமுறை உடைமைப் பறிப்புக்கும் நாசத்துக்கும் ஆளாகி அவர்களின் இடத்துக்குப் புதியதொரு முதலாளி வர்க்கம் வந்துவிட்டது.[31]

ஆனால் இதை விடவும் பொதுவான முக்கியமான விவரம் என்னவென்றால், விவசாயத் தொழிலாளர்களின் கூலி இயல்பான சராசரிக்கும் கீழே குறைக்கப்படுகிறது; அக்கூலியின் ஒருபகுதி பிடித்தம் செய்யப்பட்டு குத்தகைப் பணத்தில் சேர்க்கப்படுகிறது; இவ்விதம் அது தொழிலாளியிடம் போய்ச் சேருவதற்குப் பதில் நில-வாடகை என்ற பெயரில் நிலவுடைமையாளரிடம் போய்ச் சேருகிறது. எடுத்துக் காட்டாக இங்கிலாந்திலும் ஸ்காட்லாந்திலும் பொது நிலவரம் இதுதான். சாதக நிலையில் அமைந்துள்ள ஒரு சில மாவட்டங்களே இதற்கு விலக்காகும். இங்கிலாந்தில் தானியச் சட்டங்கள் இயற்றப்படுவதற்கு முன் நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற விசாரணைக் குழுக்கள் கூலி நிலவரம் குறித்து நடத்திய விசாரணைகள்-19ஆம் நூற்றாண்டிலான கூலியின் வரலாற்றுக்கு நாளதுவரை மிகவும் மதிப்பு வாய்ந்த பங்களிப்பாகவும் அநேகமாய் எவராலும் பயன்படுத்திக் கொள்ளப்படாத பங்களிப்பாகவும் அதேபோது ஆங்கிலேய உயர் குலத்தாரும் முதலாளி வர்க்கத்தாரும் தமக்குத் தாமே ஏற்படுத்திக் கொண்ட கழுமரமாகவும் திகழ்கிற இந்த விசாரணைகள் - தெளிவாகவும் ஐயத்துக்கு இடமின்றியும் ஒன்றை நிரூபித்தன; அதாவது ஜகோபின் எதிர்ப்புப் போரின்போது வாடகை வீதங்கள் உயர்ந்திருந்தமைக்கும் அதற்கிணையான நிலத்தின் விலையில் ஏற்பட்ட உயர்வுக்கும் கூலியில் செய்யப்பட்ட பிடித்தமும் குறைந்த பட்ச பௌதிகத் தேவைக்கும் குறைவானதாக அது குறைக்கப்பட்டதும் ஓரளவுக்கு காரணமாய் இருந்தன; அதாவது இயல்பான கூலியில் ஒரு பகுதி நிலவுடைமையாளருக்குப் போய்ச் சேர்ந்ததும் ஓரளவுக்குக்

(31) தானியச் சட்ட எதிர்ப்புப் பரிசுக் கட்டுரைகளைப் பார்க்கவும். ஆனாலும் தானியச் சட்டங்கள் எப்போதுமே விலைகளைச் செயற்கையாக உயர்த்தி வைத்திருந்தன. வசதி படைத்த சாகுபடியாளருக்கு இது சாதகமாய் இருந்தது. காப்புத் தீர்வையினால் பெருந்திரளான சாகுபடியாளர்கள் செயலற்றுப் போயினர். உரிய காரணத்துடனோ காரணம் இல்லாமலோ இவர்கள் விதிவிலக்கான சராசரி விலையை நம்பியிருந்தார்கள். இந்நிலைமையை வசதிபடைத்த குத்தகையாளர்கள் பயன்படுத்தி ஆதாயம் அடைந்தார்கள்.)

காரணமாய் இருந்த பணத்தின் மதிப்பிறக்கம், வேளாண் வட்டங்களில் வறியோர் நலச் சட்டங்கள் செயற்பாடு போன்ற பல்வேறு நிலைமைகளால் இந் நடவடிக்கை சாத்தியமாயிற்று; அதேபோது குத்தகைச் சாகுபடியாளர்களின் வருமானம் பெருமளவுக்கு அதிகரித்தது, நில உடைமையாளர்கள் கணக்கு வழக்கின்றி செல்வம் திரட்டிப்பெரும் பணக்காரர்களாயினர். தானியத்துக்கு தீர்வை விதிக்க வேண்டும் என்பதற்கு சாகுபடியாளர்களும் அதேபோல் நிலவுடைமையாளர்களும் முன்னிறுத்திய முக்கிய வாதங்களில் ஒன்று, விவசாயத் தொழிலாளர்களின் கூலியை இதற்கு மேல் சற்றும் குறைப்பது பௌதிக நோக்கில் சாத்தியமே இல்லை என்பதாகும். இந்த நிலவரம் அவ்வளவாய் மாறிவிடவில்லை. எல்லா ஐரோப்பிய நாடுகளைப் போலவே இங்கிலாந்திலும் இயல்பான கூலியில் ஒருபகுதி எப்போதும் போல் நில-வாடகையாய் உறிஞ்சப்பட்டு விடுகிறது. அப்போது ஆஷ்லி பிரபுவாக இருந்த ஷேஃப்ட்ஸ்பரி கோமகன்-பரோபகார உயர் குலத்தாரில் ஒருவராகிய இவர் ஆங்கிலேய ஆலைத் தொழிலாளர்களின் நிலைமை கண்டு நெஞ்சுருகி, பத்து மணி வேலை நாளுக்கான போராட்டத்தின் போது பாராளுமன்றத்தில் அவர்களின் சொல் விளம்பியாக செயல்பட்ட போது, ஆலையதிபர்களின் சொல் விளம்பிகள் அவருக்குச் சொந்தமான கிராமங்களில் விவசாயத் தொழிலாளர்கள் பெற்று வந்த கூலி தொடர்பான புள்ளிவிவரங்களை ஏடுகளில் வெளியிட்டு பழிதீர்த்துக் கொண்டார்கள் (பார்க்கவும்: முதல் பாகம் அத்தியாயம் XXV, பிரிவு 5,2 - 'பிரித்தானிய விவசாயப்பாட்டாளி வர்க்கம்'); இந்தப்பரோபகாரிக்குக் கிடைத்து வந்த நில - வாடகையில் ஒரு பகுதியை அவருடைய குத்தகையாளர்கள் விவசாயத் தொழிலாளர்களின் கூலியிலிருந்து அவருக்கு அடித்துக் கொடுத்த கொள்ளையால் ஆனது என்பதை இந்த புள்ளி விவரங்கள் தெளிவாய் வெளிப்படுத்தின. இந்த வெளியீட்டினால் அம்பலப்படுத்தப்பட்ட விவரங்கள் 1814இலும் 1815இலும் விசாரணைக் குழுக்களால் வெளிப்படுத்தப்பட்ட படுமோசமான விவரங்களுக்கு சற்றும் சளைத்தவையல்ல என்பதாலும் இவ்வெளியீடு கருத்துக்குரியதாகிறது. நிலைமைகளின் நெருக்குதலால் விவசாயத் தொழிலாளர்களின் கூலி அப்போதைக்கு உயர்ந்தவுடனே முதலாளித்துவ குத்தகைச் சாகுபடியாளர்களிடமிருந்து ஒரு கூக்குரல் எழுகிறது; ஏனைய தொழிற்கிளைகளில் போன்று கூலியை இயல்பான நிலைக்கு உயர்த்துதல் என்பது அதே போது நில-வாடகையை குறைக்காமல் சாத்தியமில்லை என்றும் அது தங்களை நாசமாக்கிவிடும் என்றும்

அவர்கள் குரலெழுப்புகின்றனர். நில-வாடகையின் பெயரால் தொழிலாளர்களின் கூலியில் பிடித்தம் செய்யப்படுவதாகவும் அது நிலவுடைமையாளர்களின் கைக்குப் போய்ச் சேருவதாகவும் இவ்விதம் ஒப்புக் கொள்ளப்படுகிறது. எடுத்துக்காட்டாக, 1849முதல் 1859 வரையிலான காலத்தில் முக்கியத்துவம் வாய்ந்த பற்பல நிகழ்ச்சிகள் ஒன்று சேர்ந்து இங்கிலாந்தில் விவசாயத் தொழிலாளர்களின் கூலியை உயரச் செய்தன; அயர்லாந்திலிருந்து மக்கள் வெளியேறிச் சென்ற நிகழ்வு அங்கிருந்து இங்கிலாந்துக்கு விவசாயத் தொழிலாளர்களுக்கு கிடைத்து வந்ததைத் துண்டித்துவிட்டது. வேளாண் குடிகள் அசாதாரண அளவுக்கு தொழிற்சாலைகளால் உள்ளிழுக்கப்பட்டனர்: போர்காலத்தில் படைக்கு ஆட்கள் வேண்டியிருந்தனர்; என்றுமில்லாதவாறு ஏராளமானோர் ஆஸ்திரேலியாவிற்கும் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கும் (கலிபோர்னியா) குடியேறினர். ஏனைய காரணிகளை இங்கு விவரிக்கத் தேவையில்லை. அதே போது 1854 முதல் 1856 வரையிலான குறைமகசூல் ஆண்டுகளை விதிவிலக்காகக் கொண்டால் சராசரி தானிய விலைகள் இக்காலத்தில் 16%க்கு மேல் குறைந்தன. குத்தகைச் சாகுபடியாளர்கள் வாடகையை குறைக்கக் கோரி கூக்குரலிட்டார்கள். ஒரு சில சந்தர்ப்பங்களில் வெற்றி பெற்றாலும் மொத்தத்தில் இக்கோரிக்கை தோற்றுப் போனது. அவர்கள் உற்பத்திச் செலவுகளை குறைப்பதென்னும் வழியை நாடினார்கள், நீராவி எஞ்சின்களையும் புதிய இயந்திர சாதனங்களையும் பெருந்திரளாய் புகுத்தியும் இதர வழிகளிலும் அச்செலவுகளை குறைத்தார்கள். இந்த எஞ்சின்களும் இயந்திர சாதனங்களும் ஓரளவுக்கு குதிரைகளை மாற்றீடு செய்து, சிக்கனப் பயன்பாட்டுக்கு உதவாதவை ஆக்கிவிட்டன; ஆனால் அதேபோது விவசாய தொழிலாளர்களையும் வேலையற்றவர்களாக்கி செயற்கையான மிகை-மக்கள் தொகையை தோற்றுவித்து கூலியில் ஒரு புதிய சரிவு ஏற்படச் செய்தன. மொத்த மக்கள் தொகை பெருகியதுடன் ஒப்பிடுகையில் இந்தப் பத்தாண்டு காலத்தில் விவசாய மக்கள்தொகையில் ஏற்பட்ட ஒட்டுமொத்த ஒப்பீட்டுக்குறைவை மீறி, முழுக்க முழுக்க பயிர்த் தொழிலில் ஈடுபட்டுள்ள சில வட்டங்களில் விவசாய மக்கள் தொகையில் ஏற்பட்ட அறுதிக் குறைவையும் மீறி, இவை யாவும் நிகழ்ந்தன.[32] அச்சமயம் கேம்பிரிட்ஜில் அரசியல் பொருளாதாரப் பேராசிரியராக இருந்த ஃபாசேட் (அஞ்சல்துறை

(32) ஜான் சி,மார்ட்டன் பயிர்த்தொழிலில் பயன்படுத்தப்படும் சக்திகள்: 12 ஸ்காட்டிஷ் மாவட்டங்களிலும், 35 ஆங்கிலேய மாவட்டங்களிலும் சுமார் 100 குத்தகைதாரர்களிடமிருந்து திரட்டப்பட்ட அசலான தஸ்தாவேஜிகளின் அடிப்படையில், 1860-இல் லண்டன் கலைக்கழகத்தில் ஆற்றிய விரிவுரை.)

தலைமையதிகாரியாக இருந்த போது 1884 இல் காலமானார்) 1865 அக்டோபர் 12ஆம் நாள் சமூக விஞ்ஞானப் பேராயத்தில் இவ்வாறு எடுத்துரைத்தார்: 'தொழிலாளர்கள் குடிபெயர முற்பட்டார்கள். குடி வெளியேற்றத்தின் விளைவாக உழைப்பின் விலை உயர்ந்து கொண்டிருந்த காரணத்தால் வழக்கமாக கொடுத்து வந்தது போல இனிமேல் உயர்ந்த வாடகை கொடுக்க இயலாதென்று அப்போதே சாகுபடியாளர்கள் முனகத் தொடங்கி விட்டார்கள்.' இங்கேயும் உயர்ந்த நில-வாடகை என்றாலே குறைந்த கூலிதான் என்று கருதப்படுகிறது. நிலத்தின் விலை இக்காரணியால் - அதிகமாகிச் செல்லும் வாடகையால் நிர்ணயிக்கப்படுவதாய் உள்ளவரை, நிலத்தின் மதிப்புயர்வும் உழைப்பின்-மதிப்பிறக்கமும் ஒன்றுதான், நிலத்தின் உயர்விலையும் உழைப்பின் குறைவிலையும் ஒன்றுதான்.

பிரான்ஸிலும் இதே நிலைமைதான். 'ஒரு பக்கத்தில் ரொட்டி, மதுபானம், இறைச்சி, காய்கறிகள், பழம் ஆகியவற்றின் விலைகள் உயர்ந்துசெல்ல, மறுபக்கத்தில் உழைப்பின் விலை மாறாதிருப்பதால் குத்தகை உயர்ந்து செல்கிறது. வயதானவர்கள் அவர்தம் தந்தைமாரின் கணக்கேடுகளைப் புரட்டிப் பார்த்து நம்மை சுமார் 100 ஆண்டுகாலம் பின்னுக்கழைத்துப் போவார்களானால், பிரான்ஸ் நாட்டு கிராமப் புறத்தில் ஒருநாள் உழைப்பின் விலை அன்றும் இன்றும் ஒன்றுதான் என்பதை அறியலாம். இறைச்சியின் விலை இதே காலத்தில் மும்மடங்கு ஆகியிருக்கிறது ... இந்தப் புரட்சியினால் பாதிக்கப் படுவது யார்? நிலவுடைமையாளராகிய பணக்காரரா, நிலத்தில் இறங்கி பாடுபடும் ஏழையா ... வாடகை உயர்வு பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள சர்வ நாசத்துக்கு சான்றாகும்.' (Du Mécanisme de la Société en France et en Angleterre, எழுதியவர் ம.ரூபிகான், இரண்டாம் பதிப்பு, பாரிஸ், 1837, பக்கம் 101).

ஒருபுறம் சராசரி இலாபத்திலிருந்தும் மறுபுறம் சராசரி கூலியிலிருந்தும் பிடித்தம் செய்வதைக் குறிக்கும் வாடகைக்கான எடுத்துக்காட்டுகள் சிலவற்றைப் பார்ப்போம்:

நிலச் சொத்து முகவரும் வேளாண் கம்மியருமாகிய மார்டனிடமிருந்து*. முன்பே மேற்கோள் காட்டினோம். பெரும் பண்ணைகளுக்கான வாடகை சிறு பண்ணைகளுக்கான வாடகையைக் காட்டிலும் குறைவாய் இருப்பதாக அநேக வட்டங்களில் தெரிய

(*) இங்கு ஜான் லொக்கார்ட் மார்ட்டனிடமிருந்து மார்க்ஸ் மேற்கோள் காட்டுகிறார். - ஆங்கிலப் பதிப்பாசிரியர்.)

வந்துள்ளது என்கிறார் மார்டன் காரணம் என்ன வென்றால், 'பெரும் பண்ணைகளைக் காட்டிலும் சிறுபண்ணைகளுக்கு வழக்கமாய் போட்டி அதிகமாய் உள்ளது. பெரும் சிறு சாகுபடியாளர்களால் விவசாயம் தவிர வேறெந்தத்-தொழிலிலும் கவனம் செலுத்த முடிவதில்லை. பொருத்தமான தொழிலில் ஈடுபட வேண்டுமென்ற நாட்டத்தினால் அவர்கள் அநேக சந்தர்ப்பங்களில் தங்கள் கணிப்பின்படி ஏற்புடைத்தானதை விடவும் அதிக வாடகை கொடுக்க நேரிடுகிறது.' (ஜான்லோ மார்ட்டன், பண்ணைகளின் செல்வதாரங்கள், லண்டன், 1858, பக்கம் 116).

ஆனால் இங்கிலாந்தில் இந்த வேறுபாடு பைய பைய மறைந்து கொண்டிருப்பதாய்-சொல்லப்படுகிறது. சிறு சாகுபடியாளர் வர்க்கத்தின் குடிவெளியேற்றம்தான் இதற்குப் பெரிதும் காரணம் ஆவதாக அவர் கருதுகிறார். இதே மார்ட்டன் தருகிற ஓர் எடுத்துக்காட்டில் சாகுபடியாளரின் கூலியும் இன்னும் உறுதியாகவே அவர்களுடைய தொழிலாளர்களின் கூலியும் நிலவாடகைக்காக பிடித்தம் செய்யப்படுவதை தெளிவாய்க் காட்டுகிறது. 70 - 80 ஏக்கர் (30 - 34 ஹெக்டேர்) பரப்புக்கும் குறைவான குத்தகை நிலங்களைப் பொறுத்தவரை இவ்விதம் நடைபெறுகிறது; இங்கெல்லாம் இரண்டு குதிரையை ஏர் வைத்துக் கொள்ள முடிவதில்லை. 'குத்தகையாளர் தொழிலாளியைப் போல் தாமே பாடுபட்டு உழைக்காவிட்டால், அவரது சாகுபடி நிலம் அவருக்கு சோறுபோடாது. வேலையை அவர் தொழிலாளர்களிடம் ஒப்படைத்துவிட்டு தொடர்ந்து மேற்பார்வை மட்டும் செய்து வருவாரானால், விரைவில் வாடகை செலுத்த முடியாத நிலை அவருக்கு விரைவில் ஏற்படும் வாய்ப்புண்டு. (முன்வந்தது, பக்கம் 118). ஆக, குறிப்பிட்ட வட்டாரத்தைச் சேர்ந்த குத்தகையாளர்கள் பரம - ஏழைகளாய் இல்லாவிட்டால், பண்ணைகள் 70 ஏக்கருக்கு குறைவாய் இருக்கக் கூடாது, அப்போதுதான் குத்தகையாளர்கள் இரண்டு மூன்று குதிரை வைத்துக் கொள்ள இயலும் என்ற முடிவுக்கு வருகிறார் மார்ட்டன்.

திருவாளர் லியோன்ஸ் டெலெவர்னே (Membre de L'Institut et de la Société Centrale d'Agriculture) அசாதாரண சாமர்த்தியத்தை வெளிப்படுத்துகிறார். Économie Rurale de L'Angleterre என்ற தமது நூலில் (மேற்கோள் தரப்படுவது ஆங்கில மொழிபெயர்ப்பிலிருந்து, லண்டன், 1855) மாடுகளைக் கொண்டு பெறப்படும் வருடாந்தர பயன்களைப் பின்வருமாறு ஒப்புநோக்குகிறார்; மாடுகள் பிரான்சில்

பயன்படுத்தப்படுகின்றன, இங்கிலாந்தின் பயன்படுத்தப்படுவதில்லை. அங்கு இவற்றுக்குப் பதில் குதிரைகள் பயன்படுத்தப்படுகின்றன.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பிரான்ஸ்: | பால் ............... | £ 4 மிலியன் | இங்கிலாந்து: | பால் ........... | £ 16 மிலியன் |
| | இறைச்சி ......... | £ 16 மிலியன் | | இறைச்சி ..... | £ 20 மிலியன் |
| | உழைப்பு ......... | £ 8 மிலியன் | | உழைப்பு ..... | — |
| | | £ 28 மிலியன் | | | £ 36 மிலியன். |

ஆனால் இங்கு இங்கிலாந்துக்கான மொத்தத் தொகை கூடுதலாய் இருப்பதற்கு காரணம் பாலின் விலை பிரான்சைப் போல் இங்கிலாந்தில் இருமடங்காய் இருப்பதே-இதை அவரே ஒப்புக் கொள்கிறார். ஆனால் அவர் இறைச்சியின் விலை இரு நாடுகளிலும் ஒன்றெனக் கொள்கிறார்; இதனால் இங்கிலாந்தில் பால் உற்பத்தி £8 மிலியனாகச் சுருங்கி மொத்தத் தொகை £28 மிலியனாகி விடுகிறது; அதாவது பிரான்சுக்கான அதே மொத்தத் தொகைதான். உற்பத்தி அளவுகளையும் விலை வேறுபாடுகளையும் ஒருங்கே கணக்கில் எடுத்துக் கொள்வது திருவாளர் லெவர்க்கு அவ்வளவாய் சாத்தியப்படவில்லை. குறிப்பிட்ட சில பண்டங்களை பிரான்சைக் காட்டிலும் இங்கிலாந்து கூடுதலான செலவில் உற்பத்தி செய்யும் போது, இது ஆங்கிலேய வேளாண்மையின் மேன்மைச் சிறப்பாக அவருக்குத் தெரிகிறது; ஆனால் உயர்ந்த பட்சமாகப் பார்த்தாலும் இது குத்தகைச் சாகுபடியாளர்களுக்கும் நிலவுடைமையாளர்களுக்கும் கூடுதலாய் இலாபம் கிடைப்பதையே குறிப்பதாகும்.

திருவாளர் லெவர்னே ஆங்கிலேய வேளாண்மையின் பொருளாதாரச் சாதனைகளை நன்கறிந்தவராய் இருப்பதோடு, ஆங்கிலேய குத்தகையாளர்கள், நிலவுடைமையாளர்களின் தப் பெண்ணங்களையும் உடையவராய் இருப்பது பக்கம் 48இல் வெளிப்படுகிறது: 'பொதுவாகச் சொன்னால், தானிய வகைப்பயிர்கள் பெரியதொரு குறைபாடு கொண்டவை; ... அவை விளைகிற மண்ணை சத்திழக்கும்படி செய்யக் கூடியவை.' ஏனைய தாவரங்கள் இப்படிச் செய்வதில்லை என்று நம்புவதோடு, தீவனப் பயிர்களும் கிழங்குப் பயிர்களும் மண்ணை வளப்படுத்துவதாகவும் திருவாளர் லெவர்னே நம்புகிறார். தீவனமாகப் பயன்படும் தாவரங்கள் அவற்றின் வளர்ச்சிக்கான முக்கிய அடிக்கூறுகளை வளிமண்டலத்திலிருந்து பெறுகின்றன; அதே போது மண்ணிலிருந்து எடுத்துக் கொள்வதை விடவும் கூடுதலாய் மண்ணுக்குத் தருகின்றன. நேரடியாக மட்டுமல்லாமல் பிராணி எருவாக மாறுவதன் வாயிலாகவும்

பயன்படுகின்றன, தானியவகைப் பயிர்களாலும் பொதுவாக மண்ணைச் சத்திழக்கச் செய்யும் பயிர்களாலும் ஏற்பட்ட சேதத்தை ஈடுசெய்வதற்கு இவ்விதம் இரு வழிகளில் பயன்படுகின்றன. ஆகவே அவர்கள் எப்படியும் இந்தப் பயிர்களை மாறி மாறியாவது பயிர்செய்ய வேண்டும் என்பது ஒரு கோட்பாடாகும்; நார்ஃபோல்க் பயிர்சுழற்சிமுறை என்பது இதுதான்.

ஆங்கிலேய கிராமப்புறத்துக்கேயுரிய இந்தக் கட்டுக்கதைகளை நம்புகிற திருவாளர் லெவர்னே தானியத் தீர்வைகள் அகற்றப்பட்டு விட்டதால் ஆங்கிலேய விவசாயத் தொழிலாளர்களின் கூலி அதன் முந்தைய இயல்புமீறிய தன்மையை இழந்து விட்டதாகவும் நம்புவதில் வியப்பே இல்லை. (இது குறித்து ஏற்கெனவே என்ன சொன்னோம் என்று பார்க்கவும். முதல் பாகம், அத்தியாயம் XXV, பிரிவு 5, பக்கம் ).-1865 டிசம்பர் 14இல் பர்மிங்ஹாமில் திருவாளர் ஜான் பிரைட் ஆற்றிய உரையையும் கேட்போம். பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் என்பதே இல்லாத 5 மிலியன் குடும்பங்களைப் பற்றிப் பேசிய பிறகு அவர் தொடர்கிறார்: 'இவர்களில் ஒரு மிலியன் பேர், பார்க்கப் போனால் ஒரு மிலியனுக்கும் அதிகமானோர் ஐக்கிய முடியரசில் வருத்தத்துக்குரிய வக்கற்றோர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர். இன்னும் ஒரு மில்லியன் பேர் வக்கற்ற நிலைக்கு சற்று மேலே இருந்தாலும் எந்நேரமும் வக்கற்றவர்களாகிவிடும் ஆபத்தில் உள்ளனர். வக்கற்றவர்களைப் போலவே இவர்களுக்கும் நிலைமை மோசமாகவும் வருங்கால வாய்ப்புகள் இருண்டும் உள்ளன. இந்தச் சமுதாயப் பிரிவினரிடையே பாமரர்களாகவும் பஞ்சைப் பராரிகளாகவும் இருப்பவர்களை கண்ணெடுத்து நோக்குங்கள். அவர்களின் அவல நிலையை, வறுமையை, துன்ப துயரத்தை, கடைத்தேற வழியேதுமின்றி அவர்கள் பரிதவிப்பதைப் பாருங்கள். ஏன், அமெரிக்க ஐக்கிய நாட்டில்-அடிமை முறை கோலோச்சிய தென் மாநிலங்களிலும் கூட ஒவ்வொரு நீக்ரோவும் அறிந்திருந்தான் தனக்கொரு மீட்சிநாள் வருமென்று. ஆனால் இந்த மக்களுக்கு-இந்த நாட்டிலேயே அடிமட்டத்தில் உழல்கின்ற இந்தப் பஞ்சைப்பராரிகளின் வர்க்கத்துக்கு -நிலைமை சற்றாவது மேம்படும் என்ற நம்பிக்கையும் இல்லை, அப்படியொரு ஆசையும் கூட இல்லை என்பேன். ஜான் கிராஸ் என்னும் டார்செட்ஷயர் தொழிலாளியைப் பற்றி அண்மையில் செய்தித் தாள்களில் வந்தததே படித்தீர்களா? அவர் வாரத்தில் ஆறுநாள் உழைத்தார். தம்முடைய அதிபரிடமிருந்து பிரமாதமாய் நற்பெயர் சம்பாதித்தார், அவரிடம் வாரத்திற்கு எட்டு ஷில்லிங் கூலி பெற்று 24

ஆண்டு காலம் வேலை செய்தார். ஜான் கிராஸ் குடும்பத்தில் ஏழு குழந்தைகள், குடிசையில் வாழ்ந்த அவர்கள் நலிந்து மெலிந்து - மனைவியும் கைக்குழந்தையும் உட்பட - இந்தக் கூலியைக் கொண்டே காலந்தள்ளினார்கள். அவர் ஆறு பென்னி மதிப்புள்ள ஒரு மரப்பலகை எடுத்துவிட்டார் - சட்டப்படி சொல்வதனால் திருடி விட்டார். இந்தக் குற்றத்துக்காக நடுவர்களிடம் கொண்டு செல்லப்பட்டு விசாரிக்கப் பட்டு, 14 அல்லது 20 நாள் சிறைத்தண்டனை பெற்றார் ... ஜான்கிராஸ் வழக்கை போல் நாடெங்கும் முக்கியமாய் தென்பகுதியில் பல்லாயிரம் வழக்குகளை காணலாம் என்று, என்னால் உங்களுக்குச் சொல்ல முடியும். இவர்களின் நிலைமை படுமோசமாய் உள்ளது, ஆழ்ந்த அக்கறையுடன் துருவித் துருவி ஆராய்கிறவராலும்கூட இவர்கள் உடலில் உயிரை ஒட்ட வைத்துக் கொண்டிருக்கும் மருமத்தை துலக்க இதுகாறும் முடியவில்லை. இப்போது உங்கள் பார்வை நாட்டின் மீது பதியட்டும், இந்த ஐந்து மிலியன் குடும்பங்களையும் அவர்களில் பஞ்சைப் பராரிகளாய் இருப்போரின் பரிதவிப்பையும் ஏறெடுத்துப் பாருங்கள். வாக்குரிமையற்ற தேசத்தினர் ஓய்வென்பதே அறியாமல் மாடாய் உழைத்துக் கொண்டிருப்பதாக சொன்னால் இது உண்மையல்லவா? இதை ஆளும் வர்க்கத்தோடு ஒப்பு நோக்குங்கள்- ஒப்பு நோக்கினால் என்னைப் பொதுவுடைமைவாதி என்ற குற்றஞ்சாட்டுவார்கள் ... என்றாலும் ஓயாமல் உழைப்பதும் வாக்குரிமையற்றதுமான இந்த மாபெரும் தேசத்தை ஆட்சிபுரியும் வர்க்கங்களாகப் கருதப்படும் பிரிவினரோடு ஒப்புநோக்குங்கள். அவர்களின் செல்வச் செழிப்பைப் பாருங்கள். அவர்களின் பகட்டு ஆரவாரத்தைப் பாருங்கள்-அவர்களின் சொகுசையும் சுகபோகத்தையும் பாருங்கள். அவர்களின் சலிப்பைப் பாருங்கள் - ஆம், அவர்களும் சலித்துக் கொள்கிறார்கள், தெவிட்டிப் போனதாலேயே சலித்துக் கொள்கிறார்கள். புதிது புதிதாய் உல்லாசம் தேடி ஊர் ஊராய் அலைந்து திரிகிறார்கள், பாருங்கள்.' *(மார்னிங் ஸ்டார், 1865 டிசம்பர் 14).*

உபரி-உழைப்பும், எனவே பொதுவாக உபரி-உற்பத்தியும் எவ்வாறு நில-வாடகையோடு குழப்பிக் கொள்ளப்படுகின்றன என்று பார்ப்போம். நில-வாடகை என்பது உபரி-உற்பத்தியின் பகுதி ஆகும், எப்படியும் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் அடிப்படையில் அளவு வழியிலும் பண்பு வழியிலும் பிரத்தியேகமாய் நிர்ணயிக்கப்படும் பகுதி ஆகும். பொதுவாக உபரி-உழைப்பின் இயற்கை அடிப்படை, அதாவது எது இல்லாமல் உபரி-உழைப்பு சாத்தியமில்லையோ அந்த இன்றியமையா இயற்கைத் தேவை

என்னவென்றால் இயற்கையிலிருந்து - பிராணிவகையிலும் தாவர வகையிலுமான நிலத்தின் விளைபொருட்களாகவோ மீன்வளமாகவோ இதரவகையிலோ-அவசிய வாழ்வுச் சாதனங்கள் பெறப்படுகையில் அதற்காகச் செலவிடப்படும் உழைப்புநேரம் வேலை-நாள் முழுவதையும் விழுங்கிவிடுவதாய் இருக்கக்கூடாது. விவசாய உழைப்பின் இந்த இயற்கை உற்பத்தித் திறனே (சாதாரணமாய் திரட்டிச் சேகரித்தல், வேட்டையாடுதல், மீன்பிடித்தல், கால்நடை வளர்த்தல் ஆகியவற்றுக்கான உழைப்பும் இங்கு இதில் அடங்கும்) உபரி-உழைப்பனைத்திற்கும் அடிப்படையாகும். எப்படியென்றால் உழைப்பு அனைத்தின் முதல் முக்கிய குறி உணவாகப் பயன்படுகிறவற்றைத் தனதாக்குவதும் உற்பத்தி செய்வதுமே ஆகும். (பிராணிகளிடமிருந்து குளிர் மிகுந்த தட்வெப்ப நிலைகளில் கதகதப்பூட்டும் ஆடைகளுக்கு வேண்டிய தோல்களும் கிடைக்கின்றன; குகை வசிப்பிடங்கள் போன்றவற்றையும் குறிப்பிடலாம்).

உபரி-உற்பத்திக்கும் நில-வாடகைக்கும் இடையிலான இந்தக் குழப்பத்தை திருவாளர் டவ் வேறுவிதமாய் வெளிபடுத்தக் காணலாம்*. விவசாய உழைப்பும் தொழில்துறை உழைப்பும் ஆரம்பத்தில் வெவ்வேறாகப் பிரிக்கப்பட்டிருக்கவில்லை. தொழில்துறை உழைப்பு விவசாய உழைப்பின் ஒட்டுவாலாகவே இருந்து வந்தது. உழவுத் தொழில் புரிந்த குலத்தின் வீட்டுச் சமுதாயம் அல்லது குடும்பத்தின் உபரி-உழைப்பிலும் உபரி-உற்பத்தியிலும் விவசாய உழைப்பு தொழில்துறை உழைப்பு இரண்டுமே அடங்கியிருந்தன. இரண்டும் சேர்ந்தாற் போல் நடைபெற்றன. வேட்டையாடுதலும் மீன்பிடித்தலும் வேளாண்மையும் பொருத்தமான கருவிகளின்றிச் சாத்தியமில்லை. நெசவு, நூற்பு போன்றவை முதலில் விவசாயத்துணைத் தொழில்களாகவே நடத்தப்பட்டு வந்தன.

முன்பே இதனை தெளிவாக்கி விட்டோம்: எப்படி தனியொரு தொழிலாளியின் உழைப்பு அவசிய-உழைப்பாகவும் உபரி-உழைப்பாகவும் பிரிக்கப்படலாமோ அதே போல் தொழிலாளி வர்க்கத்தின் மொத்த உழைப்பும் பிரிக்கப்படலாம்; தொழிலாளி அப்போது இம்மொத்த உழைப்பில் தொழிலாளி வர்க்கத்திற்குத் தேவையான வாழ்வுச் சாதனங்களின் மொத்த அளவினை (இதற்கு வேண்டிய உற்பத்திச் சாதனங்கள் உட்பட) உற்பத்தி செய்யும்

(*) ப.டவ், அரசியல் விஞ்ஞானத்தின் அடிக்கூறுகள், எடின்பரோ, 1854, பக்கம் 264, 273.-ஆங்கிலப் பதிப்பாசிரியர்.)

பகுதியானது சமுதாயம் முழுவதற்குமான அவசிய-உழைப்பாய் அமைகிறது. தொழிலாளி வர்க்கத்தின் எஞ்சிய பகுதி ஆற்றிடும் உழைப்பை உபரி-உழைப்பாக கருதலாம். ஆனால் அவசிய-உழைப்பில் விவசாய உழைப்பு மட்டும்தான் அடங்கியிருக்கிறதா என்றால் இல்லவே இல்லை; தொழிலாளியின் சராசரி நுகர்வில் இடம்பெற்றாக வேண்டிய ஏனைய எல்லாப் பண்டங்களையும் உற்பத்தி செய்கிற உழைப்பும் கூட அவசிய-உழைப்பில் அடங்கியிருக்கிறது. மேலும் சமுதாயக் கண்ணோட்டத்தில் சிலர் அவசிய-உழைப்பில் மட்டும் ஈடுபடுவதால் மற்றவர்கள் உபரி-உழைப்பில் சிலர் உபரி-உழைப்பில் மட்டும் ஈடுபடுவதால் மற்றவர்கள் அவசிய உழைப்பில் மட்டும் ஈடுபடுகின்றனர். இது அவர்களுக்கிடையிலான உழைப்பு பிரிவினையே தவிர வேறல்ல. பொதுவாக விவசாயத் தொழிலாளர் களுக்கும் தொழில்துறைத் தொழிலாளர்களுக்கும் இடையிலான உழைப்புப் பிரிவினை குறித்தும் இவ்வாறே சொல்லலாம். ஒரு பிரிவினரின் உழைப்பு முழுக்க முழுக்க தொழில்துறை உழைப்பாக இருப்பதற்கு இணையாகவே மறு பிரிவினரின் உழைப்பு முழுக்க முழுக்க விவசாய உழைப்பாய் இருக்கிறது. முழுக்க முழுக்க விவசாயத்தன்மை வாய்ந்த இந்த உழைப்பானது எவ்விதத்தும் இயற்கையில் பிறப்பதன்று; இது சமூக வளர்ச்சியின் விளைபயனே ஆகும்-நவீன காலத்துக்குரிய இவ்விளைபயன் இன்னமும் எல்லா இடங்களிலும் அடையப்படாதவொன்று. ஒரு பொருளுற்பத்தியின் வளர்ச்சியில் குறிப்பிட்ட ஒரு கட்டத்துக்கே உரியதாகும். விவசாய உழைப்பில் ஒரு பகுதி பொருள்வடிவாக்கப்பட்டு-வரும் பண்டங்கள் சொகுசுக்கு மட்டுமே பயன்படுகிறவை, அல்லது தொழில்துறைக்கான கச்சாப் பொருட்களாகிறவை, ஆனால் உணவுப் பொருட்களாக எப்படிப் பார்த்தாலும் பெருந்திரளான மக்களுக்குரிய உணவுப்பொருட்களாக பயன்படவே பயன்படாதவை. இதேபோல் மறுபக்கத்திலும் தொழில்துறை உழைப்பில் ஒரு பகுதி பொருள்வடிவாக்கப்பட்டு வரும் பண்டங்கள் விவசாயத் தொழிலாளர்களுக்கும் விவசாயமல்லாத தொழிலாளர்களுக்குமான அவசிய நுகர்வுச் சாதனங்களாக பயன் படுகின்றவை. இந்தத் தொழில்துறை உழைப்பை சமுதாயக் கண்ணோட்டத்தில் உபரி உழைப்பாகக் கருதுவது தவறு. அதில் ஒரு பகுதியானது விவசாய-உழைப்பின் அவசியப் பகுதியைப் போலவே அவசிய-உழைப்பாகும். மேலும் இது தொழில்துறை உழைப்பில் ஒரு பகுதியின் சுயேச்சையாக்கப் பெற்ற வடிவமாகும், முன்னதாக இயற்கையாகவே விவசாய உழைப்போடு பிணைப்புண்டிருந்த பகுதியின் சுயேச்சையாக்கப் பெற்ற வடிவமாகும். இப்போது

அதிலிருந்து வேறாகப் பிரிந்து முழுக்க முழுக்க விவசாயத் தன்மை பெற்றுவிட்ட உழைப்புக்கு இன்றியமையா பரஸ்பர நிரப்புக் கூறாகும். (முழுக்க முழுக்க பொருளாயதக் கண்ணோட்டத்தில் உதாரணமாகச் சொல்வதானால், 500 இயந்திர நெசவாளர்கள் மிக அதிகமான அளவுக்கு, அதாவது அவர்களே உடுத்திக் கொள்வதற்கு தேவையானதை விட அதிகமாய் உபரி துணி உற்பத்தி செய்வார்கள்).

முடிவில், நில-வாடகையின், அதாவது உற்பத்திக்காகவோ நுகர்வுக்காகவோ நிலத்தைப் பயன்படுத்திக் கொள்வதற்காக நில உடைமையாளருக்கு நில-வாடகை என்ற பெயரில் தரப்படும் குத்தகைப் பணத்தின் பல்வேறு வடிவங்களையும் பரிசீலிக்கிற போது மனத்திற் கொள்ள வேண்டியது என்னவென்றால், தம்மளவில் மதிப்பேதும் இல்லாதவற்றின் அதாவது உழைப்பினது உற்பத்திப் பொருள் அல்லாதவற்றின், உதாரணமாய், நிலம் போன்றவற்றின் அல்லது எப்படியும் உழைப்பினால் மறு உற்பத்தி செய்ய முடியாதவற்றின், உதாரணமாய் பழம் பொருட்கள், குறிப்பிட்ட சில விற்பன்னர்களின் கலைப் படைப்புகள் போன்றவற்றின் விலையானது தற்செயலான, பல சந்தர்ப்ப சூழல்களால் நிர்ணயிக்கப்படலாம். ஒன்றை விற்க வேண்டுமானால் அது ஏகபோகமும் உடைமை மாற்றமும் செய்யத்தக்கதாய் இருந்தால் போதும்.

தெளிவை கெடுக்கக்கூடிய மூன்று முக்கிய பிழைகள் தவிர்க்கப்பட்டாக வேண்டும்.

(1) சமூதாய பொருளுற்பத்தி நிகழ்முறையின் வெவ்வேறு வளர்ச்சிக் கட்டங்களுக்கும் உரித்தான பல்வேறு வாடகை வடிவங்களையும் ஒன்றோடு ஒன்று குழப்பிக் கொள்ளுதல்.

வாடகையின் பிரத்தியேக வடிவம் என்னவானாலும் சரி எல்லா வகைகளுக்கும் பொதுவாய் இருப்பது இதுதான்; வாடகையின் தனதாக்கமே நிலச் சொத்து ஈடேற்றம் பெறுகிற பொருளாதார வடிவமாகும்; மறபுறம் நிலச் சொத்து என்ற ஒன்று இருப்பது, நமது புவிக் கோளின் குறிப்பிட்ட சில பகுதிகள் குறிப்பிட்ட சில தனியாட்களுக்குச் சொந்தமாய் இருப்பது நில-வாடகைக்கு அவசிய முன்தேவையாகும். நிலவுடைமையாளராய் இருப்பவர் ஆசியா, எகிப்து முதலான இடங்களில் போன்று கிராம சமுதாயத்துக்குப் பிரதிநிதியான தனியாளாய் இருக்கலாம்; அல்லது, இந்த சொத்தானது அடிமைமுறையிலும் பண்ணையடிமை முறையிலும் போன்று நேரடி உற்பத்தியாளர்களே குறிப்பிட்ட சில தனியாட்களின் உடைமையாய் இருப்பதற்கான துணையமிசமாக

மட்டுமே இருக்கலாம்; அல்லது உற்பத்தியாளர் அல்லாதவர்கள் இயற்கையை முழுக்க முழுக்கத் தனியுடைமை ஆக்கிக் கொள்வதால், நிலத்துக்கான வெறும் உடைமையுரிமையாய் இருக்கலாம்; அல்லது முடிவில் குடியேறிகளிடத்தும் நிலவுடைமைச் சிறு விவசாயிகளிடத்தும் காணப்படுவது போன்று-உழைப்பு தனித்தொதுங்கியதாகவும் சமூக வழியில் வளர்ச்சி பெறாததாகவும் இருக்கிற நிலையில் - குறிப்பிட்ட நிலத் துண்டுகளின் விளைப்பொருட்களை நேரடி உற்பத்தியாளர்கள் தனதாக்கிக் கொள்வதையும் உற்பத்தி செய்வதையும் நேரடியாகவே உள்ளடக்கியதாகத் தோன்றும் நிலத்துக்கான உறவு முறையாகவும் இருக்கலாம்.

வெவ்வேறு வாடகை வடிவங்களில் பொதுக்கூறாய் இருக்கும் இந்தத் தன்மையினால்-அதாவது நிலச் சொத்தின், குறிப்பிட்ட சில தனியாட்கள் நமது புவிக்கோளின் குறிப்பிட்ட சில பகுதிகள் மீது பிரத்தியேக உரிமை கொண்டாடுவதற்கு வழி செய்கிற அந்தச் சட்டக் கற்பனையின் பொருளாதார ஈடேற்றமாய் இருத்தல் என்னும் தன்மையினால்-வேறுபாடுகள் பார்வையிலிருந்து தப்ப ஏதுவாகிறது.

(2) நில-வாடகை அனைத்துமே உபரி-மதிப்பாகும், உபரி-உழைப்பின் உற்பத்தியாகும், நில - வாடகை போதிய வளர்ச்சி பெறாமல் பண்ட வடிவ வாடகையாக இருந்து வரும் வரை நேரடியாய் உபரி-உற்பத்திப் பொருளாகவே இருக்கிறது. இது ஒரு தவறான கருத்துக்கு வழி செய்து விடுகிறது: முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறைக்குரிய வாடகைக்கு, எப்போதுமே இலாபத்துக்கு மேல், அதாவது சரக்குகளின் மதிப்பில் உபரி-மதிப்பால் (உபரி-உழைப்பால்) ஆன பகுதிக்கு மேல் உபரியாய் இருப்பதான இவ்வாடகைக்கு-உபரி-மதிப்பின் இந்தப் பிரத்தியேகமான தனிக் கூறுக்கு விளக்கமளிக்க வேண்டுமானால், உபரி-மதிப்பு என்றும் இலாபம் என்றும் இருப்பதற்கு அவசியமான பொது நிலைமைகளை விளக்குவதே போதுமானது என்பதே அந்தத் தவறான கருத்து. இந்தப் பொது நிலைமைகள் என்னவென்றால்: நேரடி உற்பத்தியாளர்கள் தத்தமது உழைப்புச் சக்தியை மறுவுற்பத்தி செய்வதற்கு, தத்தமது மறுவுற்பத்திக்கு அவசியமான நேரத்துக்கு மேல் உழைத்தாக வேண்டும். பொதுவாகச் சொன்னால், உபரி-உழைப்பில் ஈடுபட்டாக வேண்டும். இதுதான் அகவய நிலைமை. புறவய நிலைமை என்னவென்றால், அவர்கள் உபரி-உழைப்பில் ஈடுபட முடிந்திருக்க வேண்டும். அவர்களுக்கு கிடைக்கும் உழைப்பு நேரத்தில் ஒரு பகுதியே அவர்கள் உற்பத்தியாளர்களாக தம்மை மறுவுற்பத்தி

செய்து கொள்வதற்கும் பேணிப் பராமரித்துக் கொள்வதற்கும் போதுமானதாய் இருக்கும்படி, அவர்களுக்கு அவசியமான வாழ்வுச் சாதனங்களின் உற்பத்தி அவர்களின் உழைப்புச் சக்தி முழுவதையும் உறிஞ்சி விடாதபடி இயற்கை நிலைமைகள் அமைந்திருக்க வேண்டும். இயற்கை வளம் தொடக்க முனை அல்லது அடிப்படை என்ற முறையில் இங்கு ஒரு வரம்பை விதிக்கிறது. அவர்களது உழைப்பினுடைய சமுதாய உற்பத்தித் திறனின் வளர்ச்சி மறு வரம்பை விதிக்கிறது. நெருங்கிப் பார்க்குமிடத்து, வாழ்வுச் சாதன உற்பத்திதான், அவர்கள் உயிர் வாழ்வதற்கும் பொதுவாக உற்பத்தி அனைத்துக்கும் இன்றியமையா தேவைகளாய் இருப்பவை யாவற்றிலும் முதலாவதாய் திகழ்வதாகும்; இந்த உற்பத்தியில் ஈடுபடும் உழைப்பானது அதாவது மிகப்பரந்த பொருளாதார அர்த்தத்தில் விவசாய உழைப்பானது கிடைக்கிற உழைப்பு நேரம் அனைத்தையும் நேரடி உற்பத்தி யாளர்களுக்கான வாழ்வுச் சாதன உற்பத்தியில் விழுங்கி விடாதபடி போதிய பலன் தரக் கூடியதாய் இருந்தாக வேண்டும்; அதாவது விவசாய உபரி-உழைப்பும், எனவே விவசாய உபரி-உற்பத்தியும் சாத்தியப் பட்டாக வேண்டும். பார்க்கப் போனால், சமுதாயத்தில் ஒரு பிரிவினரின் மொத்த விவசாய உழைப்பு அவசிய உழைப்பும் அதே போல் உபரி-உழைப்பும் சமுதாயம் அனைத்திற்கும், அதாவது விவசாயம் அல்லா தொழிலாளர்க்கும் சேர்த்து அவசிய உணவுப் பொருட்களை உற்பத்தி செய்திட போதுமானதாய் இருந்தாக வேண்டும். ஆக இதன் பொருள் என்னவென்றால் விவசாயத்துறைக்கும் தொழில் துறைக்கும் இடையிலான இந்த மாபெரும் உழைப்புப் பிரிவினை சாத்தியப்பட்டாக வேண்டும்; இதே போல் உணவுப் பொருட்களை உற்பத்தி செய்யும் உழவர்களுக்கும் கச்சாப் பொருட்களை உற்பத்தி செய்யும் உழவர்களுக்கும் இடையிலான உழைப்புப் பிரிவினையும் சாத்தியப்பட்டாக வேண்டும். வாழ்வுச் சாதனங்களின் நேரடி உற்பத்தியாளர்களது உழைப்பு அவர்களைப் பொருத்தவரை அவசிய உழைப்பாகவும் உபரி - உழைப்பாகவும் பிரிகிறது என்றாலும், சமுதாயத்தைப் பொருத்தவரை வாழ்வுச் சாதனங்களை உற்பத்தி செய்வதற்குத் தேவைப்படும் அவசிய உழைப்பை மட்டும் குறிப்பதாகும். இடைக் குறிப்பாய் சொல்ல வேண்டியது என்னவென்றால், தனியொரு பட்டறைக்குட்பட்ட உழைப்புப் பிரிவினைக்கு மாறாக முழுச் சமுதாயத்திலுமான எந்த உழைப்புப் பிரிவினை தொடர்பாகவும் இவ்வாறே சொல்லலாம். வாழ்வுச் சாதனங்களின் நேரடி உற்பத்தியாளர்களின் உழைப்பு குறிப்பிட்ட

பண்டங்களின் உற்பத்திக்கு குறிப்பிட்ட பண்டங்களுக்கான குறிப்பிட்ட சமுதாய தேவையை நிறைவு செய்வதற்கு அவசியமான உழைப்பாகும். இந்தப் பிரிவினை உரிய விகிதப்படியானதாய் இருக்குமானால் பல்வேறு வகை உற்பத்திப் பண்டங்கள் அவற்றின் மதிப்புக்கு (பின் ஒரு வளர்ச்சிக் கட்டத்தில் அவற்றின் உற்பத்தி விலைக்கே), அல்லது பொது விதிகளால் நிர்ணயிக்கப்படும் இந்த மதிப்புகள் அல்லது உற்பத்தி-விலைகளின் உருத்திரிபுகளாய் இருக்கும் விலைகளுக்காவது விற்கப்படும் தனிப்பட்ட சரக்குகள் அல்லது பண்டங்கள் தொடர்பாக அல்ல, உழைப்புப் பிரிவினையால் சுயேச்சையாக்கப்படும் குறிப்பிட்ட சமுதாயப் பொருளுற்பத்தித் துறைகளின் உண்மையில் ஒவ்வொரு மொத்த உற்பத்தித் தொடர்பாகவும்கொள்கிறது மதிப்பு விதியால் ஏற்படும் விளைவுதான் இது;இதன் பொருள் என்னவென்றால் தனிப்பட்ட ஒவ்வொரு சரக்குக்கும் அவசியத்துக்கு மேல் கொஞ்சம் கூட உழைப்பு-நேரம் செலவிடப்படுவதில்லை என்பது மட்டுமல்ல, சமூதாயத்தின் மொத்த உழைப்பு நேரத்தில் அவசியமான விகித அளவு மட்டுமே பல்வேறு வகைகளுக்கும் செலவிடப்படுகிறது. சரக்கு பயன் -மதிப்புடையதாய் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையில் எவ்வித மாற்றமும் இல்லை. ஆனால் தனிப்பட்ட சரக்குகளின் பயன்-மதிப்பு அவை குறிப்பிட்ட தேவையை நிறைவு செய்கின்றனவா என்பதைப் பொறுத்ததாய் இருக்குமானால், சமுதாய உற்பத்திப் பண்டத் திரளின் பயன்-மதிப்பானது ஒவ்வொரு குறிப்பிட்ட வகைப் பண்டத்திற்குமான குறிப்பிட்ட அளவு கொண்ட சமுதாயத் தேவையை தக்கவாறு நிறைசெய்கிறதா என்பதையும் ஆகவே அளவு வழியில் வரம்பிடப்பட்ட இந்தச் சமுதாயத் தேவைகளுக்கு ஏற்ப வெவ்வேறு துறைகளிடையிலும் உழைப்பு உரிய விகிதத்தில் பங்கீடு செய்யப்பட்டுள்ளதா என்பதையும் பொறுத்ததாகும். (பல்வேறு உற்பத்தித் துறைகளிடையிலும் மூலதனம் பங்கீடு செய்யப்படுவது தொடர்பாக இவ்விபரம் கருத்துக்குரியது). சமுதாயத் தேவையானது, அதாவது சமுதாய அளவிலான பயன்-மதிப்பானது இங்கு மொத்தச் சமுதாய உழைப்பு நேரத்தில் பல்வேறு பிரத்தியேக உற்பத்தித் துறைகளுக்காகவும் செலவிடப்படும் பங்களவை நிர்ணயிக்கும் காரணியாகத் தோன்றுகிறது. ஆனால் ஏற்கெனவே தனியொரு சரக்கு தொடர்பாக பிரயோகமான அதே விதிதான் இது; அதாவது சரக்கின் பயன்-மதிப்பு அதன் பரிவர்த்தனை-மதிப்புக்கும் இவ்விதம் அதன் மதிப்புக்கும் முன்நிபந்தனை ஆகும். அவசிய-உழைப்புக்கும் உபரி-உழைப்புக்குமான விகித ஒழுங்கு மீறப்படுமானால் சரக்கின்

மதிப்பையும், எனவே அதிலடங்கிய உபரி-மதிப்பையும் ஈடேற்றம் செய்ய முடியாமற் போகும் என்ற அளவில் மட்டுமே இவ்விவரத்துக்கும் அவசிய-உழைப்பு உபரி-உழைப்பு ஆகியவற்றிடையிலான விகித உறவுக்கும் தொடர்பு உண்டு. எடுத்துக்காட்டாக, விகித ஒழுங்கை மீறி அதிகப்படியான பருத்தித் துணிகள் உற்பத்தி செய்யப்பட்டிருப்ப தாகவும், ஆனால் அப்போதைய நிலைமைகளில் அவசியமான உழைப்பு நேரம் மட்டுமே இந்த மொத்தத் துணியுற்பத்தியில் செலவிடப்பட்டிருப்பதாகவும் கொள்வோம். பொதுவாகப் பார்த்தால், அதிகப்படியான சமுதாய உழைப்பு குறிப்பிட்ட இந்த உற்பத்திக் கிளையில் செலவிடப்பட்டுள்ளது; அதாவது இந்த உற்பத்தியில் ஒரு பகுதி பயனற்றது. ஆக்வே அவசியமான விகித அளவு மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டிருந்தால் எப்படியோ அதே போலத்தான் இந்த மொத்த உற்பத்தியும் விற்கப்படுகிறது. குறிப்பிட்ட பல்வேறு உற்பத்திக் கிளைகளுக்கும் ஒதுக்கப்படும் சமுதாய உழைப்பு நேரத்தின் பங்களவிற்கான இந்த அளவுவழி வரம்பு பொதுவான மதிப்பு விதியின் மேலும் வளர்ச்சி பெற்ற தெரிவிப்பே ஆகும். அவசிய-உழைப்பு நேரம் என்பது இங்கு வேறு பொருள் கொள்வது மெய்தான், சமுதாயத் தேவைகளை நிறைவு செய்வதற்கு இதில் இவ்வளவுதான் வேண்டியிருக்கிறது. இங்கு எழுகிற வரம்பு பயன்மதிப்பின் பாற்பட்டது. சமுதாயமானது குறிப்பிட்ட உற்பத்தி நிலைமைகளில் இந்தக் குறிப்பிட்ட வகை பண்டத்திற்காக அதன் மொத்த உழைப்பு நேரத்தில் இவ்வளவுதான் செலவிடலாம். ஆனால் பொதுவாக உபரி-உழைப்பு உபரி-மதிப்பு இவற்றுக்கான அகவய புறவய நிலைமைகளுக்கும் குறிப்பிட்ட வடிவத்துக்கும், அதாவது இலாபமா வாடகையா என்பதற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. இந்நிலைமைகள் உபரி-மதிப்புக்கே பொருந்தும், அது குறிப்பிட்ட எவ்வடிவத்தை மேற்கொண்டாலும் சரி. ஆக இவை நில- வாடகைக்கு விளக்கமளிக்க பயன்படமாட்டா.

(3) நிலச்சொத்தின் பொருளாதார ஈடேற்றத்தில், நில-வாடகையின் வளர்ச்சியில் வெளிப்படும் தனித்தன்மை என்னவென்றால், நில-வாடகையின் அளவானது அதைப் பெற்றுக் கொள்கிறவரின் செயலால் நிர்ணயிக்கப்படுவது இல்லவே இல்லை, சமுதாய உழைப்பின் வளர்ச்சியினால்தான் - அவரைச் சாராமலும் அவர் எவ்விதப் பங்கும் வகிக்காமலும் ஏற்படும் இவ்வளர்ச்சியினால்தான் - அது நிர்ணயிக்கப்படுகிறது. இதனால்தான் உண்மையில் சரக்கு உற்பத்தியின் அடிப்படையிலான எல்லா உற்பத்திக் கிளைகளுக்கும் அவற்றின்

உற்பத்திப் பண்டங்களுக்கும்-குறிப்பாகச் சொன்னால் முழுக்க முழுக்க சரக்கு-உற்பத்தியே ஆகிய முதலாளித்துவப் பொருளுற்பத்திக்கும்-பொதுவான ஒரு தன்மை வாடகைக்குரிய (பொதுவாக விவசாய விளைபொருளுக்குரிய) விசேசத் தன்மையாக எளிதில் கருதப்பட்டு விடுகிறது.

சமுதாயம் வளர்ந்து செல்லும் போது, மொத்தச் சமுதாய உழைப்பின் பயனாய் நில-வாடகையின் அளவு உயர்ந்து செல்கிறது (அத்துடன் நிலத்தின் மதிப்பும் உயர்ந்து செல்கிறது). இதனால் ஒரு புறம், விவசாய விளைபொருட்களுக்கான சந்தையும் வேண்டலும்-விரிவடைந்துச் செல்கின்றன; மறுபுறம், இது நிலத்திற்கான வேண்டலுக்கும் ஊக்கம் கொடுக்கிறது - விவசாயமல்லாத கிளைகள் உட்பட தொழிற் செயற்பாட்டின் எல்லாக் கிளைகளிலுமே போட்டிப் போட்டு உற்பத்தி செய்வதற்கான முன் தேவைகளில் இதுவும் ஒன்று. மேலும் வாடகையும் அத்துடன் நிலத்தின் மதிப்பும் (முறையான விவசாய வாடகையை மட்டுமே கருத்தில் கொள்கிறோம்) விவசாய விளைபொருட்களுக்கான சந்தையுடனும், எனவே விவசாயமல்லாத மக்கள் தொகையிலான பெருக்கத்துடனும் சேர்ந்து வளர்கின்றன. அம்மக்களின் தேவைகளும் உணவுப் பொருட்களுக்கும் கச்சாப் பொருட்களுக்குமான அவர்களின் வேண்டலும் அதிகரிக்கும் போது வாடகையும் அதிகரிக்கிறது. விவசாயமல்லாத மக்கள் தொகையுடன் ஒப்பிடுமிடத்து விவசாய மக்கள் தொகையை ஓயாமல் குறையச் செய்வது முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறைக்குரிய இயல்பாகும். ஏனென்றால் தொழில்துறையில் (கண்டிப்பான அர்த்தத்தில்) மாறும்-மூலதனத்தோடு ஒப்பிடுமிடத்து மாறா-மூலதனம் அதிகமாகிச் செல்லும் போதே மாறும் மூலதனம் (ஒப்பளவில் குறைந்து சென்றாலும் கூட) அறுதியாக அதிகரித்துச் செல்கிறது; வேளாண்மையிலோ குறிப்பிட்ட நிலத்துண்டை சாகுபடி செய்வதற்குத் தேவையான மாறும்-மூலதனம் அறுதியாக குறைந்து செல்கிறது. புதிய நிலத்தை சாகுபடிக்கு கொண்டு வருகிற அளவுக்கு மட்டுமே மாறும்-மூலதனம் அதிகரிக்கமுடியும். ஆனால் இதற்கு விவசாயமல்லாத மக்கள்தொகை இன்னுங் கூட அதிகரிப்பது அவசியமாகும்.

உண்மையில் இங்கு நாம் பார்த்துக் கொண்டிருப்பது வேளாண்மைக்கும் அதன் விளைபொருள் உரித்தான தனி இயல்பு அல்ல. மாறாக சரக்குகளுக்குமே உற்பத்தியும் அதன் அறுதி வடிவமாகிய முதலாளித்துவப் பொருளுற்பத்தியும் அடிப்படையாக இருக்கும்போது

ஏனைய உற்பத்திக் கிளைகள் உற்பத்திப் பண்டங்கள் அனைத்திற்கும் இதுவே பொருந்தும்.

இந்த உற்பத்திப் பண்டங்கள் சரக்குகள் ஆகவேண்டுமானால், அதாவது ஈடேற்றம் செய்யப்பட வேண்டிய, பணமாக மாற்றப்பட வேண்டிய பரிவர்த்தனை-மதிப்பைப் பெற்றுள்ள பயன்-மதிப்புகள் ஆக வேண்டுமானால், ஏனைய சரக்குகள் அவற்றுக்குச் சமதையாக அமைய வேண்டும், ஏனைய பண்டங்கள் அவற்றைச் சரக்குகளாகவும் மதிப்புகளாகவும் எதிர்நோக்க வேண்டும்; ஆகவே அவை உற்பத்தியாளர்களுக்கான நேரடி வாழ்வுச் சாதனங்களாக உற்பத்தி செய்யப்படாமல் சரக்குகளாக உற்பத்தி செய்யப்பட வேண்டும்; பரிவர்த்தனை-மதிப்பாக (பணமாக) மாற்றப்படுவதன் மூலமே, உடைமைமாற்றம் செய்யப்படுவதன் மூலமே பயன்-மதிப்புகளாகிற பண்டங்களாக உற்பத்தி செய்யப்பட வேண்டும், இந்தச் சரக்கு களுக்கான சந்தையானது சமுதாய உழைப்புப் பிரிவினையின் வாயிலாக வளர்கிறது. உற்பத்தியில் ஈடுபடும் தொழிலாளர் களிடையிலான பிரிவினை அவரவர்களின் உற்பத்திப்பண்டங்களை ஒன்றுக்கொன்று சரக்குகளாக, ஒன்றுக்கொன்று சமதைகளாக மாற்றுகிறது; அவர்களை ஒருவருக்கொருவர் சந்தைகளாகச் பயன்படச் செய்கிறது. இது விவசாய விளைபொருட்களுக்கே உரித்தான தனித்தன்மை அல்லவே அல்ல.

வாடகையானது சரக்கு-உற்பத்தியின் அடிப்படையில்தான், குறிப்பாக முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் அடிப்படையில்தான் பண வாடகையாக வளர முடியும். விவசாய உற்பத்தி சரக்கு-உற்பத்தி ஆகிற அதே அளவுக்குத்தான், அதாவது விவசாயமல்லாத உற்பத்தி விவசாய உற்பத்தியைச் சாராமல் சுயேச்சையாக வளரும் அதே அளவுக்குத்தான் வாடகையும் வளர்கிறது; ஏனென்றால் விவசாய விளைபொருள் இந்த அளவுக்குத்தான் சரக்கும் பரிவர்த்தனை-மதிப்பும் ஆகிறது. சரக்கு உற்பத்தியும், எனவே மதிப்பு-உற்பத்தியும் முதலாளித்துவப் பொருளுற்பத்தியோடு சேர்ந்து வளரும் அதே அளவுக்குத்தான், உபரி-மதிப்பு, உபரி-உற்பத்திப் பொருள் ஆகிய வற்றின் உற்பத்தியும் வளர்கிறது. ஆனால் உபரி-மதிப்பின் உற்பத்தி வளரும் அதே அளவுக்குத்தான் நிலச்சொத்தானது நிலத்திலான தன் ஏகபோகத்தின் வாயிலாக இந்த உபரி-மதிப்பில் மேன்மேலும் கூடுதலான பகுதியை கைப்பற்றுவதற்கும் இவ்விதம் தன் வாடகையின் மதிப்பையும் நிலத்தின் விலையையும் கூட உயர்த்திக் கொள்வதற்கு மான ஆற்றலை வளர்த்துக் கொள்கிறது. இந்த உபரி-மதிப்பும் உபரி-

உற்பத்தியும் வளர்ச்சி அடைவதில் இப்போதும் முதலாளியே முனைப்பான பங்கு வகிக்கிறார். நிலவுடைமையாளரோ உபரி-உற்பத்தியிலும் உபரி-மதிப்பிலும் மேன்மேலும்கூடுதலான பகுதியை கைப்பற்றிக் கொள்ள வேண்டியதுதான். இவ்வளர்ச்சியில் எவ்விதப் பங்கும் வகிக்க வேண்டியதில்லை. இதுதான் நிலவுடைமையாளர் என்னும் நிலைக்குரிய தனியியல்பு; விவசாய விளைபொருட்களுக்கான சந்தை விரிவடைந்து, வேண்டல் அதிகரித்து, அத்துடன் விவசாய விளைபொருட்களை எதிர்நோக்கும் சரக்குகளின் உலகும்-வேறுவிதமாகச் சொல்வதானால்; விவசாயமல்லாத சரக்கு-உற்பத்தியாளர்களின் தொகையும் விவசாயமல்லாத சரக்கு உற்பத்தியின் அளவு வீதமும் பெருகப் பெருக விவசாய விளைபொருட்களின் மதிப்பு ஓயாமல் வளர்ந்து செல்கிறது, நிலத்தின் மதிப்பு கூட அவ்வாறே வளர்ந்து செல்கிறது என்பதல்ல அத்தனியியல்பு. மேற்கூறிய வளர்ச்சி நிலவுடைமையாளரின் தரப்பில் எவ்வித முயற்சியும் இல்லாமல் நடைபெறுவதாகையால், மதிப்புத் திரளும் உபரி-மதிப்புத்திரளும் இந்த உபரி-மதிப்பில் ஒருபகுதி நில-வாடகையாக மாற்றமடைவதும் சமுதாயப் பொருளுற்பத்தி நிகழ்முறையை பொதுவாக சரக்கு-உற்பத்தியின் வளர்ச்சியை சார்ந்திருப்பது அலாதியான ஒன்றாக அவருக்கு தெரிகிறது. இதனால்தான் எடுத்துக்காட்டாக, டவ் இந்த அடிப்படையில் வாடகைக்கு விளக்கமளிக்க முயல்கிறார். வாடகை விவசாய விளைபொருளின் மதிப்பைப் பொறுத்ததே தவிர, அளவைப் பொறுத்ததல்ல என்கிறார் அவர்.* இந்த மதிப்போ விவசாயமல்லாத மக்கள் தொகையின் அளவையும் உற்பத்தித் திறமையும் பொறுத்ததாகும். ஆனால் ஓர் உற்பத்திப் பண்டம் அதற்குச் சமதைகள் ஆகிற ஏனையச் சரக்குகளின் திரளும் பல்வகைமையும் அதிகரிக்கும் அளவுக்குத்தான் சரக்காக வளர முடியும் என்பது வேறெந்த உற்பத்திப் பண்டத்துக்கும் கூட பொருந்துகிற உண்மைதான். பொதுவாக மதிப்பைப் பற்றி விவரித்த போதே இதனைத் தெளிவாக்கி விட்டோம் ஒருபுறம், பொதுவாக ஓர் உற்பத்திப் பண்டம் பரிவர்த்தனை செய்யத் தக்கதாய் இருப்பது கூடவே இருந்து வருகிற வெவ்வேறு சரக்குகளின் தொகையைத்தான் பொறுத்தது. மறுபுறம் எந்த அளவில் இந்தப் பண்டத்தை சரக்காக உற்பத்தி செய்ய முடியும் என்பது குறிப்பாக இந்தப் பரிவர்த்தனைத் திறனைப் பொறுத்தது.

---

(*) ப.டவ், அரசியல் விஞ்ஞானத்தின் அடிக்கூறுகள், எடின்பரோ, 1854, பக்கம் 279.-ஆங்கிலப்பதிப்பாசிரியர். )

தொழில்துறையிலும் சரி, விவசாயத்துறையிலும் சரி எந்தவோர் உற்பத்தியாளரையும் அவரளவில் எடுத்துக் கொண்டால், அவர் மதிப்போ சரக்கோ உற்பத்தி செய்வதில்லை, பிரத்தியேகமான சமூக இடையுறவுகளின் சூழலில்தான் அவரது உற்பத்திப் பண்டம் மதிப்பும் சரக்கும் ஆகிறது. முதலாவதாக, அப்பண்டம் சமுதாய உழைப்பின் தெரிவிப்பாக விளங்குகிற அளவிலும், எனவே தனியொரு உற்பத்தியாளரின் உழைப்பு நேரம் பொதுவான சமுதாய உழைப்பு நேரத்தின் பகுதியாக விளங்குகிற அளவிலும் அதுமதிப்பும் சரக்கும் ஆகிறது. இரண்டாவதாக, அவரது உழைப்பின் இந்தச் சமூகத் தன்மை அதன் பணத்தன்மையின் பயனாகவும் அதன் விலையினால் நிர்ணயிக்கப்படும் அதன் பொதுவான பரிவர்த்தனைத் திறனின் பயனாகவும் அவரது உற்பத்திப் பண்டத்தின் பதிக்கப்படும் தன்மையாக விளங்குகிறது.

ஆக, ஒருபக்கம் வாடகைக்கு விளக்கமளிப்பதற்கு பதில் உபரி-மதிப்புக்கு, அல்லது இன்னும் குறுகிய பார்வையில் உபரி-உற்பத்திக்கு விளக்கமளிக்கப்படுகிறது என்றால், மறு பக்கம் சரக்குகள் என்ற முறையிலும் மதிப்புகள் என்ற முறையிலும் எல்லா உற்பத்திப் பண்டங்களுக்கும் உரிய தன்மையை பிரத்தியேகமாய் விவசாய விளைபொருட்களுக்கு மட்டும் உரித்தாக்குவது என்னும் தவறு செய்யப்படுகிறது, பொதுவான மதிப்பு நிர்ணயிப்பிலிருந்து குறிப்பிட்ட சரக்கு - மதிப்பின் ஈடேற்றத்துக்கு தாவுகிறவர்கள் இதை இன்னும் கூட சொச்சைப்படுத்தி விடுகிறார்கள். ஒவ்வொரு சரக்கும் சுற்றோட்ட நிகழ்முறையில்தான் அதன் மதிப்பை ஈடேற்றம் செய்து கொள்ள முடியும் அது தன் மதிப்பை ஈடேற்றம் செய்து கொள்கிறதா. எந்த அளவுக்குச் செய்து கொள்கிறது என்பதெல்லாம் அச்சமயம் நிலவுகிற சந்தை நிலைமைகளைப் பொறுத்தது.

விவசாய விளைபொருட்கள் மதிப்புகளாக வளர்கின்றன, மதிப்புகள் என்ற முறையில் வளர்கின்றன, அதாவது அவை ஏனைய சரக்குகளை சரக்குகளாகவே எதிர்நோக்குகின்றன என்பதும் விவசாயமல்லாத உற்பத்திப் பண்டங்கள் அவற்றைச் சரக்குகளாக எதிர்நோக்குகின்றன என்பதும் நில-வாடகைக்குரிய தனிச்சிறப்பு அல்ல. அவை சமுதாய உழைப்பின் பிரத்தியேகத் தெரிவிப்புகள் என்ற முறையில் வளருவதும் கூட நில-வாடகைக்குரிய தனிச்சிறப்பு அல்ல. விவசாய விளைபொருட்களானவை மதிப்புகள் (சரக்குகள்) என்ற முறையில் வளர்ச்சி பெறும் நிலைமைகளோடும், அவற்றின்

மதிப்புகள் ஈடேற்றம் பெறும் நிலைமைகளோடும் சேர்ந்தாற் போல், நிலச் சொத்தானது தன் துணையின்றி படைக்கப்பட்ட இம்மதிப்புகளில் மேன்மேலும் கூடுதலாகிற ஒரு பகுதியை தனதாக்கிக் கொள்ளும் திறனையும் வளர்த்துக் கொள்கிறது; இதனால் உபரி-மதிப்பில் மேன்மேலும் கூடுதலாகிற ஒரு பகுதி நில-வாடகையாக மாற்றப்படுகிறது - இதுதான் நில-வாடகையின் தனிச் சிறப்பு.

## அத்தியாயம் XXXVIII

## வேறுபாட்டு வாடகை: பொதுக்குறிப்புகள்

நில - வாடகையைப் பகுத்தாராய்கையில் ஓர் அனுமானத்திலிருந்து தொடங்குவோம்; அதாவது நில-வாடகை கிடைக்கச் செய்யும் உற்பத்திப் பொருட்கள்-எவற்றின் உபரி-மதிப்பில் ஒரு பகுதியும், எனவே மொத்த விலையில் ஒரு பகுதியும் கூட நில-வாடகையாகப் பெயர்கிறதோ அந்த உற்பத்திப் பொருட்கள் - மற்றெல்லாச் சரக்குகளையும் போலவே அதனதன் உற்பத்தி விலைக்கே விற்கப்படுவதாகக் கொள்கிறோம். (இப்போது நம் நோக்கத்திற்கு விவசாய விளைபொருட்களையும் சுரங்க விளைபொருட்களையும் எடுத்துக் கொண்டால் போதும்). ஆகவே அவற்றின் விற்பனை விலை = அடக்க-விலையின் கூறுகள் (நுகரப்பட்ட மாறா-மூலதனம், மாறும் -மூலதனம் ஆகியவற்றின் மதிப்பு) பொது இலாப வீதத்தால் நிர்ணயிக்கப்படும் இலாபம், (நுகரப்பட்டிருந்தாலும் இல்லா விட்டாலும்) முன்னீடு செய்யப்படும் மொத்த மூலதனத்தின் அடிப்படையில் இந்த இலாபம் கணக்கிடப்படுகிறது. ஆக, இந்த விளை பொருட்களின் சராசரி விற்பனை-விலை அவற்றின் உற்பத்தி-விலைக்குச் சமமெனக் கொள்கிறோம் இந்நிலைமைகளில் நில-வாடகை தலையெடுக்க முடிவது எப்படி?. இலாபத்தில் ஒரு பகுதி நில -வாடகையாக மாற்றப்பட்டு, சரக்கு-விலையில் ஒரு பகுதி நிலவுடைமையாளருக்குப் போய்ச் சேர முடிவது எப்படி? என்ற கேள்வி எழுகிறது. இவ்வகை நில - வாடகையின் பொதுத் தன்மையை விளக்கிச் சொல்லும் பொருட்டு ஒரு நாட்டில் பெரும்பாலான தொழிற்சாலைகள் நீராவி எஞ்சின்களைக் கொண்டு விசைபெற்று இயங்குவதாகவும், ஒரு சில தொழிற்சாலைகள் மட்டும் இயற்கை அருவிகளிலிருந்து விசைபெற்று இயங்குவதாகவும் கொள்வோம். முன்னவற்றில் உற்பத்தி -விலை குறிப்பிட்ட சரக்களவுக்கு 115 என்றும் இதற்காக நுகரப்பட்டுள்ள மூலதனம் 100 என்றும் வைத்துக் கொள்வோம் 15% இலாபமானது நுகரப்பட்ட மூலதனமாகிய 100இன் அடிப்படையில் மட்டும் கணக்கிடப்படாமல், இந்தச் சரக்கு மதிப்பின் உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்ட மொத்த மூலதனத்தின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது. இந்த உற்பத்தி-விலை ஒவ்வொரு தனிப்பட்ட

*தொழில்துறை உற்பத்தியாளருக்குமான தனிப்பட்ட அடக்க விலையால் நிர்ணயிக்கப்படாமல், அந்த உற்பத்திக் கிளை முழுவதிலும் மூலதனத்துக்குரிய சராசரி நிலைமைகளில் சரக்கிற்குள்ள சராசரி அடக்க-விலையாலேயே நிர்ணயிக்கப்படுவதாக முன்பே பார்த்தோம். இதுதான் உண்மையில் சந்தை உற்பத்தி விலை; ஏற்ற இறக்க அலைவுகளுக்கு மாறான சராசரிச் சந்தை-விலை.... பொதுவாகச் சொன்னால், சந்தை-விலையின் வடிவில்தான், மேலும் ஆளுகிற சந்தை-விலை அல்லது சந்தை-உற்பத்தி-விலையின் வடிவில்தான் சரக்கு- மதிப்பின் தன்மை வெளிப்படுகிறது. குறிப்பிட்ட அளவிலோ எண்ணிக்கையிலோ சரக்கு உற்பத்தி செய்திட தனிப்பட்ட உற்பத்தியாளருக்குத் தேவைப்படும் உழைப்பு நேரத்தால் சரக்கு-மதிப்பின் தன்மை நிர்ணயிக்கப்படுவதில்லை. சமூக வழியில் அவசியமான உழைப்பு நேரத்தால்தான் அது நிர்ணயிக்கப்படுகிறது; அதாவது அச்சமயம் நிலவுகிற சராசரிச் சமுதாய பொருளுற்பத்தி நிலைமைகளில் சமுதாயத்திற்கு தேவையான மொத்த அளவில் அந்தந்த வகைச் சரக்கையும் உற்பத்தி செய்வதற்கு தேவைப்படும் உழைப்பு நேரத்தாலேயே அது நிர்ணயிக்கப்படுகிறது.*

*குறிப்பிட்ட எண் விவரங்கள் இங்கு எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம் என்றாலும் நீர்விசை கொண்டு இயக்கப்படும் தொழிற்சாலைகளில் 100க்குப் பதில் 90 மட்டும் அடக்க விலையாவதாகவும் வைத்துக் கொள்வோம். இந்தச் சரக்களவின் சந்தை -உற்பத்தி விலை = 115, இலாபம் = 15% என்பதால், நீர்விசை கொண்டு இயந்திரங்களை ஓடச்செய்யும் ஆலையதிபர்களும் 115க்கு விற்பார்கள், சராசரி விலையால் ஆளப்படும் சந்தை-விலைக்கு விற்பார்கள். அவர்கள் 15க்குப் பதில் 25 இலாபம் பெறுவார்கள் ஆளும் உற்பத்தி- விலையானது அவர்களுக்கு 10% உபரி-இலாபம் கிடைக்கச் செய்வதற்கு, அவர்கள் தங்களுடைய சரக்குகளை உற்பத்தி-விலைக்கு மேல் விலைவைத்து விற்பதல்ல காரணம்; அசாதாரண அளவுக்குச் சாதகமான நிலைமைகளில், இந்த உற்பத்திக் கிளையில் நிலவும் சராசரித் தரத்துக்கு மேல் சாதகமான நிலைமைகளில் அவர்களின் சரக்குகள் உற்பத்தியாகின்றன, அல்லது அவர்களின் மூலதனம் செயல்படுகிறது என்பதே காரணம்.*

*இங்கு உடனே தெளிவாய்த்தெரிய வருகிறவை இரண்டு:*

*முதலாவதாக, இயற்கை அருவியை இயக்க விசையாகப் பயன்படுத்தும் உற்பத்தியாளர்களின் உபரி-இலாபமானது எடுத்த*

எடுப்பில் வேறெந்த உபரி-இலாபத்தையும் போன்றதே ஆகும் (இக்கருத்தினத்தை உற்பத்தி-விலை குறித்துப் பேசும் போதே பரிசீலித்தோம்); இவ்வகை உபரி-இலாபம் சுற்றோட்ட நிகழ் முறையிலான கொடுக்கல் வாங்கல்களின், சந்தை விலைகளில் சந்தர்ப்பவசமாய் ஏற்படும் ஏற்ற இறக்கங்களின் தற்செயல் விளைவு அல்ல. இந்த உபரி-இலாபமும் கூட வேறெந்த உபரி-இலாபத்தையும் போலவே சாதக நிலையிலுள்ள இந்த உற்பத்தியாளர்களின் தனிப்பட்ட உற்பத்தி-விலைக்கும் இந்த உற்பத்திக் கிளை முழுவதிலும் சந்தையை ஆளும் பொதுவான சமுதாய உற்பத்தி-விலைக்கும் இடையிலான வேறுபாட்டுக்குச் சமம். இந்த வேறுபாடானது சரக்குகளின் தனிப்பட்ட உற்பத்தி-விலையின் மீது அவற்றின் பொது உற்பத்தி-விலைக்குள்ள மிகைக்குச் சமம். இந்த மிகையை ஆளும் இரு வரம்புகள் ஒரு பக்கத்தில் தனிப்பட்ட அடக்க-விலையும், எனவே தனிப்பட்ட உற்பத்தி-விலையும் மறுபக்கத்தில் பொது உற்பத்தி-விலையும் ஆகும். நீர்விசை கொண்டு சரக்குகள் உற்பத்தி செய்யப்படுவதற்கு குறைந்த அளவு உழைப்பே தேவைப்படுவதால், அதாவது மாறா-மூலதனத்தின் பகுதியாக பொருள் வடிவில் குறைந்த அளவு உழைப்பே சேருவதால் அச்சரக்குகளின் மதிப்பும் குறைவாய் உள்ளது. இங்கு ஈடுபடுத்தப்படும் உழைப்பு இதே வகையைச் சேர்ந்த பெரும்பாலான தொழிற்சாலை களில் ஈடுபடுத்தப்படும் உழைப்பைக் காட்டிலும் உற்பத்தித் திறனுள்ளதாய் இருக்கிறது, அதன் தனிப்பட்ட உற்பத்தித் திறன் கூடுதலாய் இருக்கிறது. குறிப்பிட்ட சரக்களவை உற்பத்தி செய்யும் பொருட்டு அதற்குத் தேவைப்படும் மாறா மூலதன அளவு-பொருள் வடிவாக்கப்பட்ட உழைப்பின் அளவு-மற்றவற்றுக்குத் தேவைப் படுவதைக் காட்டிலும் குறைவாய் இருக்கிறது. அதற்குத் தேவைப்படும் உயிருள்ள உழைப்பும் குறைவாய் இருக்கிறது, ஏனென்றால் நீர்விசைச் சக்கரத்துக்கு வெப்பமூட்டத் தேவையில்லை. ஈடுபடுத்தப்படும் உழைப்பின் தனிப்பட்ட உற்பத்தித் திறன் இவ்விதம் கூடுதலாய் இருப்பது சரக்கின் மதிப்பைக் குறையச் செய்வதோடு, அதன் அடக்க-விலையையும், எனவே உற்பத்தி-விலையையும் குறையச் செய்கிறது. தனியொரு தொழில்துறை முதலாளிக்கு, இது அவருடைய சரக்குகளுக்கான குறைவாய் இருப்பதில் வெளிப்படுகிறது. அவர் விலை கொடுத்து வாங்க வேண்டிய பொருள் வடிவாக்கப்பட்ட உழைப்பு குறைவாய் உள்ளது; ஈடுபடுத்தப்படும் உயிருள்ள உழைப்புச் சக்தி குறைவாய் இருப்பதால் கூலியும் அதேபோல் குறைவாய் இருக்கிறது. அவருடைய சரக்குகளின் அடக்க-விலை குறைவாய்

இருப்பதால் அவரின் தனிப்பட்ட உற்பத்தி-விலையும்குறைவாய் இருக்கிறது. அவரின் அடக்க-விலை 100க்குப்பதில் 90 ஆகும். ஆக அவரின் தனிப்பட்ட உற்பத்தி-விலையும் 115க்கு பதில் 103½ மட்டுமே ஆகும் (100 : 115 = 90 : 103½). அவரின் தனிப்பட்ட உற்பத்தி- விலைக்கும் பொது உற்பத்தி-விலைக்கும் இடையிலான வேறுபாடு, அவரின் தனிப்பட்ட அடக்கவிலைக்கும் பொது அடக்க-விலைக்கும் இடையிலான வேறுபாட்டால் நிர்ணயிக்கப்படுகிறது. இது அவருடைய உபரி- இலாபத்திற்கு வரம்புகளாகிற பருமன்களில் ஒன்று. மற்றொன்று பொது இலாப வீதத்தை ஆளும் காரணிகளில் ஒன்றாய்க் கொண்ட பொது உற்பத்தி-விலை ஆகும். நிலக்கரியின் விலை குறைந்தால், அவரின் தனிப்பட்ட அடக்க-விலைக்கும் பொது அடக்க-விலைக்கும் இடையிலான வேறுபாடு குறைகிறது. இதனால் அவரின் உபரி-இலாபமும் குறைகிறது. சரக்கை அதன் தனிப்பட்ட மதிப்புக்கு, அல்லது இந்தத் தனிப்பட்ட மதிப்பால் நிர்ணயிக்கப்படும் உற்பத்தி-விலைக்கு அவர் விற்க நேரிட்டால் வேறுபாடு மறைந்து போகும். இது ஒரு பக்கத்தில் சரக்குகள் அவற்றின் பொதுச் சந்தை-விலைக்கு தனிப்பட்ட விலைகள் போட்டியினால் சமனமாக்கப் பட்டு அடையப்பெறும் விலைக்கு விற்கப்படுவதன் விளைவாகும்; மறுபக்கத்தில் அவரால் இயங்க வைக்கப்படும் உழைப்பின் தனிப்பட்ட உற்பத்தித் திறன் கூடுதலாய் இருப்பது தொழிலாளிக்கு நலம் பயப்பதற்கு பதில் பொதுவாக உழைப்பின் உற்பத்தித்திறன் அனைத்தையும் போலவே அதிபருக்குத்தான் நலம் பயப்பதன், மூலதனத்தின் உற்பத்தித் திறனாக தோற்றமளிப்பதன் விளைவாகும்.

பொது உற்பத்தி-விலையின் அளவு இந்த உபரி-இலாபத்தின் வரம்புகளில் ஒன்றாகவும், பொது இலாப வீதத்தின் அளவு அதன் காரணிகளில் ஒன்றாகவும் இருப்பதால், பொது உற்பத்தி-விலைக்கும் தனிப்பட்ட உற்பத்தி-விலைக்கும் இடையிலான வேறுபாட்டி லிருந்தும், எனவே பொது இலாப வீதத்துக்கும் தனிப்பட்ட இலாப வீதத்துக்கும் இடையிலான வேறுபாட்டிலிருந்தும்தான் இந்த உபரி-இலாபம் வரமுடியும். உபரியானது இந்த வேறுபாட்டை விடவும் அதிகமாய் இருக்க வேண்டுமானால் உற்பத்திப் பண்டங்கள் சந்தையினால் ஆளப்படும் உற்பத்தி-விலைக்கு விற்கப்படுவதற்குப் பதில் அதற்கும் மேலே விலை வைத்து விற்கப்பட்டாக வேண்டும்.

இரண்டாவதாக, இதுவரை பார்த்துள்ளபடி, நீராவிக்குப் பதில் இயற்கை நீர்விசையை பயன்படுத்தும் ஆலையதிபரின் உபரி-இலாபம்

இதர எவ்வித உபரி-இலாபத்திலிருந்தும் சற்றும் வேறுபடவில்லை. இயல்பான உபரி-இலாபம் அனைத்தும், அதாவது தற்செயல் விற்பனைகளிலிருந்தோ அல்லது சந்தை-விலை ஏற்ற இறக்கங்களி லிருந்தோ வருவதல்லாத உபரி-இலாபம் அனைத்தும் குறிப்பிட்ட மூலதனத்தால் உற்பத்தி செய்யப்படும் சரக்குகளின் தனிப்பட்ட உற்பத்தி-விலைக்கும் பொது உற்பத்தி-விலைக்கும் இடையிலான வேறுபாட்டால் நிர்ணயிக்கப்படுகிறது. பொது உற்பத்தி-விலை என்பது பொதுவாக இந்த உற்பத்திக் கிளையில் மூலதனத்தால் உற்பத்தி செய்யப்படும் சரக்குகளின் சந்தை-விலைகளை, அதாவது இந்த உற்பத்திக் கிளையில் முதலீடாகியுள்ள மொத்த மூலதனத்திற்கான சரக்குகளின் சந்தை - விலைகளை ஆளுவதாகும்.

வேறுபாட்டை இப்போது எடுத்துக் கொள்வோம்,

நாம் பரிசீலித்துக் கொண்டிருக்கும் நேர்வின் தொழில் துறை முதலாளி அடையும் உபரி-இலாபத்திற்கு, பொது இலாப வீதத்தால் ஆளப்படும் உற்பத்தி-விலையிலிருந்து தனிப்பட்ட முறையில் அவருக்குக் கிடைக்கும் உபரிக்கு என்ன காரணம்?

முதலாவதாக ஓர் இயற்கைச் சக்திதான், அருவியின் இயக்கு விசைதான் காரணம். இந்த இயக்குவிசை இயற்கையில் தயாராய் இருப்பது, நீரை நீராவியாக மாற்றும் நிலக்கரியைப் போல் அது உழைப்பின் உற்பத்திப் பொருள் அல்ல. நிலக்கரி மதிப்பைப் பெற்றுள்ளது, அதற்குச் சமதையாக விலைகொடுத்தாக வேண்டும், அதாவது செலவு செய்தாக வேண்டும். அருவியோ இயற்கையான உற்பத்திச் செயலி ஆகும், இதைப் படைப்பதற்காக உழைக்க வேண்டிய அவசியம் இல்லை.

ஆனால் இது மட்டுமன்று, நீராவி கொண்டு ஆலையை இயக்குகிற ஆலையதிபரும் இயற்கைச் சக்திகளைப் பயன்படுத்துகிறார், இந்தச் சக்திகளுக்காக அவர் எச் செலவும் செய்வதில்லை. ஆனால் அவை உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்துகின்றன, தொழிலாளர்களுக்குத் தேவையான வாழ்வுச் சாதனங்களின் உற்பத்தியை மலிவாக்கி அந்த அளவில் உபரி-மதிப்பையும் எனவே இலாபத்தையும் அதிகமாக்கு கின்றன. ஆகவே கூட்டுவேலை, உழைப்புப் பிரிவினை முதலான வற்றிலிருந்து எழும் உழைப்பின் சமூக இயற்கைச் சக்திகளைப் போல் மேற்கூறிய இயற்கைச் சக்திகளும் மூலதனத்தின் ஏகபோக உடைமையாக்கப்படுகின்றன. ஆலையதிபர் நிலக்கரிக்கு விலை கொடுக்கிறாரே தவிர நீர் அதன் பௌதீக நிலையை மாற்றிக் கொண்டு

நீராவியாகும் திறனுக்கு, நீராவியின் நெகிழ்திறன் போன்றவற்றுக்கு விலை கொடுப்பதில்லை. இயற்கை சக்திகளை, இச் சக்திகளால் உழைப்புத் திறனில் ஏற்படும் உயர்வை இவ்விதம் ஏகபோகம் ஆக்கிக் கொள்வது நீராவி எஞ்சின்களைப் பயன்படுத்தி இயங்கும் மூலதனம் அனைத்துக்கும் பொதுவானதே. உழைப்பின் உற்பத்தியில் கூலியாக மாற்றப்படும் பகுதியோடு ஒப்பிடுகையில் உபரி-மதிப்பைக் குறிக்கும் பகுதியை இது அதிகமாக்கக் கூடும். அப்படி அதிகமாக்குகிற அளவில், அது பொது இலாப வீதத்தை உயரச் செய்கிறது. ஆனால் உபரி-இலாபம் ஏதும் அதனால் படைக்கப்படுவதில்லை; ஏனென்றால் உபரி-இலாபம் என்பது சராசரி இலாபத்தின் மீது தனிப்பட்ட இலாபத்திற்குள்ள மிகைதான். ஆகவே நாம் பரிசீலித்துக் கொண்டிருக்கும் நேர்வில், இயற்கைச் சக்தியாகிய நீர்விசையின் பிரயோகம் உபரி-இலாபத்தைப் படைக்கிறது என்பதற்கு ஓர் இயற்கைச் சக்தியின் பயன்பாட்டால் இங்கு உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரிப்பது மட்டும் காரணமாய் இருக்க முடியாது. மாற்றம் உண்டாகும்படியான வேறு காரணிகளும் அவசியமாகின்றன.

எதிர் மாறான நேர்வை எடுத்துக் கொள்வோம். தொழில்துறையில் இயற்கைச் சக்திகள் பிரயோகிக்கப்படுவதே பொது இலாப வீதத்தின் அளவில் தாக்கம் செலுத்தக் கூடும்; ஏனென்றால் அவசிய வாழ்வுச் சாதனங்களை உற்பத்தி செய்வதற்குத் தேவையான உழைப்பளவில் அது தாக்கம் செலுத்துகிறது. ஆனால் அது தன்னளவில் பொது இலாப வீதத்திலிருந்து எவ்வித மாறுபாட்டையும் தோற்றுவிப்பது இல்லை. இதுதான் இப்போது நம் பரிசீலனைக்குரியதாகும். மேலும், தனியொரு மூலதனம் குறிப்பிட்ட ஓர் உற்பத்திக் கிளையில் வேறுவிதமாய் அடைகிற உபரி-இலாபம் - குறிப்பிட்ட உற்பத்திக் கிளைகளிடையே இலாப வீதத்தில் காணப்படும் மாறுபாடுகள் ஓயாமல் நேர் செய்யப்பட்டு சராசரி இலாபவீதம் பெறப்படுகிறது-வெறும் தற்செயல் மாறுபாடுகளை ஒதுக்கிவிட்டுப் பார்த்தால், அடக்க-விலையில், அதாவது உற்பத்திச் செலவுகளில் செய்யப்படும் குறைப்பின் விளைவே ஆகும். இந்தக் குறைப்பு இரு வழிகளில் செய்யப்படலாம். முதலாவதாக மூலதனம் சராசரிக்கும் கூடுதலான அளவுவீதத்தில் பிரயோகிக்கப்படுகிறது. இதனால் உற்பத்தியின் திறனிலாச் செலவு குறைகிறது; அதேபோது உழைப்பின் உற்பத்தித் திறனை உயரச் செய்யும் பொதுக் காரணங்கள் (கூட்டு-வேலை, உழைப்புப் பிரிவினை முதலானவை) அவற்றின் செயற்களம் விரிவாகி விட்டதால் இன்னும் மும்முரமாகவும் செயல்பட முடிகிறது. இரண்டாவதாக செயல்படும்

மூலதனத்தின் அளவுவீதம் ஒருபுறம் இருக்க சிறந்த வேலை முறைகள், புதிய கண்டுபிடிப்புகள், மேம்பட்ட இயந்திரங்கள், வேதியியல் தொடர்பான வர்த்தக ரகசியங்கள் முதலானவற்றால் உற்பத்திச் செலவு குறைக்கப்படலாம்; அதாவது புதியவையும் மேம்பட்டவையும் சராசரிக்கு மேல் சிறந்தவையுமான உற்பத்திச் சாதனங்களையும் உற்பத்தி வழிமுறைகளையும் பயன்படுத்தி இது செய்யப்படலாம். அடக்க-விலை குறைவதற்கும் இதனால் உபரி - இலாபம் கிடைப்பதற்கும் இங்கு காரணமாய் இருப்பது, செயல்படும் மூலதனம் முதலீடு செய்யப்படுகிற விதமே ஆகும். மூலதனமானது தனியொருவரின் கையில் அசாதாரண பெரும் அளவுகளில் குவிக்கப்படுவதாலோ (சராசரியாக சம மூலதனத் தொகைகள் ஈடுபடுத்தப்படுகையில் உடனே இந்நிலைமை ஒழிந்து போகும்), குறிப்பிட்ட அளவிலான மூலதனம் சிறப்பான உற்பத்தித் திறனுடன் செயல்படுவதாலோ சிறப்பான உற்பத்தி வழிமுறை எங்கும் பரவி பொது வழிமுறையான உடனே அல்லது அதைவிடவும் முன்னேறியதொரு வழி முறையால் விஞ்சப்பட்ட உடனே இந் நிலைமை ஒழிந்து போகும். அடக்க-விலை குறைந்து உபரி- இலாபம் கிடைக்கிறது.

ஆக, ஈடுபடுத்தப்படும் மூலதனப் பருமன் கூடுதலாய் இருப்பதானாலும் சரி, அது கூடுதல் செய்திறனோடு பிரயோகிக்கப் படுவதனாலும் சரி, உபரி-இலாபத்திற்கான காரணம் இங்கு மூலதனத்திலேயே அடங்கியுள்ளது (மூலதனம் என்பதில் அதனால் இயங்க வைக்கப்படும் உழைப்பும் அடங்கும்). ஒரே உற்பத்திக் கிளையில் மூலதனமனைத்தும் ஒரே விதமாய் முதலீடு செய்யப்படக் கூடாது என்பதற்கு குறிப்பான காரணம் என்று உண்மையில் எதுவும் இல்லை. மாறாக, மூலதனங்களுக்கிடையிலான போட்டி இந்த வேறுபாடுகளை மேன்மேலும் மறையச் செய்யும் போக்குடையதாகும். சமூக வழியில் அவசியமான உழைப்பு நேரத்தால் மதிப்பு நிர்ணயிக்கப்படுவது சரக்குகள் மலிவாவதன் மூலமும், ஒரே விதமான சாதக நிலைமைகளில் சரக்குகளை உற்பத்தி செய்தாக வேண்டிய கட்டாயத்தின் மூலமும் வெளிப்படுகிறது. ஆனால் அருவியைப் பயன்படுத்திக் கொள்ளும் ஆலையதிபர் அடைகிற உபரி-இலாபத்தின் சங்கதி வேறு. அவரால் ஈடுபடுத்தப்படும் உழைப்பின் கூடுதலான உற்பத்தித் திறன் மூலதனத்திலிருந்தும் உழைப்பிலிருந்துமே வருவதல்ல, மூலதனமோ உழைப்போ அல்ல என்றாலும் மூலதனத்தில் சேர்ந்துள்ள இயற்கைச் சக்தியின் பிரயோகத்திலிருந்தே வருவதும் அல்ல. அது ஓர் இயற்கைச் சக்தியின் பிரயோகத்தோடு இணைக்கப்படும்

உழைப்பின் கூடுதலான இயற்கை உற்பத்தித் திறனிலிருந்து வருவதாகும், ஆனால் இந்த இயற்கை சக்தி (உதாரணமாய்ச் சொன்னால் நீராவியின் நெகிழ் திறத்தைப் போல்) அதே உற்பத்திக் கிளையிலுள்ள மூலதனமனைத்துக்கும் கிடைக்கக் கூடிய ஒன்று அல்ல. ஆகவே மூலதனம் இந்தக் கிளையில் முதலீடு செய்யப்பட்ட உடனே இச் சக்தியின் பிரயோகம் தானாக நிகழ்ந்து விடும் எனக் கருதுவதற்கில்லை. மாறாக அது ஏகபோக உடைமையாக்கிக் கொள்ளத்தக்க இயற்கைச் சக்தியாகும், இந்தப் புவிக்கோளின் குறிப்பிட்ட பகுதிகளையும் அவற்றிலிருப்பவற்றையும் வசப்படுத்தி வைத்திருப்பவர்களுக்கு மட்டும் கிடைக்கக் கூடிய இயற்கை சக்தியாகும். அருவியை எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்குப் பயன்படுகிற இந்த இயற்கை நிலைமையை மூலதனமே உண்டுபண்ணிக் கொள்வது முடியாத காரியம்-எந்த மூலதனம் வேண்டுமானாலும் நீரை நீராவியாக எளிதில்மாற்றிக் கொள்ள முடிவதைப் போன்றதல்ல இது. இந்நிலைமையானது இயற்கையில் குறிப்பிட்ட சில இடங்களில்தான் காணப்படுகிறது, இல்லாத இடங்களில் குறிப்பிட்ட அளவு மூலதனத்தை முதலீடு செய்து அதனை உண்டு பண்ண முடியாது. அது குறிப்பிட்ட நிலப் பகுதிகளில் நிலவும் பிரத்தியேக இயற்கை நிலைமைகளைச் சார்ந்திருப்பது தவிர இயந்திரங்களையும் நிலக்கரியையும் போல் உழைத்து உற்பத்தி செய்யக்கூடிய பண்டங்களோடு சார்ந்திருப்பதல்ல. ஆலையதிபர்களில் அருவிகளின் உடைமையாளர்களாய் இருப்பவர்கள் இந்த இயற்கைச் சக்தியின் பயன் ஏனைய ஆலையதிபர்களுக்கு கிடைக்காமல் செய்து விடுகிறார்கள். ஏனென்றால் நிலம் கிடைப்பது அரிது, இயற்கைச் சக்தி வாய்க்கப் பெற்ற நிலம் கிடைப்பது அதனிலும் அரிது. ஒரு நாட்டிலுள்ள இயற்கை அருவிகளின் தொகை வரம்புக்குட்பட்டதே என்றாலும் தொழில் துறைக்குப் பயன்படக்கூடிய நீர்விசையின் அளவை கூடுதலாக்க முடியாது என்பதல்ல இதன் பொருள். அருவியின் இயக்கு விசையை முழுமையாகப் பயன்படச் செய்வதற்காக அதனைச் செயற்கையான முறையில் வழிப்படுத்தி சரிவரப் பயன்படுத்திக் கொள்ளலாம். எடுத்துக்காட்டாக சாதாரணச் சக்கரம் கிடைக்கும் நீர் அளவுக்கு பொருத்தமாய் இல்லாத போது விசையாழிகளைப் (TURBINES) பயன்படுத்தலாம். இந்த இயற்கைச் சக்தியின் உடைமையானது அதன் உடைமையாளரது கையில் ஏகபோகம் ஆகிறது; முதலீடாகிற மூலதனத்தின் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்குப் பயன்படுகிற இந்நிலைமையை மூலதனத்தின் பொருளுற்பத்தி நிகழ்முறையைக் கொண்டே நிறுவி

விட முடியாது[33]. இவ்விதம் ஏகபோக உடைமையாக்கக் கூடிய இந்த இயற்கைச் சக்தி எப்போதுமே நிலத்துடன் கட்டுண்டிருப்பதாகும். இத்தகைய இயற்கைச் சக்தி குறிப்பிட்ட உற்பத்திக் கிளைக்குரிய பொது நிலைமைகளையோ அந்நிலைமைகளில் வழக்கமாய் மறு உற்பத்தி செய்து கொள்ளக் கூடியவையாய் இருப்பவற்றையோ சேர்ந்ததில்ல.

அருவிகளும் அவை இடம் பெற்றுள்ள நிலமும் புவிக்கோளின் இந்தப் பகுதிகளுக்கு உடைமையாளர்களாகக் கருதப்படும் தனியாட்களின், அதாவது நிலவுடைமையாளர்களின் வசம் இருப்பதாக வைத்துக் கொள்வோம். இந் நிலவுடைமையாளர்கள், மூலதனம் அருவியில் முதலீடாக விடாமலும், அதனை மூலதனம் பயன்படுத்திக் கொள்ள விடாமலும் தடுப்பதனால் தடுத்துக் கொள்ளலாம். அவர்கள் இப் பயன்பாட்டுக்கு அனுமதி கொடுக்கலாம் அல்லது மறுக்கலாம். ஆனால் மூலதனம் தானாக ஓர் அருவியை படைக்க முடியாது. அருவியின் இப் பயன்பாட்டிலிருந்து கிடைக்கும் உபரி-இலாபத்திற்கு மூலதனமல்ல காரணம், ஏகபோக உடைமையாகக் கூடியதும், ஏகபோக உடைமையாக்கப்பட்டதுமான ஓர் இயற்கைச் சக்தியை மூலதனம் பயன்படுத்திக் கொள்வதே காரணம். இந்நிலைமைகளில் உபரி-இலாபம் நில-வாடகையாக மாற்றமடைகிறது, அதாவது அருவியின் உடைமையாளருக்குப் போய் சேருகிறது. ஆலையதிபர் அருவியின் உடைமையாளருக்கு ஆண்டுதோறும் £10 செலுத்தினால் அவரது இலாபம் £15 ஆகும், அதாவது இப்போது அவரின் உற்பத்திச் செலவுகளது கூட்டுத் தொகையான £100 மீது 15% ஆகும்; அவர் தமது உற்பத்திக் கிளையில் நீராவி விசைகொண்டு இயங்கும் ஏனைய எல்லா முதலாளிகளையும் போலவே வசதியாய் இருக்கிறார், அல்லது அவர்களைக் காட்டிலும் வசதியாய் இருப்பதும் உண்டு. முதலாளியே அருவிக்கும் உடைமையாளராய் இருந்துவிட்டால், விவகாரம் அதனால் இம்மியளவும் மாறிவிடாது. அந் நிலையில் அவர் £10 உபரி-இலாபத்தை முதலாளி என்ற பொறுப்பில் அல்லாமல் அருவி உடைமையாளர் என்ற பொறுப்பில் பையில் போட்டுக் கொள்வார், இந்த உபரியானது அவரது மூலதனத்திலிருந்தே முளைப்பதாய் இல்லாமல், ஏகபோக உடைமையாகக் கூடிய அவரது மூலதனத்திலிருந்து வேறான வரம்புக்குட்பட்டதோர் இயற்கைச் சக்தியின் மீதான பிடிப்பிலிருந்தே வருவதால்தான் அது நில-வாடகையாக மாற்றப்படுகிறது.

(33) உபரி - இலாபம் தொடர்பாகப் பார்க்கவும்:). ஆயவு (வேண்டலின் இயல்பு, நுகர்வின் அவசியம் இவை தொடர்பாக அண்மைக் காலத்தில் திருவாளர் மால்தஸ் வலிந்துரைத்து வரும் கோட்பாடுகள் பற்றிய ஆய்வு, லண்டன், 1821. - ஆங்கிலப்பதிப்பாசிரியர்) (மால்தசுக்கு எதிராக)

முதலாவதாக, இந்த வாடகை எப்போதுமே வேறுபாட்டு வாடகையாகும் என்பது தெளிவாகத் தெரிகிறது. எப்படியென்றால் அது சரக்கின் பொது உற்பத்தி விலையை நிர்ணயிக்கும் காரணிகளில் ஒன்றாய் இருப்பதற்குப் பதில் அவ்விலையை ஏற்கெனவே நிர்ணயமான ஒன்றாய்க் கொள்கிறது. எப்போதுமே அது ஏகபோக உடைமையாகி விட்ட இயற்கைச் சக்தியைப் பயன்படுத்திக் கொள்ளும் குறிப்பிட்ட மூலதனத்திற்குரிய தனிப்பட்ட உற்பத்தி விலைக்கும் அந்த உற்பத்திக் கிளையில் முதலீடான உற்பத்தி மொத்த மூலதனத்திற்குரிய பொது உற்பத்தி விலைக்கும் இடையிலான வேறுபாட்டிலிருந்து எழுவதாகும்.

இரண்டாவதாக, இந்த நில-வாடகையானது ஈடுபடுத்தப்படும் மூலதனத்தின் உற்பத்தித் திறனிலோ அது தனதாக்கிக் கொள்ளும் உழைப்பின் உற்பத்தித் திறனிலோ ஏற்படும் அறுதி உயர்விலிருந்து வருவதல்ல. ஏனென்றால் இந்த அறுதி உயர்வினால் சரக்குகளின் மதிப்பைக் குறைக்கத்தான் முடியும். குறிப்பிட்ட ஓர் உற்பத்திக் கிளையில் முதலீடாகிற பிரத்தியேகமான தனித் தனி மூலதனங்கள் ஒப்பளவில்-அதாவது உற்பத்தித் திறனுக்கு சாதகமாய் அமைந்துள்ள தனிச்சிறப்பான இந்த இயற்கை நிலைமைகளுக்கு உட்படாத மூலதன முதலீடுகளுடன் ஒப்பிடுமிடத்து கூடுதல் பலனளிக்கத் தக்கவையாய் இருப்பதன் விளைவுதான் இந்நில-வாடகை. எடுத்துக்காட்டாக, நிலக்கரிக்கு மதிப்புண்டு, நீர்விசைக்கு மதிப்பில்லை என்றாலும் நீர்விசையைப் பயன்படுத்துவதால் கிட்டாத மிகப்பெரும் அனுகூலங்கள் நீராவியைப் பயன்படுத்துவதால் கிட்டுமென்றால் இந்த அனுகூலங்கள் செலவை சரிக்கட்டுவதோடு மேலதிகமாகவும் இருக்குமானால், நீர்விசை பயன்படுத்தப்படாது, அவ்விசையால் உபரி-இலாபம் என்று ஏதும் உற்பத்தி செய்தளிக்க முடியாமற் போகும், எனவே வாடகை என்றுங்கூட ஏதும் உற்பத்தி செய்தளிக்க முடியாமற் போகும்.

மூன்றாவதாக, இயற்கைச் சக்தி உபரி இலாபத்திற்கு இயற்கை அடிப்படை ஆகுமே தவிர ஊற்றுக்கண் ஆகாது. ஏனென்றால் இந்த இயற்கை அடிப்படைதான் உழைப்பின் உற்பத்தித் திறனில் ஏற்படும் தனிச்சிறப்பான உயர்வுக்கு வழிசெய்கிறது. பயன்-மதிப்பு பொதுவாக பரிவர்த்தனை-மதிப்புக்கு ஊர்தி ஆகுமே தவிர காரணம் ஆகாது. அதே பயன் - மதிப்பை உழைப்பில்லாமல் அடைய முடியுமானால், அதற்குப் பரிவர்த்தனை மதிப்பே இருக்காது. என்றாலும் பயன்-மதிப்பென்ற முறையில் முன்பிருந்த அதே இயற்கைப் பயனுடைமையை

இழந்துவிடாது. மறுபுறம், பயன்-மதிப்பு இல்லாவிட்டால் அதாவது உழைப்புக்கு இயற்கை ஊர்தியாக அமையாவிட்டால், எதுவும் பரிவர்த்தனை-மதிப்பை பெற்றிருக்க முடியாது. பல்வேறு மதிப்புகளும் சராசரியாகி உற்பத்தி விலைகளாகவும், பல்வேறு தனிப்பட்ட உற்பத்தி-விலைகளும் சந்தையை ஆளும் பொது உற்பத்தி-விலையாகவும் மாறாவிட்டால், அருவியின் பயன்பாட்டினால் உழைப்பின் உற்பத்தித் திறனில் ஏற்படும் உயர்வு இந்த அருவியின் துணைகொண்டு உற்பத்தி செய்யப்படும் சரக்குகளில் அடங்கியுள்ள இலாபப் பகுதியை கூடுதலாக்காமல் அவற்றின் விலையை தாழ்த்தவே செய்யும். மூலதனம் அதனால் பயன்படுத்தப்படும் உழைப்பின் இயற்கை உற்பத்தித் திறனையும் சமுதாய உற்பத்தித் திறனையும் தனக்கே சொந்தமாக்கிக் கொள்ளாவிட்டால் எப்படி உழைப்பின் இந்த உற்பத்தித் திறன் உபரி- மதிப்பாக மாற்றப்படாதோ அதே போலத்தான் இதுவும்.

நான்காவதாக, அருவியிலான தனியுடைமைக்கும் அருவியின் துணைகொண்டு உற்பத்தி செய்யப்படும் உபரி - மதிப்புப் பகுதியின் (இலாபப் பகுதியின்) படைப்புக்கும் எவ்விதத் தொடர்புமில்லை. நிலச் சொத்து என்ற ஒன்றே இல்லாமற் போனாலும் இந்த உபரி - இலாபம் இருக்கும்; எடுத்துக்காட்டாக, அருவி இடம்பெற்றுள்ள நிலம் உரிமை கொண்டாடப்படாத நிலமாக ஆலையதிபரால் பயன்படுத்தப் பட்டாலும் கூட உபரி - இலாபம் இருக்கும். ஆகவே நிலச் சொத்தானது உபரி - இலாபமாக மாற்றப்படும் மதிப்புப் பகுதியை படைப்பதில்லை. அருவிக்குச் சொந்தக்காரரான நிலவுடைமையாளர் இந்த உபரி-இலாபத்தை ஆலையதிபரின் சட்டைப் பையிலிருந்து தமது சட்டைப்பைக்கு கவர்ந்து கொள்வதற்குத்தான் இது பயன்படுகிறது. அது இப்படிப்பட்ட உபரி-இலாபம் நில-வாடகையாக உருமாற்றம் செய்யப்படுவதற்கும், எனவே இலாபம் அல்லது சரக்கு-விலையின் இந்தப் பகுதியை நிலம் அல்லது அருவியின் உடைமையாளர் தனதாக்கிக் கொள்வதற்கும் காரணமாகுமே தவிர, இந்த உபரி-இலாபம் படைக்கப்படுவதற்கு காரணமாகாது.

ஐந்தாவதாக, அருவியின் விலை, அதாவது நிலவுடைமையாளர் அதை வேறொருவருக்கு, அல்லது ஆலையதிபருக்கே கூட விற்பதாகக் கொண்டால் அவருக்குக் கிடைக்கக்கூடிய விலையானது உடனடியாகச் சரக்குகளின் உற்பத்தி-விலையில் சேருவதில்லை. என்றாலும் அது ஆலையதிபருக்கான தனிப்பட்ட அடக்க-விலையில் சேரவே செய்கிறது. ஏனென்றால் வாடகையானது இங்கே நீராவி இயந்திர

*சாதனத்தால் உற்பத்தி செய்யப்படும் ஒத்த சரக்குகளின் உற்பத்தி-விலையிலிருந்து எழுவதாகும்; இந்த விலையோ அருவியைச் சாராமல் நிர்ணயிக்கப்படுவதாகும். மேலும், மொத்தத்தில் அருவியின் விலையே உண்மையானதொரு பொருளாதார உறவை மூடி மறைக்கிற ஒவ்வாத் தெரிவிப்பு ஆகும். பொதுவாக பூமியைப் போலவும் ஒவ்வோர் இயற்கைச் சக்தியைப் போலவும் அருவியும் மதிப்பற்ற தாகும். ஏனென்றால் அது பொருள் வடிவாக்கப்பட்ட உழைப்பை, எனவே விலையை குறிப்பதல்ல; விலை என்பது இயல்பான சூழலில் மதிப்பின் பணத் தெரிவிப்பே தவிர வேறல்ல. மதிப்பே இல்லாத போது இயல்பாகவே பணமாகத் தெரிவிக்கப்படுவதற்கும் எதுவு மிருக்காது. இந்த விலை மூலதனமாக்கப்பட்ட வாடகையே தவிர வேறல்ல. நிலவுடைமை காரணமாய் நிலவுடைமையாளர் தனிப்பட்ட இலாபத்திற்கும் சராசரி இலாபத்திற்கும் இடைப்பட்ட வேறுபாட்டைத் தனதாக்கிக் கொள்ள முடிகிறது. இவ்விதம் ஈட்டப்படும் இலாபம் ஆண்டுதோறும் புதுப்பிக்கப்படுகிறது; இந்த இலாபத்தை மூலதனமாக்கலாம்; அப்போது அது இயற்கைச் சக்தியின் விலையாகவே தோற்றமளிக்கிறது. அருவியைப் பயன்படுத்தும் ஆலையதிபருக்கு கிடைக்கும் உபரி-இலாபம் ஆண்டுக்கு £10 என்றும் சராசரி வட்டி 5% என்றும் வைத்துக் கொண்டால், இந்த £10 ஆனது £200 மூலதனத்திற்கான வருட வட்டியைக் குறிக்கிறது. அருவியைக் கொண்டு அதன் உடைமையாளர் ஆலையதிபரிடமிருந்து ஆண்டு தோறும் கறக்க முடிகிற £10 மூலதனமாக்கப்பட்டு, அருவியின் மூலதனமதிப்பாகவே தோற்றமளிக்கிறது. அருவிக்கென்று மதிப்பு கிடையாது என்பதும், அதன் விலையானது கறக்கப்படும் உபரி - இலாபம் முதலாளித்துவ வழியில் கணக்கிடப்படுவதன் பிரதிபலிப்பே தவிர வேறல்ல என்பதும் £200 விலையானது £10 உபரி-இலாபத்தை 20 ஆண்டுகளாய் பெருக்கி வரும் பெருக்கற்பலனையே குறிப்பதிலிருந்து உடனே தெளிவாகிறது; அதே போது, ஏனைய நிலைமைகள் மாறாதிருக்க, அதே அருவியைக் கொண்டு அதன் உடைமையாளர் ஒவ்வோர் ஆண்டும் £10 வீதம் எத்தனை ஆண்டுகளுக்கு வேண்டுமானாலும் - 30 ஆண்டுகளுக்கோ 100 ஆண்டுகளுக்கோ X ஆண்டுகளுக்கோ தனதாக்கிக் கொள்ளலாம்; மறுபுறம், நீர்விசையைக் கொண்டு பிரயோகிக்க முடியாத ஏதோ ஒரு புதிய உற்பத்தி வழிமுறை நீராவி இயந்திர சாதனத்தால் உற்பத்தி செய்யப்படும் சரக்குகளின்*

அடக்க-விலையை £100 இலிருந்து £90 ஆக குறைத்துவிடுமானால், உபரி-இலாபம் மறைந்து போகும், கூடவே வாடகையும் அருவியின் விலையும் மறைந்து போகும்.

ஆக வேறுபாட்டு வாடகை என்னும் பொதுவான கருத்துருவத்தை பார்த்து முடித்துள்ளோம்; இப்போது முறையான வேளாண்மையில் இந்த வாடகையைப் பரிசீலிக்க முற்படுவோம். வேளாண்மை குறித்து நாம் சொல்லவிருப்பது மொத்தத்தில் சுரங்கத் தொழிலுக்கும் பொருந்தும்.

## அத்தியாயம் XXXIX

### முதல்வகை வேறுபாட்டு வாடகை
### (வேறுபாட்டு வாடகை I)

ரிக்கார்ட்டோ மிகச் சரியாகவே சொல்கிறார்: 'எப்போதுமே வாடகை என்பது மூலதனம், உழைப்பு ஆகியவற்றின் இரு சம அளவு களை ஈடுபடுத்துவதால் பெறப்படும் விளைபொருளுக்கிடையிலான வேறுபாடு ஆகும்.' (கோட்பாடுகள், பக்கம் 59). (வேறுபாட்டு வாடகையைச் சொல்கிறார். வேறுபாட்டு வாடகை தவிர வாடகை என்று வேறெதுவும் இல்லை எனக் கொள்கிறவராதலால் இங்கு வேறுபாட்டு வாடகையைத்தான் சொல்கிறார்) மூலதனம், உழைப்பு ஆகியவற்றின் இரு சம அளவுகளை ஈடுபடுத்துவது பற்றிச் சொல்லும் போது 'சம நில பரப்புகளில்' என்றும் சேர்த்துச் சொல்லியிருக்க வேண்டும். ஏனென்றால் அவர் விவரிப்பது நில-வாடகையைத்தானே தவிர பொதுவான உபரி-இலாபத்தை அல்ல.

வேறு விதமாகச் சொன்னால், உபரி-இலாபம் என்பது-சுற்றோட்ட நிகழ்முறையிலான தற்செயல் நிகழ்வுகளின் விளைவாக அல்லாமல், இயல்பான நிலைமைகளில் உற்பத்தி செய்யப்படுவது-எப்போதுமே மூலதனம், உழைப்பு ஆகியவற்றின் இரு சம அளவுகளின் உற்பத்திப் பொருட்களிடையிலான வேறுபாடாகவே பெறப்படுகிறது. மூலதனம், உழைப்பு ஆகியவற்றின் இரு சம அளவுகள் சம நிலப் பரப்புகளில் ஈடுபடுத்தப்பட்டு சமமல்லாத விளைவுகள் ஏற்படும் போது இந்த உபரி-இலாபம் நில-வாடகையாக மாற்றப்படுகிறது. மேலும், இந்த உபரி-இலாபம் சமஅளவு மூலதன முதலீடுகளின் சமமல்லாத விளைவுகளிலிருந்து கிடைத்தாக வேண்டும் என்ற கட்டாயம் ஏதுமில்லை. இதுமட்டுமல்லாமல், வெவ்வேறு முதலீடுகளில் வெவ்வேறு அளவு மூலதனங்களை ஈடுபடுத்தலாம். பொதுவாக இப்படித்தான் நடைபெறுகிறது. ஆனால் சமவிகிதப் பங்குகள் - எடுத்துக்காட்டாக ஒவ்வொன்றிலும் £100 சமமல்லாத விளைவுகளைத் தோற்றுவிக்கின்றன. அதாவது அவற்றின் இலாப வீதங்கள் மாறுபடுகின்றன. எந்தவொரு மூலதன முதலீட்டுத் துறையிலும் உபரி-இலாபம் என்ற ஒன்று இருப்பதற்கு இதுவே பொதுவான

முன்நிபந்தனை ஆகும். இரண்டாவதாக இந்த உபரி-இலாபம் நில-வாடகையாக (இலாபத்திலிருந்து வேறானதாகிய பொதுவான வாடகையாக) உருமாற்றம் பெற வேண்டும்; இந்த மாற்றம் எப்போது எப்படி எந்நிலைமைகளில் நடைபெறுகிறது என்பதை அந்தந்த நேர்விலும் பரிசீலித்தாக வேண்டும்.

வேறுபாட்டு வாடகை என்ற அளவில் நிறுத்திக் கொள்வதாய் இருந்தால் பின்வருமாறு சொல்வதும் கூட சரியே.

'அதே நிலத்திலோ புதிய நிலத்திலோ பெறப்படும் விளை பொருளிலான ஏற்றத் தாழ்வை குறையச் செய்வது எதுவானாலும் சரி, அது வாடகையையும் குறையச் செய்யும் போக்குடையதாகும்; அந்த ஏற்றத் தாழ்வை அதிகரிக்கச் செய்வது எதுவானாலும் சரி, அது எதிர்மாறான விளைவை தோற்றுவித்தே தீரும் என்பதோடு வாடகையை உயரச் செய்யும் போக்குடையதும் ஆகும்'. (பக்கம் 74).

ஆனால் இந்தக் காரணங்களில் (மண்வளம், இடவாகு ஆகிய பொதுக் காரணங்கள் மட்டுமல்லாமல் பின்வருவனவும் அடங்கும்: (1) வரிகளில் பரவல், இது ஒரே சீராக அமைந்திருக்கிறதா அல்லவா என்பது; வரிவிதிப்பு மையப்படுத்தப்படாமல் இருக்கும் போதும், வாடகையின் மீது அல்லாமல் நிலத்தின் மீது வரி விதிக்கப்படும் போதும் - எடுத்துக்காட்டாக, இங்கிலாந்து - வரிகளில் பரவல் ஒரே சீராய் இருப்பதே இல்லை; (2) நாட்டின் வெவ்வேறு பகுதிகளிலும் விவசாய வளர்ச்சியில் காணப்படும் வேறுபாட்டிலிருந்து எழும் ஏற்றத் தாழ்வுகள்; இந்த உற்பத்திக் கிளை பராம்பரியத் தன்மை உடையதாய் இருப்பதால், அது சமனமாவதற்குள்ள இடர்பாடு பட்டறைத் தொழிலுடன் ஒப்பிடுகையில் அதிகமாய் உள்ளது; (3) முதலாளித்துவக் குத்தகைச் சாகுபடியாளர்களிடையே மூலதனப் பரவலில் நிலவும் ஏற்றத்தாழ்வு முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை வேளாண்மைத் துறையை வளைத்துப் பிடித்து சுயேச்சையாக உற்பத்தி செய்யும் விவசாயிகளை கூலித் தொழிலாளர்களாக மாற்றுவதுதான் உண்மையில் இந்தப் பொருளுற்பத்தி முறையின் படையெடுத்துப் பெறும் கடைசி வெற்றி ஆகும் என்பதால், இந்த ஏற்றத் தாழ்வுகள் வேறெந்த உற்பத்திக் கிளையிலும் இருப்பதைக் காட்டிலும் இங்கு கூடுதலாய் இருக்கின்றன.

அறிமுகக் குறிப்புகளை, இந்த அளவில் நிறுத்திக் கொண்டு ரிக்கார்ட்டோ முதலானோரின் பகுப்பாய்வுகளுக்கு மாறாக எனது பகுப்பாய்விற்குரிய தனிச்சிறப்பான கூறுகளை முதலில் சுருக்கமாய் எடுத்துரைக்கிறேன்.

சமப் பரப்புடைய வெவ்வேறு நிலத்துண்டுகளுக்கு சம மூலதன அளவுகளை பிரயோகிப்பதிலிருந்து பெறப்படும் விளைவுகள், அல்லது வெவ்வேறு பரப்புடைய நிலங்களாய் இருந்தால் சமப் பரப்புகளின் அடிப்படையில் கணக்கிடப்படும் விளைவுகள் ஏற்றத்தாழ்வாய் இருப்பதை முதற்கண் பரிசீலிப்போம்.

---

இந்த ஏற்றத்தாழ்வுக்கு - மூலதனம் எப்படி இருந்த போதிலும் - இரு பொதுக் காரணங்களாய் இருப்பவை - இவைதான்: (1) மண்வளம். (இந்த முதற் கூறினைப் பொறுத்தவரை, நிலத்தின் இயற்கை வளம் என்றால் என்னவென்பதையும், அதில் என்னென்ன காரணிகள் தொடர்புடையவை என்பதையும் பரிசீலிக்க வேண்டி வரும்.) (2) நிலத்தின் இடவாகு குடியேற்ற நாடுகளைப் பொறுத்தவரை, இந்தக் காரணி தீர்மானகர முக்கியத்துவம் உடையதும் பொதுவாகச் சொன்னால், நிலத்துண்டுகளை எவ்வரிசையில் சாகுபடி செய்வது என்பதை நிர்ணயிப்பதும் ஆகும். மேலும், வேறுபாட்டு வாடகைக்கான இந்த இரு வேறு காரணங்களும் - மண்வளமும் இடவாகும் - எதிரெதிர் திசைகளில் கூடச் செயல்படலாம். குறிப்பிட்ட நிலத்துண்டு இடவாகைப் பொறுத்த வரை மிகச் சாதகமான நிலையிலும், ஆனால் மண்வளத்தைப் பொறுத்த வரை படுமோசமான நிலையிலும் இருக்கலாம்; மாறாக, இடவாகைப் பொறுத்த வரை படுமோசமான நிலையிலும், ஆனால் மண் வளத்தைப் பொறுத்த வரை மிகச் சாதகமான நிலையிலும் இருக்கலாம். இது மிகவும் முக்கியமானது, எப்படியென்றால் இதனால்தான் குறிப்பிட்ட ஒரு நாட்டின் நிலத்தை சாகுபடிக்கு கொண்டு வர முற்படுகையில், மோசமான நிலத்தில் தொடங்கி நல்ல நிலத்திற்குச் செல்வதைப் போலவே நல்லதில் தொடங்கி மோசமானதிற்குச் செல்வதும் சாத்தியமாகிறது. முடிவில் தெளிவாகத் தெரிவது என்னவென்றால், பொதுவாக சமுதாயப் பொருளுற்பத்தியின் முன்னேற்றமானது வட்டாரச் சந்தைகளைத் தோற்றுவித்தும் தொடர்பு மற்றும் போக்குவரத்து வசதிகளை நிறுவி இடவாகை மேம்படுத்தியும், நில - வாடகைக்கு காரணமாகும் இடவாகு தொடர்பான வேறுபாடுகளை அகற்றிச் சமனமாக்குகிறது; மறுபுறம், விவசாயத்தைப் பட்டறைத் தொழிலிலிருந்து விலக்கி வேறுபடுத்தியும், பெரும் பெரும் பொருளுற்பத்தி மையங்களை உருவாக்கியும், அதே போது வேளாண் வட்டங்களை ஒப்பளவில் தனித்தொதுக்கியும் நிலத்துண்டுகளின் தனிப்பட்ட இடவாகு தொடர்பான வேறுபாடுகளை அதிகரிக்கவும் செய்கிறது.

ஆனால் - இப்போதைக்கு இடவாகு தொடர்பான இந்த விவரத்தை கருதாமல் ஒதுக்கி விட்டு இயற்கை மண்வளத்தை மட்டும் கருத்தில் கொள்வோம். தட்பவெப்பம் போன்ற காரணிகள் ஒருபுறமிருக்க, இயற்கை மண்வளத்திலான வேறுபாடுகள் மேல் மண்ணின் இரசாயன இயைபிலான வேறுபாடுகளை, அதாவது தாவரங்களுக்கென அதிலடங்கியுள்ள ஊட்டச்சத்திலான வேறுபாடுகளைப் பொறுத்தவை. ஆனால், இரு நிலத்துண்டுகளின் இரசாயன இயையும், அதைச் சார்ந்த இயற்கை மண்வளமும் ஒன்றே எனக் கொண்டால், எந்த அளவுக்கு இந்த தாவர ஊட்டச் சத்துக் கூறுகள் எளிதில் தன்மயமாகி பயிர்களுக்கு நேரடியாகப் பயன்படக்கூடிய வடிவில் அமைந்துள்ளன என்பதைப் பொறுத்து அவற்றின் உள்ளபடியான பயன்திற மண்வளம் வேறுபடுகிறது. ஆகவே, இயற்கை மண்வளத்தில் ஒத்திருக்கும் நிலத் துண்டுகளிலிருந்து எந்த அளவுக்கு அந்த மண்வளம் பயனுள்ளதாய் கிடைக்கும் என்பது வேளாண்மையின் வேதியியல் வளர்ச்சியை ஓரளவும், இயந்திரவியல் வளர்ச்சியை ஓரளவும் பொறுத்ததாகும். மண்வளம் என்பது மண்ணின் புறவயத் தன்மையாய் இருந்த போதிலும், எப்போதுமே ஒரு பொருளாதார உறவை, வேளாண்மையில் வேதியியல் சார்ந்ததும் இயந்திரவியல் சார்ந்தும் அடையப் பெற்றுள்ள வளர்ச்சி நிலையுடனான உறவைக் குறித்திடுகிறது. எனவே இந்த வளர்ச்சி நிலையுடன் சேர்ந்து மாறவும் செய்கிறது. இயற்கை மண்வளத்தில் சரி நிகராய் அமைந்திருக்கும் இரு நிலத்துண்டுகளில் ஒன்றை நடைமுறையில் வளங்குன்றச் செய்த தடைகளை அகற்றுவதற்கு வேதியியல் சாதனங்களையோ (எடுத்துக்காட்டாக இறுகிய களிமண் நிலத்தில் இடுவதற்கான குறிப்பிட்ட சில திரவ உரங்கள், கெட்டிக் களிமண் நிலத்தில் சேர்ப்பதற்கான சுண்ணகம்) இயந்திரவியல் சாதனங்களையோ (எடுத்துக்காட்டாக, கெட்டி மண்ணை உழுவதற்கான தனிக்கலப்பைகள்) பயன்படுத்தலாம். (வடிகால் அமைப்பும் இவ்வகைப்பட்டதே). சாகுபடிக்கு எடுத்துக் கொள்ளப்படும் மண்வகைகளின் வரிசையும் கூட இதனால் மாறிப் போகலாம்; எடுத்துக்காட்டாக, ஆங்கிலேய வேளாண்மையில் குறிப்பிட்ட ஒரு வளர்ச்சிக் கட்டத்தில் பொல பொலப்பான மணல்நிலமும் கெட்டிக் களிமண் நிலமும் இப்படித்தான் மாறிப் போயின. வரலாற்று வழியில் பார்த்தால், சாகுபடிக்கு எடுத்துக் கொள்ளப்படும் மண்களை வரிசைப்படுத்துகையில், வளம் குறைந்த மண்ணிலிருந்து வளம் நிறைந்த மண்ணுக்கு மாறிச் செல்வதைப் போலவே வளம் நிறைந்த மண்ணிலிருந்து வளம் குறைந்த மண்ணுக்கும்

மாறிச் செல்லலாம் என்பதைத்தான் இது மறுபடியும் தெளிவாக்குகிறது. மண்ணின் இயைபில் செயற்கையாக உண்டுபண்ணப்படும் மேம்பாடுகளைக் கொண்டோ விவசாய வழிமுறைகளில் மட்டும் செய்யப்படும் மாற்றங்களைக் கொண்டோ இதே விளைவுகளை அடையலாம். முடிவில் மண்வகைகளின் அடுக்குவரிசை அமைப்பில் மாற்றம் செய்வதன் மூலமும் இதே விளைவு ஏற்படச் செய்யலாம். உழவின் அடிமண் புரட்டி விடப்பட்டு மேல் அடுக்காக மாறத் தொடங்கிய உடனே அந்த அடிமண்ணிலான - மாறுபட்ட நிலைமைகள் இதற்கு வழி செய்கின்றன. இது புதிய விவசாய வழிமுறைகள் (எடுத்துக்காட்டாக, தீவனப்பயிர் சாகுபடி) ஈடுபடுத்தப்படுவதை ஓரளவும் இயந்திர சாதனங்கள் ஈடுபடுத்தப்படுவதை ஓரளவும் சார்ந்துள்ளது. இயந்திரவியல் சாதனங்கள் அடிமண்ணைப் புரட்டி மேலே கொண்டு வருகின்றன, அதனை மேல் மண்ணுடன் கலக்கச் செய்கின்றன, அல்லது அடி மண்ணைப் புரட்டி விடாமலே சாகுபடி செய்கின்றன.

பல்வேறு நிலத்துண்டுகளின் வேறுபாட்டு மண்வளத்தின் மீதான இந்தத் தாக்கங்கள் அனைத்திலும் ஒட்டுமொத்த விளைவு என்னவென்றால், பொருளாதார வளத்தைப் பொறுத்த வரை உழைப்பினது உற்பத்தித் திறனின் படித்தரமானது இங்கு இயற்கை மண்வளத்தை நேரடியாகப் பயன்படுத்திக் கொள்வதற்கு வேளாண்மைக்குள்ள ஆற்றலானது பல்வேறு வளர்ச்சிக் கட்டங் களிலும் மாறுபடுகிற இந்த ஆற்றல் அதன் இரசாயன இயைபையும் ஏனைய இயற்கை குணங்களையும் போலவே இயற்கை மண்வளம் எனப்படுவதில் ஒரு காரணி ஆகும்.

ஆக, வேளாண்மை குறிப்பிட்ட வளர்ச்சிக் கட்டத்தில் இருப்பதாக கொள்கிறோம். மேலும், மண்வகைகளின் அடுக்கு வரிசை இந்த வளர்ச்சிக் கட்டத்துக்கு இணக்கமாய் இருப்பதாகவும் கொள்கிறோம். வெவ்வேறு நிலத் துண்டுகளின் ஒருங்கே மூலதனம் முதலீடாகும் போதெல்லாம் நிலைமை இப்படித்தான் உள்ளது. இந்நிலையில் வேறுபாட்டு வாரம் ஏறு வரிசையிலோ இறங்கு வரிசையிலோ அமைந்திருக்கலாம்; ஏனென்றால் உள்ளபடியே சாகுபடி செய்யப்படும் நிலத் துண்டுகளின் ஒட்டுமொத்தத்திற்கு இந்த வரிசை குறிப்பிட்டதாய் இருந்தாலும் அடுத்தடுத்து நடைபெற்ற தொடர் வரிசையான அசை வியக்கங்களால்தான் இவ்வரிசை அமைகிறது.

A,B,C,D ஆகிய நான்கு வகை மண் இருப்பதாக கொள்வோம். மேலும் ஒரு குவார்ட்டர் கோதுமையின் விலை - £3, அல்லது 60 ஷில்லிங் என்போம். வாடகை முழுக்க முழுக்க வேறுபாட்டு வாடகையாகவே இருப்பதால் படுமோசமான மண்ணிற்கு குவார்ட்டருக்கு 60 ஷில்லிங் என்னும் விலை - உற்பத்தி விலைக்குச் சமம்; அதாவது மூலதனம் + சராசரி இலாபம் என்பதற்குச் சமம்.

இந்தப் படுமோசமான மண்ணை A என்று குறிப்பிடுவோம்; இதில் 50 ஷில்லிங் முதலீட்டுச் செலவுக்கு விளையும் 1 குவார்ட்டர் = 60 ஷில்லிங்; அதாவது இலாபம் = 10 ஷில்லிங், அல்லது 20%.

அதே முதலீட்டுச் செலவுக்கு Bஇல் விளையும் 2 குவார்ட்டர் 120 ஷில்லிங். அதாவது இலாபம் = 70 ஷில்லிங், உபரி-இலாபம் = 60 ஷில்லிங்.

அதே முதலீட்டுச் செலவுக்கு Cஇல் விளையும் 3 குவார்ட்டர் = 180 ஷில்லிங்; மொத்த இலாபம் = 130 ஷில்லிங். உபரி-இலாபம் = 120 ஷில்லிங்.

Dஇல் விளையும் 4 குவார்ட்டர் = 240 ஷில்லிங்;
உபரி - இலாபம் = 180 ஷில்லிங்.

ஆக, பின்வரும் வரிசைத் தொடர் பெறப்படும்:

அட்டவணை I.

| மண் வகை | விளைபொருள் | | மூலதன முன்னீடு | இலாபம் | | வாடகை | |
|---|---|---|---|---|---|---|---|
| | குவார்ட்டர் | ஷில்லிங் | | குவார்ட்டர் | ஷில்லிங் | குவார்ட்டர் | ஷில்லிங் |
| A | 1 | 60 | 50 | $^1/_6$ | 10 | — | — |
| B | 2 | 120 | 50 | $1\,^1/_6$ | 70 | 1 | 60 |
| C | 3 | 180 | 50 | $2\,^1/_6$ | 130 | 2 | 120 |
| D | 4 | 240 | 50 | $3\,^1/_6$ | 190 | 3 | 180 |
| மொத்தம் | 10 | 600 | | | | 6 | 360 |

அந்தந்த மண்வகைக்குமான வாடகை இதுதான்: Dக்கு (190-10) ஷில்லிங், அதாவது Dக்கும் Aக்கும் இடையிலான வேறுபாடு; Cக்கு (130 - 10) ஷில்லிங், அதாவது C க்கும் Aக்கும் இடையிலான வேறுபாடு; Bக்கு, (70 - 10) ஷில்லிங், அதாவது Bக்கும் Aக்கும் இடையிலான

வேறுபாடு; B,C,D ஆகியவற்றுக்கான மொத்த வாடகை = 6 குவார்ட்டர் = 360 ஷில்லிங்; இது Dக்கும் Aக்கும் இடையிலும், Cக்கும் Aக்கும் இடையிலும், Bக்கும் Aக்கும் இடையிலுமான வேறுபாடுகளின் கூட்டுத் தொகைக்குச் சமம்.

குறிப்பிட்ட நிலைமையில் குறிப்பிட்ட விளைபொருளைக் குறிப்பதான இந்த வரிசைத் தொடர் சூக்குமமாய்க் கருதப்படுகையில் Dஇலிருந்து Aக்கு, வளமான நிலத்திலிருந்து மேன்மேலும் வளங்குன்றிய நிலத்திற்கு இறங்கிச் செல்வதாகவோ, Aஇலிருந்து Dக்கு ஒப்பளவில் வளங்குறைந்த நிலத்திலிருந்து மேன்மேலும் வளமான நிலத்துக்கு ஏறிச் செல்லவதாகவோ இருக்கலாம்; மெய்நடப்பிலும் இவ்வாறே நிகழக் கூடும் என்பதற்கான காரணங்களை முன்பே குறிப்பிட்டோம்; முடிவில், அது ஏறி இறங்கி - எடுத்துக்காட்டாக Dஇலிருந்து Cக்கும், Cஇலிருந்து Aக்கும், Aஇலிருந்து Bக்குமாக - அலைவுறவும் கூடும்.

இறங்கு வரிசையில் பின்வருமாறு நிகழ்கிறது: ஒரு குவார்ட்டர் கோதுமையின் விலை பையப்பைய உயர்ந்து, உதாரணமாய் 15 ஷில்லிங்கிலிருந்து 60 ஷில்லிங் ஆகிறது. உற்பத்தி செய்கிற 4 குவார்ட்டர் (இதை 4 மிலியன் குவார்ட்டராகக் கருதலாம்) போதாது என்ற நிலை ஏற்பட்டவுடனே வழங்கலிலான பற்றாக் குறையை உற்பத்தி செய்து சரிக்கட்டும்படியான நிலைக்கு கோதுமை நிலை உயர்கிறது. அதாவது அந்த விலை குவார்ட்டருக்கு 20 ஷில்லிங் என்பதாக உயர வேண்டி இருக்கும். கோதுமை விலை குவார்ட்டருக்கு 30 ஷில்லிங்காக உயரும் போது Bஐ சாகுபடிக்கு கொண்டுவரலாம்; விலை 60 ஷில்லிங்கைத் தொடும் போது Aஐ சாகுபடிக்கு கொண்டு வரலாம். இதற்காக மூலதனம் 20%க்கு குறைவான இலாப வீதத்தோடு திருப்தியடையத் தேவையில்லை. இவ்விதம் Dக்கான வாடகை முதலில் குவார்ட்டருக்கு 5 ஷில்லிங் = அதனால் உற்பத்தி செய்யப்படும் 4 குவார்ட்டருக்கு 20 ஷில்லிங்; பிறகு 15 ஷில்லிங்=60 ஷில்லிங்; முடிவில் 45 ஷில்லிங் = 4 குவார்ட்டருக்கு 180 ஷில்லிங்.

Dக் கான இலாப வீதமும் தொடக்கத்தில் 20% ஆக இருந்ததென்றால், 4 குவார்ட்டர் மீது அதன் மொத்த இலாபம் 10 ஷில்லிங்காகவே இருக்கும். ஆனால் 60 ஷில்லிங் விலையைக் காட்டிலும் 15 ஷில்லிங் விலையில் கூடுதலான தானியத்தை அது குறித்திடும். தானியமானது உழைப்புச் சக்தியின் மறுவுற்பத்தியில் பங்காற்றுவதாலும், ஒவ்வொரு குவார்ட்டரிலும் ஒரு பகுதி கூலியில்

ஒரு பகுதியையும் இன்னொரு பகுதி மாறா-மூலதனத்தையும் மாற்றீடு செய்ய வேண்டி இருப்பதாலும், இந்நிலைமைகளில் உபரி மதிப்பு கூடுதலாய் இருக்கும், மற்றவை மாறாதிருக்க, இலாபவீதமும் கூடுதலாய் இருக்கும். (இலாப வீதம் பற்றிய பிரச்சினையைத் தனியாக எடுத்து இன்னும் விவரமாய் பகுத்தாராய வேண்டும்)

மறுபுறம், வரிசைத் தொடர் எதிர்மாறாய் இருந்தால், அதாவது Aஇலிருந்து நிகழ்முறை ஆரம்பமானால், முதலில் கோதுமையில் விலை குவார்ட்டருக்கு 60 ஷில்லிங் என்பதற்கு மேல் உயரும்; அப்போது புதிய நிலத்தை சாகுபடிக்கு கொண்டு வர வேண்டியிருக்கும். ஆனால் தேவையான வழங்கல், 2 குவார்ட்டர் வழங்கல் Bஇலிருந்து கிடைத்து விடுமாதலால், விலை மறுபடியும் 60 ஷில்லிங்காகக் குறையும்; ஏனென்றால் B குவார்ட்டருக்கு 30 ஷில்லிங் செலவில் கோதுமை உற்பத்தி செய்கிறது, ஆனால் அதை 60 ஷில்லிங்குக்கு விற்கிறது. ஏனென்றால் அதன் வழங்கல் வேண்டலை நிறைவு செய்வதற்குத்தான் சரியாய் இருக்கிறது. இவ்விதம் Dக்கு நில - வாடகை உருவாகிறது; இது முதலில் 60 ஷில்லிங்காக இருக்கிறது; Cக்கும் Dக்கும் கூட இதே போல் வாடகை உருவாகிறது; C,D ஆகியவை குவார்ட்டருக்கு முறையே 20 ஷில்லிங் அல்லது 15 ஷில்லிங் உண்மை மதிப்புடைய கோதுமையை உற்பத்தி செய்தாலும் சந்தை-விலை 60 ஷில்லிங்காகவே நீடித்திருப்பதாக கொள்கிறோம்; ஏனென்றால் A உற்பத்தி செய்து கொடுக்கும் ஒரு குவார்ட்டர் வழங்கல் மொத்த வேண்டலை நிறைவு, செய்வதற்குத் தேவைப்படுகிறது. இந்த நேர்வில் வழங்கலுக்கு மேல் வேண்டலின் மிகைப்பாடு முதலில் Aஆலும், பிறகு A,B ஆகியவற்றாலும் நிறைவு செய்யப்படுகிறது; இந்த மிகைப் பாட்டினால் B,C,D ஆகியவற்றை அடுத்தடுத்து சாகுபடி செய்வது முடியாமற் போயிருக்கும்; ஆனால் மொத்த சாகுபடிப் பரப்பு விரிவடைந்திருக்கும்; அதிக வளமுள்ள நிலங்கள் பிற்பாடுதான் சாகுபடிக்கு வரும் என்ற நிலை ஏற்பட்டிருக்கலாம்.

முதல் வரிசைத் தொடரில் விலையுயர்வு வாடகையை உயரச் செய்து இலாப வீதத்தைக் குறையச் செய்யும். இந்தக் குறைவு எதிரிடையாகச் செயல்படும் காரணிகளால் முழுமையாகவோ ஓரளவுக்கோ கட்டுப்படுத்தப்படலாம். பிற்பாடு இது குறித்து இன்னும் விவரமாய் பரிசீலிக்க வேண்டியிருக்கும். பொது இலாப வீதம் எல்லா உற்பத்திக் கிளைகளிலும் ஒரே சீராக உபரி-மதிப்பால் நிர்ணயிக்கப் படுவதில்லை என்பதை மறக்கலாகாது. விவசாயத் துறையிலான

இலாபம் தொழில் துறையிலான இலாபத்தால் நிர்ணயிக்கப்படுகிறதே தவிர, பின்னது முன்னதால் நிர்ணயிக்கப்படுவதில்லை. இது குறித்தும் பிற்பாடு விவரமாய் பரிசீலிப்போம்.

இரண்டாம் வரிசைத் தொடரில் மூலதன முதலீட்டின் மீதான இலாப வீதம் மாறாதிருக்கும் இலாப அளவை குறிக்கும் தானிய அளவு குறைந்து விடும்; ஆனால் ஏனைய சரக்குகளுடன் ஒப்பிடுமிடத்து தானியத்தின் ஒப்பீட்டு விலை உயர்ந்திருக்கும். இலாபம் உயர்ந்திருக்கு மானால் அந்த உயர்வு முதலாளித்துவ குத்தகைச் சாகுபடியாளரிடம் போய்ச் சேர்ந்து பைய உயர்ந்து செல்லும் இலாபமாக விளங்குவதற்கு பதில் வாடகையின் வடிவில் இலாபத்திலிருந்து பிரிந்து சென்று விடுகிறது. ஆனால் இங்கு அனுமானம் செய்யப்பட்டுள்ள நிலைமை களில் தானியத்தின் விலை மாறாமலே இருந்து வரலாம்.

விலைகள் நிலைத்திருந்தாலும் சரி, உயர்ந்து சென்றாலும் சரி, மோசமான மண் வகையிலிருந்து சிறந்த மண் வகைக்கு ஓயாமல் முன் சென்றாலும் சரி, சிறந்த மண் வகையிலிருந்து மோசமான மண் வகைக்குப் பின் சென்றாலும் சரி, வேறுபாட்டு வாடகையின் வளர்ச்சியிலும் உயர்விலும் மாற்றம் இருக்காது.

இதுவரை நாம் (1) விலையானது ஒரு வரிசைத் தொடரில் உயருகிறது, மற்றொரு வரிசைத் தொடரில் நிலைத்திருக்கிறது என்றும், (2) சிறந்த மண் வகையிலிருந்து மோசமான மண் வகைக்கோ, மோசமானதிலிருந்து சிறந்ததுக்கோ ஓயாமல் மாற்றம் நிகழ்கிறது என்றும் அனுமானம் செய்து கொண்டோம்.

ஆனால் இப்போது தானியத்திற்கான வேண்டல் தொடக்க அளவாகிய 10 குவார்ட்டர் என்பதிலிருந்து 17 குவார்ட்டராக உயர்வதாய்க் கொள்வோம்; மேலும் படுமோசமான A மண்ணின் இடத்துக்கு வேறொரு A மண் வந்து விடுவதாகவும் அது 60 ஷில்லிங் உற்பத்தி விலையில் (50 ஷில்லிங் அடக்கவிலை + 10 ஷில்லிங் இலாப வீதம் 20%) 1 ½ குவார்ட்டர் உற்பத்தி செய்வதாகவும் கொள்வோம்; அதாவது குவார்ட்டர் ஒன்றுக்கு அதன் உற்பத்தி-விலை = 45 ஷில்லிங்; அல்லது பழைய A மண் ஓயாத அறிவு பூர்வச் சாகுபடியின் மூலம் மேம்பட்டு இருப்பதாகவோ, அதே செலவில் இன்னுங் கூட உற்பத்தித் திறனுள்ள முறையில், எடுத்துக்காட்டாக, மணப்புல் போன்றவற்றை புகுத்துவதன் மூலம் சாகுபடிச் செய்ப்படுவதாகவோ கொள்ளலாம்; அதாவது அதே மூலதன முதலீட்டைக் கொண்டு அதன் உற்பத்தி அளவு $1\,^1/_3$ குவார்ட்டராக உயருகிறது. இதோடு கூட, B, C, D ஆகிய மண்

வகைகள் பழையபடி அதே விளைச்சலைத் தருவதாகவும், ஆனால் புதிய மண் வகைகள் புகுத்தப்பட்டிருப்பதாகவும் கொள்வோம். எடுத்துக்காட்டாக, Aக்கும் Bக்கும் இடைப்பட்ட மண் வளம் கொண்ட A,Bக்கும் Cக்கும் இடைப்பட்ட மண் வளம் கொண்ட B', B'' இவை புதிய மண் வகைகள் பின்வரும் நிகழ்வுகளை அப்போது காணலாம்:

முதலாவதாக ஒரு குவார்ட்டர் கோதுமையின் உற்பத்தி - விலை அல்லது அதன் ஆளும் சந்தை-விலை 60 ஷில்லிங்கிலிருந்து 45 ஷில்லிங்காக, அதாவது 25% குறைகிறது.

இரண்டாவதாக, சாகுபடியானது ஒரே சமயத்தில் அதிக வளமுள்ள மண்ணிலிருந்து குறைந்த வளமுள்ள மண்ணுக்கும், குறைந்த வளமுள்ள மண்ணிலிருந்து அதிக வளம் உள்ள மண்ணுக்கும் செல்கிறது. A' என்கிற மண் Aயை விட அதிக வளம் உள்ளது, ஆனால் இதுவரை சாகுபடி செய்யப்பட்ட B, C, D மண்களைக் காட்டிலும் குறைந்த வளமுள்ளது. B', B'' ஆகிய மண்கள் A, A', B ஆகியவற்றை விட அதிக வளமுள்ளது, ஆனால் C,D ஆகியவற்றைவிட குறைந்த வளம் உள்ளது. வரிசைத் தொடர் இதனால் குறுக்குமறுக்காய்ச் செல்கிறது. சாகுபடியானது A முதலானவற்றைக் காட்டிலும் அறுதி அளவில் குறைந்த வளமுள்ள மண்ணை நோக்கிச் செல்லாமல் இதுவரை மிக அதிக வளமுள்ள மண் வகைகளான C,D ஆகியவற்றைப் பொறுத்த மட்டில் ஒப்பளவில் குறைந்த வளமுள்ள மண்ணை நோக்கியே செல்கிறது; மறுபுறம் அறுதி அளவில் அதிக வளம் உள்ள மண்ணை நோக்கிச் செல்லாமல் இதுவரை மிகக் குறைந்த வளமுள்ள மண்ணாகிய A, அல்லது A, Bஐ பொறுத்த மட்டில் ஒப்பளவில் அதிக வளமுள்ள மண்ணை நோக்கியே செல்கிறது.

மூன்றாவதாக: Bமீதான வாடகை குறைகிறது; C,D ஆகியவற்றின் மீதான வாடகையும் குறைகிறது; ஆனால் தானியமாக உள்ள மொத்த வாடகை 6 குவார்ட்டரிலிருந்து $7^2/_3$ குவார்ட்டராக உயர்கிறது. சாகுபடி செய்ப்பட்டு வாடகை பெற்றுத் தரும் நிலத்தின் அளவு அதிகரிக்கிறது, விளைபொருளின் அளவு 10 குவார்ட்டரிலிருந்து 17 குவார்ட்டராக உயர்கிறது. இலாபமானது Aக்கு மாறாமல் இருந்த போதிலும் தானியமாகத் தெரிவிக்கப்படுகையில் உயர்கிறது; ஆனால் ஒப்பீட்டு உபரி-மதிப்பு உயருவதால் இலாபவீதம் உயரக் கூடும். இந்நிலையில், வாழ்வுச் சாதனங்கள் விலைகுறைந்து போவதால் கூலி குறைகிறது; அதாவ்து மாறும் மூலதன முதலீடும், எனவே மொத்த முதலீட்டுச் செலவும் குறைகின்றன. பணவடிவிலான மொத்த வாடகை 360 ஷில்லிங்கிலிருந்து 345 ஷில்லிங்காகக் குறைகிறது.

புதிய வரிசைத் தொடரை வரைந்து பார்ப்போம்.

அட்டவணை II

| மண் வகை | விளைபொருள் | | மூலதன முதலீடு | இலாபம் | | வாடகை | | குவார்ட்டர் ஒன்றுக்கு உற்பத்தி விலை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | குவார்ட்டர் | ஷில்லிங் | | குவார்ட்டர் | ஷில்லிங் | குவார்ட்டர் | ஷில்லிங் | |
| A | 1 1/3 | 60 | 50 | 2/9 | 10 | — | — | 45 |
| A' | 1 2/3 | 75 | 50 | 5/9 | 25 | 1/3 | 15 | 36 |
| B | 2 | 90 | 50 | 8/9 | 40 | 2/3 | 30 | 30 |
| B' | 2 1/3 | 105 | 50 | 1 2/9 | 55 | 1 | 45 | 25 5/7* |
| B'' | 2 2/3 | 120 | 50 | 1 5/9 | 70 | 1 1/3 | 60 | 22½ |
| C | 3 | 135 | 50 | 1 8/9 | 85 | 1 2/3 | 75 | 20 |
| D | 4 | 180 | 50 | 2 8/9 | 130 | 2 2/3 | 120 | 15 |
| மொத்தம் | 17 | | | | | 7 2/3 | 345 | |

முடிவில், முன்போல் A, B, C, D ஆகிய மண்வகைகள் மட்டும் சாகுபடி செய்யப்பட்டால், ஆனால் அவற்றின் உற்பத்தித் திறன் உயர்ந்து A மண் 1 குவார்ட்டருக்குப் பதில் 2 குவார்ட்டரும் B மண் 2 குவார்ட்டருக்குப் பதில் 4 குவார்ட்டரும், வீமண் 3 குவார்ட்டருக்குப் பதில் 7 குவார்ட்டரும், D மண் 4 குவார்ட்டருக்கு பதில் 10 குவாட்டரும் உற்பத்தி செய்தால், அதாவது அதே காரணங்கள் பல்வேறு மண் வகைகள் மீதும் வெவ்வேறு விதமாய்ச் செயல்புரிந்தால், மொத்த உற்பத்தி 10 குவார்ட்டரிலிருந்து 23 குவார்ட்டராக அதிகரிக்கிறது. மக்கள் தொகை அதிகரிப்பதாலும் விலை குறைந்து போவதாலும் வேண்டலானது இந்த 23 குவார்ட்டரையும் உறிஞ்சி விடுவதாகக் கொண்டால் பின்வரும் முடிவை வந்தடைகிறோம்.

ஏனைய அட்டவணைகளில் போலவே இதிலும் எண் விகிதங்கள் விருப்பம் போல் வைத்துக் கொள்ளப்படுகின்றன. என்றாலும் அனுமானங்கள் முற்றிலும் அறிவுக்குகந்தவை.

---

(*) 1894ஆம் வருடத்திய ஜெர்மன் பதிப்பில் 25 2/7 என்றுள்ளது. - ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

**அட்டவணை III**

| மண் வகை | விளைபொருள் | | முதலீடு செய்யப் பட்ட மூலதனம் | குவார்ட்டர் ஒன்றுக்கு உற்பத்தி விலை | இலாபம் | | வாடகை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | குவார்ட்டர் | ஷில்லிங் | | | குவார்ட்டர் | ஷில்லிங் | குவார்ட்டர் | ஷில்லிங் |
| A | 2 | 60 | 50 | 30 | $^1/_3$ | 10 | 0 | 0 |
| B | 4 | 120 | 50 | 15 | $2\,^1/_3$ | 70 | 2 | 60 |
| C | 7 | 210 | 50 | $8\,^4/_7$ | $5\,^1/_3$ | 160 | 5 | 150 |
| D | 10 | 300 | 50 | 6 | $8\,^1/_3$ | 250 | 8 | 240 |
| மொத்தம் | 23 | | | | | | 15 | 450 |

விவசாயத்திலான மேம்பாடு வெவ்வேறு மண்வகைகளில் வெவ்வேறு விளைவுகளை தோற்றுவிக்கிறது என்பதும் இங்கு A,B வகைகளைக் காட்டிலும், C,D ஆகிய சிறந்த மண்வகைகள் மீது கூடுதலான விளைவைத் தோற்றுவிக்கிறது என்பதும் முதல் முக்கிய அனுமானம் ஆகும். எதிர்மாறாக நேரிடுவதும் சாத்தியமே என்றாலும் பொதுவாக இப்படித்தான் நேரிடுகிறது என்பதை அனுபவம் காட்டுகிறது. மேம்பாடு சிறந்த மண்வகைகளைக் காட்டிலும் மோசமான மண்வகைகள் மீது கூடுதலான விளைவைத் தோற்றுவிக்குமானால், சிறந்த மண்வகைகள் மீதான வாடகை உயருவதற்கு பதில் சரியும். அனைத்து மண்வகைகளின் வளத்திலும் அறுதி வளர்ச்சி ஏற்படும் போது C, D ஆகிய சிறந்த மண்வகைகளின் ஒப்பீட்டு உயர்வளத்திலும் வளர்ச்சி ஏற்படுவதாக, நமது அட்டவணையில் அனுமானம் செய்து கொள்ளப்படுகிறது; குறிப்பிட்ட மூலதன முதலீட்டிலிருந்து கிடைக்கும் விளைபொருட்களிலான வேறுபாடு அதிகரிக்கிறது, இவ்விதம் வேறுபட்டு வாடகையும் அதிகரிக்கிறது என்பதே இதன் பொருள்.

மொத்த வேண்டலானது மொத்த விளைபொருளின் பெருக்கத்துக்கு ஈடுகொடுத்துச் செல்கிறது என்பது இரண்டாவது அனுமானம் ஆகும். முதலாவதாக, இந்தப் பெருக்கம் திடுமென ஏற்படுவதாக கருத வேண்டியதில்லை; மூன்றாம் வரிசைத் தொடர் பையப் பையவே எழுவதாக கருதலாம். இரண்டாவதாக, அவசிய வாழ்வுச் சாதனங்கள் மலிவாகிச் செல்லச் செல்ல அவற்றின் நுகர்வு அதிகரிக்காமல் அப்படியே இருப்பதாக கருதுவது சரியல்ல. இதற்கு

நேர்மாறாகவே நிகழ்கிறது என்பதை இங்கிலாந்தில் தானியச் சட்டங்களின் ஒழிப்பு நிரூபித்துக் காட்டியது (பார்க்கவும்: நியூமன் *). அறுவடையில் திடீரென்று ஏற்படக்கூடிய பெருத்த வேறுபாடுகள் - காலநிலை காரணமாகவே ஏற்படும் இவ்வேறுபாடுகள் - தானியவிலைகளில் ஒருநேரம் அசாதாரண வீழ்ச்சியும் ஒருநேரம் அசாதாரண உயர்வும் ஏற்படச் செய்வதால்தான் இதற்கு மாறான கருத்து எழுகிறது. இப்படி நேரிடுகையில் திடுமென ஏற்பட்டு சொற்ப காலமே இருந்து மறையும் விலைக் குறைப்புக்கு நுகர்வுப் பெருக்கத்தில் முழுத் தாக்கம் செலுத்திட அவகாசம் இல்லாமற் போகிறது என்றால், ஆளும் உற்பத்தி-விலை குறைவதால் விலைக் குறைப்பு ஏற்படுகையில், அதாவது நீண்டகாலத்துக்குரிய விலைக்குறைப்பு ஏற்படுகையில் எதிர்மாறான நிலைமை ஏற்படுகிறது. மூன்றாவதாக, ஒரு பகுதி தானியமானது பிராந்தி அல்லது பீர் ஆக நுகரப்படலாம். இந்த இருபண்டங்களும் மேன்மேலும் அதிக அளவில் நுகரப்படுவது எவ்விதத்தும் குறுகிய வரம்புகளுக்கு உட்பட்டதல்ல. நான்காவதாக, இது ஓரளவுக்கு மக்கள்தொகைப் பெருக்கத்தையும் ஓரளவுக்கு நாடு தானிய ஏற்றுமதி செய்யக் கூடியதாய் இருப்பதையும் பொறுத்தது. 18ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதிக்குப் பிறகும் கூட வெகுகாலம் இங்கிலாந்து தானிய ஏற்றுமதி செய்து வந்தது. இதன் பயனாய் வேண்டலானது உள்நாட்டு நுகர்வின் வரம்புகளால் மட்டும் ஆளப் படாத நிலை ஏற்படுகிறது. கடைசியாக, கோதுமை உற்பத்தியிலான பெருக்கமும் அதன் விலைக் குறைப்பும் ரை அல்லது ஓட்சுக்கு பதில் கோதுமையை பெருந்திரளான மக்களுக்குரிய முக்கிய நுகர்வுப் பண்டமாக்குவதில் போய் முடியலாம்; இதே ஒரு காரணத்தினாலேயே கோதுமைக்கான வேண்டல் வளர்ந்து பெருகலாம்; உற்பத்தி குறைந்து விலை உயரும் போது இதற்கு எதிர்மாறாக நிகழலாம்.- ஆக, இந்த அனுமானங்களின் படியும், முன்னர் வரித்துக்கொண்ட விகிதங்களின் படியும், மூன்றாம் வரிசைத் தொடரிலிருந்து பெறப்படும் முடிவு இதுதான்: குவார்ட்டர் ஒன்றுக்கு 60 ஷில்லிங்கிலிருந்து 30 ஷில்லிங்காக, அதாவது 50%ஆக குறைகிறது; முதல் வரிசைத் தொடருடன் ஒப்பிடுங்கால் உற்பத்தி 10 குவார்ட்டரிலிருந்து 23 குவார்ட்டராக, அதாவது 130% அதிகரிக்கிறது; வாடகையானது B மண்ணுக்கு நிலைத்து

(*) பி.நியூமன், அரசியல் பொருளாதாரம் பற்றிய விரிவுரைகள், லண்டன், 1851, பக்கம் 158, ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

நிற்கிறது. C மண்ணுக்கு 25%அதிகரிக்கிறது*, D மண்ணுக்கு 33 $^{1}/_{3}$% அதிகரிக்கிறது (**) மொத்த வாடகை £18 இலிருந்து £22 ½(***), ஆக, அதாவது25% (****) அதிகரிக்கிறது.

இந்த மூன்று அட்டவணைகளையும் ஒப்பு நோக்குவோம் (முதல் வரிசைத் தொடர் A இலிருந்து Dக்கு ஏறுவதாகவும் Dஇலிருந்து Aக்கு இறங்குவதாகவும் இருமுறை எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்): இவை ஏதேனுமொரு சமுதாய நிலையில் காணப்படும் படிநிலைகளை குறிப்பதாக (எடுத்துக்காட்டாக வெவ்வேறான மூன்று நாடுகளில் அக்கம்பக்கமாய் நிலவுவதாக) கருதப்படலாம்; அல்லது ஒரே நாட்டுக்குள் வெவ்வேறு வளர்ச்சிக் காலங்களில் அடுத்தடுத்து ஒன்றன்பின் ஒன்று வருவதாகவும் கருதப்படலாம். இந்த ஒப்பு நோக்கிலிருந்து தெளிவானது என்னவென்றால்:

(1) வரிசைத் தொடர் நிறைவு பெறுமிடத்து - அதன் உருவாக்க நிகழ்முறையின் பாதை எப்படி அமைந்திருந்தாலும் சரி - எப்போதுமே இறங்கு வரிசையில் இருப்பதாகக் காட்சி அளிக்கிறது; ஏனென்றால் வாடகையைப் பகுத்தாராயும் போதெல்லாம் அதிகபட்ச வாடகை பெற்றுத் தரும் நிலத்திலிருந்துதான் தொடங்குவோம்; வாடகையே பெற்றுத்தராத நிலத்திற்கு கடைசியாகத்தான் வருவோம்.

(2) வாடகையே பெற்றுத்தராத படுமோசமான மண்வகைக்கான உற்பத்தி - விலைதான் எப்போதுமே சந்தை-விலையை ஆளும் உற்பத்தி - விலையாகும்; ஆனால் அட்டவணை. Iஇல் வரிசைத் தொடரை ஏறுவரிசையாகக் கொள்வோமானால், மேன்மேலும் சிறந்த மண்வகை ஓயாமல் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டால் மட்டுமே இந்த உற்பத்தி - விலை மாறாமல் நிலைத்திருக்கும். இங்கு மிகச் சிறந்த மண்வகையில் உற்பத்தி செய்யப்படும் தானியத்தின் விலைதான் ஆளும் விலை ஆகும்; ஏனென்றால் A மண் எந்த அளவுக்கு விலையை நிர்ணயிக்கும் மண்வகையாக நீடிக்கிறது என்பது உற்பத்தி அளவைப் பொறுத்தது. B, C, D ஆகியவை வேண்டலைக் காட்டிலும் கூடுதலாய் உற்பத்தி செய்யுமானால் A மண் விலையை நிர்ணயிப்பதாய் இல்லாமல்

(*) 1894ஆம் வருடத்திய ஜெர்மன் பதிப்பில் இதற்குப் பதிலாய் இருமடங்காகிறது. ஆங்கிலப் பதிப்பாசிரியர்

(**) மேலது: இருமடங்குக்கும் மேல் அதிகரிக்கிறது. - ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

(***) மேலது: 22.- ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

(****) மேலது: 22 $^{1}/_{9}$%.-ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

போகும். ஸ்டோர்ஹ் மிகச் சிறந்த மண் வகையை ஆளும் மண் வகை ஆக்குகையில், இந்த விவரத்தை தெளிவற்ற முறையில் மனத்தில் கொண்டுள்ளார். (*). இவ்வழியில்தான் அமெரிக்க தானிய விலைகள் ஆங்கிலேய தானிய விலைகளை ஆளுகின்றன.

*(3)* வேறுபாட்டு வாடகை என்பது மண்ணின் இயற்கை வளத்திலான வேறுபாடுகளிலிருந்து எழுவதாகும்; இந்த இயற்கை வளம் விவசாய வளர்ச்சியின் குறிப்பிட்ட ஒவ்வொரு கட்டத்திற்கும் குறிப்பிட்ட ஒன்றாகும் (இப்போதைக்கு இடவாகு பற்றிய பிரச்சினையை ஒதுக்கி வைக்கிறோம்); வேறுவிதமாகச் சொல்லின், மிகச் சிறந்த நிலங்களின் வரம்புக்குட்பட்ட பரப்பிலிருந்தும், சம மூலதனத் தொகைகள் சமமல்லாத மண்வகைகள் மீது முதலீடாக வேண்டியிருப்பதால் ஒரே மூலதன அளவிற்கு வெவ்வேறு அளவில் விளைபொருள் பெறப்படுவதிலிருந்தும் வேறுபாட்டு வாடகை எழுகிறது.

*(4)* வேறுபாட்டு வாடகை என்ற ஒன்றும் வரிசைப்படி அமைந்த வேறுபாட்டு வாடகை என்ற ஒன்றும் இருப்பதானது மோசமான மண்வகையிலிருந்து சிறந்த மண்வகைக்குச் செல்லும் ஏறுவரிசையைப் போலவே சிறந்த மண் வகையிலிருந்து மோசமான மண்வகைக்குச் செல்லும் இறங்கு வரிசையையும் கூட அடிப்படையாகக் கொள்ளலாம்; மாறி மாறி வரும் குறுக்குமறுக்கான வழியிலும் கூட அது அடையப் பெறலாம். (முதல் வரிசைத் தொடர் Dஇல் தொடங்கி Aக்குச் செல்வதன் மூலமோ Aஇல் தொடங்கி Dக்குச் செல்வதன் மூலமோ அமைந்திடலாம். இரண்டாம் வரிசைத் தொடர் இருவிதமான அசைவியக்கங்களையும் உள்ளடக்கியதாகும்.)

*(5)* வேறுபாட்டு வாடகை எம்முறையில் உருவாகிறது என்பதைப் பொறுத்து விவசாய விளைபொருளின் விலை நிலைத்து நிற்பதாகவோ உயர்ந்து செல்வதாகவோ குறைந்து செல்வதாகவோ இருக்கும் போதே, அவ்வாடகை விளைந்திடலாம். விலை குறைந்து செல்லும் நேர்வில், மொத்த உற்பத்தியும் மொத்த வாடகையும் உயரலாம், இதுவரை வாடகை விளையாதிருந்த நிலத்தில் வாடகை விளைந்திடலாம்;

* ஹெ. ஸ்டோர்ஹ், Cours d'e'conomic politique, ou Exposition desprincipes quide'terminent la prospe'rite' des nations, இரண்டாம் பாகம், செயிண்ட் பீட்டர்ஸ்பர்க், 1815, பக்கம் 78 - 79, - ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

படுமோசமான A வகை மண் இன்னுஞ் சிறந்த வகை மண்ணால் மாற்றீடு செய்யப்பட்டிருந்தாலும் அல்லது அதுவே மேம்பாடு அடைந்திருந்தாலும், மேலும் இன்னுஞ் சிறந்த, ஏன் மிகச் சிறந்த ஏனைய மண் வகைகளிலும் வாடகை குறைந்து போனாலும் அப்போதும் கூட மேற்சொன்னது நிகழலாம் (அட்டவணை II); இந்நிகழ்முறையை (பண வடிவிலான) மொத்த வாடகைக் குறைவதோடும் தொடர்பு படுத்தலாம். முடிவில், சாகுபடியிலான பொது மேம்பாடு காரணமாய் விலைகள் குறைந்து இதனால் படுமோசமான மண் வகையின் விளைபொருளும் அதன் விலையும் குறைகையில் சிறந்த மண் வகைகள் சிலவற்றில் வாடகை அப்படியே மாறாதிருக்கலாம், அல்லது குறைந்து போகலாம்; அதே போது மிகச் சிறந்த மண் வகைகளில் அது உயரலாம். எப்படியானாலும் படுமோசமான மண்வகையுடன் ஒப்பிடுகையில் ஒவ்வொரு மண்வகையின் வேறுபாட்டு வாடகையும், உற்பத்தியளவுகளிலான வேறுபாடு குறிப்பிட்டதாய் இருக்க, ஒரு குவார்ட்டர் கோதுமையின் விலையைப் பொறுத்தது. ஆனால் விலை குறிப்பிட்டதாய் இருக்க, வேறுபாட்டு வாடகையானது உற்பத்தியளவுகளிலான வேறுபாட்டைப் பொறுத்தது. எல்லா மண்வகைகளின் அறுதி வளமும் அதிகரிக்கையில், சிறந்தவற்றின் வளம் மோசமானவற்றின் வளத்தைக் காட்டிலும் ஒப்பளவில் கூடுதலாய் அதிகரிக்குமானால், இந்த வேறுபாட்டின் அளவும் அதிகரிக்கிறது. இவ்வழியில் (பார்க்கவும்: அட்டவணை I), விலை 60 ஷில்லிங்காக இருக்கும்போது, D மண்ணிலான வாடகை A மண்ணுடன் ஒப்பிடுகையில் அதிலிருந்து பெறப்படும் வேறுபாட்டு விளைபொருளால் நிர்ணயிக்கப்படுகிறது; அதாவது, 3 குவார்ட்டர் உபரியால் நிர்ணயிக்கப்படுகிறது. ஆக வாடகை = 3 X 60 = 180 ஷில்லிங். ஆனால் விலை = 30 ஷில்லிங் என்றுள்ள அட்டவணை IIIஇல், வாடகையானது A மண்ணுடன் ஒப்பிடுகையில் D மண்ணிலிருந்து பெறப்படும் உபரி-உற்பத்தியால், அதாவது 8 குவார்ட்டரால் நிர்ணயிக்கப்படுகிறது. ஆக 8 X 30 = 240 ஷில்லிங்.

மேன்மேலும் மோசமான மண் வகையை நோக்கிச் செல்வது அல்லது மண்ணின் வளம் மேன்மேலும் குறைந்து செல்வது வேறுபட்டு வாடகைக்கு அவசிய முன்நிபந்தனை ஆகும் என்ற கருத்து-வேறுபாட்டு வாடகை பற்றிய தவறான முதல் அனுமானம் - மேற்கண்ட விளக்கத்தால் அடிபட்டுப் போகிறது; வெஸ்டு, மால்தஸ்,

ரிக்கார்ட்டோ ஆகியோர் இன்னமும் இக்கருத்தைக் கொண்டுள்ளனர்.*

மேன்மேலும் சிறந்த மண்வகையை நோக்கிச் செல்கிற போதும் வேறுபாட்டு வாடகை உருவாக முடியும், படுமோசமான மண்வகை முன்னர் வகுத்து வந்த அடிமட்ட இடத்துக்கு இன்னுஞ்சிறந்த மண்வகை வரும்போது உருவாக முடியும், வேளாண்மையில் தொடர்ந்து மேன்மேலும் முன்னேற்றம் ஏற்படுவதோடு அதனை தொடர்புபடுத்த முடியும் என்றெல்லாம் பார்த்தோம். வெவ்வேறு மண்வகைகளின் ஏற்றத் தாழ்வு மட்டுமே வேறுபாட்டு வாடகைக்கு முன்நிபந்தனை ஆகும். உற்பத்தித் திறனிலான உயர்வைப் பொறுத்த வரை மொத்த நிலப்பரப்பின் அறுதி வளத்திலான உயர்வு இந்த ஏற்றத் தாழ்வை ஒழித்து விடுவதில்லை, மாறாக அதனை அதிகரிக்கச் செய்கிறது. மாறாமல் அப்படியே இருக்கும்படி விட்டு வைக்கிறது, அல்லது குறைக்க மட்டுமே செய்கிறது என்பதே அனுமானம்.

18ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து நடுப்பகுதி வரை, இங்கிலாந்தில் தானிய விலைகள் தங்க, வெள்ளி விலைகளின் சரிவையும் மீறி ஓயாமல் வீழ்ச்சியுற்றன; அதே நேரத்தில் (இந்தக் காலம் அனைத்தையும் ஒரே முழுமையாகக் கொண்டால்) வாடகையும், வாடகையின் ஒட்டுமொத்த அளவும் சாகுபடி நிலப்பரப்பும் விவசாய உற்பத்தியும் மக்கள்தொகையும் அதிகரித்தன. இதற்குரியது அட்டவணை I உம் அத்துடன் இணைந்து வரும் அட்டவணை IIஉம் ஆகும்; பின்னது ஏறுவரிசையில் இருக்க வேண்டுமென்றாலும், படுமோசமான A வகை மண் மேம்படுத்தப்படுகிற, அல்லது தானிய உற்பத்தி செய்யும் நிலப்பரப்பிலிருந்து அகற்றப்பட்டு விடுகிற விதத்தில் இது அமைத்திட வேண்டும்; ஆனால் வேறு விவசாய நோக்கங்களுக்கோ தொழில்துறை நோக்கங்களுக்கோ அந்த நிலம் பயன்படுத்தப்படுவதில்லை என்பதல்ல இதன் பொருள்.

---

(*) (வெஸ்டு) நிலத்துக்கு மூலதனத்தை பிரயோகிப்பது பற்றிய கட்டுரை, லண்டன், 1815.

மால்தஸ், அரசியல் பொருளாதாரக் கோட்பாடுகள், லண்டன், 1836.

மால்தஸ், வாடகையின் இயல்பும் முன்னேற்றமும் குறித்தும் அதனை ஆளும் கோட்பாடுகள் குறித்தும் ஓர் ஆய்வு, லண்டன், 1815.

ரிக்கார்ட்டோ, அரசியல் பொருளாதாரக் கோட்பாடுகள், மற்றும் வரிவிதிப்பு குறித்து, மூன்றாம் பதிப்பு, லண்டன், 1821, அத்தியாயம்.II.. ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

*19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து (தேதி இன்னும் துல்லியமாய் குறிப்பிடப்பட வேண்டும்). 1815வரை தானிய விலைகள் ஓயாமல் உயர்கின்றன. அதே போது வாடகையும், வாடகையின் ஒட்டுமொத்த அளவும், சாகுபடி நிலப்பரப்பும், விவசாய உற்பத்தியும், மக்கள்தொகையும் தொடர்ந்து அதிகரித்துச் செல்கின்றன. இதற்குரியது இறங்கு வரிசையிலான அட்டவணை I. (அக்காலத்தில் கீழ்தர நிலம் சாகுபடி செய்யப்பட்டது குறித்து இங்கு சில ஆதாரங்கள் தரப்பட வேண்டும்.)*

*பெட்டி, தாவெனண்ட் ஆகியோரின் காலத்தில் சாகுபடியாளர்களும் நிலவுடைமையாளர்களும் நிலமேம்பாடுகள் குறித்தும் புதுநிலம் சாகுபடிக்கு கொண்டுவரப்படுவது குறித்தும் குறைபட்டுக் கொண்டார்கள்; சிறந்த நிலங்களிலான வாடகை குறைந்தது; வாடகை பெற்றுத் தரும் நிலப்பரப்பு விரிவடைந்ததால் வாடகையின் மொத்த அளவு அதிகரித்தது.*

*(இம்மூன்று கூறுகளுக்கும் பிற்பாடு ஆதாரங்கள் தர வேண்டும்; தனிப்பட்ட ஒரு நாட்டில் சாகுபடி செய்யப்படும் நிலத்தின் வெவ்வேறு பிரிவுகளது மண்வளத்திலான வேறுபாட்டுக்கும் இவ்வாறே செய்ய வேண்டும்.)*

*பொதுவான வேறுபாட்டு வாடகையைப் பொறுத்தவரை, எப்போதுமே சந்தை-மதிப்பானது விளைபொருட்களது மொத்த அளவின் மொத்த உற்பத்தி - விலைக்கு மேல் இருப்பது நோக்கற்பாலது. அட்டவணை Iஐ எடுத்துக்காட்டாகக் கொள்வோம். மொத்த விளைபொருளாகிய 10 குவார்ட்டர் 600 ஷில்லிங்கிற்கு விற்கப்படுகிறது; ஏனென்றால் சந்தை விலை Aஇன் உற்பத்தி-விலையால் நிர்ணயிக்கப்படுகிறது; இவ்வுற்பத்தி-விலை குவார்ட்டர் ஒன்றுக்கு 60 ஷில்லிங் ஆகும். ஆனால் உள்ளபடியான உற்பத்தி-விலை பின்வருமாறு:*

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| A.................... | 1 கு. | = | 60 ஷி. | 1 கு. | = | 60 ஷி. |
| லி.................... | 2 கு. | = | 60 ஷி. | 1 கு. | = | 30 ஷி. |
| லீ.................... | 3 கு. | = | 60 ஷி. | 1 கு. | = | 20 ஷி. |
| ரி.................... | 4 கு. | = | 60 ஷி. | 1 கு. | = | 15 ஷி. |
| | 10 கு. | = | 240 ஷி. | சராசரி 1 கு. | = | 24 ஷி. |

இந்த 10 குவார்ட்டரின் உள்ளபடியான உற்பத்தி - விலை 240 ஷில்லிங்; ஆனால் இது 600 ஷில்லிங்குக்கு, அதாவது உற்பத்தி - விலையில் 250% விலைக்கு விற்கப்படுகிறது. 1 குவார்ட்டருக்கு உள்ளபடியான சராசரி விலை 24 ஷில்லிங், சந்தை - விலை 60 ஷில்லிங், அதாவது இதுவும் உற்பத்தி - விலையில் 250%.

முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் அடிப்படையில் போட்டியின் வாயிலாகத் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளும் சந்தை-மதிப்பின் நிர்ணயிப்பாகும், போட்டிதான் பொய்யான சமூக மதிப்பைத் தோற்றுவிக்கிறது. இது சந்தை-மதிப்பின் விதியிலிருந்து எழுவதாகும்; விவசாய-விளைபொருட்கள் இவ்விதிக்கு உட்பட்டவை. விவசாய விளைபொருட்கள் உட்பட உற்பத்திப் பொருட்களினது சந்தை-மதிப்பின் நிர்ணயிப்பானது சமுதாயம் உணர்வுபூர்வமாய் வேண்மென்றே செய்திடும் செயலல்ல என்றாலும் ஒரு சமுதாயச் செயலே ஆகும். இது தவிர்க்க முடியாதவாறு உற்பத்திப் பொருளின் பரிவர்த்தனை - மதிப்பை அடிப்படையாகக் கொண்டதே ஒழிய, மண்ணையும் மண்வளத்திலான வேறுபாட்டையும் அல்ல. முதலாளித்துவச் சமுதாய அமைப்பு ஒழிக்கப்பட்டு, சமுதாயமானது உணர்வுபூர்வமாய் திட்டப்படி இயங்கும் கூட்டமைவாக ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாகக் கொள்வோமானால், 10 குவார்ட்டரானது 240 ஷில்லிங்கில் அடங்கியிருப்பதற்கு சமமான சுயேச்சை உழைப்பு - நேரத்தைக் குறித்திடும். அப்போது சமுதாயம் இந்த உற்பத்திப் பொருளை அதிலடங்கியுள்ள உள்ளபடியான உழைப்பு-நேரத்தைப் போல் இரண்டரைமடங்கு விலை கொடுத்து வாங்காது; நிலவுடைமையாளர் வர்க்கம் என்றவொன்று இருப்பதற்கான அடிப்படை இவ்விதம் அழிக்கப்பட்டு விடும். உற்பத்திப்பொருள் அயல்நாட்டிலிருந்தான இறக்குமதிகளால் அதே அளவுக்கு மலிவாவதால் ஏற்படக் கூடிய அதே விளைவுதான் இதனாலும் ஏற்படும். ஆகவே, இப்போதுள்ள பொருளுற்பத்தி முறையை தக்க வைத்துக் கொண்டே வேறுபாட்டு வாடகை அரசுக்கு செலுத்தப்படுவதாகக் கொள்வதன் மூலம், மற்றவை யாவும் மாறாதிருக்க, விவசாய விளைபொருட்களின் விலையும் மாறாதிருக்கும் என்பது மெய்தான்; அதே போது முதலாளித்துவப் பொருளுற்பத்தி அகற்றப்பட்டு, கூட்டமைவு அதனிடத்துக்கு வந்தால் உற்பத்திப் பொருட்களின் மதிப்பு மாறாமலிருக்கும் என்று சொல்வதும் தவறுதான். ஒரே வகைச் சரக்குகளுக்கு ஒரே சந்தை விலை என்ற வழியில்தான் மதிப்பின் சமூகத் தன்மை முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் அடிப்படையிலும், பொதுவாக தனியாட்களிடையிலான சரக்குப் பரிவர்த்தனை சார்ந்த

எவ்வகைப் பொருளுற்பத்தியின் அடிப்படையிலும் ஈடேற்றம் பெறுகிறது. சமுதாயம் நுகர்வாளர் என்ற நிலையிலிருந்து விவசாய விளைபொருட்களுக்கு மிகையாய் விலை கொடுக்குமிடத்து இந்த மிகைப்பாடு விவசாய உற்பத்தியில் சமுதாயத்தின் உழைப்பு - நேரம் ஈடேற்றம் பெறுவதைப் பொறுத்தவரை ஒரு கழித்தல் ஆகும். ஆனால் சமுதாயத்தின் ஒரு பிரிவினரை, அதாவது நிலவுடைமையாளர்களைப் பொறுத்த வரை கூட்டல் ஆகிறது.

இரண்டாவது காரணி-இது அடுத்த அத்தியாயத்தில் வரும் இரண்டாம் வகை வேறுபாட்டு வாடகை பற்றிய பகுப்பாய்வுக்கு முக்கியமானது-பின்வருமாறு:

இங்கு விவகாரம் என்னவென்றால், ஏக்கர் ஒன்றுக்கு அல்லது ஹெக்டேர் ஒன்றுக்கு எவ்வளவு வாடகை என்பது மட்டுமல்ல, பொதுவாக உற்பத்தி-விலைக்கும் சந்தை-விலைக்கும் இடையிலான வேறுபாடோ, ஏக்கர் ஒன்றுக்கான தனிப்பட்ட உற்பத்தி-விலைக்கும் பொது உற்பத்தி-விலைக்கும் இடையிலான வேறுபாடோ மட்டுமல்ல. ஒவ்வொரு மண் வகையிலும் எத்தனை ஏக்கர் சாகுபடியிலுள்ளது என்பதும் இங்கு பிரச்சினையாகும். இங்கு இதன் முக்கியத்துவம் வாடகை அளவின் மீது மட்டுமே, அதாவது சாகுபடி நிலப்பரப்பு அனைத்திற்குமான மொத்த வாடகையின் மீது மட்டுமே நேரடித் தாக்கம் செலுத்துகிறது; ஆனால் அதே போது விலைகள் உயராத போதிலும், அல்லது விலைகள் குறையும் போது பல்வேறு மண்வகைகளின் ஒப்பீட்டு வளத்திலான வேறுபாடுகள் அதிகரிக்காத போதிலும் வாடகை வீதம் உயருவது பற்றிய பரிசீலனைக்குச் சென்றிட நமக்கோர் ஏணிப்படியாக இருந்து துணைபுரிகிறது.

மேலே நாம் பார்த்துள்ளபடி,

அட்டவணை I.

| மண் வகை | ஏக்கர் | உற்பத்தி விலை (£) | விளை பொருள் (குவார்ட்டர்) | வாடகை தானியமாக (குவார்ட்டர்) | வாடகை பணமாக (£) |
|---|---|---|---|---|---|
| A | 1 | 3 | 1 | 0 | 0 |
| B | 1 | 3 | 2 | 1 | 3 |
| C | 1 | 3 | 3 | 2 | 6 |
| D | 1 | 3 | 4 | 3 | 9 |
| மொத்தம் | 4 | 10 | | 6 | 18 |

ஒவ்வொரு வகையிலும் சாகுபடி செய்யப்படும் நிலப்பரப்பின் ஏக்கர் அளவு இருமடங்காவதாகக் கொண்டால், பெறப்படுவதாவது:

*அட்டவணை 1 அ.*

| மண் வகை | ஏக்கர் | உற்பத்தி விலை (£) | விளை பொருள் (குவார்ட்டர்) | வாடகை தானியமாக (குவார்ட்டர்) | வாடகை பணமாக (£) |
|---|---|---|---|---|---|
| A | 2 | 6 | 2 | 0 | 0 |
| B | 2 | 6 | 4 | 2 | 6 |
| C | 2 | 6 | 6 | 4 | 12 |
| D | 2 | 6 | 8 | 6 | 18 |
| மொத்தம் | 8 | | 20 | 12 | 36 |

இன்னும் இரு நேர்வுகளை அனுமானம் செய்து கொள்வோம். மிகவும் கீழ்த்தரமான இரு மண்வகைகளில் உற்பத்தி பின்வரும் விதத்தில் பெருகுவதாக முதல் நேர்வில் கொள்வோம்.

*அட்டவணை 1.ஆ.*

| மண் வகை | ஏக்கர் | உற்பத்தி விலை (£) | | விளை பொருள் (குவார்ட்டர்) | வாடகை தானியமாக (குவார்ட்டர்) | வாடகை பணமாக (£) |
|---|---|---|---|---|---|---|
| | | ஏக்கர் ஒன்றுக்கு | மொத்தம் | | | |
| A | 4 | 3 | 12 | 4 | 0 | 0 |
| B | 4 | 3 | 12 | 8 | 4 | 12 |
| C | 2 | 3 | 6 | 6 | 4 | 12 |
| D | 2 | 3 | 6 | 8 | 6 | 18 |
| மொத்தம் | 12 | | 36 | 26 | 14 | 42 |

முடிவில், நான்கு மண்வகைகளிலும் உற்பத்தியும் சாகுபடிப் பரப்பும் சமச்சீரற்ற முறையில் பெருக்கமடைவதாகக் கொள்வோம்:

*அட்டவணை 1 இ.*

| மண் வகை | ஏக்கர் | உற்பத்தி விலை (£) | | விளை பொருள் (குவார்ட்டர்) | வாடகை தானியமாக (குவார்ட்டர்) | வாடகை பணமாக (£) |
|---|---|---|---|---|---|---|
| | | ஏக்கர் ஒன்றுக்கு | மொத்தம் | | | |
| A | 1 | 3 | 3 | 1 | 0 | 0 |
| B | 2 | 3 | 6 | 4 | 2 | 6 |
| C | 5 | 3 | 15 | 15 | 10 | 30 |
| D | 4 | 3 | 12 | 16 | 12 | 36 |
| மொத்தம் | 12 | | 36 | 36 | 24 | 72 |

முதலாவதாக, I, Iஅ, Iஆ, Iஇ ஆகிய நேர்வுகள் யாவற்றிலும் ஏக்கர் ஒன்றுக்கான வாடகை மாறாமலிருக்கிறது; ஏனென்றால் ஒரே மண்வகையில் ஒவ்வொரு ஏக்கருக்கும் ஒரே அளவு மூலதனம் முதலீடு செய்யப்படுவதால் பெறப்படும் விளைபொருளில் உண்மையில் மாற்றமேதும் ஏற்படவில்லை. குறிப்பிட்ட எத்தருணத்திலும் எந்தவொரு நாட்டிலும் நடப்பு என்னவோ அதைத்தான் நாம் அனுமானித்துக் கொள்கிறோம்; அதாவது பல்வேறு மண்வகைகளும் மொத்த சாகுபடிப் பரப்பை குறிப்பிட்ட விகிதத்தில் பகிர்ந்து கொள்வதாகக் கொள்கிறோம், மற்றும் எப்போதுமே எந்த இரு ஒப்பு நோக்கப்படுகிற இருவேறு நாடுகளில் அல்லது ஒரே நாட்டை எடுத்துக் கொண்டால் வெவ்வேறு காலங்களில் எப்போதும் நடப்பு என்னவோ அதைத்தான் அனுமானித்துக் கொள்கிறோம்; அதாவது மொத்தச் சாகுபடிப் பரப்பு வெவ்வேறு மண்வகைகளிடையே விநியோகமாகிற விகிதம் மாறுவதாகக் கொள்கிறோம்.

Iஉடன் Iஅ நேர்வை ஒப்பு நோக்குங்கால் நான்கு வகைகளிலும் நிலச்சாகுபடி ஒரே விகிதத்தில் அதிகரிக்கும் போது சாகுபடி செய்யப்படும் ஏக்கர் அளவு இருமடங்காவதால் மொத்த உற்பத்தியும் இருமடங்காவதும், தானிய வடிவிலும் பணவடிவிலுமான வாடகையும் கூட இரு மடங்காவதும் தெரிய வருகிறது.

ஆனால், Iஉடன் Iஆ நேர்வையும் பிறகு Iஇ நேர்வையும் ஒப்பு நோக்குங்கால், இரு நேர்வுகளிலும் சாகுபடிப் பரப்பு மும்மடங்காய் பெருகக் காணலாம். அது இரு நேர்வுகளிலும் 4 ஏக்கரிலிருந்து 12 ஏக்கராக அதிகரிக்கிறது; ஆனால் 1அ நேர்வில் A,B வகைகள்

பெருக்கத்தில் பெரும்பங்கு வகிக்கின்றன. Aவாடகையேதும் பெற்றுத் தருவதில்லை, Bமிகச் சிறு அளவில்-வேறுபாட்டு வாடகை பெற்றுத் தருகிறது. புதிதாக சாகுபடி செய்யப்படும் 8 ஏக்கரில், A,B ஒவ்வொன்றின் பங்குக்கும் 3 ஏக்கர் வீதம் போய் விடுகிறது. மொத்தம் 6 ஏக்கர். ஆனால் C, D ஒவ்வொன்றின் பங்குக்கும் 1 ஏக்கர் வீதந்தான் போகிறது; மொத்தம் 2 ஏக்கர். அதாவது பெருக்கத்தில் முக்கால் பங்கு A, B இவற்றில் நடந்தேறுகிறது, கால் பங்கு மட்டுமே, C,D இவற்றில் நடந்தேறுகிறது. இந்த அனுமானத்தின் அடிப்படையில், Iஉடன் ஒப்பிடுகையில் Iஆ நேர்வில் சாகுபடிப்பரப்பு மும்மடங்காவதால் விளைபொருள் மும்மடங்காவதில்லை, 10லிருந்து 30 ஆகாமல் 26தான் ஆகிறது. மறுபுறம், பெருக்கத்தில் கணிசப் பகுதி கொஞ்சங்கூட வாடகை பெற்றுத் தராத A வகையில் நிகழ்வதாலும், சிறந்த மண்வகைகளிலான பெருக்கத்தில் பெரும்பகுதி B வகையில் நிகழ்வதாலும் தானிய வடிவிலான வாடகை 6 குவார்ட்டரிலிருந்து 14 குவார்ட்டராகவும், பண வடிவிலான வாடகை £18 லிருந்து £42 ஆகவும்தான் அதிகரிக்கிறது.

ஆனால் Iஉடன் Iஇ நேர்வை ஒப்பிடுங்கால், வாடகை பெற்றுத் தராத நிலத்தின் பரப்பு கொஞ்சங்கூட அதிகரிப்பதில்லை. குறைந்தபட்ச வாடகை பெற்றுத் தரும் நிலப் பரப்பு சொற்ப அளவே அதிகரிக்கிறது, பெருக்கத்தில் பெரும் பங்கு Cக்கும் Dக்கும் போய்ச் சேருகிறது என்ற நிலையில், சாகுபடிப் பரப்பு மும்மடங்கு ஆகும்போது உற்பத்தி 10 குவார்ட்டரிலிருந்து 36 குவார்ட்டராக, அதாவது மும்மடங்குக்கு மேல் அதிகரிப்பது தெரிகிறது. தானிய வடிவிலான வாடகை 6 குவார்ட்டரிலிருந்து 24 குவார்ட்டராக, அதாவது நான்கு மடங்கு அதிகரிக்கிறது; பண - வாடகையும் அதே போல் £18 இலிருந்து £72ஆக அதிகரிக்கிறது.

இந்த நேர்வுகள் யாவற்றிலும் விவசாய விளைபொருளின் விலை மாறாதிருப்பது இயல்பே. எல்லா நேர்வுகளிலுமே சாகுபடி விரிவாகும்போது-வாடகையே பெற்றுத் தராத படுமோசமான மண்வகையில் மட்டுமே பிரத்தியேகமாய் இந்த விரிவாக்கம் நிகழவில்லை என்றால்-மொத்த வாடகை அளவு அதிகரிக்கிறது. ஆனால் இந்த அதிகரிப்பு மாறுகிறது. சாகுபடியின் விரிவாக்கம் சிறந்த மண்வகைகளில் நடைபெற்று, எனவே சாகுபடிப் பரப்பின் விரிவாக்கத்துகேற்ப மட்டுமல்லாமல், இன்னும் துரிதமாகவே மொத்த உற்பத்தி பெருகுமானால், தானிய வடிவிலும் பணவடிவிலுமான வாடகையும் அதே அளவுக்குப் பெருகுகிறது. விரிவாக்கத்தில் பெரும்

பங்கு படுமோசமான மண்வகையிலும் அதையொட்டிய மண் வகைகளிலும் நிகழுமானால் (படுமோசமான மண்வகை ஒருமாறா வகையாக இருந்து வருவதே கொள்ளப்படுகிறது), மொத்த வாடகை அளவு சாகுபடி விரிவாக்கத்துக்கு ஏற்ற விகிதத்தில் பெருகுவதில்லை. ஆக. வாடகையேதும் பெற்றுத்தராத A வகை மண் ஒரே தரத்தினதாய் இருக்கும்படியான இரு நாடுகளை எடுத்துக் கொண்டால், வாடகை அளவானது மொத்த சாகுபடிப் பரப்பில் படுமோசமான மண்வகையும் கீழ்த்தரமான மண்வகைகளும் குறித்திடும் ஈவுப் பங்குக்கு எதிர் விகிதத்தில் இருக்கிறது; எனவே, சம நிலப்பரப்புகளில் சம மூலதன அளவுகள் முதலீடாவத்தாகக் கொண்டால், உற்பத்தி அளவுக்கும் எதிர் விகிதத்தில் இருக்கிறது. குறிப்பிட்ட நாட்டின் மொத்த நிலப் பரப்பில் படுமோசமான சாகுபடி நிலத்தின் அளவுக்கும் சிறந்த சாகுபடி நிலத்தின் அளவுக்கும் இடையிலான விகித உறவு மொத்த வாடகை அளவின் மீது செலுத்திடும் தாக்கம் படுமோசமான சாகுபடி நிலத்தின் தரத்துக்கும் சிறந்த, மிகச் சிறந்த சாகுபடி நிலத்தின் தரத்துக்கும் இடையிலான விகித உறவு ஏக்கர் ஒன்றுக்கான வாடகை மீதும், மற்றவை மாறாதிருக்க, மொத்த வாடகை அளவின் மீதும் செலுத்திடும் தாக்கத்திற்கு எதிரிடையானது. இந்த இவ்விரு கூறுகளுக்கும் இடையிலான குழப்பம் வேறுபாட்டு வாடகைக்கு எதிராகச் சொல்லப்படும் சகலவித பிழையான ஆட்சேபனைகளுக்கும் வழி செய்துள்ளது.

ஆகவே வெறும் சாகுபடி விரிவாக்கத்தின் மூலமும், இதனால் நிலத்தில் மூலதனமும் உழைப்பும் கூடுதலாய் ஈடுபடுத்தப்படுவதன் மூலமும் மொத்த வாடகை அளவு அதிகரிக்கிறது.

ஆனால் மிகவும் முக்கியமான விவரம் இதுதான்: பல்வேறு மண் வகைகளிலும் ஏக்கருக்கு இவ்வளவு என்று கணக்கிடப்படும் வாடகைகளுக்கிடையிலான விகிதம் மாறாமலிருப்பதாகவும், எனவே ஒவ்வொரு ஏக்கரிலும் முதலீடாகிற மூலதனத்தைப் பொறுத்துக் கணக்கிடப்படும் வாடகை வீதமும் கூட மாறாமலிருப்பதாகவும் நாம் அனுமானம் செய்திருப்பினும், பின்வருவது நோக்கற்பாலது: I உடன்-சாகுபடி செய்யப்படும் ஏக்கர் அளவும் அதில் முதலீடாகிற மூலதனமும் சரிவிகிதத்தில் அதிகரிக்கும் நேர்வுடன்-Iஅ நேர்வை ஒப்பிடுங்கால் சாகுபடிப் பரப்பு விரிவடைந்ததற் கேற்ற விகிதத்தில் மொத்த உற்பத்தி பெருகி இருப்பதும் போலவே, அதாவது இரண்டுமே இரு மடங்காகி இருப்பது போலவே வாடகை அளவும் பெருகியுள்ளது. 4 ஏக்கர் 8 ஏக்கராக உயர்ந்திருப்பது போலவே £18 வாடகையும் £36 ஆக உயர்ந்துள்ளது.

4 ஏக்கர் மொத்தப் பரப்பை எடுத்துக் கொள்வோமானால், மொத்த வாடகை அளவு £18 ஆகிறது, வாடகையே பெற்றுத் தராத நிலத்தையும் கணக்கில் கொண்டு சராசரி வாடகை £4 ½ஆகிறது. இந்த 4 ஏக்கருமே ஒரு நிலவுடைமையாளருக்குச் சொந்தம் எனக் கொண்டு இப்படிக் கணக்கிடலாம். நாடு முழுமைக்குமான சராசரி வாடகை இப்படித்தான் புள்ளி விவர முறையில் கணக்கிடப்படுகிறது. £18 மொத்த வாடகை அளவானது £10 மூலதனத்தை முதலீடு செய்து பெறப்படுகிறது. இவ்விரு எண் விவரங்களுக்கும் இடையிலான விகிதத்தைத்தான் வாடகை வீதம் என்கிறோம்; இங்கு அது 180% ஆகும்.

4 ஏக்கருக்குப் பதில் 8 ஏக்கர் சாகுபடி செய்யப்படும் I நேர்விலும் இதே வாடகை வீதம் பெறப்படுகிறது; ஆனால் எல்லா மண் வகைகளும் இந்தப் பெருக்கத்தை ஒரே விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றன. £36 மொத்த வாடகையானது 8 ஏக்கரில் 20 மூலதன முதலீட்டிற்கு ஏக்கர் ஒன்றுக்கு £4 ½ சராசரி வாடகையும் 180% வாடகை வீதமும் கிடைக்கச் செய்கிறது.

ஆனால் பெருக்கமானது பிரதானமாய் இரு கீழ்த்தர மண் வகைகளில் நடைபெற்றுள்ள Iஆ நேர்வை பரிசீலிக்கையில், 12 ஏக்கருக்கு £42 வாடகை கிடைக்கிறது, அதாவது சராசரி வாடகை ஏக்கர் ஒன்றுக்கு £3 ½ஆகிறது. மொத்த மூலதன முதலீடு £30; எனவே வாடகை வீதம் 140% ஏக்கர் ஒன்றுக்கான சராசரி வாடகை £1 குறைந்துள்ளது, வாடகை வீதம் 180%இலிருந்து 140%ஆகக் குறைந்துள்ளது. மொத்த வாடகை அளவு £18இலிருந்து £42ஆக உயர்ந்துள்ளது. ஆனால் ஏக்கருக்கு இவ்வளவு என்று கணக்கிட்டாலும் சரி, மூலதனத்தின் அடிப்படையில் கணக்கிட்டாலும் சரி, சராசரி வாடகை குறைந்துள்ளது; சராசரி வாடகை இப்படிக் குறையும் போதே உற்பத்தி அதிகரிக்கிறது என்றாலும் அதே விகிதத்தில் அதிகரிப் பதில்லை. ஏக்கர் ஒன்றுக்கு இவ்வளவு என்று கணக்கிட்டாலும் சரி, மூலதன முதலீட்டின் அடிப்படையில் கணக்கிட்டாலும் சரி அனைத்து மண் வகைகளிலுமான வாடகை மாறாமல் இருந்தாலும் இவ்வாறே நிகழ்கிறது. முக்கால் பங்கு பெருக்கம் வாடகையே பெற்றுத்தராத A மண்ணுக்கும் குறைந்த பட்ச வாடகை மட்டும் பெற்றுத் தரும் B மண்ணுக்கும் போய் விடுவதால் இவ்விதம் நிகழ்கிறது.

Iஆ நேர்வில் மொத்தப் பெருக்கமும் முழுக்க முழுக்க மண்ணிலேயே நடைபெற்றிருந்தால், A வகையில் 9 ஏக்கரும் B வகையில் 1 ஏக்கரும், C வகையில் 1 ஏக்கரும், D வகையில் 1 ஏக்கரும்

இருக்கும். மொத்த வாடகை அளவு இப்போதும் £18 ஆகவே இருக்கும்; ஆக, இந்த 12 ஏக்கருக்கான சராசரி வாடகை ஏக்கர் ஒன்றுக்கு £1 ½ஆக இருக்கும்; £30 மூலதன முதலீட்டுக்கு £18 வாடகை என்றால் வாடகை வீதம் 60% ஆகிறது. ஏக்கர் ஒன்றுக்கு இவ்வளவு என்று கணக்கிட்டாலும் சரி, முதலீடாகிற மூலதனத்தின் அடிப்படையில் கணக்கிட்டாலும் சரி, சராசரி வாடகை பெரிதும் குறைந்து போய் இருக்கும் அதேபோது மொத்த வாடகை அளவு அதிகரித்திருக்காது.

முடிவில் I, Iஆ நேர்வுகளுடன் Iஇ நேர்வை ஒப்பு நோக்குவோம். Iஉடன் ஒப்பு நோக்குங்கால் நிலப் பரப்பு மும்மடங்காகியிருக்கிறது. மூலதன முதலீடும் மும்மடங்காகியிருக்கிறது. மொத்த வாடகை அளவு 12 ஏக்கருக்கு £72, அதாவது ஏக்கர் ஒன்றுக்கு £6-I நேர்வில் £4 ½ தான். மூலதன முதலீட்டுக்கான வாடகை வீதம் (£72 : £30) 180%க்குப் பதில் 240% ஆகும். மொத்த உற்பத்தி 10 குவார்ட்டரிலிருந்து 36 குவார்ட்டராக அதிகரித்துள்ளது.

சாகுபடிப் பரப்பின் மொத்த ஏக்கர் அளவு, முதலீடாகிற மூலதனம், சாகுபடி செய்யப்படும் மண் வகைகளுக்கிடையிலான வேறுபாடுகள் ஆகியவை எல்லாம் மாறாமல் இருக்க விநியோகப்பரவல் மட்டும் மாறுபடுவதாகிய Iஆ நேர்வுடன் ஒப்பிடுங்கால், உற்பத்தி 26 குவார்ட்டருக்குப் பதில் 36 குவார்ட்டராகும், ஏக்கர் ஒன்றுக்கான சராசரி வாடகை £ 3 ½க்குப் பதில் £6 ஆகும், அதே மொத்த மூலதன முதலீட்டுக்கான வாடகை வீதம் 140%க்குப் பதில் 240% ஆகும்.

Iஅ, Iஆ, Iஇ அட்டவணைகளில் காணப்படும் வெவ்வேறு நிலைமைகளையும் வெவ்வேறு நாடுகளில் ஒரே சமயத்தில் அக்கம் பக்கமாய் நிலவுகிற நிலைமைகளாக கருதினாலும் சரி, ஒரே நாட்டில் அடுத்தடுத்து நிலவுகிற நிலைமைகளாகக் கருதினாலும் சரி, பின்வரும் முடிவுகளைப் பெறுகிறோம். வாடகையே பெற்றுத் தராத படுமோசமான மண் வகையில் விளைச்சல் மாறாதிருப்பதால் தானியத்தின் விலை மாறாதிருக்கும் வரை, சாகுபடி செய்யப்படும் பல்வேறு மண் வகைகளின் வளத்திலான வேறுபாடு மாறாதிருக்கும் வரை, ஒவ்வொரு மண் வகையிலும் சாகுபடி செய்யப்படும் பரப்பின் சம ஈவுப் பங்குகளில் (ஏக்கர்களில்) சம மூலதன முதலீடுகளிலிருந்து முறையே பெறப்படும் உற்பத்தி அளவுகள் மாறாதிருக்கும் வரை, ஆகவே ஒவ்வொரு மண் வகையிலும் ஏக்கர் ஒன்றுக்கான வாடகைகள் இடையிலான விகிதம் மாறாதிருக்கும்வரை, ஒரே மண்வகையைச் சேர்ந்த ஒவ்வொரு நிலத்துண்டிலும் முதலீடாகிற மூலதனத்துக்கான

வாடகை வீதம் மாறாதிருக்கும்வரை - **முதலாவதாக,** சாகுபடிப் பரப்பு விரிவாகி அதனால் மூலதன முதலீடு பெருகும் போதெல்லாம் வாடகையளவும் அதிகரிக்கிறது; பெருக்கமனைத்தும் வாடகை பெற்றுத் தராத நிலத்திற்கே போய்விட நேரிட்டால் மட்டும் வாடகையளவு அதிகரிப்பதில்லை. **இரண்டாவதாக,** ஏக்கர் ஒன்றுக்கான சராசரி வாடகை (மொத்த வாடகையளவை சாகுபடி செய்யப்படும் ஏக்கர்களின் மொத்த எண்ணிக்கையால் வகுத்து வருவது), சராசரி வாடகை வீதம் (மொத்த வாடகையளவை மொத்த மூலதன முதலீட்டால் வகுத்து வருவது) இரண்டுமே மிகக் கணிசமாய் மாறலாம்; இரண்டும் ஒரே திசையில் மாறினாலும் வெவ்வேறு விகிதங்களில் மாறலாம். வாடகை தராத A மண்ணில் மட்டும் பெருக்கம் ஏற்படுகிற நேர்வைக் கருதாமல் ஒதுக்கி விடுவோமானால், ஏக்கர் ஒன்றுக்கான சராசரி வாடகையும் வேளாண்மையில் முதலீடாகிற மூலதனத்திற்கான சராசரி வாடகை வீதமும் மொத்தச் சாகுபடிப் பரப்பில் பல்வேறு மண் வகைகளும் எடுத்துக் கொள்ளும் விகிதப் பங்குகளைப் பொறுத்தவை எனக் காணலாம்; அதாவது இவை வளத்தில் வேறுபடும் மண் வகைகளிடையே மொத்த மூலதன முதலீட்டின் விநியோகப் பரவலை பொறுத்தவையாகும். சாகுபடி செய்யப்படும் நிலம் அதிகமாய் இருந்தாலும் குறைவாய் இருந்தாலும், ஆகவே மொத்த வாடகையளவு அதிகமாய் இருந்தாலும் குறைவாய் இருந்தாலும் (A மண்ணில் மட்டும் பெருக்கம் ஏற்படுகிற நேர்வை விலக்கி விடுகிறோம்). மொத்த சாகுபடிப் பரப்பில் பல்வேறு மண் வகைகளும் எடுத்துக் கொள்ளும் விகிதப் பங்குகள் மாறாதிருக்கும் வரை ஏக்கர் ஒன்றுக்கான சராசரி வாடகை, அல்லது மூலதன முதலீட்டுக்கான சராசரி வாடகை வீதம் மாறாதிருக்கிறது. சாகுபடி விரிவாகி மூலதன முதலீடு பெருகும்போது மொத்த வாடகையளவு அதிகரித்தாலும், மிகக் கணிசமாய் அதிகரித்தாலும் கூட, வாடகை பெற்றுத் தராத நிலம், மிகக் குறைந்து வாடகையே பெற்றுத் தரும் நிலம் ஆகியவற்றின் விரிவாக்கம் கூடுதலாய் வாடகை பெற்றுத் தரும் உயர்தர நிலத்தின் விரிவாக்கத்தைக் காட்டிலும் அதிகமாய் இருந்தால் ஏக்கர் ஒன்றுக்கான சராசரி வாடகையும் மூலதனத்திற்கான சராசரி வாடகை வீதமும் குறைந்து போகின்றன. மறுதலையாக, உயர்தர நிலம் மொத்தப் பரப்பில் ஒப்பளவில் கூடுதலான பங்கு எடுத்துக் கொள்ளும் அளவுக்கு, எனவே மூலதன முதலீட்டில் ஒப்பளவில் கூடுதலான பங்கு ஈடுபடுத்துகிற அளவுக்கு ஏக்கர் ஒன்றுக்கான சராசரி வாடகையும் மூலதனத்திற்கான சராசரி வாடகை வீதமும் அதிகரிக்கின்றன.

ஆகவே, ஒரே காலத்தில் வெவ்வேறு நாடுகளையோ ஒரே நாட்டில் வெவ்வேறு காலங்களையோ ஒப்பு நோக்கும் போது, பொதுவாகப் புள்ளி விவரப் பணிகளில் செய்யப்படுவது போல் மொத்தச் சாகுபடி நிலத்தில் ஏக்கர் அல்லது ஹெக்டேர் ஒன்றுக்கான சராசரி வாடகையைப் பரிசீலிப்போமானால், ஏக்கர் ஒன்றுக்கான சராசரி வாடகையளவும், எனவே மொத்த வாடகையளவும் ஓரளவுக்கு (ஒரே அளவுக்கு அல்ல, மேன்மேலும் துரிதமாய் அதிகரித்துச் செல்லும் அளவுக்கு) நாட்டில் மண்ணின் அறுதி வளத்துக்கு-ஒப்பீடு வளத்திற்கு அல்ல-ஏற்ப அமைந்திருக்கக் காணலாம்; அதாவது அவை குறிப்பிட்ட பரப்பளவிலிருந்து சராசரியாகக் கிடைக்கும் உற்பத்தியளவுக்கேற்ப அமைந்திருக்கின்றன. ஏனென்றால் மொத்த சாகுபடிப் பரப்பில் உயர்தர மண் வகைகளின் பங்கு எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாய் உள்ளதோ, அதே மூலதன முதலீட்டைக் கொண்டு அதே நிலப்பரப்பிலிருந்து பெறப்படும் விளைபொருள் அவ்வளவுக்கு அவ்வளவு அதிகமாய் உள்ளது; ஏக்கர் ஒன்றுக்கான சராசரி வாடகையும் அவ்வளவுக்கு அவ்வளவு உயர்ந்திருக்கிறது. அந்தப் பங்கு குறைவாய் இருந்தால் எதிர் மாறாக நடைபெறுகிறது. ஆக, வாடகையானது வேறுபாட்டு மண் வளத்தின் விகிதத்தால் நிர்ணயிக்கப்படாமல் அறுதி மண் வளத்தாலேயே நிர்ணயிக்கப்படுவது போல் தெரிகிறது, வேறுபாட்டு வாடகை தொடர்பான விதியும் செல்லாதெனத் தோன்றுகிறது. இது காரணமாய் சில புலப்பாடுகள் மறுக்கப்படுகின்றன; இல்லையேல் சராசரித் தானிய விலைகளில் இல்லாத வேறுபாடுகளையும் சாகுபடி நிலத்தின் வேறுபாட்டு மண்வளத்தையும் சொல்லி இப் புலப்பாடுகளுக்கு விளக்கம் அளிக்க முயற்சி செய்யப்படுகிறது. ஆனால் இந்தப் புலப்பாடுகளுக்குரிய ஒரே அடிப்படை என்னவென்றால் சாகுபடி நிலத்தின் மொத்தப் பரப்புடன் அல்லது அந்த நிலத்தில் முதலீடாகிற மொத்த மூலதனத்துடன் மொத்த வாடகையளவுக்குள்ள விகிதம் - வாடகை பெற்றுத் தராத நிலத்தின் மண் வளமும், எனவே உற்பத்தி-விலைகளும் மாறாதுள்ள வரை, மற்றும் பல்வேறு மண் வகைகளுக்கிடையிலான வேறுபாடுகளும் மாறாதுள்ளவரை - ஏக்கர் ஒன்றுக்கான வாடகையால் அல்லது மூலதனத்திற்கான வாடகை விகிதத்தால் மட்டும் நிர்ணயிக்கப் படுவதில்லை; சாகுபடி நிலத்தின் மொத்த ஏக்கர் அளவில் ஒவ்வொரு மண் வகையும் எடுத்துக் கொள்ளும் ஒப்பீட்டு விகிதப் பங்காலும் கூட, அதாவது பல்வேறு மண் வகைகளிடையே மொத்த மூலதன முதலீட்டில் விநியோகப் பரவலாலும் கூட அது நிர்ணயிக்கப்படுகிறது.

வேடிக்கை என்னவென்றால், இந்த உண்மை இதுவரை கண்டு கொள்ளப்படவே இல்லை. என்றாலும், விலைகள் மாறாதுள்ள வரை, சாகுபடி செய்யப்படும் நிலங்களின் மண் வள வேறுபாடு மாறாதுள்ள வரை, உள்ளபடியே வாடகை பெற்றுத்தரும் ஒவ்வொரு மண் வகையிலும், அதாவது உள்ளபடியே வாடகை பெற்றுத் தரும் மூலதனமனைத்துக்கும் ஏக்கர் ஒன்றுக்கான வாடகை அல்லது ஏக்கர் ஒன்றுக்கு முதலீடாகிற மூலதனத்திற்கான வாடகை வீதம் மாறாதுள்ளவரை, ஏக்கர் ஒன்றுக்கான சராசரி வாடகையின் ஒப்பளவும் சராசரி வாடகை வீதமும் (அல்லது நிலத்தில் முதலீடாகிற மொத்த மூலதனத்துடன் மொத்த வாடகையளவுக்குள்ள விகிதமும்) சாகுபடிப் பரப்பினது விரிவாக்கத்தின் வாயிலாகவே உயரலாம் அல்லது குறையலாம் என்பது தெளிவாகிறது (நமது பகுப்பாய்வு முன்னேறிச் செல்வதற்கு இது முக்கியமானது).

முதல் வகை வாடகை வேறுபாட்டுத் தொடர்பாக இன்னுஞ் சிலவற்றைக் குறிப்பிட்டாக வேண்டும்; இவை ஓரளவுக்கு இரண்டாம் வகை வேறுபாட்டு வாடகைக்கு பொருந்தக் கூடியவை;

*முதலாவதாக,* விலைகள் மாறாதிருக்க, சாகுபடி செய்யப்படும் நிலத்துண்டுகளில் வேறுபாட்டு மண் வளம் மாறாதிருக்க சாகுபடி விரிவாகும் போது ஏக்கர் ஒன்றுக்கான சராசரி வாடகை அல்லது மூலதனத்திற்கான சராசரி வாடகை வீதம் அதிகரிக்கலாம் என்று பார்த்தோம். நாட்டிலுள்ள நிலமனைத்தும் தனதாக்கப்பட்டு நிலத்திலான மூலதன முதலீடுகளும் வேளாண்மையும் மக்கள் தொகையும் குறிப்பிட்ட வளர்ச்சி நிலையை அடைந்த உடனே-முதலாளித்துவ பொருளுற்பத்தி முறை ஆதிக்கம் பெற்று வேளாண்மையும் கைப்பற்றி விடும்போது நிலவுவதாகக் கொள்ளப் படும் நிலைமைகளே இவையெல்லாம்-பல்வேறு தரத்திலமைந்த சாகுபடி செய்யப்படாத நிலத்தின் விலை (வேறுபாட்டு வாடகை நிலவுவதாக மட்டும் அனுமானம் செய்து கொள்கிறோம்) ஈடாக தரமும் இடவாகும் கொண்ட சாகுபடி நிலத்தின் விலையால் நிர்ணயிக்கப் படுகிறது. இந்த நிலம் வாடகை ஏதும் பெற்றுத் தருவதில்லை என்றாலும் - புதிய நிலத்தை சாகுபடிக்கு கொண்டு வருவதற்கான செலவை கழித்தபின் - அதே விலைதான். நிலத்தின் விலையானது மூலதன மாக்கப்பட்ட வாடகையே தவிர வேறல்லதான். ஆனால் சாகுபடி செய்யப்படும் நிலத்தைப் பொறுத்த வகையிலும் கூட, வருங்கால வாடகைகளுக்காகவே அதற்கு விலை தரப்படுகிறது; எடுத்துக்காட்டாக

நடப்பு வட்டி வீதம் 5% ஆக இருக்க, இருபது ஆண்டுகளுக்கான வாடகை ஒரே சமயத்தில் முன் கூட்டியே செலுத்தப் படுகிறது. நிலம் விற்கப்படும்போது, வாடகைப் பெற்றுத்தரும் நிலமாக விற்கப் படுகிறது, வாடகை வருங்காலத்துக்குரியதாய் இருப்பது (வாடகை யானது இங்கே மண்ணின் விளை பொருளாகக் கருதப்பட்டாலும், புறத்தோற்றத்தில் மட்டுமே அவ்வாறு உள்ளது) சாகுபடி செய்யப்படாத நிலத்தை சாகுபடி செய்யப்படும் நிலத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டுவதில்லை. சாகுபடி செய்யப்படாத நிலத்தின் வாடகையைப் போலவே அதன் விலையும்-நிலத்தின் விலை வாடகையின் சுருங்கிய வடிவத்தைக் குறிப்பதாகும்-நிலம் உள்ளபடியே பயன்படுத்தப்படாமல் இருக்கும்வரை முழுக்க முழுக்க பொய்த் தோற்றமே ஆகும். ஆனால் அது இவ்வழியில் முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்டு, வாங்குவதற்கு ஒருவர் கிடைத்ததும் ஈடேற்றம் பெறுகிறது. ஆகவே குறிப்பிட்ட நாட்டில் உள்ளபடியே கிடைக்கும் சராசரி வாடகை அதன் உள்ளபடியான சராசரி வருடாந்தர வாடகையளவாலும் மொத்த சாகுபடிப் பரப்போடு இந்த வாடகையளவுக்குள்ள விகித உறவாலும் நிர்ணயிக்கப்படுகிறது என்றால், சாகுபடி செய்யப்படாத நிலத்தின் விலையானது சாகுபடி செய்யப்படும் நிலத்தின் விலையால் நிர்ணயிக்கப்படுகிறது, எனவே சாகுபடி செய்யப்படும் நிலத்தில் முதலீடாகிற மூலதனம். அதிலிருந்து பெறப்படும் விளைவுகள் இவற்றின் பிரதிபலிப்பாகவே உள்ளன. படுமோசமான நிலத்தை மட்டும் விதிவிலக்காய்க் கொண்டால், மண் வகைகளெல்லாம் வாடகை பெற்றுத் தருகிறவையாய் இருப்பதால் (மூலதன அளவும் அதற்கிணையாக சாகுபடி மும்முரமும் பெருகப்பெருக இந்த வாடகையும் பெருகுவதை இரண்டாம் வேறுபாட்டு வாடகை என்ற தலைப்பில் பார்க்கத்தான் போகிறோம்), சாகுபடி செய்யப்படாத நிலத் துண்டுகளின் பெயர்-விலை இப்படித்தான் உருவாகிறது, அவை இப்படித்தான் சரக்குகளாகின்றன, அவற்றின் உடைமையாளர்களுக்கு செல்வத்தின் ஆதாரம் ஆகின்றன. அதேபோது, ஒரு முழு வட்டாரத்திலும், சாகுபடி செய்யப்படாத பகுதியிலும் கூட நிலத்தின் விலை அதிகமாவதற்கு இதுவே விளக்கமாகிறது (ஒப்டைக்). எடுத்துக்காட்டாக அமெரிக்க ஐக்கிய நாட்டில் நில ஊக வாணிபம் என்பது சாகுபடி செய்யப்படாத நிலத்தில் மூலதனமும் உழைப்பும் ஏற்படுத்தும் இந்தப் பிரதிபலிப்பைத்தான் அடிப்படையாகக் கொண்டுள்ளது.

**இரண்டாவதாக,** சாகுபடி செய்யப்படும் நிலப்பரப்பை விரிவாக்கு வதிலான முன்னேற்றம் என்பதனைத்தும் தரம் குறைந்த மண் வகையை நோக்கியோ, அல்லது குறிப்பிட்ட பல்வேறு மண் வகைகளிலும் வெவ்வேறு விகிதங்களிலோ நடைபெறுகிறது; இந்த விகிதங்கள் பல்வேறு மண் வகைகளில் இருக்க நேரிடும் விதத்தைப் பொறுத்தவை. யாரும் விரும்பியே கீழ்த்தரமான மண் வகையை நாடிச் சென்று அதனால் விரிவாக்கம் செய்வதில்லைதான்; முதலாளித்துவ பொருளுற்பத்திமுறை நிலவுவதாகக் கொண்டால் இப்படிப்பட்ட விரிவாக்கம் உயரும் விலைகளால் மட்டுமே ஏற்படக் கூடும்; வேறெந்த பொருளுற்பத்தி முறையிலும் அவசியத்தின்பாற்பட்டு மட்டுமே இப்படி நிகழக்கூடும். ஆனால் இது அறுதி நேர்வன்று. ஒப்பளவில் சிறந்த மண் வகையைக் காட்டிலும் கீழ்த்தர மண் வகையானது இடவாகுக் காரணமாய் விரும்பப்படலாம்; இளம் நாடுகளில் ஒவ்வொரு சாகுபடி விரிவாக்கத்துக்கும் இடவாகு தீர்மானகர முக்கியத்துவம் வாய்ந்ததாகும்; மேலும், குறிப்பிட்ட வட்டாரத்தில் மண் அமைப்பு வளம் பொருந்தியது என்று பொதுவாக வகைப்படுத்தப்பட்டாலும் சிறந்த மண் வகையும் மோசமான மண் வகையும் சில இடங்களில் நெருக்கமாகப் பின்னிக் கலந்திருக்கலாம்; சிறந்த மண் வகையை ஒட்டினாற்போல் இருக்க நேரிடுவதாலேயே கீழ்த்தர மண் வகையிலும் சாகுபடி செய்ய வேண்டியது ஏற்படக் கூடும். கீழ்த்தர மண்வகை உயர்தர மண் வகையால் சூழப்பட்டிருந்தால், இன்னும் சாகுபடிப் பரப்பில் சேராதுள்ள, அல்லது சேரப் போகிற நிலையிலுள்ள அதிக வளமுள்ள மண் வகையோடு ஒப்பிடுமிடத்து இடவாகு தொடர்பாய் அனுகூலம் பெறுகிறது.

எடுத்துக்காட்டாக, முதன்முதலாய் தானிய ஏற்றுமதி செய்த மேற்கத்திய மாநிலங்களில் மிச்சிகன் மாநிலமும் ஒன்று. மொத்தத்தில் அதன் மண் வளங்குன்றியதுதான். ஆனால் அது நியூயார்க் மாநிலத்தை ஒட்டியிருந்ததாலும் கிரேட்லேக்ஸ், ஈரிக் கால்வாய் ஆகியவற்றின் வழியாக அது நீர் வழித்தடங்களைப் பெற்றிருந்ததாலும் மேற்கே இன்னும் தள்ளியிருந்த மாநிலங்கள் மீது - இவை இயற்கையில் அதிக வளம் பொருந்தியவையாய் இருந்த போதிலும் - தொடக்கத்தில் அதற்கு அனுகூலமாய் இருந்தது. நியூயார்க் மாநிலத்துடன் ஒப்பிடுகையில் இந்த மாநிலத்தின் எடுத்துக்காட்டானது உயர்தர மண்வகையிலிருந்து கீழ்த்தர மண் வகைக்கு மாறிச் செல்வதையும் தெளிவாய்க் காட்டுகிறது. நியூயார்க் மாநிலம், முக்கியமாய் அதன் மேற்குப் பகுதி, குறிப்பாக கோதுமைச் சாகுபடிக்கு, ஒப்பிட்டுச் சொல்ல முடியாதபடி அதிக மண்

வளம் பொருந்தியதாகும். வளம் பொருந்திய இம்மண் கொள்ளைத் தன்மை வாய்ந்த சாகுபடி முறைகளால் கீழ்த்தர மண்ணாக மாற்றப் பட்டது; மிச்சிகன் மண்ணே இப்போது அதிக வளமுள்ளதாகத் தோன்றியது.

''1838-இல் மேற்குப் பகுதிக்காக கோதுமை மாவு பஃபலோவில் கப்பலேறியது; நியூயார்க்கில் கோதுமை வட்டாரமும் மேல் கனடாவின் கோதுமை வட்டாரமும் தான் கோதுமை மாவு வழங்கிடும் முக்கிய ஆதாரங்களாய் இருந்தன. அதன் பிறகு பன்னிரெண்டு ஆண்டுகள் மட்டும் கழிந்திருக்கும் நிலையில், இப்போது ஏராளமான அளவில் கோதுமையும் மாவும் மேற்கிலிருந்து ஈரி ஏரி (Lake Erie) வழியாகக் கொண்டு வரப்பட்டு கிழக்குப் பகுதிக்காக பஃபலோவிலும் அடுத்துள்ள பிளாக்ராக் துறைமுகத்திலும் கப்பலேற்றி ஈரி கால்வாய் வழியாக அனுப்பப்படுகிறது... மேற்கு மாநிலங்களிலிருந்து இப்படி பெரும் அளவில் வந்த வரத்துகளின்-ஐரோப்பியப் பஞ்சத்தின் ஆண்டுகளில் இயற்கைக்கு மாறான முறையில் தூண்டப் பெற்ற இவ்வரத்துகளின் விளைவு இதுதான்... மேற்கு நியூயார்க்கில் கோதுமையின் மதிப்பு குறைந்து விட்டது; கோதுமைச் சாகுபடி முன்னளவுக்கு பிரதிபலன் தராத ஒன்றாகி விட்டது, நியூயார்க் சாகுபடியாளர்களின் கவனம் இன்னும் கூடுதலான அளவில் கால்நடை வளர்ப்பு, பால் பண்ணைத் தொழில், பழச்சாகுபடி போன்ற கிராமப் பொருளாதாரத்தின் வேறு கிளைகள் பக்கம் திரும்பி விட்டது; இவற்றில் தங்களோடு அவ்வளவு நேரடியாகப் போட்டியிட வடமேற்குப் பகுதியால் முடியாமற் போகும் என்று அவர்கள் எண்ணுகிறார்கள்.'' (ஜே.டபிள்யூ. ஜான்ஸ்டன், வட அமெரிக்கா பற்றிய குறிப்புகள், லண்டன், 1851, I, பக்கம் 220 - 23.)

மூன்றாவதாக, குறைந்த விலையில் தானியம் ஏற்றுமதி செய்யக் கூடிய குடியேற்ற நாடுகளிலும் ஏனைய இளம் நாடுகளிலும் நிலம் கூடுதலான இயற்கை வளம் பொருந்தியதாகத்தான் இருக்கவேண்டும் என்பது தவறான அனுமானம். இங்கு தானியத்தின் விற்பனை-விலை அதன் மதிப்பை விடக் குறைவாய் இருப்பதோடு அதன் உற்பத்தி-விலையை விடவும் குறைவாய் இருக்கிறது, அதாவது பழைய நாடுகளில் சராசரி இலாப வீதத்தால் நிர்ணயிக்கப்படும் உற்பத்தி-விலையை விடவும் குறைவாய் இருக்கிறது.

ஜான்ஸ்டன் கூறுவது போல (பக்கம் 223) ''ஆண்டுதோறும் பஃபலோ துறைமுகத்தில் வந்து குவியும் ஏராளமான கோதுமையை

விளைவித்துக் கொடுக்கும் அந்த புதிய மாநிலங்கள் இயற்கையிலேயே மாபெரும் உற்பத்தித்திறன் படைத்தவை என்றும், வளம் கொழிக்கும் வயற்பரப்புகளை வரம்பின்றிக் கொண்டவை என்றும், கருதப் பழகி உள்ளோம்.' என்றால், பொருளாதார நிலைமைகளே இதற்குப் பிரதானக் காரணம். எடுத்துக்காட்டாக மிச்சிகனைப் போன்ற ஒரு மாநிலத்தின் மக்கள் அனைவரும் அநேகமாய் பிரத்தியேகமாகவே பயிர்த்தொழிலிலும் முக்கியமாய் பெருந்திரளான விவசாய, விளை பொருட்களை உற்பத்தி செய்வதிலும் ஈடுபட்டு இருக்கிறார்கள் - இந்தப் பெருந்திரள் விளைபொருட்களை மட்டுமே தொழில்துறைப் பண்டங்களுக்கும் வெப்ப மண்டல உற்பத்திப் பொருட்களுக்கும் பரிவர்த்தனை செய்யமுடியும். ஆகவே அதன் உபரி-உற்பத்தி யனைத்தும் தானிய உருவில் அமைகிறது. இது நவீன உலகச் சந்தையை அடித்தளமாய்க் கொண்ட குடியேற்ற நாடுகளை முற்காலத்திய, அதிலும் குறிப்பாக தொன்மைக் காலத்திய குடியேற்ற நாடுகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டும் அடிப்படைக் கூறாகும். இந்த நாடுகள் பூர்த்தியான உற்பத்திப் பண்டங்களை - நிலைமைகள் இப்படி இல்லையென்றால் தாமே உற்பத்தி செய்து கொள்ள வேண்டிய உடை, கருவிகள் போன்றவற்றை - உலகச் சந்தையின் வாயிலாகப் பெறுகின்றன. இந்த அடிப்படையில்தான் ஒன்றியத்தின் தென் மாநிலங்களால் பருத்தியை முக்கியப் பயிராக்கிக் கொள்ள முடிந்தது. உலகச் சந்தையிலான உழைப்புப் பிரிவினைதான் இதனை சாத்தியமாக்குகிறது. ஆகவே, இவை இளம் நாடுகளாகவும் ஒப்பளவில் குறைந்த மக்கள் தொகை உடையவையாகவும் இருப்பதைக் கருதுகையில் மிகப் பெரும் அளவில் உபரி-உற்பத்தி செய்வதாகத் தோன்றுகிறது என்றால், இதற்கு அவற்றின் மண் வளமோ, அவற்றினது உழைப்பின் உற்பத்தித்திறனோ காரணமாவதைக் காட்டிலும், இந்த உழைப்பின் ஒரு தரப்பான வடிவமும், அது உருக்கொள்ளும் உபரி-உற்பத்தியின் ஒரு தரப்பான வடிவமுமே காரணமாகும்.

மேலும், ஒப்பளவில் வளங்குறைந்த நிலம் புதிதாய் சாகுபடி செய்யப்படுகிறது. முன்னெப்போதும் அதில் விவசாயமே நடைபெற்றதில்லை என்றால் அது எளிதில் தன்மயமாகிற ஏராளமான தாவரச் சத்து அந்நிலத்தில் திரண்டிருக்கும், எப்படியும் மண்ணின் மேலடுக்குகளிலாவது இப்படியிருக்கும், தட்பவெப்ப நிலைமைகள் முற்ற முழுக்க பாதகமாய் இல்லையென்றால் நீண்டகாலத்துக்கு இந்நிலம் உரமிடப்படாமலே - ஆழ உழப்படவில்லை என்றாலும் கூட - விளைச்சல் தரும். மேற்கத்திய பசும்வெளிகளைப் பொறுத்தவரை

*இயற்கையே அவற்றை பயிரிடத்தக்கவை ஆக்கியிருப்பதால் திருத்தி செப்பஞ்செய்வதற்கான செலவுகளேதும் தேவையில்லை என்பது அவற்றுக்குள்ள அனுகூலமாகும்*[34]. *இத்தகைய வளங்குன்றிய நிலப்பரப்புகளில் உபரியானது உயர்ந்த மண்வளத்திலிருந்து, அதாவது ஏக்கர் ஒன்றுக்கான மகசூல் அளவிலிருந்து கிடைப்பதில்லை; ஆழ உழவேண்டிய அவசியமில்லாத பெரும் ஏக்கர் அளவிலிருந்துதான் அது கிடைக்கிறது; ஏனென்றால் பழைய நாடுகளுடன் ஒப்பிடுமிடத்து இத்தகைய நிலத்துக்காக சாகுபடியாளருக்கு செலவேதும் ஆவதில்லை, அல்லது அற்ப சொற்ப செலவே ஆகிறது. எடுத்துக்காட்டாக பங்குப் பயிர்ச் செலவு* (Share Cropping) *நடைமுறையிலிருக்கும் இடங்களில், நியூயார்க், மிச்சிகன், கனடா முதலானவற்றின் சில பகுதிகளில் இதுவே நிலைமை. ஒரு குடும்பம் நூறு ஏக்கர் நிலத்தை மேலோட்டமாய் உழுது சாகுபடி செய்வதாகக் கொண்டால், ஏக்கர் ஒன்றுக்கான உற்பத்தியளவு அதிகமாய் இல்லாவிட்டாலும் நூறு ஏக்கரிலிருந்து கிடைக்கும் உற்பத்தியளவு விற்பனைக்கு ஒரு கணிச உபரியைத் தருகிறது. மேலும், அநேகமாய்ச் செலவே இல்லாமல், கால்நடைகளை இயற்கை மேய்ச்சல் வெளிகளில் மேய்த்திடலாம்; செயற்கைப் புல்வெளிகள் தேவையில்லை. இங்கு நிலத்தின் அளவு முக்கியமே தவிர, அதன் தரம் அல்ல. இப்படி மேலோட்டமாய் உழுது சாகுபடி செய்யும் சாத்தியப்பாடு புதிய மண்ணின் வளத்துக்கு எதிர்விகிதத்திலும், அதன் விளைபொருட்களின் ஏற்றுமதிக்கு நேர்விகிதத்திலும் துரிதமாய் ஒழிந்து போவது இயல்பே. 'இருப்பினும் இத்தகைய நாடு கோதுமையிலும் கூட முதல் போகத்தில் அபார விளைச்சல் தரும்; நாட்டின் செல்வத்தை முதலில் அனுபவிப்பவர்கள் சந்தைக்கு அனுப்புவதற்கென இந்த தானியத்தைப் பெரும் உபரி அளவில் கிடைக்கச் செய்யும்' (முன்வந்தது, பக்கம் 224). பயிர்த்தொழில் பழமைவாய்ந்த நாடுகளில் இப்படி விரிவான அளவில் சாகுபடி செய்வது உடைமை உறவுகள்காரணமாய் முடியாத காரியமாகி*

---

(34) எங்கெல்ஸ் குறிப்பு:-

இத்தகைய புல்வெளிப் பிரதேசங்கள் அல்லது பாலை வெளிப் பிரதேசங்களில் துரிதமாய் பெருகி வரும் சாகுபடிதான் 'மக்கள்தொகை வாழ்வுச் சாதனங்களுக்குச் சுமையாகும்' என்ற மால்தசின் பிரபலக் கூற்றை சமீப காலமாய் கேலிக்குரியதாக்குகிறது; மாறாக, மக்களுக்குச் சுமையாய் இருக்கும் வாழ்வுச் சாதனங்களை அம்மக்களிடமிருந்து வலுவந்தமாய் விலக்கி வைத்திரா விட்டால், விவசாயமும், அத்தோடு ஜெர்மனியும் நாசமாகி விடும் என்ற விவசாயப் புலம்பலுக்கே இது வழி வகுத்துள்ளது. எப்படியான போதிலும் இந்தப் பாலை புல்வெளிகளும் புல்வெளிகளும் பொட்டல் வெளிகளும், சமவெளிகளும் இன்னபிறவும் சாகுபடி செய்யப்படுவது தொடக்க நிலையில்தான் உள்ளது. ஆகவே ஐரோப்பிய வேளாண்மையின் மீதான இதன் புரட்சிகரத் தாக்கம் இதுவரை பதிந்திருப்பதைக் காட்டிலும் வருங்காலத்தில்தான் அழுத்தமாய் பதியும்.

விடுகிறது; இந்த நாடுகளில் சாகுபடி செய்யப்படாத நிலத்தின் விலை சாகுபடி செய்யப்படும் நிலத்தின் விலையால் நிர்ணயிக்கப்படுவது முதலான நிலைமைகள் காணப்படுகின்றன.

ரிக்கார்டோ கற்பனை செய்து கொள்வது போல் இந்த நிலம் மிக அதிக மண்வளம் பொருந்தியதாய் இருந்தாக வேண்டிய அவசியமில்லை, சம மண்வளம் பொருந்திய நிலங்கள் மட்டுமே சாகுபடி செய்யப்பட்டாக வேண்டிய அவசியமும் இல்லை. பின்வரும் எடுத்துக்காட்டிலிருந்து இதனை அறியலாம்; மிச்சிகன் மாநிலத்தில் 1848இல் 465, 900 ஏக்கரில் கோதுமை விதைக்கப்பட்டது; இதிலிருந்து 4,739, 300 புஷல், அதாவது சராசரி ஏக்கர் ஒன்றுக்கு $10^1/_5$ புஷல் கோதுமை விளைந்தது; விதைக் கோதுமையை கழித்த பின் எஞ்சுவது ஏக்கர் ஒன்றுக்கு 9 புஷலுக்கு குறைவு, அம்மாநிலத்தில் உள்ள 29 மாவட்டங்களில், இரண்டில் சராசரி 7 புஷல் விளைந்தது; மூன்றில் 8 இரண்டில் 9, ஏழில் 10, ஆறில் 11, மூன்றில் 12, நாலில் 13 புஷல் சராசரியாக விளைந்தது. ஒரு மாவட்டத்தில் சராசரியாக 16 புஷலும், வேறொன்றில் 18 புஷலும் விளைந்தது (முன்வந்தது, பக்கம் 225).

நடைமுறைச் சாகுபடியைப் பொறுத்த வரை உயர்ந்த மண்வளம் என்பதும் மண்வளத்தை உடனே பயன்படுத்திக் கொள்ளும் கூடுதலான சாத்தியப்பாடு என்பதும் ஒன்றுதான். இயற்கை வளம் பொருந்திய மண்வகையைக் காட்டிலும் இயற்கை வளங்குன்றிய மண்வகையில் இப்படி உடனே பயன்படுத்திக் கொள்ளும் சாத்தியப்பாடு கூடுதலாய் இருக்கலாம்; ஆனால் இப்படிப்பட்ட மண்வகையைத் தான் குடியேற்றக்காரர் முதலில் எடுத்துக் கைக்கொள்வார்; மூலதனம் பற்றாக்குறையாக இருக்கும் போது அவர் அதைத்தான் கைக்கொண்டாக வேண்டும்.

முடிவில், சாகுபடியை இன்னும் பெரிய பரப்புகளுக்கு விரிவாக்க வேண்டுமானால், - சற்று முன் குறிப்பிட்ட நேர்வை, இதுவரை சாகுபடி செய்யப்பட்டதை விடவும் கீழ்த்தரமான மண்வகையை நாடவேண்டியிருக்கும் நேர்வை ஒதுக்கி விடுகிறோம் - எடுத்துக் காட்டாக A முதல் D வரையிலான பல்வேறு மண்வகைகளிலும் இப்படி விரிவாக்க வேண்டுமானால், ஆகவே B, C இவற்றில் சாகுபடி செய்யப்படும் பரப்புகள் அதிகரிக்க வேண்டுமானால், தானிய விலைகள் அதற்கு முன் உயர்ந்திருக்க வேண்டும் என்ற அவசியமில்லை; எப்படி ஆண்டுதோறும் பருத்தி நூற்பு முன்கூட்டி விரிவடைவதற்குத் தானிய விலை ஓயாமல் உயர வேண்டிய

அவசியமில்லையோ அதே போலத்தான் இதுவும். சந்தை-விலையில் ஏற்படக் கூடிய கணிசமான உயர்வோ சரிவோ உற்பத்தியளவை பாதிக்கக் கூடும் என்றாலும் கூட வேளாண்மையில் (முதலாளித்துவ வழியில் இயக்கப்படும் ஏனைய எல்லா உற்பத்திக் கிளைகளிலும் எப்படியோ அதைப் போல்) ஒப்பிட்டு மிகையுற்பத்தி ஓயாமல் நடைபெறவே செய்கிறது; இந்த மிகையுற்பத்தியும் மூலதனத் திரட்டலும் ஒன்றுதான். சராசரி விலைகள் உற்பத்தியை மட்டுப்படுத்துகிற அளவிலோ அதற்கு அசாதாரண ஊக்கம் கொடுக்கிற அளவிலோ இல்லையென்றாலும் கூட இதே நிலைமைதான். ஏனைய பொருளுற்பத்தி முறைகளில் இந்த ஒப்பீட்டு மிகையுற்பத்தி மக்கள்தொகைப் பெருக்கத்தின் நேரடி விளைவாய் உள்ளது; குடியேற்ற நாடுகளில் தொடர்ச்சியான குடி புகுதலின் விளைவாய் அமைகிறது. வேண்டல் ஓயாமல் அதிகரித்துச் செல்கிறது. இதை எதிர்பார்த்து, புதிய மூலதனம் புதிய நிலத்தில் ஓயாமல் முதலீடாகிறது; வெவ்வேறு பயிர்களுக்குரிய தனிப்பட்ட நிலைமைகளைப் பொறுத்து இதில் மாறுபாடுகள் உண்டென்பது மெய்தான். புதிய மூலதனங்களின் உருவாக்கமே இந்நிலைமையை தோற்றுவித்து விடுகிறது. ஆனால் தனிபட்ட முதலாளியைப் பொறுத்தவரை, தமக்கு கிடைக்கக் கூடிய நிலையிலிருக்கும் மூலதனத்தின் பரிமாணத்தால் தமது உற்பத்தியின் பரிமாணத்தை அளவிடுகிறார்; தம்மால் அம்மூலதனத்தை கட்டுபடுத்த முடிகிற வரையிலும் இப்படிச் செய்கிறார். சந்தையில் முடிந்தவரை பெரும்பகுதியைக் கைப்பற்றுவதே அவர் நோக்கம். மிகையுற்பத்தி ஏதும் நடைபெறுமானால், அவர் அதற்கான பழியை அவருடைய போட்டியாளர்கள் மீது சுமத்துவாரே தவிர தானே ஏற்றுக் கொள்ளமாட்டார். தனியொரு முதலாளி அப்போதிருக்கும் சந்தையில் இன்னும் பெரிய ஈவுப் பங்கைத் தனதாக்கிக் கொள்வதன் மூலமோ அச்சந்தையை விரிவாக்குவதன் மூலமோ தமது உற்பத்தியை பெருக்கிக் கொள்ளலாம்.

### அத்தியாயம் XL

## இரண்டாம் வகை வேறுபாட்டு வாடகை (வேறுபாட்டு வாடகை II)

வெவ்வேறு மண்வளம் கொண்ட சம நிலப் பரப்புகள் மீது முதலீடு செய்யப்படும் சம மூலதன அளவுகளின் உற்பத்தித் திறன் மாறுவதன் விளைவு என்ற முறையில் மட்டுமே இதுவரை வேறுபாட்டு வாடகையைப் பரிசீலனை செய்தோம். இதனால் வேறுபாட்டு வாடகையானது வாடகை தராத படுமோசமான நிலத்தின் மீது முதலீடாகிற மூலதனத்திலிருந்து கிடைக்கும் விளைச்சலுக்கும் அதை விட உயர்தரமான நிலத்தின் மீது முதலீடாகிற மூலதனத்திலிருந்து கிடைக்கும் விளைச்சலுக்கும் இடையிலான வேறுபாட்டால் நிர்ணயிக்கப்பட்டது. இந்நேர்வில் அக்கம்பக்கமாய் வெவ்வேறு நிலத்துண்டுகளில் மூலதனம் முதலீடானதால் ஒவ்வொரு புதிய மூலதன முதலீடும் சாகுபடி மேலும் விரிவாவதையும் சாகுபடி நிலப்பரப்பு அதிகமாவதையும் குறித்தன. இறுதியாகப் பார்க்குமிடத்து, வேறுபாட்டு வாடகை என்பதே நிலத்தில் முதலீடாகிற சம மூலதனங்களின் உற்பத்தித் திறன் வேறுபடுவதன் விளைவுதான் எனக் கண்டோம். ஆனால் வெவ்வேறு உற்பத்தித் திறனுள்ள மூலதனங்கள் ஒரே நிலத்துண்டில் ஒன்றன் பின் ஒன்றாக முதலீடாவதன் விளைவும், வெவ்வேறு நிலத்துண்டுகளில் அக்கம்பக்கமாய் முதலீடாவதன் விளைவும் ஒன்றேயெனக் கொண்டால், இவ்விரு வகை முதலீடுகளுக்கும் இடையே வேறுபாடு இருக்க முடியுமா?

முதலாவதாக, உபரி-இலாபத்தின் உருவாக்கத்தைப் பொறுத்த வரை, பின்வரும் இரண்டில் எது நேரிட்டாலும் ஒன்றுதான் என்பதை மறுப்பதற்கில்லை: (1) A வகை நிலத்தில் ஏக்கர் ஒன்றுக்கு £ 3 உற்பத்திச் செலவானது 1 குவார்ட்டர் கிடைக்கச் செய்யலாம்; 1 குவார்ட்டரின் உற்பத்தி-விலையும் ஆளும் சந்தை-விலையும் £ 3 ஆகிறது; அதே போது B வகை நிலத்தில் ஏக்கர் ஒன்றுக்கு £3 உற்பத்திச் செலவானது 2 குவார்ட்டரும் £ 3 உபரி-இலாபமும் கிடைக்கச் செய்கிறது. இதே போல் C வகை நிலத்தில் £ 3 உற்பத்திச் செலவானது 3 குவார்ட்டரும் £ 6 உபரி-இலாபமும் கிடைக்கச் செய்யலாம், முடிவில் D வகை நிலத்தில் ஏக்கர்

ஒன்றுக்கு £3 உற்பத்திச் செலவானது 4 குவார்ட்டரும் £9 உபரி-இலாபமும் கிடைக்கச் செய்யலாம். அல்லது (2) இந்த £12 உற்பத்திச் செலவை அல்லது £ 10 மூலதனத்தை அதே வரிசையில் ஒரே ஏக்கருக்கு பிரயோகித்து அதே பலனை அடையலாம். இரு நேர்வுகளிலுமே £10 மூலதனத்தின் ஒவ்வொரு £2 ½ மதிப்புப் பகுதியும் அடுத்தடுத்து முதலீடாகிறது-வெவ்வேறு மண்வளம் கொண்ட நான்கு ஏக்கர்களில் அக்கம்பக்கமாய் முதலீடானாலும் சரி, ஒரே ஏக்கரில் ஒன்றின் பின் ஒன்றாய் முதலீடானாலும் சரி, உற்பத்தியளவுகள் மாறுபடுவதால் இந்த மூலதனப் பகுதிகளில் ஒன்று உபரி-இலாபமேதும் கிடைக்கச் செய்வதில்லை. அதே போது ஏனைய பகுதிகள் உபரி-லாபம் கிடைக்கச் செய்கின்றன; இந்த உபரி-இலாபமானது வாடகை தராத முதலீட்டுடன் ஒப்பிடுகையில், இம் மூலதனப் பகுதிகளிலிருந்து பெறப்படும் விளைச்சலிலான வேறுபாட்டுக்கேற்ற விகிதத்தில் அமைகிறது.

வெவ்வேறு மூலதன மதிப்புப் பகுதிகளுக்கான உபரி-இலாபமும் பல்வேறு உபரி-இலாப வீதங்களும் இரு நேர்வுகளிலுமே ஒரே வழியில் உருவாகின்றன. வாடகை என்பது இந்த உபரி-இலாபத்தின் ஒரு வடிவம் மட்டுமே ஆகும். உண்மையில் உபரி-இலாபம்தான் வாடகையில் சாரமாகும். ஆனால் இரண்டாவது வழிமுறையில் உபரி-இலாபம் வாடகையாக உருமாறுவது தொடர்பாக உபரி-இலாபம் முதலாளித்துவ சாகுபடியாளரிடமிருந்து நிலவுடைமையாளரின் கைக்கு மாற்றப் படுவதையும் உள்ளடக்கிய இந்த உருமாற்றம் தொடர்பாய் சில இடர்ப்பாடுகள் உள்ளன. இதனால்தான் ஆங்கிலேயச் சாகுபடியாளர்கள் அதிகாரப்பூர்வ விவசாயப் புள்ளிவிவரங்களை விடாப்பிடியாக எதிர்க்கிறார்கள். இதனால்தான் அவர்கள் தமது மூலதன முதலீட்டின் உள்ளபடியான விளைவுகள் நிர்ணயிப்பது தொடர்பாய் நிலவுடைமை யாளர்களை எதிர்த்துப் போராடுகிறார்கள் (மார்ட்டன்). இங்கு நிலம் குத்தகைக்கு விடப்படும் போது வாடகை நிர்ணயமாகிறது; இதற்குப் பிறகு அடுத்தடுத்த மூலதன முதலீடுகளிலிருந்து கிடைக்கும் உபரி-இலாபங்கள் குத்தகை ஒப்பந்தம் நீடித்திருக்கும் வரை, சாகுபடியாளருக்குப் போய்ச் சேருகின்றன. இதனால்தான் சாகுபடி யாளர்கள் நீண்டகாலக் குத்தகை கேட்டு போராடுகிறார்கள்; மறுபுறம், நிலக்கிழார்களின் கூடுதலான அதிகார வலிமை காரணமாய் விருப்பஞ் சார்ந்த குத்தகைகளின் அதாவது ஆண்டுதோறும் ரத்து செய்யப்படக் கூடிய குத்தகைகளின் தொகை அதிகரித்துள்ளது.

ஆக, ஆரம்பத்திலிருந்தே தெளிவாகத் தெரிவது இதுதான்; சமமூலதனங்கள் சம நிலப்பரப்புகளில் அக்கம் பக்கமாய் முதலீடாகி சமமல்லாத விளைவுகள் பெறப்படுகின்றனவா, அல்லது ஒரே நிலத்தில் ஒன்றன்பின் ஒன்றாக இப்படி முதலீடாகின்றனவா என்பது உபரி-இலாப உருவாக்கத்தின் விதிக்கு முக்கியமல்ல என்றாலும் கூட, உபரி-இலாபம் நில-வாடகையாக மாற்றம் அடைவதற்கு மிகவும் முக்கியமாகும். இரண்டாம் நேர்வில் இந்த மாற்றத்தின் வரம்புகள் குறுகலாய் இருப்பதோடு, நிலையற்றவையாகவும் இருக்கின்றன. இதனால் தான் தீவிரச் சாகுபடி முறையில் வேளாண்மை நடைபெறும் நாடுகளில் (பொருளாதாரக் கண்ணோட்டத்தில் பேசும் இடத்து மூலதனத்தை அடுத்தடுத்த நிலத் துண்டுகள் மீது பரவலாய்ப் பிரயோகிப்பதற்குப் பதில் ஒரே நிலத்துண்டின் மீது குவிப்பதைத் தான் தீவிரச் சாகுபடி என்கிறோம்) வாடகை மதிப்பீட்டாளரின் பணி- **பண்ணைகளின் செல்வாதாரங்கள்** என்ற நூலில் மார்ட்டன் விளக்கிச் சொல்வது போல - மிக முக்கியமான, சிக்கலான, கடினமான தொழில் ஆகிறது. மண் வள மேம்பாடுகள் கூடுதலான நிரந்தரத் தன்மை வாய்ந்தவையாக இருக்குமானால் அந்நிலத்தில் செயற்கையாக உயர்த்தப்பட்ட வேறுபாட்டு மண் வளமானது குத்தகை ஒப்பந்தம் காலாவதியான உடனே அந்நிலத்தின் புதிய இயற்கை மண் வளமாகி விடுகிறது. எனவே வாடகைகளை மதிப்பீடு செய்வது பொதுவாக வெவ்வேறு மண் வளம் கொண்ட நிலத் துண்டுகளுக்கான வாடகை நிர்ணயித்ததைக் குறிக்கிறது: மறுபுறம் உபரி-இலாபத்தின் உருவாக்கம் இயங்கிக் கொண்டிருக்கும் மூலதனத்தின் பருமனால் நிர்ணயிக்கப் படுகிற அளவில், அம் மூலதனத்தின் குறிப்பிட்ட தொகைக்கான வாடகை அளவு நாட்டின் சராசரி வாடகையோடு சேர்த்துக் கூட்டப் படுகிறது; அதே தீவிர முறையில் தொடர்ந்து சாகுபடி செய்திட, புதிய சாகுபடியாளரிடம் போதிய மூலதனம் இருப்பதற்கு இவ்விதம் வகை செய்யப்படுகிறது.

வேறுபாட்டு வாடகைIIஐப் பரிசீலிக்கையில், பின்வரும் விவரங்களும் வலியுறுத்தப்பட வேண்டியவையே:

முதலாவதாக, இதன் அடிப்படையும் தொடக்க முனையும் - வரலாற்று நோக்கில் மட்டுமல்லாமல், குறிப்பிட்ட எச்சமயத்திலுமான அதன் அசைவியக்கம் என்ற நோக்கிலும் கூட - வேறுபாட்டு வாடகை I-தான்; அதாவது மண் வளத்திலும் இடவாகிலும் ஒத்திராத நிலங்களை ஒரே நேரத்தில் அக்கம்பக்கமாய் சாகுபடி செய்வதுதான்; வேறு

விதமாகச் சொன்னால், தரத்தில் வேறுபடும் நிலத்துண்டுகள் மீது மொத்த விவசாய மூலதனத்தின் சமமல்லாத பகுதிகளை ஒரே சமயத்தில் அக்கம் பக்கமாய் பிரயோகிப்பதுதான்.

வரலாற்று நோக்கில் இது கூறாமலே விளங்கும். குடியேற்ற நாடுகளில் குடியேற்றக்காரர்கள் அதிக மூலதனம் முதலீடு செய்யத் தேவையில்லை; உழைப்பும் நிலமுமே முக்கிய உற்பத்திச் செயலிகளாய் இருக்கின்றன. தனிப்பட்ட ஒவ்வொரு குடும்பத் தலைவரும் சக குடியேற்றக்காரர்களைச் சார்ந்திராமல் தமக்கும் தம் சுற்றத்துக்குமென சுயேச்சையான வேலை வாய்ப்புக் களத்தை நாடுகிறார். பொதுவாகச் சொன்னால், முதலாளித்துவத்துக்கு முற்பட்ட பொருளுற்பத்தி முறைகளிலும் கூட, பயிர்த்தொழிலைப் பொறுத்த வரை எப்போதும் இதே நிலைமைதான். ஆடு வளர்ப்பையும், பொதுவான கால்நடை வளர்ப்பையும் சுயேச்சை உற்பத்திக் கிளையாக எடுத்துக் கொண்டால், நிலத்தை கிராமச் சமுதாயத்தின் பொதுச் சொத்தாகவும் விரிவான அளவிலும் பயன்படுத்திக் கொள்வதை தொடக்கத்திலிருந்தே காண முடிகிறது. முதலாளித்துவப் பொரு ளுற்பத்தி முறை அதற்கு முற்பட்ட பொருளுற்பத்தி முறைகளிலிருந்து வளர்ந்து வெளிப்படுகிறது அல்லவா, அந்த முந்தைய பொருளுற்பத்தி முறைகளில் உற்பத்திச் சாதனங்கள் உள்ளபடியோ அல்லது சட்டப்படியோ உழுபவருக்கே சொந்தமாகும்; சுருங்கச் சொல்லின், விவசாயம் ஒரு வகை கைத்தொழிலாக நடத்தப்படுகிறது. இதிலிருந்து தொடங்கி படிப்படியாக மாறிச் சென்று உற்பத்திச் சாதனங்கள் குவிக்கப்படுவதும் மூலதனமாக மாற்றப்படுவதும், மறுபுறம் நேரடி உற்பத்தியாளர்கள் கூலித் தொழிலாளர்களாக மாற்றப்படுவதும் நடந்தேறுகின்றன. இங்கு முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை அதற்குரிய உருமாதிரியான வடிவில் வெளிப்படுகிறது என்றால், முதலில் முக்கியமாய் ஆடு வளர்ப்பிலும் கால்நடை வளர்ப்பிலும்தான் அவ்வாறு வெளிப்படுகிறது. ஆனால், இது பெருவீதப் பொருளுற் பத்திதானே தவிர ஒப்பளவில் சிறுநிலப்பரப்பின் மீதான மூலதனக் குவிப்பு அல்ல; குதிரைகள் வைத்துக் கொள்வதற்காகும் செலவிலும் ஏனைய உற்பத்திச் செலவுகளிலும் சிக்கனம் செய்யப்படுகிறதே தவிர, அதே நிலத்தில் இன்னுமதிக மூலதன முதலீடு செய்யப்படுவதில்லை. மேலும் விவசாயம் குறிப்பிட்ட வளர்ச்சி நிலையை அடைந்து, மண்ணின் வளம் அதற்கேற்ப வற்றியிருக்கும்போது, மூலதனம் - ஏற்கெனவே உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்திச் சாதனங்களைத்தான் இங்கு மூலதனம் என்கிறோம்-நிலச்சாகுபடியில் தீர்மானகர கூறாகிறது

என்பதை வேளாண்மையின் இயற்கை விதிகளின் அடிப்படையில் அறிந்து கொள்கிறோம். உழப்படாத நிலத்துடன் ஒப்பிடுகையில் உழப்படும் நிலப்பரப்பு குறைவாய் இருக்கும் வரை, மண்ணின் இயற்கை வளம் வற்றிப் போகாமல் இருக்கும் வரை (முறையான பயிர்த் தொழிலும் தாவர உணவும் கோலோச்சுவதற்கு முற்பட்ட காலத்தில் - கால்நடை வளர்ப்பும் இறைச்சி நுகர்வும் முக்கியப் பங்கு வகிக்கும் போது, இப்படித்தான் உள்ளது). புதிதாய் வளர்ந்து வரும் பொருளுற்பத்தி முறை விவசாயிகளது பொருளுற்பத்தியோடு கொண்டுள்ள முக்கிய மாறுபாடு ஒரு முதலாளிக்காக உழப்படும் நிலத்தின் பெரும்பரப்பும், எனவே மூலதனம் முன்னிற் பெரிய நிலப்பரப்பில் விரிவாய் பயன்படுத்தப் படுவதுமே ஆகும். ஆகவே முதல்வகை வேறுபாட்டு வாடகைதான் இந்த வளர்ச்சிக்குத் தொடக்க முனையாகப் பயன்படும் வரலாற்று அடிப்படை என்பதை எப்போதும் மனத்தில் இருத்திக் கொள்ள வேண்டும். மறுபுறம், குறிப்பிட்ட எத்தருணத்திலும் இரண்டாம் வகை வேறுபாட்டு வாடகையின் அசைவியக்கமானது ஒரு வட்டத்துக்குள்ளேதான் நடைபெறுகிறது; இந்த வட்டமோ முதல்வகை வேறுபாட்டு வாடகையின் பன்முக அடிப்படையே ஆகும்.

இரண்டாவதாக, வேறுபாட்டு வாடகை IIஇல், மண்வளத்திலான வேறுபாடுகளோடு குத்தகைச் சாகுபடியாளர்களிடையிலான மூலதனப் பரவலில் (மற்றும் கடன் பெறும் திறனில்) காணப்படும் வேறுபாடுகளும் சேர்ந்து கொள்கின்றன. முறையான பட்டறைத் தொழிலில், ஒவ்வொரு தொழிற்கிளையிலும் தொழிலின் அளவு வீதத்திற்கும், எனவே மூலதன அளவிற்கும் விரைவில் ஓர் அடிவரம்பு வந்தமைகிறது; இந்த அடிவரம்புக்குக் கீழே குறிப்பிட்ட தொழிலை நடத்திச் செல்ல முடியாது. இதே போல் ஒவ்வொரு தொழிற் கிளையிலும் இந்த அடிவரம்புக்கு மேல் ஓர் இயல்பான சராசரி மூலதன அளவு வந்தமைகிறது; மிகப் பெரும்பாலான உற்பத்தியாளர்கள் இந்த அளவு மூலதனத்தை ஆளுகிறவர்களாய் இருந்தாக வேண்டும், இருக்கவும் செய்கிறார்கள். இதற்கும் கூடுதலான மூலதனம் கூடுதல் இலாபம் கிடைக்கச் செய்யலாம்; குறைவான மூலதனம் சராசரி இலாபம் கூட கிடைக்கச் செய்வதில்லை. முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை வேளாண்மையில் பரவும்போது மெள்ள மெள்ளவும் சமச்சீரற்றுமே பரவுகிறது; வேளாண்மையிலான முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறைக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகிய இங்கிலாந்து நாட்டில் இதைக் காணலாம். தடையிலா தானிய

இறக்குமதி இல்லை என்ற அளவில், அல்லது இந்த இறக்குமதியின் பரிமாணமும், அது ஏற்படுத்தும் தாக்கமும் வரம்புக்குட்பட்டதே என்ற அளவில் சந்தை-விலையானது கீழ்தர மண்வகையில் சாகுபடி செய்யும் உற்பத்தியாளர்களால், அதாவது சராசரியை விட மோசமான உற்பத்தி நிலைமைகளில் உற்பத்தி செய்வோரால் நிர்ணயிக்கப்படுகிறது. வேளாண்மையில் முதலீடாவதும், பொதுவாக அதன் வசம் இருப்பதுமான மொத்த மூலதனத்தின் பெரியதொரு பகுதி இவர்கள் கையில் இருக்கக் காணலாம்.

எடுத்துக்காட்டாக, விவசாயி தமது சிறுதுண்டு நிலத்தில் அரும்பாடுபட்டு உழைப்பது மெய்தான். ஆனால் இது உற்பத்தித் திறனுக்கு இன்றியமையாத புறவய நிலைமைகளிலிருந்து-சமுதாய, பொருளாதார நிலைமைகளிலிருந்து - தனித்தொதுங்கி இருக்கும் உழைப்பு ஆகும், அந்நிலைமைகளைப் பறிகொடுத்து விட்ட உழைப்பு ஆகும்.

இக்காரணத்தால் விளையும் காரியம் என்னவென்றால், உள்ளபடியே முதலாளித்துவச் சாகுபடியாளர்களாய் இருப்பவர்கள் ஒரு பகுதி உபரி-இலாபத்தை தனதாக்கிக் கொள்ள முடிகிறது- முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை பட்டறைத் தொழில் போலவே வேளாண்மையிலும் ஒரே சீராக வளர்ந்திருக்குமானால், இந்தக் கட்டத்தைப் பொறுத்த வரையிலாவது இந்நிலை ஏற்படாது.

இரண்டாம் வகை வேறுபாட்டு வாடகையைப் பொறுத்த வரை உபரி-இலாபம் எப்படி உருவாகிறது என்பதை மட்டும் முதலில் பரிசீலிப்போம். இந்த உபரி-இலாபம் எந்நிலைமைகளில் நில-வாடகையாக மாற்றமடையக் கூடும் என்பது பற்றி இப்போதைக்கு அலட்டிக் கொள்ள தேவையில்லை.

அப்போது வேறுபாட்டு வாடகை II ஆனது வேறுபாட்டு வாடகை Iஇன் மாறுபட்ட தெரிவிப்பே என்றும், இரண்டும் சாராம்சத்தில் ஒன்றே என்றும் தெளிவாகிறது. பல்வேறு மண்வகைளின் வளத்திலான வேறுபாடு, முதல்வகை வேறுபாட்டு வாடகையில் தாக்கம் செலுத்துவது எப்படியென்றால்: நிலத்தில் முதலீடாகிற மூலதனங்கள் ஏற்றத்தாழ்வான விளைவுகளைத் தருகின்றன, அதாவது மூலதனத்தின் சம அல்லது விகிதாசார அளவுளிலிருந்து சமமல்லாத அளவுகளில் விளைபொருள் கிடைக்கிறது. இந்த ஏற்றத்தாழ்வு ஒரே நிலத்துண்டில் அடுத்தடுத்து முதலீடாகிற வெவ்வேறு மூலதனங்களைக் குறித்தாலும் சரி, மாறுபட்ட மண்வளம் கொண்ட பல்வேறு நிலத்துண்டுகளில்

முதலீடாகிற மூலதனங்களைக் குறித்தாலும் சரி, மண்வளத்திலான வேறுபாட்டிலோ அதன் விளைவிலோ இதனால் எவ்வித மாற்றமும் ஏற்பட முடியாது, எனவே அதிக உற்பத்தித் திறமுள்ள முறையில் முதலீடாகிறமூலதனப் பகுதிகளுக்கு வேறுபாட்டு வாடகை உருவாவதிலும் கூட எவ்வித மாற்றமும் ஏற்பட முடியாது. இரு நேர்வுகளிலுமே ஒரே மூலதன முதலீட்டிற்கு நிலத்தின் மண்வளம் வேறுபடுவதைக் காட்டுகிறது; ஆனால் வேறுபாட்டு வாடகை Iஐப் பொறுத்தவரை, வெவ்வேறு வகை நிலங்கள் அவற்றில் முதலீடாகிற சமுதாய மூலதனத்தின் சம அளவிலான வெவ்வேறு பகுதிகளுக்கு செய்து கொடுப்பதை, இங்கு ஒரே நிலம் அடுத்தடுத்து வெவ்வேறு பகுதிகளாக முதலீடாகிற - மூலதனத்திற்கு செய்து கொடுக்கிறது.

அட்டவணை Iஇல், A, B, C, D ஆகிய நான்கு மண் வகைகள் ஒவ்வொன்றிலும் ஓர் ஏக்கரில் £ 2 ½ வீதம் வெவ்வேறு குத்தகைச் சாகுபடியாளர்ளால் சுயேச்சை மூலதனங்களாக முதலீடு செய்யப்படும் அதே £ 10 மூலதனம் இப்படி முதலீடு செய்யப்படுவதற்கு பதில், D வகையைச் சேர்ந்த ஒரே ஒரு ஏக்கரில் அடுத்தடுத்து முதலீடு செய்யப்படுமானால், முதல் முதலீடு 4 குவார்ட்டரும், இரண்டாவது 3 குவார்ட்டரும், மூன்றாவது 2 குவார்ட்டரும், நான்காவது 1 குவார்ட்டரும் (அல்லது எதிர்மாறான வரிசையில்) கிடைக்கச் செய்யுமானால், மிகக் குறைந்த உற்பத்தித் திறனுள்ள மூலதனப் பகுதியால் வழங்கப்படும் குவார்ட்டர் கோதுமையின் விலையாகிய £3 ஆனது வேறுபாட்டு வாடகை ஏதும் பெற்றுத் தராது; ஆனால் இந்த விலைதான்-உற்பத்தி விலை £ 3 என்றுள்ள கோதுமையின் வழங்கல் அவசியமாய் உள்ளவரை-உற்பத்தி-விலையை நிர்ணயிப்பதாய் இருந்து வரும். முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை கோலோச்சுவதாய் கொள்கிறோம் ஆதலால், அதாவது £ 3 விலையில் பெதுவாக £ 2 ½ மூலதனத்திற்கு கிடைக்கும் சராசரி இலாபமும் அடங்கும் ஆதலால், ஒவ்வொன்றும் £2½ ஆகிய ஏனைய மூன்று பகுதிகளும் விளைச்சலிலான வேறுபாட்டைப் பொறுத்து, உபரி-இலாபம் பெற்றுத் தரும்; ஏனென்றால் இந்த விளைச்சல் அதற்குரிய உற்பத்தி-விலைக்கு விற்கப்படாமல் மிகக்குறைந்த உற்பத்தித் திறமுள்ள £ 2 ½முதலீட்டின் உற்பத்தி-விலைக்கே விற்கப்படுகிறது; இந்த முதலீடு வாடகையேதும் பெற்றுத் தருவதில்லை, அதன் உற்பத்திப் பொருளுக்குரிய விலை உற்பத்தி விலைகளின் பொது விதியால் ஆளப்படுகிறது. அட்டவணை Iஇல்போலவே இங்கும் உபரி - இலாபம் உருவாகக் காணலாம்.

இரண்டாம் வகை வேறுபாட்டு வாடகை முதல்வகை வேறுபாட்டு வாடகையை முன்தேவையாக கொண்டிருப்பது இங்கேயும் தெரிய வருகிறது. £2½ மூலதனம் பெற்றுத்தரும் குறைந்தபட்ச விளை பொருள், அதாவது படுமோசமான நிலத்தில் இம்மூலதனத்தைக் கொண்டு விளைவது இங்கே 1 குவார்ட்டரென்று வைத்துக் கொள்கிறோம். மேலும் D வகை நிலத்தின் சாகுபடியாளர் அவருக்கு 4 குவார்ட்டர் பெற்றுத் தருவதும் அவரை வேறுபாட்டு வாடகையாக 3 குவார்ட்டர் கொடுக்கச் செய்வதுமான £2 ½ அன்னியில், அதே நிலத்தில் £2 ½ முதலீடு செய்வதாகவும், இந்த £2 ½ ஆனது படுமோசமான A வகை நிலத்தில் அதே அளவு மூலதனம் பெற்றுத் தருவதைப் போலவே 1 குவார்ட்டர் மட்டும் பெற்றுத் தருவதாகவும் வைத்துக் கொள்கிறோம். இது வாடகை பெற்றுத் தராத மூலதன முதலீடாகும்; ஏனென்றால் இதைக் கொண்டு அவருக்கு சராசரி இலாபம் மட்டுமே கிடைக்கும். வாடகையாக மாற்றமடைவதற்கான உபரி-இலாபமேதும் கிடைக்காது. ஆனால் மறுபுறம், D வகை நிலத்திலான இரண்டாவது மூலதன முதலீட்டின் இந்தக் குறைந்து செல்லும் விளைபொருள் இலாப வீதத்தில் எவ்விதத் தாக்கமும் செலுத்தாது. எப்படியென்றால், A வகை நிலத்தில் மற்றுமோர் ஏக்கரில் £ 2 ½ புதிதாக முதலீடு செய்யப் பட்டிருந்தால், அம்முதலீடு உபரி - இலாபத்தையும், எனவே A, B, C, D மண்வகைகளுக்கான வேறுபாட்டு வாடகையையும் எவ்விதத்தும் பாதிக்காது அல்லவா, அதே போலத்தான் இதுவும். ஆனால் குத்தகைச் சாகுபடியாளரைப் பொறுத்த வரை, Dவகை நிலத்திலான இந்த £2 ½ கூடுதல் முதலீட்டிலிருந்து பெறப்படும் இலாபமும், D வகை நிலத்தில் ஏக்கர் ஒன்றுக்கான ஆரம்ப £2 ½முதலீடு 4 குவார்ட்டர் விளைவித்த போதிலும் அம்முதலீட்டிலிருந்து பெறப்பட்டதாக நாம் அனுமானித்துக் கொண்ட இலாபமும் ஒன்றாகவே இருந்திருக்கும். மேலும் ஒவ்வொன்றுக்கும் £2 ½ஆகிய இன்னுமிரு முதலீடுகள் முறையே 3 குவார்ட்டரும், 2 குவார்ட்டருமாக கூடுதல் விளைபொருள் தருமானால், D வகை நிலத்திலான முதலாவது முதலீட்டின் விளை பொருளுடன் ஒப்பிடுமிடத்து மீண்டும் ஒரு குறைவு ஏற்பட்டிருக்கும் (அந்த முதலாவது முதலீடு 4 குவார்ட்டர் விளைபொருள், அதாவது 3 குவார்ட்டர் உபரி-இலாபம் கிடைக்கச் செய்தது). ஆனால் இந்தக் குறைவு உபரி-இலாபத்தின் அளவிலான குறைவாகவே இருக்கும், இது சராசரி இலாபத்தையோ ஆளும் உற்பத்தி -விலையையோ பாதிக்காது. குறைந்து செல்லும் இந்த உபரி-இலாபத்தை பெற்றுத் தரும் கூடுதல் உற்பத்தி A வகை நிலத்திலான உற்பத்தியை தேவையற்றதாக்கி, A வகை

ஏக்கரை சாகுபடி யற்றதாக்கினால்தான் இந்நிலை ஏற்படும். இப்படி நேரிடும் போது, Bவகை ஏக்கரானது வாடகை பெற்றுத் தராத சந்தை-விலையை நிர்ணயிக்கிற நிலமாகும். என்றால், Dவகை ஏக்கரிலான கூடுதல் மூலதன முதலீட்டின் உற்பத்தித் திறன்-குறைந்து செல்லும் போதே உற்பத்தி - விலையும் சரிவுறும்; எடுத்துக்காட்டாக £ 3 இலிருந்து £1 ½ ஆக குறையும்.

Dவகை நிலத்தின் விளைபொருள் முன்பு 4 குவார்ட்டராக இருந்தது, இப்போது 4+1+3+2=10 குவார்ட்டராக இருக்கும். ஆனால் Bவகை நிலத்தால் ஆளப்படும் குவார்ட்டர் ஒன்றுக்கான விலை £1 ½ஆக குறைந்திருக்கும். Dக்கும் Bக்கும் இடையிலான வேறுபாடு 10 - 2 = 8 குவார்ட்டராக இருக்கும். குவார்ட்டர் ஒன்றுக்கு £1 ½வீதம் £12 ஆக இருக்கும்; முன்போ Dஇலிருந்தான பண-வாடகை £9ஆக இருந்தது. இது கவனத்துக்குரியதாகும். ஏக்கருக்கு இவ்வளவு என்ற அடிப்படையில் கணக்கிட்டால், ஒவ்வொன்றும் £2 ½ஆகிய இரு கூடுதல் மூலதனங்களின் மீதான உபரி-இலாபத்தின் வீதம் குறைந்து சென்ற போதிலும் வாடகையின் பருமன் $33\,^1/_3$% உயர்ந்திருக்கும்.

பொதுவாக வேறுபாட்டு வாடகையும் குறிப்பாக முதல் வகையுடன் சேர்ந்து வரும் இரண்டாம் வகை வேறுபாட்டு வாடகையும் எவ்வளவு சிக்கலான இணைவுகளை தோற்றுவிக்கக் கூடும் என்பதை இதலிருந்து அறிந்து கொள்ளலாம். ஆனால் - எடுத்துக்காட்டாக-ரிக்கார்ட்டோ வேறுபாட்டு வாடகையை பெரிதும் ஒருதரப்பான முறையிலும் சர்வசாதாரணமான ஒன்றைப் போலவும் பரிசீலிக்கிறார். மேலே நாம் பார்த்தது போல, ஆளும் சந்தை-விலை சரிந்து செல்லும் போதே வளம்பொருந்திய நிலங்களிலிருந்து பெறப்படும் வாடகை உயர்ந்து செல்லும் நிலை ஏற்படலாம்; இதனால் அறுதி உற்பத்தி, அறுதி உபரி-உற்பத்தி இரண்டுமே அதிகரிக்கின்றன (இறங்கு வரிசையிலான வேறுபாட்டு வாடகை Iஐப் பொறுத்தவரை, ஏக்கர் ஒன்றுக்கான அறுதி உபரி-உற்பத்தி மாறாமலிருந்த போதிலும், அல்லது குறைந்தே போனாலும் கூட ஒப்பீட்டு உபரி-உற்பத்தியும், இவ்விதம் ஏக்கர் ஒன்றுக்கான வாடகையும் அதிகரிக்கக் கூடும்). ஆனால் அதே போது ஒரே வகை மண்ணில் அடுத்தடுத்து செய்யப்படும் மூலதன முதலீடுகளில் பெரியதொரு பகுதி அதிக வளம் பொருந்திய நிலங்களுக்கு போய்ச் சேர்ந்தாலும் கூட அம்முதலீடுகளின் உற்பத்தித் திறன் குறைகிறது. குறிப்பிட்ட ஒரு கண்ணோட்டத்தில் - விளை பொருளையும் உற்பத்தி-விலைகளையும் பொறுத்த வரை - உழைப்பின்

உற்பத்தித் திறன் உயர்ந்திருக்கிறது. ஆனால் வேறொரு கண்ணோட்டத்தில் அது குறைந்திருக்கிறது; ஏனென்றால் ஒரே நிலத்திலான பல்வேறு மூலதன முதலீடுகளுக்கு உபரி-இலாப வீதமும் ஏக்கர் ஒன்றுக்கான உபரி-உற்பத்தியும் குறைந்து போகின்றன.

அடுத்தடுத்த மூலதன முதலீடுகளின் உற்பத்தித் திறன் குறைந்து செல்வதாகக் கொண்டால், இந்த முதலீடுகள் படுமோசமான A வகை நிலத்தில் மட்டும் செய்யப்படுகையில்தான் இரண்டாம் வகை வேறுபாட்டு வாடகையானது உற்பத்தி-விலை உயருவதையும் உற்பத்தித் திறன் அறுதியாகக் குறைவதையும் குறித்தாக வேண்டிய அவசியம் ஏற்படும். £2 ½ மூலதன முதலீட்டுக்கு £3 உற்பத்தி-விலையில் 1 குவார்ட்டர் விளைவித்த A வகை ஏக்கர் ஒன்று £2 ½ கூடுதல் முதலீட்டுக்கு, அதாவது £5 மொத்த முதலீட்டுக்கு மொத்தம் 1½ குவார்ட்டர் மட்டும் விளைவிக்குமானால், இந்த 1½குவார்ட்டரின் உற்பத்தி-விலை=£6, அதாவது குவார்ட்டர் ஒன்றுக்கு £4. மூலதன முதலீடு வளர்ந்து செல்வதன் விளைவாக உற்பத்தித் திறனில் ஏற்படும் ஒவ்வொரு குறைவும் இங்கே ஏக்கர் ஒன்றுக்கான விளை பொருளில் ஓர் ஒப்பீட்டுக் குறைவைக் குறித்திடும்; உயர்தர மண் வகைகளிலோ அதிகப்படியான உபரி-உற்பத்தியில் ஏற்படும் குறைவை மட்டுமே குறித்திடும்.

ஆனால் இயல்பாகவே என்ன நேரிடுகிறது என்றால், தீவிரச் சாகுபடி முறை வளர்ந்து ஒரே நிலத்தில் அடுத்தடுத்து மூலதன முதலீடுகள் செய்யப்படும் போது, இது உயர்தர மண்வகைகளில் தான் அதிகப் பயனளிக்கக் கூடியதாய் இருக்கிறது, அல்லது எப்படியும் அந்த மண்வகைகளில்தான் அதிக அளவுக்கு நடைபெறுகிறது. (இங்கு நாம் குறிப்பிடுவது இதுவரை பயனற்றுக் கிடந்த நிலத்தை பயனுள்ளதாக மாற்றியமைக்கும் நிரந்தர மேம்பாடுகளை அல்ல.) ஆகவே அடுத்தடுத்த மூலதன முதலீடுகளின் குறைந்து செல்லும் உற்பத்தித் திறன் முக்கியமாய் மேற்சொன்ன விளைவையே ஏற்படுத்தியாக வேண்டும். உயர்தர நிலத்தில் முதலீடாகிற மூலதனம் லாபம் ஈட்டித் தருவதற்கு மிகச் சிறந்த வாய்ப்பு இருப்பதால், அவ்வகை நிலமே தெரிந்தெடுப்படுகிறது, அது இயற்கை மண்வளக் கூறுகளை அதிக அளவில் தன்னகத்தே கொண்டிருப்பதாகும், இவற்றை பயன்படுத்திக் கொண்டாலே போதுமானது.

தானியச் சட்டங்கள் ஒழிந்த பிறகு இங்கிலாந்தில் இன்னுங்கூட தீவிரமான சாகுபடி முறை மேற்கொள்ளப்படலாயிற்று. முன்பு

கோதுமைச் சாகுபடிக்கு பயன்பட்டுவந்த நிலப்பரப்பில் கணிசப்பகுதி அப்போது வேறு நோக்கங்களுக்கு, முக்கியமாய் கால்நடை மேய்ச்சலுக்கு ஒதுக்கப்பட்டது; அதேபோது கோதுமைக்கு மிகப் பொருத்தமான வளமிக்க நிலப்பரப்புகளில் நீர் வடிக்கப்பட்டு, வேறு வகையில் மேம்பாடு செய்யப்பட்டது. கோதுமைச் சாகுபடிக்கான மூலதனம் இவ்விதம் இன்னும் குறுகிய பரப்பில் குவிக்கப்பட்டது.

இந் நேர்வில்-மிகச் சிறந்த நிலத்தின் மிக உயர்ந்த உபரி-இலாபத்துக்கும் வாடகை தராத A வகை நிலத்தின் விளை பொருளுக்கும் இடையே சாத்தியமான எல்லா உபரி வீதங்களும் இங்கு ஏக்கர் ஒன்றுக்கான உபரி உற்பத்தியில் ஒப்பீட்டு அதிகரிப்பை மட்டுமல்லாமல் அறுதி அதிகரிப்பையும் குறிக்கின்றன-புதிதாய் உருவாகும் உபரி-இலாபம் (உள்ளுறை வாடகை) முன்பு சராசரி இலாபமாக இருந்ததில் வாடகையாக மாற்றப்படும் பகுதியை (முன்பு சராசரி இலாபத்தைக் குறிப்பதாக இருந்த விளை பொருளில் ஒரு பகுதியை) குறித்திடாமல் கூடுதல் உபரி-இலாபத்தையே குறித்திடுகிறது; இந்தக் கூடுதல் உபரி-இலாபம் வாடகையாக உருமாற்றம் பெறுகிறது.

மறுபுறம் சந்தை-விலை Aஇன் உற்பத்தி விலைக்கு மேல் உயருமளவுக்கு தானியத்திற்கான வேண்டல் அதிகரிக்குமானால், அதாவது A,B அல்லது வேறு எவ்வகை நிலத்தினதும் உபரி-உற்பத்தி £3க்கு மேல் உயர்ந்த விலைக்குத்தான் வழங்கப்பட முடியும் என்ற நிலை ஏற்படுமானால் இந்நேர்வில் மட்டுமே A, B, C, D ஆகிய மண் வகைகளில் ஏதேனும் ஒன்றிலான கூடுதல் மூலதன முதலீட்டின் விலை பொருள் குறைவதும் உற்பத்தி விலை, ஆளும் சந்தை-விலை உயருவதும் சேர்ந்து நிகழும். இந்நிலை நீண்ட காலத்துக்குத் தொடர்ந்த போதிலும் A வகையில் கூடுதல் நிலம் குறைந்தது Aஇன் தரத்திலானது சாகுபடி செய்யப்படுவதற்கு வழி செய்யவில்லை, ஏனைய காரணிகளும் வழங்கல் மலிவாவதற்கு வழி செய்யவில்லை என்றால், மற்றவை யாவும் மாறாதிருக்க, ரொட்டி விலை உயர்வதன் விளைவாக கூலி உயரும், இலாப வீதம் அதற்கேற்ப குறையும். இந்நேர்வில், அதிகரித்த வேண்டலானது Aஐக் காட்டிலும் கீழ்த்தரமான நிலத்தைச் சாகுபடிக்குத் கொண்டுவருவதன் மூலம் நிறைவு செய்யப்பட்டாலும் சரி, கூடுதல் மூலதனம் முதலீடு செய்வதன் மூலம் நான்கில் ஏதேனுமொரு வகை நிலத்தில் நிறைவு செய்யப்பட்டாலும் சரி, எல்லாம் ஒன்றுதான். அப்போது வேறுபாட்டு வாடகை உயர்வதும் இலாப வீதம் குறைவதும் சேர்ந்து நிகழும்.

ஏற்கெனவே சாகுபடி செய்யப்பட்டு வரும் நிலவகைகளில் பிற்பாடு முதலீடு செய்யப்படும் கூடுதல் மூலதனங்களின் உற்பத்தித் திறன் குறைந்து செல்வது, உற்பத்தி விலை அதிகரிப்பதற்கும் இலாப வீதம் குறைவதற்கும் கூடுதலான வேறுபாட்டு வாடகையின் உருவாக்கத்துக்கும் வழி செய்யக் கூடும்; ஏனென்றால் இந்நிலைமை களில் Aஐக் காட்டிலும் மோசமான நிலம் சந்தை-விலையை ஆளுவதைப் போல் எல்லா வகை நிலத்திலும் வேறுபாட்டு வாடகை உயரும் - இந்த ஒரு நேர்வைத்தான் ரிக்கார்ட்டோ ஒரே நேர்வாக, இயல்பான நேர்வாகக் கருதி, இரண்டாம் வகை வேறுபாட்டு வாடகையின் உருவாக்கத்தையே இதுவாகச் சுருக்கி விடுகிறார்.

Aவகை நிலம் மட்டும் சாகுபடி செய்யப்பட்டு, அதில் அடுத்தடுத்து செய்யப்படும் மூலதன முதலீடுகளால் உரிய விகிதத்தில் விளைபொருள் அதிகரிக்கவில்லை என்றால், அப்போதும் இப்படித்தான் நேரிடும்.

ஆக, இங்கே வேறுபாட்டு வாடகை IIஐப் பரிசீலிக்கையில் வேறுபாட்டு வாடகை I கண்ணிற்படாமல் அறவே மறைந்துவிடுகிறது.

சாகுபடி செய்யப்படும் மண் வகைகளிலிருந்து பெறப்படும் வழங்கல் போதுமானதாய் இல்லாமற் போகிற இந்த நேர்வை அதாவது கீழ்த்தர மண் வகையில் புதிய கூடுதல் நிலம் சாகுபடிக்கு கொண்டுவரப்படும்வரை, அல்லது பல்வேறு மண்வகைகளிலும் முதலீடாகிற கூடுதல் மூலதனத்தின் மொத்த விளைபொருளை முன்னைக் காட்டிலும் உயர்ந்த உற்பத்தி விலைக்குத்தான் வழங்க முடியும் என்ற நிலை ஏற்படும்வரை, சந்தை-விலை நிரந்தரமாகவே உற்பத்தி விலையை விட உயர்ந்ததாய் இருந்து வருகிற இந்த நேர்வை மட்டும் விலக்கி விட்டுப் பார்த்தால், கூடுதல் மூலதனங்களின் உற்பத்தித் திறனில் விகிதப்படி ஏற்படும் சரிவானது ஆளும் உற்பத்தி விலையையும் இலாபவீதத்தையும் பாதிப்பதில்லை. மேலும் மூன்று நேர்வுகள் இவ்விதம் சாத்தியமாகின்றன:

அ) A, B, C, D ஆகிய மண் வகைகளில் ஏதேனுமொன்றில் முதலீடாகிற கூடுதல் மூலதனம் Aயின் உற்பத்தி விலையால் நிர்ணயிக்கப்படும் இலாப வீதத்தை மட்டும் பெற்றுத் தருமானால், உபரி -இலாபம் ஏதும் உருவாகாது, அதாவது உள்ளுறை வாடகை ஏதும் உருவாகாது; A வகையில் கூடுதல் நிலம் சாகுபடி செய்யப்பட்டிருந்தால் எப்படியோ அதே போலத்தான்.

(ஆ) கூடுதல் மூலதனமானது கூடுதலான விளைபொருள் கிடைக்கச் செய்யுமானால், ஆளும் விலை மாறாதிருக்க புதிய உபரி-

இலாபம் (உள்ளுறை வாடகை) உருவாகும் என்பது கண்கூடு. ஆனால் கட்டாயம் இப்படித்தான் நேரிட்டாக வேண்டும் என்பதில்லை; குறிப்பாகச் சொன்னால் இந்தக் கூடுதல் உற்பத்தியானது A வகை நிலத்தைச் சாகுபடியற்றதாக்கி, போட்டியிடும் மண் வகைகளின் வரிசைத் தொடரிலிருந்து வெளியேற்றும் போது இப்படி நேரிடுவதில்லை. இந்நேர்வில் ஆளும் உற்பத்தி விலை குறைகிறது. இதோடு சேர்ந்தாற்போல் கூலி குறையுமானால் அல்லது விலை மலிந்த விளை பொருள் மாறா-மூலதனத்தின் கூறுகளில் ஒன்றாகச் சேருமானால் இலாப வீதம் உயரும். கூடுதல் மூலதனத்தின் உற்பத்தித் திரளிலான அதிகரிப்பு உயர்ந்தரமான C, D மண் வகைகளில் ஏற்படுமானால், கூடுதல் உபரி - இலாபத்தின் உருவாக்கம் (இவ்விதம் கூடுதல் வாடகையின் உருவாக்கம்) எந்த அளவுக்கு விலை குறைவோடும் இலாபவீத உயர்வோடும் சேர்ந்துவரும் என்பது முழுக்க முழுக்க இந்தக் கூடுதல் உற்பத்தித் திறனின் படித்தரம் புதிய கூடுதல் மூலதனத்தின் அளவு ஆகியவற்றையே பொறுத்ததாகும். மாறா - மூலதனக் கூறுகள் விலை மலிவாவதன் மூலம், கூலி குறையாமலே கூட இலாப வீதம் உயரலாம்.

இ) கூடுதல் மூலதன முதலீடானது உபரி-இலாப குறையுடன் சேர்ந்து வருவதாகவும், ஆனால் இந்தக் கூடுதல் முதலீட்டின் விளைபொருளில் A வகை நிலத்தில் முதலீடாகும் அதே மூலதனத்தின் விளைபொருளுக்கு மேல் ஓர் உபரி எஞ்சியிருக்கும்படி இது நடைபெறுவதாகவும் கொள்வோம். அப்போது எல்லா நிலைமைகளிலும் - வழங்கலில் ஏற்படும் அதிகரிப்பு A வகை நிலத்தை சாகுபடியற்றதாக்கவில்லை என்றால் - புதிய உபரி - இலாப உருவாக்கம் நடைபெறுகிறது. இது ஒருங்கே D, C, B, A வகை நிலங்களில் நடைபெறலாம். ஆனால், மறுபுறம், படுமோசமான A வகை நிலம் சாகுபடியற்றதாக்கப்பட்டால், ஆளும் உற்பத்தி விலை குறைகிறது. பணமாகத் தெரிவிக்கப்படும் உபரி-இலாபம்-எனவே வேறுபாட்டு வாடகை-உயர்கிறதா, குறைகிறதா என்பது குவார்ட்டர் ஒன்றுக்கான குறைந்த விலைக்கும் உபரி - இலாபத்தைக் குறிக்கும் குவார்ட்டர்களின் அதிகரித்த எண்ணிக்கைக்கும் இடையிலான விகித உறவைப் பொறுத்தது. எப்படியானாலும், அடுத்தடுத்த மூலதன முதலீடு களிலிருந்து கிடைக்கும் உபரி-இலாபம் குறைந்து செல்லும் போது உற்பத்தி விலை எடுத்த எடுப்பில் உயர்வது போல் தோன்றினாலும் அப்படி உயர்வதற்குப் பதில் குறையலாம் என்பது இங்கு நோக்கற்பாலது.

உபரி-விளைச்சல் குறைந்து செல்வதோடு சேர்ந்து வரும் இந்தக் கூடுதல்-மூலதன முதலீடுகள் முழுக்க முழுக்க எந்நேர்வுகளுக்கு உரியவை என்றால்: எடுத்துக்காட்டாக ஒவ்வொன்றும் £ 2 ½ ஆகிய நான்கு சுயேச்சை மூலதனங்கள் Aக்கும் Bக்கும் இடையிலும் Bக்கும் Cக்கும் இடையிலும் Cக்கும் Dக்கும் இடையிலுமான வளம் கொண்ட நிலங்களில் முதலீடு செய்யப்பட்டு, முறையே 1 ½, 2 $^1/_3$, 2 $^2/_3$, 3 குவார்ட்டர் விளையச் செய்யும். ஒவ்வொரு நேர்விலும் அதே மூலதன முதலீட்டிற்கான உபரி - இலாப வீதத்துடன் ஒப்பிடுங்கால் இங்கு உபரி - இலாப வீதம் குறைந்திருக்கும் என்றாலும் நான்கு கூடுதல் மூலதனங்களுக்குமே உபரி - இலாபம் (உள்ளுறை வாடகை) இந்த எல்லா மண்வகைகளிலும் உருவாகும். இந்த நான்கு மூலதனங்களும் முதலானவற்றில் முதலீடு செய்யப்பட்டாலும் சரி, Dக்கும் Aக்கும் இடையே விநியோகமானாலும் சரி, எல்லாம் ஒன்றுதான்.

வேறுபாட்டு வாடகையின் இருவகைகளுக்கும் இடையிலான ஓர் அடிப்படை வேறுபாட்டை இப்போது வந்தடைகிறோம். வேறுபாட்டு வாடகை Iஇல், உற்பத்தி விலை மாறாதிருக்க, வேறுபாடுகளும் மாறாதிருக்க, ஏக்கர் ஒன்றுக்கான சராசரி வாடகை அல்லது மூலதனத்தின் மீதான சராசரி வாடகை வீதம் மொத்த வாடகையளவும் சேர்ந்து உயரலாம். ஆனால் சராசரியானது வெறும் சூக்குமம்தான். ஏக்கர் ஒன்றுக்கு இவ்வளவு என்றோ அல்லது மூலதனத்தின் அடிப்படை யிலோ கணக்கிடப்படும் உள்ளபடியான வாடகை அளவில் இங்கு எவ்வித மாற்றமும் இல்லை.

மறுபுறம், அதே அனுமானங்களின்படி, முதலீடாகிற மூலதனத்துடன் ஒப்பிட்டு அளவிடப்படும் வாடகை வீதம் மாறாமல் இருந்தாலும் ஏக்கர் ஒன்றுக்கு இவ்வளவு என்று கணக்கிடப்படும் வாடகை அளவு அதிகரிக்கலாம்.

A, B, C, D மண் வகைகள் ஒவ்வொன்றிலும் £ 2 ½க்குப் பதில் £5, அதாவது மொத்தத்தில் £10க்குப் பதில் £ 20 முதலீடு செய்யப்படுவதன் மூலம் உற்பத்தி இருமடங்காவதாகவும், ஒப்பீட்டு மண்வளம் மாறாதிருப்பதாகவும் கொள்வோம். இது இந்த மண் வகைகள் ஒவ்வொன்றிலும் 1 ஏக்கருக்குப் பதில் அதே செலவில் 2 ஏக்கர் சாகுபடி செய்வதற்கு ஒப்பாகும். இலாப வீதம் மாறாமல் இருக்கும் உபரி-இலாபம் அல்லது வாடகையுடனான அதன் விகித உறவும் மாறாமல் இருக்கும். ஆனால் இப்போது A நிலம் 2 குவார்ட்டரும் B நிலம் 4 குவார்ட்டரும் C நிலம் 6 குவார்ட்டரும் D நிலம் 8 குவார்ட்டரும்

விளைவிக்குமானால், உற்பத்தி விலை அப்போதும் குவார்ட்டர் ஒன்றுக்கு £ 3 ஆகவே இருந்து வரும்; ஏனென்றால் இந்த அதிகரிப்புக்குக் காரணம் இரு மடங்கான மூலதனத்திற்கு அதே விகிதாச்சார விளைச்சல்தானே தவிர அதே மூலதனத்திற்கு இரு மடங்கான விளைச்சல் அல்ல. A நிலத்தின் விளை பொருளை எடுத்துக் கொண்டால், முன்பு 1 குவார்ட்டருக்கு £ 3 விலையானது, போலவே இப்போது 2 குவார்ட்டருக்கு £6 விலையாகும். நால்வகை நிலத்திலுமே இலாபம் இரு மடங்காகியிருக்கும்; ஆனால் மூலதன முதலீடு இரு மடங்கானதுதான் இதற்குக் காரணம். வாடகையும் இதே விகிதத்தில் இருமடங்காகியிருக்கும்; Bக்கு 1க்குப் பதில் 2 குவார்ட்டராகவும், Cக்கு 2க்குப் பதில் 4 குவார்ட்டராகவும், Dக்கு 3க்குப் பதில் 6 குவார்ட்டராகவும் இருக்கும். ஆகவே B, C, D இவற்றுக்கான பண வாடகை இப்போது முறையே £6, £12, £ 18 ஆக இருக்கும், ஏக்கர் ஒன்றுக்கான விளைச்சலைப் போலவே ஏக்கர் ஒன்றுக்கான பண வாடகையும் இரு மடங்காகியிருக்கும்; எனவே இந்தப் பணவாடகையை மூலதனமாக்குகிற நிலத்தின் விலையும் இருமடங்காகியிருக்கும். இப்படி கணக்கிடும்போது தானிய வடிவிலும் பண வடிவிலுமான வாடகையின் அளவு அதிகரிக்கிறது; எனவே நிலத்தின் விலையும் அதிகரிக்கிறது. ஏனென்றால் அதனைக் கணக்கிடப் பயன்படும் நியமமாகிய ஏக்கர் என்பது மாறாத அளவுடைய பரப்பாகும். மறுபுறம், முதலீடாகிற மூலதனத்தின் அடிப்படையிலான வாடகை வீதமாக கணக்கிடும்போது வாடகையின் விகித அளவில் எவ்வித மாற்றமும் இல்லை. £ 36 மொத்த வாடகையளவுக்கு £ 20 மூலதன முதலீட்டிற்குமான விகித உறவும் £ 18 மொத்த வாடகையளவிற்கும் £10 மூலதன முதலீட்டிற்குமான விகித உறவும் ஒன்றே. ஒவ்வொரு மண் வகையிலிருந்து பெறப்படும் பண வாடகைக்கும் அதில் முதலீடாகிற மூலதனத்திற்குமான விகித உறவிற்கும் கூட இதுவே பொருந்தும்; எடுத்துக்காட்டாக C வகையில் முன்பு £6 வாடகைக்கும் £2 ½ மூலதனத்திற்கும் இருந்த அதே விகிதம்தான் இப்போது £12 வாடகைக்கும் £5 மூலதனத்துக்கும் உள்ளது. முதலீடாகிற மூலதனங்களிடையே இங்கு புதிய வேறுபாடுகள் ஏதும் முளைப்பதில்லை; ஆனால் புதிய உபரி-இலாபங்கள் முளைக்கின்றன. கூடுதல் மூலதனமானது வாடகை தரும் மண் வகைகள் சிலவற்றிலோ அல்லது அவை யாவற்றிலுமோ முதலீடு செய்யப்பட்டு, அதே விகிதாச்சார விளைபொருளை தருவதுதான் இதற்குக் காரணம். இந்த இருமடங்கு முதலீடானது எடுத்துக்காட்டாக

C இல் மட்டும் நடைபெறுமானால், மூலதனத்தின் அடிப்படையில் கணக்கிடும்போது C, B, D இவற்றுக்கிடையிலான வேறுபாட்டு வாடகையில் எவ்வித மாற்றமும் இருக்காது; எப்படியென்றால் Cயிலிருந்து பெறப்படும் வாடகையின் அளவு இருமடங்காகும் போது மூலதன முதலீடும் இரு மடங்காகிறது.

இதிலிருந்து தெளிவாவது என்னவென்றால்; உற்பத்தி விலையும் இலாப வீதமும், வேறுபாடுகளும் மாறாமல் இருக்கும் போதே (எனவே மூலதனத்தின் அடிப்படையில் கணக்கிடப்படும் உபரி இலாப வீதம் அல்லது வாடகை வீதம் மாறாமல் இருக்கும் போதே) ஏக்கர் ஒன்றுக்கான விளைபொருள் வாடகை பண வாடகை ஆகியவற்றின் அளவு அதிகரிக்கலாம்.

உபரி - இலாப வீதங்களால் வாடகை வீதங்கள் குறைகிறபோதும், அதாவது இன்னமும் வாடகை தருகிற கூடுதல் மூலதன முதலீடுகளில் உற்பத்தித் திறன் குறைகிற போதும் இதே காரியம் நடைபெறலாம். £2 ½ கூடுதல் மூலதன முதலீடுகள் விளை பொருளை இருமடங்காக்க வில்லை என்றும், Bஆனது 3 ½ குவார்ட்டரும், Cஆனது 5 குவார்ட்டரும், Dஆனது 7* குவார்ட்டரும் மட்டுமே விளைவித்ததாகவும் கொள்வோமானால், இரண்டாவது £2 ½ மூலதனத்திற்கான வேறுபாட்டு வாடகை Bயில் 1க்குப் பதில் வெறும் ½ குவார்ட்டராகவும், Cயில் 2க்குப்பதில் வெறும் 1 குவார்ட்டராகவும் Dயில் 3க்குப் பதில் வெறும் 2 குவார்ட்டராகவுமே இருக்கும். அடுத்தடுத்த இரு முதலீடுகளையும் பொறுத்தவரை வாடகைக்கும் மூலதனத்துக்குமான விகித உறவுகள் பின்வருமாறு இருக்கும்.

| | முதல் முதலீடு | | இரண்டாம் முதலீடு | |
|---|---|---|---|---|
| B : | வாடகை £ 3, | மூலதனம் £ 2½ | வாடகை £ 1½, | மூலதனம் £ 2½ |
| C : | வாடகை £ 6, | மூலதனம் £ 2½ | வாடகை £ 3, | மூலதனம் £ 2½ |
| D : | வாடகை £ 9, | மூலதனம் £ 2½ | வாடகை £ 6, | மூலதனம் £ 2½ |

மூலதனத்தினது ஒப்பீட்டு உற்பத்தித் திறனின் வீதமும், எனவே மூலதனத்தின் அடிபடையில் கணக்கிடப்படும் உபரி-இலாபத்தின் வீதமும் இப்படிக் குறைந்த போதிலும், தானிய வடிவிலும் பண வடிவிலுமான வாடகை Bயில் 1இலிருந்து 1 ½ குவார்ட்டராகவும் (£ 3இலிருந்து £ 4 ½) ஆகவும்; Cயில் 2இலிருந்து 3 குவார்ட்டர்

* 1894ஆம் வருடத்திய ஜெர்மன் பதிப்பில் 6 என்றுள்ளது. - ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

(£ 6இலிருந்து £8). ஆகவும், Dயில் 3இலிருந்து 5 குவார்ட்டர் (£ 9இலிருந்து £15) ஆகவும் அதிகரித்திருக்கும். இந் நேர்வில் Aயில் முதலீடாகிற மூலதனத்துடன் ஒப்பிடுங்கால் கூடுதல் மூலதனங்களுக்கான வேறுபாடுகள் குறைந்திருக்கும், உற்பத்தி விலை மாறாதிருக்கும் ஆனால் ஏக்கர் ஒன்றுக்கான வாடகையும், ஏக்கர் ஒன்றுக்கான நிலத்தின் விலையும் உயர்ந்திருக்கும்.

முதல் வகை வேறுபாட்டு வாடகையை அடிப்படையாகக் கொண்டிருக்கும் இரண்டாம் வகை வேறுபாட்டு வாடகையின் இணைவுகளை இப்போது எடுத்துக் கொள்வோம்.

## அத்தியாயம் XLI

# வேறுபாட்டு வாடகை II.—முதல் நேர்வு: மாறா உற்பத்தி-விலை

சந்தை-விலையானது முன்போலவே படுமோசமான A வகை நிலத்தில் முதலீடாகும் மூலதனத்தால் நிர்ணயிக்கப்படுகிறது என்பதையே இங்கு நம் அனுமானம் குறித்திடுகிறது.

I. வாடகை தரும் B, C, D வகை நிலங்களில் ஏதேனுமொன்றில் முதலீடாகிற கூடுதல் மூலதனம் உற்பத்தி செய்வதும் A வகை நிலத்தில் அம்மூலதனம் உற்பத்தி செய்வதும் ஒரே அளவுதான் என்றால், அதாவது ஆளும் உற்பத்தி-விலையில் அது உபரி-இலாபமேதும் பெற்றுத் தராமல் சராசரி இலாபம் மட்டுமே பெற்றுத் தருமானால், வாடகையின் மீது எவ்வித தாக்கமும் ஏற்படுவதில்லை. எல்லாம் முன்போலவே இருந்து வருகிறது. A தரத்தில், அதாவது படுமோசமான மண் வகையில், சிலபல ஏக்கர்களை சாகுபடிப் பரப்போடு சேர்த்திருந்தால் எப்படியோ அதே நிலைமைதான் இப்போதும்.

II. கூடுதல் மூலதனங்கள் பல்வேறு மண்வகைகள் ஒவ்வொன்றிலும் தமது அளவுக்கேற்ற விகிதத்தில் கூடுதல் விளைபொருள் உற்பத்தி செய்கின்றன; அதாவது உற்பத்தியின் பரிமாணம் ஒவ்வொரு வகை நிலத்தினதும் பிரத்தியேக மண் வளத்திற்கேற்ப-கூடுதல் மூலதனத்தின் பருமனுக்கேற்ற விகிதத்தில் வளர்கிறது. அத்தியாயம் XXXIX இல் பின்வரும் அட்டவணை Iஇலிருந்து தொடங்கினோம்.

இங்கு, அட்டவணையில் காணப்படுவது போல், மூலதன முதலீடு எல்லா மண்வகைகளிலும் இருமடங்காக வேண்டிய அவசியமில்லை. வாடகை தரும் மண்வகைகளில் ஒன்றிலோ ஒன்றுக்கு மேற்பட்டவற்றிலோ கூடுதல் மூலதனம் முதலீடு செய்யப்படுவதாய் உள்ளவரை, அது எவ்விகிதத்தில் முதலீடு செய்யப்பட்டாலும் சரி, விதி ஒன்றுதான். ஒவ்வொரு மண்வகையிலும் மூலதனம் அதிகரிக்கிற அதே விகிதத்தில் உற்பத்தியும் அதிகரிக்க வேண்டும் என்பது மட்டுமே அவசியமாகும். இங்கு நிலத்திலான மூலதன முதலீடு அதிகரிப்பதன்

அட்டவணை I.

| மண் வகை | ஏக்கர் | மூலதனம் (£) | இலாபம் (£) | உற்பத்தி விலை (£) | விளை பொருள் குவார்ட்டர் | விற்பனை விலை | விற்று முதல் (£) | வாடகை | | உபரி இலாப வீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | குவார்ட்டர் | (£) | |
| A | 1 | 2½ | ½ | 3 | 1 | 3 | 3 | 0 | 0 | 0 |
| B | 1 | 2½ | ½ | 3 | 2 | 3 | 6 | 1 | 3 | 20% |
| C | 1 | 2½ | ½ | 3 | 3 | 3 | 9 | 2 | 6 | 24% |
| D | 1 | 2½ | ½ | 3 | 4 | 3 | 12 | 3 | 9 | 360%(*) |
| மொத்தம் | 4 | 10 | | 12 | 10 | | 30 | 6 | 18 | |

இது இப்போது பின்வருமாறு மாற்றமடைகிறது:

அட்டவணை II

| மண் வகை | ஏக்கர் | மூலதனம் (£) | இலாபம் (£) | உற்பத்தி விலை (£) | விளை பொருள் குவார்ட்டர் | விற்பனை விலை (£) | விற்று முதல் (£) | வாடகை | | உபரி இலாப வீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | குவார்ட்டர் | (£) | |
| A | 1 | 2½ + 2½ = 5 | 1 | 6 | 2 | 3 | 6 | 0 | 0 | 0 |
| B | 1 | 2½ + 2½ = 5 | 1 | 6 | 4 | 3 | 12 | 2 | 6 | 120% |
| C | 1 | 2½ + 2½ = 5 | 1 | 6 | 6 | 3 | 18 | 4 | 12 | 240% |
| D | 1 | 2½ + 2½ = 5 | 1 | 6 | 8 | 3 | 24 | 6 | 18 | 360% |
| | 4 | 20 | | | 20 | | 60 | 12 | 36 | |

(*) 1894-ம் வருடத்திய ஜெர்மன் பதிப்பில் அட்டவணையின் இந்தக் கட்டத்திற்குள் முறையே: 12%, 24%, 36% என்றுள்ளது.- ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

விளைவாகவே வாடகை உயர்கிறது, இந்த மூலதன அதிகரிப்புக்கேற்ற விகிதத்தில் அது உயர்கிறது. மூலதன முதலீடு அதிகரிப்பதன் விளைவாகவும் இந்த அதிகரிப்புக்கேற்ற விகிதத்திலும் விளைபொருளிலும் வாடகையிலும் ஏற்படும் இந்த அதிகரிப்பும், அதே தரத்திலான வாடகை தரும் நிலங்களின் சாகுபடிப் பரப்பு கூடுதலாக்கப்பட்டு, முன்பு அதே மண் வகைகளில் முதலீடு செய்யப் பட்ட அதே மூலதன முதலீட்டைக் கொண்டு சாகுபடி செய்யப்படும் போது ஏற்படுகிற அதிகரிப்பும் உற்பத்தி அளவையும் வாடகை அளவையும் பொறுத்தவரை ஒன்றேதான். எடுத்துக்காட்டாக அட்டவணை Iஐப் பொறுத்தவரை, ஏக்கர் ஒன்றுக்கு £ 2 ½கூடுதல் மூலதனம் B, C, D மண்வகைகள் ஒவ்வொன்றிலும் ஒரு கூடுதல் ஏக்கரில் முதலீடு செய்யப்படுமானால் அப்போதும் இதே விளைவுதான் ஏற்படும்.

மேலும், அதே பரப்பில் கூடுதல் மூலதனம் முதலீடு செய்யப்பட்டு முன்பு கிடைத்த அதே பலன் கிடைக்கிறதே தவிர மூலதன முதலீட்டின் உற்பத்தித் திறன் கூடுதலாவதில்லை என்பதையும் இங்கு நம் அனுமானம் குறித்திடுகிறது.

ஒப்பீட்டு விகிதங்கள் எல்லாம் இங்கு மாறாமலிருக்கின்றன. ஆனால் விகித வேறுபாடுகளைக் கருதாமல் வெறும் அளவு வேறுபாடுகளை மட்டும் பரிசீலிப்போமானால், பல்வேறு மண் வகைகளிலும் வேறுபாட்டு வாடகை மாறலாம் என்பது மெய்தான். எடுத்துக்காட்டாக கூடுதல் மூலதனம் B, D ஆகியவற்றில் மட்டும் முதலீடாகியிருப்பதாக கொள்வோம். ஆக Dக்கும் Aக்கும் இடையிலான வேறுபாடு = 7 குவார்ட்டர்; முன்போ அது 3 குவார்ட்டராக இருந்து. Bக்கும் Aக்கும் இடையிலான வேறுபாடு = 3 குவார்ட்டர்; முன்பே அது 1 குவார்ட்டராக இருந்தது; Cக்கும் Bக்கும் இடையிலான வேறுபாடு = -1; முன்போ அது + 1 ஆக இருந்தது. ஆனால் முதலாம் வகை வேறுபாட்டு வாடகையில் தீர்மானகர பங்கு வகிக்கும் இந்த அளவு வேறுபாடு சம மூலதன முதலீடுகளைக் கொண்டு உற்பத்தித் திறனிலான வேறுபாட்டைத் தெரிவிப்பதாய் உள்ளவரை, இவ்வேறுபாடு இங்கு சற்றும் கருத்துக்குரியதல்ல. ஏனென்றால் இது வெவ்வேறான கூடுதல் மூலதன முதலீடுகளின், அல்லது கூடுதல் முதலீடு என்று எதுவும் இல்லாததன் விளைவுதான்; அதே போது பல்வேறு நிலங்களிலும் சமமூலதனப்பகுதிகள் ஒவ்வொன்றுக்குமான வேறுபாடு மாறாமல் இருந்து வருகிறது.

III. கூடுதல் மூலதனங்கள் உபரி-உற்பத்தி கிடைக்கச் செய்கின்றன, இவ்விதம் உபரி-இலாபம் உருவாகச் செய்கின்றன; ஆனால் தமது அதிகரிப்புக்கேற்ற விகிதத்தில் அல்லாமல் குறைந்து செல்லும் வீதத்தில் இப்படிச் செய்கின்றன.

இந்த மூன்றாவது அனுமானத்தைப் பொறுத்த வரை, கூடுதலான இரண்டாம் மூலதன முதலீடுகள் பல்வேறு மண்வகைகள் இடையிலும் ஒரே சீராகப் பரவியுள்ளனவா அல்லவா என்பதும், உபரி - இலாப உற்பத்திக் குறைவு விகிதப்படி நடைபெறுகிறதா அல்லவா என்பதும், கூடுதல் மூலதன முதலீடுகள் எல்லாம் ஒரே வாடகை தரும் மண்வகைக்கு போய்ச் சேருகின்றனவா, அல்லது வெவ்வேறு தரத்திலான வாடகை தரும் நிலத்துண்டுகளிடையே சமசமாகவோ ஏற்றத்தாழ்வாகவோ பரவியுள்ளனவா என்பதும் இங்கேயும் கூட கருத்துக்குரியவை அல்ல. இங்கு வகுக்கப்பட வேண்டிய விதிக்கு இந்தக் காரணிகளெல்லாம் கருத்துக்குரியவை அல்ல. கூடுதல் மூலதன முதலீடுகள் வாடகை தரும் மண்வகைகளில் எந்த ஒன்றிலும் உபரி - இலாபம் பெற்றுத் தருகின்றன, ஆனால் மூலதனத்திலான அதிகரிப்புக்கு குறைந்து செல்லும் விகிதத்திலேயே இப்படிச் செய்கின்றன என்பது மட்டுமே அனுமானம் ஆகும். மேற்கண்ட அட்டவணையில் தரப்பட்டுள்ள எடுத்துக்காட்டுகளில், இந்தக் குறைவில் வரம்புகள் மிகச் சிறந்த D வகை நிலத்திலான முதல் மூலதன முதலீட்டின் விளைபொருளாகிய 4 குவார்ட்டர் = £ 12 என்பதும், படுமோசமான A வகை நிலத்திலான அதே மூலதன முதலீட்டின் விளைபொருளாகிய 1 குவார்ட்டர் = £ 3 என்பதும் ஆகும். மூலதன முதலீடு மாறாதிருக்க, ஆரம்ப மூலதனம் முதலீடு செய்யப்பட்டு மிகச் சிறந்த நிலத்தில் உற்பத்தியாவது உபரி-இலாபந்தரும் நில வகைகளில் ஏதேனுமொன்றிலான அடுத்தடுத்த மூலதன முதலீடுகள் உள்ளபடியே அம்முதலீடுகளின் உற்பத்தித் திறன் சரிந்து சென்று கொண்டிருக்கும் சூழலில் விளைவிக்கும் உற்பத்தியின் மேல் வரம்பு ஆகிறது; வாடகை ஏதும் பெற்றுத் தராததும் உபரி-இலாபம் ஏதும் கிடைக்கச் செய்யாததுமான படுமோசமான A வகை நிலத்தில் உற்பத்தியாவது அதன் அடி வரம்பு ஆகிறது. உயர்தர மண்வகைகளிலிருந்து அதே தரத்திலான புதிய நிலத் துண்டுகள் சாகுபடிப்பரப்போடு சேர்க்கப்படுவதும், சாகுபடி செய்யப்படும் மண் வகைகளில் ஏதேனுமொன்றின் அளவு அதிகரிப்பதுமான நேர்வை இரண்டாம் அனுமானம் குறிப்பது போலவே, Dக்கும் Aக்கும் இடையே, மிகச் சிறந்த வகைக்கும் படுமோசமான வகைக்கும் இடையே பல்வேறு

அட்டவணை III

| மண் வகை | ஏக்கர் | மூலதனம் (£) | இலாபம் (£) | உற்பத்தி விலை (£) | விளை பொருள் குவார்ட்டர் | விற்பனை விலை (£) | விற்று முதல் (£) | வாடகை குவார்ட்டர் | வாடகை (£) | உபரி இலாப வீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| A | 1 | 2 ½ | ½ | 3 | 1 | 3 | 3 | 0 | 0 | 0 |
| B | 1 | 2 ½+2 ½=5 | 1 | 6 | 2+1 ½=3 ½ | 3 | 10 ½ | 1 ½ | 4 ½ | 90% |
| C | 1 | 2 ½+2 ½=5 | 1 | 6 | 3+2 = 5 | 3 | 15 | 3 | 9 | 180% |
| D | 1 | 2 ½+2 ½=5 | 1 | 6 | 4+3 ½ =7 ½ | 3 | 22 ½ | 5 ½ | 16 ½ | 330% |
| | | 17 ½ | 3 ½ | 21 | 17 | | 51 | 10 | 30 | |

படித்தரத்திலான மண்வளம் கொண்ட கூடுதல் நிலத்துண்டுகள் சாகுபடி செய்யப்படும் நேர்வை மூன்றாம் அனுமானம் குறித்திடுகிறது. அடுத்தடுத்த மூலதன முதலீடுகள் பிரத்தியேகமாய் D வகை நிலத்தில் மட்டும் செய்யப்படுமானால், Dக்கும் Aக்கும் இடையே நிலவி வரும் வேறுபாடுகளையும், பிறகு Dக்கும் Cக்கும் இடையிலான வேறுபாடுகளையும் அதே போல் Dக்கும் Bக்கும் இடையிலான வேறு பாடுகளையும் அவை அளாவி நிற்கலாம், இம் முதலீடுகளெல்லாம் C வகை நிலத்தில் செய்யப்பட்டால், Cக்கும் Aக்கும் இடையிலான வேறுபாடுகளையும் Cக்கும் Bக்கும் இடையிலான வேறுபாடுகளையும் மட்டுமே அவற்றால் அளாவி நிற்க முடியும்; இம்முதலீடுகள் பிரத்தியேகமாய் Bஇல் மட்டும் செய்யப்பட்டால், Bக்கும் Aக்கும் இடையிலான வேறுபாடுகளை மட்டுமே அவற்றால் அளாவி நிற்க முடியும்.

ஆனால் விதி இதுதான்; இந்த மண் வகைகள் அனைத்திலும் வாடகையானது கூடுதல் மூலதன முதலீட்டுக் கேற்ற விகிதத்தில் அதிகரிக்காவிட்டாலும் அறுதியாக அதிகரிக்கிறது.

கூடுதல் மூலதனத்தோடு ஒப்பிடுகையிலும், அதேபோல் நிலத்தில் முதலீடாகிற மொத்த மூலதனத்தோடு ஒப்பிடுகையிலும் உபரி-இலாப

வீதம் குறைகிறது; ஆனால் உபரி-இலாபத்தின் அறுதிப் பருமன் அதிகரிக்கிறது; எப்படி மூலதனத்தின் மீதான பொது இலாப வீதம் குறைந்து செல்லும் போதே பெரும்பாலும், இலாபத்தின் அறுதித் திரள் கூடுதலாகிச் செல்கிறதோ அதே போலத்தான் இதுவும். எடுத்துக் காட்டாக, B வகையில் முதலீடாகிற மூலதனத்திற்கான சராசரி உபரி-இலாபம் முதலாவது முதலீட்டிற்கு 120% ஆக இருந்தது, இப்போது 90%ஆக இருக்கிறது. ஆனால் மொத்த உபரி-இலாபம் 1 குவார்ட்டரிலிருந்து 1½ குவார்ட்டராக அல்லது £3இலிருந்து £4 ½யாக அதிகரிக்கிறது. மொத்த வாடகை முன்னீடு செய்யப்படும் மூலதனத்தின் இருமடங்குப் பருமனோடு ஒப்பிடாமல் அதனளவில் பார்க்குமிடத்து அறுதியாக உயர்ந்துள்ளது. பல்வேறு மண் வகைகளிலிருந்து பெறப்படும் வாடகைகளிலான வேறுபாடும் அவற்றுக்கிடையிலான விகித உறவுகளும் இங்கு மாறலாம். ஆனால் வேறுபாடுகளிலான இந்த மாற்றம் வாடகைகள் ஒன்றுக்கொன்று ஒப்பளவில் அதிகரிப்பதன் காரியமாகுமே தவிர காரணமாகாது.

IV. உயர்தர மண் வகைகளிலான கூடுதல் மூலதன முதலீடுகள் ஆரம்ப முதலீடுகளைக் காட்டிலும் அதிக விளைபொருள் கிடைக்கச் செய்யும் நேர்வுகளை இதற்குமேல் பகுத்தாராயத் தேவையில்லை. இந்த அனுமானத்தின்படி கூடுதல் மூலதனம் எவ்வகை நிலத்தில் முதலீடு செய்யப்பட்டாலும் சரி, ஏக்கர் ஒன்றுக்கான வாடகை அதிகரிக்கும் என்பதும் கூடுதல் மூலதனத்தைக் காட்டிலும் கூடுதலான விகிதத்தில் அதிகரிக்கும் என்பதும் கூறாமல் விளங்கும். இந் நேர்வில் கூடுதல் மூலதன முதலீடும் மேம்பாடுகளும் சேர்ந்து வருகின்றன. முன்பு பெரியதொரு கூடுதல் மூலதனம் ஏற்படுத்திய அதே விளைவை அல்லது இன்னும் பெரிய விளைவை சிறியதொரு கூடுதல் மூலதனம் இப்போது ஏற்படுத்துகிற நேர்வும் இதில் அடங்கும். இந்த நேர்வும் முந்தைய நேர்வும் அப்படியே முழுதொத்தவையல்ல; இவற்றுக்கிடையிலான வேறுபாடு எல்லா மூலதன முதலீடுகளிலும் முக்கியமானது. எடுத்துக்காட்டாக குறிப்பிட்ட வடிவில் ஈடுபடுத்தப்படும் 100ஆனது 10 இலாபமும் 200 ஆனது 40 இலாபமும் தருமானால் இலாபமானது 10%இலிருந்து 20%ஆக உயர்ந்திருக்கிறது; இவ்வகையில் இதுவும் 50 இன்னும்கூட பயனுள்ள முறையில் ஈடுபடுத்தப் படுகையில் 5க்குப் பதில் 10 இலாபம் தருவதும் ஒன்றே. இலாபமானது விளைபொருளில் ஒரு விகிதாச்சார அதிகரிப்புடன் கட்டுண்டிருப்பதாக இங்கு வைத்துக் கொள்கிறோம். ஆனால் வேறுபாடு என்னவென்றால்: ஒரு நேர்வில் மூலதனத்தை இரு மடங்காக்கியாக வேண்டும், மற்றதிலோ பழையபடி

அதே மூலதனத்தைக் கொண்டு இருமடங்கு விளைவு ஏற்படச் செய்தாக வேண்டும். (1) உயிருள்ள உழைப்பிலும் பொருள் வடிவாக்கப்பட்ட உழைப்பிலும் பாதியளவைக் கொண்டு முன்போல் அதே அளவு விளைபொருளை உற்பத்தி செய்வதும், (2) அதே உழைப்பைக் கொண்டு முன்போல் இருமடங்கு விளை பொருளை உற்பத்தி செய்வதும், (3) இருமடங்கு உழைப்பைக் கொண்டு முன்போல் நான்கு மடங்கு விளைபொருளை உற்பத்தி செய்வதும் ஒன்றல்ல என்பது உறுதி. முதல் நிலையில் உழைப்பு - உயிருள்ளதோ பொருள் வடிவாக்கப் பட்டதோ - விடுவிக்கப்படுகிறது, அதை வேறுவகையில் பயன் படுத்திக் கொள்ளலாம்; பயன்படத் தயாராயிருக்கும் உழைப்பும் மூலதனமும் அதிகரிக்கின்றன. மூலதனம் (மற்றும் உழைப்பு) விடுவிக்கப்படுவது அதனளவில் செல்வப் பெருக்கம் ஆகாது; இந்தக் கூடுதல் மூலதனம் திரட்டலின் மூலமாய் பெறப்பட்டிருந்தால் ஏற்படக்கூடிய அதே விளைவுதான் இங்கும் ஏற்படுகிறது; ஆனால் மூலதனம் திரட்டுகிற வேலை இதனால் மிச்சமாகிறது.

100 என்னுமொரு மூலதனம் 10 மீட்டரில் ஒரு பண்டம் உற்பத்தி செய்து இருப்பதாகக் கொள்வோம். இந்த மூலதனத்தில் மாறா-மூலதனமும், உயிருள்ள உழைப்பும், இலாபமும் அடங்கியுள்ளன. ஒரு மீட்டருக்கு ஆகும் செலவு 10. இப்போது அதே 100 மூலதனத்தைக் கொண்டு 20 மீட்டர் உற்பத்தி செய்ய முடியுமானால் ஒரு மீட்டருக்காகும் செலவு 5. மறுபுறம், 50 மூலதனத்தைக் கொண்டு 10 மீட்டர் உற்பத்தி செய்ய முடியுமானால், அப்போதும் ஒரு மீட்டருக்காகும் செலவு 5; முந்தைய சரக்கு வழங்கலே போதுமென்றால் 50 மூலதனம் விடுவிக்கப்படுகிறது. 40 மீட்டர் உற்பத்தி செய்வதற்கு 200 மூலதனம் முதலீடு செய்தாக வேண்டும் என்றால் அப்போதும் ஒரு மீட்டருக்காகும் செலவு 5. இங்கு மதிப்பு அல்லது விலையின் நிர்ணயிப்பில் வேறுபாடு ஏதும் தெரியவில்லை; மூலதன முதலீட்டுக்கேற்ற விகிதத்தில் உற்பத்தி செய்யப்படும் அளவிலும் வேறுபாடு இல்லை. ஆனால் முதல் நிலையில் கூடுதல் மூலதனம் மிச்சமாகிறது*. அவசியமானால் உற்பத்தியை இரு மடங்காக்குவதற்கு இதைப் பயன்படுத்திக் கொள்ளலாம்; இரண்டாம் நிலையில் மூலதனம் விடுவிக்கப் படுகிறது**.

---

(*) 1894ஆம் வருட ஜெர்மன் பதிப்பில் இது மூலதனம் விடுவிக்கப்படுகிறது என்றுள்ளது. ஆங்கிலப்பதிப்பாசிரியர்.

(**) மேலது, கூடுதல் மூலதனம் மிச்சம் பிடிக்கப்படுகிறது. - ஆங்கிலப்பதிப்பாசிரியர்

மூன்றாம் நிலையில் மூலதன முதலீட்டை அதிகப்படுத்துவதன் மூலம்தான் உற்பத்தி அளவை அதிகப்படுத்த முடியும்; ஆனால் பழைய உற்பத்தித் திறனைக் கொண்டு உற்பத்தி அளவை அதிகப்படுத்தி வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தால் மூலதன முதலீட்டை அதே விகிதத்தில் அதிகப்படுத்த வேண்டியதில்லை. (இது பகுதி Iக்குரியது)

முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் கண்ணோட்டத்தில், மாறும்-மூலதனத்தை ஈடுபடுத்துவதை விட மாறா-மூலதனத்தை ஈடுபடுத்துவது மலிவானதாகும்; இது உபரி-மதிப்பைக் கூடுதலாக்கு வதற்குப் பதில் அடக்க-விலையைக் குறையச் செய்வதாகும் - உபரி-மதிப்பைப் படைக்கும் அடிக்கூறாகிய உழைப்பிலும் கூட செலவுகளை மிச்சப்படுத்துவது உபரி-மதிப்பிலான உயர்வின் மூலம் கிடைக்கும் அதே பயனை முதலாளிக்குக் கிடைக்கச் செய்கிறது; ஆளும் உற்பத்தி-விலை மாறாதிருக்கும் வரை இது அவருக்கு இலாபம் தேடிக் கொடுக்கிறது. உண்மையில் கடன்-செலாவணியின் வளர்ச்சியும் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறைக்குரிய கடன்-மூலதனச் செறிவும் இதற்கு முன்தேவையாகும். ஒருபுறம், £100 கூடுதல் மாறா-மூலதனம் ஈடுபடுத்துகிறேன், இந்த £100 ஐந்து தொழிலாளர் களின் ஓராண்டு கால உற்பத்தியாகும்; மறுபுறம் மாறும்-மூலதனமாக £100 ஈடுபடுத்துகிறேன் - உபரிமதிப்பு வீதம் 100% என்றால், ஐந்து தொழிலாளர்களால் படைக்கப்படும் மதிப்பு £ 200; மறுபுறம் £ 100 மாறா - மூலதனத்தின் மதிப்பு = £ 100, அதேபோது வட்டி வீதம் = 5% என்றால் மூலதனம் என்ற முறையில் இந்த மாறா - மூலதனத்தின் மதிப்பு £ 105 ஆக இருக்கலாம். குறிப்பிட்ட அதே பணத் தொகைகள் - உற்பத்திக்கு அவை மாறா-மூலதன மதிப்புப் பருமன்களாக முன்னீடு செய்யப் படுகின்றனவா மாறும்-மூலதன மதிப்புப் பருமன்களாக முன்னீடு செய்யப்படுகின்றனவா என்பதைப் பொறுத்து - அவற்றால் உற்பத்தி செய்யப்படுகிறவற்றின் கோணத்திலிருந்து மிகவும் வெவ்வேறான மதிப்புகளை தெரிவிக்கின்றன. முதலாளியின் கண்ணோட்டத்தில் சரக்குகளின் அடக்க-விலையைப் பொறுத்தவரை இன்னுமொரு வேறுபாடு இருக்கிறது: அதாவது £ 100 மாறா-மூலதனம் நிலை - மூலதனமாக முதலீடாகிற அளவில் அதில் தேய்மானம் மட்டுமே சரக்கின் மதிப்பில் சேருகிறது; அதேபோது கூலியாக முதலீடாகிற £ 100 சரக்கில் முழுமையாய் மறுவுற்பத்தி செய்யப்பட்டாக வேண்டும்.

குடியேற்றக்காரர்களையும், பொதுவாக சுயேச்சையான சிறு உற்பத்தியாளர்களையும் பொறுத்த வரை - இவர்களுக்கு மூலதனம்

எட்டாக் கனியாகவே இருக்கிறது அல்லது உயர்ந்த வட்டி வீதங்களில் மட்டுமே கிடைக்கிறது - உற்பத்திப் பண்டத்தில் கூலியைக் குறிக்கும் பகுதி அவர்களுக்கு வருவாய் ஆகும்; முதலாளிக்கோ மூலதன முன்னீடு ஆகும். ஆகவே முன்னவர்கள் இந்த உழைப்புச் செலவீட்டை தங்களுக்கு மிக முக்கியமானதாகிய உழைப்பின் பலனை அடைவதற்கு இன்றியமையாத முன்தேவையாக கருதுகின்றனர். ஆனால் அவர்களின் உபரி-உழைப்பைப் பொறுத்தவரை, அவசிய-உழைப்பைக் கழித்த பிறகு அது உபரி-உற்பத்தியில் ஈடேற்றம் பெறுவது தெளிவாகிறது; அவர்களால் அதை விற்கவோ தமக்காகப் பயன்படுத்திக் கொள்ளவோ முடிகிற போதெல்லாம், தமக்குச் செலவேதும் இல்லாமல் கிடைத்த ஒன்றாக அதைக் கருதுகிறார்கள்; ஏனென்றால் பொருள் வடிவாக்கப் பட்ட உழைப்பு ஏதும் அதற்காக அவர்களுக்கு செலவாகவில்லை. பொருள் வடிவாக்கப்பட்ட உழைப்பின் செலவீடு மட்டுமே செல்வத்தின் உடைமை-மாற்றமாக அவர்களுக்குத் தெரிகிறது. அவர்கள் தமது உற்பத்திப் பண்டத்தை முடிந்த வரை அதிக விலைக்கு விற்கவே முயல்கிறார்கள்; ஆனால் மதிப்பை விடவும் முதலாளித்துவ உற்பத்தி - விலையை விடவும் குறைந்த விலைக்கு விற்க நேரிட்டாலும் கூட அது அவர்களுக்கு இலாபமாகவே தெரிகிறது - இந்த இலாபத்தை எதிர்பார்த்து கடன் பட்டிருக்கவோ அடைமானம் போன்றவற்றிற்கு ஆட்பட்டிருக்கவோ கூடாது, அவ்வளவுதான். மறுபுறம் முதலாளிக்கோ மாறா-மூலதனம், மாறும்-மூலதனம் ஆகிய இரண்டின் முதலீடும் மூலதன முன்னீட்டைக் குறிக்கிறது. மாறா-மூலதனம் ஒப்பளவில் கூடுதலாய் முன்னீடு செய்யப்படுவது அடக்க-விலையைக் குறையச் செய்கிறது; மற்றவை மாறாதிருக்க, சரக்குகளின் மதிப்பையும் குறையச் செய்கிறது. ஆகவே, இலாபம் உபரி உழைப்பிலிருந்து மட்டுமே மாறும்-மூலதனம் ஈடுபடுத்தப்படு வதிலிருந்து மட்டுமே வருகிறது என்றாலும், உயிருள்ள உழைப்புதான் தமது உற்பத்திச் செலவுகளில் விலையுயர்ந்த கூறு என்பதாக தனிப்பட்ட முதலாளிக்கு தோன்றக் கூடும்; முதலில் அவர் அதனை குறைந்தபட்ச நிலைக்கு குறைத்தாக வேண்டும். உயிருள்ள உழைப்புடன் ஒப்பிடுகையில் இறுகிய உழைப்பை ஒப்பளவில் கூடுதலாய்ப் பயன்படுத்துவது சமுதாய உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரிப்பதையும் சமுதாயச் செல்வம் கூடுதலாவதையும் குறிப்பதாகும் என்ற உண்மைதான் முதலாளித்துவ வழியில் இப்படி உருத்திரிந்து காணப்படுகிறது. போட்டியின் கண்ணோட்டத்தில், எல்லாமே இப்படித் திரிந்தும் தலைகீழாய் புரண்டும் தெரிகிறது.

உற்பத்தி-விலைகள் மாறாமலிருப்பதாகக் கொண்டால் மேலான மண்வகைகளில், அதாவது B முதலான எல்லா மண் வகைகளிலும் கூடுதல் மூலதனம் முதலீடு செய்யப்படுகையில், உற்பத்தித் திறன் மாறாமலிருக்கலாம், உயரலாம் - அல்லது குறையலாம். A வகை மண்ணைப் பொறுத்த வரை, நாம் அனுமானம் செய்துள்ள நிலைமைகளில் கூடுதல் மூலதனம் முதலீடு செய்யப்படுகையில் உற்பத்தித் திறன் மாறாமலிருந்தாக வேண்டும் - நிலம் வாடகையேதும் தராமலிருப்பது இவ்விதம் தொடர்கிறது - அல்லது உயர்ந்தாக வேண்டும்; உற்பத்தித் திறன் உயரும் போது A நிலத்தில் முதலீடாகியுள்ள மூலதனத்தின் ஒரு பகுதி வாடகை தரும், மறுபகுதி தராது. ஆனால் A மண்ணிலான உற்பத்தித் திறன் குறையும் படியான கூடுதல் மூலதன முதலீடு சாத்தியப்படாது; ஏனென்றால் அப்போது உற்பத்தி-விலை மாறாமலிருக்காது, உயரும். ஆனால் இந்த நிலைமைகளில் எல்லாம், அதாவது கூடுதல் முதலீடுகளால் கிடைத்திடும் உபரி-உற்பத்தி அம் முதலீடுகளுக்கு ஏற்ற விகிதத்தில் இருந்தாலும் சரி, அல்லது அதை விடக் கூடுதலாகவோ குறைவாகவோ இருந்தாலும் சரி-ஆக, மூலதனம் அதிகரிக்கும் போது அதன் மீதான உபரி -இலாப வீதம் மாறாமலிருந்தாலும் சரி, உயர்ந்தாலும் சரி, குறைந்தாலும் சரி-ஏக்கர் ஒன்றுக்கான உபரி - உற்பத்தியும் அதற்கொப்ப ஏக்கர் ஒன்றுக்கான உபரி - இலாபமும் அதிகரிக்கின்றன; ஆகவே தானிய வடிவிலும் பண வடிவிலும் உள்ளுறை வாடகையும் கூட அதிகரிக்கிறது. உபரி-இலாபம் அல்லது வாடகையின் பெறும் அளவு வழிப்பட்ட பெருக்கத்தை ஏக்கருக்கு இவ்வளவு என்று கணக்கிடுகையில், அதாவது அதிகரித்துச் செல்கிற ஒரு கணியத்தை ஒரு மாறா அலகின் - இங்கு ஓர் ஏக்கர் அல்லது ஹெக்டேர் என்பது போன்ற திட்டமான நிலப்பரப்பின் - அடிப்படையில் கணக்கிடுகையில், அது உயர்ந்து செல்லும் விகிதமாக வெளிபடுகிறது. ஆகவே இந்நிலைமைகளில் ஏக்கருக்கு இவ்வளவு என்று கணக்கிடப்படும் வாடகையின் பருமன் நிலத்தில் முதலீடாகிற மூலதனத்தில் ஏற்படும் அதிகரிப்பின் விளைவாகவே பெருகிவிடுகிறது. மேலும் இது நடைபெறுகையில், உற்பத்தி விலைகள் மாறாமலிருப்பதாக கொள்கிறோம்; மறுபுறம், கூடுதல் மூலதனத்தின் உற்பத்தித் திறன் மாறாமலிருக்கிறதா, குறைகிறதா, அல்லது அதிகரிக்கிறதா என்பதையும் கருதாமல் விடுகிறோம். இந்தக் காரணிகளால் ஏக்கர் ஒன்றுக்குரிய வாடகை பருமனிலான அதிகரிப்பின் அளவெல்லை மாறியமைகிறதே தவிர, இவ்வதிகரிப்பே இல்லாமல் போய்விடுவதில்லை. இது

வேறுபாட்டு வாடகை II க்கே உரிய தனிச் சிறப்பான நிகழ்வும், அதனை வேறுபாட்டு வாடகை Iஇலிருந்து வேறுபடுத்தி காட்டுவதும் ஆகும். கூடுதல் மூலதன முதலீடுகள் ஒரே நிலத்தில் கால வகையில் அடுத்தடுத்து செய்யப்படுவதற்கு பதிலாக, ஏற்ற தரம் வாய்ந்த புதிய கூடுதல் நிலத்தில் இடவகையில் அடுத்தடுத்து செய்யப்படுமானால், மொத்த வாடகை அளவு அதிகரித்திருக்கும், ஏற்கெனவே தெளிவாக்கியது போல் மொத்த சாகுபடிப் பரப்பின் சராசரி வாடகையும் அதிகரித்திருக்கும், ஆனால் ஏக்கர் ஒன்றுக்கான வாடகைப் பருமன் அதிகரித்திருக்காது. மொத்த உற்பத்தி, உபரி-உற்பத்தி ஆகியவற்றின் அளவையும் மதிப்பையும் பொறுத்த வரை, விளைவில் மாற்றமில்லை எனக் கொண்டால், இன்னுஞ் சிறிய நிலப்பரப்பில் மூலதனம் குவிக்கப்படுவது ஏக்கர் ஒன்றுக்கான வாடகை அளவை அதிகரிக்கச் செய்கிறது; ஆனால் இதே நிலைமைகளில் இன்னும் பெரிய நிலப்பரப்பில் மூலதனம் பரவலாக்கப்படுவது-ஏனைய காரணிகள் மாறாதிருக்க - இவ்விளைவை தோற்றுவிப்பதில்லை. ஆனால் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை மேன்மேலும் வளர வளர ஒரே நிலப்பரப்பிலான மூலதனக் குவிப்பும் மேன்மேலும் வளர்கிறது; ஏக்கர் ஒன்றுக்கான வாடகையும் உயர்ந்து செல்கிறது. ஆகவே இரு நாடுகளில் உற்பத்தி-விலைகள் ஒன்றாகவும் மண்வகைகளிடையிலான வேறுபாடுகள் ஒன்றாகவும் முதலீடாகிற மூலதன அளவுகள் ஒன்றாகவும் உள்ளன என்றும், ஆனால் இந்த ஒரே அளவு மூலதனம் ஒரு நாட்டின் குறுகிய நிலப்பரப்பின் அடுத்தடுத்த முதலீடுகளின் வடிவில், கூடுதலாகவும், மறுநாட்டின் விரிந்த பரப்பில் ஒருங்கிணைந்த முதலீடுகளின் வடிவில் கூடுதலாகவும் முதலீடாகிறது என்றும் கொள்வோமானால், இரு நாடுகளிலும் மொத்த வாடகை அளவு ஒன்றாகவே இருக்குமென்றாலும், ஏக்கர் ஒன்றுக்கான வாடகையும், நிலத்தின் விலையும் முதல் நாட்டில் அதிகமாகவும் இரண்டாவது நாட்டில் குறைவாகவும் இருக்கும். ஆக, வாடகைப் பருமனிலான வேறுபாட்டுக்கு இங்கே மூலதனம் முதலீடாகிற விதத்திலான றேுபாட்டின் விளைவு என்று மட்டும் விளக்கமளிக்கலாமே தவிர, பல்வேறு மண்வகைகளின் இயற்கை வளத்திலான வேறுபாட்டின் விளைவு என்றோ ஈடுபடுத்தப்படும் உழைப்பளவிலான வேறுபாட்டின் விளைவு என்றோ விளக்கமளிப்பதற்கில்லை.

இங்கு உபரி-உற்பத்தி என்று சொல்லும் போதெல்லாம் விளைபொருளில் உபரி-இலாபத்தை குறித்திடும் ஈவுப்பகுதியைத் தான் சொல்கிறோம் என்று புரிந்து கொள்ள வேண்டும். பொதுவாக,

விளைபொருளில் மொத்த உபரி-மதிப்பைக் குறித்திடும் பகுதியை, அல்லது சில சந்தர்ப்பங்களில் சராசரி இலாபத்தை குறித்திடும் பகுதியை உபரி-உற்பத்தி என்கிறோம். இந்தச் சொல் வாடகை தரும் மூலதனத்தைப் பொறுத்த வரை, மேற்கொள்கிற சிறப்பான பொருள், முன்பே சுட்டிக் காட்டியது போல, தவறான புரிதலுக்கு வழிகோலி விடுகிறது.

## அத்தியாயம் XLII

## வேறுபாட்டு வாடகை II. —இரண்டாம் நேர்வு: குறையும் உற்பத்தி-விலை

**கூடுதல் மூலதன முதலீடுகளின் மீதான உற்பத்தித் திறன் மாறாமலோ, குறைந்து கொண்டோ உயர்ந்து கொண்டோ இருக்கும் போது உற்பத்தி - விலை குறையலாம்.**

### I. கூடுதல் மூலதன முதலீட்டின் உற்பத்தித் திறன் மாறாதிருத்தல்.

இங்கு, பல்வேறு மண் வகைகளிலும் முதலீடாகிற மூலதனத்தைக்கேற்ற விகிதத்திலும் அந்தந்த மண் வகையில் தரத்துக்கேற்பவும் விளைபொருள் அதிகரிப்பதாகக் கொள்கிறோம். மண் வகைகளிடையிலான வேறுபாடுகள் மாறாதிருப்பதாகக் கொண்டால் மூலதன முதலீடு அதிகரிப்பதற்கேற்ற விகிதத்தில் உபரி-உற்பத்தியும் அதிகரிக்கிறது என்பதே இதன் பொருள். ஆகவே இந்நேர்வில் A வகை நிலத்திலான எந்த கூடுதல் மூலதன முதலீடும் வேறுபாட்டு வாடகையைப் பாதிப்பதில்லை. இவ்வகை நிலத்திற்கு உபரி-இலாப வீதம் = 0; கூடுதல் மூலதனத்தின் உற்பத்தித் திறனும், எனவே உபரி-இலாப வீதமும் மாறாமல் இருப்பதாக நாம் அனுமானம் செய்து கொண்டிருப்பதால் உபரி-இலாபம் = 0 என்ற நிலையே தொடர்ந்து நீடிக்கிறது.

இந்நிலைமைகளில், ஆளும் உற்பத்தி-விலை குறைய வேண்டுமானால் Aயில் உற்பத்தி - விலை ஆளும் காரணியாய் இல்லாது ஒழிந்து ஆக வேண்டும்; அப்போது அடுத்தபடி உயர்ந்த தரமான Bவகை நிலமோ, Aஐக் காட்டிலும் உயர் தரமான வேறொரு வகை நிலமோ Aயின் இடத்துக்கு வருகிறது. அதாவது மூலதனம் Aயிருந்து விலக்கிக் கொள்ளப்படுகிறது, Cவகை நிலத்தின் உற்பத்தி-விலை ஆளும் உற்பத்தி விலையாகி விடுமானால், A, B ஆகியவற்றிலிருந்தும் கூட விலக்கிக் கொள்ளப்படலாம்; இவ்வாறு Cயை விடக் கீழ்த் தரமான எல்லா மண் வகைகளும் தானிய உற்பத்தி செய்யும் மண்

வகைகளிடையிலான போட்டியிலிருந்து ஒழிந்து போகும். நாம் அனுமானம் செய்து கொண்ட நிலைமைகளில், கூடுதல் மூலதன முதலீடுகளின் கூடுதல் விளைபொருள் வேண்டலை நிறைவு செய்வது இதற்கான முன் தேவையாகும்; எனவே A முதலான கீழ்த்தர மண் வகைகளின் உற்பத்தி முழு நிறைவான வழங்கலை மீண்டும் ஏற்படுத்துவதற்கு தேவையற்றதாகிறது.

அட்டவணை IIஐ எடுத்துக்காட்டாகக் கொள்வோம்; ஆனால் 20 குவார்ட்டருக்குப் பதில் இப்போது 18 குவார்ட்டர் தானியம் வேண்டலை நிறைவு செய்வதாகக் கொள்வோம். A வகை நிலம் ஒழிந்து போகும்; குவார்ட்டருக்கு 30 ஷில்லிங் என்பதை உற்பத்தி - விலையாகக் கொண்ட B*. மண் வகை ஆளும் மண் வகையாகி விடும். வேறுபாட்டு வாடகை அப்போது பின் வருமாறு வடிவெடுக்கிறது.

ஆகவே அட்டவணை II உடன் ஒப்பிடுங்கால் நில - வாடகை £36இலிருந்து £9 ஆகவும், தானிய வடிவில் 12 குவார்ட்டரிலிருந்து 6 குவார்ட்டராகவும் குறைந்திருக்கும்; மொத்த விளைபொருள் 2 குவார்ட்டர் மட்டுமே அதாவது 20இலிருந்து 18ஆகக் குறைந்திருக்கும். மூலதனத்தின் அடிப்படையில் கணக்கிடப்படும் உபரி - இலாப வீதம் மூன்றிலொரு பங்காக, அதாவது 180% இலிருந்து 60%**.ஆக குறைந்திருக்கும். இவ்வாறு இங்கே உற்பத்தி - விலை குறையும் போதே தானிய வடிவிலும் பண வடிவிலுமான வாடகையும் குறைகிறது.

அட்டவணைI உடன் ஒப்பிடுங்கால், பண வாடகை மட்டுமே குறைகிறது; இரு நிலைகளிலுமே தானிய வாடகை 6 குவார்ட்டர்தான்; ஆனால் அது ஒரு நிலையில் £18க்கும் மறு நிலையில் £9க்கும் ஒப்பாகிறது. Cவகை நிலத்துக்கு ***. அட்டவணை உடன் ஒப்பிடுங்கால், தானிய வாடகை மாறாதிருக்கிறது. உண்மையில், ஒரே சீராகச் செயல்படும் கூடுதல் மூலதனத்திலிருந்து விளையும் கூடுதல் உற்பத்தியினால்தான் Aவகை நிலத்தின் விளைபொருள் சந்தையிலிருந்து விலக்கப்படுகிறது: இதனால் A வகை நிலம் போட்டியிடும் உற்பத்திச் செயலி என்ற நிலையிலிருந்து ஒழிந்து போகிறது. இதன் விளைவாகத்தான் புதிய வேறுபாட்டு வாடகைI உருவாகிறது; இதில் உயர்தர B வகை நிலம் முன்பு கீழ்த்தர A வகை நிலம் வகித்த அதே பங்கினை வகிக்கிறது.

---

(*) 1894ஆம் வருடத்திய ஜெர்மன் பதிப்பில் D என்றுள்ளது.- ஆங்கிலப்பதிப்பாசிரியர்.

(**) மேலது: சரிபாதியாக, 180%இலிருந்து 90%. ஆங்கிலப்பதிப்பாசிரியர்.

(***) மேலது: மேற்றும் D வகை நிலத்துக்கு.- ஆங்கிலப்பதிப்பாசிரியர்.

*அட்டவணை IV*

| மண் வகை | ஏக்கர் | மூலதனம் (£) | இலாபம் (£) | உற்பத்தி விலை (£) | விளை பொருள் குவார்ட்டர் | விற்பனை விலை (£) | விற்று முதல் (£) | வாடகை | | உபரி இலாப வீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | குவார்ட்டர்தானியம் | பணமாக (£) | |
| B | 1 | 5 | 1 | 6 | 4 | 1 ½ | 6 | 0 | 0 | 0 |
| C | 1 | 5 | 1 | 6 | 6 | 1 ½ | 9 | 2 | 3 | 60% |
| D | 1 | 5 | 1 | 6 | 8 | 1 ½ | 12 | 4 | 6 | 120% |
| மொத்தம் | 3 | 15 | 3 | 18 | 18 | | 27 | 6 | 9 | |

*அட்டவணை IV அ*

| மண் வகை | ஏக்கர் | மூலதனம் (£) | இலாபம் (£) | உற்பத்தி விலை (£) | விளை பொருள் குவார்ட்டர் | விற்பனை விலை (£) | விற்று முதல் (£) | வாடகை | | உபரி இலாப வீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | குவார்ட்டர்தானியமாக | பணமாக (£) | |
| B | 1 | 5 | 1 | 6 | 4 | 1½ | 6 | 0 | 0 | 0 |
| C | 1 | 7½ | 1½ | 9 | 9 | 1½ | 13½ | 3 | 4½ | 60% |
| D | 1 | 5 | 1 | 6 | 8 | 1½ | 12 | 4 | 6 | 120% |
| மொத்தம் | 3 | 17½ | 3½ | 21 | 21 | | 31½ | 7 | 10½ | |

ஆகவே, ஒருபுறம், B இலிருந்தான வாடகை மறைந்து விடுகிறது; மறுபுறம் B, C, D ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடுகளில் - நமது அனுமானப்படி - கூடுதல் மூலதன முதலீட்டால் எவ்வித மாற்றமும்

ஏற்கப்படவில்லை. விளைபொருளில் வாடகையாக மாற்றம் அடையும் பகுதி குறைந்து போகிறது.

மேற்கண்ட விளைவானது - A இல்லாமலே வேண்டல் நிறைவு செய்யப்படுவது - ஒரு வேளை C நிலத்திலோ D நிலத்திலோ அல்லது அவை இரண்டிலுமோ மூலதனத்தை இருமடங்குக்குமேல் முதலீடு செய்வதன் மூலம் அடையப்பெற்றிருக்குமானால், காரியங்கள் வேறு தன்மை பெற்றிருக்கும். எடுத்துக்காட்டாக மூன்றாவது மூலதன முதலீடு C நிலத்தில் செய்யப்படுமானால்:

அட்டவணை IV உடன் ஒப்பிடுங்கால் இந்நேர்வில், C நிலத்தின் விளைபொருள் 6இலிருந்து 9 குவார்ட்டராகவும், உபரி உற்பத்தி 2இலிருந்து 3 குவார்ட்டராகவும், பண-வாடகை £3இலிருந்து £4½ ஆகவும் அதிகரித்துள்ளன. ஆனால் பண-வாடகை £12 ஆக இருந்த அட்டவணை* உடனும் £6ஆக இருந்த அட்டவணை உடனும் ஒப்பிடுங்கால் அவ்வாடகை குறைந்துள்ளது. தானியமாக மொத்த வாடகை அளவு=7 குவார்ட்டர்; இது அட்டவணை II உடன் (12 குவார்ட்டர்) ஒப்பிடுங்கால் குறைந்துள்ளது. அட்டவணை I உடன் (6குவார்ட்டர்) ஒப்பிடுங்கால் உயர்ந்துள்ளது; பணமாக (£10 ½) அது இரண்டில் எதனுடன் (£18 மற்றும் £36) ஒப்பிட்டாலும் குறைந்துள்ளது.

மூன்றாவது £2½ மூலதன முதலீடானது நிலத்தில் பயன்படுத்தப் பட்டிருந்தால் அது உற்பத்தி அளவை நிச்சயம் மாற்றியிருக்கும் என்றாலும் வாடகையை அப்படியே விட்டிருக்கும்; ஏனென்றால் நமது அனுமானப்படி அடுத்தடுத்த முதலீடுகள் ஒரே மண் வகையில் எவ்வித வேறுபாட்டையும் தோற்றுவிப்பதில்லை, B மண்-வாடகை ஏதும் தருவதும் இல்லை.

மறுபுறம், மூன்றாவது மூலதன முதலீடு Cக்குப் பதில் D நிலத்தில் பயன்படுத்தப்படுவதாகக் கொள்வோமானால் பெறப்படுவது பின்வருமாறு:

இங்கு மொத்த உற்பத்தி = 22 குவார்ட்டர், அதாவது அட்டவணை Iஇன் மொத்த உற்பத்தியைப் போல் இருமடங்குக்கும் கூடுதலாகும். ஆனால் முதலீடாகிற மூலதனம் £10க்குப் பதில் £17 ½தான், அதாவது இருமடங்கு அல்ல, மொத்த உற்பத்தி அட்டவணை IIஇன் மொத்த உற்பத்தியை விடவும் 2 குவார்ட்டர் அதிகம்; ஆனால் அட்டவணை IIஇல் முதலீடாகிற மூலதனம் அதிகமாகும். அதாவது £20.

(*) மேலது: ..ஆங்கிலப்பதிப்பாசிரியர்

*அட்டவணை IVஆ*

| மண் வகை | ஏக்கர் | மூலதனம் (£) | இலாபம் (£) | உற்பத்தி விலை (£) | விளை பொருள் குவார்ட்டர் | விற்பனை விலை (£) | விற்று முதல் (£) | வாடகை: குவார்ட்டர் தானியமாக | வாடகை: பணமாக (£) | உபரி இலாப வீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| B | 1 | 5 | 1 | 6 | 4 | 1½ | 6 | 0 | 0 | 0 |
| C | 1 | 5 | 1 | 6 | 6 | 1½ | 9 | 2 | 3 | 60% |
| D | 1 | 7 ½ | 1½ | 9 | 12 | 1½ | 18 | 6 | 9 | 120% |
| மொத்தம் | 3 | 17½ | 3½ | 21 | 22 | | 33 | 8 | 12 | |

*அட்டவணை I உடன் ஒப்பிடுங்கால், D நிலத்திலிருந்து தானியமாகப் பெறப்படும் வாடகை 3* இலிருந்து 6 குவார்ட்டராக அதிகரிக்கிறது; £9 பண-வாடகையோ மாறாதிருக்கிறது. அட்டவணை II உடன் ஒப்பிடுங்கால் Dயிலிருந்து பெறப்படும் தானிய வாடகை அப்படியே, அதாவது 6 குவார்ட்டராக இருந்து வருகிறது; ஆனால் பண - வாடகை £18இலிருந்து £9ஆகக் குறைகிறது.*

*மொத்த வாடகைகளை ஒப்பு நோக்குகையில் அட்டவணை IVஆ என்பதில் தானிய வாடகை = 8 குவார்ட்டர்; இது அட்டவணை Iஇல் தானிய வாடகை=6 குவார்ட்டர் என்பதை விடவும் அட்டவணை IVஅ என்பதில் தானிய வாடகை=7 குவார்ட்டர் என்பதை விடவும் அதிகம்; ஆனால் இது அட்டவணை IIஇல் தானிய வாடகை=12 குவார்ட்டர் என்பதை விடக் குறைவு. அட்டவணை IVஆ என்பதில் பண - வாடகை =£12 ஆனது அட்டவணை IVஅ என்பதில் பண-வாடகை = £ 10 ½ என்பதை விட அதிகம், அட்டவணை Iஇல் பண-வாடகை = £18 என்பதை விடவும் அட்டவணை IIஇல் பண-வாடகை = £36 என்பதை விடவும் குறைவு.*

*IVஅ அட்டவணையின் நிலைமைகளில் (B நிலத்திலிருந்து வாடகை ஒழிந்து விட்ட நிலையில்) மொத்த வாடகை அளவு I*

(*) 1894ஆம் வருடத்திய ஜெர்மன் பதிப்பில் இது 2 என்றுள்ளது.-ஆங்கிலப்பதிப்பாசிரியர்.

அட்டவணையின் வாடகை அளவுக்கு சமமாக வேண்டுமானால் இன்னும் £ 6 உபரி உற்பத்தி தேவைப்படுகிறது, அதாவது £ 1½என்னும் புதிய உற்பத்தி-விலையில் 4 குவார்ட்டர் தேவைப்படுகிறது. அப்போது மொத்த வாடகை அளவு அட்டவணை Iஇல் போலவே மீண்டும் £ 18 ஆகிறது. தேவைப்படுகிற கூடுதல் மூலதனத்தை C அல்லது Dநிலத்தில் முதலீடு செய்கிறோமா அல்லது இரண்டுக்குமிடையில் பிரித்து விடுகிறோமா என்பதைப் பொறுத்து அம் மூலதனத்தின் பருமன் மாறும். Cநிலத்தில் £ 5 மூலதனம் 2 குவாட்டர் உபரி உற்பத்தி கிடைக்கச் செய்கிறது; ஆகவே £ 10 கூடுதல் மூலதனம் 4 குவார்ட்டர் கூடுதல் உபரி உற்பத்திக் கிடைக்கச் செய்கிறது. நமது அனுமானப்படி கூடுதல் மூலதன முதலீடுகளின் உற்பத்தித் திறன் மாறாதிருக்குமானால், £ 5 கூடுதல் மூலதனம் 4 குவாட்டர் கூடுதல் தானிய-வாடகை உற்பத்தி செய்வதற்குப் போதுமானதாய் இருக்கும். அப்போது பின்வரும் முடிவுகள் பெறப்படும்:

இந்த அட்டவணைகளில் மொத்தப் பண வாடகை அளவானது-உற்பத்தி-விலைகள் மாறாமலிருக்கையில் கூடுதல் மூலதனங்கள் முதலீடு செய்யப்பட்ட - அட்டவணை IIஇல் இருந்ததில் சரி பாதியாகவே இருக்கும்.

இந்த அட்டவணைகளை அட்டவணை I உடன் ஒப்பு நோக்குவது மிகவும் முக்கியமானது.

உற்பத்தி-விலை பாதியளவு, அதாவது குவார்ட்டருக்கு 60 ஷில்லிங்கிலிருந்து 30 ஷில்லிங்காக குறைந்திருக்கும் அதே போது மொத்தப் பண வாடகை அளவு மாறாமல் £ 18 ஆகவே இருந்து வருகிறது. எனவே தானிய வாடகை இருமடங்காகி 6இலிருந்து 12 குவார்ட்டர் ஆகியுள்ளது என்று பார்க்கிறோம். B நிலத்தில் வாடகை மறைந்து விட்டது; C நிலத்தில் அட்டவணை IV இ-இல் பாதியளவு உயர்ந்தும் IV ஈஇல் இருக்கிறது; D நிலத்தில் IV இஇல் அது மாறாமல் £ 9 ஆகவே இருந்து வருகிறது. IV ஈ இல் £ 9இலிருந்து £ 15 ஆக உயர்ந்திருக்கிறது. உற்பத்தி 10இலிருந்து IV இ இல் 34 குவார்ட்டராகவும் IV ஈ இல் 30 குவார்ட்டராகவும் உயர்ந்திருக்கிறது. இலாபம் £2இலிருந்து IV இஇல் £5½ ஆக உயர்ந்திருக்கிறது. மொத்த மூலதன முதலீடு ஒரு நிலையில் £ 10 இலிருந்து 27½ஆகவும், மறுநிலையில் £10 இலிருந்து £22½ ஆகவும் உயர்ந்திருக்கிறது; அதவாது இரு நிலைகளிலுமே இரு மடங்குக்கு மேல் அதிகரித்திருக்கிறது. வாடகை வீதம், அதாவது முதலீடாகிற மூலதனத்தின் அடிப்படையில் கணக்கிடப்படும் வாடகை

அட்டவணை IVஇ

| மண் வகை | ஏக்கர் | மூலதனம் (£) | இலாபம் (£) | உற்பத்தி விலை (£) | விளை பொருள் குவார்ட்டர் | விற்பனை விலை (£) | விற்று முதல் (£) | வாடகை: குவார்ட்டர்தானியமாக | வாடகை: பணமாக (£) | உபரி இலாப வீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| B | 1 | 5 | 1 | 6 | 4 | 1½ | 6 | 0 | 0 | 0 |
| C | 1 | 15 | 3 | 18 | 18 | 1½ | 27 | 6 | 9 | 60% |
| D | 1 | 7½ | 1½ | 9 | 12 | 1½ | 18 | 6 | 9 | 120% |
| மொத்தம் | 3 | 27½ | 5½ | 33 | 34 | | 51 | 12 | 18 | |

அட்டவணை IVஈ

| மண் வகை | ஏக்கர் | மூலதனம் (£) | இலாபம் (£) | உற்பத்தி விலை (£) | விளை பொருள் குவார்ட்டர் | விற்பனை விலை (£) | விற்று முதல் (£) | வாடகை: குவார்ட்டர்தானியமாக | வாடகை: பணமாக (£) | உபரி இலாப வீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| B | 1 | 5 | 1 | 6 | 4 | 1½ | 6 | 0 | 0 | 0 |
| C | 1 | 5 | 1 | 6 | 6 | 1½ | 9 | 2 | 3 | 60% |
| D | 1 | 12½ | 2½ | 15 | 20 | 1½ | 30 | 10 | 15 | 120% |
| மொத்தம் | 3 | 22½ | 4½ | 27 | 30 | | 45 | 12 | 18 | |

IV முதல் IVஇ முடிய, எல்லா அட்டவணைகளிலும் அந்தந்த மண் வகைக்கும் மாறாமல் அப்படியே இருக்கிறது. அடுத்தடுத்த இரு

மூலதன முதலீடுகளுக்குமான உற்பத்தித் திறன் வீதம் அந்தந்த மண்வகைக்கும் மாறாமல் இருந்து வருவதாகக் கொள்கிறோம் என்பதையே இது குறிக்கிறது. ஆனால் அட்டவணை I உடன் ஒப்பு நோக்குங்கால், அனைத்து மண் வகைகளின் சராசரிக்கும், அதேபோல் தனித்தனியே அந்தந்த மண் வகைக்கும் வாடகை வீதம் குறைந்திருக்கிறது. அட்டவணை Iஇல் சராசரியாக அது 180%ஆக இருந்தது; அட்டவணை IVஇஇல் சராசரி வீதம் $= {}^{18}/_{27\frac{1}{2}} \times 100 = 65^{5}/_{11}\%$. IVஈஇல் சராசரி வீதம் $= {}^{18}/_{22\frac{1}{2}} \times 100 = 80\%$. ஏக்கர் ஒன்றுக்கான சராசரி பண வாடகை உயர்ந்திருக்கிறது. முன்னதாக அட்டவணை Iஇல் இந்த சராசரி நான்கு ஏக்கருக்கும் சேர்ந்து ஏக்கர் ஒன்றுக்கு £4 ½ ஆக இருந்தது; IVஇஇலும் IVஈஇலும் மூன்று ஏக்கரில் ஏக்கரொன்றுக்கு £ 6 ஆக இருக்கிறது. வாடகை தரும் நிலத்தில் அதன் சராசரி முன்பு ஏக்கரொன்றுக்கு £6ஆக இருந்தது. இப்போது £9 ஆக இருக்கிறது. ஆகவே ஏக்கரொன்றுக்கான வாடகையின் பணமதிப்பு உயர்ந்திருக்கிறது; இப்போது அது முன்னைப் போல் இருமடங்கு தானியத்தைக் குறிக்கிறது. ஆனால் 12 குவார்ட்டர் தானிய வாடகையானது இப்போது முறையே 34 மற்றும் 30* குவார்ட்டர் மொத்த விளைபொருளில் பாதியளவுக்கும் குறைவாகும்; அட்டவணை Iஇல் 6 குவார்ட்டரானது 10 குவார்ட்டர் மொத்த விளைபொருளில் $^{3}/_{5}$ பங்கைக் குறிக்கிறது. ஆகவே, வாடகையானது மொத்த விளைபொருளின் ஈவுப்பங்கு என்ற முறையில் குறைந்திருக்கிறது, முதலீடாகிற மூலதனத்தின் அடிப்படையில் கணக்கிடப்படும் போதும் குறைந்திருக்கிறது. என்றாலும், ஏக்கருக்கு இவ்வளவு என்று கணக்கிடப்படும் அதன் பணமதிப்பு உயர்ந்திருக்கிறது, உற்பத்திப் பண்டம் என்ற முறையில் அதன் மதிப்பு இன்னும் கூட உயர்ந்திருக்கிறது. அட்டவணை IVஈ இல் D நிலத்தை எடுத்துக் கொண்டால், இங்கு உற்பத்தி - விலை = £ 15, மூலதன முதலீடு = £ 12 ½. பணவாடகை = £ 15. அட்டவணை Iஇல் இதே D நிலத்துக்கு உற்பத்தி - விலை £3, ஆகவும் முதலீடாகிற மூலதனம் £ 2½ ஆகவும், பணவாடகை £ 9 ஆகவும் இருந்தன, அதாவது பணவாடகை உற்பத்தி - விலையைப் போல் மூன்று மடங்காகவும் மூலதனத்தைப் போல் கிட்டத்தட்ட நா[illegible]ன்கு மடங்காகவும் இருந்தது. அட்டவணை IVஈஇல் D நிலத்து[illegible]கான £ 15 பணவாடகை உற்பத்தி-விலைக்குச் சரிசமமாகவும், [illegible] மூலதனத்தை விட $^{1}/_{5}$ பங்கு மட்டும் கூடுதலாகவும் இருக்கி[illegible]து. என்றாலும் ஏக்க

*1894-ஆம் வருட ஜெர்மன் பதிப்பில் இ[illegible]து: 33 மற்றும் 27 என்றுள்ளது. - ஆங்கிலப்பதிப்பாசிரியர்

ரொன்றுக்கான பண வாடகை $^2/_3$ பங்கு கூடுதலாக இருக்கிறது, அதாவது £ 9க்கு பதில் £15 ஆக இருக்கிறது. அட்டவணை Iஇல் 3 குவார்ட்டர் தானிய வாடகை = 4 குவார்ட்டர் மொத்த உற்பத்தியில் ¾ பங்கு; அட்டவணை IVஈஇல் D நிலத்திற்கான தானிய வாடகை 10 குவார்ட்டர், அதாவது ஏக்கரொன்றுக்கான மொத்த உற்பத்தியில் (20 குவார்ட்டர்) பாதியளவு ஆகும். ஏக்கரொன்றுக்கான வாடகை மொத்த விளைபொருள் முன்னை காட்டிலும் சிறிய ஈவுப் பங்காக அமைந்துள்ளது என்றாலும், முதலீடாகிற மூலதனத்துடன் ஒப்பிடுகையில் அது குறைந்திருக்கிறது என்றாலும் இதிலிருந்து தெரிகிறது.

அட்டவணை Iஇல் மொத்த உற்பத்தியின் மதிப்பு = £30; வாடகை=£18, அதாவது முன்னதில் பாதியளவுக்கு மேல், IVஈஇல் மொத்த உற்பத்தியின் மதிப்பு = £45; இதில் வாடகை = £ 18, அதாவது பாதிக்கு குறைவு.

விலையில் குவார்ட்டருக்கு £ 1 ½ வீதம், அதாவது 50% குறைவு ஏற்பட்ட போதிலும், போட்டியிடும் மண்வகைகளின் நிலப்பரப்பு 4இலிருந்து 3 ஏக்கராக குறைந்த போதிலும் மொத்தப் பணவாடகை மாறாதிருப்பதும், தானிய வாடகை இருமடங்காவதும் ஏன்? அதே போது ஏக்கருக்கு இவ்வளவு என்று கணக்கிடப்படுகையில் தானிய வாடகை, பணவாடகை இரண்டுமே உயருவது ஏன்? ஏனென்றால் உபரி - உற்பத்தியாக இன்னுமதிக குவார்ட்டர் அளவில் தானியம் விளைவிக்கப்படுவதே காரணம். தானியத்தின் விலை 50% குறைகிறது. உபரி - உற்பத்தி 100% அதிகரிக்கிறது. ஆனால் இந்த முடிவு அடையப் பெறும் பொருட்டு நாம் அனுமானம் செய்துள்ள நிலைமைகளின் மொத்த உற்பத்தி மும்மடங்காக்கப்பட வேண்டும், உயர்தர மண்வகைகளிலான மூலதன முதலீடு இருமடங்குக்கு மேல் கூடுதலாக்கப்பட்ட வேண்டும். இம் முதலீடு என்ன வீதத்தில் அதிகரித்தாக வேண்டும் என்பது அனைத்துக்கும் முதலாவதாக எதைப் பொறுத்ததென்றால், சிறந்த, மிகச் சிறந்த மண்வகைகளிடையே கூடுதல் மூலதன முதலீடுகளின் வினியோகப் பரவலைப் பொறுத்தது; அந்தந்த மண்வகையிலும் முதலீடாகிற மூலதனத்தின் உற்பத்தி திறன் அதன் பருமனுக்கேற்ற விகிதத்தில் அதிகரிப்பதாக வைத்துக் கொள்கிறோம்.

உற்பத்தி-விலையிலான வீழ்ச்சி இன்னும் குறைவாய் இருக்குமானால் அதே பண-வாடகையை உற்பத்தி செய்வதற்கு

இன்னும் குறைந்த அளவிலான கூடுதல் மூலதனமே தேவைப்படும். A வகை நிலத்தை சாகுபடியற்றதாக்குவதற்கு தேவைப்படும் வழங்கல் அதிகரிக்குமானால்-இது A வகை நிலத்தின் ஏக்கர் ஒன்றுக்கான விளைபொருளை மட்டுமல்லாமல் மொத்த சாகுபடி பரப்பில் Aஇன் பங்கு என்ன என்பதையும் பொறுத்தாகும்-ஆகவே Aஐக் காட்டிலும் சிறந்த மண் வகைகளில் தேவைப்படுகிற கூடுதல் மூலதன முதலீட்டின் அளவும் அதிகரிக்குமானால், மற்றவை மாறாதிருக்க, B நிலம் பண-வாடகையோ தானிய வாடகையோ தருவது ஒழிந்து போனாலும் பண -வாடகையும் தானிய வாடகையும் அதிகரித்திருக்கும்.

Aஇலிருந்து ஒழிந்துபோன மூலதனம் £5ஆக இருந்திருந்தால், இந் நேர்வுக்கென ஒப்புநோக்கப்பட வேண்டியவை II, IVஈ அட்டவணை களாக இருக்கும். மொத்த உற்பத்தி 20இலிருந்து 30 குவார்ட்டராக அதிகரித்திருக்கும். பண-வாடகை பாதியளவாகவே, அதாவது £ 36க்குப் பதில் (£18ஆகவே இருக்கும்; தானிய வாடகை மாறாமல் 12 குவார்ட்டராகவே இருக்கும்.

44 குவார்ட்டர் மொத்த உற்பத்தி = £66 என்பதை D நிலத்தில் £27 ½ மூலதனத்தைக் கொண்டு உற்பத்தி செய்யக் கூடுமானால், D நிலத்திற்கான பழைய விகிதம் £ 2 ½ மூலதனத்திற்கு 4 குவார்ட்டர் என்பதற்கொப்ப இது நிகழ முடியுமானால் - மொத்த வாடகை அளவு அட்டவணை IIஇல் அடைந்த நிலையை மீண்டும் அடையும்; அப்போது அட்டவணை பின்வருமாறு இருக்கும்.

| மண்வகை | மூலதனம் £ | விளைபொருள் குவார்ட்டர் | தானிய- வாடகை குவார்ட்டர் | பண-வாடகை £ |
|---|---|---|---|---|
| B | 5 | 4 | 0 | 0 |
| C | 5 | 6 | 2 | 3 |
| D | 27 ½ | 44 | 22 | 33 |
| மொத்தம் | 37 ½ | 54 | 24 | 36 |

மொத்த உற்பத்தி அட்டவணை IIஇல் 20 குவார்ட்டராக இருந்தது, இப்போது 54 குவார்ட்டராக இருக்கும்; பண-வாடகை மாறாமல் £ 36 ஆகவே இருக்கும். ஆனால் மொத்த மூலதனம் £ 37 ½ஆக இருக்கும்; அட்டவணை IIஇல் அது £20ஆக இருந்தது. மொத்த மூலதன முதலீடு கிட்டத்தட்ட இரு மடங்காகி இருக்கும். உற்பத்தியோ கிட்டத்தட்ட மும்மடங்காகி இருக்கும்; தானிய வாடகை இருமடங்காகி இருக்கும்,

பண-வாடகை மாறாதிருக்கும். ஆகவே, வாடகை தரும் உயர்தர மண் வகைகளில், அதாவது Aஐக் காட்டிலும் சிறந்த மண் வகைகள் யாவற்றிலும் கூடுதல் பண-மூலதனமும் முதலீடு செய்யப்படுவதன் விளைவாக - உற்பத்தித் திறன் மாறாமல் இருக்கும் போதே - விலை குறைந்தால்; உற்பத்தியும் தானிய வாடகையும் அதிகரிக்கும் அதே வீதத்தில் மொத்த மூலதனம் அதிகரிக்காத போக்கு வெளிப்படுகிறது; இவ்வாறு தானிய வாடகையிலான உயர்வு விலை குறைவதால் பண-வாடகையில் ஏற்படும் இழப்பை ஈடு செய்யக் கூடும். நிலத்தைக் காட்டிலும் நிலத்தில், அதாவது அதிக வாடகை தரும் மண் வகையைக் காட்டிலும் குறைந்த வாடகை தரும் மண் வகையில் அதிகமாக முதலீடு செய்யப்படும் போது, மூலதன முதலீடு அதற்கேற்ற விகிதத்தில் அதிகரித்தாக வேண்டும் என்பதன் வாயிலாகவும் இதே விதி வெளிப்படுகிறது. காரணம் இதுதான்; பண-வாடகை மாறாமல் இருக்கவோ உயரவோ வேண்டுமானால் குறிப்பிட்ட கூடுதல் அளவில் உபரி உற்பத்திப் பொருள் உற்பத்தி செய்யப்பட்டாக வேண்டும்; உபரி-உற்பத்திப் பொருளை விளைவித்தும் கொடுக்கும் மண் வகைகள் எவ்வளவுக்கு எவ்வளவு வளமானவையோ அவ்வளவுக்கு அவ்வளவு குறைந்த மூலதனமே இதற்குத் தேவைப்படுகிறது. Bக்கும் Cக்கும் இடையிலான வேறுபாடும் Cக்கும் Dக்கும் இடையிலான வேறுபாடும் இன்னுமதிகமாக இருந்தால் கூடுதல் மூலதனம் இன்னும் குறைந்த அளவிலேயே தேவைப்படும். பிரத்தியேகமான விகித உறவானது பின் வருவனவற்றால் நிர்ணயிக்கப்படுகிறது: *(1)* விலை குறையும் விகிதம், அதாவது இப்போது வாடகை தராத நிலமாகிய Bக்கும் முன்பு வாடகை தராத நிலமாய் இருந்த Aக்கும் இடையிலான வேறுபாடு; *(2)* Bக்கு மேல் சிறந்தவையாக இருக்கும் மண் வகைகளிடையிலான வேறுபாடுகளின் விகிதம்: *(3)* புதிதாய் முதலீடு செய்யப்படும் கூடுதல் மூலதனத்தின் அளவு; *(4)* பல்வேறு தரத்திலான மண் வகைகள் இடையே அதன் விநியோகப் பரவல்.

உண்மையில், முதல் நேர்விலேயே கண்டறியப்பட்டதைத்தான் இந்த விதி தெரிவிக்கக் காண்கிறோம்: உற்பத்தி விலை குறிப்பிட்டதாய் இருக்கும்போது அதன் பருமன் என்னவானாலும், கூடுதல் மூலதன முதலீட்டின் விளைவாக வாடகை அதிகரிக்கலாம். சாகுபடியிலிருந்து A ஒழிந்து போவதால், B நிலத்தை படுமோசமான மண் வகையாகவும், குவார்ட்டருக்கு £ 1½ என்பதை புதிய உற்பத்தி விலையாகவும் கொண்ட புதிய வேறுபாட்டு வாடகை I இப்போது உருவாகிறது. இது அட்டவணை IIக்குப் பொருந்துவதைப் போலவே அட்டவணை

IVக்கும் பொருந்தும். A நிலத்துக்குப் பதில் B நிலம் தொடக்க முனையாகவும் £3க்குப் பதில் £1½ உற்பத்தி விலையாகவும் கொள்ளப்படுவது தவிர மற்றபடி அதே விதிதான்.

இங்கு முக்கியமானது இதுதான்: Aநிலத்திலிருந்து மூலதனத்தை விலக்கிக் கொள்வதற்கும் அதில்லாமல் வழங்கலை உருவாக்கு வதற்கும் இவ்வளவு கூடுதல் மூலதனம் தேவைப்பட்டது என்கிற அளவில், இது நடைபெறும் போதே எல்லா நிலங்களிலும் அல்லவென்றாலும் எப்படியும் சிலவற்றிலாவது-மற்றும் சாகுபடி செய்யப்படும் நிலங்களில் சராசரியாக - ஏக்கரொன்றுக்கான வாடகை மாறாமலோ உயர்ந்து கொண்டோ குறைந்து கொண்டோ இருக்கலாம் என்று தெளிவாகிறது. தானிய வாடகையும் பண வாடகையும் ஒன்றுக்கொன்று ஒரே சீரான விகித உறவு கொண்டிருப்பதில்லை என்று பார்த்தோம். தானிய வாடகைக்கு பொருளாதார இயலில் இன்னமும் சற்றாவது முக்கியத்துவம் இருப்பதற்கு பரம்பரை வழக்கம்தான் காரணம். எடுத்துக்காட்டாக, ஆலையதிபர் ஒருவர் முன்பு £10 இலாபத்தைக் கொண்டு வாங்க முடிந்ததைக் காட்டிலும் £5 இலாபத்தைக் கொண்டு நமது நூலை இன்னுங் கூட மிக அதிகமாய் வாங்கிக் கொள்ள முடியும் என்றும் நிரூபித்துக் காட்டலாம். எப்படியானாலும் நிலவுடைமைத் திருவாளர்கள் அதே போது ஆலைத் தொழிலகங்கள், சர்க்கரை ஆலைகள், சாராய ஆலைகள் முதலான வற்றிலும் உடைமையாளர்கள் அல்லது பங்காளர்களாய் இருக்கும்போது தமக்குத் தேவையான கச்சாப் பொருட்ளின் உற்பத்தியாளர்கள் என்ற முறையில் பண-வாடகை குறைகையிலும் கணிச இலாபம் சம்பாதிக்க கூடும் என்பதையே இது காட்டுகிறது.[35]

---

(35) எங்கெல்ஸ் குறிப்பு:- மேற்கண்ட IVஅ முதல் IVஈ வரையிலான அட்டவணைகள் யாவற்றிலும் கணக்கிடுவதில் ஒரு பிழை இழைப்பாடி இருந்ததால் அவற்றை திருத்திக் கணக்கிட வேண்டியதாயிற்று. இந்த அட்டவணைகளிலிருந்து அடையப்பெறும் தத்துவ முடிவுகளை இது பாதிக்கவில்லை என்றாலும், ஏக்கரொன்றுக்கான உற்பத்தியளவுக்கு படு அபத்தமான எண்ணியல் மதிப்புகளை ஒரளவு நுழைத்து விட்டது. இவையுங் கூட கோட்பாட்டளவில் ஆட்சேபணைக்குரியவை அல்ல. மேடு பள்ளங்களையும் நில அமைப்பையும் காட்டும் வரைபடங்களுக்கு புடைப்பியல் மற்றும் நிலவமைப்பியல் விளக்கப்படங்கள் யாவற்றுக்கும் கிடைமட்ட நிலையைக் காட்டிலும் செங்குத்து நிலைக்கு மிகக் கூடுதலான அளவு விகிதத்தைத் தேர்ந்தெடுப்பது இருப்பினும் இதனால் யாராவது தமது விவசாய மனம் புண்பட்டிருப்பதாக கருதினால், தமக்கு நிறைவளிக்கும்படியான ஏதேனுமோர் எண்ணியல் மதிப்பால் ஏக்கர்களின் எண்ணிக்கையைப் பெருக்கிக் கொள்வதற்கு தடையேதுமில்லை, அட்டவணை Iஇல் ஏக்கரொன்றுக்கு 1,2,3,4 குவார்ட்டர் என்று இருப்பதற்கு பதில், 10, 12, 14, 16 புஷல். (8 புஷல் = 1 குவார்ட்டர்) என்றும் வைத்துக் கொள்ளலாம்; ஏனைய அட்டவணைகளில் இதிலிருந்து பெறப்படும் எண்ணியல் மதிப்புகள் அநேகமாய் நடைபெறக்கூடியதன் வரம்புகளுக்குள் இருக்கும்; முடிவு, அதாவது வாடகை அதிகரிப்புக்கும் மூலதன அதிகரிப்புக்குமான விகிதம் அப்படியே மாறாமலிருக்கக் காணலாம். அடுத்த அத்தியாயத்தில் பதிப்பாசிரியர் சேர்த்துள்ள அட்டவணைகளில் இப்படி செய்யப்பட்டுள்ளது.

## II.கூடுதல் மூலதனத்தின் உற்பத்தித் திறன் வீதம் குறைதல்.

இது பிரச்சினையில் புதிதாக எதையும் நுழைப்பதன்று; எப்படியென்றால் சற்று முன் பரிசீலித்த நேர்வில் போலவே இந்த நேர்விலும் A நிலத்தைக் காட்டிலும் சிறந்த மண்வகைகளிலான கூடுதல் மூலதன-முதலீடுகள் நிலத்தின் விளைபொருளை தேவையற்றதாக்கி, எனவே மூலதனம் Aஇலிருந்து விலக்கிக் கொள்ளப்படும் போதுதான், அல்லது வேறு பயிர்களின் உற்பத்திக்கு A நிலம் பயன்படுத்தப்படும் போதுதான் உற்பத்தி-விலை குறையக் கூடும். இந்நேர்வு மேலே முழுமையாகப் பரிசீலிக்கப்பட்டு விட்டது. ஏக்கரொன்றுக்கான தானிய வாடகையும் பண வாடகையும் அதிகரிக்கலாம், குறையலாம். அல்லது மாறமலிருக்கலாம் என்று தெளிவாக்கப்பட்டது.

ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு வசதியாக பின்வரும் அட்டவணையை மீண்டும் தருகிறோம்.

அட்டவணை IV

| மண் வகை | ஏக்கர் | மூலதனம் (£) | இலாபம் (£) | குவார்ட்டர் ஒன்றுக்கான உற்பத்தி விலை (£) | விளை பொருள் விற்று முதல் குவார்ட்டர் | தானிய வாடகை குவார்ட்டர் | பண-வாடகை (£) | உபரி இலாப வீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| A | 1 | 2 ½ | ½ | 3 | 1 | 0 | 0 | 0 |
| B | 1 | 2 ½ | ½ | 1½ | 2 | 1 | 3 | 120% |
| C | 1 | 2 ½ | ½ | 1 | 3 | 2 | 6 | 240% |
| D | 1 | 2 ½ | ½ | ¾ | 4 | 3 | 9 | 360% |
| மொத்தம் | 4 | 10 | | | 10 | 6 | 18 | 180% |

உற்பத்தித் திறன் வீதம் குறைந்து செல்லும் போது B, C, D மண்வகைகளால் வழங்கப்படும் 16 குவார்ட்டர் என்னும் அளவானது A நிலத்தை சாகுபடியிலிருந்து விலக்குவதற்குப் போதுமெனக் கொண்டால் அட்டவணை பின்வருமாறு மாற்றமடைகிறது.

## அட்டவணை V

| மண் வகை | ஏக்கர் | மூலதனம் முதலீடு (£) | இலாபம் (£) | விளை பொருள் குவார்ட்டர் | விற்பனை விலை (£) | விற்று முதல் (£) | தானிய-வாடகை குவார்ட்டர் | பண-வாடகை (£) | உபரி இலாப வீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| B | 1 | 2½+2½ | 1 | 2+1½ =3½ | $1^5/_7$ | 6 | 0 | 0 | 0 |
| C | 1 | 2½+2½ | 1 | 3+2 =5 | $1^5/_7$ | $8^4/_7$ | 1½ | $2^4/_7$ | $51^3/_7$%* |
| D | 1 | 2½+2½ | 1 | 4+3½ =7½ | $1^5/_7$ | $12^6/_7$ | 4 | $6^6/_7$ | $137^1/_7$%** |
| மொத்தம் | 3*** | 15 | | 16 | | $27^3/_7$ | 5½ | $9^3/_7$ | $94^2/_7$ **** |

*இங்கே கூடுதல் மூலதனத்தின் உற்பத்தித் திறன் வீதம் குறைந்து கொண்டிருக்கிற நிலையிலும் பல்வேறு மண்வகைகளுக்கும் குறைவு மாறுபடுகிற அளவுகளில் ஏற்படுகிற நிலையிலும், ஆளும் உற்பத்தி - விலை £3இலிருந்து £$1^5/_7$ஆக குறைந்திருக்கிறது. மூலதன முதலீடு அரைப்பங்கு உயர்ந்து, £ 10இலிருந்து £ 15 ஆகியிருக்கிறது. பண வாடகை கிட்டத்தட்ட அரைப்பங்கு குறைந்து £ 18இலிருந்து £$9^3/_7$ ஆகியிருக்கிறது; ஆனால் தானிய வாடகை 12இல் ஒரு பங்கு மட்டும் குறைந்து 6 குவார்ட்டரிலிருந்து 5½ குவார்ட்டர் ஆகியிருக்கிறது. மொத்த உற்பத்தி 10இலிருந்து 16 குவார்ட்டராக, அதாவது 60% அதிகரித்திருக்கிறது. தானிய வாடகை மொத்த உற்பத்தியில் மூன்றிலொரு பங்குக்கு சற்றே கூடுதலாகும். மூலதன முன்னீட்டுக்கும் பணவாடகைக்குமான விகிதம் 15:$9^3/_7$ ஆகும்; முன்பு இவ்விதம் 10:18ஆக இருந்தது.*

---

(*) 1894ஆம் வருடத்திய ஜெர்மன் பதிப்பில் $51^2/5$ என்றுள்ளது.- ஆங்கிலப்பதிப்பாசிரியர்.

(**) மேலது: $137^1/5$.- ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

(***) மேலது:4.- ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

(****) இங்கேயும் VI, VII, VIII, IX, X அட்டவணைகளிலும் வாடகையேதும் தராத நிலம் பரிசீலனையில்கொள்ளப்படவில்லை. - ஆங்கிலப்பதிப்பாசிரியர்.

**III கூடுதல் மூலதனத்தின் உற்பத்தித் திறன் விதம் உயருதல்.**

உற்பத்தித் திறன் வீதம் மாறாதிருக்கும் போதே உற்பத்தி - விலை குறைவதாகிய (இந்த அத்தியாயத்தின் தொடக்கத்தில் கண்ட) பாடபேதம் Iஇலிருந்து ஓர் அமிசத்தில் மட்டுமே இது மாறுபடுகிறது; அதாவது A நிலத்தை விலக்குவதற்கு குறிப்பிட்ட அளவு கூடுதல் உற்பத்தி தேவைப்படும் போது இங்கு அது இன்னும் கூட துரிதமாய் நிகழ்கிறது.

கூடுதல் மூலதன முதலீடுகளின் உற்பத்தித் திறன் குறைந்து கொண்டு இருந்தாலும் சரி, உயர்ந்து கொண்டு இருந்தாலும் சரி, பல்வேறு மண் வகைகளிடையிலான முதலீடுகளின் விநியோகப் பரவலுக்கேற்ப இந் நிகழ்முறையில் விளைவு மாறலாம். இந்த மாறும் விளைவானது வேறுபாடுகளை நேர்செய்யும் போக்குடையதா, தீவிரமாகும் போக்குடையதா என்பதைப் பொறுத்து, சிறந்த மண் வகைகளின் வேறுபாட்டு வாடகை குறையவோ உயரவோ செய்யும்; எனவே மொத்த வாடகை அளவும் குறையவோ உயரவோ செய்யும் (ஏற்கெனவே வேறுபாட்டு வாடகை I தொடர்பாகவும் இப்படி நிகழக் கண்டோம்). மற்றபடி, எல்லாம் எதைப் பொறுத்தது என்றால், A வகை நிலம் விலக்கப்படும் போது கூடவே ஒழிந்து போகும். நிலப்பரப்பு, மூலதனம் ஆகியவற்றின் பருமனையும், உற்பத்தித் திறன் உயர்ந்து கொண்டிருக்கையில் வேண்டலை நிறைவு செய்வதற்கான கூடுதல் விளை பொருளை உற்பத்தி செய்வதற்கு தேவைப்படும் மூலதன முன்னீட்டின் ஒப்பீட்டுப் பருமனையும் பொறுத்ததாகும்.

இங்கு ஆராயத்தக்கதும், வேறுபாட்டு இலாபம் வேறுபாட்டு வாடகையையாக மாற்றமடையும் விதம் தொடர்பான பரிசீலனைக்கு உள்ளபடியே நம்மை திருப்பி அழைத்துச் செல்வதுமான ஒரே ஒரு விவரம் இதுதான்:

உற்பத்தி விலை மாறாமல் இருக்கும் முதல் நேர்வில் A நிலத்தில் முதலீடாகக் கூடிய கூடுதல் மூலதனம் வேறுபாட்டு வாடகையையே பாதிப்பதில்லை; ஏனென்றால் முன்போலவே A நிலம் வாடகை ஏதும் தராததாய் இருந்து வருகிறது; அதன் விளைபொருளின் விலை மாறாமல் இருக்கிறது. தொடர்ந்து சந்தையை ஆளுகிறது.

உற்பத்தித் திறன் வீதம் மாறாமல் இருக்கும் போதே உற்பத்தி விலை குறையும் இரண்டாம் நேர்வு, பாடபேதம் I இல் A நிலம் தவிர்க்க முடியாமலே விலக்கப்படும், பாடபேதம் IIஇல் (உற்பத்தித் திறன் வீதம்

குறைவதோடு உற்பத்தி விலையும் குறைதல்) அது இவ்வாறு விலக்கப்படுவது இன்னும் கூட உறுதியானது. இப்படி விலக்கப்படவில்லை என்றால் A நிலத்தில் முதலீடாகிற கூடுதல் மூலதனம் உற்பத்தி விலையை உயரச் செயதாக வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும். ஆனால் இங்கே, கூடுதல் மூலதனத்தின் உற்பத்தித் திறன் உயருவதால் உற்பத்தி விலை குறையும் இரண்டாம் நேர்வு, பாடபேதம் IIIஇல், இந்தக் கூடுதல் மூலதனமானது குறிப்பிட்ட சில நிலைமைகளில் A நிலத்திலும் அதை விடச் சிறந்த மண் வகைகளிலும் முதலீடாகாலாம்.

A நிலத்தில் முதலீடாகும்போது £2½ கூடுதல் மூலதனம் 1 குவார்ட்டருக்குப் பதில் $1^1/_5$ குவார்ட்டர் உற்பத்தி செய்வதாகக் கொள்வோம்.

*அட்டவணை VI*

| மண் வகை | ஏக்கர் | மூலதனம் (£) | இலாபம் (£) | உற்பத்தி விலை (£) | விளை பொருள் குவார்ட்டர் | விற்பனை விலை (£) | விற்று முதல் (£) | வாடகை | | உபரி இலாப வீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | குவார்ட்டர் | (£) | |
| A | 1 | 2½+2½=5 | 1 | 6 | $1+1^1/_5=2\ ^1/_5$ | $2^8/_{11}$ | 6 | 0 | 0 | 0 |
| B | 1 | 2½+2½=5 | 1 | 6 | $2+2^2/_5=4\ ^2/_5$ | $2^8/_{11}$ | 12 | $2^1/_5$ | 6 | 120% |
| C | 1 | 2½+2½=5 | 1 | 6 | $3+3^3/_5=6\ ^3/_5$ | $2^8/_{11}$ | 18 | $4^2/_5$ | 12 | 240% |
| D | 1 | 2½+2½=5 | 1 | 6 | $4+4^4/_5=8\ ^4/_5$ | $2^8/_{11}$ | 24 | $6^3/_5$ | 18 | 360% |
| மொத்தம் | 4 | 20 | 4 | 24 | 22 | | 60 | $13^1/_5$ | 36 | 240% |

இந்த அட்டவணையை அடிப்படையான அட்டவணை Iஉடன் ஒப்பு நோக்குவதன்னியில், மூலதன முதலீடு இரு மடங்காகும் போதே அம் முதலீட்டுடன் ஒப்பிடுகையில் உற்பத்தித்திறன் மாறாமல் இருக்கும் அட்டவணை IIஉடனும் ஒப்புநோக்கிட வேண்டும்.

நமது அனுமானப்படி ஆளும் உற்பத்தி விலை குறைகிறது. அது மாறாமல் இருந்தால், அதாவது = £ 3 ஆகவே இருந்தால் £ 2 ½மட்டும்

முதலீடான போது வாடகையேதும் தராமல் இருந்து வந்த படுமோசமான A நிலமானது இப்போது அதைவிட மோசமான மண்வகை சாகுபடிக்கு கொண்டு வரப்படாமலே வாடகை தரும். இந்த மண் வகையின் உற்பத்தித் திறன் அதிகரித்தால் இப்படி நிகழ்ந்திருக்கும் என்றாலும், மூலதனத்தின் ஒரு பகுதிக்கு மட்டுமே - ஆரம்ப மூலதன முதலீட்டுக்கு அல்ல - இப்படி நிகழ்ந்திருக்கும். உற்பத்தி விலையில் முதல் £ 3 ஆனது1 குவார்ட்டர் தருகிறது; இரண்டாவது £3ஆனது $1^1/_5$ குவார்ட்டர் தருகிறது; ஆனால் மொத்த உற்பத்தி $2^1/_5$ குவார்ட்டருமே இப்போது அதன் சராசரி விலைக்கு விற்கப்படுகிறது. கூடுதல் மூலதன முதலீட்டுடன் சேர்ந்து உற்பத்தித் திறன் வீதம் அதிகரிப்பதால், இதற்கு மேம்பாடு அவசியமாகிறது. மேம்பாடு என்பது ஏக்கர் ஒன்றுக்கு முதலீடாகிற மூலதனம் பொதுவாக அதிகரிப்பதை (அதிக உரம், அதிக இயந்திர மயப்பட்ட உழைப்பு முதலானவை) குறிக்கலாம்; அல்லது இந்த கூடுதல் மூலதனத்தின் மூலமாக மட்டுமே மூலதனத்தை இன்னும் உற்பத்தித் திறனுள்ள முறையில் பண்பு வழியில் மாறுபட்ட மூலதன முதலீடு நிகழச் செய்ய முடியும் என்பதாக இருக்கலாம். இரு நிலைகளிலுமே ஏக்கர் ஒன்றுக்கு £ 5 மூலதனம் முதலீட்டுக்கு $2^1/_5$ குவார்ட்டர் விளைபொருள் கிடைக்கிறது; ஆனால் இந்த முதலீட்டில் பாதி அளவாகிய £2 ½க்கு 1 குவார்ட்டர் மட்டுமே கிடைக்கிறது. தற்காலிக சந்தை நிலைமைகளை ஒதுக்கி விட்டுப் பார்த்தால் A வகை நிலத்தில் கணிசமான பரப்பளவு தொடர்ந்து ஏக்கர் ஒன்றுக்கு £2½ மட்டுமேயான மூலதனத்தைக் கொண்டு சாகுபடி செய்யப்பட்டால்தான் A நிலத்தின் விளை பொருளை புதிய சராசரி விலைக்கு விற்காமல் தொடர்ந்து கூடுதலான உற்பத்தி விலைக்கு விற்க முடியும். ஆனால் ஏக்கருக்கு £5 மூலதனம் என்னும் புதிய விகித உறவும், எனவே இந்த மேம்பட்ட செயல் முறையும் எங்கும் பரவலான உடனே, ஆளும் உற்பத்தி விலையானது £ $2\,^8/_{11}$ ஆகக் குறைய வேண்டி இருக்கும். இரு மூலதன பகுதிகளுக்கும் இடையிலான வேறுபாடு மறையும்; £ 2½ மட்டுமேயான மூலதனத்தைக் கொண்டு A நிலத்தில் ஓர் ஏக்கர் சாகுபடி செய்யப்படுவது அப்போது இயல்பானதாய் இருக்காது, அதாவது புதிய உற்பத்தி நிலைமைகளுக்கு ஒத்து வரக் கூடியதாய் அமையாது. வேறுபாடானது அப்போது ஒரே ஏக்கரில் முதலீடாகிற வெவ்வேறு மூலதனப் பகுதிகளின் விளைபொருட்கள் இடையிலான வேறுபாடாக இல்லாமற்போய், ஏக்கர் ஒன்றுக்குரிய நிறைவான மொத்த மூலதன முதலீட்டிற்கும் நிறைவல்லாத மொத்த மூலதன முதலீட்டிற்கும் இடையிலான வேறுபாடாகி விடும். இதிலிருந்து தெரிவதென்ன?

முதலாவதாக, பெருந்தொகையான குத்தகைச் சாகுபடியாளர்களின் கையில் நிறைவான மூலதனம் இல்லையென்றால் (பெருந் தொகையினராகத்தான் இருக்க வேண்டும்; சிறு தொகையினராய் இருந்தால் அவர்களின் உற்பத்தி விலைக்கும் கீழே விற்பது தவிர வேறு வழியில்லாமல் போகும்) இறங்கு வரிசையில் அமைத்த மண் வகைகளின் வேறுபாட்டு நிலையினால் ஏற்படும் அதே விளைவு இந்த நிறைவின்மையாலும் ஏற்படுகிறது. கீழ்த்தர மண்வகையை கீழ்த்தரமாய் சாகுபடி செய்வது உயர்தர மண் வகைகளின் வாடகையை உயரச் செய்கிறது, அதே கீழ்த்தரமான மண் வகைதான் என்றாலும் சிறந்த முறையில் சாகுபடி செய்யப்படும் போது மற்றபடி வாடகை தராத அந்த மண்ணிலிருந்தும் கூட வாடகை கிடைப்பதற்கு இது வழி செய்யக் கூடும். இரண்டாவதாக, வேறுபாட்டு வாடகை என்பது ஒரே மொத்தப் பரப்பில் அடுத்தடுத்த மூலதன முதலீடுகளிலிருந்து எழுவதாய் உள்ளவரை, உள்ளபடியே ஒரு சராசரியாக உருவெடுக்கிறது; வெவ்வேறு மூலதன முதலீடுகளின் விளைவுகளை இந்த சராசரியில் இனங்காணவோ வேறுபடுத்திப் பார்க்கவோ முடியாமற் போகிறது; ஆகவே இந்த விளைவுகள் படுமோசமான மண் வகையிலிருந்து வாடகை கிடைக்கச் செய்வதற்குப்பதில், (1) உதாரணமாய் A நிலத்தின் ஓர் ஏக்கருக்கான மொத்த உற்பத்தியின் சராசரி விலையை புதிய ஆளும் விலையாக்குகின்றன; (2) இந் நிலத்தை நிறைவான முறையில் சாகுபடி செய்வதற்கான புதிய நிலைமைகளில் அதாவது அடுத்தடுத்து முதலீடாகிற தனிப்பட்ட மூலதனங்களும் சரி, அவையாவற்றின் விளைவுகளும் சரி வேறுபடுத்திப் பார்க்க முடியாதவாறு ஒன்றாய்க் கலந்து விடும் நிலைமைகளில் ஏக்கர் ஒன்றுக்குத் தேவைப்படும் மொத்த மூலதன அளவிலான மாற்றங்களாகக் காட்சியளிக்கின்றன; சிறந்த மண் வகைகளின் தனிப்பட்ட வேறுபாட்டு வாடகைகள் குறித்தும் சரியாக இவ்வாறே சொல்லலாம். எப்படிப்பார்த்தாலும், இந்த வாடகை களானவை, கூடுதலான மூலதன முதலீடு இப்போது இயல்பானதாகி இருக்கும் சூழலில் குறிப்பிட்ட மண்வகையின் சராசரி உற்பத்திக்கும் படு மோசமான மண் வகையின் உற்பத்திக்கும் இடையிலான வேறுபாட்டாலேயே நிர்ணயிக்கப்படுகின்றன.

நிலம் எதுவானாலும் மூலதன முதலீடு இல்லாமல் ஒன்றும் விளையாது. சாமானிய வேறுபாட்டு வாடகையாகிய வேறுபாட்டு வாடகை Iக்கும் இது பொருந்தும்; உற்பத்தி விலையை நிர்ணயிக்கும் A நிலத்தில் ஓர் ஏக்கர் பரப்பு இன்ன விலையில் இவ்வளவு விளைபொருள் விளைவித்துக் கொடுக்கிறது என்றும், B, C, D ஆகிய உயர்தர மண் வகைகள் இவ்வளவு

வேறுபாட்டு விளை பொருள் விளைவித்துக் கொடுக்கின்றன என்றும், ஆகவே ஆளும் விலையில் இவ்வளவு பண - வாடகை கிடைக்கிறது என்றும் சொல்கிற போதெல்லாம், குறிப்பிட்ட அளவு மூலதனம், அதாவது அந்நேரத்திய உற்பத்தி நிலைமைகளில் இயல்பானதாகக் கருதப்படுகிற அளவு மூலதனம் முதலீடு செய்யப்படுவதாகக் கொள்வோம். தொழில் துறையில், ஒவ்வொரு தனிப்பட்ட தொழிற் கிளையிலும் சரக்குகள் அவற்றின் உற்பத்தி-விலையில் உற்பத்தி செய்யப்படுவதற்கு குறைந்தபட்சமாய் குறிப்பிட்ட அளவு மூலதனம் தேவைப்படுகிறது, அல்லவா, அதேபோலத்தான் இதுவும்.

மேம்பாடுகள் செய்வதற்காக ஒரே நிலத்தில் மூலதனம் அடுத்தடுத்து முதலீடு செய்யப்படுவதன் விளைவாக இந்தக் குறைந்த பட்சம் மாறுமானால், அந்த மாற்றம் பையப் பையவே நிகழ்கிறது. எடுத்துக்காட்டாக A நிலத்தில் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான ஏக்கர்கள் இந்தக் கூடுதல் செயல் - மூலதனத்தைப் பெறாமல் இருக்கும் வரை, உற்பத்தி-விலை மாறாதிருப்பதின் காரணத்தால் A வகையில் முன்னை விடச் சிறந்த முறையில் சாகுபடி செய்யப்படும் ஏக்கர்களில் வாடகை உற்பத்தியாகிறது; உயர்தரமான B, C, D மண் வகைகள் யாவற்றிலும் வாடகை அதிகரிக்கிறது. ஆனால் புதிய சாகுபடி முறை போதுமான அளவில் பரவி இயல்பானதாய் மாறிய உடனே, உற்பத்தி - விலை குறைகிறது; உயர்தர மண்வகைகளைச் சேர்ந்த நிலத்துக்கான வாடகை மீண்டும் குறைகிறது: A வகைநிலத்தில் இப்போது இயல்பானதாகி விட்ட சராசரி செயல் - மூலதனத்தை பெற்றிராத பகுதி அதன் விளை பொருளை அதன் தனிப்பட்ட உற்பத்தி-விலைக்கு கீழே அதாவது சராசரி இலாபத்துக்கு கீழே விற்றாக வேண்டும்.

உற்பத்தி-விலை குறைந்து செல்லும் நேர்வில், கூடுதல் மூலதனத்தின் உற்பத்தித்திறன் குறைந்து செல்கிறபோதும் கூட இப்படி நிகழ்கிறது - மூலதன முதலீடு அதிகரிப்பதால் அவசியமான மொத்த விளை பொருள் உயர்தர மண் வகைகளால் வழங்கப்படும் நிலை ஏற்பட்ட உடனே இவ்வாறு நிகழ்கிறது; எடுத்துக்காட்டாக A நிலத்திலிருந்து செயல்-மூலதனம் விலக்கிக் கொள்ளப்படுகிறது; அதாவது இந்தக் குறிப்பிட்ட விளை பொருளின் உதாரணமாய் கோதுமையின் உற்பத்தியில் A நிலம் போட்டியிடும் நிலை மறைகிறது. இந்நிலையில் விலையை ஆளும் மண் வகையாகிற உயர்தரமான B நிலத்தில் முதலீடு செய்யப்படுவதற்கு சராசரியாகத் தேவைப்படும் மூலதன அளவு இப்போது இயல்பானதாகிறது; நிலத் துண்டுகளின்

மாறும் மண் வளம் பற்றிப் பேசுகையில், ஏக்கர் ஒன்றுக்கு இந்தப் புதிய இயல்பான அளவு மூலதனம் ஈடுபடுத்தப்படுவதாகக் கொள்கிறோம்.

மறுபுறம், இந்த சராசரி மூலதன முதலீடு - எடுத்துக்காட்டாக இங்கிலாந்தில் 1848க்கு முன் ஏக்கர் ஒன்றுக்கு £8, அதன் பிறகு £ 12-குத்தகை ஒப்பந்தங்கள் வரையப்படுகையில் நியமமாகப் பயன்படும் என்பது தெளிவாகிறது. இதற்கு மேல் செலவிடுகிற சாகுபடியாளருக்கு அவ்வொப்பந்தக் காலத்தைப் பொறுத்தவரை உபரி-இலாபம் வாடகையாக மாற்றமடையாது. இந்த மாற்றமானது ஒப்பந்தம் காலாவதியான பிறகு ஏற்படுகிறதா அல்லவா என்பது அதே கூடுதல் மூலதனத்தை முன்னீடு செய்யக்கூடிய நிலையில் இருக்கும் சாகுபடியாளர்களிடையிலான போட்டியைப் பொறுத்ததாய் இருக்கும். இங்கு நாம் குறிப்பிடுவது நிலத்திற்கான நிரந்தர மேம்பாடுகளை அல்ல - மூலதன முதலீடு மாறாமல் அப்படியே இருந்தாலும், ஏன், குறைந்தாலும் கூட தொடர்ந்து அதிக விளைபொருள் கிடைப்பதற்கு வழிசெய்யும் அந்த மேம்பாடுகளை அல்ல. மூலதனத்தால் ஏற்படுத்தப்படுகிற மேம்பாடுகளாய் இருந்தபோதிலும், உண்டாக்கப்படுகிறவையே ஆனாலும் நிலத்தின் தரத்திலான இயற்கை வேறுபாடுகளுக்குரிய அதே விளைவை உண்டு பண்ணுகிறவை அவை.

அப்படியானால், வேறுபாட்டு வாடகை Iஐப் பொறுத்தவரை இடம்பெறாத ஒரு காரணி வேறுபாட்டு வாடகை IIஐப் பொறுத்த வரை கருத்துக்குரியதாவதைப் பார்க்கிறோம். ஏனென்றால் ஏக்கர் ஒன்றுக்குரிய இயல்பான மூலதன முதலீட்டில் எவ்வித மாற்றம் ஏற்பட்டபோதிலும் வேறுபாட்டு வாடகை I தொடர்ந்து நிலவிவர முடியும். ஒரு புறம், விலையை ஆளும் A நிலத்திலான பல்வேறு மூலதன முதலீடுகளாலும் ஏற்படுகிற விளைவுகள் தெளிவாய் வெளிப்படுவதில்லை; இம் முதலீடுகளின் விளைபொருள் ஏக்கர் ஒன்றுக்குரிய இயல்பான சராசரி விளைபொருளாக மட்டுமே தெரிகிறது. மறுபுறம், ஏக்கர் ஒன்றுக்கான மூலதன முதலீட்டின் இயல்பான குறைந்தபட்சம் அல்லது சராசரி பருமனில் மாற்றம் ஏற்படுகிறது; இந்த மாற்றம் மண்ணுக்குரியத் தன்மையாகத் தெரிகிறது. முடிவில், உபரி இலாபம் வாடகையாக உருமாற்றம் பெறும் விதத்திலும் வேறுபாடு உள்ளது.

மேலும் அட்டவணை VIஐ, I, II ஆகிய அட்டவணைகளோடு ஒப்புநோக்குகையில் தெரிய வருவது இதுதான்; தானிய வாடகையானது I உடன் ஒப்பிடுமிடத்து இரு மடங்குக்கு மேல்

அதிகரித்திருக்கிறது, II உடன் ஒப்பிடுமிடத்து $1^1/_5$ குவார்ட்டர் அதிகரித்திருக்கிறது; பண-வாடகையோ I உடன் ஒப்பிடுமிடத்து இருமடங்காகி இருக்கிறது, ஆனால் II ஒப்பிடுமிடத்து மாறாமல் இருக்கிறது. (மற்ற நிலைமைகள் மாறாதிருக்க) கூடுதல் மூலதனம் உயர்தர மண் வகைகளுக்கு இன்னுமதிக அளவில் ஒதுக்கப்பட்டு இருந்தாலோ, அல்லது அதற்கு மாற்றாக A நிலத்தில் கூடுதல் மூலதனத்தின் விளைவு இன்னும் குறைவாய் இருந்தது. இதனால் குவார்ட்டர் ஒன்றுக்கான ஆளும் சராசரி விலை இன்னும் உயர்வாய் அமைந்திருந்தாலோ, பண-வாடகை கணிசமாய் அதிகரித்திருக்கும்.

கூடுதல் மூலதனத்தைக் கொண்டு உற்பத்தித் திறனில் ஏற்படும் உயர்வு வெவ்வேறு மண் வகைகளிலும் வெவ்வேறு விளைவுகளை உண்டாக்குமானால், அவற்றின் வேறுபாட்டு வாடகையிலும் இதனால் மாற்றம் ஏற்படும்.

எப்படியானாலும், எடுத்துக்காட்டாக மூலதன முதலீட்டை இரண்டிப்பாக்குவதன் மூலம் ஏக்கர் ஒன்றுக்கான வாடகை இரு மடங்காகலாம் என்பது மட்டுமல்ல, அதற்கு மேலும் அதிகரிக்கலாம்-முதலீடாகிற கூடுதல் மூலதனத்தின் உற்பத்தித் திறன் வீதம் அதிகரிப்பதன் விளைவாக உற்பத்தி விலை குறையும் போது, அதாவது மூலதன முன்னீட்டைக் காட்டிலும் இந்த உற்பத்தித் திறன் உயர்ந்த விகிதத்தில் அதிகரிக்கும் போது வாடகை மேற்சொன்னவாறு அதிகரிக்கலாம் என்று தெளிவாக்கப்பட்டு விட்டது. ஆனால் A நிலத்தின் உற்பத்திதிறன் இன்னுங்கூட துரிதமாக உயருவதால் உற்பத்தி - விலை குறையுமானால் ஏக்கர் ஒன்றுக்கான வாடகை குறையவும் நேரிடலாம்.

எடுத்துக்காட்டாக, B நிலத்திலும் C நிலத்திலுமான கூடுதல் மூலதன முதலீடுகள் ஊற்பத்தித் திறனை A நிலத்தில் போல் அதே விகித்தில உயரச் செய்யவில்லை எனக் கொள்வோம். அதாவது விகித வேறுபாடுகள் Bக்கும் Cக்கும் குறைகின்றன; விளைபொருளில் ஏற்படும் அதிகரிப்பு விலையில் ஏற்படும் குறைவுக்கு ஈடாவதில்லை. அப்போது அட்டவணை II உடன் ஒப்பிடுங்கால் D நிலத்திலிருந்து பெறப்படும் (பண-) வாடகை மாறாமல் இருக்கும், B, C நிலங்களிலிருந்து பெறப்படுவது குறைந்து போகும்.

முடிவில், உற்பத்தித் திறனிலான விகிதாசார உயர்வு மாறாதிருக்கும், கூடுதல் மூலதனம் A நிலத்தை காட்டிலும் உயர்தர நிலங்களில் இன்னுமதிகமாய் முதலீடு செய்யப்பட்டால், அல்லது உயர்தர

நிலங்களிலான கூடுதல் மூலதன முதலீடுகளின் உற்பத்தித் திறன் வீதம் அதிகரித்தால் பண-வாடகை உயரும்.

கூடுதல் மூலதன முதலீட்டைக் கொண்டு ஏற்படுகிற மேம்பாடு வேறுபாடுகளை - எல்லாவற்றையுமோ சிலவற்றையோ - குறையச் செய்தால், B, C ஆகியவற்றைக் காட்டிலும் A மீது அதிகமாய் தாக்கம் செலுத்தினால் பண-வாடகை குறைகிறது. உயர்தர மண் வகைகளின் உற்பத்தித் திறன் எவ்வளவு குறைவாய் அதிகரிக்கிறதோ, பண- வாடகை அவ்வளவு அதிகமாய் குறைகிறது. தானிய வாடகை உயருகிறதா குறைகிறதா, அல்லது மாறாமல் நிலையாக இருக்கிறதா என்பது மேற்சொன்ன மேம்பாடு எந்த அளவுக்கு ஏற்றத்தாழ்வான விளைவை உண்டு பண்ணுகிறது என்பதைப் பொறுத்தது.

பல்வேறு வகைப்பட்ட நிலங்களின் கூடுதல் மண் வளத்திலான விகித வேறுபாடு மாறாதிருக்க, வாடகை தராத A நிலத்தைக் காட்டிலும் வாடகை தரும் நிலங்களிலும் குறைந்த வாடகை தரும் நிலங்களைக் காட்டிலும் உயர்ந்த வாடகை தரும் நிலங்களிலும் கூடுதல் மூலதனம் அதிகமாய் முதலீடு செய்யப்படும் போதோ, அல்லது கூடுதல் மூலதனம் சமமாய் இருக்க, A நிலத்தைக் காட்டிலும் அதனிற் சிறந்த, மிகச் சிறந்த நி[illegible]ங்களில் மண் வளம் அதிகரிக்கும் போதோ, பண-வாடகை உயருகி[illegible] அதோடு தானிய-வாடகையும் உயருகிறது. இரண்டாவதாகக் கூறிய நி[illegible]வில், கீழ்த்தர நிலங்களில் மண் வளத்துக்கு மேல் உயர்தர நிலங்களின் ம[illegible] வளத்தில் ஏற்படும் இந்த அதிகரிப்புக்கேற்ற விகிதத்தில்தான் பண-வாடகை[illegible] தானிய வாடகையும் உயருகின்றன.

ஆனால் எப்போதுமே, உற்பத்தித் தி[illegible]லான அதிகரிப்பு மூலதன முதலீடு மாறாதிருக்க மண் வளம் அதிகரிப்ப[illegible]ட்டும் ஏற்படும் விளைவாக இல்லாமல், புதிதாய் மூலதனம் சே[illegible]டுவதன் விளைவாக இருக்குமானால் வாடகை ஒப்பளவில் உயர்கிற[illegible] அறுதிக் கண்ணோட்டமாகும், இதிலிருந்து தெரிவது என்னவென்றால் முன்சொன்ன எல்லா நேர்வுகளிலும் போலவே இங்கும், ஏக்கர் ஒன்றுக்கான வாடகையும் இப்போது அதன் உயர்வும் (வேறுபாட்டு வாடகை Iஐப் பொறுத்தவரை எப்படியோ அதே போல் சாகுபடிப் பரப்பு அனைத்துக்குமான வாடகை - சராசரி வாடகையளவில் பருமன்) நிலத்தில் மூலதன முதலீடு அதிகரிப்பதன் விளைவே ஆகும் - விலைகள் மாறாமலோ, குறைந்து கொண்டோ இருக்கிற நிலைமையில் உற்பத்தித் திறன் வீதம் குறைந்து கொண்டு இருக்கும் போது இம் மூலதனம் செயல்பட்டாலும் சரி, விலைகள் மாறாமலோ குறைந்து கொண்டோ

*அட்டவணை VIஅ*

| மண் வகை | ஏக்கர் | மூலதனம் (£) | இலாபம் (£) | ஏக்கர் ஒன்றுக்கு விளை பொருள் குவார்ட்டர் | விற்பனை விலை (£) | விற்று முதல் (£) | தானிய வாடகை குவார்ட்டர் | பண வாடகை (£) |
|---|---|---|---|---|---|---|---|---|
| A | 1 | 2½+2½ =5 | 1 | 1+3 = 4 | 1½ | 6 | 0 | 0 |
| B | 1 | 2½+2½ =5 | 1 | 2+2½ = 4½ | 1½ | 6¾ | ½ | ¾ |
| C | 1 | 2½+2½ =5 | 1 | 3+5 = 8 | 1½ | 12 | 4 | 6 |
| D | 1 | 2½+2½ =5 | 1 | 4+12 = 16 | 1½ | 24 | 12 | 18 |
| மொத்தம் | 4 | 20 | | 32½ | | | 16½ | 24¾ |

இருக்கிற நிலைமையில் உற்பத்தித் திறன் வீதம் அதிகரித்துச் செல்லும் போது அது செயல்பட்டாலும் சரி, ஏனென்றால் கூடுதல் மூலதனத்தின் உற்பத்தித்திறன் வீதம் மாறாமலோ குறைந்து கொண்டோ உயர்ந்து கொண்டோ இருக்கும் போது விலை மாறாதிருப்பதாகவும் உற்பத்தித்திறன் வீதம் மாறாமலோ குறைந்து கொண்டோ உயர்ந்து கொண்டோ இருக்கும்போது விலை குறைந்து செல்வதாகவும் நாம் செய்து கொள்கிற அனுமானம், விலை மாறாமலோ குறைந்து கொண்டோ இருக்கும் போது கூடுதல் மூலதனத்தின் உற்பத்தித் திறன் வீதம் மாறாதிருத்தல், விலை மாறாமலோ குறைந்து கொண்டோ இருக்கும் போது உற்பத்தித் திறன் வீதம் குறைந்து செல்லுதல், விலை மாறாமலோ குறைந்து கொண்டோ இருக்கும்போது உற்பத்தித் திறன் வீதம் உயர்ந்து செல்லுதல் என்கிற அனுமானமாகப் பெயர்க்கப் படலாம். இந்த எல்லா நேர்வுகளிலுமே வாடகை மாறாமல் நிலையாக இருக்கலாம், அல்லது குறையவும் செய்யலாம் என்றாலும், மற்ற நிலைமைகள் மாறாதிருக்க, உற்பத்தித் திறன் உயர்வதற்கு கூடுதல் மூலதன முதலீடு முன் நிபந்தனை அல்ல என்றால், அது இன்னுமதிகமாய்க் குறையும். ஆக, வாடகை அறுதி நோக்கில் குறைந்திருக்கலாம் என்றாலும் ஒப்பு நோக்கில் உயர்ந்திருப்பதற்கு கூடுதல் மூலதனமே எப்போதும் காரணமாகிறது.

## அத்தியாயம் XLIII

## வேறுபாட்டு வாடகை II.—மூன்றாம் நேர்வு: உயரும் உற்பத்தி-விலை

உற்பத்தி-விலை உயர வேண்டுமானால் வாடகை தராத கீழ்த்தரமான நிலத்தின் உற்பத்தித் திறன் குறைந்தாக வேண்டும். A வகை நிலத்தில் முதலீடாகிற £2 ½ஆனது 1 குவார்ட்டருக்குக் குறைவாக, அல்லது £5 ஆவது 2 குவார்ட்டருக்குக் குறைவாக உற்பத்தி செய்தால்தான், அல்லது A ஐக் காட்டிலும் இன்னும் கூட மோசமான நிலம் சாகுபடிக்குக் கொண்டு வரப்பட வேண்டிய நிலை ஏற்பட்டால்தான், ஆளும் விலை என்று நாம் அனுமானம் செய்துள்ள உற்பத்தி-விலை குவார்ட்டர் ஒன்றுக்கு £ 3க்கு மேல் உயர முடியும்.

இரண்டாவது மூலதன முதலீட்டின் உற்பத்தித் திறன் மாறாமல் இருப்பதாக அல்லது உயர்வதாகவே கூட வைத்துக் கொண்டால், முதலாவது £2 ½ மூலதன முதலீட்டின் உற்பத்தித் திறன் குறைந்துபோய் இருந்தால்தான் இது சாத்தியப்படும். அடிக்கடி இப்படி நேரிடக் காணலாம். எடுத்துக்காட்டாக, சத்திழந்து மேல் மண் மேலோட்டமாய் உழப்பட்டு பழைய சாகுபடி முறையில் முன்னைவிடக் குறைந்த விளைச்சல் தருமானால், பிறகு அறிவுக்குகந்த சாகுபடி முறையில் ஆழ உழுவதால் அடிமண் புரட்டி விடப்பட்டு முன்னைவிட அதிக விளைச்சல் தருமானால், அப்போது இப்படித்தான் நேரிடுகிறது. ஆனால், கண்டிப்பாகச் சொல்லுமிடத்து தனிவிதமான இந்நேர்வு இங்கு பொருந்தாது. முதலாவது £2 ½ மூலதன முதலீட்டின் உற்பத்தித் திறனிலான குறைவு, உயர்தர மண் வகைகளைப் பொறுத்தவரை-நிலைமைகள் அங்கு ஒத்திருப்பதாகக் கொண்டாலும் கூட-வேறு பாட்டு வாடகை I குறைவதற்கு வழி செய்கிறது; என்றாலும் இங்கு நம் கருத்துக்குரியது வேறுபாட்டு வாடகைII தான். ஆனால் தனி விதமான இந்நேர்வு நேரிட வேண்டுமானால் வேறுபாட்டு வாடகை II ஏற்கெனவே இருந்து வருவதாக நாம் வைத்துக் கொள்ள வேண்டும்; ஏனென்றால் இந்நேர்வு வேறுபாட்டு வாடகை I இல் ஏற்படும் மாற்றத்தால் வேறுபாட்டு வாடகை IIஇன் மீது உண்டாகும் தாக்கத்தையே குறித்திடுகிறது. ஓர் எடுத்துக் காட்டின் மூலம் இதனை விளக்கிவிடுவோம்.

### அட்டவணை VII

| மண் வகை | ஏக்கர் | முதலீடு செய்யப்பட்ட மூலதனம் (£) | இலாபம் (£) | உற்பத்தி விலை (£) | விளை பொருள் குவார்ட்டர் | விற்பனை விலை (£) | விற்று முதல் (£) | தானிய-வாடகை குவார்ட்டர் | பண-வாடகை(£) | உபரி இலாப வீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| A | 1 | 2½+2½ | 1 | 6 | ½+1¼ =1¾ | $3^3/_7$ | 6 | 0 | 0 | 0 |
| B | 1 | 2½+2½ | 1 | 6 | 1+2½ =3½ | $3^3/_7$ | 12 | 1¾ | 6 | 120% |
| C | 1 | 2½+2½ | 1 | 6 | 1½+3¾=5¼ | $3^3/_7$ | 18 | 3½ | 12 | 240% |
| D | 1 | 2½+2½ | 1 | 6 | 2 + 5 = 7 | $3^3/_7$ | 24 | 5¼ | 18 | 360% |
| மொத்தம் | | 20 | | | 17½ | | 60 | 10½ | 36 | 240% |

### அட்டவணை VIII

| மண் வகை | ஏக்கர் | முதலீடு செய்யப்பட்ட மூலதனம் (£) | இலாபம் (£) | உற்பத்தி விலை (£) | விளை பொருள் குவார்ட்டர் | விற்பனை விலை ($) | விற்று முதல் (£) | வாடகை | | உபரி இலாப வீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | தானியமாக குவார்ட்டர் | பணமாக (£) | |
| A | 1 | 2 ½+2 ½ =5 | 1 | 6 | ½+1=1½ | 4 | 6 | 0 | 0 | 0 |
| B | 1 | 2 ½+2 ½ =5 | 1 | 6 | 1+2 = 3 | 4 | 12 | 1½ | 6 | 120% |
| C | 1 | 2 ½+2 ½ =5 | 1 | 6 | 1½+3= 4½ | 4 | 18 | 3 | 12 | 240% |
| D | 1 | 2 ½+2 ½ =5 | 1 | 6 | 2 +4 = 6 | 4 | 24 | 4½ | 18 | 360% |
| மொத்தம் | | 20 | | | 15 | | 60 | 9 | 36 | 240% |

பண-வாடகையும் விற்றுமுதலும் அட்டவணை IIஇல் கண்டவையாகவே உள்ளன. ஆனும் உற்பத்தி விலையான அதிகரிப்பு உற்பத்தியளவிலான இழப்பை ஈடு செய்கிறது; இந்த விலையும் உற்பத்தி அளவும் ஒன்றுக்கொன்று எதிர்விகிதம் உடையவையாதலால், அவற்றின் பெருக்கற் பலன் மாறாதிருக்கும் என்பது தெளிவு.

மேற்கண்ட நேர்வில், இரண்டாவது மூலதன முதலீட்டின் உற்பத்தித் திறன் முதலாவது மூலதன முதலீட்டின் ஆரம்ப உற்பத்தித் திறனைக் காட்டிலும் உயர்ந்ததெனக் கொண்டோம். இரண்டாவது மூலதன முதலீட்டின் உற்பத்தித் திறனும் முதலாவது மூலதன முதலீட்டின் உற்பத்தித் திறனும் ஒன்றெனக் கொண்டால் அப்போதும் கூட எவ்வித மாற்றமும் ஏற்படாது; இதை பின்வரும் அட்டவணையில் காணலாம். (அட்டவணை VIII)

இங்கேயும் கூட, உற்பத்தி விலை ஒரே விகிதத்தில் உயரும்போது, வினை பொருள், பண-வாடகை ஆகிய இரண்டைப் பொறுத்த வரையிலுமே உற்பத்தித் திறனிலான குறைவை முழுமையாக ஈடு செய்கிறது.

முதல் நேர்விலும் இரண்டாம் நேர்விலும் ஆரம்பத்திலிருந்து கடைசிவரை அனுமானம் செய்து கொண்டது போல் முதலாவது மூலதன முதலீட்டின் உற்பத்தித் திறன் மாறாதிருக்க இண்டாவது மூலதன முதலீட்டின் உற்பத்தித் திறன் குறையும் போதுதான் மூன்றாம் நேர்வு தூய வடிவில் வெளிப்படுகிறது. இங்கு வேறுபாட்டு வாடகை பாதிப்புறவதில்லை; அதாவது வேறுபாட்டு வாடகை IIஇலிருந்து எழும் விகிதப் பங்கில் மட்டுமே மாற்றம் ஏற்படுகிறது. இரு எடுத்துக்காட்டுகள் தருகிறோம்: இரண்டாவது மூலதன முதலீட்டின் உற்பத்தித் திறன் முதல் எடுத்துக்காட்டில் ½ பங்காகவும், இரண்டாம் எடுத்துக்காட்டில் ¾ பங்காகவும் குறைக்கப்படுகிறது.

உற்பத்தித் திறனிலான குறைவு அட்டவணை VIIIஇல் முதலாவது மூலதன முதலீட்டுக்கும், அட்டவணை IX இல் இரண்டாவது மூலதன முதலீட்டுக்கும் உரித்தாவது தவிர, இவ்விரு அட்டவணைகளும் ஒன்றுதான்.

II, VII, VIII ஆகிய அட்டவணைகளில் போலவே இந்த அட்டவணையிலும் மொத்த விளைபொருள், பண-வாடகை, வாடகை வீதம் ஆகியவை மாறாதுள்ளன; ஏனென்றால் இங்கேயும்

## அட்டவணை IX

| மண் வகை | ஏக்கர் | முதலீடு செய்யப்பட்ட மூலதனம் (£) | இலாபம் (£) | உற்பத்தி விலை (£) | விளை பொருள் குவார்ட்டர் | விற்பனை விலை (£) | விற்று முதல் (£) | வாடகை: தானியமாக குவார்ட்டர் | வாடகை: பணமாக (£) | வாடகை வீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| A | 1 | 2½+2½ =5 | 1 | 6 | 1+½ = 1½ | 4 | 6 | 0 | 0 | 0 |
| B | 1 | 2½+2½ =5 | 1 | 6 | 2+1 = 3 | 4 | 12 | 1½ | 6 | 120% |
| C | 1 | 2½+2½ =5 | 1 | 6 | 3+1½ = 4½ | 4 | 18 | 3 | 12 | 240% |
| D | 1 | 2½+2½ =5 | 1 | 6 | 4 + 2 = 6 | 4 | 24 | 4½ | 18 | 360% |
| மொத்தம் | | 20 | | | 15 | | 60 | 9 | 36 | 240% |

## அட்டவணை X

| மண் வகை | ஏக்கர் | முதலீடு செய்யப்பட்ட மூலதனம் (£) | இலாபம் (£) | உற்பத்தி விலை (£) | விளை பொருள் குவார்ட்டர் | விற்பனை விலை (£) | விற்று முதல் (£) | வாடகை: தானியமாக குவார்ட்டர் | வாடகை: பணமாக (£) | வாடகை வீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| A | 1 | 2½+2½ =5 | 1 | 6 | 1+¼ = 1¼ | $4^{4}/_{5}$ | 6 | 0 | 0 | 0 |
| B | 1 | 2½+2½ =5 | 1 | 6 | 2+½ = 2½ | $4^{4}/_{5}$ | 12 | 1¼ | 6 | 120% |
| C | 1 | 2½+2½ =5 | 1 | 6 | 3+¾ = 3¾ | $4^{4}/_{5}$ | 18 | 2½ | 12 | 240% |
| D | 1 | 2½+2½ =5 | 1 | 6 | 4 + 1 = 5 | $4^{4}/_{5}$ | 24 | 3¾ | 18 | 360% |
| மொத்தம் | | 20 | | 24 | 12½ | | 60 | 7½ | 36 | 240% |

மூலதன முதலீடு மாறாதிருக்க உற்பத்தி அளவும் விற்பனை-விலையும் ஒன்றுக்கொன்று எதிர் விகிதத்தில் மாறுகின்றன.

ஆனால் சாத்தியமான மற்றொரு நேர்வில், அதாவது உற்பத்தி - விலை உயரும் போது, குறிப்பாகச் சொன்னால்-இதுவரை சாகுபடி

செய்யத் தகுதியற்றதாய் இருந்த கீழ்த்தரமான நிலம் சாகுபடிக்குக் கொண்டு வரப்படும் போது நிலைமை என்ன?

இவ்வகைப்பட்ட நிலம் - இதை aஎனக் குறிப்போம் - போட்டியில் நுழைவதாகக் கொள்வோம். இதுவரை வாடகை தராமல் இருந்த A வகை நிலம் இனிமேல் வாடகை தரும்; மேற்கண்ட VII, VIII, X ஆகிய அட்டவணைகள் பின்வருமாறு வடிவெடுக்கும்: (அட்டவணை VIIa, VIIIa,Xa)

அட்டவணை VIIa

| மண் வகை | ஏக்கர் | மூலதனம் (£) | இலாபம் (£) | உற்பத்தி விலை (£) | விளை பொருள் குவார்ட்டர் | விற்பனை விலை (£) | விற்று முதல் (£) | வாடகை குவார்ட்டர் | வாடகை (£) | அதிகரிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| a | 1 | 5 | 1 | 6 | 4½ | 4 | 6 | 0 | 0 | 0 |
| A | 1 | 2½+2½ | 1 | 6 | ½+1¼ = 1¾ | 4 | 7 | ¼ | 1 | 1 |
| B | 1 | 2½+2½ | 1 | 6 | 1+2½ = 3½ | 4 | 14 | 2 | 8 | 1+ 7 |
| C | 1 | 2½+2½ | 1 | 6 | 1½+3¾ = 5¼ | 4 | 21 | 3¾ | 15 | 1+ 2x7 |
| D | 1 | 2½+2½ | 1 | 6 | 2 + 5 = 7 | 4 | 28 | 5½ | 22 | 1+ 3x7 |
| | | | | 30 | 19 | | 76 | 11½ | 46 | |

a என்னும் மண் வகையின் நுழைவு ஒரு புதிய வேறுபாட்டு வாடகை I வழிகோலுகிறது; இந்தப் புதிய அடிப்படையில் வேறுபாட்டு வாடகை IIம் கூட மாறிய வடிவில் வளர்கிறது. பின்னர் காணும் மூன்று அட்டவணைகளில் ஒவ்வொன்றிலும் a நிலத்தின் மண் வளம் மாறுபடுகிறது; விகிதப்படி உயர்ந்து செல்லும் மண் வளங்களின் தொடர் வரிசை A நிலத்திலிருந்துதான் ஆரம்பமாகிறது. உயர்ந்து செல்லும் வாடகைகளின் தொடர் வரிசையும் கூட அதே போல் A நிலத்திலிருந்துதான் ஆரம்பமாகின்றது. முன்பு வாடகை தராமல் இருந்ததும் இப்போது வாடகை தருவதுமான படுமோசமான நிலத்தின் வாடகை ஒரு மாறாக் கூறு ஆகும்; அது இன்னும் உயர்ந்து வாடகைகள் அனைத்தோடும் சேர்த்துக் கூட்டப்படுவதோடு சரி. இந்த மாறாக் கூறைக் கழித்த பிறகுதான் உயர்ந்த வாடகைகளுக்கான வேறுபாடுகளின்

## அட்டவணை VIIIa

| மண் வகை | ஏக்கர் | மூலதனம் (£) | இலாபம் (£) | உற்பத்தி விலை (£) | விளை பொருள் குவார்ட்டர் | விற்பனை விலை (£) | விற்று முதல் (£) | வாடகை: குவார்ட்டர் | வாடகை: (£) | அதிகரிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| a | 1 | 5 | 1 | 6 | 1¼ | $4\frac{4}{5}$ | 6 | 0 | 0 | 0 |
| A | 1 | 2½+2½ | 1 | 6 | ½+1=1½ | $4\frac{4}{5}$ | $7\frac{1}{5}$ | ¼ | $1\frac{1}{5}$ | $1\frac{1}{5}$ |
| B | 1 | 2½+2½ | 1 | 6 | 1 + 2 =3 | $4\frac{4}{5}$ | $14\frac{2}{5}$ | 1¾* | $8\frac{2}{5}$ | $1\frac{1}{5} + 7\frac{1}{5}$ |
| C | 1 | 2½+2½ | 1 | 6 | 1½+3=4½ | $4\frac{4}{5}$ | $21\frac{3}{5}$ | 3¼ | $15\frac{3}{5}$ | $1\frac{1}{5}+2 \times 7\frac{1}{5}$ |
| D | 1 | 2½+2½ | 1 | 6 | 2 + 4 =6 | $4\frac{4}{5}$ | $28\frac{4}{5}$ | 4¾ | $22\frac{4}{5}$ | $1\frac{1}{5}+3 \times 7\frac{1}{5}$ |
| | 5 | | | 30 | 16 ¼ | | 78 | 10** | 48 | |

## அட்டவணை Xa

| மண் வகை | ஏக்கர் | மூலதனம் (£) | இலாபம் (£) | உற்பத்தி விலை (£) | விளை பொருள் குவார்ட்டர் | விற்பனை விலை (£) | விற்று முதல் (£) | வாடகை: குவார்ட்டர் | வாடகை: (£) | அதிகரிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| a | 1 | 5 | 1 | 6 | 1 1/8 | $5\frac{1}{3}$ | 6 | 0 | 0 | 0 |
| A | 1 | 2½+2½ | 1 | 6 | 1+¼ =1¼ | $5\frac{1}{3}$ | $6\frac{2}{3}$ | $\frac{1}{8}$ | $\frac{2}{3}$ | $\frac{2}{3}$ |
| B | 1 | 2½+2½ | 1 | 6 | 2+1½ =2½ | $5\frac{1}{3}$ | $13\frac{1}{3}$ | $1\frac{3}{8}$ | $7\frac{1}{3}$ | $\frac{2}{3}+ 6\frac{2}{3}$ |
| C | 1 | 2½+2½ | 1 | 6 | 3+¾ =3¾ | $5\frac{1}{3}$ | 20 | $2\frac{5}{8}$ | 14 | $\frac{2}{3}+2X6\frac{2}{3}$ |
| D | 1 | 2½+2½ | 1 | 6 | 4+1=5 | $5\frac{1}{3}$ | $26\frac{2}{3}$ | $3\frac{7}{8}$ | $20\frac{2}{3}$ | $\frac{2}{3}+3X6\frac{2}{3}$ |
| | | | | 30 | $13\frac{5}{8}$ | | $72\frac{2}{3}$ | 8 | $42\frac{2}{3}$ | |

(*) 1894ஆம் வருடத்திய ஜெர்மன் பதிப்பில் 2 ¼ என்றுள்ளது.-ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

(**) மேலது: 9.-ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

தொடர்வரிசை தெளிவாக வெளிப்படுகிறது; அது மண் வளத்திற்கேற்ப ஒழுங்கு செய்யப்படும் தொடர் வரிசைக்கு இணையாக இருப்பதும் அதேபோல் தெளிவாக வெளிப்படுகிறது. இந்த எல்லா அட்டவணை களிலும் A முதல் D வரையிலான மண் வளங்கள் 1:2:3:4 என்று விகிதத்தில் அமைந்துள்ளன; எனவே வாடகைகள் பின்வரும் விகிதங்களில் அமைந்துள்ளன.

VII a அட்டவணையில், 1 : (1+7) : (1+2 X7) : (1+3 X7),

VIII a அட்டவணையில் $1^1/_5$ : ($1\ ^1/5+7\ ^1/_5$) : ($1\ ^1/_5+2$ X$7\ ^1/_5$) : ($1^1/_5+3$ X $7^1/_5$),

Xa அட்டவணையில் $^2/_3$ : ($^2/_3+6\ ^2/_3$) : ($^2/_3+3$ X$6\ ^2/_3$) : ($^2/_3+3$ X $6\ ^2/_3$).

சுருங்கச் சொல்லின், A, நிலத்தில் வாடகை= n, அடுத்தபடி அதிக வளம் பொருந்திய நிலத்தின் வாடகை=n+mஎன்றால், தொடர் வரிசை இதுதான் n: (n+m): (n+2m): (n+3m), ....... —பி.எங்கெல்ஸ்.)

மேற்கண்ட மூன்றாம் நேர்வு கையெழுத்துப் பிரதியில் விளக்கமாக எடுத்துரைக்கப்பட வில்லை, அங்கே தலைப்பு மட்டும்தான் குறிக்கப்பட்டுள்ளது. ஆகவே இடைவெளியை தன்னால் இயன்றவரை இட்டு நிரப்புவது பதிப்பாசிரியன் பணியாயிற்று. ஆனால் இதன்னியில், மூன்று பிரதான நேர்வுகளையும் ஒன்பது துணை நேர்வுகளையும் கொண்டதாகிய வேறுபாட்டு வாடகை IIஇன் மேற்கண்ட மொத்தப் பகுப்பாய்விலிருந்து விளைகிற பொது முடிவுகளையும் அவர் எடுத்தாக வேண்டும். கையெழுத்துப் பிரதியில் தரப்பட்டுள்ள எடுத்துக்காட்டுகள் இந் நோக்கத்துக்கு அவ்வளவாய்ப் பயன்படக் கூடியவை அல்ல. முதலாவதாக, இந்த எடுத்துக்காட்டுகளில் ஒப்பு நோக்கப்படும் நிலத்துண்டுகளின் சம பரப்புகளுக்கான விளைபொருட்கள் 1:2:3:4 என்ற விகிதத்தில் அமைந்துள்ளன; அதாவது வேறுபாடுகள் தொடக்கத்திலிருந்தே பெரிதும் மிகைபடுத்தப்படுகின்றன; இந்த அடிப்படையில் கணக்கீடுகள் செய்யும் போது படு அபத்தமான எண்ணியல் மதிப்புகளுக்கு இவை வழி செய்கின்றன. இரண்டாவதாக, இவை அறவே தவறானதோர் எண்ணத்தை ஏற்படுத்துகின்றன. 1:2:3:4....என்ற விகித உறவில் அமைந்த மண் படித்தரங்களுக்கு 0:1:2:3....என்ற தொடர்வரிசையில் வாடகைகள் பெறப்படுமானால், முதல் தொடர் வரிசையிலிருந்து இரண்டாவது தொடர் வரிசையை உருவாக்கலாம் என்றும் வாடகைகள் இருமடங்கும் மும்மடங்கும்... ஆவதற்கு மொத்த விளைபொருள் இருமடங்கும் மும்மடங்கும்... ஆவதைக்காட்டி விளக்கம் தரலாம் என்றும் தோன்றுகிறது. ஆனால்

இது அறவே தவறானதாகும். மண்வளப் படித்தரங்கள் n : (n+1) : (n+2) : (n+3): (n+4) என்ற விகித உறவில் அமைந்திருக்கும் போதே கூட வாடகைகள் 0 : 1 : 2 : 3 : 4 என்ற விகித உறவில் அமைந்துள்ளன. வாடகைகளின் விகிதத்தைக் கொடுப்பது வாடகை தராத நிலத்தை எண்ணப் புள்ளியாகக் கொண்ட மண்வள வேறுபாடுகள் தானே தவிர மண்வளப் படித்தரங்கள் அல்ல.

வாசகத்தைப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே மார்க்ஸின் மூல அட்டவணைகளைத் தர வேண்டியதாயிற்று. ஆனால் ஆய்விலிருந்து பெறப்படுகிற கீழ்க்காணும் முடிவுகளுக்கு ஒரு கோட்பாட்டு அடிப்படையை வழங்கும் பொருட்டு ஒரு புதிய அட்டவணை தொடரை கீழே தருகிறேன்; இந்த அட்டவணைகளில் விளைபொருள் அளவுகள் புஷல் கணக்கிலும் ($^1/_8$ குவார்ட்டர், அல்லது 36.35 லிட்டர்) ஷில்லிங் கணக்கிலும் (= மார்க்கு) தரப்படுகின்றன.

இவற்றில் முதலாவதாகிய அட்டவணை XI, பழைய அட்டவணை Iக்கு இணையானது. இது A முதல் E வரையிலான ஐந்து வெவ்வேறு மண்வகைகளுக்கான விளைபொருட்களையும் வாடகைகளையும் தருகிறது; முதலாவது மூலதன முதலீடு 50 ஷில்லிங் என்றும், இது 10 ஷில்லிங் இலாபத்தோடு சேர்ந்து ஏக்கர் ஒன்றுக்கான மொத்த உற்பத்தி - விலை 60 ஷில்லிங் ஆவதாகவும் கொள்கிறோம். தானிய விளை பொருள் குறைந்த அளவில் ஏக்கர் ஒன்றுக்கு 10, 12, 14, 16, 18 புஷல் என்று தரப்படுகின்றது. இதிலிருந்து விளைகிற ஆளும் உற்பத்தி- விலை புஷல் ஒன்றுக்கு 6 ஷில்லிங் ஆகும்.

அடுத்து வரும் 13 அட்டவணைகள் இந்த அத்தியாயத்திலும் முந்தைய இரு அத்தியாயங்களிலும் பரிசீலிக்கப்பட்ட வேறுபாட்டு வாடகை IIஇன் மூன்று நேர்வுகளுக்கும் உரியதாகும்; உற்பத்தி- விலைகள் மாறாமலோ குறைந்து கொண்டோ உயர்ந்து கொண்டோ இருக்கிற நிலையில் அதே நிலத்திலான கூடுதல் - மூலதன முதலீடு ஏக்கர் ஒன்றுக்கு 50 ஷில்லிங் எனக் கொள்கிறோம். மேலும் இந்த நேர்வுகள் ஒவ்வொன்றும் முதலாவது மூலதன முதலீட்டுடன் ஒப்பிடுகையில் இரண்டாவது மூலதன முதலீட்டின் உற்பத்தித் திறன் (1) மாறாமல் இருக்கும் போதும், (2) குறையும் போதும், (3) உயரும் போதும் எவ்வாறு உருப்பெறுகிறது என்பதும் காட்டப்படுகிறது. எடுத்துக்காட்டுகள் என்ற வகையில் பெரிதும் பயன் வாய்ந்த வேறுசில நிலை பேதங்களும் இதிலிருந்து பெறப்படுகின்றன.

நேர்வு I : மாறா உற்பத்தி-விலை—இதிலிருந்து பெறப்படுகின்றவை:

நிலை பேதம் 1 : இரண்டாவது மூலதன முதலீட்டின் உற்பத்தித் திறன் மாறாதுள்ளது. (அட்டவணை XII).

நிலை பேதம் 2 : உற்பத்தித் திறன் குறைகிறது. A வகை நிலத்தில் இரண்டாவது மூலதன முதலீடு ஏதும் செய்யப் படாவிட்டால்தான் இப்படிநடைபெறமுடியும். அதாவது

(அ) : Bவகை நிலமும் வாடகையே தராமற் போவது (அட்டவணை XIII)என்ற வழியிலோ

(ஆ) : Bவகை நிலம்கொஞ்சம்கூட வாடகை தராமற் போவதில்லை (அட்டவணை XIV) என்ற வழியிலோதான் இப்படி நடைபெற முடியும்.

நிலைபேதம் 3: : உற்பத்தித் திறன் அதிகரிக்கிறது (அட்டவணை XV). இந்த நேர்வும் A வகை நிலத்தில் இரண்டாவது மூலதன முதலீட்டை விலக்கி விடுவதால்

நேர்வு II : குறையும் உற்பத்தி-விலை இதிலிருந்து பெறப் படுகிறவை;

நிலைபேதம் 1 : இரண்டாவது மூலதன முதலீட்டின் உற்பத்தித் திறன் மாறாதிருக்கிறது (அட்டவணை XVI).

நிலைபேதம் 2 : உற்பத்தித் திறன் குறைகிறது (அட்டவணைXVII). A வகை நிலம் போட்டியிலிருந்து நீக்கப்படுவதும் B வகை நிலம் வாடகையற்றதாகி உற்பத்தி-விலையை ஆளுவதும் இவ்விரு நிலை பேதங்களுக்கும் அவசியம்.

நிலை பேதம் 3 : உற்பத்தித் திறன் அதிகரிக்கிறது (அட்டவணை XVIII). இங்கு Aவகை நிலமே தொடர்ந்து உற்பத்தி விலையை ஆளுகிறது.

நேர்வு III : உயரும் உற்பத்தி-விலை - இரு வழிகள் சாத்திய மாகும்: A வகை நிலம் வாடகை தராததாகவே இருந்து, அதுவே தொடர்ந்து விலையை ஆளலாம்.

அல்லது Aஐக் காட்டிலும் கீழ்த்தரமான நிலம் போட்டியில் நுழைந்து விலையை ஆளலாம், இப்படி நிகழுமானால் A நிலம் வாடகை தரும்.

*முதல் வழி* : A வகை நிலமே தொடர்ந்து விலையை ஆளுகிறது.

*நிலை பேதம் 1* : இரண்டாவது முதலீட்டின் உற்பத்தித் திறன் மாறாதுள்ளது (அட்டவணை XIX). முதலாவது முதலீட்டின் உற்பத்தித் திறன் குறைந்ததால்தான் நாம் அனுமானம் செய்துள்ள நிலைமைகளில் இதற்கு இடமுண்டு.

*நிலை பேதம் 2* : இரண்டாவது முதலீட்டின் உற்பத்தித் திறன் குறைகிறது (அட்டவணை XX). முதலாவது முதலீட்டின் உற்பத்தித்திறன் மாறாமல் இருக்கும் சாத்தியப்பாட்டை இது விலக்கி விடுவதில்லை.

*நிலை பேதம்: 3* : இரண்டாவது முதலீட்டின் உற்பத்தித்திறன் அதிகரிக்கிறது (அட்டவணை XXI)* இதற்கும் முதலாவது முதலீட்டின் உற்பத்தித் திறன் குறைந்தாக வேண்டும்.

*இரண்டாம் வழி* : கீழ்த்தரமான ஒரு மண்வகை (aஎன்பது) போட்டியில் நுழைகிறது; Aவகை நிலம் வாடகை தருகிறது.

*நிலை பேதம் 1* : இரண்டாவது முதலீட்டின் உற்பத்தித் திறன் மாறாதுள்ளது (அட்டவணை XXII).

*நிலை பேதம் 2* : உற்பத்தித் திறன் குறைகிறது (அட்டவணை XXIII).

*நிலை பேதம் 3* : உற்பத்தித் திறன் அதிகரிக்கிறது (அட்டவணை XXIV).

இந்த மூன்று நிலை பேதங்களும் பிரச்சினையின் பொது நிலைமைகளுக்கு இணக்கமானவை, இவைகுறித்து இதற்குமேல் விளக்கம் தேவை இல்லை.

அட்டவணைகள் பின்வருமாறு:

---

(*) 1894 ஆம் வருடத்திய ஜெர்மன் பதிப்பில் XIX என்றுள்ளது.- ஆங்கிலப்பதிப்பாசிரியர்.)

*அட்டவணை XI*

| மண் வகை | உற்பத்தி விலை ஷி. | விளை பொருள் புஷல் | விற்பனை விலை ஷி. | விற்று முதல் ஷி. | வாடகை ஷி. | வாடகை அதிகரிப்பு |
|---|---|---|---|---|---|---|
| A | 60 | 10 | 6 | 60 | 0 | 0 |
| B | 60 | 12 | 6 | 72 | 12 | 12 |
| C | 60 | 14 | 6 | 84 | 24 | 2 x 12 |
| D | 60 | 16 | 6 | 96 | 36 | 3 x 12 |
| E | 60 | 18 | 6 | 108 | 48 | 4 x 12 |
| | | | | | 120 | 10 x 12 |

*அதே நிலத்தில் இரண்டாவது மூலதன முதலீட்டிற்கு:*

*முதல் நேர்வு: உற்பத்தி-விலை மாறாதிருக்கிறது.*

*நிலை பேதம் 1 : இரண்டாவது மூலதன முதலீட்டின் உற்பத்தித்திறன் மாறாதிருக்கிறது.*

*அட்டவணை XII*

| மண் வகை | உற்பத்தி விலை ஷி. | விளை பொருள் புஷல் | விற்பனை விலை ஷி. | விற்று முதல் ஷி. | வாடகை ஷி. | வாடகை அதிகரிப்பு |
|---|---|---|---|---|---|---|
| A | 60+60=120 | 10+10=20 | 6 | 120 | 0 | 0 |
| B | 60+60=120 | 12+12=24 | 6 | 144 | 24 | 24 |
| C | 60+60=120 | 14+14=28 | 6 | 168 | 48 | 2 x 24 |
| D | 60+60=120 | 16+16=32 | 6 | 192 | 72 | 3 x 24 |
| E | 60+60=120 | 18+18=36 | 6 | 216 | 96 | 4 x 24 |
| | | | | | 240 | 10 x 24 |

*நிலை பேதம் 2 : இரண்டாவது மூலதன முதலீட்டின் உற்பத்தித் திறன் குறைகிறது.*

*A வகை நிலத்தில் இரண்டாவது முதலீடு ஏதுமில்லை.*

*(1)* B வகை நிலம் வாடகை தராமல் போகிறது.

*அட்டவணை* XIII

| மண் வகை | உற்பத்தி விலை ஷி. | விளை பொருள் புஷல் | விற்பனை விலை ஷி. | விற்று முதல் ஷி. | வாடகை ஷி. | வாடகை அதிகரிப்பு |
|---|---|---|---|---|---|---|
| A | 60 | 10 | 6 | 60 | 0 | 0 |
| B | 60+60=120 | 12+8 = 20 | 6 | 120 | 0 | 0 |
| C | 60+60=120 | 14+9 $^1/_3$ = 23 $^1/_3$ | 6 | 140 | 20 | 20 |
| D | 60+60=120 | 16+10 $^2/_3$ = 26 $^2/_3$ | 6 | 160 | 40 | 2 x20 |
| E | 60+60=120 | 18+12* = 30 | 6 | 180 | 60 | 3 x20 |
| | | | | | 120 | 6 x20 |

*(2)* Bவகை நிலம் கொஞ்சம் கூட வாடகை தராமல் போவதில்லை

*அட்டவணை* XIV

| மண் வகை | உற்பத்தி விலை ஷி. | விளை பொருள் புஷல் | விற்பனை விலை ஷி. | விற்று முதல் ஷி. | வாடகை ஷி. | வாடகை அதிகரிப்பு |
|---|---|---|---|---|---|---|
| A | 60 | 10 | 6 | 60 | 0 | 0 |
| B | 60+60=120 | 12+9 = 21 | 6 | 126 | 6 | 6 |
| C | 60+60=120 | 14+10½ = 24 ½ | 6 | 147 | 27 | 6+21 |
| D | 60+60=120 | 16+12 = 28 | 6 | 168 | 48 | 6+2x21 |
| E | 60+60=120 | 18+13½ = 31 ½ | 6 | 189 | 69 | 6+3x21 |
| | | | | | 150 | 4x6+6x21 |

*நிலை பேதம் 3* : ***இரண்டாவது மூலதன முதலீட்டின் உற்பத்தித்திறன் ஆதிகரிக்கிறது;***

***இங்கும் A வகை நிலத்தில் இரண்டாவது முதலீடு ஏதுமில்லை.***

(*) 1894 ஆம் வருடத்திய ஜெர்மன் பதிப்பில் 20 என்றுள்ளது. - ஆங்கிலப்பதிப்பாசிரியர்.

அட்டவணை XV

| மண் வகை | உற்பத்தி விலை ஷி. | விளை பொருள் புஷல் | விற்பனை விலை ஷி. | விற்று முதல் ஷி. | வாடகை ஷி. | வாடகை அதிகரிப்பு |
|---|---|---|---|---|---|---|
| A | 60 | 10 | 6 | 60 | 0 | 0 |
| B | 60+60=120 | 12+15 = 27 | 6 | 162 | 42 | 42 |
| C | 60+60=120 | 14+17 ½ =31½ | 6 | 189 | 69 | 42+27 |
| D | 60+60=120 | 16+20 = 36 | 6 | 216 | 96 | 42+2x27 |
| E | 60+60=120 | 18+22 ½ = 40½ | 6 | 243 | 123 | 42+3x27 |
| | | | | | 330 | 4 x42+6 x27 |

இரண்டாம் நேர்வு : உற்பத்தி-விலை குறைகிறது.

நிலை பேதம் 1 : இரண்டாவது மூலதன முதலீட்டின் உற்பத்தித் திறன் மாறாதுள்ளது. A வகை நிலம் போட்டியி லிருந்து விலக்கப்பட்டு B வகை நிலம் வாடகை யற்றதாகிறது.

அட்டவணை XVI

| மண் வகை | உற்பத்தி விலை ஷி. | விளை பொருள் புஷல் | விற்பனை விலை ஷி. | விற்று முதல் ஷி. | வாடகை ஷி. | வாடகை அதிகரிப்பு |
|---|---|---|---|---|---|---|
| B | 60+60=120 | 12+12 = 24 | 5 | 120 | 0 | 0 |
| C | 60+60=120 | 14+14 = 28 | 5 | 140 | 20 | 20 |
| D | 60+60=120 | 16+16 = 32 | 5 | 160 | 40 | 2 x20 |
| E | 60+60=120 | 18+18 = 36 | 5 | 180 | 60 | 3 x20 |
| | | | | | 120 | 6 x20 |

நிலை பேதம் 2 : இரண்டாவது மூலதன முதலீட்டின் உற்பத்தித்திறன் குறைகிறது; A வகை நிலம் போட்டியிலிருந்து விலக்கப்பட்டு, B வகை நிலம் வாடகையற்ற தாகிறது.

அட்டவணை XVII

| மண் வகை | உற்பத்தி விலை ஷி. | விளை பொருள் புஷல் | விற்பனை விலை ஷி. | விற்று முதல் ஷி. | வாடகை ஷி. | வாடகை அதிகரிப்பு |
|---|---|---|---|---|---|---|
| A | 60+60=120 | 12 + 9 = 21 | $5\,^5/_7$ | 120 | 0 | 0 |
| B | 60+60=120 | 14+10 ½ = 24½ | $5\,^5/_7$ | 140 | 20 | 20 |
| C | 60+60=120 | 16 + 12 = 28 | $5\,^5/_7$ | 160 | 40 | 2 x20 |
| D | 60+60=120 | 18 +13½= 31½ | $5\,^5/_7$ | 180 | 60 | 3 x20 |
| | | | | | 120 | 6 x20 |

*நிலை பேதம் 3* : இரண்டாவது மூலதன முதலீட்டின் உற்பத்தித் திறன் அதிகரிக்கிறது; A வகை நிலம் போட்டியில் நீடித் திருக்கிற B வகை நிலம் வாடகை தருகிறது.

அட்டவணை XVIII

| மண் வகை | உற்பத்தி விலை ஷி. | விளை பொருள் புஷல் | விற்பனை விலை ஷி. | விற்று முதல் ஷி. | வாடகை ஷி. | வாடகை அதிகரிப்பு |
|---|---|---|---|---|---|---|
| A | 60+60=120 | 10+15 = 25 | $4\,^4/_5$ | 120 | 0 | 0 |
| B | 60+60=120 | 12+18 = 30 | $4\,^4/_5$ | 144 | 24 | 24 |
| C | 60+60=120 | 14+21 = 35 | $4\,^4/_5$ | 168 | 48 | 2 x24 |
| D | 60+60=120 | 16+24 = 40 | $4\,^4/_5$ | 192 | 72 | 3 x24 |
| E | 60+60=120 | 18+27 = 45 | $4\,^4/_5$ | 216 | 96 | 4 x24 |
| | | | | | 240 | 10 x 24 |

மூன்றாம் நேர்வு : உற்பத்தி-விலை உயருகிறது.

A வகை நிலம் வாடகையற்றதாய் இருந்து வருகிறது: அதுவே தொடர்ந்து விலையை ஆளுகிறது.

*நிலை பேதம் 1* : இரண்டாவது மூலதன முதலீட்டின் உற்பத்தித் திறன் மாறாதுள்ளது; இதற்கு முதலாவது மூலதன முதலீட்டின் உற்பத்தித் திறன் குறைவது அவசியம்.

அட்டவணை XIX

| மண் வகை | உற்பத்தி விலை ஷி. | விளை பொருள் புஷல்* | விற்பனை விலை ஷி. | விற்று முதல் ஷி. | வாடகை ஷி. | வாடகை அதிகரிப்பு |
|---|---|---|---|---|---|---|
| A | 60+60=120 | 7 ½+10=17½ | 6 6/7 | 120 | 0 | 0 |
| B | 60+60=120 | 9 + 12 = 21 | 6 6/7 | 144 | 24 | 24 |
| C | 60+60=120 | 10½+14=24½ | 6 6/7 | 168 | 48 | 2x24 |
| D | 60+60=120 | 12+16 = 28 | 6 6/7 | 192 | 72 | 3x24 |
| E | 60+60=120 | 13½+18=31½ | 6 6/7 | 216 | 96 | 4x24 |
| | | | | | 240 | 10x24 |

*நிலை பேதம் 2* : இரண்டாவது மூலதன முதலீட்டின் உற்பத்தித் திறன் குறைகிறது; இது முதலாவது முதலீட்டின் உற்பத்தித் திறன் மாறாமல் இருக்கும் சாத்தியப்பாட்டை விலக்கி விடுவதில்லை.

அட்டவணை XX

| மண் வகை | உற்பத்தி விலை ஷி. | விளை பொருள் புஷல் | விற்பனை விலை ஷி. | விற்று முதல் ஷி. | வாடகை ஷி. | வாடகை அதிகரிப்பு |
|---|---|---|---|---|---|---|
| A | 60+60=120 | 10+5 =15 | 8 | 120 | 0 | 0 |
| B | 60+60=120 | 12+6 =18 | 8 | 144 | 24 | 24 |
| C | 60+60=120 | 14+7 =21 | 8 | 168 | 48 | 2 x24 |
| D | 60+60=120 | 16+8 =24 | 8 | 192 | 72 | 3 x24 |
| E | 60+60=120 | 18+9 =27 | 8 | 216 | 96 | 4 x24 |
| | | | | | 240 | 10 x24 |

*நிலை பேதம் 3* : இரண்டாவது மூலதன முதலீட்டின் உற்பத்தித் திறன் உயருகிறது; அனுமானம் செய்யப்பட்டுள்ள

(*) 1894 ஆம் வருடத்திய ஜெர்மன் பதிப்பில் இந்தத் தலைப்பில் தவறுதலாக அட்டவணை XXI க்குரிய எண் விவரங்கள் நுழைக்கப்பட்டு விட்டன. குறிப்பிட்ட நேர்வுக்குப் பொருத்தமாக அவை மாற்றப்பட்டுள்ளன.- ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

நிலைமைகளில் இதற்கு முதலாவது முதலீட்டின் உற்பத்தித் திறன் குறைவது அவசியம்.

அட்டவணை XXI

| மண் வகை | உற்பத்தி விலை ஷி. | விளை பொருள் புஷல் | | விற்பனை விலை ஷி. | விற்று முதல் ஷி. | வாடகை ஷி. | வாடகை அதிகரிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| A | 60+60=120 | 5+12 ½ | =17 ½ | 6 6/7 | 120 | 0 | 0 |
| B | 60+60=120 | 6+15 | = 21 | 6 6/7 | 144 | 24 | 24 |
| C | 60+60=120 | 7+17 ½ | =24 ½ | 6 6/7 | 169 | 48 | 2 x24 |
| D | 60+60=120 | 8+20 | = 28 | 6 6/7 | 192 | 72 | 3 x24 |
| E | 60+60=120 | 9+22 ½ | =31 ½ | 6 6/7 | 216 | 96 | 4 x24 |
| | | | | | | 240 | 10 x24 |

(B) இன்னும் கீழ்த்தரமான மண்வகை (a என்பது) விலையை ஆளுவதாகிறது; இதனால் A வகை நிலம் வாடகை தருகிறது. இது எல்லா நிலை பேதங்களிலும் இரண்டாவது முதலீட்டின் உற்பத்தித் திறன் மாறாமலிருப்பதற்கு இடமளிக்கிறது.

நிலை பேதம் 1 : இரண்டாவது மூலதன முதலீட்டின் உற்பத்தித் திறன் மாறாதிருக்கிறது.

அட்டவணை XXII

| மண் வகை | உற்பத்தி விலை ஷி. | விளை பொருள் புஷல் | | விற்பனை விலை ஷி. | விற்று முதல் ஷி. | வாடகை ஷி. | வாடகை அதிகரிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| a | 120 | | 16 | 7½ | 120 | 0 | 0 |
| A | 60+60=120 | 10+10 | =20 | 7½ | 150 | 30 | 30 |
| B | 60+60=120 | 12+12 | =24 | 7½ | 180 | 60 | 2 x30 |
| C | 60+60=120 | 14+14 | =28 | 7½ | 210 | 90 | 3 x30 |
| D | 60+60=120 | 16+16 | =32 | 7½ | 240 | 120 | 4 x30 |
| E | 60+60=120 | 18+18 | =36 | 7½ | 270 | 150 | 5 x30 |
| | | | | | | 450 | 15 x 30 |

**நிலை பேதம் 2 : இரண்டாவது மூலதன முதலீட்டின் உற்பத்தித் திறன் குறைகிறது.**

அட்டவணை XXIII

| மண் வகை | உற்பத்தி விலை ஷி. | விளை பொருள் புஷல் | விற்பனை விலை ஷி. | விற்று முதல் ஷி. | வாடகை ஷி. | வாடகை அதிகரிப்பு |
|---|---|---|---|---|---|---|
| a | 120 | 15 | 8 | 120 | 0 | 0 |
| A | 60+60 =120 | 10+7 ½ =17 ½ | 8 | 140 | 20 | 20 |
| B | 60+60 =120 | 12 + 9 = 21 | 8 | 168 | 48 | 20+28 |
| C | 60+60 =120 | 14+10 ½ = 24 ½ | 8 | 196 | 76 | 20+2 x28 |
| D | 60+60 =120 | 16 + 12 = 28 | 8 | 224 | 104 | 20+3 x28 |
| E | 60+60 =120 | 18+13 ½ = 31 ½ | 8 | 252 | 132 | 20+4 x28 |
| | | | | | 380 | 5 x 20+10x28 |

**நிலை பேதம் 3 : இரண்டாவது மூலதன முதலீட்டின் உற்பத்தித் திறன் அதிகரிக்கிறது.**

அட்டவணை XXIV

| மண் வகை | உற்பத்தி விலை ஷி. | விளை பொருள் புஷல் | விற்பனை விலை ஷி. | விற்று முதல் ஷி. | வாடகை ஷி. | வாடகை அதிகரிப்பு |
|---|---|---|---|---|---|---|
| a | 120 | 16 | 7 ½ | 120 | 0 | 0 |
| A | 60+60 =120 | 10+12 ½= 22½ | 7 ½ | 168 ¾ | 48 ¾ | 15+33¾ |
| B | 60+60 =120 | 12+15 = 27 | 7 ½ | 202 ½ | 82 ½ | 15+2 x33¾ |
| C | 60+60 =120 | 14+17½ = 31½ | 7 ½ | 236 ¼ | 116 ¼ | 15+3 x33¾ |
| D | 60+60=120 | 16+20 = 36 | 7 ½ | 270 | 150 | 15+4 x33¾ |
| E | 60+60 =120 | 18+22 ½ = 40½ | 7 ½ | 303 ¾ | 183 ¾ | 15+5 x33¾ |
| | | | | | 581 ¼ | 5 x15+15 x33¾ |

இந்த அட்டவணையிலிருந்து பின் வரும் முடிவுகள் பெறப் படுகின்றன:

முதலாவதாக, வாடகைகளின் தொடர்வரிசையும் மண் வள வேறுபாடுகளின் தொடர்வரிசையும் ஒரே விகிதத்தில் அமைந்துள்ளன.- வாடகை தராத விலையை ஆளுகிற மண்வகையை சுன்னப்புள்ளியாகக்

கொள்கிறோம். வாடகையை நிர்ணயிக்கும் காரணிகளாய் இருப்பவை விலைபொருள் அளவிலான வேறுபாடுகள்தானே தவிர அறுதி விளைபொருள் அளவுகளல்ல. பல்வேறு மண் வகைகளும் ஏக்கர் ஒன்றுக்கு 1,2,3,4,5 புஷல் விளைந்தாலும் சரி, 11, 12, 13, 14, 15 புஷல் விளைந்தாலும் சரி, இரு சந்தர்ப்பங்களிலுமே வாடகைகளின் தொடர்வரிசை 0,1,2,3,4 புஷல் அல்லது அதனதன் பணச் சமதைதான்.

ஆனால் இதைவிடவும் முக்கியமானது ஒரே நிலத்தில் திரும்பத் திரும்ப முதலீடாகிற மூலதனத்துக்கு கிடைக்கும் மொத்த வாடகை அளவுகள் தொடர்பான முடிவுதான்.

நாம் பரிசீலித்த பதின்மூன்று நேர்வுகளில் ஐந்தில், மூலதன முதலீடு இருமடங்காகும் போது மொத்த வாடகையும் இருமடங்காகிறது; 10X12 ஷில்லிங் என்பதற்கு பதில் 10X24 ஷில்லிங் = 240 ஷில்லிங் ஆகிறது. இந்த நேர்வுகள் பின்வருமாறு.

நேர்வு I, மாறா-விலை, நிலை-பேதம் 1: உற்பத்தி உயர்வு மாறாதிருத்தல் (அட்டவணை XII).

நேர்வு II, குறையும் விலை, நிலை பேதம் 3: உற்பத்தி, உயர்வு அதிகமாகிச் செல்லும் (அட்டவணை XVIII).

நேர்வு III, அதிகரிக்கும் விலை, முதல் வழி (A வகை நிலம் தொடர்ந்து விலையை ஆளுகிறது); மூன்று நிலைபேதங்களிலும் (அட்டவணை XIX, XX, XXI).

நான்கு நேர்வுகளில் வாடகை இருமடங்குக்கு மேல் அதிகரிக்கிறது; அதாவது:

நேர்வு I, நிலைபேதம் 3, மாறாவிலை, ஆனால் உற்பத்தி உயர்வு அதிகமாகிச் செல்லுதல் (அட்டவணை XV). மொத்த வாடகை 330 ஷில்லிங்காக உயருகிறது.

நேர்வு III, இரண்டாவது வழி (A வகை நிலம் வாடகை தருகிறது), மூன்று நிலை பேதங்களிலும் (அட்டவணை XXII, வாடகை= 15X30=450 ஷில்லிங்; அட்டவணை XXIII, வாடகை=5 X20+10 X28=380 ஷில்லிங்; அட்டவணை XXIV, வாடகை=5 X15+15 X33 ¾=581 ¼ ஷில்லிங்)

ஒரு நேர்வில் வாடகை உயருகிறது. ஆனால் முதலாவது மூலதன முதலீட்டுக்கு கிடைப்பதைப் போல் இருமடங்காக உயரவில்லை:

நேர்வு I, மாறாவிலை, நிலைபேதம் 2:B வகை நிலம் கொஞ்சங்கூட வாடகை தராமற் போகாத நிலைமைகளில் இரண்டாவது முதலீட்டின் உற்பத்தித் திறன் குறைதல் (அட்டவணை XIV. வாடகை 4X6+6X21=150 ஷில்லிங்).

கடைசியாக, மூன்று நேர்வுகளில் மட்டுமே எல்லா மண் வகைகளையும் சேர்த்துப் பார்த்தால் முதலாவது முதலீட்டுக்கு கிடைக்கும் அதே மொத்த வாடகை இரண்டாவது முதலீட்டுக்கும் கிடைக்கிறது; இந்த நேர்வுகளில் A வகை நிலம் போட்டியிலிருந்து விலக்கப்பட்டு, B வகை நிலம் விலையை ஆளுவதும், எனவே வாடகை தராததுமான மண்வகை ஆகிறது. இவ்விதம் B வகை நிலத்துக்கான வாடகை மறைந்து போவதோடு வாடகை வரிசையில் அடுத்தடுத்து வரும் ஒவ்வொரு படியிலிருந்தும் கழிக்கப்படவும் செய்கிறது; முடிவு இப்படி நிர்ணயமாகிறது. இந்த நேர்வுகளாவன:

நேர்வு I, நிலைபேதம் 2, A வகை நிலம் விலக்கப்படும்படியான நிலைமைகள் (அட்டவணை XIII). மொத்த வாடகை 6 X20, அல்லது அட்டவணை XIஇல் போல் 10 X12=120.

நேர்வுII, நிலைபேதங்கள் 1,2 இங்கு நமது அனுமானங்களின்படி Aவகை நிலம் விலக்கப்பட்டாக வேண்டும் (அட்டவணைகள் XVI; XVII); மீண்டும்மொத்த வாடகை 6 X20 = 10 X12=120 ஷில்லிங்;

அதாவது: சாத்தியமான எல்லா நேர்வுகளையும் எடுத்துக் கொண்டால், அவற்றில் மிகப் பெரும்பாலானவற்றில் நிலத்திலான மூலதன முதலீடு அதிகரிப்பதால் வாடகை உயருகிறது- வாடகை தரும் நிலத்தின் ஏக்கர் ஒன்றுக்கான வாடகையும் சரி, குறிப்பாக மொத்த வாடகை அளவும்சரி, இரண்டுமே உயருகின்றன. பரிசிலிக்கப்பட்ட பதின்மூன்று நேர்வுகளில் மூன்றில் மட்டுமே மொத்த வாடகை அளவு மாறாதிருக்கிறது. இந்த மூன்று நேர்வுகளிலும் ஆகக் கீழ்த்தரமான மண்வகை-இதுவரை விலையை ஆளுவதாகவும் வாடகை தராத தாகவும் இருந்த மண்வகை போட்டியிலிருந்து நீக்கப்பட்டு, அடுத்தபடி தரங்கூடிய மண் வகை அதனிடத்துக்கு வருகிறது, அதாவது வாடகை தராததாகிறது. ஆனால் இந்த நேர்வுகளிலும் கூட உயர்தர மண்வகை களிலிருந்து கிடைக்கும் வாடகைகள் முதலாவது மூலதன முதலீட்டின் விளைவான வாடகைகளுடன் ஒப்பிடுகையில் உயருகின்றன; C வகை நிலத்துக்கான வாடகை 24 இலிருந்து 20 ஷில்லிங்காக குறையும் போதே, D,E வகை நிலங்களுக்கான வாடகைகள் முறையே 36, 48 ஷில்லிங்கிலிருந்து 40,60, ஷில்லிங்காக உயருகின்றன.

A வகை நிலம் மட்டுமல்லாமல் B வகை நிலமும் போட்டியிலிருந்து விலக்கப்பட்டு C வகை நிலம் விலையை ஆளுவதும் வாடகை தராததுமான மண்வகையினால் மட்டுமே மொத்த வாடகை அளவு முதலாவதுமூலதன முதலீட்டுக்கான அளவை விடவும் குறைந்து போவது சாத்தியமாகும்.

ஆக, ஒரு நாட்டில் எவ்வளவு அதிகமான மூலதனம் நிலத்தில் முதலீடாகிறதோ, வேளாண்மையும் பொதுவாக நாகரிகமும் எவ்வளவு அதிகமாய் வளர்ச்சியடைந்துள்ளனவோ, ஏக்கர் ஒன்றுக்கான வாடகையும் மொத்த வாடகை அளவும் அவ்வளவு அதிகமாய் உயருகின்றன. ஆகவே சமுதாயம் உபரி-இலாபங்களின் வடிவில் பெருநிலவுடைமையாளர்களுக்கு அவ்வளவு பிரம்மாண்டமாய்க் கப்பம் செலுத்துகின்றது சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்ட பல்வேறு மண் வகைகள் யாவும் எதுவரை தொடர்ந்து போட்டியிட முடிகிறதோ அதுவரை.

இவ்வித பெருநிலவுடைமையாளர் வர்க்கத்தின் திகைப்புக்குரிய உயிர்துடிப்புக்கு விளக்கமாகிறது. சமுதாயத்தில் வேறெந்த வர்க்கமும் இவ்வளவு ஊதாரித்தனமாய் வாழ்வதில்லை, தனது 'ஆதினத்துக்குப்' பொருத்தமாய் பரம்பரை சொகுசுக்கு - இதற்கு எங்கிருந்து பணம் வருகிறது என்ற கவலையே இல்லாமல்-உரிமை கொண்டாடுவது போல் வேறெந்த வர்க்கமும் உரிமை கொண்டாடுவதில்லை; வேறெந்த வர்க்கமும் இவ்வளவு அலட்சியமாய் மேன்மேலும் கடனுக்கு மேல் கடன் வாங்குவதில்லை. என்றாலும் எப்போதுமே இந்த நிலவுடைமை யாளர்கள் மறுபடியும் காலூன்றி விடுகிறார்கள் - நிலத்தில் மற்றவர்கள் முதலீடு செய்கிற மூலதனமே இதற்குக் காரணம், இந்த மூலதனம் அதிலிருந்து முதலாளி அடையும் இலாபத்திற்கு கொஞ்சம் கூட விகிதப் பொருத்தம் இல்லாமல் அவர்களுக்கு வாடகை பெற்றுக் கொடுக்கிறது.

ஆனால், இதே விதிதான் பெருநிலக்கிழாரின் உயிர்துடிப்பு மெல்ல மெல்ல அடங்கி வருவதற்கும் விளக்கமாகிறது.

ஆங்கிலேய தானியத் தீர்வைகள் 1846 இல் ஒழிக்கப்பட்ட போது ஆங்கிலேய தொழில் அதிபர்கள் இதன்மூலம் நிலவுடைமைப் பிரபுக் குலத்தாரை வக்கற்றவர்களாக்கி விட்டதாக நம்பினார்கள். ஆனால், அவர்களோ எக்காலத்திலும் இல்லாத அளவுக்கு செல்வந்தர் களானார்கள். இது எப்படி நிகழ்ந்தது? மிகச் சாதாரணமாகவே முதலாவதாக, சாகுபடியாளர்கள் ஆண்டுக்கு ஏக்கர் ஒன்றுக்கு £8க்குப் பதில் இப்போது £12 முதலீடு செய்யும்படி ஒப்பந்தத்தால்

நிர்பந்திக்கப்பட்டார்கள். இரண்டாவதாக, நிலவுடைமையாளர்கள் கீழ்ச்சபையிலும் வலுவான பிரதிநிதித்துவம் பெற்றிருந்ததால், தமது நிலத்தில் வடிகால் திட்டங்களுக்கும் ஏனைய நிரந்தர மேம்பாடு களுக்கும் தமக்குத்தாமே பெருமளவில் அரசு மானியம் வழங்கிக் கொண்டார்கள். படுமோசமான மண்வகை முழுமொத்தமாய் விலக்கப்படும் நிலை ஏற்படாமல் எப்படியும் அது வேறு நோக்கங் களுக்காகவது-பெரும்பாலும் தற்காலிகமாகவே - பயன்படலானதால், மூலதன முதலீடு அதிகரித்ததுக்கேற்ற விகிதத்தில் வாடகைகளும் உயர்ந்தன, எனவே நிலவுடைமை பிரபுக் குலத்தார் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு வசதிபடைத்தவர்களாயினர்.

ஆனால் எதுவும் நிலையானதன்று. பெருங்கடலோடும் நீராவிக் கப்பல்களும், வட அமெரிக்காவிலும் தென் அமெரிக்காவிலும் இந்தியாவிலுமான இருப்புப் பாதைகளும் சில அதியுன்னத நிலப்பரப்புகள் ஐரோப்பியத் தானியச் சந்தைகளில் போட்டியிடுவதை சாத்தியமாக்கின. இந்நிலப் பரப்புகள் ஒருபுறம் வட அமெரிக்க பிரைரிகளாகவும் அர்ஜென்டைனாவின் பம்பாக்களாகவும் அமைந்தன -இவை இயற்கையே உழவுக்குத் திருத்திக் கொடுத்த சமவெளிகள் ஆகும், புராதன வழியிலும் உரங்கள் இல்லாமலும் சாகுபடி செய்யப்பட்டாலும் கூட பல்லாண்டுகாலம் அமோக விளைச்சல் கொடுத்த கன்னி நிலம் ஆகும். மறுபுறம் ருஷியாவிலும் இந்தியாவிலும் இடம்பெற்ற பொதுவுடைமைக் கிராம சமுதாயங்களின் நிலவுடைமைகள் ஈவிரக்கமற்ற கொடுங்கோல் அரசினால் அவற்றிடமிருந்து - பலநேரம் துன்புறுத்தலின் துணைகொண்டு- கறக்கப்பட்ட வரிகளுக்கு பணம் சம்பாதிக்கும் பொருட்டு தமது விளைபொருளில் ஒரு பகுதியை (அதுவும் ஓயாமல் பெருகிச் செல்லும் பகுதியை) விற்க வேண்டியதாயிற்று. இந்த விளைபொருட்கள் உற்பத்தி - விலையைப் பொருட்படுத்தாமல் விற்கப்பட்டன, வியாபாரி கேட்ட விலைக்கு விற்கப்பட்டன; ஏனென்றால் வரிகளைச் செலுத்த வேண்டிய நாள் வரும்போது தவறாமல் விவசாயிக்கு பணம் வேண்டி இருந்தது. இந்த போட்டிக்கு - கன்னி நிலமாகிய பிரைரியிலிருந்தும் வரிவிதிப்பால் கசக்கிப் பிழியப்படும் ருஷிய, இந்திய விவசாயிகளிடமிருந்துமான இப்போட்டிக்கு-ஐரோப்பியச் சாகுபடியாளராலோ விவசாயியாலோ பழைய வாடகையில் முகம் கொடுக்க முடியாது. ஐரோப்பாவில் ஒரு பகுதி நிலம் தானியச் சாகுபடியைப் பொறுத்த வரை திட்டவட்டமாய் போட்டியிலிருந்து வெளியேறியது; எங்குமே வாடகைகள் சரிந்தன;

நமது இரண்டாம் நேர்வு, நிலை பேதம் 2-விலைகள் குறைவதும் கூடுதல் மூலதன முதலீட்டின் உற்பத்தித் திறன் குறைவதும்- ஐரோப்பாவுக்கு விதியாயிற்று; ஸ்காட்லாந்து முதல் இத்தாலி வரை, தெற்கு பிரான்சு முதல் கிழக்கு பிரசியா வரை நிலவுடைமையாளர்களிடமிருந்து கேட்கும் அழுகுரலுக்கு இதுவே காரணம். நல்ல வேளையாக, பிரைரி நிலம் முழுவதும் இன்னமும் முழுமையாக சாகுபடிக்குக் கொண்டு வரப்படவில்லை; ஐரோப்பாவின் பெருநிலவுடைமையாளர்கள் அனைவரையும், அத்தோடு சிறு நிலவுடைமையாளர்களையும் கூட நாசமாக்குவதற்குப் போதுமான நிலம் மிச்சம் இருக்கிறது.- பி.எங்கெல்ஸ்

---

வாடகையைப் பின்வரும் தலைப்புகளில் பகுத்தாராய வேண்டும்:

A. வேறுபாட்டு வாடகை.

(1) வேறுபாட்டு வாடகையின் கருத்தமைவு. எடுத்துக்காட்டாக நீர்விசை முறையான விவசாய வாடகைக்கு மாறிச் செல்லுதல்.

(2) வேறுபாட்டு வாடகை I, பல்வேறு நிலத்துண்டுகளின் மாறுபடும் மண் வளத்திலிருந்து எழுவது;

(3) வேறுபாட்டு வாடகை II, ஒரே நிலத்தில் அடுத்தடுத்த மூலதன முதலீடுகளிலிருந்து எழுவது, வேறுபாட்டு வாடகைII பின்வரும் நிலைகளில் பகுத்தாராயப்பட வேண்டும்:

(அ) மாறா உற்பத்தி - விலை,

(ஆ) குறையும் உற்பத்தி - விலை.

(இ) உயரும் உற்பத்தி - விலை;

(ஈ) உபரி - இலாபம் வாடகையாக மாற்றமடைதல்

(4) இலாபவீதத்தின் மீது இவ்வாடகையின் தாக்கம்

B. அறுதி வாடகை

C. நிலத்தின் விலை

D நில-வாடகை தொடர்பான இறுதிக் குறிப்புரைகள், வேறுபாட்டு வாடகையை அதன் முழு உருவில் பரிசீலிக்கும் போது பின்வரும் பொது முடிவுகள் கிடைக்கின்றன.

---

*முதலாவதாக*, உபரி-இலாபத்தின் உருவாக்கம் பல்வேறு வழிகளில் நடைபெறலாம். ஒரு புறம், வேறுபாட்டு வாடகை Iஇன் அடிப்படையில், அதாவது மாறுபடும் வளமுடைய மண் வகைகளாய் அமைந்துள்ள நிலத்தில் விவசாய மூலதனம் அனைத்தையும் முதலீடு செய்வதன் அடிப்படையில் நடைபெறலாம். அல்லது, வேறுபாட்டு வாடகை IIஇன் வடிவில், ஒரே நிலத்தில் அடுத்தடுத்த மூலதன முதலீடுகளின் வேறுபாட்டு உற்பத்தித் திறன் மாறுவதன் அடிப்படையில் நடைபெறலாம்; அதாவது வாடகை ஏதும் தராத, ஆனால் உற்பத்தி-விலையை ஆளுகிற மிகவும் கீழ்த்தரமான நிலத்தில் அதே மூலதன முதலீட்டைக்கொண்டு பெறப்படுவதைக் காட்டிலும்-எடுத்துக்காட்டாக இத்தனை குவார்ட்டர் கோதுமை என்ற கணக்கில்-கூடுதலான உற்பத்தித் திறன் பெறப்படுகிறது. ஆனால் இந்த உபரி - இலாபம் எப்படி வந்தாலும் சரி, அது வாடகையாக மாற்றம் அடைய வேண்டமானால், அதாவது சாகுபடியாளரிடமிருந்து நிலவுடைமையாளருக்கு கைமாற வேண்டுமானால், அடுத்தடுத்த தனிப்பட்ட மூலதன முதலீடுகளின் பகுதி விளைபொருட்களுக்குரிய பல்வேறு உள்ளபடியான தனிப்பட்ட உற்பத்தி-விலைகளும் (அதாவது சந்தையை ஆளும் பொது உற்பத்தி-விலையைச் சாராமல் சுயேச்சையாக இருப்பவை) முன்கூட்டியே தனிப்பட்ட சராசரி உற்பத்தி-விலையாக மாற்றப்பட்டிருக்க வேண்டும். இந்த தனிப்பட்ட சராசரி உற்பத்தி-விலைக்கு மேல் ஏக்கர் ஒன்றுக்கான விளைபொருளின் பொதுவான ஆளும் உற்பத்தி-விலையில் மிகையாக இருப்பது ஏக்கர் ஒன்றுக்கான வாடகையாக அமைந்து, அவ்வாடகைக்கு அளவையாகிறது. வேறுபாட்டு வாடகை Iஐப் பொறுத்தவரை, வேறுபாட்டு விளைவுகளை அவற்றளவிலேயே வேறுபடுத்திக் காண முடிகிறது; ஏனென்றால் ஏக்கர் ஒன்றுக்கான மூலதன முதலீடு இயல்பானதென்று, எனவே சாகுபடி இயல்பான முறையில் நடைபெறுவதாகவும் வைத்துக் கொண்டால் இந்த விளைவுகள் தனித்தனியாக, அக்கம் பக்கமாய் இருந்து வருகிற-வெவ்வேறு நிலப்பகுதிகளில் ஏற்படுகின்றன. வேறுபாட்டு வாடகை IIஐப் பொறுத்தவரை, முதலில் இந்த விளைவுகளை வேறுபடுத்திப் பார்க்கத் தக்கவையாக்க வேண்டும்; உண்மையில் அவற்றை திரும்பவும், வேறுபாட்டை வாடகை I ஆக மாற்ற வேண்டும்; மேலே எடுத்துக்காட்டிய வழியில்தான் இதைச் செய்ய முடியும். உதாரணமாக அட்டவணை IIIஐ* எடுத்துக் கொள்வோம்.

---

* தமிழ்ப் பதிப்பில் பக்கம் : 977—பதிப்பாசிரியர்-

Bவகை நிலம் முதலாவது £2 ½ மூலதன முதலீட்டுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 2 குவார்ட்டரும் அதே அளவிலான இரண்டாவது மூலதன முதலீட்டுக்கு 1 ½ குவார்ட்டரும் விளைவிக்கிறது. ஆக மொத்தம் ஒரே ஏக்கரிலிருந்து 3 ½ குவார்ட்டர் கிடைக்கிறது. இந்த 3 ½குவார்ட்டரில் எந்தப் பகுதி முதலாவது மூலதன முதலீட்டின் விளைபொருள் என்பதையும் எந்தப் பகுதி இரண்டாவது முதலீட்டின் விளைபொருள் என்பதையும் வேறுபடுத்திப் பார்ப்பது சாத்தியமில்லை; ஏனென்றால் எல்லாம் ஒரே நிலத்தில் விளைந்ததுதான். உண்மையில் 3½ குவார்ட்டரானது £ 5 மொத்த மூலதனத்திலிருந்து கிடைத்த விளை பொருளாகும்; உண்மையில் நடந்தது என்னவென்றால், £ 2½ மூலதனம் 2 குவார்ட்டர் விளைவித்தது. £5 மூலதனம் 4 குவார்ட்டருக்குப் பதில் 3½ குவார்ட்டர் தான் விளைவித்தது. £5 ஆனது 4 குவார்ட்டர் விளைவித்து இருந்தால் அதாவது இரு மூலதன முதலீடுகளிலிருந்தும் கிடைக்கும் விளைபொருள் சமமாய் இருந்தால், அப்போதும் நிலைமையில் எவ்வித மாற்றமும் இருக்காது; விளைபொருள் 5 குவார்ட்டராகவே இருந்தாலும் கூட, அதாவது இரண்டாவது மூலதன முதலீடு உபரியாக 1 குவார்ட்டர் விளைவித்தாலும் கூட இதே நிலைமைதான். முதல் 2 குவார்ட்டரின் உற்பத்தி-விலை குவார்ட்டர் ஒன்றுக்கு £ 2 ½ஆகும், இரண்டாவது 1 ½ குவார்ட்டரின் உற்பத்தி - விலை குவார்ட்டர் ஒன்றுக்கு £2 ஆகும். ஆகவே மொத்தமுள்ள 3 ½குவார்ட்டரின் விலை 6 ஆகும். இது மொத்த விளைபொருளின் தனிப்பட்ட உற்பத்தி-விலை ஆகும்; சராசரியாக குவார்ட்டர் ஒன்றுக்கு £114 $^{2}/_{7}$ ஷில்லிங், அதாவது தோராயமாக £1¾ ஆகும். Aவகை நிலத்தால் நிர்ணயிக்கப்படும் பொது உற்பத்தி- விலை £3 ஆதலால், இதிலிருந்து குவார்ட்டர் ஒன்றுக்கு £ 1 ¼உபரி-இலாபம் கிடைக்கிறது; எனவே 3 ½குவார்ட்டருக்கு மொத்தம் £ 4 $^{3}/_{8}$ கிடைக்கிறது. B வகை நிலத்தின் சராசரி உற்பத்தி-விலையில் இது சுமார் 1 ½ குவார்ட்டருக்கு ஒப்பாகிறது. அதாவது, B வகை நிலத்திலிருந்து கிடைக்கும் உபரி-இலாபம் அந்நிலத்திலிருந்து கிடைக்கும் விளைபொருளின் ஓர் ஈவுப் பகுதியாக, 1½குவார்ட்டராகக் காட்டப்படுகிறது; இது வாடகையை தானியமாகத் தெரிவிக்கிறது; பொது உற்பத்தி-விலைக்கிணங்க £ 4½க்கு விற்கப்படுகிறது. ஆனால் மறுபுறம், A வகை நிலத்தில் ஓர் ஏக்கரிலிருந்து கிடைப்பதற்கு மேல் B வகை நிலத்தில் ஓர் ஏக்கரிலிருந்து கிடைக்கும் மிகையான விளைபொருள் அதுவாகவே உபரி-இலாபத்தையும், உபரி உற்பத்தியையும் குறிப்பதாகாது. நமது அனுமானப்படி B வகையில் ஓர் ஏக்கர் 3 ½ குவார்ட்டர் தருகிறது.

ஆனால் A வகையில் ஓர் ஏக்கர் ஒரு குவாட்டர்தான் தருகிறது. ஆகவே B வகை நிலத்திலிருந்து மிகையாகக் கிடைக்கும் விளைபொருள் 2 ½ குவார்ட்டர் என்றாலும், உபரி-உற்பத்தி 1½குவார்ட்டர்தான்; எப்படியென்றால் Bவகை நிலத்தில் முதலீடாகிற மூலதனம் A வகை நிலத்தில் முதலீடாவதைப் போல் இருமடங்காகும்; எனவே அதன் உற்பத்தி-விலையும் இருமடங்காகும். Aவகை நிலத்திலும் £ 5 முதலீடு செய்யப்பட்டு, உற்பத்தித்திறன் வீதம் மாறாதிருக்குமானால் விளைபொருள் 1 குவார்ட்டருக்குப் பதில் 2 குவார்ட்டராக இருக்கும்; மெய்யான உபரி-உற்பத்தி 3½ஐ 1உடன் ஒப்பிடுவதற்குப் பதில் 3½யை 2உடன் ஒப்பிடுவதன் மூலமே நிர்ணயிக்கப்படுவது. அப்போது தெரியவரும்: அதாவது அது 1½ குவார்ட்டர்தானே தவிர 2½குவார்ட்டர் அல்ல. மேலும், B வகை நிலத்தில் மூன்றாவது முறையாக £ 2½மூலதனம் முதலீடு செய்யப்படுமானால், இதிலிருந்து ஒரு குவார்ட்டர் மட்டுமே கிடைக்குமானால்-அப்போது இந்த குவார்ட்டரின் விலை A வகை நிலத்தில் போலவே £ 3ஆக இருக்கும் - அதன் விற்பனை-விலையாகிய £ 3 என்பது உற்பத்தி - விலைக்கு மட்டுமே ஈடாகும், சராசரி இலாபமட்டும் கிடைக்கச் செய்யுமே தவிர உபரி-இலாபம் ஏதும் கிடைக்கச் செய்யாது; அதாவது வாடகையாக மாற்றம் அடையக் கூடிய எதுவும் அதிலிருந்து கிடைக்காது. ஏதேனுமொரு குறிப்பிட்ட வகை நிலத்திலிருந்து ஏக்கரொன்றுக்கு கிடைக்கும் - விளைபொருளை Aவகை நிலத்திலிருந்து ஏக்கரொன்றுக்கு கிடைக்கும் விளைபொருளோடு ஒப்பு நோக்குவதானது, அந்த விளைபொருள் அதே அளவு மூலதன முதலீட்டிலிருந்து பெறப்படுவதா, அல்லது கூடுதலான மூலதன முதலீட்டிலிருந்து பெறப்படுவதா என்பதையோ, கூடுதல் விளைபொருள் உற்பத்தி-விலைக்கு மட்டும் ஈடாகிறதா, அல்லது கூடுதல் மூலதனத்தின் இன்னுமதிக உற்பத்தித் திறனை காரணமாய் கொண்டுள்ளதா என்பதையோ வெளிப்படுத்துவதில்லை.

இரண்டாவதாக, கூடுதல் மூலதன முதலீடுகளுக்கான உற்பத்தித் திறன் வீதம் குறைந்து செல்வதாகக் கொண்டால்-புதிய உபரி-இலாப உருவாக்கத்தைப் பொறுத்த வரை, இந்த முதலீடுகளுக்கு வரம்பெல்லையாய் அமைவது உற்பத்தி-விலையை மட்டும் ஈடுசெய்கிற மூலதன முதலீடு ஆகும், அதாவது இம்முதலீட்டால் உற்பத்தி செய்யப்படும் ஒரு குவார்ட்டரின் உற்பத்தி-விலையும் அதே அளவு முதலீடு A வகை நிலத்தின் ஓர் ஏக்கரில் உற்பத்தி செய்யும் ஒரு குவார்ட்டரின் உற்பத்தி - விலையும் ஒன்றே. (நமது அனுமானப்படி £3)

- மேற்கூறியதிலிருந்து தெரிய வருவது என்னவென்றால்: B வகை நிலத்தில் ஏக்கரொன்றுக்கான விளைபொருளின் தனிப்பட்ட சராசரி உற்பத்தி-விலை A வகை நிலத்தில் ஏக்கரொன்றுக்கான விளை பொருளின் உற்பத்தி-விலையினளவுக்கு உயர்ந்து விடும்போது கூடுதல் முதலீடுகளுக்கான வரம்பெல்லையை வந்தடைகிறோம்; அதாவது B வகை நிலத்தின் ஓர் ஏக்கரிலான மொத்த மூலதன முதலீடு இப்போது வாடகையேதும் தராத நிலையை வந்தடைகிறோம்.

B வகை நிலத்திலான மூலதன முதலீடுகள் உற்பத்தி-விலையை மட்டும் கிடைக்கச் செய்வதாய், அதாவது கொஞ்சங் கூட உபரி-இலாபமோ புதிய வாடகையோ தராததாய் அமையும் நிலை ஏற்படுமானால், இது குவார்ட்டர் ஒன்றுக்கான தனிப்பட்ட சராசரி உற்பத்தி-விலையை உயரச் செய்தபோதிலும், முந்தைய மூலதன முதலீடுகளால் உருபெற்ற உபரி - இலாபத்தையும், வாடகையையும் பாதிப்பதில்லை. ஏனென்றால் சராசரி உற்பத்தி-விலை எப்போதுமே Aவகை நிலத்துக்குரிய உற்பத்தி-விலைக்குக் கீழாகவே இருந்து வருகிறது; குவார்ட்டர் ஒன்றுக்கான கூடுதல் விலை குறையும் போது குவார்ட்டர்களின் எண்ணிக்கை அதே விகிதத்தில் அதிகரிப்பதால், மொத்தக் கூடுதல் விலை மாறாதிருந்து வருகிறது.

நாம் அனுமானம் செய்து கொண்ட நேர்வில், B வகை நிலத்தில் ஒவ்வொன்றும் £5 ஆகிய முதல் இரு மூலதன முதலீடுகள் 3 ½ குவார்ட்டர் உற்பத்தி செய்கின்றன; அதாவது நம் அனுமானப்படி £4 ½க்கு சமமான 1 ½ குவார்ட்டர் வாடகை தருகின்றன. இப்போது மூன்றாவதாக £ 2½ மூலதனம் முதலீடு செய்யப்படுமானால், இம்முதலீடு கூடுதலாய் ஒரு குவார்ட்டர் மட்டும் உற்பத்தி செய்யுமானால், 4½குவார்ட்டரின் மொத்த உற்பத்தி-விலை (20% இலாபம் உட்பட) = £9; ஆக குவார்ட்டர் ஒன்றுக்கான சராசரி விலை = £2. Bவகை நிலத்தில் குவார்ட்டர் ஒன்றுக்கான சராசரி உற்பத்தி-விலை இவ்வாறு £ $1^{5}/_{7}$ இலிருந்து £2 ஆக உயர்ந்திருக்கிறது; A வகை நிலத்துக்குரிய ஆளும் விலையுடன் ஒப்பிடுங்கால் குவார்ட்டர் ஒன்றுக்கான உபரி - இலாபம் £ $1^{2}/_{7}$ இலிருந்து £ 1ஆக குறைந்துள்ளது. ஆனால் £ 1X 4½ = £4½; முன்பு £ $1^{2}/_{7}$X3½ = £4½ஆக இருந்ததல்லவா, அதே போலத்தான் இதுவும்.

B வகை நிலத்தில் ஒவ்வொன்றும் £ 2 ½ வீதம் நான்காவதாகவும் ஐந்தாவதாகவும் கூடுதல் மூலதனங்கள் முதலீடு செய்யப்படுவதாகக் கொள்வோம்; இம்முதலீடுகள் ஒரு குவார்ட்டர் மட்டுமே அதன் பொது

உற்பத்தி-விலைக்கு உற்பத்தி செய்கின்றன. ஆக ஏக்கரொன்றுக்கான மொத்த உற்பத்தி 6 ½குவார்ட்டராகவும் அதன் உற்பத்தி-விலை £ 15 ஆகவும் இருக்கும். B வகை நிலத்தில் குவார்ட்டர் ஒன்றுக்கான சராசரி உற்பத்தி-விலை மீண்டும் உயர்ந்து £2* இதிலிருந்து £2 4/13 ஆகியிருக்கும்: A வகை நிலத்துக்குரிய ஆளும் உற்பத்தி-விலையுடன் ஒப்பிடுங்கால், குவார்ட்டர் ஒன்றுக்கான உபரி-இலாபம் மறுபடியும் குறைந்திருக்கும், £1இலிருந்து £9/13ஆகியிருக்கும். ஆனால் £9/13ஆனது 4 ½ குவார்ட்டருக்குப் பதில் 6½ குவார்ட்டரின் அடிப்படையில் கணக்கிடப்பட வேண்டியதாய் இருக்கும். £ 9/13 X6 ½=£1 X 4 ½=£ 4 ½.

இதிலிருந்து தெரிவது என்னவென்றால்; முதலாவதாக, வாடகை தரும் மண்வகைகளில் கூடுதல் மூலதன முதலீடுகள் சாத்தியமாகும்படி செய்வதற்கு-கூடுதல் மூலதனம் உபரி-இலாபம் தருவது அறவே நின்றுபோய் சராசரி இலாபம் மட்டும் தரக்கூடிய நிலை வரும்வரை கூட இப்படிச் செய்வதற்கு இந்நிலைமைகளில் ஆளும் உற்பத்தி-விலை சிறிதும் உயரத் தேவையில்லை. மேலும் குவார்ட்டர் ஒன்றுக்கான சராசரி இலாபம் எவ்வளவுதான் குறைந்தாலும் இங்கு ஏக்கரொன்றுக்கான மொத்த உபரி-இலாபம் மாறாதிருந்து வருவதும் தெரிகிறது; குவார்ட்டர் ஒன்றுக்கான உபரி-இலாபத்தில் ஏற்படும் இந்தக் குறைவு ஏக்கரொன்றில் உற்பத்தி செய்யப்படும் குவார்ட்டர்களின் எண்ணிக்கையில் அதேபோது ஏற்படும் அதிகரிப்பால் சரிகட்டப்படுகிறது. சராசரி உற்பத்தி-விலை பொது உற்பத்தி-விலையின் அளவை (அதாவது B வகை நிலத்துக்கு £3) கூடுதல் முதலீடுகள் செய்யப்பட்டு, அவற்றின் விளைபொருள் ஆளும் விலையாகிய £3க்கு கூடுதலான உற்பத்தி-விலை பெறுவது அவசியம். ஆனால் B வகை நிலத்தில் குவார்ட்டர் ஒன்றுக்கான சராசரி உற்பத்தி-விலையை பொது உற்பத்தி-விலையாகிய £3இன் அளவுக்கு உயர்த்துவதற்கு இது மட்டும் போதாது என்று பார்க்கப் போகிறோம்.

B வகை நிலம் பின்வருமாறு உற்பத்தி செய்வதாகக் கொள்வோம்:

(1) 3 ½ குவார்ட்டர்; முன்போலவே இதன் உற்பத்தி-விலை £6; அதாவது ஒவ்வொன்றும் £ 2 ½ மதிப்புள்ள இரு மூலதன முதலீடுகள்; இவை இரண்டுமே உபரி -இலாபம் பெற்றுத் தருகின்றன; ஆனால் இந்த உபரி-இலாபத்தின் அளவு குறைந்து செல்கிறது.

---

(*) 1894ஆம் வருடத்திய ஜெர்மன் பதிப்பில் 1 என்றுள்ளது.- ஆங்கிலப் பதிப்பாசிரியர்.)

(2) 1 குவார்ட்டர்; உற்பத்தி-விலை £3; இம்மூலதன முதலீட்டில் தனிப்பட்ட உற்பத்தி-விலை ஆளும் உற்பத்தி-விலைக்குச் சமமாகும்.

(3) 1 குவார்ட்டர்; உற்பத்தி-விலை £4; இம்மூலதன முதலீட்டில் தனிப்பட்ட உற்பத்தி-விலை ஆளும் விலைக்கு 33% கூடுதலாகும்.

அப்போது $10^7/_{10}$* மூலதன முதலீட்டுக்கு £13 உற்பத்தி - விலையில் ஏக்கர் ஒன்றுக்கு 5½ குவார்ட்டர் கிடைக்கும்; ஆரம்ப மூலதன முதலீட்டைப் போல் நான்கு மடங்கு ஆனபோதிலும், முதலாவது மூலதன முதலீட்டின் விளைபொருளைப் போல் மூன்று மடங்குக்கும் குறைவாகும்.

£13 உற்பத்தி-விலையில் 5½குவார்ட்டர் என்றால், சராசரி உற்பத்தி -விலை குவார்ட்டர் ஒன்றுக்கு £ $2\,^4/_{11}$ ஆகும்; அதாவது ஆளும் உற்பத்தி -விலை £3 எனக் கொண்டால் குவார்ட்டர் ஒன்றுக்கு £ $^7/_{11}$ ஆகும். இந்த உபரியை வாடகையாக மாற்றலாம். £3ஆளும் உற்பத்தி-விலைக்கு 5½குவார்ட்டரை விற்றால் கிடைப்பது £ 16½. £13 உற்பத்தி விலையைக் கழித்தபின் 3 ½ உபரி-இலாபம் அல்லது வாடகை எஞ்சுகிறது; B வகை நிலத்தில் குவார்ட்டர் ஒன்றுக்கான இப்போதைய சராசரி உற்பத்தி-விலையின்படி, அதாவது குவார்ட்டர் ஒன்றுக்கு £ $2\,^4/_{11}$ என்பதன்படி கணக்கிட்டால் இந்த உபரி-இலாபம் $1\,^{25}/_{52}$ குவார்ட்டரைக் குறிக்கிறது. பண-வாடகை £1 குறைவாய் இருக்கும்; தானிய-வாடகை சுமார் ½ குவார்ட்டர் குறைவாய் இருக்கும்; ஆனால் B வகை நிலத்தில் நான்காவது கூடுதல் மூலதன முதலீடு உபரி-இலாபம் கொடுக்கத் தவறுவதோடு, சராசரி-இலாபத்துக்கும் குறைவாகவே கொடுக்கிறது என்றாலும், உபரி-இலாபம் என்பதும் வாடகை என்பதும் இன்னமும் இருக்கவே செய்யும். மூன்றாவது மூலதன முதலீட்டோடு கூட இரண்டாவது மூலதன முதலீடும் ஆளும் உற்பத்தி-விலைக்கு மேல் கூடுதலான விலையில் உற்பத்தி செய்வதற்காகக் கொள்வோம். அப்போது மொத்த உற்பத்தி £6க்கு 3½ குவார்ட்டர் +£8க்கு 2 குவார்ட்டர்; £14 உற்பத்தி-விலைக்கு மொத்தம் 5 ½ குவார்ட்டர். குவார்ட்டர் ஒன்றுக்கான சராசரி உற்பத்தி-விலை £ $2\,^6/_{11}$ ஆக இருக்கும்; உபரியாக £ $^5/_{11}$ எஞ்சியிருக்கும் £3க்கு விற்கப்படும் 5 ½ குவார்ட்டர் மொத்தம் £ 16½ கிடைக்கச் செய்யும்; £ 14 உற்பத்தி - விலையைக் கழித்து விட்டால் வாடகையாக £ 2 ½எஞ்சியிருக்கும். B நிலத்திலான இப்போதைய சராசரி உற்பத்தி விலையில், இது ஒரு குவார்ட்டரில் $^{55}/56$

(*) 1894ஆம் வருடத்திய ஜெர்மன் பதிப்பில் 10 என்றுள்ளது.-ஆங்கிலப் பதிப்பாசிரியர்.)

பங்குக்கு நிகராகும். அதாவது, முன்னைக் காட்டிலும் குறைந்த அளவில்தான் என்றாலும் கூட இப்போதும் வாடகை கிடைக்கிறது.

சிறந்த மண் வகைகளில் உற்பத்தியாகும் விளைபொருளின் உற்பத்தி-விலை ஆளும் உற்பத்தி-விலைக்கு மேல் இருக்கிறது அல்லவா, இந்த மண் வகைகளில் கூடுதல் மூலதனங்கள் முதலீடு செய்யப்படும் போது, வாடகை குறையத்தான் செய்யும் என்றாலும் மறைந்துவிடுவதில்லை - எப்படியும் ஏற்புடைத்த நடைமுறையின் எல்லைகளுக்குள் மறைந்து விடுவதில்லை - என்பதை மேற்சொன்னதி லிருந்து அறிய முடிகிறது. ஒருபுறம் மொத்த மூலதன முதலீட்டின் ஒப்பளவில் உற்பத்தித் திறனற்ற இம் மூலதனத்துக்குரிய ஈவுப் பங்கிற்கேற்ற விகிதத்திலும்; மறுபுறம் அதன் உற்பத்தித் திறனிலான குறைவிற்கேற்ற விகிதத்திலும் வாடகை குறையும். அதன் விளைபொருள் சராசரி விலை இப்போதும் ஆளும் விலைக்குக் கீழேதான் இருக்கும். எனவே இப்போதும் உபரி-இலாபம் எஞ்சியிருக்கும்; அதனை வாடகையாக மாற்றலாம்.

இப்போது, உற்பத்தித் திறன் குறைந்து சென்று கொண்டிருக்கையில் அடுத்தடுத்து நான்கு மூலதனங்கள் (£2 ½, £2 ½, £5, £5) முதலீடு செய்யப்படுவதன் விளைவாக, B நிலத்தில் குவார்ட்டர் ஒன்றுக்கான சராசரி விலை பொது உற்பத்தி-விலையுடன் ஒருங்கமைவதாகக் கொள்வோம்.

| மூலதனம் £ | | இலாபம் £ | விளை பொருள் குவா. | உற்பத்தி-விலை | | விற்பனை விலை £ | விற்று முதல் £ | வாடகைக்கான உபரி | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | குவார்ட்டர் ஒன்றுக்கு | மொத்தம் £ | | | குவா. | £ |
| 1) | 2½ | ½ | 2 | 1½ | 3 | 3 | 6 | 1 | 3 |
| 2) | 2½ | ½ | 1½ | 2 | 3 | 3 | 4½ | ½ | 1½ |
| 3) | 5 | 1 | 1½ | 4 | 6 | 3 | 4½ | —½ | —1½ |
| 4) | 5 | 1 | 1 | 6 | 6 | 3 | 3 | —1 | —3 |
| | 15 | 3 | 6 | | 18 | | 18 | 0 | 0 |

இந்நேர்வில் சாகுபடியாளர் ஒவ்வொரு குவார்ட்டரையும் அதன் தனிப்பட்ட உற்பத்தி-விலைக்கு விற்கிறார்; எனவே குவார்ட்டர்களின் மொத்த தொகையையும் குவார்ட்டர் ஒன்றுக்கான அவற்றின் சராசரி

உற்பத்தி-விலைக்கு விற்கிறார்; இந்த சராசரி விலை ஆளும் விலையாகிய £3உடன் ஒருங்கமைகிறது. ஆக முன்போலவே தமது £15 மூலதனத்தின் மீது 20% = £3 இலாபம் பெறுகிறார். ஆனால் வாடகை ஒழிந்துவிட்டது. குவார்ட்டர் ஒன்றுக்கான தனிப்பட்ட உற்பத்தி-விலைகள் பொது உற்பத்தி-விலையுடன் இப்படிச் சமனமாகும் போது உபரி எங்கே போகிறது?

முதல் £ 2½இலிருந்து £3 உபரி-இலாபம் கிடைத்தது; இரண்டாவது £ 2½ இலிருந்து £ ½ உபரி-இலாபம் கிடைத்தது. மூலதன முதலீட்டில் $^{1}/3$ பங்கிலிருந்து, அதாவது £ 5இலிருந்து கிடைத்த மொத்த உபரி-இலாபம் =£4 ½=90%.

மூன்றாவது மூலதன முதலீடாகிய £ 5 உபரி-இலாபம் கிடைக்கச் செய்வதில்லை என்பது மட்டுமல்லாமல், அதன் விளைபொருளாகிய 1 ½ குவார்ட்டர் பொது உற்பத்தி-விலைக்கு விற்கப்படும் போது £1½இழப்பும் ஏற்படுகிறது. முடிவில், நான்காவது மூலதன முதலீட்டைப் பொறுத்தவரை-இதுவும் £5தான்-அதன் விளை பொருளாகிய 1 குவார்ட்டர் பொது உற்பத்தி-விலைக்கு விற்கப்படும் போது £3 இழப்பு ஏற்படுகிறது. ஆக இவ்விரு மூலதன முதலீடுகளுக்கும் சேர்த்து £ 4 ½இழப்பு ஏற்படுகிறது; இது முதலாவது, இரண்டாவது முதலீடுகளிலிருந்து கிடைக்கும் £4 ½உபரி-இலாபத்துக்குச் சமம்.

உபரி-இலாபங்களும் இலாப-இழப்புகளும் நேராகிவிடுகின்றன. இதனால் வாடகை ஒழிந்துவிடுகிறது. ஆனால் உபரி-இலாபம் அல்லது வாடகையாக அமைந்த உபரி-மதிப்புக் கூறுகள் இப்போது சராசரி இலாபத்தின் உருவாக்கத்தில் சேருவதால்தான் உண்மையில் இது சாத்தியமாகிறது. சாகுபடியாளர் வாடகையைப் பலியிட்டு 15இலிருந்து £3 அல்லது 20% சராசரி இலாபம் அடைகிறார்.

B வகை நிலத்திற்குரிய தனிப்பட்ட சராசரி உற்பத்தி-விலை சந்தை-விலையை ஆளும் A வகை நிலத்திற்குரிய பொது உற்பத்தி-விலைக்கு சமனமாக வேண்டுமானால், முதலாம் மூலதன முதலீடுகளின் விளைபொருளுக்குரிய தனிப்பட்ட விலை ஆளும் விலைக்கு கீழாய் இருப்பதால் வரும் வேறுபாடு பிந்திய மூலதன முதலீடுகளின் விளைபொருளுக்குரிய விலை ஆளும் விலைக்கு மேலாய் இருப்பதால் வரும் வேறுபாட்டால் மேன்மேலும் ஈடு செய்யப்படவும் முடிவில் நேர்செய்யப்படவும் வேண்டும். முதலாம் மூலதன முதலீடுகளின் விளைபொருள் அதுவாகவே விற்கப்படும் நிலை உள்ள வரை, உபரி-இலாபமாக தோன்றுவது இவ்விதம் கொஞ்சம் கொஞ்சமாய் சராசரி

உற்பத்தி-விலையின் பகுதியாகி, சராசரி இலாபத்தின் உருவாக்கத்தில் சேருகிறது; முடிவில் அதனால் முழுமையாக உட்கிரகிக்கப்பட்டு விடுகிறது.

B வகை நிலத்தில் £15க்கு பதில் £5 மட்டும் முதலீடு செய்யப்படுமானால், கடைசி அட்டவணையில் வரும் கூடுதல் 2 ½ குவார்ட்டரானது ஏக்கரொன்றுக்கு £ 2 ½ வீதம் முதலீடு செய்து A வகையில் புதிதாக 2 ½ ஏக்கர் சாகுபடி செய்வதன் மூலம் உற்பத்தி செய்யப்படுமானால், கூடுதல் மூலதன முதலீடு £ 6 ¼ மட்டுமே ஆகும்; அதாவது A வகையிலும் B வகையிலும் இந்த 6 குவார்ட்டர் உற்பத்திக்கான மொத்த முதலீடு £ 15க்கு பதில் £ 11 ¼ மட்டுமே ஆகும்; அதன் மொத்த உற்பத்தி-விலையானது இலாபம் உட்பட £ 13½ ஆகும். இப்போதும் இந்த 6 குவார்ட்டர் £ 18க்கு விற்கப்படும்; ஆனால் மூலதன முதலீடு £3 ¾ குறைந்து போய் இருக்கும்; B வகை நிலத்திலிருந்து கிடைக்கும் வாடகை முன்போலவே ஏக்கரொன்றுக்கு £ 4 ½ ஆகும். கூடுதல் 2½ குவார்ட்டரின் உற்பத்திக்காக A வகையை விட கீழ்தரமான ஒரு நிலத்தை எடுத்துக்காட்டாக A2. A2 சாகுபடிக்கு கொண்டு வர வேண்டியிருந்தால் நிலைமை வேறாக இருக்கும்; குவார்ட்டர் ஒன்றுக்கான உற்பத்தி-விலை A1 நிலத்தில் விளையும் 1 ½ குவார்ட்டருக்கு £ 4 ஆகவும், A2நிலத்தில் கடைசிக் குவார்ட்டருக்கு £ 6 ஆகவும் இருக்கும். இந்நேர்வில் £ 6ஆனது குவார்ட்டர் ஒன்றுக்கான ஆளும் உற்பத்தி-விலையாக இருக்கும் B வகை நிலத்தில் விளையும் £3 ½ குவார்ட்டர் அப்போது 10 1/2க்குப் பதில் £ 21க்கு விற்கப்படும்; அதாவது £ 4 ½ க்குப் பதில் £15 வாடகைகிடைக்கும் அல்லது 1 ½ குவார்ட்டருக்குப் பதில் 2 ½ குவார்ட்டர் தானிய வாடகை பெறப்படும். இதேபோல் Aவகை நிலத்தில் விளையும் ஒரு குவார்ட்டர் இப்போது £ 3 = ½ குவார்ட்டர் வாடகை தரும்.

இது குறித்து மேலும் ஆராய்வதற்கு முன்னால், இன்னொன்றை குறிப்பிட்டாக வேண்டும்.

மொத்த மூலதனத்தில் கூடுதல் 1½ குவார்ட்டரை உற்பத்தி செய்கிற பகுதி மொத்த மூலதனத்தில் பற்றாக்குறை 1½ குவார்ட்டரை உற்பத்தி செய்கிற பகுதியால் நேர்செய்யப்பட்டவுடனே B வகை நிலத்தில் விளையும் 1 குவார்ட்டரின் சராசரி விலை குவார்ட்டர் ஒன்றுக்கு £ 3 எனனும் (Aவகையால் ஆளப்படும்) பொது உற்பத்தி-விலையோடு சமனமாகிறது, அதாவது ஒருங்கமைகிறது. இந்த சமனமாதல் எவ்வளவு விரைவில் நடந்தேறுகிறது, இதற்காக B வகை நிலத்தில் குறையுற்பத்தித்

யுற்பத்தித் திறனோடு எவ்வளவு மூலதனம் முதலீடு செய்யப்பட்டாக வேண்டும் என்பது முதலாம் மூலதன முதலீடுகளின் உபரி-உற்பத்தித் திறன் குறிப்பிட்டதெனக் கொண்டால் - விலையை ஆளும் படுமோசமான A வகை நிலத்தில் செய்யப்படும் அதே அளவு முதலீட்டுடன் ஒப்பிடுமிடத்து பிந்திய முதலீடுகளின் ஒப்பீட்டுக் குறையுற்பத்தித் திறனைப் பொறுத்ததாய் இருக்கும், அல்லது ஆளும் விலையுடன் ஒப்பிடுமிடத்து அவற்றின் விளைபொருளினது தனிப்பட்ட உற்பத்தி- விலையைப் பொறுத்ததாய் இருக்கும்.

---

மேற் சொன்னதிலிருந்து பின்வரும் முடிவுகளுக்கு வரலாம்.

*முதலாவதாக:* ஒரே நிலத்தில் கூடுதல் மூலதனங்கள் உபரி-உற்பத்தித் திறனோடு முதலீடு செய்யப்பட்டு வரும்வரை, உபரி-உற்பத்தித் திறன் குறைந்து சென்றாலும் கூட, ஏக்கரொன்றுக்கான தானிய வாட்கையும் பண-வாடகையும் மூலதன முன்னீட்டுக்கு ஏற்ற விகிதத்தில் ஒப்பளவில் குறைந்த போதிலும் (அதாவது உபரி-இலாபம் அல்லது வாடகையின் வீதம் குறைந்த போதிலும்) அறுதியாக உயருகின்றன. எந்தக் கூடுதல் மூலதனம் சராசரி இலாபம் மட்டும் தருகிறதோ, அல்லது எதன் விளைபொருளுக்கான தனிப்பட்ட உற்பத்தி-விலை பொது உற்பத்தி-விலையோடு ஒருங்கமைகிறதோ அந்தக் கூடுதல் மூலதனமே இங்கு வரம்பெல்லையை வகுத்திடுகிறது. வழங்கல் அதிகரிப்பதால் மோசமான மண்வகைகளிலான உற்பத்தி தேவையற்றதாகவில்லை என்றால், உற்பத்தி-விலை இந்நிலைமை களில் மாறாதிருக்கிறது. விலை குறைந்து கொண்டிருக்கிற போதும் கூட, குறிப்பிட்ட சில வரம்புகளுக்குள் இந்தக் கூடுதல் மூலதனங்கள் குறைந்த அளவில்தான் என்றாலும் - உபரி-இலாபம் உற்பத்தி செய்யலாம்.

*இரண்டாவதாக:* சராசரி இலாபம் மட்டும் தருகிற அதாவது உபரி-உற்பத்தித் திறன் = 0 என்றுள்ள கூடுதல் மூலதன முதலீடு இப்போது கிடைத்து வருகிற உபரி-இலாப அளவிலும் வாடகை அளவிலும் எவ்வித மாற்றமும் உண்டாக்குவதில்லை. இதனால் குவார்ட்டர் ஒன்றுக்கான தனிப்பட்ட சராசரி விலை உயர்தர மண்வகைகளில் அதிகரிக்கிறது; குவார்ட்டர் ஒன்றுக்கான மிகை அளவு குறைகிறது; ஆனால் இந்தக் குறைந்த மிகை அளவை ஏந்தியிருக்கும் குவார்ட்டர்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது; இவ்விரண்டின் பெருக்கற்பலன் மாறாதிருக்கும் வகையில் இது நடைபெறுகிறது.

*மூன்றாவதாக:* கூடுதல் மூலதன முதலீடுகளிலிருந்து பெறப்படும் விளைபொருளின் தனிப்பட்ட உற்பத்தி-விலை ஆளும் விலைக்கு மேல் இருக்குமானால், எனவே உபரி-உற்பத்தித் திறனே இல்லாமற் போவதோடு, பூஜ்யத்துக்கும் குறைவானதாக, ஓர் எதிர்மறைக் கணியமாக இருக்குமானால் அதாவது இம் முதலீடுகளின் உற்பத்தித் திறன் விலையை ஆளும் A வகை நிலத்திலான அதே அளவு மூலதன முதலீட்டின் உற்பத்தித் திறனைக் காட்டிலும் குறைவானதாக இருக்குமானால் - உயர்தர மண்வகையில் விளையும் மொத்த விளைபொருளின் தனிப்பட்ட சராசரி உற்பத்தி-விலை பொது உற்பத்தி விலையை மேன்மேலும் நெருங்கி வருகிறது; அதாவது அவற்றுக் கிடையிலான வேறுபாடு - உபரி-இலாபம் அல்லது இலாபமாக அமைந்திடும் இவ்வேறுபாடு - மேன்மேலும் குறைந்து செல்கிறது. உபரி-இலாபம் அல்லது வாடகையாக அமையக் கூடியதில் மேன்மேலும் கூடுதலாகிற ஒரு பகுதி, சராசரி இலாபத்தின் உருவாக்கத்தில் சேருகிறது. ஆனால் B வகையைச் சேர்ந்த ஓர் ஏக்கர் நிலத்தில் முதலீடாகிற மொத்த மூலதனம் தொடர்ந்து உபரி-இலாபம் தருகிறது; இந்த உபரி - இலாபமானது குறையுற்பத்தித் திறன் கொண்ட மூலதன அளவு அதிகரிப்பதற்கேற்பவும் இந்தக் குறையுற்பத்தித் திறனின் அளவுக்கேற்பவும் குறைந்து போகிறது என்றாலும் கூட தொடர்ந்து கிடைத்து வருகிறது. இந்நேர்வில், மூலதனம் அதிகரிக்க அதிகரிக்க, உற்பத்தி பெருகப் பெருக ஏக்கரொன்றுக்கான வாடகை அறுதியாக குறைகிறது; அது இரண்டாம் நேர்வில் போன்று மூலதன முதலீட்டின் அதிகரித்துச் செல்லும் அளவுடன் ஒப்பிடுகையில் ஒப்பளவில் மட்டும் குறைவதில்லை.

உயர்தரமான B வகை நிலத்தில் விளையும் மொத்த விளை பொருளின் தனிப்பட்ட சராசரி உற்பத்தி-விலை ஆளும் விலையுடன் ஒருங்கமையும் போதுதான், அதாவது கூடுதல் உற்பத்தித் திறன் கொண்ட முதலாம் மூலதன முதலீடுகளிலிருந்து கிடைக்கும் உபரி-இலாபம் அனைத்தும் சராசரி இலாப உருவாக்கத்தில் தீர்ந்து போகும்போதுதான் வாடகை ஒழிந்து போக முடியும்.

ஏக்கரொன்றுக்கான வாடகையில் ஏற்படும் சரிவுக்கு அது ஒழிந்து போகிற கட்டம்தான் அடிவரம்பாகும். ஆனால் கூடுதல் மூலதன முதலீடுகள் குறையுற்பத்தித் திறன் கொண்டவை ஆனவுடனே இந்தக் கட்டம் வந்துவிடுவதில்லை. குறையுற்பத்தித் திறன் கொண்ட கூடுதல் மூலதன முதலீட்டின் விளைவு முதலாம் மூலதன முதலீடுகளின் உபரி-

உற்பத்தித் திறனை நீக்கம் செய்யும் அளவுக்கு அக்கூடுதல் முதலீட்டின் பருமன் பெரிதாகிவிடும் போதுதான், அதாவது மொத்த மூலதன் முதலீட்டின் உற்பத்தித் திறன் A வகை நிலத்தில் முதலீடாகிற மூலதனத்தின உற்பத்தித் திறனுக்குச் சமமாகி, B வகை நிலத்தில் விளையும் குவார்ட்டர் ஒன்றுக்கான தனிப்பட்ட சராசரி விலை Aவகை நிலத்தில் விளையும் குவார்ட்டர் ஒன்றுக்கான தனிப்பட்ட சராசரி விலைக்கு சமமாகிவிடும் போதுதான் அந்தக்கட்டம் வந்து சேர்கிறது.

இந்நேர்விலும் கூட, வாடகை ஒழித்துவிட்ட போதிலும், குவார்ட்டருக்கு £3 என்கிற ஆளும் உற்பத்தி-விலை மாறாமலிருக்கிறது. இந்தக் கட்டத்தைத் தாண்டிய பிறகுதான் கூடுதல் மூலதனத்தினுடைய குறையுற்பத்தித் திறனின் அளவிலோ அதே அளவு குறையுற்பத்தித் திறன் கொண்ட கூடுதல் மூலதனத்தின் பருமனிலோ ஏற்படும் அதிகரிப்பின் விளைவாக உற்பத்தி-விலை உயர்ந்தாக வேண்டும். எடுத்துக்காட்டாக, மேற்கண்ட அட்டவணையில் குவார்ட்டர் ஒன்றுக்கு £4 என்றும் உற்பத்தி-விலையில் 1 ½ குவார்டருக்குப் பதில் அதே நிலத்தில் 2 ½ குவார்ட்டர் உற்பத்தி செய்யப்படுமானால் £22 உற்பத்தி-விலைக்கு மொத்தம் 7 குவார்ட்டர் கிடைத்திருக்கும்; குவார்ட்டர் ஒன்றுக்கு £ $3\ ^1/_7$ விலையாகி இருக்கும்; ஆக இது பொது உற்பத்தி-விலைக்கு மேல் £ கூடுதலாகும், எனவே பொது உற்பத்தி-விலை உயர்ந்தாக வேண்டும்.

அப்படியானால், மிகச்சிறந்த மண்வகைகளில் விளையும் குவார்ட்டர் ஒன்றுக்கான தனிப்பட்ட சராசரி விலை பொது உற்பத்தி-விலைக்குச் சமமாகும் வரை, முன்னதன் மீது பின்னதற்குள்ள மிகையளவு-எனவே உபரி இலாபம் வாடகையும் - அடியோடு ஒழிந்து போகும் வரை, குறையுற்பத்தித் திறன் கொண்ட கூடுதல் மூலதனத்தை, மேன்மேலும் அதிகரித்துச் செல்லும் குறையுற்பத்தித் திறன் கொண்ட கூடுதல் மூலதனத்தையும் கூட நீண்ட காலத்துக்கு முதலீடு செய்து வரலாம்.

அப்போதுங்கூட, சிறந்த மண்வகைகளிலிருந்து வாடகை ஒழிந்து போவதானது அவற்றின் விளைபொருளினது தனிப்பட்ட சராசரி விலை பொது உற்பத்தி-விலையுடன் ஒருங்கமைவதைத்தான் குறிக்கும்; அதாவது இன்னமும் இந்தப்பொது உற்பத்தி-விலையில் உயர்வு ஏதும் ஏற்பட வேண்டி இருக்காது.

மேற்கண்ட எடுத்துக்காட்டில் சிறந்த மண்வகையாகிய B நிலத்தில் -ஆனால் சிறந்த அல்லது வாடகை தருகிற மண் வகைகளின் தொடர்

வரிசையில் மிகக் கீழானதாகிய இந்நிலத்தில் - உபரி-உற்பத்தித் திறன் கொண்ட £5 மூலதனம் 3 ½ குவார்ட்டர் உற்பத்தி செய்தது, குறை உற்பத்தித் திறன் கொண்டு £ 10 மூலதனம் 2 ½ குவார்ட்டர் உற்பத்தி செய்தது, அதாவது மொத்தம் 6 குவார்ட்டர் உற்பத்தி செய்யப்பட்டது; இந்த மொத்த அளவில் 5 $^{5}/_{12}$ குவார்ட்டர் இவ்விதம் குறையுற்பத்தித் திறன் கொண்ட பிந்திய மூலதனப் பகுதிகளால் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்தக் கட்டத்தில்தான் 6 குவார்ட்டரின் தனிப்பட்ட சராசரி உற்பத்தி-விலை குவார்ட்டர் ஒன்றுக்கு £3 ஆக உயருகிறது, எனவே பொது உற்பத்தி-விலையுடன் ஒருங்கமைகிறது.

ஆனால், நிலச் சொத்தின் விதிப்படி, பிந்திய 2 ½ குவார்ட்டர் இவ்வழியில் குவார்ட்டர் ஒன்றுக்கு £3 உற்பத்தி-விலையில் உற்பத்தி செய்யப்பட்டிருக்க முடியாது; A வகை நிலத்தின் புதிய 2½ ஏக்கரில் அது உற்பத்தி செய்யப்படக்கூடிய நேர்வு மட்டும் இவ்விதிக்கு விலக்காகும். கூடுதல் மூலதனம் பொது உற்பத்தி-விலையில் மட்டும் உற்பத்தி செய்கிற நேர்வு வரம்பெல்லையாக அமைந்திருக்கும். இந்த எல்லையைத் தாண்டி அதே நிலத்தில் கூடுதல் மூலதன முதலீடு செய்வது ஒழிந்துபோக வேண்டி இருக்கும்.

சாகுபடியாளர் முதல் இரு மூலதன முதலீடுகளுக்கு £4 ½ வாடகை செலுத்த வேண்டி இருந்தால், தொடர்ந்து அவ்வாறே செலுத்தியாக வேண்டும்; ஒரு குவார்ட்டர் உற்பத்தி செய்வதற்கு £3க்கு மேல்* தேவைப்படும்படியான ஒவ்வொரு மூலதன முதலீடும் அவரது இலாபத்தைக் குறையச் செய்யும். ஆகவே குறையுற்பத்தித் திறன் நேரிடுகையில் தனிப்பட்ட சராசரி விலை சமனமாவது இதனால் தடுக்கப்படுகிறது.

A வகை நிலத்துக்கான உற்பத்தி-விலையாகிய குவார்ட்டர் ஒன்றுக்கு £3 என்பது B வகை நிலத்துக்கான விலையை ஆளுகிற முந்தைய எடுத்துக்காட்டுடன் இந்நேர்வைத் தொடர்பு படுத்திப் பார்ப்போம்.

முதல் இரு மூலதன முதலீடுகளில் 3 ½ குவார்ட்டருக்கான உற்பத்தி-விலையும் இதேபோல் சாகுபடியாளருக்கு குவார்ட்டர் ஒன்றுக்கு £3 ஆகும்; ஏனென்றால் அவர் £ 4 ½ வாடகை செலுத்தியாக வேண்டும்; இதனால் அவரது தனிப்பட்ட உற்பத்தி-விலைக்கும் பொது

(*) 1894ஆம் வருடத்திய ஜெர்மன் பதிப்பில் £3க்குக் குறைவாக என்றுள்ளது. ஆங்கிலப்பதிப்பாசிரியர்

*உற்பத்தி-விலைக்கும் இடையிலான வேறுபாடு அவருக்குப் போய்ச் சேருவதில்லை. ஆகவே அவரைப் பொறுத்தவரை, முதல் இரு மூலதன முதலீடுகளுக்கான உற்பத்தி-விலையிலான மிகையளவு மூன்றாவது, நான்காவது மூலதன முதலீடுகளுக்கான விளைபொருளில் ஏற்படும் குறையை நேர்செய்வதற்குப் பயன்பட முடியாமல் போகிறது.*

| மூலதனம் £ | இலாபம் £ | உற்பத்தி-விலை £ | விளைபொருள் குவார்ட்டர் | குவார்ட்டருக்கு உற்பத்தி விலை £ | விற்பனை-விலை: குவார்ட்டருக்கு £ | விற்பனை-விலை: மொத்தம் £ | உபரி இலாபம் £ | இழப்பு £ |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2½ | ½ | 3 | 2 | 1 ½ | 3 | 6 | 3 | — |
| 2½ | ½ | 3 | 1 ½ | 2 | 3 | 4 ½ | 1½ | — |
| 5 | 1 | 6 | 1½ | 4* | 3 | 4 ½ | — | 1½ |
| 5 | 1 | 6 | 1 | 6 | 3 | 3 | — | 3 |
| 15 | 3 | 18 | | | | 18 | 4 ½ | 4½ |

*மூன்றாவது முதலீட்டிலிருந்து பெறப்படும் 1 ½ குவார்ட்டருக்காக சாகுபடியாளருக்கு இலாபம் உட்பட £6 செலவாகிறது; ஆனால் குவார்ட்டருக்கு £3 என்கிற ஆளும் விலையில், அவர் அதனை £ 4½ க்குத்தான் விற்கமுடியும். வேறுவிதமாகச் சொன்னால் அவர் தமது இலாபம் முழுவதையும் இழந்து விடுவதோடு, தமது £5 மூலதன முதலீட்டில் £ ½ , அல்லது 10%ஐயும் கூட இழந்துவிடுவார். இலாப வகையிலும் மூலதன வகையிலும் அவருக்கு ஏற்படும் இழப்பு மூன்றாவது முதலீட்டுக்கு £ 1 ½ ஆகும், நான்காவது முதலீட்டுக்கு £3ஆகும்; அதாவது மொத்தம் £ 4 ½ ஆகும்; அல்லது சிறந்த மூலதன முதலீடுகளிலிருந்து எவ்வளவு வாடகை கிடைக்குமோ அதே அளவாகும்; ஆனால் சிறந்த முதலீடுகளுக்கான தனிப்பட்ட உற்பத்தி-விலை, B நிலத்தில் மொத்த விளைபொருளுக்குரிய தனிப்பட்ட சராசரி உற்பத்தி-விலையை சமனமாக்குவதில் பங்கேற்க முடியாது; ஏனென்றால் மிகையளவானது வாடகையாக மூன்றாம் தரப்புக்கு செலுத்தப்படுகிறது.*

(*) 1894ஆம் வருடத்திய ஜெர்மன் பதிப்பில் 3 என்றுள்ளது.- ஆங்கிலப் பதிப்பாசிரியர்

வேண்டலை நிறைவு செய்வதற்காக மூன்றாவது மூலதன முதலீடு கூடுதலாய் 1½ குவார்ட்டர் உற்பத்தி செய்வது அவசியமானால், ஆளும் சந்தை-விலை குவார்ட்டர் ஒன்றுக்கு £ 4 ஆக உயர்ந்தாக வேண்டும். ஆளும் சந்தை-விலையில் இப்படி உயர்வு ஏற்படுவதால் B நிலத்தி லிருந்து பெறப்படும் வாடகை முதலாம், இரண்டாம் முதலீடுகளுக்கு உயரும். A நிலத்தில் வாடகை உருவாகும்.

ஆக, வேறுபாட்டு-வாடகை என்பது உபரி-இலாபம் வாடகையாக உருமாற்றம் அடைவதுதான் என்றாலும், இந்நேர்வில் நிலச்சொத்தானது நிலவுடைமையாளர் சாகுபடியாளரின் உபரி-இலாபத்தை தமக்கே கைமாற்றம் செய்து கொள்வதற்குத்தான் பயன்படுகிறது என்றாலும், ஒரே நிலத்தில் அடுத்தடுத்து மூலதனம் முதலீடு செய்யப்படுவது, அல்லது ஒரே நிலத்தில் முதலீடாகிற மூலதனம் அதிகரிப்பது- இரண்டும் ஒன்றுதான்-மூலதனத்தின் உற்பத்தித் திறன் வீதம் குறைந்து ஆளும் விலை மாறாதிருக்கையில் இன்னும் கூட துரிதமாய் வரம்பெல்லையை வந்தடைகிறது; உண்மையில் நிலச்சொத்தின் விளைவாக உபரி-இலாபம் வடிவ அளவில் மட்டும் நில வாடகையாக மாற்றம் அடைவதால் கிட்டத்தட்ட செயற்கையானதொரு தடைமதிலை வந்தடைகிறது. இங்கே வரம்பெல்லையானது வேறிடத்தைக் காட்டிலும் குறுகலாய் இருப்பதால் பொது உற்பத்தி - விலையில் உயர்வு ஏற்படுவது அவசியமாகிறது அல்லவா, இந்த உயர்வானது இந்நேர்வில் வேறுபாட்டு-வாடகை உயருவதற்கான காரணமாய் இருப்பதோடு, வேறுபாட்டு வாடகை வாடகையாக இருந்துவருவது அதேபோது பொது உற்பத்தி-விலையில் இன்னுங்கூட முன்னதாகவும் இன்னுங்கூட துரிதமாகவும் உயர்வு ஏற்படுவதற்கான காரணமும் ஆகிறது; விளைபொருளின் வழங்கல் அதிகரிப்பது அவசியமாவதால் அது இப்படி அதிகமாகும்படி இவ்விதம் உறுதி செய்யப்படுகிறது.

மற்றும் கீழ்க் கண்டவற்றையும் குறிப்பிட்டாக வேண்டும்:

A வகை நிலம் இரண்டாவது மூலதன முதலீட்டைக் கொண்டு £ 4க்குக் கீழே கூடுதல் விளைபொருளை வழங்குமானால், அல்லது A நிலத்தைக்காட்டிலும் மோசமானதாகிய புதிய நிலம் போட்டியில் குதித்து, அதன் விளை பொருளினது உற்பத்தி - விலை £ 3ஐ விடக் கூடுதலாய், ஆனால் £ 4ஐ விட குறைவாய் இருக்குமானால், B நிலத்தில் கூடுதல் மூலதனம் முதலீடு செய்யப்படுவதால் ஆளும் விலையானது மேலே பார்த்தது போல் £ 4 ஆக உயரமுடியாமற்போகும். ஆக வேறுபாட்டு வாடகை I, வேறுபாட்டு வாடகைIIக்கு அடிப்படையாகத்

திகழும் அதேபோது எப்படி இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று வரம்பெல்லைகள் ஆகின்றன என்பதைப் பார்க்கிறோம்; சில நேரம் ஒரே நிலத்தில் அடுத்தடுத்து மூலதனம் முதலீடு செய்யப்படுவதற்கும், சிலநேரம் அக்கம் பக்கமாய் புதிய கூடுதல் நிலத்தில் மூலதன முதலீடு செய்யப்படுவதற்கும் இது வழி செய்கிறது. இதேபோல் வேறு நேர்வுகளிலும் இவ்விரு வகை வாடகைகளும் ஒன்றுக்கொன்று வரம்பெல்லைகள் ஆகின்றன; இன்னும் சிறந்த மண் வகை சாகுபடிக்கு எடுத்துக் கொள்ளப்படும் நேர்வை எடுத்துக்காட்டாக குறிப்பிடலாம்.

## அத்தியாயம் XLIV

## படுமோசமாகச் சாகுபடி செய்யப்படும் நிலத்திலும்கூட வேறுபாட்டு வாடகை

தானியத்துக்கான வேண்டல் உயர்ந்து கொண்டிருப்பதாகக் கொள்வோம்; வாடகை தரும் மண்வகைகளில் குறையுற்பத்தித் திறன் கொண்ட அடுத்தடுத்த மூலதன-முதலீடுகளைக் கொண்டோ, அல்லது A வகை நிலத்தில் குறைந்து செல்லும் உற்பத்தித் திறன் கொண்ட கூடுதல் மூலதன முதலீட்டைக் கொண்டோ, அல்லது A வகையைக் காட்டிலும் கீழ்த்தரமான புதிய நிலங்களில் மூலதன-முதலீடு செய்யப்படுவதைக் கொண்டோதான் தானிய வழங்கல் நிறைவாகக் கிடைக்கும்படி செய்ய முடியும் என்றும் வைத்துக் கொள்வோம்.

B வகை நிலத்தை வாடகை தரும் மண்வகைகளின் பிரதிநிதியாகக் கொள்வோம். B வகை நிலத்தில் ஒரு குவார்ட்டர் கூடுதல்-உற்பத்தி சாத்தியமாகும்படி செய்ய வேண்டுமானால் (இந்த ஒரு குவார்ட்டர் இங்கே ஒரு மிலியன் குவார்ட்டரைக் குறித்திடலாம், இதேபோல் ஒவ்வொரு ஏக்கரும் ஒரு மிலியன் ஏக்கரை குறித்திடலாம்), இதுவரை ஆளும் உற்பத்தி-விலையாக இருந்து வரும் குவார்ட்டர் ஒன்றுக்கு £3 என்பதற்கு மேல் சந்தை-விலை உயருவதும் கூடுதல் மூலதன முதலீட்டுக்கு அவசியமாகும். மிக உயர்ந்த வாடகை தரும் மண்வகைகளான C,D முதலான நிலங்களிலும் விளைபொருள் கூடுதலாகலாம் என்ற போதிலும், உபரி-உற்பத்தித் திறன் குறைந்து செல்கிறது. ஆனால் வேண்டலை நிறைவு செய்வதற்கு B நிலத்தில் விளையும் ஒரு குவார்ட்டர் அவசியமெனக் கொள்கிறோம். கூடுதல் மூலதனத்தை A நிலத்துக்குப் பதில் B நிலத்தில் முதலீடு செய்வதன் மூலம், அல்லது A—1 நிலத்துக்கு இறங்கிச் செல்வதன் மூலம் (இந்த A—1 நிலத்தில் எடுத்துக்காட்டாக ஒரு குவார்ட்டர் உற்பத்தி செய்வதற்கு £4 தேவைப்படலாம், ஆனால் A நிலத்திலான கூடுதல் மூலதனமோ குவார்ட்டர் ஒன்றுக்கு £ 3¾ விலையில் உற்பத்தி செய்யக்கூடும்) இந்த ஒரு குவார்ட்டர் இன்னும் குறைந்த விலையில் உற்பத்தி செய்யப்படுமானால், B நிலத்திலான கூடுதல் மூலதனம் சந்தை-விலையை ஆளும்.

A நிலம் முன்போலவே £3 விலையில் ஒரு குவார்ட்டர் உ ற்பத்தி செய்கிறது. B நிலமும் முன் போலவே மொத்த விளைபொருளுக்கான £6 தனிப்பட்ட உற்பத்தி-விலையில் மொத்தம் 3½ குவார்ட்டர் உற்பத்தி செய்கிறது. இப்போது கூடுதலாய் ஒரு குவார்ட்டர் உற்பத்தி செய்வதற்காக B நிலத்தில் கூடுதலாய் (இலாபம் உட்பட) £4 உற்பத்தி-விலை அவசியமாவதாகவும், ஆனால் A நிலத்திலோ £ 3 ¾ விலையில் இந்தக் கூடுதல் குவார்ட்டரை உற்பத்தி செய்திடலாம் என்றும் வைத்துக் கொண்டால், இயல்பாகவே அது B நிலத்தில் அல்லாமல் A நிலத்தில்தான் உற்பத்தி செய்யப்படும். ஆகவே, இந்தக் கூடுதல் குவார்ட்டரை £ 3 ½ கூடுதல் உற்பத்தி-விலையில் B நிலத்தில் உற்பத்தி செய்ய முடியும் எனக் கொள்வோம். இந்நிலையில் £ 3½ ஆனது மொத்த விளைபொருளுக்கான ஆளும் விலையாகிவிடும். B ஆனது இப்போது அதன் 4 ½ குவார்ட்டர் விளைபொருளை £ 15 ¾க்கு விற்கும். இதில் £6 முதல் 3 ½ குவார்ட்டருக்கான உற்பத்தி-விலை ஆகும், £ 3 ½ கடைசிக் குவார்ட்டருக்கான உற்பத்-விலையாகும், ஆக மொத்தம் £9 ½ . வாடகைக்கென்று எஞ்சியிருக்கும் உபரி-இலாபம் முன்பு £ 4 ½ மட்டுமே என்பதற்குப் பதில் இப்போது £ 6 ¼ஆகும். இந்நேர்வில் A வகையிலான ஓர் ஏக்கரும் £ ½ வாடகை தரும்; ஆனால் £ 3 ½ உற்பத்தி - விலையை ஆளுவது சிறந்த மண்வகையாகிய B நிலமாய் இருக்குமே த்விர படுமோசமான மண்வகையாகிய நிலமாய் இருக்காது. A வகையின் தரத்திலானதும் இதுவரை சாகுபடி செய்யப்படும் நிலத்தைப் போலவே சாதகமான இடவாகு உடையதுமான புதிய நிலம் ஏதும் கிடைக்கவில்லை என்றும்,ஆனால் ஏற்கெனவே சாகுபடி செய்யப்படும் A வகை நிலத்துண்டில் இன்னுமதிக உற்பத்தி-விலையில் இரண்டாவது மூலதன முதலீடு தேவைப்படும், இல்லையேல் இன்னும்கூட மோசமான மண் வகையாகிய A1 நிலத்தை சாகுபடிசெய்ய வேண்டிய அவசியம் ஏற்படும் என்றும் இங்கு நாம் அனுமானம் செய்து கொள்வது மெய்தான். வேறுபாட்டு வாடகை II ஆனது அடுத்தடுத்த மூலதன முதலீடுகளின் மூலம் நடைமுறைக்கு வந்த உடனே, உயர்ந்து செல்லும் உற்பத்தி-விலைக்கான வரம்புகள் சிறந்த மண் வகையினால் ஆளப்படலாம்; வேறுபாட்டு வாடகை Iக்கு அடிப்படையாகிய படுமோசமான மண்வகையும் கூட வாடகை தரலாம். ஆக ஒரேயொரு வேறுபாட்டு வாடகை இருந்தாலும் கூட, சாகுபடி செய்யப்படும் நிலமனைத்தும் வாடகை தரும். இதிலிருந்து பின்வரும் இரு அட்டவணைகள் நமக்குக் கிடைக்கும்; இவற்றில் உற்பத்தி-விலை என்பது மூலதன முதலீட்டுடன் 20% இலாபத்தை, அதாவது ஒவ்வொரு

£2 ½ மூலதனத்துக்கும் £ ½ இலாபத்தை, மொத்தம் £ 3ஐ கூட்டி வருவதைக் குறிப்பதாகும்.

| மண் வகை | ஏக்கர் | உற்பத்தி விலை £ | விளை பொருள் குவா. | விற்பனை விலை £ | விற்று முதல் £ | தானிய வாடகை குவா. | பண வாடகை £ |
|---|---|---|---|---|---|---|---|
| A | 1 | 3 | 1 | 3 | 3 | 0 | 0 |
| B | 1 | 6 | 3 ½ | 3 | 10 ½ | 1 ½ | 4 ½ |
| C | 1 | 6 | 5 ½ | 3 | 16 ½ | 3 ½ | 10 ½ |
| D | 1 | 6 | 7 ½ | 3 | 22 ½ | 5 ½ | 16 ½ |
| மொத்தம் | 4 | 21 | 17 ½ | | 52 ½ | 10 ½ | 31½ |

ஒரு குவார்ட்டர் மட்டும் தருகிற விதத்தில் புதிய £ 3 ½ மூலதனம் B நிலத்தில் முதலீடு செய்யப்படுவதற்கு முன்புள்ள நிலவரம் இது. இந்த மூலதன முதலீட்டுக்குப் பிறகு, பின்வரும் நிலைமை ஏற்படுகிறது:

| மண் வகை | ஏக்கர் | உற்பத்தி விலை £ | விளை பொருள் குவா. | விற்பனை விலை £ | விற்று முதல் £ | தானிய வாடகை குவா. | பண வாடகை £ |
|---|---|---|---|---|---|---|---|
| A | 1 | 3 | 1 | 3 ½ | 3 ½ | $^1/_7$ | ½ |
| B | 1 | 9 ½ | 4 ½ | 3 ½ | 15¾ | 1 $^{11}/_{14}$ | 6 ¼ |
| C | 1 | 6 | 5 ½ | 3 ½ | 19 ¼ | 3 $^{11}/_{14}$ | 13 ¼ |
| D | 1 | 6 | 7 ½ | 3 ½ | 26 ¼ | 5 $^{11}/_{14}$ | 20 ¼ |
| மொத்தம் | 4 | 24 ½ | 18 ½ | 14 | 64 ¾ | 11 ½ | 40 ¼ |

*(இந்தக் கணக்கீடும் கூட முழுக்கச் சரியானதல்ல. எடுத்த எடுப்பில் B நிலத்தின் சாகுபடியாளருக்கு 4 ½ குவார்ட்டருக்கு ஆகும் செலவு முதலாவதாக £9 ½ உற்பத்தி-விலையும், இரண்டாவதாக £ 4 ½ வாடகையும் ஆகும்; ஆக மொத்தம் £14; குவார்ட்டர் ஒன்றுக்கான சராசரி=£ $3^1/_9$. ஆகவே அவரது மொத்த உற்பத்தியின் இந்தச் சராசரி விலை ஆளும் சந்தை-விலையாகிறது. இவ்வாறு, A நிலத்திலான வாடகை £ ½ க்குப் பதில் £$^1/_9$ ஆகும்; B நிலத்திலான வாடகை முன்போல் £ 4 ½ ஆகவே இருந்துவரும்; £$^3/_9$ விலையில் 4½ குவார்ட்டர் £ 14; உற்பத்தி-விலையாகிய £ 9 ½ ஐ கழித்துவிட்டால்*

உபரி-இலாபத்திற்கு £ 4½ எஞ்சி நிற்கிறது. எண் விவரங்களில் மாற்றம் தேவைப்பட்ட போதிலும், எப்படி வேறுபாட்டு வாடகை IIஆனது ஏற்கெனவே வாடகை தருகிற சிறந்த மண்வகை நிலையை ஆளுவதை சாத்தியமாக்குகிறது என்பதையும்,இவ்வழியில் எப்படி நிலம் அனைத்துமே - இதுவரை வாடகை தராத நிலமும் கூட - வாடகை தரும் நிலமாக மாற்றம் அடையலாம் என்பதையும் இந்த எடுத்துக் காட்டு தெளிவாக்குகிறது.-பி. எங்கெல்ஸ்).

தானியத்தின் ஆளும் உற்பத்தி - விலை உயர்ந்த உடனே, அதாவது விலையை ஆளும் மண் வகையிலிருந்து பெறப்படும் தானியத்தின் குவார்ட்டர் ஒன்றுக்கான உற்பத்தி-விலை, அல்லது ஏதேனும் ஒரு மண் -வகையில் விலையை ஆளும் மூலதன முதலீட்டின் அளவு உயர்ந்தவுடனே, தானிய வாடகையும் உயர்ந்தாக வேண்டும். எல்லா மண் வகைகளும் வளங்குன்றி, எடுத்துக்காட்டாக ஒவ்வொரு £2 ½ புதிய மூலதன முதலீட்டுக்கும் ஒரு குவார்ட்டருக்குப் பதில் $^5/_7$ குவார்ட்டர் மட்டும் உற்பத்தி செய்தால் எப்படியோ, அதேநிலை ஏற்படும். இந்த மண்வகைகள் அதே மூலதன முதலீட்டைக் கொண்டு உற்பத்தி செய்யும் கூடுதல் தானியம் உபரி-உற்பத்தியாக மாற்ற மடைகிறது; இந்த உபரி-உற்பத்தி, உபரி-இலாபத்தையும் வாடகையை யும் குறித்திடுகிறது. இலாப வீதம் மாறாதிருப்பதாகக் கொண்டால் சாகுபடியாளர் தமது இலாபத்தைக் கொண்டு முன்னை விடக் குறைந்த அளவிலேயே தானியம் வாங்க முடியும். கூலி உயரவில்லை என்றால் இலாப வீதம் மாறாமல் இருக்கலாம்-கூலி உயராமல் இருப்பதற்குக் காரணம் அது உடலியல் குறைந்தபட்சம் என்ற நிலைக்கும், அதாவது உழைப்பு-சக்தியின் இயல்பான மதிப்புக்கும் கீழே குறைந்து போனதாய் இருக்கலாம்; அல்லது தொழிலாளிக்கு தேவைப்படுகிறதையும் ஆலைத் தொழிலால் வழங்கப்படுவதுமான ஏனைய நுகர்வுப் பண்டங்கள் ஒப்பளவில் மலிவாகி விட்டதாய் இருக்கலாம்; அல்லது வேலைநாள் நீண்டு விட்டது, அல்லது மேலும் மும்முரமாகிவிட்டது என்பதாய் இருக்கலாம், இதனால் விவசாயமல்லாதவை என்றாலும் விவசாய இலாபத்தை ஆளுகிற உற்பத்திக் கிளைகளில் இலாபவீதம் மாறாதிருக்கிறது அல்லது உயர்ந்து விட்டது என்பதாய் இருக்கலாம். அல்லது, முடிவில், விவசாயத்தில் முதலீடாகிற மூலதன அளவு மாறாமல் இருந்தபோதிலும் அதிலடங்கிய மாறா-மூலதனம் அதிகரித்து, மாறும்-மூலதனம்குறைந்து போவதாய் இருக்கலாம்.

ஆக, இதுவரை படுமோசமான மண்வகையாக இருந்து வரும் Aநிலத்தில் அதைவிடவும் மோசமான மண்வகையை சாகுபடிக்கு

கொண்டு வராமலே வாடகை உதிக்கக் கூடிய முதல் வழியை பரிசீலித்தோம்; அதாவது இதுவரை ஆளும் விலையாக இருந்துவரும் A வகைக்கான தனிப்பட்ட உற்பத்தி-விலைக்கும் அதைவிட உயர்ந்ததாகிய புதிய உற்பத்தி-விலைக்கும் இடையிலான வேறுபாட்டிலிருந்து வாடகை உதிக்கலாம் எனக் கண்டோம்; இந்தப் புதிய உற்பத்தி விலையைக் கொண்டுதான் சிறந்த மண்வகையில் குறையுற்பத்தித் திறனோடு கடைசியாக முதலீடு செய்யப்படும் கூடுதல் மூலதனம் அவசியமான கூடுதல் விளை பொருளை வழங்குகிறது.

குவார்ட்டர் ஒன்றுக்கு £4-க்குக் குறைவான விலையில் உற்பத்தி செய்து கொடுக்க முடியாத A1 நிலத்தால் கூடுதல் விளைபொருள் வழங்கப்பட வேண்டி இருந்தால் A வகையில் ஏக்கர் ஒன்றுக்கான வாடகை £1 ஆக உயர்ந்துவிடும். ஆனால் இந்நிலையில் A1நிலமானது படுமோசமாக சாகுபடி செய்யப்படும் நிலம் என்ற முறையில் A நிலத்தின் இடத்துக்கு வந்திருக்கும்; Aநிலமானது வாடகை தரும் மண் வகைகளின் தொடர் வரிசையில் கீழிடத்தை வகிக்க வரும் வேறுபாட்டு வாடகை I பாதிப்புறும். ஆகவே இந்நேர்வானது ஒரே நிலத்துண்டிலான அடுத்தடுத்த மூலதன முதலீடுகளின் மாறும் உற்பத்தித் திறனிலிருந்து எழுந்திடுவதாகிய, வேறுபாட்டு வாடகை IIஇன் பரிசீலனைக்கு அப்பாற்பட்டதாகும்.

ஆனால் இது ஒருபுறம் இருக்க வேறுபாட்டு வாடகை A வகை நிலத்தில் இன்னுமிரு வழிகளிலும் உதிக்கலாம்.

விலை மாறாதிருக்க-குறிப்பிட்ட விலை என்னவானாலும், முந்தைய விலைகளுடன் ஒப்பிடுங்கால் குறைந்த விலையானாலும் கூட கூடுதல் மூலதன முதலீடு உபரி-உற்பத்தித் திறனுக்கு வழி செய்யும் போது-எப்போதுமே முதற் பார்வையில், அதிலும் குறிப்பாக படுமோசமான மண் வகையில் குறிப்பிட்ட ஒரு கட்டம் வரை இப்படித்தான் நேரிட்டாக வேண்டும்-வேறுபாட்டு வாடகை உதிக்கலாம்.

இரண்டாவதாக, A நிலத்திலான அடுத்தடுத்த மூலதன முதலீடுகளின் உற்பத்தித் திறன் குறையும்போதும் வேறுபாட்டு வாடகை உதிக்கலாம்.

இரு நேர்வுகளிலுமே, வேண்டலை நிறைவு செய்வதற்கு உற்பத்தியை கூடுதலாக்க வேண்டி இருப்பதாகக் கொள்கிறோம்.

ஆனால் வேறுபாட்டு வாடகையின் கண்ணோட்டத்தில் இங்கு தனிவிதமான ஓர் இடர்ப்பாடு தலைதூக்குகிறது; இதற்கு காரணமாய் இருப்பது முன்பு நாம் வளர்த்தெடுத்த விதியே; அதாவது மொத்த உற்பத்திக்கான (அல்லது மொத்த மூலதன முதலீட்டுக்கான) குவார்ட்டர் ஒன்றுக்குரிய தனிப்பட்ட சராசரி உற்பத்தி-விலைதான் எப்போதுமே தீர்மானிக்கும் காரணியாகும் என்பதே. ஆனால், Aவகை நிலத்தை பொறுத்தவரை அதைவிடச்சிறந்த மண்வகைகள் தொடர்பாக இருப்பதுபோல், புதிய மூலதன முதலீடுகளுக்கு பொது உற்பத்தி விலையோடு தனிப்பட்ட உற்பத்தி-விலை சமனமாவதற்கு வரம்பிடுகிற இன்னுமோர் உற்பத்தி-விலை இருப்பதில்லை. ஏனென்றால் A வகைக்குரிய தனிப்பட்ட உற்பத்தி-விலைதான் சந்தையை ஆளும் பொது உற்பத்தி-விலையாகும்.

பின்வருமாறு அனுமானம் செய்து கொள்வோம்:

**(1) அடுத்தடுத்த மூலதன முதலீடுகளின் உற்பத்தித் திறன் உயர்ந்து செல்லுதல்.** £ 5 முதலீடு செய்யப்பட்டிருப்பதாகக் கொண்டால் A வகையில் 1 ஏக்கர் நிலப்பரப்பு 2 குவார்ட்டருக்குப் பதில் 3 குவார்ட்டர் உற்பத்தி செய்யும் - எனவே உற்பத்தி-விலை £ 6 ஆகும். முதலாவது £ 2½ முதலீடு ஒரு குவார்ட்டரும், இரண்டாம் முதலீடு 2 குவார்ட்டரும் விளைவித்துக் கொடுக்கிறது. இந்நேர்வில் £ 6 உற்பத்தி-விலையானது 3 குவார்ட்டர் கிடைக்கச் செய்யும்; எனவே ஒரு குவார்ட்டரின் சராசரி விலை £ 2 ஆகும்; அதாவது குவார்ட்டருக்கு £ 2 வீதம் 3 குவார்ட்டர் விற்கப்பட்டால், A நிலம் முன்போலவே வாடகை ஏதும் தராமல் இருக்கிறது, வேறுபாட்டு வாடகை IIக்கான அடிப்படை மட்டும் மாறியுள்ளது; ஆளும் உற்பத்தி - விலை £3க்குப் பதில் இப்போது £2 ஆகும்; £ 2 ½ மூலதனமானது படுமோசமான மண்வகையில் சராசரியாக 1 குவார்ட்டருக்குப் பதில் இப்போது 1½ குவார்ட்டர் உற்பத்தி செய்கிறது. £ 2 ½ முதலீடாவதாகக் கொண்டால் இப்போது இதுவே சிறந்த மண்வகைகள் அனைத்துக்குமான அதிகாரப்பூர்வ உற்பத்தித் திறன் ஆகும். இனிமேல் அவற்றின் முந்தைய உபரி-உற்பத்தியில் ஒரு பகுதி அவற்றின் அவசிய விளை பொருளினது உருவாக்கத்தில் சேருகிறது; எப்படி அவற்றின் உபரி-இலாபத்தில் ஒரு பகுதி சராசரி இலாபத்தின் உருவாக்கத்தில் சேருகிறதோ அதே போலத்தான் இதுவும்.

மறுபுறம், சிறந்த மண்வகைகளின் அடிப்படையில் கணக்கிட்டுப் பார்ப்பதானால் - இங்கே சராசரி கணக்கீடு அறுதி உபரியைச் சிறிதும் பாதிப்பதில்லை. ஏனென்றால் இம்மண் வகைகளுக்குப் பொது

உற்பத்தி-விலையை மூலதன முதலீட்டுக்கு வரம்பெல்லையாகும் - முதலாம் மூலதன முதலீட்டிலிருந்து பெறப்படும் ஒரு குவார்ட்டருக்கு £3 விலையாகிறது; இரண்டாம் முதலீட்டிலிருந்து பெறப்படும் 2 குவார்ட்டரில் ஒவ்வொன்றுக்கும் £ 1 ½ மட்டுமே விலையாகிறது. இதனால் A வகை நிலத்தில் தானிய வாடகை 1 குவார்ட்டராகவும் பண -வாடகை £3 ஆகவும் இருக்கும்; ஆனால் 3 குவார்ட்டரும் பழைய விலையாகிய £ 9க்கு விற்கப்படும். மூன்றாம் £ 2 ½ முதலீடு இரண்டாம் முதலீட்டுக்குரிய அதே உற்பத்தித் திறனை காட்டுமானால் £ 9 உற்பத்தி-விலையில் மொத்தம் 5 குவார்ட்டர் உற்பத்தியாகும். A வகைக்கான தனிப்பட்ட சராசரி உற்பத்தி-விலை ஆளும் விலையாக இருந்து வருமானால், ஒரு குவார்ட்டர் இப்போது £ 1 4/5க்கு விற்கப்படும். சராசரி விலை மறுபடியும் சரிந்திருக்கும் - மூன்றாம் மூலதன முதலீட்டின் உற்பத்தித் திறனில் புதிய உயர்வு ஏற்படுவதன் மூலமாக அல்லாமல், இரண்டாம் முதலீட்டுக்குரிய அதே கூடுதல் உற்பத்தித் திறன் கொண்ட புதிய மூலதன முதலீடு சேர்க்கப்படுவதன் மூலமாகவே இச்சரிவு ஏற்பட்டிருக்கும். A வகை நிலத்தில் முன்னிலும் உயர்ந்ததென்றாலும் மாறாத உற்பத்தித் திறன் கொண்ட அடுத்தடுத்த மூலதன முதலீடுகள்-வாடகை தரும் மண்வகைகளில் செய்வதுபோல் வாடகையை உயர்த்துவதற்குப் பதில் - உற்பத்தி-விலையை விகிதப்படி குறையச் செய்யும்; எனவே மற்றவையாவும் மாறாதிருக்க ஏனைய எல்லா மண்வகைகளிலுமான வேறுபாட்டு வாடகையையும் விகிதப்படி குறையச்செய்யும். மறுபுறம் £3 உற்பத்தி-விலையில் ஒரு குவார்ட்டர் உற்பத்தி செய்கிற முதலாம் மூலதன முதலீடு விலையை ஆளுவதாய் இருந்து வருமானால், இந்த 5 குவார்ட்டரும் £ 15க்கு விற்கப்படும்; A நிலத்திலான பிந்திய மூலதன முதலீடுகளின் வேறுபாட்டு வாடகை £6 ஆகும். A வகை நிலத்தின் ஏக்கர் ஒன்றுக்கான கூடுதல் மூலதனம்- அது எவ்விதம் பிரயோகிக்கப்பட்ட போதிலும் - இங்கு ஒரு மேம்பாடாக அமைந்திடும்; ஆரம்ப மூலதனத்தின் உற்பத்தித் திறனையும் உயரச் செய்திடும். $^1/_3$ பங்கு மூலதனம் 1 குவார்ட்டரும், எஞ்சிய $^2/_3$ பங்கு மூலதனம் 4 குவார்ட்டரும் உற்பத்தி செய்ததாகச் சொல்வது நகைப்புக்குரியதாகும். ஏனென்றால் ஏக்கர் ஒன்றுக்கு £9 என்பது எப்போதுமே 5 குவார்ட்டர் உற்பத்தி செய்யும், £3 ஆனது 1 குவார்ட்டர் மட்டுமே உற்பத்தி செய்யும். இங்கு வாடகை உதிக்குமா உதிக்காதா என்பது, உபரி - இலாபம் கிடைக்குமா கிடைக்காதா என்பது முழுக்க முழுக்க சூழ்நிலைகளைப் பொறுத்ததாகும். இயல்பாகப் பார்த்தால் ஆளும் உற்பத்தி-விலை குறைந்தாக வேண்டும். மேம்பட்டதும் ஆனால்

இன்னுமதிகமாய்ச் செலவாகக் கூடியதுமான சாகுபடி சிறந்த மண் வகைகளிலும் நடைபெறுவதாலேயே A நிலத்திலும் நடைபெறு மானால் அதாவது வேளாண்மையில் பொதுவானதொரு புரட்சி ஏற்படுமானால் மேற்சொன்னவாறு ஆளும் உற்பத்தி-விலை குறையும். நாம் இப்போது A நிலத்தின் இயற்கை மண்வளத்தைக் குறிப்பிடுகையில், அதில் £3க்குப் பதில் £6 அல்லது £9 முதலீடு செய்து சாகுபடி செய்வதாகக் கொள்கிறோம். குறிப்பிட்ட நாட்டின் முக்கிய வழங்கலுக்கு வகை செய்யும் A நிலத்தில் சாகுபடி செய்யப்படும் ஏக்கர் அளவில் மிகப் பெரும்பகுதி இந்தப் புதிய வழிமுறையை ஈடுபடுத்துமானால் இது குறிப்பாகப் பொருந்துவதாகும். ஆனால் மேம்பாடானது முதலில்A நிலத்தின் சிறுபரப்புக்கு மட்டுமே பரவுமானால் மேம்பட்ட முறையில் சாகுபடி செய்யப்படும் இந்த நிலப்பகுதி உபரி-இலாபம் தரும்; நிலவுடைமையாளர் விரைவில் இந்த உபரி-இலாபத்தை முழுமையாகவோ பகுதியாகவோ வாடகையாக மாற்றி வாடகையின் வடிவில் நிலைப்படுத்துவார். இவ்வாறு - வேண்டலானது வளர்ந்து செல்லும் வழங்கலுக்கு ஈடுகொடுத்துச் செல்லுமானால் - Aவகையில் மேன்மேலும் அதிகமான நிலப்பரப்பு பையப்பைய புதிய சாகுபடியை கையாள முற்படும்போது A தரத்திலான நிலமனைத்திலும் பையப் பையப் வாடகை உருவெடுக்கலாம்; உபரி-உற்பத்தித் திறனானது சந்தை நிலைமைகளைப் பொறுத்து முழுமையாகவோ பகுதியாகவோ ஒழிந்து போகலாம். A வகைக்குரிய உற்பத்தி-விலை கூடுதல் மூலதனம் முதலீடாகிற நிலைமைகளில் அதன் விளை பொருளுக்குரிய சராசரி விலையோடு சமனமாவது இப்படி இந்தக் கூடுதல் மூலதன முதலீட்டின் உபரி-இலாபம் வாடகையின் வடிவில் நிலைபெறுவதன் மூலம் தடைபடலாம். ஆக, கூடுதல் மூலதனத்தின் உற்பத்தித்திறன் குறையும்போது, மேம்பட்ட, மண்வகைகளில் என்ன நேரிடும் என்று முன்பே பார்த்தோம் அல்லவா, அதேபோல் இப்போதும் உபரி-இலாபம் நில-வாடகையாக மாற்றமடையும்; அதாவது நிலச் சொத்து குறுக்கிடும்; வேறுபாட்டு வாடகை என்பது தனிப்பட்ட உற்பத்தி-விலைக்கும் பொது உற்பத்தி-விலைக்கும் இடையிலான வேறுபாட்டின் விளைவே ஆதலால் வேறுபாட்டு வாடகைக்குப் பதில் உற்பத்தி- விலையை உயரச் செய்யும். A வகை நிலத்தைப் பொறுத்தவரை இரு விலைகளும் ஒருங்கமைவதை அது தடுத்திடும்; ஏனென்றால் உற்பத்தி -விலை A நிலத்திலான சராசரி உற்பத்தி-விலையால் ஆளப்படுவதில் அது குறுக்கிடும்; இவ்விதம் உற்பத்தி-விலையை தேவைக்குமேல்

உயர்ந்திருக்கச் செய்து, இவ்வழியில் வாடகையைத் தோற்றுவிக்கும். தானியம் அயல் நாட்டிலிருந்து தடையின்றி இறக்குமதி செய்யப்பட்டாலும் கூட, அயல்நாட்டிலிருந்து ஆளப்படும் உற்பத்தி-விலையில் வாடகை தராமல் தானியச் சாகுபடியில் போட்டியிடவல்ல மண்வகையை வேறுகாரியங்களுக்கு-எடுத்துக்காட்டாக மேய்ச்சலுக்கு - பயன்படுத்தும்படி சாகுபடியாளர்களைக் கட்டாயப்படுத்துவதன் மூலம் இதே முடிவு ஏற்படவோ நிலைத்து நீடிக்கவோ செய்திடலாம்; இதனால் வாடகை மண் வகைகள் மட்டுமே தானியச் சாகுபடிக்குப் பயன்படுத்தப்படும்; இந்த மண் வகைகளைப் பொறுத்தவரை குவார்ட்டர் ஒன்றுக்கான தனிப்பட்ட சராசரி உற்பத்தி-விலை அயல்நாட்டிலிருந்து நிர்ணயிக்கப்படும் உற்பத்தி-விலையை விடக் குறைவாய் இருக்கும். மொத்தத்தில், குறிப்பிட்ட நேர்வில் உற்பத்தி-விலை சரியும் என்றாலும் அதன் சராசரியின் நிலைக்கு சரிந்திடாது என்றே கொள்ள வேண்டும். அது சராசரிக்குக் கூடுதலாய், ஆனால் படுமோசமாக சாகுபடி செய்யப்படும் A வகை நிலத்தின் உற்பத்தி-விலைக்குக் குறைவாய் இருக்கும்; இதனால் A வகையில் புதிய நிலத்திலிருந்து வரும் போட்டி கட்டுப்படுத்தப்படும்.

**(2) கூடுதல் மூலதனங்களின் உற்பத்தித் திறன் குறைந்து செல்லுதல்.** A1 நிலமானது கூடுதலாய் ஒரு குவார்ட்டர் உற்பத்தி செய்வதற்கு £4 தேவைப்படுவதாகக் கொள்வோம், அதேபோது A நிலம் இந்த கூடுதல் குவார்ட்டரை £3¾க்கு, அதாவது இன்னும் மலிவாக, ஆனால் முதலாவது மூலதன முதலீட்டால் உற்பத்தி செய்யப்பட்ட குவார்ட்டரை விட £¾ அதிக விலையில் உற்பத்தி செய்கிறது. இந்நேர்வில் A நிலத்தில் உற்பத்தி செய்யப்படும் 2 குவார்ட்டரின் மொத்த விலை = £6 ¾; ஆக குவார்ட்டர் ஒன்றுக்கான சராசரி விலை = £$3^3/_8$. உற்பத்தி-விலை உயரும், ஆனால் உயர்வு £$^3/_8$ மட்டுமே, அதேபோது கூடுதல் மூலதனமானது £3 ¾ விலையில் உற்பத்தி செய்யும் புதிய நிலத்தில் முதலீடு செய்யப்படுமானால் உற்பத்தி-விலை இன்னும் £ $^3/_8$ சேர்ந்து £ 3 ¾ஆக உயரும். ஆக இது ஏனைய எல்லா வேறுபாட்டு வாடகைகளையும் விகிதப்படி உயரச் செய்திடும்.

ஆகவே A நிலத்தில் குவார்ட்டர் ஒன்றுக்கு £$3^3/_8$ என்னும் உற்பத்தி-விலையானது கூடுதலான மூலதன முதலீட்டின் மூலம், அதன் சராசரி உற்பத்தி-விலைக்கு சமனமாக்கப்படும், அதுவே ஆளும் விலையாக இருக்கும். ஆக அது வாடகை ஏதும் தராது; ஏனென்றால் அது உபரி-இலாபம் ஏதும் உற்பத்தி செய்யாது.

ஆனால், இரண்டாவது மூலதன முதலீட்டால் உற்பத்தி செய்யப்படும் இந்த குவார்ட்டர் £ 3 ¾ க்கு விற்கப்படுமானால், A நிலம் இப்போது £ 3 ¾ வாடகை தரும்; கூடுதல் மூலதன முதலீடு ஏதும் செய்யப்பட்டிராத, எனவே இன்னமும் குவார்ட்டர் ஒன்றுக்கு £ 3 விலையில் உற்பத்தி செய்கிற A வகை ஏக்கர்களிலும் கூட இவ்வாறே நிகழும். A வகையில் சாகுபடி செய்யப்படாத வயல்கள் கொஞ்சமாவது இருந்துவரும்வரை, விலை தற்காலிகமாக மட்டுமே £ 3 ¾ ஆக உயரக் கூடும். A வகையைச் சேர்ந்த புதிய வயல்களின் போட்டி உற்பத்தி-விலையை £3க்கு மேல் போய்விடாமல் பார்த்துக் கொள்ளும்; £3 ¾க்கு குறைவான விலையில் ஒரு குவார்ட்டர் உற்பத்தி செய்வதற்கு சாதகமான இடவாகு உடைய A வகை நிலமனைத்தும் காலியாகும்வரை இதே நிலை நீடிக்கும். ஓர் ஏக்கர் நிலம் வாடகை தருவதாய் உள்ளவரை நிலவுடைமையாளர் குத்தகைச் சாகுபடியாளருக்கு இன்னோர் ஏக்கர் வாடகையில்லாமல் தரமாட்டார் என்ற போதிலும், நாம் அப்படியே அனுமானம் செய்து கொள்வோம்.

A வகையில் தயாராய் இருக்கும் நிலத்தில் இரண்டாவது மூலதன முதலீடு எந்த அளவுக்கு பரவலாகிவிட்டது என்பதும் உற்பத்தி-விலை சராசரி விலைக்குச் சமனமாகிறது என்பதை அல்லது இரண்டாவது மூலதன முதலீட்டின் தனிப்பட்ட உற்பத்தி-விலையாகிய £ 3 ¾ ஆளும் விலையாகிறதா என்பதைப் பொறுத்ததாகும். வேண்டல் நிறைவு செய்யப்படுவதற்கு முன் குவார்ட்டர் ஒன்றுக்கு £ 3 ¾ என்ற விலையில் பெறப்படும் உபரி-இலாபத்தை வாடகையாக நிர்ணயித்திட நிலவுடைமையாளருக்கு போதிய அவகாசம் இருக்கும்போதுதான் மேலே கூறியதுபோல் இரண்டாவது மூலதன முதலீட்டின் தனிப்பட்ட உற்பத்தி-விலை ஆளும்-விலையாகிறது.

மூலதனம் அடுத்தடுத்து முதலீடு செய்யப்படுகையில் மண்ணின் உற்பத்தித் திறன் குறைந்து செல்வது தொடர்பாக லீபிக் எழுதி இருப்பதை பார்க்கவும்.* உற்பத்தி-விலை மாறாதிருக்கும்வரை மூலதன முதலீட்டின் உபரி-உற்பத்தித் திறன் அடுத்தடுத்து குறைந்து செல்வது எப்போதுமே ஏக்கர் ஒன்றுக்கான வாடகையை கூடுதலாக்குகிறது என்றும், உற்பத்தி-விலை குறைந்து செல்லும் போதே கூட இவ்விதம் நிகழலாம் என்றும் பார்த்தோம்.

ஆனால், பொதுவாக பின்வருவதைக் குறிப்பிட்டாக வேண்டும்.

---

(*) லீபிக், Die chemie in threr Anwendung auf Agricultur und Physiologie, பிரான்ஸ்விக் 1862.-ஆங்கிலப் பதிப்பாசிரியர்.)

*முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் நோக்கு நிலையில், உற்பத்திப் பொருட்களை அடைவதற்கு முன்பு தேவையற்றதாய் இருந்த ஒரு செலவீடு அல்லது கொடுப்பு அவசியமாகிறபோதெல்லாம் அந்த உற்பத்திப் பொருட்களின் விலை அதிகரிக்கிறது. ஏனென்றால் உற்பத்தியின்போது நுகரப்படும் மூலதனத்தின் மாற்றீடு என்பது குறிப்பிட்ட உற்பத்திச் சாதனங்களால் குறிக்கப்பெறும் மதிப்புகளின் மாற்றீட்டை மட்டும் குறிப்பதன்று. செலவே இல்லாமல் உற்பத்தியில் செயலிகளாக பங்கேற்கும் இயற்கைச் சக்திகள் - உற்பத்தியில் அவை வகிக்கும் பங்கு எதுவானாலும் - மூலதனத்தின் அடக்கக் கூறுகளாக பங்கேற்காமல் மூலதனத்திற்கு இயற்கை வழங்கும் இலவசக் கொடையாகவே, அதாவது இயற்கையின் உற்பத்தித் திறன் உழைப்புக்கு - வழங்கிடும் இலவசக் கொடையாகவே பங்கேற்கின்றன. ஆனால் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையில் மற்றெல்லா உற்பத்தித் திறன்களையும் போலவே இயற்கையின் இந்த உற்பத்தித் திறனும் மூலதனத்தின் உற்பத்தித் திறனாக தோற்றமளிக்கிறது. ஆகவே ஆரம்பத்தில் செலவில்லாமலே கிடைக்கிற இத்தகைய இயற்கைத்திறன் உற்பத்தியில் பங்கேற்குமானால், அதன் துணைகொண்டு உற்பத்தி செய்யப்படும் பண்டம் வேண்டலை நிறைவு செய்யப் போதுமானதாய் இருக்கும்வரை, அது விலை நிர்ணயிப்பில் சேருவதில்லை. ஆனால் வளர்ச்சிப் போக்கில், இந்த இயற்கைத் திறனின் துணை கொண்டு வழங்க முடிவதைக் காட்டிலும் கூடுதலான உற்பத்திப் பொருள் வேண்டப்படுமானால், அதாவது இந்தக் கூடுதல் உற்பத்திப் பொருளை இந்த இயற்கைத் திறனின் உதவி இல்லாமலோ அல்லது மனித உழைப்புச் சக்தியின் துணை கொண்டோ உற்பத்தி செய்தாக வேண்டும் என்ற நிலை ஏற்படுமானால் புதிதாய் ஒரு கூடுதல் கூறு மூலதனத்தில் சேருகிறது. ஆகவே அதே உற்பத்திப் பொருளை அடைவதற்கு, ஒப்பளவில் கூடுதலான முதலீடு தேவைப்படுகிறது. மற்றெல்லா நிலைமைகளும் மாறாதிருக்க, உற்பத்தி-விலை உயருகிறது.*

---

*(எங்கெல்ஸ் குறிப்பு: '1876 பிப்ரவரி நடுவில் தொடங்கிய' ஒரு குறிப்பேட்டிலிருந்து).*

**மண்ணில் இடப்படும் மூலதனத்திற்கான வெறும் வட்டியாக வேறுபாட்டு வாடகையும் வாடகையும்.**

நிரந்தர மேம்பாடுகள் எனப்படுகிறவை - மூலதனச் செலவீடு தேவைப்படுகிற செயற்பாடுகளைக் கொண்டு மண்ணின் பௌதிகத்

தன்மைகளையும் ஓரளவுக்கு இரசாயனத் தன்மைகளையும் கூட மாற்றியமைக்கிறவையும், மூலதனம் மண்ணில் இடப்படுவதாகக் கருதத்தக்கவையுமான மேம்பாடுகள் - அநேகமாய் இந்த மேம்பாடுகள் அனைத்துமே எதைக் குறிக்கும் என்றால், வரம்புக்குட்பட்ட ஒரு வட்டாரத்திலுள்ள குறிப்பிட்ட நிலத்துண்டுக்கு வேறோர் இடத்தில், சில நேரம் மிக அருகில் இருக்கும் வேறொரு நிலத்துண்டு இயற்கையில் பெற்றுள்ள தன்மைகள் ஊட்டப்படுவதைக் குறிக்கும். ஒரு நிலத்துண்டு இயற்கையிலேயே சரிமட்டமாய், இன்னனொன்றை சரிமட்டம் செய்தாக வேண்டும்; ஒன்று இயற்கை வடிகால் பெற்றுள்ளது, வேறொன்றுக்கு செயற்கை வடிகால் தேவைப்படுகிறது; ஒன்றில் இயற்கையிலேயே மேல்மண் ஆழமாய் உள்ளது, வேறொன்றில் அதை செயற்கையாக ஆழப்படுத்த வேண்டியுள்ளது; ஒன்றில் இயற்கையிலேயே களிமண் தேவையான அளவு மணலுடன் கலந்திருக்கிறது, இன்னொன்றில் இந்தச் சரிவிகிதத்தை செயற்கையாக உண்டு பண்ணியாக வேண்டும்; ஒன்று இயற்கையிலேயே நீர்ப்பாசன வசதிபெற்ற அல்லது அடுக்கடுக்காய் வண்டல் படிந்த தாழ்நிலமாக உள்ளது; இன்னொன்றில் இந்நிலை ஏற்படச் செய்வதற்கு உழைப்பு தேவைப்படுகிறது, அல்லது முதலாளித்துவப் பொருளாதார இயலின் மொழியில் பேசுவதானால் மூலதனம் தேவைப்படுகிறது.

இங்கே ஒப்பளவிலான அனுகூலங்களை இயற்கையிலேயே பெற்றுள்ள நிலத்தைப் பொறுத்தவரை, வாடகை வட்டி ஆகாது என்றும், ஆனால் இந்த அனுகூலங்கள் செயற்கையாக ஏற்படுத்தப் பெற்றுள்ள, நிலத்தைப் பொறுத்தவரை வாடகை வட்டியாகும் என்றும் சொல்வது உண்மையிலேயே வேடிக்கையான தத்துவம்தான். (மெய்யாகவே இது நடைமுறையில் எந்த அளவுக்குத் திரிந்து போய் இருக்கிறது என்றால், ஒரு நேர்வில் வாடகை உண்மையிலேயே வட்டியும் ஒருங்கமைவதால், திட்டவட்டமாய் இதற்கு மாறாய் இருக்கும் ஏனைய நேர்வுகளிலும் வாடகைக்கு வட்டி என்று தவறாக பெயர் சூட்டுகிறார்கள்). எப்படியானாலும், மூலதனம் முதலீடு செய்யப்பட்டப் பிறகு நிலத்திலிருந்து வாடகை கிடைப்பதற்குக் காரணம் மூலதன முதலீடு இந்நிலத்தை முன்பிருந்ததைக் காட்டிலும் உற்பத்தித் திறனுள்ளதாக்குவதுதானே தவிர, மூலதனம் முதலீடு செய்யப்படுவதல்ல. குறிப்பிட்ட நாட்டிலுள்ள நிலமனைத்துக்கும் இந்த மூலதன முதலீடு தேவைப்படுவதாகக் கொள்வோமானால், அதனைப் பெற்றுக் கொள்ளாத ஒவ்வொரு நிலத்துண்டும் முதலில் இந்தக் கட்டத்தைக் கடந்து வந்தாக வேண்டும்; ஏற்கெனவே மூலதன முதலீட்டைப் பெற்றுக் கொண்ட நிலத்திலிருந்து கிடைக்கும் வாடகை

(குறிப்பிட்ட நேர்வில் அதிலிருந்து பெறப்படும் வட்டி) வேறுபாட்டு வாடகை ஆகிறது; இந்நிலம் இயற்கையிலேயே இந்த அனுகூலத்தைப் பெற்றதாகவும் ஏனைய நிலம் அதனை செயற்கையாகவே அடைய வேண்டியதாகவும் இருந்தால் எப்படியோ அதே போன்ற நிலை ஏற்படுகிறது.

வட்டியாகப் பெயரக் கூடிய இந்த வாடகையும் கூட, மூலதன முதலீடு மீட்டெடுக்கப்பட்ட உடனே துப்புரவான வேறுபாட்டு வாடகை ஆகிவிடுகிறது. இல்லையேல் ஒரே மூலதனம் இருமுறை மூலதனமாக நிலவ வேண்டியதாகிவிடும்.

---

மிகப் பெரிய வேடிக்கை என்னவென்றால், ரிக்கார்டோவின் எதிராளிகளில் யாரெல்லாம் மதிப்பை நிர்ணயிப்பதற்கு உழைப்பை மட்டும் ஆதாரமாய் கொள்வதென்னும் கருத்தை எதிர்க்கிறார்களோ அவர்கள் எல்லாம், வேறுபாட்டு வாடகை மண்வகைகளிலான வேறுபாட்டிலிருந்து எழுவதாகிய உண்மையை சந்திக்கும்போது, இங்கே உழைப்புக்குப் பதில் இயற்கையே மதிப்பை நிர்ணயிப்பதாக சுட்டிக் காட்டுகிறார்கள்; ஆனால் அதேபோது, இந்த மதிப்பு நிர்ணயிப்புக்கு நிலத்தின் இடவாகினை, அல்லது - இன்னும் பெரிய அளவுக்கே கூட-சாகுபடியின் போது நிலத்தில் இடப்படும் மூலதனத்திற்கான வட்டியைக் காரணமாய்க் காட்டுகிறார்கள். ஒரே உழைப்பு குறிப்பிட்ட காலத்தில் உண்டாக்கப்படும் உற்பத்திப் பொருளில் ஒரே மதிப்பை உற்பத்தி செய்கிறது; ஆனால் குறிப்பிட்ட உழைப்பளவுக்கு இந்த உற்பத்திப் பொருளின் பரிமாணம் அல்லது அளவு என்ன என்பதும், எனவே இந்த உற்பத்திப் பொருளின் குறிப்பிட்ட ஈவுப் பங்கிற்கு உரியதாகிற மதிப்புப் பகுதியும் முழுக்க முழுக்க உற்பத்திப் பொருளின் அளவையே பொறுத்தவை. உற்பத்திப் பொருளின் அளவோ குறிப்பிட்ட உழைப்பளவின் உற்பத்தித் திறனை பொறுத்ததே, தவிர அதன் அறுதி அளவினையல்ல. இந்த உற்பத்தித் திறனுக்கு இயற்கை காரணமானாலும் சரி, சமுதாயம் காரணமானாலும் சரி, எல்லாம் ஒன்றுதான். உற்பத்தித் திறனுக்கே உழைப்பும், எனவே மூலதனமும் செலவாகிற நேர்வில் மட்டுமே, அது ஒரு புதிய கூறினைச் சேர்த்து உற்பத்தி-விலையை அதிகமாக்குகிறது; இயற்கை அதனளவிலேயே இப்படிச் செய்வதில்லை.

## அத்தியாயம் XLV

## அறுதி நில-வாடகை

வேறுபாட்டு வாடகையைப் பகுத்தாராய்ந்தபோது, படுமோசமான மண்வகை நில-வாடகை ஏதும் தருவதில்லை என்ற அனுமானத்தி லிருந்து தொடங்கினோம்; இதையே இன்னும் பொதுவாகச் சொன்னால், ஒரு நிலம் நில-வாடகை தருவதாய் இருக்க வேண்டு மானால், அதன் விளைபொருளினது தனிப்பட்ட உற்பத்தி-விலை சந்தையை ஆளும் உற்பத்தி-விலைக்குக் குறைவாய் இருந்தாக வேண்டும். அப்படி இருப்பதன் மூலம் உபரி-இலாபம் பிறக்கிறது. இந்த உபரி-இலாபமே வாடகையாக மாற்றப்படுகிறது எனக் கொண்டோம். இங்கு முதலாவதாகக் கவனிக்க வேண்டியது என்னவென்றால், முறைப்படியான வேறுபாட்டு வாடகையின் விதிக்கும் இந்த அனுமானம் சரியா தவறா என்பதற்கும் எவ்விதத் தொடர்புமில்லை.

சந்தையை ஆளும் பொது உற்பத்தி-விலையை P என்போம். P ஆனது படுமோசமான A வகை நிலத்தின் விளைபொருளினது தனிப்பட்ட உற்பத்தி-விலையுடன் ஒருங்கமைகிறது; அதாவது அதன் விலை உற்பத்தியில் நுகரப்பட்ட மாறா-மூலதனம், மாறும்- மூலதனம்+ சராசரி இலாபத்தை (=முனைவு இலாபம் + வட்டியை) தருகிறது.

இந்நேர்வில் வாடகை பூஜ்யத்திற்குச் சமம். அடுத்தபடி சிறந்ததாகிய B வகை நிலத்திற்குரிய தனிப்பட்ட உற்பத்தி - விலை = P'. மேலும் $P<P'$; அதாவது P ஆனது B நிலத்தின் விளைபொருளினது உள்ளபடியான உற்பத்தி-விலையை விட கூடுதலாய்க் கொடுக்கிறது. $P—P' = d$ எனக் கொள்வோம்; ஆகவே P' மீது P யின் மிகையாகிய d ஆனது B வகை நிலத்தின் சாகுபடியாளர் அடைந்திடும் உபரி-இலாபம் ஆகும். இந்த d நிலவுடைமையாளருக்குச் செலுத்தப்பட வேண்டிய வாடகையாக மாற்றப்படுகிறது. p' என்பது மூன்றாவது மண்வகையாகிய C நிலத்துக்குரிய உள்ளபடியான உற்பத்தி-விலையை குறிக்குமானால், $P—P'' = 2d$ என்போம்; இந்த 2d வாடகையாக மாற்றப்படுகிறது; இதேபோல் P''' என்பது நான்காவது மண்வகையாகிய D நிலத்திற்குரிய தனிப்பட்ட உற்பத்தி-விலையை குறிக்குமானால் $P—P'''=3d$ என்போம்;

இதுவும் நில-வாடகையாக மாற்றப்படுகிறது-இவ்வாறே மேலும் சொல்லலாம். இப்போது நிலத்துக்கான முதனிலை, அதாவது வாடகை= 0 என்பதும், எனவே அதன் உற்பத்திப் பொருளின் விலை = P+0 என்பதும் தவறெனக் கொள்வோம். A நிலமும் வாடகை தருவதாகவும் அந்த வாடகை = r என்றும் வைத்துக் கொள்வோம்; இதிலிருந்து இருவேறு முடிவுகள் பெறப்படுகின்றன.

*முதலாவதாக:* A நிலத்தின் உற்பத்திப் பொருளினது விலை அதன் உற்பத்தி-விலையால் ஆளப்படாது; அது இவ்விலைக்கு மேல் ஓர் உபரியையும் தன்னுள் கொண்டிருக்கும்; அதாவது P+r என்பதாய் இருக்கும். ஏனென்றால் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை இயல்பான விதத்தில் இயங்கிக் கொண்டிருப்பதாகக் கொண்டால், அதாவது சாகுபடியாளர் நிலவுடைமையாளருக்குச் செலுத்துகிற உபரியாகிய r கூலியிலிருந்தோ மூலதனத்தின் சராசரி இலாபத்தி லிருந்தோ செய்யப்படும் பிடித்தத்தை குறிப்பதாகாது, எனக் கொண்டால், அவர் தமது விளைபொருளை அதன் உற்பத்தி- விலைக்கு மேல் விற்பதன்மூலம்தான் அதனைச் செலுத்தமுடியும்; அதாவது இந்த உபரியை அவர் வாடகையின் வடிவில் நிலவுடைமையாளரிடம் மாற்றிக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லையென்றால் அது அவருக்கு உ்பரி-இலாபம் தருகிறது. அப்படியானால் எல்லாவகை நிலங்களிலிருந்தும் சந்தைக்கு வரும் மொத்த விளைபொருளின் ஆளும் சந்தை-விலையானது பொதுவாக எல்லா உற்பத்திக் கிளைகளிலும் மூலதனம் பெற்றுக் கொடுக்கிற உற்பத்தி-விலையாக இருக்காது; அதாவது உற்பத்தி-விலை+வாடகை என்பதாக இருக்குமே தவிர உற்பத்திச்செலவுகள்+சராசரி இலாபம் என்பதற்குச்சமமான விலையாக இருக்காது, P+rஆக இருக்குமே தவிர P ஆக இருக்காது. ஏனென்றால் A நிலத்தின் விளைபொருளினது விலை பொதுவாகச் சொன்னால் ஆளும் பொது சந்தை-விலைக்கான வரம்பெல்லையைக் குறித்திடு கிறது; அதாவது மொத்த உற்பத்திப் பொருள் எவ்விலைக்குத் தரப்படலாம் என்பதைக் குறித்திடுகிறது; அந்த அளவுக்கு இந்த மொத்த உற்பத்திப் பொருளின் விலையை ஆளுகிறது.

*ஆனால் இரண்டாவதாக:* விவசாய விளைபொருட்களின் பொதுவிலை இந்நேர்வில் குறிப்பிடத்தக்கவாறு மாற்றம்-பெறும் என்றாலும் கூட, வேறுபாட்டு வாடகையின் விதி எவ்விதத்தும் ஆனால் ஒழிந்து விடாது. ஏனென்றால் A நிலத்தின் விளைபொருளினது விலையும், எனவே பொதுச் சந்தை விலையும் = P+r இதேபோல்

B, C, D முதலான மண்வகைகளுக்குரிய விலையும் P+r என்பதாக இருக்கும். ஆனால் B நிலத்துக்கு P—P' = d என்பதால் (P+r) (P+r) = d; C நிலத்துக்கு P—P''=(P+r)—(P''+r) = 2d; முடிவில் D நிலத்துக்கு P—P''' = (P+r)—(P'''+r) = 3d மேலும் இவ்வாறே சொல்லலாம். ஆக வாடகையானது வேறுபாட்டு வாடகையின் விதியைச் சார்ந்திராத ஒரு கூறினையும் தன்னுள் கொண்டிருக்கும், விவசாய விளைபொருளின் விலையுடன் சேர்த்து பொதுவாக அதிகரித்துச் செல்லும் என்றாலும், வேறுபாட்டு வாடகை முன்பிருந்தது போலவே மாறாமல் இருக்கும், அதே விதியால் ஆளப்படும். அப்படியானால், மிகக்குறைந்த வளமுடைய மண்வகைகளின் வாடகை என்னவானாலும், வேறுபாட்டு வாடகையின் விதிக்கும் அதற்கும் தொடர்பில்லை என்பது மட்டுமல்ல, வேறுபாட்டு வாடகையின் உண்மைத் தன்மையை கிரகித்துக் கொள்வதற்கான ஒரே வழி A வகை நிலத்திற்கான வாடகை =0 எனக் கொள்வதுதான். அது உண்மையிலேயே பூஜ்யம் தானா அல்லது பூஜ்யத்தை விட அதிகமா என்பது வேறுபாட்டு வாடகையைப் பொறுத்தவரை கருத்துக்குரியதல்ல, உண்மையில் அதை கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை.

ஆகவே வேறுபாட்டு வாடகையின் விதிக்கும் பின்வரும் ஆய்வின் முடிவுகளுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை.

படுமோசமான மண்வகையாகிய A நிலத்தின் விளைபொருள் வாடகை ஏதும் தருவதில்லைஎன்ற அனுமானத்தின் அடிப்படையை இப்போது இன்னும் கூட ஆழமாய் பரிசீலிப்போமானால், பின்வரும் முடிவு பெறப்படும்: விவசாய விளைபொருளின், எடுத்துக்காட்டாகத் தானியத்தின் சந்தை - விலையானது உயர்ந்து சென்று, A வகை நிலத்தில் ஒரு கூடுதல் மூலதன முதலீடு வழக்கமான உற்பத்தி - விலையில் போய் முடிகிற, அதாவது மூலதனத்தின் மீது வழக்கமான சராசரி இலாபம் தருகிற நிலையைச்சென்று அடையுமானால், A வகை நிலத்தில் கூடுதல் மூலதனம் முதலீடு செய்வதற்கு இந்நிலைமையே போதுமானது. வேறுவிதமாகச் சொன்னால் முதலாளி வழக்கமான இலாபம் தரும் புதிய மூலதனத்தை முதலீடு செய்வதற்கும், அதனை இயல்பான முறையில் ஈடுபடுத்துவதற்கும் இந்நிலைமையே போதுமானது.

இந்நேர்விலும் கூட சந்தை-விலை A நிலத்திற்குரிய உற்பத்தி-விலையை விட அதிகமாய் இருந்தாக வேண்டும் என்பது இங்கே நோக்கற்பாலது. ஏனென்றால் கூடுதல் வழங்கல் உருவாக்கப்பட்ட உடனே, வழங்கலுக்கும் வேண்டலுக்கும் இடையிலான உறவு

மாறிப்போவது தெளிவாய்த் தெரிகிறது. முன்னதாக விழங்கல் போதுமானதாய் இருக்கவில்லை. இப்போது அது போதுமானதாய் இருக்கிறது. ஆகவே விலை குறைந்தாக வேண்டும். குறைந்தாக வேண்டும் என்றால், அது A நிலத்திற்குரிய உற்பத்தி-விலையை விட கூடுதலாய் இருந்திருக்க வேண்டும். ஆனால் புதிதாக சாகுபடிக்கு எடுத்துக் கொள்ளப்படும் A நிலம் இன்னும் குறைந்த வளமுடையதாய் இருப்பதால், விலையானது B நிலத்திற்குரிய உற்பத்தி-விலை சந்தையை ஆண்டபோது குறைந்த அளவுக்கு மறுபடியும் குறைவதில்லை. A நிலத்திற்குரிய உற்பத்தி-விலை வரம்பெல்லையாக அமைகிறது; இந்த வரம்பெல்லை சந்தை-விலையின் தற்காலிக உயர்வுக்கு அல்ல ஒப்பளவிலான நிரந்தர உயர்வுக்கே ஆகும். மறுபுறம், சாகுபடிக்கு எடுத்துக் கொள்ளப்படும் புதிய நிலம் இதுவரை சந்தையை ஆண்டு வந்த A நிலத்தை விட அதிக வளமுடையதாய் இருந்தால், என்றாலும் கூடுதலான வேண்டலை நிறைவு செய்வதற்கு மட்டுமே போதுமானதாய் இருந்தால், சந்தை-விலை மாறாமல் இருந்து வருகிறது. படுமோசமான மண்வகை வாடகை தருகிறதா என்னும் பிரச்சினை தொடர்பான பரிசீலனை இந்நேர்விலும் கூட நமது இப்போதைய ஆய்வுடன் ஒருங்கமைகிறது. ஆனால் இங்கேயும் கூட A வகை நிலம் வாடகை ஏதும் தருவதில்லை என்ற அனுமானத்துக்கு, சந்தை-விலையானது முதலாளித்துவச் சாகுபடியாளர் மூலதன முதலீடு + சராசரி இலாபம் என்பதை சரிக்கட்டுவதற்குத்தான் போதுமானதாய் இருப்பதே காரணமாகும்; சுருங்கச் சொல்லின் சந்தை-விலையானது அவருக்கு அவருடைய சரக்குகளின் உற்பத்தி-விலை கிடைக்குமாறு செய்கிறது என்பதே காரணமாகும்.

எப்படியானாலும், முதலாளித்துவச் சாகுபடியாளர் முதலாளியாகச் செயல்பட வேண்டியவராய் இருக்கும்வரை அவரால் இந்நிலமைகளில் A நிலத்தை சாகுபடி செய்ய முடியும். A வகை நிலத்தில் இயல்பான மூலதனப் பெருக்கத்துக்குரிய முன்தேவை இப்போது தயாராய் உள்ளது. ஆனால் முதலாளித்துவச் சாகுபடியாளர் வாடகை ஏதும் செலுத்த வேண்டியிராவிட்டாலும் கூட இப்போது சராசரி நிலைமைகளில் A நிலத்தில் மூலதனம் முதலீடு செய்யலாம் என்ற முதனிலையிலிருந்து A வகையைச் சேர்ந்த இந்நிலம் உடனடியாகவே சாகுபடியாளரின் கைக்கு வந்துவிடுவதாக எவ்விதத்தும் பெறப்படாது. குத்தகைச் சாகுபடியாளர் வாடகை ஏதும் செலுத்த வேண்டியிராவிட்டால் தமது மூலதனத்தின் மீது வழக்கமான இலாபம் அடையலாம் என்ற உண்மையானது

நிலவுடைமையாளர் தமது நிலத்தை சாகுபடியாளரிடம் இலவசமாகவே குத்தகைக்கு விடுவதற்கும், பரோபகாரியாக மாறி தொழில் நடப்புக்காகவே வட்டி இல்லா கடன் வழங்குவதற்கும் எவ்விதத்தும் அடிப்படையாகாது. இப்படிப்பட்ட அனுமானத்தின் பொருள் நிலச் சொத்தை சூக்குமப்படுத்துதல், நிலவுடைமையை ஒழித்து விடுதல் என்பதாகவே இருக்கும்; நிலவுடைமை என்ற ஒன்று இருப்பதினால்தான் நிலத்தில் மூலதனம் முதலீடு செய்யப்படுவதற்கும் அது தடையின்றிப் பெருகுவதற்கும் தடைமதில் ஆகிறது. சாகுபடியாளர் தாம் வாடகை ஏதும் செலுத்த வேண்டியதில்லை என்றால், அதாவது நிலச்சொத்து என்ற ஒன்றே இல்லை என்பது போல் தம்மால் செயல்பட முடிந்தால், தானிய விலைகளின் நிலவரம் காரணமாய் A நிலத்தைப் பயன்படுத்தித் தம்மால் தமது மூலதனத்தின் மீது வழக்கமான இலாபம் பெறமுடியும் என்று எண்ணிக் கொள்வதால் மட்டும் இந்தத் தடைமதில் கொஞ்சங்கூடத் தகர்ந்து விடுவதில்லை. நிலவுடைமையிலான ஏகபோகமே, மூலதனத்துக்கு நிலச் சொத்து தடைமதில் ஆவதே வேறுபாட்டு வாடகைக்கு முன் நிபந்தனையாகும்; ஏனென்றால் நிலச் சொத்து என்ற ஒன்று இல்லையேல் உபரி-இலாபம் நில-வாடகையாக மாற்றப்படாது, அது சாகுபடியாளருக்குப் பதில் நிலவுடைமையாளரின் பங்குக்குச் போய் சேருவதும் நடைபெறாது. வேறுபாட்டு வாடகையின் வடிவிலான வாடகை ஒழியும் போதே கூட, அதாவது Aவகை நிலத்திலும் கூட நிலச்சொத்து தொடர்ந்து இத்தகைய தடைமதிலாகவே இருந்து வருகிறது. முதலாளித்துவப் பொருளுற்பத்தி நடைபெறுகிற ஒரு நாட்டில் வாடகை செலுத்தாமலே நிலத்தில் மூலதன முதலீடு நடைபெறக்கூடிய நேர்வுகளை நோக்குவோமானால், அவையாவும் நிலச்சொத்து சட்டப்படி ஒழிக்கப்பட்டிராவிட்டாலும் மெய்நடப்பில் ஒழிக்கப்பட்டிருப்பதையே அடிப்படையாகக் கொண்டிருப்பதைக் காணலாம் - தற்செயல் தன்மை வாய்ந்த மிகத் தனிவிதமான நிலைமைகளில் மட்டுமே நிலச் சொத்து இப்படி ஒழிக்கப்பட முடியும்.

*முதலாவதாக:* நிலவுடைமையாளரே முதலாளியாகவும் இருக்கும்போது, அல்லது முதலாளியே நிலவுடைமையாளராகவும் இருக்கும்போது என்ன நடக்கிறது என்று பார்ப்போம். இந்நேர்வில் இப்போது A வகைநிலமாய் இருப்பதிலிருந்து உற்பத்தி-விலையை பெறுவதற்கு, அதாவது மூலதனம், சராசரி இலாபம் இவற்றின் கூட்டுத் தொகையை மாற்றீடு செய்து கொள்வதற்கு போதுமானதாய் சந்தை-விலை உயர்ந்த உடனே அவர் தமது நிலத்தை தாமே சாகுபடி செய்து கொள்ளலாம். ஏன்? ஏனென்றால் அவருக்கு நிலச் சொத்து மூலதன

முதலீட்டுக்கு தடைமதில் ஆவதில்லை. அவர் தமது நிலத்தை இயற்கையின் ஒரு கூறாக மட்டுமே கருதலாம்; ஆகவே முழுக்க முழுக்க தமது மூலதனத்தின் பெருக்கத்தை மட்டும் நோக்கமாய் முன்னிறுத்தி, முதலாளித்துவ நோக்கத்தை முன்னிறுத்தி முடிவுகள் எடுக்கலாம். முதலாளித்துவ நிலச் சாகுபடி எப்படி செயல்படும் மூலதனம் நிலச் சொத்திலிருந்து வேறாக பிரிந்து இருப்பதை முன் தேவையாக கொண்டுள்ளதோ, அதேபோல்தான் பொதுவாகச் சொன்னால் நிலவுடைமையாளரே சொந்தமாக சாகுபடி செய்வதற்கும் இடமளிப்பதில்லை, நிலவுடைமையாளரே தமது நிலத்தை சாகுபடி செய்வது முழுக்க முழுக்க தற்செயலானதே என்பதே உடனே விளங்கிக் கொள்ளலாம், தானியத்துக்கான வேண்டல் அதிகரிப்பதால், A வகையில் சொந்த சாகுபடி செய்யும் நிலவுடைமையாளர்களின் கையிலிருப்பதை விட இன்னுமதிக நிலப்பரப்பை சாகுபடி செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டால், மூலதன முதலீட்டுக்கு நிலச்சொத்து ஏற்படுத்தும் தடைமதிலின் இந்த ஊகஞ்சார்ந்த ஒழிப்பு உடனே முறிந்து விடுகிறது. முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையில் மூலதனமும் நிலமும் சாகுபடியாளரும் நிலவுடைமையாளரும்-வெவ்வேறாகப் பிரிந்து இருப்பதிலிருந்து தொடங்கிய பிறகு நேர்மாறாக அனுமானம் செய்து கொள்வது, அதாவது நிலச் சொத்து மூலதனத்திலிருந்து வேறாகவும் தனியாகவும் இல்லாவிட்டால் மூலதனம் நிலச் சாகுபடியிலிருந்து எங்கெல்லாம் எப்போதெல்லாம் வாடகை பெறாதோ அங்கெல்லாம் அப்போதெல்லாம் பொதுவாகச் சொன்னால் நிலவுடைமையாளர்களே தமது நிலத்தை சாகுபடி செய்து கொள்கிறார்கள் எனக் கொள்வது அபத்தமான முரண்பாடே ஆகும். சுரங்க வாடகை தொடர்பாக ஆதாம் ஸ்மித் கூறியதை பார்க்கவும், அது கீழே மேற்கோளாய்த்தரப்படும். நிலச் சொத்தின் ஒழிப்பு தற்செயலானது. அது நிகழலாம், அல்லது நிகழாமலும் போகலாம்.

*இரண்டாவதாக:* ஒரு குத்தகை நிலத்தின் மொத்தப் பரப்பில் குறிப்பிட்ட சில பகுதிகள் சந்தை-விலைகளின் இப்போதுள்ள நிலவரத்தில் வாடகை ஏதும் தராமல் இருக்கலாம். அதாவது உண்மையில் இவை இலவசமாகவே குத்தகைக்கு விடப்படுகின்றன; ஆனால் நிலவுடைமையாளர் இப்படிக் கருதுவதில்லை; ஏனென்றால் அவர் குத்தகை நிலத்தின் மொத்த வாடகை அளவை பார்க்கிறாரே தவிர, அதிலடங்கிய தனிப்பட்ட பகுதிகளின் பிரத்தியேக வாடகையைப் பார்ப்பதில்லை. இந்நேர்வில், குத்தகை நிலத்தில் அடங்கிய வாடகையற்ற கூறுகளைப் பொறுத்தவரை, மூலதன

முதலீட்டுக்கு நிலச்சொத்து தடைமதிலாக இருப்பது முதலாளித்துவச் சாகுபடியாளருக்கு ஒழிந்து போகிறது, அதுவும் நிலவுடைமையாளருடனேயே செய்து கொள்ளப்படும் ஒப்பந்தத்தின் மூலம் ஒழிந்து போகிறது. ஆனால் சாகுபடியாளர் இந்த வாடகையற்ற நிலத்துண்டுகளோடு சேர்ந்திருக்கும் நிலத்துக்கு வாடகை கொடுப்பதனால்தான் அவற்றுக்கு வாடகை கொடுப்பதில்லை. இங்கு ஓர் இணைவு அவசியம் எனக் கொள்ளப்படுகிறது: அதாவது குறைவுபடும் வழங்கலை சரிக்கட்டுவதற்கு மோசமான A வகை நிலம் புத்தம் புதிய உற்பத்திக்களமாக நாடப்படுவதில்லை; மாறாக அது இன்னுஞ் சிறந்த நிலத்தின் பிரிக்க முடியாத பகுதியாகவே அமைந்துவிடுகிறது. ஆனால் A வகையிலான குறிப்பிட்ட சில நிலத்துண்டுகள் சுயேச்சையாக சாகுபடி செய்யப்பட வேண்டிய, அதாவது முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையில் பொதுவாகக் காணப்படும் நிலைமைகளில் அவை சுயேச்சையாக குத்தகைக்கு விடப்பட வேண்டிய நேர்வுதான் இங்கு பரிசீலித்தாக வேண்டியதாகும்.

*மூன்றாவதாக:* ஒரு சாகுபடியாளர் தம்மிடம் இப்போதுள்ள அதே குத்தகை நிலத்தில் கூடுதல் மூலதனம் முதலீடு செய்யலாம்; ஆனால் இவ்விதம் பெறப்படும் கூடுதல் விளைபொருள் இப்போதைய சந்தை-விலைகளில் அவருக்கு உற்பத்தி-விலையை மட்டுமே, அதாவது வழக்கமான இலாபத்தை மட்டுமே பெற்றுத் தருவதாக அமையலாம். இதனால் அவர் கூடுதல் வாடகை ஏதும் செலுத்த முடியாமற் போகலாம். ஆக, நிலத்தில் முதலீடு செய்யப்பட்ட மூலதனத்தில் ஒரு பகுதிக்கு அவர் நில-வாடகை செலுத்துகிறார், மறுபகுதிக்கு அவர் அப்படி எதுவும் செலுத்துவதில்லை. ஆனால் இந்த அனுமானம் பிரச்சினையை தீர்ப்பதற்கு அவ்வளவாய்ப் பயன்படுவதில்லை என்பதை பின்வருவதிலிருந்து அறியலாம்; பழைய மூலதனத்தைப் போலவே அவருக்கு உற்பத்தி-விலையும் அதோடு உபரி-இலாபம் பெற்றுத் தருகிற கூடுதல் மூலதனத்தைக் கொண்டு அவர் கூடுதல் விளைபொருள் அடைவதற்கு சந்தை-விலை (மற்றும் நிலத்தின் மண்வளம்) வழி செய்யுமானால், குத்தகை காலாவதியாகாமல் இருக்கும்வரை அவரால் இந்த உபரி-இலாபத்தை அடைய முடிகிறது. ஏன்? ஏனென்றால் குத்தகை ஒப்பந்தம் நீடித்திருக்கும் வரை, நிலத்தில் அவரது மூலதனம் முதலீடாவதற்கு நிலச் சொத்து ஏற்படுத்தும் தடைமதில் ஒழிக்கப்பட்டுவிட்டது. ஆனால் இந்த உபரி-இலாபத்தை அவர் அடைய வேண்டுமானால், மோசமான வகையில் கூடுதல் நிலத்தை தனியாக பண்படுத்தி தனியாகக் குத்தகைக்கு எடுக்க வேண்டும் என்பதே

பழைய நிலத்தில் கூடுதல் மூலதனம் முதலீடு செய்யப்படுவது மட்டும் அவசியமான கூடுதல் வழங்கலை உற்பத்தி செய்வதற்கு இப்போது போதுமானதல்ல என்பதை மறுக்க ஒண்ணாதபடி நிரூபிக்கிறது. ஓர் அனுமானம் மற்றொன்றை முடியாதகாரியம் ஆக்கிவிடுகின்றன. உடைமையாளராலேயே சாகுபடி செய்யப்படும் நிலத்துடன் (இது தற்செயலாகவும் விதி விலக்காகவுமே நிகழ்ந்த போதிலும்), அல்லது பழைய குத்தகை நிலங்களில் வாடகை ஏதும் தராத கூடுதல் முதலீட்டுடன் ஒப்பிடுகையில் படுமோசமான A வகை நிலத்தின் வாடகையே கூட வேறுபாட்டு வாடகைதான் என்று இப்போது சொல்லலாம். ஆனால் இந்த வேறுபாட்டு வாடகை (1) பல்வேறு மண்வகைகளின் வளத்திலான வேறுபாட்டிலிருந்து எழுவதாய் இருக்காது; ஆகவே A வகை நிலம் வாடகை ஏதும் தருவதில்லை என்றும் அதன் விளைபொருள் உற்பத்தி - விலைக்கே விற்பதாகவும் அனுமானம் செய்து கொள்வதாய் இருக்காது; (2) பழைய குத்தகை நிலத்திலான கூடுதல் மூலதன முதலீடுகள் வாடகை தருகின்றனவா அல்லவா என்பது A வகையில் சாகுபடிக்கு எடுத்துக்கொள்ளப்படும் புதிய நிலம் வாடகைதருகிறதா அல்லவா என்ற கேள்விக்கு சிறிதும் பொருத்தப்பாடற்றதாகும்; குறிப்பிட்ட தொழிற்கிளையில் வேறொரு ஆலையதிபர் மூலதனம் அனைத்தையும் தமது தொழிலில் பயன்படுத்த முடியாததால் அதில் ஒரு பகுதியை வட்டி வருமானப் பத்திரங்களில் முதலீடு செய்கிறாரா, அல்லது தமக்கு முழு இலாபம் தராத ஆனால் வட்டிக்குமேல் கூடுதலாய்த் தருகிற சில மேம்பாடுகளைச் செய்கிறாரா என்பது எப்படி அக்கிளையில் ஒரு புதிய, சுயேச்சையான ஆலைத்தொழிலை நிறுவுவதற்குப் பொருத்தப் பாடற்றதோ, அதேபோலத்தான் இதுவும். அவரைப் பொறுத்தவரை இது இரண்டாந்தர முக்கியத்துவமுடையது, மறுபுறம், புதிய கூடுதல் நிறுவனங்கள் சராசரி இலாபம் கொடுத்தாக வேண்டும்; இந்தச் சராசரி இலாபத்தைப் பெற முடியும் என்று நம்பித்தான் அவை நிறுவப்படுகின்றன. மேலும், பழைய குத்தகை நிலங்களிலான கூடுதல் மூலதன முதலீடுகளும் A வகையிலான புதிய நிலத்தின் கூடுதல் சாகுபடியும் ஒன்றையொன்று கட்டுப்படுத்துகின்றன. அதே குத்தகை நிலத்தின் குறைந்த சாதகமுள்ள உற்பத்தி நிலைமைகளில் கூடுதல் மூலனம் முதலீடு செய்யப்படுவதற்கான வரம்பெல்லை A வகை நிலத்தில் போட்டிக்கு வரும் புதிய முதலீடுகளால் நிர்ணயிக்கப் படுகிறது; மறுபுறம் இந்த மண்வகை தரக்கூடிய வாடகை பழைய குத்தகை நிலங்களில் போட்டிக்கு வரும் கூடுதல் மூலதன முதலீடுகளால் வரம்பிடப்படுகிறது.

ஆனால் இந்த இரண்டகமான செப்படி வித்தையெல்லாம் பிரச்சினையைத் தீர்த்துவிடுவதில்லை; எளிமையாகச் சொன்னால் பிரச்சினை இதுதான்; தானியத்தின் சந்தை-விலையானது (தானியம் என்பது இந்த பகுப்பாய்வின் பொதுவாக மண்ணின் விளை பொருட்களைக் குறித்திடும்) A வகை நிலத்தின் சில பகுதிகளை சாகுபடிக்கு எடுத்துக் கொள்வதற்கு போதுமானதாய் இருப்பதாகவும், இந்த புதிய வயல்களில் முதலீடாகிற மூலதனம் உற்பத்தி-விலையை பெற்றுத் தரக்கூடியதாய், அதாவது மூலதனம், சராசரி இலாபம் இவற்றின் கூட்டுத் தொகையை மாற்றீடு செய்யக் கூடியதாய் இருப்பதாகவும் வைத்துக் கொள்வோம். வேறுவிதமாகச் சொன்னால் A வகை நிலத்தில் இயல்பான மூல்தனப் பெருக்கத்துக்கான நிலைமைகள் நிலவுவதாகக் கொள்வோம். இது போதுமா? அப்போது இம்மூலதனத்தை மெய்யாகவே முதலீடு செய்ய முடியுமா? அல்லது படுமோசமான A வகை நிலமும் கூட வாடகை தரும் அளவுக்கு சந்தை-விலை உயர்ந்தாக வேண்டுமா? அதாவது நிலச் சொத்திலான ஏகபோகம் மூலதன முதலீட்டுக்குத் தடை போடுகிறதா? இந்த ஏகபோகம் இல்லையேல் துப்புரவான முதலாளித்துவக் கண்ணோட்டத்தில் இப்படி ஒரு தடை இருக்காதா? கேள்வி கேட்கப்படுகிற விதத்தி லிருந்தே தெரிவது என்னவென்றால், எடுத்துக்காட்டாக இப்போதுள்ள சந்தை-விலையில் வாடகை ஏதும் தராமல் சராசரி இலாபம் மட்டும் தருகிற பழைய குத்தகை நிலங்களில் கூடுதல் மூலதனங்கள் முதலீடு செய்யப்பட்டால், இதேபோல் வாடகை ஏதும் தராமல் சராசரி இலாபம் மட்டும் தருகிற A நிலத்தில் மெய்யாகவே இப்போது மூலதனம் முதலீடு செய்யப்படலாமா என்ற கேள்விக்கு இது எவ்விதத்தும் விடையளிப்ப தில்லை. ஆனால் நம்முன்னுள்ள கேள்வி இதுவேதான். வாடகை ஏதும் தராத கூடுதல் மூலதன முதலீடுகள் வேண்டலை நிறைவு செய்வதில்லை என்ற உண்மைக்கு A வகையில் புதிய நிலத்தை சாகுபடிக்குக் கொண்டுவர வேண்டிய அவசியமே சான்றாகும். A வகை நிலம் வாடகை தருகிற, அதாவது உற்பத்தி- விலைக்கு மேல் போகிற அளவில் மட்டும் A நிலத்தில் கூடுதல் சாகுபடி நடைபெறுமானால் இரண்டே இரண்டு வழிகள்தான் சாத்தியமாகும். ஒன்று, பழைய குத்தகை நிலங்களில் கடைசியாக முதலீடு செய்யப்படும் கூடுதல் மூலதனங்களும் கூட உபரி-இலாபம் தரும் அளவுக்கு சந்தை- விலை உயர்ந்தாக வேண்டும். இந்த உபரி - இலாபத்தை சாகுபடியாளர் அடைந்தாலும் சரி, நிலவுடைமையாளர் அடைந்தாலும் சரி அப்படியானால் இந்த விலை உயர்வும் கடைசிக் கூடுதல் மூலதன

முதலீடுகளிலிருந்து கிடைக்கிற இந்த உபரி-இலாபமும் A வகை நிலம் வாடகை தராமல் சாகுபடி செய்யப்பட முடியாது என்ற உண்மையின் விளைவாகவே இருக்கும். ஏனென்றால் உற்பத்தி-விலையானது, சராசரி இலாபம் மட்டும் கிடைப்பதானது சாகுபடி நடைபெறுவதற்கு போதுமானதாய் இருந்தால், விலை இந்த அளவுக்கு உயர்ந்து இருக்காது, புதிய நிலங்கள் இந்த உற்பத்தி-விலையை மட்டும் தரக்கூடியவையானதும் ஏற்கெனவே போட்டிக்கு வந்திருக்கும். பழைய குத்தகை நிலங்களில் வாடகை ஏதும் தராத கூடுதல் மூலதன முதலீடுகளோடு அதேபோல் குத்தகை ஏதும் தராத A நிலத்திலான மூலதன முதலீடுகள் போட்டிக்கு வந்திருக்கும்.-அல்லது, இரண்டாவதாக, பழைய குத்தகை நிலங்களிலான கடைசி முதலீடுகள் வாடகை ஏதும் தருவதில்லை என்றாலும், A வகை நிலம் சாகுபடிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு வாடகைதரப் போதுமான அளவுக்கு சந்தை-விலை உயர்ந்திருக்கிறது. இந்நேர்வில் Aவகை நிலம் வாடகை தருவதற்கு சந்தை-விலை இடமளிக்கும்வரை அந்நிலத்தை சாகுபடி செய்ய முடியாது என்பதால்தான், வாடகை ஏதும் தராத கூடுதல் மூலதன முதலீடு சாத்தியமாயிற்று. இந்நிபந்தனை இல்லையேல், விலை இன்னும் குறைவாய் இருக்கும்போதே A நிலத்தின் சாகுபடி தொடங்கியிருக்கும்; வாடகை இல்லாமல் வழக்கமான இலாபம் தருவதற்கு உயர்ந்த சந்தை - விலை தேவைப்படுகிற பழைய குத்தகை நிலங்களிலான அந்தப்பிந்திய முதலீடுகள் நடைபெற்றிருக்க முடியாது. சந்தை-விலை உயர்ந்திருக்கும் நிலையில் இம்முதலீடுகள் சராசரி இலாபம் மட்டும் தருவது மெய்தான். சந்தை-விலை குறைவாக இருந்து, A வகை நிலம் சாகுபடிக்கு வரும் நேரத்திலிருந்து ஆளும் உற்பத்தி-விலையாகி இருக்குமானால் இம்முதலீடுகள் இந்த சராசரி இலாபத்தை கொடுத்திருக்காது, அதாவது இந்நிலைமைகளில் முதலீடுகள் நடைபெற்றே இருக்காது. இவ்வழியில், பழைய குத்தகை நிலங்களில் வாடகை ஏதும் தராத இந்த முதலீடுகளுடன் ஒப்பிடுங்கால் A நிலத்தின் வாடகை வேறுபாட்டு வாடகையாகவே அமைந்திடும். ஆனால் A வகை நிலப்பரப்புகளில் இத்தகைய வேறுபாட்டு வாடகை உருவாகிறது என்றால், இதற்கு ஒரே ஒரு காரணம்தான் உள்ளது: என்னவென்றால், A வகை நிலப்பரப்புகள் வாடகை தராவிட்டால், அதாவது இந்த வாடகைக்கு மண் வகைகளிலான நிர்ணயிக்கப் படாததும், பழைய குத்தகை நிலங்களில் கூடுதல் மூலதனங்கள் முதலீடு செய்யப்படும் சாத்தியப்பாட்டுக்குத் தடைமதிலாக அமைவதுமான இந்த வாடகைக்கு - அவசியம் இல்லா விட்டால், இந்நிலப் பரப்புகள்

சாகுபடிக்குக் கிடைப்பதே இல்லை. இருநேர்வுகளிலுமே A நிலத்தின் வாடகையானது தானிய-விலையில் ஏற்படும் உயர்வின் விளைவாக மட்டும் இருக்காது; மாறாக, சாகுபடி நடைபெறத்தான் வேண்டும் என்றால் படுமோசமான மண்வகையிலிருந்து வாடகை கிடைத்தாக வேண்டும் என்ற உண்மை, இந் நிபந்தனை நிறைவேறும் அளவுக்கு தானிய-விலைகள் உயர்வதற்குக் காரணமாகிவிடும்.

வேறுபாட்டு வாடகையின் சிறப்பியல்பு என்னவென்றால்: நிலச்சொத்தானது இங்கே உபரி-இலாபத்தை மட்டுமே கைப்பற்றுகிறது; இல்லையேல் இந்த உபரி-இலாபம் சாகுபடியாளரின் கைக்குப் போய்விடும்; பின்னர் தமது குத்தகை காலத்தில் குறிப்பிட்ட சில நிலைமைகளில் உள்ளபடியே இந்த உபரி-இலாபம் சாகுபடியாளரின் கைக்குப் போய்விடும்; பின்னவர் தமது குத்தகை காலத்தில் குறிப்பிட்ட சில நிலைமைகளில் உள்ளபடியே இந்த உபரி-இலாபத்தைச் சொந்தமாக்கிக் கொள்ளவும் கூடும். இங்கே நிலச் சொத்து சரக்கு-விலையின் ஒரு பகுதியை ஒருவரிடமிருந்து வேறு ஒருவருக்கு, முதலாளியிடமிருந்து நிலவுடைமையாளருக்கு கைமாற்றம் செய்வதற்கான காரணம் மட்டுமே ஆகிறது. ஆனால் இந்த விலைப்பகுதி நிலச்சொத்தின் தரப்பில் எம்முயற்சியும், இல்லாமல் (சொல்லப்போனால் சந்தையை ஆளும் உற்பத்தி - விலை போட்டியால் நிர்ணயிக்கப்படுவதன் விளைவாக) உதித்திடுவதாகும்; இந்த விலைப்பகுதிதான் உபரி-இலாபமாகப் பெயர்கிறது. ஆனால் நிலச் சொத்து இந்த விலைப் பகுதியையோ அதற்கு முதனிலையாகிற விலையுயர்வையோ உண்டாக்குகிற காரணமல்ல. மறுபுறம், படுமோசமான Aவகை நிலம் உற்பத்தி-விலைக்கு மேல் ஓர் உபரியை, வாடகையை உற்பத்தி செய்து கொடுக்கும் நிலை வரும்வரை-இந்நிலத்தின் சாகுபடி உற்பத்தி - விலையை தரும் என்றாலும்-அதனைச் சாகுபடி செய்ய முடியாது என்றால், நிலச் சொத்தே விலையிலான இந்த உயர்வை உண்டாக்குகிற காரணமாகும். நிலச் சொத்தே வாடகையை உண்டாக்கி இருக்கிறது. மேற்குறிப்பிட்ட இரண்டாம் நேர்வில் போன்று இப்போது Aவகை நிலத்தால் தரப்படும் வாடகை பழைய குத்தகை நிலங்களில் உற்பத்தி-விலையை மட்டும் தருகிற கடைசி கூடுதல் முதலீட்டுடன் ஒப்பிடுமிடத்து வேறுபாட்டு வாடகையாக அமைந்திட்டால், அப்போதும் இந்த உண்மையில் எந்த மாற்றமும் இல்லை. ஏனென்றால் ஆளும் சந்தை-விலையானது Aநிலத்திலிருந்து வாடகை கிடைப்பதற்கு இடமளிக்கக் கூடிய அளவுக்கு உயரும்வரை அவ்வகை நிலத்தை சாகுபடி செய்யமுடியாது என்ற உண்மைதான்

பழைய குத்தகை நிலங்களிலான கடைசி முதலீடுகள் அவற்றுக்குரிய உற்பத்தி-விலையை மட்டும் கிடைக்கச் செய்யும்போதே A நிலத்தில் வாடகை பெற்றுக் கொடுக்கிற உற்பத்தி - விலையை கிடைக்கச் செய்யும் அளவுக்கு சந்தை-விலை உயர்வதற்கான ஒரே அடிப்படையாகும். இந்த நிலம் சிறிதாவது வாடகை தர வேண்டி இருப்பதே இங்கு A நிலத்துக்கும் பழைய குத்தகை நிலங்களிலான கடைசி முதலீடுகள் அவற்றுக்குரிய உற்பத்தி-விலையை மட்டும் கிடைக்கச் செய்யும்போது A நிலத்தில் வாடகை பெற்றுக் கொடுக்கிற உற்பத்தி-விலையை கிடைக்கச் செய்யும் அளவுக்கு சந்தை-விலை உயர்வதற்கான ஒரே அடிப்படையாகும். இந்த நிலம் சிறிதாவது வாடகை தர வேண்டி இருப்பதே இங்கு A நிலத்துக்கும் பழைய குத்தகை நிலங்களிலான கடைசி முதலீடுகளுக்கும் இடைப்பட்ட வேறுபாட்டு வாடகைக்கு காரணமாகும்.

தானிய-விலை உற்பத்தி-விலையால் ஆளப்படுவதாக வைத்துக் கொண்டு, A வகை நிலம் வாடகை ஏதும் தருவதில்லை என்று பொதுவாகச் சொல்லும் போதெல்லாம், வாடகை என்ற சொல்லுக்குரிய திட்டவட்டமான அர்த்தத்தில்தான் அப்படிச் சொல்கிறோம். சாகுபடியாளர் செலுத்துகிற 'குத்தகைப் பணம்' அவருடைய தொழிலாளர்களின் இயல்பான கூலியிலிருந்தோ அவருடைய இயல்பான சராசரி இலாபத்திலிருந்தோ செய்யப்படும் பிடித்தமாக அமையுமானால், அவர் செலுத்துவது வாடகை அல்ல, அதாவது அவரது சரக்குகளின் விலையில் கூலியிலிருந்தும் இலாபத்திலிருந்தும் வேறாக உள்ள சுயேச்சையானதோர் அடக்கக் கூறு அல்ல. ஓயாமல் இது நடைமுறையில் நிகழ்வதை முன்பே குறிப்பிட்டோம். குறிப்பிட்ட ஒரு நாட்டில் விவசாயத் தொழிலாளர்களின் கூலி பொதுவாகக்கூலியின் இயல்பான சராசரி நிலைக்கும் கீழே தாழ்த்தப்பட்டிருக்கும் வரை, அதாவது கூலியிலிருந்து செய்யப்படும் ஒரு பிடித்தம், கூலியின் ஒரு பகுதிவழக்கமாய் வாடகையில் சேர்ந்து வரும்வரை, இது படுமோசமான நிலத்தைச் சாகுபடி செய்யும் சாகுபடியாளருக்கு விதிவிலக்கான நேர்வு ஆவதில்லை. படுமோசமான நிலம் சாகுபடி செய்யப்படுவதை சாத்தியமாக்கிவிடும் அதே உற்பத்தி - விலையிலேயே இந்த தாழ்ந்த கூலிஓர் அடக்கக் கூறாகச் சேர்ந்து விட்டது; ஆகவே விளைபொருளை உற்பத்தி-விலைக்கு விற்பதன் மூலம் இந்நிலத்தின் சாகுபடியாளர் வாடகை ஏதும் செலுத்த முடிவதில்லை. நிலவுடைமையாளர் தமது நிலத்தை யாரேனும் ஒரு தொழிலாளியிடமும் குத்தகைக்கு விடலாம்;

அந்தத் தொழிலாளி விற்பனை-விலையில் கூலிக்கு மேல் அதிகமாய் நாம் அடைவது முழுவதையுமோ அதில் பெரும் பகுதியையோ வாடகையாக நிலவுடைமையாளரிடம் செலுத்துவதில் மனநிறைவு கொள்ளலாம். இந்த நேர்வுகளில் எல்லாம் குத்தகைப் பணம் செலுத்தப்பட்ட போதிலும் உண்மை வாடகை செலுத்தப் படுவதில்லை. ஆனால் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறைக்கு உரித்தான உறவுகள் நிலவுமிடத்தில், வாடகையும் குத்தகைப் பணமும் ஒருங்கமைந்தாக வேண்டும். இந்த இயல்பான நிலைமையைத்தான் இங்கு நாம் பகுத்தாராய வேண்டும்.

மேலே புரிசீலித்த நேர்வுகள்-முதலாளித்துவ பொருளுற்பத்தி முறையில், வாடகை தராமலே நிலத்தில் மூலதன முதலீடுகள் நடைபெறக்கூடிய இந்நேர்வுகள் நமது பிரச்சினையின் தீர்வுக்கு உதவவில்லை என்றால், குடியேற்ற நாடுகளின் நிலைமைகளை பார்வையிடுவது கொஞ்சம் கூட பயன்படப் போவதில்லை. ஒரு குடியேற்ற நாட்டை குடியேற்ற நாடாக்குகிற அளவுகோல் - இங்கு நாம் குறிப்பிடுவது உண்மையான விவசாயக் குடியேற்ற நாடுகளை மட்டுமே - வளம் பொருந்திய பெரும் நிலப்பரப்பு இயற்கை நிலையில் இருந்து வருவது மட்டுமே அல்ல. பார்க்கப் போனால், இந்நிலம் தனதாக்கப்படாமல் இருக்கிற, தனியுடைமைக்கு உட்படாமல் இருக்கிற நிலைமைதான் அளவுகோல் ஆகும். நிலத்தைப் பொறுத்தவரை பழைய நாடுகளுக்கும் குடியேற்ற நாடுகளுக்கும் இடையிலான மிகப் பெரும் வேறுபாடு இதில்தான் பொதிந்துள்ளது: வேக்ஃஃபீல்டு [36] சரியாக குறிப்பிடுவதுபோல, அவருக்கு நீண்டகாலம் முன்பே பிஸியாகிராட்டு அருட்தந்தை மிராபோவும் ஏனைய மூத்த பொருளாதார அறிஞர்களும் கண்டுபிடித்து விட்டது போல, நிலச் சொத்து சட்டப்படியோ, உள்ளபடியோ இல்லாமல் இருப்பதே அது. குடியேறிகள் அப்படியே நிலத்தைத் தனதாக்கிக் கொள்கிறார்களா, அல்லது நிலத்தின்-விலை என்ற பெயரில் நிலத்துக்குரிய செல்லத்தக்க சட்ட உரிமைக்கான ஒரு கட்டணத்தை உள்ளபடியே அரசுக்குச் செலுத்துகிறார்களா என்பது இங்கு கருத்துக்குரியது அல்லவே அல்ல. அங்கு ஏற்கெனவே குடியமர்ந்துவிட்ட குடியேறிகள் நிலத்தின் சட்டபூர்வ உடைமையாளர்களாக இருக்கக் கூடும் என்பதும் கருத்துக்குரியது அல்ல, உண்மையில் நிலச் சொத்தானது இங்கே

(36) வேக்ஃபீல்டு, இல்கிலாந்தும் அமெரிக்காவும், இலண்டன் 1833, மேலும் பார்க்கவும் மூலதனம், முதல்பாகம், அத்தியாயம் XXV (தமிழ்ப்பதிப்பு: அத்தியாயம் XXXIII-பதிப்பாசிரியர்).

மூலதன முதலீட்டுக்கு - மூலதனம் இல்லாமல் உழைப்பை முதலீடு செய்வதற்கும் கூட - எவ்விதத்திலும் தடைமதில் ஆவதில்லை; ஏற்கெனவே நிலை பெற்றுவிட்ட குடியேறிகள் நிலத்தில் ஒரு பகுதியை கைப்பற்றிக் கொண்டிருப்பது புதிதாய் வருவோர், தமது மூலதனத்தையோ உழைப்பையோ புதிய நிலத்தில் ஈடுபடுத்திவிடாமல் தடுப்பதில்லை. ஆகவே நிலத்தில் விளைகிறவற்றின் விலைகள் மீதும் வாடகை மீதும்-நிலம் மூலதனத்தின் முதலீட்டுக்களமாய் இருப்பதை நிலச் சொத்து கட்டுப்படுத்துகிற நேர்வுகளில்-நிலச் சொத்தின் தாக்கத்தை ஆராய வேண்டிய அவசியம் ஏற்படும்போது, தடையிலா முதலாளித்துவக் குடியேற்ற நாடுகளைப் பற்றி பேசுவது பேரபத்தமாகும்; இந்த குடியேற்ற நாடுகளில் விவசாயத்தில் முதலாளித்துவ பொருளுற்பத்தி-முறையும் இல்லை அதற்கு உரித்தான நிலச் சொத்து வடிவமும் இல்லை, பார்க்கப் போனால் நிலச் சொத்து என்பதே இல்லை. எடுத்துக்காட்டாக ரிக்கார்டோ தமது நூலில் நில-வாடகை பற்றிய அத்தியாயத்தில் இந்த நாடுகளைப் பற்றி பேசுகிறார். நிலம் தன்தாக்கப்படுவது மண்ணில் விளைகிறவற்றின் மதிப்பு மீது ஏற்படுத்தும் விளைவை ஆராய விரும்புவதாக அவர் முகவுரையில் சொல்கிறார், அடுத்து உடனே குடியேற்ற நாடுகளை எடுத்துக்காட்டி விளக்கம் அளிக்கிறார். அங்கே நிலம் ஒப்பளவில் மூல நிலையில் இருப்பதாகவும், அதன் பயன்பாட்டுக்கு நிலச்சொத்தின் ஏகபோகம் தடைபோடவில்லை என்றும் வைத்துக் கொள்கிறார்.

நிலத்துக்கு சட்டபூர்வ உடைமையாளராக இருப்பது மட்டுமே நிலவுடைமையாளருக்கு நில-வாடகை எதையும் உண்டாக்கி தருவதில்லை. ஆனால் நிலம் உள்ளபடியான விவசாய நோக்கங்களுக்கு பயன்படுத்தப்பட்டாலும் சரி, கட்டடம் கட்டுதல் போன்ற வேறு உற்பத்தி நோக்கங்களுக்கு பயன்படுத்தப் பட்டாலும் சரி, தமக்கு ஓர் உபரி கிடைக்கும் விதத்தில் அதனைப் பயன்படுத்திக் கொள்வதற்கு பொருளாதார நிலைமைகள் இடமளிக்கும்வரை தமது நிலத்தை பயன்பாட்டிலிருந்து விலக்கிக் கொள்ளும் அதிகாரத்தை இந்தச் சட்ட உரிமை அவருக்குத் தருகிறது. அவர் இந்தப் பயன்பாட்டுக்களத்தின் அறுதி அளவினை அதிகப்படுத்தவோ குறைக்கவோ முடியாது; ஆனால் சந்தையில் இருத்தப்படும் நில அளவினை மாற்ற முடியும். ஆகவேதான் ஃபூரியே முன்பே குறிப்பிட்டதுபோல, நாகரிக நாடுகள் அனைத்திலும் ஒப்பளவில் குறிப்பிடத்தக்க ஒரு நிலப்பகுதி சாகுபடி செய்யப் படாமலேயே எப்போதும் இருந்துவருவது தனிச் சிறப்பான உண்மையாகும்.

ஆக, வேண்டல் காரணமாய் புதிய நிலம் சாகுபடிக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டி இருப்பதாகவும், இந்நிலம் இதுவரை சாகுபடி செய்யப்பட்டு வரும் நிலத்தைக் காட்டிலும் வளங்குறைந்து இருப்பதாகவும் வைத்துக் கொண்டால் நிலத்தின் விளைபொருளினது சந்தை-விலை இந்நிலத்திலான மூலதன முதலீட்டைக் கொண்டு சாகுபடியாளர் உற்பத்தி-விலையையும், வழக்கமான இலாபத்தையும் அடைவதற்குப் போதுமான அளவில் உயர்ந்துவிட்டதாலேயே இந்நிலத்தை அதன் உடைமையாளர் இலவசமாய்க் குத்தகைக்கு விடுவாரா? விடமாட்டாரா. மூலதன முதலீடு அவருக்கு வாடகை தந்தாக வேண்டும். குத்தகைப் பணம் செலுத்த முடியும் போதுதான் அவர்தமது நிலத்தைக் குத்தகைக்கு விடுகிறார். ஆகவே சந்தை-விலை உற்பத்தி-விலைக்கு மேல் அதாவது p+r ஆக உயர வேண்டும்; அப்போதுதான் நிலவுடைமையாளருக்கு வாடகை செலுத்த முடியும். நமது அனுமானப்படி, நிலச் சொத்து குத்தகைக்கு விடப்படும் வரை எதையும் பெற்றுத் தருவதில்லை, அதுவரை பொருளாதார நோக்கில் மதிப்பற்றதாகவே இருக்கிறது என்பதால், சந்தை-விலை உற்பத்தி-விலைக்கு மேல் சிறிதளவு உயர்வதே கீழ்த்தரமான புதிய நிலத்தைச் சந்தைக்கு கொண்டு வரப் போதுமானதாகும்.

இப்போது எழுகிற கேள்வி இதுதான்: படுமோசமான நிலம் நில-வாடகை தருகிறது, இந்நில-வாடகையை எவ்வித மண் வள வேறுபாட்டிலிருந்தும் வருவிக்க முடியாது என்ற உண்மையிலிருந்து நிலத்தின் விளைபொருளினது விலை வழக்கமான அர்த்தத்தில் ஏகபோக விலையாகத்தான், அல்லது அரசுக்குப் பதில் நிலவுடைமையாளர் விதிக்கிற வரியின் வடிவில் வாடகையை உள்ளடக்கிய விலையாகத்தான் இருந்தாக வேண்டும் என்றாகிறதா? இந்த வரிக்கென்று பிரத்தியேகமான பொருளாதார வரம்புகள் உண்டு என்பது கூறாமல் விளங்கும். பழைய குத்தகை நிலங்களிலான கூடுதல் மூலதன முதலீடுகளும், அயல்நாட்டு விவசாய விளை பொருட்களிலிருந்து எழுகிற போட்டியும் (இவற்றின் இறக்குமதிக்குத் தடையில்லை எனக் கொள்கிறோம்) நிலவுடைமையாளர்களுக்கு இடையிலான போட்டியும், முடிவில் நுகர்வாளர்களின் தேவைகளும் விலைகொடுக்க அவர்களுக்குள்ள சக்தியும் இந்த வரிக்கு வரம்பிடுகின்றன. ஆனால் இங்கு பரிசீலிக்கப்படும் பிரச்சினை இதுவல்ல. படுமோசமான நிலத்துக்காக செலுத்தப்படும் வாடகை இந்நிலத்தின் விளைபொருட்களது விலையில் சேரும்போது - நமது அனுமானப்படி இந்த விலைதான் பொதுவான சந்தை-விலையை

ஆளுகிறது - ஒரு சரக்கிற்கு விதிக்கப்படும் வரி அதன் விலையில் சேருவதைப் போலவே சேருகிறதா, அதாவது சரக்கின் மதிப்புக்கு தொடர்பில்லாத ஒரு கூறாகச் சேருகிறதா என்பதுதான் விவகாரம்.

இப்படித்தான் ஆக வேண்டும் என்பது இல்லவே இல்லை; சரக்குகளின் மதிப்புக்கும் அவற்றின் உற்பத்தி-விலைக்கும் இடையிலான வேறுபாடு இதுவரை புரிந்து கொள்ளப்படாமல் இருப்பதால்தான் இப்படி ஆவதாக வாதிடப்படுகிறது. சரக்குகளின் உற்பத்தி - விலைகள் மொத்தமாகக் கருதப்படுகையில் அவற்றின் மொத்த மதிப்பால் ஆளப்படுகின்றன என்றாலும், மற்றெல்லா நிலைமைகளும் மாறாதிருக்க பல்வேறு வகைச் சரக்குகளின் உற்பத்தி-விலைகளது அசைவியக்கம் முழுக்க முழுக்க அவற்றின் மதிப்புகளது அசைவியக்கத்தாலேயே நிர்ணயிக்கப்படுகிறது என்றாலும் ஒரு சரக்கின் உற்பத்தி-விலையும் அதன் மதிப்பும் முழுதொத்தவை அல்லவே அல்ல என்று பார்த்தோம். ஒரு சரக்கின் உற்பத்தி-விலை அதன் மதிப்புக்கு மேலாகவோ கீழாகவோ இருக்கலாம், விதிவிலக்காக மட்டுமே அது அம்மதிப்புடன் ஒருங்கமைகிறது என்று தெளிவாக்கினோம். ஆகவே, நிலத்தின் விளைபொருட்கள் அவற்றின் உற்பத்தி-விலைக்குமேல் விற்கப்படுகின்றன என்ற உண்மை அவை அவற்றின் மதிப்புக்குமேல் விற்கப்படுகின்றன என்பதற்கு எவ்விதத்தும் நிருபணமாகாது; தொழில் துறையின் உற்பத்திப் பொருட்கள் சராசரியாக அவற்றின் உற்பத்தி - விலைக்கு விற்கப்படுகின்றன என்ற உண்மை எப்படி அவை அவற்றின் மதிப்புக்கே விற்கப்படுவதற்கான நிருபணம் ஆகாதோ, அதே போலத்தான் இதுவும். விவசாய விளைபொருட்கள் அவற்றின் உற்பத்தி-விலைக்கு மேலாகவும் அவற்றின் மதிப்புக்கு கீழாகவும் விற்கப்படுவது சாத்தியமே; அதேபோது மறுபுறம் அநேகத் தொழில்துறை உற்பத்திப் பொருட்கள் அவற்றின் மதிப்புக்கு மேல் விற்கப்படுவதால்தான் உற்பத்தி-விலையைப் பெற்றுத் தருகின்றன.

ஒரு சரக்கின் உற்பத்தி-விலைக்கும் அதன் மதிப்புக்குமான உறவு அச்சரக்கை உற்பத்தி செய்யப் பயன்படும் மூலதனத்தின் மாறும் பகுதிக்கும் மாறாப் பகுதிக்கும் இடையிலான விகிதத்தால் மட்டுமே, அதாவது அதனை உற்பத்தி செய்யும் மூலதனத்தின் அங்கக இயைபால் மட்டுமே நிர்ணயிக்கப்படுகிறது. குறிப்பிட்ட உற்பத்திக்கிளையில் மூலதனத்தின் இயைபு சராசரி சமுதாய மூலதனத்தின் இயைபை விட தாழ்வாய் இருந்தால், அதாவது கூலிக்குப் பயன்படுத்தப்படும் அதன் மாறும் பகுதி பொருளாயத உழைப்பு நிலைமைகளுக்கு பயன்படுத்தப்

படும் மாறாப் பகுதியுடன் ஒப்பிடுகையில் சராசரிச் சமுதாய மூலதனத்தில் இருப்பதை விட பெரிதாய் இருந்தால், அதன் உற்பத்திப் பொருளின் மதிப்பு உற்பத்தி-விலைக்கு மேல் இருந்தாக வேண்டும். அதாவது, உழைப்பு சமதரத்தில் சுரண்டப்படுவதாகக் கொண்டால், இப்படிப்பட்ட மூலதனம் சராசரி சமுதாய மூலதனத்தில் அதற்குச் சம அளவிலான ஈவுப்பங்கைக் காட்டிலும் அதிக உயிருள்ள உழைப்பை ஈடுபடுத்துவதால், அதிக உபரி-மதிப்பும் அதிக இலாபமும் உற்பத்தி செய்கிறது. ஆகவே, அதன் உற்பத்திப் பொருளின் மதிப்பு அதன் உற்பத்தி-விலைக்கு மேல் இருக்கிறது; எப்படியென்றால் இந்த உற்பத்தி -விலையானது மூலதன மாற்றீடு, சராசரி இலாபம் இவற்றின் கூட்டுத்தொகைக்குச் சமம், சராசரி இலாபமானது இந்தச் சரக்கில் உற்பத்தியாகிற இலாபத்தை விடக்குறைவு. சராசரி சமுதாய மூலதனத்தால் உற்பத்தி செய்யப்படும் உபரி-மதிப்பு இந்த தாழ்ந்த இயைபு கொண்ட மூலதனத்தால் உற்பத்தி செய்யப்படும் உபரி-மதிப்பை விடக் குறைந்ததாகும். குறிப்பிட்ட உற்பத்திக் கிளையில் முதலீடாகிற மூலதனம் சராசரி சமுதாய மூலதனத்தைக் காட்டிலும் உயர்ந்த இயைபு கொண்டதாக இருக்கும்போது நேர்மாறான நிலை ஏற்படுகிறது, அதனால் உற்பத்தி செய்யப்படும் சரக்குகளின் மதிப்பு அவற்றின் உற்பத்தி-விலைக்குக் கீழே இருக்கிறது; பொதுவாகச் சொன்னால் மிகவும் வளர்ச்சியடைந்த தொழில்களின் உற்பத்திப் பொருட்கள் இப்படித்தான் உள்ளன.

குறிப்பிட்ட உற்பத்திக் கிளையிலுள்ள மூலதனம் சராசரிச் சமுதாய மூலதனத்தைக் காட்டிலும் தாழ்ந்த இயைபு கொண்டதாய் இருக்கிறது என்றால், முதலாவதாக, இந்தக் குறிப்பிட்ட உற்பத்திக்கிளையில் சமுதாய உழைப்பின் உற்பத்தித் திறன் சராசரிக்குக் குறைவாய் உள்ளது என்பதே இதன் பொருள். ஏனென்றால் அடையப் பெற்றுள்ள உற்பத்தித் திறனின் தர அளவானது ஒப்பு நோக்கில் மாறா-மூலதனம் மாறும்-மூலதனத்தை விஞ்சிச் செல்வதில், -மூலதனம் குறிப்பிட்டதாய் இருக்க -கூலிக்காகப் பயன்படுத்தப்படும் பகுதி ஓயாமல் குறைந்து செல்வதில் வெளிப்படுகிறது. மறுபுறம், குறிப்பிட்ட உற்பத்தி கிளையிலுள்ள மூலதனம் உயர்ந்த இயைபு கொண்டதாக இருந்தால், இது உற்பத்தித் திறன் சராசரிக்கு மேல் வளர்ச்சி அடைந்திருப்பதைக் காட்டுகிறது.

உள்ளபடியான கலைபடைப்புகள் அவற்றின் இயல்பினாலேயே நமது ஆய்வில் உட்படமாட்டா; இவற்றை ஒதுக்கிவிட்டுப் பார்த்தால், வெவ்வேறு உற்பத்தித் துறைகளுக்கும் அவற்றின் செய்நுட்ப

சிறப்பியல்புகளுக்கேற்ப வெவ்வேறு விகிதங்களில் மாறா மூலதனமும் மாறும்-மூலதனமும் தேவைப்படுகின்றன என்பதும் உயிருள்ள உழைப்பு சில உற்பத்தித் துறைகளில் கூடுதலாகவும் ஏனையவற்றில் குறைவாகவும் பங்கு வகித்தாக வேண்டும் என்பதும் கூறாமல் விளங்கும். எடுத்துக்காட்டாக எடுபொருள் உற்பத்தித் தொழிலில்-இதனை வேளாண்மையிலிருந்து தெளிவாக வேறுபடுத்திப் பார்க்க வேண்டும் - மாறா-மூலதனத்தின் கூறுகளில் ஒன்றாக கச்சாப் பொருள் கொஞ்சங்கூட இல்லாமற் போகிறது. துணைப்பொருளும் கூட அரிதாகவே முக்கியப் பங்கு வகிக்கிறது. ஆனால் மாறா-மூலதனத்தின் மறுபகுதியாகிய நிலை-மூலதனம் சுரங்கத்தொழிலில் முக்கியப் பங்கு வகிக்கிறது. இங்கே மாறும்-மூலதனத்தோடு ஒப்பிடுகையில் மாறா-மூலதனத்தில் ஒப்பீட்டு அதிகரிப்பைக் கொண்டு முன்னேற்றத்தை அளவிடலாம்.

முறையான வேளாண்மையில் மூலதன-இயைபு சமுதாய சராசரியை விடத் தாழ்ந்திருந்தால், வளர்ச்சியடைந்த பொருளுற்பத்தி நடைபெறும் நாடுகளில் வேளாண்மையானது செய்பொருளுற்பத்தித் தொழிலின் அளவுக்கு முன்னேறவில்லை என்பது இதிலிருந்து முதற்பார்வையில் தெரியவருகிறது. ஓரளவுக்கு தீர்மானகரமான பொருளாதாரக் காரணிகள் உட்பட ஏனைய எல்லாக் காரணிகளையும் ஒதுக்கிவிட்டுப் பார்த்தால், இந்த உண்மைக்கு காரண விளக்கம் ஆகக்கூடியது இதுதான்: வேதியியல், நிலத்தியல், உடற்கூறியல் ஆகியவற்றின், முக்கியமாய் வேளாண்மைக்கான அவற்றினது நடைமுறை பிரயோகத்தின் பிற்காலத்திய, ஓரளவுக்கு மிக சமீபத்திய வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இயந்திரவியல் விஞ்ஞானங்களும் முக்கியமாய் அவற்றின் நடைமுறைப் பிரயோகமும் முற்காலத்திலும் இன்னுங்கூட விரைவாகவும் வளர்ச்சியடைந்தன என்பதே. நிற்க, வேளாண்மையின் முன்னேற்றமே கூட மாறும்-மூலதனத்துடன் ஒப்பிடுகையில் மாறா-மூலதனத்தின் ஒப்பீட்டு வளர்ச்சியிலேயே ஓயாமல் வெளிப்படுகிறது என்பதில் ஐயத்துக்கிடமில்லை. இது நீண்ட நெடுங்காலமாய் தெரிந்த உண்மை[37] ஆகும். முதலாளித்துவப் பொருளுற்பத்தி கோலோச்சுகிற தனிப்பட்ட ஒரு நாட்டில்,

(37) பார்க்கவும்; தோம்பாசில் (Annales agricoles de Roville, ou Mélanges d'agriculture, d'économie rurale et de législation agricole; பாரீஸ், 1824-37.- ஆங்கிலப் பதிப்பாசிரியர். ரி.ஜோன்ஸ் செல்வ வினியோகம் குறித்தும் வரிவிதிப்பின் ஆதாரங்கள் குறித்தும் ஒரு கட்டுரை; பகுதி I வாடகை, லண்டன், 1831. பக்கம் 227 -ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

எடுத்துக்காட்டாக இங்கிலாந்தில் விவசாய மூலதனத்தின் இயைபு சமுதாய சராசரியை விட தாழ்ந்திருக்கிறதா என்பது புள்ளிவிவர ஆராச்சியால் மட்டுமே தீரக்கூடிய பிரச்சினை ஆகும்; இப்பிரச்சினையை விரிவாகப் பரிசீலிப்பது நமது நோக்கத்திற்கு தேவையற்றதாகும். எப்படியானாலும் இந்த அனுமானத்தின் பேரில்தான் விவசா விளைபொருட்களின் மதிப்பு அவற்றின் உற்பத்தி விலைக்கு மேல் இருக்க முடியும் என்று தத்துவ நோக்கில் நிரூபிக்கப்படுகிறது. வேறு விதமாகச் சொன்னால், வேளாண்மையில் குறிப்பிட்ட அளவுள்ள ஒரு மூலதனம் சராசரி சமுதாய இயைபு கொண்ட அதே அளவுள்ள மூலதனத்தைக் காட்டிலும் அதிக உபரி-மதிப்பை உற்பத்தி செய்கிறது, அதாவது அதிக உபரி-உழைப்பை இயக்கவும் ஆளவும் செய்கிறது (அத்துடன் பொதுவாக அதிக உயிருள்ள உழைப்பையும் ஈடுபடுத்துகிறது).

ஆகவே நாம் இங்கு ஆராய்ந்து கொண்டிருக்கும் வாடகை வடிவத்தைப் பொறுத்த வரை இந்த அனுமானமே போதுமானது; இந்த வாடகை உதிப்பதற்கு இது அவசியமானதோர் அனுமானம் ஆகும். இந்த அனுமானம் இனியும் ஒத்துவராது என்னும்படியான இடங்களிலெல்லாம், அதற்குரித்தான வாடகை வடிவமும் ஒத்துவராது.

ஆனால் விவசாய விளைபொருட்களின் மதிப்பில் அவற்றின் உற்பத்தி-விலைக்கு மேல் ஓர் உபரி இருப்பது மட்டுமே பல்வேறு மண் வகைகளின் வளத்திலும் ஒரே நிலத்தில் அடுத்தடுத்து செய்யப்படும் மூலதன முதலீடுகளிலுமான வேறுபாடுகளை சார்ந்திராத ஒரு நில-வாடகை இருப்பதை விளக்குவதற்கு அதனளவில் போதுமானதாய் இருக்காது-இந்த வாடகை, சுருங்கச் சொல்லின், வேறுபாட்டு வாடகையிலிருந்து கருத்தளவில், தெளிவாக வேறுபடுத்தி பார்க்கப்பட வேண்டியதாகும்; ஆகவே அதை நாம் அறுதி-வாடகை என்றழைக்கலாம். எத்தனையோ செய்பொருட்கள் அவற்றின் உற்பத்தி -விலைக்கு மேல் மதிப்பு பெற்றுள்ளன, இது அவற்றின் சிறப்பியல்பாகும்; ஆனால் சராசரி இலாபத்துக்கு மேல் ஓர் உபரியை, வாடகையாக மாற்றக் கூடிய உபரி-இலாபத்தை கொடுத்து விடுவதில்லை. மாறாக உற்பத்தி-விலை என்ற ஒன்று இருப்பதும், அதன் கருத்துருவமும் அதனால் குறிக்கப்பெறும் பொது லாப வீதமும்தான், தனிப்பட்ட சரக்குகள் அவற்றின் மதிப்புக்கு விற்கப்படுவதில்லை என்ற உண்மையை ஆதாரமாய்க் கொண்டுள்ளன. சரக்குகளின் மதிப்புகள்

சமனமாவதிலிருந்தே உற்பத்தி-விலைகள் பிறக்கின்றன. அவை இப்படிச் சமனமாகும் போது பல்வேறு உற்பத்தித் துறைகளிலும் நுகரப்பட்ட அந்தந்த மூலதன மதிப்பும் மாற்றீடு செய்யப்பட்ட பிறகு மொத்த உபரி-மதிப்பும் பங்கீடு செய்யப்படுகிறது. இந்தப்பங்கீடு தனிப்பட்ட உற்பத்தித் துறைகளில் உற்பத்தி செய்யப்பட்டு அவற்றின் சரக்குகளில் சேர்க்கப்படும் உபரி-மதிப்பின் அளவுக்கேற்ற விகிதத்தில் நடைபெறுவதற்கு பதில் முன்னீடு செய்யப்பட்ட மூலதனங்களின் அளவுக்கேற்ற விகிதத்திலேயே நடைபெறுகிறது. இந்த வழியில்தான் சராசரி இலாபமும் சராசரி இலாபத்தை தனக்கேயுரிய கூறாகக் கொண்ட உற்பத்தி-விலையும் உதிக்கின்றன. மொத்த மூலதனத்தால் உற்பத்தி செய்யப்படும் உபரி-மதிப்பின் பங்கீட்டில் இந்தச் சமனமாதலை போட்டியின் வாயிலாக நிகழச் செய்வதும், இந்தச் சமனமாதலுக்கு தடையாக வருகிற அனைத்தையும் வென்று சமாளிப்பதும் மூலதனங்களின் இடையறாப் போக்கு ஆகும். ஆகவே எந்நிலையிலும் சரக்குகளின் மதிப்புகளுக்கும் அவற்றின் உற்பத்தி-விலைகளுக்கும் இடையிலான வேறுபாட்டிலிருந்து அல்லாமல் சந்தையை ஆளும் பொது உற்பத்தி விலைக்கும் அதிலிருந்து வேறான தனிப்பட்ட உற்பத்தி -விலைக்கும் இடையிலான வேறுபாட்டிலிருந்தே எழும்படியான உபரி -இலாபங்களை மட்டும் பொறுத்துக் கொள்வது மூலதனங்களின் போக்காகும்; அதாவது இந்த உபரி-இலாபங்கள் குறிப்பிட்ட ஓர் உற்பத்தித் துறைக்குள் எழுகிறவையே தவிர இரு வேறு உற்பத்தித் துறைகளிடையே எழுகிறவை அல்ல; எனவே இவை வெவ்வேறு துறைகளின் பொது உற்பத்தி-விலைகளை, அதாவது பொது இலாப வீதத்தை பாதிப்பதில்லை; மாறாக மதிப்புகள் உற்பத்தி-விலைகளாக மாற்றமடைவதும் பொது இலாப வீதமும் இந்த உபரி-இலாபங்கள் பிறப்பதற்கு முன் தேவைகளாகும். ஆனால் முன்பே விளக்கியது போல இந்த முன்தேவைகள் பல்வேறு உற்பத்தித் துறைகளிடையிலும் மொத்தச் சமுதாய மூலதனம் ஓயாமல் மாறுகிற விகிதத்தில் பங்கீடாவதைப் பொறுத்தவை, மூலதனங்கள் ஓயாமல் நுழைவதையும் வெளியேறுவதையும் பொறுத்தவை, அவை ஒரு துறையிலிருந்து வேறொரு துறைக்கு மாறிச்செல்லக் கூடியவையாய் இருப்பதைப் பொறுத்தவை, சுருங்கச் சொல்லின் மொத்தச் சமுதாய மூலதனத்தின் சுயேச்சையான அடக்கக் கூறுகளுக்கு கிடைக்கக் கூடிய பல்வேறு முதலீட்டுக் களங்களையும் குறித்திடும் இந்தப் பல்வேறு உற்பத்தித் துறைகளிடையே மூலதனங்கள் தடங்கலின்றிப் போய்வருவதைப் பொறுத்தவை.

இது தொடர்பாக ஓர் அனுமானம் செய்துகொள்ள வேண்டியிருக்கிறது; அதாவது மூலதனங்களின் போட்டி எடுத்துக்காட்டாக சரக்குகளின் மதிப்பு அவற்றின் உற்பத்தி-விலைக்கு மேல் இருக்கிற அல்லது உற்பத்தி செய்யப்படும் உபரி-மதிப்பு சராசரி இலாபத்துக்கு மேல் இருக்கிற ஓர் உற்பத்தித் துறையில்-மதிப்பை உற்பத்தி-விலையாகக் குறைக்க விடாமலும், இவ்விதம் இந்த உற்பத்தித் துறையின் அதிகப்படியான உபரி-மதிப்பை மூலதனத்தால் சுரண்டப்படும் எல்லாத் துறைகளிடையிலும் உரிய விகிதத்தில் பங்கீடு செய்ய விடாமலும் தடுப்பதற்கு தடைகளே இல்லை, அப்படி இருந்தாலும் தற்செயலான, தற்காலிகத் தடைகள் மட்டும்தான் உள்ளன என்று வைத்துக் கொள்கிறோம். ஆனால் நேர்மாறாக நிகழ்ந்தால், மூலதனம் ஓர் அந்நியச் சக்திக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தால், அதனால் அச்சக்தியை ஓரளவுக்கே சமாளிக்க முடிந்தால், அல்லது சமாளிக்கவே முடியாமல் போனால், அச்சக்தி குறிப்பிட்ட நில துறைகளில் மூலதன முதலீட்டுக்கு வரம்பிட்டால் உபரி - மதிப்பு சராசரி இலாபமாக, பொதுவான அளவில் சமனமாவதை முழுமையாகவோ பகுதியாகவோ தவிர்க்கும்படியான நிலைமைகளில் மட்டும் மூலதன முதலீட்டுக்கு இடமளித்தால், இத்தகைய உற்பத்தித் துறைகளில் சரக்குகளின் மதிப்பு அவற்றின் உற்பத்தி-விலைக்கு மேல் இருப்பது உபரி-இலாபம் கிடைக்கச் செய்யும், இந்த உபரி-இலாபம் வாடகையாக மாற்றப்படலாம். எனவே இலாபத்தைப் பொறுத்தவரை சுயேச்சையான தாக்கப்படலாம். நிலச் சொத்தானது நிலத்தில் முதலீடாவதற்கு முயல்கிற மூலதனத்தை எதிர்நோக்கும்போது இப்படிப்பட்ட அந்நிய சக்தியும் தடைமதிலும் ஆகிறது; முதலாளியைப் பொறுத்தவரை நிலவுடைமையாளர் இப்படிப்பட்டதொரு சக்தியே ஆவார்.

இங்கு நிலச்சொத்தானது ஒரு தடைமதிலாய் இருக்கிறது; இது வரை சாகுபடி செய்யப்படாத அல்லது குத்தகைக்கு விடப்படாத நிலத்தில் அது ஒரு வரி விதிக்காமல், அதாவது வாடகை கேட்காமல் புதிய மூலதன முதலீடு எதையும் அனுமதிப்பதில்லை. புதிதாய் சாகுபடிக்கு கொண்டுவரப்பட வேண்டிய நிலம் வேறுபாட்டு வாடகையேதும் கொடுத்திடாத மண்வகையைச் சேர்ந்ததாக இருக்கலாம் என்றாலும், நிலச்சொத்துடைமை மட்டும் இல்லையென்றால் சந்தை-விலை சிறிதளவு உயரும்போதே சாகுபடி செய்யப்பட்டிருக்கலாம் (அதாவது ஆளும் சந்தை-விலையானது இந்த படுமோசமான நிலத்தின் சாகுபடியாளருக்கு அவருக்குரிய உற்பத்தி-விலையை பெற்றுத் தந்திருக்கும்) என்றாலும் நிலைமை இதுவே.

ஆனால் நிலச் சொத்து ஏற்படுத்தியுள்ள தடைமதில் காரணமாய் சந்தை - விலையானது நிலம் உற்பத்தி-விலைக்கு மேல் உபரி தரக்கூடிய, அதாவது வாடகை தரக்கூடிய நிலைக்கு சந்தை-விலை உயர்ந்தாக வேண்டும். ஆனால் விவசாய மூலதனத்தால் உற்பத்தி செய்யப்படும் சரக்குகளின் மதிப்பு நமது அனுமானப்படி அவற்றின் உற்பத்தி-விலைக்கு மேல் இருந்தால் இந்த வாடகையானது உற்பத்தி-விலைக்கு மேல் மதிப்புக்குள்ள உபரியாக அமைகிறது (ஒரு நேர்வு மட்டும் இதற்கு விலக்காகும், அடுத்து அதைப் பார்ப்போம்). வாடகையானது மதிப்புக்கும் உற்பத்தி-விலைக்கும் இடையிலான வேறுபாடு முழுவதற்கும் சமமாய் இருக்கிறதா, அல்லது அதில் ஒரு பகுதிக்கு மட்டும் சமமாய் இருக்கிறதா என்பது முழுக்க முழுக்க வழங்கலுக்கும் வேண்டலுக்கும் இடையிலான உறவையும் புதிதாய் சாகுபடிக்கு கொண்டுவரப்படும் நிலப்பரப்பையுமே பொறுத்ததாகும். வாடகையானது விவசாய விளைபொருட்களின் மதிப்பு அவற்றின் உற்பத்தி-விலைக்கு மேல் பெற்றுள்ள மிகைக்குச் சமமாய் இல்லாத வரை, இந்த உபரியில் ஒரு பகுதி எப்போதுமே பொதுச் சமன மாக்கத்திலும், உபரி-மதிப்பு அனைத்தும் பல்வேறு தனிப்பட்ட மூலதனங்களிடையிலும் விகிதப்படிப் பங்கீடாவதிலும் சேரும். வாடகையானது உற்பத்தி-விலைக்கு மேல் மதிப்பு பெற்றுள்ள மிகைக்குச் சமமானவுடனே உபரி-மதிப்பில் சராசரி இலாபத்துக்கு மேல் கூடுதலாய் இருக்கும் இந்தப் பகுதி முழுவதும் மேற்கூறிய சமனமாக்கத்திலிருந்து விலக்கிக் கொள்ளப்படும். ஆனால் இந்த அறுதி-வாடகை உற்பத்தி-விலைக்கு மேல் மதிப்பு பெற்றுள்ள மிகைமுழுவதற்கும் சமமாய் இருந்தாலும் சரி, அதில் ஒரு பகுதிக்கு மட்டும் சமமாய் இருந்தாலும் சரி, விவசாய விளைபொருட்கள் எப்போதுமே ஏகபோக விலைக்கு விற்கப்படும். அவற்றின் விலை அவற்றின் மதிப்புக்கு மேல் இருந்ததல்ல அதற்கு காரணம், அது அவற்றின் மதிப்புக்குச் சமமாக இருப்பதே, அல்லது அவற்றின் விலை அவற்றின் மதிப்பை விடக் குறைவாக, ஆனால் அவற்றின் உற்பத்தி-விலையை விடக் கூடுதலாக இருப்பதே காரணம் ஆகும். இந்த விளைபொருட்களின் ஏகபோகம் என்பது என்னவென்றால், பொது உற்பத்தி-விலைக்கு மேல் மதிப்பைப் பெற்றுள்ள தொழில்துறை உற்பத்திப் பண்டங்களைப் போல் அவற்றின் மதிப்பு உற்பத்தி-விலையாக சமனமாக்கப்படுவதில்லை. மதிப்பிலும் அதே போல் உற்பத்தி-விலையிலும் ஒரு பகுதி உள்ளபடியே நிர்ணயமானதொரு மாறாக் கூறாக அதாவது உற்பத்தியில் நுகரப்படும் மூலதனம் = k

என்பதைக் குறித்திடும் அடக்க-விலையாக இருப்பதால் வேறுபாடு மறுபகுதியில் அதாவது மாறும்-பகுதியில், உபரி-மதிப்பில் அடங்கியுள்ளது; இந்த உபரி-மதிப்பு உற்பத்தி-விலையில் p என்னும் இலாபத்திற்குச் சமம், அதாவது சமுதாய மூலதனத்தின் அடிப்படையிலும் சமுதாய மூலதனத்தின் ஈவுப்பகுதி என்ற முறையில் ஒவ்வொரு தனிப்பட்ட மூலதனத்தின் அடிப்படையிலும் கணக்கிடப்படும் மொத்த உபரி-மதிப்புக்குச் சமம். ஆனால் சரக்குகளின் மதிப்பில் இது இந்தக் குறிப்பிட்ட மூலதனம் உற்பத்தி செய்திருக்கும் உள்ளபடியான உபரி-மதிப்புக்கு சமமாகவும் இந்த மூலதனம் படைத்துள்ள சரக்கு மதிப்புகளின் அடக்கக்கூறாக அமைவதாகவும் உள்ளது. சரக்குகளின் மதிபபு அவற்றின் உற்பத்தி - விலைக்கு மேல் இருந்தால், உற்பத்தி-விலை = k+p மதிப்பு k+p+d, p+d = அதிலடங்கியுள்ள உபரி-மதிப்பு. ஆகவே மதிப்புக்கும் உற்பத்தி-விலைக்கும் இடையிலான வேறுபாடு = d; அதாவது இந்த மூலதனத்தால் உற்பத்தி செய்யப்பட்ட உபரி-மதிப்பு பொது இலாப வீதத்தால் அதற்கு ஒதுக்கித் தரப்படும் உபரி-மதிப்புக்கு மேல் பெற்றுள்ள மிகை. இதிலிருந்து தெரிய வருவது என்னவென்றால் விவசாய விளைபொருட்களின் விலை அவற்றின் மதிப்பை எட்டிப் பிடிக்காமலே அவற்றின் உற்பத்தி-விலைக்கு மேல் இருக்கலாம். மேலும், விவசாய விளைபொருட்களின் விலை அவற்றின் மதிப்பை எட்டிப்பிடிப்பதற்கு முன் குறிப்பிட்ட ஒரு கட்டம்வரை அவ்விலையில் ஒரு நிரந்தர உயர்வு ஏற்படலாம் என்று தெரிகிறது. அதே போல், நிலச்சொத்திலான ஏகபோகத்தின் விளைவாகத்தான் விவசாய விளைபொருட்களின் மதிப்பு அவற்றின் உற்பத்தி-விலைக்கு மேல் பெற்றுள்ள மிகை அவற்றின் பொதுவான சந்தை-விலையை நிர்ணயிக்கும் கூறுகளில் ஒன்றாவது சாத்தியமாகிறது என்றும் தெரிகிறது. கடைசியான இந்நேர்வில் விளைபொருளின் விலையிலான உயர்வு வாடகைக்கு காரணமல்ல, மாறாக வாடகைதான் அந்த விலையுயர்வுக்கு காரணம் என்று தெரிகிறது. படுமோசமான மண் வகையில் நிலப்பரப்பின் ஓர் அலகில் விளையும் விளைபொருளின் விலை = P+r என்றால் எல்லா வேறுபாட்டு வாடகைகளும் அதனதற்குரிய rஇன் பெருக்கற் பலனின் அளவு உயரும்; ஏனென்றால் P+r என்பது நமது அனுமானப்படி ஆளும் சந்தை-விலை ஆகிறது.

விவசாயமல்லாத சமுதாய மூலதனத்தின் சராசரி இயைபு $=85_c+15_v$ என்றும் உபரி-மதிப்பு வீதம் = 100% என்றும் இருக்குமானால், உற்பத்தி - விலை = 115 ஆகும். விவசாய மூலதனத்தின் இயைபு = $75_c+25_v$ என்றும்,

உபரி-மதிப்பு வீதம்=100% என்றும் இருக்குமானால், விவசாய விளைபொருளின் மதிப்பும் ஆளும் சந்தை-விலையும் = 125 ஆகும். விவசாயப் பண்டமும் விவசாயமல்லாத பண்டமும் ஒரே சராசரி விலையுடையதாக சமனமாக்கப்பட்டால் (இரு உற்பத்தித் துறைகளிலும் மொத்த மூலதனம் சமமென்று சுருக்கத்தின் பொருட்டு வைத்துக் கொள்கிறோம்). மொத்த உபரி-மதிப்பு = 40 ஆகும். அதாவது 200 மூலதனத்துக்கு = 20%. ஒவ்வொன்றின் உற்பத்திப் பொருளும் 120க்கு விற்கப்படும். ஆகவே சமனமாதலின் மூலம் உற்பத்தி-விலைகள் உருப்பெறுகையில், விவசாயமல்லாத பண்டங்களின் சராசரிச் சந்தை-விலைகள் அவற்றின் மதிப்புகளுக்கு மேல் இருக்கும். விவசாயப் பண்டங்களின் சராசரிச் சந்தை-விலைகள் அவற்றின் மதிப்புக்கு கீழே இருக்கும். விவசாயப் பண்டங்கள் அவற்றின் முழுமதிப்புக்கு விற்கப்படுமானால், இந்தச் சமனமாதல் நடைபெற்றால் இருப்பதைக் காட்டிலும் 5 கூடுதலாய் இருக்கும். தொழில்துறைப் பண்டங்கள் 5 குறைவாய் இருக்கும். விவசாயப் பண்டங்கள் அவற்றின் உற்பத்தி-விலைக்கு மேலமைந்த முழு உபரியும் கிடைக்கும்படி அவற்றின் முழு மதிப்புக்கு விற்கப்பட சந்தை நிலைமைகள் இடமளிக்காவிட்டால் விளைவு இரு கடைக்கோடிகளுக்கும் நடுவில் உள்ளது. தொழில் துறைப் பண்டங்களும் விவசாயப் பண்டங்களும் அவ்வவற்றின் மதிப்புக்குச் சற்று மேலே உற்பத்தி-விலைக்குச் சற்று மேலே விற்கப்படுகின்றன.

நிலச்சொத்தானது விவசாய விளைபொருளின் விலையினை அதன் உற்பத்தி-விலைக்கு மேல் உயரச் செய்யலாம் என்ற போதிலும், சந்தை-விலை எந்த அளவுக்கு உற்பத்தி-விலையைத் தாண்டி மதிப்பை நெருங்கிச் செல்கிறது என்பதும், குறிப்பிட்ட சராசரி இலாபத்திற்கு மேலதிகமாய் வேளாண்மையில் படைக்கப்படும் உபரி-மதிப்பு வாடகையாக மாற்றப்படுவதோ, உபரி-மதிப்பை சராசரி இலாபமாக மாற்றும் பொதுச் சமனமாதலில் சேருவதோ எந்த அளவுக்கு நடைபெறும் என்பதும் இதைப் பொறுத்ததல்ல மாறாக சந்தையின் பொது நிலவரத்தையே பொறுத்ததாகும். எப்படியானாலும் உற்பத்தி-விலைக்கு மேல் விலை பெற்றுள்ள மிகையிலிருந்து எழுகிற இந்த அறுதி வாடகை விவசாய உபரி-மதிப்பில் ஒரு பகுதியே தவிர வேறல்ல; இந்த உபரி-மதிப்பு வாடகையாக மாற்றப்படுகிறது, அது நிலவுடைமை யாளரால் கறக்கப்படுகிறது; உபரி-இலாபம் வாடகையாக மாறுவதிலிருந்து வேறுபாட்டு வாடகை பிறப்பது போலவே, இந்த

உபரி-மதிப்பு பொதுவான ஆளும் உற்பத்தி-விலையின்படி நிலவுடைமையாளரால் கறக்கப்படுகிறது. இந்த இரு வாடகை வடிவங்களுமே இயல்பானவை. இவற்றை நீக்கி விட்டுப்பார்த்தால் வாடகையானது உள்ளபடியான ஏகபோக விலையிலிருந்துதான் பெற முடியும்; இந்த ஏகபோக விலை உற்பத்தி-விலையினாலோ சரக்குகளின் மதிப்பினாலோ நிர்ணயிக்கப்படுவதல்ல, அது வாங்குகிறவர்களின் தேவைகளாலும் விலைகொடுக்க அவர்களுக்குள்ள ஆற்றலாலுமே நிர்ணயிக்கப்படுகிறது. அதன் பகுப்பாய்வு போட்டி பற்றிய தத்துவத்திற்கு உரியதாகும்; அங்குதான் சந்தை-விலைகளின் உள்ளபடியான இயக்கம் பரிசீலிக்கப்படுகிறது.

வேளாண்மைக்குப் பொருத்தமான நிலமனைத்தும் குத்தகைக்கு விடப்படுமானால் - முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை கோலோச்சுவதாகவும் எங்கும் இயல்பான நிலைமைகளே நிலவுவதாகவும் வைத்துக் கொள்கிறோம் - வாடகை செலுத்தாத நிலம் எதுவும் இருக்காது; ஆனால் நிலத்தில் முதலீடாகிற சில மூலதனங்கள், குறிப்பிட்ட சில மூலதனப் பகுதிகள் வாடகை ஏதும் தராமலிருக்கலாம். எப்படியென்றால், நிலம் குத்தகைக்கு விடப்பட்டவுடனே நிலச் சொத்து அவசியமான மூலதனம் முதலீடாவதற்கு எதிராக அறுதித் தடைமதிலாய் செயல்படும் நிலை ஒழிந்து போகிறது. இருப்பினும் அதற்குப் பிறகும் கூட நிலத்தில் இடப்பட்ட மூலதனத்தை நிலவுடைமையாளருக்கு மாற்றிக் கொடுப்பது குத்தகைச் சாகுபடியாளருக்கு திட்டவட்டமான தடைமதில்களை ஏற்படுத்துகிற அளவில் நிலச்சொத்து தொடர்ந்து ஒப்பீட்டு தடைமதிலாகச் செயல்படுகிறது. ஆனால் இந்நேர்வில் வாடகை அனைத்தும் வேறுபாட்டு வாடகையாக மாற்றப்படும்; இந்த வேறுபாட்டு வாடகை மண்வளத்திலான எவ்வித வேறுபாட்டாலும் நிர்ணயிக்கப்படுவதாய் இருக்காது; குறிப்பிட்ட மண் வகையில் கடைசியாகச் செய்யப்பட்ட மூலதன முதலீடுகளிலிருந்து எழும் உபரி-இலாபங்களுக்கும் படுமோசமான தரத்திலமைந்த நிலத்தின் குத்தகைக்காக செலுத்தப்படும் வாடகைக்கும் இடையிலான வேறுபாட்டினாலேயே நிர்ணயிக்கப் படும். நிலவுடைமையாளர் நிலத்தை மூலதன முதலீட்டுக்கு பயன்படுத்திக் கொள்ள அனுமதிப்பதற்காக கப்பம் வசூலிக்கிற அளவுக்கு மட்டுமே நிலச்சொத்து அறுதித் தடைமதிலாகச் செயல்படுகிறது. இந்த அனுமதி தரப்பட்டு விட்டது என்றால் இனி குறிப்பிட்ட நிலத்துண்டில் எந்த மூலதன முதலீட்டின் அளவுக்கும் எவ்வித அறுதி வரம்புகளும் அவரால் விதிக்க முடியாது. பொதுவாகச்

சொன்னால், வீடு கட்டும் போது அதற்கு அடிமனையாக இருக்கும் நிலம் மூன்றாமவரின் நிலச்சொத்தாக இருப்பது ஒரு தடைமதிலாகச் செயல்படுகிறது. ஆனால் இந்த நிலம் வீடு கட்டுவதற்காக குத்தகைக்கு விடப்பட்ட பிறகு பெரிய வீடுகட்டுவதா, சிறிய வீடு கட்டுவதா என்பது குத்தகையாளரைப் பொறுத்தது.

விவசாய மூலதனத்தில் சராசரி இயைபு சராசரிச் சமுதாய மூலதனத்தின் இயைபுக்கு சமமாய் இருந்தால், அல்லது அதை விடவும் உயர்ந்திருந்தால், அறுதி-வாடகை சற்று முன் எடுத்துரைத்த அர்த்தத்தில் மறைந்து விடும்; அதாவது வேறுபாட்டு வாடகைக்கும், அதே போல் உள்ளபடியான ஏகபோக விலையின் அடிப்படையிலான வாடகைக்கும் மாறுபட்டதாகிய இந்த அறுதி வாடகை மறைந்துவிடும். அப்போது விவசாய விளைபொருளின் மதிப்பு அதன் உற்பத்தி- விலைக்கு மேல் இருக்காது, விவசாயமல்லாத மூலதனத்தைக் காட்டிலும் விவசாய மூலதனம் கூடுதலான உழைப்பை இயங்கச் செய்யாது; ஆகவே கூடுதலான உபரி-உழைப்பை ஈடேற்றம் செய்யாது. வேளாண்மை முன்னேறிச் செல்லச் செல்ல விவசாய மூலதனத்தின் இயைபு சராசரிச் சமுதாய மூலதனத்தின் இயைபுக்கு சமமானால் இதுவே நடைபெறும்.

முதல் பார்வைக்கு இது ஒரு முரண்பாடாகத் தெரிகிறது: ஒருபுறம் விவசாய மூலதனத்தின் இயைபு உயருவதாக அதாவது அதன் மாறும் கூறுடன் ஒப்பிடுகையில் மாறாக் கூறு அதிகரிப்பதாக அனுமானம் செய்து கொள்கிறோம், மறுபுறம் விவசாய விளைபொருளின் விலை உயர்ந்து முன்பு சாகுபடி செய்யப்பட்டதைக் காட்டிலும் மோசமானதாகிய புதிய நிலம் வாடகை கொடுப்பதற்கு வழி செய்வதாக அனுமானம் செய்து கொள்கிறோம். இங்கு இவ்வாடகையானது மதிப்புக்கும் உற்பத்தி - விலைக்கும் மேலே சந்தை - விலை பெற்றுள்ள மிகையிலிருந்து மட்டுமே பிறக்கக்கூடும்; சுருங்கச் சொல்லின் உற்பத்திப் பொருளின் ஏகபோக விலையிலிருந்து மட்டுமே பெறப்படும் வாடகை ஆகும்.

இங்கு ஓர் வேறுபாடு எழுவதை குறிப்பிட்டாக வேண்டும்.

முதலாவதாக, தொழில்நுட்ப வழியில் கூறுவதானால் ஒரே இயைபு கொண்டிருக்கும் மூலதனங்கள், அதாவது இயந்திர சாதனத்துடனும் கச்சாப் பொருட்களுடனும் ஒப்பிடுகையில் சமதையான உழைப்பளவுகளை இயங்கச் செய்கிற மூலதனங்கள் வெவ்வேறு இயைபுகள் கொண்டவையாக இருக்கலாம் என்பதை

இலாப வீதம் உருவாகிற விதம் குறித்து பரிசீலிக்கையில் குறிப்பிட்டாக வேண்டும். கச்சாப் பொருட்களோ இயந்திரச் சாதனங்களோ ஒரு சந்தர்ப்பத்தில் இருப்பதை விட வேறொரு சந்தர்ப்பத்தில் அதிக விலையுள்ளவையாக இருக்கலாம். ஒரே அளவு உழைப்பை இயங்கச் செய்வதற்கு (நமது அனுமானப்படி ஒரே அளவு கச்சாப் பொருட்களை செய்பொருள் ஆக்குவதற்கு இது அவசியமாகும்) ஒரு சந்தர்ப்பத்தில் முன்னீடு செய்வதைக் காட்டிலும் வேறொரு சந்தர்ப்பத்தில் அதிக மூலதனத்தை முன்னீடு செய்ய வேண்டி இருக்கும். ஏனென்றால் எடுத்துக்காட்டாக 100 மூலதனத்தைக் கொண்டு ஈடு செய்யப்பட வேண்டிய கச்சாப் பொருளுக்காகும் செலவு ஒரு சந்தர்ப்பத்தில் 40 ஆகவும் வேறொரு சந்தர்ப்பத்தில் 20 ஆகவும் இருக்குமானால் அதே அளவு உழைப்பை இயங்கச் செய்ய முடியாது. ஆனால் அதிக விலையுள்ள கச்சாப் பொருட்களின் விலை குறைந்த விலையுள்ளவற்றின் நிலைக்குச் சரிந்த உடனே இந்த இரு மூலதனங்களும் ஒரே தொழில்நுட்ப இயைபு கொண்டவையாக இருக்கும் என்பது அப்போதே தெளிவாகிவிடும். இந் நிலையில் உயிருள்ள உழைப்புக்கும் இந்த மூலதனத்தால் ஈடுபடுத்தப்படும் உழைப்புச் சாதனங்களின் திரள் மற்றும் தன்மைக்கும் இடையிலான செய்நுட்ப விகிதங்களில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை என்றாலும் மாறா-மூலதனத்துக்கும் மாறும்-மூலதனத்துக்கும் இடையிலான மதிப்பு விகிதம் மாறாமல் இருந்திருக்கும். மறுபுறம், தாழ்ந்த அங்கக இயைபு கொண்ட ஒரு மூலதனம் அதன் மாறாப் பகுதிகளின் மதிப்பில் ஏற்படும் உயர்வில் இருந்து மட்டுமே, அதன் மதிப்பு இயைபின் கோணத்திலிருந்து மட்டுமே உயர்ந்த அங்கக இயைபு கொண்ட மூலதனத்தோடு ஒரே தரத்திலானதாகத் தோற்றமளிக்கக் கூடும். ஒரு மூலதனம் $=60_c+40_v$ எனக் கொள்வோம்; இந்த மூலதனம் உயிருள்ள உழைப்புச் சக்தியுடன் ஒப்பிடுகையில் இயந்திர சாதனத்தையும் கச்சாப் பொருளையும் அதிகமாய் ஈடுபடுத்துகின்றன; வேறொரு மூலதனம் $=40c+60v$ ஏனென்றால் அது உயிருள்ள உழைப்பை அதிகமாகவும் (60%) இயந்திர சாதனத்தைக் குறைவாகவும் (எடுத்துக்காட்டாக 10%), உழைப்புச் சக்தியுடன் ஒப்பிடுகையில் கச்சாப் பொருளை இன்னும் குறைவாகவும் இன்னும் மலிவாகவும் (எடுத்துக்காட்டாக 30%) ஈடுபடுத்துகிறது, அப்போது கச்சாப் பொருட்கள், துணைப் பொருட்களின் மதிப்பு 30 இலிருந்து 80ஆக உயர்ந்தால், அதுவே மூலதன இயைபை சமனமாக்கக் கூடும்; இதனால் இரண்டாவது மூலதனத்தில் இயந்திரங்களிலான 10க்கு கச்சாப் பொருள் 80 ஆகவும் உழைப்புச் சக்தி

60 ஆகவும் இருக்கும்; அதாவது $90_C + 60_V$ சதவீதக் கணக்கில் இதுவும் $=60_C+40_V$; தொழில்நுட்ப இயைபில் எந்த மாற்றமும் நடைபெற வில்லை. வேறுவிதமாகச் சொன்னால் சமமான அங்கக இயைபு கொண்ட மூலதனங்கள் வெவ்வேறு மதிப்பு-இயைபு கொண்டவையாக இருக்கலாம்; மதிப்பு-இயைபின் முழுதொத்தச் சதவீதங்களையுடைய மூலதனங்கள் அங்கக இயைபின் மாறுபடும் படித்தரங்களை வெளிப்படுத்தலாம்; இவ்விதம் உழைப்பின் சமுதாய உற்பத்தித் திறனின் வளர்ச்சியில் வெவ்வேறு கட்டங்களைத் தெரிவிக்கலாம். அப்போது, விவசாய மூலதனம் மதிப்பு-இயைபின் பொதுவான தரத்தில் இருக்கக் கூடும் என்ற நிலைமை மட்டுமே உழைப்பின் சமுதாய உற்பத்தித் திறனும் அதில் அதேபோல் உயர் வளர்ச்சி கண்டிருப்பதை நிருபிப்பதாகாது. விவசாய மூலதனத்தின் உற்பத்திப் பொருள்-இதுவும் அதன் உற்பத்திச் சாதனங்களின் ஒரு பகுதியாக அமைகிறது-விலை கூடி இருப்பதைத்தான் அல்லது உரம் போன்ற துணைப் பொருட்களை - வழக்கமாய் அண்மையில் கிடைத்து வந்த இவற்றை - இப்போது தொலைவிலிருந்து ஏற்றி வந்தாக வேண்டும் என்பதையும் இது போன்றவற்றையும்தான் அது காட்டும்.

ஆனால் இது ஒருபுறம் இருக்க வேளாண்மையின் விசேஷத் தன்மையையும் கணக்கில் எடுத்துக் கொண்டாக வேண்டும்.

உழைப்பை மிச்சப்படுத்தும் இயந்திர சாதனங்கள், இரசாயன துணைப் பொருள்கள் முதலானவை வேளாண்மையில் இன்னும் விரிவான அளவில் பயன்படுத்தப்படுவதாக, இதனால் மாறா-மூலதனம் ஈடுபடுத்தப்படும் உழைப்புச் சக்தியுடன் ஒப்பிடுகையில் மதிப்பில் மட்டும் அல்லாமல் அளவிலும் கூட தொழில்நுட்ப வழியில் அதிகரிப்பதாகவும் வைத்துக் கொள்வோம். ஆனால் வேளாண்மையில் (சுரங்கத்தொழிலில் போலவே) உழைப்பின் சமுதாய உற்பத்தித் திறனை மட்டும், பரிசீலித்தால் போதாது, உழைப்பின் இயற்கை நிலைமைகளைப் பொறுத்ததான அதன் இயற்கை உற்பத்தித் திறனையும் பரிசீலித்தாக வேண்டும். வேளாண்மையில் சமுதாய உற்பத்தித் திறன் அதிகரிப்பது இயற்கைத்திறனில் ஏற்படும் குறையை ஈடு செய்வதற்கு மட்டும் போதுமானதாய் இருக்கலாம், அல்லது அதற்கும் கூட போதுமானதாய் இல்லாமற் போகலாம்-இந்த இழப்பீடு குறுகிய காலத்துக்கு மட்டுமே பயன்பட முடியும்; இதன் விளைவாக என்ன நடக்கிறது என்றால், அங்கே தொழில்நுட்ப வளர்ச்சி ஏற்பட்ட போதிலும், உற்பத்திப் பொருள் கொஞ்சம் கூட மலிவாவதில்லை,

விலை இன்னுமதிகமாய் உயர்வது மட்டுமே தவிர்க்கப்படுகிறது. தானிய விலைகள் உயரும்போதே உற்பத்திப் பொருட்களின் அறுதித் திரள் குறைவதும், அதேபோது ஒப்பீட்டு உபரி-உற்பத்தி அதிகரிப்பதும் கூட சாத்தியமே; அதாவது முக்கியமாய் இயந்திர சாதனமாகவோ பிராணிகளாகவோ அமைந்து தேய்மானத்தை மட்டும் மாற்றீடு செய்து கொள்ள வேண்டிய நிலையில் இருக்கும் மாறா-மூலதனம் ஒப்பளவில் அதிகரிக்கலாம்; அதேபோது கூலியாகச் செலவிடப்பட்டு எப்போதுமே உற்பத்திப் பொருளிலிருந்து முழு நிறைவாக மாற்றீடு செய்யப்பட வேண்டிய நிலையில் இருக்கும் மாறும் மூலதனம் குறைந்து போகலாம்.

மேலும், வேளாண்மையில் முன்னேற்றம் ஏற்படுவதை ஒட்டி வளங்குறைந்த நிலத்தைச் சாகுபடி செய்வதற்கும் அதிலிருந்து வாடகை எடுப்பதற்கும் சந்தை-விலை சராசரிக்குமேல் சற்று உயருவதே போதுமானதாய் இருக்கும் என்பதும் சாத்தியமே. தொழில்நுட்ப உதவி அவ்வளவாய் வளர்ச்சி அடைந்திராவிட்டால், சந்தை விலை இன்னுமதிகமாய் உயர்ந்தால்தான் இது சாத்தியப்படும்.

எடுத்துக்காட்டாக, பெருவீதக் கால்நடை வளர்ப்பில், கால்நடைகளாலேயே குறிக்கப் பெறும் மாறா-மூலதனத்துடன் ஒப்பிடுங்கால் ஈடுபடுத்தப்படும் உழைப்புச் சக்தி மொத்தத்தில் மிகக் குறைவாகவே இருப்பது என்னும் உண்மை, வேளாண்மைக்குப் புறத்தே உள்ள சராசரி சமுதாய மூலதனத்தைக் காட்டிலும் விவசாய மூலதனம் சதவீதக் கணக்கில் அதிக உழைப்புச் சக்தியை இயங்கச் செய்கிறது என்ற வாதத்தை மறுதலிப்பதாகக் கருதப்படலாம். ஆனால் நாகரிக நாடுகள் அனைத்துக்கும் முக்கிய வாழ்வுச் சாதனங்களாய் அமைந்திடும் முதன்மையான தாவர உணவுப் பொருட்களை விவசாய மூலதனத்தின் எந்தப் பகுதி உற்பத்தி செய்கிறதோ அந்தப் பகுதியையே வாடகை பற்றிய பகுப்பாய்வுக்குத் தீர்மானகரமானதாய் நாம் எடுத்துக் கொண்டிருப்பது இங்கு நோக்கற்பாலது. கால்நடை வளர்ப்பிலும், முக்கிய வாழ்வுச் சாதனங்களை, எடுத்துக்காட்டாகத் தானியத்தை விளைவிப்பதற்குப் பயன்படுத்தப்படாத நிலத்தில் முதலீடு செய்யப்படும் மூலதனம் அனைத்தின் பொது சராசரியிலும் விலை நிர்ணயிப்பு அறவே வேறு விதமானது என்பதை ஏற்கெனவே ஆதம்ஸ்மித் நிருபித்துக் காட்டி விட்டார் - அவரின் சிறப்புகளில் இதுவும் ஒன்று. ஒரு நிலம் கால்நடை-வளர்ப்புக்கான மேய்ச்சல் வெளியாகப் பயன்படுத்தப்படுகிறது என்றும், ஆனால் இதே நிலத்தை குறிப்பிட்ட தரம் வாய்ந்த தானிய வயல்களாக எளிதில் மாற்றியிருக்க

முடியும் என்றும் வைத்துக் கொண்டால், இந்நிலம் அதற்கு நிகரான தரம் வாய்ந்த சாகுபடி நிலம் தரக் கூடிய அதே வாடகையை தருமளவுக்கு இந்நிலத்தின் விளைபொருளினது விலை உயர்ந்தாக வேண்டும் என்ற முறையில்தான் இங்கு விலை நிர்ணயிக்கப்படுகிறது. ஆகவே தானிய வயல்களின் வாடகை இங்கு கால்நடையின் விலையை நிர்ணயிக்கும் காரணிகளில் ஒன்றாகிறது. ஆக, கால்நடையின் விலை இவ்வழியில் வாடகையால், நிலச் சொத்தின் பொருளாதாரத் தெரிவிப்பால், சுருங்கச் சொல்லின் நிலச்சொத்தினால் செயற்கையாக உயர்த்தப்படுகிறது என்று ராம்சே கூறுவது சரிதான்.*

'சாகுபடி விரிவடைந்து விட்டதால், கசாப்புக்கடை இறைச்சிக்கான வேண்டலை நிறைவு செய்வதற்கு தரிசு வெளிக்காடுகள் போதுமானவை அல்ல என்ற நிலை ஏற்படுகிறது. சாகுபடி நிலங்களில் ஒரு கணிசப்பகுதி கால்நடைகளை வளர்ப்பதற்கும் கொழுக்க வைப்பதற்கும் பயன்படுத்திக் கொள்ளப்பட வேண்டும்; ஆகவே இந்தக் கால்நடைகளின் விலையானது அவற்றைக் கவனித்துக் கொள்ள தேவையான உழைப்புக்குக் கூலி கொடுப்பதற்கு மட்டுமல்லாமல், இந்த நிலம் உழுது பயிரிடப்பட்டிருக்குமானால் அதிலிருந்து நிலவுடைமையாளர் அடைந்திருக்கக் கூடிய வாடகையையும், சாகுபடியாளர் அமைந்திருக்கக் கூடிய இலாபத்தையும் கொடுப் பதற்கும் கூட போதுமானதாய் இருந்தாக வேண்டும். சாகுபடியே நடந்திராத பொட்டல் காடுகளில் வளர்க்கப்படும் கால்நடைகளும் திருத்தி பண்படுத்திய நிலத்தில் வளர்க்கப்படும் கால்நடைகளும் ஒரே சந்தைக்குக் கொண்டு வரப்படும் போதும் கூட அவற்றின் எடை அல்லது சிறப்புக்கேற்ற விகிதத்தில் ஒரே விலைக்கு விற்கப்படுகின்றன. அந்த பொட்டல் வெளிகளின் உடைமையாளர்கள் இதனால் ஆதாயம் அடைகிறார், தமது நிலத்தின் வாடகையை அவற்றில் வளர்க்கப்படும் கால்நடைகளின் விலைக்கேற்ப உயர்த்தி விடுகிறார்கள்.' (ஆதாம் ஸ்மித், புத்தகம் I அத்தியாயம் XI பகுதி 1). இங்கேயேயும் கூட தானிய - வாடகைக்கு மாறாமல் வேறுபாட்டு வாடகை படுமோசமான நிலத்துக்குச் சாதகமாய் உள்ளது.

முதலில் பார்க்கும்போது ஏகபோக விலை மட்டுமே வாடகைக்குக் காரணம் என்பது போல் தெரியச் செய்திடும் சில புலப்பாடுகளுக்கும்

---

(*) ஜா.ராம்சே, செல்வ விநியோகம் பற்றிய கட்டுரை, எடின்பரோ, 1836. பக்கம் 278-79.-ஆங்கிலப் பதிப்பாசிரியர்.)

அறுதி வாடகை விளக்கம் தருகிறது. ஆதாம் ஸ்மித் காட்டும் உதாரணத்தை தொடர்ந்து அப்படியே வைத்துக் கொண்டு, நார்வேயில் காடு ஒன்றின் உடைமையாளராய் இருப்பவரை எடுத்துக் கொள்வோம்; இந்தக் காடு மானுடச் செயற்பாட்டைச் சாராமல் இருப்பதாக அதாவது வனச் சாகுபடியின் விளைவாக அது ஏற்படவில்லை என்று வைத்துக் கொள்வோம். இங்கிலாந்திலிருந்து வரும் வேண்டலின் விளைவாகவோ என்னவோ அங்கு மரம் வெட்டுவிக்கிற முதலாளியிட மிருந்து இந்தக் காட்டின் உடைமையாளர் வாடகை பெறுவரானால், அல்லது இந்த உடைமையாளர் தாமே முதலாளியாகச் செயல்பட்டு மரம் வெட்டுவிப்பாரானால், முதலீடு செய்யப்பட்ட மூலதனத்தின் மீதான இலாபத்தை அன்னியில், அதிக அளவிலோ குறைந்த அளவிலோ, துண்டு மரத்தின் வடிவில் அவருக்கு வாடகை கிடைக்கும். இது முழுக்க முழுக்க இயற்கையின் விளை பொருளாகிய ஒன்றிலிருந்து பெறப்படும் ஏகபோகக் கட்டணமாகவே தோன்றுகிறது. என்றாலும் உண்மையில் மூலதனமானது இங்கே அநேகமாய் பிரத்தியேகமாகவே உழைப்புக்காகச் செலவிடும் மாறும் மூலதனமாக அமைந்திடுகிறது; எனவே அதே அளவுள்ள வேறொரு மூலதனம் இயங்கச் செய்வதைவிட அதிகமான உபரி-உழைப்பை இயங்கச் செய்கிறது. இவ்வாறு துண்டு மரத்தின் மதிப்பில் இன்னும் உயர்ந்த அங்கக இயைபு கொண்ட மூலதனத்தின் உற்பத்திப் பொருளினது மதிப்பில் அடங்கியிருப்பதை விட ஊதியமிலா உழைப்பு அல்லது உபரி-மதிப்பின் மிகையளவு கூடுதலாய் அடங்கியுள்ளது. ஆகவே இந்தத் துண்டு மரத்திலிருந்து சராசரி இலாபம் பெறப்படும் போதே காட்டின் உடைமையாளருக்கு வாடகையின் வடிவில் கணிச அளவிலான உபரி போய்ச் சேருகிறது. மறுதலையாக மரம் வெட்டுவதை எளிதில் விரிவாக்கலாம், அதாவது இந்த உற்பத்தியைத் துரிதமாய் அதிகமாக்கலாம் என்பதால், துண்டு மரத்தின் விலை அதன் மதிப்புக்குச் சமமாக வேண்டுமானால் வேண்டல் மிகக் கணிசமாய் உயர்ந்தாக வேண்டும் எனக் கொள்ளலாம்; அப்போது தான் ஊதியமிலா உழைப்பின் உபரியனைத்தும் (சராசரி இலாபமாக முதலாளிக்குப் போய்ச் சேரும் பகுதிக்கு மேலதிகமாய் இருப்பது) வாடகையின் வடிவில் காட்டின் உடைமையாளருக்குப் போய்ச் சேரும்.

புதிதாய்ச் சாகுபடிக்குக் கொண்டு வரப்படும் நிலம் அதற்கு முன் சாகுபடி செய்யப்பட்டு வந்த படுமோசமான நிலத்தை விடவும் கீழ்த்தரமானது என்று அனுமானம் செய்துள்ளோம். அது மேம்பட்டதாய் இருந்தால் வேறுபாட்டு வாடகை கொடுக்கிறது.

ஆனால் வாடகை வேறுபாட்டு வாடகையாக காணப்படாத நேர்வைத்தான் இங்கு நாம் பரிசீலித்துக் கொண்டு இருக்கிறோம். இரண்டே இரண்டு நேர்வுகள்தான் சாத்தியம்: புதிதாய் சாகுபடி செய்யப்படும் நிலம் முன்னர் சாகுபடி செய்யப்பட்ட நிலத்தை விட தரங்குறைந்ததாய் இருப்பது, அல்லது அந்நிலத்தைப் போல் அதே தரம் வாய்ந்ததாய் இருப்பது, தரங்குறைந்தது என்றால், முன்பே பரிசீலித்தாகி விட்டது. அதே தரம் வாய்ந்தது என்றால் இந்நேர்வை இனிமேல்தான் பரிசீலிக்க வேண்டும்.

வேறுபாட்டு வாடகை பற்றிய நமது பகுப்பாய்வில் முன்பே தெளிவாக்கப்பட்டிருப்பது போல, வேளாண்மை முன்னேறிச் செல்கையில் மோசமான நிலத்தைப் போலவே அதே தரம் வாய்ந்த நிலமும், ஏன் இன்னும் அதிகத் தரம் வாய்ந்த நிலமும் கூட சாகுபடிக்குக் கொண்டு வரப்படலாம்.

முதலாவதாக, ஏனென்றால் வேறுபாட்டு வாடகையில் (பொதுவாக எந்த வாடகையிலும் என்று கூடச் சொல்லலாம், எப்படியென்றால் வேறுபாட்டு வாடகை அல்லாத வாடகை தொடர்பாகவும், கூட ஒருபுறம் நிலத்தின் மண்வளம் மறுபுறம் அதன் இடவாகும் ஆளும் சந்தை-விலையில் அந்நிலத்தை சாகுபடி செய்வதற்கும் இவ்விதம் இலாபமும் வாடகையும் பெறுவதற்கும் இடமளிக்கின்றனவா என்ற கேள்வி எப்போதுமே எழத்தான் செய்கிறது) இரு நிலைமைகள் ஒரு நேரம் ஒன்றையொன்று நீக்கம் செய்தும், ஒரு நேரம் ஒன்றையொன்று விஞ்சியும் எதிரெதிர் திசையில் செயல்படுகின்றன. சந்தை- விலையிலான உயர்வு-சாகுபடியின் அடக்க-விலை குறையாதிருக்கு மானால், அதாவது தொழில் நுட்ப முன்னேற்றம் கூடுதல் சாகுபடிக்கு புதிய ஊக்கம் அளித்திடாதிருக்குமானால்- இடவாகின் காரணத்தால் முன்பு சாகுபடியிலிருந்து விலக்கப்பட்டிருந்த அதிக வளமுள்ள மண் வகையை சாகுபடிக்குக் கொண்டு வரக்கூடும். அல்லது, வளங்குறைந்த நிலத்தைப் பொறுத்தவரை இந்த விலையுயர்வு இடவாகின் சாதகத்தை உரிய அளவுக்கு உயரச் செய்து அதைக் கொண்டு வளக் குறைவை ஈடுசெய்யக்கூடும். அல்லது, சந்தை-விலையில் எவ்வித உயர்வும் இல்லாமலே இடவாகானது தொடர்புச் சாதனங்களில் ஏற்படும் மேம்பாட்டின் வாயிலாக அதிக வளமுள்ள மண் வகைகளைப் போட்டிக்குக் கொண்டு வரக்கூடும், வட அமெரிக்காவில் பிரைரி புல்வெளிகள் நிறைந்த மாநிலங்களில் இது பெரு வீதத்தில் நிகழக்

காணலாம். குடியேற்ற நாடுகளில் நிகழும் அளவுக்கு இல்லையென்றாலும் பழைய நாகரிக நாடுகளிலும் இதுவே ஓயாமல் நிகழுகிறது. குடியேற்ற நாடுகளில் இடவாகுதான் தீர்மானகரமானது என்று வேக்ஃபீல்டு சரியாகவே குறிப்பிடுகிறார்* ஆக, தொகுத்துச் சொல்வதானால், இடவாகு மண்வளம் ஆகியவற்றின் முரண்பட்ட தாக்கங்களும், இடவாகு என்னும் காரணியின் மாறும் தன்மையும் ஓயாமல் ஒன்றையொன்று நேர் செய்து சமனமாதலை நோக்கி படிப்படியான மாற்றங்களை நிரந்தரமாகவே கடந்து செல்கிறது; வளமுள்ள நிலம் அதிக வளமுள்ள நிலம் அல்லது மோசமான நிலத்தின் பரப்புகளை சாகுபடியிலிருக்கும் பழைய நிலப் பரப்புகளோடு புதிய போட்டியில் இறக்கிவிடுகிறது.

இரண்டாவது, இயற்கை விஞ்ஞானமும் வேளாண் பொருளாதார இயலும் வளர வளர, மண்ணின் கூறுகளை உடனடியாகப் பயன்படும் படி செய்யக் கூடிய சாதனங்களில் மாற்றம் ஏற்படுவதால் நிலத்தின் மண் வளத்திலேயே மாற்றம் ஏற்படுகிறது. இப்படித்தான் பிரான்சிலும் இங்கிலாந்தின் கிழக்கு மாவட்டங்களிலும் முன்பெல்லாம் கீழ்த்தரமானவையாகக் கருதப்பட்டு வந்த மணற்பாங்கான நிலம் சமீபகாலத்தில் முதலிடத்துக்கு உயர்ந்துவிட்டன. (பார்க்கவும்: பாஸி** மறுபுறம், இரசாயன இயைபுக்காக அல்லாமல் சாகுபடிக்கு இடைஞ்சலாய் இருக்கும் குறிப்பிட்ட சில இயந்திரவியல் தடைகளுக்காகவும் பௌதிக தடைகளுக்காகவுமே கீழ்த்தரமானதாய்க் கருதப்பட்டு வந்த நிலம் இந்தத் தடைகளை சமாளிப்பதற்கான வழிவகைகள் கண்டுபிடிக்கப்பட்டவுடனே நல்ல நிலமாக மாறிவிடுகிறது.

மூன்றாவதாக, புராதன நாகரிக நாடுகள் அனைத்திலும், வரலாற்று வழியிலும் மரபு வழியிலும் வந்த பழைய நிலைமைகள்-எடுத்துக்காட்டாக அரச நிலங்கள், சமுதாய நிலங்கள் போன்றவற்றின் வடிவில்-முழுக்க முழுக்க அடாவடித்தனமாய் பெரும் நிலப்பரப்புகளை சாகுபடி செய்ய விடாமல் தரிசாகவே வைத்துள்ளன. இந்த நிலப்பரப்புகள் கொஞ்சம் கொஞ்சமாகவே சாகுபடிக்கு மீண்டு

(*) (எ.வேக்ஃபீல்டு) இங்கிலாந்தும் அமெரிக்காவும் இரு நாடுகளின் சமூக, அரசியல் நிலையின் ஒப்பு நோக்கு முதல்பாகம், லண்டன், 1833, பக்கம் 214 - 15.- ஆங்கிலப் பதிப்பாசிரியர்.)

(**) ஹி,பாஸி, Rente desfl. In: Dictionnaire de l'economic Politique, இரண்டாம் பாகம், பாரிஸ், 1854 பக்கம் 515.- ஆங்கிலப் பதிப்பாசிரியர்.)

வருகின்றன. எந்தத் தொடர் வரிசைக்கு இவை சாகுபடிக்குக் கொண்டு வரப்படுகின்றன என்பது முற்றிலும் வெளி நிலைமைகளைப் பொறுத்ததே தவிர அவற்றின் தரத்தையோ இடவாகையோ பொறுத்ததல்ல. மூடியடைப்புச் சட்டங்களைக் கொண்டு அடுத்தடுத்து தனிச் சொத்தாக மாற்றப்பட்டு உழுது பயிரிடப்பட்ட ஆங்கிலேயச் சமுதாய நிலங்களின் வரலாறு இதைத்தான் காட்டுகிறது: லீபிக் போன்ற ஒரு நவீன வேளாண் வேதியியல் அறிஞர் இந்தத் தொடர் வரிசையை வகுத்துக் கொடுத்தார் என்பதும் இரசாயனப் பண்புகளின் காரணத்தால் சில நிலங்கள் சாகுபடிக்கேற்றவை என்று குறிக்கப்பட்டு ஏனையவை விலக்கப்பட்டன என்பதுமான விசித்திரக் கருத்தைக் காட்டிலும் நகைப்புக்கிடமானது எதுவும் இருக்காது. இங்கு தீர்மானகரமானது 'திருடனைத் தோற்றுவிக்கும் சந்தர்ப்பம்தான்: பெரு நிலவுடைமை யாளர்கள் தமது நிலப்பறிப்பை நியாயப்படுத்துவதற்கு ஓரளவு நம்பும்படியாக கையாண்ட சட்டவாத சாமர்த்தியங்களே.

*நான்காவதாக,* மக்கள் தொகைப் பெருக்கமும் மூலதனப் பெருக்கமும் குறிப்பிட்ட நேரத்தில் அடைந்திருக்கும் நிலையானது சாகுபடியில் விரிவாக்கத்துக்கு சில வரம்புகளை-நெகிழ்ச்சியுள்ள வரம்புகளையே என்றாலும்-விதித்திடுகிறது என்ற உண்மையையும், சந்தை விலையின் மீது தற்காலிகத் தாக்கம் செலுத்தும் தற்செயல் நிகழ்வுகளின் - சாதகமான அல்லது சாதகமற்ற பருவகாலங்கள் வரிசைத் தொடராக வருவது போன்றவற்றின்-விளைவுகளையும் ஒதுக்கிவிட்டுப் பார்த்தால், வேளாண்மையின் பரப்பு வகை விரிவாக்கமானது ஒரு நாட்டில் இருக்கும் மூலதனச் சந்தையின் ஒட்டு மொத்த நிலைமைகளையும் தொழில்-வர்த்தக நிலவரத்தையும் பொறுத்த தாகும். தொழில்-வர்த்தகம் நலிந்திருக்கும் காலங்களில், சாகுபடி செய்யப்படாத நிலம் குத்தகைச் சாகுபடியாளருக்கு - அவர் வாடகை செலுத்தினாலும் செலுத்தாவிட்டாலும் - சராசரி இலாபம் கிடைக்கச் செய்யலாம் என்னும் சாத்தியப்பாடு கூடுதல் மூலதனத்தை வேளாண்மையில் முதலீடு செய்வதற்குப் போதுமானதாய் இருக்காது. மூலதன மிகைப்பாடு நிலவும் ஏனைய காலங்களில், இயல்பான நிலைமைகள் நிலவிக் கொண்டிருக்கும் வரை, சந்தை-விலையில் உயர்வு ஏற்படாமலேயே கூட மூலதனம் வேளாண்மையில் வந்து பாயும். இதுவரை சாகுபடி செய்யப்பட்டதை விட சிறந்த நிலம் போட்டியிலிருந்து விலகி இருக்குமானால், உண்மையில் இடவாகு பாதகமாக இருப்பதோ அந்நிலத்தைப் பயன்படுத்திக் கொள்வதற்கு இருந்துவரும் தடைகளை இன்னமும் தகர்க்க முடியாமல் இருப்பதோ

ஏதேனுமொரு தற்செயலான நிகழ்வேதான் அதற்குக் காரணமாய் இருக்கும். ஆகவே, கடைசியாக சாகுபடி செய்யப்பட்ட மண் வகைகளுக்கு சரிநிகரான மண் வகைகளை மட்டும் நாம் பரிசீலித்தால் போதும். ஆனால் புதிய நிலத்துக்கும் கடைசியாகச் சாகுபடி செய்யப்பட்ட நிலத்துக்கும் இடையில் எப்போதுமே ஒரு வேறுபாடு இருக்கத்தான் செய்கிறது; அதாவது நிலத்தை திருத்தி பண்படுத்துவதற்கான செலவில் மாறுபாடு உண்டு, இது ஏற்கப்படுமா ஏற்கபடாதா என்பது சந்தை-விலைகளின் நிலவரத்தையும் கடன்-செலாவணி நிலைமைகளையும் பொறுத்ததாகும். இந்த நிலம் உள்ளபடியே போட்டியில் இறங்கி விடுமானால், ஏனைய நிலைமைகள் மாறாதிருக்க, சந்தை-விலை உடனே மறுபடியும் குறைந்து அதன் முந்தைய நிலையை அடையும்; இவ்விதம் புதிய நிலமானது அதற்கிணையான பழைய நிலம் தருகிற அதே வாடகையை தரும். அது வாடகை ஏதும் தருவதில்லை என்னும் கருதுகோளை எடுத்துரைப்பவர்கள் அதை நிரூபிப்பதற்காகச் செய்வது இதுதான்; எதை நிரூபிக்க வேண்டுமோ அதையே அனுமானம் செய்து கொள்கிறார்கள்; அதாவது அந்த கடைசி நிலம் வாடகை ஏதும் தரவில்லை எனக்கொள்கிறார்கள். கடைசியாகக் கட்டப்பட்ட வீடுகள் வாடகைக்கு விடப்பட்டாலும் கூட கட்டடங்கள் மீதான சாமானிய வட்டி தவிர வாடகை ஏதும் தருவதில்லை என்று நிரூபிப்பதைப் போன்றதாகும் இது. ஆனால் உண்மை என்னவென்றால் இந்த வீடுகள் வீட்டு வாடகைப் பெற்றுத் தருவதற்கு முன்பே கூட நில-வாடகை தருகின்றன; ஏனென்றால் அநேக சந்தர்ப்பங்களில் அவை நீண்ட காலத்துக்குக் காலியாய் உள்ளன. குறிப்பிட்ட ஒரு நிலத் துண்டில் அடுத்தடுத்து செய்யப்படும் மூலதன முதலீடுகள் உரிய விகிதத்தில் ஓர் உபரியையும்,எனவே முதலாவது முதலீடு பெற்றுத் தந்த அதே வாடகையையும் பெற்றுத்தரக்கூடுமல்லவா, அதேபோல் கடைசியாகச் சாகுபடி செய்ப்பட்ட வயல்களின் தரத்துக்குச் சரிநிகரான வயல்கள் அதே செலவில் அதே உற்பத்தியை விளைவித்துத் தரக்கூடும். இல்லையேல் ஒரே தரம் வாய்ந்த வயல்கள் எப்படி அடுத்தடுத்து சாகுபடிக்குக் கொண்டுவரப் படுகின்றன என்பது விளங்கவே விளங்காத புதிராகிவிடும்; அவையனைத்தையும் ஒரு சேர எடுத்துக் கொண்டாக வேண்டும், அல்லது அவற்றில் ஒன்றைக் கூட எடுத்துக் கொள்ளக்கூடாது, ஏனென்றால் ஒன்றை எடுத்துக் கொண்டால் அதைத்தொடர்ந்து மற்றவை யாவும் போட்டிக்கு வந்துவிடும் எனத் தோன்றுகிறது. எப்போதுமே நிலவுடைமையாளர் வாடகை

பெறுவதற்கு அதாவது ஒன்றையும் தராமல் ஒன்றைப் பெறுவதற்கு தயாராய் இருக்கிறார். ஆனால் மூலதனம் அதன் விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ள வேண்டுமானால் குறிப்பிட்ட சில நிலைமைகள் அவசியமாகின்றன. ஆகவே நிலத் துண்டுகளிடையிலான போட்டாப் போட்டி புதிய வயல்களில் ஏனைய மூலதனங்களோடு போட்டி யிடுவதற்கு மூலதனம் இருப்பதைப் பொறுத்ததே தவிர, இந்த நிலத்துண்டுகள் போட்டியிட வேண்டுமென நிலவுடைமையாளர் ஆசைப்படுவதைப் பொறுத்ததல்ல.

முறையான விவசாய வாடகை என்பது சிறு அளவுக்கு மட்டுமே வெறும் ஏகபோக விலையாக இருக்க முடியும்; அதேபோல் உற்பத்திப் பொருளின் மதிப்பு அதன் உற்பத்தி-விலைக்கு மேல் எவ்வளவுதான் உபரியாக இருந்தாலும் இங்கு இயல்பான நிலைமைகளில் அறுதி வாடகை சிறியதாக மட்டுமே இருக்க முடியும். ஆகவே அறுதி வாடகையின் சாரம் இதுதான்; உபரி-மதிப்பு வீதம் அல்லது உழைப்புச் சுரண்டலின் கடுமை குறிப்பிட்டதாய் இருக்க, பல்வேறு உற்பத்தித் துறைகளிலும் சம அளவிலான மூலதனங்கள் அவற்றின் சராசரி இயைபிலான வேறுபாட்டுக்கேற்ப வெவ்வேறு உபரி-மதிப்பளவு களை உற்பத்தி செய்கின்றன. தொழில் துறையில் இந்த வெவ்வேறு உபரி-மதிப்புகள் சமனமாகி சராசரி இலாபமாக மாறி, சமுதாய மூலதனத்தின் ஈவுப் பகுதிகளாய் இருக்கும் தனிப்பட்ட மூலதனங்களிடையே ஒரே சீராகப் பிரிகின்றன. வேளாண்மைக் காகவோ கச்சாப் பொருட்கள் எடுப்பதற்காகவோ பொருளுற்பத்திக்கு நிலம் தேவைப்படும் போதெல்லாம் நிலச் சொத்தானது நிலத்தில் முதலீடாகிற மூலதனங்களிடையே இந்தச் சமனமாதல் நிகழ்வதற்கு தடை-மதிலாகிறது. சமமாதலில் சேர்ந்து பொது இலாப வீதத்துக்கு வழி செய்ய வேண்டிய உபரி-மதிப்பில் ஒரு பகுதியை அது கைப்பற்றிக் கொள்கிறது. அப்போது வாடகையானது சரக்குகளது மதிப்பின், குறிப்பாகச் சொன்னால் உபரி-மதிப்பின் பகுதியாகிறது; அது தொழிலாளர்களிடமிருந்து அதனைக் கறந்த முதலாளி வர்க்கத்தின் மடியில் விழுவதற்கு பதில், முதலாளிகளிடமிருந்து அதனை கறக்கும் நிலவுடைமையாளர்களிடம் போய்ச் சேருகிறது. இது தொடர்பாக, விவசாய மூலதனம் அதற்குச் சமமான அளவுள்ள விவசாயமல்லாத மூலதனப் பகுதியைக்காட்டிலும் அதிக உழைப்பை இயங்கச்செய்கிறது என்று அனுமானம் செய்து கொள்கிறோம். எந்த அளவுக்கு இந்த இடைவெளி உள்ளது என்பது அல்லது இடைவெளி என்ற ஒன்றே இருக்கிறதா என்பது தொழில் துறையுடன் ஒப்பிடுகையில்

வேளாண்மைத் துறை அமைந்துள்ள ஒப்பிட்டு வளர்ச்சியைப் பொறுத்ததாகும். மாறா-மூலதனத்துடன் ஒப்பிடுகையில் மாறும்-மூலதனம் குறைந்து செல்லும் விகிதமானது விவசாய மூலதனத்தில் இருப்பதை விடவும் தொழில்துறை மூலதனத்தில் பெரிதாய் இல்லாவிட்டால், வேளாண்மை முன்னேற முன்னேற இந்த வேறுபாடு குறைந்தாக வேண்டும் என்பதே இயல்பானதாகும்.

இந்த அறுதி வாடகை முறையான எடுபொருள் தொழிலில் இன்னும் கூட முக்கியப் பங்கு வகிக்கிறது. அங்கே மாறா-மூலதனத்தின் ஒரு கூறாகிய கச்சாப் பொருள் இம்மியளவும் இல்லாமற் போகிறது; இயந்திர சாதனமாகவும் பிறவகை நிலை-மூலதனமாகவும் அமைந்துள்ள மூலதனத்தை மிகக் கணிசமாய்க் கொண்டிருக்கும் கிளைகளை விதிவிலக்காகக் கொண்டால், மொத்தத்தில் மிகத் தாழ்ந்த மூலதன இயைபு இத் தொழிலில் நிலவக் காணலாம். வாடகையானது ஏகபோக விலையினால் மட்டுமே விளைவதாகக் தோன்றுகிற இங்கேதான், சரக்குகள் அவற்றின் மதிப்புக்கு விற்கப்படுவதற்கு, அல்லது ஒரு சரக்கின் உபரி-மதிப்பு அதன் உற்பத்தி-விலைக்கு மேல் பெற்றுள்ள மிகையனைத்துக்கும் வாடகை சமமாவதற்கு அசாதாரண சாதகம் வாய்ந்த சந்தை நிலைமைகள் தேவைப்படுகின்றன. எடுத்துக்காட்டாக மீன் வளங்கள், கற்குவாரிகள், இயற்கைக் காடுகள் முதலானவற்றிலிருந்து பெறப்படும் வாடகைக்கு இது பொருந்தும்[38].

(38) ரிக்கார்டோ இதனை மிகவும் மேம்போக்கான முறையில் பரிசீலிக்கிறார். கோட்பாடுகள் நூலில் அத்தியாயம் IIஇன் தொடக்கத்திலேயே நார்வேயில் வன வாடகை என்பது தொடர்பாக ஆதாம் ஸ்மித்தைக் குறிவைத்து அவர் எழுதியிருக்கும் பகுதியைப் பார்க்கவும்.

## அத்தியாயம் XLVI

## கட்டடமனை வாடகை. சுரங்கத் தொழிலில் வாடகை. நிலத்தின் விலை

வாடகை என்ற ஒன்று இருக்குமிடத்தெல்லாம் எப்போதுமே வேறுபாட்டு வாடகை தலையெடுக்கிறது. அது வேளாண்மையில் எவ்விதிகளால் ஆளப்படுகிறதோ அதே விதிகளால்தான் எப்போதும் ஆளப்படுகிறது. இயற்கைச் சக்திகளைப் பயன்படுத்திக் கொள்ளும் தொழில்துறை முதலாளி எங்கெல்லாம் அவற்றைத் தமது ஏகபோகமாக்கிக் கொள்வதன் மூலம் உபரி-இலாபம் அடைய முடிகிறதோ-அவை அருவிகளானாலும்சரி, வளமான சுரங்கங்களானாலும் சரி, மீன்வளம் கொண்ட நீர்நிலைகளானாலும் சரி, சாதகமான இடவாகு உடைய கட்டமனைகளானாலும் சரி-அங்கெல்லாம் இந்தப் புவிக்கோளின் ஒரு பகுதி மீது தமக்குள்ள உடைமையுரிமையின் பயனாய் இந்த இயற்கைபொருட்களின் உடைமையாளராய் அமைகிறவர் இந்த உபரி-இலாபத்தை செயல்படும் முதலாளியிடமிருந்து வாடகையின் வடிவில் கைப்பற்றிக் கொள்கிறார். கட்டடம் கட்டுவதற்கான நிலத்தைப் பொறுத்தவரை, அதன் வாடகையின் அடிப்படை-விவசாயமல்லாத நிலமனைத்திற்குமான வாடகையின் அடிப்படையைப் போலவே - எப்படி முறையான விவசாய வாடகையால் ஆளபடுகிறது என்பதை (ஆதாம் ஸ்மித் விவரமாகச் சொல்லியிருக்கிறார் புத்தகம் I, அத்தியாயம் XI, 2,3) இந்த வாடகையை வேறுபடுத்திக் காட்டும் தனியியல்புகள் என்னவென்றால், முதலாவதாக, வேறுபாட்டு வாடகையின் மீது இங்குதான் இடவாகு முதன்மையான தாக்கம் செலுத்துகிறது (எடுத்துக்காட்டாக, திராட்சை தோட்டங்கள் தொடர்பாகவும் பெருநகரங்களில் கட்டடமனைகள் தொடர்பாகவும் இது முக்கியமானது); இரண்டாவதாக, நிலவுடைமையாளர் கண்ணுக்குத் தெரியும்படியாகவும், முழுமையாகவும் செயல்முனைப்பற்றவராய் இருந்து விடுகிறார்; அவரது ஒரே செயற்பாடு (முக்கியமாய்ச் சுரங்கங்களில்) சமுதாய வளர்ச்சியின் முன்னேற்றத்தை சுரண்டுவது தான்; ஆனால் இந்த முன்னேற்றத்துக்கு அவர் எவ்விதப் பங்கும் செலுத்துவதில்லை, வருவது வரட்டுமென்று எதையும் பணயம் வைப்பதுமில்லை,

அதாவது தொழில்துறை முதலாளி செய்வதுபோல் செய்வதில்லை; கடைசியாக, அனேக சந்தர்ப்பங்களில் இங்கு ஏகபோக விலைகள் கோலோச்சக் காணலாம்; குறிப்பாகச் சொன்னால், வறுமையை மிகவும் வெட்கக் கேடான முறையில் பயன்படுத்தி சுரண்டுவதன் மூலம் இது நடைபெறுகிறது (ஏனென்றால் போட்டோசி சுரங்கங்கள் ஸ்பெயினுக்குப் பயன்பட்டதைக் காட்டிலும் வறுமையானது வீட்டு வாடகைக்கு அதிகம் ஆதாயமானதாகும்[39]), தொழில்துறை மூலதனத்தோடு கைகோத்து ஒன்றுசேரும் போது நிலச்சொத்துக்கு வாய்த்திடும் பிரமாண்ட - சக்தி கூலிப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு எதிராகச் செயல்பட்டு அவர்களுக்கு உறை விடமாய் இருக்கும் புவிக்கோளை விட்டே பெரும்பாலும் அவர்களை வெளியேற்றி விடுவதற்கான சாதனமாகப் பயன்படுகிறது[40] இவ்வாறு பூமியில் வாழும் உரிமைக்காவே சமுதாயத்தின் ஒரு பிரிவு இன்னொரு பிரிவிடமிருந்து கப்பம் வசூலிக்கிறது. ஏனென்றால் பொதுவாக நிலச் சொத்து என்பது புவிக்கோளையும், பூமியின் அடிபாகத்தையும் காற்றையும், உயிர்வாழ்வையும் உயிர்வளர்ச்சியையும் பயன்படுத்திக் கொள்ள நிலவுடைமையாளருக்கு சிறப்புரிமை வழங்குவதாகும். மக்கள்தொகை பெருகிச்செல்கிறது. கூடவே வசிப்பிடத்துக்கான வேண்டலும் அதிகரித்துச் செல்கிறது என்பது மட்டுமல்ல. நிலத்தில் இடப்பட்டதாகவோ எல்லா தொழில்துறைக் கட்டங்களையும் இருப்புப் பாதைகளையும் பண்டக சாலைகளையும் ஆலைக் கட்டடங்களையும் ரேவுத் துறைகளையும் போல் நிலத்தில் வேர் கொண்டு ஆதாரப் பட்டதாகவோ இருக்கும் நிலை-மூலதனத்தின் வளர்ச்சி கட்டட வாடகையை கட்டாயம் உயரச் செய்கிறது. வீட்டில் முதலீடு செய்யப்பட்ட மூலதனத்தின் மீதான வட்டியாகவும் கடன் தீர் நிதியாகவும் (Amartisation) அமைகிற வீட்டு வாடகையையும் வெறும் நிலத்துக்கான வாடகையையும் குழப்பிக் கொள்வது இங்கு சாத்தியமில்லை. அதிலும் குறிப்பாக இங்கிலாந்தில் இருப்பது போல் நிலவுடைமையாளரும் கட்டட ஊக-வணிகரும் வெவ்வேறு ஆட்களாய் இருக்கும்போது இந்தக் குழப்பம் சாத்தியமேயில்லை;

---

(39) லயிங் நாட்டின் இன்னல்: இதன் காரணங்களும் பரிகாரங்களும், லண்டன், 1844.-ஆங்கிலப் பதிப்பாசிரியர். நியூமன் அரசியல் பொருளாதாரம் பற்றிய விரிவுரைகள், லண்டன், 1857.- ஆங்கிலப் பதிப்பாசிரியர்).

(40) குரௌலிங்க்டன் வேலைநிறுத்தம். எங்கெல்ஸ், இங்கிலாந்தில் தொழிலாளி வர்க்கத்தின் நிலைமை, பக்கம் 307.)

கேரியைப்போல் நல்லெண்ணம் நிறைந்த ஒருவருக்கும் கூட சாத்தியமில்லை. இங்கு இரு கூறுகளை பரிசீலித்தாக வேண்டும்; ஒருபுறம், மறுவுற்பத்தி அல்லது எடுபொருள் உற்பத்திக்காக பூமியை பயன்படுத்திக் கொள்வது; மறுபுறம், பொருளுற்பத்தி அனைத்திலும் மானுடச் செயற்பாடு அனைத்திலும் ஒரு கூறாகத் தேவைப்படுகிற இடப்பரப்பு. நிலச்சொத்தானது இரு வழிகளிலும் கப்பம் கேட்கிறது. கட்டட மனைகளுக்கான வேண்டல் இடப்பரப்பாகவும் அடித்தளமாகவும் பயன்படும் நிலத்தின் மதிப்பை உயரச் செய்கிறது; அதேபோது இதனால் கட்டடப் பொருளாகப் பயன்படும் கூறுகளுக்கான வேண்டல் அதிகரிக்கிறது[41]. துரிதமாய் வளரும் பெரு நகரங்களில், அதிலும் குறிப்பாக கட்டுமானப் பணி ஒரு தொழிலாக நடத்தப்படும் இடங்களில், எடுத்துக் காட்டாக லண்டனில் உள்ளபடியே கட்டட ஊக வாணிபத்தின் இலக்காய் அமைவது நில - வாடகைதானே தவிர வீடு அல்ல என்பதை இரண்டாம் பாகம், அத்தியாயம் XII இலேயே விளக்கிவிட்டோம்; லண்டனில் பெரும் கட்டட ஊக வணிகரான எட்வர்டு காப்ஸ் 1857ஆம் வருடத்திய வங்கிச் சட்டங்கள் பற்றிய தேர்வுக் குழுவின் முன் அளித்த சாட்சியத்தை இதற்குச் சான்றாய்க் குறிப்பிட்டோம். அங்கு அவர் கூறியதாவது, எண் 5435: 'உலகில் முன்னுக்கு வர ஆசைபடுகிற ஒருவர் நேர்மையாகத் தொழில் செய்து முன்னுக்கு வருவோமென்று எதிர்பார்ப்பதில்லை எனக் கருதுகிறேன்... கூடவே அவர் ஊக வாணிபக் கட்டடத் தொழிலும் செய்வது அவசியம். அதையும்கூட சிறுஅளவில் செய்யக் கூடாது... கட்டடங்கட்டுகிறவர் கட்டடங்களிலிருந்து அதிகமாய் இலாபம் பெறுவதில்லை, நில-வாடகைகள் உயருவதுதான் அவர் அடையும் இலாபத்தில் பெரும்பகுதிக்கு காரணமாகிறது. அவர் ஒரு துண்டு நிலத்தை வாங்குவதாகவும் அதற்கு ஆண்டொன்றுக்கு £300 தர ஒப்புக் கொள்வதாகவும் வைத்துக் கொள்வோம். அதனை கவனமாய் ஒழுங்கு செய்து, அதன் மீது குறிப்பிட்ட சிலவகை கட்டடங்களை கட்டுவதன் மூலம், அதிலிருந்து ஆண்டொன்றுக்கு £400 அல்லது £450 பெறுவதில் அவர் வெற்றி காணலாம்; அவரது இலாபம் என்பது கட்டங்களின் இலாபமாக இருப்பதைக் காட்டிலும் ஆண்டொன்றுக்கு நிலவாடகையில் ஏற்படும் £100 அல்லது £150 அதிகரிப்பாகவே

(41) 'லண்டனில் சாலைபோடும் பணி ஸ்காட்லாந்து கடற்கரையில் சில மொட்டைப் பாறைகளின் உடைமையாளர்களாய் இருப்பவர்கள் முன்னெப்போதும் எதற்கும் பயன்பட்டிராத நிலத்திலிருந்து வாடகை பெறுவதற்கு வழிசெய்துள்ளது.' ஆதாம் ஸ்மித் (நாடுகளின் செல்வம்: இதன் இயல்பும் காரணங்களும் பற்றிய ஆய்வு), புத்தகம் I, அத்தியாயம் XI, 2.)

இருக்கும்... பல சந்தர்ப்பங்களில் அவர் கட்டடங்களின் இலாபத்தை ஏறெடுத்துப் பார்ப்பதும் அரிதே. இடையில் ஒன்றை மறந்து விடக்கூடாது; அதாவது பொதுவாக 99 ஆண்டு கால முடிவில் நிலமும் அதிலுள்ள எல்லா கட்டடங்களும் அதன் நில-வாடகையும் இடைக்காலத்தில் இந்த வாடகை இருமடங்கோ மும்மடங்கோ அதிகமாகிப் போவது வழக்கம் - கட்டட ஊக வணிகர் அல்லது அவருடைய சட்டபூர்வ வாரிசிடமிருந்து கடைசியாக மூல நிலவுடைமையாளராய் இருந்தவரிடம் திரும்பிச் செல்கிறது.

விவசாய வாடகை நிர்ணயிக்கப்படும் அதே வழியில்தான் முறையான சுரங்கத் தொழில் வாடகையும் நிர்ணயிக்கப்படுகிறது. 'சில சுரங்கங்கள் இருக்கின்றன, இவற்றின் விளைபொருள் தொழிலாளர்களுக்கு ஊதியமளிப்பதற்கும், சாதாரண இலாபத்தோடு கூடவே சுரங்க வேலையில் ஈடுபடுத்தப்படும் மூலதனத்தை மாற்றீடு செய்வதற்கும் போதும் போதாமல் இருக்கிறது. வேலையை தன்பொறுப்பில் எடுத்துக் கொள்கிறவருக்கு இந்தச் சுரங்கங்கள் சிறிது இலாபம் கிடைக்கச் செய்கின்றனவே தவிர, நிலவுடைமையாளருக்கு வாடகை கிடைக்கச் செய்வதில்லை. இவற்றை நிலவுடைமையாளர் தவிர வேறு எவரும் பயன்படுத்தி நன்மை பெற முடியாது; நிலவுடைமையாளரே வேலையை பொறுப்பில் எடுத்துக் கொள்கிறவராகவும் இருப்பதால் தாம் அதில் ஈடுபடுத்துகிற மூலதனத்தின் சாதாரண இலாபத்தை பெறுகிறார். ஸ்காட்லாந்திலுள்ள பல நிலக்கரிச் சுரங்கங்கள் இவ்விதமாகத்தான் நடத்தப்படுகின்றன; இவற்றை வேறு எவ்விதத்திலும் நடத்த, முடியாது. நிலவுடைமையாளர் வேறு எவரையும் வாடகை ஏதும் தராமல் அவற்றை இயக்குவதற்கு அனுமதிக்கமாட்டார்.' (ஆதாம் ஸ்மித், புத்தகம் I, அத்தியாயம் XI,2).

உற்பத்திப் பொருளுக்கு அல்லது நிலத்துக்கு சுயேச்சையான ஏகபோக விலை இருப்பதிலிருந்து வாடகை பிறக்கிறதா அல்லது வாடகை என்ற ஒன்று இருப்பதால் உற்பத்திப் பொருட்கள் ஏகபோக விலைக்கு விற்கப்படுகின்றனவா என்பதை வேறுபடுத்திப் பார்த்தாக வேண்டும். பொதுவாகச் சொன்னால் இங்கு ஏகபோக விலை என்பது உற்பத்திப் பொருட்களின் பொது உற்பத்தி-விலையாலும் மதிப்பாலும் நிர்ணயிக்கப்படும் விலையைச் சாராமல் வாங்குகிறவர்களின் வாங்கும் விருப்பத்தாலும் விலை கொடுக்கும் திறனாலும் மட்டுமே நிர்ணயிக்கப் படும் விலையைக் குறிப்பதாகும். ஒரு திராட்சைத் தோட்டம் விதிவிலக்கான தரம்வாய்ந்த அசாதாரண உற்பத்தி செய்வதாகவும்,

ஆனால் ஒப்பளவில் மிகக் குறைவாகவே அதனை உற்பத்தி செய்ய முடியும் என்றும் வைத்துக் கொண்டால் அந்தத் தோட்டம் ஏகபோக விலையை பெற்றுத் தருகிறது. திராட்சை சாகுபடியாளருக்கு இந்த ஏகபோக விலையிலிருந்து கணிசமாய் உபரி-இலாபம் கிட்டும்; உற்பத்திப் பொருளின் மதிப்புக்கு மேல் இந்த ஏகபோக விலை பெற்றுள்ள மிகையானது தரம் நாடும் மதுக்குடியரின் வசதி வாய்ப்பினாலும் விருப்பத் தேர்வினாலும் மட்டுமே நிர்ணயிக்கப் படும். ஏகபோக விலையிலிருந்து வந்து சேரும் இந்த உபரி-இலாபம் வாடகையாக மாற்றமடைந்து இவ்வடிவில் நிலவுடைமையாளரின் மடியில்போய் விழுகிறது; அவரே தனிச்சிறப்பான தன்மைகள் வாய்க்கப் பெற்ற இந்தப் பூபாகத்திற்கு உரிமை படைத்தவராகையால் இவ்விதம் அவர் கைக்குப் போய்ச் சேருகிறது. ஆக இங்கே ஏகபோக விலை வாடகையை உண்டாக்குகிறது. மறுபுறம் தானியம் அதன் உற்பத்தி-விலைக்கு மேல் விற்கப்படுவதோடு தரிசு நிலத்தில் வாடகை செலுத்தாமல் மூலதன முதலீடு செய்வதற்கு நிலச்சொத்து எழுப்பிடும் தடைமதில் காரணமாய் அதன் மதிப்புக்கு மேலும் விற்கப்படுமானால் வாடகை ஏகபோக விலையை உண்டாக்கும். சில பல ஆட்கள் புவிக்கோள் மீது உடைமையுரிமை படைத்தவர்களாய் இருப்பதால் தான், அவர்கள் சமுதாயத்தின் உபரி-உழைப்பில் ஒரு பகுதியை கப்பமாகச் தமக்குச் சொந்தமாக்கிக் கொள்ளவும் அதோடு பொருளுற்பத்தி வளர வளர மேன்மேலும் அதிக அளவுக்கு இவ்விதம் சொந்தமாக்கிக் கொள்ளவும் முடிகிறது என்ற உண்மையானது, மூலதனமாக்கப்பட்ட வாடகை, துல்லியமாகச் சொன்னால் மூலதன மாக்கப்பட்ட இந்தக் கப்பம் நிலத்தின் விலையாக காட்சியளிக்கிறது என்னும் உண்மையால், மூடி மறைக்கப்படுகிறது; ஆகவே வேறெந்த வாணிகப் பண்டத்தையும் போலவே நிலமும் விற்கக் கூடியதாய் இருப்பதாலும் மூடி மறைக்கப்படுகிறது. நிலத்தை வாங்குகிறவர் வாடகைக்கான தமது உரிமை இலவசமாய்ப் பெறப்படுவதாக முதலாளிக்குரிய உழைப்போ இடர் தாங்கும் பொறுப்போ தொழில்முனைவு மனப்பாங்கோ இல்லாமல் பெறப்படுவதாக எண்ணுவதில்லை, அதற்குச் சமதையாக விலைகொடுத்து வாங்கி யிருப்பதாகவே நினைக்கிறார். வாடகை என்பது நிலத்தையும் வாடகைக்கான உரிமையையும் வாங்குவதற்கு அவர் விலையாக கொடுத்திருக்கும் மூலதனத்தின் மீதான வட்டியாகவே அவருக்குத் தோன்றுகிறது என்று முன்பே பார்த்தோம். இதே போலத்தான் அடிமையுடைமையாளர் தாம் விலைகொடுத்து வாங்கியிருக்கும்

நீக்ரோவை தமது உடைமையாகக் கருதுகிறார்; அடிமையுடைமை அமைப்பே அந்த நீக்ரோ மீது அவருக்கு உடைமையுரிமை வழங்குகிறது என்பதனால் அல்ல, அவர் வேறெந்தச் சரக்கையும் போலவே விற்றல் - வாங்கலின் மூலம் அந்த நீக்ரோவையும் அடைந்திருக்கிறார் என்பதால்தான் அவர் இவ்விதம் கருதுகிறார். ஆனால் உடைமையுரிமைகளைப் பொறுத்தவரை அது விற்பனையினால் கைமாற்றம் செய்யப்படுவதுதானே தவிர உண்டாக்கப்படுவது அல்ல. உடைமையுரிமை என்ற ஒன்று ஏற்கெனவே இருந்தால்தான் அதை விற்கமுடியும்; இந்த உரிமையை உண்டாக்க தனியொரு விற்பனையாலும் முடியாது. ஓயாமல் திரும்பத் திரும்ப நடைபெறும் தொடர்வரிசையான விற்பனைகளாலும் முடியாது. முதலில் அதனை உண்டாக்கியது உற்பத்தி உறவுகளே ஆகும். இந்த உறவுகள் தம்மை தோலுரித்துக் கொள்ள வேண்டிய கட்டத்தை அடைந்ததுமே, உடைமையுரிமையின் பொருள்வகை ஆதாரம்- பொருளாதார வகையிலும் வரலாற்று வகையிலும் நியாயமானதும், சமூக வாழ்க்கையை தோற்றுவிக்கும் நிகழ்முறையிலிருந்து பிறப்பதுமாகிய இந்த ஆதாரம் மறைந்தொழிகிறது, கூடவே அதன் அடிப்படையிலான கொடுக்கல் வாங்கல்களெல்லாம் மறைந்தொழிகின்றன. இன்னு முயர்ந்த சமூகப் பொருளாதார அமைப்பின் கண்ணோட்டத்தில், புவிக்கோள் குறிப்பிட்ட தனியாட்களின் தனியுடைமையாக இருப்பதென்பது ஒரு மனிதன் பிறிதொரு மனிதனின் தனியுடைமை யாக இருப்பது போலவே பேரபத்தமாய் தெரியும். ஒரு முழுச் சமுதாயத்தை, ஒரு தேசத்தை எடுத்துக் கொண்டாலும் கூட ஏன், ஒருங்கே இருந்து வரும் எல்லாச் சமுதாயங்களையும் ஒரு சேர எடுத்துக் கொண்டாலும் கூட, இந்தப் புவிக்கோளம் இவற்றின் கைப்பொறுப்பில் அனுபோகத்தில் வருவதுதானே தவிர, இவற்றுக்கே சொந்தமான உடைமை அல்ல. நல்ல குடும்பத் தலைவர்களைப் போல் இவை அடுத்துவரும் தலைமுறைகளிடம் இந்தப் புவிக்கோளை இன்னுங்கூட மேம்பட்ட நிலையில் ஒப்படைத்துச் சென்றாக வேண்டும்.

---

நிலத்தின் விலை பற்றிய கீழ்க்காணும் பகுப்பாய்வில், போட்டியினால் எழும் ஏற்ற இறக்கங்கள் அனைத்தையும் நிலத்திலான ஊக வாணிபம் அனைத்தையும் பரிசீலனையிலிருந்து அறவே ஒதுக்கி விடுகிறோம்; சிறு நிலவுடைமையையும் கூட அவ்வாறே ஒதுக்கிவிடுகிறோம். சிறுநிலவுடைமையில் நிலம்தான் உற்பத்தியாளர்

களின் முக்கியச் சாதனம் ஆகிறது; ஆகவே அவர்கள் எவ்விலை கொடுத்தும் அதை வாங்கியாக வேண்டும்.

I. வாடகை உயராமலே நிலத்தின் விலை உயரலாம்; அதாவது:

1. வட்டி விதம் குறைவதாலேயே நிலத்தின் விலை உயரலாம்; இதன் பொருள் என்னவெனில் வாடகை இன்னுமதிக விலைக்கு விற்கப்படுகிறது; எனவே மூலதனமாக்கப்பட்ட வாடகையாகிய நிலத்தின் விலை உயருகிறது;

2. நிலத்தில் இடப்பட்ட மூலதனத்தின் மீதான வட்டி உயருவதாலும் நிலத்தின் விலை உயரலாம்.

II. வாடகை அதிகரிப்பதால் நிலத்தின் விலை உயரலாம்.

விவசாய விலை பொருளின் விலை உயருவதால் வாடகை உயரலாம்: விளைபொருளின் விலை உயரும் போதெல்லாம்-படுமோசமாக சாகுபடி செய்யப்படும் நிலத்தின் மீதான வாடகை அதிகமாய் இருந்தாலும், குறைவாய் இருந்தாலும் இல்லவே இல்லையென்றாலும்-வேறுபாட்டு வாடகை வீதம் உயருகிறது. உபரி -மதிப்பில் வாடகையாக மாற்றப்படும் பகுதிக்கும் விவசாய விளைபொருளை உற்பத்தி செய்தளிக்கும் மூலதன முதலீட்டுக்குமான விகிதத்தையே வேறுபாட்டு வாடகை வீதம் என்கிறோம். இது உபரி-உற்பத்திக்கும் மொத்த உற்பத்திக்குமான விகிதத்திலிருந்து மாறுபடுகிறது; எப்படியென்றால் மொத்த உற்பத்தியில் மூலதன முதலீடு முழுவதும் அடங்கியிருப்பதில்லை; அதாவது உற்பத்திப் பொருளில் சேராமல் தொடர்ந்து தனியாகவே இருந்து வரும் நிலை மூலதனம் மொத்த உற்பத்தியில் அடங்கியிருப்பதில்லை. மறுபுறம், வேறுபாட்டு வாடகை தரும் மண்வகைகளைப் பொறுத்தவரை உற்பத்திப் பொருளில் மேன்மேலும் கூடுதலாகிற ஒரு பகுதி உபரி-உற்பத்தியின் மிகையாக மாற்றமடைகிறது என்பதையே இது குறிப்பதாகும். படுமோசமான மண்வகையினதுவிவசாய விளை பொருளின் விலையிலான உயர்வு முதலில் வாடகையையும், நிலத்தின் விலையையும் உண்டாக்குகிறது.

ஆனால் விவசாய விளைபொருளின் விலை உயராமலும் வாடகை உயரலாம். இந்த விலை மாறாமலிருக்கலாம், ஏன் குறையவும் செய்யலாம்.

விலை மாறாமலிருந்தால், ஒருபறம் பழைய நிலங்களில் முதலீடாகிற மூலதனத்தின் அளவு மாறாமலிருக்க, இன்னுமதிகத் தரம்

வாய்ந்த புதிய நிலங்கள் சாகுபடி செய்யப்படுவதால்தான் வாடகை அதிகரிக்க முடியும் (ஏகபோக விலைகளை ஒதுக்கி விட்டுச் சொல்கிறோம்); ஆனால் கூடுதலான வேண்டலை நிறைவு செய்வதற்கு மட்டுமே இந்தப் புதிய நிலங்கள் போதுமானவையாய் இருக்க வேண்டும். அதாவது ஆளும் சந்தை-விலை மாறாமலிருக்க வேண்டும்; இந்நேர்வில் பழைய நிலங்களின் விலை உயருவதில்லை; ஆனால் புதிதாகச் சாகுபடி செய்யப்படும் நிலங்களின் விலை பழையவற்றின் விலைக்கு மேல் உயருகிறது.

ஆனால் மறுபுறம், ஒப்பீட்டு உற்பத்தித் திறனும் சந்தை-விலையும் மாறாதிருக்க, நிலத்தில் ஈடுபடுத்தப்படும் மூலதனத் திரள் அதிகரிப்பதாலும் வாடகை உயரலாம். இவ்விதம் வாடகையானது மூலதன முதலீட்டுடன் ஒப்பிடுமிடத்து மாறாமலிருந்த போதிலும் மூலதனம் இருமடங்காவதாகக் கொண்டால் அதனால் வாடகை அளவும் இருமடங்காகலாம். விலையில் எக்குறைவும் ஏற்படாததால் முதலாவது மூலதன முதலீட்டின் அளவுக்கே இரண்டாவது மூலதன முதலீடும் உபரி-இலாபம் தருகிறது. இந்த உபரி-இலாபம் அதே போல் குத்தகை காலம் முடிந்த பிறகு வாடகையாக மாற்றமடைகிறது. வாடகை உற்பத்தி செய்யும் மூலதன அளவு அதிகரிப்பதால் இங்கு வாடகை அளவு உயருகிறது. ஒரே நிலத்துண்டின் அடுத்தடுத்து செய்யப்படும் பல்வேறு மூலதன முதலீடுகளின் விளைபொருள் சமமாய் இல்லாத வரைதான், இவ்விதம் வேறுபாட்டு வாடகை உதிப்பதன் மூலம்தான் இம்முதலீடுகளால் வாடகை உற்பத்தி செய்ய முடியும் என்ற வாதமானது ஒவ்வொன்றும் £1000 மதிப்புள்ள இரு மூலதனங்கள் சமஉற்பத்தித் திறன் கொண்ட இரு வயல்களில் முதலீடு செய்யப்படும் போது அவ்விரு வயல்களுமே வேறுபாட்டு வாடகை உற்பத்தி செய்யும் சிறந்த மண்வகையைச் சேர்ந்தவையாக இருந்த போதிலும் அவற்றில் ஒன்றினால் மட்டுமே வாடகை உற்பத்தி செய்ய முடியும் என்னும் வாதமாக மாறிப் போகிறது. ,(ஆகவே முதலீடாகிற மூலதனத் திரளுடன் சேர்ந்து ஒரு நாட்டின் மொத்த வாடகையாகிய வாடகை அளவுத் தொகையும் வளர்கிறது. இதற்காக தனிப்பட்ட நிலத்துண்டுகளின் விலையோ வாடகை வீதமோ, ஏன் தனிப்பட்ட நிலத்துண்டுகள் மீதான வாடகை அளவோ கூட கட்டாயம் அதிகரித்தாக வேண்டும் என்பதில்லை. இந்நேர்வில் சாகுபடி பரப்பு விரிவடைவதுடன் சேர்ந்து மொத்த வாடகையளவு அதிகரிக்கிறது; தனிப்பட்ட நிலவுடைமைகள் மீதான வாடகை குறைவதுடன் சேர்ந்தும் கூட அது அதிகரிக்கலாம்). இல்லையேல், இந்த வாதமானது

அக்கம்பக்கமாய் இருந்து வரும் இருவேறு நிலத்துண்டுகளில் செய்யப்படும் மூலதன முதலீடு ஒரே நிலத்துண்டில் செய்யப்படும் அடுத்தடுத்த மூலதன முதலீடுகள் கடைபிடிக்காத வேறுவிதிகளை கடைபிடிக்கிறது என்ற நிலைக்கு இட்டுச் சென்றுவிடும்; ஆனால் வேறுபாட்டு வாடகை என்பது இரு நேர்வுகளிலும் ஒரே விதி, செயல் படுவதிலிருந்துதான், ஒரே வயலிலோ வெவ்வேறு வயல்களிலோ முதலீடாகிற மூலதனத்தின் உற்பத்தித் திறன் அதிகரிப்பதிலிருந்துதான் பெறப்படுவதாகக் கண்டோம். இங்கே இருப்பதும், ஆனால் கண்டு கொள்ளப்படாததுமான ஒரே ஒரு மாற்றம் இதுதான்: அடுத்தடுத்த மூலதன முதலீடுகள் வெவ்வேறு நிலத்துண்டுகளுக்கு பிரயோகிக்கப் படும்போது நிலச்சொத்தின் தடைமதிலை சந்திக்கின்றன, ஆனால் அடுத்தடுத்த மூலதன முதலீடுகள் ஒரே நிலத்துண்டில் செய்யப் படுகையில் இப்படி நேரிடுவதில்லை இந்த இருவேறு முதலீட்டு வடிவங்களும் நடைமுறையில் ஒன்றுக்கொன்று தடைமதில்களை ஏற்படுத்துவதில் வெளிபடுகிற எதிரெதிர் போக்குகளுக்கு இதுதான் காரணம். இங்கு மூலதனத்திலான வேறுபாடு எதற்கும் எவ்விதம் பங்கும் இல்லை. மூலதன இயைபு மாறாமலிருந்தால் இதே போல் உபரி-மதிப்பு வீதமும் மாறாமலிருந்தால், இலாபவீதம் மாறாம லிருக்கிறது; அதாவது மூலதனம் இருமடங்காகும்போது இலாப அளவும் இருமடங்காகிறது. இதே போல் வாடகைவீதமும் இந்நிலைமைகளில் மாறாதிருக்கிறது. £1000 மூலதனம் X வாடகை உற்பத்தி செய்தால் இங்கு அனுமானம் செய்யப்பட்டுள்ள நிலைமைகளில் £ 2000 மூலதனம் 2 X வாடகை உற்பத்தி செய்கிறது, ஆனால் நமது அனுமானப்படி 2 மடங்கு மூலதனம் அதே வயலில் செயல்படுவதால் நிலப்பரப்பில் - நிலப்பரப்பின் அடிப்படையில் கணக்கிடும்போது மாற்றமில்லை. வாடகை அளவு உயர்ந்ததால் வாடகை வீதமும் உயர்ந்துள்ளது. முன்பு £ 2 வாடகை கொடுத்த அதே ஏக்கர் இப்போது £4 கொடுக்கிறது.[42]

---

(42) இந்த கருத்தை விளக்கியது ரோட்பெர்ட்டசின் சிறப்புகளில் ஒன்றாகும்; வாடகை பற்றிய இவரது முக்கிய நூலை (Sociale Briefe and von Kirchmann, Dritter Brief: Widerlegung der Ricardo'schen Lehre von der Grundrente und Begründung einer neuen Rententheorie, பெர்லின், 1851.-ஆங்கிலப்பதிப்பாசிரியர் நான்காம் பாகத்தில் பரிசீலிப்போம். உபரி-மதிப்புத் தத்துவங்கள், கா. மார்க்ஸ். பி.எங்கல்ஸ் நூல்கள், பாகம்26, பகுதி -II பக்கம் 7-102, 139-51.—ஆங்கிலப்பதிப்பாசிரியர். ஆனால் அவர் ஒரு பிழை செய்கிறார். அதாவது முதலாவதாக, மூலதனத்தைப் பொறுத்தவரை இலாபத்திலான அதிகரிப்பு எப்போதுமே மூலதனத்திலான அதிகரிப்பாக வெளிப்படுகிறதென்றும், இதனால் இலாப அளவு அதிகரிக்கும் போது விகிதம் மாறாமலிருக்கிறதென்றும் அனுமானம் செய்து கொள்கிறார். ஆனால் இது சரியல்ல உழைப்புச் சுரண்டல் மாறாமலிருந்தாலும் கூட மூலதனம் இயைபு மாறுவதால் இலாபவீதம் உயரலாம். மூலதனத்தின் மாறும் பகுதியுடன் ஒப்பிடுமிடத்து

*உபரி-மதிப்பில் ஒரு பகுதி, பண-வாடகை - பணமே மதிப்பின் சுயேச்சையான தெரிவிப்பு - நிலத்தோடு கொண்டிருக்கும் விகித உறவு என்பதே அபத்தமானதும் அறிவுக்கொவ்வாததும் ஆகும். ஏனென்றால் இங்கு ஒன்றையொன்று அளவிடும் பருமனளவுகள் பொதுஅளவை அற்றவை - ஒரு பக்கத்தில் குறிப்பிட்ட ஒரு பயன் - மதிப்பு, அத்தகைய சதுர அடி பரப்புள்ள ஒரு நிலத்துண்டு, மறுபக்கத்தில் மதிப்பு, அதிலும் குறிப்பாக உபரி-மதிப்பு. உண்மையில் இதனால் தெரிவிக்கப்படுவது என்னவென்றால் குறிப்பிட்ட நிலைமைகளில் இத்தனை சதுர அடி நிலத்துக்கு உடைமையாளராய் இருப்பதால் நிலவுடைமையாளர் குறிப்பிட்ட அளவு ஊதியமிலா உழைப்பை கைப்பற்றிக் கொள்ள முடிகிறது என்பதற்கு மேல் ஒன்றுமில்லை; உருளைக் கிழங்குகளில் புரளும் பன்றியைப் போல் இந்தச் சதுர அடிகளில் புரளும் மூலதனம் இந்த அளவு ஊதியமிலா உழைப்பை ஈட்டேற்றம் செய்துள்ளது. (கையெழுத்து பிரதியில் இந்த இடத்தில் 'லீபிக்' என்ற பெயர் அடைப்புக் குறியில் எழுதி அடிக்கப்பட்டுள்ளது). ஆனால் எடுத்த எடுப்பில் பார்க்கும் போது இந்தத் தெரிவிப்பு ஒரு ஐந்து-பவுன் நோட்டுக்கும் புவிக்கோளத்தின் விட்டத்துக்குமான விகித உறவு பற்றி பேச விரும்புவதைப் போன்றதே ஆகும். இருப்பினும் குறிப்பிட்ட சில பொருளாதார உறவுகள் அறிவுக்கொவ்வாத வடிவங்களில் வெளிப்பட்டு நடைமுறையில் தம்மை நிலைநிறுத்திக் கொள்ளும் போது அவ்வடிவங்களை இணக்கப்படுத்துவது பற்றி அன்றாட வாழ்வில் இந்த உறவுகளின் நடைமுறைச் செயலிகளாய் இருப்பவர்கள் கவலைப்படுவதில்லை; அவர்கள் இந்த வடிவங்களுக்குள் செயல்படப் பழகிவிடுவதால், அவை குறித்து சிந்திப்பதற்கு ஏதுமிருப்பதாக அவர்களுக்குப் படுவதில்லை. ஒரு முழுமையான முரண்பாடு அவர்களுக்கு எவ்விதத்தும் மருமமாய் தெரிவதில்லை. அகத் தொடர்புகளிலிருந்து அறவே விலகியிருப்பவையும், தனித்தெடுத்துப் பார்த்தால் அபத்தமானவையுமாகிய புறத் தோற்றங்களிடையே நீரில்*

மாறாப்பகுதியின் விகிதாசார மதிப்பு குறைவதாலேயே இவ்விதம் இலாப வீதம் உயரலாம். இரண்டாவதாக, பண-வாடகைக்கும் திட்டவட்டமான அளவுடைய, எடுத்துக்காட்டாக ஒரு ஏக்கர் பரப்புள்ள நிலத்துண்டுக்குமான விகிதத்தை பரிசீலிப்பதென்னும் தவறைச் செய்கிறார்; வாடகையின் உயர்வு அல்லது சரிவு பற்றிய பகுப்பாய்வில் இதுவே தொல்சீர் பொருளாதார இயலின் பொதுவான முதனிலையாக இருந்திருப்பது போல் வைத்துக் கொள்கிறார். இதுவும் சரியல்ல. தொல்சீர் பொருளாதார இயல் வாடகையை அதன் இயற்கை வடிவில் பரிசீலிக்கையில் வாடகை வீதத்தை உற்பத்திப் பொருளோடு தொடர்புபடுத்தியும், வாடகையை பண-வாடகையாக பரிசீலிக்கையில் வாடகை வீதத்தை உற்பத்திப் பொருளோடு தொடர்புபடுத்தியும், வாடகையை பண-வாடகையாக பரிசீலிக்கையில் வாடகை வீதத்தை முன்னீடு செய்யப்பட்ட மூலதனத்துடன் தொடர்புபடுத்தியும் பரிசீலிப்பதே எப்போதும் வழக்கம். ஏனென்றால் இவைதான் உண்மையில் அறிவுக்குகந்த தெரிவிப்புகளாகும்.)

மீனைப் போல் அவர்கள் சகஜமாய் இருக்கிறார்கள். குறிப்பிட்ட சில கணிதவியல் சூத்திரங்கள் குறித்து ஹேகல் சொல்வது இங்கும் பொருந்தக் கூடியதே: சாதாரண மனிதனின் பார்வையில் அறிவுக் கொவ்வாததாய் தெரிவது உண்மையில் அறிவுக்குகந்ததாகும், அறிவுக்குகந்ததாய்த் தெரிவது அறிவுக் கொவ்வாததாகும்*.

ஆக, நிலப்பரப்புடனேயே தொடர்புபடுத்திப் பரிசீலிக்கும்போது வாடகையளவிலான உயர்வு என்பது வாடகை வீதத்திலான உயர்வு தெரிவிக்கப்படும் அதே வழியில்தான் தெரிவிக்கப்படுகிறது. ஒரு நேர்வுக்கு விளக்கமளிக்கக் கூடிய நிலைமைகள் மறு நேர்வில் இல்லாமல் போகும்போது ஏற்படும் சங்கடத்துக்கு இதுவே காரணம்.

ஆனால் விவசாய விளைபொருளின் விலை குறையும் போதும் கூட நிலத்தின் விலை உயரலாம்.

இந்நேர்வில், மேற்கொண்டு வகை வேறுபாடுகள் ஏற்படுவதால் வேறுபாட்டு வாடகை உயர்ந்திருக்கலாம், கூடவே சிறந்த நிலங்களின் விலையும் உயர்ந்திருக்கலாம்; இப்படி நேரிடவில்லை என்றால் உழைப்பின் உற்பத்தித் திறன் உயருவதால் விவசாய விளைபொருளின் விலை குறைந்திருக்கலாம்; ஆனால் உற்பத்தியளவிலான அதிகரிப்பு இந்தக் குறைவை ஈடு செய்து அதற்கு மேலதிகமாகவும் இருக்கும் விதத்தில் இது நடைபெற்றிருக்கலாம். ஒரு குவார்ட்டருக்கு 60 ஷில்லிங் விலையாவதாகக் கொள்வோம். அதே ஏக்கரில் அதே மூலதனத்தைக் கொண்டு ஒரு குவார்ட்டருக்குப் பதில் இரண்டு குவார்ட்டர் உற்பத்தி செய்யப்படுமானால் ஒரு குவார்ட்டரின் விலை 40 ஷில்லிங்காகக் குறையுமானால், இரண்டு குவார்ட்டருக்கு 80 ஷில்லிங் விலையாகும். அதாவது குவார்ட்டர் ஒன்றுக்கான விலை மூன்றிலொரு பங்கு குறைந்து விட்ட போதிலும், அதே ஏக்கரில் அதே மூலதன முதலீட்டைக் கொண்டு உற்பத்தியாகும் விளைபொருளின் மதிப்பு மூன்றிலொரு பங்கு உயர்ந்திருக்கும். விளைபொருள் அதன் உற்பத்தி-விலைக்கு மேல், அல்லது அதன் மதிப்புக்கு மேல் விற்கப்பட்டாலும் கூட, இது எப்படி சாத்தியமாகிறது என்பதை வேறுபாட்டு வாடகையைப் பரிசீலித்த போதே தெளிவாக்கினோம். மெய்நடப்பில் இது இரு வழிகளில்தான் சாத்தியம். ஒன்று, மட்டரகமான நிலம் போட்டியிலிருந்து விலக்கிக் கொள்ளப்படுகிறது. ஆனால் வேறுபாட்டு வாடகை அதிகரித்தால்

(*) ஹேகல், Encyclopädie der philosophischen wissenschaften in Grundrisse, பகுதி1 Die logik, நூல்கள், பாகம் 6, பெர்லின் 1840, பக்கம் 404.- ஆங்கிலப் பதிப்பாசிரியர்.)

சிறந்த நிலத்தின் விலை உயருகிறது; அதாவது பொதுவான மேம்பாடு பல்வேறு மண்வகைகளிலும் வெவ்வேறு விதமான விளைவை உண்டு பண்ணுகிறது; அல்லது, படுமோசமான மண்வகையில் அதே உற்பத்தி-விலை (அறுதி-வாடகை செலுத்தப்படுமானால் அதே மதிப்பும்) உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரித்திருப்பதால் கூடுதலான அளவு விளைபொருளாக வெளிப்படுகிறது. உற்பத்திப் பொருள் முன்பு குறித்த அதே மதிப்பைத்தான் இப்போதும் குறிக்கிறது. ஆனால் அதன் ஈவுப்பங்குகள் எண்ணிக்கையில் அதிகரித்திருந்தாலும் உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரித்திருக்கும் போது அவற்றின் விலை குறைந்துள்ளது. அதே மூலதனம் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் போது இது சாத்தியமில்லை; ஏனென்றால் இந்த மதிப்பு எப்போதுமே உற்பத்திப் பொருளில் ஏதேனுமொரு பகுதியின் வாயிலாக வெளிப்படுகிறது. ஆனால் கனிக்கல், மீனுரம் போன்றவற்றுக்காக கூடுதல் மூலதனம் செலவிடப்பட்டிருக்கும் போது, சுருங்கச்சொல்லின் பல்லாண்டு காலம் நீடித்திருக்கும் விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய மேம்பாடுகளுக்காக அது செலவிடப்பட்டிருக்கும் போது இது சாத்தியமே. தனிப்பட்ட ஒரு குவார்ட்டரின் விலை குறைகிறது என்றாலும் குவார்ட்டர்களின் எண்ணிக்கை அதிகரிக்கிற அதே விகிதத்தில் குறையக் கூடாது என்பதுதான் நிபந்தனை.

III. வாடகையில் உயர்வு ஏற்படக்கூடிய, பொதுவாக நிலத்தின் விலையிலோ குறிப்பிட்ட நிலவகைகளின் விலையிலோ உயர்வு ஏற்படக் கூடிய இந்தப் பல்வேறு நிலைமைகளும் ஓரளவுக்கு ஒன்றோடொன்று போட்டியிடலாம், ஓரளவுக்கு ஒன்றையொன்று விலக்கி வைக்கலாம்; இவை மாறி மாறித்தான் செயல்பட முடியும். ஆனால் மேற்கண்ட பரிசீலனையிலிருந்து தெரிவது என்னவென்றால்: நிலத்தின் விலை உயருவதால் வாடகையும் உயரத்தான் வேண்டுமென்ற அவசியமில்லை; வாடகை உயருவதாலும், எப்போதும் போல் அதனுடன் சேர்ந்து நிலத்தின் விலை உயருவதாலும் விவசாய விளைபொருள் அதிகரிக்கத்தான் வேண்டுமென்ற அவசியமில்லை[43].

---

மண் சத்திழந்து போவதற்குரிய உண்மையான இயற்கைக் காரணங்களிடம் திரும்பிச் செல்வதற்குப் பதிலாக - வேறுபாட்டு

---

(43) வாடகை உயரும்போது உள்ளபடியே நிலத்தின் விலை குறைவது தொடர்பாக பார்க்கவும்: பாஸி.)

வாடகை பற்றி எழுதிய பொருளாதார அறிஞர்களுக்கெல்லாம் அவர்களின் காலத்தில் வேளாண் வேதியியல் அடைந்திருந்த வளர்ச்சிநிலை காரணமாய் இந்தக் காரணங்கள் தெரியாமலிருந்தன என்பதை இடைக்குறிப்பாய்ச் சொல்லி வைக்கலாம் - வரம்புக் குட்பட்ட ஒரு நிலபரப்பில் முதலீடு செய்யக்கூடிய மூலதன அளவுக்கு ஒரு வரம்பு உண்டு என்ற மேம்போக்கான கருத்தின் துணை நாடப்படுகிறது. சோஹோ சதுக்கத்தை சாகுபடி செய்வதன் மூலம் இங்கிலாந்து முழுமைக்கும் உணவளித்துவிட முடியாது என்று சொல்லி எடின்பரோ ரெவியூ* ரிச்சர்டு ஜோன்ஸ்க்கு எதிராக வாதம் புரிவதை சான்றாய் குறிப்பிடலாம். இது வேளாண்மைக்குள்ள விசேஷ பிரதிகூலமாய் கருதப்படுமானால், நேர்மாறானதே உண்மையாகும். இங்கு மூலதனத்தை அடுத்தடுத்து முதலீடு செய்து பயனுள்ள விளைவுகள் பெறமுடியும்; ஏனென்றால் மண்ணே ஓர் உற்பத்திக் கருவியாகப் பயன்படுகிறது. தொழிற்சாலையில் அது இப்படிப் பயன்படுவதில்லை, அல்லது பயன்பட்டாலும் வரம்புக்குட்பட்ட அளவுக்கு மட்டுமே இப்படிப் பயன்படுகிறது; ஏனென்றால் அடித்தளமாகவே, செயற்பாடுகளுக்கு ஆதாரமான இடமாகவும் வெளியாகவுமே அது பயன்படுகிறது. சிதறலான கைத்தொழில்களுடன் ஒப்பிடுமிடத்து பெருவீதத் தொழில் துறை பெருமளவு உற்பத்தியை சிறுநிலப்பரப்பில் குவியச் செய்திடலாம் என்பது மெய்தான். ஆனால் உற்பத்தித் திறனின் படித்தரம் குறிப்பிட்டதாயிருக்க, எப்போதுமே ஒரு திட்டமான அளவில் இடம் தேவைப்படுகிறது; உயர உயர கட்டடங்கள் கட்டுவதற்கும் கூட நடைமுறையில் அதற்கேவுரிய வரம்பெல்லைகள் உண்டு. இந்த எல்லைகளைத் தாண்டி உற்பத்தியை விரிவாக்க வேண்டுமானால் நிலப்பரப்பையும் விரிவாக்கத்தான் வேண்டும். இயந்திர சாதனம் முதலானவற்றில் முதலீடாகிற நிலை-மூலதனம் பயன்பாட்டின் மூலம் மேம்படுவதில்லை, மாறாக தேய்மானமுறவே செய்கிறது. இங்கேயும் புதிய கண்டுபிடிப்புகள் மெய்யாகவே ஓரளவு மேம்பாட்டுக்கு வழிசெய்திடலாம்; ஆனால் உற்பத்தித் திறனிலான வளர்ச்சி குறிப்பிட்டதாயிருக்க, இயந்திரங்கள் எப்போதுமே கேடுறத்தான் செய்யும். உற்பத்தித் திறன் துரிதமாக வளரும் போது பழைய இயந்திர சாதனமெல்லாம் இன்னுங்கூட அனுகூலமான இயந்திர சாதனத்தால்

---

(*) பாகம் LIV,1831 ஆகஸ்ட் - டிசம்பர், பக்கம் 94-95.- ஆங்கிலப் பதிப்பாசிரியர்.)

மாற்றீடு செய்யப்பட்டாக வேண்டும்; அதாவது அந்தப் பழைய இயந்திர சாதனமனைத்தும் இழப்பாகி விடுகிறது. மாறாக நிலமானது சரிவர பயன்படுத்தப்பட்டு வரும்வரை ஓயாமல் எந்நேரமும் மேம்பாடு அடைகிறது. முந்தைய முதலீடுகளைஇழந்து விடாமல் அடுத்தடுத்த மூலதன முதலீடுகளிலிருந்து நன்மையடைய இடமளிப்பதான நிலத்தின் அனுகூலம் இந்த அடுத்தடுத்த மூலதன முதலீடுகளிலிருந்து பெறப்படும் விளைச்சலில் வேறுபாடுகள் நேரிடும் சாத்தியப்பாட்டை குறித்திடுகிறது.

அத்தியாயம் XLVII

# முதலாளித்துவ நில-வாடகை பிறந்த கதை

## I. அறிமுகக் குறிப்புகள்

நவீன முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் தத்துவ வெளிப்பாடு என்ற முறையில் நவீன பொருளாதார இயலின் கண்ணோட்டத்தில் நில-வாடகையைப் பகுத்தாராய்வதில் உண்மையான இடர்பாடு எதில் அடங்கியுள்ளது என்பது குறித்து நாம் மனத்தளவில் தெளிவாய் இருத்தல் வேண்டும். மிகவும் சமீப காலத்திய எழுத்தாளர்களிலும் கூட பலர் இன்னமும் இதைப் புரிந்து கொள்ளவில்லை என்பதைத்தான் நில-வாடகைக்கு 'புதிதாய்' விளக்கமளிப்பதற்கு திரும்பத் திரும்பச் செய்யப்படும் ஒவ்வொரு முயற்சியும் காட்டுகிறது. இங்கு புதுமை என்பது நீண்ட காலம் முன்பே காலாவதியாகிப் போன கண்ணோட்டங்களுக்கு மறுபடியும் சரிவுப்பாதையாகவே அமைந்துள்ளது. விவசாய மூலதனத்தால் உற்பத்தி செய்யப்படும் உபரி-பண்டத்துக்கும் அதற்கிணையான உபரி-மதிப்புக்கும் விளக்கமளிப்பதல்ல இடர்பாடு. எத்துறையில் முதலீடு செய்யப்பட்டாலும் திறனுடைய மூலதனம் அனைத்தும் உற்பத்தி செய்கிற உபரி-மதிப்பு பற்றிய பகுப்பாய்வில் இந்தப்பிரச்சினை தீர்க்கப்பட்டு விடுகிறது. உபரி-மதிப்பு பல்வேறு மூலதனங்களிடையிலும் சமனமாகி சராசரி இலாபமாக மாறிய பிறகு, எல்லா உற்பத்தித் துறைகளிலும் சமுதாய மூலதனத்தால் உற்பத்தி செய்யப்படும் மொத்த உபரி-மதிப்பைப் பல்வேறு மூலதனங்களுக்கும் அவையவற்றின் ஒப்பளவுக்கேற்ப பகிர்ந்து கொண்ட பிறகு, நிலத்தில் முதலீடாகிற மூலதனம் நிலவுடைமையாளருக்கு வாடகையின் வடிவில் செலுத்தும் மிகை உபரி-மதிப்பு எங்கிருந்து வருகிறது என்பதைக் காட்டுவதில்தான் இடர்பாடு உள்ளது; அதாவது இந்தச் சமனமாதலுக்குப் பிறகு, பங்கீடு செய்யப்பட வேண்டிய உபரி-மதிப்பு அனைத்தும் ஏற்கெனவே பங்கீடு செய்யப்பட்டு விட்டதாகத் தெரிகிறதே அதன் பிறகு, இந்த மிகை உபரி-மதிப்பு எங்கிருந்து வருகிறது என்ப்தைக் காட்டுவதில்தான் இடர்பாடு உள்ளது. நிலச்சொத்துக்கு எதிரான தொழில்துறை

மூலதனத்தின் சொல்விளம்பிகள் என்ற முறையில் நவீனப் பொருளாதார அறிஞர்கள் இந்தப் பிரச்சினையை, ஆராயும்படி தூண்டிவிட்ட நடைமுறை நோக்கங்களை அறவே ஒதுக்கிவிட்டுப் பார்த்தால் - நில-வாடகையின் வரலாறு பற்றிய அத்தியாயத்தில் இந்த நோக்கங்களை இன்றுங்கூட தெளிவாகவே சுட்டிக் காட்டுவோம் - இந்தப் பிரச்சினை தத்துவவாதிகள் என்ற முறையில் அவர்களுக்கு மிக முக்கியமாய் கருத்துக்குரியதாக இருந்தது. விவசாயத்தில் முதலீடாகிற மூலதனத்துக்கான வாடகை என்னும் தோற்றத்துக்கு அந்த முதலீட்டுத் துறையினால் தோற்றுவிக்கப்படும் ஏதோ ஒரு தனி விளைவுதான் காரணம், புவிக் கோளின் மேலோட்டிற்குள்ள அலாதிப் பண்புகளே காரணம் என்று ஒப்புக் கொள்வது மதிப்பின் கருத்துருவத்தையே கைவிடுவதற்கொப்பாகும், இந்த ஆய்வுக் களத்தை விஞ்ஞான நோக்கில் புரிந்து கொள்வதற்கான முயற்சிகளையெல்லாம் கை கழுவுவதற்கு ஒப்பாகும். விவசாய விளைபொருளின் விலையிலிருந்து வாடகை செலுத்தப்படுகிறது என்ற சாமானிய பார்வையே கூட - சாகுபடியாளர் அவருக்குரிய உற்பத்தி-விலையை எடுக்க வேண்டு மானால் வாடகையானது பண்டமாகச் செலுத்தப்படுகிற போதும் கூட இதுவே உண்மை - வழக்கமான உற்பத்தி-விலைக்கு மேல் இந்த விலை பெற்றுள்ள மிகைக்கு, அதாவது விவசாய விளைபொருட்கள் ஒப்பளவில் அதிக விலையுள்ளவையாய் இருப்பதற்கு ஏனைய உற்பத்திக் கிளைகளில் உற்பத்தித் திறனுக்குமேல் விவசாய உற்பத்தி பெற்றுள்ள கூடுதல் இயற்கை உற்பத்தித் திறன் என்ற அடிப்படையில் விளக்கமளிக்க முயல்வது அபத்தமெனக் காட்டிற்று. ஏனென்றால் இதற்கு நேர்மாறானதே உண்மையாகும்; உழைப்பு எவ்வளவுக் கெவ்வளவு உற்பத்தித் திறனுள்ளதாய் இருக்கிறதோ, அதன் உற்பத்திப் பொருளின் ஈவுப் பகுதி ஒவ்வொன்றும் அவ்வளவுக்கவ்வளவு மலிவாய் இருக்கிறது; ஏனென்றால் குறிப்பிட்ட அளவு உழைப்பு, அதாவது குறிப்பிட்ட மதிப்பு அவ்வளவுக்கவ்வளவு அதிகமான பயன்-மதிப்புகளாக உருக்கொள்கிறது.

ஆகவே, வாடகையைப் பகுத்தாராய்வதில் இருக்கும் இடர்பாடெல்லாம் சராசரி இலாபத்துக்கு மேல் விவசாய இலாபம் பெற்றுள்ள மிகைக்கு விளக்கமளிப்பதில்தான் அடங்கியுள்ளது. விளக்கம் தேவைப்படுவது இந்த உற்பத்திக் கிளையின் தன் இயல்பாகிய மிகை உபரி-மதிப்புக்குத்தானே தவிர உபரி-மதிப்புக்கு அல்ல; வேறுவிதமாகச் சொன்னால், 'நிகர உற்பத்தி' வேறு தொழிற் கிளைகளில் நிகர உற்பத்திக்கு மேல் பெற்றுள்ள மிகைக்குத்தானே தவிர,

இந்த நிகர உற்பத்திக்கு அல்ல. சராசரி இலாபமே கூட சமூக நிகழ்முறைகளின் அசைவியக்கத்தால் பிரத்தியேகமான வரலாற்று வழிபட்ட உற்பத்தி உறவுகளால் உருவாவதே ஆகும்; இது உருவாவதற்கு மிகச் சிக்கலான இடைச்செயல்கள் தேவைப்படுவதாகப் பார்த்தோம். சராசரி இலாபத்துக்கு மேல் உபரியாக இருப்பது பற்றி பேச வேண்டும் என்றாலே, இந்த சராசரி இலாபம் ஏற்கெனவே ஒரு நியமமாக, பொருளுற்பத்தியை ஒட்டுமொத்தமாய் ஒழுங்கியக்கும் காரணியாகவும் நிலைநாட்டப் பெற்றிருக்க வேண்டும். முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையில் இவ்விதம்தான் நடைபெறுகிறது. ஆகவே உபரி-உழைப்பு அனைத்தையும் கறப்பதும், நேரடியாக உபரி-மதிப்பு அனைத்தையும் தனதாக்குவதுமான வேலையைச் செய்வது மூலதனமாய் இல்லாத சமூக அமைப்புகளில் நவீன அர்த்தத்தில் வாடகை என்ற பேச்சுக்கே இடமில்லை, சராசரி இலாபத்திற்கு மேல், அதாவது மொத்தச் சமுதாய மூலதனத்தால் உற்பத்தி செய்யப்படும் உபரி-மதிப்பில் தனிப்பட்ட ஒவ்வொரு மூலதனத்திற்குமுரிய விகிதப்பங்குக்கு மேல் உபரியாய் இருக்கும் வாடகை என்ற பேச்சுக்கே இடமில்லை. ஆகவே மூலதனம் சமுதாய உழைப்பை தன் கட்டுப்பாட்டில் இன்னமும் முழுமையாக கொண்டு வந்திராத, அல்லது சிதறலாக மட்டுமே கொண்டு வந்திருக்கிற இடங்களிலும் இதே நிலைதான். பாஸியைப் போன்ற ஒருவர் ஆதிகாலச் சமுதாயத்திலான வாடகையை இலாபத்தின் மீதான உபரி என்று குறிப்பிடுவது * அவரின் பேதைமையைத்தான் காட்டுகிறது (பிற்பாடு இது குறித்து இன்னும் விவரமாகப் பார்ப்போம்) இலாபமென்பது வரலாற்று வழியில் வரையறுக்கப்பட்ட உபரி-மதிப்பில் சமுதாய வடிவமாகும். ஆனால் சமுதாயம் என்ற ஒன்றே இல்லாமலும் கூட, பாஸியின் கருத்துப்படி, இலாபம் என்ற ஒன்று இருக்க முடியுமாம்.

பொதுவாகச் சொன்னால், பழைய பொருளாதார அறிஞர்கள் தம் காலத்தில் இன்னமும் வளர்ச்சியடையாமல் இருக்கும் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையைத்தான் பகுத்தாராயத் தொடங்குகிறார்கள். இவர்களுக்கு வாடகையின் பகுப்பாய்வில் எவ்வித இடர்பாடும் நேரிடுவதில்லை; அல்லது அடியோடு வேறுவிதமான இடர்பாடு மட்டுமே நேரிடுகிறது. பெட்டி, காண்டில்லான் ஆகியோரும்

(*) பாஸி, Rente du Sol. In:Dictionnaire de l'économic Politique, பாகம் II, பாரிஸ், 1854, பக்கம் 511. - ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

பொதுவாக பிரபுத்துவக் காலத்துக்கு நெருக்கமாய் இருக்கும் எழுத்தாளர்களும் நில-வாடகையை உபரி-மதிப்பின் இயற்கை வடிவமாக அனுமானம் செய்து கொள்கிறார்கள்.* ஆனால் அவர்களைப் பொறுத்த வரை இலாபம் என்பது இன்னமும் கூலியுடன் இணைந்து உருவம் பெறாமல் இருந்து வருவதாகும்; அல்லது உயர்ந்தபட்சமாய்ச் சொன்னால் நிலவுடைமையாளரிடமிருந்து முதலாளியால் கறக்கப்படும் உபரி-மதிப்பின் ஒரு பகுதியாக அது அவர்களுக்குத் தெரிகிறது. இவ்விதம் இந்த எழுத்தாளர்கள் தமக்குத் தொடக்க முனையாகக் கொள்ளும் நிலைமையில் முதலாவதாக, விவசாயத்தில் ஈடுபட்டுள்ள மக்கள்தான் இன்னமும் நாட்டின் அமோகப் பெரும்பான்மையாய் அமைந்துள்ளனர். இரண்டாவதாக, இன்னமும் நிலவுடைமையாளர்தான் நிலச்சொத்தில் தனக்குள்ள ஏகபோகத்தைக் கொண்டு நேரடி உற்பத்தியாளர்களின் உபரி-உழைப்பை முதலில் தனதாக்குகிறவராக விளங்குகிறார்; ஆகவே இன்னமும் நிலச்சொத்துதான் பிரதான உற்பத்தி நிலைமையாக விளங்குகிறது. நிலவுடைமையானது மூலதனத்திடமிருந்து அதனால் உற்பத்தி செய்யப்பட்ட (அதாவது நேரடி உற்பத்தியாளர்களிடமிருந்து கறக்கப்பட்ட), ஏற்கெனவே நேரடியாகத் தனதாக்கப்பட்ட உபரி - மதிப்பில் ஒரு பகுதியை மறுபடியும் மீளக் கைப்பற்றிவிடுகிறதே, இது எப்படி என்பதை முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையில் கண்ணோட்டத்தில் ஆராய்வதென்னும் பிரச்சினையை இந்த எழுத்தாளர்களால் இன்னமும் எண்ணிப் பார்க்கவும் முடியவில்லை.

பிசியோகிராட்டுகள் (பாட்டாளி வர்க்கம்) வேறுவிதமான இடர்ப்பாடுகளால் தொல்லைப்படுகிறார்கள் உள்ளபடியே மூலதனத்தின் முதல் அமைப்பு வழிபட்ட சொல்விளம்பிகள் என்ற முறையில் அவர்கள் பொதுவாக உபரி-மதிப்பின் இயல்பை பகுத்தாராய முயல்கிறார்கள். அவர்களைப் பொறுத்த வரை, உபரி-மதிப்பை ஆராய்வதும் வாடகையை ஆராய்வதும் ஒன்றுதான்; உபரி-மதிப்பின் ஒரே வடிவமாக அவர்கள் வாடகையைக் கருதுகிறார்கள். ஆகவே வாடகை தரும் மூலதனம் அல்லது விவசாய மூலதனம்தான் உபரி-மதிப்பை உற்பத்தி செய்யும் ஒரே மூலதனம் என்றும், அதனால் இயங்கச் செய்யப்படும் விவசாய உழைப்புதான் உபரி-மதிப்பை உற்பத்தி செய்யும் ஒரே உழைப்பு என்றும் அவர்கள் கருதுகிறார்கள்; உபரி

(*) (பெட்டி) வரிகள், கொடைகள் பற்றிய ஆய்வுக் கட்டுரை, லண்டன், 1667, பக்கம் 23-24; (ரிச்சர்டு காண்டில்லான்) Essai sur la nature de commerce en général, ஆம்ஸ்டர்டாம், 1756.- ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

மதிப்பை உற்பத்தி செய்யும் உழைப்பை மட்டுமே திறனுடைய உழைப்பாக கருதுவது முதலாளித்துவக் கண்ணோட்டத்தில் சரிதான். உபரி-மதிப்பின் படைப்பை தீர்மானகரமானதாய் அவர்கள் கருதுவதிலும் தவறே இல்லை. நான்காம் பாகத்தில் நாம் விவரிக்கப் போகும் அவர்களின் ஏனைய சிறப்புகள் ஒருபுறமிருக்க, முழுக்க முழுக்க சுற்றோட்டத் துறையில் மட்டும் செயல்படும் வணிக-மூலதனத்திலிருந்து திறனுடை மூலதனத்துக்குச் திரும்பிச் சென்றதிற்கான முதற்பெருமை அவர்களையே சாரும். இது வணிக-ஊக்க வாதிகளின் அணுகு முறைக்கு நேர்மாறானது; கொச்சை எதார்த்த வாதத்தில் ஆழ்ந்து கிடந்த வணிக-ஊக்கவாதிகள் அக்காலத்தின் மெய்யான கொச்சைப் பொருளாதார வாதிகள் ஆவர்; செயலளவில் தன்னலம் பேணும் பொருட்டு இவர்கள் பெட்டியும் அவரின் மரபினரும் தொடங்கி வைத்த விஞ்ஞானப் பகுப்பாய்வைப் பின்னுக்குத் தள்ளி விட்டார்கள். வணிக-ஊக்கப் பொருளாதாரத்தை பிசியோகிராட்டுகள் மூலதனமும் உபரி-மதிப்பும் பற்றிய அதன் கருத்தமைவுகள் தொடர்பாக மட்டுமே இப்படி விமர்சனம் செய்கிறார்கள். உலகச் சந்தைக்கான உற்பத்தியும், உற்பத்திப் பொருள் சரக்காகவும் பணமாக மாற்றமடைவதும்தான் முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் முன்தேவையும் முன்நிபந்தனையும் ஆகுமென்று பணப் பொருளாதாரம் பறைசாற்றுவது சரிதான் என முன்பே கண்டோம். இந்தப் பொருளாதாரம் மேலும் வளர்ந்து வணிக-ஊக்கப் பொருளாதாரமாக மாறுகையில் சரக்குமதிப்பு பணமாக மாற்றமடைவது தீர்மானிக்கும் கூறாக இல்லாமல் போய் அதற்கு பதில் உபரி-மதிப்பின் படைப்பே தீர்மானிக்கும் கூறாகி விடுகிறது - ஆனால் சுற்றோட்டத் துறையின் ஒவ்வாத நோக்கு நிலையிலிருந்தும் அதே போது இந்த உபரி-மதிப்பு உபரிப் பணமாக, வர்த்தக உபரியின் நிலுவையாக காட்டப்படுகிற விதத்திலும்தான் இது நடைபெறுகிறது. ஆனால் அதே போது அக்காலத்தின் தன்னலக்கார வணிகர்கள் ஆலையதிபர்களின் தனியியல்பு அவர்களால் குறிக்கப்படும் முதலாளித்துவ வளர்ச்சிக் கட்டத்துக்கு பொருத்தமான தனியியல்பு-பிரபுத்துவ விவசாயச் சமுதாயங்கள் தொழில்வளச் சமுதாயங்களாக மாற்றமடைவதும் இதன் விளைவாக உலகச் சந்தையில் நாடுகள் நடத்தும் தொழில்துறைப் போட்டிப் போராட்டமும் மூலதனத்தின் வளர்வேக வளர்ச்சியைப் பொறுத்தவையாகும் என்பதே. இயற்கைப் பாதை எனப்படுவதன் வழியே சென்று இந்த வளர்வேக வளர்ச்சியை அடைவதற்கில்லை, கட்டாய வழி முறைகளைக் கொண்டுதான்

அடைந்தாக வேண்டும். நாட்டின் மூலதனம் மெல்ல மெல்ல தொழில்துறை மூலதனமாக மாற்றமடைகிறதா, அல்லது வரி விதிப்பின் மூலம் முக்கியமாய் நிலவுடைமையாளர்கள் மீதும் நடுத்தர, சிறுவிவசாயிகள் மீதும் கைவினைஞர்கள் மீதும் காப்புத் தீர்வைகள் விதிப்பதன் மூலம், சுயேச்சையான நேரடி உற்பத்தியாளர்கள் உடைமைப் பறிப்புக்கு ஆளாவதை முடுக்கி விடுவதன் மூலம், மூலதனத்திரட்டலையும் மூலதனக் குவிப்பையும் வலுவந்தமாய் முடுக்கி விடுவதன் மூலம், சுருங்கச் சொல்லின் முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிலைமைகள் நிறுவப்படுவதை முடுக்கி விடுவதன் மூலம் இந்த மாற்றம் முடுக்கி விடப்படுகிறதா என்பது மிகப் பெரும் வேறுபாட்டைத் தருகிறது. அதே போது நாட்டின் இயற்கை உற்பத்தித் திறனை முதலாளித்துவ வழியிலும் தொழில்துறை வழியிலும் பயன்படுத்திக் கொள்வதிலும் இது மிகப்பெரும் வேறுபாட்டைத் தருகிறது. ஆகவேதான் வணிக-ஊக்கப் பொருளாதாரத்தின் தேசியத் தன்மை என்பது அதன் சொல் விளம்பிகளின் உதட்டில் தவழும் சொற்றொடர் மட்டுமே அல்ல. முழுக்க முழுக்க நாட்டின் செல்வம் குறித்தும் அரசின் செல்வாதாரங்கள் குறித்துமே கவரப்படுவதென்ற சாக்கில், உண்மையில் அவர்கள் முதலாளி வர்க்கத்தின் நலன்களும் பொதுவாக செல்வம் திரட்டுவதுமே அரசின் இறுதி நோக்கமென்று பறைசாற்றுகிறார்கள். இவ்விதம் பழைய தெய்வீக அரசின் இடத்தில் முதலாளித்துவச் சமுதாயத்தைப் பிரகடனம் செய்கிறார்கள். ஆனால் அதே போது மூலதனம் முதலாளி வர்க்கம் ஆகியவற்றின், முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் நலன்கள் வளர்ச்சி பெறுவதே நவீனகாலச் சமுதாயத்தில் நாட்டின் சக்திக்கும் ஏற்றத்துக்கும் அடித்தளம் ஆகியிருப்பதாக தாங்கள் உணர்ந்திருப்பதையும் அவர்கள் காட்டிக் கொள்கிறார்கள்.

உண்மையில் உபரி-மதிப்பின் உற்பத்தி அனைத்துக்கும், இவ்விதம் மூலதனத்தின் வளர்ச்சி அனைத்துக்கும் விவசாய உழைப்பின் உற்பத்தித் திறனே இயற்கை அடித்தளமாகும் என்று பிசியோக்கிராட்டுகள் சொல்வதும் சரியானதே. உழைப்பாளர் ஒவ்வொரு வருக்கும் தம்மையே மறுவுற்பத்தி கொள்வதற்குத் தேவைபடுவதைக் காட்டிலும் கூடுதலான வாழ்வுச் சாதனங்களை, அதாவது கண்டிப்பான அர்த்தத்தில் கூடுதலான விவசாய விளைபொருட்களை ஒரு வேலை நாளில் உற்பத்தி செய்ய மனிதனால் இயலவில்லை என்றால், உழைப்பாளியினது உழைப்புச் சக்தி அனைத்தின் அன்றாடச் செலவீடு அவரின் தனிப்பட்டத் தேவைகளுக்கு இன்றியமையாத வாழ்வுச்

சாதனங்களை உற்பத்தி செய்வதற்கு மட்டுமே போதுமானதாய் இருந்தால், உபரி-உற்பத்தி அல்லது உபரி-மதிப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை. விவசாய உழைப்பின் உற்பத்தித் திறன் உழைப்பாளியின் தனிப்பட்ட தேவைகளுக்கு மேல் இருப்பது எல்லாச் சமுதாயங்களுக்கும் அடிப்படையாகும். குறிப்பாகச் சொன்னால், முதலாளித்துவப் பொருளுற்பத்திக்கு அடிப்படையாகும். முதலாளித்துவ பொருளுற்பத்தி சமுதாயத்தில் மேன்மேலும் அதிகரித்துச் செல்லும் பகுதியினரை வாழ்வுச் சாதனங்களின் நேரடி உற்பத்தியிலிருந்து விடுவிக்கிறது. அடிப்படை உணவுப் பொருட்களின் உற்பத்தியிலிருந்து விடுவிக்கிறது. அவர்களை ஸ்டுவர்ட் சொல்வது போல்* 'சுதந்திரக் கைகளாக' மாற்றி வேறு துறைகளில் சுரண்டலுக்குக் கிடைக்கச் செய்கிறது.

ஆனால் டைரே, பாஸி போன்ற சமீபகாலத்திய பொருளாதார எழுத்தாளர்கள் தொல்சீர் பொருளாதார இயலின் அந்திம காலத்தில், உள்ளபடியே அது மரணப்படுக்கையில் இருக்கும் போது உபரி-உழைப்பிற்கும், பொதுவாக உபரி-மதிப்புக்குமான இன்றியமையாத இயற்கை நிலைமைகள் குறித்தும் மிகவும் கற்றுக்குட்டித்தனமானக் கருத்துக்களை கிளிப்பிள்ளைபோல் திருப்பிச் சொல்கிறார்களே, நில-வாடகை உபரி-மதிப்பின் தனி வடிவமாகப் ஆய்ந்தறியப்பட்டு, அதன் பிரத்தியேக பகுதியாகி இவ்வளவு காலமான பிறகு, நில-வாடகை** பற்றி புதிதாகவும் எடுப்பாகவும் தாங்கள் ஏதோ சொல்லி விட்டதாக இவ்விதம் கற்பனை செய்து கொள்கிறார்களே இவர்களைப் பற்றி என்ன சொல்வது? இப்போது காலாவாதியாகி விட்ட ஒரு வளர்ச்சிக் கட்டத்தில் புதியதாகவும் சுயமானதாகவும் நியாயமானதாகவும் இருந்ததை அது சாரமற்றதாகவும் மலடாகவும் தவறானதாகவும் மாறிவிட்ட ஒரு காலத்தில் எதிரொலிப்பதுதான் கொச்சைப் பொருளாதாரத்தின் வாடிக்கையாகும். இவ்வாறு அது தொல்சீர் பொருளாதாரத்தின் அக்கறைக்குரியனவாய் இருந்த பிரச்சினைகள் பற்றி தனக்கு அறவே தெரியாது என்பதைத்தான் ஒப்புக் கொள்கிறது. அந்தப் பிரச்சினைகளை முதலாளித்துவ சமுதாயம் அந்த அளவு வளர்ந்திராத ஒரு கட்டத்தில் மட்டுமே கேட்கப்பட்டிருக்கக் கூடிய கேள்விகளோடு குழப்பிக் கொள்கிறது. தடையிலா வாணிபம் பற்றிய பிசியோகிராட்டுச்

* ஜே. ஸ்டுவர்ட், அரசியல் பொருளாதாரக் கோட்பாடுகள் பற்றிய ஓர் ஆய்வு, முதல் பாகம், டப்ளின், 1770, பக்கம்.396.—பதிப்பாசிரியர்

** டைரே, முன்னுரை, பிஸியோக்கிராட்டுகள் என்னும் நூலில் 1, பாரிஸ், 1846; பாஸி, Rente du sol. In: Dictionnaire de l'économie politique, Tome II, Paris, 1854, p.511.—பதிப்பாசிரியர்.

சொற்றொடர்களை அது ஓயாமல் சுயதிருப்தியோடு அசைபோடுவதும் கூட இப்படித்தான் இந்தச் சொற்றொடர்கள் இன்னும் கூட நடைமுறையில் ஏதேனுமோர் அரசின் அக்கறைக்குரியவையாய் இருக்கலாம் என்றாலும், நீண்ட காலம் முன்பே தத்துவத்தில் பொருளற்றவை ஆகிவிட்டன.

முறையான இயற்கைப் பொருளாதாரத்தில், விவசாய விளைபொருளின் எந்தப் பகுதியும் சுற்றோட்ட நிகழ் முறையில் சேருவதில்லை, அப்படி சேர்ந்தாலும் அற்ப சொற்பமானதொரு பகுதி மட்டுமே சேருகிறது; மொத்த விளைபொருளில் நிலவுடைமையாளரின் வருவாயை குறிக்கும் பகுதியில் ஒப்பளவில் சிறியதொரு பாகம் மட்டுமே - எடுத்துக்காட்டாக ரோமானிய பெரும்பண்ணைகள் பலவற்றில் அல்லது சார்லமைனுடைய தோட்ட மனைகளில் அல்லது ஏறக்குறைய மத்தியகாலம் முழுவதிலும் (பார்க்கவும்: வின்சார்டு, Histoire du travail) சுற்றோட்ட நிகழ்முறையில் சேருகிறது. அப்போது பெரும் பண்ணைகளின் உற்பத்தியும் உபரி-உற்பத்தியும் விவசாய உழைப்பின் உற்பத்திப் பொருட்களால் மட்டும் ஆனதல்ல, தொழில்துறை உழைப்பின் உற்பத்திப் பொருட்களும் கூட அதிலடங்கும் வேளாண்மை அடிப்படையாக இருக்க, துணைத் தொழில்கள் என்ற முறையில் வீட்டுக் கைத்தொழில்களும் இயற்கைப் பொருளாதாரத்துக்கு ஆதாரமாய் உள்ள பொருளுற்பத்தி முறைக்கு இன்றியமையாதவை- ஐரோப்பிய பண்டைக் காலத்திலும் மத்திய காலத்திலும் மட்டுமல்லாமல், பரம்பரை ஒழுங்கமைப்பு இன்னும் அழியாமலிருக்கும் இந்நாளைய இந்திய கிராம சமுதாயத்திலும் கூட இதைக் காணலாம். முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை இந்த உறவை அடியோடு ஒழித்துக் கட்டுகிறது; குறிப்பாகச் சொன்னால், பதினெட்டாம் நூற்றாண்டின் கடைசி மூன்றாம் பகுதிக்குரிய இங்கிலாந்தில் இந்நிகழ்முறையை பெருவீதத்தில் ஆராயந்து பார்க்கலாம். ஏறக்குறைய அரைபிரபுத்துவ சமுதாயங்களில் வளர்ந்த ஹெரன்ஸ்வாண்டு போன்ற சிந்தனையாளர்கள் இன்னமும், எடுத்துக்காட்டாக பதினெட்டாம் நூற்றாண்டின் முடிவிலும் கூட வேளாண்மையிலிருந்து இப்படி பட்டறைத் தொழிலைப் பிரிப்பது முட்டாள்தனமாக சமூகசாகசம் என்று கற்பனைக்கெட்டாத அளவுக்கு ஆபத்தான நிலவவல் முறையெனக் கருதுகிறார்கள். முதலாளித்துவ வேளாண்மைக்கு மிக அதிகமாய் ஒத்திருக்கக் கூடிய பண்டைக் காலத்திய விவசாயப் பொருளாதாரங்களிலும் கூட, கார்த்தேஜிலும் ரோமிலும் கூட உண்மையான முதலாளித்துவச் சுரண்டல் முறைக்கு

உரிய வடிவத்தை ஒத்திருப்பதைக் காட்டிலும் தோட்டப் பொருளாதாரத்தையே பெரிதும் ஒத்திருக்கிறது [44] வடிவ அளவான ஓர் ஒன்புமை முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையை நன்கறிந்த ஒருவருக்கு - ஒவ்வொரு பணப்பொருளாதாரத்திலும் ஒரு முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையை கண்டுபிடிக்கும் திருவாளர் மாம்செனுக்கு [45] அல்ல-அடிப்படைக் கூறுகள் அனைத்திலும் அடியோடு ஏமாற்றும் தன்மையதாகி விடுகிறது என்றாலும், பண்டைக் காலத்தில் கண்டத்து இத்தாலியில் எங்குமே காணக்கிடைப்பதில்லை; எப்படியும் சிசிலியில் மட்டுமே இந்த ஒப்புமையை காணமுடிகிறது; ஏனென்றால் இந்தத் தீவு ரோமாபுரிக்கு வேளாண்மை குறுநில அரசாக பயன்பட்டு வந்தது; இதனால் அதன் விவசாயம் ஏற்றுமதியை முக்கிய நோக்கமாய்க் கொண்டிருக்கிறது. நவீன அர்த்தத்தில் சாகுபடியாளர்கள் அங்கிருந்தனர்.

வாடகையின் இயல்பு பற்றிய ஒரு தவறான கண்ணோட்டம் மத்திய காலத்தின் இயற்கைப் பொருளாதாரத்திலிருந்து நவீன காலத்துக்கு கையளிக்கப்பட்டுள்ளது; ஓரளவு திருச்சபைக்கான காணிக்கைகள் என்ற முறையிலும் ஓரளவு நெடுங்காலமாய் நிலைபெற்றிருக்கும் ஒப்பந்தங்களைக் கொண்டு நீடித்து வரும் அதிசயம் என்ற முறையிலும் பண்ட வடிவிலான வாடகையானது முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையில் நிலைமைகளுக்கு அறவே முரணான விதத்தில் இன்றும் நடப்பிலிருப்பதுதான் இந்தத் தவறான கண்ணோட்டத்துக்கு அடிப்படையாகும். வாடகை என்பது விவசாய விளைபொருளின் அளவிலிருந்து வருவதுதானே தவிர அதன் விலையிலிருந்து அல்ல, அதாவது நிலத்திலிருந்து வருவதுதானே தவிர சமூக உறவுகளிலிருந்து வருவது அல்ல என்ற எண்ணம் இதனால் ஏற்படுகிறது. உபரி-மதிப்பு

(44) ஆதாம் ஸ்மித் தமது காலத்தில் (இது நம் காலத்தில் வெப்ப மண்டல நாடுகளிலும் வெப்ப மண்டலத்தை ஒட்டியுள்ள நாடுகளிலும் இருக்கும் தோட்டங்களுக்கும் கூட பொருந்தும்) எப்படி வாடகையும் இலாபமும் இன்னமும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிந்து விலகாமல் இருந்தன என்பதற்கு அழுத்தம் கொடுக்கிறார். (ஸ்மித், நாடுகளில் செல்வம், இதன் இயல்பும் காரணங்களும் பற்றிய ஆய்வு, அபர்தீன், லண்டன், 1848, பக்கம் 44.-ஆங்கிலப்பதிப்பாசிரியர்). ஏனென்றால் நிலவுடைமையாளர் அதேபோது முதலாளியாகவும் இருந்தார்; உதாரணமாக, காட்டோ தமது பண்ணைகளில் இப்படித்தான் இருந்தார். ஆனால் இந்தப் பிரிவினைதான் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறைக்கு இன்றியமையாத முன்னிபந்தனை ஆகும். மேலும் அடிமை முறை என்னும் அடிப்படையே முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை என்னும் கருத்தமைவுக்கு நேர்முரணானது.

(45) திருவாளர் மாம்சென் தமது 'ரோமாபுரி வரலாற்றில்' முதலாளி என்ற சொல்லைப் பயன்படுத்தும்போது நவீனப் பொருளாதார இயலும் நவீன சமுதாயமும் பயன்படுத்தும் அர்த்தத்தில் பயன்படுத்தாமல், இங்கிலாந்திலோ அமெரிக்காவிலோ இல்லையென்றாலும் ஐரோப்பியக் கண்டத்தில் கடந்த கால நிலைமைகளைப் பிரதிபலிக்கும் புராதன மரபென்ற முறையில் இன்னமும் நீடித்து நிலவி வரும் மக்கள் கருத்தைப் போலத்தான் பயன்படுத்துகிறார்.

உபரி-உற்பத்தியாக வெளிபட்ட போதிலும், மறுதலையாக உற்பத்திப் பண்ட அளவிலான அதிகரிப்பை மட்டும் குறித்திடும் உபரி-உற்பத்தி உபரி-மதிப்பு ஆவதாக இதற்கு அர்த்தமில்லை என்று முன்பே தெளிவாக்கினோம். இப்படிப்பட்ட உபரி-உற்பத்தி மதிப்பு வகையில் ஓர் எதிர்மறை அளவினை குறிப்பதாகவும் இருக்கலாம். இல்லையேல் 1840ஆம் வருடத்திய பருத்தித் தொழிலுடன் ஒப்பிடுமிடத்து 1860 ஆம் வருடத்திய பருத்தித் தொழில் மிகப் பெரும் உபரி-மதிப்பைக் காட்டும்; ஆனால் இதற்கு மாறாக நூல் விலை குறைந்திருக்கிறது. அடுத்தடுத்து மகசூல் பொய்த்துப் போவதால் தானிய விலை உயர்ந்து அதனால் வாடகை மிகப்பெருமளவில் உயரலாம்; ஆனால் விலையுயர்ந்து கோதுமையின் விலை அதிகமாயுள்ளதென்றாலும் அறுதியாகக் குறைந்து செல்லும் அளவிலான கோதுமையாக இந்த உபரி-மதிப்பு வெளிப்படலாம். மறுதலையாக அடுத்தடுத்த ஆண்டுகளில் அமோக மகசூல் கண்டு விலை குறைவதால் வாடகை குறையலாம். ஆனால் மலிவானதென்றாலும் கூடுதல் அளவிலான கோதுமையாக இந்தக் குறைந்த வாடகை வெளிப்படலாம். பண்ட வடிவிலான வாடகையைப் பொறுத்தவரை, இப்போது குறிப்பிட வேண்டியது இதுதான்: முதலாவதாக அது வழக்கொழிந்து போனதொரு பொருளுற்பத்தி முறையிலிருந்து வெறும் மரபாக கையளிக்கப்பட்டிருப்பதே ஆகும்; எப்படியோ ஒரு மிச்சமிச்சமாக அது காலந்தள்ளிக் கொண்டிருக்கிறது. அது முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறைக்கு முரணாய் இருப்பதை தனியார் ஒப்பந்தங்களிலிருந்து அது தானாகவே மறைந்து போயிருப்பதிலிருந்து அறியலாம். சட்டநெறியால் தலையிட முடிந்த இடங்களிலெல்லாம் அது ஒரு காலவழுவாய்க் கருதப்பட்டு வலுவந்தமாய் உதறி எறியப்பட்டிருப்பதிலிருந்தும் அறியலாம் - இங்கிலாந்தில் திருச்சபைக் காணிக்கைகள் இப்படித்தான் ஒழிக்கப்பட்டன. ஆனால் இரண்டாவதாக, பண்ட வாடகை முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் அடிப்படையிலும் நீடித்து நிலவிய இடங்களில், மத்திய கால வேடமணிந்த பண-வாடகையின் ஒரு தெரிவிப்பாகத்தான் இருந்தது, அப்படித்தான் இருக்க முடிந்தது, அதற்கு மேல் ஒன்றுமில்லை. எடுத்துக்காட்டாக கோதுமை குவார்ட்டர் ஒன்றுக்கு 40 ஷில்லிங் என விலைகுறிக்கப்பட்டது. இந்தக் கோதுமையில் ஒரு பகுதி அதிலடங்கிய கூலியை மாற்றீடு செய்தாக வேண்டும், மீண்டும் கூலி கொடுக்கும் பொருட்டு விற்கப்பட்டாக வேண்டும். இன்னொரு பகுதி வரிகளில் அதற்குரிய விகிதப் பங்கைச் செலுத்தும் பொருட்டு விற்கப்பட்டாக வேண்டும். முதலாளித்துவப்

பொருளுற்பத்தி முறையும் அத்துடன் சமுதாய உழைப்புப் பிரிவினையும் வளர்ச்சியடைந்துள்ள இடங்களிலெல்லாம் விதைத்தானியமும் உரத்தில் ஒரு பகுதியும் கூட சரக்குகளாக மறுவுற்பத்தி நிகழ்முறையில் சேருகின்றன; ஆகவே இவற்றுக்கான மாற்றீடு விலைகொடுத்து வாங்கப்பட்டாக வேண்டும். குவார்ட்டரில் மற்றுமொரு பகுதி இவற்றுக்கான பணத்தை வழங்கும் பொருட்டு விற்கப்பட்டாக வேண்டும். இவை உள்ளபடியே சரக்குகளாக வாங்கப்பட வேண்டியதில்லை, பண்ட வடிவில் உற்பத்திப் பொருளிலிருந்தே எடுக்கப்பட்டு உற்பத்திச் சாதனங்களாக மறுபடியும் அதன் மறுவுற்பத்தியில் சேருகின்றன என்ற அளவில் வேளாண்மையில் மட்டுமல்லாமல் மாறா-மூலதனத்தை உற்பத்தி செய்யும் வேறுபல உற்பத்திக் கிளைகளிலும் கூட இப்படித்தான் நிகழ்கிறது-கணக்குப் பணமாக பதிவேடுகளில் குறிக்கப் பெற்று, அடக்க-விலைகளின் கூறுகள் என்ற முறையில் கழிக்கப்படுகின்றன. இயந்திர சாதனத்தின் தேய்மானமும் பொதுவாக நிலை-மூலதனத்தின் தேய்மானமும் பண வடிவில் மாற்றீடு செய்யப்பட்டாக வேண்டும். முடிவில் இலாபமானது உண்மைப் பணத்தின் வடிவிலோ கணக்குப் பணத்தின் வடிவிலோ அடக்கச் செலவுகளாகத் தெரிவிக்கப்படும் கூட்டுத் தொகையின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது. இந்த இலாபம் மொத்த உற்பத்தியில் அதன் விலையால் நிர்ணயிக்கப்படும் ஒரு குறிப்பிட்ட பகுதியால் குறிக்கப் பெறுகிறது. இதன் பிறகு எஞ்சி இருக்கும் பகுதி வாடகையாகிறது ஒப்பந்தப்படி வரையறுக்கப்படும் பண்ட வாடகை விலையால் நிர்ணயிக்கப்படும் இந்த மீதப்பகுதியைக் காட்டிலும் கூடுதலாய் இருக்குமானால், அது இலாபத்திலிருந்து செய்யப்பட்ட பிடித்தமாகுமே தவிர வாடகையாகாது. இப்படியொரு சாத்தியப்பாடு இருப்பதாலேயே பண்ட வாடகை வழக்கொழிந்து போன வடிவமாகும்; எப்படியென்றால் அது உற்பத்திப் பொருளில் விலையைப் பிரதிபலிப்பதில்லை; அது உண்மை வாடகையை விட கூடுதலாகவோ குறைவாகவோ இருக்கலாம்; இவ்விதம் இலாபத்திலிருந்து மட்டுமல்லாமல் மூலதன மாற்றீட்டுத் தேவைப்படும் கூறுகளிலிருந்தும் கூட செய்யப்படும் பிடித்தத்தை உள்ளடக்கியதாய் இருக்கலாம். உண்மையில் இந்தப் பண்ட வாடகை பெயரளவில் மட்டுமல்லாமல் சாரத்திலும் கூட வாடகையாக இருக்கும் வரை, உற்பத்திப் பொருளின் விலை அதன் உற்பத்தி-விலை மீது பெற்றுள்ள மிகையால் மட்டுமே நிர்ணயிக்கப்படுகிறது. அது இந்த மாறும் பருமனை மாறாப் பருமனாகக் கொள்கிறது என்பது தவிர வேறொன்றுமில்லை. ஆனால் பண்ட வடிவிலான உற்பத்தி

முதலாவதாகத் தொழிலாளியின் பராமரிப்புக்கும், இரண்டாவதாக முதலாளித்துவக் குத்தகைச் சாகுபடியாளருக்கு தேவைக்கு மேல் உணவு மிச்சப்படுமாறு செய்வதற்கும் போதுமானதாய் இருக்க வேண்டும் என்றும், முடிவில் மீதப் பகுதியானது இயற்கை வாடகையாக அமைய வேண்டும் என்றும் நினைப்பது மனதிற்கு இதமான கருத்தே ஆகும். 200,000 கெஜம் துணி உற்பத்தி செய்யும் ஆலையதிபரின் நிலை இது போன்றதே. இந்தத் துணி அவருடைய தொழிலாளர்கள் உடுத்துவதற்கு போதுமானது, அவருடைய மனைவியும் குழந்தை குட்டிகள் அனைவரும் அவருமே உடுத்துவதற்குப் போதுமானது; ஆனால் அது மட்டுமல்லாமல், துணி வகைகள் ஏராளமாய் வாடகை செலுத்துவதோடு கூடவே விற்பனைக்கும் போதிய துணி எஞ்சுகிறது. எல்லாமே சர்வசாதாரணம்! 200,000கெஜம் துணி என்பதிலிருந்து உற்பத்தி விலையைக் கழித்துவிடுங்கள் உபரித் துணி வாடகையாக எஞ்சியிருந்தாக வேண்டும். ஆனால் விற்பனை-விலையை தெரிந்து கொள்ளாமல் 200,000கெஜம் துணியிலிருந்து உற்பத்தி-விலையை, உதாரணமாய் £ 10,000ஐ கழிப்பது, துணியிலிருந்து பணத்தைக் கழிப்பது, பயன்-மதிப்பிலிருந்து பரிவர்த்தனை-மதிப்பைக் கழிப்பது இப்படியாக பவுன் - ஸ்டெர்லிங் மீது துணி பெற்றுள்ள உபரியை நிர்ணயிப்பது என்பதெல்லாம் வெகுளித்தனமான கண்ணோட்டமே தவிர வேறல்ல, இது வட்டத்தை சதுரமாக்குவதை விட மோசமானது; வட்டத்தை சதுரமாக்குவதற்கு கருத்தளவிலான அடிப்படையானது உண்டு; அதாவது ஓர் எல்லையை அடைந்து விடும் போது நேர்கோடுகளும் வளைகோடுகளும் கண்ணுக்குத் தெரியாதவாறு கலந்து செல்கின்றன. ஆனால் திருவாளர் பாஸி வழங்கும் தீர்வு இதுவேதான். மனத்தளவிலோ மெய்நடப்பிலோ துணி பணமாக மாற்றப்படுவதற்கு முன்பே துணியிலிருந்து பணத்தை கழிக்கிறோம்! எஞ்சுவது வாடகையாகும்; ஆனால் இந்த வாடகையை இயற்கை வழியில் கிரகித்துக் கொள்ள வேண்டுமே தவிர (எடுத்துக்காட்டாக பார்க்கவும் காரல் ஆர்ண்டு )* குதர்க்க வாதத்தில் மாயை வித்தைகளின் மூலம் அல்ல. பண்ட வாடகையை மீட்டெடுத்தல் என்பதெல்லாம் முடிவில் என்னாகிறது என்றால், உற்பத்தி விலையை இத்தனை புஷல் கோதுமையிலிருந்து பிடித்தம் செய்தலும் ஒருகன அளவையிலிருந்து ஒரு பணத் தொகையை கழித்தலுமான முட்டாள்தனமாய் மாறி விடுகிறது.

---

(*) கா. ஆர்ண்டு, Die naturgemässe Volkswirtschaft, gegenüber dem Monopoliengeiste und dem communismus, Hanau 1845, பக்கம் 461-62.- ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

## II. உழைப்பு-வாடகை

நில-வாடகையின் மிகச் சாமானிய வடிவம் **உழைப்பு-வாடகை** ஆகும்; இதில் நேரடி உற்பத்தியாளர் உள்ளபடியோ சட்டப்படியோ தமக்குச் சொந்தமான உழைப்புக் கருவிகளை (ஏர் இழுவை, கால்நடைகள் போன்றவற்றை) பயன்படுத்தி உள்ளபடி தமக்குச் சொந்தமான நிலத்தைச் சாகுபடி செய்வதற்கு வாரத்தில் ஒரு பகுதியைச் செலவிடுகிறார், எஞ்சிய நாட்களில் நிலப்பிரபுவிற்காக அவரது பண்ணையில் கைம்மாறு ஏதுமின்றி பாடுபடுகிறார். இந்த உழைப்பு-வாடகையின் வடிவில் நில-வாடகையைப் பரிசீலிப்போமானால், நிலைமை தெள்ளத் தெளிவாய் உள்ளது; ஏனென்றால் இங்கே வாடகையும் உபரி-மதிப்பும் முழுதொத்தவையாகும். ஊதியமிலாத உபரி-உழைப்பு வெளிப்படுகிற வடிவம் இங்கு வாடகை தானே தவிர இலாபமல்ல. உழைப்பாளி (தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ளும் பண்ணை அடிமை) தனது வாழ்வுக்கு இன்றியமையாத அவசியப் பண்டங்களுக்கு மேல் ஓர் உபரியை, அதாவது முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையில் நாம் கூலி என்று அழைக்கக் கூடியதற்கு மேல் ஓர் உபரியை எந்த அளவுக்கு அடைய முடியும் என்பது - ஏனைய நிலைமைகள் மாறாதிருக்க-அவரது உழைப்பு-நேரம் தமக்கேயான உழைப்பு-நேரமாகவும் நிலப்பிரபுக்கான கட்டாய உழைப்பு-நேரமாகவும் எவ்விதத்தில் பிரிக்கப்படுகிறது என்பதைப் பொறுத்தது. ஆகவே வாழ்வின் இன்றியமையாத் தேவைகள் மீதான இந்த உபரி முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையில் இலாபமாக விளங்குவதன் கருவாகிய இந்த உபரி முழுக்க முழுக்க நில-வாடகையின் அளவாலேயே நிர்ணயிக்கப்படுகிறது; இங்கு இந்த நில-வாடகை நேரடியாக ஊதியமிலா உபரி-உழைப்பாக இருப்பதோடு, அவ்வாறே காட்சியும் அளிக்கிறது. இது உற்பத்திச் சாதனங்களின், 'உடைமையாளருக்கான' ஊதியமிலா உழைப்பு; உற்பத்திச் சாதனங்கள் என்பவை இங்கு நிலத்தைக் குறிப்பவையாகும்; இரண்டுக்கும் வேறுபாடு இருக்கிற அளவில் நிலத்தின் துணைப் பொருட்களை மட்டும் குறிப்பவையாகும். பண்ணையடிமையாள் உற்பத்தி செய்யப்படும் விளைபொருள் இங்கு அவரது வாழ்வுச் சாதனங்களை மட்டுமல்லாமல் உழைப்புச் சாதனங்களையும் மாற்றீடு செய்வதற்கு போதுமானதாய் இருந்தாக வேண்டும் என்பது எல்லாப் பொருளுற்பத்தி முறைகளிலும் மாறாதிருக்கும் நிலைமையாகும். ஏனென்றால் இது அவற்றினது பிரத்தியேக வடிவத்தில் விளைவல்ல; மாறாக ஓயாமல் நடைபெறும் பொதுவான மறுவுற்பத்தித் திறனுள்ள உழைப்புக்கான,

தொடர்ந்து நடைபெறும் எவ்வகை பொருளுற்பத்திக்குமான இயற்கைத் தேவையாகும்; தொடர்ந்து நடைபெறும் பொருளுற்பத்தி என்பது அதேபோது மறுவுற்பத்தியும் ஆகும், அதாவது அதன் செயல்பாட்டு நிலைமைகளின் மறுவுற்பத்தியையும் உள்ளடக்கிய தாகும். மேலும், நேரடி உழைப்பாளி தன் வாழ்வுச் சாதனங்களின் உற்பத்திக்கு அவசியமான உற்பத்திச் சாதனங்கள், உழைப்பு நிலைமைகள் ஆகியவற்றை 'வைத்திருப்பராகவும்' இருந்துவரும் எல்லாவடிவங்களிலும், சொத்துறவு என்பது அதேபோது பிரபுத் தனத்துக்கும் அடிமைத்தனத்துக்குமான நேரடி உறவாகவும் காட்சி யளித்தாக வேண்டும்; அதாவது நேரடி உற்பத்தியாளர் சுதரந்திர மற்றவராய் இருக்கிறார்; இந்தச் சுதந்திரமின்மையை கட்டாய உழைப்புடன் கூடிய பண்ணையடிமைத்தனத்திலிருந்து வெறும் கப்பம் கட்டும் உறவு முறையாகப் பெயர்த்திடலாம். நமது அனுமானப்படி, நேரடி உற்பத்தியாளர் இங்கே உற்பத்திச் சாதனங்களையும் தமது உழைப்பின் ஈடேற்றத்துக்குத் தேவைப்படுகிற அவசியப் பொருளாயத உழைப்பு நிலைமைகளையும் தமது வாழ்வுச் சாதனங்களின் உற்பத்தியையும் தம் வசத்தில் வைத்திருப்பவராகக் காணப்படுகிறார். அவர் தமது வேளாண்மையையும், அதற்குத் தொடர்புள்ள கிராமப்புற வீட்டுத் தொழில்களையும் சுயேச்சையாக நடத்துகிறார். சிறு விவசாயிகள் தம்மிடையே ஏறக்குறைய இயற்கையான உற்பத்திச் சமுதாயத்தை அமைத்துக் கொள்ளலாம்-இந்தியாவில் இப்படித்தான் செய்கிறார்கள்-என்ற காரணியால் இந்த சுயேச்சை தன்மை கெட்டுப் போவதில்லை. ஏனென்றால் இங்கு விவகாரமாய் இருப்பது பண்ணையில் பெயரளவிலான பிரபுவிடமிருந்து சுயேச்சையாய் இருப்பதே ஆகும். இந்நிலைமைகளில், பெயரளவிலான நிலவுடைமையாளருக்கான உபரி-உழைப்பை பொருளாதாரம் அல்லாத வேறுவகை நெருக்குதலை கொண்டு மட்டுமே அவர்களிடமிருந்து கறக்க முடியும் - இந்த நெருக்குதல் எவ்வடிவம் எடுத்தாலும் சரி.[46] இதற்கும் அடிமைப் பொருளாதாரம் அல்லது தோட்டப் பொருளாதாரத்துக்குமான வேறுபாடு என்னவென்றால் அடிமை தமக்கு அந்நியமான உற்பத்திச் சாதனங்களைக் கொண்டு வேலை

---

46. படையெடுத்துச் சென்று ஒரு நாட்டைக் கைப்பற்றிய பின் படையெடுப்பாளரின் உடனடி நோக்கம் அந்நாட்டு மக்களை தன் சொந்த உபயோகத்துக்கு மாற்றிக் கொள்வதாகவே இருந்தது. பார்க்கவும்: லிங்கே (Théorie des loix civiles, ou principes fondamentaux de la societe, பாகம் I-II, லண்டன், 1767.- ஆங்கிலப்பதிப்பாசிரியர்). மேலும் பார்க்கவும்: மோஸர் (Osnabrükische Geschichte, Theil) பெர்லின் மற்றும், ஸ்டெட்டின், பக்கம் 178.- ஆங்கிலப்பதிப்பாசிரியர்.

செய்கிறார்; சுயேச்சையாக வேலை செய்வதில்லை. இவ்வாறு, ஆளுடைமை சுதந்திரமற்ற சார்பு நிலைமைகள் அவசியமாகின்றன. அதாவது ஆளுடைமைச் சுதந்திரத்தை-எந்த அளவுக்கு பறி கொடுத்தாலும் சரி - பறி கொடுப்பதும், நிலத்தோடு அதன் துணைப் பொருளாகப் பிணைக்கப்படுவதும் - அடிமைத்தளை அதன் உண்மையான அர்த்தத்தில் அவசியமாகின்றன. நேரடி உற்பத்தி யாளர்கள் தனியார் நிலவுடைமையாளர்களுக்கு முகங்கொடுக்க வேண்டியதில்லை என்றால், ஆசியாவில் போன்று நேரடியாக அரசே நிலவுடைமையாளராகவும் அதே போது முடிமன்னராகவும் அவர்களை கீழ்ப்படுத்துகிறதென்றால், வாடகையும் வரிகளும் ஒருங்கமைகின்றன; பார்க்கப்போனால் நில-வாடகையின் இவ்வடிவத்திலிருந்து வேறான வரி என்று எதுவும் இருப்பதில்லை. இந்நிலைமைகளில் சார்புறவானது அவ்வரசுக்கு உட்பட்டதற்கெல்லாம் பொதுவான வடிவத்திற்கு மேல் அரசியல் வகையிலோ பொருளாதார வகையிலே வலுவான வடிவமேதும் பெற்றிருக்கத் தேவையில்லை. இங்கு அரசே தலைமை பிரபு ஆகும். இங்கு இறைமை என்பது நாடளாவிய முறையில் குவிக்கப்பெற்ற நிலவுடைமை ஆகும். ஆனால் மறுபுறம், நிலத்தை தனியாராகவும் பொதுவிலும் வைத்துக் கொள்வதும் பயன்படுத்திக் கொள்வதும் உண்டென்றாலும் தனியார் நிலவுடைமை என்ற ஒன்றே இல்லாமற் போகிறது.

ஊதியமிலா உபரி-உழைப்பு நேரடி உற்பத்தியாளர்களிடமிருந்து கறக்கப்படுவதற்கு பயன்படும் பிரத்தியேகமான பொருளாதார வடிவம்தான் ஆளுவோருக்கும் ஆளப்படுவோருக்குமான உறவு முறையைத் தீர்மானிக்கிறது; ஏனென்றால் இந்த உறவு முறை நேரடியாக பொருளுற்பத்தியிலிருந்தே விளைவதும் அதனை நிர்ணயிக்கும் கூறுகளில் ஒன்றாகி அதன் மீது எதிர்வினை புரிவதுமாகும். உள்ளபடியான உற்பத்தி உறவுகளிலிருந்து எழுகிற பொருளாதாரச் சமுதாயத்தின் அமைப்பு முறை அனைத்தும், பிரத்தியேகமான அரசியல் வடிவமும் கூட இந்த உறவு முறையையே அடித்தளமாய் கொண்டுள்ளன. எப்போதுமே உற்பத்திச் சாதன உடைமையாளர் களுக்கும் நேரடி உற்பத்தியாளர்களுக்குமான நேரடி உறவு முறைதான்-இயல்பாகவே எப்போதும் உழைப்பு முறையின் வளர்ச்சியில் குறிப்பிட்ட ஒரு கட்டத்துக்கும், எனவே அதன் சமுதாய உற்பத்தித் திறனுக்கும் ஏற்ப அமைகிற இந்த உறவுமுறைதான் சமூகக்கட்டமைப்பு அனைத்தின் உள் இரகசியத்தை அதில் மறைந்திருக்கும் அடிப்படையை வெளிப்படுத்துகிறது; அதோடு

இறைமைக்கும் சார்பு நிலைக்குமான உறவின் அரசியல் வடிவத்தை, சுருங்கச் சொல்லின் ஒவ்வொரு சந்தர்ப்பத்துக்கும் உரிய பிரத்தியேகமான அரசு வடிவத்தை வெளிப்படுத்துகிறது. ஒரே பொருளாதார அடிப்படை - முக்கிய நிலைமைகளின் கண்ணோட்டத்தில் ஒரே பொருளாதார அடிப்படையாக இருப்பது எண்ணற்ற வெவ்வேறு அனுபவச் சூழல்களின் விளைவாக, இயற்கை நிலைமைகள், மரபின உறவுகள், புறத்திருந்தான வரலாற்றுத் தாக்கங்கள் முதலானவற்றின் விளைவாக தோற்றத்தில் எல்லையற்ற பல மாற்றங்களையும் படிநிலைகளையும் வெளிப்படுத்துவதற்கு இது தடையாவதில்லை; இந்தப் பல்வேறுபட்ட மாற்றங்களையும் படிநிலைகளையும் அனுபவ வகையில் குறிப்பிட்ட நிலைமைகளைப் பகுத்தாராய்வதன் மூலமே புரிந்து கொள்ளமுடியும்.

வாடகையின் மிகச் சாமானிய வடிவமும் ஆதி வடிவமுமாகிய உழைப்பு வாடகையைப் பொறுத்த வரை இந்த அளவுக்குத் தெளிவாகத் தெரிகிறது: வாடகை என்பது இங்கே உபரி-உழைப்பின் ஆரம்ப வடிவமாகவும் அதனுடன் ஒருங்கமைவதாகவும் உள்ளது. ஆனால் உபரி-மதிப்பும் மற்றவர்களின் ஊதியமிலா உழைப்பும் இவ்விதம் ஒருங்கமைவதை இங்கே ஆராயத் தேவையில்லை. ஏனென்றால் இன்னமும் இது கண்ணுக்குப் புலனாகத்தக்க வடிவத்தில்தான் இருந்து வருகிறது. நேரடி உற்பத்தியாளர் தமக்காக ஆற்றிடும் உழைப்பு நிலவுடைமையாளருக்காக அவர் ஆற்றிடும் உழைப்பிலிருந்து இன்னமும் இடவகையிலும் காலவகையிலும் பிரிந்து விலகியே உள்ளது; நிலவுடைமையாளருக்கான உழைப்பு நேரடியாகவே மூன்றாமவருக்கான கட்டாய உழைப்பென்னும் கொடிய வடிவம் காட்சியளிக்கிறது. இதே போல் வாடகையை உற்பத்தி செய்வதற்கு மண்பெற்றுள்ள 'சிறப்பியல்பு' இங்கே யாவரும் தெரிந்து கொள்ளும்படியான பகிரங்க இரகசியமாக மாறிப் போகிறது; ஏனென்றால் இங்கே வாடகை தரும் தன்மை என்பதில் நிலத்தோடு கட்டுண்ட மனித உழைப்புச் சக்தியும் அடங்கும், உழைப்புச் சக்தியில் உடைமையாளரை தம் சொந்த இன்றியமையாத் தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்கு தேவைப்படும் அளவுக்கு மேல் உழைப்புச் சக்தியை இணங்க வைத்து செயற்படுத்துமாறு நிர்பந்திக்கிற உற்பத்தி-உறவும் அடங்கும். வாடகை என்பது நேரடியாகவே உழைப்புச் சக்தியில் இந்த உபரிச் செலவீட்டை நிலவுடைமையாளர் தனதாக்கிக் கொள்வதில் அடங்கியுள்ளது; ஏனென்றால் நேரடி உற்பத்தியாளர் அவருக்குக் கூடுதல் வாடகையேதும் செலுத்துவதில்லை. இங்கே உபரி

-மதிப்பும் வாடகையும் முழுதொத்தவையாக இருப்பது மட்டுமல்லாமல், உபரி-மதிப்பு உபரி-உழைப்பின் புலப்படக் கூடிய வடிவமாகவும் இருக்கிறது; பொதுவாக உபரி-மதிப்பின் இயல்புகள் அல்லது வரம்புகளே வாடகையின் இயல்புகள் அல்லது வரம்புகளாகவும் இருப்பது தெளிவாய்த் தெரிகிறது. நேரடி உற்பத்தியாளர் (1) போதுமான உழைப்புச் சக்தியைப் பெற்றிருக்க வேண்டும்; (2) அவரது உழைப்பின் இயல்புகள், அனைத்துக்கும் மேலாக அவரால் சாகுபடி செய்யப்படும் நிலம் போதிய உற்பத்தித் திறனுள்ளதாய் இருக்க வேண்டும்; சுருங்கச் சொல்லின் அவரது உழைப்பின் இயற்கை உற்பத்தித் திறன் அவருடைய இன்றியமையாத் தேவைகளை நிறைவுசெய்ய அவசியமாவதற்கு மேல் சிறிதளவு உபரி-உழைப்பை தாமே வைத்துக் கொள்ளும் சாத்தியப்பாட்டை அவருக்கு தந்திட - போதுமான அளவுக்குப் பெரியதாய் இருக்க வேண்டும். இந்தச் சாத்தியப்பாடு அல்ல வாடகையைப் படைப்பது; கட்டாயம் செய்வதுதான் இந்தச் சாத்தியப்பாட்டையே மெய்நடப்பாக மாற்றுகிறது. ஆனால் இந்தச் சாத்தியப்பாடே கூட அகவய, புறவய இயற்கை நிலைமைகளுடன் கட்டுண்டு இருப்பதாகும். இங்கேயும் மருமம் எதுவுமில்லை. உழைப்புச் சக்தி அற்பமாகவும் உழைப்பின் இயற்கை நிலைமைகள் சொற்பமாகவும் இருக்குமானால், உபரி-உழைப்பும் குறைவாய் உள்ளது; ஆனால் அப்போது ஒருபுறம் உற்பத்தியாளர்களின் தேவைகளும், மறுபுறம் உபரி-உழைப்பைச் சுரண்டுகிறவர்களின் ஒப்பீட்டு எண்ணிக்கையும் குறைவாகவே உள்ளன; முடிவில் உபரி-உற்பத்தியும் குறைவாகவே உள்ளது-ஒப்பளவில் உற்பத்தித் திறனற்ற இந்த உபரி-உழைப்பு இந்தச் சிறு எண்ணிக்கையிலான சுரண்டும் நிலவுடைமையாளர்களுக்கு இந்த உபரி-உற்பத்தியின் மூலமாகத்தான் ஈடேற்றம் பெறுகிறது.

முடிவில் உழைப்பு-வாடகை என்பதிலிருந்தே பெறப்படுவது என்னவென்றால்; மற்றெல்லா நிலைமைகளும் மாறாதிருக்க இந்த உழைப்பு-வாடகை முழுக்க முழுக்க உபரி-உழைப்பு அல்லது கட்டாய உழைப்பின் ஒப்பளவினையே பொறுத்ததாகும்; எந்த அளவுக்கு நேரடி உற்பத்தியாளரால் தமது நிலைமையை மேம்படுத்திக் கொள்ளவும், செல்வம் ஈட்டவும், தமக்கு இன்றியமையாத வாழ்வுச் சாதனங்களுக்கு மேல் ஓர் உபரியை உற்பத்தி செய்யவும் இயலுமென்பதை பொறுத்ததாகும்; அல்லது, முதலாளித்துவத் தெரிவிப்பு முறையை முன்கூட்டியே ஆளுவதானால், அவரால் தமக்கென்று ஒரு விதமான இலாபத்தை, அதாவது தம்மால் உற்பத்தி செய்யப்பட்டிருக்கக் கூடிய

கூலிக்கு மேல் ஓர் உபரியை உற்பத்தி செய்து கொள்ள இயலுமா என்பதையும், எந்த அளவுக்கு இயலும் என்பதையும் பொறுத்ததாகும். வாடகை என்பது இங்கே உபரி-உழைப்பின் இயல்பான வடிவமாகும், அனைத்தையும் உள்ளிழுத்துக் கொள்கிற வடிவமாகும்; இதை உபரி உழைப்பின் முறைப்படியான வடிவம் என்று சொல்லலாம். இது இலாபத்துக்கு மேல் - அதாவது இங்கே கூலிக்கு மேல் இருக்கும் வேறு ஏதோ ஒரு வகை உபரிக்கு மேல் - மிகையாய் இருப்பதற்கு பதில், இந்த இலாபத்தின் அளவு மட்டுமல்லாமல், இலாபம் என்ற ஒன்று இருப்பதும் கூட மற்ற காரணிகள் மாறாதிருக்க வாடகையின் அளவினைப் பொறுத்தது, அதாவது நிலவுடைமையாளரிடம் ஒப்படைக்கப்பட வேண்டிய கட்டாய உபரி-உழைப்பின் அளவினைப் பொறுத்தது.

நேரடி உற்பத்தியாளர் நிலத்தை வைத்திருப்பவரே தவிர அந்நிலத்தின் உடைமையாளர் அல்லர் என்பதாலும் அவரது உபரி உழைப்பனைத்தும் சட்டப்படி உண்மையில் நிலவுடைமையாளருக்கே சொந்தம் என்பதாலும், கட்டாய உழைப்புக்கு உட்பட்டவர்கள் அல்லது பண்ணையடிமைகள் இந்நிலைமைகளில் சுயேச்சையான சொத்து ஏதும் சம்பாதிப்பது அல்லது ஒப்பளவில் சொன்னால் செல்வம் ஈட்டுவது சாத்தியமாவது குறித்து வரலாற்று ஆசிரியர்கள் சிலர் திகைப்புற்று வியப்பு தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் இந்தச் சமுதாய உற்பத்தி உறவுகளுக்கும் அவற்றுக்குரிய பொருளுற்பத்தி முறைக்கும் அடிப்படையான நிலைமைகளில் - வளர்ச்சி பெறாத ஆதிகாலத்திய நிலைமைகளில் பாரம்பரியம் பெரும் பங்கு வகித்தே தீரும் என்பது தெளிவாகிறது. மேலும், எப்போதும்போல் இங்கேயும் நடப்பிலிருக்கும் ஏற்பாட்டை சட்டமாக அங்கீக்காரம் செய்து, வழக்காற்றின் மூலமும் பாரம்பரியத்தின் மூலமும் நிர்ணயிக்கப்படும் அதன் வரம்புகளை சட்டபூர்வமாய் நிலைநாட்டுவது சமுதாயத்தின் ஆளும் பிரிவினது நலனுக்கேற்றது என்பதும் தெளிவாகிறது. ஏனையவை யாவும் ஒருபுறமிருக்க, நடப்பிலிருக்கும் ஏற்பாட்டின் அடித்தளமும், அதன் அடிப்படை உறவுகளும் ஓயாமல் மறுவுற்பத்தியாதல் நாளா வட்டத்தில் ஒழுங்கமைந்த, முறைப்படியான வடிவம் பெற்றவுடன் மேற்கூறிய நிகழ்வு தானாகவே நடக்கலாகிறது என்பதை இடைக்குறிப்பாகச் சொல்லி வைக்கலாம். ஒரு பொருளுற்பத்தி முறை வெறும் தற்செயலிலிருந்தும் திட்டமற்ற தன்னிச்சைப் போக்கிலிருந்தும் சமுதாய நிலைத்தன்மையும் சுயேச்சை நிலையும் அடைய வேண்டுமானால், இந்த ஒழுங்கும் முறைப்பாடும் அப்பொருளுற்பத்தி

முறையின் இன்றியமையாக் கூறுகளாகும். இவையே அதன் சமுதாய நிலைத்தன்மையின் வடிவமும், ஆகவே திட்டமற்ற வெறும் தன்னிச்சைப் போக்கிலிருந்தும் வெறும் தற்செயலிலிருந்தும் அது பெற்றுள்ள ஒப்பீட்டுச் சுதந்திரத்தின் வடிவமும் ஆகும். பொருளுற்பத்தி நிகழ்முறையும் அதற்குரிய சமூக உறவுகளும் பிற்பட்ட நிலையில் இருக்கும்போது பொருளுற்பத்தி முறை திரும்பத் திரும்ப அவற்றை மறுவுற்பத்தி செய்வதன் மூலமே இந்த வடிவத்தை அடைகிறது. இது சிறிது காலத்துக்கு நீடித்த பின், வழக்காறு என்றும், பாரம்பரியம் என்றும் வேரூன்றி, முடிவில் வெளிப்படையான சட்டமாக அங்கிகாரம் செய்யப்படுகிறது. ஆனால் இந்த உபரி-உழைப்பின் வடிவமாகிய கட்டாய உழைப்பென்பது சமுதாய உற்பத்தித் திறன்கள் அனைத்தும் நிறைவாக வளர்ச்சி பெறாமலிருப்பதையும் உழைப்பு முறையே நேர்த்தி பெறாமல் இருப்பதையும் அடிப்படையாகக் கொண்டிருப்பதால், நேரடி உற்பத்தியாளரின் மொத்த உழைப்பில் அதனால் உறிஞ்சப்படும் பகுதி வளர்ச்சி பெற்ற பொருளுற்பத்தி முறைகளில் முக்கியமாய் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையில் உறிஞ்சப்படும் பகுதியைக் காட்டிலும் ஒப்பளவில் மிகக் குறைவாகவே இருக்கும் என்பது இயல்பானதே. எடுத்துக்காட்டாக நிலவுடைமையாளருக்கான கட்டாய உழைப்பு ஆரம்பத்தில் வாரமொன்றுக்கு இரண்டு நாள் என்று வைத்துக் கொள்வோம். வாரமொன்றுக்கு இரண்டு நாள் என்னும் இந்தக் கட்டாய உழைப்பு இதனால் நிலைபெற்று, மாறாப் பருமனாகி வழக்காற்றுச் சட்டத்தாலோ ஏடேறியச் சட்டத்தாலோ சட்டபூர்வமாய் ஒழுங்கு செய்யப்படுகிறது. ஆனால் வாரத்தில் எஞ்சியுள்ள நாட்கள் நேரடி உற்பத்தியாளர்களின் வசம் உள்ளனவே, அந்த நாட்களின் உற்பத்தித் திறன் மாறும்-பருமானகும்; அவரது அனுபவச் செழுமை வளர வளர, இந்த உற்பத்தித் திறனும் வளர்ந்தே தீரும்; அதே போல் அவருக்கு பரிச்சமாகிற புதிய தேவைகளும், அவர் உற்பத்தி செய்கிற பண்டத்துக்கான சந்தை விரிவடைவதும், அவர் தமது உழைப்புச் சக்தியின் இந்தப் பகுதியை மேன்மேலும் தன்னம்பிக்கையுடன் பயன்படுத்திக் கொள்ள முடிவதும் இன்னுமதிகமாய் பாடுபட்டு உழைப்பதற்கு அவரைத் தூண்டுகின்றன; அவர் தமது உழைப்புச் சக்தியைப் பயன்படுத்திக் கொள்ளுதல் என்பது வேளாண்மையோடு நின்று விடாமல், கிராமப்புற வீட்டுத் தொழிலையும் அளாவுவதை மறக்கலாகாது. இது ஒரு விதமான பொருளாதார வளர்ச்சிக்குரிய சாத்தியப்பாட்டைத் தோற்றுவிக்கிறது; ஆனால் இந்தப் பொருளாதார வளர்ச்சி சாதகமான நிலைமைகளையும் இயல்பாய் அமைந்த மரபினைத் தனிப் பண்புகளையும் இன்ன பிறவற்றையும் பொறுத்ததுதான்.

## III. பண்ட-வாடகை

உழைப்பு-வாடகை பண்ட-வாடகையாக மாற்றமடைவதால் பொருளாதாரக் கண்ணோட்டத்தில் நில-வாடகையின் தன்மையில் எவ்வித மாற்றமும் ஏற்படுவதில்லை. நாம் இங்கு பரிசீலித்துக் கொண்டிருக்கும் வடிவங்களில் நில-வாடகையானது உபரி-மதிப்பு அல்லது உபரி-உழைப்பின் ஒரே முதன்மையான வடிவமும் இயல்பான வடிவமும் வாடகைதான் என்பதில் அடங்கியுள்ளது. தனது மறுவுற்பத்திக்குத் தேவையான உழைப்புச் சாதனங்களை வைத்திருக்கும் நேரடி உற்பத்தியாளர் இந்தக் கட்டத்தில் அனைத்தையும் உள்ளடக்கிய உழைப்புச்சாதனமாக இருக்கும் நிலத்தின் உடைமையாளருக்கு விட்டுத் தந்தாக வேண்டிய உபரி-உழைப்புதான், அல்லது உபரி-உற்பத்திதான் என்ற உண்மையின் வாயிலாகவும் இது வெளிப்படுகிறது. மேலும், நேரடி உற்பத்தியாளரை அவருக்கு அந்நியமான உடைமையாக, அவரைச் சாராமல் சுயேச்சையாக இருப்பதும் நிலவுடைமையாளரை ஆளுருவமாகக் கொண்டதுமான உடைமையாக எதிர்நோக்கும் ஒரே உழைப்புச் சாதனம் நிலம்தான் என்பதிலும் இது வெளிப்படுகிறது. பண்ட-வாடகை எந்த அளவுக்கு நில-வாடகையின் முதன்மையான ஆதிக்க வடிவமாக இருந்த போதிலும், முற்காலத்திய வடிவத்தின், அதாவது நேரடியாக உழைப்பின் வடிவில், கார்வே உழைப்பின் வடிவில் செலுத்தப்படும் வாடகையின் மிச்ச சொச்சங்கள் எப்போதுமே அதனோடு ஏறக்குறைய சேர்ந்து வருகின்றன; நிலவுடைமையாளர் தனியாரா, அரசா என்பது இங்கே கருத்துக்குரியதல்ல. பண்ட-வாடகை என்பது நேரடி உற்பத்தியாளர் நாகரீக வளர்ச்சியில் ஓர் உயர்ந்த கட்டத்தில், அதாவது அவரது உழைப்பின் வளர்ச்சியிலும் பொதுவாக சமுதாயத்தின் வளர்ச்சியிலும் ஓர் உயர்ந்த படித்தரத்தில் இருப்பதைக் குறிப்பதாகும்: உபரி-உழைப்பு முன்போல் இப்போது அதன் இயற்கை வடிவில் ஆற்றப்படத் தேவையில்லை, அதாவது நிலவுடைமையாளர் அல்லது அவருடைய பிரதிநிதிகளின்-நேரடி மேற்பார்வையிலும் கட்டாயத்திலும் ஆற்றப்படத் தேவையில்லை என்ற அளவில் பண்ட-வாடகை முன் சென்ற வடிவத்திலிருந்து வேறானதாகும்; நேரடி உற்பத்தியாளர் சொந்தப் பொறுப்பில் உபரி-உழைப்பை ஆற்றுவதற்கு நேரடி வலுவந்தத்தால் இயக்கப்படுவதற்குப் பதில் சூழ்நிலைமைகளின் சக்தியால் இயக்கப்படுகிறார். சவுக்கடியால் இயக்கப்படுவதற்கு பதில் சட்டநெறியால் இயக்கப்படுகிறார். நேரடி உற்பத்தியாளரின்

இன்றியமையாத் தேவைகளுக்கு மேல் அதிகமாகவும் நடைபெறும் உற்பத்தி என்ற அர்த்தத்தில் உபரி-உற்பத்தி என்பது இங்கு ஏற்கெனவே கூறாது விளங்கும் விதியாகி விட்டது; உள்ளபடியே அவருக்குச் சொந்தமானதோர் உற்பத்திக் களத்தில், அவரே பயன்படுத்திக் கொள்கிற நிலத்தில் தம் சொந்தப் பண்ணைக்கு அருகிலிருக்கும் நிலப்பிரபுவின் பண்ணைக்கு பதில் தாமே பயன்படுத்திக் கொள்ளும் நிலத்தில் உபரி-உற்பத்தி என்பதும் கூறாமல் விளங்குவதாகி விட்டது. இந்த உறவில் நேரடி உற்பத்தியாளர் தமது உழைப்பு-நேரம் அனைத்தையும் பெரும்பாலும் பயன்படுத்திக் கொள்கிறார்; ஆனால் முன்போலவே அவரது உழைப்பு நேரத்தில் ஒரு பகுதி, முதலில் அநேகமாய் அதன் உபரி-பகுதி அனைத்தும் இழப்பீடின்றி நிலவுடைமையாளருக்குச் சொந்தமாகும்; ஆனால் நிலவுடைமையாளர் முன்போல் இப்போது நேரடியாக இந்த உபரி-உழைப்பை அதன் இயற்கை வடிவில் பெறுவதில்லை; உழைப்பு ஈடேற்றம் பெறுவதால் வரப்பெறும் விளைபொருட்களின் இயற்கை வடிவில்தான் அதைப் பெறுகிறார். பண்ட-வாடகை தூய வடிவில் தலையெடுக்கும் இடங்களிலெல்லாம், நிலவுடைமையாளர் சலிப்பூட்டுகிற விதத்திலும் ஏறக்குறைய ஓயாமலும் உழைப்பில் குறுக்கிடுவது-கட்டான உழைப்பிற்குரிய இந்தத் தன்மை (பார்க்கவும்; முதல்பாகம், அத்தியாயம் X, பிரிவு 2. ('ஆலையதிபரும் போயார்டும்') - ஒழிந்து விடுகிறது; அல்லது எப்படியும் ஆண்டில் ஒரு சில குறுகிய இடைக்காலங்களில் நடைபெறுவதாக சுருங்கி விடுகிறது; இந்த இடைக்காலங்களில் பண்ட -வாடகையுடன் கூடவே ஓரளவு கார்வே உழைப்பும் நீடிக்கிறது. உற்பத்தியாளர் தமக்காக ஆற்றும் உழைப்பும் நிலவுடைமை யாளருக்காக ஆற்றும் உழைப்பும் முன்போல் இப்போது காலவகையிலும் இடவகையிலும் புலப்படத்தக்கவாறு தனித்தனியாகப் பிரிந்திருப்பதில்லை. இந்தப் பண்ட-வாடகை இன்னுங்கூட வளர்ச்சி பெற்ற பொருளுற்பத்தி முறைகளுக்குள்ளும் உற்பத்தி உறவுகளுக்குள்ளும் துண்டு துக்காணிகளாகி நுழையக் கூடும் என்றாலும், அதன் தூய வடிவில் இருக்கும் போது இயற்கைப் பொருளாதாரத்தையே முன்தேவையாகக் கொண்டுள்ளது; அதாவது பண்ட - வாடகை என்ற ஒன்று இருக்க வேண்டுமானால் பொருளாதார நிலைமைகள் முற்றாகவோ பெரும்பகுதியாகவோ பொருளாதார அலகினாலோ உற்பத்தி செய்யப்பட வேண்டும், நேரடியாக அதன் மொத்த-உற்பத்திப் பண்டத்திலிருந்தே மாற்றீடும் மறுவுற்பத்தியும் செய்யப்பட வேண்டும். மேலும் கிராமப்புற வீட்டுத் தொழில்

வேளாண்மையுடன் ஒன்றித்திருக்க வேண்டும். வாடகையாக அமைந்திடும் உபரி-உற்பத்தி, இவ்விதம் ஒன்றித்த விவசாய மற்றும் தொழில்துறை குடும்ப உழைப்பின் உற்பத்திப் பொருளே ஆகும்; பண்ட-வாடகையில் ஒரு பகுதி தொழில்துறை உற்பத்திப் பண்டமாக இருக்கலாம்-மத்திய காலத்தில் பெரும்பாலும் இப்படித்தான் இருந்தது; உள்ளபடியே முறையான விவசாய விளைபொருட்களாக மட்டுமே பண்ட-வாடகை செலுத்தப்படுவதும் உண்டு. இந்த வாடகை வடிவத்தில் உபரி-உழைப்பைக் குறிப்பதாகிய பண்ட-வாடகை கிராமப்புற குடும்பத்தின் உபரி - உழைப்பு அனைத்தையும் முழுமையாக உறிஞ்சி விட வேண்டும் என்ற அவசியம் ஏதுமில்லை. உற்பத்தியாளர் தம் இன்றியமையாத் தேவைகளை நிறைவு செய்வதற்கான தமது உழைப்பின் உற்பத்திப் பொருளைப் போலவே ஒரு பகுதி உபரி-உழைப்பின் உற்பத்திப் பொருளையும் தமக்குச் சொந்தமாக்கிக் கொள்கிறார் அல்லவா, அந்த உபரி-உழைப்புக்கென்று அவர் நேரம் சம்பாதிப்பதற்கு உழைப்பு-வாடகையுடன் ஒப்பிடுங்கால் பண்ட-வாடகை கூடுதலாய் இடங்கொடுக்கிறது. இதே போல் இந்த வாடகை வடிவமானது தனிப்பட்ட நேரடி உற்பத்தியாளர்களின் பொருளாதார நிலையிலும் கூடுதலான வேறுபாடுகளைத் தோற்றுவிக்கும். எப்படிப்பார்த்தாலும் இப்படி நிகழும் சாத்தியப்பாடாவது உள்ளது; நேரடி உற்பத்தியாளரே மற்றவர்களின் உழைப்பைச் சுரண்டுவதற்கான சாதனங்களை ஈட்டிக் கொள்ளும் சாத்தியப்பாடும் உள்ளது. ஆனால் இதெல்லாம் இங்கும் நம் கருத்துக்குரியதல்ல, ஏனென்றால் நாம் பண்ட - வாடகையை அதன் தூய வடிவில் ஆராய்கிறோம். இதே போலத்தான் பொதுவாகச் சொன்னால், பல்வேறு வாடகை வடிவங்களும் ஒன்றாகியும் கூடியும் கலந்தும் இருக்கும்படியான முடிவே இல்லாத பல்வகைப்பட்ட இணைவுகளை நாம் ஆராய முடியாது. பண்ட-வாடகை என்கிற வடிவம் குறிப்பிட்ட ஒரு வகை உற்பத்திப் பண்டத்தோடும் உற்பத்தியோடும் கண்டுண்டு இருப்பதாலும், வேளாண்மையும் வீட்டுத் தொழிலும் ஒன்றித்திருப்பது அதற்கு இன்றியமையாததாய் இருப்பதாலும், இதனால் விவசாயியின் குடும்பம் அநேகமாய் முழுமையான தன்னிறைவு அடைந்திருப்பதாலும், அந்தக்குடும்பம் சந்தையையும் அதன் வட்டத்துக்கு வெளியிலிருக்கும் சமுதாயப் பிரிவின் பொருளுற்பத்தி மற்றும் வரலாற்றின் இயக்கத்தையும் சாராதிருப்பதாலும், சுருங்கச் சொல்லின் இந்த வாடகை வடிவம் பொதுவாக இயற்கைப் பொருளாதார தன்மையதாய் இருப்பதாலும் மாறாமல் நிலைத்து நிற்கும் சமூக

நிலைமைகளுக்கு பண்ட-வாடகை மிகவும் பொருத்தமான அடிப்படை ஆகிறது - எடுத்துக்காட்டாக ஆசியாவில் நாம் காண்கிற நிலைமைகளைக் குறிப்பிடலாம். முன்சென்ற வடிவமாகிய உழைப்பு-வாடகையில் போலவே இயல்பான வடிவமாய், அதாவது நேரடி உற்பத்தியாளர் தமது அத்தியாவசிய உழைப்புச் சாதனமாகிய நிலத்தின் உடைமையாளருக்காக இலவசமாய், எனவே உண்மையில் கட்டாயத்தின் பேரில் (இப்போது அவர் மிருகத்தனமான பழைய வடிவில் கட்டாயப்படுத்தப்படா விட்டாலும்) ஆற்ற வேண்டிய மிகையுழைப்பு அனைத்தின் இயல்பான வடிவமாய் நில-வாடகை அமைகிறது. அவர் தமது உழைப்பில் அவசிய-உழைப்புக்கு மேல் மிகைப்படுவதில் ஒரு சிறு பகுதியை தமக்கென்று தக்க வைத்துக் கொள்கிறார் அல்லவா, அந்தப் பகுதியை முன் கூட்டியே தவறான முறையில் இலாபமென்று தவறாக பெயரிட்டு அழைக்கலாம் என்றால், இந்த இலாபத்துக்கும் பண்ட-வாடகை நிர்ணயிக்கப்படுவதற்கும் அவ்வளவாய் தொடர்பு இல்லை; மாறாக இந்த இலாபமானது வாடகையின் முதுகுக்குப் பின்னால் வளர்ந்து பண்ட-வாடகையின் அளவினை அதன் இயற்கை வரம்பாகக் கொண்டுள்ளது. பண்ட வாடகையானது - உழைப்புச் சாதனங்களின், உற்பத்திச் சாதனங்களின் மறுவுற்பத்திக்கு கடும் ஆபத்தை ஏற்படுத்துகிற அளவுக்குப் போய்விடலாம்; இதனால் உற்பத்திப் பெருக்கத்தின் சாத்தியப்பாடு பெரும்பாலும் தடைபட்டு, நேரடி உற்பத்தியாளர்கள் உடல் தேவைக்கு குறைந்தபட்ச அளவான வாழ்வுச் சாதனங்களை மட்டும் அடையும் நிலைக்கு தாழ்த்தப்படுகின்றனர். குறிப்பாகச் சொன்னால், படையெடுத்து வெற்றி கொள்ளும் வாணிக நாட்டினர் (எடுத்துக்காட்டாக இந்தியாவில் ஆங்கிலேயர்) இந்த வாடகை வடிவம் நிலவக் கண்டு, அதனை தம் சுரண்டலுக்கு பயன்படுத்திக் கொள்ளும்போது நடப்பது இதுவே.

## IV. பண-வாடகை

எப்படி உழைப்பு-வாடகை உருமாறி பண்ட-வாடகை ஆகிறதோ, அதேபோல் பண்ட-வாடகை வடிவத்தில் மட்டும் மாற்றமடைவதால் பெறப்படும் நில-வாடகையைத்தான் இங்கு பண-வாடகை என்று சொல்கிறோம்-இந்தப் பண - வாடகை சராசரி இலாபத்திற்கு மேல் ஓர் உபரி முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் அடிப்படையிலான, சராசரி-இலாபத்திற்கு மேல் ஓர் உபரி மட்டுமேயான தொழில்துறை மற்றும் வாணிகத்துறை நில-வாடகையிலிருந்து வேறானதாகும்.

இங்கு நேரடி உற்பத்தியாளர் நிலவுடைமையாளரிடம் (நிலவுடைமை யாளராய் இருப்பது அரசானாலும் சரி தனியாரானாலும் சரி) விளைபொருளைக் கொடுப்பதற்கு பதில் அதன் விலையைக் கொடுக்கிறார். விளைபொருட்கள் அவற்றின் இயற்கை வடிவில் மிகையாய் இருப்பது முன்போல் இப்போது போதுமானதல்ல; இயற்கை வடிவத்திலிருக்கும் இந்த மிகையளவு பண-வடிவத்திற்கு மாற்றப்பட்டாக வேண்டும். நேரடி உற்பத்தியாளர் தொடர்ந்து இப்போதும் தமக்குத் தேவையான வாழ்வுச் சாதனங்களின் எப்படியும் பெரும் பகுதியானவற்றை தாமே உற்பத்தி செய்து கொள்கிறார் என்றாலும், அவர் உற்பத்தி செய்வதில் ஒரு பகுதி இப்போது சரக்குகளாக மாற்றப்பட வேண்டும், சரக்குகளாக உற்பத்தி செய்யப்பட வேண்டும். ஆக, பொருளுற்பத்தி முறையின் தன்மை ஓரளவு மாற்றப்படுகிறது. அது தன் சுயேச்சையை, சமூக தொடர்பற்று தனித்திருக்கும் நிலையை இழக்கிறது. உற்பத்திச் செலவின் விகிதம் தீர்மானகரமானதாகிறது; இந்த உற்பத்திச் செலவு இப்போது ஓரளவுக்கு பணச் செலவீடுகளையும் உள்ளடக்கியதாகும்; எப்படிப் பார்த்தாலும், மொத்த உற்பத்திப் பண்டத்தில் பணமாக மாற்றப்பட வேண்டிய பகுதியானது ஒருபுறம் மீண்டும் மறுவுற்பத்திச் சாதனங்களாகவும், மறுபுறம் நேரடி வாழ்வுச் சாதனங்களாகவும் பயன்பட வேண்டிய பகுதிக்கு மேல் பெற்றுள்ள மிகை தீர்மானிக்கும் பங்கு வகிக்கலாகிறது. ஆனால் இவ்வகை வாடகையின் அடிப்படையும்-இது தன் குலைவை நெருங்கிக் கொண்டிருந்த போதிலும் - இவ்வகை வாடகையின் தொடக்க முனையாக அமைந்திடும் பண்ட-வாடகையின் அடிப்படையும் ஒன்றுதான். முன்போலவே இப்போதும் நேரடி உற்பத்தியாளர்தான் பரம்பரைச் சொத்துரிமையின் மூலமாகவோ, வேறு ஏதேனும் மரபுரிமையின் மூலமாகவோ நிலத்தை தம் வசம் வைத்திருக்கிறார்; அவர் தமக்கு இன்றியமையாத உற்பத்திச் சாதனத்தின் உடைமையாளராக இருக்கும் நிலபிரபுவுக்காக உபரி-உழைப்பை, அதாவது சமதை பெறாமல் தரப்படும் ஊதியமிலா உழைப்பை, பணமான மாற்றப்படும் உபரி-உற்பத்தியின் வடிவில் வழங்கியாக வேண்டும். நிலமல்லாத உழைப்புச் சாதனங்களாகிய உழுபடைக் கருவிகள், சங்கம உடைமைகள் போன்றவற்றிலான சொத்து பழைய வாடகை வடிவங்களிலேயே, முதலில் நடப்பிலும், பிறகு சட்டத்திலும் கூட நேரடி உற்பத்தியாளரின் சொத்தாக மாற்றப்படுகிறது; பண-வாடகை வடிவத்திற்கு இன்னுமதிகமாகவே இது முன்நிபந்தனை ஆகிறது. பண்ட- வாடகை பண-வாடகையாக மாற்றமடைதல் முதலில்

சிதறலாகவும், பிறகு அநேகமாய் நாடு தழுவிய அளவிலும் நடைபெறுகிறது. வர்த்தகமும் நகர்ப்புறத் தொழில் துறையும் பொதுவாகச், சரக்கு-உற்பத்தியும், எனவே பணச்சுற்றோட்டமும் கணிச வளர்ச்சி கண்டிருந்தால்தான் இந்த மாற்றம் ஏற்பட முடியும். மேலும் உற்பத்திப் பண்டங்களுக்கு சந்தை-விலை என்ற ஒன்று இருப்பதும், அவை சற்றேறக்குறைய அவற்றின் மதிப்புகளுக்கு சமமான விலைகளுக்கு விற்கப்படுவதும் பண-வாடகைக்கு அவசியமாகும்; முந்தைய வாடகை வடிவங்களுக்கு இப்படி இருக்க வேண்டிய அவசியமே இல்லை. கிழக்கு ஐரோப்பாவில் இன்றும் ஓரளவுக்கு இந்த மாற்றம் நம் கண் எதிரிலேயே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சமுதாய உழைப்பின் உற்பத்தித் திறன் ஓரளவுக்கு வளர்ச்சியடையாமல் இந்த மாற்றம் ஏற்படுதல் எத்துணை அரிது என்பதற்கு ரோமானிய பேரரசில் இந்த மாற்றத்தைக் கொண்டு வருவதற்கான பல்வேறு முயற்சிகளும் தோல்விடைந்ததும், இந்த வாடகையின் அரசு வரிப் பகுதியை மட்டுமாவது பண - வாடகையாக மாற்றிட அவர்கள் முயன்று பார்த்தபிறகு பண்ட-வாடகையே பழையபடி தலைதூக்கியதும் சான்றுகளாகும். எடுத்துக்காட்டாகச் சொல்வதென்றால், புரட்சிக்கு முற்பட்ட பிரான்சிலும் பண-வாடகை அதற்கு முன்சென்ற-வடிவங்களின் மீதமிச்சங்களோடு இணைக்கப்பட்டு கலப்படம் செய்யப்பட்டபோது மாற்றம் தொடர்பான இதே இடர்ப்பாடுகள் காணப்பட்டன.

ஆனால் பண்ட- வாடகையின் மாறிய வடிவம் என்ற முறையிலும், பண்ட-வாடகைக்கு எதிர்நிலையா என்ற முறையிலும் பண-வாடகை என்பது நாம் இதுகாறும் பரிசீலித்து வரும் வகையைச் சேர்ந்த நில - வாடகையின், - அதாவது உபரி-மதிப்பின், இயல்பான வடிவம், உற்பத்திச்சாதனங்களின் உடைமையாளருக்காக ஆற்றப்பட வேண்டிய ஊதியமிலா உபரி-உழைப்பின் இயல்பான வடிவம் என்ற முறையிலான நில-வாடகையின் - இறுதி வடிவமும், அதே போது அதன் குலைவின் வடிவமும் ஆகும். உழைப்பு-வாடகையையும் பண்ட - வாடகையையும் போலவே இந்தப் பண-வாடகையும் அதன் தூயவடிவில் இலாபத்திற்கு மேலதிகமான உபரி எதையும் குறிப்பதல்ல. கருத்துருவத்தில் அது இலாபத்தை உள்ளடக்கியதாகும். இலாபம் என்பது நடைமுறையில் உபரி-உழைப்பில் தனியொரு பகுதியாக இந்த வாடகைக்கு புறத்தே தலையெடுக்கிற அளவில், முன்சென்ற வாடகை வடிவங்களைப் போலவே பண-வாடகையும் கருநிலையிருக்கும் இந்த இலாபத்திற்கு இயல்பான வரம்பாக அமைகிறது; பண-

வாடகையால் குறிக்கப்பெறும் உபரி - உழைப்பை ஆற்றி முடித்த பின் எஞ்சியிருக்கும் அவரவரின் மிகையுழைப்பையோ வேறொருவரின் மிகையுழைப்பையோ சுரண்டும் சாத்தியப்பாட்டுக்கேற்ற விகிதத்தில் தான் இந்த இலாபம் வளர முடியும். இந்த வாடகையுடன் கூடவே உண்மையில் இலாபமேதும் தலையெடுக்குமானால், இந்த இலாபம் வாடகைக்கு வரம்பாக அமைவதற்கு மாறாக வாடகைதான் இலாபத்திற்கு வரம்பாகிறது, ஆனால் பண-வாடகை என்பது அதே போது இதுவரை பரிசீலிக்கப்பட்ட நில - வாடகையின், எடுத்த எடுப்பில் உபரி-மதிப்போடும் உபரி-உழைப்போடும் ஒருங்கமையும் நில-வாடகையின், அதாவது உபரி-மதிப்பின் இயல்பான, மேலோங்கிய வடிவமாய் இருக்கும் நில-வாடகையின் குலைவுக்கான வடிவமும் ஆகும் என்று சுட்டிக் காட்டினோம்.

பண-வாடகை மேலும் வளர்ந்து செல்லும் போது-சிறுவிவசாய குத்தகைச் சாகுபடியாளர் என்பது போன்ற இடைநிலை வடிவங்களை யெல்லாம் ஒதுக்கிவிட்டுப் பார்த்தால்-நிலம் விவசாயிகளின் வில்லங்கமற்ற உடைமையாக மாற்றமடைவதற்கோ, முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறைக்கு ஏற்ற வாடகை வடிவமாகிய முதலாளித்துவச் சாகுபடியாளரால் செலுத்தப்படும் வாடகைக்கோ இட்டுச்சென்றே தீரும்.

பண-வாடகை மேலோங்கியிருக்கும் போது நில-பிரபுக்கும் நிலத்தில் ஒரு பகுதியை தம் வசம் வைத்திருந்து சாகுபடி செய்கிற குடிகளுக்கும் இடையிலான வழக்காற்றுச் சட்டப்படியமைந்த மரபுவழி உறவுமுறை தவிர்க்க முடியாதவாறு ஒப்பந்த உறவுமுறையாக, திட்டவட்டமான சட்ட விதிகளால் நிர்ணயிக்கப்படும் பரிசுத்தமான காசுபண உறவுமுறையாக மாற்றமடைகிறது. நிலத்தை தம் வசம் வைத்திருந்து சாகுபடியில் ஈடுபட்டிருப்பவர் இவ்விதம் செயலளவில் வெறும் குத்தகையாளர் ஆகி விடுகிறார். பொதுவாக உற்பத்தி உறவுகள் இடமளிக்குமானால் இந்த மாற்றமானது ஒருபுறம் நிலம் வைத்திருக்கும் பழைய விவசாயிகள் கொஞ்சம் கொஞ்சமாய் உடைமைப்பறிப்புக்கு ஆளாவதற்கும் அவர்களுக்கு பதில் முதலாளித்துவச் சாகுபடியாளர்கள் ஆளாவதற்கும் பயன்படுகிறது. மறுபுறம், முன்பு நிலத்தை தம் வசம் வைத்திருப்பவராக மட்டும் இருந்தவர் உரிய விலை கொடுத்து தமது வாடகைக் கடப்பாட்டிலிருந்து விடுபடுவதற்கும், தாம் உழுகிற நிலத்தில் முழுச் சொத்துரிமை கொண்ட சுயேச்சை விவசாயியாக அவர் மாறுவதற்கும் இது வழி செய்கிறது. மேலும் பண்ட-வாடகை பண-

வாடகையாக மாற்றமடையும்போது பணத்துக்காக வேலை செய்யும் உடைமையற்ற நாள் கூலித் தொழிலாளர் வர்க்கம் தவிர்க்க முடியாமலே இம்மாற்றத்துடன் சேர்ந்து உருவாவது மட்டுமல்லாமல், இம்மாற்றத்துக்கு முன்னரும் கூட உருவாகிறது. இந்த புதிய வர்க்கம் அதன் பிறப்பின் போது சிதறலாகவே தலையெடுக்கையில், வாடகை செலுத்த வேண்டிய விவசாயிகளில் அதிக வசதி படைத்தவர் களிடையே தமக்காக விவசாயக் கூலித் தொழிலாளர்களை சுரண்டும் வழக்கம் வளர்கிறது; பிரபுத்துவக் காலத்தில் அதிக வசதிபடைத்த விவசாய பண்ணையடிமைகளும் தமக்கென்று பண்ணயடிமைகள் வைத்திருந்ததைப் பெரிதும் ஒத்த நிகழ்வாகும் இது. வசதிபடைத்த இந்த குத்தகை விவசாயிகள் பைய பைய குறிப்பிட்ட அளவு செல்வம் திரட்டுவதும், அவர்களே வருங்கால முதலாளிகளாக மாற்ற மடைவதும் இவ்வழியில் சாத்தியமாகிறது. இவ்வாறு ஏற்கெனவே நிலத்தை தம் வசம் வைத்திருந்து அதில் வேலை செய்து வந்தவர்களிடையே இவ்விதம் முதலாளித்துவச் சாகுபடியாளர் களுக்கான நாற்றங்கால் உருவாகிறது. இந்தச் சாகுபடியாளர்களின் வளர்ச்சியை கிராமப்புறத்தின் எல்லைக்கப்பால் முதலாளித்துவப் பொருளுற்பத்தி அடையும் பொதுவான வளர்ச்சி கட்டுப்படுத்துகிறது. மிகவும் சாதகமான நிலைமைகள் துணைசெய்யும் போது இந்த வர்க்கம் மிகத் துரிதமாய் வளர்ந்து முன்னேறுகிறது; எடுத்துக்காட்டாக இங்கிலாந்தில் 16ஆம் நூற்றாண்டில் இப்படித்தான் நிகழ்ந்தது; பணம் அப்போது தொடர்ந்து மேன்மேலும் மதிப்பிறக்கம் அடைந்து கொண்டிருந்ததால், அவர்கள் வழக்கப்படியான நீண்டகால குத்தகை களின் துணைகொண்டு நிலவுடைமையாளர்களின் செலவில் செல்வந்தர்களானார்கள்.

மேலும் வாடகை பண-வாடகையாக வடிவெடுத்தவுடனே இதனால் வாடகை செலுத்தும் விவசாயிக்கும் நிலபிரபுக்கும் இடையிலான உறவுமுறை ஒப்பந்தத்தால் நிர்ணயிக்கப்படும் உறவு முறையாக மாறியவுடனே - பொதுவாகச் சொன்னால், உலகச் சந்தையும் வாணிகமும் பட்டறைத் தொழிலும் ஒப்பளவில் உயர்ந்ததான குறிப்பிட்ட வளர்ச்சி நிலையை அடைந்திருக்கும் போதுதான் இந்த மாற்றம் சாத்தியமாகும்-நிலத்தை முதலாளிகளிடம் குத்தகைக்கு விடும் வழக்கமும் தவிர்க்க முடியாதவாறு வந்து சேருகிறது. இதுவரை கிராமபுறத்தின் எல்லைக்கு வெளியே நின்றிருந்த இம்முதலாளிகள் நகரங்களில் சம்பாதித்த மூலதனத்தையும் அதோடு வளர்ச்சி பெற்ற முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையையும் - அதாவது ஒரு

பண்டத்தை வெறும் சரக்காகவும், உபரி-மதிப்பைத் தனதாக்கும் சாதனமாகவும் மட்டுமே உற்பத்தி செய்யும் முறையை-கிராமப்புறத்துக்கும் வேளாண்மைத்துறைக்கும் கொண்டு வந்து சேர்க்கின்றனர். பிரபுத்துவப் பொருளுற்பத்தி முறையிலிருந்து முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறைக்கு மாறிச் செல்லும் காலத்தில் உலகச் சந்தையில் ஆதிக்கம் வகிக்கும் நாடுகளில் மட்டுமே இந்த வடிவம் பொது நியதி ஆக முடியும். நிலவுடைமையாளருக்கும் உள்ளபடியே நிலத்திலிறங்கி பாடுபடும் உழவருக்கும் நடுவில் முதலாளித்துவக் குத்தகைச் சாகுபடியாளர் நுழையும் போது, பழைய கிராமபுற பொருளுற்பத்தி முறையிலிருந்து எழுந்த உறவுகள் யாவும் தகர்ந்து நொறுங்குகின்றன. சாகுபடியாளர் இந்த விவசாயத் தொழிலாளர்களை உள்ளபடியே அடக்கி ஆளுகிறவரும் அவர்களின் உபரி - உழைப்பை உள்ளபடியே சுரண்டுகிறவரும் ஆகிறார்; அதே போது நிலவுடைமையாளர் இந்த முதலாளித்துவச் சாகுபடியாளரோடு மட்டுமே நேரடியாய் உறவு கொண்டிருக்கிறார். அதுவும் வெறும் பணஉறவும் ஒப்பந்த உறவுமே கொண்டிருக்கிறார். இதனால் வாடகையின் தன்மை மாறுகிறது. முன்சென்ற வடிவங்களிலும் கூட ஓரளவுக்கு நிகழ்ந்தது போல் மெய்நடப்பிலும் தற்செயல் நிகழ்வுகளிலும் இந்த மாற்றம் நடைபெறுவதோடு, இயல்பாகவும் கூட வாடகையின் அங்கீகரிக்கப்பட்ட, மேலோங்கிய வடிவத்திலும் கூட நடைபெறுகிறது. வாடகையானது உபரி-மதிப்பு, உபரி-உழைப்பு ஆகியவற்றின் இயல்பான வடிவம் என்ற நிலையிலிருந்து சரிவுற்று, இந்த உபரி-உழைப்பில் முதலாளித்துவச் சுரண்டலாளரால் இலாபத்தின் வடிவில் தனதாக்கப்படும் பகுதிக்கு மேலிருக்கும் மிகையே என்றாகி விடுகிறது; உபரி-உழைப்பனைத்தும் இலாபம், இலாபத்திற்கு மேலிருக்கும் மிகை ஆகிய இரண்டுமே-நேரடியாக அவரால் கறக்கப்பட்டு, மொத்த உபரி-உற்பத்தியின் வடிவில் திரட்டப்பட்டு, பணமாக மாற்றப்படுகிறது. அவர் தமது மூலதனத்தைப் பயன்படுத்தி நேரடிச் சுரண்டலின் மூலம் விவசாயத் தொழிலாளிகளிடமிருந்து கறக்கும் இந்த உபரி-உழைப்பின் மிகைப் பகுதியை மட்டுமே நிலவுடைமையாளரிடம் எவ்வளவு அதிகமாய் அல்லது எவ்வளவு குறைவாய் ஒப்படைக்கிறார் என்பது சராசரியாகப் பார்த்தால், விவசாயமல்லாத உற்பத்திக் கிளைகளில் மூலதனம் அடையும் சராசரி இலாபத்தாலும், இந்த சராசரி இலாபத்தால் ஆளப்படும் விவசாயமல்லாத பண்டங்களின் உற்பத்தி-விலையாலும் விதிக்கப் படும் வரம்புகளைப் பொறுத்ததாகும். உபரி-மதிப்பு, உபரி-உழைப்பு

இவற்றின் இயல்பான வடிவமாய் இருந்த வாடகை இப்போது மூலதனத்தால் அதன் முறைப்படியான, இயல்பான பங்காக முன்கூட்டியே கோரப்படும் உபரி-உழைப்புப் பகுதிக்கும் மேலிருக்கும் மிகையாக மாற்றமடைகிறது; இந்த மிகையானது குறிப்பிட்ட இந்த உற்பத்திக் கிளைக்கே, விவசாய உற்பத்திக் கிளைக்கே உரித்தான ஒன்று. வாடகைக்கு பதில் இப்போது இலாபம் உபரி-மதிப்பின் இயல்பான வடிவமாகிறது; இன்னமும் வாடகை என்பது பொதுவான உபரி-மதிப்பின் வடிவமாக இல்லாமல், அதன் விழுதுகளில் ஒன்றாகிய உபரி-இலாபத்தின் வடிவமாக மட்டுமே திகழ்கிறது; இந்த உபரி-இலாபம் குறிப்பிட்ட நிலைமைகளில் சுயேச்சையான வடிவம் பெறுகிறது. இந்த மாற்றத்திற்கு ஏற்ப பொருளுற்பத்தி முறையிலும் எப்படிப் படிப்படியாக மாற்றம் ஏற்படுகிறது என்பதை விவரிக்கத் தேவையில்லை. இப்படி மாற்றம் ஏற்படுவதற்கு ஏற்கெனவே ஆதாரமாய் இருப்பது என்னவென்றால்: இப்போது இந்த முதலாளித்துவச் சாகுபடியாளர் விவசாய விளைபொருட்களை சரக்குகளாக உற்பத்தி செய்வது இயல்பானதாகும்; முன்பெல்லாம் அவருடைய வாழ்வுச் சாதனங்களுக்கு மேலிருக்கும் மிகையளவு மட்டுமே சரக்குகளாக மாற்றப்பட்டது, ஆனால் இப்போது இந்தச் சரக்குகளில் ஒப்பளவில் சொற்பப் பகுதியே நேரடியாக அவரால் வாழ்வுச் சாதனங்களாகப் பயன்படுத்தப்படுகிறது. நிலத்துக்கு பதில் மூலதனம்தான் இப்போது விவசாய உழைப்பையும் கூட தன் நேரடி ஆளுகைக்கும் உற்பத்தித் திறனுக்கும் உட்படுத்தியிருக்கிறது.

சராசரி இலாபமும், அதனால் ஆளப்படும் உற்பத்தி-விலையும் கிராமபுற உறவுகளுக்கு வெளியே நகர்புற வர்த்தகம் மற்றும் பட்டறைத் தொழிலின் வட்டத்துக்குள் உருவாகின்றன. வாடகை செலுத்தும் விவசாயின் இலாபம் இந்தச் சமனமாக்க நிகழ் முறையில் ஒரு காரணியாகச் சேருவதில்லை, ஏனென்றால் அவருக்கும் நிலவுடைமையாளருக்குமான உறவு முதலாளித்துவ உறவு அல்ல. அவர் தமது உழைப்பினாலோ அல்லது மற்றவர்களின் உழைப்பைச் சுரண்டுவதன் மூலமோ இலாபம் சம்பாதிக்கிறார், அதாவது தமக்கு அவசியமான வாழ்வுச்சாதனங்களுக்கு மேல் ஓர் உபரியைப் பெறுகிறார் என்றால், இது இயல்பான உறவு முறையின் முதுகுக்குப் பின்னால் நடைபெறுவதாகும்; மற்றவை மாறாதிருக்க, இந்த இலாபத்தின் அளவு வாடகையை நிர்ணயிப்பதில்லை, மாறாக அதற்கான வரம்பு என்ற முறையில் வாடகைதான் இலாபத்தின் அளவை நிர்ணயிக்கிறது. மத்திய காலத்தில் இலாபவிதம் நிலவிய உயர்ந்த இலாப வீதத்திற்கு மூலதனத்தின் தாழ்ந்த

இயைபு மட்டுமே, அதாவது மூலதனத்தில் பெரும் பகுதி கூலிக்காக முதலீடாகிற மாறும் கூறாய் இருந்தது மட்டுமே காரணமல்ல. அது நிலம் தொடர்பாக நடைபெற்ற மோசடியின் விளைவு ஆகும், நிலபிரபுவின் வாடகையிலும் அவரது குடியாட்களின் வருமானத்திற்கு ஒரு பகுதி அபகரிக்கப்பட்டதன் விளைவு ஆகும். மத்திய காலத்தில் கிராமபுறம் நகரத்தை அரசியல் வகையில் சுரண்டுகிறது என்றால், அசாதாரண நகர்புற வளர்ச்சியால் பிரபுத்துவம் தகர்க்கப்பட்டிராத இடங்களிலெல்லாம் - எடுத்துக்காட்டாக இத்தாலியில் - நகரம்தான் அதன் ஏகபோக விலைகளின் மூலமாகவும் வரிவிதிப்பு முறையின் மூலமாகவும், கைவினைச் சங்க அமைப்பின் மூலமாகவும், நேரடி வாணிகச் சூதாட்டத்தின் மூலமாகவும், கடுவட்டியின் மூலமாகவும் பொருளாதார வகையில் கிராமப்புறத்தை ஒட்டச் சுரண்டுகிறது.

விவசாய உற்பத்தியில் முதலாளித்துவச் சாகுபடியாளர் தலையெடுப்பதென்பதே காலங்காலமாய் ஏதேனுமொரு வடிவில் வாடகை கொடுத்துள்ள விவசாய விளைபொருட்களின் விலை பட்டறைத் தொழிலின் உற்பத்தி-விலைகளைக் காட்டிலும்- முதலாளித்துவச் சாகுபடியாளர் தலையெடுக்கும் காலத்திலாவது- இன்னும் கூடுதலாய் இருந்தாக வேண்டும் என்ற எண்ணம் ஏற்படலாம்; இதற்குக் காரணம் இந்த விவசாய விளைபொருட்களின் விலை ஏகபோக விலையின் அளவினை எட்டி விட்டதாகவும் இருக்கலாம் அல்லது இந்த விலை விவசாய விளைபொருட்களின் மதிப்பளவுக்கு உயர்ந்து விட்டதாகவும் இருக்கலாம்; உள்ளபடியே அவற்றின் மதிப்பு சராசரி இலாபத்தால் ஆளப்படும் உற்பத்தி-விலைக்கு மேல் இருக்கிறது. இப்படி இல்லையென்றால் முதலாளித்துவச் சாகுபடியாளர் இந்த விவசாய விளைபொருட்களுக்கு நடப்பு நிலவரப்படி கிடைக்கும் விலையிலிருந்து முதலில் சராசரி இலாபம் எடுப்பதும், பிறகு அதே விலையிலிருந்து இந்த இலாபத்திற்கு மேல் ஒரு மிகையளவை வாடகையாகச் செலுத்துவதும் சாத்தியமே இல்லை. முதலாளித்துவச் சாகுபடியாளர் நிலவுடைமையாளருடன் செய்து கொள்ளும் ஒப்பந்தத்திற்கு வழியமைத்துக்கொடுக்கும் பொது இலாப வீதம் வாடகையை உட்படுத்தாமல் உருவாகியுள்ளது என்றும், ஆகவே இந்த பொது இலாப வீதம் விவசாய உற்பத்தியை ஆளும் நிலை ஏற்பட்டவுடனே இந்த மிகையான தயாராய் இருக்கக் கண்டு அதனை நிலவுடைமையாளரிடம் சேர்ப்பிக்கிறது என்றும் இதிலிருந்து எவரும் ஒரு முடிவுக்கு வரக்கூடும். எடுத்துக்காட்டாக திருவாளர் ரோட்

பெர்ட்டஸ் இந்த மரபுவழியில்தான் இதற்கு விளக்கமளிக்கிறார்.* ஆனால்: முதலாவதாக, வேளாண்மையில் மூலதனம் ஒரு சுயேச்சையான தலைமைச் சக்தியாக இவ்விதம் தலையெடுப்பது ஒரே சமயத்தில் எல்லா இடங்களிலும் நடைபெறுவதல்ல; அது மெள்ள மெள்ளவும் குறிப்பிட்ட உற்பத்திக் கிளைகளிலும்தான் நடைபெறுகிறது. எடுத்த எடுப்பில் அது முறையான வேளாண்மையைக் கைப்பற்றி விடுவதில்லை. முதலில் கால்நடை வளர்ப்பு போன்ற உற்பத்திக் கிளைகளில்தான், குறிப்பாகச் சொன்னால் ஆடுவளர்ப்பை கைப்பற்றுகிறது. ஆடு வளர்ப்பின் பிரதான உற்பத்திப் பொருளாகிய ஆட்டுரோமம், தொழில்துறையின் உதய காலத்தில் சந்தை-விலை உற்பத்தி-விலைக்கு மேல் ஓயாமல் மிகையாய் இருப்பதற்கு ஆரம்பக் கட்டங்களில் வழி செய்கிறது; இந்த மிகை பிற்காலத்தில்தான் சமனமாகிறது. 16ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் இப்படித்தான் நிகழ்ந்தது.

*இரண்டாவதாக*, இந்த முதலாளித்துவப் பொருளுற்பத்தி முதலில் சிதறலாகவே தலையெடுப்பதால் சிறப்புமிக்க மண்வளத்தைக் கொண்டே மிகவும் அனுகூலமான இடவாகினைக் கொண்டே பொதுவாக வேறுபாட்டு வாடகை செலுத்தக்கூடிய நிலங்களைத்தான் அது முதலில் கையிலெடுக்கிறது என்ற அனுமானத்தை மறுப்பதற்கில்லை.

*மூன்றாவதாக*, இந்தப் பொருளுற்பத்தி முறை தலையெடுத்த காலத்தில் - நகர்புற வேண்டலின் முக்கியத்துவம் அதிகரித்துச் செல்வது இதற்கு முன் தேவையாகும் - விவசாய விளைபொருட்களின் விலைகள் அவற்றின் உற்பத்தி-விலைகளைக் காட்டிலும் உயர்ந்திருந்தன என்று கூட வைத்துக் கொள்வோம்; 17ஆம் நூற்றாண்டின் கடைசி மூன்றாம் பகுதியில் இங்கிலாந்தில் காணப்பட்ட நிலவரம் இதுதான் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் வேளாண்மையை மூலதனத்துக்கு கீழ்ப்படுத்த மட்டுமே செய்வது என்ற நிலையிலிருந்து இந்தப் புதிய பொருளுற்பத்தி முறை ஒருவாறு வெளிப்பட்டவுடனே அது வளர்ந்து செல்வதன் அவசிய விளைவாக வேளாண்மை மேம்பட்டு உற்பத்திச் செலவுகள் குறையத் தொடங்கியவுடனே, ஓர் எதிர்வினை ஏற்பட்டு இதற்கீடாக ஓர்

---

(*) ஐ.ரோட்பெர்ட்டஸ், Sociale Briefe an von Kirchmann, Dritter Brief: Wider legung der Ricardo'schen Lehre von der Grundrente und Begründung einer neuen Rententheorie மேலும் பார்க்கவும்: கா.மார்க்ஸ், உபரி-மதிப்புத் தத்துவங்கள், பகுதி 2 1957, பக்கம் 3-106,142-154.-ஆங்கிலப்பதிப்பாசிரியர்.

எதிர்வினை தோன்றி, விவசாய விளைபொருளின் விலைகுறையும்; 18ஆம் நூற்றாண்டின் முற்பாதியில் இங்கிலாந்தில் இப்படித்தான் நிகழ்ந்தது.

ஆக, சராசரி இலாபத்திற்கு மேலிருக்கும் மிகையளவு என்ற முறையிலான வாடகைக்கு இந்த மரபு வழியில் விளக்கமளித்திட முடியாது. வாடகை என்பது முதன்முதலாய் தலையெடுக்கும் போது, எத்தகைய வரலாற்று நிலைமைகள் நிலவிய போதிலும், அது வேர் பிடித்தபின் முன்பு விவரித்த நவீனகால நிலைமைகளில்தான் அதனால் நிலவ முடியும்.

பண்ட-வாடகை பண-வாடகையாக மாற்றமடைவது குறித்து முடிவில் குறிப்பிட வேண்டியது என்னவென்றால், இந்த மாற்றம் நிகழும் போதே மூலதனமாக்கப்பட்ட வாடகை அல்லது நிலத்தின் விலையும், அது உடைமை-மாற்றம் செய்யத்தக்கதாய் இருப்பதும், உள்ளபடியே உடைமைமாற்றம் செய்யப்படுவதும் இன்றியமையாக் காரணிகளாகி விடுகின்றன; முன்பு வாடகை செலுத்த வேண்டியவராய் இருந்த விவசாயி இவ்வழியில் சுயேச்சையான உடைமை - விவசாயியாக மாற்றமடைய முடிவதோடு, நகர்ப்புறத்தவர்களும் ஏனைய பணம் படைத்தவர்களும் கூட விவசாயிகளிடமோ முதலாளிகளிடமோ குத்தகைக்கு விடுவதற்காக நிலச்சொத்தை விலைக்கு வாங்கவும், இவ்விதம் முதலீடாகிற தமது மூலதனத்தின் மீதான வட்டியின் வடிவம் என்ற முறையில் வாடகை பெற்று அனுபவிக்கவும் முடிகிறது; ஆகவே இந்தக் காரணியும் கூட பழைய சுரண்டல் முறையையும், நிலவுடைமையாளருக்கும் உள்ளபடியே நிலத்தில் உழுது பயிரிடுகிறவருக்கும் இடையிலான உறவு முறையையும், வாடகையையும் மாற்றியமைப்பதற்கு உதவுகிறது.

## V பங்கு–வாரமும் விவசாயியின் சிறுவீத நிலவுடைமையும்

நில-வாடகை தொடர்பான பரிசீலனையில் இப்போது இறுதிக் கட்டத்துக்கு வந்திருக்கிறோம்.

உழைப்பு-வாடகை ஆனாலும் சரி, பண்ட-வாடகை ஆனாலும் சரி, (பண்ட-வாடகையின் மாறிய வடிவம் மட்டுமே என்ற முறையிலான) பண-வாடகை ஆனாலும் சரி, நில-வாடகையின் இந்த வடிவங்களில் எல்லாம் எப்போதுமே வாடகை செலுத்துகிறவர் உள்ளபடியே நிலத்தில் உழுது பயிரிடுவராயும் நிலத்தை தம்வசம் வைத்திருப்பவராயும்

இருப்பதாகக் கொள்கிறோம்; இவருடைய ஊதியமிலா உபரி-உழைப்பு நேரடியாக நிலவுடைமையாளரின் கைக்குச் செல்கிறது. கடைசி வடிவமாகிய பண-வாடகையிலும் கூட - இது 'தூய' பண -வாடகை யாய், அதாவது பண்ட வாடகையின் மாறிய வடிவமாக மட்டும் இருக்கும் வரை - இப்படி நடைபெறுவது சாத்தியம் என்பது மட்டுமல்ல, மெய்யாகவும் இப்படித்தான் நடைபெறுகிறது.

ஆரம்ப வடிவிலான வாடகையிலிருந்து முதலாளித்துவ வாடகைக்கு மாறிச் செல்லும் போது இடையில் வருகிற வடிவம் என்ற முறையில் பங்கு வார அமைப்பு, அல்லது வாரப் பகிர்வு முறை என்பதை எடுத்துக் கொள்வோம்; இதில் குத்தகையாளர் (சாகுபடியாளர்) உழைப்பை (அவரது உழைப்பையும் ஏனையோரின் உழைப்பையும்) வழங்குவதோடு நடப்பு மூலதனத்தில் ஒரு பகுதியையும் வழங்குகிறார்; நிலவுடைமையாளர் நிலத்தை வழங்குவதோடு நடப்பு மூலதனத்தில் மற்றொரு பகுதியை (எடுத்துக்காட்டாக கால்நடைகளை) வழங்கு கிறார். விளைபொருளானது குத்தகையாளருக்கும் நிலவுடைமை யாளருக்கும் இடையே குறிப்பிட்ட விகிதத்தில் பிரித்துக் கொள்ளப்படுகிறது - இந்த விகிதம் நாட்டுக்கு நாடு மாறுபடுவதாகும். ஒரு புறம், இங்கு சாகுபடியாளர் முழுமையான முதலாளித்துவச் சாகுபடிக்குத் தேவையான போதிய மூலதனம் இல்லாதவராய் இருக்கிறார். மறுபுறம் இங்கு நிலவுடைமையாளருக்குப் போய் சேரும் பங்கு வாடகையின் தூய வடிவம் பூணுவதில்லை. உள்ளபடியே அதில் அவரால் முன்னீடு செய்யப்படும் மூலதனத்தின் மீதான வட்டியும் அதற்கு மேல் மிகையளவான வாடகையும் அடங்கியிருக்கக் கூடும். நடைமுறையில் அது சாகுபடியாளரின் உபரி-உழைப்பனைத்தையும் உறிஞ்சி விடவும் கூடும்; அல்லது கூடுதலாகவோ குறைவாகவோ இந்த உபரி-உழைப்பில் ஒரு பகுதியை அவருக்கு விட்டு வைக்கவும் கூடும். ஆனால் சாராம்சத்தில் வாடகை என்பது இங்கே முன்போல் பொதுவான உபரி-மதிப்பின் இயல்பான வடிவமாக காட்சியளிப்பதில்லை. ஒரு புறம் பங்கு வாரச் சாகுபடியாளர் தமது உழைப்பை ஈடுபடுத்தினாலும் சரி, ஏனையோரின் உழைப்பை ஈடுபடுத்தினாலும் சரி, உழைப்பாளி என்ற முறையில் அல்லாமல், உழைப்புக் கருவிகளில் ஒரு பகுதியை வைத்திருப்பவராக தமக்குத்தாமே முதலாளியாக விளைபொருளில் ஒரு பகுதிக்கு உரிமை கொண்டாடுகிறார். மறுபுறம், நிலவுடைமையாளர் பிரத்தியேகமாய் தமது நிலவுடைமையின் அடிப்படையில் மட்டுமல்லாமல் இரவலாய் மூலதனம் கொடுத்திருப்பவர் என்ற

முறையிலும் தமது பங்குக்கு உரிமை கொண்டாடுகிறார்.[47] எடுத்துக் காட்டாக போலந்திலும் ருமேனியாவிலும் சுயேச்சை விவசாயியின் சாகுபடி முறைக்கு மாறிச் சென்ற பிறகும் நீடித்திருந்த நிலத்திலான பழைய பொதுவுடைமையின் மீதமிச்சம் நில- வாடகையின் கீழ்நிலை வடிவங்களுக்கு மாறிச் செல்லுமாறு செய்வதற்கான உபாயமாகப் பயன்பட்டது. நிலத்தில் ஒரு பகுதி தனிப்பட்ட விவசாயிக்குச் சொந்தம் அதை அவரே சுயேச்சையாக உழுது பயிரிடுகிறார்; இன்னொரு பகுதி பொதுவில் உழப்பட்டு உபரி-உற்பத்தியை உண்டாக்குகிறது; இந்த உபரி-உற்பத்தியில் ஒரு பகுதி கிராம சமுதாயத்தின் செலவுகளைச் சரி கட்டுவதற்கும் ஒரு பகுதி மகசூல் பொய்த்துப் போவது போன்ற நேர்வுகளில் சேம இருப்பாகவும் பயன்படுகிறது. உபரி-உற்பத்தியின் இந்தக் கடைசி இருபகுதிகளும்; முடிவில் உபரி-உற்பத்தி முழுவதுமே, அத்துடன் அதனை விளைவித்துக் கொடுக்கும் நிலமும் கூட அரசு அதிகாரிகளாலும் தனியாராகிய தனியாட்களாலும் மேன்மேலும் அபகரிக்கப்படுகின்றன; ஆரம்பத்தில் சுதந்திரமாயிருக்கும் உடைமை- விவசாயிகள் - இந்த நிலத்தை பொதுவில் உழுது பயிரிடவேண்டிய இவர்களின் கடப்பாடு நீடிக்குமாறு செய்யப்படுகிறது - கார்வே உழைப்பில் ஈடுபட்டாக வேண்டிய, அல்லது பண்ட-வாடகை செலுத்தியாக வேண்டிய மானியக் குடியானவர்களாக மாற்றப்படு கின்றனர்; அதே போது பொது நிலத்தை அபகரித்தவர்கள் அபகரிக்கப்பட்ட பொது நிலங்களுக்கு மட்டுமல்லாமல் தனிப்பட்ட விவசாயிகளின் நிலங்களுக்கும் கூட உடைமையாளர்களாக மாறிவிடுகிறார்கள்.

இதற்கு மேல் முறையான அடிமைப் பொருளாதாரத்தை நாம் ஆராயத் தேவையில்லை (அடிமைப் பொருளாதாரமும் கூட முக்கியமாய் குடும்பப் பயன்பாட்டுக்கான தந்தை வழிச் சமூக அமைப்பு முறையிலிருந்து உலகச் சந்தைக்கான பண்ணைத் தோட்ட அமைப்பு முறைக்கு உருமாற்றத்தினூடே செல்கிறது); நிலவுடைமையாளர்களே சுயேச்சை சாகுபடியாளர்களாக இருக்கும் பண்ணையமைப்பு முறையையும் ஆராயத் தேவையில்லை. இந்த அமைப்பு முறையில் நிலவுடைமையாளர்கள் எல்லா உற்பத்திக் கருவிகளையும் பெற்றிருக்கிறார்கள்; அவர்கள் சுதந்தர மாந்தர்களின் அல்லது

47. பார்க்கவும்: புரே (Cours d'économie politique, பிரசல்ஸ், 1842.—ஆங்கிலப்பதிப்பாசிரியர். தோக்வில் (L'ancien régime et la révolution, பாரிஸ் 1856. —ஆங்கிலப்பதிப்பாசிரியர்), சிஸ்மொந்தி (Nouveaux principes d'économie politique —இரண்டாம் பதிப்பு, பாகம் 1 பாரிஸ், 1827.—ஆங்கிலப்பதிப்பாசிரியர்.)

சுதந்திரமில்லாத அடிமைகளின் உழைப்பைச் சுரண்டுகிறார்கள். அவர்களுக்கு பண்டமாகவோ பணமாகவோ ஊதியமளிக்கிறார்கள். நிலவுடைமையாளரும் உற்பத்திக் கருவிகளின் உடைமையாளரும், அதாவது இந்த உற்பத்தி அடிக்கூறுகளில் ஒன்றாய் வைத்து கணக்கிடப்படும் தொழிலாளர்களைச் நேரடியாகச் சுரண்டுகிறவரும் இங்கு ஒரே ஆள்தான். இதே போல் வாடகையும் இலாபமும் கூட ஒருங்கமைகின்றன; உபரி-மதிப்பின் வெவ்வேறு வடிவங்கள் தனித்தனியாக பிரிவதில்லை. இங்கு உபரி-உற்பத்தியாக வெளிப்படுகிற தொழிலாளர்களின் உபரி-உழைப்பனைத்தும் எல்லா உற்பத்திக் கருவிகளுக்கும் உடைமையளராய் இருப்பவரால் நேரடியாக அவர்களிடமிருந்து கறக்கப்படுகிறது; இந்தக் கருவிகளில் நிலமும் அடங்கும், அடிமை முறையின் ஆரம்ப வடிவத்தில் நேரடி உற்பத்தியாளர்களும் கூட அக்கருவிகளில் அடங்குவர். முதலாளித்துவக் கண்ணோட்டம் கோலோச்சுமிடத்து - எடுத்துக் காட்டாக அமெரிக்கப் தோட்டப் பண்ணைகளில் - இந்த உபரி-மதிப்பனைத்தும் இலாபமாகக் கருதப்படுகிறது; முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையும் நிலவாமல் அதற்குரிய கண்ணோட்டமும் முதலாளித்துவ நாடுகளிலிருந்து பெயர்த்துக் கொண்டு வரப்படாமல் இருக்குமிடத்து, அது வாடகையாகத் தோற்றமளிக்கிறது. எப்படிப் பார்த்தாலும், இந்த வடிவத்தால் எவ்வித இடர்ப்பாடுகளும் உண்டாவதில்லை. நிலவுடைமையாளரின் வருமானம், - அதாவது கிடைக்கக் கூடிய உபரி-உற்பத்தியை அவர் தனதாக்கிக் கொள்வது-இது என்ன பெயரிட்டு அழைக்கப்பட்ட போதிலும் - இங்கே ஊதியமில்லா உபரி-உழைப்பனைத்தையும் நேரடியாகத் தனதாக்கி கொள்வதற்கான இயல்பான வடிவமும் மேலோங்கிய வடிவமும் ஆகும்; நிலச்சொத்து இந்தத் தனதாக்கத்திற்கு அடிப்படையாகிறது.

அடுத்து, விவசாயியின் சிறுவீத நிலவுடைமை குறித்துப் பார்ப்போம். இங்கு விவசாயி அதே போது தமது நிலத்தின் சுதந்தர உடைமையாளராகவும் இருக்கிறார்; நிலம் அவரது தலையாய உற்பத்திக் கருவியாக, அவரது உழைப்பையும் அவரது மூலதனத்தையும் ஈடுபடுத்துவதற்கு இன்றியமையாக் களமாக விளங்குகிறது. இவ்வடிவத்தில் குத்தகைப் பணம் எதும் செலுத்தப்படுவதில்லை. ஆகவே வாடகை என்பது உபரி-மதிப்பின் தனித்தனி வடிவங்களில் ஒன்றாகத் தோற்றமளிப்பதில்லை. இருப்பினும் மற்றபடி முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை வளர்ச்சியடைந்திருக்கும் நாடுகளில், ஏனைய உற்பத்திக் கிளைகளுடன் ஒப்பிடுமிடத்து

வாடகையானது உபரி-இலாபமாகத் தோற்றமளிக்கிறது. ஆனால் பொதுவாக அவரது உழைப்பின் பலன்கள் அனைத்தையும் போலவே இந்த உபரி-இலாபமும் விவசாயிக்குப் போய்ச் சேருகிறது.

இதற்கு முன்சென்ற பழைய வடிவங்களைப் போலவே நிலச் சொத்தின் இந்த வடிவத்துக்கும் கிராமப்புற மக்கள் தொகை நகர்புற மக்கள் தொகையைக் காட்டிலும் பெருமளவில் கூடுதலாய் இருப்பது அவசியமாகும்; அதாவது முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை வேறுவகையில் கோலோச்சினாலும் கூட, ஒப்பளவில் சொற்ப வளர்ச்சிதான் அடைந்திருக்க வேண்டும்; இவ்வாறு ஏனைய உற்பத்திக் கிளைகளிலும் கூட மூலதனக் குவிப்பு குறுகிய வரம்புகளுக்குட் பட்டதாகவும் மூலதனம் கூறுபட்டிருக்கும் நிலை மேலோங்கியதாயும் இருக்க வேண்டும். இயல்பிலேயே விவசாய விளைபொருளில் பெரும்பகுதி உற்பத்தியாளர்களாகிய விவசாயிகளாலேயே நேரடி வாழ்வுச் சாதனங்களாக நுகரப்பட வேண்டும்; அதற்கு மிகையாய் இருப்பது மட்டுமே நகர்ப்புற வாணிகத்துக்கு சரக்குகளாகப் போய்ச்சேர வேண்டும். விவசாய விளைபொருட்களின் சராசரிச் சந்தை-விலை இங்கே எப்படி நிர்ணயிக்கப்பட்டாலும் சரி, உயர்தரமான அல்லது கூடுதலாய் சாதகமான இடவாகுடைய நிலத்திலிருந்து பெறப்படும் சரக்கு-விலைகளில் ஒரு மிகைப்பகுதி முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையில் போலவே இங்கேயும் இருந்தாக வேண்டுமென்று தெளிவாய்த் தெரிகிறது. பொதுச் சந்தை - விலை என்றும் இதுவரை வளர்ந்திராத சமூக நிலைமைகளில் இந்த வடிவம் தலையெடுக்கும் இடத்தே கூட இந்த வேறுபாட்டு வாடகை நிலவுகிறது; அப்போது அது மிகையான உபரி-உற்பத்தியாகக் காட்சியளிக்கிறது. எந்த விவசாயியின் உழைப்பு கூடுதலாய்ச் சாதகமான இயற்கை நிலைமைகளில் ஈடேற்றம் பெறுகிறதோ அந்த விவசாயிக்குத்தான் இந்த வேறுபாட்டு வாடகை போய் சேருகிறது. பொதுவாகச் சொன்னால், அறுதி வாடகையென்று எதுவும் இல்லை என்பதாக, அதாவது படு மோசமான மண்வகை வாடகை எதுவும் தருவதில்லை என்பதாக இங்கு அனுமானம் செய்து கொள்ள வேண்டும் - இந்த வடிவத்தில்தான் நிலத்தின் விலை விவசாயியின் உள்ளபடியான உற்பத்திச் செலவில் ஒரு காரணியாகச் சேருகிறது; இதற்கு காரணம் இந்த வடிவம் மேலும் வளர்ந்து செல்லும் போது நிலத்தின் விலை ஒரு பரம்பரைச் சொத்தை பாகம் பிரிப்பதில் குறிப்பிட்ட பணமதிப்புடையதாக கணக்கிடப்பட்டிருப்பதாகவும் இருக்கலாம், அல்லது ஒரு நிலச்சொத்து முழுவதுமோ - அதன் அடக்கக்

கூறுகளோ ஓயாமல் உடைமை-மாற்றம் செய்யப்படுகையில் பெரும்பாலும் அடகு வைத்து பணம் திரட்டப்படுவதன் மூலம் சாகுபடியாளராலேயே நிலம் விலைக்கு வாங்கப்பட்டிருப்பதாகவும் இருக்கலாம். ஆகவே மூலதனமாக்கப்பட்ட வாடகையையே குறிப்பதான நிலத்தின் விலை முன்கூட்டியே அனுமானம் செய்து கொள்ளப்படும் காரணியாகும்; வாடகை என்பது இவ்விதம் நிலத்தின் மண்வளத்திலோ இடவாகிலோ எவ்வித வகை வேறுபாட்டையும் சாராமலிருப்பதாகத் தோன்றுகிறது. ஏனென்றால், உற்பத்திப் பொருளின் மதிப்பில் அதன் உற்பத்தி-விலைக்கு மேலிருக்கும் மிகையளவு ஈடேற்றம் செய்யப்படுவதோ, ஏகபோக விலை உற்பத்திப் பொருளின் மதிப்புக்கு மேல் உபரியாக இருப்பதோ அறுதி-வாடகைக்கு அவசியமாகும். ஆனால் இங்கே பெரும்பாலும் நேரடி வாழ்வுச் சாதனங்களுக்கான சாகுபடியாகவே வேளாண்மை நடைபெறுகிறது என்பதாலும், நிலமானது பெரும்பான்மை மக்களின் உழைப்பையும் மூலதனத்தையும் ஈடுபடுத்துவதற்கான இன்றியமையாக் களமாக இருந்து வருவதாலும், உற்பத்திப் பொருளின் ஆளும் சந்தை-விலையானது அசாதாரண நிலைமைகளில் மட்டுமே அதன் மதிப்பை வந்தடையும். என்றாலும், பொதுவாகச் சொன்னால், இந்த மதிப்பு உற்பத்தி-விலையைக் காட்டிலும் கூடுதலாய் இருக்கும்; உயிருள்ள உழைப்பு முக்கியக் கூறாக அமைவதே இதற்குக் காரணமாகும். ஆனால் உற்பத்தி-விலைக்கு மேல் மதிப்பு பெற்றுள்ள இந்த மிகையளவு பெரும்பாலும் சிறுவீத நிலவுடைமைகளாலான பொருளாதாரத்துடன் கூடிய நாடுகளில் விவசாயமல்லாத மூலதனத்திலும் கூட காணப்படும் தாழ்ந்த மூலதன இயைபினால் வரம்பிடப்படும். சிறுநிலத்துண்டு ஒன்றுக்கு உடைமையாளராய் இருக்கும் விவசாயியைப் பொறுத்த வரை, அவர் ஒரு சிறு முதலாளி என்ற அளவில் சுரண்டலுக்கு வரம்பிடுவது மூலதனத்தின் சராசரி இலாபமல்ல; அவர் ஒரு நிலவுடைமையாளர் என்ற அளவில் வாடகைக்கான அவசியமும் அல்ல. சிறு முதலாளி என்ற முறையில் அவருக்கு அறுதி வரம்பாவது அவர் உள்ளபடியான உற்பத்திச் செலவுகளை கழித்த பின் தமக்குத் தாமே செலுத்திக் கொள்ளும் கூலியே தவிர வேறல்ல. விளை பொருளின் விலை இந்தக் கூலியைச் சரிக்கட்டுவதாய் உள்ளவரை, அவர் தமது நிலத்தை உழுது பயிரிடுவார்; அநேக சந்தர்ப்பங்களில் குறைந்தபட்ச உடல் தேவைகளுக்கு மட்டும் போதுமான கூலிக்கும் இதைச் செய்வார். அவர் நிலவுடையளாராய் இருக்கிற அளவில் அவரைப் பொறுத்தவரை சொத்துடைமை தொடர்பான தடைமதில்

ஒழிந்து போகிறது; ஏனென்றால் (உழைப்பு உட்பட) மூலதனம் முதலீடாவதற்கு தடைபோடுவதன் மூலம் நிலவுடைமையிலிருந்து வேறாக இருக்கும் மூலதனத்திற்கு எதிராக மட்டுமே சொத்துடைமை ஒரு தடையாக இருக்க முடியும். நிலத்தின் விலை மீதான வட்டி-பொதுவாகச் சொன்னால், மூன்றாம் தரப்பாராகிய அடகு பிடித்து கடன்கொடுப்பவருக்கு செலுத்தப்பட வேண்டிய இவ்வட்டி - ஒரு தடைமதிலாகும் என்பது மெய்தான். ஆனால் முதலாளித்துவ நிலைமைகளில் இலாபமாக அமையக் கூடிய உபரி-உழைப்புப் பகுதியிலிருந்துதான் இந்த வட்டியைச் செலுத்த முடியும். ஆகவே நிலத்தின் விலையிலும் அதற்காகச் செலுத்தப்படும் வட்டியிலும் எதிர்நோக்கப்படும் வாடகை விவசாயி பிழைத்து வாழ்வதற்கு இன்றியமையாத உழைப்புக்கு மேல் கூடுதலாய் உள்ள அவரது மூலதனமாக்கப்பட்ட உபரி-உழைப்பின் ஒரு பகுதியாகத்தான் இருக்க முடியும், ஆனால் இந்த உபரி-உழைப்பானது சரக்கு-மதிப்பில் சராசரி இலாபமனைத்திற்கும் சமமான பகுதியாக ஈடேற்றம் பெறுவதில்லை, சராசரி இலாபமாக ஈடேற்றம் பெறும் உபரி-உழைப்புக்கு மேலிருக்கும் மிகையாக, அதாவது உபரி-இலாபமாக ஈடேற்றம் பெறுவதற்கு வழியே இல்லை. வாடகையானது சராசரி இலாபத்திலிருந்து பிடித்தம் செய்யப்படுவதாகவோ, ஏன், அந்த இலாபத்தில் ஈடேற்றம் செய்யப்படும் ஒரே ஒரு பகுதியாகவோ கூட இருக்கலாம். சிறுவீத நிலவுடைமையாளராய் இருக்கும் விவசாயி தமது நிலத்தைச் சாகுபடி செய்ய வேண்டுமானால், அல்லது சாகுபடிக்கு நிலம் வாங்க வேண்டுமானால், இயல்பான முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையில் அவசியமாவது போல் விவசாய விளைபொருட்களின் சந்தை - விலை அவருக்கு சராசரி இலாபம் கிடைக்கச் செய்திட போதுமான அளவுக்கு உயருவது அவசியமாவதில்லை, இந்த சராசரி இலாபத்திற்கு மேல் வாடகையின் வடிவில் ஒரு நிலையான மிகையளவு இருக்க வேண்டிய அவசியம் இல்லவே இல்லை. ஆகவே சந்தை-விலை யானது அவரது விளைபொருளினது மதிப்பின் அளவுக்கோ உற்பத்தி-விலையின் அளவுக்கோ உயர .வேண்டியதில்லை. முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை கோலோச்சும் நாடுகளைக் காட்டிலும் விவசாயிகளின் சிறுவீத நிலவுடைமை கோலோச்சும் நாடுகளில் தானிய விலைகள் குறைவாய் இருப்பதற்கான காரணங்களில் இதுவும் ஒன்று. மிகக் குறைந்த அளவுக்குச் சாதகமான நிலைமைகளில் வேலை செய்யும் விவசாயிகளின் உபரி-உழைப்பில் ஒரு பகுதி சமுதாயத்திற்கு இலவசமாய்க் கிடைக்கிறது; உற்பத்தி-விலை

நிர்ணயமாவதிலோ பொதுவாக மதிப்பு படைக்கப்படுவதிலோ அது சேருவதே இல்லை. ஆகவே இந்தக் குறைந்த விலைக்கு காரணமாய் இருப்பது உற்பத்தியாளர்களின் வறுமைதானே தவிர, அவர்களது உழைப்பின் உற்பத்தித் திறன் அல்லவே அல்ல.

விவசாயிகள் தமக்குச் சொந்தமான துண்டு நிலங்களைத் தாமே சுதந்தரமாக உழுது பயிரிடும் இந்த வடிவம் தலையாய வடிவமாக, இயல்பான வடிவமாக இருக்கையில், ஒரு புறம் தொல்சீர் பண்டை யுகத்தின் மிகச் சிறந்த காலங்களில் சமுதாயத்தின் பொருளாதார அடித்தளமாய் அமைகிறது; மறுபுறம் பிரபுத்துவ நிலவுடைமையின் குலைவிலிருந்து எழும் வடிவங்களில் ஒன்றாக நவீன தேசங்களிடையே காணப்படுகிறது. இங்கிலாந்தில் படைக்குடியானவர்களும், சுவீடனில் வேளாண்குடியினரும், பிரான்சு மேற்கு ஜெர்மனி ஆகிய நாடுகளில் விவசாயிகளும் இதற்கு எடுத்துக்காட்டுகளாவர். இதில் நாம் குடியேற்ற நாடுகளைச் சேர்க்கவில்லை; ஏனென்றால் அங்கெல்லாம் சுயேச்சை விவசாயி வேறுவிதமான நிலைமைகளில் வளர்ந்து உருவாகிறார்.

சொந்த சாகுபடி செய்யும் விவசாயியின் சுதந்தர நிலவுடைமைதான் சிறுவீதம் சாகுபடிக்கு மிகவும் இயல்பான நிலச்சொத்து வடிவமாகும் என்பது தெளிவாய்த் தெரிகிறது. அதாவது நிலத்தை வைத்திருப்பது உழைப்பாளி தமது உழைப்பின் உற்பத்திப் பொருளுக்கு உடைமையாளராய் இருப்பதற்கு முன் தேவையாக இருப்பதும், சாகுபடியாளர் சுதந்தர உடைமையாளரானாலும் மானியக் குடியானாலும் எப்போதும் சுயேச்சையாகவே, தம் குடும்பத்தினரோடு ஒரு தனித்த உழைப்பாளியாக தமக்கான வாழ்வுச் சாதனங்களை உற்பத்தி செய்ய வேண்டி இருப்பதுமான ஒரு பொருளுற்பத்தி முறைக்கு இதுவே மிகவும் இயல்பான வடிவமாகும். எப்படி கருவிகள் சொந்தமாய் இருப்பது கைத்தொழில் உற்பத்தியின் தடையிலா வளர்ச்சிக்கு அவசியமாகுமோ அதே போல் நிலம் சொந்தமாய் இருப்பது இந்தப் பொருளுற்பத்தி முறையின் நிறைவான வளர்ச்சிக்கு அவசியமாகும். ஆளுடைமைச் சுதந்தரத்தின் வளர்ச்சிக்கான அடிப்படை இதுவே. வேளாண்மையின் வளர்ச்சியிலேயே கூட இது அவசியமானதொரு மாறுநிலைக் கட்டமாகும். இதன் வீழ்ச்சியைத் தோற்றுவிக்கும் காரணங்கள் இதன் வரம்பெல்லைகளை வெளிப்படுத்துகின்றன. அவையாவன: அதன் இயல்பான நிரப்புக் கூறாகிய கிராமப்புற வீட்டுத் தொழில் பெருவீத தொழில் துறையின் வளர்ச்சியினால் அழிந்து போதல்; இந்தச் சாகுபடிக்கு உட்படுத்தப்படும்

மண் கொஞ்சம் கொஞ்சமாய் வளங்குன்றி சத்திழந்து போதல்; எல்லா இடங்களிலும் சிறு வீத நிலச் சாகுபடிக்கு இரண்டாவது நிரப்புக் கூறாக அமைவதும் அது கால்நடை வளர்க்க முடிவதற்கு ஒரே அடிப்படையாக இருப்பதுமான பொது நிலங்களைப் பெரு நிலவுடைமையாளர்கள் அபகரித்துக் கொள்ளுதல்; தோட்டப் பண்ணைகளின் வடிவிலோ முதலாளித்துவ வடிவிலோ அமைந்த பெருவீத வேளாண்மையிலிருந்து எழும் போட்டி. வேளாண்மை யிலான மேம்பாடுகள் விவசாய விளைபொருட்களின் விலைகளில் சரிவு ஏற்படச் செய்வதன் மூலமும், அதே போது கூடுதலான செலவீடு களையும் இன்னுங் கூட விரிவான பொருளாயத உற்பத்திச் சாதனங்களையும் கோருவதன் மூலமும் மேற்கூறிய வீழ்ச்சிக்கு பங்காற்றுகின்றன-இங்கிலாந்தில் 18ஆம் நூற்றாண்டின் முதற்பாதியில் இப்படித்தான் நிகழ்ந்தது.

உழைப்பின் சமுதாய உற்பத்தி திறன்களும், சமுதாய மூலதனக் குவிப்பும், பெருவீதக் கால்நடை வளர்ப்பும், படிப்படியான விஞ்ஞான பிரயோகமும் வளர்வதற்கான வழியை சிறுவீத நிலவுடைமையின் தன்மையே அடைந்து விடுகிறது.

கடுவட்டியும், வரிவிதிப்பும் எப்போதுமே சிறுவீத நிலவுடைமையை வளங்குன்றி வாட்டமுறச் செய்தே தீரும். நிலத்துக்கு விலையாக செலவிடப்படும் மூலதனம் சாகுபடியிலிருந்து விலக்கி எடுக்கப்படுகிறது. உற்பத்திச் சாதனங்கள் வரம்பின்றி கூறுபடுகின்றன; உற்பத்தியாளர்களே தனித்துப் போய்விடுகிறார்கள். மனித ஆற்றல் மிகப் பெருமளவில் வீணாகிறது. உற்பத்திச் சாதனங்கள் தொடர்ந்து மேன்மேலும் கேடுறுகின்றன; உற்பத்திச் சாதனங்களின் விலை அதிகரிக்கிறது-இதெல்லாம் சிறுவீத நிலவுடைமையின் தவிர்க்க முடியாத விதியாகும். இந்தப் பொருளுற்பத்திமுறைக்கு பருவ காலங்களை ஒட்டி வாய்த்திடும் வளமிகுதியின் நாசகர விளைவாகும். இது.[48]

சிறுவீத வேளாண்மை சுதந்தர நிலவுடைமையுடன் ஒன்று சேர்ந்துகொள்ளுமிடத்து அதன் பிரத்தியேகத் தீமைகளில் ஒன்று சாகுபடியாளர் நிலம் வாங்குவதற்காக தமது மூலதனத்தை முதலீடு செய்வதிலிருந்து எழுவதாகும். (பெருநிலவுடைமையாளர் முதலில்

48. பார்க்கவும்: டுக் எழுதிய நூலில் பிரான்ஸ் நாட்டு மன்னரின் அரியணை உரை, (நியூமார்ச், 1848-56 ஆகிய ஒன்பதாண்டு காலத்தில் விலைகளின் வரலாறு, மற்றும் சுற்றோட்ட நிலவரத்தின் வரலாறு, பாகம் .VI. லண்டன், பக்கம் 29-30. — ஆங்கிலப்பதிப்பாசிரியர்.)

நிலம் வாங்குவதற்கும், இரண்டாவதாக தமக்குத் தாமே குத்தகைச் சாகுபடியாராக இருந்து அதனைச் சாகுபடி செய்வதற்கும் மூலதனம் முதலீடு செய்வதான மாறுநிலை வடிவத்துக்கும் இது பொருந்தும்.) நிலமானது இங்கே வெறும் சரக்கென்ற முறையில் மாறக் கூடிய தன்மை பூணுவதால் உடைமை மாற்றங்கள் அதிகரிக்கின்றன.[49] இவ்வாறு, ஒவ்வொரு புதிய தலைமுறைக்கும், நிலச்சொத்தின் ஒவ்வொரு பாகப்பிரிவினைக்கும் நிலம் என்பது விவசாயியின் கண்ணோட்டத்தில் ஒரு புதிய மூலதன முதலீடாகிறது, அதாவது அவரால் வாங்கப்படும் நிலம் ஆகிறது. இங்கு நிலத்தின் விலையானது தனிப்பட்ட திறனிலா உற்பத்திச் செலவுகளில், அல்லது தனிப்பட்ட உற்பத்தியாளருக்கான உற்பத்திப் பொருளின் அடக்க-விலையில் ஒரு முக்கியக் கூறாகிறது.

நிலத்தின் விலை என்பது மூலதனமாக்கப்படும் வாடகையாகவும் எதிர் நோக்கப்படும் வாடகையாகவும் உள்ளதே தவிர வேறல்ல. வேளாண்மைத் துறை முதலாளித்துவ வழிமுறைகளைப் பயன்படுத்தும் போது, அதாவது நிலவுடைமையாளர் வாடகையை மட்டும் பெறுகிறார், சாகுபடியாளர் இந்த வருடாந்திர வாடகை தவிர நிலத்துக்கென்று வேறேதுவும் செலுத்துவதில்லை என்னும் போது, நிலவுடைமையாளரே நிலத்தை விலைக்கு வாங்குவதற்காக முதலீடு செய்த மூலதனம் உள்ளபடியே அவருக்கு வட்டி - மூலதன முதலீடாய் அமைவது தெளிவாய்த் தெரிகிறது; ஆனால் அதற்கும் வேளாண்மை யில் முதலீடாகிற மூலதனத்துக்கும் அறவே எவ்விதத் தொடர்பும் இல்லை. அது இங்கு செயல்பட்டுக் கொண்டிருக்கும் நிலை-மூலதனத் திலோ சுழல்-மூலதனத்திலோ ஒரு பகுதியாக அமைவதில்லை;[50] நிலம்

---

(49) பார்க்கவும்: மௌனியர் (De l'agriculture en France, Paris, 1846. —ஆங்கிலப்பதிப்பாசிரியர்.) மற்றும் ரூபிக்கதோன் (Du mécanisme de la société en France et en Angleterre, Paris, 1837. —ஆங்கிலப்பதிப்பாசிரியர்.)

(50) டாக்டர் எச். மறோன் (Extensiv Oder Intensiv?) (இந்தச் சிறுவெளியீடு குறித்து இதற்கு மேல் தகவலேதும் தரப்படவில்லை) தம்முடைய எதிராளிகளின் தவறான அனுமானத்திலிருந்து தொடங்குகிறார். நிலம் வாங்குவதற்காக முதலீடாகிற மூலதனத்தை 'முதலீட்டு மூலதனம்' என்று வைத்துக் கொண்டு முறையே முதலீட்டு மூலதனம், நடைமூலதனம் ஆகியவற்றின் அதாவது நிலை - மூலதனம், சுழல் - மூலதனம் ஆகியவற்றின் இலக்கணங்கள் பற்றி ஒரு சர்ச்சையில் இறங்கி விடுகிறார். பொதுவாக மூலதனம் குறித்து அவர் கொண்டிருக்கும் அறவே கற்றுக்குட்டித்தனமான கருத்தோட்டங்களினால் - ஜெர்மானிய அரசியல் பொருளாதாரம் இருக்கும் நிலையினைக் கருத்தில் கொண்டால் பொருளாதார அறிஞரல்லாத ஒருவரிடமிருந்து இந்தக் கருத்தோட்டங்கள் வருவதை மன்னித்து விடலாம் - இந்த மூலதனம் முதலீட்டு மூலதனமும் அல்ல, நடைமூலதனமும் அல்ல என்ற உண்மை அவர் கண்ணில் படாமல் போகிறது. ஒருவர் மூலதனப்பங்குகளோ அரசுப் பிணையப்பத்திரங்களோ வாங்குவதற்காக பங்குச் சந்தையில் முதலீடு செய்யும் மூலதனம் அவரைப் பொறுத்தவரை, சொந்த முறையிலான மூலதன முதலீட்டை குறிப்பதாக இருந்தபோதிலும் எந்த உற்பத்திக் கிளையிலும் 'முதலீடு செய்யப்படுவது' ஆகாது அல்லவா, அதே போலத்தான் இதுவும்.

வாங்குகிறவருக்கு வருடாந்தர வாடகை பெறுவதற்கான உரிமைத் தகுதியை மட்டுமே அது ஈட்டிக் கொடுக்கிறது. ஆனால் அதற்கும் வாடகையின் உற்பத்திக்கும் அறவே எவ்விதத் தொடர்பும் இல்லை. நிலம் வாங்குகிறவர் தமது மூலதனத்தை நிலம் விற்கிறவருக்கு கொடுக்கிறார் என்பதற்கு மேல் ஒன்றுமில்லை. விற்கிறவர் இதன் மூலம் நிலத்திலான தமது உடைமையைத் துறக்கிறார். ஆக இந்த மூலதனம் இப்போது வாங்குகிறவரின் மூலதனமாக இருப்பதில்லை, அது இப்போது அவரிடம் இல்லை; நிலத்தில் எவ்வகையிலேனும் அவர் முதலீடு செய்யக்கூடிய மூலதனத்தைச் சேர்ந்தது அல்ல. அவர் நிலத்தை அதிக விலைகொடுத்து வாங்கியிருந்தாலும் சரி, குறைந்த விலை கொடுத்து வாங்கியிருந்தாலும் சரி, விலையே தராமல் இலவசமாகப் பெற்றிருந்தாலும் சரி, இதனால் சாகுபடியாளர் தமது தெழிலில் முதலீடு செய்யும் மூலதனத்தில் எவ்வித மாற்றமும் இல்லை, வாடகையில் எவ்வித மாற்றமும் இல்லை; இந்த வாடகை அவருக்கு வட்டியாகத் தெரிகிறதா அல்லவா, அல்லது உயர்ந்த வட்டியாகத் தெரிகிறதா குறைந்த வட்டியாகத் தெரிகிறதா என்பதில் மட்டும்தான் மாறுபாடு காணப்படுகிறது.

அடிமைப் பொருளாதாரத்தை எடுத்துக்காட்டாகக் கொள்வோம். அடிமைக்குத் தரப்படும் விலை அவரிடமிருந்து பிழிந்தெடுக்கப் படவிருக்கும் உபரி-மதிப்பு அல்லது இலாபத்தின் எதிர் நோக்கப் படுவதும் அடிமையை வாங்குவதற்குத் தரப்படும் விலை அவரிடமிருந்து கறக்கமுடியுமென எதிர்பார்க்கப்படும் உபரி-மதிப்பு அல்லது இலாபத்தின் மூலதனமாக்கப்பட்டதுமான வடிவமே தவிர வேறல்ல. ஆனால் அடிமையை விலைக்கு வாங்குவதற்காக செலுத்தப்படும் மூலதனம் அவரிடமிருந்து இலாபத்தை, உபரி-உழைப்பை கறப்பதற்குப் பயன்படுத்தப்படும் மூலதனத்தைச் சேர்ந்ததல்ல. மாறாக, அது அடிமையுடைமையாளர் கையிலிருந்து கொடுத்து விட்ட மூலதனம் ஆகும், உள்ளபடியே பொருளுற்பத்திக்கு பயன்படுத்திக் கொள்வதற்காக அவர் வைத்திருக்கும் மூலதனத்தி லிருந்து கழிக்கப்படுவதாகும். அவரைப் பொறுத்த வரை அது இல்லாமற் போய்விட்டது; எப்படி நிலம் வாங்குவதற்காக முதலீடு செய்யப்பட்ட மூலதனம் வேளாண்மையைப் பொறுத்த வரை இல்லாமற் போய்விட்டதோ அதே போலத்தான் இதுவும். அடிமையுடைமையாளர் அல்லது நிலவுடைமையாளர் மறுபடியும் அடிமையை அல்லது நிலத்தை விற்கும்போதுதான் இம்மூலதனம் புத்துயிர் பெறுகிறது என்பதே இதற்கு மிகச்சிறந்த சான்றாகும். ஆனால்

அப்போது அடிமையை வாங்குகிறவருக்கும் இதே நிலைதான் ஏற்படுகிறது. அவர் அடிமையை வாங்கியிருப்பதாலேயே, உடனடியாக அந்த அடிமையைச் சுரண்ட முடிவதில்லை. அடிமைப் பொருளாதாரத்தில் இன்னுங் கொஞ்சம் மூலதனத்தை முதலீடு செய்யும் போதுதான் அவரால் இப்படிச் சுரண்ட முடிகிறது.

ஒரே மூலதனம் இருமுறை நிலவாது, நிலத்தை விற்கிறவரின் கையில் ஒரு முறையும் வாங்குகிறவரின் கையில் மறுமுறையும் நிலவாது. அது வாங்குகிறவரின் கையிலிருந்து விற்கிறவரின் கைக்குச் செல்கிறது. காரியம் அத்துடன் முடிந்து விடுகிறது. வாங்குகிறவரிடம் இப்போது மூலதனம் இல்லை; அதற்கு பதில் ஒரு நிலத்துண்டு இருக்கிறது. இந்த நிலத்தில் உண்மையான மூலதன முதலீட்டால் உற்பத்தி செய்யப்படும் வாடகை புதிய நிலவுடைமையாளரால் நிலத்தில் அவர் முதலீடு செய்திராது, ஆனால் நிலத்தை வாங்குவதற்காகக் கொடுத்துவிட்ட மூலதனத்தின் மீதான வட்டியாகக் கணக்கிடப்படுகிறது என்னும் நிலைமை நிலக்காரணியின் பொருளாதாரத்தன்மையை இம்மியளவும் மாற்றிடாது; ஒருவர் 3% பிணைமுறிகளை வாங்குவதற்கு £1000 செலுத்தியுள்ளார் என்ற நிலைமைக்கும் தேசக்கடன் மீதான வட்டி எம்மூலதனத்தின் வருவாயிலிருந்து செலுத்தப்படுகிறதோ அம்மூலதனத்திற்கு எவ்விதத் தொடர்பும் இல்லை அல்லவா, அதே போலத்தான் இதுவும்.

உண்மையில் அரசுப் பத்திரங்கள் வாங்குவதற்காகச் செலவிடப்படும் பணத்தைப் போலவே நிலம் வாங்குவதற்காகச் செலவிடப்படும் பணமும் அதனளவில் மட்டுமே மூலதனமாகும். முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் அடிப்படையில் எந்த ஒரு மதிப்புத் தொகையும் அதனளவில் மூலதனமாய், உள்ளுறை மூலதனமாய் இருப்பதைப் போன்றதே இது. அரசுப் பத்திரங் களுக்காகவோ வேறு ஏதேனும் சரக்கு வாங்குவதற்காகவோ செலுத்தப் படுவதைப் போலவே நிலத்துக்காகச் செலுத்தப்படுவதும் ஒரு பணத் தொகையே ஆகும். இத்தொகை அதனளவில் மூலதனமாகும்; ஏனென்றால் அதை மூலதனமாக மாற்ற முடியும். விற்கிறவருக்கு கிடைக்கும் பணம் மெய்யாகவே மூலதனமாக மாற்றப்படுகிறதா அல்லவா என்பது அவர் பயன்படுத்திக் கொள்ளும் விதத்தைப் பொறுத்தது. வாங்குகிறவரைப் பொறுத்த வரை அது ஒருநாளும் மீண்டும் மூலதனமாகச் செயல்பட முடியாது; அவர் திட்டவட்டமாய் கையிலிருந்து கொடுத்து முடித்து விட்ட வேறு எந்த பணத்தையும்

போலவே இந்தப் பணமும் மீண்டும் அவருக்கு மூலதனமாய்ச் செயல்பட முடியவே முடியாது. அது அவருடைய கணக்கேடுகளில் வட்டி-மூலதனமாக குறிக்கப் பெறுகிறது. ஏனென்றால் நிலத்தி லிருந்தான வாடகையாகவோ அரசுக்களித்த கடன் மீதான வட்டியாகவோ வரப்பெறும் வருமானத்தை அவர் இந்த வருவாய்க்கான உரிமையை விலைக்கு வாங்கும் பொருட்டு தமக்குச் செலவான பணத்துக்கு கிடைக்கும் மறுவிற்பனையின் மூலமாகத்தான் அவர் அதனை மூலதனமாக ஈடேற்றம் செய்து கொள்ளமுடியும். ஆனால் அவர் கொண்டிருந்த அதே உறவுமுறைக்குள் இப்போது இன்னொருவர், அதாவது அந்த நிலத்தைப் புதிதாய் வாங்குகிறவர் நுழைகிறார். இவ்விதம் செலவிடப்படும் பணத்தை எவ்விதக் கைம்மாற்றத்தாலும் செலவிடுகிறவருக்கான உண்மை மூலதனமாக மாற்றிவிட முடியாது.

இயந்திரங்கள் அல்லது கச்சாப்பொருட்களைப் போலவே, நிலமும் மதிப்பைப் பெற்றிருப்பதோடு, உற்பத்திப் பொருளின் உற்பத்தி-விலையில் மூலதனமாகச் சேருகிறது என்னும் மாயை, சிறுநிலவுடைமையைப் பொறுத்த வரை இன்னும் கூட வளர்ந்து வலுப்பெறுகிறது. ஆனால் வாடகையும், எனவே மூலதனமாக்கப்பட்ட வாடகையாகிய நிலத்தின் விலையும் இரு நேர்வுகளில் மட்டும் விவசாய விளைபொருட்களின் விலையை நிர்ணயிக்கும் காரணிகளில் ஒன்றாகலாம் என்று பார்த்தோம். முதலாவதாக, விவசாய மூலதனத்தின் இயைபு காரணமாய் - இந்த மூலதனத்துக்கும் நிலம் வாங்குவதற்காக மூதலீடு செய்யப்படும் மூலதனத்துக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை - விவசாய விளைபொருட்களின் மதிப்பு அவற்றின் உற்பத்தி-விலைக்கு மேல் அமைந்து, இதிலிருந்து வரும் வேறுபாட்டை நிலவுடைமை யாளர் வசப்படுத்திக் கொள்வதற்கு சந்தை நிலைமைகள் துணைபுரியும் போது இப்படி நேரிடுகிறது. இரண்டாவதாக, ஏகபோக விலை நிலவும் போதும் இப்படி நேரிடுகிறது. சிறுவீதச் சாகுபடியிலும் சிறு நிலவுடைமையிலும் இந்த இரு நேர்வுகளுக்கும் வாய்ப்பே இல்லை எனலாம். ஏனென்றால் உற்பத்தி பெருமளவுக்கு உற்பத்தியாளரின் சொந்தத் தேவைகளை நிறைவு செய்வதாகவும், சராசரி இலாப வீதத்தால் ஆளப்படாமல் நடைபெறுவதாகவும் உள்ளது. சிறுவீதச் சாகுபடி குத்தகை நிலத்தில் நடைபெறுவதாய் இருந்தாலும், குத்தகைப் பணம் இலாபத்தில் ஒரு பகுதியையும், ஏன், கூலியிலிருந்தான ஒரு பிடித்தத்தையும் கூட தன்னகத்தே கொண்டிருக்கும் நிலை வேறெந்த நிலைமைகளிலும் காணப்படுவதை விட இந்தச் சிறுவீதச்

சாகுபடியில்தான் மிக அதிகமாய் காணப்படுகிறது; அப்படியானால் இந்தப் பணம் பெயரளவுக்குத்தான் வாடகையே தவிர கூலிக்கும் இலாபத்துக்கும் மாறான ஒரு சுயேச்சைக் கருத்தினமாய் விளங்கிடும் வாடகை அல்ல:

ஆக, நிலம் வாங்குவதற்கான பண-மூலதனச் செலவீடு விவசாய மூலதனத்தின் முதலீடு அல்ல. சிறுவிவசாயிகள் தமது உற்பத்திக் கிளையில் ஈடுபடுத்தக் கூடிய மூலதனத்தில் அந்த அளவுக்கு ஏற்படும் குறைவுதான் அது. அவர்களுடைய உற்பத்திச் சாதனங்களின் அளவினை அது அந்த அளவுக்கு குறையச் செய்து, இவ்விதம் மறுவுற்பத்தியின் பொருளாதார அடிப்படையை குறுகச் செய்கிறது. அது சிறுவிவசாயியைக் கடுவட்டிக்காரரிடம் தள்ளிவிடுகிறது; ஏனென்றால் இந்த உற்பத்திக் கிளையில் எப்போதுமே முறையான கடன்-செலாவணி அரிதாகும். அது வேளாண்மைக்கு இடையூறாகும்; வாங்கப்படுவது பெரும் நிலச் சொத்துகளாய் இருந்தாலும் கூட இதே நிலைமைதான். அது மெய்யாகவே முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறைக்கு முரணானது; நிலவுடைமையாளர் கடன்பட்டிருக்கிறாரா இல்லையா என்பது, அவரது நிலச்சொத்து பரம்பரை வழியில் கிடைத்ததா விலைக்கு வாங்கப்பட்டதா என்பது மொத்தத்தில் இந்தப் பொருளுற்பத்தி முறைக்கு கருத்துக்குரியதல்ல, நிலவுடைமையாளரே வாடகையை வாங்கி பையில் போட்டுக் கொண்டாலும் சரி, அவர் அதனை அடகுக்காரருக்கு செலுத்த வேண்டி இருந்தாலும் சரி, இதனால் குத்தகைப் பண்ணையில் நடைபெறும் சாகுபடியில் தன்மை மாறிவிடாது.

நில-வாடகை குறிப்பிட்டதாய் இருக்க, நிலத்தின் விலை வட்டி வீதத்தால் ஆளப்படுவதாகப் பார்த்தோம். வட்டி வீதம் குறைந்திருந்தால் நிலத்தின் விலை உயர்ந்தும், வட்டிவீதம் உயர்ந்திருந்தால் நிலத்தின் விலை குறைந்தும் இருக்கும். அப்படியானால் நிலத்தின் விலை உயர்ந்திருப்பதும் வட்டிவீதம் குறைந்திருப்பதும் ஒருங்கே காணப்படுவது இயல்பான நிலவரமாகும்; குறைந்த வட்டி வீதம் காரணமாய் விவசாயி நிலத்துக்கு உயர்ந்த விலை கொடுத்தால் அதே குறைந்த வட்டிவீதம் அவருக்கு எளிதான கடன்நிபந்தனைகளின் பேரில் நடைமூலதனம் கிடைக்கச் செய்வதாகவும் அமைந்திடும். முதலாவதாக கடன்-செலாவணியின் பொதுவிதிகள் விவசாயிகளுக்கு பொருந்தமாட்டா; ஏனென்றால் இவ்விதிகளுக்கு உற்பத்தியாளர் முதலாளியாக

இருப்பது அவசியமாகும். இரண்டாவதாக, சிறுவீத நிலவுடைமை மேலோங்கியதாயும் - இங்கு நாம் குடியேற்ற நாடுகளைப் பற்றிச் சொல்லவில்லை - சிறுவிவசாயி நாட்டின் முதுகெலும்பாயும் இருக்குமிடத்தே, மூலதன உருவாக்கம், அதாவது சமுதாய மறுவுற்பத்தி ஒப்பளவில் நலிந்த நிலையில் இருக்கிறது. ஏற்கெனவே விவரித்துச் சொன்ன அர்த்தத்தில், கடன்தரத்தக்க பண - மூலதனத்தின் உருவாக்கம் இன்னுங் கூட நலிந்த நிலையில் இருக்கிறது. வேலையற்ற பணக்கார முதலாளிகளின் வர்க்கத்தின் குவிப்பும், நிலவலும் அவசியமாகும் (மாஸி)* மூன்றாவதாக இங்கு நிலவுடைமை பெரும்பாலான வாழ்வுக்கு அவசியமான நிலைமையாகவும் அவர்களின் மூலதனத்துக்கு இன்றியமையா முதலீட்டுக் களமாகவும் இருக்கும் நிலையில் நிலத்தின் விலை வட்டி வீதத்தை சாராமல் உயர்த்தப்படுகிறது, பல நேரம் வட்டி வீதத்தில் எதிர்விகிதத்திலும் கூட உயர்த்தப்படுகிறது; நிலச் சொத்துக்கான வேண்டல் அதன் வழங்கலை விஞ்சிச் செல்வதே இதற்குக் காரணம். இந்நிலையில் நிலம் பெரும்பரப்புகளாக விற்கப்படும் போது கிடைப்பதை விட சிறு துண்டுகளாக விற்கப்படும் போது மிக அதிகமாய் விலை கிடைக்கிறது; ஏனென்றால் இங்கு சிற்றளவில் வாங்குகிறவர்களின் தொகை பெரிது, பெருமளவில் வாங்குகிறவர்களின் தொகை சிறிது. (Bandes Noires** , ரூபிக்கான், நியூமன் *** வட்டி வீதம் ஒப்பளவில் உயர்ந்திருக்கும் போதும் கூட இங்கே நிலத்தின் விலை உயருவதற்கு இவையெல்லாம் காரணங்களாகும். இங்கே ஒரு பக்கத்தில் விவசாயி நிலம் வாங்குவதற்காக முதலீடு செய்யும் மூலதனத்திலிருந்து ஒப்பளவில் குறைந்த வட்டியே பெறுகிறார். என்றால், (மௌனியர்) மறுபக்கத்தில் அவரே அவருடைய அடகுக்காரருக்கு அக்கிரமக்கடுவட்டி செலுத்தியாக வேண்டியவராய் இருக்கிறார். அயர்லாந்திய அமைப்பு முறை வேறுவடிவில்தான் என்றாலும் இதையே நிரூபிக்கிறது.

---

(*) (மாஸி), (இயற்கை வட்டி வீதத்தை ஆளும் காரணங்கள் பற்றிய கட்டுரை, லண்டன், 1750, பக்கம் 23-24.- ஆங்கிலப்பதிப்பாசிரியர்.)

(**) இலாபவேட்டைக்காரர்களின் கூட்டமைப்புகள்.- ஆங்கிலப்பதிப்பாசிரியர்.

(***) நியூமன், அரசியல் பொருளாதாரம் பற்றிய விரிவுரைகள், லண்டன், 1851, பக்கம் 180-81.-ஆங்கிலப்பதிப்பாசிரியர்.

ஆக, நிலத்தின் விலை - பொருளுற்பத்தியை அதனளவில் எடுத்துக் கொள்ளும் போது, அதற்கு அந்நியமானதாகிய இந்தக் கூறு-பொருளுற்பத்தியையே சாத்தியமற்றதாக்கும் அளவுக்கு உயரக் கூடும் (தொம்பாசில்).

நிலத்தின் விலை இப்படியொரு பங்கு வகிக்கிறது என்றால், நிலம் வாங்கப்படுதலும் விற்கப்படுதலும், அதாவது நிலம் ஒரு சரக்காகச் சுற்றியோடுதல் இந்த அளவுக்கு வளருகிறது என்றால், முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை வளர்ச்சியடைவதன் நடைமுறை விளைவே ஆகும்; எப்படியெனில் சரக்கு என்பது இங்கே அனைத்து உற்பத்திப் பண்டங்களுக்கும் அனைத்து உற்பத்திக் கருவிகளுக்கும் பொதுவடிவம் ஆகிறது. மறுபுறம், முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை எங்கே வரம்புக்குட்பட்ட அளவில் மட்டும் வளர்ச்சியடைகிறதோ, எங்கே தனக்குரிய தனியியல்புகளையெல்லாம் இன்னமும் வெளிப் படுத்தாமல் இருக்கிறதோ அங்குமட்டுமே இந்நிகழ்வு-இடம்பெறுகிறது. ஏனென்றால் வேளாண்மை முதலாளித்துப் பொருளுற்பத்தி முறைக்கு இனியும் அல்லது இதுவரை உட்படாமல், ஒழிந்துபோன சமூக வடிவங்களால் விட்டுச் செல்லப்பட்ட பொருளுற்பத்தி முறைக்கு உட்பட்டிருப்பதுதான் இதற்கு அடிப்படையாகும். ஆகவே உற்பத்தியாளர் அவரது உற்பத்திப் பொருளின் பண-விலையைச் சார்ந்திருக்கும்படி செய்யும் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் பாதக நிலைகளும் அப்பொருளுற்பத்தி முறையின் அரைகுறை வளர்ச்சியிலிருந்து எழும் பாதக நிலைகளும் இங்கே ஒருங்மைகின்றன. விவசாயி அவரது உற்பத்திப்பொருளை சரக்காக உற்பத்தி செய்வதை சாத்தியமாக்கக் கூடிய நிலைமைகள் இல்லாமலே வணிகராகவும் தொழிலதிபராகவும் மாறுகிறார்.

நிலத்தின் விலை உற்பத்தியாளருக்கான அடக்க-விலையில் ஒரு கூறாக இருப்பதற்கும் உற்பத்தி-விலையில் ஒரு கூறாக இல்லாமற் போவதற்கும் இடையிலான பிணக்கு (வாடகையானது விவசாய விளைபொருளின் விலையை நிர்ணயிக்கும் காரணிகளில் ஒன்றாக அவ்விலையில் சேருகிறபோதுங்கூட, இருபது அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகளுக்கு முன்னீடு செய்யப்படும் மூலதன மாக்கப்பட்ட வாடகை ஒருபோதும் அப்படிச் சேருவதில்லை) நிலத்திலான தனியுடைமைக்கும் நிலத்தின் இயல்பான சமுதாயப் பயன்பாடாகிய அறிவார்ந்த வேளாண்மைக்கும் இடையிலான பொது

முரண்பாட்டை வெளிப்படுத்தும் வடிவங்களில் ஒன்றேயாகும். ஆனால் மறுபுறம், நிலத்திலான தனியுடைமையும், இவ்விதம் நேரடி உற்பத்தியாளர்களின் நிலவுடைமை பறிக்கப்படுவதும்-நிலத்தில் ஒருவருக்கு தனியுடைமை என்பது மற்றவர்களுக்கு உடைமை யின்மையைக் குறிப்பதாய் இருக்கும் போது - முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் அடிப்படையாகும்.

இங்கு சிறுவீத வேளாண்மையில், நிலத்திலான தனியுடைமையின் வடிவமும் விளைவுமாய் இருக்கும் நிலத்தின் விலையானது-இது பொருளுற்பத்திக்கு ஒரு தடைமதிலாகத் தெரிகிறது. முதலாளித்துவ அடிப்படையில் செயல்படும் பெருவீத வேளாண்மையிலும் பெரும்பண்ணைகளிலும் சொத்துடைமை அதே போல் ஒரு தடைமதிலாகத்தான் செயல்படுகிறது. ஏனென்றால் குத்தகைச் சாகுபடியாளர் உற்பத்தி திறனுள்ள முறையில் மூலதன முதலீடு செய்வதற்கு அது வரம்பிடுகிறது. இம் முதலீட்டினால் விளையும் நன்மை போய்ச் சேருவது, நிலவுடைமையாளருக்குத்தானே தவிர, சாகுபடியாளருக்கு அல்ல, நிலத்தை நிரந்தரமான பொதுச் சொத்தாக, மனிதகுலத்தின் சங்கிலித் தொடரான தலைமுறைகளின் வாழ்வுக்கும் மறுவுற்பத்திக்கும் இன்றியமையாத தேவையாகக் கொண்டு உணர்வு பூர்வமாய் அறிவார்ந்த முறையில் சாகுபடி செய்வதை விடுத்து, நிலத்தின் உயிர்சத்து சுரண்டப்படுவதையும் வீணடிக்கப்படுவதையும் இவ்விரு வடிவங்களிலுமே காணலாம் (நிலத்தின் பயன்பாடு அப்போது வந்தடையப் பெற்றுள்ள சமூக வளர்ச்சி நிலையை சார்ந்திருப்பதற்கு பதில் தனிப்பட்ட உற்பத்தியாளர்களின் தற்செயலான, ஏற்றத் தாழ்வான நிலைமைகளையே சார்ந்திருக்கும்படி செய்யப்படுவதைப் பற்றி சொல்ல வேண்டியதில்லை). இது, சிறுநிலவுடைமையைப் பொறுத்த வரை, உழைப்பின் சமுதாய உற்பத்தித் திறனைப் பிரயோகிப்பதற்குப் போதுமான சாதனங்களும், விஞ்ஞான அறிவும், இல்லாமற் போவதன் விளைவு ஆகும்; பெருநிலவுடைமையைப் பொறுத்த வரை, சாகுபடியாளரும் நிலவுடைமையாளரும் மிகத் துரிதமாய் செல்வந்திரட்டுவதற்கு இந்தச் சாதனங்கள் பயன்படுத்திக் கொள்ளப்படுவதன் விளைவு ஆகும். இரு வடிவங்களிலுமே சந்தை-விலையைச் சார்ந்திருப்பதன் விளைவு ஆகும்.

சிறுநிலவுடைமையைக் குறைகூறும் விமர்சனமனைத்தும், இறுதியாகப் பார்க்குமிடத்து நிலத்திலான தனியுடைமை

வேளாண்மைக்குத் தடைமதிலாகவும் இடையூறாகவும் இருப்பதன் மீதான விமர்சனமாகிப் போகிறது; பெருநிலவுடைமையைக் குறைகூறும் எதிர் - விமர்ச்சனமனைத்தும் கூட இப்படித்தான் ஆகிப் போகிறது இரு நேர்வுகளிலுமே இரண்டாம் தர அரசியல் பார்வைகளையெல்லாம் ஒதுக்கிவிடவே செய்கிறோம். நிலத்திலான தனியுடைமை விவசாய உற்பத்திக்கும் அறிவார்ந்த சாகுபடிக்கும், நிலத்தின் பராமரிப்புக்கும் மேம்பாட்டுக்கும் இப்படித் தடைமதிலும் இடையூறுமாவது வேறு வேறு வடிவங்களில் வெளிப்பட்ட போதிலும் இரு நேர்வுகளிலுமே காணப்படுகிறது; இந்தத் தீவினையின் பிரத்தியேக வடிவங்கள் தொடர்பான சர்ச்சையில் அதன் அடிமுதற்காரணம் மறந்து போகிறது.

மக்கள் தொகையில் ஆகப்பெரும்பான்மையினர் கிராமப் புறத்தவர்களாய் இருப்பதும், தனித்த உழைப்புச் சமுதாய உழைப்பை விஞ்சியதாய் இருப்பதும் சிறு நிலவுடைமைக்கு அவசியமாகும். ஆகவே இந்நிலைமைகளில் செல்வம் என்பதற்கும் பொருள் வகையிலும் கருத்துவகையிலுமான மறுவுற்பத்தியின் வளர்ச்சிக்கும் வாய்ப்பில்லாமற் போகிறது; இவ்விதம் அறிவார்ந்த வேளாண்மைக்கு இன்றியமையா நிலைமைகளுக்கும் வழியில்லாமற் போகிறது. மறுபுறம் பெருநிலவுடைமை விவசாய மக்கள் தொகையை மேன்மேலும் குறைந்து செல்லும் குறைந்தபட்சத் தொகையாக குறுகச் செய்கிறது; இதற்கு மாறாக மேன்மேலும் வளர்ந்து செல்லும் தொழில்துறை சார்ந்த மக்கள்தொகை பெருநகரங்களில் நெரிசலாய்க் குவியச் செய்கிறது; வாழ்வின் இயற்கை விதிகளால் விதிக்கப்படும் சமூகப் பரிமாற்றத்தின் ஒத்திசைவில் சரிசெய்ய முடியாத விரிசலுக்கு காரணமாகிற நிலைமைகளை இவ்விதம் தோற்றுவிக்கிறது. இதன் விளைவாக, நிலத்தின் உயிர்ச்சத்து வீணடிக்கப்படுகிறது; இந்த ஊதாரித்தனம் வர்த்தகத்தின் வாயிலாய் தனியொரு நாட்டின் எல்லைக்கப்பாலும் தொலை தூரங்களுக்குப் போய் சேருகிறது (லீபிக்)*

சிறுநிலவுடைமையானது ஓரளவுக்கு சமுதாயத்தில் சேராமல் வெளியில் நிற்கும் அநாகரிகர்களின் வர்க்கமொன்றைத் தோற்று விக்கிறது; ஆதிகாலச் சமூக வடிவங்களின் கரடுமுரடான தன்மைகளெல்லாம் நாகரிக நாடுகளின் துன்ப துயரங்களுடன் சேர்ந்து இந்த வர்க்கத்திடம் காணப்படுகின்றன. உழைப்புச் சக்தியின்

(*) லீபிக், Die Chemie in threr Anwendung auf Agricultur und physiologie, பிரான்ஸ்வைக், 1862. - ஆங்கிலப்பதிப்பாசிரியர்.

தன்னாற்றலுக்கு புகலிடமாகவும், நாட்டின் உயிர்ப்பை மீட்டுக் கொணர்வதற்கான சேம இருப்பாக அதன் வலிமையை சேர்த்து வைக்கும் சேமிப்பாகவும் கடைசியாக எது பயன்படுகிறதோ அதினிலேயே - நிலத்திலேயே - உழைப்புச் சக்தியைச் சீர்குலைக்கிறது. பெருநிலவுடைமை செய்வது என்னவென்றால், பெருவீதத் தொழிற்துறையும் இயந்திர வழிப்பட்ட பெருவீத வேளாண்மையும் ஏற்படுத்தும் விளைவும் ஒன்றுதான். முன்னது உழைப்புச்சக்தியையும், இவ்விதம் மனிதனின் இயற்கை ஆற்றலையும் வீணடித்து நாசம் செய்கிறது, பின்னதோ நிலத்தின் இயற்கை ஆற்றலை இன்னும் நேரடியாகவே உறிஞ்சி விடுகிறது என்னும் வேறுபாடு தொடக்கத்தில் இருந்த போதிலும் அடுத்து மேன்மேலும் வளர்ந்து செல்கையில் இவையிரண்டும் கைகோத்துச் செல்கின்றன; அதாவது நாட்டுப் புறத்திலுள்ள தொழில்துறை அமைப்பு தொழிலாளர்களை வாட்டி வதைத்து சோர்வுறச் செய்கிறது; தங்கள் பங்குக்கு தொழில்துறையும் வாணிகமும் நிலத்தைச் சக்தியிழக்கச் செய்வதற்கான சாதனங்களை வழங்குகின்றன.

# பகுதி VII

# வருவாய்களும் அவற்றின் ஆதாரங்களும்

## அத்தியாயம் XLVIII

### மும்மைச் சூத்திரம்

*மூலதனம்—இலாபம் I[51] (முனைவு-இலாபம் + வட்டி), நிலம்—நில-வாடகை, உழைப்பு—கூலி. இதுவே சமுதாய உற்பத்தி நிகழ்முறையின் இரகசியங்களனைத்தையும் உள்ளடக்கிய மும்மைச் சூத்திரம் ஆகும்.*

மேலும், ஏற்கெனவே தெளிவாக்கியது போல் * வட்டி என்பது மூலதனத்துக்கே உரித்தான பிரத்தியேக விளைபயனாய் தோற்றமளிக்கிறது; மாறாக முனைவு-இலாபம் என்பது மூலதனத்தைச் சாராத கூலியாகத் தோற்றமளிக்கிறது; ஆகவே மேற்சொன்ன மும்மைச் சூத்திரம் இன்னுங்கூட பிரத்தியேகமாய் பின்வருமாறு சுருங்கி விடுகிறது;

மூலதனம்—வட்டி, நிலம்—நில-வாடகை உழைப்பு—கூலி. இதில் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையில் உபரி-மதிப்புக்கே உரித்தான பிரத்தியேக வடிவமாகிய இலாபம் என்பதே நல்ல வேளையாக ஒதுக்கப்பட்டு விடுகிறது.

இந்தப் பொருளாதார மும்மையை இன்னும் நெருங்கிச் சென்று ஆராயும் போது பின்வரும் விவரங்கள் தெரியவருகின்றன.

முதலாவதாக, ஆண்டுதோறும் கிடைக்கக் கூடிய செல்வத்திற்கு ஆதாரங்கள் எனப்படுகிறவை பெரிதும் மாறுபட்ட வெவ்வேறு துறைகளைச் சேர்ந்தவை. இவை கிஞ்சிற்றும் ஒன்றை ஒன்று ஒத்திருப்பவை அல்ல இவற்றுக்கிடையிலான உறவு என்பது வழக்குரைஞர் கட்டணத்துக்கும் சிவப்புக் கிழங்குக்கும் இசைக்குமான உறவைப் போன்றதே தவிர வேறல்ல.

---

(51) எங்கெல்ஸ் குறிப்பு: அடுத்து வரும் மூன்று துண்டுகளும் பகுதி VI.க்கான கையெழுத்துப் பிரதியின் வெவ்வேறு இடங்களிலிருந்து கிடைத்தவை.

(*) தமிழ்ப் பதிப்பு: அத்தியாயம் XXIII. —பதிப்பாசிரியர்

மூலதனம், நிலம், உழைப்பு! ஆனால் மூலதனமென்பது பொருளோ பண்டமோ அல்லது; அது வரலாற்று வழிப்பட்ட ஒரு சமூக அமைப்புக்குரிய குறிப்பிட்ட ஒரு சமூக உற்பத்தி உறவே ஆகும். இந்த உற்பத்தி உறவு ஒரு பொருள் அல்லது பண்டமாக வடிவந்தரித்து அதற்கொரு பிரத்தியோக சமூகத் தன்மையை வழங்குகிறது. மூலதனமென்பது உற்பத்திப் பண்டமாய் இருக்கும் பொருள் வடிவிலான உற்பத்திச் சாதனங்களின் மொத்த அளவு அல்ல. மூலதனமென்பது மூலதனமாக மாற்றப்பட்ட உற்பத்திச் சாதனங்களே ஆகும். தங்கமோ வெள்ளியோ அதனளவில் பணம் ஆகாது என்பது போலவே, இந்த உற்பத்திச் சாதனங்களும் அவற்றினளவில் மூலதனம் ஆகாது. குறிப்பிட்ட ஒரு சமுதாயப் பிரிவின் ஏகபோகமாய் இருக்கும் உற்பத்திச் சாதனங்கள் உயிருள்ள உழைப்புச் சக்தியை அதே உழைப்புச் சக்தியிலிருந்து விடுபட்ட சுயேச்சையாயிருக்கும் உற்பத்திப் பொருட்களாகவும் வேலை நிலைமைகளாகவும் எதிர் நோக்குகையில், அந்த உற்பத்திச்சாதனங்களை எதிர்நோக்கும் போதுதான் இந்த எதிர்நிலையின் மூலம் மூலத்னமாக உருவகம் பெறுகின்றன. சுயேச்சைச் சக்திகளாக மாற்றப்படும் தொழிலாளர்களின் உற்பத்திப் பொருட்கள் மட்டுமல்ல, உற்பத்தி செய்தவர்களையே ஆளுகிறவையும் விலைக்கு வாங்குகிறவை யாகவும் இருக்கும் உற்பத்திப் பொருட்கள் மட்டுமல்ல, இந்த உழைப்பின் சமூக சக்திகளும் வருங்காலத்திய ... (? படிக்க முடிய வில்லை)* வடிவமும் கூட தொழிலாளர்களை அவர்களின் உற்பத்திப் பொருட்களுக்குரிய குணங்களாக எதிர்நோக்குகின்றன. அப்படி யானால் இங்கே, வரலாற்று வழியில் உருவான ஒரு சமூகப் பொருளுற்பத்தி நிகழ்முறையில் செயல்படும் காரணிகளில் ஒன்றின் குறிப்பிட்டதொரு - எடுத்த எடுப்பில் மிகவும் மாயமான - சமூக வடிவத்தைக் காண்கிறோம்.

அடுத்து வருவது நிலம், உயிர்பொருளல்லாத இயற்கை, ஆதி வனாந்தரமாகவே முழுக்க இருந்து வரும் rudis indigestaque moles,** மதிப்பு என்பது உழைப்பு ஆகும். ஆகவே உபரி-மதிப்பு என்பது மண்ணாய் இருக்க முடியாது. மண்ணின் அறுதி வறுமையால் ஏற்படும்

---

(*) பிற்பாடு கையெழுத்துப் பிரதியுடன் ஒப்பிட்டுப் பார்த்தபோது, வாசகத்தில் கீழ்வருமாறு இருப்பது தெரிந்தது: "die Gesellschaftlichen Kräfte und Zusammenhängende Form dieser Arbeit" ‘(அவர்களது உழைப்பின் சமூகசக்திகளும், இந்த உழைப்பின் சமூகமய வடிவமும்). — ஆங்கிலப்பதிப்பாசிரியர்.

(**) ஒவிட், உருமாற்றங்கள், புத்தகம் I,7. —ஆங்கிலப்பதிப்பாசிரியர். இதன் பொருள் ‘பண்படுத்தப்படாத கலவைத் திரள்’.

விளைவு பின்வருதற்கு மேல் வேறொன்றுமில்லை; குறிப்பிட்ட அளவு உழைப்பு - நிலத்தின் இயற்கை வளமைக்கேற்ப - குறிப்பிட்ட ஒரு பண்டத்தை உற்பத்தி செய்கிறது. நிலத்தின் வளமையிலான வேறுபாடு காரணமாய் ஒரே அளவு உழைப்பும் மூலதனம், இவ்விதம் ஒரே மதிப்பும் வெவ்வேறு அளவிலான விவசாய விளைபொருட்களில் வெளிப்படுகின்றன. அதாவது இந்த வேறுபாடு காரணமாய் இந்த விளை பொருட்களின் தனிப்பட்ட மதிப்புகள் வேறுபடுகின்றன இந்த தனிப்பட்ட மதிப்புகள் சமனப்பட்டு சந்தை-மதிப்புகள் ஆவதால்தான், 'தரங்குறைந்த நிலத்தைக் காட்டிலும் வளமான நிலம் பெற்றுள்ள சாதக நிலைகள் ... சாகுபடியாளர் அல்லது நுகர்வாளரின் கையிலிருந்து நிலவுடைமையாளரின் கைக்கு மாற்றப்படுகின்றன.' (*ரிக்கார்டோ கோட்பாடுகள், லண்டன், 1821, பக்கம் 62.*)

முடிவில், இந்த முக்கூட்டில் மூன்றவாதாய் வருவது வெறும் ஆவிதான் - 'அதுவே' உழைப்பு; இது ஒரு சூக்குமம் என்பதற்கு மேல் ஒன்றுமில்லை; அதனளவில் எடுத்துக் கொண்டால், அல்லது நாம் ... (படிக்க முடியவில்லை)* எடுத்துக் கொள்வோமானால் இப்படி யொன்றே இருப்பதில்லை; இது பொதுவாக மனிதப்பிறவிகளின் உற்பத்திச் செயற்பாடாகும்; இந்தச் செயற்பாட்டின் மூலமாகத்தான் அவர்கள் இயற்கையுடன் பரிமாற்றத்தில் ஈடுபடுகிறார்கள். ஆனால் இது எந்தச் சமூக வடிவத்திலிருந்தும் வரையறுக்கப்பட்ட தன்மையி லிருந்தும் விடுபட்டது மட்டுமல்ல; வெறும் இயற்கையான நிலவல் முறையிலும் கூட சமுதாயத்தைச் சாராமலிருப்பதாகும்; எல்லாச் சமுதாயங்களிலிருந்தும் விலகியிருப்பதாகும்; பொதுவாக இன்னும் சமூகத் தன்மை பெறாமலிருக்கும் மனிதனுக்கும் ஏதேனும் ஒரு வகையில் சமூகத் தன்மை பெற்றுள்ள மனிதனுக்கும் பொதுவாக வாழ்க்கையை வெளியிடுவதாகவும் உறுதி செய்வதாகவும் இதற்கு விளக்கமளிக்கப்படுகிறது.

## II

மூலதனம்—வட்டி; நிலச்சொத்து, நிலத்திலான தனியுடைமை, நிச்சயமாக முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறைக்கு உரிதான நவீனத் தனியுடைமை—வாடகை; கூலியுழைப்பு—கூலி. வருவாயின் ஆதாரங்களுக்கு இடையிலான தொடர்பு இந்தச் சூத்திர வடிவில் தெரிய

(*) பிற்பாடு கையெழுத்துப் பிரதியுடன் ஒப்பிட்டுப் பார்த்து இங்கு கீழ்வருமாறு இருப்பதாக நிலைநாட்டப்பட்டது "Wenn wir das Gemeinte nehmen" (இதன் உட்கிடக்கையை எடுத்துக் கொள்வோமானால்).—ஆங்கிலப்பதிப்பாசிரியர்.

வருவதாக கொள்ளப்படுகிறது. மூலதனத்தைப் போலவே கூலியுழைப்பும் நிலம் சொத்தும் கூட வரலாற்று வழியில் நிர்ணயிக்கப்பட்ட சமூக வடிவங்களாகும்; முதலாவது உழைப்பின் வடிவமும்; இரண்டாவது ஏகபோகமாக்கப்பட்ட புவிக்கோளின் வடிவமும் ஆகும்; இருவடிவங்களுமே மூலதனத்துக்கு தொடர் புள்ளவை. சமுதாயத்தின் அதே பொருளாதார அமைப்புக்கு உரியவை.

இந்தச் சூத்திரம் தொடர்பாக எடுப்பாய் வெளிப்படும் முதல் விவரம் இதுதான்: மூலதனத்துக்குப் பக்கத்தில், குறிப்பிட்ட ஒரு பொருளுற்பத்தி முறைக்கு, சமுதாயப் பொருளுற்பத்தி நிகழ் முறையின் குறிப்பிட்ட ஒரு வரலாற்று வடிவத்துக்குச் சொந்தமான ஓர் உற்பத்தி-அடிக்கூறின் இந்த வடிவத்துக்குப் பக்கத்தில், குறிப்பிட்ட ஒரு சமூக வடிவத்துடன் பின்னிக் கலந்து அவ்வடிவத்தால் குறிக்கப்பெறும் ஓர் உற்பத்தி அடிக்கூறின் பக்கத்தில் சகட்டுமேனிக்கு வரிசைப் படுத்தப்படுகிறவையாக, ஒரு புறம் நிலமும் மறுபுறம் உழைப்பும் உள்ளன. இவை இரண்டும் மெய்யான உழைப்பு நிகழ்முறைக்குரிய அடிக்கூறுகளாகும், இந்தப் பொருளாயத வடிவில் எல்லா பொருளுற்பத்தி முறைகளுக்கும் பொதுவானவையாகும். ஒவ்வொரு பொருளுற்பத்தி நிகழ்முறைக்கும் உரிய பொருட்கூறுகளாகும். இவற்றுக்கும் அந்நிகழ்முறையின் சமூக வடிவத்துக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை.

இரண்டாவதாக, மூலதனம்—வட்டி, நிலம்—நில-வாடகை, உழைப்பு—கூலி என்ற சூத்திரத்தில் மூலதனமும் நிலமும் உழைப்பும் முறையே அவற்றின் உற்பத்திகள் அல்லது பலன்களாகிய (இலாபத்திற்கு பதில்) வட்டி, நில-வாடகை, கூலி ஆகியவற்றின் ஆதாரங்களாக தோற்றமளிக்கின்றன; முன்னவை அடிப்படையும் பின்னவை விளைவும் ஆகும், முன்னவை காரணமும் பின்னவை காரியமும் ஆகும்; மேலும் தனிப்பட்ட ஒவ்வோர் ஆதாரமும் அதிலிருந்து சுரப்பதும் அதனால் ஆக்கப்படுவதுமான அதன் உற்பத்தியோடு உறவுப்படுத்தப்படுகிறது. (இலாபத்திற்கு பதில்) வட்டி, வாடகை, கூலி ஆகிய மூன்று வருமான வடிவங்களும் உற்பத்திப் பொருட்களது மதிப்பில் மூன்று உள்ளடக்க கூறுகளாகும். பொதுவாகச் சொன்னால் மதிப்பின் உள்ளடக்கக் கூறுகளாகும். அல்லது பணமாகச் சொன்னால் பணத்தின் அல்லது விலையின் உள்ளடக்கக் கூறுகளாகும். மூலதனம்—வட்டி எனும் சூத்திரம் நிச்சயமாய் மிகவும் அபத்தமான மூலதனச் சூத்திரமாய் இருந்த போதிலும், அதுவும் ஒரு மூலதனச்

சூத்திரமே ஆகும். ஆனால் நிலம் எப்படி மதிப்பைப் படைக்கும்? அதாவது சமூக வழியில் நிர்ணயிக்கப்பட்ட ஓர் உழைப்பளவை, அதுவும் அதன் உற்பத்திப் பொருட்களின் மதிப்பில் வாடகையாக அமையும் அந்தக் குறிப்பிட்ட பகுதியை அதனால் எப்படிப் படைக்க முடியும்? எடுத்துக்காட்டாக கோதுமை என்னுமோர் பயன்-மதிப்பை ஒரு பொருளாயத உற்பத்திப் பண்டத்தை உண்டாக்குவதில் நிலம் ஒரு உற்பத்திச் செயலியாக பங்கெடுத்துக் கொள்கிறது. ஆனால் அதற்கும் கோதுமையின் மதிப்பு உற்பத்தி செய்யப்படுவதற்கும் எவ்வித தொடர்பும் இல்லை. மதிப்பு என்பது கோதுமையால் குறிக்கப் பெறுவதாய் இருக்கும் வரை, கோதுமையானது பொருள் வடிவாக்கப் பட்ட குறிப்பிட்ட அளவு சமுதாய உழைப்பாக மட்டும் கருதப்படுகிறதே தவிர இந்த உழைப்பு குறிப்பிட்ட எப்பொருளில் வெளிப்படுகிறது என்பதோ இப்பொருளின் குறிப்பிட்ட பயன்-மதிப்பு என்ன என்பதோ கருத்துக்குரியதல்ல. இதற்கும் பின்வருவதற்கும் எவ்வித முரண்பாடும் இல்லை: (1) மற்றவை மாறாதிருக்க, கோதுமையின் விலை குறைவா அதிகமா என்பது நிலத்தின் உற்பத்தித்திறனைப் பொறுத்தது. விவசாய உழைப்பின் உற்பத்தித்திறன் இயற்கை நிலைமைகளைப் பொறுத்தது; இந்த உற்பத்தித் திறனைப் பொறுத்த ஒரே உழைப்பளவு குறைவான அல்லது அதிகமான உற்பத்திப் பொருட்களில், பயன்மதிப்புகளில் வெளிப்படுகிறது. ஒரு புஷல் கோதுமையில் எவ்வளவு உழைப்பு வெளிப்படுகிறது என்பது குறிப்பிட்ட அளவு உழைப்பினால் விளையும் புஷல்களின் எண்ணிக்கையைப் பொறுத்தது. மதிப்பானது எவ்வளவு உற்பத்திப் பொருளில் வெளிப்படும் என்பது இங்கு நிலத்தின் உற்பத்தித் திறனைப் பொறுத்தது. ஆனால் இம்மதிப்பு நிர்ணயமானது ஆகும், அது உற்பத்திப் பொருள்களிடையே எவ்விதம் பரவியுள்ளது என்பதைப் பொறுத்ததல்ல. மதிப்பு என்பது பயன்-மதிப்பாக வெளிப்படுகிறது; பயன்-மதிப்பு என்பது மதிப்பைப் படைப்பதற்கு முன்தேவையாகும். ஆனால் நிலம் போன்ற ஒரு பயன்-மதிப்பை ஒரு பக்கத்திலும், மதிப்பை, அதிலும் குறிப்பிட்ட ஒரு மதிப்புப் பகுதியை மறுபக்கத்திலும் வைத்து ஓர் எதிர்நிலையை உண்டாக்குவது அறிவீனம்.(2) ... (கையெழுத்துப் பிரதி இங்கே பாதியில் முடிந்து போகிறது).

## III

உள்ளபடியே கொச்சைப் பொருளாதார இயல் செய்வதெல்லாம், முதலாளித்துவ உற்பத்தி உறவுகளின் வலையில் சிக்கியிருக்கும் உற்பத்திச் செயலிகளின் கண்ணோட்டங்களுக்கு விளக்கமளிப்பது,

முறைப்படியான வடிவம் கொடுப்பது, வறட்டுச் சூத்திர வழியில் வக்காலத்து வாங்குவது என்பதற்கு மேல் ஒன்றுமில்லை. அப்படியானால், பொருளாதார உறவுகளின் விலகிப்போன புறத்தோற்றங்களில் கொச்சைப் பொருளாதார இயல் சரளமாய்ப் புழங்குவது குறித்து நாம் விளப்புறக் தேவையில்லை; எடுத்த எடுப்பில் அபத்தமாகத் தெரியும் இந்த முழு அளவிலான முரண்பாடுகள் இந்தப் புறத்தோற்றங்களின் வாயிலாகத்தான் வெளிப்படுகின்றன; இந்த உறவுகள் சாமானிய மக்களின் அறிவுக்கு எட்டக் கூடியவையாக இருந்தாலும் அவற்றின் உள்தொடர்புகள் எவ்வளவுக்கு எவ்வளவு மறைந்துள்ளனவோ இந்த உறவுகள் அவ்வளவுக்கு அவ்வளவு கொச்சைப் பொருளாதார இயலுக்கு கண்கூடானவையாகத் தெரிகின்றன. ஆனால் ஏதேனும் ஒன்றின் புறத்தோற்றமும் சாராம்சமும் நேரடியாகவே ஒருங்கமைத்தால், விஞ்ஞானம் என்பதே தேவை யற்றதாகிவிடும். கொச்சைப் பொருளாதாரம் இயல் தொடக்க முனையாகக் கொள்ளும் மும்மையாகிற நிலம்—வாடகை, மூலதனம்—வட்டி, உழைப்பு—கூலி அல்லது உழைப்பின் விலை என்பது எடுத்த எடுப்பில் மூன்று சாத்தியமில்லா இணைவுகளை குறிப்பதாகும் என்ற சூசனையே அவ்வியலுக்கு இல்லை. மதிப்பே இல்லாத பயன்-மதிப்பாகிய நிலமும் பரிவர்த்தனை-மதிப்பாகிய வாடகையும் முதலில் வருகின்றன. இவ்வாறு ஒரு பொருள் அல்லது பண்டமாகக் கருதிக் கொள்ளப்படும் சமூக உறவு இயற்கையோடு விகித உறவு கொண்டதாகிறது; அதாவது ஒரளவையற்ற இரு பருமன்கள் ஒன்றுக்கொன்று விகித உறவு கொண்டிருப்பதாய்க் கொள்ளப்படுகிறது. அடுத்து மூலதனம்—வாடகை, மூலதனம் என்பது சுயேச்சையாகப் பணத்தால் குறிக்கப்பெறும் குறிப்பிட்ட மதிப்புத் தொகையாக கருதிக் கொள்ளப்படுமானால், குறிப்பிட்ட ஒரு மதிப்பு அது கொண்டிருக்கும் பெறுமானத்தைக் காட்டிலும் மிகுந்த பெறுமானம் கொண்டிருப்பதாகச் சொல்லுவது எடுத்த எடுப்பில் அபத்தமாகத் தெரியும். மூலதனம்—வட்டி என்ற வடிவில்தான் இடைக்கண்ணிகளெல்லாம் ஒழிந்து போகின்றன; மூலதனம் அதன் மிகப் பொதுவான சூத்திரத்துக்கு இறங்கி வருகிறது. இது மிகப் பொதுவான சூத்திரமாக இருப்பதால் அதனளவில் விளங்காப் புதிராகவும் அபத்தமாகவும் கூட உள்ளது. கொச்சைப் பொருளாதார அறிஞர் மூலதனம்—இலாபம் என்ற சூத்திரத்தைக் காட்டிலும் மூலதனம்—வட்டி என்ற சூத்திரத்தையே (ஒரு மதிப்பை அதற்கே சமமற்றதாய் மாற்றும் மாயத்திறன் படைத்த இச் சூத்திரத்தையே) பெரிதும் விரும்புகிறார்; இந்தச் சூத்திரம்

உள்ளபடியான முதலாளித்துவ உறவுகளை கூடுதலாய் நெருங்கி வருவதுதான் இதற்குக் காரணம். பிறகு 4 என்பது 5 அல்ல, 100 தாலெர் 110 தாலெராக இருக்க முடியவே முடியாது என்ற நினைப்பினால் கலங்கிப்போய் அவர் மதிப்பாய் இருக்கும் மூலதனத்திலிருந்து தப்பியோடி பொருட்கூறாய் இருக்கும் மூலதனத்திடம் தஞ்சமடைகிறார்; உழைப்பின் உற்பத்திச் சாதனமாய் இருக்கும் அதன் பயன்-மதிப்பிடம், இயந்திர சாதனம் கச்சாப் பொருட்கள் முதலானவற்றிடம் தஞ்சமடைகிறார். இவ்வாறு 4 = 5 என்னும் அறிவுக்கு எட்டாத முதல் விகிதத் தொடர்புக்கு பதிலாக, ஒருபுறம் பொருள் அல்லது பண்டமாகிய ஒரு பயன்-மதிப்புக்கும், மறுபுறம் குறிப்பிட்ட ஒரு சமூக உற்பத்தி உறவாகிய உபரி-மதிப்புக்கும் இம்மியளவும் ஒரளவையற்ற ஒரு விகிதத் தொடர்பை அவரால் உருவாக்க முடிகிறது. கொச்சைப் பொருளாதார அறிஞர் ஒரளவையற்ற இந்த விகிதத் தொடர்பை வந்தடைந்தவுடனே அனைத்தும் அவருக்கு தெளிவாகிவிடுகிறது; இனிமேல் சிந்திக்க வேண்டிய தேவையில்லை என்ற எண்ணம் ஏற்படுகிறது. ஏனென்றால் முதலாளித்துவக் கண்ணோட்டத்தில் 'அறிவுக்குகந்தவையே' அவர் வந்தடைந்திருக்கிறார். முடிவில் உழைப்பு—கூலி அல்லது உழைப்பின் விலை என்ற தெரிவிப்பு முதல் பார்வையில் மதிப்பின் கருத்தமைவுக்கும், அதே போல் விலையின் கருத்தமைவுக்கும் முரணாய் இருப்பதாக முதல் பாகத்தில் தெளிவாக்கினோம். விலை என்பது பொதுவாகச் சொன்னால், மதிப்பின் குறிப்பிட்ட ஒரு தெரிவிப்பே தவிர வேறல்ல. 'உழைப்பின் விலை' என்பது மஞ்சள் நிறங்கொண்ட மடக்கை எண் என்று சொல்வதைப்போலவே அறிவுக்கு ஒவ்வாததாகும். ஆனால் இங்கே கொச்சைப் பொருளாதார அறிஞர் அந்த அளவுக்கு மிக அதிகமாய் மனநிறைவு கொள்கிறார். ஏனென்றால் முதலாளியின் ஆழ்ந்த நுண்ணறிவு, அவருக்குக் கைவந்துவிட்டது. அதாவது முதலாளி உழைப்புக்கு விலையாகப் பணம் கொடுக்கிறார் என்று தெரிந்து விட்டது. இந்தச் சூத்திரத்திற்கும் மதிப்பின் கருத்துருவத்திற்கும் இடையிலான முரண்பாடுதான் பின்னதைப் புரிந்து கொள்ள வேண்டிய கட்டுப்பாட்டிலிருந்து முற்றமுழுக்க விடுவிக்கிறது.

---

முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிகழ்முறையானது பொதுவான சமுதாயப் பொருளுற்பத்தி நிகழ்முறையின் வரலாற்று வழியில்

நிர்ணயிக்கப்பட்டதொரு வடிவமாகும் என்று பார்த்தோம்.[52] பொதுவான சமுதாயப் பொருளுற்பத்தி நிகழ்முறையானது மனித வாழ்வுக்கு இன்றியமையாத பொருளாயதத் தேவைகளின் உற்பத்தி நிகழ்முறையாக இருப்பது போலவே, பிரத்தியேகமான வரலாற்று வழிப்பட்ட பொருளாதார உற்பத்தி உறவுகளுக்கு உட்பட்டு நடைபெறும் நிகழ்முறையாகவும் இருக்கிறது, இந்த உற்பத்தி உறவுகளையே உற்பத்தியும் மறுவுற்பத்தியும் செய்வதாக இருக்கிறது, இதனால் மேலும் இந்நிகழ்முறையை முன்னெடுப்போரையும் அவர்களின் பொருளாயத வாழ்வுத் தேவைகளையும் அவர்களுக்கிடையிலான உறவுகளையும் - அதாவது அவர்களின் குறிப்பிட்ட சமூகப் பொருளாதார வடிவத்தையும் - உற்பத்தியும் மறுவுற்பத்தியும் செய்வதாக இருக்கிறது. இந்தப் பொருளுற்பத்தியின் செயலிகள் இயற்கையோடு கொண்டிருப்பவையும், ஒருவரோடு ஒருவர் கொண்டிருப்பவையுமான இந்த உறவுகளின், எந்த உறவுக்கு உட்பட்டு அவர்கள் உற்பத்தியில் ஈடுபடுகிறார்களோ அந்த உறவுகளின் முழுமொத்தமே சமுதாயம் என்பது சமுதாயத்தின் பொருளாதாரக் கட்டமைப்பு என்ற கோணத்திலிருந்து பார்க்கும் போது இது தெளிவாகும். முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிகழ்முறை அதற்கு முன்சென்ற பொருளுற்பத்தி நிகழ்முறைகள் அனைத்தையும் போலவே, பிரத்தியேகமான பொருளாயத நிலைமைகளுக்கு உட்பட்டு நடைபெறுகிறது; ஆனால் இந்நிலைமைகளானவை தனியாட்கள் தமது வாழ்வை மறுவுற்பத்தி செய்து கொள்கிற நிகழ்முறையில் தமக்குள் ஏற்படுத்திக் கொள்ளும் பிரத்தியேகமான சமூக உறவுகளின் ஊர்திகளாகவும் உள்ளன. இந்த உறவுகளைப் போலவே, அந்த நிலைமைகளும் ஒருபுறம் முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிகழ்முறையின் முன் தேவைகளாக உள்ளன, மறுபுறம் அந்நிகழ் முறையின் விளைவிகளாகவும் படைப்புகளாகவும் உள்ளன. அவை அந்நிகழ்முறையால் உற்பத்தியும் மறுவுற்பத்தியும் செய்யப்படுகின்றன. மூலதனம் என்பது முதலாளி மூலதனத்தின் ஆளுருவமே தவிர வேறல்ல, அவர் மூலதனத்தின் செயலியாக மட்டுமே பொருளுற்பத்தி நிகழ்முறையில் செயல்படுகிறார். அதற்குரிய சமுதாயப்பொருளுற்பத்தி நிகழ்முறையில் நேரடி உற்பத்தியாளர்களிடமிருந்து, அதாவது தொழிலாளர்களிடமிருந்து குறிப்பிட்ட அளவு உபரி-உழைப்பை கறந்து விடுகிறார் என்றும் பார்த்தோம்; மூலதனம் இந்த உபரி-உழைப்பை

(52) கையெழுத்துப் பிரதியின் படி அத்தியாயம் XLVIII -இன் துவக்கம். - பி.எங்கெல்ஸ்.

அதற்கீடாக எதுவும் தராமல் அடைகிறது; சாராம்சத்தில் எப்போதுமே அது கட்டாய உழைப்பாக இருந்து வருகிறது - எவ்வளவுதான் சுதந்தரமான ஒப்பந்த உடன்படிக்கையிலிருந்து விளைவதாக தோன்றினாலும் இதுவே உண்மை. இந்த உபரி-உழைப்பு உபரி-மதிப்பாக வெளிப்படுகிறது, இந்த உபரி-மதிப்பு உபரி-உற்பத்தியாக நிலவுகிறது: பொதுவாக உபரி-உழைப்பு என்பது குப்பிட்ட தேவைப் பாடுகளுக்கு மேலதிகமாய் ஆற்றப்படும் உழைப்பு என்ற முறையில் ஏதேனுமொரு வடிவில் எப்போதும் இருக்கவே செய்யும். முதலாளித்துவ அமைப்பிலும் அதே போல் அடிமையுடைமை அமைப்பு முதலானவற்றிலும் இந்த உபரி-உழைப்பு பகைவடிவம் பூணுகிறது, மறுபக்கத்தில் சமுதாயத்தின் ஒரு பிரிவு உழைக்காமலே ஓய்ந்து கிடக்கிறது என்பதற்கு மேல் ஒன்றுமில்லை. விபத்துக்களுக்கான காப்பீடு என்ற முறையில் குறிப்பிட்ட அளவு உபரி-உழைப்பு அவசியமாகிறது; தேவைகளின் வளர்ச்சிக்கும் மக்கள் தொகைப் பெருக்கத்துக்கும் ஈடுகொடுக்கிற விதத்தில் மறுவுற்பத்தி நிகழ்முறையை மேன்மேலும் விரிவாக்குவதற்கும் கூட குறிப்பிட்ட அளவு உபரி-உழைப்பு அவசியமாகிறது; இந்த விரிவாக்கம்தான் முதலாளியின் கோணத்திலிருந்து மூலதனத் திரட்டல் எனப்படுகிறது. மூலதனம் அதற்கு முன்சென்ற வடிவங்களாகிய அடிமை முறை,பண்ணையடிமை முறை போன்றவற்றைக் காட்டிலும் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்கும் சமூக உறவுகளுக்கும் இன்னுமுயர்ந்த புதிய அமைப்புக்கான கூறுகளின் ஆக்கத்துக்கும் கூடுதலாய்ச் சாதகமான விதத்திலும் நிலைமைகளிலும் இந்த உபரி-உழைப்பைக் கறக்கிறது; இது மூலதனத்தின் நாகரிகப்படுத்தும் பண்புக் கூறுகளின் ஒன்றாகும். இவ்வாறு ஒருபுறம் அது சமுதாயத்தின் ஒரு பிரிவு மற்றொரு பிரிவை பலியிட்டு சமூக வளர்ச்சியை (பொருள் வகையிலும் அறிவு வகையிலுமான அதன் அனுகூலங்கள் உட்பட) வலுவந்தமாய் ஏகபோகமாக்கிக் கொள்வது ஒழிந்து போகும் கட்டத்துக்கு வழிகோலுகிறது. மறுபுறம், இன்னுமுயர்ந்து சமூக வடிவத்தில் பொருளாயத உழைப்புக்கு ஒதுக்கப்படும் நேரத்தை இன்னுமதிகமாய்க் குறைத்து அதே போது இன்னுமுயர்ந்த சமூக வடிவத்தில் உபரி-உழைப்பும் கிடைப்பதை சாத்தியமாக்கும்படியான பொருட்சாதனங்களையும் முளைவிடு நிலைமைகளையும் அது படைத்திடுகிறது. ஏனென்றால் உழைப்பின் உற்பத்தித் திறன் வளருவதற்கேற்ப சிறு அளவிலான மொத்த வேலை - நாளில் உபரி-உழைப்பு பெரிதாய் இருக்கலாம். பெரிய அளவிலான மொத்த

வேலை-நாளில் உபரி-உழைப்பு ஒப்பளவில் சிறிதாய் இருக்கலாம். அவசிய உழைப்பு-நேரம் = 3, உபரி-உழைப்பு = 3 என்றால், மொத்த வேலை-நாள் = 6; உபரி-உழைப்பு வீதம் = 100%. அவசிய-உழைப்பு = 9, உபரி உழைப்பு = 3 என்றால், மொத்த வேலை-நாள் = 12 உபரி-உழைப்பு வீதம் = $33^1/_3$% மட்டுமே, அந்நிலையில் குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட உபரி-உழைப்பு நேரத்தில் எவ்வளவு பயன்-மதிப்பு உற்பத்தி செய்யப்படும் என்பது உழைப்பின் உற்பத்தித் திறனைப் பொறுத்தது. ஆகவே, சமுதாயத்தின் உண்மைச் செல்வமும் அதன் மறுவுற்பத்தி நிகழ்முறையை ஓயாது விரிவாக்கும் சாத்தியப்பாடும் உபரி-உழைப்பின் உற்பத்தித் திறனையும் அது ஆற்றப்படுவதற்கான உற்பத்தி நிலைமைகள் அதிகமாகவோ குறைவாகவோ இருப்பதையும் பொறுத்தவைதானே தவிர உபரி-உழைப்பின் கால அளவைப் பொறுத்தவையல்ல. அவசியத்தாலும் உலகியல் பார்வைகளாலும் நிர்ணயிக்கப்படும் உழைப்பு இல்லாமற் போகுமிடத்தேதான் உள்ளபடியே சுதந்திரத்தின் ஆட்சி தொடங்குகிறது. இவ்விதம் இயல்பாகவே அது உள்ளபடியான பொருளாயத உற்பத்தித் துறைக்கு அப்பாற்பட்டதாகும். எப்படிக் காட்டுமிராண்டி தம் தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்காகவும் தமது வாழ்வைக் காத்து மறுவுற்பத்தி செய்து கொள்வதற்காகவும் இயற்கையோடு மல்லுக்கு நின்று போராடியாக வேண்டுமோ, நாகரிக மனிதனும் அப்படித்தான் செய்தாக வேண்டும்; எல்லா சமூக அமைப்புகளிலும், சாத்தியமான எல்லா பொருளுற்பத்தி முறைகளிலும் நிலைமை இதுவே. நாகரிக மனிதன் வளர்ச்சியடைவதையொட்டி அவரின் தேவைகளின் விளைவாக பௌதிக அவசியத்தின் இந்த ஆட்சிவிரிவடைந்து செல்கிறது. ஆனால் அதே போது இந்தத் தேவைகளை நிறைவு செய்யும் உற்பத்திச் சக்திகளும் அதிகரித்துச் செல்கின்றன. இந்தத் துறையில் சுதந்தரம் என்பது சமூகமயப்பட்ட மனிதன்; கூட்டுத்துவ உற்பத்தியாளர்கள் இயற்கையுடனான பரிமாற்றத்தை அறிவுக்குகந்த வழியில் ஒழுங்கியக்குவதாகத்தான் அமைந்திட முடியும்; அவர்கள் இயற்கையின் குருட்டுச் சக்திகளால் ஆளப்படுவதற்கு பதில் இயற்கையை தங்களின் பொதுக் கட்டுப்பாட்டுக்கு கீழ்ப்படுத்த வேண்டும்; மிகக் குறைந்த அளவில் ஆற்றலைச் செலவிட்டும், தங்கள் மானுட இயல்புக்கு மிகச் சாதகமான, மிகப் பொருத்தமான நிலைமைகளுக்கு உட்பட்டும் இதனைச் சாதிக்க வேண்டும் ஆனால் இது இன்னமும் அவசியத்தில் ஆட்சியாகவே இருந்து வருகிறது. அதற்கப்பால் ஆரம்பமாகிறது சுதந்திரத்தின் உண்மை ஆட்சி,

வளருவதையே நோக்கமாய்க் கொண்ட மானுட ஆற்றலின் வளர்ச்சி, என்றாலும் அவசியத்தின் ஆட்சியை அடித்தளமாகக் கொண்டுதான் சுதந்திரத்தின் ஆட்சி பூத்துக் குலுங்க முடியும். வேலை-நாளைக் குறைப்பது அதற்கு அடிப்படை முன் தேவை.

முதலாளித்துவச் சமுதாயத்தில், இந்த உபரி-மதிப்பு, அல்லது இந்த உபரி-உற்பத்தி (அதன் வினியோகப் பங்கீட்டில் தற்செயலால் ஏற்படும் ஏற்ற இறக்க அலைவுகளை ஒதுக்கி விட்டு, அவற்றை ஆளும் விதியை மட்டும், அவற்றை ஒழுங்கியக்கும் வரம்புகளை மட்டும் கருதுவோமானால்) சமுதாய மூலதனத்தில் ஒவ்வொரு முதலாளிக்கும் சொந்தமான பங்களவுக்கு ஏற்ற விகிதத்தில் முதலாளிகளிடையே ஆதாயப் பங்கீடுகளாகப் பிரிக்கப்படுகிறது. இவ்வடிவில் உபரி - மதிப்பு என்பது மூலதனத்தின் பங்குக்குப் போய்ச் சேருகிற சராசரி இலாபமாக விளங்குகிறது. இந்த சராசரி இலாபமும் முனைவு-இலாபமும் வட்டியாகவும் பிரிக்கப்படுகிறது; அது இந்த இரு இனங்களிலும் வெவ்வேறு முதலாளிகளுக்குப் போய்ச்சேரக் கூடும். ஆனால் மூலதனம் உபரி-மதிப்பு அல்லது உபரி-உற்பத்தியை இவ்விதம் தனதாக்கிக் கொள்வதற்கும் நிலச் சொத்து தடைமதிலாய் எழுகிறது. முதலாளி தொழிலாளியிடமிருந்து இலாபத்தின் வடிவில்உபரிஉழைப்பையும், எனவே உபரி-மதிப்பையும் உபரி-உற்பத்தியையும் கறந்து விடுவது போலவே, நிலவுடைமையாளரும் முதலாளியிடமிருந்து வாடகையின் வடிவில் இந்த உபரி-மதிப்பு அல்லது உபரி-உற்பத்தியில் ஒரு பகுதியைக் கறந்து விடுகிறார் - ஏற்கெனவே விளக்கிச் சொன்ன விதிகளின் படி இது நடைபெறுகிறது.

ஆகவே, நாம் இங்கே இலாபத்தை மூலதனத்தின் பங்குக்குப் போய்ச் சேரும் உபரி-மதிப்புப் பகுதி என்று குறிப்பிடும் போது, சராசரி இலாபத்தைச் சொல்கிறோம். (சராசரி இலாபம் = முனைவு - இலாபம் + வட்டி); மொத்த இலாபத்திலிருந்து வாடகையைக் கழித்தபின் எஞ்சி நிற்பதே இந்த சராசரி இலாபம் (மொத்த இலாபமும் மொத்த உபரி-மதிப்பும் அளவில் ஒன்றுதான்); வாடகை கழிக்கப்பட்டுவிடுவதாக முன்கூட்டியே அனுமானம் செய்து கொள்கிறோம். இவ்வாறு மூலதன -இலாபமும் (முனைவு - இலாபம் + வட்டி) நில - வாடகையும் உபரி-மதிப்பின் குறிப்பான அடக்கக் கூறுகளே தவிர வேறல்ல; உபரி-மதிப்பு மூலதனத்தின் பங்குக்குப் போய்ச் சேருகிறதா நிலச்சொத்தின் பங்குக்குப் போய்ச் சேருகிறதா என்பதைப் பொறுத்து உபரி-மதிப்பை வேறுபடுத்திக் காட்டும் கருத்தினங்களே, ஆனால் உபரி-மதிப்பின்

இயல்பை இம்மிளவும் மாற்றிடாத வகைப் பெயர்களே தவிர வேறல்ல. சேர்த்துக் கூட்டினால் இவை சமுதாய உபரி-மதிப்பின் மொத்தத் தொகை ஆகின்றன. மூலதனம் உபரி-மதிப்பாலும் உபரி-உற்பத்தியாலும் குறிக்கப்படும் உபரி-உழைப்பை நேரடியாக தொழிலாளர்களிடமிருந்து கறக்கிறது. இவ்வாறு, இந்த அர்த்தத்தில், மூலதனத்தை உபரி-மதிப்பின் உற்பத்தியாளராகக் கருதலாம். நிலச் சொத்துக்கும் உள்ளபடியான பொருளுற்பத்தி நிகழ்முறைக்கும் தொடர்பே இல்லை. அது வகிக்கும் பங்கு என்பது உற்பத்தி செய்யப்பட்ட உபரி-மதிப்பின் ஒரு பகுதியை முதலாளியின் கையிலிருந்து தன் கைக்கு மாற்றிக் கொள்வதோடு சரி. ஆனால் நிலவுடைமையாளர் முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிகழ்முறையில் நிலவுடைமையாளர் ஒரு பங்கு வகிப்பது என்பது அவர் மூலதனத்தின் மீது செலுத்தும் நெருக்குதலின் மூலமாக மட்டுமல்ல, பெருநிலச் சொத்தானது தொழிலாளியிடமிருந்து அவரது உற்பத்திச் சாதனங்களை உடைமைப்பறிப்பு செய்வதற்கான முன்நிபந்தனையாகவும், இவ்விதம் முதலாளித்துவப் பொருளுற்பத்திக்கான முன்நிபந்தனையாகவும் இருப்பதனால் மட்டுமல்ல, நிலவுடைமையாளர் இன்றியமையாத உற்பத்திச் சாதனங்களில் ஒன்றின் ஆளுருவமாகக் காட்சியளிப்பதுதான் இதற்கு முக்கிய காரணம்.

முடிவில், தொழிலாளி தம்முடைய தனிப்பட்ட உழைப்பு சக்தியின் உடைமையாளர் என்ற முறையிலும், அதனை விற்கிறவர் என்ற முறையிலும் உற்பத்திப் பொருளில் ஒரு பகுதியை கூலி என்ற பெயரில் பெறுகிறார்; உற்பத்திப் பொருளின் இந்தப் பகுதி வாயிலாக அவரது உழைப்பில் ஒரு பகுதி வெளிப்படுகிறது; இந்த உழைப்புப் பகுதியை நாம் அவசிய-உழைப்பு என்கிறோம். அதாவது இந்த உழைப்புச் சக்தியினைப் பராமரிக்கும் மறுவுற்பத்திக்கும் அவசியமாகிற உழைப்பு இது - இந்த பராமரிப்பு, மறுவுற்பத்தி ஆகியவற்றின் நிலைமைகள் வறியவையாகவோ வளமானவையாகவோ இருக்கலாம், சாதகமானவையாகவோ பாதகமானவையாகவோ இருக்கலாம்.

இந்த உறவுகள் வேறுவகையில் எவ்வளவுதான் மாறுபட்டிருந்தாலும், அவை அனைத்துக்கும் பொதுவாய் இருப்பது இதுதான்: ஆண்டுதோறும் மூலதனம் முதலாளிக்கு இலாபம் கிடைக்கச் செய்கிறது; நிலம் நிலவுடைமையாளருக்கு நிலவாடகை கிடைக்கச் செய்கிறது, உழைப்புச் சக்தி - இயல்பான நிலைமைகளிலும் உழைப்புச் சக்தி பயனுள்ள உழைப்புச் சக்தியாக இருக்கும் வரையிலும்- தொழிலாளிக்குக் கூலி கிடைக்கச் செய்கிறது. ஆண்டுதோறும் உற்பத்தி

செய்யப்படும் மொத்த மதிப்பின் பகுதிகளாகிய இம்மூன்றும், ஆண்டுதோறும் படைக்கப்படும் மொத்த உற்பத்திப் பொருளில் இவற்றுக்கு இணையான பகுதிகளும் (இப்போதைக்கு மூலதனத் திரட்டலை கருதாமல் ஒதுக்கி விடுகிறோம்) அதனதன் மறுவுற்பத்திக்கான ஆதாரத்தை வற்றச் செய்திடாமலே அதனதன் உடைமையாளர்களால் ஆண்டுதோறும் நுகரப்படலாம். அவை என்றென்றைக்கும் கனி தரும் மரத்திலிருந்து, சொல்லப் போனால், மூன்று மரங்களிலிருந்து ஆண்டு தோறும் பறித்துண்ணும் பழங்களைப் போன்றவை. அவை முதலாளி, நிலவுடைமையாளர், தொழிலாளி ஆகிய மூன்று வர்க்கங்களின் வருட வருமானங்களாய், நேரடியாக உபரி - உழைப்பை கறப்பவர் என்றமுறையிலும் பொதுவாக உழைப்பை வேலைக்கு அமர்த்துகிறவர் என்ற முறையிலும் செயல்படும் முதலாளியால் வினியோகம் செய்யப்படும் வருவாய்களாய் அமைகின்றன. இவ்வாறு முதலாளிக்கு மூலதனமும் நிலவுடைமை யாளருக்கு நிலமும் தொழிலாளிக்கு உழைப்புச் சக்தியும் (இங்கு உழைப்புச் சக்தி என்பதைக்காட்டிலும் உழைப்பு என்றே சொல்லி விடலாம், ஏனென்றால் தொழிலாளி உழைப்புச் சக்தியை உள்ளபடியே அதன் வெளிப்பாட்டு வடிவில்தான் விற்கிறார்; மேலும் முன்பே பார்த்தது போல், உழைப்புச் சக்தியின் விலை முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையில் தவிர்க்க முடியாமலே உழைப்பாகத் தோற்றமளிக்கிறது) அவர்களின் பிரத்தியேக வருவாய்களுக்கான, அதாவது இலாபத்துக்கும் நிலவாடகைக்கும் கூலிக்குமான மூவேறு ஆதாரங்களாய்த் தெரிகின்றன. தெரிவதோடன்றி பின்வரும் அர்த்தத்தில் மெய்யாகவும் அவை அப்படித்தான் உள்ளன; அதாவது, மூலதனம் முதலாளிக்கு ஓயாமல் உபரி-உழைப்பை இறைத்துக் கொட்டும் இறைவைப் பொறியாக உள்ளது; நிலம் மூலதனத்தால் இறைக்கப்பட்ட உபரி-மதிப்பில் ஒரு பகுதியை ஓயாமல் நிலவுடைமையாளருக்கு ஈர்த்துக் கொடுக்கும் காந்தமாக உள்ளது; முடிவில், உழைப்பு தொழிலாளியால் படைக்கப்பட்ட மதிப்பில் ஒரு பகுதியை, இவ்விதம் சமுதாய உற்பத்தியில் இம்மதிப்புப்பகுதியால் அளவிடப்படும் ஒரு பகுதியை, அதாவது வாழ்க்கையின் அவசியப்பண்டங்களை கூலி என்ற பெயரில் சம்பாதிப்பதற்கு இன்றியமையாத தேவையும் சாதனமுமாய் - ஓயாமல் தன்னைத் தானே புதுப்பித்துக் கொள்ளும் தேவையும் சாதனமுமாய் உள்ளது. பிறிதோர் அர்த்தத்திலும் அவை அப்படித்தான் உள்ளன; அதாவது, மூலதனம் வருடாந்தர உழைப்பின் மதிப்பிலும், எனவே அதன் உற்பத்தியிலும் ஒரு பகுதியை இலாபமாகவும்,

நிலவுடைமை வேறொரு பகுதியை வாடகையாகவும் நிலைப் படுத்துகிறது. கூலியுழைப்பு மற்றுமொரு பகுதியை கூலியாகவும் நிர்ணயம் செய்கிறது; இந்த நிர்ணயத்தின் வாயிலாகத்தான் இவை முதலாளிக்கும் நிலவுடைமையாளருக்கும் தொழிலாளிக்குமான வருவாய்களாக மாற்றப்படுகின்றன; ஆனால் இந்தப் பல்வேறு கருத்தினங்களாகவும் மாற்றமடைவதற்கு சாரமாய் அமைவது எதுவோ அது படைக்கப்படாமலே இந்த மாற்றம் நடைபெறுகிறது. பார்க்கப்போனால், இந்தச் சாரம், அதாவது பொருள்வடிவாக்கப்பட்ட சமுதாய உழைப்பேயாகிய வருடாந்திர உற்பத்திப் பண்டத்தின் மொத்த மதிப்பு என்ற ஒன்று இருப்பதாக வைத்துக் கொண்டுதான் இந்த வினியோகப் பங்கீடு நடைபெறுகிறது. ஆனால், உற்பத்திச் செயலிகளுக்கு, பொருளுற்பத்தி நிகழ்முறையில் பல்வேறு பணிகளையும் கையிலெடுத்துச் செய்வோருக்கு விவகாரம் இப்படி தெரிவதற்கு பதில் உருத்திரிந்தே தெரிகிறது. ஏன் இப்படி நிகழ்கிறது என்பதை நமது ஆய்வின் போக்கில் பிற்பாடு காண்போம். மூலதனமும் நிலச் சொத்தும் உழைப்பும் அந்த உற்பத்திச் செயலிகளுக்கு சுயேச்சையான மூவேறு ஆதாரங்களாய் தெரிகின்றன; இந்த ஆதாரங்களிலிருந்துதான் ஆண்டுதோறும் உற்பத்தி செய்யப்படும் மதிப்பின் - எனவே அம்மதிப்பு குடிகொண்டுள்ள உற்பத்திப் பண்டத்தின் - மூவேறு அடக்கக் கூறுகள் எழுவதாகத் தெரிகிறது, ஆக, இந்த ஆதாரங்களிலிருந்துதான் சமுதாய பொருளுற்பத்தி நிகழ்முறையில் குறிப்பிட்ட காரணிகளின் பங்குக்குப் போய்ச் சேரும் வருவாய்கள் என்ற முறையிலான இந்த மதிப்பின் வெவ்வேறு வடிவங்கள் எழுவதோடு, இந்த மதிப்பும் கூட எழுவதாகத் தெரிகிறது; அதாவது இந்த வருவாய் வடிவங்களின் சாரமே இந்த ஆதாரங்களிலிருந்துதான் எழுவதாகத் தெரிகிறது.

*(இங்கு கையெழுத்துப் பிரதியின் இருமடித்தாளொன்றைக் காணவில்லை.)*

....வேறுபாட்டு வாடகை என்பது நிலத்தில் ஒப்பீட்டு வளமையுடன், வேறுவிதமாகச் சொன்னால், அந்நிலத்துக்கென்றே அமைந்த பண்புகளுடன் கட்டுண்டதாகும். ஆனால், முதலாவதாக, அது வெவ்வேறு மண்வகைகளிலிருந்து கிடைக்கும் விளைபொருட்களில் வெவ்வேறு தனிப்பட்ட மதிப்புகளை அடிப்படையாக கொண்டிருக்கும் அளவில், சற்று முன் குறிப்பிட்ட மேற்கூறிய தனிச்சிறப்பினால் நிர்ணயிக்கப்படுவது தவர வேறல்ல,

இரண்டாவதாக, அது இந்தத் தனிப்பட்ட மதிப்புகளிலிருந்து வேறுபடுகிற, பொதுவான ஆளும் சந்தை மதிப்பை அடிப்படையாகக் கொண்டிருக்கிற அளவில், போட்டியின் வாயிலாகச் செயல்படும் சமூக விதி ஆகும்; இதற்கு நிலத்துடனோ நிலத்தின் வளமையிலான வெவ்வேறு படித்தரங்களுடனோ எவ்விதத் தொடர்புமில்லை.

எப்படியும் 'உழைப்பு—கூலி' என்ற சூத்திரத்திலாவது அறிவுக்குகந்ததோர் உறவுமுறை தெரிவிக்கப்படுவதாக தோன்றக் கூடும். ஆனால் இதன் சங்கதியும் 'நிலம்—நில-வாடகை' என்ற சூத்திரத்தின் சங்கதிதானே தவிர வேறல்ல. உழைப்பு மதிப்பை படைப்பதாயும், சரக்குகளின் மதிப்பாக வெளிப்படுவதாயும் இருக்கிற அளவில், அதற்கும் இம்மதிப்பு பல்வேறு கருத்தினங்களிடையே வினியோகப்பங்கீடு ஆவதற்கும் எவ்விதத் தொடர்புமில்லை. உழைப்பு கூலியுழைப்பாக இருக்கிற அளவில், அதன் இந்த பிரத்தியேகமான சமூகத் தன்மை அல்ல மதிப்பை படைப்பது. கூலி அல்லது உழைப்பின் விலை என்பது உழைப்புச் சக்தியின் மதிப்பு அல்லது விலைக்கான ஒவ்வாத் தெரிவிப்பே தவிர வேறல்ல; இந்த உழைப்புச்சக்தி பிரத்தியேகமாய் எத்தகைய சமூக நிலைமைகளில் விற்கப்படுகிறது என்பதற்கும், உழைப்பு பொருளுற்பத்தியில் பொதுச் செயலியாக இருப்பதற்கும் எவ்விதத் தொடர்புமில்லை-முன்பே அநேக முறை இதை தெளிவாக்கி விட்டோம். ஒரு சரக்கில் கூலி என்ற முறையில் உழைப்புச் சக்தியின் விலையாக அமைகிற மதிப்புப் பகுதியிலும் உழைப்பு பொருள்வடிவாக்கப்பட்டுள்ளது; அது உற்பத்திப் பொருளின் ஏனைய பகுதிகளைப் போலவே இந்தப் பகுதியையும் படைக்கிறது; ஆனால் அது வாடகையாகவோ இலாபமாகவோ அமைகிற பகுதியில் பொருள்வடிவாக்கப்பட்டிருப்பது போலவேதான் இந்தப் பகுதியிலும் பொருள் வடிவாக்கப்பட்டது. பொதுவாகச் சொன்னால் மதிப்பைப் படைப்பதாக உழைப்பை கருதுகையில், கூலியுழைப்பென்னும் சமூகத் தன்மையிலிருந்து வேறானதொரு சமூகத் தன்மையில் வைத்துப் பார்க்கிறோமே, தவிர, உற்பத்திச் சாதனம் என்ற முறையிலான அதன் ஸ்தூல வடிவத்தில் வைத்துப் பார்ப்பதில்லை.

'மூலதனம்—இலாபம்' என்ற தெரிவிப்பும் கூட இங்கே சரியானதல்ல. மூலதனம் என்பது அது உபரி-மதிப்பை உற்பத்தி செய்யும் ஒரே உறவில் மட்டும் வைத்து நோக்கப்படுமானால், அது உழைப்புச் சக்தியை அதாவது கூலித் தொழிலாளியை கட்டாயப்படுத்தி உபரி-உழைப்பை கறப்பதற்கு பயன்படும் உறவாகிய தொழிலாளியுடனான

அதன் உறவில் மட்டும் வைத்து நோக்கப்படுமானால், இந்த உபரி மதிப்பு இலாபத்தை (முனைவு-இலாபம் + வட்டி என்பதை) மட்டு மல்லாமல் வாடகைகையையும் உள்ளடக்கியதாகும், சுருங்கச் சொல்லின் பிரிக்கப்படாத உபரி - மதிப்பு அனைத்தையும் குறிப்பதாகும் மறுபுறம், இங்கு வருவாய் ஓர் ஆதாரமாக இருக்கிற அளவில், அது முதலாளியின் பங்குக்குப் போய்ச் சேரும் பகுதியுடன் மட்டுமே உறவுப்படுத்தப்படுகிறது. இது மூலதனம் முதலாளிக்காக கறந்திடும் உபரி-மதிப்புப் பகுதிதானே தவிர, பொதுவாகக் கறந்திடும் மொத்த உபரி-மதிப்பு அல்ல. 'மூலதனம்-வட்டி' என்பதாக சூத்திரத்தை மாற்றியவுடனே தொடர்பு அனைத்தும் இன்னுங்கூட அதிகமாகவே மறைந்து விடுகிறது.

முதலில் நாம் மேற்கண்ட மூன்று ஆதாரங்களுக்கும் இடையிலான வேறுபாட்டை பரிசீலித்தோம். ஆனால் இப்போது நாம் அவற்றால் விளைகிறவை, அவற்றிலிருந்து கிளைக்கிறவை, அல்லது வருவாய்கள் எல்லாம் ஒரே துறையை, மதிப்பென்னும் துறையைச் சேர்ந்தவையாகும் என்பதை பார்க்கிறோம். இது (ஓரளவை அற்ற பருமன்களிடையி லானதாக மட்டுமல்லாமல் கொஞ்சங்கூட ஒத்திராமலும், ஒன்றுக் கொன்று தொடர்பில்லாமலும், ஒப்பு நோக்க முடியாமலும் இருப்பவற்றுக்கிடையிலானதாகவும் அமைகிற இந்த உறவு) எப்படிச் சரிகட்டப்படுகிறது, நிலத்தையும் உழைப்பையும் போலவே மூலதனமும் வெறும் பொருளாகக் கருதப்படுகிறது, அதாவது உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்திச் சாதனங்களில் ஒன்றாகவே கருதப்படுகிறது, இவ்விதம் தொழிலாளியுடனான உறவு என்ற தன்மையும், அதே போல் மதிப்பு என்ற தன்மையும் அதிலிருந்து நீக்கப்படுகின்றன.

மூன்றாவதாக, இந்த அர்த்தத்தில், மூலதனம்—வட்டி (இலாபம்), நிலம்—வாடகை, உழைப்பு—கூலி என்ற சூத்திரம் ஒரே சீரான, செவ்வொழுங்கான ஒவ்வாமையை வெளிப்படுத்துகிறது. உண்மையில், கூலியுழைப்பு என்பது சமூக வழியில் நிர்ணயிக்கப்பட்ட உழைப்பு வடிவமாக காட்சியளிப்பதற்கு பதில், உழைப்பனைத்தும் இயல்பிலேயே கூலியுழைப்பாக காட்சியளிப்பதால் (முதலாளித்துவ உற்பத்தி உறவுகளின் பிடியில் சிக்கியவர்களுக்கு இவ்விதம் காட்சியளிப்பதால்), கூலியுழைப்பு தொடர்பாக பொருளாயத உழைப்புச் சாதனங்கள் - உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்திச் சாதனங்களும் நிலமும் மேற்கொள்ளும் பிரத்யேகமான குறிப்பிட்ட சமூக வடிவங்கள் இதே போல் மறுதலையாக, இந்த உழைப்புச்

சாதனங்கள் கூலியுழைப்பை முன்தேவையாக கொண்டவை) இந்த உழைப்புச் சாதனங்களின் பொருளாயத நிலவலுடன், நேரடியாக ஒழுங்கமைகின்றன; அதாவது உள்ளபடியான உழைப்பு நிகழ்முறையின் வரலாற்று வழியில் நிர்ணயிக்கப்பட்ட ஸ்தூலமா - சமூக வடிவத்தை சார்ந்திராமல், ஏன், எந்த சமூக வடிவத்தையுமே சார்ந்திராமல், அவ்வுழைப்பு நிகழ்முறையில் பொதுவாக அச்சாதனங்கள் பெற்றுள்ள வடிவத்துடன் ஒருங்கமைகின்றன. ஆகவே உழைப்புச் சாதனங்களின் மாறிய வடிவம், அதாவது உழைப்பிலிருந்து அந்நியப்பட்டதும் உழைப்பை சுயேச்சையாக எதிர்நோக்குவதுமாகிய வடிவம் (உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்திச்சாதனங்களானவை மூலதனமாகவும், நிலமானது ஒரு சிலரின் ஏகபோக உடைமையாக்கப்பட்ட நிலம் அல்லது நிலச் சொத்தாகவும் மாற்றமடைவதற்கு வழி செய்வது இந்த வடிவமே), குறிப்பிட்ட வரலாற்றுக் காலத்துக்கு சொந்தமான இவ்வடிவமானது உற்பத்திச் செய்யப்பட்ட உற்பத்திச் சாதனங்களும் நிலமும் பொதுவான பொருளுற்பத்தி நிகழ்முறையில் நிலவி வருவதோடும் செயல்பட்டு வருவதோடும் ஒருங்கமைகிறது. இந்த உற்பத்திச் சாதனங்கள் தம்மளவில் இயல்பிலேயே மூலதனமாக இருக்கின்றன; மூலதனம் என்பது இந்த உற்பத்திச் சாதனங்களுக்கான 'பொருளாதாரப் பெயர்' மட்டுமே; ஆகவே நிலம் என்பது தன்னளவில் இயல்பிலேயே குறிப்பிட்ட எண்ணிக்கையிலான நிலவுடைமை யாளர்களால் ஏகபோக உடைமையாக்கிக் கொள்ளப்படும் நிலமாக இருக்கிறது. உற்பத்திப் பண்டங்கள் மூலதனத்தின் உருவிலும் முதலாளிகளின் உருவிலும் - உண்மையில் முதலாளிகள் என்போர் மூலதனத்தின் ஆளுருவமே தவிர வேறல்ல-சுயேச்சையானதொரு சக்தியாக உற்பத்தியாளரை எதிர்நோக்குவது போலவே, நிலமும் நிலவுடைமையாளராக ஆளுருவம் பெற்று, சுயேச்சையானதொரு சக்தி என்ற முறையில் தன் உதவி கொண்டு படைக்கப்பட்ட விளைபொருளில் தன் பங்கைக் கேட்பதற்காக பின்னங்கால்களை தரையிலூன்றி எழுந்து நிற்கிறது. இவ்வாறு, நிலமானது தன் உற்பத்தித் திறனை மீட்டுக் கொள்ளவும் மேம்படுத்திக் கொள்ளவும் விளைபொருளில் தனக்குரிய பங்கை பெறுவதற்கு பதிலாக நிலவுடைமையாளர் விலை பேசி விற்பதற்காகவோ வீண்செலவு செய்வதற்காகவோ இந்த விளைபொருளில் ஒரு பங்கை எடுத்துக் கொள்கிறார். உழைப்பு கூலியுழைப்பாக இருப்பது மூலதனத்துக்கு அவசியமென்பது தெளிவாய்த் தெரிகிறது. ஆனால் உழைப்பு கூலியுழைப்பாய் இருப்பது தொடக்கமுனையாக கொள்ளப்படுகிறது

என்றால், பொதுவான உழைப்பும் கூலியுழைப்பும் முழு தொத்தவையாக இருப்பது கூறாமலே விளங்குவதாகத் தோன்றுகிறது என்றால், மூலதனமும் ஏகபோக உடைமையாக்கப்பட்ட நிலமும் கூட பொதுவான உழைப்பு தொடர்பாக உழைப்புச் சாதனங்களின் இயற்கை வடிவமாக காட்சியளித்தாக வேண்டும் என்பதும் அதே போல் தெளிவாய்த் தெரிகிறது. ஆக, மூலதனமாக இருப்பதே உற்பத்திச் சாதனங்களின் இயற்கை வடிவமாகவும், எனவே - பொதுவான உழைப்பு நிகழ்முறையில் அவை செயல்படுவதிலிருந்து எழும் முழுக்க முழுக்க உண்மையான தன்மையாகவும் காட்சியளிக்கிறது. மூலதனம் என்பதும், உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்திச் சாதனங்கள் என்பதும் முழுதொத்த தெரிவிப்புகள் ஆகி விடுகின்றன. இதேபோல் நிலம் என்பதும் தனிச் சொத்தின் மூலம் ஏகபோக உடைமையாக்கப்பட்ட நிலம் என்பதும் முழுதொத்த தெரிவிப்புகள் ஆகிவிடுகின்றன. நிலம் தன்னளவில் வாடகைக்கு ஆதாரமாகி விடுகிறது; அதே போல் இயல்பிலேயே மூலதனமாக இருக்கும் உழைப்புச் சாதனங்கள் தம்மளவில் இலாபத்துக்கு ஆதாரமாகி விடுகின்றன.

உழைப்பு என்பதே, பயனுள்ள உற்பத்திச் செயற்பாடு என்ற சாமானியப் பொறுப்பு வகிக்கும் உழைப்பே உற்பத்திச்சாதனங்களோடு உறவுபடுத்தப்படும் போது, அவற்றின் குறிப்பிட்ட சமூக வடிவத்திற்கு பதில் மூலதனம் என்ற முறையிலும் உழைப்புச் சாதனங்கள் என்ற முறையிலும் அவை பெற்றுள்ள ஸ்தூலமான பொருளுருவோடு உறவுப்படுத்தப்படுகிறது; இதே போல் உற்பத்திச் சாதனங்களும் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபடுத்திக் காட்டப்படும் போது பொருள் வகையில் மட்டுமே, பயன்-மதிப்புகளாக மட்டுமே காட்டப் படுகின்றன; அதாவது நிலம் உற்பத்திச் செய்யப்படாத உழைப்புச் சாதனமாகவும், ஏனையவை உற்பத்தி செய்யப்பட்ட உழைப்பு சாதனங்களாகவும் வேறுபடுத்திக் காட்டப்படுகின்றன. இவ்விதம் உழைப்பு கூலியுழைப்புடன் ஒருங்கமைகிறது என்றால், உழைப்பை எதிர்நோக்கும் உழைப்புச் சாதனங்கள் மேற்கொள்கிற குறிப்பிட்ட சமூக வடிவம் அவற்றின் பொருளாயத நிலவல் வடிவத்துடன் ஒருங்கமைகிறது. இவ்விதம் உழைப்புச் சாதனங்களே மூலதனமாகி விடுகின்றன, நிலமே நிலச்சொத்து ஆகிவிடுகிறது. இவ்விதம் இந்த உழைப்புச் சாதனங்கள் உழைப்பு தொடர்பாக பெற்றுள்ள வடிவ அளவிலான சுயேச்சைத் தன்மை, கூலியுழைப்பு தொடர்பாக இந்தச் சுயேச்சை தன்மை மேற்கொள்ளும் தனிவடிவம் பொருட்கள் அல்லது பண்டங்கள் என்ற முறையில், பொருளாயத உற்பத்திச் சாதனங்கள்

என்ற முறையில் அவற்றிலிருந்து பிரிக்க முடியாத பண்பாகி விடுகிறது. உற்பத்தி-அடிக்கூறுகள் என்ற முறையில் தவிர்க்க முடியாதவாறு அவற்றுக்கு வாய்த்திடும் உள்ளார்ந்த, உட்பொதிந்த பிறவிக் குணமாகி விடுகிறது. குறிப்பிட்ட வரலாற்றுச் சகாப்தத்தின் முத்திரை தாங்கிவரும் முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிகழ்முறையில் அவற்றுக் குரியதாகும் குறிப்பிட்ட சமூகத் தன்மை, பொருளுற்பத்தி நிகழ் முறையின் அடிக்கூறுகள் என்ற விதத்தில் சாசுவதமாய் என்றென்றைக்கும் அவற்றுக்குச் சொந்தமான, இயல்பாய் அமைந்த பொருளாயதத் தன்மையாகி விடுகிறது. ஆகவே உழைப்புச் செயற்பாட்டின் ஆரம்பக்களம் என்ற முறையில், இயற்கைச் சக்திகளின் ஆட்சிப்பரப்பு என்ற முறையில், உழைப்பின் இலக்குப் பொருட்கள் அனைத்தையும் தாங்கி ஆயத்தமாய் இருக்கும் படைக்கலச் சாலை என்ற முறையில் நிலம் வகிக்கும் பங்கும், உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்திச் சாதனங்கள் (கருவிகள், கச்சாப் பொருட்கள் போன்றவை) பொதுவான பொருளுற்பத்தி நிகழ்முறையில் வகிக்கும், பங்கும், முறையே மூலதனம் என்ற விதத்திலும் நிலச்சொத்து என்ற விதத்திலும் அவற்றுக்கு, அதாவது சமூகப் பிரதிநிதிகளுக்கு இலாபமாகவும் (வட்டி) வாடகையாகவும் போய்ச் சேரும் பங்குகளில் வெளிப்படுவதாகத்தான் தோன்றும். தொழிலாளிக்கு பொருளுற்பத்தி நிகழ்முறையில் அவரது உழைப்பு வகிக்கும் பங்கு கூலியில் வெளிப்படுவதாகத் தோன்றுகிறது அல்லவா, அதே போலத்தான் இதுவும். இவ்வாறு, வாடகையும் இலாபமும் கூலியும் சாமானிய உழைப்பு நிகழ்முறையில் - வரலாற்று வழிப்பட்ட பிரத்தியேகத் தன்மையை அறவே ஒதுக்கி விட்டு, இந்த உழைப்பு நிகழ்முறையை மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையில் நடைபெறும் ஒன்றாக மட்டும் நோக்கும் போதே கூட-நிலமும் உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்திச் சாதனங்களும் உழைப்பும் வகிக்கிற பங்கிலிருந்து விளைவதாகத் தோன்றுகிறது. கூலிதொழிலாளி பெறும் கூலிதான், அதாவது கூலியைக் குறித்திடும் மதிப்பும் பகுதிதான் (எனவே இந்த மதிப்புப் பகுதியால் அளவிடப்படும் சமுதாய உற்பத்திப் பண்டம்தான்) கூலித்தொழிலாளிக்கு உழைப்பின் பலனாகக் காட்சியளிக்கும் உற்பத்திப் பண்டம் ஆகும், அவரது வருவாய் ஆகும் என்று கூறுவது மேற்சொன்ன அதே வாதத்தை வேறுவடிவத்தில் கொடுப்பதே ஆகும். கூலியுழைப்பு பொதுவாக உழைப்புடன் ஒருங்கமைகிறது என்றால், கூலி என்பதும் உழைப்பின் உற்பத்திப் பொருளுடன் ஒருங்கமைந்தாக வேண்டும். கூலி குறித்திடும் மதிப்புப் பகுதியும் பொதுவாக உழைப்பால் படைக்கப்படும் மதிப்புடன்

ஒருங்கமைந்தாக வேண்டும். ஆனால் இவ்வழியில் ஏனைய மதிப்புப் பகுதிகளான இலாபமும் வாடகையும் கூட கூலியின் கோணத்திலிருந்து பார்க்கையில் சுயேச்சையானவையாகக் காட்சியளிக்கின்றன; அவையும் தமக்கேயுரிய ஆதாரங்களிலிருந்து - உழைப்பிலிருந்து பிரத்தியேகமாய் வேறுபட்ட, சுயேச்சையான ஆதாரங்களிலிருந்து - எழுந்தாக வேண்டும்; உற்பத்தியில் பங்கேற்கும் அடிக்கூறுகளிலிருந்து-அவை எந்த அடிக்கூறுகளின் உடைமையாளர்களுக்கு போய்ச் சேருகின்றனவோ அந்தக் அடிக்கூறுகளிலிருந்து எழுந்தாக வேண்டும்.

ஆகவே நிலச்சொத்தும் மூலதனம் கூலியுழைப்பும்-மூலதனம் முதலாளிக்கு உழைப்பிலிருந்து அவரால் கறக்கப்படும் உபரி-மதிப்பில் ஒரு பகுதியை இலாபத்தின் வடிவில் ஈர்த்துக் கொடுக்கிறது, நிலத்திலான ஏகபோகம் நிலவுடைமையாளருக்கும் இன்னொரு பகுதியை வாடகையின் வடிவில் ஈர்த்துக் கொடுக்கிறது, உழைப்பு தொழிலாளிக்கு எஞ்சியுள்ள மதிப்புப் பகுதியை கூலியின் வடிவில் கிடைக்கச் செய்கிறது என்ற அர்த்தத்தில் - வருவாய்க்கான ஆதாரங்களாக, மதிப்பின் ஒரு பகுதி இலாப வடிவத்துக்கும் மற்றொரு பகுதி வாடகை வடிவத்துக்கும் இன்னொரு பகுதி கூலி வடிவத்துக்கும் மாற்றமடைவதற்கு வழிசெய்யும் ஆதாரங்களாக இருக்கும் நிலையிலிருந்து இந்த மதிப்புப் பகுதிகளின் உண்மை ஆதாரங்களாகவே மாற்றப்பட்டு விடுகின்றன; இந்த மதிப்புப் பகுதிகளும், அவற்றின் நிலவல் வடிவங்களாகவும் அவற்றுக்கு பரிவர்த்தனை ஆகக் கூடியவையாகவும் இருக்கும் அந்தந்த உற்பத்திப் பண்டப் பகுதிகளும் இந்த ஆதாரங்களிலிருந்தே எழுவதாக, ஆகவே இறுதியாக பார்க்குமிடத்து, உற்பத்திப் பண்டத்தின் மதிப்பே இந்த ஆதாரங்களிலிருந்துதான் எழுவதாகக் காட்டப்படுகிறது.[53] முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறைக்குரிய பொதுவான சரக்கு உற்பத்திக்குரிய மிக எளிய கருத்தினங்களைப் பரிசீலித்த போதே, சரக்குகளையும் பணத்தையும் பரிசீலித்த போதே - நாம் சுட்டிக் காட்டியதுதான், பொருளாயத செல்வக்கூறுகள் பொருளுற்பத்தியின் போது சமூக உறவுகளுக்கான ஊர்திகளாகவே பயன்பட்டபோதிலும்,

(53) கூலியும் இலாபமும் வாடகையும் வருவாயனைத்துக்கும் அதே போல் பரிவர்த்தனை செய்யத்தக்க மதிப்பனைத்துக்குமான மூன்று மூலாதாரங்கள் ஆகும் (ஆ.ஸ்மித்) (நாடுகளின் செல்வம்: இதன் இயல்பும் காரணங்களும் பற்றிய ஆய்வு, அபர்தீன், லண்டன், 1848, பக்கம் 43.-ஆங்கிலப்பதிப்பாசிரியர்.- இவ்வாறு பொருளுற்பத்திக்கான காரணங்கள் அதே போது அப்பொருளுற்பத்தியிலிருந்து விளையும் மூலவருவாய்களுக்கான ஆதாரங்களாகவும் உள்ளன. (ஸ்டோர்ஹ் (Coursd'e'conomic politique, செயிண்ட் பீட்டர்ஸ்பார்க் 1815.-ஆங்கிலப்பதிப்பாசிரியர்), I, பக்கம் 259.—ஆங்கிலப்பதிப்பாசிரியர்).

ஒரு மாய்மாலத் தன்மையினால் அந்தச் சமூக உறவுகள் இந்தப் பொருட்களுக்கேயுரிய (சரக்குகளுக்குரிய) பண்புகளாய் மாறிப் போகின்றன; இன்னுங்கூட வெளிப்படையான முறையில் உற்பத்தி உறவே ஒரு பொருளாக (பணமாக) மாறிப் போகிறது. எல்லாச் சமூக வடிவங்களுமே சரக்கு உற்பத்தி, பணச் சுற்றோட்டம் என்ற கட்டத்தை வந்தடைகிற அளவில் இந்த உருத்திரிபில் பங்கேற்கின்றன. ஆனால் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையிலும் மூலதனம், தொடர்பாகவும் (மூலதனமே இப்பொருளுற்பத்தி முறையில் கோலோச்சும் கருத்தினமாகும், இப்பொருளுற்பத்தி முறையை நிர்ணயிக்கும் உற்பத்தி உறவு ஆகும்) உருத்திரிபுகளாலான இந்த வசிய உலகம் இன்னுங்கூட வளர்ந்து செல்கிறது. முதலில் உள்ளபடியான பொருளுற்பத்தி நிகழ்முறையில் உபரி-உழைப்பைக் கறக்கும் சாதனமாக மூலதனத்தை நோக்குவோமானால், இந்த உறவுமுறை இன்னமும் மிக எளிதாகவே உள்ளது; உள்ளபடியான தொடர்பு இந்நிகழ்முறையின் செயலேந்திகளான முதலாளிகளின் மனத்தில் பதிந்து அவர்களின் உயர்வில் இருந்து வருகிறது. வேலை நாளுக்கான வரம்புகள் குறித்து எழும் கடுமையான போராட்டம் இதை எடுப்பாக மெய்ப்பிக்கிறது. ஆனால் இடையில் எதுவும் குறுக்கிடாத இந்தத் துறைக்குள்ளேயும் கூட, உழைப்பும் மூலதனம் நேரடியாகச் சந்தித்துச் செயல்புரியும் இந்தத் துறைக்குள்ளேயும் கூட, யாவும் எளிதாய் விளங்கும் இந்நிலவரம் அப்படியே நீடிப்பதில்லை. பிரத்தியேகமாய் முதலாளித்துவத் தன்மை வாய்ந்த உள்ளபடியான பொருளுற்பத்தி நிகழ்முறையில் ஒப்பீட்டு உபரி-மதிப்பு வளர்ச்சியடைந்து, இதனால் சமுதாய உழைப்பின் உற்பத்தித் திறன்கள் வளர்ச்சியடையும் போது, நேரடி உழைப்பு நிகழ்முறையில் இந்த உற்பத்தித் திறன்களும் உழைப்பின் சமுதாய இடையுறவுகளும் உழைப்பிலிருந்து மூலதனத்துக்கு மாறி விடுவதாகத் தோன்றுகிறது. இவ்விதம் மூலதனம் ஒரு மருமப் பிறவியாகி விடுகிறது; ஏனென்றால் உழைப்பின் சமுதாய உற்பத்தித் திறன்கள் அனைத்துக்கும் உழைப்பே காரணம் என்பதற்கு பதில் மூலதனமே காரணம் என்பதாகத் தோன்றுகிறது; இந்த உற்பத்தித் திறன்களெல்லாம் மூலதனத்தின் கருப்பையிலிருந்தே பிறந்து வருவதாகத் தோன்றுகிறது. அப்போது சாரத்திலும் வடிவத்திலுமான மாற்றங்களோடு சுற்றோட்ட நிகழ்முறை குறுக்கிடுகிறது; பிரத்தியேகமாய் முதலாளித்துவத் தன்மை கொண்ட பொருளுற்பத்தி முறை எந்த அளவுக்கு வளர்கிறதோ அதே அளவுக்கு மூலதனத்தின் எல்லாப் பகுதிகளும் விவசாய மூலதனமும் கூட சுற்றோட்ட

நிகழ்முறையில் பங்கேற்கின்றன. தொடக்கத்தில் மதிப்பு உற்பத்தி செய்யப்பட்ட போது நிலவிய உறவுகள் இந்தச் சுற்றோட்டத் துறையில்தான் அடியோடு பின்னுக்குத் தள்ளப்படுகின்றன. நேரடி பொருளுற்பத்தி நிகழ்முறையிலேயே முதலாளி ஒரே சமயத்தில் சரக்கு உற்பத்தியாளராகவும் சரக்கு உற்பத்தியின் மேலாளராகவும் செயல்படத் தொடங்கி விடுகிறார். ஆகவே இந்தப் பொருளுற்பத்தி நிகழ்முறை உபரி-மதிப்பை உற்பத்தி செய்யும் நிகழ்முறையாக மட்டும் அவருக்கு தோன்றுவதே இல்லை. ஆனால் உள்ளபடியான பொருளுற்பத்தி நிகழ்முறையில் மூலதனத்தால் கறக்கப்பட்டு சரக்குகளில் வெளிப்படும் உபரி-மதிப்பு எவ்வளவானாலும் சரி, சரக்குகளில் அடங்கியுள்ள மதிப்பும் உபரி - மதிப்பும் முதலில் சுற்றோட்ட நிகழ்முறையில் ஈடேற்றம் பெற்றாக வேண்டும். பொருளுற்பத்தியில் முன்னீடு செய்யப்பட்ட மதிப்புகளையும், குறிப்பாக சரக்குகளில் அடங்கியுள்ள உபரி-மதிப்பையும் மீட்டெடுப்பது சுற்றோட்டத்தில் ஈடேற்றம் பெறுவதாக மட்டுமல்லாமல், உள்ளபடியே அதிலிருந்து எழுவதாகவும் தோன்றுகிறது; இந்தத் தோற்றம் முக்கியமாய் இரு நிலைமைகளால் வலுப்பெறுகிறது: முதலாவதாக, சரக்கை விற்பதில் பெறப்படும் இலாபம் மோசடியையும், ஏமாற்றத்தையும், வியாபார சாமர்த்தியத்தையும், திறமையையும், சாதகமான ஓராயிரம் சந்தை வாய்ப்புகளையும் பொறுத்ததாகும்; இரண்டாவதாக, நிர்ணயிக்கும் கூறுகள் என்ற வகையில் உழைப்பு நேரத்தோடு இங்கே சுற்றோட்ட நேரமும் சேர்ந்து கொள்கிறது. மெய்யாகவே மதிப்பு, உபரி-மதிப்பின் உருவாக்கத்துக்கு சுற்றோட்டம் எதிர்வகை தடைமதிலாகத்தான் செயல்படுகிறது. ஆனால் அது உழைப்பை போன்றதோர் நிச்சயமான அடிப்படையாக இருப்பது போலவும், உழைப்பைச் சாராததும் மூலதனத்தின் இயல்பிலிருந்தே விளைவதுமான நிர்ணயிக்கும் கூறு ஒன்றை நுழைப்பது போலவும் தோற்றமளிக்கிறது. இரண்டாம் பாகத்தில் இயல்பாகவே நாம் இந்தச் சுற்றோட்டத்துறையை அது தோற்றுவிக்கும் வடிவ நிர்ணயிப்புகளோடு தொடர்புபடுத்தியே பரிசீலிக்கவும், மூலதனத்தின் கட்டமைப்பு இத்துறையில் மேலும் வளர்ந்து செல்வதை மெய்ப்பிக்கவும் வேண்டியிருக்கிறது. ஆனால் உண்மையில் இந்தத் துறை போட்டாபோட்டி நிகழும் துறையாகும்; தனிப்பட்ட ஒவ்வொரு நேர்விலும் தற்செயலால் ஆளப்படுகிற துறையாகும்; அதாவது தற்செயல் நிகழ்ச்சிகளில் இழையோடுவதும் அவற்றை ஒழுங்கு செய்வதுமான உள்விதி, இந்த தற்செயல் நிகழ்ச்சிகள் பெரும் எண்ணிக்கையில் ஒரு சேர நேரிடும் போதுதான் கண்ணுக்குத்

தெரிகிறது; ஆகவே தனிப்பட்ட உற்பத்திச் செயலிகளின் கண்ணுக்குத் தெரியாததாகவும் அறிவுக்குப் புலப்படாததாகவும் அது இருந்து வருகிறது. மேலும், நேரடிப் பொருளுற்பத்தி நிகழ்முறை, சுற்றோட்ட நிகழ்முறை ஆகியவற்றின் ஒன்றிப்பு என்ற முறையில் புதிய அமைவுகளுக்கு வழிசெய்கிறது. இந்த அமைவுகளில் உள்தொடர்பு களின் தாளம் மேன்மேலும் மறைந்து போகிறது, உற்பத்தி உறவுகள் ஒன்றையொன்று சார்ந்திராத சுயேச்சை உறவுகளாகின்றன. மதிப்பின் அடக்கக் கூறுகள் ஒன்றையொன்று சார்ந்திராத சுயேச்சை வடிவங்களாக இறுகிப் போகின்றன.

உபரி-மதிப்பு இலாபமாக மாற்றமடைவது எந்த அளவுக்கு உற்பத்தி நிகழ்முறையால் நிர்ணயிக்கப்படுகிறதோ அதே அளவுக்கு சுற்றோட்ட நிகழ்முறையாலும் நிர்ணயிக்கப்படுகிறது. இலாபமாக உருமாறி விட்ட உபரி-மதிப்பு மொத்த மூலதனத்தோடு உறவுப்படுத்தப்படுகிறதே தவிர, உழைப்புக்காக முதலீடு செய்யப்பட்ட மூலதனப்பகுதியோடு - அது எதிலிருந்து பெறப்படுகிறதோ அதனோடு-உறவுப்படுத்தப் படுவதில்லை. இலாப வீதம் அதற்கேயுரிய விதிகளால் ஆளப்படுகிறது; உபரி-மதிப்பு வீதம் மாறாமலிருக்கும் போதே இலாபவீதம் மாறுவதற்கு இவ்விதிகள் இடமளிக்கின்றன; ஏன், அப்படி மாற வேண்டிய அவசியத்தையும் கூட ஏற்படுத்துகின்றன. இதெல்லாம் உபரி-மதிப்பின் உண்மைத் தன்மையையும், மூலதனத்தின் மெய்யான இயங்கமைப்பை யும் மேன்மேலும் மூடி மறைக்கின்றன. இலாபம் சராசரி இலாபமாக மாற்றமடைவதாலும் மதிப்புகள் உற்பத்தி- விலைகளாக, சந்தை- விலைகளின் ஆளும் சராசரிகளாக மாற்றமடைவதாலும் அவை இன்னுங்கூட அதிகமாய் மூடி மறைக்கப்படுகின்றன. சிக்கலானதொரு சமூக நிகழ்முறை, மூலதனங்களின் சமனமாக்க நிகழ்முறை இங்கே குறுக்கிடுகிறது; இந்நிகழ்முறை சரக்குகளின் ஒப்பீட்டுச் சராசரி விலைகளை அவற்றின் மதிப்புகளிலிருந்து விலக்கி வேறுபடுத்துவ தோடு, (குறிப்பான ஒவ்வோர் உற்பத்திக் கிளையிலும் முதலீடாகிற தனிப்பட்ட மூலதனங்கள் ஒருபுறமிருக்க) பல்வேறு உற்பத்திக் கிளைகளிலும் பெறப்படும் சராசரி இலாபங்களையும் குறிப்பிட்ட மூலதனங்களால் உள்ளபடியே உழைப்பு சுரண்டப்படுவதிலிருந்து விலக்கி வேறுபடுத்துகிறது. சரக்குகளின் சராசரி விலை அவற்றின் மதிப்பிலிருந்து, இவ்விதம் அவற்றின் ஈடேற்றம் பெற்றுள்ள உழைப்பிலிருந்து வேறுபடுகிறது, குறிப்பிட்ட ஒரு மூலதனத்தின் சராசரி இலாபம் இந்த மூலதனம் அதனால் அமர்த்தப்பட்ட தொழிலாளி களிடமிருந்து கறந்துள்ள உபரி-மதிப்பிலிருந்து வேறுபடுகிறது என்பது

வெறும் தோற்றம் மட்டுமல்ல, மெய்நடப்பும் அதுவே. உழைப்பின் ஏற்றவற்றமான உற்பத்தித் திறன் உற்பத்தி-விலைகளிலான ஏற்ற இறக்கத்தின் மீது, அவற்றின் அசைவியக்கத்தின் மீது - அவற்றின் இறுதி வரம்புகளின் மீது அல்ல - செலுத்தும் தாக்கத்தில் மட்டுமே சரக்குகளின் மதிப்பு நேரடியாகத் தெரிய வருகிறது. முதலாளி அடையும் இலாபம் ஆளும் சந்தை-விலைகளில் சராசரி இலாபத்திலிருந்து விலகி மாறுபடுவதாய் இருப்பதற்கு நேரடி உழைப்புச் சுரண்டல் வழி செய்வதால், இலாபம் இரண்டாம்பட்சமாக மட்டுமே அவ்வுழைப்புச் சுரண்டலால் நிர்ணயிக்கப்படுவது போல் தோன்றுகிறது. இந்தச் சந்தை-விலைகள் உழைப்புச் சுரண்டலைச் தோற்றுகிறது. இயல்பான சராசரி இலாபங்களே கூட மூலதனத்தில் உள்ளார்ந்திருப்பது போலவும், அவற்றிற்கும் சுரண்டலுக்கும் தொடர்பில்லை என்பது போலவும் தோன்றுகிறது; இயல்புமீறிய சுரண்டல், ஏன், அசாதாரணமான சாதக நிலைமைகளில் சராசரி சுரண்டலே கூட சராசரி இலாபத்திலிருந்தான விலகல்களை மட்டுமே நிர்ணயிப்பதாகத் தோன்றுகிறதே தவிர, இந்த இலாபத்தை நிர்ணயிப்பதாகத் தோன்றுவதில்லை. இலாபமானது முனைவு- இலாபமாகவும் வட்டியாகவும் பிரிந்து போவது (சுற்றோட்டத்தை அடித்தளமாக கொண்டவையும், பொருளுற்பத்தி நிகழ்முறையிலிருந்து அல்லாமல், முற்ற முழுக்க சுற்றோட்டத்தி லிருந்தே எழுவதாக காட்சியளிப்பவையுமான வர்த்தக-இலாபமும், தனவணிக-இலாபமும் குறுக்கிடுவது பற்றி சொல்லத் தேவையில்லை) உபரி-மதிப்பின் வடிவம் தனித்த ஒன்றாக நிலைபெறுவதை, அதன் ஆதாரத்துக்கு, சாரத்துக்கு மாறாக, அதன் வடிவம் இறுகிக் கெட்டிப் படுவதை நிறைவேற்றி முடிக்கிறது. இலாபத்தின் ஒரு பகுதி - அதன் மறுபகுதிக்கு மாறாக-மூலதன உறவிலிருந்தே அடியோடு விலகிச் சென்று, கூலியுழைப்பைச் சுரண்டும் செயலிலிருந்து எழுவதாக அல்லாமல், முதலாளியின் கூலியுழைப்பிலிருந்தே எழுவதாகத் தோற்றமளிக்கிறது. இதற்கு மாறாக, வட்டியானது தொழிலாளியின் கூலியுழைப்பு, முதலாளியின் சொந்த உழைப்பு இரண்டையுமே சார்ந்திராமல், அதற்கேயுரிய சுயேச்சை ஆதாரமாய் விளங்கும் மூலதனத்திலிருந்து எழுவதாகத் தோன்றுகிறது. மூலதனம் என்பது ஆரம்பத்தில் ஒரு மூலதன மாய்மாலமாக, மதிப்பைப் படைக்கும் மதிப்பாக, சுற்றோட்டத்தின் மேற்பரப்பில் காட்சியளித்தது என்றால் மறுபடியும் இப்போது வட்டி மூலதன உருவில் அதன் மிகவும் அந்நியப்பட்ட, தனிச்சிறப்பான வடிவத்தில் காட்சியளிக்கிறது. ஆகவேதான் நிலம்—வாடகை, உழைப்பு – கூலி, இவற்றுக்கு

அடுத்தபடி மூன்றாவதாக மூலதனம் – வட்டி எனும் சூத்திரம் மூலதனம் —இலாபம் என்பதை விட வெகுவாய் நிலைபேறுடையதாய் இருக்கிறது; ஏனென்றால் இலாபம் என்பதில் இன்னமும் அதன் தோற்றுவாய் பற்றிய ஒரு பழைய நினைவு தொற்றிக் கொண் டிருக்கிறது; வட்டி என்பது அதன் தோற்றுவாய் பற்றிய நினைவையே அழித்து விடுவதோடு அத்தோற்றுவாய்க்கு நேரெதிரான வடிவமும் பூணுகிறது.

முடிவில், உபரி-மதிப்பின் சுயேச்சையானதோர் ஆதாரமாகக் காட்டப்படும் மூலதனத்துடன் நிலச்சொத்தும் சேர்ந்து கொள்கிறது; நிலச்சொத்தானது சராசரி இலாபத்திற்கு தடைமதிலாகச் செயல் படுவதும், உபரி-மதிப்பின் ஒரு பகுதியை ஒரு வர்க்கத்தின் கைக்கு மாற்றிக் கொடுப்பதும் ஆகும்; இந்த வர்க்கம் தானாக உழைப்பதும் இல்லை, நேரடியாக உழைப்பைச் சுரண்டுவதும் இல்லை. கடனாகக் கொடுத்து உதவுவதும் இடர்தாங்கும் பொறுப்பும் தியாக அர்ப்பணிப்பும் தேவை என்றெல்லாம் வட்டி மூலதனம் அறிவொழுக்க நியாய போதனை செய்கிறது அல்லவா, இத்தகைய நியாய வாதங்களையும் இவ்வர்க்கத்தால் கைக்கொள்ள முடிவதில்லை. இங்கே உபரி-மதிப்பில் ஒரு பகுதி சமூக உறவுகளோடு கட்டுண்டு இருப்பதற்கு பதில் ஓர் இயற்கை சக்தியாகிய நிலத்துடன் நேரடியாகவே கட்டுண்டிருப்பதாகத் தோன்றுவதால், உபரி-மதிப்பின் பல்வேறு பகுதிகளும் தமக்குள் ஒன்றுக்கொன்று அந்நியமாகி இறுகி கெட்டிப்படும் வடிவம் முழுமையடைகிறது. உள்தொடர்பு அறவே குலைவுறுகிறது, உபரி-மதிப்புக்கான ஆதாரம் ஆழக் குழிதோண்டிப் புதைக்கப்படுகிறது; பொருளுற்பத்தி நிகழ்முறையின் பல்வேறு பொருட்கூறுகளுடனும் கட்டுண்டிருக்கும் உற்பத்தி உறவுகள் தமக்குள் ஒன்றையொன்று சார்ந்திராமல் சுயேச்சையாகி விட்டதுதான் இதற்கெல்லாம் காரணம்.

மூலதனம்—இலாபம் (இன்னும் நன்றாகச் சொல்வதானால், மூலதனம்—வட்டி), நிலம்—வாடகை, உழைப்பு—கூலி என்பதில், பொதுவாக மதிப்பு, செல்வம் ஆகியவற்றின் அடக்கக் கூறுகளுக்கும் ஆதாரங்களுக்கும் இடையிலான தொடர்பாகக் காட்டப்படும் இந்தப் பொருளாதார மும்மையில் முதலாளித்துவப் பொருளுற்பத்தி அடியோடு மருமமாக்கப்படுவதையும், பொருட்கள் அல்லது பண்டங்களாக சமூக உறவுகள் மாற்றப்படுவதையும், பொருளாயத உற்பத்தி உறவுகள் அவற்றின் வரலாற்று வழிப்பட்ட சமூக

நிர்ணயிப்புடன் நேரடியாக ஒன்று கலந்துவிடுவதையும் பார்க்கிறோம். இது வசியத்துக்கும் உருவத்திரிபுக்கும் ஆளாகி தலைகீழாய்ப் புரண்ட உலகம்; இந்த உலகில் திருவாளர் மூலதனமும் திருவாட்டி நிலமும் சமூகப் பாத்திரமேற்று ஆவிகளைப் போல் உலவிக் கொண்டிருக்கிறார்கள், அதே போது நேரடியாகவே வெறும் பொருட்களாகவும் இருக்கிறார்கள். இந்தப் பொய்த்தோற்றத்தையும் மாயையையும், செல்வத்தின் பல்வேறு சமூகக் கூறுகளும் தமக்குள் ஒன்றையொன்று சார்ந்திராமல் இவ்விதம் தனித்தனியாக இறுகிக் கெட்டிப்படுவதையும், இவ்விதம் பொருட்கள் ஆட்களாகவும், உற்பத்தி உறவுகள் பொருட்களாகவும் மாற்றமடைவதை, அன்றாட வாழ்க்கையின் இந்தச் சமய நம்பிக்கையை அழித்தொழித்தது தொல்சீர் பொருளாதார இயலில் பெருஞ்சிறப்பு ஆகும். அது இக்காரியத்தை எப்படிச் செய்தது என்றால் வட்டியை இலாபத்தின் ஒரு பகுதியாகவும், வாடகையை சராசரி இலாபத்திற்கு மேல் அதிகமாயிருக்கும் உபரியாகவும் பெயர்த்தது, இவ்வாறு இவை இரண்டுமே உபரி-மதிப்பில் ஒருமுகப்படச் செய்தது, சுற்றோட்ட நிகழ்முறையை வெறும் வடிவ மாற்றமாக காட்டியது முடிவில் சரக்குகளின் மதிப்பையும் உபரி-மதிப்பையும் நேரடி பொருளுற்பத்தி நிகழ்முறையில் ஈடுபடும் உழைப்பாக பெயர்த்தது. தொல்சீர் பொருளாதார இயல் கொடுத்த விமர்சனம் எந்த மாயை உலகை கலைத்து விரட்டியதோ, அதே மாயை உலகின் பிடியில் அப்பொருளாதார இயலின் தலைசிறந்த பிரதிநிதிகளே கூட இன்னமும் ஓரளவுக்கு சிக்கியிருக்கிறார்கள்; முதலாளித்துவக் கோணத்திலிருந்து அணுகுவோருக்கு இது தவிர்க்க முடியாததாகும். இவர்கள் அனைவரும் இப்படிச் சிக்கியிருப்பதால் தடுமாற்றங்களிலும், அரைகுறை உண்மையிலும், தீர்வுறா முரண்பாடுகளிலும் போய் விழுந்து விடுகிறார்கள். மறுபுறம், மூலதனம் —வட்டி, நிலம்— வாடகை, உழைப்பு—கூலி என்னும் இந்த அந்நியப்பட்ட, அறிவுக் கெவ்வாத வடிவங்களை உள்ளபடியான உற்பத்திச் செயலிகளே சற்றும் சங்கடமின்றி ஏற்றுக்கொள்வதும் அதே போல் இயல்பானதே; உள்ளபடியான ஏனென்றால் அவர்கள் நடமாடிக் கொண்டிருப்பதும் அன்றாடம் தொழில் புரிவதும் மாயைகளான இந்த வடிவங்களுக்கு இடையேதான். ஆகவே, உள்ளபடியான உற்பத்திச் செயலிகளின் அன்றாடக் கண்ணோட்டங்களை வறட்டு உபதேசங்களாகப் பெயர்த்து, அறிவுக்கு எட்டும்படியான ஒருவித ஏற்பாட்டில் அவற்றை ஒழுங்கு செய்வதேயாகிய கொச்சைப் பொருளாதார இயல், மேற்பூச்சான தன் பகட்டு ஆரவாரத்தை ஐயந்திரிபற நிறுவிக்

கொள்வதற்கான உன்னத இயற்கை அடிப்படையாக உள்தொடர்பே இல்லாத இந்த மும்மைச் சூத்திரத்தை கருதுவதும் அதே போல் இயல்பானதே. இந்தச் சூத்திரம் ஆளும் வர்க்கங்களின் நலன்களுக்கு ஏற்றதாகவும் உள்ளது; ஏனென்றால் அது அவ்வர்க்கங்களின் வருவாய்க்கான ஆதாரங்களின் இயற்கை அவசியத்தையும் சாசுவத நியாயத்தையும் பறை சாற்றுவதோடு, அவற்றை ஓர் உறுதியான கோட்பாடாகவும் தூக்கி நிறுத்துகிறது.

எப்படி உற்பத்தி உறவுகள் பொருட்களாக உருமாறி, உற்பத்திச் செயலிகளைச் சார்ந்திராமல் சுயேச்சையானவை ஆகின்றன என்று விளக்கிச் சொல்லும் போது, இந்த இடையுறவுகள் அவர்களது விருப்பத்தையும் மீறி அவர்களை ஆளும் வலிய இயற்கை விதிகளாக அவர்களுக்கு தோன்றுவது எப்படி என்பதை, உலகச் சந்தையும், அதன் நிலவரங்களும், சந்தை விலைகளிலான அலைவுகளும், கடன்-செலாவணிக் காலவரைகளும், தொழில்துறை, வர்த்தகத்துறை சகடங்களும், செழுமை நெருக்கடி இரண்டும் மாறி மாறி வரும் நிலையும் குருட்டு அவசியமாக அவர்களை எதிர்நோக்குவது எப்படி என்பதை கருதாமல் ஒதுக்கி விடுகிறோம். போட்டியின் உள்ளபடியான அசைவியக்கம் நமது ஆய்வெல்லைக்கு அப்பாற்பட்டது என்பதாலும், முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் உள்ளமைப்பை அதன் இலட்சிய சராசரியை என்றும் சொல்லலாம் - விளக்கிச் சொல்வது மட்டுமே நமது நோக்கம் என்பதாலும் இப்படிச் செய்கிறோம்.

முன் சென்ற சமூக அமைப்புகளில் இந்தப் பொருளாதார மாய்மாலம் முக்கியமாய் பணம் தொடர்பாகவும், வட்டி-மூலதனம் தொடர்பாகவுமே எழுந்தது. முதலாவதாக பயன்-மதிப்புக்கான, உற்பத்தியாளர்களின் சொந்தத் தேவைக்களுக்கான பொருளுற்பத்தி கோலோச்சுமிடத்தேயும், இரண்டாவதாக பண்டைக்காலத்திலும் மத்தியகாலத்திலும் போன்று அடிமைமுறையோ பண்ணையடிமை முறையோ சமூகப் பொருளுற்பத்தியின் பரந்த அடித்தளமாக அமையுமிடத்தேயும் இந்த மாய்மாலத்துக்கு இடமில்லாமற் போவது இயல்பே. இங்கே, உற்பத்தியாளர்கள் மீது உற்பத்திச் சாதனங்கள் ஆதிக்கம் செலுத்துவது கண்ணுக்குத் தெரியும்படியான ஆண்டை-அடிமை உறவுகளால் மூடி மறைக்கப்படுகிறது; இந்த உறவுகள் பொருளுற்பத்தி நிகழ்முறையின் நேரடி இயக்குவிசையாக தோற்றமளிக்கின்றன. ஆதிப் பொதுவுடைமை வழங்கி வந்த புராதனச் சமுதாயங்களிலும் ஏன், பண்டைக் காலத்திய நகரச் சமுதாயங்களிலும்

கூட இந்தப் பொதுவுடைமைச் சமுதாயமும் அதற்குரிய நிலைமைகளும் தான் பொருளுற்பத்திக்கான அடிப்படையாக வெளிப்படுகிறது; இச் சமுதாயத்தின் மறுவுற்பத்தியே அதன் இறுதி நோக்கமாக காணப்படுகிறது. மத்தியக் காலத்து கைவினைச் சங்க அமைப்பிலேயே கூட, மூலதனமோ உழைப்போ தங்குதடையற்றவையாகத் தோற்றமளிப்பதில்லை; அவற்றின் உறவுகள் தொழிற்கழக விதிகளாலும், அதே கூட்டுத்துவ உறவுகளாலும், அதற்கேற்ப தொழிற்கடமை, கைவினைத்திறன் முதலான கண்ணோட்டங்களாலும் வரையறுக்கப்படுகின்றன. முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையில்தான்.....*

(*) கையெழுத்துப் பிரதி இங்கு அரைகுறையாக நின்று விடுகிறது.- ஆங்கிலப்பதிப்பாசிரியர்

## அத்தியாயம் XLIX

## பொருளுற்பத்தி நிகழ்முறையின் பகுப்பாய்வு தொடர்பாக

பின்வரும் பகுப்பாய்வைப் பொறுத்தவரை, உற்பத்தி- விலைக்கும் மதிப்புக்கும் இடையிலான வேறுபாட்டை கருத்தில் கொள்ளத் தேவையில்லை; ஏனென்றால் இங்கு நாம் உழைப்பின் மொத்த வருடாந்தர உற்பத்திப்பண்டத்தின் மதிப்பை, அதாவது மொத்தச் சமுதாய மூலதனத்தினது உற்பத்திப் பண்டத்தின் மதிப்பைப் பரிசீலிக்கிறோம் - இப்படி பரிசீலிக்கும் போதெல்லாம் இந்த வேறுபாடு அறவே மறைந்துவிடுகிறது.

இலாபம் (முனைவு இலாபம்+வட்டி) என்பதும், வாடகை என்பதும் சரக்குகளிலடங்கிய உபரி-மதிப்பில் குறிப்பிட்ட பகுதிகள் மேற்கொள்ளும் தனிச்சிறப்பான வடிவங்களே தவிர வேறல்ல. உபரி-மதிப்பின் பருமனே, அது எப்பகுதிகளாகப் பிரிக்கப்படலாமோ அப்பகுதிகளின் மொத்த அளவுக்கு வரம்பாகும். ஆகவே சராசரி இலாபம் + வாடகை என்பது உபரி-மதிப்புக்குச் சமம். சரக்குகளி லடங்கியுள்ள உபரி-உழைப்பிலும், எனவே உபரி-மதிப்பிலும் ஒரு பகுதி சாரசரி இலாபத்தின் சமனமாக்கத்தில் நேரடியாகப் பங்கெடுக்காமலிருப்பது சாத்தியமே; இதனால் சரக்குகளின் மதிப்பில் ஒரு பகுதி அவற்றின் விலையில் வெளிப்படாமலே போகிறது. ஆனால் முதலாவதாக, மதிப்பைவிட குறைவான விலைக்கு விற்கப்பட்ட சரக்குகள் மாறா-மூலதனத்தின் கூறாய் அமையும் போது இலாபவீதம் உயர்வதாலோ மதிப்பை விட குறைவான விலைக்கு விற்கப்பட்ட சரக்குகள் தனிப்பட்ட சொந்த நுகர்வுக்கான பண்டங்களின் வடிவில் வருவாயாக நுகரப்படும் மதிப்புப் பகுதியில் சேரும் போது, இலாபமும் வாடகையும் இன்னுமதிக உற்பத்திப் பண்டத்தால் குறிக்கப்படுவ தாலோ இது சரிகட்டப்படுகிறது. இரண்டாவதாக, சராசரி அசைவியக்கத்தில் இது நீக்கப்பட்டு விடுகிறது. எப்படியானாலும் சரக்கின் விலையில் வெளிப்படாத ஓர் உபரி-மதிப்புப் பகுதி விலையின் உருவாக்கத்தில் விடுபட்டுப் போனாலும் கூட, இயல்பான வடிவில் சராசரி இலாபம், வாடகை ஆகியவற்றின் கூட்டுத் தொகை மொத்த உபரி-மதிப்பை விட குறைவாக இருந்தாலும் இருக்கலாமே தவிர,

ஒருபோதும் கூடுதலாக இருக்க முடியாது. இந்த இயல்பான வடிவில் கூலி உழைப்புச் சக்தியின் மதிப்புக்கேற்ப அமைகிறது. ஏகபோக வாடகையும் கூட, அது கூலியிலிருந்தான ஒரு பிடித்தமாய் இல்லாத வரை, அதாவது ஒரு தனிக் கருத்தினமாக அமையாத வரை, எப்போதுமே சுற்றடிமுறையில் உபரி-மதிப்பின் ஒரு பகுதியாகத்தான் இருந்தாக வேண்டும். அது (வேறுபாட்டு வாடகையில் போல்) தன்னை ஓர் அடக்கக் கூறாக கொண்ட சரக்கின் உற்பத்தி- விலைக்கு மேல் அதன் விலை பெற்றுள்ள மிகையளவின் பகுதியாகவோ (அறுதி வாடகையில் போல்) அச்சரக்கிலடங்கிய உபரி-மதிப்பில் சராசரி இலாபத்தால் அளவிடப்படும் பகுதிக்கு மேல் அவ்வுபரி-மதிப்பு பெற்றுள்ள மிகையளவின் பகுதியாகவோ அமையவில்லை என்றால், எப்படியும் ஏனைய சரக்குகளில், அதாவது ஏகபோக விலை உடைய இந்தச் சரக்குக்குப் பரிவர்த்தனையாகிற சரக்குகளில் அடங்கியுள்ள உபரி-மதிப்பின் பகுதியாகவேனும் அமைகிறது. சராசரி இலாபம், நில-வாடகை இவற்றின் கூட்டுத் தொகையானது, இவற்றை அடக்கக் கூறுகளாகக் கொண்டதும், இவை இப்படி பிரிவதற்கு முன்பே இருந்து வருவதுமாகிய பருமனைக் காட்டிலும் ஒருபோதும் கூடுதலாய் இருக்க முடியாது. ஆகவே சரக்குகளிலடங்கிய உபரி-மதிப்பு அனைத்தும், அதாவது அவற்றிலடங்கியுள்ள உபரி-உழைப்பு அனைத்தும் அவற்றின் விலையில் ஈடேற்றம் பெறுகிறதா இல்லையா என்பது இங்கு நம் கருத்துக்குரியதல்ல. மெய்நடப்பில் உபரி-உழைப்பு முழுமையாக ஈடேற்றம் பெறுவதில்லை, ஏனென்றால் உழைப்பின் உற்பத்தித் திறனில் ஓயாமல் மாற்றங்கள் ஏற்படுகின்றன, இதன் விளைவாக குறிப்பிட்ட சரக்கின் உற்பத்திக்கு சமூக வழியில் அவசியமான உழைப்பளவிலும் ஓயாமல் மாற்றங்கள் ஏற்படுகின்றன, இதனால் சில சரக்குகள் எப்போதுமே இயல்பு மீறிய நிலைமைகளில்தான் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆகவே அவற்றை அவற்றின் தனிப்பட்ட மதிப்பை விட குறைவான விலைக்கே விற்றாக வேண்டும். எப்படியானாலும் இலாபம்+வாடகை என்பது ஈடேற்றம் பெற்ற மொத்த உபரி-மதிப்புக்கு (உபரி-உழைப்புக்கு) சமம்; இந்தப் பரிசீலனையைப் பொறுத்த வரை, ஈடேற்றம் பெற்ற உபரிகூ-மதிப்பை மொத்த உபரி-மதிப்புக்கு சமமாய்க் கருதலாம்; ஏனென்றால் இலாபமும் வாடகையும் ஈடேற்றம் பெற்ற உபரி-மதிப்பாகும்; அல்லது, பொதுவாகச் சொன்னால், சரக்குகளின் விலைகளில் சேரும் உபரி-மதிப்பாகும்; இவ்விதம் நடைமுறையில் இந்த விலையில் அடக்கக் கூறாக அமையும் முழு உபரி-மதிப்பும் ஆகும்.

மறுபுறம், வருவாயின் மூன்றாவது பிரத்தியேக வடிவமாக அமைந்திடும் கூலியானது எப்போதுமே மூலதனத்தின் மாறும் அடக்கக் கூறுக்கு,அதாவது உழைப்புச் சாதனங்களுக்காக அல்லாமல், உயிருள்ள உழைப்புச் சக்திக்காக, தொழிலாளர்களுக்கு ஊதியமளிப்பதற்காக முதலீடு செய்யப்படும் அடக்கக் கூறுக்குச் சமம். (வருவாய் செலவிடப்படுகையில் ஊதியமளிக்கப் பெறும் உழைப்பானது கூலி, இலாபம் அல்லது வாடகையிலிருந்து அந்த ஊதியத்தைப் பெறுகிறது; ஆகவே அதற்கு ஊதியமாகத் தரப்படும் சரக்குகளின் மதிப்பில் அது ஒரு பகுதியாவதில்லை. இதனால்தான் சரக்கு-மதிப்பு தொடர்பானதும் அது பிரிக்கப்பட்டு வரும் அடக்கக்கூறுகள் தொடர்பானதுமாகிய பகுப்பாய்வில் இந்த உழைப்பு கருத்தில் கொள்ளப்படுவதில்லை). தொழிலாளி தமது மொத்த வேலை நாளில் எந்தப் பகுதியில் மாறும்-மூலதனத்தின் மதிப்பையும், இவ்விதம் உழைப்பின் விலையையும் மறுவுற்பத்தி செய்கிறாரோ அந்தப் பகுதியின் பொருள் வடிவாக்கம்தான், சரக்கு-மதிப்பின் எந்தப் பகுதியில் தொழிலாளி தமது உழைப்புச் சக்தியின் மதிப்பை, அல்லது தமது உழைப்பின் விலையை மறுவுற்பத்தி செய்கிறாரோ அந்தப் பகுதிதான் கூலியாகும். தொழிலாளியின் மொத்த வேலை-நாள் இருபகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது. ஒரு பகுதியில் அவர் தமக்கு வேண்டிய வாழ்வுச் சாதனங்களின் மதிப்பை மறுவுற்பத்தி செய்வதற்கு அவசியமான அளவு உழைப்பை ஆற்றுகிறார்; இது அவரது மொத்த உழைப்பில் ஊதியமளிக்கப் பெறும் பகுதியாகும், அவரது பராமரிப்புக்கும் மறுவுற்பத்திக்கும் அவசியமான பகுதியாகும். வேலை - நாளில் எஞ்சிய பகுதி முழுவதும் அவரது கூலியாக ஈடேற்றம் பெறும் உழைப்பின் மதிப்புக்கு மேல் ஆற்றப்படும் மிகையான உழைப்பளவு முழுவதும் உபரி-உழைப்பு ஆகும் - ஊதியமிலா உழைப்பு ஆகும்; இந்த உபரி-உழைப்பு அவரின் மொத்தச் சரக்கு உற்பத்தியில் உபரி-மதிப்பால் (இவ்விதம் சரக்குகளின் மிகையளவால்) குறிக்கப் பெறுகிறது. இந்த உபரி-மதிப்போ வெவ்வேறு பெயர் கொண்ட பகுதிகளாக, இலாபமாகவும் (முனைவு-இலாபம் + வட்டி), வாடகையாகவும் பிரிக்கப்படுகிறது.

ஆக, ஒரு நாளில் அல்லது ஓராண்டு காலத்தில் தொழிலாளியால் சேர்க்கப்படும் மொத்த உழைப்பு சரக்கு-மதிப்பின் எப்பகுதியில் ஈடேற்றம் பெறுகிறதோ, அப்பகுதி முழுவதும், அதாவது இந்த உழைப்பினால் படைக்கப்படும் வருடாந்தர உற்பத்திப் பண்டத்தின் மதிப்பு முழுவதும் கூலியின் மதிப்பாகவும் இலாபமாகவும்

வாடகையாகவும் பிரிக்கப்படுகிறது - ஏனென்றால் இந்த மொத்த உழைப்பு அவசிய-உழைப்பாகவும் ஊதியமிலா உபரி-உழைப்பாகவும் பிரிகிறது; அவசிய-உழைப்பு என்பது தொழிலாளி உற்பத்திப் பண்டத்தின் எந்த மதிப்புப் பகுதி அவருக்கு ஊதியமாகத் தரப்படுகிறதோ அந்த மதிப்புப் பகுதியை, அதாவது அவரது கூலியைப் படைப்பதற்குப் பயன்படும் உழைப்பு ஆகும்; ஊதியமிலா உபரி உழைப்பு என்பது உற்பத்திப் பண்டத்தின் எந்த-மதிப்புப் பகுதி உபரி-மதிப்பைக் குறிக்கிறதோ, எது பிற்பாடு இலாபமாகவும் வாடகை யாகவும் பிரிக்கப்படுகிறதோ, அந்த மதிப்புப் பகுதியை அவர் படைப்பதற்குப் பயன்படும் உழைப்பு ஆகும். இந்த மொத்த உழைப்பை அன்னியில், தொழிலாளி வேறு உழைப்பேதும் நல்குவதில்லை, கூலியாகவும், இலாபமாகவும், வாடகையாகவும் வடிவெடுக்கும் உற்பத்திப் பண்டத்தின் மொத்த மதிப்பை அன்னியில், அவர் வேறு மதிப்பேதும் படைப்பதில்லை. தொழிலாளியால் ஓராண்டு காலத்தின் புதிதாகச் சேர்க்கப்படும் உழைப்பைக் குறித்திடும் வருடாந்தர உற்பத்திப் பண்டத்தின் மதிப்பு = கூலி அல்லது மாறும்-மூலதனத்தின் மதிப்பு+ உபரி-மதிப்பு. இந்த உபரி-மதிப்புதான் இலாபமாகவும் வாடகை யாகவும் பிரிகிறது.

வருடாந்தர உற்பத்திப் பண்டத்தின் மதிப்பில் எப்பகுதி ஓராண்டு காலத்தில் தொழிலாளியால் படைக்கப்படுகிறதோ, அப்பகுதி முழுவதும் கூலியின் மதிப்பு, இலாபம், வாடகை ஆகிய மூன்று வருவாய்களின் வருடாந்தர மதிப்புத் தொகையாக வெளிப்படுகிறது. ஆகவே, மூலதனத்தின் மாறாப் பகுதியினுடைய மதிப்பு ஆண்டுதோறும், படைக்கப்படும் உற்பத்திப் பண்ட மதிப்பில் மறுவுற்பத்தியாவதில்லை; ஏனென்றால் கூலியானது உற்பத்திக்காக முன்னீடு செய்யப்படும் மாறும்-மூலதனப் பகுதியின் மதிப்புக்கே சமம்; அதேபோது வாடகையும் இலாபமும் உபரி-மதிப்புக்குச் சமம். முன்னீடு செய்யப்படும் மூலதனத்தின் மொத்த மதிப்புக்கு மேல், அதாவது மாறா-மூலதனத்தின் மதிப்பு மாறும்-மூலதனத்தின் மதிப்பு என்பதற்கு மேல் உற்பத்தி செய்யப்படும் மிகை மதிப்புக்குச் சமம்.

இலாபமாகவும் வாடகையாகவும் உருமாறிய உபரி-மதிப்பில் ஒரு பகுதி வருவாயாக நுகரப்படுவதற்குப் பதில், மூலதனத் திரட்டலுக்குப் பயன்படுகிறது என்பதற்கும் இங்கு தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. திரட்டல் நிதியாகப் பயன்படும் உபரி-மதிப்புப் பகுதி புதிய கூடுதல் மூலதனத்தை உருவாக்கப் பயன்படுகிறதே தவிர, பழைய மூலதனத்தை-அந்தப்

பழைய மூலதனத்தில் உழைப்புப் சக்திக்காக முதலீடு செய்யப்பட்ட அடக்கக் கூறு ஆனாலும் சரி, உழைப்புச் சாதனங்களுக்காக முதலீடு செய்யப்பட்ட அடக்க கூறு ஆனாலும் சரி - மாற்றீடு செய்வதற்குப் பயன்படுவதில்லை. ஆகவே எளிமையின் பொருட்டு நம் வருவாய் முழுக்கச் சொந்த நுகர்வுக்கே போய்விடுவதாக கொள்ளலாம். இடர்பாடு இருதரப்பட்டது. ஒருபுறம் வருடாந்தர உற்பத்திப் பண்டத்தில் கூலி, இலாபம், வாடகை ஆகிய வருவாய்கள் நுகரப்படும் மதிப்பு அதில் சேர்ந்திருக்கும் மாறா-மூலதன மதிப்புப் பகுதிக்குச் சமமானதொரு மதிப்புப் பகுதியை தன்னுள் கொண்டிருக்கிறது. கூலியாக உருமாறும் பகுதி, இலாபமாகவும் வாடகையாகவும் உருமாறும் பகுதி ஆகியவற்றுடன் கூடுதலாக இந்த மதிப்புப் பகுதியும் அதிலடங்கியுள்ளது. ஆகவே அதன் மதிப்பு = கூலி+இலாபம்+ வாடகை+C (அதன் மதிப்பின் மாறாப் பகுதி). அதாவது மூலதனத்தின் பொருட்கூறுகளாகிய உற்பத்திச் சாதனங்களிலிருந்து இலாபமும், நிலவுடைமையாளரால் குறிக்கப்பெறும் நிலம் அல்லது இயற்கையிலிருந்து வாடகையும் எழுந்தாக வேண்டும் (ரோஷர்)* கூலி+இலாபம்+வாடகை என்பதற்கு மட்டுமே சமமாய் இருக்கும்படி ஆண்டுதோறும் உற்பத்திப் பண்டத்தின் மதிப்பினால் எப்படி (கூலி+இலாபம்+வாடகை)+C என்பதற்குச் சமமான மதிப்புடைய உற்பத்திப் பண்டத்தை வாங்க முடியும்? ஆண்டுதோறும் உற்பத்தி செய்யப்படும் மதிப்பினால் எப்படி அதைக்காட்டிலும் உயர்ந்த மதிப்புடைய உற்பத்திப் பண்டத்தை வாங்க முடியும்?

மறுபுறம், மாறா-மூலதனத்தில் ஒரு பகுதி உற்பத்திப் பொருளுக்கு போய்ச் சேராமல், குறைந்த மதிப்புடைமையே என்றாலும் வருடாந்திர சரக்கு உற்பத்திக்கு பிறகும் தொடர்ந்து நிலவி வருகிறது அல்லவா, அந்தப் பகுதியை ஒதுக்கிவிட்டுப் பார்ப்போமானால், அதாவது ஈடுபடுத்தப்பட்ட ஆனால் நுகரப்படாத நிலை மூலதனத்தை இப்போதைக்கு பரிசீலனையிலிருந்து நீக்கிவிடுவோமானால், முன்னீடு செய்யப்பட்ட மூலதனத்தின் மாறாப் பகுதி முழுவதும் கச்சாப் பொருட்கள் மற்றும் துணைப் பொருட்களின் வடிவில் புதிய உற்பத்திப் பொருளுக்கு மாற்றப்பட்டிருக்கக் காணலாம்; ஆனால் உழைப்புச் சாதனங்களில் ஒரு பகுதி முழுமையாக பயன்படுத்தப்பட்டுள்ளது, வேறொரு பகுதி ஓரளவுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது, அதன்

---

(*) ரோஷர், System der Volkswirthchaft, தொகுதி I, Die Orundlagen der Nationalo Konomie ஸ்டர்கார்ட் மற்றும் ஆக்ஸ்பர்க், 1858.-ஆங்கிலப் பதிப்பாசிரியர்.)

மதிப்பில் ஒரு பகுதி மட்டுமே உற்பத்தியில் நுகரப்பட்டுள்ளது. உற்பத்தியில் நுகரப்படும் இந்த மாறா-மூலதனப் பகுதி முழுவதும் அப்படியே பண்ட வடிவில் மாற்றீடு செய்யப்பட்டாக வேண்டும். ஏனைய எல்லா நிலைமைகளிலும் - முக்கியமாய் உழைப்பின் உற்பத்தித் திறன் - மாறாதிருப்பதாகக் கொண்டால், இந்தப் பகுதியை மாற்றீடு செய்வதற்கு தேவைப்படும் உழைப்பளவில் மாற்றம் இல்லை, அதாவது அதற்குச் சமதையாக ஒரு மதிப்பால் அதனை மாற்றீடு செய்தாக வேண்டும். இல்லையேல் மறுவுற்பத்தி பழைய அளவு வீதத்தில் நடைபெறுவதே முடியாத காரியமாகிவிடும். ஆனால் இந்த உழைப்பை ஆற்ற வேண்டியது யார், ஆற்றுவது யார்?

முதலாவது சிக்கலைப் பொறுத்தவரை; உற்பத்திப் பண்டத்தில் அடங்கியுள்ள மதிப்பின் மாறாப் பகுதிக்கு யார் விலை கொடுப்பது, விலையாக எதைக் கொடுப்பது? - உற்பத்தியில் நுகரப்பட்ட மாறா - மூலதனத்தின் மதிப்பு உற்பத்திப் பண்டத்தினது மதிப்பின் ஒரு பகுதியாக மறுபடியும் தலைகாட்டுவதாகக் கொள்கிறோம். இது இரண்டாவது சிக்கலின் அனுமானங்களுக்கு முரணானதல்ல. ஏனென்றால் ஏற்கெனவே முதல் பாகத்தில் தெளிவாகக் காட்டியிருப்பது போல் (அத்தியாயம் VII : 'உழைப்பு நிகழ்முறையும் உபரி-மதிப்பை உற்பத்தி செய்யும் நிகழ்முறையும்'). புதிய உழைப்பு சேர்க்கப்படும் போது, அது பழைய மதிப்பை மறுவுற்பத்தி செய்வதற்குப் பதில், கூடுதலாகவே செய்கிறது, கூடுதல் மதிப்பை மட்டுமே படைக்கிறது என்றாலும் கூட அதேபோது பழைய மதிப்பு உற்பத்திப் பண்டத்தில் பாதுகாக்கப்படுகிறது; ஆனால் உழைப்பு குறிப்பிட்ட வகைப்பட்ட திறனுடை உழைப்பாக செயல்படுவதன் விளைவுதானே தவிர அது மதிப்பைப் படைக்கும் தன்மை படைத்தாய் இருப்பதன், அதாவது பொதுவான உழைப்பாக இருப்பதன் விளைவு அல்ல இது. ஆகவே, வருவாய் அதாவது ஓராண்டு காலத்தில் படைக்கப்படும் மொத்த மதிப்பு எந்த உற்பத்திப் பண்டத்துக்காகச் செலவிடப்படுகிறதோ அந்த உற்பத்திப் பண்டத்தில் அடங்கியுள்ள மாறாப் பகுதியின் மதிப்பைப் பாதுகாப்பதற்கு கூடுதல் உழைப்பேதும் தேவையில்லை எனக் கொண்டோம். ஆனால் முந்தைய ஆண்டில் நுகரப்பட்ட மாறா-மூலதனத்தின் மதிப்பையும் பயன் மதிப்பையும் மாற்றீடு செய்வதற்கு புதிய கூடுதல் உழைப்பு தேவைப்படவே செய்கிறது; இப்படி மாற்றீடு செய்யாவிட்டால் மறுவுற்பத்தி என்பதே முடியாத காரியமாகிவிடும்.

புதிதாகச் சேர்க்கப்படும் உழைப்பனைத்தும் அந்த ஆண்டில் புதிதாய்ப்படைக்கப்படும் மதிப்பாக வெளிப்படுகிறது; இந்த மதிப்பு

மூன்று வருவாய்களாக-கூலியாகவும் இலாபமாகவும் வாடகை யாகவும் - பிரிக்கப்படுகிறது. ஆகவே ஒரு புறம், நுகரப்பட்ட மூலதனத்தை மாற்றீட்டு செய்வதற்கு மிகையளவான சமுதாய உழைப்பேதும் எஞ்சுவதில்லை - இந்த மாறா மூலதனத்தில் ஒரு பகுதி பண்டமாகவும் மதிப்பாகவும் மாற்றீடு செய்யப்பட்டாக வேண்டும் மறுபகுதி (நிலை-மூலதனத்தின் தேய்மானத்திற்காகவே) மதிப்பாக மட்டும் மாற்றீடு செய்யப்பட்டாக வேண்டும். மறுபுறம், ஓராண்டு காலத்தில் உழைப்பினால் படைக்கப்பட்டு கூலியாகவும் இலாப மாகவும் வாடகையாகவும் பிரிக்கப்பட்டு, இவ்வாறே செலவிடப்பட வேண்டிய மதிப்பானது இந்த வருவாய்களின் மதிப்புக்கு மேல் வருடாந்திர உற்பத்திப் பண்டத்தில் அடங்கி இருந்தாக வேண்டிய மாறா-மூலதனப் பகுதிக்கு விலை கொடுப்பதற்கோ அதை வாங்குவதற்கோ போதுமானதாகத் தோன்றவில்லை.

இங்கே முன்னுக்கு வரும் சிக்கலானது மொத்தச் சமுதாய மூலதனத்தின் மறுவுற்பத்தியைப் பரிசீலித்த போதே - இரண்டாம் பாகம், பகுதிIII தீர்க்கப்பட்டு விட்டதைக் காணலாம். இங்கு நாம் அதனிடம் திரும்பிச் செல்வதற்கு காரணம் என்னவென்றால்: முதலாவதாக, அங்கே உபரி-மதிப்பு அதன் வருவாய் வடிவங்களில் - இலாபமாகவும் (முனைவு இலாபம்+வட்டி) வாடகையாகவும் - வளர்க்கப்படாமல் இருந்தது, எனவே இந்த வடிவங்களில் அதனை பரிசீலிக்க முடியாமல் இருந்தது; இரண்டாவதாக கூலி, இலாபம், வாடகை என்ற வடிவம் தொடர்பாகத்தான், ஆதாம் ஸ்மித்திடமிருந்து தொடங்கி அரசியல் பொருளாதாரம் அனைத்தின் பகுபாய்விலும் நம்பமுடியாத ஒரு பெருந்தவறு இழையோடி இருக்கிறது.

இரண்டாம் பாகத்தில் மூலதனம் அனைத்தையும் இருபெரும் துறைகளாக பிரித்துக் கொண்டோம்; உற்பத்திச் சாதனங்களை உற்பத்தி செய்வது துறை I ஆகும்; சொந்த நுகர்வுக்கான பண்டங்களை உற்பத்தி செய்வது துறை IIஆகும். குறிப்பிட்ட சில உற்பத்திப் பொருட்கள் சொந்த நுகர்வுக்குப் பயன்படுவதைப் போலவே உற்பத்திச் சாதனங்களாகவும் பயன்படக் கூடும் (குதிரை, தானியம் முதலானவை) என்றாலும், மேற்சொன்ன பிரிவினை முழுக்கச் சரியானதென்பது இதனால் எவ்விதத்தும் அடிபட்டுப் போவதில்லை. மெய்யாகவே நடப்பில் இருக்கும் உண்மையை வெளியிடுவதுதானே தவிர இது ஒன்றும் கருதுகோள் அல்ல, ஒரு நாட்டின் வருடாந்தர உற்பத்திப் பண்டத்தை எடுத்துக் கொள்வோம். இந்த உற்பத்திப் பண்டத்தில் ஒரு பகுதி-எந்த அளவுக்கு அதனால் உற்பத்திச் சாதனங்களாகப் பயன்பட

முடிந்தாலும் சரி - சொந்த நுகர்வுக்குப் போய் சேருகிறது. இந்த உற்பத்திப் பண்டத்திற்காகவே கூலியும் இலாபமும் வாடகையும் செலவிடப் படுகின்றன. இந்த உற்பத்திப் பண்டம் குறிப்பிட்ட ஒரு துறையைச் சேர்ந்த சமுதாய மூலதனத்தால் உற்பத்தி செய்யப்படுவதாகும். இதே மூலதனம் துறை I க்குரிய உற்பத்திப் பண்டங்களையும் கூட உற்பத்தி செய்வது சாத்தியமே. அது அப்படிச் செய்கிற அளவில், துறை Iக்குரிய திறனுடை நுகர்வுக்கான உற்பத்திப் பண்டங்களை வழங்குவது உள்ளபடியே சொந்த நுகர்வுக்கான பண்டங்களாகிய துறை IIஇன் உற்பத்திப் பண்டங்களின் நுகரப்படும் இந்த மூலதனத்தின் பகுதியல்ல. சொந்த நுகர்வுக்குப் போய்ச் சேரும் இந்த உற்பத்திப் பண்டம் IIக்காகவே வருவாய் செலவிடப்படுகிறது; இந்த உற்பத்திப் பண்டத்தின் மொத்த அளவானது அதில் நுகரப்பட்ட மூலதனம் உற்பத்தியான உபரி - மதிப்பு என்பதன் நிலவல் வடிவமாகும். இவ்வாறு அது முழுக்க முழுக்க நுகர்வுப் பண்டங்களில் உற்பத்திக்கு மட்டும் முதலீடான மூலதனத்தின் உற்பத்திப் பண்டமாகும், இதேபோல் வருடாந்தர உற்பத்திப் பண்டத்தில் மறுவுற்பத்திச் சாதனங்களாகப் பயன்படும் துறை I ஆனது-கச்சாப் பொருட்களும் உழைப்புச் சாதனங்களும் - எவ்வளவு தான் இந்த உற்பத்திப் பண்டத்தால் இயல்பிலேயே நுகர்புச் சாதனங்களாக பயன்பட முடிந்த போதிலும், முழுக்க முழுக்க உற்பத்திச் சாதனங்களின் உற்பத்திக்காகவே முதலீடாகிற மூலதனத்தின் உற்பத்திப் பொருள் ஆகும். மொத்தத்தில், மாறா-மூலதனமாக அமைந்திடும் உற்பத்திப் பொருட்களில் பெரும் பகுதியானவை பொருள் வகையில் சொந்த நுகர்வுக்குப் போய்ச் சேரமுடியாத ஒரு வடிவத்திலும் நிலவுகின்றன. அவை இப்படி நிலவுகிற அளவில் எடுத்துக்காட்டாக, விவசாயி தமது விதைத் தானியத்தை உணவாக்கிக் கொள்ளவும் தம்முடைய இழுவைக் கால்நடைகளை இறைச்சியாக்கிக் கொள்ளவும் முடிகிற அளவில், அவரை எதிர்ப்படும் பொருளாதாரக் கடையானது இந்தப் பகுதிநுகரக் கூடிய வடிவில் இல்லாமற் போனால் எப்படிச் செயல்படுமோ அதேபோல் அவருக்குச் செயல்படுகிறது.

முன்பே கூறியது போல், இரு துறைகளிலுமே மாறா - மூலதனத்தின் நிலைப் பகுதியைக் கருத்தில் கொள்ளாமல் ஒதுக்கிவிடுகிறோம்; இந்தப் பகுதி தொடர்ந்து பண்ட வடிவிலும், அதன் மதிப்பைப் பொறுத்தவரை இரு துறைகளையும் சேர்ந்த வருடாந்தர உற்பத்திப் பண்டத்தைச் சாராமலும் இருந்து வருகிறது.

துறை IIஇன் உற்பத்திப் பண்டங்களுக்காவே கூலியும் இலாபமும் வாடகையும் செலவிடப்படுகின்றன, அதாவது வருவாய்கள் நுகரப்

படுகின்றன; இந்தத் துறையில் உற்பத்திப் பண்டம் அதன் மதிப்பைப் பொறுத்தவரை மூன்று அடக்கக் கூறுகளால் ஆனது. ஒரு கூறு உற்பத்தியில் நுகரப்படும் மூலதனத்தின் மாறாப் பகுதியின் மதிப்புக்குச் சமம்; இரண்டாவது கூறு கூலிக்காகச் செலவிடப்படும் மாறும் மூலதன முதலீட்டின் மதிப்புக்குச் சமம்; முடிவில் மூன்றாவது கூறு உற்பத்தி செய்யப்படும் உபரி-மதிப்புக்குச் சமம்; உபரி- மதிப்பு = இலாபம்+ வாடகை. துறைIIஐச் சேர்ந்த உற்பத்திப் பண்டத்தின் முதல் கூறு மாறா-மூலதனப் பகுதியின் மதிப்பு துறை IIஐச் சேர்ந்த முதலாளி களாலோ, தொழிலாளர்களாலோ நுகரப்பட முடியாது; நிலவுடைமை யாளர்களாலும் நுகரப்பட முடியாது, அது அவர்களுடைய வருவாய் களைச் ,சேர்ந்ததல்ல; அதனை பண்டவடிவில் மாற்றீடு செய்தாக வேண்டும்; இதன் பொருட்டு விற்றாக வேண்டும், மறுபுறம், இந்த உற்பத்திப் பண்டத்தின் ஏனைய இரு கூறுகளும் இந்தத் துறையில் படைக்கப்படும் வருவாய்களின் மதிப்புக்குச் சமம்; அதாவது கூலி+இலாபம்+வாடகை.

துறை Iஇல் உற்பத்திப் பண்டமானது வடிவத்தைப் பொறுத்தவரை அதே கூறுகளால் ஆனது. ஆனால் இங்கு வருவாயாக, கூலி+இலாபம்+வாடகை என்பதாக அமையும் பகுதி, சுருங்கச் சொல்லின் மாறும்-மூலதன பகுதி+உபரி-மதிப்பாவது இங்கே இந்தத் துறை Iஇல் உற்பத்திப் பண்டங்களது இயற்கை வடிவில் நுகரப்படுவதில்லை; அது துறை IIஇன் உற்பத்திப் பண்டங்களாகத்தான் நுகரப்படுகிறது. ஆகவே துறை Iஐச் சேர்ந்த வருவாய்களின் மதிப்பானது துறை IIஐச் சேர்ந்த உற்பத்திப் பண்டங்களின் எந்தப்பகுதி மாற்றீடு செய்யப்பட வேண்டிய துறை IIஇன் மாறா-மூலதனமாக அமைகிறதோ அந்தப் பகுதியின் வடிவில் நுகரப்பட்டாக வேண்டும். துறைII இன் உற்பத்திப் பண்டத்தில் அதன் மாறா-மூலதனத்தை மாற்றீடு செய்ய வேண்டிய பகுதியானது துறை Iஐச் சேர்ந்த தொழிலாளர் களாலும், முதலாளிகளாலும் நிலவுடையாளர்களாலும் அதன் இயற்கை வடிவில் நுகரப்படுகிறது. அவர்கள் துறை II இன் இந்த உற்பத்திப் பண்டத்துக்காக தமது வருவாயைச் செலவிடுகின்றனர். மறுபுறம் துறை Iஇன் உற்பத்திப் பண்டம் துறை IIஇன் வருவாயைக் குறிக்கிற அளவில், துறை IIஇதனால் உற்பத்தித் திறனுள்ள முறையில் அதன் இயற்கை வடிவில் நுகரப்படுகிறது. முடிவில், துறை Iஇன் மூலதனத்தில் பயன்படுத்தித் தீர்க்கப்படும் மாறாப் பகுதி இந்தத் துறையின் உற்பத்திப் பண்டங்களைக் கொண்டே மாற்றீடு செய்யப்படுகிறது; துல்லியமாகச் சொன்னால் இந்த உற்பத்திப்

பண்டங்கள் உழைப்புச் சாதனமாகவும் கச்சாப் பொருட்களாகவும் துணைப் பொருட்களாகவும் இன்ன பிறவாகவும் அமைகின்றன; துறை Iஐச் சேர்ந்த முதலாளிகள் தமக்குள்ளேயே பரிவர்த்தனை செய்து கொள்வதன் மூலம் ஓரளவுக்கும், இந்த முதலாளிகளில் சிலர் நேரடியாகத் தமது உற்பத்திப்பண்டங்களை மறுபடியும் உற்பத்திச் சாதனங்களாக பயன்படுத்திக் கொள்ள முடிவதன் மூலம் ஓரளவுக்கும் இந்த மாற்றீடு நடந்தேறுகிறது.

சாமானிய மறுவுற்பத்திக்கு முன்பு பயன்படுத்திய குறிவரையை (இரண்டாம் பாகம், அத்தியாயம் XX, II) எடுத்துக் கொள்ளலாம்:

$$\left.\begin{array}{l} \text{I. } 4{,}000_c + 1{,}000_v + 1{,}000_s = 6{,}000 \\ \text{II. } 2{,}000_c + 500_v + 500_s = 3{,}000 \end{array}\right\} = 9{,}000.$$

இங்கே, துறை II ஐச் சேர்ந்த உற்பத்தியாளர்களும் நிலவுடைமையாளர்களும் $500_v + 500_s = 1{,}000$ என்பதை வருவாயாக நுகர்கிறார்கள்; $2{,}000_c$ மாற்றீடு செய்யப்படுவதற்கு எஞ்சியுள்ளது. இது துறை Iஇல் தொழிலாளர்களாலும் முதலாளிகளாலும் வாடகை பெறுவோராலும் நுகரப்படுகிறது; இவர்களின் வருமானம் = $1{,}000_V + 1{,}000_S = 2{,}000$. IIஇன் நுகர்வுப் பண்டம் Iஆல் வருவாயாக நுகரப்படுகிறது Iஇன் வருவாயில் நுகரமுடியாத உற்பத்திப் பண்டத்தைக் குறிக்கும் பகுதி IIஆல் மாறா-மூலதனமாக நுகரப் படுகிறது. பிறகு Iஇன் $4{,}000_C$ என்பதற்கு இன்னும் கணக்குத் தரப்படவில்லை. இது துறை Iஇன் உற்பத்திப் பண்டத்திலிருந்து மாற்றீடு செய்யப்படுகிறது. இந்த உற்பத்திப் பண்டம் 6,000த்துக்குச் சமம். இன்னும் சரியாகச் சொன்னால் 6,000—2,000 என்பதற்குச் சமம், ஏனென்றால் இந்த 2,000 ஏற்கெனவே II க்கான மாறா-மூலதனமாக மாற்றப்பட்டு விட்டது. இந்த எண்ணிக்கைகள் விருப்பம்போல தேர்ந்தெடுக்கப்பட்டவை என்பதையும், ஆகவே துறை Iஇன் வருவாய்களின் மதிப்புக்கும் துறை IIஇன் மாறா- மூலதனத்தினது மதிப்புக்கும் இடையிலான உறவு விருப்பம் போல் அமைந்ததாகத் தெரிகிறது. ஆனால் மறுவுற்பத்தி நிகழ்முறை இயல்பானதாக அமைந்து மற்றபடி மாறுபாடற்ற நிலைமைகளில் நடைபெறுவதாய் உள்ளவரை, அதாவது மூலதனத் திரட்டலை ஒதுக்கிவிட்டுப் பார்த்தால், துறை Iஐச் சேர்ந்த கூலி, லாபம், வாடகை இவற்றின் கூட்டுத் தொகை துறை IIஐச் சேர்ந்த மூலதனத்தின் மாறாப் பகுதியினது மதிப்புக்குச் சமமாய் இருந்தாக வேண்டும். இல்லையேல் துறை II தனது மாறா-மூலதனத்தை மாற்றீடு செய்து கொள்ளமுடியாமற் போகும், அல்லது துறைI தன்

வருவாயை நுகர முடியாத வடிவத்திலிருந்து நுகரக்கூடிய வடிவத்துக்கு மாற்றமுடியாமற் போகும்.

இவ்வாறு, குறிப்பிட்ட ஏதேனுமொரு மூலதன முதலீட்டால் உற்பத்தி செய்யப்படும் சரக்கு உற்பத்தியின் மதிப்பைப் போலவே, அல்லது எந்தவொரு தனிப்பட்ட சரக்கின் மதிப்பையும் போலவே, வருடாந்திர சரக்கு-உற்பத்தியின் மதிப்பும் இரு அடக்கக் கூறுகளாகப் பிரிகிறது: Aஎன்பது முன்னீடு செய்யப்படும் மாறா-மூலதனத்தின் மதிப்பை மாற்றீடு செய்வதாகும்; Bஎன்பது வருவாயாக-கூலியாகவும் இலாபமாகவும்,வாடகையாகவும் குறிக்கப் பெறுவதாகும்.

Bஎன்னும் மதிப்புக்கூறு Aஎன்னும் மதிப்புக்கூறுக்கு எதிராய் நிறுத்தப்படுகிறது; ஏனென்றால் ஏனைய நிலைமைகள் மாறாதிருக்க A ஆனது(1) ஒரு போதும் வருவாயாக வடிவெடுப்பதில்லை, (2) எப்போதுமே மூலதன வடிவத்தில், அதுவும் மாறா மூலதன வடிவத்தில் திரும்பி வந்து பாய்கிறது. மற்றொரு கூறாகிய B என்பதோ தன்னுள் ஓர் எதிர் நிலையைத் தாங்கி உள்ளது. இலாபமும் வாடகையும் கூலியுடன் கொண்டியிருக்கும் பொதுத் தன்மை என்னவென்றால்; மூன்றுமே வருவாய் வடிவங்களாகும். ஆனால் இலாபமும் வாடகையும் உபரி-மதிப்பை அதாவது ஊதியமிலா உழைப்பைக் குறிப்பவையாக இருக்க, கூலியானது ஊதிய உழைப்பைக் குறிப்பதாகும் என்பது இவற்றுக்கிடையிலான அடிப்படை வேறுபாடாகும். உற்பத்திப் பண்டத்தின் மதிப்பில் செலவிடப்பட்ட கூலியை குறிக்கும் பகுதி இவ்வழியில் கூலியை மாற்றீடு செய்கிறது; நமது அனுமானப்படி மறுவுற்பத்தி அதே அளவு வீதத்திலும் அதே நிலைமைகளிலும் தொடர்ந்து நடைபெறுவதால் மீண்டும் கூலியாக மாற்றப்பட்டு, முதலில் மாறும்-மூலதனமாக, மறுவுற்பத்திக்கு புதிதாய் முன்னீடு செய்தாக வேண்டிய மூலதனத்தின் அடக்கக் கூறாகத் திரும்பி வருகிறது. இந்தப் பகுதிக்கு இரட்டைப் பணி உள்ளது. அது முதலில் மூலதன வடிவில் நிலவி, அந்த வகையில் உழைப்புச் சக்திக்காகப் பரிவர்த்தனை செய்து கொள்ளப்படுகிறது. தொழிலாளியின் கையில் அது வருவாயாக மாற்றப்படுகிறது; அவர் தமது உழைப்புச் சக்தியை விற்று இந்த வருவாயைப் பெறுகிறார்; இது வருவாய் என்ற முறையில் வாழ்வுச் சாதனங்களாக மாற்றப்பட்டு நுகரப்படுகிறது. இந்த இரட்டை நிகழ்முறை பணச் சுற்றோட்டத்தின் இடைச் செயல் வாயிலாக வெளிப்படுகிறது. மாறும்-மூலதனம் பணமாக முன்னீடு செய்யப் படுகிறது. இந்தப் பணம்தான் கூலியாகத் தரப்படுகிறது. இது மூலதனம்

என்ற முறையில் அதற்குள்ள முதல் பணியாகும். அது உழைப்புச் சக்திக்குப் பரிவர்த்தனை செய்யப்பட்டு, இந்த உழைப்பு சக்தியின் வெளிப்பாடாக, உழைப்பாக மாற்றப்படுகிறது. முதலாளியைப் பொறுத்தவரை இதுதான் நிகழ்முறை. ஆனால் இரண்டாவதாக தொழிலாளர்கள் தங்களால் உற்பத்தி செய்யப்பட்ட சரக்குகளில் ஒரு பகுதியை இந்தப் பணத்தைக் கொடுத்து வாங்குகிறார்கள்; இந்தச் சரக்குப் பகுதி இந்தப் பணத்தால் அளவிடப்பட்டு, அவர்களால் வருவாயாக நுகரப்படுகிறது. பணச் சுற்றோட்டம் நீக்கப்பட்டு விடுவதாக கற்பனை செய்து கொண்டால், தொழிலாளியின் உற்பத்திப் பண்டத்தில் ஒரு பகுதி கிடைக்கிற மூலதனத்தின் வடிவில் முதலாளியின் கையில் இருக்கிறது. அவர் இந்தப் பகுதியை மூலதனமாக முன்னீடு செய்கிறார், புதிய உழைப்புச் சக்திக்காகத் தொழிலாளிக்கு அதைக் கொடுக்கிறார்; அதேபோது தொழிலாளி நேரடியாகவோ வேறு சரக்குகளுக்காக பரிவர்த்தனை செய்து கொள்வதன் மூலம் சுற்றடியாகவோ அதனை நுகருகிறார். ஆக, உற்பத்திப் பண்டத்தின் மதிப்பில் கூலியாக, தொழிலாளர்களுக்கான வருவாயாக மறுவுற்பத்தியின் போக்கில் மாற்றமடைவதற்கு விதிக்கப்பட்ட பகுதியானது மூலதனமாக, சரியாகச் சொன்னால் மாறும்-மூலதனமாக முதலில் முதலாளியின் கைக்குத்தான் திரும்பி வருகிறது. அது இப்படி திரும்பி வந்தாக வேண்டும் என்பது கூலியுழைப்பு என்ற முறையில் உழைப்பும் மூலதனம் என்ற முறையில் உற்பத்திச் சாதனங்களும், முதலாளித்துவ நிகழ்முறை என்ற முறையில் பொருளுற்பத்தி நிகழ்முறையும் தொடர்ந்து திரும்பத் திரும்ப மறுவுற்பத்தியாவதற்கு இன்றியமையாத் தேவையாகும்.

தேவையற்ற இடர்ப்பாட்டைத் தவிர்க்கும் பொருட்டு, மொத்த உற்பத்தியையும் நிகர உற்பத்தியையும் மொத்த வருமானத்திலிருந்தும் நிகர வருமானத்திலிருந்தும் வேறுபடுத்திக் கொள்ள வேண்டும்.

மொத்த உற்பத்தி அல்லது மொத்த உற்பத்திப் பண்டம் என்பது மறுவுற்பத்தி செய்யப்படும் மொத்த உற்பத்திப் பொருளாகும். ஈடுபடுத்தப்பட்ட போதிலும் நுகரப்படாத நிலை-மூலதனப் பகுதியை விலக்கி விட்டுப் பார்த்தால், மொத்த உற்பத்தி அல்லது மொத்த உற்பத்திப் பண்டத்தின் மதிப்பு உற்பத்திக்காக முன்னீடு செய்யப்பட்டு நுகரப்பட்ட மூலதனத்தின் மதிப்புக்கு, அதாவது மாறா-மூலதனம் + மாறும்-மூலதனம் + உபரி-மதிப்பு என்பதற்கு சமம்; இந்த உபரி-மதிப்பு இலாபமாகவும் வாடகையாகவும் பகுபடுகிறது. அல்லது, தனியொரு மூலதனத்தின் உற்பத்திப் பண்டத்துக்குப் பதில் மொத்தச் சமுதாய

மூலதனத்தின் உற்பத்திப் பண்டத்தைப் பரிசீலிப்போமானால், மொத்த உற்பத்தியானது மாறா-மூலதனம், மாறும்-மூலதனம் ஆகியவற்றின் பொருட்கூறுகள்+உபரி-உற்பத்தியின் பொருட்கூறுகள் என்பதற்குச் சமம்; இந்த உபரி-உற்பத்தியில் இலாபமும் வாடகையும் குறிக்கப் பெறுகின்றன.

மொத்த வருமானம் என்பது உற்பத்தியில் முன்னீடு செய்யப்பட்டு நுகரப்பட்ட மூலதனம் மாற்றீடு செய்திடும் மதிப்புப் பகுதியையும் மொத்த உற்பத்தியில் அம்மதிப்புப் பகுதியால் அளவிடப்படும் பகுதியையும் கழித்தபின் எஞ்சியிருக்கும் மதிப்பு பகுதியும் மொத்த உற்பத்திப் பண்டத்தில் அம்மதிப்புப் பகுதியால் அளவிடப்படும் பகுதியும் ஆகும். ஆக, மொத்த வருமானம் என்பது கூலி (அல்லது உற்பத்திப் பண்டத்தில் மறுபடியும் தொழிலாளியின் வருமான மாவதற்கு விதிக்கப்பட்ட பகுதி) +இலாபம்+வாடகை என்பதற்குச் சமம். மறுபுறம், நிகர வருமானம், இவ்விதம் உபரி- உற்பத்தியும் ஆகும்; ஆகவே இது உண்மையில் மூலதனத்தால் ஈடேற்றம் செய்யப்படுவதும் நிலவுடைமையாளருடன் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டியதுமான உபரி-மதிப்பையும், அதனால் அளவிடப்படும் உபரி-உற்பத்தியையும் குறிப்பதாகும்.

தனிப்பட்ட ஒவ்வொரு சரக்கின் மதிப்பும் தனிப்பட்ட ஒவ்வொரு மூலதனத்தினது மொத்தச் சரக்கு உற்பத்தியின் மதிப்பும் இரு பகுதிகளாய் பிரிக்கப்படுவதாகப் பார்த்தோம்: ஒரு பகுதியானது மாறா-மூலதனத்தை மட்டும் மாற்றீடு செய்வதாகும்; மறுபகுதியானது, அதில் சிறிதளவு மாறும்-மூலதனம் என்ற முறையில் திரும்பி வந்த போதிலும் - அதாவது மூலதனத்தின் வடிவத்தில் திரும்பி வந்த போதிலும் முழுக்க முழுக்க மொத்த வருமானமாக மாற்றமடைவதற்கும் கூலியாகவும், இலாபமாவும், வாடகையாகவும் வடிவெடுப்பதற்கும் விதிக்கப் பட்டதாகும்; கூலியும் இலாபமும் வாடகையும் சேர்ந்துதான் மொத்த வருமானம் ஆகின்றன. மேலும், சமுதாயத்தின் வருடாந்தர மொத்த உற்பத்தியின் மதிப்பும் கூட இதே போல் இரு பகுதிகளாய்ப் பிரிவதாகப் பார்த்தோம். தனியொரு முதலாளியின் உற்பத்திப் பண்டத்துக்கும்- சமுதாயத்தின் உற்பத்திப் பண்டத்துக்கும் இடையிலான ஒரே வேறுபாடு இதுதான்: தனிப்பட்ட முதலாளியின் கண்ணோட்டத்தில் நிகர வருமானம் மொத்த வருமானத்திலிருந்து வேறுபடுகிறது; ஏனென்றால் இந்த மொத்த வருமானத்தில் கூலியும் அடங்கியுள்ளது; ஆனால் நிகர வருமானத்தில் கூலி சேருவதில்லை. சமுதாயம் முழுவதும் வருமானத்தை நோக்குங்கால், நாட்டு வருமானம் என்பது கூலி+

இலாபம்+வாடகை என்பதாக, அதாவது மொத்த வருமானமாக அமைகிறது. ஆனால் இதுவுங்கூட சூக்குமப்படுத்தலே ஆகும்; ஏனென்றால் முதலாளித்துவப் பொருளுற்பத்தியை அடிப்படையாகக் கொண்ட சமுதாயம் முழுவதும் முதலாளித்துவக் கண்ணோட்டத்தில் நோக்கப்படுகிறது. எனவே இலாபமாகவும் வாடகையாகவும் பகுபட்ட வருமானத்தை மட்டுமே நிகர வருமானமாகக் கருதுகிறது.

மறுபுறம், திருவாளர் ஸே போன்றவர்கள் கற்பனையுலகில் சஞ்சரிக்கிறார்கள்; ஒரு நாட்டின் உற்பத்தி அனைத்தும், மொத்த உற்பத்திப் பண்டம் அனைத்தும் நிகர உற்பத்தியாக உருவெடுக்கிறது, அல்லது அதற்கும் நிகர உற்பதத்திக்கும் வேறுபாடு இல்லை என்பதாக அதாவது நாடு முழுவதையும் எடுத்துக் கொண்டால், இந்த வேறுபாடு மறைந்துவிடுகிறது என்பதாக எண்ணிக் கொள்கிறார்கள். முடிவாகப் பார்க்குமிடத்து சரக்குகளின் மதிப்பு முழுவதும் வருமானமாக, அதாவது கூலியாகவும் இலாபமாகவும் வாடகையாகவும் உருவெடுக்கிறது என்பதாக ஆதாம் ஸ்மித்தின் காலத்திலிருந்து அரசியல் பொருளாதாரத்தில் வியாபித்துள்ள அபத்தச் சூத்திரத்தின் தவிர்க்கமுடியாத இறுதி வெளிப்பாடுதான் இந்தக் கற்பனை[54]. ஒவ்வொரு தனிப்பட்ட முதலாளி தொடர்பாகவும், அவரது உற்பத்திப் பண்டத்தில் ஒரு பகுதி (மறுவுற்பத்தியின் விரிவாக்கம் அல்லது மூலதனத் திரட்டலை ஒதுக்கிவிட்டுப் பார்த்தாலும் கூட) திரும்பவும் மூலதனமாக மாற்றப்பட வேண்டும், மாறும்-மூலதனமாக மட்டுமல்லாமல், மாறா-மூலதனமாகவும் மாற்றப்பட வேண்டும்

54. ஆய்வுச் சிந்தனையற்ற ஸே குறித்து ரிக்கார்டோ பின்வருமாறு சொல்வது மிகவும் பொருத்தமானது. 'நிகர உற்பத்தி குறித்தும் மொத்த உற்பத்திக் குறித்தும் திருவாளர் ஸே கூறுவதாவது.- 'உற்பத்தி செய்யப்படும் மதிப்பு முழுவதும் மொத்த உற்பத்தி ஆகும்; இந்த மதிப்பிலிருந்து உற்பத்திச் செலவைக் கழித்த பின் எஞ்சியிருப்பது நிகர உற்பத்தி ஆகும்' (பாகம் II, பக்கம் 491). அப்படியானால், நிகர உற்பத்தி என்று எதுவும் இருக்க முடியாது; ஏனென்றால் திருவாளர் ஸேயின் கருத்துப்படி வாடகையாலும் கூலியாலும் இலாபத்தாலும் ஆனதுதான் உற்பத்திச் செலவு, பக்கம் 508 இல் அவர் சொல்கிறார்: 'ஆக ஓர் உற்பத்திப் பண்டத்தின் மதிப்பு, ஓர் உற்பத்திச் சேவையின் மதிப்பு, உற்பத்திச் செலவின் மதிப்பு இவையனைத்தும் இயல்பான போக்கில் காரியங்கள் நடைபெறுமாறு விடப்படும் போதெல்லாம் ஒரே விதமான மதிப்புகளாகும்'. முழுமையான ஒன்றிலிருந்து முழுமையான ஒன்றை எடுத்து விட்டால், எஞ்சுவது ஒன்றுமில்லை.' (ரிக்கார்டோ, கோட்பாடுகள்1, அத்தியாயம் XXII பக்கம்: 512, குறிப்பு).-சரக்கு-விலை தொடர்பான ஸ்மித்தின் தவறான பகுப்பாய்வை, சரக்கு-விலை வருவாய்களுக்குரிய மதிப்புகளின் கூட்டுத் தொகையாகப் பெயர்ப்பதை ரிக்கார்டோ எந்த இடத்திலும் மறுதலிக்க வில்லை என்பதைப் பிறகு பார்ப்போம். அவர் அது பற்றி அலட்டிக் கொள்வதில்லை; அது சரியானதென்று ஏற்றுக் கொள்ளவும் செய்கிறார். எந்த அளவுக்கு ஏற்றுக் கொள்கிறார் என்றால், அவர் தமது பகுப்பாய்வில் சரக்குகளின் மதிப்பின் மாறாப்பகுதியை 'நீக்கிவிட்டுப்' பார்க்கிறார். மேலும் அவ்வப்போது அதே ஆய்வு முறைக்குள் விழுந்துவிடவும் செய்கிறார்.)

(மாறும் - மூலதனம் மறுபடியும் தொழிலாளர்களுக்கான வருமானமாக, அதாவது ஒரு வருவாய் வடிவமாக மாறுவதற்கு விதிக்கப்பட்டதாகும், ஆனால் மாறா மூலதனத்தை ஒரு போதும் வருவாயாக மாற்ற முடியாது) என்பதைப் புரிந்து கொள்வது எளிதிலும் எளிதே. பொருளுற்பத்தி நிகழ்முறையை சாதாரணமாகக் கண்ணுற்றாலே இது தெளிவாகத் தெரிந்துவிடும். பொருளுற்பத்தி நிகழ்முறையை அதன் முழு உருவில் பரிசீலிக்கும் போதுதான் சிக்கல் ஆரம்பமாகிறது. கூலி, இலாபம், வாடகை என்ற வடிவில் வருவாயாக நுகரப்படும் உற்பத்திப் பண்டப் பகுதி அனைத்தினுடையவும் மதிப்பானது (அது சொந்த முறையில் நுகரப்படுகிறதா திறனுடை முறையில் நுகரப்படுகிறதா என்பது இங்கே சற்றும் கருத்துக்குரியதல்ல) பகுத்தாராயப்படுகையில் கூலி+இலாபம்+ வாடகை என்னும் மதிப்புத் தொகையாக, அதாவது மூன்று வருவாய்களுக்கும் உரிய மொத்த மதிப்பாக அடியோடு மாறிப்போகிறது; ஆனால் உற்பத்திப் பண்டத்தின் இந்தப் பகுதிக்குரிய மதிப்பானது வருவாயில் சேராத பகுதியைப் போலவே, C என்னும் மதிப்புக் கூறினைத் தன்னகத்தே கொண்டுள்ளது; இந்த C ஆனது இந்தப் பகுதியில் அடங்கியுள்ள மாறா-மூலதன மதிப்புக்குச் சமம்; ஆகவே இந்த மதிப்புக்கு வருவாயில் மதிப்பு வரம்பாக முடியாதென்பது எடுத்த எடுப்பில் தெரிகிறது. ஒருபுறம் நடைமுறையில் மறுக்கமுடியாத உண்மையாகவும், மறுபுறம் தத்துவத்தில் மறுக்க முடியாத முரண்பாடாகவும் அமைகிற இந்நிலைமை ஓர் இடர்ப்பாட்டைத் தோற்றுவிக்கிறது. தனியொரு முதலாளியின் கண்ணோட்டத்தில் தான் வருவாயின் வடிவத்தில் நிலவும் மதிப்புப் பகுதியிலிருந்து வேறான இன்னொரு மதிப்புப் பகுதி சரக்கு-மதிப்பில் அடங்கியிருப்பதாகத் தோன்றுகிறது என்று கூறுவது இந்த இடர்ப்பாட்டிலிருந்து தப்புவதற்கு எளிதிலும் எளிதான வழியாகும். ஒருவருக்கு வருவாயாகத் தெரிவது வேறொருவருக்கு மூலதனமாக அமைகிறது என்ற கூற்று இதற்கு மேல் பரிசீலனை செய்வதை அவசியமற்றதாக்கிவிடுகிறது. உற்பத்திப் பண்டம் முழுவதன் மதிப்பும் வருவாய்களின் வடிவில் நுகரமுடியுமானால், பழைய மூலதனத்தை எப்படி மாற்றீடு செய்ய முடியும்? அனைத்து மூலதனங்களின் உற்பத்திப் பண்டங்களுக்குரிய மதிப்புகளின் கூட்டுத் தொகையானது மூன்று வருவாய்களின் மதிப்புத் தொகை+0 என்பதற்குச் சமமாய் இருக்க, தனிப்பட்ட ஒவ்வொரு மூலதனத்தின் உற்பத்திப் பண்டத்துக்குரிய மதிப்பானது மூன்று வருவாய்களின் மதிப்புத் தொகை+மாறா-மூலதனம் C என்பதற்கு எப்படிச் சமமாய் இருக்க முடியும்?-இது தீர்க்க முடியாத புதிராகத் தான்

தெரிகிறது. விலையின் சாமானியக் கூறுகளை இந்தப் பகுப்பாய்வினால் சற்றும் வெளிப்படுத்த முடியவில்லை என்றும், மெய்யான முன்னேற்றம் எதுவுமில்லாமல் முடிவின்றி ஒரு நச்சு வட்டத்தில் சுற்றிச் சுற்றி வருவதோடு அது திருப்தியடைய வேண்டியதுதான் என்றும் அறிவிப்பதன் மூலமாகவே இந்தப் புதிருக்கு விடைகண்டாக வேண்டும். ஆக, மாறா-மூலதனமாகத் தெரிவது கூலியாகவும் இலாபமாகவும் வாடகையாகவும் மாறக்கூடும்; ஆனால் கூலியையும் இலாபத்தையும் வாடகையையும் குறித்திடும் சரக்கு-மதிப்புகளோ கூலியாலும் இலாபத்தாலும் வாடகையாலும் நிர்ணயிக்கப்படுகின்றன; முடிவின்றி இவ்வாறு சொல்லிக் கொண்டே போகலாம்[55].

சரக்கின் மதிப்பு, இறுதியாகப் பார்க்குமிடத்து கூலி + இலாபம் + வாடகை என்று பகுக்கப்படலாம் என்னும் சூத்திரம் அடிப்படையில் தவறானதாகும்; நுகர்வாளர்தான் முடிவில் மொத்த உற்பத்திப் பண்டத்தின் மொத்த மதிப்பை செலுத்தியாக வேண்டும் என்ற கருத்திலும் இந்தத் தவறான சூத்திரம் வெளிப்படுகிறது; அல்லது உற்பத்தியாளர்களுக்கும் நுகர்வாளர்களுக்கும் இடையிலான பணச் சுற்றோட்டம் முடிவில் உற்பத்தியாளர்களுக்கிடையிலான பணச் சுற்றோட்டத்துக்குச் சமம் என்ற (டுக்) கருத்திலும் கூட இதே தவறான சூத்திரம்தான் வெளிப்படுகிறது. இந்தக் கருத்துகளெல்லாம் அவற்றின் அடிப்படைக் கோட்பாட்டைப் போலவே தவறானவை.

தவறானதும் எடுத்த எடுப்பில் அபத்தமானதுமாகிய இந்தப் பகுப்பாய்வுக்கு காரணமாக சிக்கல்கள் சுருக்கமாக பின்வருமாறு: •

---

55. 'ஒவ்வொரு சமுதாயத்திலும் ஒவ்வொரு சரக்கின் விலையும் முடிவில் அந்த மூன்று பகுதிகளில் (அதாவது கூலி, இலாபம், வாடகை) ஏதேனும் ஒன்றாக, அல்லது அவை எல்லாமாகப் பெயர்கிறது... சாகுபடியாளரின் மூலதன இருப்பை மாற்றீடு செய்வதற்கு அல்லது அவரது வேலை செய்யும் கால்நடைகள் மற்றும் ஏனைய வேளாண் கருவிகளின் தேய்மானத்தைச் சரிகட்டுவதற்கு நான்காவதாக ஒரு பகுதி அவசியம் என்ற எண்ணம் ஏற்படலாம். ஆனால் வேலைசெய்யும் குதிரை போன்ற எந்தவொரு வேளாண் கருவியின் விலையும் அதே மூன்று பகுதிகளால் ஆனதென்பதை கருத்தில் கொள்ளவேண்டும்; குதிரையை வளர்ப்பதற்கு பயன்படும் நிலத்திற்கான வாடகை, அதைப் பராமரிப்பதற்கும் வளர்ப்பதற்குமான உழைப்பு, நிலத்துக்கு வாடகையும் உழைப்புக்கு கூலியும் கொடுக்கும் சாகுபடியாளரின் இலாபம் இவைதான் அந்த மூன்று பகுதிகள். ஆகவே தானியத்தின் விலை குதிரையின் விலையை மட்டுமல்லாமல் அதன் பராமரிப்புக்கான செலவையும் தரக் கூடும் என்றாலும், முழு விலையும் உடனடியாகவோ இறுதியாகவோ வாடகை, உழைப்பு (அதாவது கூலி), இலாபம் என்னும் அதே மூன்று பகுதிகளாகத்தான் பெயர்கிறது.' (ஆதாம் ஸ்மித்.)-எப்படி ஆதாம் ஸ்மித்தே கூட இந்த செப்படி வித்தையின் உறுதியின்மையையும் நிறைவின்மையையும் உணர்ந்துகொள்கிறார் என்பதைப் பிற்பாடு தெளிவுபடுத்துவோம். மெய்யான மூலதனமுதலீட்டை எந்த இடத்திலும் ஸ்மித் சுட்டிக்காட்டவில்லை; மூலதன முதலீட்டில்தான் உற்பத்திப் பண்டத்தின் விலை இதற்கு மேல் பகுத்தாராயாமலே முடிவில் இந்த மூன்று பகுதிகளாகவும் பகுபடுகிறது; இதற்கு பதிலாக அவர் நம்மை இங்குமங்குமாய் அலைக்கழிப்பது செப்படிவித்தைதானே தவிர வேறல்ல.)

*1) மாறா-மூலதனத்துக்கும் மாறும்-மூலதனத்துக்குமான அடிப்படை உறவுமுறை புரிந்து கொள்ளப்படுவதில்லை; ஆகவே உபரி-மதிப்பின் இயல்பும், அத்துடன் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் முழு அடிப்படையும் புரிந்து கொள்ளப் படுவதில்லை. மூலதனத்தின் ஒவ்வொரு பகுதியளவான உற்பத்திப் பண்டத்தின், தனிப்பட்ட ஒவ்வொரு சரக்கின் மதிப்பிலும் மாறா-மூலதனத்துக்குச் சமமான ஒருமதிப்புப் பகுதியும், (தொழிலாளிக்குக் கூலியாக மாற்றப்படும்) மாறும்-மூலதனத்துக்குச் சமமான ஒரு மதிப்புப் பகுதியாகவும் (பிற்பாடு இலாபமாகவும் வாடகையாகவும் பிரிக்கப்படும்) உபரி-மதிப்புக்குச் சமமான ஒரு மதிப்புப் பகுதியும் அடங்கியுள்ளன. அப்படியானால் தொழிலாளி தமது கூலியைக் கொண்டும் முதலாளி தமது இலாபத்தைக் கொண்டும் நிலவுடைமையாளர் தமது வாடகையைக் கொண்டும் இந்த கூறுகளில் ஒன்றை மட்டும் அல்லாமல் மூன்றையுமே உள்ளடக்கி இருக்கும் சரக்குகளை வாங்க முடிவது எப்படி? கூலி, இலாபம், வாடகை ஆகியவற்றின் மதிப்புத் தொகை, அதாவது வருவாய்க்கான ஆதாரங்கள் மூன்றும் சேர்ந்து இந்த வருமானங்களைப் பெற்றுக் கொள்வோரின் மொத்த நுகர்வில் சேரும் சரக்குகளை - இந்த மூன்று மதிப்புக் கூறுகளோடு கூடுதலான ஒரு மதிப்புக் கூறினையும், அதாவது மாறா-மூலதனத்தையும் உள்ளடக்கி இருக்கும் சரக்குகளை விலைக்கு வாங்க முடிவது எப்படி? மூன்று என்னும் மதிப்பை விலையாகக் கொடுத்து நான்கு என்னும் மதிப்பை அவர்களால் வாங்க முடிவது எப்படி?*[56]

---

(56) புருதோன் இதைத் தம்மால் புரிந்து கொள்ள இயலவில்லை என்பதைத்தான் பின்வரும் அறியாத்தனச் சூத்திரத்தில் வெளிப்படுத்துகிறார்: தொழிலாளியால் தாம் உற்பத்தி செய்த பண்டத்தை வாங்கிக் கொள்ளமுடியாது, ஏனென்றால் அடக்க-விலையோடு சேர்க்கப்படும் வட்டி அந்த உற்பத்திப் பண்டத்தில் அடங்கியுள்ளது. ஆனால் திருவாளர் யூஜின் போர்கேடு இதை விடச் சிறப்பாகத் தெரிந்து கொள்வதற்கு அவருக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கிறாரே, அது எப்படி? ‘புருதோனின் எதிர்ப்புரை சரியாக இருக்குமானால், அது மூலதனத்தின் இலாபத்தைப் பாதிப்பதோடு தொழில் புரியும் சாத்தியப்பாட்டையே ஒழித்துவிடும். தொழிலாளி ஒவ்வொரு பண்டத்துக்கும் 80 மட்டும் பெற்றுக் கொண்டு 100 செலுத்தும்படி நிர்ப்பந்திக்கப்பட்டால், அவரது கூலி அவர் ஓர் உற்பத்திப் பண்டத்திற்குள் சேர்த்திருக்கும் மதிப்பை வாங்கிக் கொள்வதற்கு மட்டுமே போதுமானதென்றால், தொழிலாளியால் எதையும் வாங்கிக் கொள்ள முடியாது, கூலியால் எதற்கும் விலையாக முடியாது என்று சொல்லிவிடலாம். உண்மையில் எப்போதுமே அடக்க - விலையில் தொழிலாளியின் கூலிக்குமேல் ஏதோ அடங்கியுள்ளது, எப்போதுமே விற்பனை - விலையில் முனைவு - இலாபத்திற்கு மேல் ஏதோ, அடங்கியுள்ளது; கச்சாப் பொருட்களின் விலையை எடுத்துக் காட்டாகக் குறிப்பிடலாம், இந்த விலை பெரும்பாலும் அயல்நாடுகளுக்குச் செலுத்தப்படுகிறது....நாட்டின் மூலதனம் ஓயாமல் வளர்ந்து செல்வது பற்றி புருதோன் மறந்துவிட்டார்; தொழில் முனைவிலானாலும் கைத்தொழிலிலானாலும் உழைப்பவர்கள் அனைவரையும் இந்த வளர்ச்சி அளாவியிருப்பதை அவர் மறந்துவிட்டார். (Revue des deux Mondes,1848, பாகம் 24, பக்கம் 998). சிந்தித்துப் பாராத முதலாளித்துவத் தன்மை அதற்கு

இரண்டாம் பாகம் பகுதி IIIஇல் இது தொடர்பான நமது பகுப்பாய்வை விவரித்துள்ளோம்.

2) உழைப்பானது புதிய மதிப்பைச் சேர்க்கும் போது எப்படி பழைய மதிப்பை புதிதாய் உற்பத்தி செய்யாமல் ஒரு புதிய வடிவத்தில் பாதுகாக்கிறது என்பது புரிந்து கொள்ளப்படுவதில்லை.

3) மறுவுற்பத்தி நிகழ்முறையின் உறவுப் பாங்கு தனியொரு மூலதனத்தின் கோணத்திலிருந்து அல்லாமல் மொத்த மூலதனத்தின் கோணத்திலிருந்து இந்நிகழ்முறை எப்படிக் காணப்படுகிறது என்பது - புரிந்து கொள்ளப்படுவதில்லை. கூலியும் உபரி-மதிப்பும், அதாவது ஓராண்டு காலத்தில் புதிதாய்ச் சேர்க்கப்படும் உழைப்பு அனைத்தினாலும் உற்பத்தி செய்யப்படும் மதிப்பு முழுவதும் எதில் ஈடேற்றம் ஆகிறதோ அந்த உற்பத்திப் பண்டம் அதன் மாறா மதிப்புப் பகுதியை மாற்றீடு செய்வது எப்படி என்ற சிக்கல் புரிந்து கொள்ளப்படுவதில்லை; புதிதாய்ச் சேர்க்கப்படும் உழைப்பளவு முழுவதும் கூலி, உபரி-மதிப்பு ஆகியவற்றில் மட்டும் ஈடேற்றம் பெற்று இரண்டினுடையவும் மதிப்புகளின் கூட்டுத் தொகையில் முழுமையாக குறிக்கப் பெறுகிறது என்றாலும் கூட, உற்பத்தியில் நுகரப்பட்ட மாறா-மூலதனத்தை பொருள் வகையிலும் மதிப்பு வகையிலும் புதிய மூலதனம் மாற்றீடு செய்ய முடிவது எப்படி என்பதும் புரிந்து

மிகப் பொருத்தமான புத்திசாலித்தனத்துடன் எல்லாம் நன்மைக்கே என்று பறை சாற்றுவதை இங்கு பார்க்கிறோம். தொழிலாளி தம்மால் உற்பத்தி செய்யப்படுவதற்கு மேல் கூடுதலான மதிப்பைப் பெறமுடியா விட்டால் வாழவேமுடியாது என்று திருவாளர் போர்கேடு முதலில் நம்புகிறார். ஆனால் மறுதலையாகப் பார்க்குமிடத்து தொழிலாளி தம்மால் உற்பத்தி செய்யப்படும் மதிப்பு முழுவதையும் உண்மையிலேயே பெற்றுக் கொள்வாரானால் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை நிலவ முடியாது. இரண்டாவதாக, புருதோன் குறுகிய கண்ணோட்டத்தில் மட்டுமே தெரிவித்த சிக்கலை அவர் சரியாகவே பொதுமைப்படுத்துகிறார். சரக்குகளின் விலையில் கூலிக்கு மேலாக மட்டுமல்லாமல் இலாபத்திற்கு மேலாகவும் கூட ஒரு மிகையளவு அதாவது மதிப்பின் மாறா மதிப்பு பகுதி அடங்கியுள்ளது. புருதோனின் வாதப்படி, முதலாளியும் கூட தமது இலாபத்தால் சரக்குகளை வாங்கிக் கொள்ள முடியாமற் போகும். போர்கேடு இந்தப் புதிரை எப்படி விடுவிக்கிறார்? மூலதனத்தின் வளர்ச்சி என்ற அர்த்தமற்ற சொற்றொடரைக் கொண்டு விடுவிக்கிறார். இவ்வாறு, 100 மூலதனம் தொடர்பாக அரசியல் பொருளாதார அறிஞருக்கு சாத்தியமற்றதாய் இருக்கும் சரக்கு-விலைகளின் பகுப்பாய்வு 10,000 மூலதனத்தைப் பொறுத்தவரை தேவையற்றதாகிப் போவதும் கூட மூலதனத்தின் ஓயாத வளர்ச்சிக்கான சான்றுகளில் ஒன்றாம். இது எப்படியிருக்கிறது தெரியுமா? நிலத்தில் அடங்கியிருப்பதைவிட நிலத்தின் விளைபொருளில் அதிகக் கரிமம் அடங்கியிருப்பது எப்படி? என்ற கேள்விக்கு, விவசாய உற்பத்தியில் ஓயாமல் ஏற்படும் வளர்ச்சிதான் இதற்குக் காரணம் என்று ஒரு வேதியியல் அறிஞர் பதிலளித்தால் எப்படியோ அப்படித்தான், முதலாளித்துவ உலகத்தைப் போல் மிகச் சிறந்ததாய் வேறெந்த உலகமும் இருக்கமுடியாது என்பதைக் கண்டு சொல்ல வேண்டும் என்னும் நல்லெண்ண விருப்பம் கொச்சைப் பொருளாதார இயலில் உண்மையின்பால் நேசத்தையும் விஞ்ஞான ஆராய்ச்சியின் பால் நாட்டத்தையும் தேவையற்றவையாக்கிவிடுகிறது.)

கொள்ளப்படுவதில்லை. மறுவுற்பத்தியையும் அதன்பல்வேறு அடக்கக் கூறுகளின் உறவு முறையையும் பொருள் வகையிலும் அதேபோல், மதிப்பு வகையிலும் பகுத்தாராயும் போது முக்கியச் சிக்கல் இங்குதான் உள்ளது.

4) இந்த சிக்கல்கள் போதாதென்று இன்னொரு சிக்கலும் எழுகிறது; உபரி-மதிப்பில் பல்வேறு அடக்கக் கூறுகளும் ஒன்றையொன்று சாராத வருவாய்களின் வடிவில் காணப்பட்டவுடனே இந்தச் சிக்கல் இன்னும் கூட அதிகரித்துவிடுகிறது. வருவாய், மூலதனம் என்ற திட்டவட்டமான வரையறைகள், தமக்குள் ஒன்றுக்கொன்று இடம் மாறிப் போவதில்தான் இந்தச் சிக்கல் அடங்கியுள்ளது; இதனால் இவை தனியொரு முதலாளியின் கண்ணோட்டத்தில் வெறும் ஒப்பளவு நிர்ணயிப்புகளாகவே தோன்றுகின்றன; பொருளுற்பத்தி நிகழ்முறை அனைத்தும் அதன் முழுவுருவில் நோக்கப்படும் போது இவை மறைந்துவிடுவதுபோல் தெரிகிறது. எடுத்துக்காட்டாக, மாறா-மூலதனத்தை உற்பத்தி செய்யும் துறைI ஐச் சேர்ந்த தொழிலாளர்கள், முதலாளிகள் ஆகியோர்களது வருவாய் நுகர்வுப் பண்டங்களை உற்பத்தி செய்யும் துறை IIஐச் சேர்ந்த முதலாளிகளின் மாறா-மூலதனத்தை மதிப்பு வகையிலும் பொருள் வகையிலும் மாற்றீடு செய்கிறது. ஆகவே ஒருவருக்கு வருவாயாக இருப்பது வேறொருவருக்கு மூலதனமாக இருக்கிறது என்று சொல்லி இந்தச் சிக்கலிலிருந்து தப்பி விடத்தோன்றும்; இதனால் இந்த வரையறைகளுக்கும் சரக்கு-மதிப்பின் அடக்கக் கூறுகளுக்குரிய உள்ளபடியாக தனித்தன்மைகளுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்றாகிவிடும். மேலும், முடிவில் வருவாய்ச் செலவீட்டின் பொருட்கூறுகளாக அமைவதற்கு விதிக்கப்பட்ட சரக்குகள் ஓராண்டு காலத்தில் பல்வேறு கட்டங்களைக் கடந்து செல்கின்றன; கம்பளி நூலையும் துணியையும் எடுத்துக் காட்டாகக் குறிப்பிடலாம். அவை ஒரு கட்டத்தில் மாறா-மூலதனத்தின் ஒரு பகுதியாக அமைகின்றன, மறுகட்டத்தில் சொந்த நுகர்வுக்கு பயன்பட்டு இவ்விதம் முழுக்க முழுக்க வருவாயில் சேர்ந்துவிடுகின்றன. ஆகவே மாறா-மூலதனம் என்பது சரக்கு-மதிப்பின் புறத் தோற்றக்கூறுகளில் ஒன்றுதான் என்றும், ஒட்டு மொத்த உறவுப் பாங்கில் அது மறைந்து போகிறது என்றும் ஆதாம் ஸ்மித்தைப் போல் கற்பனை செய்து கொள்வது சாத்தியமே. மேலும், மாறும்-மூலதனம் வருவாய்க்குப் பரிவர்த்தனை ஆவதும் நடைபெறுகிறது. தொழிலாளி சரக்குகளில் தமது வருவாயாக அமையும் பகுதியைத் தமது கூலியைக்

கொண்டு வாங்குகிறார். இப்படிச் செய்வதன் மூலம் அவர் மாறும்-மூலதனத்தின் பண வடிவத்தை முதலாளிக்குத் திருப்பிக் கொடுக்கிறார். முடிவில், மாறா = மூலதனமாக அமையும் உற்பத்திப் பண்டங்களில் ஒரு பகுதி பண்ட வடிவில் மாற்றீடு செய்யப்படுகிறது; அதாவது மாறா-மூலதனத்தின் உற்பத்தியாளர்களிடையிலான பரிவர்த்தனையின் மூலமே மாற்றீடு செய்யப்படுகிறது; இந்நிகழ்முறைக்கும் நுகர்வாளர்களுக்கும் எவ்விதத் தொடர்புமில்லை. இதைக் காணத் தவறும் போது, நுகர்வாளர்களின் வருவாய் மாறா-மதிப்புப் பகுதி உள்ளிட்ட உற்பத்திப் பண்டமனைத்தையும் மாற்றீடு செய்வது போன்ற தோற்றம் ஏற்படுகிறது.

5) மதிப்புகள் உற்பத்தி-விலைகளாக மாற்றமடைவதால் ஏற்படும் குழப்பம் ஒருபுறமிருக்க, பல்வேறு உற்பத்தி அடிக் கூறுகளுக்கும் இணையான பல்வேறு வருவாய் வடிவங்களாக ஒன்றையொன்று சார்ந்திராத தனி வடிவங்களாக, அதாவது இலாபமாகவும் வாடகையாகவும் உபரி-மதிப்பு மாற்றமடைவதால் இன்னொரு குழப்பம் ஏற்படுகிறது. சரக்குகளின் மதிப்புகளே அடிப்படையாகும் என்பது மறந்து போகிறது. இந்தச் சரக்கு மதிப்புகள் தனித்தனி அடக்கக் கூறுகளாகப் பிரிவது, இந்த மதிப்புக் கூறுகள் மேலும் வளர்ந்து வருவாய் வடிவங்களாவது, வெவ்வேறு உற்பத்திக் காரணிகளின் பல்வேறு உடைமையாளர்கள் இந்தத் தனித்தனி மதிப்புக் கூறுகளோடு கொண்டுள்ள உறவுகளாக அவை உருமாறுவது, குறிப்பிட்ட கருத்தினங்களின்படியும் உரிமைப் பெயர்களின்படியும் இந்த உடைமையாளர்களிடையே அவை விநியோகமாவது-இவற்றால் எல்லாம் மதிப்பு நிர்ணயிப்பும் அதன் விதியும் எவ்வித மாற்றத்துக்கும் உள்ளாவதில்லை என்பதும் மறந்து போகிறது. இதே போலத்தான், இலாபத்தின் சமனமாக்கம் அதாவது பல்வேறு மூலதனங்களிடையே மொத்த உபரி-மதிப்பு விநியோகமாவதும் இந்தச் சமனமாக்கத்தின் வழியில் நிலச் சொத்து பகுதியளவுக்கு (அறுதி நிலை-வாடகையின் உருவில்) தடைகள் ஏற்படுத்துவதும் சரக்குகளுக்கான ஆளும் சராசரி விலைகளை அவற்றின் தனிப்பட்ட மதிப்புகளிலிருந்து விலகி வேறுபடச் செய்கின்றது என்ற உண்மையும் மதிப்பு விதியைப் பாதிக்காது இதுவும் கூட பல்வேறு சரக்கு-விலைகளோடு உபரி-மதிப்புக் கூட்டிச் சேர்க்கப்படுவதை மட்டும் பாதிக்கிறதே தவிர, உபரி-மதிப்பையே இல்லாமல் செய்துவிடுவதும் இல்லை; சரக்குகளின் மொத்த மதிப்பு இந்த பல்வேறு விலைக் கூறுகளுக்கும் ஆதாரமாகத் திகழ்வதை ஒழித்து விடுவதும் இல்லை.

இந்த மாறாட்டத்தை அடுத்த அத்தியாயத்தில் பரிசீலிப்போம்; இதற்கும் மதிப்பு அதன் அடக்கக் கூறுகளிலிருந்தே எழுகிறது என்ற பொய்த் தோற்றத்துக்கும் தவிர்க்க முடியாத தொடர்பு உள்ளது. அதாவது சரக்கின் பல்வேறு மதிப்புக் கூறுகள் வருவாய்கள் என்ற முறையில் சுயேச்சையான வடிவங்களைப் பெறுகின்றன; இவ்வாறு அவை அவற்றுக்கு ஆதாரமான சரக்கின் மதிப்போடு உறவுபடுத்தப் படுவதற்குப் பதில் அவற்றுக்கு ஆதாரங்கள் என்ற முறையில் உற்பத்தியின் குறிப்பிட்ட பொருட் கூறுகளோடு உறவுபடுத்தப் படுகின்றன. உள்ளபடியே அவை மதிப்புக் கூறுகள் என்ற முறையில் அல்லாமல் வருவாய்களாகவே, தொழிலாளி, முதலாளி, நிலவுடைமையாளர் ஆகிய இந்தக் குறிப்பிட்ட வகை உற்பத்திச் செயலிகளின் பங்குக்குப் போய்ச் சேரும் மதிப்புக் கூறுகளாகவே உற்பத்தி அடிக் கூறுகளோடு உறவுபடுத்தப்படுகின்றன. ஆனால் இந்த மதிப்புக் கூறுகள் சரக்கு-மதிப்பின் பிரிவினையிலிருந்துஎழுவதற்குப் பதில் ஒன்று சேர்வதன் மூலமாகவே சரக்கு-மதிப்பாக அமைகின்றன என்று கற்பனை செய்து கொள்வது சாத்தியமே. சரக்குகளின் மதிப்பானது கூலி, இலாபம், வாடகை ஆகியவற்றின் மதிப்புத் தொகையிலிருந்து எழுவதும், கூலி, இலாபம், வாடகை ஆகியவற்றின் மதிப்பு சரக்குகளின் மதிப்பால் நிர்ணயிக்கப்படுவதும் இவ்வாறே மாறி மாறி நிகழ்வதுமான முழுமையாக நீச்சு வட்டத்துக்கு இது வழி செய்கிறது[57].

---

(57) 'மூலப் பொருட்களிலும் கச்சாப் பொருட்களிலும் பூர்த்தியான பண்டங்களிலும் முதலீடாகிற சுழல்-மூலதனமே கூட பண்டங்களால் ஆனதுதான்; இதன் அவசிய விலை அதே கூறுகளால் அமைகிறது; அதாவது ஒரு நாட்டிலுள்ள மொத்தப் பண்டங்களையும் நோக்குகையில் அவசிய விலையின் கூறுகளில் ஒன்றாக சுழல் - மூலதனத்தின் இந்தப் பகுதியைக் கணக்கிடுவது அனாவசியமான இரட்டிப்பாகவே அமைந்துவிடும்' (*ஸ்டோர்ஹ்*, Cours, d'économie politique, II. பக்கம். 140). — மாறா-மூலதனத்தின் மதிப்பைத்தான் ஸ்டோர்ஹ் சுழல்-மூலதனத்தின் இந்தக் கூறுகள் என்கிறார் (நிலை-மூலதனம் என்பது வேறொரு வடிவத்தில் சுழல்வதே ஆகும்). 'முனைவு-இலாபத்தின் கூலியாக அமைந்திடும் பகுதியைப் போலவே தொழிலாளியின் கூலியும் - அதனை வாழ்வுச் சாதனங்களில் ஒரு பகுதியாகக் கருதுவோமானால் - நடப்பு விலையில் வாங்கப்படும் பண்டங்களாக அமைகிறது; அதேபோல் இதுவும் கூலி, மூலதனத்தின் மீதான வட்டி, நில-வாடகை, முனைவு இலாபம் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்... அவசிய விலையை அதன் மிக எளிய கூறுகளாக பிரிக்க முடியாது என்பதை நிரூபிக்கவே இந்தக் கருத்து பயன்படுகிறது.' (மேலது, குறிப்பு)— Considérations sur la nature du revenu national (பாரிஸ், 1824) என்ற நூலில் ஸ்டோர்ஹ் ஆனவர் ஸேயுடன் வாதம் புரிகையில் சரக்கு-மதிப்பின் தவறான பகுப்பாய்வு - சரக்கு-மதிப்பை வருவாய்களாக மட்டும் பகுபடச் செய்யும் போது - எத்தகைய அபத்தத்துக்கு வழி கோலுகிறது என்பதை உள்ளபடியே உணர்ந்து கொள்கிறார். தனியொரு முதலாளியின் கோணத்திலிருந்து அல்லாமல் ஒருநாட்டின் கோணத்திலிருந்து பார்க்கும் போது இந்தப் பகுப்பாய்வின் முடிவுகள் முட்டாள்தனமானவை என்பதை சரியாகவே சுட்டிக் காட்டு கிறார். ஆனால் அவரே கூட அவசிய-விலை தொடர்பான பகுப்பாய்வில் தமது Cours நூலில் முன் வைத்த

மறுவுற்பத்தியின் இயல்பான நிலையை கருத்தில் கொண்டால், புதிதாய்ச் சேர்க்கப்படும் உழைப்பில் ஒரு பகுதி மட்டுமே மாறா-மூலதனத்தின் உற்பத்திக்கும், இவ்விதம் அதன் மாற்றீட்டுக்கும் பயன்படுகிறது; நுகர்வுப் பண்டங்களை, வருவாயின் பொருட்கூறுகளை உற்பத்திச் செய்வதில் பயன்படுத்தித் தீர்க்கப்படும் மாறா - மூலதனத்தை மாற்றீடு செய்யும் பகுதிதான் அது. இதற்கீடாக அமைவது என்னவென்றால், துறை IIஇன் இந்த மாறாப் பகுதிக்குக் கூடுதல் உழைப்பேதும் செலவாவதில்லை என்பதே. ஆனால் புதிதாய்ச் சேர்க்கப்படும் உழைப்பின்றி உருவாக முடியாததென்றாலும் அந்த உழைப்பின் உற்பத்திப் பொருளாக இல்லாத மாறா-மூலதனம் (மறுவுற்பத்தி நிகழ்முறை முழுவதையும் எடுத்துக் கொள்கிறோம், மேற்கூறியI,II துறைகளின் சமனமாதலும் இதில் அடங்கும்), மறுவுற்பத்தி நிகழ்முறையின் போது விபத்துகளுக்கும் ஆபத்துக்களுக்கும் பொருள்வகையில், உள்ளாகிறது; இவை அதனை சிதைத்து விடவும் கூடும். (மேலும், மதிப்பின் கோணத்திலிருந்து பார்த்தாலும் கூட, இந்த மாறா-மூலதனம் உழைப்பின் உற்பத்தித் திறனில் ஏற்படும் மாற்றத்தினால் மதிப்பிறக்கம் அடையலாம்). ஆகவே, இலாபத்திலும், இவ்விதம் உபரி-மதிப்பிலும் உபரி உற்பத்தியிலும் கூட ஒரு பகுதி, (மதிப்பைப் பொறுத்தவரை) புதிதாய்ச் சேர்க்கப்படும் உழைப்பை மட்டும் குறிக்கிற பகுதி ஒரு காப்பீட்டு நிதியமாகப் பயன்படுகிறது. இந்தக் காப்பீட்டு நிதியம் காப்பீட்டு நிறுமங்களால் ஒரு தனித் தொழிலாக மேலாண்மை செய்யப்படுகிறதா, இல்லையா என்பது கருத்துக்குரியதன்று. வருவாயில் இந்த ஒரு பகுதிதான்

---

கருத்திலிருந்து, அதாவது அவசிய விலையை ஒரு பொய்யான வரம்பிலா முன்னீடாகப் பகுக்காமல் அதன் மெய்க் கூறுகளாகப் பகுப்பது சாத்தியமில்லை என்ற கருத்திலிருந்து ஓர் அடியும் முன் செல்லவில்லை. 'வருடாந்தர உற்பத்திப் பண்டத்தின் மதிப்பு ஒருபுறம் மூலதனமாகவும் மறுபுறம் இலாபமாகவும் பிரிக்கப்படுகிறது என்பதும், வருடாந்திர உற்பத்திப் பண்டத்தின் இந்த மதிப்புப் பகுதிகள் ஒவ்வொன்றும் நாட்டுக்கு அதன் மூலதனத்தைப் பாதுகாப்பதற்கும் அதன் நுகர்வு நிதியத்தைப் புதுப்பித்துக் கொள்வதற்கும் தேவைப்படும் உற்பத்திப் பண்டங்களை வாங்குவதற்கு முறையாகப் பயன்படுகிறது என்பதும் தெளிவாய்த் தெரிகின்றன. (பக்கம் 134, 135)...அது (சொந்தத்துக்கு உழைக்கும் விவசாயக் குடும்பம்) தன் தானியக் களஞ்சியங்களிலோ இலாயங்களிலோ வசிக்கவும் விதைத் தானியத்தையும் கால்நடை தீவனத்தையும் உண்ணவும், இழுவைக் கால்நடைகளைக் கொன்று உடையுடுத்திக் கொள்ளவும் விவசாயக் கரவிகளைக் கொண்டே தேவைகளை நிறைவு செய்து கொள்ளவும் முடியுமா திருவாளர் ஸேயினது ஆய்வுரைப்படி, இந்தக் கேள்விகளுக்கெல்லாம் ஆம் என்றுதான் பதில் சொல்லியாக வேண்டும் (பக்கம் 135, 136)....ஒரு நாட்டின் வருவாய் அதன், மொத்த உற்பத்திக்கு சமமாய் இருக்குமானால், அதாவது அந்த உற்பத்தியிலிருந்து மூலதனம் எதையும் கழிக்க வேண்டி இருக்காது என்றால், ஒரு நாடு அதன் வருங்கால வருமானத்துக்கு இம்மியளவு கூட பாதிப்பு இல்லாமல் அதன் வருடாந்திர உற்பத்திப் பண்டத்தின் மதிப்பனைத்தையும் உற்பத்தி திறனற்ற முறையில் செலவிடலாம் என்பதையும் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும் (பக்கம் 147), நாட்டின் மூலதனமாக அமையும் உற்பத்திப் பண்டங்கள் நுகர்வுக்குரியவையல்ல.' (பக்கம் 150).)

அப்படியே நுகரப்பட்டு விடுவதும் இல்லை, மூலதனத் திரட்டலுக்கான நிதியமாக பயன்படத்தான் வேண்டும் என்ற கட்டாயமும் இல்லை. அது உள்ளபடியே அவ்வாறு பயன்படுகிறதா அல்லது மறுவுற்பத்தியில் ஏற்படும் குறையை மட்டும் சரிக்கட்டுகிறதா என்பது தற்செயல் வாய்ப்பைப் பொறுத்தது. மேலும் மூலதனத் திரட்டலுக்கும், மறுவுற்பத்தி நிகழ் முறையின் விரிவாக்கத்துக்கும் பயன்படும் பகுதியை ஒதுக்கிவிட்டுப் பார்த்தால் உபரி-மதிப்பிலும், உபரி-உற்பத்தியிலும் இவ்விதம் உபரி-உழைப்பிலும் இந்த ஒரு பகுதி மட்டுமே முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை ஒழிந்த பிறகும் கூட தொடர்ந்து நிலவி வரும். இந்நிலைமையில் நேரடி உற்பத்தியாளர்களால் முறையாக நுகரப்படும் பகுதி அதன் இப்போதைய குறைந்தபட்ச அளவோடு நின்றுவிடாது என்பது மெய்தான். பொருளுற்பத்தியில் பங்கு பெற முடிவதற்கு உரிய வயதை அடையாமலோ அல்லது உரிய வயதைக் கடந்தோ இருப்பவர்களுக்கான உபரி-உழைப்பைத் தவிர, உழைக்காதவர்களை பேணுவதற்கான உழைப்பனைத்தும் இல்லாமற் போய்விடும். சமுதாயத்தின் தொடக்க நிலைகளை எண்ணிப் பார்ப்போமானால், உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்திச் சாதனம் எதையும் காணமுடியவில்லை; அதாவது மாறா-மூலதனத்தின் மதிப்பேதும் உற்பத்திப் பண்டத்தில் சேருவதில்லை; மாறா அளவு வீதத்தில் நடைபெறும் மறுவுற்பத்தியில் எவ்வித மாறா-மூலதனத்தையும் உற்பத்திப் பண்டத்திலிருந்து பண்ட வடிவிலும் அதன் மதிப்புக்கு ஏற்ற அளவிலும் மாற்றீடு செய்ய வேண்டி இருக்காது. ஆனால் அங்கு இயற்கையே நேரடியாக வாழ்வுச் சாதனங்களை வழங்கிவிடுகிறது. அவற்றை முதலில் உற்பத்தி செய்தாக வேண்டிய தேவையில்லை. இவ்வாறு இயற்கையானது ஒரு சில தேவைகளை மட்டுமே நிறைவு செய்து கொள்ள வேண்டியவராய் இருக்கும் காட்டுவாசிக்கு நேரமும் கிடைக்கச்செய்கிறது; இந்த நேரத்தில் அவர் உற்பத்திச் சாதனங்களைப் பயன்படுத்தி புதிய பொருளுற்பத்தியில் ஈடுபடுவதற்கு இல்லை; ஏனென்றால் அப்போது உற்பத்திச் சாதனங்கள் என்று எதுவும் கிடையாது; இயற்கையிலேயே இருந்து வரும் உற்பத்திச் சாதனங்களை தனதாக்கிக் கொள்வதற்குத் தேவைப்படும் உழைப்புடன் கூடவே, இயற்கையின் ஏனைய விளைபொருட்களை வில், கற்கத்தி, படகு போன்ற உற்பத்திச் சாதனங்களாக மாற்றிக் கொள்வதற்கும் அவர் இந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொள்கிறார். பொருட்கூறு என்ற கோணத்திலிருந்து மட்டும் பார்த்தால், காட்டுவாசிகள் இடையிலான

இந்த நிகழ்முறையானது உபரி-உழைப்பு மறுபடியும் புதிய மூலதனமாக மாற்றம்டைவதை ஒத்திருக்கிறது. மூலதனத்திரட்டல் நிகழ்முறையில், மிகையளவான உழைப்பிலிருந்து பெறப்படும் இத்தகைய உற்பத்திப் பொருட்கள் மூலதனமாக மாற்றமடைவது ஓயாமல் நிகழ்கிறது. புதிய மூலதனம் அனைத்தும் இலாபத்திலிருந்தோ வாடகையிலிருந்தோ ஏனைய வருவாய் வடிவங்களிலிருந்தோ, அதாவது உபரி-உழைப்பிலிருந்து எழுகிறது என்ற நிலைமையானது சரக்குகளின் மதிப்பனைத்தும் ஏதேனும் ஒரு வருவாயிலிருந்து எழுகிறது என்ற தவறான கருத்துக்கு வழி செய்கிறது. இலாபம் இப்படி மறுபடியும் மூலதனமாக மாற்றமடைவதை இன்னும் உன்னிப்பாக ஆராய்ந்து பார்த்தால் நேர்மாறாக நடைபெறுவதைக் காணலாம்; அதாவது கூடுதல் உழைப்பானது - எப்போதுமே வருவாயாக வடிவெடுப்பது-வருவாயாக நுகரப்படாத வரை புதிய கூடுதல் மூலதனத்தைப் படைப்பதற்குப் பயன்படுகிறதே தவிர பழைய மூலதன மதிப்பின் பராமரிப்புக்கோ மறுவுற்பத்திக்கோ பயன்படுவதில்லை என்பதைக் காணலாம்.

சிக்கல் முழுவதற்கும் அடிப்படையாக இருப்பது இதுதான்; புதிதாய்ச் சேர்க்கப்படும் உழைப்பினால் படைக்கப்படும் மதிப்பு கூலியாகப் பெயர்க்கப்படாத அளவில், அவ்வுழைப்பு முழுவதும் இலாபமாக-இங்கு பொதுவான உபரி-மதிப்பின் வடிவமாகக் கொள்ளப்படும் இலாபமாக-அதாவது முதலாளிக்கு எவ்விதச் செலவும் வைக்காத ஒரு மதிப்பாக காட்சியளிக்கிறது; ஆகவே முன்னீடு செய்யப்பட்ட எதையும், எவ்வித மூலதனத்தையும் இம்மதிப்பு அவருக்கு மாற்றீடு செய்து கொடுக்கத் தேவையில்லை. இவ்வாறு இந்த மதிப்பு சுருங்கச் சொல்லின், தனியொரு முதலாளியைப் பொறுத்தவரை அவருக்கு கிடைக்கக் கூடிய கூடுதல் செல்வத்தின் வடிவத்தில், அவரது வருவாயின் வடிவத்தில் நிலவுகிறது. ஆனால் புதிதாய்ப் படைக்கப்படும் இந்த மதிப்பை சொந்த முறையில் நுகர்வதைப் போலவே, உற்பத்தித் திறனுள்ள முறையிலும் நுகரலாம், மூலதன மாகவும் நுகரலாம், வருவாயாகவும் நுகரலாம். இதில் ஒரு பகுதி அதன் இயற்கை வடிவத்தின் காரணத்தால் உற்பத்தித் திறனுள்ள முறையில் தான் நுகரப்பட்டாக வேண்டும். ஆகவே ஆண்டுதோறும் சேர்க்கப்படும் உழைப்பு மூலதனத்தையும் படைக்கிறது, வருவாயையும் படைக்கிறது; மூலதனத் திரட்டல் நிகழ்முறையில் இது தெளிவாக வெளிப்படுகிறது. ஆனால் உழைப்புச் சக்தியில் புதிய மூலதனப் படைப்புக்கு பயன்படும் பகுதி (இவ்விதம் ஒரு காட்டுவாசி வாழ்வுச் சாதனங்களை

ஈட்டுவதற்காக அல்லாமல் அவற்றை ஈட்டுவதற்கான கருவிகளை உருவாக்குவதற்காக பயன்படுத்திக் கொள்ளும் பகுதியோடு ஒப்பிடத்தக்கதாகிய இது) உபரி-உழைப்பின் உற்பத்தியனைத்தும் முதலில் இலாபமாகக் காட்சியளிப்பதால் கண்ணுக்குத் தெரியாததாகிறது. இலாபம் என்ற இந்தப் பெயருக்கும் இந்த உபரி-உற்பத்திக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லையென்றாலும் முதலாளிக்கும் அவர்அடைகிற உபரி-மதிப்புக்குமான தனிப்பட்ட உறவை மட்டும் இப்பெயர் குறித்திடுகிறது. உண்மையில், தொழிலாளியால் படைக்கப்படும் உபரி-மதிப்பு வருவாயாகவும் மூலதனமாகவும் பிரிக்கப்படுகிறது. அதாவது நுகர்வுப் பண்டங்களாகவும் கூடுதல் உற்பத்திச் சாதனங்களாகவும் பிரிக்கப் படுகிறது. ஆனால் முந்தைய ஆண்டிலிருந்து வரப்பெறும் பழைய மாறா-மூலதனம் (சேதமுற்ற பகுதியை, இவ்விதம் அந்த அளவுக்கு அழிந்துபோன பகுதியை மறுவுற்பத்தி செய்ய வேண்டியதில்லை, மறுவுற்பத்தி நிகழ்முறையிலான இத்தகைய இடையூறுகள் காப்பீட்டுக்கு உட்பட்டவை என்னுமளவில் அந்த பகுதியை கருதாமல் ஒதுக்கி விடுகிறோம்) புதிதாய்ச் சேர்க்கப்படும் உழைப்பால் மதிப்பு வகையில் மறுவுற்பத்தி செய்யப்படுவதில்லை.

மேலும், புதிதாய்ச் சேர்க்கப்படும் உழைப்பில் ஒரு பகுதி நுகரப்பட்ட மாறா-மூலதனத்தின் மறுவுற்பத்தியிலும் மாற்றீட்டிலும் ஓயாமல் கிரகிக்கப்படுவதைப் பார்க்கிறோம்; ஆனால் புதிதாய்ச் சேர்க்கப்படும் இந்த உழைப்பு முழுக்க முழுக்க வருவாயாகவே, கூலியாகவும் இலாபமாகவும் வாடகையாகவுமே பெயர்கிறது. இதனால் பின்வரும் இருவிவரங்கள் அலட்சியம் செய்யப்படுகின்றன: (1) இந்த உழைப்பின் உற்பத்திப் பண்டத்தில் ஒரு மதிப்புப்பகுதி முன்னதாக நிலவியதும் நுகரப்பட்டதுமான மாறா-மூலதனமே தவிர இந்தப் புதியக் கூடுதல் உழைப்பின் உற்பத்திப் பண்டம் அல்லவே அல்ல; ஆகவே உற்பத்திப் பண்டத்தில் இந்த மதிப்புக் கூறு இடம்பெறும் பகுதியும் வருவாயாக மாற்றப்படுவதில்லை; அது இந்த மாறா-மூலதனத்தின் உற்பத்திச் சாதனங்களை பண்டவடிவில் மாற்றீடு செய்வதே ஆகும்; (2) புதிதாய்ச் சேர்க்கப்படும் இந்த உழைப்பை உள்ளபடியே குறித்திடும் மதிப்புப் பகுதி பண்ட வடிவில் வருவாயாக நுகரப்படுவதில்லை; அது வேறொரு துறையில் மாறா-மூலதனத்தை மாற்றீடு செய்கிறது; அங்கு அது வருவாயாக நுகரப்படக்கூடிய ஓர் இயற்கைவடிவத்துக்கு மாற்றப்படுகிறது. ஆனால் இதுவும் கூட முழுக்க

முழுக்க புதிதாய்ச் சேர்க்கப்படும் உழைப்பால் உற்பத்தி செய்யப் பட்டதல்ல.

மறுவுற்பத்தி என்பது மாறாமல் ஒரே அளவு வீதத்தில் நடைபெறுவதாய் உள்ளவரை, நுகரப்பட்ட ஒவ்வொரு மாறா-மூலதனக் கூறும் அதே வகையைச் சேர்ந்த வேறு புதிய கூறினால் பண்ட வடிவில் மாற்றீடு செய்யப்பட்டாக வேண்டும்; அளவிலும் வடிவத்திலும் இல்லையென்றாலும் எப்படியும் பயன்திறனிலாவது இவ்விதம் மாற்றீடு செய்யப்பட்டாக வேண்டும். உழைப்பின் உற்பத்தித் திறன் மாறாதிருந்தால் இந்தப் பண்ட வடிவ மாற்றீடு மாறா-மூலதனம் அதன் பழைய வடிவில் பெற்றிருந்த அதே மதிப்பை மாற்றீடு செய்வதைக் குறிப்பதாகும். ஆனால் உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரிக்குமானால், அதாவது அதே பொருட்கூறுகளை இன்னுங்குறைந்த உழைப்பைக் கொண்டு மறுவுற்பத்தி செய்யக் கூடுமானால், உற்பத்திப் பண்டத்தின் மதிப்பில் இன்னுஞ்சிறிய பகுதியால் மாறாப் பகுதியை பண்ட வடிவில் முழுமையாக மாற்றீடு செய்ய முடியும். எஞ்சியிருக்கும் மிகையளவை புதிய கூடுதல் மூலதனமாக அமையும்படி பயன்படுத்திக் கொள்ளலாம், அல்லது உற்பத்திப் பண்டத்தில் இன்னும் பெரிய பகுதியை நுகர்வுப் பண்டங்களாக உருப்பெறச் செய்யலாம், அதாவது உபரி-உழைப்பைக் குறைத்திடலாம். மறுபுறம், உழைப்பின் உற்பத்தித் திறன் குறையுமானால், உற்பத்திப் பண்டத்தில் இன்னும் பெரிய பகுதியை பழைய மூலதனத்தின் மாற்றீட்டுக்குப் பயன்படுத்தியாக வேண்டும். இதனால் உபரி-உற்பத்தி குறைந்து போகிறது.

வரலாற்று வழியில் நிர்ணயமான பொருளாதார வடிவத்தை ஒதுக்கி வைத்துவிட்டு, அதனைப் புதிய உற்பத்திச் சாதனங்களின் உருவாக்கமாக மட்டும் கருதுவோமானால், இலாபத்தை அல்லது உபரி-மதிப்பின் எந்தவொரு வடிவத்தையும் மறுபடியும் மூலதனமாக மாற்றுவது எதைக் காட்டுகிறது? தொழிலாளி தமக்கு வேண்டிய நேரடி வாழ்வுச் சாதனங்களை ஈட்டுவதற்காக செலவிடும் உழைப்புக்கு மேலதிகமாய் உற்பத்திச் சாதனங்களை உற்பத்திச் செய்வதற்காகவும் உழைப்பைச் செலவிட இடமளிக்கிற நிலைமை தொடர்ந்து வருவதையே காட்டுகிறது. இலாபம் மூலதனமாக மாற்றமடைவ தென்பது கூடுதல் உழைப்பில் ஒரு பகுதியை புதிய, கூடுதல் உற்பத்திச் சாதனங்களை உருவாக்குவதற்கு பயன்படுத்திக் கொள்வதுதானே தவிர வேறல்ல. இலாபம் மூலதனமாக மாற்றமடைகிற வடிவில் இது

நடைபெறுகிறது என்றால், உழைப்பைப் பயன்படுத்திக் கொள்வது முதலாளிதானே தவிர தொழிலாளி அல்ல என்றுதான் பொருள். இந்த உபரி-உழைப்பு முதலில் வருவாயாகக் காட்சியளிக்கும் ஒரு கட்டத்தைக் கடந்து சென்றாக வேண்டும் என்றால் (காட்டுவாசியைப் பொறுத்தவரை, இந்த உழைப்பு நேரடியாகவே உற்பத்திச்சாதனங்களின் உற்பத்திக்கென்று விதிக்கப்பட்ட உழைப்பாகக் காட்சியளிக்கிறது), இந்த உழைப்பு அல்லது அதன் உற்பத்திப் பொருள் தொழிலாளியல்லாத ஒருவரால் தனதாக்கிக் கொள்ளப்படுகிறது என்றுதான் பொருள். ஆனால், உள்ளபடியே மூலதனமாக மாற்றப்படுவது இலாபமே அல்ல. உபரி-மதிப்பு மூலதனமாக மாற்றமடைவது உபரி-மதிப்பும் உபரி-உற்பத்தியும் முதலாளியால் சொந்த முறையில் வருவாயாக நுகரப்படுவதில்லை என்பதைத்தான் குறிக்கிறது. உண்மையில் இவ்விதம் மாற்றமடைவது மதிப்புதான், பொருள் வடிவாக்கப்பட்ட உழைப்புதான்; அதாவது இந்த மதிப்பு நேரடியாகக் குறிக்கப்பெறும் உற்பத்திப் பண்டமோ இந்த மதிப்பை முதலில் பணமாக மாற்றி பிறகு பரிவர்த்தனை செய்து பெறப்படும் உற்பத்தி பண்டமோதான். இலாபம் மறுபடியும் மூலதனமாக மாற்றமடையும் போது, உபரி-மதிப்பின் இந்தக் குறிப்பிட்ட வடிவம், அதாவது இலாபம் புதிய மூலதனத்துக்கு ஆதாரமாவதில்லை. இதன் மூலம் உபரி-மதிப்பு ஒரு வடிவத்திலிருந்து வேறொரு வடிவத்துக்கு மாற்றமடைகிறது என்பதற்கு மேல் ஒன்றுமில்லை. ஆனால் அதனை மூலதனமாக்குவது இந்த வடிவமாற்றம் அல்ல. சரக்கும் அதன் மதிப்பும்தான் இப்போது மூலதனமாகச் செயல்படுகின்றன. ஆயினும் சரக்கின் மதிப்புக்கு விலைதரப்படுவதில்லை என்பதற்கும், இந்த உழைப்பின், மதிப்பின் பொருள் வடிவாக்கத்துக்கும் எவ்விதத் தொடர்புமில்லை - இப்படித்தான் அது உபரி-மதிப்பாகிறது.

தவறான புரிதல் பல்வேறு வடிவங்களில் வெளிப்படுகிறது. எடுத்துக்காட்டாக, மாறா-மூலதனமாக அமைந்திடும் சரக்குகளிலும் கூலி, இலாபம், வாடகை ஆகியவற்றின் கூறுகள் அடங்கியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அல்லது, ஒருவருக்கு வருவாயாக இருப்பது வேறொருவருக்கு மூலதனமாக இருக்கிறது என்றும், ஆகவே இவை வெறும் அகவய உறவுகள்தான் என்றும் சொல்லப்படுகிறது. இப்படிப் பார்த்தால், நூற்பாளரின் நூலில் அவருக்கான இலாபத்தைக் குறிக்கும் ஒரு மதிப்புக் கூறும் அடங்கியுள்ளது. அந்த நூலை நெசவாளர் வாங்கினால் நூற்பாளரின் இலாபத்தை ஈடேற்றம் செய்து கொள்கிறார்.

ஆனால் அவரைப் பொறுத்தவரை, இந்த நூல் அவரது மாறா - மூலதனத்தில் ஒரு பகுதி மட்டுமே ஆகும்.

வருவாய்க்கும் மூலதனத்துக்குமான உறவு குறித்து இதற்கு முன் சொல்லியவற்றை அன்னியில் பின்வருவதையும் குறிப்பிட்டாக வேண்டும்: நெசவாளரின் மூலதனத்தில் நூலுடன் கூடவே மதிப்பு வகையில் ஓர் ஆக்கக் கூறாக சேருவது நூலின் மதிப்புதான். இந்த மதிப்பின் கூறுகள் நூற்பாளருக்கு மூலதனமாகவும் வருவாயாகவும், அதாவது ஊதிய உழைப்பாகவும் ஊதியமிலா உழைப்பாகவும் எப்படி பகுபடுகின்றன என்பதற்கும் (சராசரி இலாபத்தினால் ஏற்படும் மாற்றங்கள் ஒருபுறமிருக்க, சரக்கின் மதிப்பு - நிர்ணயிப்புக்கும் எவ்விதத் தொடர்புமில்லை. இலாபம் அல்லது பொதுவாக உபரி-மதிப்பு என்பது சரக்கின் மதிப்புக்கு மேல் ஓர் உபரியாகும், கூடுதல் கட்டணம் விதிப்பதன் மூலமாகவும், ஒருவரை ஒருவர் ஏமாற்றுவதன் மூலமாகவும் ஆதாயம் வைத்து விற்பதன் மூலமாகவோதான் இந்த உபரியை அடைய முடியும் என்பது இக்கருத்துக்கு பின்னாலும் மறைந்துள்ளது. உற்பத்தி-விலை தரப்படும் போது, அல்லது சரக்கின் மதிப்பே தரப்படும்போதும் கூட, விற்கிறவருக்கு வருவாயாகக் காட்சியளிக்கும் சரக்கு-மதிப்புக் கூறுகளும் தரப்பட்டுவிடுகின்றன. இங்கு ஏகபோக விலைகள் கருத்தில் கொள்ளப்படவில்லை என்பது மெய்தான்.

இரண்டாவதாக வேறெந்த சரக்கு-மதிப்பையும் போலவே மாறா - மூலதனமாக அமையும் சரக்குக் கூறுகளும் உற்பத்தியாளர்களுக்கும் உற்பத்திச் சாதன உடைமையாளர்களுக்கும் கூலியாகவும் இலாப மாகவும் வாடகையாகவும் உருப்பெறக் கூடிய மதிப்புப் பகுதிகளாக பெயர்க்கப்படலாம் என்று கூறுவது சரிதான். சரக்கு மதிப்பு என்பது ஒரு சரக்கில் அடங்கியுள்ள சமூக வழியில் அவசியமான உழைப்பின் அளவீடுதான் என்ற உண்மைக்கான முதலாளித்துவ தெரிவிப்பு முறைதான் இது. ஆனால் எந்தவொரு மூலதனத்தின் சரக்கு உற்பத்தியும் தனித்தனி கூறுகளாகப் பிரிவதை இது எவ்வகையிலும் தடுப்பதில்லை என்று முதல் பாகத்திலேயே தெளிவாக்கினோம்; இந்தக் கூறுகளில் ஒன்று மாறா-மூலதனப் பகுதியையும் மற்றொன்று மாறும்-மூலதனப் பகுதியையும், மூன்றாவது கூறு முழுக்க முழுக்க உபரி-மதிப்பையும் குறிப்பவை ஆகும்.

ஸ்டோர்ஹ் பின்வருமாறு கூறுவது, வேறு பலரின் கருத்துமாகும்: ‘நாட்டின் வருவாயாக அமைந்திடும் விற்பனைப் பண்டங்களை

*அரசியல் பொருளாதாரம் இருவேறு வழிகளில் பரிசீலித்தாக வேண்டும்: மதிப்புகள் என்ற முறையில் தனியாட்களுடன் உறவுபடுத்தியும் பண்டங்கள் என்ற முறையில் நாட்டுடன் உறவுபடுத்தியும் பரிசீலிக்க வேண்டும். ஏனென்றால் தனிப்பட்ட ஒருவரின் வருவாயைப் போல் நாட்டின் வருவாயை அதன் மதிப்பைக் கொண்டு கணிக்கக் கூடாது; அதன் பயனுடைமைக்கேற்பவே அல்லது அதனால் நிறைவு செய்ய முடிகிற தேவைகளுக்கேற்பவே கணிக்க வேண்டும்.' (*Considérations sur le revenu national, *பக்கம் 19).*

*முதலாவதாக, ஒரு நாட்டின் பொருளுற்பத்தி முறை மதிப்பை அடிப்படையாகக் கொண்டதாகவும், மேலும் முதலாளித்துவ முறையில் ஒழுங்கமைக்கப்பட்டதாகவும் இருக்கும்போது, அந்த நாட்டை தன் தேவைகளை நிறைவு செய்வதற்காக மட்டும் உழைத்து வருகிற ஒரு பெரும் திரட்சியாகக் கருதுவது தவறான கருத்தாக்கமே.*

*இரண்டாவதாக, முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை ஒழிக்கப்பட்ட பிறகு, ஆனால் சமுதாயப் பொருளுற்பத்தி நீடித்து வரும் நிலையில் உழைப்பு நேரத்தை ஒழுங்கு செய்வதும், சமுதாய உழைப்பை பல்வேறு உற்பத்திக் குழுக்களிடையே பகிர்ந்தளிப்பதும், முடிவில் இதையெல்லாம் தழுவி நிற்கிற கணக்குப் பதிவும், முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு இன்றியமையாதவை ஆகின்றன என்ற அர்த்தத்தில் மதிப்பு நிர்ணயிப்பு தொடர்ந்து நிலவி வருகிறது.*

## அத்தியாயம் L

## போட்டியினால் ஏற்படும் பொய்த் தோற்றங்கள்

சரக்குகளின் மதிப்பு, அல்லது அவற்றின் மொத்த மதிப்பால் ஆளப்படும் உற்பத்தி-விலை பின்வருமாறு பகுபடுவதாக தெளிவாக்கினோம்:

1) மாறா-மூலதனத்தை மாற்றீடு செய்கிற, அல்லது சரக்கை உருவாக்குவதில் உற்பத்திச் சாதனங்களின் வடிவில் செலவிடப்பட்ட கடந்தகால உழைப்பைக் குறிக்கிற மதிப்புக் கூறு, சுருங்கச் சொல்லின், இந்த உற்பத்திச் சாதனங்கள் சரக்குகளின் உற்பத்தி நிகழ் முறைக்குள் கொண்டு போய்ச் சேர்ந்த மதிப்பு அல்லது விலை. இங்கு நாம் குறிப்பிடுவது, தனிப்பட்ட சரக்குகளை அல்ல; சரக்கு-மூலதனத்தையோ, அதாவது மூலதனத்தின் உற்பத்திப் பொருள் குறிப்பிட்ட காலப்பகுதியில் - உதாரணமாய் ஓராண்டு காலத்தில்- மேற்கொள்ளும் வடிவத்தையே குறிப்பிடுகிறோம்; தனியொரு சரக்கு, சரக்கு-மூலதனத்தின் கூறுகளில் ஒன்றாக அமைகிறது, தனியொரு சரக்கும் கூட - அதன் மதிப்பைப் பொறுத்தவரை அதே போன்ற உள்ளடக்கக் கூறுகளாகப் பகுபடுகிறது.

2) தொழிலாளியின் வருமானத்தை அளவிடுவதும் அவருக்கு கூலியாக மாற்றப்படுவதுமான மாறும்-மூலதனத்தைக் குறிக்கிற மதிப்புக் கூறு; அதாவது தொழிலாளி இந்த மாறும் மதிப்புக் கூறின் வடிவில் மறுவுற்பத்தி செய்திருக்கும் கூலி; சுருங்கச் சொல்லின், சரக்குகளின் உற்பத்தியில் மேற்சொன்ன மாறாப் பகுதியோடு சேர்க்கப்படும் புதிய உழைப்பின் ஊதியப் பகுதியைக் குறிக்கும் மதிப்புக் கூறு.

3) உபரி-மதிப்பு; அதாவது உற்பத்தி செய்யப்பட்ட சரக்குகளில் ஊதியமிலா உழைப்பு அல்லது உபரி-உழைப்பைக் குறிக்கும் மதிப்புக் கூறு. இந்தக் கடைசி மதிப்புக் கூறானது சுயேச்சையான வடிவங்களை மேற்கொள்கிறது. இந்த வடிவங்கள் அதே போது வருவாய்

வடிவங்களாகவும் உள்ளன: மூலதனத்தின் மீதான இலாபம் (மூலதனத்தின் மீதேயான வட்டியும், செயல்படும் மூலதனம் என்ற முறையில் மூலதனத்தின் மீதான முனைவு-இலாபமும்). பொருளுற்பத்தி நிகழ்முறையில் பங்கு வகிக்கும் நிலத்தின் உடைமையாளருக்கு போய்ச் சேரும் நில-வாடகை ஆகியவைதான் அந்த வடிவங்களாகும். இரண்டாவது, மூன்றாவது கூறுகள், அதாவது எப்போதுமே கூலி (இது முதலில் மாறும் மூலதனத்தின் வடிவத்தை கடந்து வந்த பிறகுதான்), இலாபம், வாடகை ஆகிய வருவாய் வடிவங்களை மேற்கொள்ளும் மதிப்புக் கூறு முதற்கூறாகிய மாறா-மதிப்புக் கூறிலிருந்து வேறுபடுவது இப்படித்தான்; அந்த மாறாப் பகுதியோடு, சரக்குகளின் உற்பத்திச் சாதனங்களோடு புதிதாய்ச் சேர்க்கப்படும் உழைப்பின் பொருள் வடிவமாகிய மதிப்பு அனைத்தும் அதில் உருக்கொண்டிருக்கிறது. இப்போது மாறா-பகுதியை ஒதுக்கி வைத்து விடுவோமானால், ஒரு சரக்கின் மதிப்பு, அது புதிதாய்ச் சேர்க்கப்பட்ட உழைப்பைக் குறிக்கிற அளவில், எப்போதுமே மூன்று கூறுகளாக, அதாவது கூலியாகவும் இலாபமாகவும் வாடகையாகவும் பகுப்பட்டு, மூன்று வருவாய் வடிவங்களாய் அமைகின்றன[58]. இவற்றில் அதனதன் மதிப்புப் பருமன்கள், அதாவது மொத்த மதிப்பில் இவை குறித்திடும் ஈவுப்பகுதிகள் பல்வேறு பிரத்யேக விதிகளால் நிர்ணயிக்கப்படுகின்றன; இந்த விதிகளை முன்பே பரிசீலித்தோம். ஆனால் மறுதலையாக, கூலியின் மதிப்பும் இலாப வீதமும் வாடகை வீதமும் சுயேச்சையான மதிப்புக் கூறுகளாய் அமைவதாகவும், இந்தக்

---

(58) மாறா-மூலதனக் கூறுடன் சேர்க்கப்படும் மதிப்பானது கூலியாகவும் இலாபமாகவும் நில - வாடகையாகவும் பிரிந்து மதிப்பின் அடக்கக் கூறுகளாகின்றன என்பது கூறாமலே விளங்கும். இந்த மதிப்பைக் குறிக்கும் நேரடி உற்பத்திப் பண்டத்தில், அதாவது குறிப்பிட்ட உற்பத்திக் கிளையில், எடுத்துக்காட்டாக நூற்புத் தொழிலில், தொழிலாளர்களும் முதலாளிகளும் நேரடியாக உற்பத்தி செய்திருக்கும் உற்பத்திப் பண்டத்தில் - நூலில் - இந்த மதிப்புக் கூறுகள் இடம்பெற்றிருப்பதாக கருதலாம். ஆனால் உண்மையில் அவை இந்த உற்பத்திப் பண்டத்தில் குறிக்கப் பெறுவதில்லை; அதே மதிப்புள்ள வேறு எவ்வகைச் சரக்கிலும், பொருட்செல்வத்தின் வேறு எந்த அடக்கக் கூறிலும் குறிக்கப் பெறுவதில்லை. நடைமுறையில் கூலி பணமாகச் செலுத்தப்படுகிறது. அதாவது, தூய மதிப்புத் தெரிவிப்பாகத் தரப்படக் காண்கிறோம்; வட்டி, வாடகை ஆகியவையும் இதே போலத்தான். உண்மையில் முதலாளிக்கு அவரது உற்பத்திப் பண்டம் தூய மதிப்புத் தெரிவிப்பாக மாற்றமடைவது மிக முக்கியம்; விநியோகப் பங்கீட்டிலேயே இந்த மாற்றம் அனுமானம் செய்து கொள்ளப்படுகிறது. இந்த மதிப்புகள் அதே உற்பத்திப் பண்டமாக, எந்தச் சரக்குகளின் உற்பத்தியிலிருந்து அவை எழுந்தனவோ அதே சரக்குகளாக மறுபடியும் மாற்றப்படுகின்றனவா, தொழிலாளி நேரடியாகத் தன்னால் உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்திப் பொருளில் ஒரு பகுதியைத் திரும்ப வாங்கிக் கொள்கிறாரா, அல்லது வேறொரு உழைப்பு வகையைச் சேர்ந்த வேறோர் உற்பத்திப் பண்டத்தை வாங்கிக் கொள்கிறாரா என்பது இந்த விவகாரத்துக்கு தொடர்பற்றதாகும். திருவாளர் ரோட்பெர்ட்டஸ் சற்றும் தேவையில்லாமலே இது குறித்து உணர்ச்சி வசப்பட்டு ஆரவாரம் செய்கிறார்.

*கூறுகளின் இணைவு மாறாக் கூறு நீங்கலாக சரக்குகளின் மதிப்பைத் தோற்றுவிப்பதாகவும் சொல்வது தவறாகும் அதாவது இவை சரக்கு-மதிப்பின் அல்லது உற்பத்தி-விலையின் அடக்கக்கூறுகள் ஆகும் என்று சொல்வது தவறாகும்[59].*

*வேறுபாட்டை எளிதில் காணலாம்.*

*500 மதிப்புள்ள மூலதனத்தால் உற்பத்தி செய்யப்படும் பண்டத்தின் மதிப்பு $=400_c+100_v+150_s = 650$ எனக் கொள்வோம். இதில் $150_s$ ஆனது 75 இலாபம்+75 வாடகை என்று பிரிவதாகக் கொள்வோம். தேவையற்ற சிக்கல்களைத் தவிர்க்கும் பொருட்டு, இது சராசரி இயைபுள்ள மூலதனமென்றும், எனவே இதன் உற்பத்திவிலையும் மதிப்பும் ஒருங்கமைவதாகவும் வைத்துக் கொள்வோம்; இப்படிப்பட்ட தனியொரு மூலதனத்தின் உற்பத்திப் பண்டம் மொத்த மூலதனத்தில் ஒரு பகுதியின் - அதன் பருமனுக்கேற்ற - உற்பத்திப் பண்டமாக கருதப் படலாம் என்னும் போதெல்லாம் இந்த ஒருங்கமைதல் ஏற்படுகிறது.*

*இங்கே, மாறும்-மூலதனத்தால் அளவிடப்படும் கூலி முன்னீடு செய்யப்படும் மூலதனத்தில் 20% ஆகிறது; மொத்த மூலதனத்தின் அடிப்படையில் கணக்கிடப்படும் உபரி-மதிப்பு 30% ஆகிறது; அதாவது இலாபம் 15%, வாடகை 15%, சரக்கின் மதிப்பில் புதிதாய்ச் சேர்க்கப்பட்ட உழைப்பைக் குறிக்கும் மதிப்புக் கூறு அனைத்தும் $= 100_v+150_s =250$. அதன் பருமன் அது கூலியாகவும் இலாபமாகவும் வாடகையாகவும் பிரிவதைப் பொறுத்ததல்ல. பணமாக 100, உதாரணமாய் £100 செலுத்தப்பெறும் உழைப்புச் சக்தி £250 என்னுமளவுக்கு பணத்தால் குறிக்கப்படும் உழைப்பளவை வழங்கியிருப்பதாக இந்தப் பகுதிகள் ஒன்றுடன் ஒன்று கொண்டிருக்கும் உறவிலிருந்து தெரிந்து கொள்கிறோம். தொழிலாளி தமக்காக ஆற்றிக்கொண்ட உழைப்பைப் போல் 1 ½ மடங்கு உபரி-உழைப்பு ஆற்றினார் என்பது இதிலிருந்து தெரிகிறது. வேலை நாள் = 10 மணி நேரம் என்றால், அவர் தமக்காக 4 மணி நேரமும் முதலாளிக்காக 6 மணி நேரமும் வேலை செய்தார் என்றாகிறது. ஆகவே £100 செலுத்தப்பெறும் தொழிலாளர்களின்*

(59) 'கச்சாப் பொருட்களின் மதிப்பையும் செய்பொருட்களான சரக்குகளின் மதிப்பையும் ஆளுகிற அதே பொது விதி உலோபங்களுக்கும் பொருந்தக் கூடியதுதான் என்பதைக் குறிப்பிடுவது போதுமானதாய் இருக்கும்; அவற்றின் மதிப்பு இலாப வீதத்தையோ கூலி வீதத்தையோ சுரங்கங்களுக்குத் தரப்படும் வாடகையையோ பொறுத்ததல்ல, மாறாக உலோபத்தை எடுப்பதற்கும் சந்தைக்கு கொண்டு வருவதற்கும் அவசியமான மொத்த உழைப்பளவையே பொறுத்ததாகும்.' (ரிக்கார்டோ, கோட்பாடுகள், அத்தியாயம் III, பக்கம் 77)

உழைப்பு £250 பண-மதிப்பில் வெளிப்படுகிறது. இந்த £250 மதிப்பைஒதுக்கி விட்டுப் பார்த்தால், தொழிலாளிக்கும் முதலாளிக்கும் இடையே, முதலாளிக்கும் நிலவுடைமையாளருக்கும் இடையே பிரித்துக் கொள்வதற்கு ஒன்றுமில்லை. இது உற்பத்திச் சாதனங்களின் மதிப்புடன், அதாவது £400 உடன் புதிதாய்ச் சேர்க்கப்படும் மொத்த மதிப்பாகும். தன்னில் பொருள்வடிவாக்கப்பட்டுள்ள உழைப்பளவால் இவ்விதம் உற்பத்தி செய்யப்பட்டு நிர்ணயிக்கப்படும் இந்த £250 சரக்கு-மதிப்பானது தொழிலாளியும் முதலாளியும் நிலவுடைமை யாளரும் இந்த மதிப்பிலிருந்து வருவாய் வடிவில் - கூலியாகவும் இலாபமாகவும் வாடகையாகவும்-பெறக் கூடிய ஆதாயப் பங்கீடு களுக்கு வரம்பு விதிக்கிறது.

அதே அங்கக இயைபுள்ள, அதாவது ஈடுபடுத்தப்படும் உயிருள்ள உழைப்புச் சக்திக்கும் இயங்க வைக்கப்படும் மாறா-மூலதனத்துக்கும் இடையே அதே விகிதமுள்ள ஒரு மூலதனம் £ 400 மாறா-மூலதனத்தை இயங்க வைக்கும் அதே உழைப்புச் சக்திக்கு £ 100க்கு பதில் £ 150 கொடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுவதாகக் கொள்வோம். இலாபமும் வாடகையும் உபரி-மதிப்பை வெவ்வேறு விகிதத்தில் பகிர்ந்து கொள்வதாகவும் கொள்வோம். £ 100 மாறும்மூலதனம் இயங்க வைக்கிற அதே அளவு உழைப்பையே £ 150 மாறும்-மூலதனமும் இயங்க வைப்பதாக நாம் அனுமானம் செய்திருப்பதால் புதிதாய் உற்பத்தி செய்யப்படும் மதிப்பு முன்போலவே = 250 ஆகவும், மொத்த உற்பத்திப் பண்டத்தின் மதிப்பு முன்போலவே = 650 ஆகவும் இருக்கும். ஆனால் இப்போது$400_c + 150_v + 100_s$ என்று பெறப்படும். இந்த $100_s$ ஆனது 45 இலாபமாகவும் 55 வாடகையாகவும் பிரியும். புதிதாக உற்பத்தி செய்யப்பட்ட மொத்த மதிப்பு கூலியாகவும் இலாபமாகவும் வாடகையாகவும் வினியோகமாகிற விகிதம் இப்போது பெரிதும் மாறுபட்டிருக்கும்; இதே போல் முன்னீடு செய்யப்படும் மொத்த மூலதனம் அதே மொத்த உழைப்பளவைத்தான் இயங்கச் செய்கிறது என்றாலும், அம் மூலதனத்தின் பருமனும் மாறுபட்டிருக்கும். முன்னீடு செய்யப்படும் மூலதனத்தில் கூலி $27\,^{3}/_{11}\%$ ஆகவும், இலாபம் $8\,^{2}/_{11}\%$ ஆகவும், வாடகை 10% ஆகவும் இருக்கும். இவ்விதம் மொத்த உபரி-மதிப்பு 18%க்கு சற்று கூடுதலாய் இருக்கும்.

கூலி உயருவதன் விளைவாக, மொத்த உழைப்பின் ஊதியமிலாப் பகுதி மாறுபடும் இதனால் உபரி-மதிப்பும் மாறுபடும். வேலை-நாள் 10 மணி நேரம் கொண்டதாய் இருந்தால் தொழிலாளி தமக்காக 6 மணி

நேரம் உழைத்திருப்பார், முதலாளிக்காக 4 மணி நேரம். மட்டுமே உழைத்திருப்பார். இலாபம், வாடகை இவற்றின் விகித அளவுகளும் மாறுபடும்; குறைந்த உபரி-மதிப்பு முதலாளிக்கும் நிலவுடைமை யாளருக்கும் இடையே வேறொரு விகிதத்தில் பிரித்துக் கொள்ளப் படும். முடிவில் மாறா-மூலதனத்தின் மதிப்பு மாறாதிருக்கும் என்பதாலும் முன்னீடு செய்யப்படும் மாறும்-மூலதனத்தின் மதிப்பு உயர்ந்திருக்கும் என்பதாலும், குறைந்த உபரி-மதிப்பு இன்னுங்குறைந்த மொத்த இலாப வீதத்தில் வெளிப்படும்-மொத்த உபரி-மதிப்புக்கும் மொத்த மூலதன முன்னீட்டுக்குமான விகிதத்தையே இங்கு மொத்த இலாப வீதம் என்று சொல்லுகிறோம்.

கூலியின் மதிப்பிலும் இலாப வீதத்திலும் வாடகை வீதத்திலுமான இந்த மாற்றங்கள் - இந்தக் கூறுகள் இடையிலான விகித உறவுகளை ஆளும் விதிகளின் விளைவு என்னவானாலும்-புதிதாய் உற்பத்தி செய்யப்படும் 250 சரக்கு-மதிப்பால் விதிக்கப்படும் வரம்புகளுக்குள் மட்டுமே இயங்க முடிந்தது. வாடகை என்பது ஏகபோக விலையின் அடிப்படையிலானதாய் அமைந்தால் மட்டுமே ஒரு விதிவிலக்கு நேரிடும். இது எவ்வகையிலும் விதியை மாற்றிவிடாது, பகுப்பாய்வை இது சிக்கலாக்கும், அவ்வளவுதான். ஏனென்றால் இங்கு நாம் உற்பத்திப் பண்டத்தை மட்டுமே பரிசீலிப்பதாய் இருந்தால், உபரி-மதிப்பின் பிரிவினை மட்டுமே மாறுபடும். ஆனால் ஏனைய சரக்குகளுடன் அதற்குள்ள ஒப்பீட்டு மதிப்பை பரிசீலிப்பதானால், உபரி-மதிப்பின் ஒரு பகுதி அந்த ஏனைய சரக்குகளிலிருந்து, குறிப்பிட்ட இந்தச் சரக்குக்கு மாற்றப்படும் என்ற ஒரே ஒரு வேறுபாட்டைத்தான் காண்போம்.

தொகுத்துச் சொன்னால்:

| | உற்பத்திப் பண்டத்தின் மதிப்பு | புதிய மதிப்பு வீதம் | உபரி இலாப வீதம் | மொத்த மதிப்பு |
|---|---|---|---|---|
| முதல் நேர்வு: | $400_c+100_v+150_s=650$ | 250 | 150% | 30% |
| இரண்டாம் நேர்வு | $400_c+150_v+100_s=650$ | 250 | $66^2/_3$% | $18^2/_{11}$% |

முதலாவதாக, உபரி-மதிப்பு முன்பிருந்ததில் மூன்றிலொரு பங்கு குறைந்து போகிறது; அதாவது 150 ஆக இருந்தது 100 ஆகிவிடுகிறது. இலாப வீதம் மூன்றிலொரு பங்குக்கு சற்று கூடுதலாகவே குறைகிறது. அதாவது 30% ஆக இருந்தது 18% ஆகிவிடுகிறது; ஏனென்றால் குறைந்த

உபரி-மதிப்பை கூடுதலான மொத்த மூலதன முன்னீட்டின் அடிப்படையில் கணக்கிட வேண்டியுள்ளது. ஆனால் அது உபரி-மதிப்பு வீதம் குறையும் அதே விகிதத்தில் குறைவதில்லை. உபரி மதிப்பு வீதம் $^{150}/_{100}$ என்பதிலிருந்து $^{100}/_{150}$ ஆக, அதாவது 150% இலிருந்து $66\,^{2}/_{3}$% ஆக குறைகிறது. ஆனால் இலாப வீதம் $^{150}/_{500}$ என்பதிலிருந்து $^{100}/_{550}$ ஆக, அதாவது 30% இலிருந்து $18\,^{2}/_{11}$% ஆக மட்டுமே குறைகிறது. அப்படியானால் இலாப வீதம் உபரி-மதிப்புத் திரளைவிட கூடுதலான விகிதத்திலும் உபரி-மதிப்பு வீதத்தை விட குறைந்த விகிதத்திலும் சரிகிறது. மேலும், மூலதன முன்னீடு அதன் மாறும் கூறு பெருகுவதால் அதிகரித்துள்ள போதிலும் ஈடுபடுத்தப்படும் உழைப்பளவு மாறாதுள்ள வரை, உற்பத்திப் பொருட்களின் மதிப்பும் அளவும் மாறாதுள்ளன என்பதும் தெளிவாகிறது. மூலதன முன்னீட்டிலான இந்த அதிகரிப்பு ஒரு புதிய தொழில் முனைவில் இறங்கும் முதலாளிக்கு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாய் இருக்கவே செய்யும். ஆனால் மறுவுற்பத்தியை அதன் முழு உருவில் பரிசீலிக்கையில், மாறும்-மூலதனத்தின் பெருக்கம் என்பது புதிதாய்ச் சேர்க்கப்படும் உழைப்பால் புதிதாய்ப் படைக்கப்படும் மதிப்பில் பெரும் பகுதி உபரி-மதிப்பாகவும் உபரி-உற்பத்தியாகவும் மாற்றப்படுவதற்கு பதில் கூலியாகவும், இவ்வாறு முதலில் மாறும்-மூலதனமாகவும் மாற்றப்படுவதைத்தான் குறிக்கும். இவ்வாறு உற்பத்திப் பண்டத்தின் மதிப்பு மாறாதுள்ளது; ஏனென்றால் ஒருபுறம் மாறா-மூலதனத்தின் மதிப்பு = 400 என்பதும், மறுபுறம் புதிதாய்ச் சேர்க்கப்படும் உழைப்பைக் குறிக்கும் 250 என்பதும் அதற்கு வரம்பிடுகின்றன. ஆனால் இரண்டுமே மாறாது இருந்து வருகின்றன. இந்த உற்பத்திப் பண்டமானது அதுவே மறுபடியும் மாறா-மூலதனத்தில் சேரும் அளவுக்கு இந்த உற்பத்திப் பண்டம் அதே மதிப்புப் பருமனில் அதே அளவு பயன்-மதிப்பைக் குறிக்கும். இவ்வாறு மாறா-மூலதனக் கூறுகளின் அதே திரள் அதே மதிப்பைத் தக்க வைத்துக் கொள்ளும். கூலி உயர்வுக்கான காரணம் தொழிலாளி தமது உழைப்பில் இன்னும் கூடுதலான பங்கைப் பெறுகிறார் என்பதாக இல்லாமல், உழைப்பின் உற்பத்தித் திறன் குறைந்து, அதன் விளைவாக அவர் தமது உழைப்பில் இன்னும் கூடுதலான பங்கைப் பெறுகிறார் என்பதாக இருக்குமானால் நிலைமை வேறுவிதமாக இருக்கும். இங்கே உழைப்பு-ஊதிய உழைப்பும் ஊதியமிலா உழைப்பும் - மாறாதிருக்க, அது உருக்கொள்ளும் மொத்த மதிப்பு மாறாதிருக்கும். ஆனால் இந்த உழைப்பளவு உருக்கொள்ளும் உற்பத்திப் பண்டத்திரள் குறைந்திருக்கும்; ஆகவே இந்த உற்பத்திப் பண்டத்தில் ஒவ்வோர்

ஈவுப்பங்கின் விலையும் உயரும். ஏனென்றால் ஒவ்வொரு பங்கிலும் முன்னைவிட அதிக உழைப்பு அடங்கியிருக்கும். அதிகரித்த கூலியாகிய 150 என்பது முன்பு 100 என்னும் கூலியால் குறிக்கப் பெற்ற உற்பத்திப் பண்டத்திற்கு மேல் எதையும் குறிக்காது; குறைந்த உபரி-மதிப்பாகிய 100 ஆனது பழைய உற்பத்திப் பண்டத்தில் $^2/_3$ பங்கைமட்டுமே குறிக்கும்; அதாவது முன்பு 100 ஆல் குறிக்கப் பெற்ற பயன்-மதிப்புகளின் திரளில் 66 $^2/_3$%ஐக் குறிக்கும். இங்கே இந்த உற்பத்திப் பண்டம் மாறா-மூலதனத்தில் சேரக் கூடிய அளவுக்கு மாறா-மூலதனத்தின் விலையும் உயரும். ஆனால் இது கூலி உயர்வின் விளைவாக இருக்காது. பார்க்கப்போனால் கூலி உயர்வுதான் சரக்குகளின் விலை உயருவதன் விளைவாகவும், அதே உழைப்பளவில் உற்பத்தித்திறன் குறைந்து போவதன் விளைவாகவும் இருக்கும். கூலி உயர்வினால் உற்பத்திப் பண்டத்தின் விலை உயர்ந்துவிட்டது போல் இங்கொரு தோற்றம் ஏற்படுகிறது; ஆனால் இந்தக் கூலி உயர்வு உழைப்பின் உற்பத்தித் திறன் குறைந்து போவதால் சரக்குகளின் மதிப்பில் ஏற்படும் மாற்றத்தின் காரியமாகுமே தவிர காரணமாகாது.

மறுபுறம் மற்றெல்லா நிலைமைகளும் மாறாதிருக்க, அதாவது அதே அளவு உழைப்பு ஈடுபடுத்தப்பட்டு இப்போதும் 250 எனும் மதிப்பால் குறிக்கப்பெறுமிடத்து, ஈடுபடுத்தப்படும் உற்பத்திச் சாதனங்களின் மதிப்பு உயரவோ குறையவோ செய்யுமானால், அதே அளவு உற்பத்திப் பொருட்களின் மதிப்பு அதே அளவு உயரவோ குறையவோ செய்யும். $450_c+100_v+150_s$ என்பதிலிருந்து பெறப்படும் உற்பத்தி-மதிப்பு = 700; ஆனால் அதே அளவு உற்பத்திப் பொருட்களுக்கு முன்பு பெறப்பட்ட 650க்குப் பதில் இப்போது $350_c+100_v+150_s$ என்பதிலிருந்து பெறப்படும் மதிப்பு 600 மட்டுமே. ஆகவே, அதே அளவு உழைப்பை இயங்க வைப்பதற்காக முன்னீடு செய்யப்படும் மூலதனம் அதிகரிக்கவோ குறையவோ செய்தால், ஏனைய நிலைமைகள் மாறாதிருக்க, முன்னீடு செய்யப்படும் மூலதனத்திலான அதிகரிப்பு அல்லது குறைவு மாறா-மூலதனக் கூறின் மதிப்புப் பருமனில் ஏற்படும் மாற்றத்தின் விளைவாக அமைந்துள்ள வரை உற்பத்திப் பண்டத்தின் மதிப்பு உயரவோ குறையவோ செய்கிறது. மறுபுறம், உழைப்பின் உற்பத்தித் திறன் மாறாதிருக்க, முன்னீடு செய்யப்படும் மூலதனத்திலான அதிகரிப்பு அல்லது குறைவு மாறும் - மூலதனக் கூறின் மதிப்புப் பருமனில் ஏற்படும் மாற்றத்தைக் காரணமாக கொண்டிருக்குமானால், உற்பத்திப் பண்டத்தின் மதிப்பில் எவ்வித மாற்றமும் ஏற்படுவதில்லை. மாறா-மூலதனத்தைப் பொறுத்த வரை,

அதன் மதிப்பில் ஏற்படும் அதிகரிப்பு அல்லது குறைவு எதிர்த்திசையிலான எவ்வித அசைவியக்கத்தாலும் ஈடு செய்யப் படுவதில்லை. ஆனால் மாறும்-மூலதனத்தைப் பொறுத்த வரை, உழைப்பின் உற்பத்தித் திறன் மாறாதிருப்பதாகக் கொண்டால், அதன் மதிப்பில் ஏற்படும் அதிகரிப்பு அல்லது குறைவு உபரி-மதிப்பின் தரப்பில் எதிர்திசையில் ஏற்படும் அசைவியக்கத்தால் ஈடு செய்யப் படுகிறது; இதனால் மாறும்-மூலதனத்தின் மதிப்பு + உபரி-மதிப்பு என்னும் கூட்டுத் தொகை அதாவது உழைப்பினால் உற்பத்திச் சாதனங்களுடன் புதிதாய்ச் சேர்க்கப்பட்டு, உற்பத்திப் பண்டத்தில் புதிதாய் வெளிப்படும் மதிப்பு மாறாதுள்ளது.

ஆனால் மாறும்-மூலதனம் அல்லது கூலியின் மதிப்பில் ஏற்படும் அதிகரிப்பு அல்லது குறைவு சரக்குகளின் விலையின் ஏற்படும் அதிகரிப்பு அல்லது குறைவை, அதாவது இந்த மூலதன முதலீட்டால் ஈடுபடுத்தப்படும் உழைப்பின் உற்பத்தித் திறனில் ஏற்படும் குறைவு அல்லது அதிகரிப்பைக் காரணமாய்க் கொண்டிருக்குமானால், இதனால் உற்பத்திப் பண்டத்தின் மதிப்பு பாதிக்கப்படுகிறது. ஆனால் இந்நிலையில் கூலியில் ஏற்படும் உயர்வு அல்லது குறைவு காரியமாகுமே தவிர, காரணமாகாது.

மறுபுறம், மேற்கண்ட எடுத்துக்காட்டில், மாறா-மூலதனம் = $400_c$ என்பதாகவே இருந்து வருவதாகக் கொண்டால், $100_v + 150_s$ இலிருந்து $150_v + 100_s$ என்பதாக ஏற்படும் மாற்றம், அதாவது மாறும்-மூலதனத்திலான அதிகரிப்பு இந்தக் குறிப்பிட்ட தொழிற்கிளையில்-உதாரணமாக பருத்தி நூற்பில்-அல்லாமல், தொழிலாளிக்குத் தேவையான உணவுப் பண்டங்களை வழங்கும் வேளாண்மைத் துறையில் உழைப்பின் உற்பத்தித் திறன் குறைவதை, அதாவது இந்த உணவுப் பண்டங்களின் விலை உயருவதை காரணமாய்க் கொண்டிருக்குமானால், உற்பத்திப் பண்டத்தின் மதிப்பு மாறாமலிருக்கும். 650 என்னும் மதிப்பு முன்போல் இப்போதும் அதே அளவு பருத்தி நூலால் குறிக்கப் பெறும்.

மேலும், மேற்கண்டவற்றிலிருந்து தெரிய வருவது என்ன வென்றால்: மாறா-மூலதனச் செலவீட்டில் ஏற்படும் குறைவு தொழிலாளியின் நுகர்வுக்குப் பயன்படும் பண்டங்களை உற்பத்தி செய்தளிக்கும் உற்பத்திக் கிளைகளில் செய்யப்படும் சிக்கனம் போன்றவற்றை காரணமாய் கொண்டிருக்குமானால், ஈடுபடுத்தப்படும் உழைப்பின் உற்பத்தித் திறனில் ஏற்படும் நேரடி அதிகரிப்பைப்

போலவே இதுவும் தொழிலாளியின் வாழ்வுச் சாதனங்களை விலை மலிவாக்குவதன் மூலம் கூலி குறைவதற்கு வழி செய்யக்கூடும்; ஆகவே உபரி-மதிப்பு அதிகரிப்பதற்கும் வழிசெய்யக் கூடும்; இங்கே இலாப வீதம் இரு காரணங்களால் உயரும்; ஒரு புறம் மாறா-மூலதனத்தின் மதிப்பு குறைவதாலும் உபரி-மதிப்பு அதிகரிப்பதாலும் இலாப வீதம் உயரும். உபரி-மதிப்பு இலாபமாக மாற்றமடைவதை பரிசீலித்தபோது கூலி குறைவதில்லை என்றும், அதே மாறாதிருப்பதாகவும் வைத்துக் கொண்டோம். ஏனென்றால் அங்கே நாம் உபரி-மதிப்பு வீதத்திலான மாற்றங்களைச் சாராமல் இலாபவீதத்தில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களைச் ஆராய வேண்டியிருந்தது. மேலும், இங்கே விவரிக்கப்பட்ட விதிகள் பொது விதிகளாகும்; தொழிலாளியின் நுகர்வுப் பயன்படாத பண்டங்களை உற்பத்தி செய்யும் மூலதன முதலீடுகளுக்கும் பொருந்தக்கூடிய விதிகளாகும்; இவ்வகை உற்பத்திப் பண்டத்தின் மதிப்பிலான மாற்றங்கள் கூலியின் மீது தாக்கம் செலுத்துவதில்லை.

---

ஆண்டுதோறும் உற்பத்திச் சாதனங்களுடன், அல்லது மூலதனத்தின் மாறாக் கூறுடன் புதிய உழைப்பால் சேர்க்கப்படும் புதிய மதிப்பை பல்வேறு வருவாய் வடிவங்களாக, அதாவது கூலியாகவும் இலாபமாகவும் வாடகையாகவும் பிரிப்பதும் பெயர்ப்பதும் அந்த மதிப்பின் வரம்புகளை இந்த பல்வேறு கருத்தினங்களிடையிலும் வினியோகம் செய்யப்பட வேண்டிய மொத்த மதிப்பை கொஞ்சங்கூட மாற்றிவிடுவதில்லை. இதே போல் இந்தத் தனித்தனிக் கூறுகள் தமக்குள் கொண்டிருக்கும் விகித உறவுகளில் ஏற்படும் மாற்றம் அவற்றின் மொத்தத் தொகையை, குறிப்பிட்ட இந்த மதிப்புப் பருமனை மாற்றிவிட முடியாது. 100 என்னும் குறிப்பிட்ட எண் 50+50 என்று பிரிக்கப்பட்டாலும், 20+70+10 என்று பிரிக்கப்பட்டாலும், 40+30+30 என்று பிரிக்கப்பட்டாலும் அந்த எண் எப்போதும் மாறாமலே இருந்து வருகிறது. உற்பத்திப் பண்டத்தின் மதிப்பில் இந்தவருவாய்களாகப் பெயர்க்கப்படும் பகுதியானது மூலதன-மதிப்பின் மாறாப் பகுதியைப் போலவே சரக்குகளின் மதிப்பால், அதாவது ஒவ்வொரு நேர்விலும் அவற்றில் உருக்கொள்ளும் உழைப்பளவால் நிர்ணயிக்கப்படுகிறது. ஆகவே முதலில் குறிப்பிட்டதாய் இருப்பது கூலியாகவும் இலாபமாகவும் வாடகையாகவும் பிரிக்கப்பட வேண்டிய சரக்கு-மதிப்பின் அளவுதான், அதாவது இந்தச் சரக்குகளுடைய மதிப்புக் கூறுகளின் மொத்தத் தொகைக்கான அறுதி வரம்புதான்.

இரண்டாவதாக, தனிப்பட்ட கருத்தினங்களைப் பொறுத்தவரை, அவற்றின் சராசரியும் ஆளும் வரம்புகளும் அதே போல் குறிப்பிட்டவையாகும். இந்த வரம்பெல்லைக்கு அடிப்படையாக அமைவது கூலி, இந்த அமிசத்தில் கூலியானது ஓர் இயற்கை விதியால் ஆளப்படுகிறது; தொழிலாளிக்கு அவரது உழைப்புச் சக்தியைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் மறுவுற்பத்தி செய்து கொள்வதற்கும் தேவைப்படும் வாழ்வுச் சாதனங்களின் பௌதிக குறைந்த பட்ச அளவால், அதாவது குறிப்பிட்ட அளவு சரக்குகளால் கூலியின் கீழ்வரம்பு நிர்ணயிக்கப்படுகிறது. இந்தச்சரக்குகளின் மதிப்பு அவற்றின் மறுவுற்பத்திக்குத் தேவைப்படும் உழைப்பு நேரத்தால் நிர்ணயிக்கப்படுகிறது; அதாவது உற்பத்திச் சாதனங்களுடன் சேர்க்கப்படும் புதிய உழைப்பில் இந்த அவசிய வாழ்வுச் சாதனங்களின் மதிப்புக்கான சமதையை உற்பத்தியும் மறுவுற்பத்தியும் செய்திட தொழிலாளிக்குத் தேவைப்படும் பகுதியால், அதாவது ஒவ்வொரு வேலை-நாளிலும் அந்தப் பகுதியால் நிர்ணயிக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக, தொழிலாளிக்கு அன்றாடம் சராசரியாகத் தேவைப்படும் வாழ்வுச் சாதனங்களின் மதிப்பு = 6 மணி நேர சராசரி உழைப்பு என்றால் அவர் தமக்காக நாளொன்றுக்கு சராசரியாக 6 மணி நேரம் உழைத்தாக வேண்டும். அவரது உழைப்புச் சக்தியின் உள்ளபடியான மதிப்பு இந்த பௌதிக குறைந்தபட்சத்திலிருந்து விலகிச் செல்கிறது. அது தட்பவெப்ப நிலைக்கும் சமூக வளர்ச்சித் தரத்திற்கும் ஏற்ப வேறுபடுகிறது; அது பௌதிகத் தேவைகளை மட்டுமல்லாமல், வரலாற்று வழியில் வளர்ச்சி பெற்ற சமூகத் தேவைகளையும் பொறுத்ததாகும்; இந்த சமூகத் தேவைகள் இரண்டாவது இயற்கை ஆகிவிடுகின்றன. ஆனால் ஒவ்வொரு நாட்டிலும் இந்த ஆளும் சராசரிக் கூலி குறிப்பிட்ட சமயத்தில் குறிப்பிட்ட பருமனாய் இருக்கிறது. இவ்வாறே ஏனைய எல்லா வருவாய்களின் மதிப்புக்கும் வரம்பு உள்ளது. அது எப்போதுமே வேலை-நாள் முழுவதும் (இங்கு வேலை -நாள் என்பது சராசரி வேலை-நாளுடன் ஒருங்கமைகிறது. ஏனென்றால் மொத்தச் சமுதாய மூலதனத்தால் இயங்கச் செய்யப்படும் மொத்த உழைப்பளவை உள்ளடக்கியதாகும்). உருக்கொள்கிற மதிப்பிலிருந்து வேலை-நாளில் கூலியாக உருக்கொள்ளும் பகுதியைக் கழித்து வருவதற்குச் சமம். ஆகவே அதன் வரம்பு ஊதியமிலா உழைப்பைக் குறிக்கும் மதிப்பினால், அதாவது இந்த, ஊதியமிலா உழைப்பின் அளவினால் நிர்ணயிக்கப்படுகிறது. வேலை-நாளில் தொழிலாளி தமது கூலியின் மதிப்பை மறுவுற்பத்தி செய்வதற்குத் தேவைப்படும்

பகுதியானது கூலியின் பௌதிகக் குறைந்தபட்சத்தில் அதன் இறுதிவரம்பைக் காணும் போதே, வேலை-நாளில் உபரி-உழைப்பு உருக்கொள்ளும் மறுபகுதியானது, உபரி-மதிப்பைக் குறிக்கும் மதிப்பு கூறாமை வேலை-நாளின் பௌதிக அதிகபட்சத்தில், அதாவது பொதுவாகச் சொன்னால், தொழிலாளி முனைப்புடன் வேலை செய்தாலும் தமது உழைப்புச் சக்தியைப் பாதுகாத்து மறுவுற்பத்தி செய்து கொள்ள முடிகிற அன்றாட உழைப்பு நேரத்தின் மொத்த அளவில் அதன் வரம்பைக் காண்கிறது. ஆண்டுதோறும் புதிதாய்ச் சேர்க்கப்படும் மொத்த உழைப்பைக் குறிக்கிற மதிப்பின் வினியோகப் பங்கீடுதான் இங்கு நம் கருத்துக்குரியது என்பதால், வேலை-நாளை மாறாப் பருமனாகவே கருதலாம்; வேலை-நாள் அதன் பௌதிக அதிக பட்சத்திலிருந்து அதிகமாகவோ குறைவாகவோ எவ்வளவுதான் விலகிச் சென்றாலும் கூட, இங்கு மாறாப் பருமனாகவே கொள்ளப்படுகிறது. உபரி-மதிப்பாக அமைவதும், இலாபமாகவும் நில-வாடகையாகவும் பகுபடுவதுமான மதிப்புக் கூறின் அறுதி வரம்பு இவ்விதம் குறிப்பிட்ட ஒன்றாகிறது. அது வேலை-நாளின் ஊதியப் பகுதிக்கு மேல் ஊதியமிலாப் பகுதி பெற்றுள்ள மிகை அளவால், அதாவது மொத்த உற்பத்திப் பண்டத்தின் மதிப்பில் இந்த உபரி-உழைப்பு இடம் பெற்றுள்ள பகுதியால் நிர்ணயிக்கப்படுகிறது. இவ்விதம் வரம்பிடப்பட்டு மொத்த மூலதன முன்னீட்டின் அடிப்படையில் கணக்கிடப்படும் உபரி-மதிப்பை இலாபம் என்று அழைப்போமானால் - நான் அப்படித்தான் அழைக்கிறேன் - இந்த இலாபம் அதன் அறுதிப் பருமனைப் பொறுத்தவரை, உபரி-மதிப்புக்கும் சமம்; உபரி-மதிப்பைப் போலவே இதன் வரம்புகளும் விதிப்படி நிர்ணயிக்கப்படுகின்றன. மறுபுறம், இலாப வீதத்தின் படித்தரமும், சரக்குகளின் மதிப்பால் நிர்ணயிக்கப்படும் குறிப்பிட்ட பிரத்யேக வரம்புகளுக்குட்பட்ட ஒரு பருமனாகும். அது மொத்த உபரி-மதிப்புக்கும் பொருளுற்பத்தியில் முன்னீடு செய்யப்படும் மொத்தச் சமுதாய மூலதனத்துக்குமான விகிதமாகும். இந்த மூலதனம் = 500 (மில்லியன் என்போம்). உபரி-மதிப்பு = 100 என்றால், இலாப வீதத்துக்கான அறுதி வரம்பு 20% ஆகும். பல்வேறு உற்பத்திக் கிளைகளிலும் முதலீடாகிற மூலதனங்களிடையே இந்த இலாப வீதத்தின் படி சமுதாய இலாபம் வினியோகமாவது உற்பத்தி-விலைகளைத் தோற்றுவிக்கிறது; இவ்விலைகள் சரக்கு-மதிப்புகளிலிருந்து வேறுபட்டு விலகிச் செல்கிறவையாகவும் சந்தை-விலைகளை ஆளும்உள்ளபடியான சராசரிகளாகவும் அமைகின்றன. ஆனால் அவை இவ்விதம் விலகிச் செல்வதை விலைகள் மதிப்புகளால்

நிர்ணயிக்கப்படுவதையோ இலாபத்தின் விதிப்படியான வரம்புகளையோ ஒழித்து விடுவதில்லை. ஒரு சரக்கின் மதிப்பு அதன் உற்பத்தியில் நுகரப்பட்ட மூலதனம் அதிலடங்கியுள்ள உபரி-மதிப்பு என்னும் கூட்டுத்தொகைக்குச் சமமாவதற்கு பதிலாக, அதன் உற்பத்தி - விலை இப்போது அதன் உற்பத்தியில் நுகரப்பட்ட மூலதனமாகிய c+ பொது இலாப வீதத்தின் பயனாய் அதன் பங்குக்குக் கிடைக்கும் உபரி-மதிப்பு என்னும் கூட்டுத் தொகைக்குச் சமமாகிறது; அதன் உற்பத்திக்காக முன்னீடு செய்யப்படும் மூலதனத்தின் மீது - நுகரப்பட்ட மூலதனம், ஈடுபடுத்தப்பட்ட போதிலும் நுகரப்படாத மூலதனம் ஆகிய இரண்டின் மீதும் - பொது இலாப வீதம் 20% எனக் கொள்கிறோம். ஆனால் இந்த 20% கூடுதல் அளவே கூட மொத்த சமுதாய மூலதனத்தால் படைக்கப்படும் உபரி-மதிப்பால்தான் நிர்ணயிக்கப்படுகிறது; அதனால்தான் இது 10 அல்லது 100 ஆக இல்லாமல், 20% ஆக இருக்கிறது. ஆக, மதிப்புகள் உற்பத்தி-விலைகளாக மாற்றமடைவது இலாபத்தின் மீதான வரம்புகளை அகற்றிவிடுவதில்லை; சமுதாய மூலதனத்தின் அங்கங்களாக அமையும் பல்வேறு தனிப்பட்ட மூலதனங்களிடையிலும் இலாபம் வினியோகமாவதில் மட்டுமே இதனால் மாற்றம் ஏற்படுகிறது; அதாவது தனிப்பட்ட மூலதனங்கள் இந்த மொத்த மூலதனத்தின் மதிப்புக் கூறுகளாக அமையும் விகிதத்தில் இலாபம் அவற்றிடையே வினியோகமாகிறது. சந்தை-விலைகள் இந்த ஆளும் உற்பத்தி-விலைகளுக்கு மேலும் கீழுமாய் ஏறி இறங்குகின்றன; ஆனால் இந்த அலைவுகள் தமக்குள் ஒன்றையொன்று சரிகட்டிக் கொள்கின்றன. சற்றே நீண்ட காலத்துக்குரிய விலைப்பட்டியல்களை ஆராய்ந்து பார்ப்போமானால், சரக்குகளின் உள்ளபடியான மதிப்பு உழைப்பின் உற்பத்தித் திறனில் ஏற்படும் மாற்றத்தால் மாற்றத்துக் குள்ளாகிற நேர்வுகளையும், அதே போது பொருளுற்பத்தி நிகழ்முறை இயற்கை அல்லது சமூக விபத்துகளால் குலைவுறும் நேர்வுகளையும் ஒதுக்கிவிட்டுப் பார்ப்போமானால், முதலாவதாக விலகல்கள் ஒப்பளவில் குறுகிய வரம்புகளுக்குள் நிகழ்வதையும் இரண்டாவதாக இந்த விலகல்கள் முறையாகத் தொடர்ந்து ஒன்றையொன்று சரிகட்டிக் கொள்வதையும் கண்டு வியப்படைவோம். சமூக நிகழ்வுகள் தொடர்பாக காட்டாலே சுட்டிக் காட்டிய ஆளும் சராசரிகளின் அதே ஆட்சியை இங்கும் காணலாம். சரக்குகளின் மதிப்புகள் உற்பத்தி-விலைகளாகச் சமனமாவதற்கு எவ்விதத் தடைகளும் இல்லையென்றால், வாடகை வேறுபாட்டு வாடகையாகப் பெயர்கிறது. அதாவது, ஆளும் உற்பத்தி-விலைகளால் சில முதலாளிகளுக்கு

தரப்படக்கூடியதும், இப்போது நிலவுடைமையாளரால் தனதாக்கிக் கொள்ளப்படுவதுமான உபரி- இலாபங்களை சமனமாக்குவதோடு அது வரம்புக்குட்படுகிறது. இவ்வாறு உற்பத்தி-விலைகள் பொது இலாப வீதத்தால் ஆளப்படுவதால் தனிப்பட்ட இலாப வீதங்களில் ஏற்படும் விலகல்கள் இங்கே வாடகையின் மதிப்புக்கு திட்டவட்டமாய் வரம்பிடுகின்றன. நிலச்சொத்து சரக்கு-மதிப்புகள் உற்பத்தி-விலைகளாக சமனமாவதில் குறுக்கிட்டு, அறுதி-வாடகையைத் தனதாக்கிக் கொள்கிறது என்றால், விவசாய விளைப்பொருட்களின் மதிப்பு அவற்றின் உற்பத்தி-விலைக்கு மேல் பெற்றுள்ள மிகையளவு அதாவது அவற்றிலடங்கியுள்ள உபரி-மதிப்பு பொது இலாப வீதத்தால் முதலாளிகளுக்கு ஒதுக்கப்படும் இலாபத்துக்கு மேல் பெற்றுள்ள மிகையளவு இந்த அறுதி வாடகைக்கு வரம்பிடுகிறது. ஆக இந்த வேறுபாடு, வாடகைக்கு வரம்பாகிறது. முன் போலவே வாடகை என்பது சரக்குகளில் அடங்கியுள்ள குறிப்பிட்ட உபரி-மதிப்பின் ஒரு பிரத்தியேகக் கூறுதானே தவிர வேறல்ல.

முடிவில், உபரி-மதிப்பு சராசரி இலாபமாக சமனமாவதற்கு செயற்கை ஏகபோகங்களின் வடிவிலோ இயற்கை ஏகபோகங்களின் வடிவிலோ முக்கியமாய் நிலச் சொத்திலான ஏகபோகத்தின் வடிவில் பல்வேறு உற்பத்திக் கிளைகளிலும் தடைகள் எழுமானால், அதாவது ஏகபோக விலை சாத்தியமாகி, இத்தகைய ஏகபோகத்தால் சாதிக்கப்படும் சரக்குகளின் உற்பத்தி-விலைக்கு மேலேயும் மதிப்புக்கு மேலேயும் அது உயருமானால், சரக்குகளின் மதிப்பால் விதிக்கப்படும் வரம்புகள் அதனால் ஒழிந்துவிட மாட்டா. குறிப்பிட்ட சில சரக்குகளின் ஏகபோக விலையானது ஏனைய சரக்கு-உற்பத்தியாளர்களின் இலாபத்தில் ஒரு பகுதியை ஏகபோக விலை கொண்ட சரக்குகளுக்கு மாற்றிக் கொடுத்துவிடும் என்பதற்கு மேல் ஒன்றுமில்லை. பல்வேறு உற்பத்திக் கிளைகளிடையிலும் உபரி-மதிப்பு வினியோகமாவதில் வட்டார அளவிலான குலைவு சுற்றடியாக ஏற்படும் என்றாலும், இந்த உபரி-மதிப்பின் வரம்பு அதனால் மாறிவிடாது. ஏகபோக விலை கொண்ட சரக்கு தொழிலாளியின் அவசிய நுகர்வில் சேருமானால், தொழிலாளி தொடர்ந்து தமது உழைப்புச் சக்தியின் மதிப்பைப் பெற்று வருவதாகக் கொள்ளுமிடத்து, இதனால் கூலி உயரும், எனவே உபரி-மதிப்பு குறையும். இது கூலியை உழைப்புச்சக்தியின் மதிப்பை விடவும் குறையச் செய்திடக்கூடும்; ஆனால் கூலி அதன் பௌதிகக் குறைந்தபட்சத்தை விஞ்சுகிற அளவுக்கு மட்டுமே இவ்வாறு நடைபெறக் கூடும். இவ்வாறு நேரிடும் போது, ஏகபோக விலையானது

உண்மைக் கூலியிலிருந்தும் (அதாவது, உழைப்பளவு மாறாதிருக்க, அதற்காக தொழிலாளி பெறும் பயன்-மதிப்புகளின் அளவிலிருந்து) ஏனைய முதலாளிகளின் இலாபத்திலிருந்தும் கழித்துச் செலுத்தப்படும். ஏகபோக விலை எந்த வரம்புகளுக்குள் சரக்கு-விலைகளின் இயல்பான ஒழுங்கியக்கத்தை பாதிக்கும் என்பது உறுதியாய் நிர்ணயிக்கப் பட்டதாகவும் துல்லியமாய்க் கணக்கிடக்கூடியதாகவும் இருக்கும்.

ஆக, புதிதாய்ச் சேர்க்கப்பட்ட சரக்கு-மதிப்பும், பொதுவாகச் சொன்னால், வருவாயாகப் பெயர்க்கத்தக்க மதிப்பும் கூறுகளாகப் பிரிக்கப்படுவதற்கு அவசிய-உழைப்புக்குப் உபரி-உழைப்புக்குமான விகித உறவு, கூலிக்கும் உபரி-மதிப்புக்குமான விகித உறவு நிர்ணயமாக ஆளும் வரம்புகளாக அமைவது போலவே, உபரி-மதிப்பு இலாபமாகவும் நில-வாடகையாகவும் பிரிவதற்கு இலாப வீதத்தின் சமனமாக்கத்தை ஆளும் விதிகள் வரம்புகளாகின்றன. வட்டியாகவும் முனைவு-இலாபமாகவும் பிரிவதைப் பொறுத்த வரை, சராசரி இலாபமே இரண்டுக்கும் சேர்த்து வரம்பாகிறது. அது குறிப்பிட்ட மதிப்புப் பருமனை வழங்குகிறது; இதை அவை தம்மிடையே இரண்டாகப் பிரித்துக் கொள்ளலாம். இதை மட்டுமே இவ்வாறு-பிரிக்க முடியும். இந்தப் பிரிவினையின் குறிப்பிட்ட விகிதமானது இங்கு தற்செயலானது, அதாவது முழுக்க முழுக்க போட்டியின் நிலைமைகளால் நிரணயிக்கப்படுவது ஆகும். இதர நேர்வுகளில் வழங்கலும் வேண்டலும் நேராவது சந்தை-விலைகள் அவற்றை ஆளும் சராசரி விலைகளிலிருந்து விலகிச் செல்வதால் ஏற்படும் வேறுபாடுகள் ஒழிந்து போவதற்கு, அதாவது போட்டியின் தாக்கம் ஒழிந்து போவதற்கு ஒப்பாய் இருக்க, இங்கு அது மட்டுமே நிர்ணயிக்கும் காரணியாய் இருக்கிறது. ஏன்? ஏனென்றால், அதே உற்பத்திக் காரணியாகிய மூலதனம் உபரி-மதிப்பில் தனக்குரிய பங்கை அதே உற்பத்திக் காரணியின் இரு உடைமையாளர்களுக்கிடையே பிரித்துக்கொடுக்க வேண்டியுள்ளது. ஆனால் இங்கே சராசரி இலாபத்தின் பிரிவினைக்கு திட்டவட்டமான, விதிப்படியான வரம்பேதும் இல்லை என்பது சரக்கு-மதிப்பின் ஒரு பகுதி என்ற முறையில் சராசரி இலாபத்திற்குள்ள வரம்பை ஒழித்து விடுவதில்லை; குறிப்பிட்ட ஒரு தொழிலில் பங்காளர்களான இருவர் வெளி நிலைமைகளிலான வேறுபாடு காரணமாய் தங்கள் இலாபத்தை சமமல்லாத முறையில் பிரித்துக் கொள்வது, இந்த இலாபத்திற்குள்ள வரம்புகளை எவ்விதத்தும் பாதிப்பதில்லை என்பதைப் போன்றதே இதுவும்.

ஆகவே, சரக்கு-மதிப்பில் உற்பத்திச் சாதனங்களின் மதிப்போடு சேர்க்கப்படும் புதிய உழைப்பு உருக்கொள்ளும் கூறானது பல்வேறு பகுதிகளாக - வருவாய் வடிவில் ஒன்றையொன்று சாராத வடிவங்களை மேற்கொள்ளும் பகுதிகளாக-பிரிக்கப்பட்ட போதிலும், கூலியையும் இலாபத்தையும் நில-வாடகையையும் சரக்குகளின் ஆளும் விலை (இயற்கை விலை, prix necessaire) என்பதற்கு ஒன்றிணைந்த, அல்லது யாவும் சேர்ந்த ஆதாரமாகிற உள்ளடக்கக் கூறுகளாக இப்போது கருதுவதற்கு இது எவ்வகையில் காரணமாகாது; ஆகவே மாறா மதிப்புக் கூறினை கழித்தபின் எஞ்சியிருக்கும் சரக்கு-மதிப்பு இந்த மூன்று பகுதிகளாகவும் பிரிகிற ஆரம்ப ஓர்மையாக இருக்காது. மாறாக இந்த மூன்று பகுதிகளில் ஒவ்வொன்றின் விலையும் சுயேச்சையாக நிர்ணயிக்கப்பட்டு, பிறகு சரக்குகளின் விலையானது இந்த மூன்று சுயேச்சைப் பருமன்களையும் கூட்டிச் சேர்ப்பதன் மூலம் உருவாக்கப்படும். உண்மையில், சரக்கு-மதிப்புதான் கூலி, இலாபம், வாடகை ஆகியவற்றின் மொத்த மதிப்புகளது கூட்டுத் தொகை முதனிலையாகிற பருமனாகும், அது இம்மூன்றின் ஒப்பீட்டுப் பருமன்களைப் பொறுத்ததல்ல. மேற்கண்ட தவறான கண்ணோட்டத்தில் கூலியும் இலாபமும் வாடகையும் சுயேச்சையான மூன்று மதிப்புப் பருமன்களாகவும், இவற்றின் மொத்தப் பருமன் சரக்கு -மதிப்பின் பருமனை உற்பத்தி செய்து வரம்பிட்டு நிர்ணயிப்பதாகவும் கருதப்படுகிறது.

முதலாவதாக, கூலியும் இலாபமும் வாடகையும் சரக்குகளின் விலையாக அமையுமானால், சரக்கு-மதிப்பில் மாறும்-மூலதனமும் உபரி-மதிப்பும் உருக்கொள்ளும் கூறுக்கு இது பொருந்துவது போலவே, மாறாக் கூறுக்கும் பொருந்தும் என்பது தெளிவு. ஆகவே இந்த மாறாக் கூறினை இங்கு கருதாமல் அறவே விட்டு விடலாம். ஏனென்றால் மாறாக் கூறாக அமைந்திடும் சரக்கு-மதிப்பும் கூட, அதே போல் கூலி, இலாபம், வாடகை ஆகியவற்றின் மதிப்புகளது கூட்டுத் தொகையாகப் பெயர்த்திடும். இந்தக் கண்ணோட்டம் இப்படியொரு மாறா-மதிப்புக் கூறு இருப்பதையே மறுப்பதாகும் என்று முன்பே குறிப்பிட்டோம்.

மதிப்பு என்பது இங்கு அடியோடு அர்த்தமிழந்துவிடுவதும் தெளிவாய்த் தெரிகிறது. விலையின் கருத்தமைவு மட்டுமே எஞ்சியுள்ளது; உழைப்புச் சக்தி, மூலதனம், நிலம் ஆகியவற்றின் உடைமையாளர்களுக்கு குறிப்பிட்ட பணத்தொகை தரப்படுகிறது என்ற

அர்த்தத்தில் இவ்வாறு சொல்கிறோம். ஆனால் பணம் என்பது என்ன? பணம் என்பது குறிப்பிட்ட மதிப்பு வடிவம்தானே தவிர ஒரு பொருளோ பண்டமோ அல்ல; அதாவது மதிப்பு இல்லையேல் பணமும் இல்லை. குறிப்பிட்ட அளவு தங்கம் அல்லது வெள்ளி இந்த உற்பத்தி-அடிக்கூறுகளுக்கு விலையாகத் தரப்படுகிறது, அல்லது கருத்தளவில் அவற்றுக்கு சமன் செய்யப்படுகிறது என்போம். ஆனால் ஏனைய எல்லாச் சரக்குகளையும் போலவே தங்கமும் வெள்ளியும் கூட சரக்குகள்தான் (அறிவார்ந்த பொருளாதார அறிஞர் இந்தக் கண்டுபிடிப்பு குறித்து பெருமைப்பட்டுக் கொள்கிறார்). ஆகவே தங்கம், வெள்ளியின் விலையும் கூட அதே போல் கூலி, லாபம், வாடகை ஆகியவற்றால் நிர்ணயிக்கப்படுகிறது. கூலியையும் இலாபத்தையும் வாடகையையும் குறிப்பிட்ட அளவு தங்கம், வெள்ளிக்கு சமன் செய்வது மூலம் நாம் அவற்றை நிர்ணயிக்க முடியாது. ஏனென்றால் இந்த தங்கம், வெள்ளியின் மதிப்பானது-அவற்றை மதிப்பீடு செய்வதற்கான சமதை என்ற முறையில் கூலி, இலாபம், வாடகை ஆகியவற்றாலேயே நிர்ணயிக்கப்படுவதாகக் கொள்ளப் படுகிறது; தங்கம், வெள்ளியைச் சாராமல் அதாவது எந்தவொரு சரக்கின் மதிப்பையும் சாராமல் அது இவ்விதம் நிர்ணயிக்கப்படுகிறது; எந்தவொரு சரக்கின் மதிப்பும் மேற்சொன்ன மூன்று காரணிகளின் விளைபயன்தான். ஆக கூலி, இலாபம், வாடகை ஆகியவற்றின் மதிப்பு அவை குறிப்பிட்ட அளவு தங்கம், வெள்ளிக்கு சமமாய் இருப்பதில் அடங்கியுள்ளது என்று சொல்வது அவை குறிப்பிட்ட அளவு, கூலி, இலாபம், வாடகைக்கு சமமாய் இருப்பதாகச் சொல்வதுதானே தவிர வேறல்ல.

முதலில் கூலியை எடுத்துக்கொள்வோம். ஏனென்றால் இந்தக் கோணத்திலும் கூட உழைப்பைத் தொடக்கமுனை ஆக்கிக் கொள்வது அவசியமாகும். அப்படியானால், கூலியின் ஆளும் விலை - எவ்விலையைச் சுற்றி அதன் சந்தை-விலைகள் அலைவுறுகின்றனவோ அவ்விலை-எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது?

அது உழைப்புச் சக்தியின் வழங்கல்-வேண்டலால் நிர்ணயிக்கப் படுவதாகச் சொல்வோம். ஆனால் உழைப்புச் சக்திக்கான வேண்டலில் இது எவ்வகைப்பட்டது? இது மூலதனத்தின் வேண்டல் ஆகும். ஆகவே உழைப்பிற்கான வேண்டல் மூலதனத்தின் வழங்கலுக்குச் ஈடாகிறது. மூலதனத்தின் வழங்கல் குறித்து பேச வேண்டுமானால், மூலதனம் என்றால் என்ன என்பதையெல்லாம் தெரிந்து வைத்திருக்க

வேண்டும். மூலதனம் எவற்றாலானது? சாமானிய வடிவில் அது பணத்தாலும் சரக்குகளாலும் ஆனது. ஆனால் பணம் என்பது சரக்கின் வடிவம்தானே தவிர வேறல்ல. அப்படியானால், மூலதனம் என்பது சரக்குகளால் ஆனது. ஆனால் நமது அனுமானப்படி சரக்குகளின் மதிப்பாவது முதலாவதாக சரக்குகளை உற்பத்தி செய்யும் உழைப்பின் விலையால், கூலியால், நிர்ணயிக்கப்படுகிறது. கூலி என்பது இங்கே அனுமானம் செய்து கொள்ளப்பட்டு சரக்குகளின் விலையில் ஓர் அடக்கக் கூறாக கொள்ளப்படுகிறது. அப்படியானால், இந்த விலை கிடைக்கக் கூடிய உழைப்புக்கும் மூலதனத்துக்குமான விகிதத்தால் நிர்ணயிக்கப்பட்டாக வேண்டும். மூலதனத்தின் விலை அது எவற்றாலானதோ அச்சரக்குகளின் விலைக்குச் சமம். உழைப்புக்கான மூலதனத்தின் வேண்டல் மூலதனத்தின் வழங்கலுக்குச் சமம். மூலதனத்தின் வழங்கல் குறிப்பிட்ட விலை கொண்ட சரக்களவில் வழங்கலுக்குச்சமம்; இந்த விலை முதலாவதாக உழைப்பின் விலையால் ஆளப்படுகிறது; உழைப்பின் விலையோ சரக்குவிலையில் மாறும்-மூலதனமாக அமையும் பகுதிக்கு சமம்; இப்பகுதியானது தொழிலாளிக்கு அவரது உழைப்புக்குப் பிரதியாக வழங்கப்படுகிறது; இந்த மாறும்-மூலதனமாக அமையும் சரக்குகளின் விலையும் கூட முதலாவதாக, உழைப்பின் விலையால் நிர்ணயிக்கப்படுகிறது. ஏனென்றால், கூலி, இலாபம், வாடகை ஆகியவற்றின் விலைகளால் அது நிர்ணயிக்கப்படுகிறது. ஆகவே கூலியை நிர்ணயிக்க வேண்டுமானால், நாம் மூலதனத்தைத் தொடக்கமாக கொள்ள முடியாது; ஏனென்றால், மூலதனத்தின் மதிப்பை நிர்ணயிக்கும் காரணிகளில் கூலியும் ஒன்று.

மேலும், இந்தச் சிக்கலுக்குள் போட்டியை நுழைப்பதால் ஒரு பயனுமில்லை. போட்டியினால் உழைப்பின் சந்தை-விலைகள் ஏறவோ இறங்கவோ செய்கின்றன. ஆனால் உழைப்பின் வழங்கலும் வேண்டலும் ஒன்றை ஒன்று நேர் செய்து விடுவதாகக் கொள்வோம். அப்படியானால், கூலி எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது? போட்டியால் நிர்ணயிக்கப்படுகிறது. ஆனால் போட்டி ஒரு நிர்ணயிக்கும் காரணியாக இல்லாமல் போகிறது என்று, எதிரெதிராகச் செயல்படும் அதன் இரு சக்திகளுக்கிடையில் சமநிலை ஏற்படுவதால், அதன் விளைவு ஒழிந்து போகிறது என்று சற்று முன்புதான் அநுமானம் செய்து கொண்டோம். கூலியின் இயற்கை-விலையைத்தான் நாம் கண்டுவிட முனைந்துள்ளோம்; உழைப்பின் இந்த விலை போட்டியால் ஆளப்படுவதல்ல, மாறாக போட்டியை ஆளுவதாகும்.

ஆக எஞ்சியிருப்பதெல்லாம் தொழிலாளியின் அவசிய வாழ்வுச் சாதனங்களைக் கொண்டு உழைப்பின் அவசிய விலையை நிர்ணயிப்பதுதான். ஆனால் இந்த வாழ்வுச் சாதனங்கள் சரக்குகளாகும், இந்தச் சரக்குகளுக்கு ஒரு விலை உண்டு. ஆகவே உழைப்பின் விலையானது அவசிய வாழ்வுச் சாதனங்களின் விலையால் நிர்ணயிக்கப்படுகிறது; வாழ்வுச் சாதனங்களின் விலையோ ஏனைய எல்லாச் சரக்குகளின் விலையையும் போலவே முதலாவதாக உழைப்பின் விலையால் நிர்ணயிக்கப்படுகிறது. இவ்வாறு வாழ்வுச் சாதனங்களின் விலையால் நிர்ணயிக்கப்படும் உழைப்பின் விலை உழைப்பின் விலையால் நிர்ணயிக்கப்படுகிறது. உழைப்பின் விலை உழைப்பின் விலையாலேயே நிர்ணயிக்கப்படுகிறது. அதாவது உழைப்பின் விலை எப்படி நிர்ணயிக்கப்படுகிறது என்று நமக்குத் தெரியவில்லை. உழைப்பு ஒரு சரக்காக கருதப்படுவதால் இங்கு எப்போதுமே அதற்கொரு விலையுண்டு. ஆகவே உழைப்பின் விலை குறித்து பேச வேண்டுமானால், பொதுவாக விலை என்றால் என்னவென்று நமக்குத் தெரிந்திருக்க வேண்டும். ஆனால் பொதுவாக விலை என்றால் என்னவென்று இவ்வழியில் நாம் இம்மியளவும் கற்றுக்கொள்ள முடியாது.

ஆனாலும் உவப்பான இவ்வழியில் உழைப்பின் அவசிய விலை நிர்ணயிக்கப்படுவதாக வைத்துக் கொள்வோம். அப்படியானால் சராசரி இலாபம், இயல்பான நிலைமைகளில் ஒவ்வொரு மூலதனத்துக்கும் கிடைக்கிற இலாபம் - சரக்குகளின் விலையில் இரண்டாவது கூறாக அமைகிற இது - எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது? சராசரி இலாபம் சராசரி இலாப வீதத்தால் நிர்ணயிக்கப்பட்டாக வேண்டும்; இந்த இலாப வீதம் எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது? முதலாளிகளிடையிலான போட்டியால் நிர்ணயிக்கப்படுகிறதா? ஆனால் இலாபம் என்ற ஒன்று இல்லையேல் போட்டியும் இல்லை. போட்டி இருக்க வேண்டுமானால், பல்வேறு இலாப வீதங்களும், பல்வேறு இலாபங்களும் இருந்தாக வேண்டும் - ஒரே உற்பத்திக் கிளையிலானாலும் சரி, வெவ்வேறு கிளைகளிலானாலும் சரி, போட்டியானது சரக்குகளின் விலைகளை பாதிக்கிற அளவுக்கு மட்டுமே இலாபவீதத்தின் மீது தாக்கம் செலுத்த முடியும். போட்டியானது ஒரே உற்பத்திக் கிளையைச் சேர்ந்த உற்பத்தியாளர்கள் தமது சரக்குகளை ஒரே விலைக்கு விற்கும்படி செய்யலாம், வெவ்வேறு உற்பத்திக் கிளைகளில் அவர்கள் தங்கள் சரக்குகளை தங்களுக்கு ஒரே இலாபம் - ஏற்கெனவே பகுதியளவுக்கு கூலியால் நிர்ணயிக்கப்பட்டுள்ள சரக்கு-விலையுடன்

கூடுதலாகச் சேர்க்கப்படும் ஒரே விகித அளவு - தரும்படியான விலைக்கு விற்கும்படி செய்யலாம், அவ்வளவுதான். ஆகவே போட்டியானது இலாப வீதத்திலான ஏற்றத்தாழ்வுகளை நீக்கிச் சமனமாக்கலாம் என்பதற்கு மேல் ஒன்றுமில்லை. சமமல்லாத இலாப வீதங்களை சமனமாக்க வேண்டுமானால், இலாபம் என்பது சரக்குகளின் விலையில் ஒரு கூறாக இடம் பெறவேண்டும். போட்டி இலாபத்தை தோற்றுவிப்பதில்லை, அது இலாபத்தின் படித்தரத்தை தாழ்த்துகிறது அல்லது உயர்த்துகிறது; ஆனால் இந்தச் சமனமாக்கம் நடந்தேறுவதன் மூலம் நிலைநாட்டப்படும் படித்தரத்தை அது தோற்றுவிப்பதில்லை. அவசிய இலாப விதம் என்று நாம் பேசும்போது, போட்டியின் அசைவியக்கங்களைச் சார்ந்திராத இலாபவீதத்தைத்தான் உள்ளபடியே போட்டியை ஆளும் காரணியாகிய இலாபவிதத்தைத்தான் நாம் அறிய விரும்புகிறோம். போட்டியிடும் முதலாளிகளிடையே சக்திகளின் சமநிலை ஏற்படும்போது சராசரி இலாப வீதம் தலையெடுக்கிறது. போட்டி இந்தச்சமநிலையை நிலைநாட்டலாமே தவிர, இந்தச் சமநிலையை வைத்து தலையெடுக்கும் லாப வீதத்தை நிலைநாட்ட முடியாது. இந்தச் சமநிலை நிலைநாட்டப்படும் போது பொது இலாப வீதம் 10, 20, அல்லது 100%ஆக இருப்பது ஏன்? போட்டிதான் காரணமா? அல்ல மாறாக போட்டியானது 10, 20,அல்லது 100%இலிருந்து விலகி செல்வதற்கு வழிவகுக்கும் காரணங்களை ஒழித்துவிட்டது. அது ஒரு சரக்கு-விலையை தோற்றுவித்துள்ளது. இந்தச் சரக்கு-விலையில் ஒவ்வொரு மூலதனமும் அதன் பருமனுக்கேற்ற விகிதத்தில் ஒரே இலாபம் தருகிறது. ஆனால் இந்த இலாபத்தின் பருமன் போட்டியைப் பொறுத்ததல்ல. போட்டியானது ஓயாமல் இந்தப் பருமனிலிருந்துதான் விலகல்கள் அனைத்தையும் குறைக்கிறது என்பதற்கு மேல் ஒன்றுமில்லை. ஒருவர் இன்னொருவருடன் போட்டியிடுகிறார். அவர் தமது சரக்கை மற்றவர் விற்கும் அதே விலைக்கு விற்கும்படி போட்டி கட்டாயப்படுத்துகிறது. ஆனால் இந்த விலை 10, 20, அல்லது 100 ஆக இருப்பது ஏன்?

ஆக, எஞ்சியிருப்பதெல்லாம் இலாப வீதத்தையும், எனவே இலாபத்தையும், இதுவரை கூலியால் நிர்ணயிக்கப்பட்டு வந்த சரக்கு-விலையோடு ஏதோ விளங்காத முறையில் நிர்ணயிக்கப்பட்டு கூடுதலாய்ச் சேர்க்கப்படும் ஒரு மிகுதிக்கட்டணம் என்று அறிவிக்க வேண்டியதுதான் போட்டி நமக்குச் சொல்கிற ஒன்றே ஒன்று. இந்த இலாப வீதம் ஒரு குறிப்பிட்ட பருமனாய் இருந்தாக வேண்டும் என்பதுதான். ஆனால் முன்பே, பொது இலாப வீதத்தையும்

இலாபத்தின் 'அவசிய-விலையையும்' பரிசீலித்த போதே இது நமக்குத் தெரியும்.

நில-வாடகைத் தொடர்பாக மீண்டும் ஒரு முறை இந்த அபத்தமான பரிசீலனையில் இறங்கத் தேவையில்லை. இந்தப் பரிசீலனையை ஓரளவுக்காவது முரணற்ற வழியில் செய்து பார்ப்போமானால், சரக்கு-விலையோடு - முதலாவதாக கூலியால் நிர்ணயிக்கப்படும் இவ்விலையோடு விளங்காத விதிகளால் நிர்ணயிக்கப்படும் விலையோடு விளங்காத விதிகளால் நிர்ணயிக்கப்பட்டு கூடுதலாய்ச் சேர்க்கப்படும் வெறும் மிகுதிக் கட்டணங்களாகவே இலாபமும் வாடகையும் காட்சியளிப்பதை இப்போதே பார்க்க முடிகிறது. சுருங்கச் சொல்லின், பொருளாதார அறிஞர்கள் போட்டிக்கு விளக்கமளிக்க வேண்டும் என்பதற்கு பதில், பொருளாதார அறிஞர்களின் அர்த்தமற்ற கருத்துகளுக்கெல்லாம் விளக்கமளிக்கும் பொறுப்பு போட்டியின் தலையில் சுமத்தப்படுகிறது.

இப்போது இலாபமும் வாடகையும் சுற்றோட்டத்தால் படைக்கப்படுதல், அதாவது விலையின் அடக்கக்கூறுகள் விற்பனையிலிருந்து எழுதல் என்ற பொய்த்தோற்றத்தை ஒதுக்கி விடுவோமானால் - முதலில் சுற்றோட்டத்தில் இடப்படாத எதுவும் சுற்றோட்டத்திலிருந்து பெறப்படவும் முடியாது - விவகாரம் பின் வருமாறு சுருங்கிவிடுகிறது:

கூலியால் நிர்ணயிக்கப்படும் சரக்கு-விலை = 100, இலாப வீதம் = கூலியில் 10%, வாடகை = கூலியில் 15% என்போம். அப்படியானால் கூலி, இலாபம், வாடகை இவற்றின் கூட்டுத் தொகையால் நிர்ணயிக்கப்படும் சரக்கு-விலை = 125. இந்த கூடுதல் 25 சரக்கின் விற்பனையிலிருந்து வரமுடியாது. ஏனென்றால் ஒருவருக்கொருவர் சரக்குகளை விற்றுக் கொள்ளும் அனைவருமே கூலியாக 100 செலவாவதை 125க்கு விற்கிறார்கள்; இதுவும் அவர்கள் அனைவரும் 100க்கு விற்பதும் ஒன்றுதான். ஆக, இந்தச் செயற்பாட்டை சுற்றோட்ட நிகழ்முறைக்குத் தொடர்பின்றி பரிசீலித்தாக வேண்டும்.

சரக்கு-விலையின் மூன்று கூறுகளும் சரக்கிற்குள் பிரிக்கப்படுவதாகவும், இந்தச் சரக்கின் அடக்க-விலை இப்போது 125 ஆவதாகவும் கொள்வோமானால் - முதலாளி முதலில் 125க்கு விற்று விட்டு, பிறகு தொழிலாளிக்கு 100ம் நமக்கு 101ம் நிலவுடைமையாளருக்கு 15ம் செலுத்தினாலும் நிலைமையில் எவ்வித

மாற்றமும் இல்லை - தொழிலாளி - மதிப்பிலும் உற்பத்திப் பண்டத்திலும் $^4/_5$ பங்கு = 100 தருகிறார். முதலாளி மதிப்பிலும் உற்பத்திப் பண்டத்திலும் $^2/_{25}$ பெறுகிறார். நிலவுடைமையாளர் $^3/_{25}$ பங்கு பெறுகிறார். முதலாளி 100க்குப் பதில் 125க்கு விற்பதால், தொழிலாளிக்கு அவரது உழைப்பு உருக்கொண்டிருக்கும் உற்பத்திப் பண்டத்தின் $^4/_5$ பங்கை மட்டும் கொடுக்கிறார். ஆக, அவர் தொழிலாளிக்கு 80 கொடுத்துவிட்டு தமக்கே 20 வைத்துக் கொண்டால் எப்படியோ அதேபோலத்தான் இதுவும் இந்த 20இல் அவரது பங்குக்கு 8ம் நிலவுடைமையாளர் பங்குக்கு 12வும் போய்ச் சேரும். இப்படி நேரிடுமானால் அவர் சரக்கை அதன் மதிப்புக்கே விற்றிருப்பார்; ஏனென்றால் உண்மையில் விலையுடன் கூடுதலாய்ச் சேர்க்கப் பட்டவை சரக்கின் மதிப்பைச் சார்ந்திராத அதிகரிப்புகளைக் குறிக்கின்றன - இந்தச் சரக்கு-மதிப்பு மேற்கண்ட - அனுமானத்தின்படி கூலியின் மதிப்பால் நிர்ணயிக்கப்படுகிறது. ஆகவே இந்தச் சுற்றி வளைத்த வழியில் தெரியவருவது என்னவென்றால்: இந்தக் கருத்தமைவில் 'கூலி' என்ற சொல் - இங்கு 100 - உற்பத்திப் பண்டத்தின் மதிப்பை, அதாவது இந்தக் குறிப்பிட்ட அளவு உழைப்பைக் குறிக்கும் பணத்தொகையைக் குறிப்பதாகும்; ஆனால் இந்த மதிப்பு உண்மைக் கூலியிலிருந்து வேறுபடுகிறது; எனவே ஓர் உபரி எஞ்சி நிற்கிறது. இங்கே இந்த உபரி பெயரளவுக்கு விலையை கூடுதலாக்குவதன் மூலம் ஈடேறுகிறது, அவ்வளவுதான். ஆகவே கூலி 100க்குப் பதில் 110 ஆக இருக்குமானால் இலாபம் = 11 ஆகவும் நில-வாடகை 16 ½ ஆகவும் இருக்க வேண்டும்; அதாவது சரக்கின்-விலை = 137 ½ ஆக இருக்கும் - இதனால் விகித உறவுகளில் மாற்றம் ஏற்படாது. ஆனால் எப்போதுமே கூலியுடன் குறிப்பிட்ட சதவீதங்களை பெயரளவுக்கு கூடுதலாய்ச் சேர்ப்பதன் மூலமே இந்தப் பிரிவினை அடையப் பெறும், என்பதால், விலையானது, கூலியுடன் சேர்ந்தே உயரவும் குறையவும் செய்யும். கூலி இங்கே முதலில் சரக்கின் மதிப்புக்கு சமமாக்கப்படுகிறது, பிறகு மீண்டும் அதிலிருந்து விலக்கிப் பிரிக்கப்படுகிறது. ஆனால் இப்படியெல்லாம் சுற்றி வளைத்தும் அபத்தமாகவும் பேசுவதன் உண்மைப் பொருள் இதுதான்: சரக்கின் மதிப்பு அதிலடங்கிய உழைப்பின் அளவால் நிர்ணயிக்கப்படுகிறது; அதேபோது கூலியின் மதிப்போ அவசிய வாழ்வுச் சாதனங்கள் விலையால் நிர்ணயிக்கப்படுகிறது; கூலிக்கு மேல் மதிப்பு பெற்றுள்ள நிலைப்பாடு இலாபமும் வாடகையும் ஆகிறது.

சரக்குகளை உற்பத்தி செய்வதில் பயன்பட்டுத் தீர்ந்த உற்பத்திச் சாதனங்களின் மதிப்பைக் கழித்து பின் அச்சரக்குகளின் மதிப்பு பிரிந்து போவது, உற்பத்தி செய்யப்பட்ட சரக்குகளில் பொருள் வடிவாக்கப்பட்ட உழைப்பளவால் நிர்ணயிக்கப்படும் இந்தக் குறிப்பிட்ட மதிப்பளவு மூன்று அடக்கக் கூறுகளாகப் பிரிந்து போவது - இந்த அடக்கக் கூறுகள் கூலியாகவும் இலாபமாகவும் நில-வாடகை யாகவும் சுயேச்சையாகவும், தமக்குள் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத வருவாய் வடிவங்களை மேற்கொள்கின்றன - முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் மேற்பரப்பிலும், அப்பொருளுற்பத்தியின் பிடியில் சிக்கியவர்களின் உள்ளத்திலும் உருச்சிதைந்து காட்சியளிக்கிறது.

குறிப்பிட்ட ஒரு சரக்கின் மொத்த மதிப்பு=300 என்றும், இதில் அச்சரக்கின் உற்பத்தியில் நுகரப்பட்ட உற்பத்திச் சாதனங்கள் அல்லது மாறா- மூலதனக் கூறுகளின் மதிப்பு=200 என்றும் வைத்துக் கொள்வோம். இந்தச் சரக்குடன் அதன் உற்பத்தி நிகழ்முறையில் சேர்க்கப்பட்ட புதிய மதிப்பளவாக 100 எஞ்சுகிறது. இந்தப் புதிய மதிப்பாகிய 100தான் மூன்று வருவாய் வடிவங்களுக்குமிடையே பிரித்துக் கொள்ள வேண்டியதாகும். கூலி = $x$, இலாபம் = $y$, நில-வாடகை = $z$என்று வைத்துக் கொண்டால், நமது உதாரணத்தில் எப்போதுமே $x+y+z$ என்ற கூட்டுத் தொகை = 100 ஆக இருக்கும். ஆனால் தொழிலதிபர்களுக்கும் வணிகர்களுக்கும் வங்கியருக்கும் கொச்சைப் பொருளாதார அறிஞர்களுக்கும் இது அறவே வேறு விதமாய்த் தெரிகிறது. அவர்களைப் பொறுத்தவரை சரக்கின் மதிப்பானது அதனால் நுகரப்பட்ட உற்பத்திச் சாதனங்களின் மதிப்பைக் கழித்த பின் 100 என்னும் குறிப்பிட்ட பருமனாய் இருப்பதும் பிறகு இந்த 100 ஆனது $x$, $y$, $z$ ஆகப் பிரிக்கப்படுவதும் இல்லை. மாறாக, சரக்கின் விலையானது கூலியின் மதிப்பு, இலாபத்தின் மதிப்பு, வாடகையின் மதிப்பு ஆகியவற்றால் ஆனதே; இந்தப் பருமன்கள் சரக்கின் மதிப்பைச் சாராமலும் ஒன்றையொன்று சாராமலும் நிர்ணயிக்கப்படுகின்றன; $x$, $y$, $z$ ஒவ்வொன்றும் குறிப்பிட்டவை யாகவும் சுயேச்சையாக நிர்ணயிக்கப்படுபவையாகவும் உள்ளன; இந்தப் பருமன்களின் கூட்டுத் தொகையிலிருந்துதான் இந்தக் கூட்டுத்தொகை = 100க்கு குறைவாகவோ கூடுதலாகவோ இருக்கலாம் - சரக்கு-மதிப்பின் பருமன் பெறப்படுகிறது; அடக்கக் கூறுகளான இம் மதிப்புகளைச் சேர்ந்து கூட்டுவதன் மூலம் பெறப்படுகிறது. இந்த மாறாட்டம் தவிர்க்க முடியாமலே நிகழ்வது ஏனென்றால்:

முதலாவதாக: சரக்கு-மதிப்பின் அடக்கக் கூறுகள் ஒன்றையொன்று சுயேச்சை வருவாய்களாக எதிர்ப்படுகின்றன. இந்த வகையில் அறவே வெவ்வேறான உற்பத்திக் காரணிகளோடு, உழைப்பு, மூலதனம், நிலம் ஆகியவற்றோடு உறவு கொண்டிருக்கின்றன; ஆகவே அவை இந்தக் காரணிகளிலிருந்து எழுவதாகத் தோன்றுகிறது. உழைப்புச் சக்தியிலும் மூலதனத்திலும் நிலத்திலுமான உடைமைதான் சரக்கு மதிப்பின் இந்த வெவ்வேறு அடக்கக் கூறுகள் அந்தந்த உடைமையாளர்களின் பங்குக்குப் போய்ச் சேருவதற்கான காரணமாகும்; இப்படித்தான் அவை அவர்களுக்கான வருவாயாக மாற்றமடைகின்றன. ஆனால் வருவாயாக அடையும் மாற்றத்திலிருந்து மதிப்பு எழுவதில்லை; மாறாக, வருவாயாக மாற்றப்பட்டு இந்த வடிவத்தை மேற்கொள்ள வேண்டுமானால் முன்கூட்டியே மதிப்பென்ற ஒன்று இருந்தாக வேண்டும். இதற்கு எதிர்மாறானதே உண்மை என்னும் பொய்த் தோற்றம் தவிர்க்க முடியாதவாறு வலுப்படுகிறது; ஏனென்றால் இந்த மூன்று கூறுகளின் ஒப்பளவும் வெவ்வேறுவகை விதிகளால் நிர்ணயிக்கப்படுகிறது; சரக்குகளின் மதிப்புடன் அவற்றுக்குள்ள உறவும் அம்மதிப்பு அவற்றுக்கு வரம்பிடுவதும் எவ்வகையிலும் மேற்பரப்பில் தெரிவதில்லை.

இரண்டாவதாக: கூலியில் ஏற்படும் பரவலான உயர்வு அல்லது குறைவானது ஏனைய நிலைமைகள் மாறாதிருக்க-பொது இலாப வீதத்தை எதிர்த்திசையில் நகரச் செய்வதன் மூலம் பல்வேறு சரக்குகளின் உற்பத்தி-விலைகளை மாறச்செய்கிறது; அதாவது அந்தந்த உற்பத்தித் துறையிலுமான சராசரி மூலதன இயைபைப் பொறுத்து சிலவற்றை உயர்த்துகிறது, சிலவற்றைத் தாழ்த்துகிறது என்று பார்த்தோம். இவ்வாறு, எப்படியும் சில உற்பத்தித் துறைகளில் கூலி உயர்ந்தால் சரக்கின் சராசரி விலை உயர்வதையும் கூலிகுறைந்தால் அது குறைவதையும் அனுபவம் காட்டுகிறது. ஆனால் கூலியைச் சார்ந்திராத சரக்கு-மதிப்பு இரகசியமாய் இந்த மாற்றங்களை ஆளுவதை 'அனுபவம்' காட்டுவதில்லை. ஆனால் கூலிஉயர்வு வட்டார அளவில் நடைபெற்றால், தனி நிலைமைகளின் விளைவாக குறிப்பிட்ட உற்பத்திக் கிளைகளில் மட்டும் அது நடைபெற்றால், இந்தச் சரக்குகளின் விலை அதற்கேற்ப பெயரளவில் உயரக்கூடும். கூலி மாறாமலிருக்கும் ஏனைய சரக்குகளுடனும் ஒப்பிடுகையில் ஒருவகைச் சரக்கின் ஒப்பீட்டு மதிப்பில் ஏற்படும் இந்த உயர்வு பல்வேறு உற்பத்திக் கிளைகளிடையிலும் ஒரே சீராக உபரி-மதிப்பு விநியோகமாவதில் வட்டார அளவில் ஏற்படும் குலைவுக்கான எதிர் வினையே தவிர

வேறல்ல, குறிப்பான இலாப வீதங்களை பொது இலாபவீதங்களாகச் சமனமாக்கும் சாதனம்தானே தவிர வேறல்ல. விலை கூலியால் நிர்ணயிக்கப்படுவதை இங்கேயும் 'அனுபவம்' காட்டுகிறது. இவ்வாறு இந்த இரு நேர்வுகளிலுமே கூலி சரக்குகளின் விலையை நிர்ணயிப்பதை அனுபவம் காட்டுகிறது. ஆனால் இந்த இடையுறவின் மறைவான காரணத்தை 'அனுபவம்' காட்டுவதில்லை. மேலும்; உழைப்பின் சராசரி விலை, அதாவது உழைப்புச் சக்தியின் மதிப்பு அவசிய வாழ்வுச் சாதனங்களின் உற்பத்தி-விலையால் நிர்ணயிக்கப்படுகிறது. பின்னது உயர்ந்தாலோ குறைந்தாலோ முன்னதும் - அவ்வாறே உயர்கிறது அல்லது குறைகிறது. இவ்வாறு, கூலிக்கும் சரக்குகளின் விலைக்குமிடையே ஒரு தொடர்பு இருப்பதை அனுபவம் மீண்டும் காட்டுகிறது. ஆனால் காரணம் காரியமாகவும் காரியம் காரணமாகவும் தோற்றமளிக்கலாம்; சந்தைவிலைகளின் அசைவியக்கங்கள் தொடர்பாகவும் நிலைமை இதுதான்; அங்கு கூலி அதன் சராசரிக்குமேல் உயர்வது சந்தைவிலைகள் செழுமைக் காலங்களில் உற்பத்தி விலைகளுக்கு மேல் உயருவதுடன் ஒத்தமைகிறது; இதையடுத்து கூலி அதன் சராசரியை விடவும் குறைந்து போவது சந்தை விலைகள் உற்பத்தி விலைகளை விடவும் குறைந்து போவதுடன் ஒத்தமைகிறது. உற்பத்தி - விலைகள் சரக்கு-மதிப்புகளைச் சார்ந்திருக்க, சந்தை விலைகளின் அலைவியக்கங்களை ஒதுக்கிவிட்டுப் பார்த்தால் கூலி உயரும்போதெல்லாம் இலாபவீதம் குறைவதையும் கூலி குறையும் போதெல்லாம் இலாபவீதம் உயருவதையும் முதல் பார்வையில் எப்போதுமே அனுபவம் புலப்படுத்துகிறது. ஆனால் இலாப வீதமானது கூலியின் அசைவியக்கங்களைச் சாராமல் மாறா மூலதனத்தின் மதிப்பிலான அசைவியக்கங்களால் நிர்ணயிக்கப்படலாம் என்று பார்த்தோம்; அதாவது கூலியின் இலாபவீதமும் எதிரெதிர் திசைகளில் செல்வதற்குப்பதில் ஒரே திசையில் செல்லலாம், சேர்ந்தே உயரலாம் அல்லது குறையலாம். உபரி-மதிப்பு வீதம் நேரடியாக இலாபவீதத்துடன் ஒருங்கமையுமானால், இது சாத்தியமாகாது. இதேபோல், வாழ்வுச் சாதனங்களின் விலை உயருவதால் கூலி உயருமானால், உழைப்பின் மும்முரம் அதிகரிப்பது அல்லது வேலைநாள் நீட்டப்படுவதன் விளைவாக இலாபவீதம் மாறாமலிருக்கலாம் அல்லது உயரவும் கூடச் செய்யலாம். மதிப்புக் கூறுகளின் சுயேச்சையான, திரிபுற்ற வடிவத்தால் தோற்றுவிக்கப்படும் பொய்த்தோற்றத்தை, அதாவது கூலிமட்டுமோ அல்லது கூலியும்

இலாபமும் சேர்ந்தோ சரக்குகளின் மதிப்பை நிர்ணயிக்கின்றன என்ற பொய்த்தோற்றத்தை இந்த அனுபவங்களெல்லாம் உறுதி செய்கின்றன. கூலி தொடர்பாக இப்படியொரு பொய்த் தோற்றம் ஏற்பட்டவுடனே, உழைப்பின் விலையும் உழைப்பால் படைக்கப்படும் மதிப்பும் ஒருங்கமைவதாகத் தோன்றிய உடனே, இது தானாகவே இலாபத்துக்கும் வாடகைக்கும் பொருந்திவிடுகிறது. அவற்றின் விலை, அதாவது அவற்றின் பணத்தெரிவிப்பு அப்போது உழைப்பைச் சாராமலும் உழைப்பினால் படைக்கப்படும் மதிப்பைச் சாராமலும் ஆளப்பட்டாக வேண்டும்.

*மூன்றாவதாக:* சரக்கு-மதிப்புகள் அல்லது உற்பத்தி-விலைகள் - சரக்கு-மதிப்புகளைத் தோற்ற அளவில் மட்டும் சாராதிருக்கும் உற்பத்தி-விலைகள் - சந்தை-விலைகளில் தொடர்ச்சியாக ஏற்படும் ஏற்ற இறக்கங்களை ஓயாமல் சரிக்கட்டுவதன் மூலம் ஆளும் சராசரி விலைகளாக மட்டும் செயல்படுவதற்குப் பதில் நேரடி அனுபவத்தில் எப்போதும் சந்தைவிலைகளுடன் ஒருங்கமைவதாக வைத்துக் கொள்வோம். மேலும், மறுஉற்பத்தி எப்போதும் அதே மாறாத நிலைமைகளில் நடைபெறுவதாக, அதாவது எல்லா மூலதனக் கூறுகளிலும் உழைப்பின் உற்பத்தித் திறன் மாறாதிருப்பதாகக் கொள்வோம். முடிவில்,ஒவ்வோர் உற்பத்திக் கிளையிலும் உற்பத்திச் சாதனங்களின் மதிப்புடன் புதிய உழைப்பளவு-அதாவது புதிதாய் உற்பத்தி செய்யப்படும் மதிப்பு-சேர்க்கப்படுவதன் மூலம் உருவாக்கப்படும் சரக்கு-உற்பத்தியின் மதிப்புக்கூறு எப்போதும், அதே மாறா விகிதங்களில் கூலியாகவும், இலாபமாகவும், வாடகையாகவும் பிரிவதாக வைத்துக் கொள்வோம்; அதாவது உள்ளபடியே செலுத்தப்படும் கூலி எப்போதும் நேரடியாகவே உழைப்புச் சக்தியின் மதிப்புடன் ஒருங்கமைகிறது; உள்ளபடியே ஈடேற்றமாகிற இலாபம் மொத்த உபரி-மதிப்பில் சராசரி இலாபவீதத்தின் பயனாய் மொத்த மூலதனத்தின் சுயேச்சையாகச் செயல்படும் ஒவ்வொரு பகுதியின் பங்குக்கும் போய்ச் சேரும் கூறுடன் ஒருங்கமைகிறது; உள்ளபடியே செலுத்தப்படும் வாடகை இந்த அடிப்படையிலான நிலவாடகையை இயல்பாகக் கட்டுப்படுத்தும் எல்லைகளால் எப்போதுமே வரம்புக்குட்படுத்தப்படுகிறது. சுருங்கச் சொல்லின், சமுதாயமதிப்பு - உற்பத்தியின் விநியோகமும் உற்பத்தி விலைகளின் நிர்ணயமும் முதலாளித்துவ அடிப்படையில் நடைபெற்றாலும் போட்டியில்லாமல் நடைபெறுவதாக அனுமானம் செய்து கொள்வோம்.

ஆக, இந்த அனுமானங்களின்படி, அதாவது சரக்குகளின் மதிப்பு மாறாமல் இருந்து அவ்வாறே தோற்றமுமளித்தால், சரக்கு - உற்பத்தியில் வருவாய்களாகப் பெயரும் மதிப்புக்கூறு மாறாப்பருமனாய் அமைந்து எப்போதும் அவ்வாறே தோற்றமளித்தால், முடிவில் இந்தக் குறிப்பிட்ட மாறா மதிப்புக்கூறு கூலியாகவும் இலாபமாகவும் வாடகையாகவும் பிரியும் விகிதங்கள் எப்போதும் மாறாமலிருந்தால் அப்போதும் கூட உண்மை அசைவியக்கம் திருபுற்ற வடிவில் காட்சியளிப்பது தவிர்க்க முடியாததாகும். இந்த அசைவியக்கமானது முன்கூட்டியே குறிப்பிடப்பட்ட ஒரு மதிப்புப் பருமன் மூன்று பகுதிகளாகப் பிரிந்து, அப்பகுதிகள் ஒன்றையொன்று சார்ந்திராத வருவாய் வடிவங்களை மேற்கொள்வதாகத் தோற்றமளிக்கிறது. மாறாக, ஒவ்வொன்றும் அதனளவில் தனித்தனியே நிர்ணயிக்கப்படும் சுயேச்சையான ஆக்கக்கூறுகளின்-கூலி, இலாபம், நில-வாடகை ஆகியவற்றின் கூட்டுத்தொகையிலிருந்து இந்த மதிப்புப் பருமன் உருவாவதாகவே தோற்றமளிக்கும். இந்தப் பொய்த்தோற்றம் தவிர்க்க முடியாததாகும்; ஏனென்றால் தனிப்பட்ட மூலதனங்களின் உள்ளபடியான அசைவு இயக்கத்திலும் அவற்றால் உற்பத்தி செய்யப்படும் சரக்கிலும், சரக்குகளின் மதிப்பு அது கூறுகளாகப் பிரிவதற்கான முன்தேவையாகத் தோற்றமளிப்பதில்லை; மாறாக அது எக்கூறுகளாகப் பிரிக்கப்படலாமோ அக்கூறுகள்தான் சரக்குகளின் மதிப்புக்கான பின்தேவையாகச் செயல்படுகின்றன. முதலாவதாக, ஒவ்வொரு முதலாளிக்கும் அவருடைய சரக்குகளின் அடக்க-விலை குறிப்பிட்ட பருமனாகத் தோற்றமளிக்கிறது, உள்ளபடியான உற்பத்தி விலையிலும் தொடர்ந்து அவ்வாறே தோற்றமளிக்கிறது என்று பார்த்தோம். ஆனால் அடக்க-விலையாவது மாறா மூலதனத்தின், முன்னீடு செய்யப்பட்ட உற்பத்திச் சாதனங்களின் மதிப்பு + உழைப்புச் சக்தியின் மதிப்போ உழைப்பின் விலை என்ற ஒவ்வா வடிவில் உற்பத்திச் செயலியாகத் தோற்றமளிக்கிறது; இதனால் கூலி என்பது அதேபோது தொழிலாளியின் வருவாயாகவும் தோற்றமளிக்கிறது. உழைப்பின் சராசரி விலையானது குறிப்பிட்ட பருமனாலும்; ஏனென்றால் வேறெந்தச் சரக்கின் மதிப்பையும் போலவே உழைப்புச் சக்தியின் மதிப்பும் அதன் மறுஉற்பத்திக்கு அவசியமாகிற உழைப்பு நேரத்தால் நிர்ணயிக்கப்படுகிறது. ஆனால் சரக்குகளின் மதிப்பில் கூலியாகப் பெயரும் கூறினைப் பொறுத்தவரை, அது இந்தக் கூலி வடிவத்தை மேற் கொள்வதிலிருந்து தொழிலாளிக்கு அவரது உற்பத்திப் பண்டத்தில் அவருக்குரிய பங்கை கூலியின் வடிவில் முதலாளி முன்னீடு

செய்வதிலிருந்து எழுவதல்ல இந்தக் கூறு; மாறாக தொழிலாளி தமது கூலிக்கான ஒரு சமதையை உற்பத்தி செய்வதிலிருந்தே, அதாவது அவரது அன்றாட அல்லது வருடாந்தர உழைப்பில் ஒரு பகுதி அவரது உழைப்புச் சக்தியின் விலையில் அடங்கியுள்ள மதிப்பை உற்பத்தி செய்வதிலிருந்தே அது எழுகிறது. ஆனால் கூலி என்பது அதற்கான மதிப்புச்சமதை உற்பத்தி செய்யப்படுவதற்கு முன்பே ஒப்பந்தத்தால் வரையறுக்கப்படுவதாகும். விலையின் கூறுஎன்ற முறையில் கூலியின் பருமன் சரக்கும் அதன் மதிப்பும் உற்பத்தி செய்யப்படுவதற்கு முன்பே நிர்ணயமாகிவிடுவதால், அது அடக்க-விலையில் ஒரு கூறாக இருப்பதால், கூலி என்பது சரக்கின் மொத்த மதிப்பிலிருந்து சுயேச்சையான வடிவில் விலகிப்போகும் ஒரு பகுதியாக தோற்றமளிக்காது; மாறாக, இந்த மொத்த மதிப்பை முன்கூட்டி நிர்ணயம் செய்யும் குறிப்பிட்ட பருமனாகவே, அதாவது விலையையும் மதிப்பையும் படைக்கும் காரணியாகவே தோற்றமளிக்கும் சரக்குகளின் அடக்க விலையில் கூலிவகிப்பது போன்ற ஒரு பாத்திரத்தை அவற்றின் உற்பத்தி - விலையில் சராசரி இலாபம் வகிக்கிறது; ஏனென்றால் உற்பத்தி விலையானது . அடக்கவிலை + முன்னீடு செய்யப்படும் மூலதனத்துக்கான சராசரி இலாபம் என்பதற்குச் சமம். இந்தச் சராசரி இலாபமானது நடைமுறையில், முதலாளியின் மனத்திலும் கணக்கிலும், ஓர் ஆளும் கூறாகவே இடம்பெறுகிறது. மூலதனங்கள் ஒரு முதலீட்டுக் கிளையிலிருந்து வேறொரு முதலீட்டுக்கிளைக்கு மாறிச் செல்வதை நிர்ணயிக்கிற அளவில் மட்டுமல்லாமல், காலம் நீண்டு செல்லும்படியான மறுஉற்பத்தி நிகழ்முறையைத் தழுவி நிற்கும் விற்பனைகள், ஒப்பந்தங்கள் யாவற்றிலும் அது இவ்வாறே இடம் பெறுகிறது. ஆனால் அது இவ்விதம் இடம்பெறுகிற அளவில் முன்கூட்டியே நிலவிவரும் பருமனாகும்; உண்மையில் அது குறிப்பிட்ட எந்த உற்பத்திக்கிளையிலும் உற்பத்தி செய்யப்படும் மதிப்பையும் உபரி-மதிப்பையும் சாராமல் சுயேச்சையாய் இருப்பதாகும், எந்த உற்பத்தி கிளையிலும் எந்த தனிப்பட்ட மூலதன முதலீடு தொடர்பாகவும் அது இன்னும் கூட இவ்வகையில் சுயேச்சையானதாகும். மதிப்பு அதன் கூறுகளாக பிரிந்து போவதன் விளைவாகத் தோற்றமளிப்பதற்குப் பதில், இந்த சராசரி இலாபமானது சரக்கு உற்பத்தியின் மதிப்பைச் சாராமல் சுயேச்சையாய் இருக்கும் பருமனாகவே, சரக்குகளின் உற்பத்தி நிலைமைகளில் முன்கூட்டி நிலவுவதும் சரக்குகளின் சராசரி விலையை நிர்ணயிப்பதுமான பருமனாகவே, அதாவது மதிப்பின் படைப்பாளியாகவே

தோற்றமளிக்கிறது. உபரி-மதிப்பின் பல்வேறு கூறுகளும் தமக்குள் சற்றும் தொடர்பில்லாத வடிவங்களாக தனித்தனியே பிரிந்து போவதால் உபரி-மதிப்பு சரக்கு-மதிப்பைப் படைப்பதற்கான முன்தேவையான இன்னுங்கூட ஸ்தூலமான வடிவில் தோற்றமளிக்கிறது. வட்டியின் வடிவில் சராசரி இலாபத்தின் ஒரு பகுதி சரக்குகளையும் அவற்றின் மதிப்புகளையும் உற்பத்தி செய்வதில் முன்தேவையாகக் கொள்ளப்படும் ஒரு கூறாக செயல்துறை முதலாளியை சுயேச்சையான முறையில் எதிர் நோக்குகிறது. வட்டியின் பருமன் எவ்வளவுதான் ஏறியிறங்கி அலைவுற்றாலும், அந்தந்தத் தருணத்திலும் ஒவ்வொரு முதலாளிக்கும் தனிப்பட்ட முதலாளி என்ற முறையில் அவரால் உற்பத்தி செய்யப்படும் சரக்குகளின் அடக்க-விலையில் சேரும் ஒரு குறிப்பிட்ட பருமனாகும் அது. விவசாய முதலாளிக்கு ஒப்பந்தத்தால் நிர்ணயிக்கப்படும் குத்தகைப் பணத்தின் வடிவிலும் ஏனைய தொழில் முனைவர்களைப் பொறுத்தவரை அலுவல் நடைபெறும் வளாகத்திற்காக வாடகையின் வடிவிலும் நில-வாடகை இதே பங்கினை வகிக்கிறது. உபரி-மதிப்பு பிரிந்து போவதால் வரும் இந்தக் கூறுகள் தனிப்பட்ட முதலாளிக்கான அடக்க-விலையின் கூறுகள் என்ற முறையில் குறிப்பிட்டவையாக இருப்பதால் மறுதலையான முறையில் உபரி-மதிப்பின் படைப்பாளிகளாகத் தோற்றமளிக்கின்றன; சரக்கு-விலையின் ஒரு கூறை கூலி படைப்பதைப் போல் மறு கூறைப் படைக்கும் படைப்பாளிகளாகத் தோற்றமளிக்கின்றன; சரக்கு-மதிப்பு கூறுகளாகப் பிரிவதன் விளை பயன்களாகிய இவை ஓயாமல் மதிப்பு-உருவாக்கத்திற்கான முன் தேவைகளாகத் தோற்றமளிப்பதன் இரகசியம் இதுதான்: வேறெந்தப் பொருளுற்பத்தி முறையையும் போலவே முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையும் ஓயாமல் உற்பத்திப் பொருளை மறுவுற்பத்தி செய்வதோடு நில்லாமல், சமூக, பொருளாதார உறவுகளையும் கூட, உறபத்திப் பொருளின் படைப்பிற்குரிய தனிச் சிறப்பான பொருளாதார வடிவங்களையும் கூட மறுவுற்பத்தி செய்கின்றன. ஆக, எப்போதுமே இப்பொருளுற்பத்தி முறையின் முன்தேவைகள் விளைவுகளாகவும் விளைவுகள் முன்தேவைகளாகவும் தோற்றமளிக்கின்றன. இதே உறவுகள் இப்படி ஓயாமல் மறுவுற்பத்தியாவதைத்தான் தனிப்பட்ட முதலாளி கூறாது விளங்கும் உண்மையாக, சந்தேகத்துக்கிடமற்ற உண்மையாக முன்கூட்டியே வைத்துக் கொள்கிறார். முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையாகவே இருந்து வரும் வரை, புதிதாய்ச் சேர்க்கப்படும்

உழைப்பில் ஒரு பகுதி கூலியாகவும் மற்றொரு பகுதி இலாபமாகவும் (வட்டியாகவும் முனைவு-இலாபமாகவும்), இன்னொரு பகுதி வாடகையாகவும் ஓயாமல் பெயர்கின்றன. பல்வேறு உற்பத்திக் காரணிகளின் உடைமையாளர்கள் தமக்கிடையே செய்துகொள்ளும் ஒப்பந்தங்களில், எப்போதுமே இது அனுமானம் செய்து கொள்ளப்படுகிறது; தனிப்பட்ட நேர்வுகளில் ஒப்பீட்டு விகிதங்கள் எவ்வளவுதான் அலைவுற்றாலும் இந்த அனுமானம் சரியானது. மதிப்புக்கூறுகள் ஒன்றையொன்று எதிர்நோக்கும் குறிப்பிட்ட வடிவம் ஓயாமல் மறுவுற்பத்தி செய்யப்படுவதால் முன்கூட்டி அனுமானம் செய்து கொள்ளப்படுகிறது; அது ஓயாமல் முன்கூட்டி அனுமானம் செய்து கொள்ளப்படுவதால் ஓயாமல் மறுவுற்பத்தி செய்யப்படுகிறது.

மெய்தான், அனுபவம் புறத்தோற்றமும் இன்னொன்றையும் காட்டுகின்றன; அதாவது சந்தை-விலைகள் - இவற்றின் தாக்கத்தின் மூலமாகத்தான் மதிப்பு நிர்ணயிப்பை உள்ளபடியே முதலாளி கண்ணுறுகிறார் - அவற்றின் பருமனைப் பொருத்தவரை எவ்விதத்தும் இத்தகைய முன் அனுமானங்களைப் பொருத்தவை அல்ல, வட்டியோ வாடகையோ உயர்த்தி நிர்ணயிக்கப்பட்டாலும் குறைந்து நிர்ணயிக்கப்பட்டாலும் அதனால் அவை பாதிக்கப்படுவதில்லை. ஆனால் சந்தை விலைகள் ஓயாமல் மாறுகின்றன; நீண்டகாலப் பகுதிகளுக்கான அவற்றின் சராசரிதான் மாறாப் பருமன்களாகவும், எனவே இறுதியாகப் பார்க்குமிடத்து சந்தை விலைகளை ஆளும் பருமன்களாகவும் கூலி, இலாபம், வாடகை ஆகியவற்றின் தனித்தனி சராசரிகளைத் தோற்றுவிக்கின்றன.

மறுபுறம் கூலியும் இலாபமும் வாடகையும் மதிப்பின் உற்பத்தியில் முன்தேவைகளாய் இருப்பதாகத் தோன்றுவதாலும், தனிப்பட்ட முதலாளியால் அடக்கவிலையிலும் உற்பத்தி விலையிலும் அனுமானம் செய்து கொள்ளப்படுவதாலும் மதிப்பின் படைப்புக் கூறுகளாக இருக்கின்றன என்றால், எந்தவொரு சரக்கின் உற்பத்தியிலும் குறிப்பிட்ட மதிப்புடையதான மாறாமூலதனக் கூறும் கூட மதிப்பின் படைப்புக்கூறுதான் என்று கருதுவது எளிதெனத் தோன்றுகிறது. ஆனால் மாறா மூலதனக்கூறு என்பது சரக்குகளின், சரக்கு-மதிப்புகளின் கூட்டுத் தொகைதானே தவிர வேறல்ல. ஆக, சரக்கு-மதிப்பே சரக்கு மதிப்பின் படைப்புக்கூறும் மூலகாரணமும் ஆகும் என்ற அபத்தமான கூறியது கூறலை வந்தடைவோம்.

ஆனால், இதுபற்றி யோசித்துப் பார்ப்பதில் முதலாளிக்கு கொஞ்சமாவது அக்கறையிருந்தால் - முதலாளி என்ற முறையில் அவரது யோசனைகள் முழுக்க, முழுக்க அவரது நலன்களாலும் தன்னிலை நோக்கங்களாலும் நிர்ணயிக்கப்படுகின்றன-அவர் உற்பத்திச் செய்யும் பண்டம் ஏனைய உற்பத்திக் கிளைகளில் மாறா மூலதனக் கூறாகச் சேருவதையும், இந்த ஏனைய உற்பத்திக் கிளைகளின் உற்பத்திப் பண்டங்கள் அவரது உற்பத்திப் பண்டத்தில் மாறா மூலதனக் கூறுகளாகச் சேருவதையும் அனுபவம் அவருக்குக் காட்டும். அவரது புதிய உற்பத்தியைப் பொருத்தவரை கூடுதல் மதிப்பானது அவரது கண்ணோட்டத்தில் கூலி, இலாபம், வாடகை ஆகியவற்றின் பருமன்களால் உருவாவதாகத் தோன்றுவதால், ஏனைய முதலாளிகளின் உற்பத்திப் பண்டங்களாலான மாறா மூலதனக் கூறுக்கும் இது பொருந்திவிடுகிறது, ஆக, மாறா மூலதனக் கூறின் விலையும், எனவே சரக்குகளின் மொத்த மதிப்பும் இறுதியாகப் பார்க்குமிடத்து - சற்றே விளங்காத முறையிலென்றாலும்-வெவ்வேறு விதிகளால் ஆளப்படுகிறவையும் வெவ்வேறு ஆதாரங்களிலிருந்து பிறப்பவையுமான மதிப்பின் சுயேச்சையான - படைப்புச் கூறுகளை-கூலியையும் இலாபத்தையும் வாடகையையும் சேர்த்துக் கூட்டுவதிலிருந்து விளையும் மதிப்புத் தொகையாகப் பெயர்கிறது.

***நான்காவதாக:*** சரக்குகள் அவற்றின் மதிப்புக்கே விற்கப்படுகின்றனவா இல்லையா என்பதும், மதிப்பு நிர்ணயிப்பு தனிப்பட்ட முதலாளிக்குச் சற்றும் கருத்துக்குரியதல்ல. தொடக்கத்திலிருந்தே இது அவரது முதுகுக்குப் பின்னால் நடைபெறும் நிகழ்முறையாகும், அவரைச் சார்ந்திராத நிலைமைகளின் சக்தியால் ஆளப்படுவதாகும்; ஏனென்றால் ஒவ்வோர் உற்பத்திக் கிளையிலும் ஆளும் சராசரி விலைகளாக அமைவது மதிப்புகளிலிருந்து விலகிச் செல்லும் உற்பத்தி விலைகள்தானே தவிர மதிப்புகள் அல்ல. குறிப்பிட்ட சரக்குகளை உற்பத்தி செய்யும் உழைப்பின் உற்பத்தித்திறன் உயரவோ குறையவோ செய்யும்போது தேவைப்படும் உழைப்பளவு குறையவோ அதிகரிக்கவோ செய்கிறது; இந்த உழைப்பளவு குறையுமானால் முதலாளி நடப்பிலுள்ள சந்தை விலைகளில் கூடுதல் இலாபம் பெற முடிகிறது; உழைப்பளவு அதிகரிக்குமானால் அவர் தமது சரக்குகளின் விலையை உயர்த்த வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது; ஏனென்றால் ஒவ்வோர் உற்பத்திப்பண்ட அலகு அல்லது தனியொரு சரக்கின் பங்குக்கும் போய்ச் சேரும் கூலி அதிகரிக்கிறது; மாறா மூலதனம் அதிகரிக்கிறது, எனவே வட்டியும் அதிகரிக்கிறது - இந்த

அளவில் மட்டுமே மதிப்பு நிர்ணயிப்பு என்பது தனியொரு முதலாளிக்கும் தனிப்பட்ட ஒவ்வோர் உற்பத்திக் கிளையிலும் மூலதனத்துக்கும் கருத்துக்குரியதாகவும் நிர்ணயிக்கும் விளைவு கொண்டதாகவும் இருக்கிறது. மதிப்பு நிர்ணயிப்பானது அவருக்குச் சரக்குகளின் உற்பத்திச் செலவை உயர்த்துகிற அல்லது குறைக்கிற அளவில் மட்டுமே, அதாவது அவரது நிலையை விதிவிலக்கான தாக்குகிற அளவில் மட்டுமே அவருக்கு கருத்துக்குரியதாகும்.

மறுபுறம், கூலியும் வட்டியும் வாடகையும் செயல்படும் முதலாளி என்ற முறையில் அவருக்குப் போய்ச்சேரும் இலாபப் பகுதியை, முனைவு இலாபத்தை எவ்விதம் அவர் அடைய முடியுமோ அவ்விலைக்கு மட்டுமல்லாமல், மறுவுற்பத்தி தொடர்ந்து நடைபெற வேண்டுமானால் எவ்விலைக்கு அவர் சரக்கை விற்கவேண்டுமோ அவ்விலைக்கும் கூட ஆளும் வரம்புகளாக அவருக்குத் தோற்ற மளிக்கின்றன. கூலி, வட்டி, வாடகை ஆகியவற்றால் நிர்ணயிக்கப்படும் அவருக்குரிய தனிப்பட்ட அடக்க விலைக்குமேல் வழக்கமான அளவிலோ இன்னும் அதிக அளவிலோ அவர் விலையிலிருந்து அவர் முனைவு இலாபம் எடுத்து வரும்வரை, சரக்கை விற்பதன்மூலம் அதிலடங்கிய மதிப்பையும் உபரி-மதிப்பையும் ஈடேற்றம் செய்கிறாரா? அல்லவா என்பது அவருக்கு சற்றும் கருத்துக்குரியதல்ல. ஆகவே மாறா மூலதனக்கூறு ஒருபுறமிருக்க கூலியும் வட்டியும் வாடகையும் சரக்கு விலையில் வரம்புக்கூறுகளாகவும், எனவே அவ்விலையை நிர்ணயிக்கும் படைப்புக்கூறுகளாகவும் அவருக்குத் தோற்ற மளிக்கின்றன. எடுத்துக்காட்டாக, கூலியை உழைப்புச் சக்தியின் மதிப்புக்குக் கீழாக, அதாவது அதன் இயல்பான அளவுக்குக் கீழாகக் குறைப்பதிலும், இன்னும்குறைந்த வட்டிவீதத்தில் மூலதனம் பெறுவதிலும், இயல்பான வாடகை அளவைவிடக் குறைவான குத்தகைப்பணம் செலுத்துவதிலும் அவர் வெற்றி பெறுவாரானால், தமது உற்பத்திப் பண்டத்தை அதன் மதிப்புக்குக் கீழாக, ஏன், பொது உற்பத்தி விலைக்குக் கீழாகவும் கூட விற்றாலும், சரக்குகளில் அடங்கியுள்ள உபரி-உழைப்பின் ஒரு பகுதியை இலவசமாய்க் கொடுத்துவிட்டாலும் கூட அவருக்கு அதுபற்றிக் கிஞ்சிற்றும் கவலையில்லை. இது மாறா மூலதனக் கூறுக்கும் பொருந்தும். எடுத்துக்காட்டாக, ஒரு தொழிலதிபர் அவருக்கு வேண்டிய கச்சாப்பொருளை அதன் உற்பத்தி விலையை விடவும் குறைந்த விலைக்கு வாங்க முடிந்தால் பூர்த்தியான உற்பத்திப் பண்டத்தின் உருவில் அவர் அதனை அதன் உற்பத்தி விலைக்கும் கீழாகவே

விற்றாலும் கூட இழப்பு நேரிட்டு விடாமல் இது அவரைப் பாதுகாக்கிறது. சரக்கு-விலையானது விலை கொடுத்து வாங்கப்பட வேண்டிய, சமதையால் மாற்றீடு செய்யப்பட வேண்டிய அதன் கூறுகளுக்கு மேல் பெற்றுள்ள மிகையளவு மாறாமலோ அதிகரித்துக் கொண்டோ, இருக்கும் வரை, அவரது முனைவு இலாபம் மாறாம லிருக்கலாம். அல்லது அதிகரித்தாலும்கூட அதிகரிக்கலாம். ஆனால் அவரது சரக்குகளின் உற்பத்தியில் குறிப்பிட்ட விலைப்பருமனாகச் சேரும் உற்பத்திச் சாதனங்களின் மதிப்பை ஒதுக்கிவிட்டுப் பார்த்தால், கூலியும் வட்டியும் வாடகையும்தான் வரம்பிட்டு ஆளும் விலைப்பருமன்களாக இந்த உற்பத்தியில் சேருகின்றன. ஆகவே அவை சரக்குகளின் விலையை நிர்ணயிக்கும் கூறுகளாக அவருக்குத் தோற்றமளிக்கின்றன. இந்தக் கண்ணோட்டத்தில் முனைவு-இலாபம் என்பது மேற்கூறிய விலைக் கூறுகளால் நிர்ணயிக்கப்படும் உள்ளார்ந்த சரக்கு மதிப்புக்கு மேல் - நற்செயலான போட்டி நிலைமைகளைப் பொறுத்து - சந்தை-விலை பெற்றுள்ள மிகையளவால் நிர்ணயிக்கப் படுவதாகத் தோன்றுகிறது; அல்லது, இந்த இலாபமே சந்தை விலையில் ஒர நிர்ணயிக்கும் கூறாகச் சேருகிற அளவுக்கு, பதிலுக்கு வாங்குகிறவர்களுக்கும் விற்பவர்களுக்கும் இடையிலான போட்டியைச் சார்ந்திருப்பதாகத் தோன்றுகிறது.

தனிப்பட்ட முதலாளிகளிடையிலான போட்டியிலும் அதேபோல் உலகச் சந்தையிலான போட்டியிலும் கூலி, வட்டி, வாடகை ஆகியவற்றின் குறிப்பிட்ட பருமன்கள்தான், முன்கூட்டியே அனுமானம் செய்து கொள்ளப்படும் பருமன்கள்தான் மாறாப்பருமன்களாகவும் ஆளும் பருமன்களாகவும் கணக்கில் சேருகின்றன; இவை மாறாப் பருமன்களாய் இருப்பது தனிப்பட்ட ஒவ்வொரு நேர்விலும் குறிப்பிட்டவையாக இருக்கின்றன, ஓயாமல் ஏறியிறங்கும் சந்தை-விலைகளுக்கு மாறா வரம்பாய் அமைகின்றன என்ற அர்த்தத்தில்தானே தவிர மாற்றமுடியாத பருமன்களாய் இருக்கின்றன என்ற அர்த்தத்தில் அல்ல. எடுத்துக்காட்டாக, உலகச் சந்தையில் நடைபெறும் போட்டியின், நடப்பிலிலுள்ள கூலி, வட்டி, வாடகையைக் கொண்டு நடப்பிலுள்ள பொதுவான சந்தை-விலைகளில் அல்லது அவற்றை விடக் குறைவான விலையில் சரக்குகளை ஆதாயமான முறையில் விற்கமுடியுமா, அதாவது அவற்றை விற்று உரிய முனைவு-இலாபம் ஈட்டமுடியுமா என்பது மட்டுமே பிரச்சினையாகும். ஒரு நாட்டின் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை பரவலான விதத்தில் வளர்ச்சி பெறாததால் கூலியும் நிலத்தின்

விலையும் குறைவாய் இருக்கும் அதேபோது மூலதனத்தின் மீதான வட்டி அதிகமாய் இருக்க, வேறொரு நாட்டில் கூலியும் நிலத்தின் விலையும் பெயரளவில் அதிகமாய் இருக்கும் அதேபோது மூலதனத்தின் மீதான வட்டி குறைவாய் இருக்குமானால், முதலாளி முதலாவதாக குறிப்பிட்ட நாட்டில் உழைப்பையும் நிலத்தையும் கூடுதலாக ஈடுபடுத்துகிறார். இரண்டாவதாகக் குறிப்பிட்ட நாட்டில் ஒப்பளவில்மூலதனத்தைக் கூடுதலாக ஈடுபடுத்துகிறார். இந்த இரு முதலாளிகளுக்குமிடையே போட்டி சாத்தியமாகிற அளவில் இந்தக் காரணிகள் நிர்ணயிக்கும் கூறுகளாக கணக்கில் சேருகின்றன. ஆக இங்கே, சரக்குகளின் விலைகள் கூலி, வட்டி, வாடகை ஆகியவற்றால், உழைப்பு, மூலதனம், நிலம் ஆகியவற்றின் விலையால் நிர்ணயிக்கப் படுவதையும், இந்த விலைக் கூறுகள் உண்மையில் விலை உருவாக்கத்தின் ஆளும் ஆக்கக் காரணிகளாகவே இருப்பதையும் அனுபவம் தத்துவ அளவிலும் முதலாளியின் தன்னலக் கணக்கு நடைமுறை அளவிலும் காட்டுகின்றன.

இங்கு எப்போதுமே ஒரு கூறு அனுமானம் செய்யப்படாமல் இருப்பது மெய்தான்; இந்தக் கூறு சரக்குகளின் சந்தை-விலையிலிருந்து விளைவதாகும்; கூலி, இலாபம்,வாடகை ஆகிய மேற்சொன்ன கூறுகளைச் சேர்த்துக் கூட்டுவதால் உருவாகும் அடக்க-விலைக்கு மேல் இருக்கும் மிகையளவே அது. இந்த நான்காவது கூறு தனிப்பட்ட ஒவ்வொரு நேர்விலும் போட்டியால் நிர்ணயிக்கப்படுவதாகும். சராசரி நேர்வில் சராசரி லாபத்தால் நிர்ணயிக்கப்படுவதாகவும் தோன்றுகிறது; சராசரி இலாபமோ இதே போட்டியால்தான்-ஆனால் நீண்ட காலத்துக்கு நடைபெறும் போட்டியால் - ஆளப்படுகிறது.

*ஐந்தாவதாக:* முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் அடிப்படையில், புதிதாய்ச் சேர்க்கப்படும் உழைப்பைக் குறித்திடும் மதிப்பை கூலி, இலாபம், நில-வாடகை ஆகிய வருவாய் வடிவங்களாகப் பிரிப்பது முழுக்க முழுக்க இயல்பான வழிமுறை ஆகிறது; இந்த வருவாய் வடிவங்கள் நிலவுவதற்கு இன்றியமையாத நிலைமைகள் இல்லாதவிடத்தும் கூட இந்த வழிமுறை கையாளப்படுகிறது (நில- வாடகையை நாம் ஆராய்ந்தபோது எடுத்துக் காட்டுகளைத் தந்துதவிய முன்சென்ற வரலாற்றுக் கட்டங்களைப் பற்றி சொல்லத் தேவையில்லை). அதாவது ஒப்புவமை என்ற முறையில் இந்த வருவாய் வடிவங்களுக்கு அனைத்தும் உட்படுத்தப்படுகிறது.

சுயேச்சையானதோர் உழைப்பாளி - ஒரு சிறு சாகுபடியாளரை எடுத்துக் கொள்வோம். ஏனென்றால் மூன்று வருவாய் வடிவங்களையுமே இங்கு பிரயோகிக்கலாம் - தமக்காக உழைத்து, தமது உற்பத்திப் பண்டத்தை விற்கும்போது, முதலில் அவர் தம்மைத்தாமே வேலைக்கு அமர்த்துபவராக (முதலாளியாக) தம்மையே ஒரு தொழிலாளியாய்ப் பயன்படுத்திக் கொள்பவராக கருதப்படுகிறார்; இரண்டாவதாக தம் நிலவுடைமையாளராக, தம்மையே தமக்குக் குத்தகையாளராகப் பயன்படுத்திக் கொள்பவராகக் கருதப்படுகிறார். அவர் கூலித் தொழிலாளியாகிய தமக்கு கூலி கொடுக்கிறார், முதலாளியாகியத் தமக்கு இலாபம் கொடுக்கிறார். நிலவுடைமை யாளராகியத் தமக்கு வாடகை கொடுக்கிறார். முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையும் அதற்குரிய உறவுகளும் சமுதாயத்தின் பொது அடிப்படையாக இருப்பதாய்க் கொண்டால், அவர் தமது உபரி-உழைப்பை தாமே தனதாக்கிக் கொள்ளக்கூடிய நிலைமையில் இருப்பதற்கு அவரது உழைப்பு காரணமாய் இல்லாமல் - இங்கு மூலதனத்தின் பொது வடிவத்தை மேற்கொண்டிருக்கும் - உற்பத்திச் சாதனங்களிலான அவரது உடைமை காரணமாய் இருக்கும்வரை இவ்வாறு அனைத்தையும் உட்படுத்திக் கூறுவது சரியானதாகும். மேலும், அவர் தமதுஉற்பத்திப் பண்டத்தைச் சரக்குகளாக உற்பத்தி செய்கிறார், எனவே அதன் விலையைச் சார்ந்திருக்கிறார் (இல்லை யென்றாலுங்கூட இந்த விலை கணக்கிடக் கூடியதே) என்னும் அளவுக்கு, அவரால் ஈடேற்றம் செய்ய முடிகிற உபரி-உழைப்பின் அளவு பொது இலாபவீதத்தைப் பொறுத்ததே தவிர அந்த உபரி-உழைப்பின் பருமனைப் பொறுத்ததல்ல; இதேபோல் பொது இலாப வீதத்தால் நிர்ணயிக்கப்படும் உபரி-மதிப்பளவுக்கு மேல் இறுதியில் ஏதாவது மிகைப்பட்டால் அந்த மிகையளவு அவரால் ஆற்றப்படும் உழைப்பளவால் நிர்ணயிக்கப்படுவதில்லை; அவர் நிலத்துக்கு உடைமையாளராய் இருப்பதால் தான் இந்த மிகையளவைத் தனதாக்கிக் கொள்ள முடிகிறது. முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறைக்கு உரியதல்லாத இத்தகைய உற்பத்தி வடிவத்தை இவ்விதம் அப்பொருளுற்பத்தி முறையின் வருவாய் வடிவங்களுக்கு உட்படுத்தலாம்-ஓரளவுக்கு இதுவும் சரியானதே-என்பதால் முதலாளித்துவ உறவுகள் ஒவ்வொரு பொருளுற்பத்தி முறைக்குமான இயற்கை உறவுகளாகும் என்ற பொய்த் தோற்றம் மேலும் வலுப்பெறுகிறது.

ஆனால் கூலி அதற்குரிய பொது அடிப்படையாக, அதாவது உற்பத்தியாளரது உழைப்பின் உற்பத்திப் பொருளில் தொழிலாளியின் சொந்த நுகர்வுக்குப் போய்ச் சேரும் பகுதியாகப் பெயர்க்கப் படுமானால், நாம் இந்தப் பகுதியை தன் முதலாளித்துவ வரம்பெல்லைகளிலிருந்து விடுவித்து, ஒருபுறம் சமுதாயத்தின் நடப்பு உற்பத்தித் திறனால் (அதாவது, உள்ளபடியே சமூகத் தன்மை வாய்ந்த உழைப்பென்ற முறையில் அவரது தனிப்பட்ட உழைப்பின் சமூக உற்பத்தித் திறனால்) அனுமதிக்கப்படுவதும், மறுபுறம் தனித்துவத்தின் முழு நிறை வளர்ச்சிக்குத் தேவைப்படுவதுமான நுகர்வுப் பரிமாணத்துக்கு அதனை விரிவாக்குவோமானால், மேலும் உபரி-உழைப்பையும் உபரி-உற்பத்தியையும் ஒருபுறம் காப்பீட்டு மற்று சேமநிதியத்தை உருவாக்குவதற்கும், மறுபுறம் சமுதாயத் தேவைகளால் கோரப்படும் அளவுக்கு ஓயாமல் மறுவுற்பத்தியை விரிவாக்குவதற்கும் தேவைப்படும் அளவாகக் குறைப்போமானால் கடைசியாக சமுதாயத்தில் இன்னமும் உழைக்கும் திறனை அடையாதவர்களாகவோ இழந்துவிட்டவர்களாகவோ இருப்பவர்களின் சார்பில் உடல் திறன் உள்ளவர்களால் ஆற்றப்படவேண்டிய உழைப்பளவினை (1) அவசிய உழைப்பிலும் (2) உபரி-உழைப்பிலும் சேர்ப்போமானால், அதாவது கூலி, உபரி-மதிப்பு இரண்டிலிருந்துமே, அவசிய உழைப்பு, உபரி-உழைப்பு இரண்டிலிருந்துமே அவற்றின் பிரத்தியேகமான முதலாளித்துவத்தன்மையை களைந்து விடுவோமானால், எஞ்சுவது இந்த வடிவங்களாய் இருக்காது, சமுதாயப் பொருளுற்பத்தி முறை அனைத்துக்கும் பொதுவான அவற்றின் அடிப்படைகளாக மட்டுமே இருக்கும் என்பது உறுதி.

மேலும், இந்த உட்படுத்தல் வழிமுறையானது முன்பு கோலோச்சி வந்த பொருளுற்பத்தி முறைகளுக்கு எடுத்துக்காட்டாக பிரபுத்துவத்துக்கு உரித்தான தன்மையாகவும் இருந்தது. எவ்வகையிலும் பிரபுத்துவத்துக்கு உரிமையல்லாத உற்பத்தி உறவுகள், அறவே அதற்குப் புறத்தே இருந்தவை பிரபுத்துவ உறவுகளுக்கு உட்படுத்தப்பட்டன; எடுத்துக்காட்டாக இங்கிலாந்தில் பொதுவான ஊழியமானியத்திலான குத்தகைகள் (வீரத் திருத்தகையின் பணி மீதான குத்தகைகள் அல்ல) பணக் கடப்பாடுகளாக மட்டுமே அமைந்து பெயரில் மட்டுமே பிரபுத்துவ குத்தகைகளாக இருந்தன.

## அத்தியாயம் LI

## விநியோக உறவுகளும் உற்பத்தி உறவுகளும்

ஆக, ஆண்டுதோறும் புதிதாய்ச் சேர்க்கப்படும் (உழைப்பினால் சேர்க்கப்படும்) புதிய மதிப்பு - இவ்வாறு வருடாந்திர உற்பத்திப் பண்டத்தில் இம்மதிப்பைக் குறிப்பதும், மொத்த உற்பத்தியிலிருந்து தனியே பிரித்து எடுக்க கூடியதுமான கூறும் கூட - மூவேறு வருவாய் வடிவங்களை மேற்கொள்ளும் மூன்று பகுதியாகப் பிரிக்கப்படுகிறது; இந்த மதிப்பில் ஒரு பகுதியை உழைப்புச் சக்தியின் உடைமையாளருக்கு போய்ச் சேருவதாகவும், இன்னொரு பகுதியை மூலதனத்தின் உடைமையாளருக்குப் போய்ச் சேருவதாகவும், மற்றொரு பகுதியை நிலச்சொத்தின் உடைமையாளருக்குப் போய்ச் சேருவதாகவும் இந்த வடிவங்கள் காட்டுகின்றன. அப்படியானால் இவை விநியோக உறவுகள் அல்லது விநியோக வடிவங்கள் ஆகும்; எப்படியென்றால் புதிதாய் உற்பத்தி செய்யப்படும் மொத்த மதிப்பு பல்வேறு உற்பத்திக் காரணிகளின் உடைமையாளர்களிடையிலும் விநியோகமாகிற விகித உறவுகளை இவை வெளிப்படுத்துகின்றன.

பொதுவான கண்ணோட்டத்தில் இந்த விநியோக உறவுகள் இயற்கை உறவுகளாக, சமுதாயப் பொருளுற்பத்தி அனைத்திற்குமுரிய இயல்பிலிருந்து, பொதுவாக மனிதர்கள் செய்யும் பொருளுற்பத்தியின் விதிகளிலிருந்து நேரிடையாகவே விளையும் உறவுகளாக தோற்றமளிக்கின்றன. முதலாளித்துவத்துக்கு முற்பட்ட சமுதாயங்கள், வேறு விநியோக முறைகளை வெளிப்படுத்துவதை மறுக்க முடியாதுதான்; ஆனால் அவையெல்லாம் வளர்ச்சி பெறாத, நிறைவு பெறாத,மாறுவேடமணிந்த விநியோகமுறைகள் என்றும், அவற்றின் மிகத்தூய தெரிவிப்பாகவும் மிகஉயர்ந்த வடிவமாகவும் பெயர்க்கப்படாதவை என்றும் இயற்கை விநியோக உறவுகளின் மாறுபட்ட வண்ணச் சாயல்கள் என்றும் விளக்கம் அளிக்கப்படுகிறது.

இந்தக் கண்ணோட்டத்தில்சரியான ஒரேயொரு கூறு இதுதான்: ஏதேனுமொரு சமுதாயப் பொருளுற்பத்தி வடிவம் (எடுத்துக்காட்டாக

புராதன இந்திய கிராம சமுதாயங்கள், அல்லது பெருவியர்களின் இன்னுங்கூட திறம்பட வளர்ச்சியடைந்த பொதுவுடைமை) நிலவுவதாகக் கொண்டால் எப்போதுமே உழைப்பின் இரு கூறுகளையும் வேறுபடுத்திப் பார்க்க முடியும்; இந்த இரு கூறுகளில் ஒன்றின் உற்பத்திப் பண்டம் உற்பத்தியாளர்களாலும் அவர்களின் குடும்பத்தினராலும் நேரடியாகச் சொந்த முறையில் நுகரப்படுகிறது; உற்பத்தி திறனுள்ள முறையில் நுகரப்படும் பகுதியை ஒதுக்கி விடுவோமானால் உழைப்பின் மறுகூறு-இது எப்போதுமே உபரி-உழைப்பாகும் - உற்பத்தி செய்யும் பண்டம், ஓயாமல் பொதுவான சமுதாயத் தேவைகளை நிறைவு செய்வதற்குப் பயன்படுகிறது; இந்த உபரி-உற்பத்தி எப்படி பிரிக்கப்பட்டாலும் சரி, எவர் இந்த சமுதாயத் தேவைகளின் பிரிதிநிதியாகச் செயல்பட்டாலும் சரி. ஆக, பல்வேறு விநியோக முறைகளின் முழுதொத்த தன்மை என்பதன் பொருள் இதுதான்: அவற்றின் வேறுபாடுகளையும் பிரத்தியேக வடிவங்களையும் பிரித்தகற்றிவிட்டு, அவற்றின் வேற்றுமைக்கு மாறாக ஒற்றுமையை மட்டும் மனத்தில் இருத்துவோமானால் அவை முழுதொத்தவை யாகும்.

ஆனால் இன்னும் வளர்ச்சி பெற்ற விமர்சனப் பாங்குடைய மனம் விநியோக உறவுகளின் வரலாற்று வழியில் வளர்ச்சி பெற்ற தன்மையை ஏற்றுக் கொள்கிறது[60]. ஆனால் உற்பத்தி உறவுகளின் மாறாத்தன்மையை விடாப்பிடியாய்ப் பற்றிக் கொண்டு, இந்த உறவுகள் மனித இயல்பிலிருந்து விளைகிறவை என்றும் வரலாற்று வளர்ச்சியுடன் எவ்விதத் தொடர்பும் இல்லாதவை என்றும் அடம்பிடிக்கிறது.

மறுபுறம், முதலாளித்துவப் பொருளுற்பத்திமுறை தொடர்பான விஞ்ஞானப் பகுப்பாய்வு இதற்கு நேர் மாறானதை, அதாவது அது பிரத்யேகமான வரலாற்று வழிப்பட்ட குணாம்சங்களுடன் கூடிய ஒரு தனிவகை பொருளுற்பத்தி முறை என்பதை மெய்ப்பிக்கிறது; வேறெந்த பிரத்தியேகமான பொருளுற்பத்தி முறையையும் போலவே அதுவும் சமுதாய உற்பத்திச் சக்திகளின் குறிப்பிட்ட வளர்ச்சி நிலையை முன் தேவையாகக் கொண்டுள்ளது, அச்சக்திகளின் வளர்ச்சி வடிவங்களை வரலாற்று வழிப்பட்ட முன் நிபந்தனையாகக் கொண்டுள்ளது: இந்த முன் நிபந்தனையே கூட முன்சென்ற ஒரு நிகழ்முறையின் வரலாற்று விளைவும் பயனுமே ஆகும்; இந்த முன் நிபந்தனையிலிருந்து அதனைத்

60. ஜான்ஸ்டுவர்ட் மில், அரசியல் பொருளாதாரத்தில் தீர்க்கப்படாத சில பிரச்சினைகள், லண்டன், 1844);

தன் குறிப்பிட்ட அடிப்படையாகக்கொண்டு புதிய பொருளுற்பத்தி முறை முன்னேறிச் செல்கிறது; இந்தப் பிரத்யேகமான, வரலாற்று வழியில் நிர்ணயமான பொருளுற்பத்தி முறைக்குரிய உற்பத்தி உறவுகள் -மனிதர்கள் சமூக வாழ்க்கை நிகழ்முறையின்போது, தமது வாழ்க்கையின் படைப்பில் கொள்ளும் உறவுகள் - பிரத்யேகமான, வரலாற்று வழிப்பட்ட, நிலைத்திராத தன்மையைப் பெற்றுள்ளன; முடிவில், இந்த உற்பத்தி உறவுகளுடன் சாராம்சத்தில் ஒருங்கமையும் வினியோக உறவுகள் அவற்றின் மறுபக்கமாகும்; அதாவது இரண்டுமே வரலாற்று வழியில் அதே நிலையற்ற தன்மையைப் பகிர்ந்து கொள்கின்றன.

வினியோக உறவுகளைப் பரிசீலிக்கையில், வருடாந்தர உற்பத்திப் பண்டம் கூலிக்கும் இலாபத்துக்கும் வாடகைக்கும் இடையே பங்கிடப்படுகிறது என்பதாகச் சொல்லப்படும் விவரம்தான் தொடக்க முனை ஆகும். ஆனால் இவ்விதம் தெரிவிக்கப்படுமானால் இக்கூற்று தவறானது. உற்பத்திப் பண்டம் ஒரு பக்கம் மூலதனத்துக்கும் மறுபக்கம் வருவாய்க்கும் பங்கிடப்படுகிறது. இந்த வருவாய்களில் ஒன்றாகிய கூலி முதலில் தொழிலாளியை மூலதனத்தின் வடிவில் எதிர் நோக்கிய பிறகுதான் வருவாய் வடிவத்தை மேற்கொள்கிறது, தொழிலாளியின் வருவாய் ஆகிறது. உற்பத்தி செய்யப்பட்ட உழைப்புச் சாதனங்களும் பொதுவாக உழைப்பின் உற்பத்திப் பண்டங்களும் மூலதனம் என்ற முறையில் நேரடி உற்பத்தியாளர்களை எதிர் நோக்குவது தொடக்கத்திலிருந்தே தொழிலாளர்களுடனான உறவில் பொருளாயத உழைப்புச்சாதனங்களின் குறிப்பிட்ட சமூகத்தன்மையைக் குறிக்கிறது; எனவே அவர்கள் உற்பத்திச் சாதன உடைமையாளர்களுடனும் உற்பத்தியின்போது தங்களுக்கிடையிலும் கொள்ளும் திட்டவட்டமான உறவுமுறையைக் குறித்திடுகிறது. இந்த உழைப்புச் சாதனங்கள் மூலதனமாக மாற்றமடைவது என்பது நேரடி உற்பத்தியாளர்களின் நிலவுடைமை பறிக்கப்படுவதையும், இவ்விதம் நிலச்சொத்தின் குறிப்பிட்ட ஒரு வடிவத்தையும் குறிக்கிறது.

உற்பத்திப் பண்டத்தில் ஒரு பகுதி மூலதனமாக மாற்றப்படா விட்டால், மறுபகுதி கூலி, இலாபம், வாடகை என்ற வடிவங்களை மேற்கொள்ளாது.

மறுபுறம், முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையானது உற்பத்திக்குத் தேவைப்படுகிறவற்றின் இந்தக் குறிப்பிட்ட சமூகவடிவத்தை முன் தேவையாகக் கொண்டுள்ளது. அது உற்பத்திப்

பொருட்களை உற்பத்தி செய்வது மட்டுமல்லாமல், அவை எத்தகைய உற்பத்தி உறவுகளில் உற்பத்தி செய்யப்படுகின்றனவோ அந்த உறவுகளையும் ஓயாமல் மறு உற்பத்தி செய்கிறது; எனவே உபரி வினியோக உறவுகளையும்கூட மறு உற்பத்தி செய்கிறது.

மூலதனமே கூட (நிலச் சொத்து இதுவும் மூலதனத்தின் எதிர்நிலை என்ற முறையில் மூலதனத்தில் அடங்கும்) ஒரு வினியோகத்தை முன் தேவையாகக் கொண்டுள்ளது என்று சொல்லப்படலாம்: உழைப்பாளியிடமிருந்து உழைப்புச் சாதனங்களின் உடைமை பறிக்கப்படுதல்; இந்தச் சாதனங்கள் சிறுபான்மையினரான தனியாட்களின் கையில் குவிக்கப்படுதல், வேறு சில தனியாட்கள் நிலத்தை பிரத்தியேக உடைமையாக்கிக் கொள்ளுதல் சுருங்கச் சொல்லின் ஆதித்திரட்டல் தொடர்பான பகுதியில் (முதல்பாகம் பகுதி VIII) விவரிக்கப்பட்டுள்ள எல்லா உறவுகளும். ஆனால் உற்பத்தி உறவுகளுக்கு மாறாக வினியோக உறவுகளுக்கு ஒரு வரலாற்றுத் தன்மை வாய்க்கும்போது அவற்றின் வாயிலாக புரிந்து கொள்ளப் படுவதிலிருந்து அறவே வேறானதாகும் இந்த வினியோகம். உற்பத்திப் பண்டத்தில் எந்தப் பகுதி தனிப்பட்ட சொந்த நுகர்வுக்குப் போய்விடுகிறதோ அந்தப் பகுதிக்கான பல்வேறு உரிமைத் தகுதிகளையே இதன் வாயிலாகக் குறிப்பிடுகிறோம். மாறாக, மேற்கூறிய விநியோக உறவுகள் உற்பத்தி உறவுகளுக்குள் நேரடி உற்பத்தியாளர்கள் அல்லாத குறிப்பிட்ட சில உற்பத்திச் செயலிகளால் நிறைவேற்றப்படும் தனிவிதமான சமூகப் பணிகளுக்கு அடித்தளமாகும். அவை உள்ளபடியான உற்பத்திச் சாதனங்களுக்கும் அவற்றின் பிரதிநிதிகளுக்கும் ஒரு பிரத்தியேகச் சமூகத் தன்மையைத் தருகின்றன. அவை உற்பத்தியின் தன்மையனைத்தையும் இயக்க மனைத்தையும் நிர்ணயிக்கின்றன.

முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை தொடக்கத்திலிருந்தே அதற்கென்று உரித்தான இரு சிறப்பியல்புகளால் வேறுபடுத்திக் காட்டப்படுகிறது.

**முதலாவது:** அது உற்பத்திப் பொருள்களை சரக்குகளாக உற்பத்தி செய்கிறது. அது சரக்குகளை உற்பத்தி செய்கிறது என்ற உண்மை அதனை ஏனையப் பொருளுற்பத்தி முறைகளிலிருந்து வேறுபடுத்துவதில்லை; பார்க்கப் போனால், சரக்காய் இருத்தல் என்பதுதான் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் உற்பத்திப் பொருட்களுக்குரிய மேலோங்கிய சிறப்பியல்பும் நிர்ணயிக்கும் தனித்தன்மையும் ஆகும்

என்ற உண்மைதான் அதனை அவ்வாறு வேறுபடுத்துகிறது. அனைத்துக்கும் முதலாவதாக இதன் பொருள் என்னவென்றால், தொழிலாளியே வெறும் சரக்கு விற்பவராகவும் இவ்விதம் சுதந்திரக் கூலித்தொழிலாளியாகவும் முன்னுக்கு வருகிறார். இதனால் உழைப்பு என்பதே பொதுவாகக் கூலி உழைப்பாய்த் தோற்றமளிக்கிறது. ஏற்கெனவே கூறப்பட்டிருப்பதை கருத்தில் கொள்வோமானால், மூலதனத்துக்கும் கூலி உழைப்புக்கும் இடையிலான உறவுதான் பொருளுற்பத்தி முறையின் தன்மையனைத்தையும் நிர்ணயிக்கிறது என்பதை புதிதாக மெய்ப்பித்துக் காட்டுவது தேவையற்றது. இந்தப் பொருள் உற்பத்தி முறையின் முதன்மைச் செயலிகளான முதலாளியும் கூலித் தொழிலாளியும் அந்த வகையில் மூலதனம், கூலிஉழைப்பு ஆகியவற்றின் உருக்கள் தான், ஆளுருவங்கள்தான்; சமுதாயப் பொருளுற்பத்தி நிகழ் முறையில் தனியாட்கள் மீது முத்திரையிடப்படும் திட்டவட்டமான சமூகச் சிறப்பியல்புகள்தான்; திட்டவட்டமான இந்தச் சமூக உற்பத்தி உறவுகளின் விலை பயன்கள்தான்.

உற்பத்திப் பொருள் சரக்காய் இருக்கும் சிறப்பியல்பும் 1) சரக்கானது மூலதனத்தின் உற்பத்திப் பொருளாய் இருக்கும் சிறப்பியல்பும். 2) சுற்றோட்ட உறவுகள் அனைத்தையும் குறிப்பவையாகும்; அதாவது உற்பத்திப் பொருட்கள் கடந்து சென்றாக வேண்டிய குறிப்பிட்ட சமூக நிகழ் முறையைக் குறிப்பவையாகும். இந்தச் சமூக நிகழ் முறையில் அவை திட்டவட்டமான சமூகச் சிறப்பியல்புகளைப் பெறுகின்றன; இதேபோல் இச் சிறப்பியல்புகள் உற்பத்திச் செயலிகளின் திட்டவட்டமான் உறவுகளையும் குறிப்பவையாகும்; அவர்களின் உற்பத்திப் பொருளது மதிப்புப் பெருக்கமும், அது மறுபடியும் வாழ்வுச் சாதனங்களாகவோ உற்பத்திச் சாதனங்களாகவோ மாற்றமடைவதும் இந்த உறவுகளால்தான் நிர்ணயிக்கப்படுகின்றன. ஆனால் இதை ஒதுக்கிவிட்டுப் பார்த்தாலும் கூட, மதிப்பு நிர்ணயிப்பு அனைத்தும், மொத்த உற்பத்தி மதிப்பால் ஆளப்படுவதும் உற்பத்திப் பொருள் சரக்காய் இருத்தல், சரக்கு முதலாளித்துவ வழியில் உற்பத்தி செய்யப்படும் சரக்காய் இருத்தல் ஆகிய மேற்சொன்ன இரு சிறப்பியல்புகளின் விளைவுகளாகும். முழுக்க முழுக்க பிரத்தியேகமான இந்த மதிப்பு வடிவத்தில், உழைப்பு என்பது ஒருபுறம் சமூக உழைப்பாக மட்டும் விளங்குகிறது; மறுபுறம் இந்த சமூக உழைப்பின் விநியோகமும் அதன் உற்பத்திப் பொருட்கள் ஒன்றை ஒன்று நிறைவு செய்து கொள்வதும், ஒன்றையொன்று மாற்றிக் கொள்வதும், சமூகப் பொறியமைவுக்கு கீழ்ப்படுவதும் அதற்குள்

புகுத்தப்படுவதும் தனிப்பட்ட முதலாளிகளின் தற்செயலான, ஒன்றையொன்று ஒழித்துவிடும் நோக்கங்களிடம் விடப்படுகின்றன. இந்த முதலாளிகள் சரக்குடைமையாளர்களாக மட்டுமே ஒருவரை ஒருவர் எதிர் நோக்குகிறார்கள்; ஒவ்வொருவரும் தன் சரக்கை முடிந்தவரை அதிகவிலைக்கு விற்க முயல்கிறார் (உற்பத்தியை ஒழுங்கு செய்வதில் அவர் தன் சுதந்திர சித்தத்தால் மட்டும் வழி நடத்தப்படுவதாகக் கூடத் தோற்றமளிக்கிறது) என்பதால், உள்விதி அவர்களது போட்டியின், அவர்கள் தமக்குள் ஒருவர் மீது ஒருவர் ஏற்படுத்தும் நெருக்குதலின் மூலமாகத்தான் உள்விதி செயல்படுகிறது; இந்த நெருக்குதலினால் விலகல்கள் ஒன்றையொன்று நீக்கம் செய்துவிடுகின்றன. உள்விதி என்ற முறையில்தான், தனிப்பட்ட செயலிகளைப் பொறுத்தவரை, இயற்கையின் குருட்டு விதி என்ற முறையில்தான், மதிப்புவிதி இங்கு தாக்கம் செலுத்தி, தற்செயலான ஏற்ற இறக்கங்களுக்கு நடுவில் உற்பத்தியின் சமூகச் சமநிலைமை நிலை நாட்டுகிறது.

மேலும், உற்பத்தியின் சமூகக்குணாம்சங்கள் பொருளுருவம் பெறுவதும் உற்பத்தியின் பொருளாயத அடித்தளங்கள் ஆளுருவம் பெறுவதும் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை அனைத்திற்கும் உரிய சிறப்பியல்பாகிய இது-சரக்கிலேயே உட்கிடக்கையாகும்: சரக்கானது மூலதனத்தின் உற்பத்திப் பொருளாகும்போது இன்னுங்கூட அதிகமாகவே உட்கிடக்கையாகும்.

முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையை வேறுபடுத்திக் காட்டும் இரண்டாவது குணாம்சம் உபரி மதிப்பின் உற்பத்தியே பொருளுற்பத்தியின் நேரடிக்குறியும் நிர்ணயிக்கும் நோக்கமுமாய் இருப்பதாகும். அடிப்படையாகப் பார்த்தால் மூலதனம் மூலதனத்தை உற்பத்தி செய்கிறது; உபரி-மதிப்பை உற்பத்தி செய்யும் அளவுக்கே அது இவ்விதம் மூலதனத்தை உற்பத்தி செய்கிறது. ஒப்பீட்டு உபரி-மதிப்பை பரிசீலித்தபோதும், உபரி-மதிப்பு இலாபமாக மாற்றமடைவதைப் பரிசீலித்தபோதும், முதலாளித்துவக் காலத்திற்கே உரித்தான ஒரு பொருளுற்பத்தி முறை எப்படி இதன் அடிப்படையில் உருவாகிறது என்று பார்த்தோம் - உழைப்பின் சமுதாய உற்பத்தித் திறன்களது வளர்ச்சியின் தனிவடிவமாய் இருந்த போதிலும் இதுமூலதனத்தின் சுயேச்சையான உற்பத்தித் திறன்களாகத் தொழிலாளியை எதிர் நோக்குகிறது, ஆகவே தொழிலாளியின் வளர்ச்சிக்கு நேரெதிராய் நிற்கிறது. மதிப்புக்கும் உபரி-மதிப்புக்குமான உற்பத்தி என்பது ஒரு

சரக்கை, அதாவது அதன் மதிப்பை உற்பத்தி செய்வதற்கு அவசியமான உழைப்பு நேரத்தை உள்ளபடியே நடப்பிலிருக்கும் சமுதாயச் சராசரிக்குக் கீழானதாய்க் குறைக்கும் போக்கு ஓயாமல் செயல்பட்டு வருவதைக் குறிக்கிறது என்று நமது பகுப்பாய்வின் போக்கில் தெளிவாக்கினோம். அடக்க விலையை அதன் குறைந்த பட்ச அளவாகக் குறைப்பதற்கான நெருக்குதல்தான் உழைப்பின் சமுதாய உற்பத்தித் திறனை உயர்த்துவற்கு மிகவலிய நெம்புகோல் ஆகிறது; ஆனால் உழைப்பின் உற்பத்தித்திறன் இவ்விதம் உயர்ந்தாலும் மூலதனத்தின் உற்பத்தித்திறன் ஓயாமல் உயருவதாகத்தான் இங்கு தோற்றமளிக்கிறது.

நேரடிப் பொருளுற்பத்தி நிகழ்முறையில் மூலதனத்தின் ஆளுருவம் என்ற முறையில் முதலாளி மேற்கொள்ளும் அதிகாரமானது, பொருளுற்பத்தியின் மேலாளர், ஆளுநர் என்ற பொறுப்பில் அவராற்றிடும் சமுதாயச் செயல்பாடானது அடிமைகள், பண்ணையடிமைகள் முதலானவர்களைக் கொண்டு நடைபெறும் பொருளுற்பத்தியின் அடிப்படையில் செலுத்தப்படும் அதிகாரத்திலிருந்து சாராம்சத்தில் வேறுபட்டதாகும்.

முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் அடிப்படையில் நேரடி உற்பத்தியாளர்களின் பெருந்திரளை அவர்களது உற்பத்தியின் சமூகத் தன்மையானது கண்டிப்பாய் ஒழுங்கு செய்யும் அதிகாரத்தின் வடிவிலும் முழுமையான படிக்கட்டு அமைப்பாக ஒழுங்கமைக்கப்பட்ட உழைப்பு நிகழ்முறையின் சமுதாயப் பொறியமைவின் வடிவிலும் எதிர்நோக்குகிறது; முன் சென்ற பொருளுற்பத்தி முறைகளில் நடை பெற்றதுபோல் அரசியல் அல்லது இறையியல் ஆட்சியாளர்களாக அல்லாமல் உழைப்புக்கு மாறாக உழைப்புச் சாதனங்களின் ஆளுருவம் என்ற முறையில் மட்டுமே இந்த அதிகாரம் அதன் ஏந்திகளைச் சென்றடைகிறது; இந்த அதிகாரத்தை வகிப்பவர்களிடையிலோ, சரக்குடைமையாளர்கள் என்ற முறையில் மட்டும் ஒருவரை ஒருவர் எதிர் நோக்கும் முதலாளிகள் இடையிலோ, முழுமையான அராஜகம் கோலோச்சுகிறது; இந்த அராஜகத்துக்குள் உற்பத்தியின் சமூக இடையுறவுகள் தனிப்பட்ட சுதந்திர சித்தம் தொடர்பாக வலிய இயற்கை விதியாக மட்டுமே தம்மை நிலை நாட்டிக் கொள்கின்றன.

உழைப்பு கூலியுழைப்பின் வடிவிலும் உற்பத்திச் சாதனங்கள் மூலதனத்தின் வடிவிலும் இருப்பதால்தான் - அதாவது இந்த இன்றியமையாத உற்பத்திக் காரணிகளின் இந்தப் பிரத்தியேகமான

சமூக வடிவத்தின் காரணத்தால்தான் - மதிப்பில் (உற்பத்திப் பண்டத்தில்) ஒரு பகுதி உபரி-மதிப்பாகத் தோற்றமளிக்கிறது; இந்த உபரி-மதிப்பு இலாபமாக (வாடகையாக), முதலாளியின் ஆதாயமாக, பயன்படுத்திக் கொள்ளத் தயார்நிலையில் அவருக்குச் சொந்தமாய் இருக்கும் கூடுதல் செல்வமாகத் தோற்றமளிக்கிறது. ஆனால் இந்த உபரி-மதிப்பு இப்படி அவரது இலாபமாகத் தோற்றமளிப்பதால்தான், மறு உற்பத்தியின் விரிவாக்கத்தை நோக்கமாய்க் கொண்டதும் இந்த இலாபத்தில் ஒரு பகுதியாக அமைவதுமான கூடுதல் உற்பத்திச் சாதனங்கள் புதிய கூடுதல் மூலதனமாகத் தோற்றமளிக்கின்றன; பொதுவாக மறு உற்பத்தி நிகழ்முறை விரிவாவது முதலாளித்துவத் திரட்டல் நிகழ்முறையாகத் தோற்றமளிக்கிறது.

உழைப்பு கூலி உழைப்பாக வடிவெடுப்பது இந்நிகழ்முறை அனைத்தின் வடிவத்துக்கும் பிரத்தியேகமான பொருளுற்பத்தி முறைக்கும் தீர்மானகரமானது என்றாலும், மதிப்பை நிர்ணயிப்பது கூலி உழைப்பு அல்ல. மதிப்பு நிர்ணயிப்பில் பொதுவான சமுதாய உழைப்பு நேரம் எவ்வளவு என்பதே, சமுதாயம் பொதுவாகத் தன்வசம் வைத்துள்ள உழைப்பு எவ்வளவு என்பதே பிரச்சினையாகும். இந்த உழைப்பளவு பல்வேறு உற்பத்திப் பொருள்களாலும் ஒப்பளவில் கிரகிக்கப்படுவதாக அதனதன் சமுதாய முக்கியத்துவத்தை நிர்ணயிக்கிறது எனலாம். சமுதாய உழைப்பு நேரம் சரக்குகளின் மதிப்பை நிர்ணயிப்பதில் தீர்மானகரப் பங்கு வகிப்பதன் குறிப்பிட்ட வடிவம் உழைப்பு கூலி உழைப்பாக வடிவெடுப்பதுடனும், இதற்கிணையாக உற்பத்திச் சாதனங்கள் மூலமாக வடிவெடுப்பதுடனும் தொடர்புடையதாகும் என்பதில் ஐயமில்லை; ஏனென்றால் இந்த அடிப்படையில்தான் சரக்கு உற்பத்தி பொருளுற்பத்தியின் பொது வடிவமாகிறது.

மேலும், விநியோக உறவுகள்; எனப்படுகிறவற்றையே பரிசீலித்தல் பார்ப்போம். கூலியுழைப்பை முன் தேவையாகக் கொண்டுள்ளது, இலாபம் மூலதனத்தை முன்தேவையாக்கிக் கொண்டுள்ளது. ஆகவே இந்தக் குறிப்பிட்ட விநியோக வடிவங்கள் உற்பத்திச் சாதனங்களின் குறிப்பிட்ட சமூகச் சிறப்பியல்புகளையும் உற்பத்திச் செயலிகளின் குறிப்பிட்ட சமூக உறவுகளையும் முன் தேவைகளாகக் கொண்டுள்ளன. பிரத்தியேகமான விநியோக உறவுகள் இவ்விதம் பிரத்தியேகமான வரலாற்று வழிப்பட்ட உற்பத்தி உறவுகளின் தெரிவிப்பாகுமே தவிர வேறல்ல.

இலாபத்தை எடுத்துக் கொள்வோம்; உபரி-மதிப்பின் இந்தப் பிரத்தியேக வடிவமானது உற்பத்திச் சாதனங்களின் புதிய படைப்பு முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் வடிவத்தில் நடை பெறுவதற்கான முன்னிபந்தனை ஆகும்; அதாவது இது மறுவுற்பத்தியை ஆளும் உறவாகும்; மெய்யாகவே தமது இலாபமனைத்தையும் வருவாயாக நுகரமுடியும் என்பதுபோல் தனியொரு முதலாளிக்குத் தோன்றியபோதிலும் நிலைமை இதுவே. எப்படியானபோதிலும் தனியொரு முதலாளி காப்புறுதி மற்றும் சேமநிதிகள், போட்டியின் விதிகள் போன்றவற்றின் வடிவிலேயே கூட தடை மதில்களைச் சந்திக்கிறார்; இந்தத் தடை மதில்கள் அவருக்குத் தடை போடுகின்றன, இலாபமென்பது சொந்த முறையில் நுகரக்கூடிய உற்பத்திப் பண்டத்தின் வினியோகக் கருத்தினம் மட்டுமல்ல என்பதை அவருக்கு நடைமுறையில் நிரூபித்துக் காட்டுகின்றன. மேலும் முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிகழ்முறை அனைத்தும் உற்பத்திப் பொருட்களின் விலைகளால் ஆளப்படுகிறது. ஆனால் ஆளும் உற்பத்தி விலைகள் இலாபவீதத்தின் சமனமாக்கத்தாலும்; இதற்கிணையாக பல்வேறு சமுதாயப் பொருளுற்பத்திக் கிளைகளிடையே மூலதனம் வினியோகமானதாலும் ஆளப்படுகின்றன. ஆக, இலாபமென்பது இங்கே உற்பத்திப் பொருட்களின் வினியோகத்தில் அல்லாமல் அவற்றின் உற்பத்தியிலேயே முக்கியக் காரணியாகத் தோற்ற மளிக்கிறது; மூலதனங்களும் உழைப்பும் பல்வேறு உற்பத்திக் கிளைகளிடையிலும் வினியோகமாவதில் ஒரு காரணியாகத் தோற்றமளிக்கிறது. இலாபம் முனைவு இலாபமாகவும் வட்டியாகவும் பிரிவது அதே வருவாயின் வினியோகமாகத் தோற்றமளிக்கிறது. ஆனால் தற்பெருக்கமடையும் மதிப்பாக, உபரி-மதிப்பின் படைப்பாளியாக மூலதனம் வளர்ச்சியடைவதிலிருந்தே, அதாவது நடப்பிலுள்ள பொருளுற்பத்தி நிகழ்முறையின் இந்தப் பிரத்தியேக சமூக வடிவத்திலிருந்தே தொடக்கத்தில் இப்பிரிவினை எழுகிறது. அது கடன் -செலாவணியையும் கடன்-செலாவணி நிறுவனங்களையும் தனக்குள்ளிருந்தே வகுத்தமைக்கிறது, இவ்விதம் உற்பத்தி வடிவத்தையும் வகுத்தமைக்கிறது. வட்டி போன்றவற்றில், வெளிப்படையாகத் தெரியும் வினியோக வடிவங்கள் நிர்ணயிக்கும் உற்பத்திக் காரணிகளாக விலையில் சேருகின்றன.

நில-வாடகை என்பது வெறும் விநியோக வடிவமாகத் தோன்றலாம்; ஏனென்றால் பொருளுற்பத்தி நிகழ்முறையில் நிலச்சொத்து அதுவாக எப்பணியும் ஆற்றுவதில்லை, அல்லது

எப்படிப்பார்த்தாலும் இயல்பான எப்பணியும் ஆற்றுவதில்லை. ஆனால் 1) வாடகை என்பது சராசரி இலாபத்திற்கு மேலுள்ள மிகையளவினால் வரம்பிடப்படுவதும் 2) நிலவுடைமையாளர் பொருளுற்பத்தி நிகழ்முறைக்கும் சமூகவாழ்க்கை நிகழ்முறை அனைத்துக்குமான மேலாளர், அதிபர் என்ற நிலையிலிருந்து நிலத்தைக் குத்தகைக்கு விடுகிறவர், நிலத்திலான வட்டிக்காரர், வாடகை வசூலிப்பவர் என்ற நிலைக்குத் தாழ்த்தப்படுவதுமான நிலைமை முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிகழ்முறையின் பிரத்தியேக மானதொரு வரலாற்று விளைவாகும். பூமி நிலச்சொத்தாக வடிவெடுப்பது இதற்கான வரலாற்று முன்நிபந்தனையாகும். விவசாயத்தில் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறைக்கு இடமளிக்கும் வடிவங்களை நிலச்சொத்து மேற்கொள்வது இந்தப் பொருளுற்பத்தி முறைக்குரிய பிரத்தியேகத் தன்மையின் விளைபயனாகும். வேறு சமுதாய வடிவங்களிலும் கூட நிலவுடைமையாளரின் வருமானத்தை வாடகை என்று அழைக்கலாம். ஆனால் அது இந்தப் பொருளுற்பத்தி முறையில் வெளிப்படும் வாடகையிலிருந்து அடிப்படையிலேயே வேறுபட்டதாகும்.

ஆக, விநியோக உறவுகள் எனப்படுகிறவை பொருளுற்பத்தி நிகழ்முறையின் வரலாற்று வழியில் நிர்ணயமான சமூக வடிவங்களுக்கும், மனித வாழ்க்கையின் மறுவுற்பத்தி நிகழ்முறையில் மனிதர்கள் தமக்குள் ஏற்படுத்திக் கொள்ளும் உறவுகளுக்கும் ஏற்ப அமைகின்றன, அவற்றிலிருந்து எழுகின்றன. இந்த விநியோக உறவுகளின் வரலாற்று வழிப்பட்ட தன்மை உற்பத்தி உறவுகளின் வரலாற்று வழிப்பட்ட தன்மையாகும்; உற்பத்தி உறவுகளின் பண்புக் கூறுகளில் ஒன்றுதான் விநியோக உறவுகளில் குறிக்கப்படுகிறது. முதலாளித்துவ விநியோகம் ஏனைய பொருளுற்பத்தி முறைகளி லிருந்து எழும் விநியோக வடிவங்களிலிருந்து வேறுபடுகிறது; ஒவ்வொரு விநியோக வடிவமும் எந்த உற்பத்தி வடிவத்திலிருந்து அது எழுகிறதோ, எந்த உற்பத்தி வடிவத்துக்கு ஏற்ப அது அமைகிறதோ அந்த பிரத்தியேக உற்பத்திவடிவத்துடன் சேர்ந்து மறைந்து விடுகிறது.

விநியோக உறவுகள் மட்டுமே வரலாற்று வழிப்பட்டவை, உற்பத்தி உறவுகள் அப்படி அல்ல என்ற கருத்தானது ஒருபுறம் முதலாளித்துவப் பொருளாதாரத்தின் மீதான தொடக்க நிலைப்பட்ட - ஆனால் இன்னமும் அரைகுறையான - விமர்சனத்தின் பார்வையே ஆகும். மறுபுறம் இந்தக் கருத்து சமுதாய பொருளுற்பத்தி நிகழ்முறையையும் சாமான்ய உழைப்பு நிகழ்முறையையும்

ஒன்றோடொன்று குழம்பிக் கொள்வதையும் இரண்டையும் ஒன்றாகக் கருதுவதையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது - சமான்ய உழைப்பு நிகழ்முறை என்பது இயல்பு மீறி - தனிமைப்பட்டுள்ள ஒரு மனிதப் பிறவியாலும் கூட சமுதாயத்தின் உதவியே இல்லாமல் செய்து முடிக்கக் கூடியதாகும். உழைப்பு நிகழ்முறையானது முழுக்க முழுக்க மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையிலான நிகழ்முறையாக மட்டும் இருக்கும் அளவுக்கு அதன் சாமான்ய அடிக்கூறுகள் சமுதாய வளர்ச்சி வடிவங்கள் அனைத்திற்கும் பொதுவானவையாக இருந்து வருகின்றன. ஆனால் இந் நிகழ்முறையின் பிரத்தியேக வரலாற்று வடிவம் ஒவ்வொன்றும் அதன் பொருளாயத அடித்தளங்களையும் சமூக வடிவங்களையும் மேலும் வளர்த்தெடுக்கிறது. குறிப்பிட்ட முதிர்ச்சிக்கட்டத்தை அடைந்துவிட்ட போதெல்லாம் பிரத்தியேகமான வரலாற்று வடிவம் களையப்பட்டு இன்னும் உயர்ந்த வரலாற்று வடிவத்துக்கு வழிவிடுகிறது. இப்படியொரு நெருக்கடி வந்துசேரும் தருணத்தை வெளிப்படுத்தும் அடையாளம் என்னவென்றால் ஒருபுறம் விநியோக உறவுகளுக்கும் இவ்விதம் அவற்றுக்குரிய உற்பத்தி உறவுகளின் பிரத்தியேக வரலாற்று வடிவத்துக்கும், மறுபுறம் உற்பத்தி சக்திகளுக்கும் உற்பத்தித் திறன்களுக்கும் அவற்றின் செயலிகளது வளர்ச்சிக்கும் இடையிலான முரண்பாடுகளும் பகைமைகளும் ஆழ அகலமும் பெறுவதாகும். அடுத்து மூள்வது பொருளுற்பத்தியின் பொருளாயத வளர்ச்சிக்கும் அதன் சமூக வடிவத்துக்கும் இடையிலொரு பூசல்[61].

## அத்தியாயம் LII
## வர்க்கங்கள்

*உழைப்புச் சக்திக்கு மட்டும் உடைமையாளர்களாய் இருப்பவர்களும் மூலதன உடைமையாளர்களும் நிலவுடைமையாளர்களும் (முறையே கூலி, இலாபம், நில-வாடகை ஆகியவற்றை வருமான ஆதாரங்களாய்க் கொண்டிருப்பவர்கள்). அதாவது கூலித் தொழிலாளர்களும் முதலாளிகளும் நிலவுடைமையாளர்களும் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையை அடிப்படையாகக் கொண்ட நவீன காலம் சமுதாயத்தின் முப்பெரும் வர்க்கங்களாய் அமைந்துள்ளன.*

*இங்கிலாந்தில் நவீன காலச் சமுதாயம் மிக உயர்ந்த முறையிலும் எடுத்துக்காட்டான முறையிலும் வளர்ச்சியடைந்த பொருளாதாரக் கட்டமைப்பை உடையதாகும் என்பதே மறுக்க முடியாது. ஆனால் இங்கேயும்கூட அடுக்கடுக்கான வர்க்கப் பிரிவினை தூய வடிவில் வெளிப்படக் காணோம். நடுவில் இருக்கும் இடைநிலை அடுக்குகள் இங்கேயும் கூட எங்கு பார்த்தாலும் (நகரங்களைக் காட்டிலும் கிராமப்புற வட்டங்களில் ஒப்பிட்டுச் சொல்ல முடியாத அளவுக்கு மிகக் குறைவாகவே என்றாலும்) பிரிவுக் கோடுகளை தெளிவாகத் தெரியாமல் செய்கின்றன. ஆனால் நமது பகுப்பாய்வுக்கு இது கருத்துக்குரியதன்று. உழைப்பிலிருந்து உற்பத்திச் சாதனங்களை மேன்மேலும் பிரித்து விலக்குவதும், சிதறிக்கிடக்கும் உற்பத்திச் சாதனங்களை பெரும்பெரும், தொகுதிகளாக மேன்மேலும் சேர்த்துக் குவிப்பதும், இவ்விதம் உழைப்பைக் கூலியுழைப்பாகவும் உற்பத்திச் சாதனங்களை மூலதனமாகவும் மாற்றுவதுமே முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையானது வளர்ச்சியின் ஓயாத போக்கும் விதியுமாக என்று பார்த்தோம். மறுபுறம், இந்தப் போக்கிற்கு இணையாக மூலதனத்திலிருந்தும் உழைப்பிலிருந்தும் நிலச்சொத்து சுயேச்சையாகப் பிரித்து விலகுகிறது[62]. அல்லது நிலச்சொத்து அனைத்தும்*

62. பிலிஸ்ட் சரியாகச் சொல்கிறார்: 'பெரும்பெரும் பண்ணைகளில் தன்னிறைவுப் பொருளாதாரம் கோலோச்சுவது நாகரிகமும் தொடர்புச் சாதனங்களும் உள்நாட்டு-தொழில்களும் செல்வந்த நகரங்களும் போதுமான அளவு வளர்ச்சி பெறாமல் இருப்பதைத்தான் காட்டுகிறது. ஆகவே

முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறைக்கு ஏற்ற நிலச்சொத்து வடிவத்துக்கு மாற்றமடைகிறது.

விடைதரப்பட வேண்டிய முதல் கேள்வி இதுதனா: வர்க்கம் என்பது என்ன?- இந்தக் கேள்விக்கான பதில் இயல்பாகவே வேறொரு கேள்விக்கான பதிலிருந்து பெறப்படுகிறது; அதாவது: கூலித்தொழிலாளர்களும் முதலாளிகளும் நிலவுடைமையாளர்களும் முப்பெரும் சமுதாய வர்க்கங்களாக அமைவது எதனால்?

முதல் பார்வையில் - வருவாய்கள் மற்றும் வருவாய் ஆதாரங்கள் முழுதொத்தவையாக இருப்பதே காரணம். முப்பெரும் சமூகக் குழுக்கள் உள்ளன; இந்தக் குழுக்களின் உறுப்பினர்கள், அவற்றில் அங்கம் வகிக்கும் தனியாட்கள் முறையே கூலியையும் இலாபத்தையும் நிலவாடகையையும் நம்பி வாழ்கின்றனர், தமது உழைப்புச் சக்தியும் தமது மூலதனமும் தமது நிலவுடைமையும் ஈடேற்றமாவதை நம்பி வாழ்கின்றனர்.

ஆனால் இந்தக் கண்ணோட்டத்தில் மருத்துவர்களும் அலுவலர்களும்கூட இருவர்க்கங்களாவர்; ஏனென்றால் அவர்கள் இரு வேறு சமூகக் குழுக்களைச் சேர்ந்தவர்கள்; ஒவ்வொரு குழுவின் உறுப்பினர்களும் ஒரே ஆதாரத்திலிருந்து தமது வருவாயைப் பெறுகிறவர்கள். சமுதாய உழைப்புப் பிரிவினை தொழிலாளர்களையும் அதேபோல் முதலாளிகளையும் நிலவுடைமையாளர்களையும் நலன்வகையிலும் தரவகையிலும் எல்லையற்ற முறையில் பிரித்துக் கூறுபோடுகிறது அல்லவா, எடுத்துக்காட்டாக நிலவுடைமை யாளர்களை திராட்சைத் தோட்ட உடைமையாளர்களாகவும் பண்ணை உடைமையாளர்களாகவும் வன உடைமையாளர்களாகவும் சுரங்க உடைமையாளர்களாகவும் மீன்வள உடைமையாளர்களாகவும் பிரிக்கிறது அல்லவா, அதற்கும் இதுவே பொருந்தும் (கையெழுத்துப் பிரதி இங்கே அரைகுறையாக நின்றுவிடுகிறது)

---

ருஷ்யா, போலந்து, அங்கேரி மெக்கலேன்பர்க் எங்கிலும் இதைக்காணலாம். முன்னதாக இங்கிலாந்திலும் இப்படித்தான் இருந்தது. தொழில்களிலும் வாணிபத்திலும் ஏற்பட்ட முன்னேற்றத்தையொட்டி இந்நிலை மாறிப் பெரும்பண்ணைகள் உடைந்து இடைத்தரப் பண்ணைகளாயின; நிலம் குத்தகைக்கு விடப்படலாயிற்று.' (Die Ackerverf assung, die Zwergwirtschaft und die Auswanderung; 1842, பக்கம் 10)

பி.எங்கெல்ஸ்

# மூலதனம்
# மூன்றாம் பாகத்துக்கான
# பிற்சேர்ப்பு

மூலதனம் மூன்றாம் பாகம் பொதுமக்களின் தீர்ப்புக்கு உட்படுத்தப்பட்டது முதற்கொண்டு பல்வேறுபட்ட பொருள் விளக்கங்களைப் பெற்று வருகிறது. இது எதிர்பார்த்த ஒன்றுதான். இந்நூலை வெளியிட்டதில் எனக்கிருந்த தலையான அக்கறை முடிந்தவரை நம்பத்தக்க ஒரு வாசகத்தை உருவாக்க வேண்டும், மார்க்ஸ் அடைந்த புதிய முடிவுகளை முடிந்தவரை மார்க்சின் சொற்களிலேயே வெளிப்படுத்த வேண்டும், வேறுவழியே இல்லாதவிடத்து மட்டுமே என்னை இடையில் நுழைத்துக் கொள்ளவேண்டும், அப்போதுகூட வாசகருக்கு அவரிடம் பேசுவது யார் என்பதில் சந்தேகமே இருக்கக் கூடாது என்பதுதான். இது கண்டனத்துக்கு ஆளாகியுள்ளது, எனக்குக் கிடைத்த விவரப்பொருளை திட்டஒழுங்குடன் எழுதப்பட்ட நூலாக, பிரெஞ்சுக்காரர்கள் சொல்வது போல் en faire un livere என்பதாக நான் மாற்றி அமைத்திருக்க வேண்டுமாம்; அதாவது வாசகரின் வசதிக்காக வாசகத்தின் நம்பகத் தன்மையைப் பலியிட்டிருக்க வேண்டுமாம். ஆனால் எனது கடமையை நான் அப்படி புரிந்து கொள்ளவில்லை. நூலை நான் இப்படித் திருத்தி எழுதுவதற்கு நியாயமே இல்லையெனக் கருதினேன்; மார்க்சைப் போன்ற ஒருவர் தமது குரல் கேட்கும்படிச் செய்திடத் தமது விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளை முழுக்க முழுக்கத் தாமே முன்வைத்த அசல் நிலையில் வருங்காலத் தலைமுறைகளுக்குக் கையளித்திட உரிமை படைத்தவராவார். மேலும் இவ்வளவு சிறப்பு வாய்ந்த ஒருவர் விட்டுச்சென்ற மரபுச் செல்வத்தை இவ்வழியில் கெடுத்திட நான் விரும்பவில்லை - மேற்சொன்னவாறு திருத்தி எழுதுவது கெடுப்பதாகும் என்றுதான் எனக்குத் தோன்றும்; இப்படிச் செய்வது என்னைப் பொறுத்தவரை நம்பிக்கைத் துரோகமாகவே அமைந்திருக்கும். மூன்றாவதாக அதனால் ஒரு பயனும் ஏற்பட்டிருக்காது. ஏனென்றால் படிக்க முடியாதவர்களுக்கு அல்லது படிக்க விரும்பாதவர்களுக்கு, முதல் பாகத்திலேயேகூட அதனைச் சரியாகப் புரிந்து கொள்வதற்கு அவசியமானதைக் காட்டிலும் தவறாகப்புரிந்து கொள்வதற்கே அதிக சிரமம் எடுத்துக் கொண்டவர்களுக்கு - இவர்களுக்கெல்லாம் சொல்ல வேண்டியதை எப்படிச் சொன்னாலும் அதனால் ஒரு பயனும் இல்லை. ஆனால் உண்மையிலேயே புரிந்து கொள்ள வேண்டும் என்பதில் அக்கறை கொண்டவர்களுக்கு,

கொள்ள வேண்டும் என்பதில் அக்கறை கொண்டவர்களுக்கு, மூலவாசகம்தான் மிகவும் முக்கியமானது; அந்த மூலவாசகத்தை நான் திருத்தி அமைப்பது அவர்களைப் பொறுத்தவரை அதிகம் போனால் ஒரு வர்ணனைக்குரிய மதிப்பையே பெற்றிருக்கும்; மேலும் அது வெளியிடப்படாததும் கைக்கெட்டாததுமான ஏதோ ஒன்றைப் பற்றிய வர்ணனையாகவே இருக்கும். முதல் சர்ச்சை எழுந்த உடனே மூலவாசகத்தை எடுத்துப் பார்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கும்; இரண்டாவது சர்ச்சையும் மூன்றாவது சர்ச்சையும் எழும்போது மூலவாசகத்தை முழுமையாக வெளியிடுவது தவிர்க்க முடியாததாகியிருக்கும்.

புதிதாய் எவ்வளவோ தன்னகத்தே கொண்டிருக்கும் ஒரு நூலின், அதிலும் அவசர அவசரமாய் வரையப்பட்டு ஒரு பகுதி அரைகுறையாக விடப்பட்ட முதல் வரைவில் இத்தகைய சர்ச்சைகள் எழுவது இயல்புதான், இந்த இடத்தில்தான் என் தலையீடு பயனுள்ளதாய் அமையக்கூடும்: புரிதலில் எதிர்ப்படும் இடர்ப்பாடுகளைக் களைவதற்கும், முக்கியக் கூறுகளின் முக்கியத்துவம் வாசகத்தில் போதிய அளவு எடுப்பாய் வெளிப்படாதபோது அந்தக் கூறுகளை தெளிவாக முன்னுக்குக் கொண்டு வந்து நிறுத்துவதற்கும், 1865இல் எழுதப்பட்ட வாசகத்தை 1895இல் காணப்படும் நிலவரத்துக்கு ஏற்றதாக்கும் பொருட்டு முக்கியமான சிலவற்றைச் சேர்ப்பதற்கும் என்தலையீடு பயன்படக் கூடும். சொல்லப்போனால் இப்போதே இரு கூறுகளைச் சுருக்கமாகப் பரிசீலிக்க வேண்டிய தேவையிருப்பதாக எனக்குத் தோன்றுகிறது.

# I

## மதிப்பு விதியும் இலாப வீதமும்

இந்த இரு காரணிகளுக்கும் இடையில் தென்படும் முரண்பாட்டுக்கான தீர்வு மார்க்ஸின் நூல் வெளியிடப்படுவதற்கு முன்பு விவாதங்களுக்கு வழிசெய்தது போலவே அது வெளியிடப்பட்ட பிறகும் விவாதங்களுக்கு வழி செய்யும் என்பது எதிர்பார்க்க வேண்டிய ஒன்றுதான். ஒரு முழு அதிசயம் வெளிப்படும் என்று சிலர் காத்திருந்தனர். தாங்கள் எதிர் பார்த்துக் கொண்டிருந்த செப்படி வித்தைக்குப் பதில் எளிய, அறிவிக்குகந்த ஆரவாரமற்ற முறையில் முரண்பாட்டுக்கு ஒரு நிதானமான தீர்வு அடையப்பட்டிருப்பதைக் கண்டு இவர்கள் ஏமாற்றமடைந்துள்ளனர். இந்த ஏமாற்றத்திலும் மிகவும் மகிழ்ந்து போயிருப்பவர் வேறுயாருமல்ல, நமக்குத்தெரிந்த பிரபல லோரியாதான். ஆகக் கடைசியில் ஆர்க்கிமிடிசின் நெம்புநிலை ஆதாரம் இவருக்குக் கிடைத்து விட்டது. இந்த ஆதாரத்திலிருந்து அவரைப் போன்ற ஒரு நோஞ்சானே கூட உறுதியாய்க் கட்டி எழுப்பப்பட்ட பிரமாண்டமான மார்க்சியக் கட்டமைப்பை உயரத் தூக்கி வெடிக்கச் செய்திடலாம். பூ, இவ்வளவுதானா என்று எரிச்சலுற்றுக் கேட்கிறார் அவர். இதையா தீர்வு என்கிறீர்கள்? இது முழுக்க முழுக்க மாய மந்திரமே! பொருளாதார அறிஞர்கள் மதிப்பு குறித்துப் பேசும்போது உள்ளபடியே பரிவர்த்தனையில் நிலை நாட்டப்படும் மதிப்பைத்தான் சொல்கிறார்கள். 'எள்முனை அளவாவது அறிவுபடைத்த பொருளாதார அறிஞர் எவரும் சரக்குகளை விற்றுப் பெறுவதல்லாத, ஒருபோதும் விற்றுப்பெறமுடியாத (né possono vendersi mai)... மதிப்பை என்றுமே கருத்தில் கொண்டதில்லை, என்றுமே அதைக் கருத்தில் கொள்ள விரும்பவும் மாட்டார்... சரக்குகள் ஒருபோதும் விற்றுப்பெறாத மதிப்பு அவற்றில் அடங்கியுள்ள உழைப்புக்கு ஏற்ற விகிதத்தில் இருப்பதாக உரைப்பதன் மூலம், சரக்குகள் விற்றுப் பெரும் மதிப்பு அவற்றுக்காகச் செலவிடப்படும். உழைப்புக்கு ஏற்ற விகிதத்தில் இருப்பதில்லை என்ற வைதிகப் பொருளாதார அறிஞர்களின் ஆய்வுரையை தலைகீழ் வடிவில் திருப்பிச் சொல்வதல்லாமல் வேறென்ன செய்கிறார் மார்க்ஸ்?... தனிப்பட்ட மதிப்புகளிலிருந்து தனிப்பட்ட விலைகள் விலகிச் சென்ற போதிலும் எல்லாச் சரக்குகளின் மொத்தவிலையும் எப்போதுமே அவற்றின்

மொத்த மதிப்புடன் அல்லது, சரக்குகளின் மொத்த அளவில் அடங்கியுள்ள உழைப்பளவுடன் ஒருங்கமைகிறது என்று மார்க்ஸ் கூறுவதால் பயனில்லை. ஏனென்றால் மதிப்பு என்பது ஒரு சரக்குக்கும் பிறிதொரு சரக்குக்கும் இடையிலான பரிவர்த்தனை விகிதமே தவிர வேறல்ல என்பதால் மொத்த மதிப்பு என்ற கருத்துருவமே அபத்தமானது, அர்த்தமற்றது... சொல் வகையில் முரண்பாடானது...' இரு சரக்குகளில் அடங்கியுள்ள ஒரே விதமான, சம அளவிலான ஒரு கூறின் அடிப்படையில்தான் அவ்விரு சரக்குகளையும் பரிவர்த்தனையில் சமப்படுத்த முடியும் என்று நூலின் தொடக்கத்திலேயே மார்க்ஸ் கூறுவதாக லோரியா வாதிடுகிறார். சரக்குகள் அவற்றில் அடங்கியுள்ள உழைப்பளவின் விகிதத்தில் அல்லாமல் முற்றிலும் வேறானதொரு விகிதத்தில் ஒன்றுக்கொன்று பரிவர்த்தனை ஆவதாக இப்போது உரைப்பதன் மூலம் மார்க்ஸ் தம்மைத்தாமே முறைப்படி மறுதலித்துக் கொள்வதாகச் சொல்கிறார். 'என்றாவது இப்படியொரு முழுமையான reductio ad absurdum, இப்படியொரு முழுமையான தத்துவப் போண்டி நிலை காணப்பட்டதுண்டா? என்றாவது இன்னும் அதிகப்பகட்டோடும் இன்னும் அதிகச் சிரத்தையோடும் விஞ்ஞானத் தற்கொலை நடைபெற்றது உண்டா?' (Nuova, Antologia *1895* பிப்ரவரி *1*, பக்கம் *477-478, 479.*)

நம் லோரியா அளவுக்கதிகமாகவே ஆனந்தப்படுவதைப் பார்க்கிறோம். அவர் மார்க்சையும் தம்மைப்போன்ற ஒருவராக, ஒரு சாதாரண போலிப்பண்டிதராகக் கருதியது சரியல்லவா? இதோ பாருங்கள்....லோரியாவைப் போலவே மார்க்சும் தம் பொது மக்களைப் பார்த்து ஏளனம் செய்கிறார்; அற்பத்திலும் அற்பமான இத்தாலியப் பொருளாதாரப் பேராசிரியரைப் போலவே அவரும் மாயமந்திரங்களை நம்பி வாழ்கிறார். ஆனால் துல்காமரா தொழில் தெரிந்தவராதலால் இப்படிச் செய்துவிட்டுப் போகலாம்; ஏடாகூடமான வடக்கத்தியராகிய மார்க்ஸ் தகாதவற்றை மட்டுமே செய்கிறார், அர்த்தமற்றும் அபத்தமாகவுமே எழுதுகிறார்; முடிவில் அவருக்கு எஞ்சியிருப்பதெல்லாம் முறைப்படியான தற்கொலை ஒன்றுதான்.

சரக்குகள் உழைப்பினால் நிர்ணயிக்கப்படும் மதிப்புகளில் என்றுமே விற்கப்பட்டதில்லை, என்றும் விற்கப்படவும் முடியாது என்ற கூற்றைப் பிறகு பார்ப்போம். 'மதிப்பு என்பது ஒரு சரக்குக்கும் பிறிதொரு சரக்குக்கும் இடையிலான பரிவர்த்தனை விகிதமே தவிர வேறல்ல என்றும், ஆகவே 'சரக்குகளின் மொத்தமதிப்பு என்ற

கருத்துருவமே அபத்தமானது, அர்த்தமற்றது... சொல்வகையில் முரண்பாடானது' என்றும் திருவாளர் லோரியா அறுதியிட்டு உறுதியாகச் சொல்வதை மட்டும் இங்கு பரிசீலிப்போம் அதாவது இரு சரக்குகள் ஒன்றுக்கொன்று பரிவர்த்தனை செய்து கொள்ளப்படும் விகிதமாகிய அவற்றின் மதிப்பு முற்றிலும் தற்செயலான ஒன்று, வெளியிலிருந்து சரக்குகளோடு ஒட்டவைக்கப்படுவது, அது இன்றைக்கு ஒன்றாகவும் நாளைக்கு வேறொன்றாகவும் இருக்கலாம். ஒரு மெட்ரிக் அந்தர் கோதுமை ஒரு கிராமம் தங்கத்துக்கு பரிவர்த்தனை செய்யப்படுகிறதா அல்லது ஒரு கிலோ கிராம் தங்கத்துக்குப் பரிவர்த்தனை செய்யப்படுகிறதா என்பது இரண்டுக்குமே அறவே அந்நியமான நிலைமைகளைப் பொறுத்ததே தவிர அந்தக் கோதுமை அல்லது தங்கத்தில் உள்ளார்ந்திருக்கும் நிலமைகளை கிஞ்சிற்றும் பொறுத்ததல்ல. இல்லையென்றால் இந்நிலைமைகள் பரிவர்த்தனை யிலும் தம்மை நிலை நாட்டிக் கொள்ளவும், மொத்தத்தில் பரிவர்த்தனையின் மீது ஆதிக்கம் செலுத்தவும், மேலும் பரிவர்த்தனையி லிருந்து வேறாக சுயேச்சையாய் நிலவவும் வேண்டியிருக்கும். அப்போது சரக்குகளின் மொத்த மதிப்பு குறித்துப் பேசுவது சாத்தியப்படும். அது அபத்தமென்கிறார் பிரபல லோரியா. இரு சரக்குகள் ஒன்றுக்கொன்று எவ்விகிதத்தில் பரிவர்த்தனை செய்யப்பட்டாலும் சரி, அவ்விகிதம் தான் அவற்றின் மதிப்பு அவ்வளவுதான், இதற்குமேல் அதில் ஒன்றுமல்ல. ஆகவே மதிப்பும் விலையும் ஒன்றுதான்; ஒவ்வொரு சரக்கும் எத்தனை விலைகளைப் பெறமுடியுமோ அத்தனை மதிப்புகளையும் பெறமுடியும். விலை என்பது வழங்கல்-வேண்டலால் நிர்ணயிக்கப்படுகிறது; இதற்குமேல் ஏதாவது கேள்வி கேட்டு பதிலை எதிர்பார்க்கிறவர் எவரும் முட்டாளேயாவார்.

ஆனால் விவகாரத்தில் சிறியதொரு சிக்கல் உள்ளது. இயல்பான நிலையில் வழங்கலும்-வேண்டலும் நேராகின்றன. ஆகவே உலகிலுள்ள எல்லா சரக்குகளையும் வழங்கல் பிரிவென்றும் அதே அளவுள்ள வேண்டல் பிரிவென்றும் இரு சரிபாதிகளாகப் பிரித்துக் கொள்வோம். ஒவ்வொரு பிரிவும் 1,000,000 மில்லியன் மார்க்கு, பிராங்கு, பவுன், ஸ்டெர்லிங், அல்லது வேறு ஏதேனும் ஒருவகைச் செலாவணி விலையைக் குறிப்பதாகக் கொள்வோம். தொடக்க எண்கணிதப்படி மொத்த விலை அல்லது மதிப்பு 2,000,000 மில்லியன் ஆகிறது. அர்த்தமற்றது, அபத்தமானது என்கிறார் திருவாளர் லோரியா. இரு பிரிவுகளும் சேர்ந்து 2,000,000 மில்லியன் விலையைக் குறிக்கலாம்.

*ஆனால் மதிப்பு இப்படியல்ல. விலை என்று சொன்னால் 1,000 + 1,000 = 2,000. ஆனால் மதிப்பு என்று சொன்னால் 1,000 + 1,000 = 0. எப்படியும் சரக்குகளின் மொத்த அளவு சம்பந்தப்பட்டிருக்கும் இந்த நேர்வில் மட்டுமாவது இப்படித்தானாம். ஏனென்றால் இங்கே இருபிரிவுகளில் ஒவ்வொன்றையும் சேர்ந்த சரக்குகள் 1,000,000 மில்லியன் பெறுமானமுள்ளவையாக இருப்பது இரண்டில் ஒவ்வொன்றும் மற்றதன் சரக்குகளுக்கு இந்தத்தொகையைத் தரமுடியும், தரும் என்பதால்தானாம். ஆனால் இருபிரிவுகளையும் கையில் சேர்ந்த சரக்குகளின் மொத்த அளவினையும் மூன்றாவதாக ஒருவரின் கையில் ஒன்று சேர்ப்போமானால், முதலாமவரின் கையில் இப்போது மதிப்பேதும் இல்லை, இரண்டாமவரின் கையிலும் இல்லை, நிச்சயமாக மூன்றாமவரின் கையிலும் இல்லை-முடிவில் எவரிடமும் எதுவும் இல்லை. கொஞ்சங்கூட மதிப்பின் தடயமே இல்லாதபடி நமது தெற்கத்தி காக்லியோஸ்டிரோ மதிப்பின் கருத்துருவத்தை அடித்து நொறுக்குவதில் வெளிப்படுத்தி உள்ள உயர்திறனைக் கண்டு மறுபடியும் வியக்கிறோம். இதுவே கொச்சைப் பொருளாதார இயலின் கொடுமுடி!* [(1)]

---

1. சற்றே பிற்பாடு, (ஹைனே சொல்வதுபோல் சொல்வதானால்) 'புகழின் மூலம் பிரசித்தமான' (ஹெய்ன்ரிச் ஹைனே, Ritter Olam - ஆங்கிலப் பதிப்பாசிரியர்) இதே கனவான் மூன்றாம் பாகத்துக்கான எனது முன்னுரைக்கு - 1895இல் (Rassegna முதல் இதழில் அது இத்தாலிய மொழியில் வெளியிடப்பட்ட பிறகு - பதிலளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் தமக்கு ஏற்பட்டிருப்பதாகக் கருதினார். இந்த பதில் 1895 பிப்ரவரி 25 நாளிட்ட Riforma Sociale ஏட்டில் அச்சாகிறது. தவிர்க்க முடியாத (ஆகவே இருமடங்கு அருவருப்பான) புகழ்ச்சியை எனக்கு வாரிவழங்கிய பின், அவர் வரலாறு தொடர்பான பொருள் முதல் வாதக் கண்ணோட்டத்திற்குரிய மார்க்சின் பெருமையைத் தட்டிப் பறித்துத் தமதாக்கிக் கொள்ளும் எண்ணம் தமக்கு ஒருபோதும் இல்லையென்று தெரிவிக்கிறார். இதை அவர் 1885 இலேயே - அதுவும் கூட ஒரு சஞ்சிகைக் கட்டுரையில்தான் - ஒப்புக் கொண்டு விட்டார். ஆனால் பதிலுக்கு அவர் இந்தப்பெருமையை அதற்குரிய சரியான இடத்தில், அதாவது இப்பொருள் குறித்த தமது நூலில் குறிப்பிடமறுத்து மௌனம் காப்பதில் பிடிவாதமாய் இருக்கிறார்; இந்நூலில் பக்கம் 129இல் தான் முதன்முதலில் மார்க்ஸ் குறிப்பிடப்படுகிறார். அதிலும் பிரான்சில் சிறுநில உடைமை என்பது தொடர்பாகவே குறிப்பிடப்படுகிறார். மார்க்சுதான் இந்தத் தத்துவத்தின் மூலவர் என்பதில்லையென்று இப்போது அவர் துணிந்து பறைசாற்றுகிறார். அரிஸ்டாட்டில் ஏற்கெனவே இதனைச் சூசகமாக எடுத்துரைக்கவில்லை என்று வைத்துக் கொண்டாலும், 1656இலேயே ஹார்வ்டன் இதனைப் பிரகடனம் செய்து விட்டார் என்பதில் ஐயமில்லை, மார்க்சுக்கு நெடுங்கால முன்பே வரலாற்று அறிஞர்களும் அரசியல்வாதிகளும் சட்ட வல்லுநர்களும் பொருளாதார அறிஞர்களுமான பலராலும் அது வளர்த்தெடுக்கப்பட்டது. இதையெல்லாம் லோரியா எழுதிய நூலின் பிரெஞ்சுப் பதிப்பை படித்துத் தெரிந்து கொள்ளலாம். சுருங்கச் சொல்லின் இந்தப் பேர்வழி குறையே இல்லாத இலக்கியத் திருடர் மார்க்கிடமிருந்து களவாடியவற்றை வைத்துக் கொண்டு இனியும் அவர் பீற்றித்திரிய முடியாத நிலையை நான் ஏற்படுத்திய பிறகு, அவரைப் போலவே மா:ச்சும் கடன்வாங்கிய இறகுக் குஞ்சங்களால் தம்மை அலங்கரித்துக் கொள்வதாகத் துணிந்து வாதிடுகிறார். எனது ஏனையத் தாக்குகளிலிருந்து, லோரியா ஒன்றை எடுத்துக் கொள்கிறார்; இதன்படி மார்க்ஸ் மூலதனத்தின் இரண்டாம் பாகத்தையோ மூன்றாம் பாகத்தையோ எழுதத் திட்டமிடவேயில்லையாம்'. இப்போது எங்கெல்ஸ் இரண்டாம் பாகத்தையும்

பிரௌனின் (Archiv fur soziale gesetzgebung, பாகம் VII. எண் 4இல், வெர்னர் சோம்பார்ட் மொத்தத்தில் பிரமாதமான மார்க்சியக் கருத்தமைப்பை உருவரையாகத் தருகிறார். ஜெர்மானியப் பல்கலைக் கழகப் பேராசிரியர் ஒருவர் மார்க்சின் எழுத்துக்களில் மார்க்ஸ் உண்மையிலேயே என்ன சொல்கிறாரோ அதைப் பார்ப்பதில் மொத்தத்தில் வெற்றிபெறுவது இதுவே முதல் முறை; மார்க்சியக் கருத்தமைப்பின் மீதான விமர்சனம் அதனை மேலும் வளர்த்துச் செல்வதாக அமைய முடியுமே தவிர அதனை மறுதலிப்பதாக அமைய முடியாது என்று அவர் சொல்கிறார் - 'அரசியல் பிழைப்பு வாதி அதைப் பார்த்துக் கொள்ளட்டும்', சோம்பார்ட்டும் கூட நமது ஆய்வுப் பொருளை பரிசீலிக்கிறார்; இது எதிர்பார்க்க வேண்டிய ஒன்றுதான். மார்க்சியக் கருத்தமைப்பில் மதிப்புக்குள்ள முக்கியத்துவத்தை ஆராய்ந்து அவர் பின்வரும் முடிவுகளை வந்தடைகிறார்; மதிப்பு என்பது முதலாளித்துவ வழியில் உற்பத்தி செய்யப்படும் சரக்குகளில் பரிவர்த்தனை உறவில் வெளிப்படுவதல்ல; அது முதலாளித்துவப்

---

மூன்றாம் பாகத்தையும் என்னிடம் வீசி வெற்றிகரமாய்ப் பதிலளிக்கிறார்.....பிரமாதம்! எனக்கு இவ்வளவு அறிவு இன்பத்தை வாரிவழங்கிய இந்த நூற்பாகங்களுக்கு நான் நன்றி சொல்ல வேண்டும், இவை குறித்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்; இது உண்மையிலேயே தோல்விதான் என்றால் இன்று இந்தத் தோல்வியைப் போல் வெற்றி ஒரு போதும் எனக்கு அருமையானதாய் இருந்ததில்லை. இது உண்மையிலேயே தோல்விதானா? எங்கெல்ஸ் பக்தி கலந்த நட்புணர்வுடன் தொகுத்துக் கொடுத்திருக்கும் தொடர்பற்ற குறிப்புகளின் இந்தக் கலவையை வெளியிடுவதற்காகத்தான் மார்க்ஸ் எழுதினார் என்பது உண்மைதானா? மார்க்ஸ்.... தமது நூலினதும் தமது கருத்தமைப்பினதும் முடிசூட்டு விழாவை இந்தப் பக்கங்களிடம் ஒப்படைத்துச் சென்றார் என்று அனுமானம் செய்து கொள்வது மெய்யாகவே ஏற்கத் தக்கதா? சராசரி இலாபம் பற்றிய அத்தியாத்தில் தீர்வானது - இத்தகைய ஆண்டுகளாக உறுதியளிக்கப்பட்டு வந்த அந்தத் தீர்வு - மிகக் கேவலமான மாய மந்திரமாய், மிகக் கொச்சையான சொற்சிலம்பமாய் மாற்றப்படுகிறதே அந்த அத்தியாயத்தை மார்க்ஸ் வெளியிட்டிருப்பார் என்பது நிச்சயம்தானா? எப்படியும் அது குறித்துச் சந்தேகப்படுவது ஏற்புடையதே.... மார்க்ஸ் அற்புதமான (Splendido) தமது நூலை வெளியிட்டபிறகு அதற்குத் தொடர்ச்சியாக வேறொன்று வெளியிட விரும்பவில்லை, அல்லது இந்த மாபெரும் நூலை முழுமைப்படுத்தும் பணியை தம் சொந்தப் பொறுப்பாக வைத்துக் கொள்ளாமல் தம் வாரிசுகளிடம் விட்டுவிட விரும்பினார் என்பதையே அது நிரூபிப்பதாக எனக்குத் தோன்றுகிறது?'

பக்கம் 267இல் இப்படி எழுதப்பட்டுள்ளது. ஹைனே தம் அற்பவாத ஜெர்மானியப் பொது மக்களைப் பற்றி பின்வரும் சொற்களில் கூறியிருப்பதை காட்டிலும் வெறுப்புடன் பேசி இருக்க முடியாது: 'எழுத்தாசிரியர் இது பகுத்தறிவுக்கொத்த ஒரு பிறவி என்பதுபோல் முடிவில் தன் பொதுமக்களுக்கு பழக்கப்பட்டுவிடுகிறார்' பிரபல லோரியா தம்முடைய பொதுமக்கள் யாரென்று நினைத்தாக வேண்டும்? முடிவில் அதிருஷ்டங்கெட்ட என்மீது இன்னொரு வண்டி நிறைய புகழ்ச்சி கொட்டப்படுகிறது. இதில் நமது ஸ்கனாரெல் அந்த பலாமுக்கு நிகராகிறார்; பலாம் சபிப்பதற்காக வந்தார்; ஆனால் அவருடைய உதடுகள் அவரது விருப்பத்தையும் மீறி 'ஆசியும் அன்பும் நிறைந்த சொற்களை' கொட்டிவிட்டனவாம். ஏனிப்படி என்றால் நல்லவராகிய பலாம் கழுதையில் ஏறிவருவதுதான் அவரை வேறுபடுத்திக் காட்டும் அடையாளம்; எசமானரைவிடவும் மதிநுட்பம் வாய்ந்தது அந்தக் கழுதை. இந்தமுறை பலாம் தமது கழுதையை வீட்டில் விட்டு வந்து விட்டார் எனத் தெரிகிறது.

பொருளுற்பத்தியின் செயலிகளது உணர்வில் வாழ்வதில்லை; அது மனத்தளவிலான, தர்க்க வழிப்பட்ட உண்மைதானே தவிர அனுபவஞ்சார்ந்த உண்மையல்ல; மார்க்சைப் பொறுத்தவரை பொருளாயதமாய் திட்டவட்டமான மதிப்பின் கருத்துருவமானது உழைப்பின் சமுதாய உற்பத்தித் திறன் பொருளாதார வாழ்வில் அடிப்படையாகும் என்ற உண்மையில் பொருளாதாரத் தெரிவிப்பே தவிர வேறல்ல; முடிவாகப் பார்த்தால் மதிப்பு விதிதான் முதலாளித்துவப் பொருளாதார அமைப்பிலான பொருளாதார நிகழ்முறைகளை ஆளுகிறது; இந்தப் பொருளாதார அமைப்புக்கு அதன் பொதுவான உள்ளடக்கம் இதுதான்; சரக்குகளின் மதிப்பானது உழைப்பின் உற்பத்தித் திறன் - முடிவாகப் பார்த்தால் பொருளாதார நிகழ்முறைகள் அனைத்தையும் ஆளுகிற இத்திறன் - நிர்ணயிக்கும் காரணிகளில் ஒன்றாகத் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளும் பிரத்யேகமான, வரலாற்று வழிப்பட்ட வடிவமாகும். இப்படிச் சொல்கிறார் சோம்பார்ட்; முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறைக்கு மதிப்பு விதியின் முக்கியத்துவம் என்ன என்பது பற்றிய இந்தக் கருத்தமைவு தவறானது என்று சொல்ல முடியாது. ஆனால் இது மிகவும் பொதுப்படையாகவும், இன்னும் குறுகலான இன்னும் துல்லியமான முறையில் தெரிந்துரைப்பதற்கு இடமளிப்பதாகவும் இருப்பதாகவே எனக்குத் தோன்றுகிறது; மதிப்பு விதியால் ஆளப்படும் சமுதாய வளர்ச்சியின் பொருளாதாரக் கட்டங்களுக்கு மதிப்புவிதி பெற்றுள்ள முக்கியத்துவம் அனைத்திலும் இது முழுமையானது எனக் கருதுகிறேன்.

அதேபோல் பிரௌனின் Sozialpolitisches Zentralblatt 1895 பிப்ரவரி 25, எண். 22இல் மூலதனம் மூன்றாம் பாகம் குறித்து கான்ராடு ஷ்மிட் மிகச்சிறப்பானதொரு கட்டுரை வரைந்துள்ளார். உபரி மதிப்பிலிருந்து மார்க்ஸ் சராசரி இலாபத்தை வருவிப்பது இதுவரை பொருளாதார இயல் கேட்டுக்கூடப் பார்க்காத பின்வரும் கேள்விக்கு எப்படி முதன்முதலாக விடை தருகிறது என்பதற்கான நிரூபணத்திற்கு இங்கே தனியழுத்தம் தந்தாக வேண்டும். இந்த சராசரி இலாப வீதத்தின் பருமன் எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது? உதாரணமாகச் சொன்னால் அது 50 அல்லது 100 சதவீதமாக இல்லாமல் 10 அல்லது 15 சதவீதமாக இருக்கும் நிலை எவ்வாறு ஏற்படுகிறது? முதலில் தொழில் துறை முதலாளியால் தனதாகக் கொள்ளப்படும் உபரி-மதிப்புதான் இலாபத்தையும் வாடகையையும் ஊற்றெடுக்கச் செய்யும்

பிரத்தியேகமான ஒரே ஆதாரமாகும் என்பது நமக்குத் தெரியுமாதலால், இந்தப் பிரச்சினை தானாகவே தீர்ந்து விடுகிறது. உஷ்மிட் எழுதிய கட்டுரையில் இந்தப் பகுதி லோரியா போன்ற பொருளாதார அறிஞர்களுக்கென்றே எழுதப்பட்டதாய் இருக்கக் கூடும் - கண் திறந்து பார்க்க விரும்பாதவர்களின் கண்ணைத் திறப்பது வீண்வேலை அல்லவென்றால்.

உஷ்மிட்டுக்கும் மதிப்பு விதி தொடர்பாக வடிவ அளவிலான ஐயப்பாடுகள் உள்ளன. அவர் இவ்விதியை உள்ளபடியான பரிவர்த்தனை நிகழ்முறைக்கு விளக்கமளிப்பதற்காக முன் வைக்கப்படும் விஞ்ஞானக் கருதுகோள் என்றழைக்கிறார்; இந்தக் கருதுகோள்தான் இவ்விதிக்கு நேர்முரணாகத் தோன்றும் போட்டிக்குட்பட்ட விலைகளின் புலக்காடுகள் தொடர்பாகவும் கூட அவசியமான தத்துவத் தொடக்க முனையாய்-ஒளியூட்டுவதும் இன்றியமையாததுமான தொடக்க முனையாய்-அமைகிறது என்கிறார்.. மதிப்பு விதி இல்லையென்றால் முதலாளித்துவ மெய்நடப்பின் பொருளாதாரப் பொறியமைவு பற்றிய தத்துவ நுண்ணோக்கென்பதே சாத்தியமற்றதாகி விடுகிறது என்கிறார். தனிப்பட்ட முறையில் தாம் எழுதிய ஒரு கடிதத்தில் - இக்கடிதத்தை மேற்கோளாக எடுத்துக் காட்டுவதற்கு என்னை அவர் அனுமதிக்கிறார் - முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறைக்குள் மதிப்பு விதி தத்துவ நோக்கில் அவசியமான போதிலும் முழுக்க முழுக்க கற்பனையானதே என்று உஷ்மிட் அறிவிக்கிறார். ஆனால் இந்தப் பார்வை அறவே பிழையானது என்பது என்கருத்து, மதிப்புவிதியானது வெறும் கருதுகோளாக ஏன், அவசியமான கற்பனையாகவுங்கூட - இருப்பதை விடவும் மிக அதிகமான, திட்டவட்டமான முக்கியத்துவம் உடையதாகும்.

சோம்பார்ட்டும் சரி, உஷ்மிட்டும் சரி - நான் பிரபல லோரியாவைக் குறிப்பிடுவது ஒரு வேடிக்கையான கொச்சைப் பொருளாதார ஒப்பீடு என்ற முறையில்தான் - நாம் இங்கு பரிசீலிப்பது ஒரு வரலாற்று நிகழ்முறையையும் சிந்தனையில் அதன் விளக்கப் பிரதிபலிப்பாகிய அதன் உட்தொடர்புகளின் தத்துவத் தொடர்ச்சியையும் தானே தவிர முழுக்க முழுக்க தர்க்கவகைப்பட்ட ஒரு நிகழ் முறையை அல்ல என்ற உண்மையைப் போதுமான அளவுக்கு கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை.

மூன்றாம் பாகம், முதல் புத்தகத்தில் மார்க்ஸ் கூறியிருப்பது தீர்மானகரமானது:

'இடர்பாடு அனைத்துக்கும் காரணமாய் இருக்கும் உண்மை என்னவென்றால் சரக்குகள் சரக்குளாக மட்டுமல்லாமல் மூலதனங்களின் உற்பத்திப் பொருள்களாகவும் பரிவர்த்தனை செய்து கொள்ளப்படுகின்றன; இந்த மூலதனங்கள் தமது பருமனுக்கேற்ற விகிதத்தில், அல்லது சமபருமன் உடையவையாக இருந்தால் சமஅளவில் மொத்த உபரி - மதிப்பளவில் பங்கு கேட்கின்றன'.

இந்த வேறுபாட்டை எடுத்துக்காட்டி விளக்கும் பொருட்டு, தொழிலாளர்கள் தமக்கு வேண்டிய உற்பத்திச் சாதனங்களைத் தம்வசம் வைத்திருப்பதாகவும், சராசரியாக அவர்கள் சமஅளவில் நீண்டகாலங்களுக்கும், சமஅளவிலான மும்முரத்துடனும் வேலை செய்வதாகவும், தங்களின் சரக்குகளை ஒருவருக்கொருவர் நேரடியாகப் பரிவர்த்தனை செய்து கொள்வதாகவும் அனுமானம் செய்யப்படுகிறது. அதாவது ஒருநாளில் இரு தொழிலாளர்கள் தமது உழைப்பைக் கொண்டு தமது உற்பத்திப் பொருட்களுக்குச் சமஅளவில் புதிய மதிப்பைச் சேர்த்திருப்பார்கள்; ஆனால் ஒவ்வொருவரின் உற்பத்திப் பொருளும் ஏற்கெனவே உற்பத்திச் சாதனங்களில் உருக்கொண்டிருக்கும் உழைப்பைப் பொறுத்து வெவ்வேறு மதிப்புடையதாக இருக்கும்- மதிப்பில் உற்பத்திச் சாதனங்களை கொண்டு பெறப்படும் இந்தப் பகுதி முதலாளித்துவப் பொருளாதாரத்தின் மாறாமூலதனத்தைக் குறிப்பதாகும்; அதேபோது புதிதாய்ச் சேர்க்கப்படும் மதிப்பில் தொழிலாளியின் வாழ்வுச் சாதனங்களுக்காக ஈடுபடுத்தப்பட்ட பகுதியோ மாறும் மூலதனத்தைக் குறிப்பதாகும்; புதியமதிப்பில் இதற்குப் பிறகு எஞ்சியுள்ள பகுதி உபரி - மதிப்பைக் குறிப்பதாகும்; இந்த உபரி-மதிப்பு இங்கு தொழிலாளிக்குச் சொந்தமாவதாகக் கொள்கிறோம். இவ்வாறு, தங்களாலேயே முன்னீடு செய்யப்பட்ட 'மாறா' மதிப்புப் பகுதியை மாற்றீடு செய்வதற்கான தொகை கழித்த பின், இரு தொழிலாளர்களும் சம மதிப்புகளைப் பெறுவார்கள்; ஆனால் உபரி-மதிப்பைக் குறிக்கும் பகுதிக்கும் உற்பத்திச்சாதனங்களின் மதிப்புக்குமான விகிதம் - இது முதலாளித்துவ இலாப வீதத்திற்கு ஏற்ப அமையும் - ஒவ்வொரு நேர்விலும் மாறுபட்டிருக்கும். ஆனால் அவர்கள் ஒவ்வொருவரும் உற்பத்திச் சாதனங்களின் மதிப்பை பரிவர்த்தனையின் வாயிலாக மாற்றீடு செய்து கொள்வதால், இது சற்றும் முக்கியத்துவமற்ற காரணியாக இருக்கும்.

மூன்றாம் பாகத்தை மீண்டுமொருமுறை திருப்பிப் பார்க்கும் வாய்ப்பு மார்க்சுக்குக் கிடைத்திருந்தால், அவர் இந்த நூற்பகுதியைக்

கணிசமாய் நீட்டியிருப்பார் என்பதில் சந்தேகமில்லை, இப்போதுள்ளபடி, இது பிரச்சினைக்குரிய விவகாரம் குறித்துச் சொல்லப்படவேண்டிய தன் மேலோட்டமான உருவறையைத்தான் கொடுக்கிறது. ஆகவே இதனைச் சற்றே நெருங்கிப் பரிசீலிப்போம்.

சமுதாயத்தின் தொடக்க நிலைகளில் உற்பத்திப் பொருள்கள் உற்பத்தியாளர்களாலேயே நுகரப்படுவதும், இந்த உற்பத்தியாளர்கள் ஏறக்குறைய பொதுவுடைமைத் தன்மையிலான சமுதாயங்களில் தன்னியல்பாக ஒழுங்கமைவதும் நாமனைவரும் அறிந்ததே; பிற்காலத்தில் இந்த உற்பத்திப் பொருள்களில் உபரியாவது வெளியாகுமுன் பரிவர்த்தனை செய்யப்படுகிறது, இதனால் உற்பத்திப் பொருள்கள் சரக்குகளாக மாறும் நிலை வந்து சேருகிறது; இந்தப் பரிவர்த்தனை முதலில் வெவ்வேறு குலங்களைச் சேர்ந்த தனிப்பட்ட சமுதாயங்களிடையில் மட்டும் நடைபெறுகிறது. ஆனால் பிற்பாடு சமுதாயத்திற்குள்ளேயும் அதன் கை ஓங்குகிறது, சமுதாயம் களைவுற்று பெரியவையோ சிறியவையோ ஆன குடும்பக் குழுக்களாகப் பிரிவதற்கு இது கணிசமாய் பங்கு செலுத்துகிறது. ஆனால் இந்தக் களைவுக்குப் பிறகும் கூட பரிவர்த்தனையில் ஈடுபடும் குடும்பத் தலைவர்கள் உழைக்கும் விவசாயிகளாகவே இருந்து வருகிறார்கள், இவர்கள் தமது குடும்பப் பண்ணைகளில் தமது குடும்பத்தினரின் துணைகொண்டு அனேகமாய்த் தமக்குத் தேவையானது அனைத்தையும் உற்பத்தி செய்து கொள்கிறார், தங்களுக்குத் தேவையான அவசியப் பண்டங்களின் மிகச் சிறு பகுதியை மட்டுமே தமது உபரி-உற்பத்திப் பொருள்களைப் பரிவர்த்தனை செய்வதன் மூலம் வெளியிலிருந்து பெறுகிறார்கள். குடும்பம் வேளாண்மையிலும் கால்நடை வளர்ப்பிலும் ஈடுபடுவதோடு, தங்களின் உற்பத்திப் பொருள்களை மேலும் செப்பம் செய்து பூர்த்தியான நுகர்வுப் பண்டங்களாக மாற்றிக் கொள்ளவும் செய்கிறது; எப்போதாவது கை-அரைவை ஆலையைக் கொண்டு தமக்கு வேண்டிய அரைவையையும் கூடி செய்து கொள்கிறது; அது ரொட்டி சுடுகிறது, நூல் நூற்கிறது, சாயமிடுகிறது, வெண்சணலும் கம்பளியும் நெய்கிறது, தோல் பதனிடுகிறது; மரக்கட்டடங்களைக் கட்டுகிறது, மராமத்தும் செய்கிறது; கருவிகளும் பண்டபாத்திரங்களும் தயாரிக்கிறது; அவ்வப்போது தச்சுவேலையும் கருமான் வேலையும் செய்கிறது; இதனால் குடும்பம் அல்லது குடும்பக்குழு பிரதானமாய்த் தன்னிறைவு கொண்டதாய் இருக்கிறது.

இப்படிப்பட்ட ஒரு குடும்பம் வெளியாரிடமிருந்து பண்டமாற்றின் மூலம் பெறவோ விலைக்கு வாங்கவோ வேண்டியிருந்தவை அதிகமில்லை; ஜெர்மனியில் 19ஆம் நூற்றாண்டின் தொடக்கம் வரையிலும் கூட அவை பிரதானமாக கைவினைப் பொருட்களாகவே இருந்தன; அதாவது அவற்றை உற்பத்தி செய்வது விவசாயிக்குத் தெரியாத ஒன்று அல்லவே அல்ல; கச்சாப் பொருள் இல்லாத காரணத்தாலோ, விலைக்கு வாங்கிய பண்டம் ஒப்பளவில் மிகச் சிறந்ததாக அல்லது மிக மலிவானதாக இருந்த காரணத்தாலோதான் அவர் தாமே அதனை உற்பத்தி செய்யவில்லை. ஆகவே பண்டமாற்றின் மூலம் தாம் பெறுகிற பண்டங்களை உற்பத்தி செய்வதற்குத் தேவையான உழைப்புநேரம் மத்தியகால விவசாயிக்கு ஓரளவு துல்லியமாகத் தெரிந்திருந்தது. கிராமத்துக் கொல்லரும் வண்டித் தச்சரும் விவசாயியின் கண் பார்வையில் வேலை செய்தனர்; தையற்காரரும் செருப்புத்தொழிலாளியும் கூட அவ்வாறே வேலை செய்தனர்; இவர்கள் ஒருவர்பின் ஒருவராக எமது ரைன்டலாந்து விவசாயிகளிடம் வந்து, வீட்டில் செய்த மூலப்பொருட்களைக் கொண்டு காலணிகளும் ஆடைகளும் தைத்துக் கொடுப்பதை என் இளமைக் காலத்தில் கண்டுள்ளேன். இந்த விவசாயிகளும் சரி, அவர்கள் யாரிடமிருந்து இந்தப் பண்டங்களை விலைக்கு வாங்கினார்களோ அவர்களும் சரி உழைப்பாளர்களே ஆவர்; அவர்கள் தமக்குள் ஒருவருக்கொருவர் பரிவர்த்தனை செய்து கொண்ட பண்டங்கள் அவர்களாலேயே உற்பத்தி செய்யப்பட்டவையாகும். இந்தப் பண்டங்களைச் செய்வதற்காக அவர்கள் செலவிட்டது என்ன? உழைப்பு, உழைப்பு மட்டுமே; கருவிகளை மாற்றீடு செய்வதற்கும், கச்சாப்பொருளை உற்பத்தி செய்வதற்கும் அதனை மேம்படுத்தி செய்பொருளாக்குவதற்கும் அவர்கள் தமது உழைப்புச் சக்தியைத் தவிர வேறு எதையும் செலவிடவில்லை. அப்படியானால் அவர்கள் தம்மால் உற்பத்தி செய்யப்பட்ட இந்தப் பண்டங்களை ஏனைய உழைப்பாளர்களால் உற்பத்தி செய்யப்பட்டவற்றுக்குப் பரிவர்த்தனை செய்யும் போது அவற்றுக்காகச் செலவிட்ட உழைப்பு நேரத்தின் விகிதத்தில் அல்லாமல் வேறு எப்படிப் பரிவர்த்தனை செய்ய முடியும்? இந்தப் பண்டங்களுக்காக செலவிடப்பட்ட உழைப்பு நேரம்தான் பரிவர்த்தனை செய்து கொள்ள வேண்டிய மதிப்புகளின் அளவுவழி நிர்ணயிப்புக்குப் பொருத்தமான ஒரே அளவையாக இருந்தது என்பதோடு, வேறு எந்த அளவையும் எவ்விதத்திலும் சாத்தியப்படவே இல்லை. அல்லது, ஒருவரது பத்து மணி நேர உழைப்பின் உற்பத்திப்

பண்டத்தை வேறொருவரது ஒரே ஒரு மணிநேர உழைப்பின் பண்டத்துக்குப் பிரதியாகக் கொடுத்து விடுமளவுக்கு விவசாயியும் கைவினைஞரும் மூடர்களாய் இருந்ததாக நம்பப்படுகிறதா? பரிவர்த்தனை செய்து கொள்ளப்படும் சரக்களவுகள் அவற்றில் உருக்கொண்டிருக்கும் உழைப்பளவுகளுக்கேற்பவே அளவிடப்படும் போக்கினை மேன்மேலும் வெளிப்படுத்தும் பரிவர்த்தனை தவிர, விவசாயியின் இயற்கைப் பொருளாதாரத்துக் காலம் முழுவதிலும் வேறு எந்தப் பரிவர்த்தனையும் சாத்தியமில்லை. பணம் இந்தப் பொருளாதார முறைக்குள் ஊடுருவி நுழையும் அக்கணம் முதற்கொண்டே ஒருபுறம், மதிப்பு விதிக்கு (கவனிக்கவும், மார்க்சிய வரைமுறையிலான மதிப்புவிதிக்கு) ஏற்றவாறு தகவமையும் போக்கு மென்மேலும் குறிப்பிடத்தக்கதாய் வளர்கிறது; அதேபோது மறுபுறம் கடுவட்டி மூலதனமும் வரிவிதிப்புக் கொள்ளையும் இந்தப் போக்கில் குறுக்கிட்டு ஏற்கெனவே தடைபோடுகின்றன; சராசரியாகச் சொன்னால் விலைகள் மதிப்புகளுக்கு மிக நெருக்கமாய் நெருங்கி வரும் காலங்கள் நீண்டு செல்லத் தொடங்குகின்றன.

விவசாயிகள் உற்பத்தி செய்யும் பண்டங்களுக்கும் நகரத்து கைவினைஞர்கள் உற்பத்தி செய்யும் பண்டங்களுக்கும் இடையிலான பரிவர்த்தனை தொடர்பாகவும்கூட மேற்சொன்னது பொருந்தும். தொடக்கத்தில் இந்தப் பண்டமாற்று வணிகரின் இடைச்செயல் இல்லாமல் நேரடியாக நடைபெறுகிறது - அந்தந்த நகரத்துக்குரிய சந்தை நாட்களில் விவசாயி விற்க வேண்டியவற்றை விற்று வாங்க வேண்டியவற்றை வாங்கிக் கொள்கிறார். இங்கேயும் கைவினைஞரின் வேலை நிலைகள் விவசாயிக்குத் தெரியும் என்பதோடு, விவசாயியின் வேலை நிலைமைகள் கைவினைஞருக்கும் தெரியும். ஏனென்றால் கைவினைஞர் இன்னமும் தாமே ஓரளவு விவசாயியாகவும் இருக்கிறார்; அவரிடம் காய்கறி மற்றும் பழத்தோட்டம் இருப்பதோடு, மிகப் பல சந்தர்ப்பங்களில் சிறு நிலத்துண்டு, ஓரிரு பசுமாடுகள், பன்றி, கோழி போன்றவையும் உள்ளன. ஆக, மத்திய காலத்தில் வாழ்ந்த மக்கள் கச்சாப்பொருளுக்கும் துணைப் பொருளுக்குமான உற்பத்திச் செலவுகளையும் உழைப்பு நேரத்தையும் தமக்கிடையே குறிப்பிடத்தக்க அளவுக்குத் துல்லியமாய் சரிபார்த்துக் கொள்ள முடிந்தது-எப்படியும் பெதுவாக அன்றாடம் பயன்படுத்தும் பண்டங்கள் தொடர்பாகவாவது இப்படிச் செய்ய முடிந்தது.

ஆனால் உழைப்பளவை அடிப்படையாகக் கொண்ட இந்தப் பண்டமாற்றில், ஒழுங்கின்றி இடையிடையே தடைபடுவதும்

நிச்சயமற்ற விளைவு கொண்டதுமான நீண்டகால உழைப்பு தேவைப்படும் உற்பத்திப் பண்டங்களுக்கான-எடுத்துக்காட்டாக தானியம் அல்லது கால் நடைக்கான-உழைப்பளவினை எவ்வாறு கணக்கிடுவது? சுற்றடியாகவும் ஒப்பளவிலும்தான் என்றாலும் கூட எவ்வாறு கணக்கிடுவது? அதிலும், கணக்கிடத்தெரியாத மக்களிடையே எவ்வாறு கணக்கிடுவது? வளைந்து நெளிந்து தோராயமாகச் செல்லும் நீண்டதொரு நிகழ்முறையின் வாயிலாகத்தான் அதனைக் கணக்கிட முடியுமென்பது கண்கூடாய்த் தெரிகிறது; அனேக சந்தர்ப்பங்களில் இங்குமங்குமாய் இருளில் தடுமாறி தடவித் தடவி வழிகண்டு செல்வதும், வழக்கம்போல் தவறுகளின் மூலமாகவே கற்பதுமான நிகழ்முறையாகும் இது. ஆனால் ஒவ்வொருவரும் மொத்தத்தில் தமக்கு ஏற்பட்ட செலவீட்டை சரிக்கட்டிக் கொள்ள வேண்டிய அவசியம் எப்போதுமே சரியான திசைக்குத் திரும்பி வர உதவியது; சுற்றோட்டத்திலிருந்து பண்ட வகைகளின் சிறு எண்ணிக்கையும், அதேபோல் அநேக சந்தர்ப்பங்களில் அவற்றின் உற்பத்தியினது நன்மை நூறாண்டு காலமாய் மாற்றமின்றி நிலையாக இருந்ததும் இந்த இலக்கை அடைவதை எளிதாக்கித் தந்தன. இந்த உற்பத்திப் பண்டங்களின் ஒப்பீட்டு மதிப்பளவை ஓரளவு நெருக்கமாய் நிர்ணயிப்பதற்கு அவ்வளவு நீண்டகாலம் ஆகிவிடவில்லை; கால்நடைதான் - தனியொரு கால் நடையின் உற்பத்திக்காலம் நீண்டு செல்வதால் கால் நடையென்னும் இந்தச் சரக்குக்குத்தான் மதிப்பு நிர்ணயிப்பு மிகவும் சிக்கலானதாய்த் தெரிகிறது - சற்றே பரவலாய் ஏற்றுக் கொள்ளப்பட்ட முதலாவது பணச் சரக்காயிற்று என்ற உண்மை இதைத்தான் நிரூபிக்கிறது, கால்நடை பணச்சரக்காக ஏற்றுக் கொள்ளப்படும் நிலை ஏற்படுவதற்கு, கால்நடையின் மதிப்பு, வேறுபல சரக்குகளுக்கான அதன் பரிவர்த்தனை விகிதம் ஏற்கெனவே ஒப்பளவில் அசாதாரண நிலைத் தன்மையை - அனேகப் புலன்களின் ஆட்சிப் பரப்புகளிலும் முரணின்றி ஒப்புக் கொள்ளப்படும் நிலைத் தன்மையை - அடைந்திருக்க வேண்டும். அக்காலத்திய மக்கள்-கால்நடை வளர்ப்பாளர்களும் சரி, அவர்களின் வாடிக்கையாளர்களும் சரி-தங்களால் செலவிடப்பட்ட உழைப்பு நேரத்தை பண்டமாற்றில் அதற்குச் சமதையான ஒன்றைப் பெறாமல் கொடுத்து விடுவதில்லை என்ற அளவுக்கு கெட்டிக்காரர்களாய் இருந்தார்கள். மாறாக, சரக்கு உற்பத்தியின் ஆதி நிலையை நெருங்கி வருகிறார்கள் - எடுத்துக் காட்டாக ருஷியர்களும் கீழை நாட்டவர்களும் - ஓர் உற்பத்திப் பண்டத்திற்காகச் செலவிடப்பட்ட தங்களது உழைப்பு நேரத்துக்கான

முழு இழப்பீட்டை விடாப்பிடியான நீண்ட பேரத்தின் மூலம் கறப்பதற்காக இன்னும்கூட அதிக நேரத்தை விரயம் செய்கிறார்கள்.

உழைப்பு நேரத்தின் வழிப்பட்ட இந்த மதிப்பு நிர்ணயிப்பிலிருந்து தொடங்கி, சரக்கு உற்பத்தி முழுவதும் வளர்ந்தது பற்றியும் அதனுடன் சேர்ந்து வளர்ந்த பல்வேறுபட்ட உறவுகளில் மதிப்புவிதியின் பல்வேறு கூறுகளும் தம்மை நிலை நாட்டிக்கொள்வது பற்றியும் மூலதனம் முதல்பாகத்தின் முதல்பகுதியில் விவரிக்கப்பட்டது; அதாவது, குறிப்பாகச் சொன்னால், உழைப்பு மட்டுமே மதிப்பைப் படைக்கும் படியான நிலைமைகள் விவரிக்கப்பட்டன. பங்கேற்பவர்களின் உணர்வில் நுழையாமலே தம்மை நிலை நாட்டிக் கொள்ளும் இந்த நிலைமைகளை அன்றாட நடைமுறையிலிருந்து பிரித்தெடுக்க வேண்டுமானால், சலியாத தத்துவ ஆராய்ச்சியின் மூலமாகத்தான் முடியும்; ஆகவே இந்நிலைமைகள் இயற்கை விதிகளைப்போல் செயல்படுகின்றன. இவை தவிர்க்க முடியாதபடி சரக்கு உற்பத்தியின் இயல்பிலிருந்து வருவதை மார்க்ஸ் நிரூபித்தார். மிக முக்கியமானதும் மிக கூர்மையானதுமாகிய முன்னேற்றம் உலோகப் பணத்துக்கு மாறிச் சென்றதாகும்; இந்த மாற்றத்தின் விளைவாக, உழைப்பு நேரத்தின் வழிப்பட்ட மதிப்பு நிர்ணயிப்பு சரக்குப் பரிவர்த்தனையின் மேற்பரப்பில் கண்ணுக்குத் தெரியாததாயிற்று. நடைமுறைக் கண்ணோட்டத்தில் பணம் தீர்மானகர மதிப்பளவை ஆயிற்று; வர்த்தகத்துக்கு வந்த சரக்குகள் எவ்வளவுக்கெவ்வளவு பல்வகைப் பட்டவை ஆயினவோ, அவை எவ்வளவுக்கு எவ்வளவு தொலைதூர நாடுகளிலிருந்து வந்தனவோ, ஆகவே அவற்றை உற்பத்தி செய்வதற்கு அவசியமான உழைப்பு நேரத்தைச் சரிபார்க்கும் வாய்ப்பு எவ்வளவுக் கெவ்வளவு குறைந்து போயிற்றோ, அவ்வளவுக்கவ்வளவு பணம் தீர்மானகர மதிப்பளவையாயிற்று. பணம் என்பதே வழக்கமாக முதலில் அந்நியப் பகுதிகளிலிருந்து வந்தது; உயர்நிலை உலோகங்கள் நாட்டிற் குள்ளேயே கிடைத்த போதும்கூட, விவசாயியும் கைவினைஞரும் அவற்றுக்காக ஈடுபடுத்தப்பட்ட உழைப்பை தோராயமாக மதிப்பீடு செய்ய முடியாமலிருந்தது; மேலும் உழைப்பின் மதிப்பளவைத் தன்மை தொடர்பான அவர்களின் உணர்வு யாவற்றையும் பணமாகக் கணக்கிடும் வழக்கத்தால் பெருமளவுக்கு மங்கிப் போயிருந்தது; மக்கள் மனத்தில் பணம் முழுமுதல் மதிப்பைக் குறிக்கலாயிற்று.

சுருங்கச்சொல்லின்: மார்ச்சிய மதிப்பு விதி சாமானியச் சரக்கு உற்பத்தியின் காலம் முழுவதற்கும், அதாவது முதலாளித்துவப்

பொருளுற்பத்தி முறை தலையெடுத்து சாமானியச் சரக்கு உற்பத்தியை மாற்றியமைக்கும் வரை, பொதுவாக பொருந்தக்கூடியதாகும்; பொருளாதார விதிகள் எவ்விதத்தும் செல்லத்தக்கவையாய் இருக்கும் வரை பொருந்தக்கூடியதாகும். அதுவரை விலைகள் மார்க்சிய விதிப்படி நிர்ணயிக்கப்படும் மதிப்புகளை நோக்கி ஈர்க்கப்படுகின்றன, அம்மதிப்புகளைச் சுற்றி அலைவுறுகின்றன; சாமானியச் சரக்கு உற்பத்தி எவ்வளவுக்கெவ்வளவு முழுநிறைவாய் வளர்ச்சியடைகிறதோ, புறத்திருந்ததான கொந்தளிப்புக் குலைவுகளால் வழிமறிக்கப்படாத நீண்டகாலங்களுக்குரிய சந்தை விலைகள் அற்ப இடைவெளிக்குள் மதிப்புகளுடன் ஒருங்கமைகின்றன. இவ்வாறு, உற்பத்திப் பொருட்களைச் சரக்குகளாக மாற்றியமைக்கும் பரிவர்த்தனையின் தொடக்கத்திலிருந்து இந்த சகாப்தத்தின் 15ஆம் நூற்றாண்டுவரை நீடிக்கும் பாலத்திற்கு மார்க்சிய மதிப்பு விதி பொருளாதார வகையில் பொதுவான செல்லுபடித்தன்மை உடையதாகும். ஆனால் சரக்குப் பரிவர்த்தனையான ஏடறிந்த வரலாறு அனைத்துக்கும் முற்பட்ட காலத்திலிருந்தே தொடங்கி விடுகிறது; எகிப்தில் எப்படியும் கி.மு.2,500இல், அனேகமாய் (ஒருகால்) கி.மு.5,000இல் அது தொடங்கிற்று; பாபிலோனில் கி.மு.4,000இல் ஒருகால் கி.மு.6,000இல் தொடங்கிற்று. அதாவது மதிப்பு விதி ஐந்தாயிரம் முதல் ஏழாயிரம் ஆண்டுகள் வரையிலான காலத்தில் கோலோச்சி வந்தது. இப்போது திருவாளர் லோரியாவின் ஆழ்ந்த அறிவை மெச்சிப் போற்றலாம்; இந்தக்காலத்தில் பொதுவாகவும் நேரடியாகவும் செல்லத்தக்கதாகிய மதிப்பை சரக்குகளை ஒரு நாளும் விற்றுப்பெறாத விற்றுப்பெற முடியாத மதிப்பென்று அழைக்கிறாரே அவர். பாமர ஞானத்தின் சிறுபொறி உடைய எந்தப் பொருளாதார அறிஞரும் இந்த மதிப்பு குறித்து ஒருநாளும் அக்கறைப் படமாட்டார்கள் என்கிறாரே அவர்!

இதுவரை நாம் வணிகரைப்பற்றிப் பேசவில்லை. இதுவரை அவரது தலையீட்டைக் குறிப்பிட்டுப் பரிசீலிக்காமலிருக்க முடிந்தது; இப்போது சாமனிய சரக்கு உற்பத்தி முதலாளித்துவச்சரக்கு உற்பத்தியாக மாற்றமடைந்ததைப் பரிசீலிக்கப் போகிறோம். இந்தச் சமுதாயத்தில் வணிகர்தான் புரட்சிகரக் கூறாய் இருந்தார்; அதில் மற்ற ஒவ்வொன்றும் நிலையாக இருந்தது - மரபுரிமைப்படி வழிவழியாய் வந்ததே போல் நிலையாய் இருந்தது; விவசாயி தமது நிலப்பரப்பை மட்டுமல்லாமல் கட்டற்ற நிலவுடைமையாளராகவோ கட்டற்ற அல்லது கட்டுண்ட பணியீட்டு வாடகை விவசாயி அல்லது பண்ணையடிமையாகவோ இருக்கும் தகுநிலையையும் கூட வழிவழியாகவும் அநேகமாய் விட்டுக்

கொடுக்க முடியாதவாறும் பெற்றார்; நகரத்துக் கைவினைஞர் தம் தொழிலையும் தம் கைவினைச் சங்க சிறப்புரிமைகளையும் அவ்வாறே பெற்றார். மேலும் அவர்கள் ஒவ்வொருவரும் வாடிக்கையாளர்களையும் சந்தையையும் அதேபோல் தேர்ச்சியையும் வழிவழியாய்ப் பெற்றார். வழிவழி வந்த கைத்தொழிலுக்காக அவர் குழந்தைப் பருவத்திலிருந்தே பயிற்றுவிக்கப்பட்டார். இந்த உலகத்திற்குள்ளேதான் வணிகர் வந்து நுழைந்தார்; அவரிடமிருந்துதான் அதன் புரட்சி தொடங்கியாக வேண்டும். ஆனால் அவர் உணர்வுபூர்வமான புரட்சியாளராக வரவில்லை மாறாக அதன் சதையின் சதையாகவும் இரத்தத்தின் இரத்தமாகவும் வந்து சேர்ந்தார். மத்தியகால வணிகர் எவ்வகையிலும் தனிநபர்வாதி அல்ல. சாராம்சத்தில் அவரும் தம் சமகாலத்தவர்கள் அனைவரையும் போலவே கூட்டுவாதியாகவேதான் இருந்தார். புராதனப் பொதுவுடைமையிலிருந்து வளர்ந்த மார்க்கு கிராம சமுதாயம் கிராமப்புறத்தில் இருந்து வந்தது. ஆரம்பத்தில் ஒவ்வொரு விவசாயிக்கும் அளவிலும் தரத்திலும் சமமான நிலப்பரப்பு இருந்தது. மார்க்கின் உரிமைகளில் சமபங்கும் இருந்தது. மார்க்கானது மூடப்பட்ட சமுதாயமாகி, புதிய நிலப்பங்குகள் ஒதுக்கீடு செய்யப்படுவதில்லை என்ற நிலை ஏற்பட்டபின், வாரிசுரிமையின் மூலமும் இன்ன பிற வழிகளிலும் நிலப்பங்குகளில் உட்பிரிவினை நிகழ்ந்தது; அதேபோல் மார்க்கிலான பொது உரிமைகளிலும் உட்பிரிவினைகள் நிகழ்ந்தன; ஆனால் முழுநிறைவான நிலப்பங்கே மூலஅலகாய் இருந்து வந்தது; அதாவது மார்க்கில் அரை, கால், அரைக்கால் உரிமைகளோடு அரை, கால், அரைக்கால் நிலப்பங்குகள் இருந்தன. பிற்காலத்திய உற்பத்திக் கூட்டமைப்புகளெல்லாம், முக்கியமாய் நகரங்களைச் சேர்ந்த கைவினைச் சங்கங்கள் - இவற்றின் சட்டவிதிகள் என்பவை மார்க்கு அமைப்பு முறையை வரம்புக்குட்பட்ட நிலப்பரப்புக்கு பதில் கைத்தொழில் சார்ந்த தனியுரிமைக்குப் பிரயோகிப்பதுதானே தவிர வேறல்ல - மார்க்கு சமுதாயத்தின் அமைப்பு முறையையே பின்பற்றி அமைந்தன. இந்த ஒழுங்கமைப்பு முழுவதிலும் மையமானது என்னவென்றால் கைவினைச் சங்கத்துக்கு உறுதிசெய்யப்பட்ட உரிமைகளிலும் உற்பத்தியிலும் ஒவ்வோர் உறுப்பினரும் சரிநிகராய்ப் பங்கு பெறுவதாகும்; எல்பர்பெல்டு மற்றும் பார்மென் நூல் தொழிலுக்கு 1527ஆம் ஆண்டு தரப்பட்ட உரிமத்தில் இந்த உண்மை எடுப்பாய் வெளிப்படுகிறது. (தூன்: Industrie am Niederrhein, பாகம் II, பக்கம் 164, அடிக்குறிப்பு.) சுரங்கக் கைவினைச் சங்கங்களுக்கும் இதுபொருந்தும். அவற்றின் ஒவ்வோர் அங்கமும்

சரிநிகராய்ப் பங்கு பெற்றது; மார்க்கு உறுப்பினரின் நிலப்பங்கைப் போலவே அதுவும் பிரிக்கத்தக்கதாய் இருந்தது; கூடவே அதன் உரிமைகளும் கடமைகளும் கூட பிரிக்கத்தக்கனவாய் இருந்தன. கடல்கடந்த வாணிபத்தை ஆரம்பித்து வைத்த வணிக நிறுமங்களுக்கும் இது பொருந்தும். அலெக்சாந்திரியார் அல்லது காண்ஸ்டாண்டிநோபிள் துறைமுகத்தில் வெனிசியர்களும் ஜெனோவியர்களும், ஒவ்வொரு 'தேசமும்' அதனதன் fondaco என்பதில் - வசிப்பகம், உண்பகம், பண்டகச்சாலை, கண்காட்சி, விற்பனைக்கூடங்கள் மற்றும் மைய அலுவலகங்கள்-முழுமையான வர்த்தகச் சங்கங்களாய் அமைந்தன; அவை போட்டியாளர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் மூடப்பட்டவையாக இருந்தன; அவை தமக்குள் நிர்ணயித்துக் கொண்ட விலைக்கு விற்பனை செய்தன; அவற்றின் சரக்குகள் திட்டமான தரம் கொண்டவையாக இருந்தன; பொது ஆய்வினாலும், அனேக சந்தர்ப்பங்களில் ஒரு முத்திரையினாலும் இந்தத் தரம் உத்தரவாதம் செய்யப்பட்டது; அவற்றின் உற்பத்திப் பண்டங்களுக்கு உள்ளூர்க்காரர்கள் தரவேண்டிய விலை குறித்தும் வேறுபலவற்றைப் பற்றியும் அவை பொதுவில் கலந்து ஆலோசனை செய்தன. நார்வே நாட்டைச் சேர்ந்த பெர்கெனில் அமைந்த ஜெர்மன் பாலத்திலும் (Tydske Bryggen) ஹான்ஸ் வாணிகர்கள் இவ்வாறே செய்தனர்; அவர்களோடு போட்டியிட்ட டச்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள் தொடர்பாகவும் இதையே கூறலாம். ஒருவர் விலை குறைத்து விற்றாலோ விலை கூட்டி வாங்கினாலோ அவர் பாடு திண்டாட்டம்தான்; குற்றம் புரிந்தவருக்கு சங்கம் விதிக்கும் நேரடித் தண்டனைகளை ஒதுக்கிவிட்டுப் பார்த்தாலும், அவருக்கெதிரான புறக்கணிப்பு அந்த நேரத்தில் தவிர்க்க முடியாத நாசத்தைக் குறித்தது. குறிப்பிட்ட நோக்கங்களுக்கென இன்னும் நெருக்கமான சங்கங்களும் கூட நிறுவப்பெற்றன; 14, 15ஆம் நூற்றாண்டுகளில் ஜெனோவாவில் நிறுவப்பெற்ற மவோனா சங்கங்களை எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம்; இந்தச் சங்கங்களை பல்லாண்டுகாலம் ஆசியா மைனரில் ஃபேர்க்கேயையும் சியோஸ் தீவையும் சேர்ந்த படிகாரச் சுரங்கங்கள் மீது ஆட்சி புரிந்தன; மேலும், 14ஆம் நூற்றாண்டின் முடிவில் தொடங்கி இத்தாலியுடனும் ஸ்பெயினுடனும் வாணிகம் புரிந்து அந்த நாடுகளில் கிளைகளையும் நிறுவிய மாபெரும் ராபென்ஸ்பெர்க் வர்த்தக நிறுமத்தையும் குறிப்பிடலாம்; ஃபகர், பெல்சர்ஃபோலின், ஹொஷ்டேட்டர் முதலான ஆக்ஸ்பர்கர்களின் ஜெர்மானிய நிறுமத்தையும் குறிப்பிடலாம்; ஹிர்ஸ் ஃபோகெல் முதலான நியுன்பர்கர்களின் ஜெர்மானிய நிறுமம்

*1505-06இல் இந்தியாவுக்கு போர்த்துகீசியர்கள் மேற்கொண்ட பயணத்தில் 66,000 துக்காட்டு மூலதனத்தோடு மூன்று கப்பல்களோடும் பங்கேற்றது; அது 150 சதவீதம் - மற்றவர்களின் கருத்துப்படி 175 சதவீதம் - நிகர இலாபம் சம்பாதித்தது (ஹெய்டு: Levantehandel பாகம் II, பக்கம் 524.); வேறு பல நிறுமங்களையும் இவ்வகையில் குறிப்பிடலாம்; 'ஏக போகங்கள்' எனப்படும் இவை குறித்துத்தான் லூதர் ஆத்திரத்துடன் பொரிந்து கொட்டுகிறார்.*

*இங்குதான் முதல் முதலாக இலாபத்தையும் இலாபவீதத்தையும் சந்திக்கிறோம். வணிகரின் முயற்சிகள் வேண்டுமென்றே உணர்வு பூர்வமாய் இந்த இலாபவீதத்தைப் பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் சரி நிகராக்குவதை நோக்கமாய்க் கொண்டுள்ளனர். லெவாண்டில் வெனிசியர்களும் சரி, வடபுலத்தில் ஹான்ஸ் சங்கத்தவரும் சரி, ஒவ்வொரு வணிகரும் தம் அண்டை வணிகரைப் போலவே சரக்குகளுக்கு அதே விலை கொடுத்தார்; தம் 'தேசத்தை' சேர்ந்த ஏனைய ஒவ்வொரு வணிகரையும் போலவே போக்குவரத்துக்கு அதே கட்டணம் செலுத்தினார். விற்பனைப் பண்டங்களுக்கு அதேவிலை பெற்றார். ஊர் திரும்புகையில் அதே விலைக்கு சரக்கு வாங்கி வந்தார். ஆக இலாபவீதம் அனைவருக்கும் சமமாய் இருந்தது. பெரிய வர்த்தக நிறுமங்களில் செலுத்தப்பட்ட மூலதனப் பங்குக்கேற்ற விகிதத்தில் இலாப ஒதுக்கீடு செய்யப்பட்டது; உரிமை படைத்த நிலப்பங்குக்கேற்ற விகிதத்தில் மார்க்கு உரிமைகளில் பங்கு பெறுவது அல்லது சுரங்கத் தொழில் பங்குக்கேற்ற விகித்தில் சுரங்க இலாபத்தில் பங்குபெறுவது எவ்வளவு இயல்பானதோ, இந்த ஒதுக்கீடும் அவ்வளவு இயல்பாய் நடைபெற்றது. இவ்வாறு சம இலாப வீதமானது - முழுவளர்ச்சி பெற்ற வடிவத்தில் முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் இறுதி விளைவுகளில் ஒன்றாகிய இது - இங்கே அதன் மிக எளிய வடிவில் இருக்கையில், மூலதனம் வரலாற்று வழியில் பயணம் தொடங்கும் முனைகளில் ஒன்றாக, உண்மையில் மார்க்கு கிராம சமுதாயத்தின் நேரடித் தொடர்விளைவாக வெளிப்படுகிறது - இந்தக் கிராம சமுதாயமோ புராதனப் பொதுவுடைமையின் நேரடித் தொடர் விளைவாகும்.*

*இந்த ஆரம்ப இலாபவீதம் தவிர்க்க முடியாமலே மிகவும் உயர்ந்திருந்தது. வர்த்தகத்தில் ஆபத்துகள் ஏராளமாய் இருந்தன; பரவலாய் நடைபெற்ற கடற்கொள்ளை மட்டுமல்ல காரணம்; போட்டியில் ஈடுபட்டிருந்த நாடுகளும் வாய்ப்புக் கிடைத்தபோது*

அனைத்து விதமான வன்முறைச் செயல்களிலும் ஈடுபடத் தயங்கவில்லை; முடிவில், விற்பனையும் சந்தை நிலைமைகளும் அயல் நாட்டுக் குறுநில மன்னர்கள் வழங்கிய உரிமங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தனர்; இந்த உரிமங்கள் அவ்வப்போது மீறப்பட்டன. அல்லது நீக்கம் செய்யப்பட்டன. ஆகவே ஓர் உயர்ந்த காப்பீட்டுக் கட்டணமும் இலாபத்தில் அடங்கியிருப்பது அவசியமாயிற்று. அடுத்த புரள்வு மெதுவாக நடைபெற்றது, கொடுக்கல் வாங்கல்கள் கையாளப்படுவது நீண்டு சென்றது; மிகச் சிறந்த காலங்களில்-இந்தக் காலங்கள் அரிதாகவே நீண்டு சென்றன-ஏகபோக வர்த்தகம் நடைபெற்று ஏகபோக இலாபம் பெறப்பட்டது. அச்சமயம் மிக உயர்ந்த வட்டி வீதங்கள் நிலவின; எப்போதுமே இந்த வட்டிவீதங்கள் மொத்தத்தில் வழக்கமான வர்த்தக லாபத்தின் சதவீதத்தைக் காட்டிலும் குறைவாய் இருக்க வேண்டியிருந்தது; சராசரியாகப் பார்த்தால் இலாபவீதம் மிகவும் உயர்ந்திருந்தது என்பதையே இந்த மிக உயர்ந்த வட்டி வீதங்களும் நிரூபிக்கின்றன.

ஆனால் இந்த உயர்ந்த இலாபவீதம் - பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் சமமானதும் அனைவரின் கூட்டு உழைப்பின் வாயிலாகப் பெறப்படுவதுமான இந்த இலாபவீதம் - வட்டார அளவில் மட்டுமே சங்கங்களுக்குள், அதாவது இங்கே 'தேசத்துக்குள்' செல்லுபடியானது. வெனிசியர்கள், ஜெனோவியர்கள், ஹன்ஸியாட்டிக்குகள், டச்சுக்காரர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு தனி இலாபவீதம் இருந்தது; தொடக்கத்தில் ஓரளவுக்கு ஒவ்வொரு தனிப்பட்ட சந்தைப் பகுதிக்கும் கூட இவ்வாறு இலாபவீதம் இருந்தது. இந்த வெவ்வேறு நிறும இலாபவீதங்கள் சமனமாவது போட்டியின் மூலமாய் எதிர் வழியில் நடைபெற்றது. முதலாவதாக, ஒரே தேசத்திற்கு வெவ்வேறு சந்தைகளின் இலாப வீதங்கள் சமனமாயின. வெனிசிய சரக்குகளுக்கு சைப்ரஸ், கான்ஸ்டாண்டிநோபிள் அல்லது டிரெபிஸாண்டைக் காட்டிலும் அலெக்சாந்திரியா அதிக இலாபம் தருமானால், வெனிசியர்கள் இன்னும் அதிக மூலதனத்தை அலெக்சாந்திரியாவின் மூலதனத்தை விலக்கி எடுத்து பக்கம் திருப்பி விடுவார்கள்; இதர சந்தைகளுடனான வர்த்தகத்திலிருந்து மூலதனத்தைத் திரும்பப் பெறுவார்கள். பிறகு அதே சந்தைகளுக்கு அதே சரக்குகளை அல்லது அதேபோன்ற சரக்குகளை ஏற்றுமதி செய்யும் வெவ்வேறு தேசங்களிடையே இலாபவீதங்கள் படிப்படியாகச் சமனமாக வேண்டியிருந்தது; இவற்றில் சில தேசங்கள் மிகப்பல சந்தர்ப்பங்களில் சக்கையாய்ப் பிழியப்பட்டு அரங்கிலிருந்தே மறைந்து

விட்டன. ஆனால் இந்த நிகழ்முறையை அரசியல் நிகழ்ச்சிகள் ஓயாமல் வழிமறித்துக் கொண்டிருந்தன; மங்கோலிய, துருக்கிய படையெடுப்புகளில் லெவண்ட்டிய வர்த்தகம் தகர்வுற்றது இப்படித்தான்; 1492க்குப் பிறகு செய்யப்பட்ட மாபெரும் புவியியல் வர்த்தகக் கண்டுபிடிப்புகள் இந்த வீழ்ச்சியை முடுக்கி விரைவுபடுத்தி, பிறகு அதனை இறுதியாக்குவதற்கே பயன்பட்டன.

இதையடுத்து சந்தைப் பரப்பு திடீரென்று விரிவடைந்ததும் அதனோடிணைந்து தொடர்பு வசதிகளில் ஏற்பட்ட புரட்சியும் முதலில் வர்த்தக நடவடிக்கைகளின் தன்மையில் அடிப்படை மாற்றமெதையும் புகுத்தவில்லை. தொடக்கத்தில் கூட்டுறவு நிறுமங்கள் இந்தியாவுடனும் அமெரிக்காவுடனும் நடைபெற்ற வர்த்தகத்திலும் ஆதிக்கம் செலுத்தின. ஆனால் முதலாவதாக, பெரிய தேசங்கள் இந்த நிறுமங்களுக்கு ஆதரவாய் நின்றன. அமெரிக்காவுடனான வர்த்தகத்தில், மாபெரும் ஐக்கிய ஸ்பெயின் முழுவதும் லெமாண்ட்டுடன் வர்த்தகம் புரிந்து வந்த கட்டலோனியர்களின் இடத்தைப் பிடித்தது; இதனுடன் கூடவே இங்கிலாந்து பிரான்சு போன்ற இரு பெரும் நாடுகள் இந்த வர்த்தகத்தில் நுழைந்தன; மிகச் சிறிய நாடுகளான ஹாலந்தும் போர்த்துகலும் கூட எப்படியும் வெனிசைப் போல் பெரியவையாகவும் வலியவையாகவும் இருந்தன; வெனிஸ்தான் முன் சென்ற காலத்தில் மிகப்பெரிய, மிக வலிய வர்த்தக தேசமாய் இருந்தது. 16, 17ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த பயண வணிகருக்கு, வணிக சாகசக்காரருக்கு இது கொடுத்த ஆதரவு நிறுமத்தை-தன் கூட்டாளிகளை ஆயுதங்களைக் கொண்டும் கூட பாதுகாத்து வந்த நிறுமத்தை - மேன்மேலும் தேவையற்றதாக்கி விட்டது; அதற்கான செலவுகளை வெறும் சுமையாக்கி விட்டது. மேலும், தனி ஒருவரின் கையில் செல்வம் மிகத்துரிதமாய் வளர்ந்தது; இதனால் முன்னதாக ஒரு நிறுமம் முழுவதும் முதலீடு செய்த தொகைகளை தனித்தனி வணிகர்களே முதலீடு செய்யக்கூடிய நிலை விரைவில் ஏற்பட்டது. வர்த்தக நிறுமங்கள் இன்னமும் இருந்து வந்த இடங்களிலெல்லாம் ஆயுதத் தளங்களாக மாற்றப்படுவது வழக்கமாயிற்று; இந்தக் கலகங்கள் தாய்நாட்டு பாதுகாப்பிற்கும் இறைமைக்கும் உட்பட்டுப் புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்ட முழு நாடுகளை படைகொண்டு கைப்பற்றி ஏகபோக முறையில் சுரண்டின. ஆனால் புதிய பகுதிகளில் எவ்வளவுக்கெவ்வளவு குடியேற்றங்கள் (பெரிதும் அரசினால்) நிறுவப்பட்டனவோ, அவ்வளவுக்கவ்வளவு நிறும வர்த்தகம் பின்னுக்குப் போய் தனிப்பட்ட வணிகரின் வர்த்தகம்

முன்னுக்கு வந்தது; அதாவது இலாபவீதத்தின் சமனமாக்கம் மேன்மேலும் பிரத்தியேகமாய் போட்டியின் விளைவாயிற்று.

இதுவரை நாம் வணிக மூலதனத்திற்கான இலாபவீதத்தைப் பற்றி மட்டுமே தெரிந்து கொண்டோம். ஏனென்றால் அக்காலத்தில் அதுவரை வணிகமூலதனமும் கடுவட்டி மூலதனமும்தான் இருந்து வந்தது, தொழில்துறை மூலதனம் இன்னமும் வளர்ந்தபாடில்லை. பொருளுற்பத்தி இன்னமும் பிரதானமாக உழைப்பாளர்களின் கையில்தான் இருந்தது; உற்பத்திச் சாதனங்கள் அவர்களுக்குச் சொந்தமாய் இருந்ததால் அவர்களது உழைப்பு எந்த மூலதனத்திற்கும் உபரிமதிப்பு தருவதாய் இருக்கவில்லை. அவர்கள் உற்பத்தியில் ஒரு பகுதியை இழப்பீடில்லாமல் மூன்றாம் தரப்பாருக்கு வட்டி கொடுக்க வேண்டி இருந்ததென்றால், அது பிரபுத்துவக் கோமான்களுக்கான காணிக்கையாக வடிவெடுத்தது. ஆகவே வணிக மூலதனம்- எப்படியும் தொடக்கத்தில் - உள்நாட்டு உற்பத்திப் பண்டங்களை வாங்கும் அயல் நாட்டவர்களிடமிருந்தோ அயல்நாட்டு உற்பத்திப்பண்டங்களை வாங்கும் உள்நாட்டவர்களிடமிருந்தோ தான் வணிக மூலதனம் இலாபம் எடுக்கமுடிந்தது. இந்தக் காலத்தின் இறுதிவாக்கில்தான் - அதாவது இத்தாலியைப் பொறுத்தவரை லெமாண்ட்டிய வர்த்தகத்தின் வீழ்ச்சியை ஒட்டி - அயல்நாட்டுப் போட்டியும் சரக்கை சந்தையி லிடுவதிலான இடர்ப்பாடும் சேர்ந்து ஏற்றுமதிச் சரக்குகளின் கைவினை உற்பத்தியாளர்களைக் கட்டாயப்படுத்தி ஏற்றுமதி வணிகரிடம் சரக்கை அதன் மதிப்புக்கும் குறைவான விலைக்கு விற்கும்படி செய்தன. ஆக சரக்குகள் தனிப்பட்ட உற்பத்தியாளர்கள் ஒருவரோடு ஒருவர் நிகழ்த்தும் உள்நாட்டுச் சில்லறை வர்த்தகத்தில் சராசரியாக அவற்றின் மதிப்புக்கு விற்கப்படுவதையும், ஆனால் மேற்சொன்ன காரணங்களால் பொதுவாக சர்வதேச வர்த்தகத்தில் அவை அவ்வாறு விற்கப் படாததையும் இங்கு காண்கிறோம். நிகழ்கால உலகிற்கு நேர்மாறான நிலைமை இது; இன்று உற்பத்தி - விலைகள் சர்வதேச வர்த்தகத்திலும் மொத்த வர்த்தகத்திலும் செல்லுபடியாகின்றன; அதேபோது நகரத்து சில்லறை வர்த்தகத்தில் விலைகளின் உருவாக்கம் அறவே வேறு இலாபவீதங்களால் ஆளப்படுகிறது எடுத்துக்காட்டாக இன்று மாட்டிறைச்சி சிக்காகோவிலிருக்கும் மொத்த வர்த்தகரிடமிருந்து இலண்டன் மொத்தவர்த்தகருக்குச் செல்லும்போது போக்குவரத்து உட்பட அதன் விலையில் ஏற்படும் உயர்வைக் காட்டிலும் இலண்டன் மொத்த வர்த்தகரிடமிருந்து தனிப்பட்ட இலண்டன் நுகர்வாளருக்குச் செல்லும்போது அதன் விலையில் ஏற்படும் உயர்வு கூடுதலாய் உள்ளது.

விலை உருவாக்கத்தில் இந்தப் புரட்சியை படிப்படியாக உண்டாக்கிய கருவி தொழில்துறை மூலதனமே ஆகும். மத்திய காலத்திலேயே மூன்று துறைகளில் - கப்பல் போக்குவரத்து, சுரங்கத் தொழில், துணி நெசவு-தொழில்துறை மூலதனத்தின் கருநிலைக் கூறுகள் உருவாகியிருந்தன. இத்தாலிய, ஹான்சிய கடல் வாணிபக் குடியரசுகள் பெருவீதக்கப்பல் போக்குவரத்தில் ஈடுபட்டிருந்தன; மாலுமிகள், அதாவது கூலித் தொழிலாளர்கள் (இவர்களின் கூலியுறவு இலாபத்தில் பங்குதரும் கூட்டுறவு வடிவங்களின் பின்னால் மறைக்கப்பட்டிருக்கலாம்) இல்லாமல், அல்லது அக்காலத்திய துடுப்புக் கப்பல்களுக்குத் தேவையான துடுப்பாட்கள்-கூலித் தொழிலாளர்கள் அல்லது அடிமைகள் - இல்லாமல் இவ்வளவு பெரிய அளவிலான கப்பல் போக்குவரத்துச் சாத்தியமில்லை. சுரங்கத்தொழில் கனிமச் சுரங்கங்களிலான கைவினைச் சங்கங்கள் தொடக்கத்தில் தொழிலாளர் கூட்டுறவுகளாய் இருந்தன; அனேகமாய் இவை அனைத்துமே கூலித்தொழிலாளர்களை அமர்த்தி சுரங்கங்களின் பலனெடுப்பதற்கான கூட்டுப்பங்கு நிறுமங்களாக மாற்றப்பட்டு விட்டன. துணி நெசவுத் தொழிலில் வணிகர் நெசவு அதிபருக்கு நூல் வழங்கி, நிர்ணயமான கூலிக்குப் பிரதியாக அந்நூலைத் தமக்குத் துணியாக்கித் தரும்படிச் செய்வதன் மூலம், சுருங்கச் சொல்லின் விலைக்கு வாங்குகிறவர் என்ற நிலையிலிருந்து ஒப்பந்தக்காரர் என்பவ்ராக மாறுவதன் மூலம் அந்த நெசவு அதிபரை நேரடியாகத் தமக்குப் பணிபுரியும்படிச் செய்யத் தொடங்கி விட்டார்.

முதலாளித்துவ உபரி-மதிப்பு உருவாவதன் முதல் தொடக்கத்தை இங்கே காணலாம். மூடிய ஏகபோக கழகங்கள் என்ற முறையில் சுரங்கக் கைவினைச் சங்கங்களைக் கண்டுகொள்ளாமல் ஒதுக்கி விடலாம். கப்பல் அதிபர்களைப் பொறுத்தவரை, அவர்களது இலாபம் எப்படியும் நாட்டில் வழக்கமாய்க் கிடைத்த இலாபத்திற்கு சமமாகவும்; அத்துடன் காப்பீட்டுக்கும் கப்பல்களின் தேய்மானத்துக்கும் இன்ன பிறவற்றுக்கு மான கூடுதல் தொகை சேர்ந்ததாகவும் இருந்தாக வேண்டும் என்பது கூறாமல் விளங்கும். ஆனால் நேரடியாகவே முதலாளிக்கென்று உற்பத்தி செய்யப்பட்ட சரக்குகளை முதன்முதலாகச் சந்தைக்குக் கொண்டுவந்தவர்களும், கைவினைஞருக்காக உற்பத்தி செய்யப்பட்ட அதே வகைச் சரக்குகளோடு போட்டியில் ஈடுபட்டவர்களுமான துணி நெசவு ஒப்பந்தக்காரர்களின் நிலைமை என்ன?

வணிக மூலதனத்திற்கான இலாபவீதம்தான் தொடக்கத்தில் நிலவி வந்தது. அதேபோல், எப்படியும் குறிப்பிட்ட வட்டாரத்திற்காவது அது

ஏற்கெனவே சமனமாக்கப்பட்டு தோராயமான சராசரி இலாபவீத மாகியிருந்தது. இந்நிலையில் வணிகர் ஒப்பந்தக்காரராகக் கூடுதல் தொழில்புரியத் தொடங்குவதற்கு எது தூண்டுதலாய் இருக்கக் கூடும்? ஒன்றே ஒன்றுதான்; மற்றவர்கள் விற்கும் அதே விற்பனை விலையில் கூடுதலாய் இலாபம் சம்பாதிக்கும் வாய்ப்புத்தான். இந்த வாய்ப்பு அவருக்கு இருந்தது. அவர் சிறு நெசவு அதிபரைத் தமக்குப் பணிபுரியச் செய்ததன் மூலம், பொருளுற்பத்தியின் பாரம்பரியத் தளைகளை அறுத்து முன் சென்றார்; இந்தத் தளைகளே உற்பத்தியாளர் பூர்த்தியான தமது உற்பத்திப் பண்டத்தைத் தவிர வேறு எதையும் விற்க முடியாதபடி செய்து வந்தன. வணிக முதலாளி உழைப்புச் சக்தியை விலைக்கு வாங்கினார்; இந்த உழைப்புச் சக்திக்கு இன்னமும் அதன் உற்பத்திக் கருவிகள் சொந்தமாய் இருந்தன; ஆனால் கச்சாப் பொருள் முன்போல் இப்போது சொந்தமாய் இருக்கவில்லை. இவ்விதம் நெசவாளருக்கு முறையான வேலை வாய்ப்பை உறுதி செய்ததன் மூலம் வணிக முதலாளியால் நெசவாளரின் கூலியை குறைக்க முடிந்தது, வழங்கப்பட்ட உழைப்பு நேரத்தில் ஒரு பகுதி ஊதியமற்றதாய் இருக்குமளவுக்கு கூலியைக் குறைக்க முடிந்தது. இவ்வழியில் ஒப்பந்தக்காரர் தமது வர்த்தக இலாபத்திற்கு மேல்அதிகமான உபரி - மதிப்பை தனதாக்குகிறவர் ஆனார். ஆனால் இதன் பொருட்டு அவர் நூல் முதலானவற்றை விலைக்கு வாங்குவதாக கூடுதல் மூலதனத்தை ஈடுபடுத்த வேண்டியிருந்தது, பண்டம் பூர்த்தியாகும்வரை அம் மூலதனத்தை நெசவாளரின் கையில் விட்டுவைக்க வேண்டியிருந்தது; முன்பெல்லாம் அவர் பண்டத்தை வாங்கும்போதுதான் முழுவிலை செலுத்த வேண்டியிருந்தது. முதலாவதாக, அவர் பெரும்பாலான நேர்வுகளில் நெசவாளருக்கு முன்னீடுகள் தருவதற்காக கூடுதல் மூலதனத்தை ஏற்கெனவே பயன்படுத்தி இருந்தார்; பொதுவாகச் சொன்னால் நெசவாளர் கடன் சுமையின் நெருக்குதலால்தான் புதிய உற்பத்தி நிலைமைகளுக்கு தம்மை உட்படுத்திக்கொண்டார். இரண்டாவதாக, இந்தக் காரணியை ஒதுக்கிவிட்டுப் பார்த்தாலும் கணக்கீடு பின்வருமாறு அமைகிறது:

நம் வணிகர் துக்காட், செக்வின், பவுன் ஸ்டெர்வின் அல்லது வேறு ஏதேனும் ஒரு நாணயத்தில் 30,000 மூலதனத்தைக் கொண்டு ஏற்றுமதித் தொழில் புரிவதாகக் கொள்வோம். இதில் 10,000 உள்நாட்டுச் சரக்குகளைக் கொள்முதல் செய்வதற்காகப் பயன்படுத்தப்படுகிறது. என்றும் 20,000 கடல் கடந்த சந்தையில் பயன்படுத்தப்படுவதாகவும்

வைத்துக் கொள்வோம். மூலதனம் ஈராண்டு காலத்தில் ஒருமுறை புரள்வதாகக் கொள்வோம். வருடாந்தரப் புரள்வு: 15,000. இப்போது நம் வணிகர் ஒப்பந்தக்காரராக மாற விரும்புகிறார். தமக்கென்று துணி நெய்யும்படி செய்யவிரும்புகிறார். அவர் எவ்வளவு கூடுதல் மூலதனம் முதலீடு செய்தாக வேண்டும்? அவர் விற்கும் துணியின் உற்பத்திக்காலம் சராசரியாக இருமாதம் எனக் கொள்வோம் - நிச்சயமாக இது மிகவும் அதிகம். ஒவ்வொன்றுக்குமே அவர் ரொக்கமாய் கொடுக்க வேண்டியிருப்பதாகவும் வைத்துக் கொள்வோம். ஆகவே அவர் தம் நெசவாளர்களுக்கு இருமாத காலத்துக்கான நூல் வாங்குவதற்குப் போதிய மூலதனம் முன்னீடு செய்தாக வேண்டும். அவரது புரள்வு ஆண்டொன்றுக்கு 15,000 என்பதால் அவர் இரு மாதகாலத்தில் 2,500க்குத் துணிவாங்குகிறார், இதில் 2,000 என்பது நூலின் மதிப்பைக் குறிப்பதாகவும், 500 என்பது நெசவாளர்களின் கூலியைக் குறிப்பதாகவும் கொள்வோம்; அதாவது நம் வணிகருக்கு 2,000 கூடுதல் மூலதனம் தேவைப்படுகிறது. புதிய வழிமுறையில் அவர் நெசவாளரிடமிருந்து தனதாக்கும் மொத்த உபரி-மதிப்பு துணியின் மதிப்பில் 5 சதவீதம்தான் - இதிலிருந்து பெறப்படும் உபரி-மதிப்பு நிச்சயமாய் மிகக் குறைவானதே. ($2,0000_C + 500_V + 125_S$, $s' = {}^{125}/_{500} = 25\%$; $p' = {}^{125}/2500 = 5\%$ ஆக, நம்மவர் தமது வருடாந்தரப் புரள்வாகிய 15,000 மீது 750 கூடுதல் இலாபம் பெறுகிறார். இவ்விதம் தமது கூடுதல் மூலதனத்தை 2ம் ${}^{2}/_{3}$ ஆண்டுகளில் மீட்டெடுத்து விடுகிறார்.

ஆனால் தமது விற்பனையையும், இவ்விதம் தமது புரள்வையும் முடுக்கி விரைவுபடுத்தும் பொருட்டு, இவ்விதம் அதே மூலதனத்தைக் கொண்டு அதே இலாபத்தை இன்னும் குறுகிய காலத்தில் அடையும் பொருட்டு, அதாவது அதே காலத்தில் இன்னும் அதிகம் இலாபம் அடையும் பொருட்டு, அவர் தமது உபரி-மதிப்பில் ஒரு சிறு பகுதியைச் சரக்கு வாங்குகிறவருக்கு அளித்துவிடுவார் - தம் போட்டியாளர்களைக் காட்டிலும் மலிவான விலைக்கு விற்பனை செய்வார். அந்தப் போட்டியாளர்களும் பையப்பைய ஒப்பந்தக்காரர்களாக மாறி விடுகிறார்கள்; அப்போது அவர்கள் அனைவருக்குமான கூடுதல் இலாபம் சாதாரண இலாபம் ஆகிவிடும்; ஏன், அவர்கள் அனைவருக்கும் கூடுதலாகிவிட்ட மூலதனத்தின் மீது குறைந்த இலாபமாகவும்கூட மாறிப்போகும். ஒருவேளை வேறொரு மட்டத்தில் என்றாலும்கூட, உள்நாட்டில் கிடைக்கும் உபரி-மதிப்பால் ஒருபகுதியை அயல்நாட்டு வாங்குவோருக்கு மாற்றிக் கொடுப்பதன் மூலம் இலாபவீதத்தின் சமத்துவம் திரும்பவும் நிலைநாட்டப்படுகிறது.

தொழில்துறையை மூலதனம் தனக்காக கீழ்ப்படுத்திக் கொள்வதில் அடுத்த காரியம் பட்டரைத்தொழில் புகுத்துவதன் மூலம் நடைபெறுகிறது. 17,18ஆம் நூற்றாண்டுகளில் - பொதுவாகச் சொன்னால் ஜெர்மனியில் 1850 வரையிலும் கூட, இங்குமங்குமாய் இன்னும்கூட தமக்குத்தாமே ஏற்றுமதி வர்த்தகராகவும் விளங்கும் பட்டரையதிபர் தம் பழையமுறைப் போட்டியாளராகிய கைவினைஞரைக்காட்டிலும் குறைந்த செலவில் உற்பத்தி செய்வதற்கு இதுவும் உதவுகிறது. அதே நிகழ்முறை மீண்டும் நடந்தேறுகிறது; பட்டரை முதலாளியால் தனதாக்கப்படும் உபரி - மதிப்பானது அவர் (அல்லது அவருடன் உபரி-மதிப்பை பங்கு போட்டுக் கொள்ளும் ஏற்றுமதி வணிகர்) தம் போட்டியாளர்களைக் காட்டிலும் குறைந்த விலைக்கு விற்பனைச் சாத்தியமாக்குகிறது-புதிய உற்பத்தி முறை பரவலாய்ப் புகுத்தப்படும் வரை இவ்வாறு நடைபெற்று, புகுத்தப்பட்டபின் சமனமாக்கம் மீண்டும் நடந்தேறுகிறது. ஏற்கெனவே இருந்துவரும் வணிக இலாபவீதம் வட்டார அளவில் மட்டும் சமனமாக்கப்பட்டாலும்கூட, மிகையான தொழில்துறை உபரி-மதிப்பு ஈவிரக்கமில்லாமல்வெட்டி எடுக்கப்படும் புரோக்ரஸ்டிய படுக்கையாகவே இருந்து வருகிறது.

பட்டரைத்தொழில் அதன் உற்பத்திப் பண்டங்களை மலிவாகக்கியதன் மூலம் தாவிக்குதித்து முன்னேறியது என்றால், நவீன தொழில் துறைக்கு இது இன்னும் அதிகமாகவே பொருந்தும்; அது பொருளுற்பத்தியில் திரும்பத் திரும்பப் புரட்சிகள் செய்து, முன்னாளையப் பொருளுற்பத்தி முறைகளையெல்லாம் விடாமல் ஒழித்துக் கட்டுவதன் மூலம் சரக்குகளுக்கான உற்பத்திச் செலவுகளை மேன்மேலும் குறையச் செய்கிறது. இவ்வாறு முடிவில் உள்நாட்டுச் சந்தையை மூலதனத்திற்குக் கைப்பற்றிக் கொடுப்பதும் விவசாயியின் தன்னிறைவுக் குடும்பத்துக்குரிய சிறுவீதப்பொருளுற்பத்திக்கும் இயற்கைப் பொருளாதாரத்திற்கும் முற்றுப்புள்ளி வைப்பதும், சிறு உற்பத்தியாளர்களிடையிலான நேரடிப் பரிவர்த்தனையை ஒழித்துக் கட்டி நாடு முழுவதையும் மூலதனத்திற்கு சேவை புரியச் செய்வதும் பெருவீதத் தொழில்துறையே ஆகும். இதேபோல் பெருவீதத் தொழில்துறையானது வெவ்வேறு வர்த்தகக் கிளைகளுக்கும் தொழில் கிளைகளுக்குமான இலாப வீதத்தை ஒரு பொது இலாப வீதமாகச் சமனமாக்குகிறது; மூலதனம் ஒரு கிளையிலிருந்து வேறொரு கிளைக்கு மாறிச் செல்ல விடாமல் முன்னதாக வழிமறித்துக் கொண்டிருந்த தடைகளில் பெரும்பாலானவற்றை ஒழித்துக் கட்டுவதன் மூலம் இந்தச் சமனமாக்கத்தில் தொழில்துறை அதற்குரிய அதிகார நிலை அடைவதை

முடிவில் உறுதி செய்கிறது. மதிப்புகள் உற்பத்தி விலைகளாக அடையும் மாற்றம் இதனால் மொத்தத்தில் பரிவர்த்தனை முழுவதற்கும் நடந்தேறுகிறது. ஆகவே இந்த மாற்றமானது புறவயவிதிகளின்படி நடைபெறுகிறது; அதில் பங்கேற்பவர்கள் இவ்வாறு நடைபெறுவதை உணருவதில்லை, இவ்வாறு நடைபெற வேண்டும் என்ற நோக்கமும் அவர்களுக்கு இல்லை. போட்டியானது பொது இலாப வீதத்தை விஞ்சும் இலாபங்களை பொதுவான சரிமட்டத்திற்கு குறைத்திடுகிறது, உபரி-மதிப்பை முதலில் தனதாக்கும் தொழில்துறை முதலாளியிட மிருந்து சராசரிக்கு மேலுள்ள உபரி-மதிப்பை அகற்றி விடுகிறது என்பதில் தத்துவார்த்த சிக்கல் ஏதுமில்லை. அவ்வளவுக்கவ்வளவு நடைமுறையில் சிக்கல் உள்ளது; ஏனென்றால் மிகையளவான உபரி - மதிப்புடன் கூடிய, கூடுதலான மாறும் மூலதனமும் குறைவான மாறா மூலதனமும் கொண்ட, அதாவது தாழ்ந்த மூலதன இயைபு கொண்ட உற்பத்திக் கிளைகள் அவற்றின் இயல்பினாலேயே கடைசியாகவும் மிகக் குறைவாகவுமே முதலாளித்துவப் பொருளுற்பத்திக்கு முழுமையாக உட்படுத்தப்படுகின்றன; இவ்வகையில் வேளாண் மையைக் குறிப்பாகச் சொல்லலாம். மறுபுறம், உற்பத்தி விலைகள் சரக்கு-மதிப்புகளுக்கு மேல் உயரும் - உயர் மூலதன இயைபு கொண்ட கிளைகளின் உற்பத்திப் பண்டங்களில் அடங்கியுள்ள சராசரிக்கும் குறைவான உபரி-மதிப்பை சராசரி இலாப வீதத்தின் நிலைக்கு உயர்த்துவதற்கு அவசியமானதாகிய இந்த உயர்வு தத்துவத்தில் மிகமிகச் சிக்கலானதாய்த் தோன்றுகிறது; ஆனால் அது நடைமுறையில் மிகத் துரிதமாகவும் மிகச்சுலபமாகவும் நடந்தேறுவதைப் பார்ப்போம். ஏனென்றால் இவ்வகைச் சரக்குகள் முதன்முதலாக முதலாளித்துவ முறையில் உற்பத்தி செய்யப்பட்டு முதலாளித்துவ வர்த்தகத்தில் நுழையும்போது, முதலாளித்துவத்துக்கு முற்பட்ட வழி முறைகளைக் கொண்டு உற்பத்தி செய்யப்பட்டவையும், எனவே அதிக விலையுள்ளவையுமான அதே வகைச் சரக்குகளோடு போட்டி யிடுகின்றன. ஆக, முதலாளித்துவ உற்பத்தியாளர் உபரி- மதிப்பில் ஒரு பகுதியைத் துறந்துவிட்டாலும்கூட, தம் வட்டாரத்தில் நிலவும் இலாபவீதத்தை அவரால் அடைய முடியும்; இந்த இலாபவீதம் முதலாளித்துவப் பொருளுற்பத்தி என்று எதுவும் தலையெடுப்பதற்கு நெடுங்காலம் முன்னதாகவே, அதாவது தொழில்துறை இலாபவீதம் என்பது சாத்தியமாவதற்கு முன்னதாகவே வணிக மூலதனத்திலிருந்து எழுந்ததாகையால் அதற்கும் உபரி-மதிப்புக்கும் நேரடித் தொடர்பேதும் இருக்கவில்லை.

*4. அதன் பிறகு தொழில்துறை பையப்பைய பங்கு நிறுமங்களாக மாற்றப்பட்டுள்ளன - தொழிற் கிளைகள் ஒன்றன்பின் ஒன்றாக இந்தக் கதிக்கு ஆளாகின்றன - முதலாவதாக இரும்பை எடுத்துக் கொள்வோமானால் பகாசுரத்தொழிலகங்கள் இப்போது அவசியமாகின்றன. (சுரங்கத்தொழில் முன்பே இப்படித்தான் இருந்தது; அங்கே இதற்கு முன்பு பங்குகளாக இது ஒழுங்கமைக்கப்படவில்லை) பிறகு இரசாயனத் தொழிலிலும், அதேபோல் இயந்திர சாதன பட்டறைகளிலும் இது நடைபெற்றது. கண்டத்துப் பகுதியில் துணி நெசவுத் தொழிலில் இவ்வாறே நடைபெற்றது; இங்கிலாந்தில் லங்க்காசயரிலுள்ள ஒரு சில பகுதிகளில் மட்டும் இவ்வாறு நடைபெற்றது. (ஓல்தாம் நூற்பாலை, பான்லி நெசவாலை, முதலானவை, தையற்காரர்களின் கூட்டுறவுகள்; ஆனால் இது ஓர் ஆரம்பக் கட்டம்தான்; அடுத்த நெருக்கடியில் இவை மறுபடியும் அதிபர்களின் கைக்குப் போய்விடும்); சாராய ஆலைகளிலும் இவ்வாறு நடைபெற்றது. (அமெரிக்க சாராய ஆலைகள் ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு ஆங்கிலேய முதலாளிகளுக்கு விற்றுவந்தன பிறகு கின்னஸ், பாஸ், அல்சாப், ஆகியவற்றுக்கு விற்பனை செய்தன). அடுத்து வருபவை பொறுப்புக் கழகங்கள்; இவை பொது மேலாண்மையின் கீழ் மிகப் பெரிய தொழில் முனைவுகளைத் தோற்றுவிக்கின்றன. (எடுத்துக்காட்டாக யுனைட்டேடு ஆல்கலி). சாதாரணத் தனிப்பட்ட நிறுவனம் என்பது தொழிலை 'நிறுவலாம்' என்னும் அளவுக்கு அது பெரியதாய் இருக்கும் கட்டத்துக்குக் கொண்டு செல்வதற்கான ஆரம்பக்கட்டமாக மட்டுமே மேன்மேலும் அமைகிறது.*

வர்த்தகத்திலும் இதேபோலத்தான்: லிஃபிப்ஸ், பார்கன்ஸ், மொர்லீஸ், மொரிசன், திலான் - எல்லாம் நிறுவப்பட்டன. இப்போதெல்லாம் சில்லரைக் கடைகளில் இதே நிலைமைதான்; இது 'பண்டகசாலைகள்' போன்ற கூட்டுறவின் போர்வையில் மட்டும் நடைபெறுவதல்ல.

இங்கிலாந்திலும்கூட வங்கிகளும் ஏனைய கடன்-செலாவணி நிறுவனங்களும் இதேபோலத்தான். பெரும் எண்ணிக்கையில் புதிய வங்கிகள்; எல்லாப் பங்குகளும் வரையறுக்கப்பட்டவை...* போன்ற பழைய வங்கிகளும்கூட தனியார் பங்குதாரர்கள் எழுவரைக் கொண்ட வரையறுக்கப்பட்ட நிறுமங்களாக மாற்றப்படுகின்றன.

---

* விளங்கவில்லை 'கிளின் & கோ' என்றிருப்பதாகத் தோன்றுகிறது - இது ஒரு வங்கியின் பெயர் - ஆங்கிலப்பதிப்பாசிரியர்.

5. வேளாண்மைத் துறையிலும் நடப்பது இதுதான். வங்கிகளின் பிரம்மாண்ட விரிவாக்கம் முக்கியமாய் ஜெர்மனியில் சகலவிதமான அதிகார வர்க்கப் பெயர்களிலும் நடைபெற்றுள்ளது; இந்த வங்கிகள் மேன்மேலும் அடகு பிடித்து வைத்துள்ளன; இவற்றின் பங்குகளைக் கொண்டு நிலச்சொத்தின் உள்ளபடியான இறுதி உடைமை பங்குச் சந்தையின் கைக்கு மாற்றப்படுகிறது; பண்ணைகள் கடன் கொடுத்தோரின் கையில் சிக்கும்போது இன்னுங்கூட உறுதியாகவே இது நடைபெறுகிறது. இங்கே சமவெளிச் சாகுபடியிலான வேளாண் புரட்சியின் விளைவு எடுப்பாய்த் தெரிகிறது; இது தொடருமானால், இங்கிலாந்தின் நிலமும் பிரான்சின் நிலமும்கூட பங்குச் சந்தையின் கையில் சிக்கிவிடும் காலம் வரும் என்று எதிர்பார்க்கலாம்.

6. அயல்நாட்டு முதலீடுகள் எல்லாம் இப்போது பங்குகளாக வடிவெடுக்கின்றன. இங்கிலாந்தை மட்டும் குறிப்பிடுவதனால்; அமெரிக்க இரயில் போக்கு வரத்து, வடக்கும் தெற்கும் (பங்குச்சந்தைப் பட்டியலைப் பார்த்துக் கொள்ளவும்), கோல்டு பர்கர், இன்னபிற.

7. அடுத்து குடியேற்றம். இது இன்று முழுக்க முழுக்க பங்குச் சந்தையின் துணைத்தொழிலே ஆகும்; பங்குச் சந்தையின் நலனை முன்னிட்டுத்தான் சில ஆண்டுகளுக்கு முன்பு ஐரோப்பிய அரசுகள் ஆப்பிரிக்காவைப் பிரித்துக் கொண்டன, பிரெஞ்சுக்காரர்கள் டூனிசையும் டோங்கினையும் பிடித்தார்கள். ஆப்பிரிக்கா நேரடியாகவே நிறுமங்களிடம் குத்தகைக்கு விடப்பட்டது (நைஜர், தென்ஆப்பிரிக்கா, ஜெர்மானிய தென்மேற்கு ஆப்பிரிக்கா, ஜெர்மானிய கிழக்கு ஆப்பிரிக்கா). மஷோனாலாந்தையும் நெட்டாலையும் பங்குச் சந்தைக்காக ரோட்ஸ் கைப்பற்றினார்.

* * * * *

# பெயர் அகராதி


## அ

அரிஸ்டாட்டில் (384-322கி.மு)—பக்.525, 1272

## ஆ

ஆட்வுட், தாமஸ்—(1783-1856)—பக்.758, 790
ஆட்வுட், மாத்தியாஸ் (1779-1851)—பக்.758, 790
ஆண்டர்ஸன், ஜேம்ஸ் (1739-1808)—பக்.875, 877
ஆர்ன்டு, காரல் (1788-1877)—பக்.492, 1121
ஆர்பத்நாட், ஜார்ஜ் (1802-1865)—774
ஆன்னி (1665-1714), 1702 முதல் அரசி—பக்.864
ஆஷ்லி, அந்தோணி கூப்பர், ஷேஃப்டிஸ்பரி கோமகன் (1801-1885)—பக்.888

## எ

எங்கல்ஸ், பிரடரிக் - (1820-1895)—பக்.17, 23, 85, 95, 145, 158, 161, 166, 183, 201, 234, 301, 348, 401, 529, 563, 565, 576, 597, 609, 635, 637, 656, 662, 684, 727, 736, 742, 750, 766, 775,703, 727, 736, 742, 750, 766, 775, 784,796, 804, 809, 811, 826, 856, 996, 1014, 1029, 1049, 1097, 1160
எபிக்கூரஸ் (341-271, கி.மு.)—பக்.846

## ஊ

ஊர், ஆன்ட்ரு (1778-1857)—பக்.101, 136, 527

## ஓ

ஓ'கன்னோர், சார்லஸ் (1804-1884)—பக்.526
ஒப்டைக், ஜார்ஜ் (1805-1880)—பக்.492
ஓவன், ராபர்ட் (1771-1858)—பக்.856
ஒழியே, மாரீ—839, 866

## க

கரிபால்டி, ஜியூசெப் (1807-1882)—பக்.21
கர்ட்டன், வில்லியம் (1785-1866)—பக்.576
காட்டோ, மார்க்கஸ் போர்சியஸ் யுட்டிசென்சிஸ் (234-149 கி.மு.)(234 - 149கி.மு.)—பக்.524
காண்டில்லான், பிலிப் ரிச்சார்டு (1680-1734)—1112, 1113
கார்பெட் தாமஸ்—பக்.219, 226, 276, 410
காரீ, ஹென்றி சார்லஸ் (1793-1879)—பக்.199, 544, 841, 875, 880
கிரெக், ராபர்ட் ஹைடு (1795-1875)—பக்.141
கிளே, வில்லியம் (1791-1869)—பக்.774
கின்கெய்டு, ஜான் (1787-1892)—பக்.115
கின்னியர், ஜே.ஜி—பக்.615, 739
கீசல்பாஹ, வில்ஹெல்ம்—பக்.441
குர்னீ, சாமுவேல் (1706-1856)—பக்.566, 575, 581, 732, 740, 742, 760, 768, 809
கெயிர்ன்ஸ், ஜான் எலியட் (1823-1875)—பக்.523
கோக்விலின், சார்லஸ் (1803-1852)—பக்.550
கோம்டி, பிராங்கோயிஸ் சார்லஸ் லூயி (1782-1837)—பக்.872
கோர்பெட், தாமஸ் —பக்.872

## ச

சாம்பர்லீன் அல்லது சாம்பர் லைன், ஹக் (கிட்டத்தட்ட 1630-1720)—பக்.850
சார்லமைன் (மகா சார்லஸ்) (742-814), 768 முதல் மன்னர், 800 முதல் மாமன்னர்—பக்.844, 847, 1117
சார்லஸ் (1630-1685), 1660 முதல் மன்னர்—பக். 851, 864
சால்மர்ஸ், தாமஸ் (1780 - 1847)—பக்.326
சிஸ்மாண்டி, ஜீன் சார்லஸ் வியோனார்டு சிமாண்டி (1773 - 1842)—பக்.665, 1143
சீமன்ஸ், ஆகஸ்ட் பிரடரிக் (1826-1908)—பக்.87
சீனியர், நாஸாவ் வில்லியம் ( 1790-1864)—பக். 37, 51
செயின்ட்-சைமன், கிளாடு ஹென்றி (1760-1825) பக்.855, 856
செர்பூலியே, அந்தோணி எலிஸ் (1797 - 1869)—பக்.210
சைமன், ஜான் (1816-1904)—பக்.118, 121, 124
சைல்டு, ஜோசையா (1630-1699)—பக்.541, 852
சோம்பார்ட், வெர்னர் (1863-1941) —பக்.1273

## ட

டக்கட், ஜான் டிபெல் (1864-ல் காலமானார்) —பக்.850
டாண்ட்டே, அலி கீரி (1265 - 1321)—பக்.21
டாரென்ஸ் ராபர்ட் (1780 - 1864)—பக்.42, 43, 44, 51, 140, 480, 774
டுர்காட், (துர்கோ) ஆன்னி ராபர்ட் ஜாக்லிஸ் (1727 - 1781)—பக்.880
டுக், தாமஸ். (1774 - 1858)—பக்.481, 489, 502, 503, 549, 554, 577,610, 615, 616, 618, 621, 630, 640, 678, 737, 760, 774, 785, 808, 1149,

1203, 1149
டுரோ டி லா மாலி, அடால்ஃப் ஜூலிஸ் சீசர் ஆகஸ்ட் (1777 - 1857)—பக்.135
டைரே, லூயி பிராங்கோயில் யூஜின் (1798-1847) —பக்.1116
டோக்வில்லி, அலெக்சிஸ் சார்லஸ் ஹென்றி (1805-1859) —பக்.1143
டவ், பாட்ரிக் எட்வர்டு (1815-1873) —பக்.895, 904

## த

தாமஸ், சிட்லி ஜில்க்ரிஸ்ட்(1850-1885)—பக்.87
தாவெனண்ட், சார்லஸ் (1656-1714)—பக்.937
தியர்ஸ், லூயி அடால்ஃப் (1797-1877)—பக்.883
துன், அல்ஃபான்ஸ் (1853-1885)—பக்.1283
தோம்பாஸிஸ், கிறிஸ்டோஃப் ஜோசப் அலெக்சாண்டர் மாத்தியூ டி(1777-1843)—பக்.1076, 1156

## ந

நார்த், டட்லி (1641-1691)—பக்.866, 880
நார்மன், ஜார்ஜ் வார்டே (1793 - 1832)—பக்.577, 579, 580, 593, 777
நியூமன், சாமுவேல் பிலிப்ஸ் (1797-1842)—பக்.369
நியூமன், பிரான்சிஸ் வில்லியம் (1806-1897)—பக்.840, 932, 1097, 1155, 827
நியூமார்ச், வில்லியம் (1820-1882)—பக்.736, 739, 761, 764, 786, 798, 800, 804, 805, 808, 816, 817, 819, 820, 822, 823, 826

## ப

பாட்டர்ஸன், வில்லியம் (1658-1719)—பக்.854
பாப்பேஜ், சார்லஸ் (1792-1871)—பக்.136, 150
பால்மர், (பாமர்) ஜான் ஹார்ஸ்லி (1779-1858)—பக்.786, 789, 803
பால்மர்ஸ்டன், ஹென்றி ஜான் டெம்பிள், பிரபு (1784-1865)—பக்.115, 885
பால்ஸாக், ஹானர், டி (1799-1850)—பக்.44
பாஸ்டியரட், பிரடரிக் (1801-1850)—பக்.199, 467
பாஸி, ஹிப்போலைட் ஃபிலிபர்ட் (1793-1880) —பக்.1091, 1112, 1116, 1121
பெட்டி, வில்லியம், இளையவர் (1759 - 1806)—பக்.541, 1112
பிரடரிக், இரண்டாம் (1194 - 1250), 1212 முதல் பேரரசர்—பக்.844
பிரான்சிஸ், ஜான் (1811 - 1882)—பக்.851, 855
பிரிஸ்கோ, ஜான் (18ஆம் நூற்றாண்டின் முடிவு)—பக்.850, 851
பிரைஸ், ரிச்சார்டு (1723 -1791)—பக்.539, 540, 541
புருதோன் பியர்ரே ஜோஸப் (1809-1865)—பக்.45, 467, 468, 469, 481, 860, 883, 1204
பிளினி, மூத்தவர், கேயஸ் பிளினியஸ், செகண்டஸ்(23-79)—பக்.135
பில், ராபர்ட் (1788-1850)—பக்.771, 774
புஷ், ஜொஹால் ஜான் (1728-1800)—பக்.867
பெக்கோர், கான்ஸ்டான்டின் (1801-1887)—பக்.861
பெட்டி, வில்லியம் (1623 - 1687)—பக்.477, 649, 937
பெர்னால்ஓஸ்போர்ன், ரால்ஃப் (1808-1882)—பக்.182
பெரைரே, ஜேக்கப் எமிலி (1800-1875)—பக்.856
பேரிங்-இங்கிலாந்தின் பெரிய வங்கி நிறுவனம்—பக்.753
பொஸாங்க்வெட், ஜேம்ஸ் வாட்மன் (1804 - 1877)—பக்.503, 548
ஃபயர்மன், பீட்டர் (பிறப்பு 1863)—பக்.14, 15, 16, 23
ஃபாசெட், ஹென்றி (1833 - 1884) —பக்.889
ஃபோகெல் - 6ஆம் நூற்றாண்டின் மிகப்பணக்கார ஜெர்மன் வணிக மற்றும் வங்கி நிறுவனம் —பக்.1284
ஃபுல்லர்ட்டன், ஜான் (1780-1849)— பக்.555, 624, 627, 630, 631, 632, 633, 640, 641, 642, 645, 774
ஃபோர்கேடு, யூஜின் (1820-1869)—பக்.1204
ஃபூரியே, சார்லஸ் (1772-1837)—பக்.856, 1072

## ம

மக்கலோச், ஜான் ராம்சே (1789-1864)—பக்.79, 295, 314
மாம்சன், தியோடார் (1817-1903)—பக்.525, 1118
மார்கன், லூயிஸ் ஹென்றி (1808-1881)—பக்.234
மார்க்ஸ், காரல் (1818-1883) —பக்.1,2,3,5,7,9, 10,16,17,18,19,21,23,183, 234, 236, 240, 596, 770, 856, 860, 1071,1098, 1181, 1194, 1197, 1130, 1193, 1201, 1255, 1267, 1269, 1270, 1272, 1274, 1281,
மார்ட்டன், ஜான் சால்மர்ஸ் (1821-1888)—பக். 890, 891
மார்ட்டன், ஜான்லொக்கார்ட் —பக்.891,893,957
மௌரர், ஜார்ஜ் லுட்விக் வான் (1790-1872)—பக்.234
மால்தஸ், தாமஸ் ராபர்ட் (1766-1834)— பக்.40, 44,51,55,224,253,262,540,915,935,953
மாறோன், எச்.—பக்.1150
மான்லீ, தாமஸ் (1628-1690)—பக்.853
மாஸி ஜோசப் (1784-ல் காலமானார்)—பக்.477, 486, 491, 495, 512, 1155
மிராபோ, விக்டர், மார்க்ஸிஸ் டி (1715-1789)—பக்.1072
மில், ஜான் ஸ்டுவர்ட் (1806-1873)—பக்.531, 544, 729, 784, 812,1253
முல்லர், ஆடம் ஹெயின்ரிச் (177,9-1829)—பக்.484,543

மூர், சாமுவேல் (1830-1912)—3
மெக்காலே, தாம்ஸ் பாபிங்டன் (1800-1859)—பக்.854
மெங்கர், காரல் (1840-1921)—பக்.10
மேனர், ஜஸ்டஸ் (1720-1794)—பக்.1123
மெளனியர், எல் —பக்.1150,1155

ர

ரஸ்ஸல், ஜான், பிரபு (1792-1878)—பக்.575
ரோட்பெர்ட்டஸ், ஜொஹான் காரல் (1805-1875)— பக்.8, 184, 1104, 1139, 1140, 1218, 1104
ராம்சே, ஜார்ஜ் (1800-1871)—பக்.44, 51, 369, 490, 491, 517, 1088
ரிக்கார்டோ, டேவிட் (1772-1823)—பக். 9, 17, 42, 52, 79, 141, 150, 237, 242, 262, 268, 295, 313, 314, 320, 322, 329, 344, 436, 597,770, 771, 773, 920, 921, 936, 954, 962, 967, 1058,1072, 1095,1162,1201,1219
ரூபிக்கன், மாரிஸ் (1766-1849)—பக்.890, 1150, 1155, 1297
ரெடன், பிரடரிக் வில்ஹெல்ம் ஒட்டோலுட்விக் (1804-1857)—பக்.649
ரோட்ஸ், செசில் ஜான் (1853-1902)—பக்.1297
ரோத்ஷீல்டு, ஜேம்ஸ் (1792-1868)—பக்.652
ரோஷர், வில்ஹெல்ம் (1817-1894)—பக்.296, 410, 435, 544

ல

லயிங், சாமுவேல் (1780-1868)—பக்.1097
லா, ஜான் (1671-1729)—பக்.854
லாயிடு, சாமுவேல் ஜோன்ஸ், முதல் ஓவர் ஸ்டோன் பிரபு (1796-1883)— பக்.554, 581, 582, 583, 585, 588, 590, 591, 593, 596,598, 600, 601, 602, 678, 714, 721, 723, 727, 729, 753, 758, 771, 774, 779, 782, 785, 792, 795, 796, 808
லாவர்னே, லூயி கேபிரியல் வியோன்ஸ் (1809-1880). — பக்.891
லிங்வெட், சைமன் நிக்கோலஸ் ஹென்றி (1736 - 1794)— 107,1123
லிஸ்ட், பிரடரிக் (1789 - 1846)— 1263
லீதம், வில்லியம் ஹென்றி (1815-1889)—547
லீபிக், ஜஸ்டஸ் லான் (1803-1873)—1092, 1105, 1158
லுஸாக், இலி (1723-1796)— பக்.428
லூதர், மார்ட்டின் (1483-1546)— பக்.469, 537, 538, 848, 865
லூயி பதினான்காம் (1638-1715), 1643 முதல் மன்னர்— பக்.135
லெக்சிஸ், வில்ஹெல்ம் (1837-1914)—பக். 9,10,11
லாக், ஜான் (1632-1704)— பக்.477,880
லோரியா, அகில் (பிறப்பு 1857)—பக்.17, 18, 19, 1270, 1271, 1273, 1282

வ

வால்ட்டன், ஆல்ஃபிரெட் (1816-1885)—பக். 877,879
வில்சன் பேட்டன், ஜான் (1802-1892)— பக்.116
வில்சன், ஜேம்ஸ் (1805-1860)— பக்.615, 625, 749, 751, 764, 774, 794, 814, 815, 816, 819, 820, 824, 826
வின்கார்டு, பியர்ரே (1820-1882)—பக். 1117
விஸ்லரின், எஸ். (1818-1888)—பக். 426,428
வுட், சார்லஸ் (1800-1885)— பக்.822,823,826
வெர்ரி, பீட்ரோ (1728-1797)— பக்.369
வெஸ்ட், எட்வர்டு (1782-1828)—பக். 320,936
வேக்ஃபீல்டு, எட்வர்டு கிப்பன் (1796-1862)—பக்.1071,1091
வொல்ஃப், ஜூலியஸ் (பிறப்பு 1852)—பக். 16,17,21

ஸ

ஸ்டுவர்ட், ஜேம்ஸ் (1712-1780)— பக்.494,1116
ஸ்டோர்ச், ஹெயின்ரிச் பிரடரிக் (1766 - 1835)—பக்.242,934,1179,1208,1215,1216
ஸ்மித், ஆடம் (1723-1790) பக்.188, 253, 262, 281,296,314,436, 522, 541, 615, 659, 870, 1064, 1087, 1088, 1089, 1093, 1095, 1179, 1194, 1201,1203,1206
ஸே, ஜீன் பாப்டிஸ்ட் (1767 - 1832) —பக்.369,1201,1201

ஷ

ஷ்மிட், கான்ராடு (1863-1932)—பக். 12, 13, 14, 17,19,23, 1275, 1276

ஜ

ஜான்ஸ்ட்டன், ஜேம்ஸ் (1796-1855)— பக்.772, 951
ஜில்பார்ட், ஜேம்ஸ் வில்லியம் (1794-1863)—பக்.458, 488, 555, 559,761,767,864
ஜோன்ஸ், ரிச்சார்டு (1790-1855)— பக்.1076, 1108
ஹபார்டு, ஜான் கெல்லிபிராண்டு (1805 - 1889)—பக்.573, 742, 767, 775, 812
ஹாட்ஜஸ்கின், தாமஸ் (1787 - 1869)—பக். 531
ஹாமில்டன், ராபர்ட் (1743 - 1829)— பக்.539
ஹார்டுகேஸில், டேனியல்— பக்.866
ஹுல்மன், காரல் பீட்ரிச் (1735-1846)—பக்.426, 429, 844
ஹெகல், ஜார்ஜ் பிரடரிக் வில்ஹெல்ம் (1770 - 1831)— பக்.56,870,871,1106
ஹெயின், ஹெயின்ரிச் (1797 - 1856)—பக்.1272, 761
ஹெம்டு, வில்ஹெல்ம் (1797 - 1856) —பக்.1285

# மூலதனம் மூன்றாம் பாகத்தில் மேற்கோள் காட்டப்படும் ஆதாரங்களின் அட்டவணை

## I. நூலாசிரியர்கள்

### அ

அரிஸ்டாட்டில், De Republica Libri VIII et Oeconomica, Ex recensione Immanuelis Bekkery Oxonii 1837.— பக்.525

### ஆ

ஆகியர் மார், Du Crédit Public et de son histoire depuis les temps anciens jusqu'a nos jours, *பாரிஸ்* 1842—பக்.839, 866

ஆண்டர்ஸன், ஜேம்ஸ், பிரிட்டனில் தற்போதைய தானியத் தட்டுப்பாட்டுக்கு இட்டுச் சென்றுள்ள சூழ்நிலைகள் பற்றிய ஒரு நிதானமான ஆய்வு, லண்டன் 1801 —பக்.875

ஊர், ஆன்ட்ரு. Philosophie des manufactures ou économie industrielle de la fabrication du cotton, de la laine, du lin et de la soie, avec la description des diverses machines employées dans les ateliers anglais (ஆலைத் தொழில்களின் தத்துவம் - லண்டன் 1835 - என்ற நூலின் மொழி பெயர்ப்பு) —பக்.527

### ஓ

ஒப்டைக், ஜார்ஜ். அரசியல் பொருளாதாரம் பற்றிய ஒரு கிரந்தம், நியூயார்க் 1851—பக்.492

காரீ.எச்.சி. சமுதாய விஞ்ஞானக் கோட்பாடுகள், மூன்றாம் பாகம், பிலடெல்பியா 1860—பக்.544

கிரெக், ஆர், எச். தொழிற்சாலைகளில் வேலை பார்ப்பவர்களின் ஆரோக்கியம் மற்றும் ஒழுக்க நெறிகள் மீதான விளைவுகள் தொடர்பான பார்வையில் தொழிற்சாலைப் பிரச்சினையும், பத்து மணிநேர மசோதாவும்...., லண்டன் 1837—பக்.141

கின்னியர், ஜே.ஜி. நெருக்கடியும் செலாவணியும், லண்டன் 1847—பக்.739

*கீசல்பாச்*, வில்ஹெலம், Der Gang des Welthandels und die Entwicklung des europäischen Volkerlebens in Mittelalter Stuttgart 1860—பக்.441

கெயிர்ன்ஸ், ஜே.ஈ. அடிமைச்சக்தி, அதன் தன்மை, போக்கு வாய்ப்புள்ள வடிவமைப்புகள் இன்ன பிற, லண்டன் 1862—பக்.523

கோக்விலின், *சார்லஸ்*. Du credit et des banques In Revue des Delux Mondes *பாரிஸ்* 1842—பக்.550

கோம்டி, *சார்லஸ்* Traite de la propriété T.I, பாரிஸ் 1834—பக்.872-873

கார்பெட், தாமஸ். தனி நபர்களின் செல்வத்தின் காரணங்கள் மற்றும் முறைகள் பற்றிய ஓர் ஆய்வு; அல்லது வர்த்தகம் மற்றும் ஹேஷ்ய பேரத்தின் கோட்பாடுகள் பற்றிய விளக்கம், லண்டன் 1841—பக்.219, 226, 242, 410

### ச

சால்மர்ஸ், தாமஸ். சமுதாயத்தின் தார்மீக நிலை மற்றும் தார்மீக வாய்ப்புகள் தொடர்பாக, அரசியல் பொருளாதாரம் பற்றி, 2-ம் பதிப்பு, கிளாஸ்கோ 1832—பக்.614

*சிஸ்மாண்டி*, *ஜி.சா.லி.சிமாண்டி* de. Nouveaux principes d'économie politique ou de la richesse dans ses rapports avec la population, *பாரிஸ் 1819*—பக்.665

*செயின்ட்-சைமன்*. Nouveau Christianisme dialogues entre un conservateur et un novateur *பாரிஸ்* 1825—பக்.856, 857, 860

செர்பூலியே, A , Riche ou pauvre, Exposition succinte des causes et des effets de la distribution actuelle des richesses sociales, *பாரிஸ் மற்றும் ஜெனிவா 1840*—பக்.210

சைல்டு ஜோசியா, Traités sur le commerce et sur les avantages quirésultent de la réduction de l'intérêt de l'argent (1694), Amsterdam et Berlin 1754—பக்.541, 852

டக்கட், ஜே.டி. பயிர்த்தொழில், ஆலைத்தொழில்கள், வர்த்தகம் ஆகியவற்றின் முன்னேற்றம் உட்பட, உழைக்கும் ஜனங்களின் கடந்த கால மற்றும் நிகழ்கால நிலவரத்தின் ஒரு வரலாறு, தொழிலாள வர்க்கங்களின் வேலை வாய்ப்பு மற்றும் வருங்கால சுபிட்சத்துக்கான நடைமுறைச் சாதனங்களைக் கொண்டு, அவ்வர்க்கங்களிடையே செல்வச் செழிப்பு, தரித்திரம் என்னும் கோடிகளைக் காட்டுதல், லண்டன் 1846—பக்.850

டாரென்ஸ், ராபர்ட். செல்வ உற்பத்தி பற்றிய ஒரு கட்டுரை; அரசியல் பொருளாதாரக் கோட்பாடு

கள் இந்த நாட்டின் வாஸ்தவமான சூழ்நிலை களுக்குப் பிரயோகிக்கப்படுகின்ற ஒரு பிற்சேர்க்கையுடன், லண்டன் 1821

—1844ஆம் வருட வங்கிச் சாசனச் சட்டத்தின் செயல்பாடு பற்றி....2ஆம் பதிப்பு, லண்டன் 1847—பக்.43

டுக், தாமஸ், 1793 முதல் 1837 முடிய விலைகளின், மற்றும் சுற்றோட்ட நிலவரத்தின் வரலாறு; இதற்கு முன்னதாக, கடந்த இரு நூற்றாண்டுகளில் தானிய வர்த்தகத்தின் நிலவரம் பற்றிய ஒரு சுருக்கமான சித்திரம், லண்டன் 1833—பக்.502

—செலாவணிக் கொள்கை பற்றிய ஓர் ஆய்வு; விலைகளுடன் செலாவணிக்குள்ள தொடர்பும், வங்கித் தொழிலிலிருந்து நோட்டு வெளியீட்டைப் பிரிப்பதன் உசிதமும், 2-ஆம் பதிப்பு, லண்டன் 1844— பக்.481, 504, 549, 550, 554, 610, 615

—1839 முதல் 1847 முடிய விலைகளின், மற்றும் சுற்றோட்ட நிலவரத்தின் வரலாறு; செலாவணிப் பிரச்சினை பற்றிய ஒரு பொதுவான திறனாய்வுடன், லண்டன் 1848 —பக்.489

*டுரோ டி லா மாலி*, *ஏ.ஜே.* Economie politique des romains, *பாரிஸ் 1840*—பக்.135

த

திஸ்ரேலி, பெஞ்சமின் (1804-1881)—பக்.576

ந

நார்த், சர் டட்லி, வாணிபம் பற்றிய பிரசங்கங்கள்; பிரதானமாகப் பணத்தின் வட்டி, நாணய மாக்கல், குறைப்பு, அதிகரிப்பு ஆகிய பட்சங்களைக் குறி வைத்து, லண்டன் 1691—பக். 512.

நியூமன், எஸ்.பி. அரசியல் பொருளாதாரத்தின் அடிப்படைகள், ஆண்டோவர் மற்றும் நியூயார்க் 1835.—பக்.369

நியூமன், பிரான்சிஸ் வில்லியம். அரசியல் பொருளாதாரம் பற்றிய விரிவுரைகள், லண்டன் 1851.—பக்.840, 932

ப

பால்ஸாக், ஹானர் டி. Les paysans, 1845—பக்.44

பாஸ்டியாட், பிரடரிக். Gratutté du crédit - Discussion entre M. Fr. Bastiat et M.P.J. Proudhon,—பக்.467

பெஸ்ஸமர், ஹென்றி (1813-1898)—பக்.87

பிரான்சிஸ், ஜான். இங்கிலாந்து வங்கியின் வரலாறு, அதன் காலங்களும் பாரம்பரியங் களும் 2-ஆம் பதிப்பு, லண்டன் 1848—பக்.851, 854

பிரைஸ், ரிச்சார்டு. தேசியக் கடன் குறித்த விஷயம் பற்றிப் பொதுஜனங்களுக்கு ஒரு வேண்டு கோள் (1772), 2-ஆம் பதிப்பு, லண்டன் 1774.—பக்.539

பிரைட், ஜான் (1811-1889) —பக்.893

—பிரதிக் கொடுப்புகள், விதவைகளுக்கும் வயோதிகர்களுக்கும் ஆண்டுத் தொகைகள் வழங்குவதற்கான திட்டங்கள், உயிர்கள் மீதான உறுதிகளின் மதிப்புகளைக் கணக்கிடும் முறை, தேசியக்கடன், இன்ன பிற விஷயங்கள் பற்றிய கண்ணோட்டங்கள் (1771), 2-ஆம் பதிப்பு, லண்டன் 1772—பக்.540

பிளினியஸ், கேஜஸ் செகண்டஸ், der Aeltere Historiae naturalis Libri XXXVII Paris 1826—பக்.135

*புஷ், ஜொஹான் ஜார்ஜ்*, Theoretischpraktische Darstellung der Handlung in ihren mannigfaltigen Geschäften (1792) ஜி.பி.எச். நார்மனின் இடைச்செருகல்கள் மற்றும் அனுபந்தங்களுடன் மூன்றாவது விரிவாக்கப்பட்ட, அபிவிருத்தி செய்யப்பட்ட பதிப்பு, ஹாம்பர்க், 1808—பக்.867

பெக்கோர், *சா.* Théorie nouvelle d'é conomie sociale et politique ou études sur l'organisation des sociéétudes, *பாரிஸ்* 1842—பக்.862

பெல், ஜி.எம். கூட்டுப் பங்கு வங்கித் தொழிலில் தத்துவ ஞானம், லண்டன் 1840 —பக்.769

பொஸாங்கவெட், ஜே.டபிள்யூ. உலோக, காகித மற்றும் கடன் செலாவணி; அவற்றின் அளவையும் மதிப்பையும் முறைப்படுத்தும் வழிகள், லண்டன் 1842—பக்.502, 548

ஃபயர்மன், பீட்டர். Kritik der Marxschen Werttheorie In Jahrbücher für Nationalokonomie und Statistik, Dritte Folge, Bd. III. Jena 1892—பக்.14

ஃபெல்லர், பிரடரிக் எர்னஸ்ட்(1800-1859)—பக்.419

பெல்லர்ஸ், ஜான்(1654-1725) —பக்.379

ஃபுல்லர்ட்டன், ஜான். செலாவணிகளின் முறைப்படுத்தல் பற்றி; இங்கிலாந்து வங்கியி னுடையவும், நாடு பூராவிலும் இதர வங்கித் தொழில் நிறுவனங்களுடையவும் கடன் மீதான வருங்கால வெளியீடுகளை, சில குறிப்பிட்ட நிலையான வரம்புகளுக்குள் கட்டுப்படுத்தும்

யோசனைக்கு அடிப்படையாகவுள்ள கோட்பாடுகள் பற்றிய ஒரு பரிசீலனை, லண்டன் 1845—பக்.555, 624, 627, 630, 631, 632, 634, 640, 641, 642

பெ∴ல்லர், டாக்டர் எ∴ப் .ஈ. மற்றும் ஒடர்மன், டாக்டர் சி.ஜி. Das Ganze der Kaujmonnischen Arithmetik Für Handels, Real - und Gewerbeschulen, so wie zum Selbstunterricht für Geschäftsmänner überhaupt (1842), 7. Auflage, Leipzing 1859—பக்.419

ம

மாம்சன், தியோடர், Romische, Geschichte, 2. Auflage, பெர்லின் 1856 1857—பக்.441, 525

மார்க்ஸ், காரல், Das Kapital Kritik der Politischen Oekonomie, Buch I—பக்.30, 33, 37, 41, 45, 60, 61, 93, 105, 117, 120, 122, 734, 735, 871, 888, 893

—மார்க்ஸ், காரல், Buch II—பக்.1, 2, 3, 9, 19, 27, 49, 60, 88, 91, 92, 94, 623, 670, 747, 793

—மார்க்ஸ், காரல், Das Kapital etc. Erster Band, Buch I: Der Produktionsprozess des Kapitals, 2. Auflage, ஹாம்பர்க் 1872 - 7. 3 Auflage ஹாம்பர்க் 1883—பக்.1, 2, 154, 354, 327, 382, 401, 407

—Das Kapital etc. Zweiter Band,

—மார்க்ஸ், காரல், Buch II: Der Zirkulations prozsess des Kapitals, ஹாம்பர்க் 1883—பக். 188. 193. 212. 240. 304. 326. 347. 411. 427

—Misére de la philosophie: Réponse á la philosophie de la misére de M. Proudhon, பாரிஸ் 1847—பக்.860

—Zur Kritik der politischen Oekonomie, Erstes Heft, பெர்லின் 1859—பக்.623, 770, 771, 774, 790, 860

மார்ட்டன், ஜே.சி. பயிர்த்தொழிலில் பயன்படுத்தப்படும் சக்திகள் கலைக்கழகத்தில் அளித்த அறிக்கை. கலைக்கழக ஏடு, 1859 டிசம்பர் 9—பக்.889

மார்ட்டன், ஜான் லொக்கார்ட். பண்ணைகளின் செல்வாதாரங்கள்: விவசாய அபிவிருத்தி, நிலச்சொத்தின் பொதுவான மேலாண்மை ஆகியவை பற்றிய ஒரு வியாசம், லண்டன் 1858—பக்.891, 958

மால்தஸ், டி.ஆர். அரசியல் பொருளாதாரத்தின் இலக்கணங்கள், லண்டன் 1827 - 36, லண்டன் 1853—பக்.40, 44

—அரசியல் பொருளாதாரக் கோட்பாடுகள் அவற்றின் நடைமுறைப் பிரயோகத்தை நோக்கமாகக் கொண்ட பரிசீலனை, 2-ஆம் பதிப்பு, லண்டன் 1836—பக்.40, 224

மான்லி, தாமஸ்.தவறாகப் புரிந்து கொள்ளப்படும் பணத்தின் வட்டி; அல்லது, வட்டியின் தணிவு ஒரு தேசத்தின் செல்வங்களின் விளைவே தவிர காரணமல்ல என்பதை யும், ஆறு சதவீத மென்பது நாட்டின் தற்போதைய நிலைமைகளுக்குப் பொருத்தமான வட்டியாகும் என்பதையும் நிருபிக்கின்ற ஒரு வியாசம், லண்டன் 1668—பக்.853

மாஸி, ஜோசப். இயற்கையான வட்டி வீதத்தை ஆளுகின்ற காரணங்கள் பற்றிய ஒரு கட்டுரை... லண்டன் 1750—பக்.477, 487, 491, 495

மில், ஜான் ஸ்டூவர்ட், அரசியல் பொருளாதாரத்தில் சில தீர்க்கப்படாத பிரச்சினைகள் பற்றிய கட்டுரைகள், லண்டன், 1844—பக். 1253

—அரசியல் பொருளாதாரக் கோட்பாடுகள், சமுதாய மெய்யறிவுக்கு அவற்றின் பிரயோகங்களில் சிலவற்றுடன், 2-ஆம் பதிப்பு, லண்டன் 1849—பக்.531, 544

முல்லர், ஆடம் எச். Die Elemente der Staatskunst, பெர்லின் 1809—பக்.484, 545

மெக்காலே, தா.பா. இங்கிலாந்தின் வரலாறு. இரண்டாம் ஜேம்ஸ் அரியணையேறியது முதல், பாகம் 4, லண்டன் 1857—பக்.854

ர

ராம்சே, ஜார்ஜ், செல்வப்பங்கீடு பற்றிய ஒரு கட்டுரை, எடின்பர்க் 1836—பக்.490, 517

ரிக்கார்டோ, டேவிட், அரசியல் பொருளாதாரக் கோட்பாடுகள் மற்றும் வரி விதிப்பு பற்றி, மக்கல்லோச் பதிப்பித்தது, லண்டன் 1852—பக்.920, 922

ரெடன், டாக்டர் ∴ப்ரிஹர் வான். Vergleichende Kulturstatistik der Gebiets - und Bevolkerungsverhältnisse der Gropstaaten Europas, Berlin 1848—பக்.649

ரோஷர், வில்ஹெல்ம், Die Grundlagen der Nationalokonomie. Ein Hand - und Lesebuch für Geschäftsmänner ஸ்டட்கார்ட் மற்றும் ஆ∴ப்ஸபர்க் 1857)—பக். 296, 410, 435, 544

ல

லாவர்னே, லியோன்ஸ் டி. இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, அயர்லாந்து ஆகியவற்றின் கிராமப் பொருளாதாரம் (Economie Rurale de l'Angle

terre, பாரிஸ் 1854-என்பதிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது). லண்டன் 1855—பக்.891

லீதம், வில்லியம் , செலாவணி பற்றிய கடிதங்கள். சார்லஸ் வுட்-டுக்கு எழுதப்பட்டவை, லண்டன்-1840.—பக்.547

லுஸாக், இ. Hollands Rijkdom, Behelzende den Oorsprong van den Koophandel, en van de Magt van dezen, Staat etc. லெய்டன் 1782—பக்.428

லூதர், மார்ட்டின். An die Pjarherrn wider den wucher zu predigen, விட்டம்பர்க் 1540, லூதரின், werke விட்டம்பர்க் 1589, 6. Teil—பக்.538

Von Kaufschandlung und Wucher *விட்டம்பர்க்* 1524, *லூதரின்* werke, விட்டம்பர்க் 1589, 6 Teil —பக்.469

லெக்சிஸ், டபிள்யூ. Die Marxsche Kapital theorie. In Conrads Jahrbücher für Nationalokonomie und Statistik, Neue, Folge, Bd XI, Jena 1885 —பக்.9, 11

லோரியா, அகில், காரல் மார்க்ஸ். In Nuova Antologia, ஏப்ரல் 1883 —பக்.17

— La Teoria Economica della Costituzione Politica Roma, Torino, Firenze 1886—பக்.19

## வ

விஸ்ஸரின், எஸ், Handboek van Praktische Staathuishoudkunde, *ஆம்ஸ்டர்டாம்* 1860 bis 1865— பக்.426, 428

வெர்ரி, பீட்டேரா. Meditazioni sulla Economia Politica In Scrittori Classici Italiani di Economia Politica, Parte Moderna, பாகம் 15, மிலானோ 1804 —பக்.369

வெஸ்ட், எட்வர்டு. நிலத்துக்கு மூலதனத்தைப் பிரயோகிப்பது பற்றிய கட்டுரை ஆக்ஸ்ஃபார்டு பல்கலைக்கழகக் கல்லூரி ஆராய்ச்சி மாணவர் ஒருவர் எழுதியது லண்டன் 1815 —பக். 320

—வொல்ஃப், ஜுலியஸ், Sozialismus und Kapitalistische Gesells chaftsordnung. Kritische. würdigung beider als Grundlegung einer, Sozial politik, system der Sozialpolitik, Bd.I, ஸ்காட்கார்ட் 1892—பக்.21

ஸ்டீபலிங், ஜார்ஸ் சி. Das Wertgesetz und die Profitrate, நியூயார்க் 1890 — பக்.21, 22

ஸ்டுவர்ட், ஜாக்விஸ் (ஜேம்ஸ்). Recherche des principes de l'économie politique ou essai sur la science de la politique interieure des nations libres) அரசியல் பொருளாதாரக் கோட்பாடுகள் பற்றிய ஓர் ஆய்வு.....லண்டன் 1767 என்பதிலிருந்து மொழிபெயர்க்கப் பட்டது). பாரிஸ், 1789 — பக்.494

ஸ்டோர்ச், ஹென்றி. Cours d'économic politique, ou exposition des principes qui déterminent la prospérité des Nations, செயிண்ட் பீட்டஸ்பர்க் 1815 —பக்.242

ஸ்மித், ஆடம், தேசங்களின் செல்வத்தினுடைய இயல்பு மற்றும் காரணங்கள் பற்றிய ஆய்வு (1776), வேக்ஃபீல்டு பிரசுரித்தது, லண்டன் 1835 முதல் 1889 — பக்.188, 443, 657, 658

ஸே, ஜீன் பாப்டிஸட், Traité d'économie politique, ou simple exposition de la maniere dont se forment, se distribuent et se consomment les richesses (1803), 3-ம் பதிப்பு, பாரிஸ் 1817—பக்.369

## ஷ

ஷா, ஜார்ஜ் பெர்னார்டு1856—பக்.11

ஷ்மிட், கான்ராடு. Die Durchschnittsprofitrate auf Grundlage des Marxschen Wertgesetzes. ஸ்டட்கார்டு, 1889.—பக்.12

—Die Durchschnittsprofitrate und das Marxsche Wertgesetz. In Die Neue Z eit XI Jahrg. Bd.I., ஸ்டட்கார்ட் 1893.— பக். 14

## ஜ

ஜான்ஸ்ட்டன், ஜேம்ஸ் எஃப். டபிள்யூ. வட அமெரிக்கா பற்றிய குறிப்புகள்; விவசாயம், பொருளாதாரம், சமுதாயம் தொடர்பாக, எடின்பர்க் மற்றும் லண்டன் 1851.—பக்.872

ஜார்ஜ். மூன்றாம்(1738-1820) 1760 முதல் மன்னர்—பக்.541

ஜெவோன்ஸ், வில்லியம் ஸ்டான்லி (1835-1885).—பக்.10

ஜேம்ஸ், முதலாம் (1566-1625)—பக்.864

ஜில்பார்ட், வில்லியம் ஜேம்ஸ், வங்கித்தொழிலின் வரலாறும் கோட்பாடும், லண்டன், 1834.—பக்.458, 555, 559, 761, 767, 864

—ஜில்பார்ட், வில்லியம் ஜேம்ஸ், வங்கித்தொழில் பற்றிய ஒரு நடைமுறை வியாசம் (1827), 5-ஆம் பதிப்பு, லண்டன் 1849—488

ஜோன்ஸ், ரிச்சார்டு, அரசியல் பொருளாதாரம் பற்றி ஓர் அறிமுக விரிவுரை, லண்டன் 1833—பக்.352

## ஹ

ஹபார்டு, ஜான் கெல்லிபிரான்டு. செலாவணியும் நாடும், லண்டன் 1843—பக்.573

ஹாட்ஜ்ஸ்கின். மூலதனத்தின் வாதங்களுக்கெதிராக உழைப்புக்கு வக்காலத்து; அல்லது மூலதனத்தின் உற்பத்தித்திறனின்மைக்கு நிருபணம். ஒரு தொழிலாளி எழுதியது, லண்டன் 1825—பக்.531, 544

ஹாமில்டன், ராபர்ட், கிரேட் பிரிட்டனின் தேசியக் கடனின் உதயம் மற்றும், முன்னேற்றம், மீட்சியும் தற்போதைய நிலையும் மற்றும் நிர்வகிப்பு தொடர்பான ஓர் ஆய்வு, 2-ஆம் பதிப்பு, எடின்பர்க் 1814—பக்.539

ஹார்டுகேஸில், டேனியல், ஜூனியர், வங்கிகளும் வங்கிக்காரர்களும், 2-ஆம் பதிப்பு, லண்டன் 1843.—பக்.768, 866

*ஹ˜ல்மன், காரல் டீட்ரிச்* Städtewesen des Mittelalters பான் 1826-29.—பக்.426, 429, 844

ஹெகல் ஜார்ஜ்வில் ஹெல்ம் பிரடெரிக்

Grundlinien der Philosophie des Rechts oder Naturrecht und Staatswissenschaft im Grundrisse. In werke published by டாக்டர் எட்வர்டு கான்ஸ் பிரசுரித்தது, 7-ஆம் பதிப்பு, பெர்லின் 1840.—பக்.870

ஹெயின், ஹெயின்ரிச், வாதப்போட்டி. In 'Gedichte, Dritter Band, Romanzero, 3, Buch, Hebräische Melodien'. —பக்.761

ஹென்றி, எட்டாம்(1491-1547)—பக்.864

ஹெர்ரன்ஷ்வான்டு, ஜீன்(1728-1811)—பக்.1117

ஹியூம் டேவிட்(1711-1776)—பக்.512, 771

ஹார்னர் லியோனார்டு(1785-1864).—பக்.114, 125, 164, 168

## II. ஆசிரியர் பெயரில்லாதவை

இங்கிலாந்தின் நலன்கள் பற்றிய சில சிந்தனைகள், வர்த்தக விரும்பி ஒருவர் எழுப்பியது, லண்டன் 1697.—பக்.858

செலாவணித் தத்துவம் பற்றிய திறனாய்வு; ஸ்காட்லாந்தில் நிலவுகின்ற வங்கி முறையில் அரசாங்கத்தின் மிரட்டும் குறுக்கீடு பற்றி ஸ்காட்டிஷ் மக்களுக்கு எழுதிய ஒரு கடிதத்தில் இங்கிலாந்திலுள்ள ஒரு வங்கிக்காரர் எழுதியது, எடின்பர்க் 1845—பக்.558, 573, 605, 606, 731, 1108

திரு. மால்தஸ்-ஆல் சமீபகாலத்தில் பரிந்துரைக்கப் பட்ட, கிராக்கியின் இயல்பு மற்றும் நுகர்வின் அவசியம் தொடர்பான கோட்பாடுகள் பற்றிய ஓர் ஆய்வு, லண்டன் 1821—பக்.915

பரிவர்த்தனைகளின் தத்துவம். 1844-ஆம் வருட வங்கிச்சாசனச் சட்டம், இன்னபிற (ஜி.ஹென்றி ராய்.) லண்டன் 1864 —பக்.489, 493

போட்டியும் ஒத்துழைப்பும், 1832 —பக்.1262

மாநகரம் அல்லது லண்டன் தொழிலின் உடற்கூறு சாஸ்திரம், செலாவணிச் சந்தை மற்றும் காபி இல்லங்கள் பற்றிய சுருக்கச் சித்தரிப்புகளுடன். (டேவிட் மோரியர் கவான்ஸ்) லண்டன் 1845—பக்.532

விவசாயம் மற்றும் தானியச் சட்டம் பற்றிய மூன்று பரிசுக்கட்டுரைகள். தேசிய தானியச்சட்ட எதிர்ப்புக் கழகத்தால் பிரசுரிக்கப்பட்டது. (ஜார்ஜ் ஹொப், டபிள்யூ. ஆர். கிரே, ஆர்தர் மோர்ஸ்.) மான்செஸ்டர், லண்டன் 1842 —பக். 887, 1272

Religion saint - Simonienne, Economie Politique et Politique Articles extraits au Glope (Enfantin) Paris 1831—பக்.856, 860

## III. செய்தித்தாள்களும் சஞ்சிகைகளும்


எக்கனாமிஸ்ட், 1845 மார்ச் 18

—1847 மே 22. —762, 827, 828, 829, 832, 833, 834

—1847 அக்டோபர் 23. —795

—1847 நவம்பர் 20. —695, 699

—1847 டிசம்பர் 11. —808

—1850 நவம்பர் 30.—836

—1851ஜனவரி 11.—835

எடின்பர்க் ரெவ்யூ -

கலைக்கழக ஏடு, பாகம் VII. எண் 368, லண்டன், 1859 டிசம்பர் 9.

(ஜே.சி.மார்ட்டலின் அறிக்கை).—889

டெய்லி நியூஸ், 1889 டிசம்பர் 10.—496

— 1892 டிசம்பர் 15. —660, 661

— 1894 ஜனவரி 18.—766

நியூயார்க் டெய்லி ட்ரிப்யூன், 1859 டிசம்பர் 20 (ஓ' கன்னோரின் பேச்சு) .—526

மார்ஸின் ஸ்டார், 1865 டிசம்பர் 14. (ஜான் பிரைட்டின் பேச்சு.).—893, 894

மான்செஸ்டர் கார்டியன், 1847 நவம்பர் 24. —563

Die Neue Zeit, XI. I akrg, Bd.I 1893 *(கான்ராடு ஷ்மிட்டின் கட்டுரை.).* —14

Jahrbircher fir Nation alokonomie und stetish

ஜே. கான்ராடு பிரசுரித்தது.

'1885, Neve, Folge, Bd XI (டபிள்யூ. லெக்சிஸ் எழுதிய கட்டுரை.)—9

—1891, III Folge, Bd.II (ஜூலியஸ் வொல்ஃப் எழுதிய கட்டுரை.)—16

—1892, III Folge, Bd.III (வீட்டர் ஃபயர்மன் எழுதிய கட்டுரை.) —14

Nuova Antilogia, 1833, ஏப்ரல், (அகில் லோரியாவின் கட்டுரை.)—17

Nuova Antologia

—1833 April (அகில் லோரியாவின் கட்டுரை).—19, 1270

Reuue des Deux Mondes-1842.

''1848. (ஃபோர்கேடு எழுதிய கட்டுரை.)—1204

## IV. பாராளுமன்ற அறிக்கைகளும் மற்ற அதிகாரப்பூர்வப் பிரசுரங்களும்

கசக்கிப் பிழியும் முறை பற்றிய பிரபுக்கள் சபைப் பொறுக்குத் குழுவின் முதல் அறிக்கை: கமிட்டியின் நடவடிக்கைக் குறிப்புகள், சாட்சியப்பதிவுகள் ஆகியவற்றுடன் கூட, காமன்ஸ் சபையால் ஆணையிடப்பட்டது, 1888 ஆகஸ்ட் 11,

சுரங்கங்களிலும், நிலக்கரிச்சுரங்கங்களிலும் குழந்தைகள் வேலை வாங்கப்படுவது பற்றிய முதல் அறிக்கை, 1829 ஏப்ரல் 21

தொழிற்சாலை ஆய்வாளர்களின் அறிக்கைகள்

" 1845 அக்டோபர் 31-ல் முடிகின்ற அரை யாண்டுக்கு, லண்டன் 1846

" 1846 அக்டோபர் 31-க்கு, லண்டன் 1847

" 1847, 31-க்கு, லண்டன் 1848

" 1848 அக்டோபர் 31-க்கு, லண்டன் 1849.

" 1849 ஏப்ரல் 30-க்கு, லண்டன் 1849

" 1840 அக்டோபர் 21-க்கு, லண்டன் 1850

" 1850 எப்ரல் 30-க்கு, லண்டன் 1850

" 1850 அக்டோபர் 31-க்கு, லண்டன் 1851

" 1851 ஏப்ரல் 30-க்கு, லண்டன் 1851

" 1852 அக்டோபர் 31-க்கு, லண்டன் 1853

" 1855 ஏப்ரல் 30-க்கு, லண்டன் 1853

" 1853 அக்டோபர் 31-க்கு, லண்டன் 1

" 1854 ஏப்ரல் 30-க்கு, லண்டன் 1854

" 1855 அக்டோபர் 31-க்கு, லண்டன் 1856

" 1858 அக்டோபர் 31-க்கு, லண்டன் 1859

" 1859 ஏப்ரல் 30-க்கு, லண்டன் 1859

" 1859 அக்டோபர் 31-க்கு, லண்டன் 1860

" 1860 ஏப்ரல் 30-க்கு, லண்டன் 1860

" 1860 அக்டோபர் 30-க்கு, லண்டன் 1861

" 1861 ஏப்ரல் 31-க்கு,லண்டன் 1861

" 1861 அக்டோபர் 31-க்கு, லண்டன் 1862

" 1862 ஏப்ரல் 30-க்கு, லண்டன் 1862

" 1862 அக்டோபர் 31-க்கு, லண்டன் 1863

" 1863 ஏப்ரல் 30-க்கு, லண்டன் 1863

" 1863 அக்டோபர் 31-க்கு லண்டன் 1864

" 1864 ஏப்ரல், 30-க்கு, லண்டன் 1864

நிலக்கரிச் சுரங்க விபத்துகள். 1861 மே 3 தேதியிட்ட மாண்புமிகு காமன்ஸ் சபை உரை ஒன்றுக்கான தகவலறிக்கையின் சுருக்கம் - அச்சிடக் காமன்ஸ் சபையால் ஆணையிடப் பட்டது, 1862 பிப்ரவரி 6

பிரபுக்கள் சபை ரகசியக் கமிட்டி அளித்த அறிக்கை; சிறிது காலமாக வர்த்தக வர்க்கங்கள்,,மத்தியில் நிலவியுள்ள துயரத்தின் காரணங்களையும், கேட்கும்போது பணம் தர வேண்டிய வங்கி நோட்டுகளின் வெளியீட்டை முறைப்படுத்துகின்ற விதிகளால் அது எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டுள்ளது என்பதையும் விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்டது. சாட்சியக் குறிப்புகள் மற்றும் ஒரு பிற்சேர்க்கையுடன், அச்சிடக் காமன்ஸ் சபையால் ஆணையிடப் பட்டது, 1848 ஜூலை 28.

" 1857-ல் மறுபடி அச்சிடப்பட்டது

பொதுச்சுகாதாரம் பிரைவி கவுன்சில் மருத்துவ அதிகாரியின் ஆறும் அறிக்கை பிற்சேர்க்கை யுடன், 1863, லண்டன் 1864

வங்கிச்சட்டங்கள் பற்றிய பொறுக்குக் குழுவின் அறிக்கை; கமிட்டியின் நடவடிக்கைக் குறிப்புகள், சாட்சியப்பதிவுகள், பிற்சேர்க்கை, விவர அட்டவணை ஆகியவற்றுடன் கூட, அச்சிட காமன்ஸ் சபையால் ஆணையிடப் பட்டது, 1857, ஜூலை 30 பகுதி I. சாட்சிய அறிக்கை

------- பகுதி II, பிற்சேர்க்கையும் விவர அட்டவணையும்

வங்கிச்சட்டங்கள் பற்றிய பொறுக்குக் குழவின் அறிக்கை; கமிட்டியின் நடவடிக்கைக் குறிப்புகள், சாட்சியப் பதிவுகள், பிற்சேர்க்கை, விவர அட்டவணை ஆகியவற்றுடன்கூட அச்சிடக்காமன்ஸ் சபையால் ஆணையிடப் பட்டது, 1858 ஜூலை 2

வர்த்தகத் துயரம் பற்றிய ரகசியக் கமிட்டியின் முதல் அறிக்கை. சாட்சியப் பதிவுகளோடு. அச்சிடக்காமன்ஸ் சபையால் ஆணையிடப் பட்டது, 1848 ஜூன் 8

Ammu. Vicessimo Sox to Creor III Re Capi XXXI ஒவ்வொரு காலாண்டின் முடிவிலும் சில குறிப்பிட்ட தொகைகளை ஆணையாளர்களின் பொறுப்பில் - அவர்கள் தேசியக்கடனைக் குறைப்பதற்காக அவற்றைப் பிரயோகிக்கும் பொருட்டு - விடுவதற்கான ஒரு சட்டம் (1786)

# பொருள் அகராதி

## அ


*அடக்கவிலை*

—சரக்கின் அடக்க விலை —29, 31, 32, 33, 34
— முதலாளித்துவ அடக்க விலை — 28
— வாஸ்தவமான அடக்க விலை —29
—அடக்க விலையும் மாறா மூலதனம், மற்றும் மாறும் மூலதனம் ஆகியவற்றின் மதிப்பும் லாப மாற்றங்களும் - 31, 33
— அடக்க விலையும் நிலை மூலதனம், சுற்றோட்ட மூலதனம் ஆகியவற்றிடையிலான வித்தியாசமும் — 35, 36, 37, 55
—அடக்க விலையும் சரக்கின் மதிப்பும் —40-41, 215, 216, 217, 218, 222, 225, 226
—அடக்க விலையும் சரக்கின் விலையும் —39, 42
—அடக்க விலை பற்றிய புருதோனின் தத்துவம் — 44, 45
—அடக்க விலையும் மாறும் மூலதனம், மாறா மூலதனம் ஆகியவற்றிடையிலான வித்தியாசமும் — 203.
—அடக்க விலையும் உழைப்பின் தீவிரமாக்கலும் — 306, 307
—அடிமை முறையும் முதலாளித்துவ உற்பத்தி முறையும் — 33
—அடிமை முறையும், உற்பத்திப் பொருள்கள் சரக்குகளாக மாற்றப்படுவதும்
—அடிமைப் பொருளாதாரத்தின் வளர்ச்சியில் வர்த்தகத்தின் பாத்திரம் — 234, 437
—அடிமைப் பொருளாதாரமும் லேவாதேவி மூலதனமும் — 839, 841
—அமெரிக்க ஐக்கிய நாடுகளில் அடிமைச் சொந்தக்காரர்கள் மண்வளத்தைக் கொள்ளையிடல் —875, 876
—அடிமை முறையும் நிலச்சொத்தும் —897
—அடிமை முறையில் உற்பத்தி உறவுகள் —1101, 1186, 1158
—அடிமை முறையும் அடிமையின் உழைப்பு நிலைமைகளும் — 1122 - 24
—அடிமை முறையின் அமைப்பு — 1143 - 44
—அடிமைகளின் விலை —1151
—அடிமையமைப்பில் உபரி உழைப்பின் பகைத்தன்மையுள்ள வடிவம் —1167 - 68
—அந்நிய வர்த்தகமும் முதலாளித்துவ உற்பத்தி முறையும்—313, 314, 436

*அமெரிக்கா*

—1825-57 கால நெருக்கடிகளின் மையமான அமெரிக்கா— 88, 689.
—அமெரிக்க ஜனத்தொகை — 94.
—அமெரிக்க உள் நாட்டுப்போர் — 144, 169.
—அமெரிக்காவில் உற்பத்தியின் வளர்ச்சி — 157, 159.
—அமெரிக்காவில் சொத்துடைமை — 526, 875.
—அமெரிக்காவில் பங்குக் கம்பெனிகள் — 609.
—ஆசியாவுடன் அமெரிக்காவின் வாணிபம் — 798.
—இங்கிலாந்துடன் அமெரிக்காவின் பரிவர்த்தனை வீதம் — 824.
—அமெரிக்காவுடன் இங்கிலாந்தின் பரிவர்த்தனை வீதம் — 822, 824.
—அமெரிக்காவில் நில (ஹேஷ்ய) ஊக வாணிபம் — 949.
—அயர்லாந்து— 738, 835.
—அர்ஜென்டைனா—1028.

*அரசு*

—அரசும் விலையுயர்ந்த உலோகங்களின் இறக்குமதி - ஏற்றுமதியும் — 429.
—தேசியக் கடன் — 539, 541, 647, 648, 664.
—அரசாங்கப் பத்திரங்கள் —552, 562, 639, 651, 664, 666, 705, 1152.
—அரசும் வேறுபாட்டு வாரமும் (வாடகை) — 938.
— ஒரு நிலச்சொந்தக்காரனாக அரசு — 1124

*அறுதி நில வாரம்*

— இதன் இலக்கணம்— 1077.
— இதன் உருவாக்கம் — 1080.
— இதன் சாரம் — 1093-94.
—பிரித்தெடுப்புத் தொழிலில் அறுதி நில வாரம் — 1094.


## ஆ


*ஆசியா*

—ஆசியாவில் உயர் லாப வீதம் — 199.
—ஆசியாவுக்கு வெள்ளி ஏற்றுமதி— 778.
—ஆசியாவுடன் பரிவர்த்தனை வீதம் — 788, 813, 814, 815, 816, 817-824,
— தரியார் நிலச் சொத்துடைமை ஆசியாவிற்கு ஐரோப்பியர்களால் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது— 871
மேலும் பார்க்க: இந்தியா, சீனா.
—ஆப்பிரிக்காவும் அதனை ஐரோப்பிய அரசுகள் பங்குபோட்டதும் — 1297.
—ஆஸ்திரேலியா — 704, 816.

## இ


—இங்கிலாந்தில் தானியச் சட்டங்கள் — 141, 886, 887, 932, 965, 1027.
— இங்கிலாந்தில் பருத்தித் தொழில் — 141, 142, 162, 163, 168, 170.
— இங்கிலாந்தில் கம்பளித் தொழில் — 160, 161, 162, 168.
— 1861-65 கால பருத்தி நெருக்கடி —164, 165, 166, 167, 168, 169.
— இங்கிலாந்தின் பருத்தித் தொழிலாளர்களின் நிலை — 172, 173, 174, 175, 177, 178-182.
— இங்கிலாந்தில் குடியமர்வுச் சட்டங்கள் — 231.
— இங்கிலாந்தில் வேலைநாள் — 284.
— இங்கிலாந்தில் வர்த்தக உடைமை — 440, 441.
— இங்கிலாந்தின் அந்திய வர்த்தகம் —453, 821-23.
—1792 - 1818-ல் மூலதனத்திரட்சி — 587, 588.
— தொழிலில் இங்கிலாந்தின் ஏகபோகம் — 686, 703.
— இங்கிலாந்தின் தொழிற் சகடம் —702, 703
—1824 முதல் 1863 வரை அயர்லாந்துக்கு இங்கிலாந்தின் ஏற்றுமதிகள் —702.
—இங்கிலாந்தின் வர்த்தக நிலுவை— 833, 836.
— இங்கிலாந்தில் நிலத்தின் உபயோகம் — 883, 1087 - 88.
— இங்கிலாந்தில் விவசாயத் தொழிலாளர்களின் கூலி — 887, 888, 891.
— இங்கிலாந்தில் தானிய விலைகள் — 932.
—பயிர்த்தொழிலில் முதலாளித்துவத்தின் சாஸ்திரீய பூமி — 960.
— முதலாளித்துவ உற்பத்தி முறையின் சாஸ்திரீய பூமி — 960, 1262.
—அடைப்பு மசோதாக்கள்—1092. (மூடியடைப்புச் சட்டங்கள்)
— இங்கிலாந்தில் வர்க்கங்கள் — 1263.

*இங்கிலாந்து வங்கி*

— இதன் பிணையங்கள் (ஈடுகள்)— 627, 628, 633, 637.
— இங்கிலாந்து வங்கியின் வைப்பு நிதி — 660 - 63, 757.
—1884-45ல் இதன் வட்டி வீதம் — 719, 720.
—இங்கிலாந்து வங்கியில் நோட்டுகளின் வருகையும் வெளியேற்றமும் — 744.
— லண்டனிலேயே மிகப் பெரிய மூலதனச் சக்தி — 762, 763, 765, 766.
— 1797 முதல் 1817 வரையிலான காலத்திற்கு இவ்வங்கியின் லாபங்கள் — 767, 768.
—1844-ஆம் வருட வங்கிச் சட்டம் — 780, 781.
— வர்த்தகம் மற்றும் தொழில்மீது இங்கிலாந்து வங்கிக்குள்ள சக்தி— 858.

இத்தாலி— 1118, 1134, 1139, 1284, 1288, 1289.

*இந்தியா*

— 1825-57 கால நெருக்கடிகளின் மையமாக இந்தியா — 88.
—இந்தியாவில் முதலாளித்துவத்துக்கு முந்தைய உற்பத்தி முறை 450-51, 1028, 1117, 1123, 1253
—இந்தியாவில் குடியானவன்—449, 1028
— இந்தியாவில் ஆங்கிலேயராட்சி — 449, 821, 837, 1132
— இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு மூலதன ஏற்றுமதி — 778, 813, 814-818
— இங்கிலாந்து இந்தியாவிலிருந்து செய்யும் இறக்குமதிகளுக்கு சமதையேதும் செலுத்துவதில்லை—822

*இயந்திரங்கள்*

—இயந்திரங்களின் மதிப்பின் மறு உற்பத்தி—97,101,102,142,143,149,154-55,350-51
—இயந்திரங்களின் தார்மீக மதிப்பிறக்கம் —149
—முதலாளித்துவத்தின் கீழ் புதிய இயந்திரங்களை நுழைத்தல் —149, 347
—இயந்திரங்களின் ஒப்பீட்டு மிகையுற்பத்தி—156
—இயந்திரங்களும் உழைப்பின் உற்பத்தித் திறனும் —344-45
—இயற்கைப் பொருளாதாரம்—1116,1130,1131
—இலாபத்தின் ஊற்றுக்கண்—981


## உ


*உபரி உழைப்பு*

—உபரி உழைப்பும் அடக்க விலையும்—50,52
—உற்பத்தியின் வளர்ச்சியோடு உபரி உழைப்பின் திறனின் பெருக்கம் —288-89
—இதன் இயற்கையான அடிப்படை—894-95
—ஊதியமற்ற உபரி உழைப்பின் உற்பத்திப் பொருளாதார நில வாரம் —898, 1122, 1123,1125-26
—உபரி உழைப்பின் வடிவங்கள் —1122, 1123-24, 1125-26
—உபரி உழைப்பின் வரம்புகள் —1125
—வரலாற்று ரீதியல்லாத ஓர் இனமாக உபரி உழைப்பு —1168
—முதலாளித்துவத்தின்கீழ் உபரி உழைப்பின் கட்டாயத் தன்மை —1168
—உபரி உழைப்பும் அவசிய உழைப்பும்—1171, 1189-92
—உபரி உழைப்பும் பொது இலாப வீதமும்—1248-1251

*உபரி மதிப்பு*

—உபரி மதிப்பின் உருவாக்கம் —37-40
—உபரி மதிப்பின் ஊற்றுக்கண்—37,197
—லாபத்தின் மாறிய வடிவமாக உபரி மதிப்பு—38, 39,40,41

—இது விற்பனையிலிருந்து பிறப்பது போல் தோன்றுதல்—41-45, 50, 183, 1181
—உபரி மதிப்பின் தோற்றுவாய் பற்றி புருதோன் —45
—உபரி மதிப்பும் சுற்றோட்டக்காலமும்—49, 370-71
—உபரி மதிப்பும் லாபமும் —58
—உபரி மதிப்பும் கூலியும் —60-63
—உபரி மதிப்பும் வேலைநாளின் நீளமும் —60-61
—உபரி மதிப்பும் மூலதனப் புரள்வும் —86
—இது மொத்த மூலதனத்திலிருந்து பிறப்பது போல் தோன்றுதல்—220, 221
—ஒப்பீட்டு உபரி மதிப்பு —289
—உபரி மதிப்பின் வரம்பு, வேலைநாளின் சரீர ரீதியான அதிக பட்சமே—322
—உபரி மதிப்பை நிர்ணயிக்கும் காரணிகள்—327, 328
—உபரி மதிப்பின் இருத்தலுக்கான நிபந்தனைகள் —897-901
—முதலாளித்துவ சமுதாயத்தில் உபரி மதிப்பின் பிரிவினை—1170
—உபரி மதிப்பின் வடிவங்கள்—1188-1192, 1199-1202, 1208-1212, 1218-1219
—உபரி மதிப்பின் வரலாற்று வளர்ச்சி—1287-1291
மேலும் பார்க்க: லாபம்
—உபரி மதிப்பு வீதம்
—உபரி மதிப்பு வீதத்தின் இலக்கணம்—47, 56, 308
—உபரி மதிப்பு வீதமும் உபரி மதிப்பும்—48
—உபரி மதிப்பு வீதமும் லாப வீதமும் —49, 54, 56, 59, 83, 84,183-86, 279
மேலும் பார்க்க; உழைப்புச் சுரண்டல்.
—உபரி லாபம்
—இதன் உருவாக்கம்—262-263, 908, 909-921, 1030, 1037, 1038
—நீர்வீழ்ச்சிகளுக்கான உபரி லாபம்—908-919
—உபரி லாபம் வாரமாக மாற்றம்—913-919, 1028,-1039, 1081-99
—தொழிலில் உபரி லாபம்—1078, 1079
—உலகச் சந்தை
—முதலாளித்துவ உற்பத்தியின் அடிப்படை—145
—உலகச் சந்தையில் போட்டி—158
—உலகச் சந்தையின் சிருஷ்டிப்பு—353, 449
—உலகச் சந்தையில் முதன்மைக்கான போராட்டம் —454, 685, 686
—உழைப்பு
—உழைப்பின் காரிய நோக்குள்ள தன்மை—30
—உழைப்பின் சமுதாய ஒன்றிணைப்பு—98, 100, 103
—சர்வப் பொது உழைப்பு—136
—கூட்டுறவு உழைப்பு —136
—உழைப்பின் தீவிரம் —261
—விவசாய உழைப்பும் தொழிலுழைப்பும் —894-897
—சமுதாய முழுவதன் அவசிய உழைப்பும் உபரி உழைப்பும் —894-902
—விவசாய உழைப்பின் இயற்கை உற்பத்தித் திறன் —895, 1086
—மூலதனத்தின் உற்பத்தித் திறனாக தோன்றுவது—908, 909
—உழைப்பும் ஏகபோகம் செய்யத்தக்க இயற்கைச் சக்தியும்—914
—இயற்கையின் உழைப்பு உற்பத்தித் திறன்—1056
—கட்டாய உழைப்பு—1057-58
—முதலாளித்துவத்தின்கீழ் உழைப்பின் கட்டாயத் தன்மை—1167-1169
—உற்பத்தியில் பொதுக்காரணியாக உழைப்பு—1189, 1190
—மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையிலான செயல்முறையாக உழைப்புச் செயல்முறை—1178
—மேலும் பார்க்க: சமுதாய உழைப்பின் உற்பத்தித் திறன், உழைப்புச் சுரண்டல்.
—உழைப்புச் சக்தி
—உழைப்புச் சக்தியின் பயன் மதிப்பு—31-33, 476, 526, 534
—இதன் மதிப்பின் மாற்றம்—150, 151, 271
—முதலாளித்துவத்தின் வளர்ச்சியோடு இதன் அறுதியான அதிகரிப்பு —289
—உழைப்புச் சக்தியின் மதிப்புக்குக் கீழாகக் கூலியைத் தாழ்த்துதல் —310, 337
—உழைப்புச் சக்தியும் உழைப்பின் உற்பத்தித் திறனின் வளர்ச்சியும் —327
—உழைப்புச் சக்தியின் மதிப்பின் நிர்ணயிப்பு—388, 389, 649,650,1171-1173, 1226
—ஒரு சரக்காக உழைப்புச் சக்தி—476,477
—உழைப்புச் சக்தி வாய்ப்பு நிலைப்பட்ட ரீதியில் மூலதனமாகும்—482
—அடிமை முறையில் உழைப்புச் சக்தி—649
—உழைப்புச் சக்தியும் லாபமும் —720
—உழைப்புச் சக்தியும் வட்டி வீதமும்—720
—உழைப்புச் சுரண்டல்
—வெவ்வேறு உற்பத்தி மண்டலங்களிலும் உழைப்புச் சுரண்டல்—188-189
—உழைப்புச் சுரண்டல் மட்டத்தில் தேசிய வேறுபாடுகள்—189, 314
—மூலதனத்தின் ஒட்டுமொத்தத்தால் தொழிலாளர் வர்க்கம் சுரண்டப்படுதல்—260,261
—உழைப்புச் சுரண்டலென்பது ஊதியமற்ற உழைப்பின் தன்வயப்படுத்தலாகும் —261, 526
—உழைப்புச் சுரண்டலின் மட்டம்—261, 306-310, 322, 328

—உழைப்புச் சுரண்டலும் உழைப்பின் தீவிர மாக்கலும்—306, 307
—உழைப்புச் சுரண்டலும் வேலைநாளின் நீட்டிப்பும்—307
—காலனிகளில் உழைப்புச் சுரண்டல்—314
—உழைப்புச் சுரண்டலின் நிலைமைகள்—323-24
—உழைப்புச் சுரண்டலின் சாதனங்கள்—342
மேலும் பார்க்க: உபரி உழைப்பு வீதம்.
—உழைப்பு நேரம்—900, 913, 1216
—உற்பத்தி உறவுகள்
—முதலாளித்துவ உற்பத்தி உறவுகள்—52, 107, 108, 533, 534, 937-939, 1160-1162, 1164-1167, 1250
—உற்பத்திச் சக்திகளுக்கும் உற்பத்தி உறவு களுக்கும் இடையிலான முரண்பாடு—330, 331, 341, 342, 349, 611, 612, 1262
—அடிமை முறையில் உற்பத்தி உறவுகள்—1100, 1101, 1186, 1258
—கம்யூனிச சமுதாயத்தில் உற்பத்தி உறவுகள்—1100-1102
—உற்பத்தி உறவுகள் உற்பத்திச் சக்திகளின் தன்மைக்குப் பொருந்துதல்—1127, 1128
—சுரண்டும் உற்பத்தி முறைகளின்கீழ் உற்பத்தி உறவுகள்—1128
—உற்பத்தி உறவுகளின் மறு உற்பத்தி—1127
—உற்பத்திக் காலம்—86, 403
—உற்பத்திச் சக்திகள்—320, 330, 331, 340, 348, 349, 611, 612, 1262

*உற்பத்திச் சாதனங்கள்*
—உற்பத்திச் சாதனங்களின் சொந்தக்காரனாக முதலாளி—46, 47
—உற்பத்திச் சாதனங்களும் உபரி மதிப்பும்—52, 53
—உற்பத்திச் சாதனங்களின் சிக்கனம்—105
—உற்பத்திச் சாதனங்களின் மலிவாதல்—106
—உழைப்பைச் சுரண்டும் சாதனங்களாக உற்பத்திச் சாதனங்கள்—108
—சமுதாயச் சொத்தாக உற்பத்திச் சாதனங்கள்—611
—மூலதனமாக உற்பத்திச் சாதனங்கள்—1161, 1162, 1176, 1257

*உற்பத்திப் பொருள்*
—உற்பத்திப் பொருளும் வேண்டலும்—930-932
—ஆண்டு உற்பத்திப் பொருளின் மதிப்பு—1172, 73, 1198, 1199, 1205-1208, 1217-1219, 1236-1238
—மொத்த உற்பத்திப் பொருள்—1194, 1195
—மேலும் பார்க்க: உபரி மதிப்பு.

*உற்பத்தி விலை*
—இதன் இலக்கணம்—208, 209, 218, 376, 378
—மதிப்பின் மாறிய வடிவமாக உற்பத்தி விலை—210, 211, 212, 215, 217, 228, 229, 237, 259, 1196-1199
—உற்பத்தி விலையும் அடக்க விலையும்—218
—இதன் அளவின் மாற்றங்களைப் பாதிக்கின்ற நிலைமைகள்—218, 271, 272, 274, 275
—உற்பத்தி விலையும் சரக்குகளின் மதிப்பும்—228, 233-34, 273-76, 907-909, 1069, 1070, 1072, 1073
—இதற்கு பூர்ஷ்வாப் பொருளாதார அறிஞர்களின் இலக்கணம்—262
—சந்தை விலைகளின் ஈர்ப்பு மையமாக உற்பத்தி விலை—236, 237
—உற்பத்தி விலைகளின்மீது கூலி ஏற்ற இறக்கங்கள் ஏற்படுத்தும் விளைவுகள்—264-269
—உற்பத்தி விலையும் விவசாய உற்பத்திப் பொருளின் மதிப்பும்—1077, 1080, 1081-85
—உற்பத்தி விலையும் விவசாய உற்பத்திப் பொருட்களின் விலையும்—1082-85
மேலும் பார்க்க: மதிப்பு விதி.

*ஏகபோகம்*
—தொழிலில் ஏகபோகம்—257, 259, 263, 296, 300, 410, 420, 607, 610
—நிலச்சொத்தின் ஏகபோகம்—869-872, 882-884, 897-899,903-905, 1063, 1064, 1066, 1067, 1072, 1073, 1079-1082, 1096, 1097, 1113, 1114, 1228-1230.


## ஐ


*ஐரோப்பா*
—ஐரோப்பிய நாடுகளில் லாப வீதம் ஆசிய நாடுகளில் இருப்பதை விடக் குறைவு—199, 200
—19ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் தங்க வைப்பின் இயக்கம்—798-800, 802, 803
—ரஷ்யா, இந்தியா, அமெரிக்கா ஆகியவற்றி லிருந்து செய்யப்பட்ட தானிய இறக்குமதிகள் மேற்கு ஐரோப்பியப் பயிர்த்தொழில் மீது செலுத்திய அளாவல்—1028, 1029


## க


*கச்சாப் பொருள்கள்*
—கச்சாப் பொருள்களின் தரமும் லாப வீதமும்—105
—மாறா மூலதனத்தின் அங்கப் பகுதி—139, 147
—லாப வீதத்தின்மீது கச்சாப்பொருள்களின் விலையின் செல்வாக்கு—139, 142, 147, 148, 183, 184
—கச்சாப் பொருள்களும் உற்பத்திப் பொருளின் மதிப்பும்—142, 148
—கச்சாப் பொருள்களும் சமுதாய உழைப்பின் உற்பத்தித் திறனும்—143
—சுற்றோடும் மூலதனத்தின் அங்கப் பகுதி—143, 144

—மறு உற்பத்திச் செயல்முறைமீது, கச்சாப் பொருள்களின் விலைகளிலான மாற்றங்களின் அளாவல்—143, 154-160
—கச்சாப்பொருள்களின் தயாராயுள்ள சப்ளைகள் —147, 148

*கடன்*

—இதன் இலக்கணம்—658

*கடன் முறை*

—கடன் முறையும், ஒரு கொடுப்புச்சாதனமாகப் பணமும் —500, 547
—கடன் முறையின் பணிகள் —549, 551
—வர்த்தகக் கடன் செலாவணியின் வடிவங்கள்—552-53, 554
—வங்கிக் கடனின் வடிவங்கள் —553-54
—கடன் முறையும் இங்கிலாந்தில் தொழிற் சகடமும் —558, 560, 561-566, 572, 600
—கடன் மூலமான புரட்டல்—588
—லாப வீதத்தின் சமப்படுத்தலில் கடனின் பாத்திரம் —605
—கடன் முறையும் சுற்றோட்டச் செலவுகளில் சிக்கனமும்—605,723-724
—கடன் முறையும் பங்குக் கம்பெனிகளின் உருவாக்கமும்—606-607, 608, 609, 612, 613
—கடன் முறை, சமுதாயச் சொத்தைத் தனி முதலாளியின் உபயோகத்திற்குத் தருகிறது—610, 612
—கடன் முறையும் மொத்த வர்த்தகமும் —610, 611
—கடன் முறையும் மூலதனங்களின் மையப் படுத்தலும்—610-11
—கடன் முறையும், முதலாளித்துவச் சமுதாயத்தில் முரண்பாடுகள் கூர்மையடைவதும் 612-614
—கடன் முறையின் இரட்டைத் தன்மை—614, 856-858
—கடன் முறையும் செழுமைக்காலமும் —622
—கடன் முறையும் நெருக்கடியும் —640,685
—செல்வத்தின் சமுதாய வடிவமாகக் கடன் முறை—806-809
—கடன் மூலதனத் திரட்சி
—கடன் மூலதனத்திரட்சி, உழைப்பின் மீதான உடைமைப் பாத்தியதைகளின் திரட்சியாகும்—664-665
—கடன் மூலதனத் திரட்சி, நிஜமான மறு உற்பத்திச் செயல் முறையின் பெருக்கத்தைக் குறிக்கிறது—665-668, 677, 681-683
—கடன் மூலதனத் திரட்சியும் வங்கிக்காரர் களும்—666-668
—கடன் மூலதனத் திரட்சி, தொழில் மூலதனத் திரட்சியோடு தலைகீழ் விகிதாச்சாரமுடையது —682-684, 691-694
—ஆஸ்திரேலிய, கலிபோர்னியத் தங்கச் சுரங்கங் களின் கண்டு பிடிப்பு—704
—வாஸ்தமான திரட்சியிலிருந்து வேறான ஒரு வடிவமாகக் கடன் மூலதனத் திரட்சி—702-707
—கடன் மூலதனத் திரட்சியும் நெருக்கடியும் —704, 705
—கடன் மூலதனத்திரட்சியின் ஊற்றுக்கண்—706, 708-710
—கடன் மூலதனத்திரட்சியின் விசேஷ வடிவங்கள் —707-712
—கடன் மூலதனம்
—சுற்றோட்டச் செயல்முறையில் இதன் பணி—462, 463
—ஒரு விசேஷ வகைப்பட்ட சரக்காகக் கடன் மூலதனம்—462, 463, 464, 465, 475, 479, 481, 497
—இதன் பயன் மதிப்பு —475,477,479
—இதன் தோற்ற மூலங்கள்—349-50
—கடன் மூலதனத்திரள், சுற்றோடும் பணத்தி லிருந்து வேறானது—699-702
—கடன் மூலதனத்தின் பொய்த்தன்மை—712-715
—கடன் மூலதனமும் நெருக்கடியும் —719, 720
—கடன் மூலதனமும் புதுப்பிக்கப்பட்ட செயல் துடிப்பின் காலமும் —720
—கடன் மூலதனம் தொழில் மூலதனத்திலிருந்து வேறானதோர் இயக்கத்தைக் கொண்டுள்ளது—826-828
மேலும் பார்க்க: வட்டி தரும் மூலதனம்
—கடன் வங்கி முறை—768,808,837

*கடனீந்தோன்*

—கடனீந்தோனும் கடன்பட்ட அரசும் —647-649
—கடன் கொடுத்தோனுக்கும் கடன் பெற்றோ னுக்குமிடையே லாபத்தின் பிரிவினை—720

*கம்யூனிச உற்பத்தி முறை*

—கம்யூனிச உற்பத்தி முறையின்கீழ் கட்டுப்பாடு —105
—உற்பத்தியில் சமுதாயக் கட்டுப்பாடும் முறைப் படுத்தலும் கம்யூனிச உற்பத்தி முறையின் கீழ்தான் சாத்தியம் —158,249,1167-1170
—கம்யூனிச உற்பத்தி முறையின்கீழ் பயிர்த் தொழிலின் வளர்ச்சி—160,1167-68
—கம்யூனிச உற்பத்தி முறையும் உழைப்பின் உற்பத்தித் திறனும் —346
—உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி தவிர்க்க முடியாமலே கம்யூனிச உற்பத்தி முறையின் நிறுவுதலுக்கு இட்டுச் செல்கிறது—610, 611
—கம்யூனிச உற்பத்தி முறைக்கான ஒரு மாறிச் செல்லும் கட்டமாகப் பங்கு மூலதனம் —607, 609, 612
—கம்யூனிச உற்பத்தி முறையும் தொழிலாளர் களின் கூட்டுறவுத் தொழிற்சாலைகளும்—612
—கம்யூனிச உற்பத்தி முறையும் நிலச்சொத்தின் உழைப்பும்—936, 937, 1099-1101
—கம்யூனிச உற்பத்தி முறையும் உபரி உழைப்பும் —1167-1170,1210,1250, 1251

—கம்யூனிச உற்பத்தி முறையின்கீழ் சுதந்தரமும் அவசியமும் 1167-1170
—கம்யூனிச உற்பத்தி முறையும் வேலைநாளைக் குறுக்குவதும்—1169-70
—கம்யூனிச உற்பத்தி முறையின்கீழ் சமுதாய உற்பத்திப் பொருளின் பங்கீடு—1209-1212, 1248-1251
—கம்யூனிச உற்பத்தி முறையின்கீழ் உழைப்பு நேரத்தின் முறைப்படுத்தலும் சமுதாய உழைப்பின் பங்கீடும்—1214-1216
—கம்யூனிச உற்பத்தி முறையின்கீழ் கூலி—1251
—கழிவு, அதன் உபயோகம் —100, 102, 131-135
—காப்புத் தீர்வைகள்—608

*காலனிகள் (குடியேற்ற நாடுகள்)*
—காலனிகளில் உயர் லாப வீதம் —198, 199, 313, 314, 315
—காலனிகளில் வர்த்தக மூலதனத்தின் பாத்திரம் —445, 446, 447
—காலனிகளில் முதலீடு செய்யப்பட்ட மூல தனத்தின் மீதான லாபம் —822, 835-36
—காலனிகளில் தனியார் நிலச்சொத்துடைமை இல்லாத நிலை —870-71, 1042, 1070-1073
—காலனிகளில் வேறுபாட்டு வாரம்—922, 960-962
—காலனிகளிலிருந்து குறைந்த விலைகளுக்குத் தானிய ஏற்றுமதிகள் —951-953
—புராதன காலக் காலனிகளிலிருந்து தற்காலக் காலனிகளுக்குள்ள வேறுபாடு—950-953
—விவசாயக் காலனிகள்—1069-1072
—19ஆம் நூற்றாண்டின் முடிவில் ஐரோப்பிய அரசுகள் காலனிகளைக் கைப்பற்றியதும் சுரண்டியதும்—1295-1297
மேலும் பார்க்க: இந்தியா
—காலனி முறை—836-37, 1133, 1134, 1294-1297

*கிராக்கியும் சப்ளையும் (வேண்டலும் வழங்கலும்)*
—வேண்டலும் வழங்கலும், சந்தை மதிப்பும்—135, 136, 238, 239, 241-53
—முதலாளிகளின் தரப்பில் உற்பத்திச் சாதனங் களுக்கான வேண்டல்—248, 249, 250
—வேண்டலும் வழங்கலும் உற்பத்தியும் —248 50, 255, 257-58
—தொழிலாளர்களின் தரப்பில் வாழ்க்கைச் சாதனங்களுக்கான வேண்டல் —248, 491
—உற்பத்திகர வேண்டல்—250
—சரக்குகளுக்கான சமுதாயத் தேவை—250
—வேண்டல், வழங்கல் ஆகியவற்றின் முரணிலை —250-52
—வேண்டலும் வழங்கலும் சந்தை விலைகளும்—252
—வேண்டல் வழங்கல் ஆகியவற்றின் விகிதாச் சாரம், பயன் மதிப்பு பரிவர்த்தனை மதிப்போடு கொண்டுள்ள உறவைத் தொகுத்துரைக்கிறது—255
—வேண்டலும் வழங்கலும் சமுதாயத்தின் மொத்த வருவாயின் பிரிவினையும்—257
—வேண்டலும் வழங்கலும் சரக்கு மூலதனமும்—722-724
—பணமில்லாமல் சரக்கு உற்பத்தியை நீடிப்பது பற்றி பிரௌதான்—860,
—குடியானவனின் சிறு நிலவுடைமை —1142, 1143, 1144, 1146-1159,
மேலும் பார்க்க: சிறு நிலச்சொத்து

*குத்தகை*
—குத்தகைக் காலம்—875-877,957-958
—குத்தகையும், நிலத்தின் உள்ளிணைக்கப்பட்ட மூலதனத்தின் மீதான வட்டியும்—875
—பயிர்ப் பகிர்வு —872
—குத்தகையும் வார நிர்ணயிப்பும்—957-958
—குத்தகைப்பணம்—882-885, 1068, 1069, 1070
—குத்தகையும் விவசாயத் தொழிலாளர்களின் கூலியும் —887-890, 1068-1072
—குத்தகையும் வாரமும்—1068,1069,1070

*குவியல்*
—உற்பத்திச் சாதனங்களின் குவியல்—99, 117, 350-353
—தொழிலாளர்களின் குவியல்—103
—மூலதனக் குவியல்(திரட்டல்)—111, 289, 319, 328, 329, 331, 332, 348, 838
—மூலதனக் குவியலும், மூலதன மையப் படுத்தலும் —319, 326
—வர்த்தகக் குவியல்—392
—பண மூலதனத்தின் குவியல்—490
—கடன் முறையின் குவியல் —496
—தேசிய வைப்பு நிதியின் குவியல்—632
—கொடுப்புகளின் குவியல் —721

*கூட்டுச் சமூகமும்*
—கூட்டுச் சமூகமும் உற்பத்திப் பொருள்கள் சரக்குகளாகப் பரிணமிப்பதும்—233-234
—இந்தியாவில் கூட்டுச் சமூகம் —1028, 1117, 1123, 1253
—ரஷ்யாவில் கூட்டுச் சமூகம்—1028, 1029
—போலந்திலும் ருமேனியாவிலும் கூட்டுச் சமூகம் —1142, 1143,
—கூட்டுமுறைச் சமுதாயம்—1186, 1187
—கூட்டுச் சமூகத்தின் குணக்குறி—1272
—மார்க் சமூகம்—1281, 1283-1285
—கூட்டுறவுத் தொழிற்சாலை—529, 530, 612

*கூலி*
—உழைப்புச் சக்தியின் மதிப்பின் மாறிய வடிவமாகவும் விலையாகவும் கூலி—33, 51, 649, 650,1164-1169,1225-1229,1242-1244
—கூலியும் லாப வீதமும் —60,61, 62, 68, 69, 78, 79, 138, 140, 237, 238, 264, 721, 1220

—கூலியும் பத்துமணி நேர வேலைநாளின் நுழைப்பும் —141
—கூலியும் உற்பத்தி விலைகளும் —264, 265, 266, 267, 268, 269, 289, 1223
—கூலியும் உழைப்பின் உற்பத்தித் திறனும்—289
—உழைப்புச் சக்தியின் மதிப்புக்குக் கீழாகக் கூலியைத் தாழ்த்துதல்—310, 337, 1222, 1223
—கூலியும் தொழிலாளர்களின் தேவைப்பாடு களும் —325
—வர்த்தகத் தொழிலாளியின் கூலி—396, 397
—கூலியும் உழைப்புச்சக்தியின் வேண்டலும் வழங்கலும்—482, 1232-1234
—தேர்ச்சியடைந்த உழைப்புக்கான கூலி—527
—கூலியும் நிலவாரமும் —882-885
—விவசாயத் தொழிலாளர்களின் கூலி — 887-892, 895
—கூலியும் உழைப்பும்—1160-1162, 1172-1175
—வருவாய்களின் எல்லைத்தடையின் அடிப்படை யாகக் கூலி—1225
—கூலியின் வரம்புகள் —1226
—கூலியும் போட்டியும்—1232-1234
—எல்லா உற்பத்தி முறைகளுக்கும் பொதுவான, கூலியின் அடிப்படை —1258, 1259

*கொச்சை பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரம்*
—உற்பத்திச் செலவை வேண்டலும் வழங்கலும் முறைப்படுத்துவது பற்றி மால்தஸ்—253
—கொச்சைப் பொருளாதார அறிஞர்களின் முறையியல் பற்றிய விமர்சனம் —304, 1116, 1117, 1164-1167, 1180, 1181
—கொச்சைப்பொருளாதார அறிஞர்களும் வியாபார மூலதனத்தையும் தொழில் மூல தனத்தையும் குழப்பிக்கொள்கின்றனர்—354
—வர்த்தகம், உற்பத்தி ஆகியவற்றின் பரஸ்பர உறவு பற்றி ஸே—369
—வணிக லாபம், சரக்கு மூலதனம், பண மூலதனம் ஆகியவை பற்றிக் கொச்சைப் பொருளாதார அறிஞர்கள்—434, 435
—சரக்கு மூலதனம் பற்றி ரோஷர் —435
—வட்டி பற்றிப் பொஸாங்க்வெட் —503
—லாபம் பற்றிக் கொச்சைப் பொருளாதார அறிஞர்கள் —1153, 1154
—மூலதனம் பற்றிக் கொச்சைப் பொருளாதார அறிஞர்கள் —535
—'செலாவணிக் கோட்பாட்டுக்' கருத்துப் பிரிவு —578, 579, 580, 771, 772, 773-779, 781, 782, 794-796
—மூலதனம் குறித்து ஓவர்ஸ்டோனின் குழப்பம் —580, 581, 582, 583, 584, 595, 596, 597, 603
—மூலதனம் பற்றி ஃபுல்லர்ட்டன் —624, 625, 626, 627, 628, 630, 631, 632, 640, 641, 645
—இன்ப நுகர்ச்சி பற்றிய விமர்சனம்—712
—மிகையுற்பத்தி நெருக்கடிகள் பற்றிக் கொச்சைப் பொருளாதார அறிஞர்கள் —780, 781
—1844ஆம் வருட வங்கிச் சட்டம் பற்றி ஜான் ஸ்டுவர்ட்மில் —784
—ஜான் ஸ்டுவர்ட் மில்லின் பணத் தத்துவம்—784
—சின்ன ஷில்லிங் கருத்துப்பிரிவு—790
—முதலாளித்துவ உற்பத்தி முறை பற்றிக் கேரி— 880
—வாரம் பற்றி ராட்பெர்ட்டஸ்—1104
—குறைந்து செல்லும் விளைபயன்கள் பற்றிய மால்தஸின் தத்துவம் குறித்து விமரிசனம் — 935, 936, 952, 953

## ச

*சந்தை மதிப்பு*
சமுதாய உழைப்பின் உற்பத்தித் திறன்
—மூலதனத்தின் உற்பத்தித் திறனாகச் சமுதாய உழைப்பின் உற்பத்தித்திறன் —52, 1113-1114
—சமுதாய உழைப்பின் உற்பத்தித் திறனும் மாறா மூலதனத்தை மிச்சம்பிடித்தலும் —96, 97, 98, 100, 101, 102, 103, 104
—சமுதாய உழைப்பின் உற்பத்தித் திறனும் லாப வீதமும் —108, 109, 347, 348, 349, 350
—சமுதாய உழைப்பின் உற்பத்தித் திறனும் இயந்திரங்களின் உற்பத்தியும் —142, 143, 344, 345, 346
—சமுதாய உழைப்பின் உற்பத்தித் திறனும் மூலதனத்தின் அங்கக உட்சேர்க்கையின் அதிகரிப்பும் —214, 280, 282, 329, 330, 1073-1076
—இதன் வளர்ச்சி மட்டம் —216-17
—சமுதாய உழைப்பின் உற்பத்தித் திறனும் சரக்கின் மதிப்பும் —225, 226, 253, 345, 346, 350-51, 908-910
—முதலாளித்துவச் சமுதாயத்துக்கு இதன் முக்கியத்துவம் —260-61
—சமுதாய உழைப்பின் உற்பத்தித் திறனும் லாபமும் —260, 261, 302-303, 304, 312, 314
—லாப வீதத்தின் சரியும் போக்கு பற்றிய விதி — 282, 284, 285
—சமுதாய உழைப்பின் உற்பத்தித் திறனும் திரட்சியும் —287, 288, 289, 1222, 1223
—சமுதாய உழைப்பின் உற்பத்தித் திறனும் கூலியும் —289
—சமுதாய உழைப்பின் உற்பத்தித் திறனும் மக்கள் தொகையும் —294, 329, 330, 331, 353
—தனிச் சரக்கின் விலை —297, 298, 302, 304, 350
—சமுதாய உழைப்பின் உற்பத்தித் திறனும், உற்பத்திப் பெருக்கமும் —327
—சமுதாய உழைப்பின் உற்பத்தித் திறனும் உழைப்புச் சக்தியை ஈடுபடுத்தலும் —327
—சமுதாய உழைப்பின் உற்பத்தித் திறனும் பயன் மதிப்புகளின் திரளும் —329

—சமுதாய உழைப்பின் உற்பத்தித் திறனும் மூலதனமும் —328, 330
—சமுதாய உழைப்பின் உற்பத்தித் திறனின் வளர்ச்சியும் முதலாளித்துவ உற்பத்தி முறையும் —343, 344, 345, 346, 348, 349, 350
—சமுதாய உழைப்பின் உற்பத்தித் திறனும் அதன் வளர்ச்சியிலான விகிதாச்சாரப் பொருத்த மின்மையும் —343
—சமுதாய உழைப்பின் உற்பத்தித் திறனும் சுற்றோடும் மூலதனமும் —345
—சமுதாய உழைப்பின் உற்பத்தித் திறனும் நிலை மூலதனமும் —345
—இதன் அதிகரிப்பு —345
—சமுதாய உழைப்பின் உற்பத்தித் திறனும் கம்யூனிச உற்பத்தி முறையும் —346-47, 1167-1172
—சமுதாய உழைப்பின் உற்பத்தித் திறனும், கூலித்தொழிலாளர்கள் எண்ணிக்கையின் ஒப்பீட்டுக் குறைவும் —349
—சமுதாய உழைப்பின் உற்பத்தித் திறனும் போட்டியும் —351
—சமுதாய உழைப்பின் உற்பத்தித் திறனும் நிலை மூலதனத்தின் தேய்மானமும் —351
—இயற்கையின் உழைப்புற்பத்தித் திறன்—1056
—சமுதாய உழைப்பின் உற்பத்தித் திறனும் சமுதாயத்தின் செல்வமும் —1167, 1168

*சமுதாயத்தின் செல்வம்*
—முதலாளித்துவத்தின்கீழ் இதன் பகைத்தன்மை —611
—இதன் சமுதாய இயல்பு—612, 809
—சமுதாயத்தின் செல்வமும் உழைப்பின் உற்பத்தித் திறனும்—1167-1170

*சமுதாயம்*
—இதன் செல்வம்—612, 1169-1170
—இதன் பொருளாதார, அரசியல் வடிவமைப்பு—1123-1126, 1166, 1167

சராசரி லாபம் —188, 203, 208, 209, 210, 221, 224, 226, 228, 229, 238, 258, 260, 262, 276

*சாஸ்திரிய பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரம்*
—சரக்குகளின் உற்பத்தி விலைகள், மதிப்புகள் ஆகியவற்றின் பரஸ்பர உறவு பற்றி ரிக்கார்டோ—237
—நிலவாரம் பற்றி ரிக்கார்டோ—242, 920, 936, 964, 967, 1072, 1073, 1102, 1103
—பொது லாப வீதத்தின்மீது அந்நிய வர்த்தகத்தின் செல்வாக்கு பற்றி ரிக்கார்டோ —313, 314
—லாப வீதம் பற்றி ரிக்கார்டோ.—319, 320, 322
—வர்த்தகம், தொழில் ஆகியவற்றின் பரஸ்பர உறவு பற்றி நியூமன்—369
—தொழில் மூலதனம் பற்றி ரிக்கார்டோவும் ஸ்மித்தும்—436
—வணிக மூலதனம் பற்றி ரிக்கார்டோவும் ஸ்மித்தும்—436
—வட்டி, கடன், பணம் ஆகியவைபற்றி டுக்—502, 503, 504, 549-551, 615-622
—மேலாளரின் சம்பளம் பற்றி ஸ்மித்—522-523
—பணக் கடன் தருதலில் மூலதனத்தின் பாத்திரம் பற்றி ஸ்மித்—657
—பணத்தின் மதிப்பு பற்றிய ரிக்கார்டோவின் தத்துவம்—770-773
—நிலவாரம் பற்றி ஸ்மித் —869, 870, 1087-1090, 1093, 1094, 1096-1100, 1118
—சாஸ்திரீய பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரம், முதலாளித்துவ உற்பத்தி முறையை ஒரு சாசுவதமான இனமாகக் கருதுகிறது—869.
—நிலவாரம் பற்றி பெட்டி—1111-1114
—இதன் சிறப்புகள்—1184-1187
—இதன் குறைகள் —1184-1187, 1193-1195
—ஸ்மித்தின் சூத்திரம் பற்றிய விமரிசனம் —1199-1203
—ரிக்கார்டோ, மற்றும் ஸ்மித்தின் சூத்திரம் —1199-1202

*சிக்கனம்*
—மாறா மூலதனத்தின் சிக்கனமும் லாப வீதமும் —73, 74, 507
—மாறா மூலதனத்தின் சிக்கனமும் உழைப்பின் உற்பத்தித் திறனின் அதிகரிப்பும் —97, 101, 102, 103
—உற்பத்தி நிலைமைகளின் சிக்கனம் —97, 98
—மாறா மூலதனத்தின் சிக்கனமும் உழைப்பின் சமுதாயத் தன்மையும் —98, 100, 101
—இயந்திரங்களின் தொடர்ச்சியான அபிவிருத்திகளின் விளைவாக சிக்கனம் —101
—மாறா மூலதனத்தின் உபயோகத்தில் சிக்கனம் —103, 111
—உற்பத்திச் சாதனங்களில் சிக்கனம்—105
—விசையின் உற்பத்தி மற்றும் செலுத்துகையிலும் கட்டடங்களிலும் சிக்கனம்—125, 132
—கழிவு - உற்பத்திப் பொருள்களின் பயன் பாட்டில் சிக்கனம் —132, 134
—கண்டுபிடிப்புகள் மூலமாக, மாறா மூலதனப் பிரயோகத்தின் சிக்கனம் —136
—கொடுப்புகளின் சிக்கனம்—713
—சுற்றோட்டச் சாதனங்களின் சிக்கனம் —731
—சிறு உற்பத்தியாளன், சிறு உற்பத்தி —232, 234, 868, 869, 980, 1123-1132, 1134-37, 1148, 1149, 1153-1156, 1274,1276

*சிறு நிலச் சொத்து*
—சிறு வீதச் செயல்பாட்டுக்கு நிலச்சொத்தின் வடிவம் —868, 869
—சிறு வீத நிலச்சொத்தின் சீரழிவுக்கான காரணங்கள்—1148-49
—சிறு நிலச் சொத்தும் உழைப்பின் உற்பத்தித் திறனின் வளர்ச்சியும் —1148, 1149
—சிறு நிலச் சொந்தக்காரன்—1136, 1137, 1140-1148

—சிறுநிலச் சொத்தும் நிலத்தின் விலையும்—1150-1158
—சிறுநிலச் சொத்து சிருஷ்டிக்கும் மாயைகள்—1153
—முதலாளித்துவ உற்பத்திமுறையின் அடிப்படையாகச் சிறுநிலச் சொத்தின் பறிமுதல்—1157
—சிறுநிலச் சொத்தும் நிலத்தின் பயன்பாடும்—1156-1159
மேலும்பார்க்க: குடியானவர்களின் சிறுநிலவுடைமை

*சீனா*
—சீனாவின் முதலாளித்துவத்துக்கு முந்தைய உற்பத்தி முறை—449
—சீனாவுக்கு ஐரோப்பிய, அமெரிக்க சரக்குகளின் இறக்குமதிகள்—449, 451, 560, 804
—சீனாவில் ஆங்கிலேய அபின் வியாபாரம்—560, 777-779, 817
—சுயேச்சையான குடியானவன்—922, 959, 1139, 1137, 1143, 1144, 1145, 1146, 1147, 1148, 1250, 1276, 1281, 1290
மேலும் பார்க்க: சிறு நிலச் சொந்தக்காரன்

*சுற்றோட்ட இடைச்சாதனம்*
—சுற்றோட்ட இடைச்சாதனமும் கடனும் —615
—சுற்றோட்ட இடைச்சாதனமும் தொழிற்சகடமும்—740-742
—சுற்றோட்ட இடைச்சாதனமும் வட்டி வீதமும்—744-747
—சுற்றோட்ட இடைச்சாதனமும் அந்நிய வர்த்தகமும்—747-752
—சுற்றோட்டச் செலவுகள்—374, 382, 384, 393, 402, 424

*சுற்றோட்டம்*
—சுற்றோட்டத்திலிருந்து உபரி மதிப்பு வருவிக்கப்படுவது போல் தோன்றுதல்—44, 49, 1180-1181
—சுற்றோட்டக் காலம் —49, 87, 101, 370, 403
—மறு உற்பத்திச் செயல்முறையின் ஒரு படலமாகச் சுற்றோட்டம் —369, 384, 1178-1181
—சுற்றோட்டமும் சரக்குகளின் மதிப்பும்—370

*சுற்றோடும் மூலதனம்*
—சுற்றோடும் மூலதனமும் அடக்க விலையும்—35, 36, 37
—சுற்றோடும் மூலதனத்தின் பண வடிவம் —92, 93
—சுற்றோடும் மூலதனம் சரக்கு உற்பத்திப் பொருளின் மதிப்பும் —142
—சுற்றோடும் மூலதனமும் உழைப்பின் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியும் —343
—சுற்றோடும் மூலதனத்தின் கடன் —465
—செலாவணிக் கோட்பாடு—578, 631, 770, 773, 777, 778, 779-781, 788-790
—சோஷலிசப் புரட்சி—349, 612, 1101
சோஷலிசம் - பார்க்க: கம்யூனிச உற்பத்திமுறை

## த

*தங்கம்*
—சர்வப்பொதுப் பணமாகத் தங்கம் —426, 427
—தங்கத்துக்கான கிராக்கி —599, 601, 602, 639, 641, 642
—உற்பத்தி மூலங்கள் —797, 798
—செல்வத்தின் சமுதாயத் தன்மையின் தெரிவிப்பாகத் தங்கம் —808, 809
மேலும் பார்க்க: விலையுயர்ந்த உலோகம்
—தனிச் சொத்து - தனிச் சொத்தும் முதலாளித்துவ உற்பத்தி முறையும்—352-53, 606, 857
—தனியார் நிலச் சொத்து - பார்க்க: பெரும் நிலச் சொத்து

*தொழில்முனைவில் லாபம்*
—தொழில் முனைவில் லாபமும் வட்டி வீதமும் —504-509
—தொழில் முனைவில் லாபமும் வட்டியும் —506, 514-520
—முதலாளியின் கண்ணோட்டத்தில் தொழில் முனைவின் லாபம் —517-528, 530
—தொழில் முனைவில் லாபமும் மேலாண்மைக் கூலியும் —528-532

*தொழிலாளி*
—தொழிலாளியும் அவனது உழைப்பின் சமுதாயத் தன்மையும் —107
—தொழிலாளியும் அவனது உழைப்பு நிலைமைகளிலான சிக்கனமும் —110, 111, 112, 113
—தொழிற்சாலையில் தொழிலாளியின் உழைப்பு நிலைமைகள் —112-125
—தொழிலாளி சுரண்டப்படுதல் —188, 189, 259, 261, 306, 307, 309, 322, 323, 328, 329, 338, 339, 341, 525, 526
—தொழிலாளியும் லாப வீதமும் —233, 237-38
—தொழிலாளியின் வாழ்க்கை நிலைமைகள்—249
—தொழிலாளியும் முதலாளியும்—259, 260-262, 517, 518
—வர்த்தகத் தொழிலாளி —387, 388, 398, 399, 400
—விவசாயத் தொழிலாளி (கூலித்தொழிலாளி) (நிலத்தில்)—874, 1136
—தனது தனிப்பட்ட உழைப்புச் சக்தியின் விற்போனாகத் தொழிலாளி —1171
—தொழிற் குழுமங்கள் —607-610

*தொழிற் சகடம்*
—பிரிட்டனில் தொழிற்சகடம் —559, 702, 703
—சுபீட்சக்காலங்களில் தொழிற் சகடம் —621-623, 683, 684

—தொழிற்சகடமும் நெருக்கடியும் —624-26, 678, 686
—தொழிற்சகடமும் மந்தமும் —678, 680, 681, 684, 685, 692, 693
—தொழிலின் வளர்ச்சியோடு, சகடக்காலத்தின் மாற்றம்—684
மேலும் பார்க்க: பொருளாதார நெருக்கடிகள், மூலதனத்தின் மிகையுற்பத்தி.

## ந

*நகரம்*
—நகரங்களின் வளர்ச்சியில் வர்த்தகத்தின் பாத்திரம்—448
—நகரமும் நாட்டுப்புறமும் —1136, 1139, 1141
*நாணயம்*
—நிதியாதிக்கக் கும்பல் (பணவுடைமைக் கும்பல்—441, 609, 716, 718, 768
*நிலத்தின் விலை*
—நிலத்தின் விலையும் ஏகபோக விலையும் —1099, 1153
—நிலத்தின விலையும் விவசாய உற்பத்திப் பொருளின் விலையும் —1153, 1102, 1106
—இதன் இலக்கணம் —1150, 1152
—சிறுவீதப் பயிர்த்தொழிலில் இது வகிக்கும் பாத்திரம் —1148, 1149, 1157
—நிலத்தின் விலையும் வட்டி வீதமும் —1138, 1139
—நிலத்தின் விலையும் தனியார் நிலச்சொத்துடைமையின் வடிவமும் —1158
*நிலப் பிரபுத்துவம்*
—நிலப் பிரபுத்துவ உற்பத்தி முறையின் குணக் குறி—438, 439, 445, 447, 450, 451
—நிலப் பிரபுத்துவமும் நிலப் பிரபுவும் —438, 445, 842, 1122
—நிலப் பிரபுத்துவ உற்பத்தி முறையிலிருந்து முதலாளித்துவ உற்பத்தி முறைக்கு மாறிச் செல்லுதல்—447, 448, 454
—நிலப் பிரபுத்துவமும் லேவாதேவியும் —840-42
—நிலப் பிரபுத்துவமும் நிலச் சொத்தும் —869-72
—நிலப் பிரபுத்துவமும் பொருளாதார ரீதியல்லாத நிர்ப்பந்தமும்—1117
—நிலப்பிரபுத்துவத்தின் கீழ் நாட்டுப்புறத்துக்கும் நகரத்துக்கும் இடையிலான உறவுகள்—1138, 1139
*நிலம்*
—நிலமும் அதில் உள்ளிணைக்கப்பட்ட மூலதனமும் —874-76
—கட்டட நோக்கங்களுக்கு நிலத்தைப் பயன் படுத்துதல் —878
—முதலாளித்துவத்தின் கீழ் நிலத்தின் தேசிய மயமாக்கல் —878-80, 936-37
—மதிப்பும் விலையும் —879, 884, 897, 916, 949-50, 1106, 1107
—நிலத்தின் விற்றலும் வாங்குதலும் —901
—நில ஏகபோகம் —914
—நிலத்தில் இயற்கை வளமை —921, 922, 923, 924, 947, 948, 950, 951, 1053, 1055, 1056, 1057, 1091, 1107, 1108, 1156, 1158, 1162
—சாகுபடி செய்யப்படும் நிலத்தை விரிவாக்குதல் —950
—முதலாளித்துவ உற்பத்தி முறையின் கீழ் நிலத்தினைப் பயன்படுத்திக் கொள்ளுதல் —1156, 1157
—ஒவ்வொர் உற்பத்திச் செயல் முறையினுடையவும் பொருளியல் மூலகம் —1164
—நிலம் மதிப்பைப் படைப்பதில்லை —1164, 1165
*நில வாரம்*
—நில வார வீதம் —320, 321, 1102
—சராசரி லாபத்தின் மீதான உபரியாக நில வாரம் —321, 322, 1111, 1137, 1139, 1141
—நில வாரத்தின் குணக்குறிகள் —874, 882, 884, 897, 898
—நிலத்தில் உள்ளிணைக்கப்பட்ட மூலதனத்தின் மீதான வட்டியிலிருந்து இதற்குள்ள வித்தியாசம் —873, 874, 882-83
—பயிர்த்தொழிலின் விவேகமானதொரு வளர்ச்சிக்கு இடையூறாக நில வாரம் —876-77
—நில வாரமும் வட்டி வீதமும் —881-82
—நில வாரமும் விவசாயத் தொழிலாளர்களின் கூலியும் —887-892
—உபரி உற்பத்திப் பொருளை நில வாரத்தோடு குழப்பிக்கொள்ளுதல் —894
—நில வாரமும் விளைபொருள் வாரமும் —897-899
—நில வாரத்தின் அளவு, சமுதாய உழைப்பின் வளர்ச்சியின் விளைவாகும் —903, 905-906
— நில வாரமும் பண வாரமும் —903, 1133, 1134, 1141
—நில வாரம் உபரி மதிப்பின் ஒரு பகுதியாகும் —906
—உற்பத்திப் பொருளின் விலையிலான அதிகரிப்புக்குக் காரணம் —1078, 1080
—ஏகபோக நில வாரம் —1080, 1189
—கட்டட வாரம் —1097, 1098
—சுரங்க வாரம்—1096, 1099
—நில வாரமும் மூலதனத்தின் மீட்டெடுப்பும் —1097
—நில வாரமும் உற்பத்தி உறவுகளும் —1101
—நில வாரமும் நிலத்தின் விலையும் —1101-1109
—நில வாரமும் விவசாய உற்பத்திப் பொருளின் விலையும் —1102
—நில வாரத் திரளின் வளர்ச்சி—1109

—நில வாரம் மண்ணிலிருந்து பிறந்தது போல் தோன்றுதல் —1118
—விளைபொருள் வாரம் —1118, 1120, 1128, 1129
—உழைப்பு வாரம் —1122,-23, 1129
—நில வாரமும் நிலச்சொந்தக்காரனாக அரசும்—1124
—நில வாரமும் சிறு நிலவுடைமையும் —1144, 1146, 1147, 1148
—கொடுப்பு நிலுவையும் வர்த்தக நிலுவையும் —688, 717, 719, 833

*நிலை மூலதனம்*

—நிலை மூலதனமும் அடக்க விலையும் —35, 36, 37, 38, 39, 40
—நிலை மூலதனத்தின் தேய்மானம் —36, 102, 142, 147, 150, 299. 351, 1108
—முதலாளியின் மனநிற்பதிகின்ற ஒரே வித்தியாசம், நிலை மூலதனம்-சுற்றோடும் மூலதனமென்ற வித்தியாசமே —92
—மாறா மூலதனத்தின் பகுதி —96, 100, 165, 280
—நிலை மூலதனத்தின் மறு உற்பத்தி - 98.
—நிலை மூலதனமும் பண்பு சரக்கு உற்பத்திப் பொருளின் மதிப்பும் —103, 142
—உழைப்பின் உற்பத்தித் திறனின் வளர்ச்சியோடு, நிலை மூலதனத்தின் மதிப்பிலேற்படும் மாற்றங்கள் —343, 344
—நிலை மூலதனத்தின் முன்னீடு —463-466
—பயிர்த்தொழிலில் நிலை மூலதனம் —874

*நுகர்வு*

—உற்பத்திக்கும் நுகர்வுக்கும் இடையிலான முரண்பாடு —245, 246, 248, 323-325, 340, 341
—உற்பத்திகர நுகர்வு—249
—நுகர்வும் போட்டியும்—246
—நுகர்வு, முதலாளித்துவ உற்பத்தியின் நோக்கமல்ல—323.
—நுகர்வும் உற்பத்தியும் —341
—நுகர்வும் வணிக மூலதனத்தின் புரள்வும்—405
—நுகர்வின் வரம்புகள்—674
—நுகர்வும் வாழ்க்கையின் அவசியப் பொருள்களின் மலிவாதலும் —931
—முதலாளித்துவத்தின்கீழும் சோஷலிசத்தின் கீழும் தொழிலாளியின் நுகர்வின் பரிமாணம் —1250

*நுகர்வுச்சக்தி*

—சமுதாயத்தின் நுகர்வுச்சக்தி—323
—தொழிலாளர்களின் நுகர்வுச்சக்தி—675
—உற்பத்தியிலீடுபடாத வர்க்கங்களின் நுகர்வுச் சக்தி—687

**ப**

*பங்கு*

—பங்கும் பங்குச் சந்தையில் சூதாட்டமும்—611
—பங்கும், உற்பத்தியின் சமுதாயத் தன்மைக்கும் தனிப்பட்ட தன்வயப்படுத்தலுக்கும் இடையிலான முரண்பாடும் —611
—ஓர் உடைமையுரிமையாக, ஒரு பொய் மூலதனமாகப் பங்கு —650, 651, 652
—சுற்றோட்டமும் பங்கின் சந்தை மதிப்பும் —651-654
—முன்னுரிமைப் பங்குகளும் பின்னுரிமைப் பங்குகளும் —656

பங்குக் கம்பெனி

—பங்குக் கம்பெனியும் பொது லாப வீதம் சரிவதும்—608
—பங்குக் கம்பெனியும், மறு உற்பத்திச் செயல் முறையில் மூலதனத்தின் பணி முதலான உடைமையிலிருந்து பிரிக்கப்படுவதும்—527, 528, 529, 606-608
—மேலாண்மைக் கூலித் தொழில் முனைவின் லாபங்களிலிருந்து பிரிக்கப்படுதல்—528-531, 597, 598
—பங்குக் கம்பெனிகளில் லாபம் —529-531, 606-608
—பங்குக் கம்பெனியும் போட்டியும்—607-610
—முதலாளித்துவ உற்பத்தியின் வளர்ச்சியில், அடுத்த உயர்ந்த கட்டமாக பங்குக் கம்பெனி—607, 608, 1295-96
—பங்குக் கம்பெனியின் ஒழுங்கமைப்பு —608-610
—ஐக்கிய காரப்பொருள் பொறுப்புக் கழகம் —609, 1296
—19-ஆம் நூற்றாண்டில் இரண்டாம் பாதியின் போது பங்குக் கம்பெனியின் வளர்ச்சி —1296
—பங்குச் சந்தை—610-11, 716, 1297

*பங்கு மூலதனம்*

—பங்கு மூலதனமும் பொது லாப வீதமும் —317
—கூட்டமைந்த தனி நபர்களின் மூலதனமாகப் பங்கு மூலதனம் —606, 607
—பங்கு மூலதனத்தின் முரண்பாடு—606-610
—ஒரு புதிய உற்பத்தி வடிவத்துக்கான மாறிச் செல்லும் படலமாகவே பங்கு மூலதனம் —607-610, 612, 613

*சரக்கின் மதிப்பு*

—சரக்கின் மதிப்பும் அடக்க விலையும் —28
—இதன் இலக்கணம் —48, 109, 198, 1231, 1235, 1258-59
—சரக்கின் மதிப்பும் உற்பத்தி விலையும் —233, 234, 1229, 1232, 1291
—சரக்குகள் அவற்றின் மதிப்புக்கே விற்கப்படுவதை நிர்ணயிக்கும் நிலைமைகள்—234, 235, 240, 248
—சரக்கின் மதிப்பும் சந்தை மதிப்பும் —235, 237, 937, 938, 939, 1231, 1238, 1239
—தனி மதிப்பு—235, 241-244
—சராசரி மதிப்பு—244

—சரக்கின் மதிப்பும் சரக்கு விலையும் —255, 1242, 1243
—இதன் சமுதாயத் தன்மை—939
—சரக்கின் மதிப்பும் ஏகபோக விலையும் —1229
—சரக்கின் மதிப்பு உற்பத்தியை முறைப் படுத்துகிறது—1257
—சரக்கின் மதிப்பு பற்றி லோரியா —1269, 1270
—சரக்கின் மதிப்பு பற்றிச் சோம்பார்ட் —1273
—சரக்கின் மதிப்பு பற்றி ஸ்மித்—1274, 1275

*சரக்குப் பரிவர்த்தனை*

—சரக்குகள் அவற்றின் மதிப்புகளுக்கே பரிவர்த் தனை செய்யப்படுதல் —229-234, 249, 1276, 1278, 1282
—மூலதனங்களின் உற்பத்திப் பொருட்களாகச் சரக்குகளின் பரிவர்த்தனை—230-234
—கூட்டுச் சமூகங்கள் இடையிலான சரக்குப் பரிவர்த்தனை —233, 234, 1276

*சரக்கு(பண்டம்)*

—சரக்கின் தோற்றுவாய் —233, 234
—சரக்கும் பணமும் —240
—பயன்பதிப்பாகச் சரக்கு —243, 900, 901
—சரக்கின் உருமாற்றம் —437, 438, 439
—விவசாய உற்பத்திப் பொருட்கள் சரக்காக மாற்றப்படுதல் —902-904
—பயன்மதிப்பு, பரிவர்த்தனை மதிப்பு ஆகியவற்றின் ஒன்றிப்பாக சரக்கு —915-918

*பணச்சந்தை*

*பணம்*

—ஒரு சுற்றோட்டச் சாதனமாகப் பணம் — 429-432, 456-458, 745-748
—பணம் மூலதனமாக மாற்றப்படுதல் —456-58
—பணச்சந்தை—496-500, 716-718
—ஒரு மூலதன வடிவமாகப் பணம் —579-81, 616-17, 619-20, 623-24
—கடன் பணமாகப் பணம் —605, 723,-726, 755-756
—வருவாயாகப் பணம்—619-20, 623-24
—சுற்றோடும் பணத்தின் அளவு—619-622
—பணமும் மறு உற்பத்தி செயல்முறையும்— 620-623
—ஒரு நெருக்கடிக் காலத்தில் பணம் —623-624
—மதிப்பின் அறுதி வடிவமாகப் பணம்—641, 642, 723-726, 1232
—சர்வப் பொதுச் சமதையாகப் பணம்—723
—பணமும், சமுதாயத்தின் பல்வேறு அங்கப் பகுதிகள் மத்தியிலான பரிவர்த்தனையும் — 747-48
—செல்வத்தின் சமுதாயத்தன்மையின் தெரிவிப் பாகப் பணம் —809
—உழைப்பின் சமுதாயத் தன்மையின் தெரிவிப் பாகப் பணம்—859

*பண மூலதனம்*

—பண மூலதனமும் தொழில் முதலாளியின் சரக்கு மூலதனமும்—645-646
—பல மூலதனமும் தொழில் வளர்ச்சியும்— 500-501
—முதலாளித்துவ உற்பத்தி முறையின் வளர்ச்சி யோடு பண மூலதனத்தின் குவியல்—528-531
—பண மூலதனத்துக்கான கிராக்கி —723

*பண(தன) வணிக மூலதனம்*

—தொழில் மூலதனத்தின் ஒரு தனிப்படுத்தப்பட்ட பகுதியாக தன வணிக மூலதனம் —422-425
—இதன் உருமாற்றம்—422, 423, 424
—இதன் இயக்கம்—422, 423, 424, 425
—இதன் தோற்றுவாய் —424, 433
—தன வணிக மூலதனமும் வர்த்தக மூலதனமும் —430, 431, 421, 422
—பண (தன) வணிக மூலதனத்தின் லாபம்—432, 433
மேலும் பார்க்க: வணிக மூலதனம்.

*பயன் மதிப்பு*

—இயந்திரங்களின் பயன் மதிப்பு—101, 102
—பயன் மதிப்பும் முதலாளித்துவ உற்பத்தி முறையும் —257, 258, 810
—சரக்கின் பயன் மதிப்பு —369, 370
—மூலதனமாகப் பயன்படும் பணத்தின் பயன் மதிப்பு—457, 458, 463, 464, 465, 474-77, 480-81, 534-535
—பரிவர்த்தனை மதிப்பின் ஏந்தியாகப் பயன் மதிப்பு—916, 917

பயிர்த்தொழில் (விவசாயம்)

—பயிர்த்தொழிலின் விஷயத்தில் மூலதனத்தின் மதிப்பின் மாற்றம் —150, 151
—முதலாளித்துவ அமைப்பு ஒரு விவேகமான பயிர்த்தொழிலுக்கெதிராகச் செயல்படுகிறது — 160, 1157
—பயிர்த்தொழிலும் பட்டறைத்தொழிலும்—448, 449, 450, 451
—பயிர்த்தொழிலும் மறு உற்பத்திச் செயல் முறையும்—627-628
—சிறு குடியானவப் பயிர்த்தொழிலின் தன்மை கள்—868-869
—பயிர்த்தொழிலின் முதலாளித்துவத் தன்மை— 868, 876
—பயிர்த்தொழிலும் நிலத்தின் தனிச்சொத்தும்— 872-874
—பயிர்த்தொழிலும் வர்க்கங்களும்—874
—ஒரு விவேகமான பயிர்த்தொழிலுக்கெதிராக வாரம் செயல்படுகிறது—875-877
—இங்கிலாந்தில் பயிர்த்தொழில்—891-92, 960
—பயிர்த்தொழிலில் ஒப்பீட்டு மிகையுற்பத்தி— 954, 955

—பயிர்த்தொழிலின் இயற்கைவிதிகள்—959, 960
—முதலாளித்துவத்துக்கு முந்தைய பயிர்த் தொழில்—959
—பயிர்த்தொழிலில் மெதுவான, ஒழுங்கற்ற வளர்ச்சி—960, 1139, 1140, 1141
—பயிர்த்தொழிலில் மூலதனத்தின் அங்கக உட்சேர்க்கை—1075, 1077, 1081, 1082
—சிறு விவசாயத்தின் குறைபாடுகள்—1148-49, 1150, 1151

*பரிவர்த்தனை வீதம்*
—பரிவர்த்தனை வீதமும் மூலதன ஏற்றுமதியும்—812, 826
—பண உலோகங்களின் சர்வதேச இயக்கத்தின் பாரமானி—429, 430, 809-813
—பரிவர்த்தனை வீதமும் நெருக்கடியும் —802, 803
—ஆசியாவுடன் இங்கிலாந்தின் பரிவர்த்தனை வீதம்—812-815, 824-826
—பரிவர்த்தனை வீதமும் வட்டி வீதமும் —819-821, 832-836
—பரிவர்த்தனை வீதமும் அதன் மாற்றங்களை நிர்ணயிக்கும் நிலைமைகளும்—836-839

*பறிமுதல்*
—முதலாளித்துவ உற்பத்தி முறையின் துவக்கப் புள்ளியாகவும் நோக்கமாகவும் பறிமுதல்—290, 331, 332, 611, 870-872, 1135, 1171, 1254, 1255
—பறிமுதலும் பங்குக் கம்பெனிகளின் உருவாக்கமும்—611-13
—பனாமா புரட்டல்—611.

*பிணையங்கள் (ஈடுகள்)*
—உடைமையுரிமை—665
—பிணையங்களின் அங்கப் பகுதிகள்—646, 647
—நெருக்கடிக் காலத்தின் பிணையங்கள்—652
—பிணையங்களின் மதிப்பிறக்கம்—652, 653
—வருங்கால உற்பத்திக்கான உரிமை—653, 654
—பங்குச்சந்தையில் இவற்றின் விலைப்புள்ளி—655, 656
—பிணையங்களும் முதலாளித்துவ உற்பத்தியின் வளர்ச்சியும்—655-668
மேலும் பார்க்க: பங்கு

*பிரான்ஸ்*
—பிரான்சில் பட்டுத்தொழில்—451
—பிரான்சும் பனாமாப் புரட்டலும்—611
—பிரான்சில் குத்தகையின் அதிகரிப்பு—890
—பிரான்சில் குடியானவர்களின் சிறு நிலவுடைமை—1148

*பிஸியோக்கிராட்டுகள்*
—இவர்களின் போதனை—854-856, 1071, 1113, 1115, 1116
—நில வாரம் மற்றும் வட்டி பற்றி டுர்காட்—880

*புரள்வு*
—புரள்வும் லாப வீதமும்—59-60, 86-95, 201, 300-302
—புரள்வும் உபரி மதிப்பும்—86
—வணிக மூலதனத்தின் புரள்வு வணிக விலைகளும்—364, 369, 403, 404, 416-420
—தொழில் மூலதனத்தின் புரள்வு—365, 403, 405, 412, 413, 417
—புரள்வு வீதமும், வணிக மூலதனத்தின் அளவும்—369
—புரள்வும் வர்த்தக லாபமும்—419-421

*பெருநிலச் சொந்தக்காரர்*
—பெருநிலச் சொந்தக்காரரும் விவசாயியும்—873-879, 884-888
—பொருளாதார வளர்ச்சியின் போக்கில் நிலச்சொந்தக்காரர் செல்வந்தராதல்—875-877
—பெருநிலச் சொந்தக்காரரும் இங்கிலாந்தில் தானியச் சட்டங்களும்—886, 888
—பெருநிலச் சொந்தக்காரர் உபரி மதிப்பில் ஒரு பகுதியைத் தன்வயப்படுத்திக் கொள்கிறார்—904
—பெருநிலச் சொந்தக்காரர் வர்க்கத்தின் உயிர்த் துடிப்பு—1027
—முதலாளித்துவ உற்பத்தி முறையில் பெருநிலச் சொந்தக்காரர்களின் பாத்திரம்—1170, 1171

*பெரும் நிலச்சொத்து*
—இதன் முதலாளித்துவத்துக்கு முந்தைய வடிவங்கள்—868-871, 882-884
—முதலாளித்துவ உற்பத்தி முறையின்கீழ் பெரும் நிலச்சொத்து—868-880
—பெரும் நிலச்சொத்து தொடர்பான ஹெகலின் கருத்துகள் பற்றிய விமர்சனம்870, 871
—பெரும் நிலச்சொத்து நில வாரத்தின் வடிவத்தில் பொருளாதார ரீதியில் ஈடேற்றப்படுகிறது—873-879
—பெரும் நிலச்சொத்தும் உபரி லாபமும்916-918
—நிலத்தில் மூலதன முதலீட்டுக்குள்ள எல்லைத் தடைகள்—1057, 1068-69, 1087
—பெரும் நிலச்சொத்து வாரத்தைப் படைப்பதில்லை—1069, 1070-71
—பெரும் நிலச்சொத்து விவேகமான பயிர்த் தொழிலுக்கு இடையூறுகளை ஏற்படுத்துகிறது—1157, 1158
—முதலாளித்துவ உற்பத்தி முறையின் வளர்ச்சியில் இதன் பாத்திரம்—1156, 1158, 1170, 1171
—பெரும் நிலச்சொத்தின் மாயைத்தன்மை—1174, 1176, 1177-78

*பொது அல்லது சராசரி லாப வீதம்*
—இதன் உருவாக்கம்—204, 222, 229
—இதன் இலக்கணம்—208, 209, 228
—பொது லாப வீதத்தை நிர்ணயிக்கும் காரணிகள்—215, 219, 222, 223

—இதன் அளவும் சரக்குகளின் மதிப்பும்—219
—பொது லாப வீதமும் உழைப்புச் சுரண்டலின் மட்டமும்—220, 260
—இது ஒரு போக்காக வெளிப்படுத்தப் படுகிறது —496-97
மேலும் பார்க்க: லாப வீதத்தின் சரிவும் போக்கு பற்றிய விதி.

*பொருளாதார நெருக்கடி*
—1847-ல் பண பீதி—165
—முதலாளித்துவ உற்பத்தி முறையின் முரண்பாடுகளின் பணரீதியான பலவந்தத் தீர்வாகப் பொருளாதார நெருக்கடி—328-331
—பொருளாதார நெருக்கடியும் தேவைக்கதிகமான உழைக்கும் ஜனத்தொகையும்—349
—முதலாளித்துவத்தின் கீழ் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்கும் உழைக்கும் மக்களின் வரம்புக் குட்பட்ட நுகர்வுக்கும் இடையிலான முரண்பாடே பொருளாதார நெருக்கடிக்குப் பிரதான காரணமாகும்—351, 673, 674
—மொத்த வியாபார மண்டலத்திலும் வங்கித் தொழிலிலும் பொருளாதார நெருக்கடி மூள்கிறது—407
—இங்கிலாந்தில் 1847-ஆம் வருடப் பொருளாதார நெருக்கடி—560, 570, 572, 579, 581-83, 679-682, 690, 691
—பொருளாதார நெருக்கடியும் உற்பத்திகர மூலதனத்தின் அபரிமித நிலையும்—674-676, 687, 688
—பொருளாதார நெருக்கடியும், சந்தையின் சரக்குகள் பெருக்கெடுத்தலும்—681-82, 687
—பொருளாதார நெருக்கடியும் கடனின் திடீர் நிறுத்தமும்—685, 686
—பொருளாதார நெருக்கடியும் பணநெருக்கடியும்—685, 686, 690, 691, 725, 726
—அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 1857-ஆம் வருடப் பொருளாதார நெருக்கடி—689, 690
—நெருக்கடி ஒரு பொது நெருக்கடியாக வளர்தல் —689-691
—நெருக்கடிக் காலத்தில் விலையுயர்த்த உலோக ஏற்றுமதிகள்688-89
மேலும் பார்க்க: தொழிற்சகடம், மூலதனத்தின் மிகையுற்பத்தி.

*பொருளாதார விதி*
—தொழிலதிபர், வணிகர், வங்கிக்காரர் ஆகியோரின் கண்ணோட்டங்களில் பொருளாதார விதியின் திரிபு—158-183, 185, 296-298, 417-421, 517, 518, 520-23, 531-32, 573-575
—முதலாளித்துவ உற்பத்தியின் கீழ், பொதுவிதி, நிலவுகின்ற போக்காகவே செயல்படுகிறது—213, 214, 231, 250, 309, 310, 314

*போட்டி*
—போட்டியின் பிரதான விதி—41, 42
—உலகச் சந்தையில் போட்டி—158
—போட்டியும் ஏகபோகமும்—158, 256, 607-610
—போட்டியும் முதலாளி வர்க்கமும்257, 258, 335, 336
—பல்வேறு உற்பத்தி மண்டலங்களிடையிலான சமுதாய மூலதனப் பங்கீட்டில் போட்டி வகிக்கும் பாத்திரம்—229, 259
—தொழிலாளர்களிடையே போட்டி—231
—உற்பத்திக் கிளைக்குள்ளும், வெவ்வேறு உற்பத்தி கிளைகளிடையிலும் போட்டி—228, 229
—சந்தை மதிப்பை நிர்ணயித்தல்—244, 256
—உற்பத்தியின் சமுதாயத் தன்மையைப் போட்டி வெளிக்கொணர்கிறது—256
—போட்டியின் இயங்குமுறை—255, 296, 304, 335, 337, 338, 339, 350, 351
—சராசரி லாபம், உற்பத்தி விலை ஆகியவற்றின் உருவாக்கத்தில் போட்டியின் பாத்திரம்—258, 259, 260, 273, 275, 277, 419
—லாப வீதத்தின் சரிவு—296, 298, 339
—போட்டியும் மிகையுற்பத்தி மூலதனமும்335, 336
—போர்களும் லேவாதேவியும்—846, 847

## ம

—மதிப்பு விதி—234, 237, 238, 899-902, 912, 913, 1257, 1269-1281

*மாயை*
—வட்டி தரும் மூலதனத்தின் மாயை—529-543
—வட்டியின் மாயை—534, 535
—லாபத்தின் மாயை—534, 535
—வர்த்தக மாயை—725
—மூலதனத்தின் மாயை—1174-80

*மாற்று உண்டி*
—இதன் இலக்கணம்—547-549
—உண்டிகளைத் தள்ளிக்கொடுத்தல்—589-90, 592-93, 677-679
—உண்டிகளைத் தள்ளிக் கொடுப்பதும், மூலதனத்தைக் கடன் வாங்குவதும்—590-593
—ஹேஷ்யபேர உண்டி—595-97
—மாற்று உண்டியும் புரட்டலும்677, 681, 682, 685-688
—மாறா மூலதனம்—31, 62, 101, 106, 107, 152, 156, 184, 191, 203, 311, 1217
மேலும் பார்க்க: மாறா மூலதனத்தின் சிக்கனம்
—மாறும் மூலதனம்—32, 33, 34, 62, 63, 64, 65, 150, 151, 152, 183, 191, 193, 194, 226, 747, 1218

*முதலாளி*
—உபரி மதிப்பு மற்றும் லாபத்தின் தோற்றுவாய் தொடர்பாக முதலாளியின் பிரேமை—42, 46, 47, 50, 51, 54-55, 183-84, 277
—முதலாளியும் ஒரு சரக்கின் உற்பத்தியும்—46
—முதலாளியும் தொழிலாளி வர்க்கமும்—47, 261, 262, 517-518
—முதலாளியும் முன்னிடப்பட்ட மூலதனமும்—46, 47, 48
—சமுதாய உற்பத்தியின் பலன்களைப் பையில் போட்டுக்கொள்ளும் பூர்ஷ்வா சமுதாயத்தின் அறங்காவலன்353
—தொழில் முதலாளி—502-504
—பண முதலாளி—502-511, 716
—உற்பத்திச் செயல்முறைக்கு முதலாளி தேவையில்லை—526-529
—உருவகப்படுத்தப்பட்ட மூலதனம்—1175
*முதலாளித்துவ உற்பத்தி முறை*
—உற்பத்திச் செயல்முறை, சுற்றோட்டச் செயல் முறை ஆகியவற்றின் ஒரு கலவையாக முதலாளித்துவ உற்பத்தி முறை—28-29, 46-47
—அடிமை முறையின் அடிப்படையிலான உற்பத்தி முறையிலிருந்து இதற்குள்ள வித்தியாசம்—33
—முதலாளித்துவ உற்பத்தி முறையை மர்மப் படுத்தல்—44, 46, 47, 48, 52, 53, 56, 57, 1180, 1182, 1183, 1184, 1186, 1229-41
—முதலாளித்துவ உற்பத்தி முறையின்கீழ் உற்பத்தி உறவுகள்—52, 938, 1165, 1166, 1167, 1174-75, 1176, 1177, 1178, 1179, 1180, 1181-87, 1243-47
—முதலாளித்துவ உற்பத்தி முறையும் மாறா மூலதனத்தின் சிக்கனமும்—106, 107, 108, 109
—முதலாளித்துவ உற்பத்தி முறையும் உழைப்பின் உற்பத்தித் திறனின் வளர்ச்சியும்—108, 109, 342, 343-44, 352
—முதலாளித்துவ உற்பத்தி முறையின் உள் முரண்பாடுகள்109, 110, 324, 329, 330, 331-32, 340, 341, 342, 349, 350, 353, 808-810
—மனித ஜீவிகளின் சாரீர, ஆத்மீகச் சக்திகளின் விரயப்படுத்தி—109, 110, 111, 112, 113
—முதலாளித்துவ உற்பத்தி முறையும் உற்பத்தியின் சமுதாயத் தன்மையும்—112, 113, 114, 115, 254, 352, 809-810
—சோஷலிஸ உற்பத்தி முறைக்கு உடனடியாக முன்செல்கின்ற முறையாக முதலாளித்துவ உற்பத்தி முறை—113, 607-608
—முதலாளித்துவ உற்பத்தி முறையும் உலகச் சந்தையும்—145, 353
—சமுதாயக் கட்டுப்பாடும் உற்பத்தியின் முறைப் படுத்தலும் முதலாளித்துவ உற்பத்தி முறைக்கு ஒத்து வராதவை—156-57, 290
—முதலாளித்துவ உற்பத்திமுறையும் சரக்குகளின் திரளுற்பத்தியும் 237-38, 239, 240, 241
—முதலாளித்துவ உற்பத்தி முறையின்கீழ் வர்க்கங்கள்—257
—முதலாளித்துவ உற்பத்தி முறையின் வரலாற்று ஆதாரங்கள்—259, 839-842, 869-872
—முதலாளித்துவ உற்பத்தி முறையும் திரட்சிச் செயல்முறையும்—285, 287, 288, 352
—முதலாளித்துவ உற்பத்தி முறையும் ஒப்பீட்டு மிகை ஜனத்தொகையும்—287, 294, 312, 330, 332, 339
—முதலாளித்துவ உற்பத்தி முறையின் நோக்கமாக உபரி மதிப்பு மற்றும் லாபத்தின் உற்பத்தி—320, 322-23, 325, 332, 339
—முதலாளித்துவ உற்பத்தி முறையின் வரலாற்றுத் தன்மை—320-21, 343-44, 349, 877-879, 1161
—முதலாளித்துவ உற்பத்தி முறையின் உற்பத்திச் சக்திகள்—320, 330, 340, 349, 611-613
—முதலாளித்துவ உற்பத்திமுறையின் கீழ் உற்பத்தித் தடைகள்—331, 340, 341, 342, 349, 711
—முதலாளித்துவ உற்பத்தி முறையின்கீழ்த் தனி உற்பத்திக் கிளைகளின் விகிதாச்சாரப் பொருத்தமின்மை—340
—முதலாளித்துவ உற்பத்தி முறையின்கீழ் ஒப்பீட்டளவில் வரம்புக்குட்பட்ட சந்தை—607-608
—முதலாளித்துவ உற்பத்தி முறையும் பயிர்த்தொழிலும்—870-872, 962, 1139, 1140, 1153, 1154, 1155, 1156, 1157
—முதலாளித்துவ உற்பத்தி முறையும், நேரடி உற்பத்தியாளர்கள் ஏழ்மைப்படுத்தப்படுவதும் —873
—முதலாளித்துவ உற்பத்தி முறையும், விவசாய மல்லாத ஜனத்தொகையுடன் ஒப்பிடுமிடத்து விவசாய ஜனத்தொகையின் குறைப்பும்—902
—சிறு தொழிலும் பட்டறைத் தொழிலும் விவசாயத்திலிருந்து பிரிக்கப்படுவதற்கு முதலாளித்துவ உற்பத்தி முறை இட்டுச் செல்கிறது—1167-70
—முதலாளித்துவ உற்பத்தி முறையும் நிலத்தின் விலையும்—1153, 59
—முதலாளித்துவ உற்பத்தி முறையும் பெரும் நிலச்சொத்தும்—1155, 1156, 1157, 1158, 1170
—முதலாளித்துவ உற்பத்தி முறையும் முதலாளித்துவத்துக்கு முந்தைய உற்பத்தி உறவுகளும்—1186, 1187
—முதலாளித்துவ உற்பத்தி முறையும் உற்பத்தி உறவுகளின் மறு உற்பத்தியும்—1243-1247, 1254-55
—முதலாளித்துவத் திரட்சியின் பொது விதி—292

*முதலாளித்துவ மறு உற்பத்தி*
—மாறா மூலதனத்தின் ஈடு செய்விப்பு—1192, 1193
—முதலாளித்துவ மறு உற்பத்தியின் நிலைமைகள் —248-49
—சமுதாய மூலதனத்தின் இரு துறைகள்—1194
—இரு துறைகளுக்குமிடையிலான பரிவர்த்தனை —1195-97
—எளிய மறு உற்பத்தியின் அட்டவணை—1197
—முதலாளித்துவ உற்பத்தி உறவுகளின் மறு உற்பத்தியும் முன்னிடப்பட்ட மூலதனமும்—1198
—முதலாளித்துவ மறு உற்பத்தியும் வருவாய் களும் —1198-99

*முரண்பாடு*
—தனியார் நிலச் சொத்துடைமைக்கும் விவேகமான பயிர்த்தொழிலுக்கும் இடையி லுள்ள முரண்பாடு—160, 1156-57
—உற்பத்திக்கும் நுகர்வுக்கும் இடையிலுள்ள முரண்பாடு—245, 246, 324, 325-26, 340-41, 1262
—உற்பத்திச் சக்திகளுக்கும் உற்பத்தி உறவு களுக்கும் இடையிலுள்ள முரண்பாடு—329-30, 341, 349, 350
—உற்பத்தியின் சமுதாயத் தன்மைக்கும் தன்வயப்படுத்தலின் தனியார் வடிவத்திற்கும் இடையிலுள்ள முரண்பாடு—353, 611-613, 954, 955
—முன்னிடப்பட்ட மூலதனம்—33-40, 709, 710

*முன்னீடு*
—இதன் வடிவங்கள்—458-60, 65, 66, 472-74
—இதன் தன்மை—466-68
—இதன் இயக்கங்கள்—469-472
—முன்னீட்டின் வகைகள்634-636
—மூலதன ஏற்றுமதிகள்—339, 666, 811, 812, 813, 818-821, 833, 834

*மூலதனத் திரட்சி*
—இலக்கணம்—287, 288, 324, 348, 352
—மூலதனத் திரட்சியும் உழைப்பின் உற்பத்தித் திறனின் உயர்வும்287, 288, 328, 330, 331, 332, 542-545
—மூலதனத் திரட்சியும் ஒப்பீட்டு மிகை ஜனத்தொகையும்—287-88, 292-93, 295, 331, 324, 325, 329-30, 331, 332, 337, 348, 350
—மூலதனத் திரட்சியும் மூலதனக் குவியலும் மூலதன மையப்படுதலும்—325
—மூலதனத் திரட்சியும் ஆதித் திரட்சியும்—326
—மூலதனத் திரட்சியும் லாப வீதத்தில் ஒரு சரிவும்—332, 339, 343, 352
—திரட்சியை ஊக்கிடும் காரணிகள்—352

*மூலதனத்தின் அங்கக வடிவமைப்பு*
—மூலதனத்தின் அங்கக வடிவமைப்பின் அடிப்படை தொழில்நுட்ப வடிவமைப்பாகும் —52, 53, 54, 55, 191-92, 1084
—இதன் இலக்கணம்—191, 192, 193, 194, 204, 1067, 1080, 1081
—மூலதன்த்தின் அங்கக வடிவமைப்பும் லாப வீதமும்—205
—உயர்ந்த உட்சேர்க்கையுள்ள மூலதனம்—216, 1075
—தாழ்ந்த உட்சேர்க்கையுள்ள மூலதனம்—216, 1075
—தொழில்துறையில் மூலதனத்தின் அங்கக உட்சேர்க்கை—92, 93, 94, 95
—சராசரி சமுதாய இயைபு கொண்ட உட்சேர்க்கை யுள்ள மூலதனம்—216, 217, 1075
—மூலதனத்தின் அங்கக வடிவமைப்பும் உழைப்பின் உற்பத்தித் திறனின் வளர்ச்சியும்—280-81, 284
—பிரித்தெடுப்புத்(எடு பொருள்) தொழிலில் மூலதனத்தின் அங்கக வடிவமைப்பு—1076
—சுரங்கத் தொழிலில் மூலதனத்தின் அங்கக வடிவமைப்பு—1076
—பயிர்த்தொழிலில் மூலதனத்தின் அங்கக வடிவமைப்பு—1076
—தொழில் துறையில் மூலதனத்தின் அங்கக வடிவமைப்பு—1084-65

*மூலதனத்தின் மிகையுற்பத்தி*
—மூலதனத்தின் ஒப்பீட்டு மிகையுற்பத்தி—245, 339-401
—மூலதனத்தின் மிகையுற்பத்தி சரக்குகளின் மிகையுற்பத்தியாகும்—333, 334, 338, 341-42
—மூலதனத்தின் அறுதி மிகையுற்பத்தி—333, 334, 338
—மூலதனத்தின் மிகையுற்பத்தி மூலதனத்தின் மிகைத்திரட்சியாகும்—332
—மூலதனத்தின் மதிப்பிறக்கம்—334, 336-37
—மூலதனத்தின் மிகையுற்பத்தியும் ஒரு கொடுப்புச் சாதனமென்ற பணத்தின் பணியும் —337
—மூலதனத்தின் மிகையுற்பத்தியும் ஒப்பீட்டு மிகையுற்பத்தியும்—338-340
—மூலதனத்தின் மிகையுற்பத்தி உற்பத்திச் சாதனங்களின் மிகையுற்பத்தியாகும்—338-340
—மூலதனத்தின் மிகையுற்பத்தியின் முக்கிய நெம்புகோலாகக் கடன்முறை—611-613
மேலும் பார்க்க: பொருளாதார நெருக்கடி, தொழிற்சகடம்

மூலதன மையப்படுதல் - பார்க்க: குவியல்

*மூலதனம்*
—மூலதனத்தின் இயக்கம் —27, 56, 57
—மூலதனத்தின் பொதுச் சூத்திரம்—46

—மொத்த மூலதன மதிப்பின் பருமனும் உபரி மதிப்பின் பருமனும்—52-56
—மூலதனத்தின் தொழில் நுட்ப உட்சேர்க்கை—52, 53, 54
—மூலதனத்தின் முடக்கல்—145, 146, 153
—மூலதனத்தின் மதிப்பின் மாற்றம்—145, 146
—மூலதனத்தின் விடுவிப்பு—145, 151
—மூலதனத்தின் பருமனிலான மாற்றம் லாப வீதத்தின்மீது செலுத்தும் அளாவல்—184-85, 201-02
—ஒரு சமுதாயச் சக்தியாக மூலதனம்—256-57, 349-50
—மூலதனத்தின் மதிப்பிறக்கம்—311, 330, 334, 337, 338
—மூலதனத்தின் இலக்கணம்—324, 326
—மூலதனச் செறிவு—332
—முதலாளித்துவ உற்பத்தியின் வளர்ச்சியோடு. ஒரு தொழில் நிறுவனத்தின் செயல்பாட்டுக்குத் தேவைப்படும் மூலதனத்தின் குறைந்தபட்ச அளவு அதிகரித்தல்—332, 348
—மூலதனச் சுற்று—338
—உற்பத்திகர வடிவத்திலும் பண வடிவத்திலும் மூலதன ஏற்றுமதிகள்—339, 812-821
—சுற்றோட்டச் சாதனங்களின் வாங்குதலிலும் கொடுப்பிலும் முதலீடு செய்யப்படும் வணிக மூலதனம்—380
—முதலாளியின் சேமிப்புகளிலிருந்தும் எளிய வாழ்க்கையிலிருந்தும் மூலதனம் பிறப்பதென் னும் தத்துவம் பற்றிய விமர்சனம்—610-11
—மூலதனத்தின் சமுதாயத் தன்மை, கடன் மற்றும் வங்கி முறையின் வளர்ச்சியின் மூலமாக உந்தப்படுகிறது—859

*உற்பத்தி உறவாக மூலதனம்*
—வரலாற்று ரீதியில் நிர்ணயிக்கப்படும் சமுதாய வடிவமாக மூலதனம்—1161, 1163
—மூலதனத்தின் மாயை—1175, 1176

*மேலாண்மை மற்றும் கண்காணிப்பு வேலை*
—இதன் அவசியம்—522-526
—இது பற்றி மாம் சென்—523-525
—இது பற்றி அரிஸ்டாட்டில்—523-526
—இதன் தோற்றுவாய்—525-528
—மேலான்மை மற்றும் கண்காணிப்பு வேலையும் கூலியும்—525-528

*மொத்த லாபம்*
—மொத்த லாபம் வட்டியாகவும் தொழில் முனைவில் லாபமாகவும் பிரிகிறது—504-514
—மொத்த லாபமும் தேசிய வருமானமும்—763, 764
—மொத்த லாபமும் வட்டியும்—830-832

**ர**

*ரஷ்யா*
—ரஷ்யாவின் அந்நிய வர்த்தகம்—450, 1028
—ரஷ்யாவில் முதலாளித்துவ உற்பத்தி முறையின் வளர்ச்சி—450
—ரஷ்யாவில் வங்கி நோட்டுகளின் சுற்றோட்டம்—736
—ரஷ்யாவில் குடியானவர்கள்—1028
—ராம்சேயின் லாபத் தத்துவம்—44

**ல**

—இதன் இலக்கணம்—38, 39, 40, 41, 42, 47-57
—டாரென்ஸின் லாபத்துவம்—42, 43
—மாஸ்தானின் லாபத் தத்துவம்—44
—லாபமும் உபரி மதிப்பும்—54, 55, 56, 57, 219, 222, 228, 229, 237
—லாபமும் வேலை நாளின் நீட்டிப்பும்—96, 97
—சராசரி லாபம்—188, 203, 208, 209. 210, 221, 224, 226, 229, 230, 237, 258, 260, 277
—லாபமும் மூலதனமும்—202, 203, 224
—லாபத்தின் ஊற்றுக்கண்—221, 222, 224, 278
—லாபத்தின் தோற்றுவாய் பற்றி முதலாளியின் கண்ணோட்டம்—220-21, 224, 278, 303, 304,
—லாபம் பற்றி பூர்ஷ்வா அரசியல் பொருளா தாரம்—222-23, 281
—தொழில் லாபம்—374, 394
—தனவணிகர்களின் லாபம்—433
—பங்குக் கம்பெனியில் லாபம்—606, 607
—தேசிய உழைப்பின் தன்வயப்படுத்தலாக லாபம்—764
—முதலாளித்துவ உற்பத்தியின் முறைப்படுத்தி யாகச் சராசரி லாபம்—1112
—லாபத்தின் வரம்புகள்—1227-30
மேலும் பார்க்க: உபரி மதிப்பு

*லாப வீதத்தின் சரிவும் போக்கு பற்றிய விதி*
—உழைப்பின் உற்பத்தித் திறனின் வளர்ச்சியின் விளைவாக லாப வீதத்தின் சரியும் போக்கு—280, 282, 285, 286, 290, 342
—லாப வீதத்தின் சரியும் போக்கும் மூலதனத்தின் அங்கக உட்சேர்க்கை உயர்வதும்—280, 287, 315
—லாப வீதத்தின் சரியும் போக்கும் பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரமும்—281, 295, 296
—முதலாளித்துவ உற்பத்தியின் விதியாக லாப வீதத்தின் சரியும் போக்கு—282
—லாப வீதத்தின் சரியும் போக்கும் உபரி மதிப்பின் அறுதிப் பருமனின் வளர்ச்சியும்—286-87, 288-291, 293, 296, 328
—லாப வீதத்தின் சரியும் போக்கும் ஒப்பீட்டு மிகையுற்பத்தியும்—292, 295-296, 312
—லாப வீதத்தின் சரியும் போக்கும் சுரண்டலின் அதிகரிக்கும் தீவிரமும்—306-07, 315-16
—லாப வீதத்தின் சரியும் போக்கும் தொழில் நுட்ப முன்னேற்றமும்—307, 308
—விதி ஒரு போக்காகச் செயல்படுவதற்குள்ள காரணிகள்—308, 309

—லாப வீதத்தின் சரியும் போக்கும், உழைப்புச் சக்தியின் மதிப்புக்குக் கீழாகக் கூலி தாழ்த்தப் படுவதும்—310
—லாப வீதத்தின் சரியும் போக்கும் எதிர்ச்செயல் புரியும் காரணிகளும்—306-317, 329-30
—லாப வீதத்தின் சரியும் போக்கும் மாறா மூல தனத்தின் மூலகங்கள் மலிவாதலும்—310, 311
—லாப வீதத்தின் சரியும் போக்கும் அந்நிய வர்த்தகமும்—313-315
—லாப வீதத்தின் சரியும் போக்கும் உற்பத்திகர உழைப்பும்—316
—லாப வீதத்தின் சரியும் போக்கும் பங்கு மூலதனமும்—317
—லாப வீதத்தின் சரியும் போக்கும் முதலாளித்துவ உற்பத்தி முறையும்—320-21
—லாப வீதத்தின் சரியும் போக்கும் போட்டிப் போராட்டமும்—335, 337, 338, 339

*லாப வீதம்*
—இதன் இலக்கணம்—46-57
—லாப வீதமும் உபரி மதிப்பு வீதமும்—47, 48, 49-77, 184, 185, 186. 187, 219, 278
—லாப வீதமும் வட்டி வீதமும்—483-84, 490-91
—இதன் அளவீடு—58, 59
—லாப வீதமும், நிலை மூலதனத்துக்கும் சுற்றோடும் மூலதனத்துக்கும் இடையிலான வேறுபாடுகளும்—56, 199-202
—லாப வீதமும் பணத்தின் மதிப்பும்—59, 60
—லாப வீதமும் மாறும் மூலதனத்தின் புரள்வும்—59, 60
—லாப வீதமும் உழைப்பின் உற்பத்தித் திறனும்—33, 60, 61, 102, 103
—லாப வீதமும் மாறும் மூலதனமும்—62, 63, 64, 66, 67
—லாப வீதமும் புரள்வும்—86-95
—லாப வீதமும் உற்பத்திக்காலமும்—86-88
—லாப வீதமும் சுற்றோட்டக் காலமும்—87-88
—லாப வீதமும் மாறா வேலை நாளும்—96,97,98
—லாப வீதமும் வேலைநாளின் நீட்டிப்பும்—96,97
—லாப வீதமும் மாறா மூலதனத்தின் மதிப்பும்—100, 101
—லாப வீதமும் கச்சாப்பொருள்களின் அளவும்—104
—லாப வீதமும் உற்பத்தி மூலகங்களின் கலப்படமும்—105, 106
—லாப வீதமும் தொழிலாளியின் வாழ்க்கை நிலைமைகளிலான சிக்கனமும்—110
—லாப வீதமும் கச்சாப்பொருள்களின் விலையிலான ஏற்ற இறக்கங்களும்—138, 139, 140, 141, 142, 146, 147, 148, 149
—லாப வீதமும் அந்நிய வர்த்தகமும்—140
—லாபவீதமும் மூலதனத்தின் அங்கக வடிவமைப்பும்—188, 190, 191, 192, 196, 197, 198. 200, 202, 203
—தேசிய லாப வீதங்களின் ஒப்புநோக்கு—189, 199, 283, 284
—லாப வீதமும் முன்னிடப்பட்ட மூலதனத்தின் மதிப்பும்—260
—ஒரு தனிச்சரக்கின் விலையின் மூலகங்களின் மூலம் லாப வீதத்தின் கணக்கீடு—298, 299, 300, 301
—முதலாளித்துவ உற்பத்தியின் ஊக்க சக்தி—343
—லாப வீதமும் அதன் குறைப்பும்—325
—லாப வீதமும் புதிய முதலாளித்துவத் தொழில் முனைவுகளின் உருவாக்கமும்—341-42
—லாப வீதம் பற்றி ரிக்கார்டோ—343
—மூலதனத்தின் வரலாற்று வளர்ச்சியின் துவக்கப்புள்ளியாக லாப வீதம்—1285, 1286, 1288

*லேவாதேவி*
பார்க்க: லேவாதேவி மூலதனம்
லேவாதேவி (கடுவட்டி) மூலதனம்
—முதலாளித்துவ உற்பத்தி முறைக்கு முந்தைய வரலாற்று வடிவம்—838-840
—இதன் வளர்ச்சி வணிக மூலதனத்தின் வளர்ச்சியோடு கட்டுண்டது—838
—புராதன ரோமில் அதன் உச்ச கட்டத்துக்கு வளர்க்கப்பட்டது—839
—முதலாளித்துவத்துக்கு முந்தைய அமைப்பு களின் லேவாதேவி மூலதனம்—839-843
—லேவாதேவி மூலதனமும் முதலாளித்துவ உற்பத்தி முறையும்—840-845, 863-866
—ஒரு குறிப்பிட்ட உற்பத்தி முறையை, அதனை மாற்றாமலே பயன்படுத்திக் கொள்கிறது—840-845, 873-74
—முதலாளித்துவத்துக்கு முந்தைய உற்பத்தி முறைகள்மீது இதன் செல்வாக்கு—842-845
—லேவாதேவி மூலதனமும் மூலதனத்தை உண்டாக்குவதும்—844-845
—லேவாதேவி மூலதனமும், ஒரு கொடுப்புச் சாதனமென்ற விதத்தில் பணத்தின் பணிகளும்—847
—லேவாதேவி மூலதனத்துக்கு எதிர்ப்பு—850, 853, 854
—லேவாதேவி மூலதனமும், தொழில் மூலதனத் தின் வளர்ச்சிக்கான முன் நிபந்தனைகளும்—863, 864
மேலும் பார்க்க: வட்டி தரும் மூலதனம்

## வ

*வங்கி*
—வங்கியும் மூலதனத்தைக் கடன் தருதலும்—593 595
—வங்கியும் பணத்தைக் கடன் தருதலும்—593 -597
—தங்க வைப்பும் வங்கித்தொழில் வைப்பும்—601-604,645,654,655

—வங்கியும் நோட்டுகளின் வெளியீடும்—601,602
—வங்கி மூலதனம்—645-654
—வங்கிச் சேமிப்புகள், அவற்றின் இரட்டைப் பாத்திரம்—654-658
—வங்கி ஆஸ்திகளின் உருவாக்கம்—763-766, 857, 858
—ஆம்ஸ்டர்டாம் வங்கி—852
—ஹாம்பார்க் வங்கி—852
—ஆங்கிலேயக் கடன் வங்கி—854
—Credit mobilier—856
மேலும் பார்க்க: இங்கிலாந்து வங்கி
—வங்கிக்காரர்—558, 559,709,761,764
—வங்கிச் சட்டம்(1844)—598-600, 781, 784, 788, 789, 793
—வங்கிச் சேமிப்புகள்—655, 656

*வங்கி நோட்டு*
—இதன் இலக்கணம்—554
—வங்கி நோட்டுகளின் சுற்றோட்டமும் தொழிற் சகடமும்—639-641, 739-745
—வங்கி நோட்டின் சுற்றோட்ட விதி—733
—இங்கிலாந்து வங்கியின் நோட்டுகளின் சுற்றோட்டம்—733-742
—சுற்றோடும் வங்கி நோட்டுகளின் எண்ணிக்கையும் புரள்வும்—734-741
—வங்கி நோட்டுகளின் வெளியீடும் உலோக வைப்பும்—739-741
—வங்கி நோட்டும் வைப்பு நிதியும்—743-744
—வங்கி நோட்டும் மூலதன முன்னீடும்—758-760
—வங்கி நோட்டும் உண்டிகளின் சுற்றோட்டமும்—758-763
—வங்கி முறையும் அதன் வரலாற்று முக்கியத்துவமும்—859-862

*வட்டி*
—இதன் இலக்கணம்—466-475, 477-480
—மூலதனத்தின் விலையாக வட்டி—478-481
—வட்டியும் போட்டியும்—481-484, 490-93, 502, 503
—வட்டியும் லாபமும்—485-488
—வட்டியும் சராசரி லாப வீதமும்—487, 488, 717, 718, 719
—மூலதனம் சொந்தமாயிருப்பதன் பலனாக வட்டி—508-511
—வட்டியின் இயல்பு—511-514
—வட்டியும் கூலித்தொழிலாளர்களும்—520-22
—வட்டியும் இரு முதலாளிகளிடையிலான உறவுமுறையும்—520-22
—வட்டியின் இயக்கம்—830-832
—லேவாதேவி வட்டி—840-845
—மத்திய காலத்தின் வட்டி—844, 863-867
மேலும் பார்க்க: வட்டி வீதம்

*வட்டி தரும் மூலதனம்*
—இதன் இயக்கம்—459-461, 469
—சரக்கு மூலதனத்திலிருந்து இதற்குள்ள வித்தியாசம்—461-62, 465, 466, 468, 469, 471, 473, 475
—இதன் குறிப்பான (பிரத்தியேகத்)தன்மை—464, 465, 467, 468, 469, 493
—பண தனவாணிக மூலதனத்தின் ஒரு குறிப்பான வடிவமாக வட்டி தரும் மூலதனம்—465, 485, 862
—வட்டி தரும் மூலதனமும் உற்பத்திச் செயல் முறையும்—493
—வட்டி தரும் மூலதனமும் பணி புரியும் மூலதனமும்—505, 506
—வட்டி தரும் மூலதனம் வரலாற்று ரீதியில் முதலாளித்துவ உற்பத்தி முறைக்கு முந்தியது—512
—ஓர் உடைமையாகவும் ஒரு பணியாகவும் வட்டி தரும் மூலதனம்—510, 514-18
—இதன் பொதுச் சூத்திரம்—533, 534
—வட்டி தரும் மூலதனமும் உழைப்பின் உற்பத்தித் திறனின் வளர்ச்சியும்—542, 544
—வட்டி தரும் மூலதனத்தின் மாயை—543
—வட்டி தரும் மூலதனமும் லேவாதேவியும்—847-854
—வட்டி தரும் மூலதனமும் முதலாளித்துவ உற்பத்தி முறையும்—857-860
மேலும் பார்க்க: கடன் மூலதனம், லேவாதேவி மூலதனம்.

*வட்டி வீதம்*
—வட்டி வீதமும் சராசரி லாப வீதமும்—486, 487, 491-92, 493-94, 495
—வட்டி வீதமும் தொழிற்சகடமும்—490-506
—இதன் சரியும் போக்கு—489, 490
—சராசரி வட்டி வீதம்—491-495
—இதன் பரிமாணம்—493-500
—சந்தை வட்டி வீதம்—496-97
—1847-ல் வட்டி வீதம்—583, 584
—1856-ல் வட்டி வீதம்—585
—வட்டி வீதமும் லாப வீதமும்—584-589
—வணிக முறை (மெர்க்கன்டைலிஸம்)—455, 1114, 1115

*வணிக மூலதனம்*
—தொழில் மூலதனத்தின் சுயேச்சையான பகுதியாக வணிக மூலதனம்—365, 384, 387, 412, 415, 435
—முதலாளித்துவ மறு உற்பத்தியில் வணிக மூலதனம் வகிக்கின்ற பாத்திரம்364, 386-87, 414-15, 435-36, 437, 438
—வணிக மூலதனத்தின் இயல்பு பற்றிய பூர்ஷ்வாப் பொருளாதார அறிஞர்களின் கருத்துகள் குறித்து விமர்சனம்—369-70
—வணிக மூலதனமும் புரள்வும்—365, 380, 404, 405, 407, 412, 413, 414, 416

—வணிக மூலதனமும் சராசரி லாபத்தின் உருவாக்கமும்—379-80
—வணிக மூலதனமும் வர்த்தக லாபமும்—380-81, 394-95, 413
—முதலாளித்துவத்துக்கு முந்தைய உற்பத்தி முறைகளின்கீழ் வணிக மூலதனம்—414
—மொத்த வியாபாரத்தில் வணிக மூலதனத்தின் தூய வடிவம்—381-84
—வணிக மூலதனத்தின் வடிவங்கள்—434-35
மேலும் பார்க்க: தனவணிக மூலதனம், வர்த்தக மூலதனம்
—வர்த்தக உழைப்பு—395-401
*வர்த்தகக் கடன்*
—கடன் முறையின் அடித்தளம்—668
—இதன் கருவிகள்—668, 669
—இதன் சுற்று—668-671
—இதன் வரப்புகள்—669-672
—வர்த்தகக் கடன், தொழில் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளின் விரிவாக்கத்துக்கு இட்டுச் செல்கிறது—671, 672
—வர்த்தகக் கடனும் மறு உற்பத்திச் செயல் முறையும்—671-674
—வர்த்தகக் கடன் சரக்குகளின் உருமாற்றத்தை உந்துகிறது—673, 674
—வர்த்தகக் கடனும் வாஸ்தவமான பணக் கடனும்—676, 677
—வர்த்தகக் கடனும் சுற்றோட்ட உண்டிகளும்—732-734
*வர்த்தகம்*
—அந்நிய வர்த்தகம்—313, 314
—இதன் அளவு—437
—வர்த்தகமும் உற்பத்தியின் வளர்ச்சியும்—438, 445, 446, 447, 448, 449-454
—நாடுகளிடையிலான பொருள் போக்குவரத்துத் தொழில்—442
—வர்த்தகத்தில் 16ஆவது, 17ஆவது நூற்றாண்டுகளின் புரட்சி வகித்த பாத்திரம்—448
*வர்த்தக மூலதனம்*
—ஒரு குறிப்பான மூலதனப் பணியாக வர்த்தக மூலதனம்354-55, 358, 360, 382, 646
—வர்த்தக மூலதனத்தின் இரு வடிவங்கள்—354
—இதன் இயக்கம்—356-364
—சமுதாய வேலைப்பிரிவினையின் ஒரு வடிவமாக வர்த்தக மூலதனம்—360
—தொழில் துறை மூலதனமாக வர்த்தக மூலதனம்—363
—வர்த்தக மூலதனமும் மறு உற்பத்திச் செயல் முறையும்—363-65
—வர்த்தக மூலதனம் மதிப்பையோ உபரி மதிப்பையோ உற்பத்தி செய்வதில்லை—372, 373
—மூலதனத்தின் மிகப் பழமையான இருத்தல் நிலையாக வர்த்தக மூலதனம்—437, 454-55
—வர்த்தக மூலதனத்தின் வளர்ச்சி, சமுதாயத்தின் பொதுவான பொருளாதார வளர்ச்சியோடு தலைகீழ் விகிதாச்சாரமுடையது—441
—வர்த்தக மூலதனமும் வர்த்தக லாபமும்—444, 445
—வர்த்தக மூலதனமும் ஒரு கொள்ளை முறையும்—446, 447
—நிலப்பிரபுத்துவத்திலிருந்து முதலாளித்துவத்துக்கு மாறிச் செல்வதில் வர்த்தக மூலதனம் வகிக்கும் பாத்திரம்—451
மேலும் பார்க்க: வணிக மூலதனம்
*வர்த்தக லாபம்*
—வர்த்தக லாபத்தின் ஊற்றுக்கள்—372, 377
—வர்த்தக லாபத்தின் இலக்கணம்—379, 381, 402
—வர்த்தக லாபமும் தொழில் லாபமும்—379, 381
—வணிகரின் வருமானத்தின் ஊற்றுக்கள்—385
—வர்த்தக லாபத்தை நிர்ணயிக்கும் வரம்புகள்—408-409, 410-11
—வர்த்தக விலைகள்—409-411
*வருமானம்*
—ஒரு முதலாளியின் வருமானம்—92-95, 1170, 1171, 1172, 1175, 1176, 1178
—ஒரு தொழிலாளியின் வருமானம்—92-95, 1171
—திரட்சிக்கான ஒரு நிதியாகவும், நுகர்வுக்கான ஒரு நிதியாகவும் வருமானம்—261
—வாஸ்தவமான திரட்சியின் விளைவு—707
—ஒரு நிலச்சொந்தக்காரனின் வருமானம்—1170-1186
—மொத்த வருமானம்—1199
*நிகர வருமானம்*
—நிகர வருமானம் மற்றும் மொத்த வருமானம் பற்றி ஸே—1201
*விலை*
—விலையும் அடக்க விலையும்—42
—ஏகபோக விலை—1080, 1099, 1189, 1215, 1229
—சராசரி சந்தை விலை—251
—விலையின் இலக்கணம்—478-481
—சந்தை விலை—251, 252, 481-83
—விலைகளின் அதிகரிப்பைத் தோற்றுவிக்கும் காரணங்கள்—829, 830
—விலையும் வட்டி வீதமும்—827-832
*விலையுயர்ந்த உலோகம்*
—விலையுயர்ந்த உலோகத்தின் இயக்கம்—797, 798, 799-805
—இதன் வைப்பு நிதியின் நிர்ணயிப்பு—798, 799, 800, 801, 802
—ஒரு நாட்டின் சேர்ப்பின் பருமன்—801
—விலையுயர்ந்த உலோகத்தின் ஏற்றுமதியும் இறக்குமதியும்—802, 803, 804, 805, 806, 826, 827

—கடன்முறையின்கீழ் விலையுயர்ந்த உலோகங்களின் அளவு—805, 806, 807, 856
—செல்வத்தின் சமுதாயத் தன்மையின் தெரிவிப்பாக விலையுயர்ந்த உலோகம்—808-809
மேலும் பார்க்க: தங்கம், வெள்ளி

*விவசாயி, விவசாயம்*
—விவசாயியும் ∴பிளாக்ஸ் தொழிலும்—133-134
—விவசாயியும் முதலாளித்துவ விவசாயமும்—868, 869, 871, 872
—விவசாயியின் நிலத்தில் உள்ளிணைக்கப்பட்ட மூலதனம்—875-879
***—ஒப்பந்தக்காலம்—876, 877, 878***
***—விவசாயியும் வாரமும் (வாடகை)—876-879, 881-884***
—விவசாயியும் நிலச் சொந்தக்காரனும்—876-879, 881-884
—இங்கிலாந்தில் விவசாயி—886, 887
—விவசாயியும் விவசாயத் தொழிலாளர்களின் கூலியும்—888, 889
—விவசாயியும் விவசாயியின் உபரி லாபமும்—957-961, 1004, 1065, 1069
—சிசிலியின் விவசாயி—1118
—விவசாயியும் விவசாயத் தொழிலாளர்களும்—1131
—விவசாய உற்பத்திப் பொருட்களின் விலை—1139
—வெள்ளி—425, 429, 778, 788, 797, 799, 800, 816, 836

*வேலைநாள்*
—வேலைநாளின் நீளமும் லாப வீதமும்—1049
—வேலைநாளின் நீட்டிப்பு—149, 307
—வேலைநாளும் உழைப்புச் சுரண்டலும்—261, 285
—வேலைநாளைக் குறுக்கும் அவசியம்—1170
—வேலைநாளின் வரம்புகள் குறித்துப் போராட்டம்—1180
—அவசிய உழைப்பாகவும் உபரி உழைப்பாகவும் வேலைநாளின் பிரிவினை—1189, 1190, 1191
—வேலைநாளின் சீரா அதிகபட்சம்—1276
—வேலைப் பிரிவினை—247, 353, 364, 391, 392, 398, 424, 899, 900, 903

*வேறுபாட்டு நில வாரம்*
—இதன் உருவாக்கம்—1058
—வேறுபாட்டு நில வாரமும் இயற்கைச் சக்திகளும்—912-916
—வேறுபாட்டு நில வாரம் பற்றி ரிக்கார்டோ—920-922, 964
—படுமோசமானச் சாகுபடி செய்யப்படும் மண்மீது வேறுபாட்டு நில வாரம்—1046
—வேறுபாட்டு நில வாரமும், மண்ணில் உள்ளிணைக்கப்பட்ட மூலதனத்தின் மீதான வட்டியென்ற விதத்திலான வாரமும்—1058
—இதன் ஊற்றுக்கண்—1056, 1057
—இதன் இலக்கணம்—1172-73

*வேறுபாட்டு வாரம்* I
—வேறுபாட்டு வாரம் I-ம் மண்ணின் இயற்கை வளமையும்—921-924, 952-955
—வேறுபாட்டு வாரம் I-ல் நில மனைகளின் இடவாகும்—922-924
—இதன் மாற்றம் விலைகளிலான மாற்றத்தைப் பொறுத்துள்ளது—934-948
—வேறுபாட்டு வாரம் I-ம் சந்தை மதிப்பும்—937-939
—வேறுபாட்டு வாரம் I-ம் வார வீதமும்938, 939, 943, 944, 946, 947
—வேறுபாட்டு வாரம் I-ம் குத்தகையும்—943-947
—வேறுபாட்டு வாரம் I-ம் உபரி உற்பத்திப் பொருளும்—936, 964

*வேறுபாட்டு வாரம்* II
—வேறுபாட்டு வாரம் II-ம் தீவிரச் சாகுபடியும்—957-960, 965, 966
—வேறுபாட்டு வாரம் II-ம் வேறுபாட்டு வாரம் I-ம்—958-963
—வேறுபாட்டு வாரம் II-ம் குத்தகைதாரர்களிடையே மூலதனப் பங்கீட்டிலான வேறுபாடும்—872
—வேறுபாட்டு வாரம் II-ம் உபரி லாபத்தின் உருவாக்கமும்—960-968
—வேறுபாட்டு வாரம் I-லிருந்து வேறுபாட்டு வாரம் II-க்குள்ள வித்தியாசம்—967-972
—உற்பத்தி விலை மாறாதிருக்கும்போது வேறுபாட்டு வாரம் II—973-984

*ஜனத்தொகை*
—உழைக்கும் ஜனத்தொகையின் பெருக்கம்—288, 330
—ஜனத்தொகைப் பெருக்கமும் வறுமையும்—289
—அதிகமான ஜனத்தொகை—288, 324, 330
—ஜனத்தொகையும் உழைப்பின் உற்பத்தித் திறனும்—289, 295
—முதலாளித்துவத்தின் வளர்ச்சியோடு விவசாய ஜனத்தொகையின் குறைப்பு—902
—ஜனத்தொகையும் வாழ்க்கைச் சாதனங்களும்—952-953
—ஜப்பான்—132

SEELAN BOOKS

ISBN No. : 81-234-0588-X
CODE No. : A993

PRICE: Rs.900.00